JL
M 311.N15A
15
162405

ஆனந்தபோதினி

ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

தொகுதி 3

பிங்களவரு ஆண்டு முதல்—காளயுக்திவரு
ஆவணி வரையில்
1917வரு ஜூலை முதல் 1918வரு ஜூன் வரையில்

என். முனிசாமி முதலியார்
ஆனந்தபோதினி ஆபீஸ்
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெருவு,
சௌகார்பேட்டை, மதராஸ்
All Rights Reserved.
1918

162405

P. R. RAMA IYER AND CO., PRINTERS, MADRAS

m 211, N159
N15

ந்தபோதினி

தொகுதி விஷய அட்டவணை

டிமீ முதல் காளயுக்தி ஆனிமீ வரையில்)

விஷயம்.	பக்கங்கள்.
கடவுள் வணக்கம் ...	1, 41, 81, 121, 161, 201, 241, 281, 321, 361, 401, 441
எல்லாம் அவன்செயல் ...	2
ஆனந்தபோதினி வாழ்த்துப்பாக்கள் ...	8
நவவிதபக்தி. அஷ்டவித புஷ்பம் ...	10
ஸத்ஸங்கம் ...	11
சசிவர்ணபோதம் ...	14, 72, 88, 149, 166 220, 294
ஓர் நல்வழி ...	16, 53
தானமது விரும்பு ...	19
பழமொழிகளின் அனுபவம் ...	21
தன் முயற்சி ...	25
நம்பிக்கை ...	27
மனோவல்லமையின் மர்மம் ...	28
தாய்ப்பாஷையின் அபிவிர்த்தி ...	42, 451
ஆலயதரிசனம் ...	46
ஆலயவழிபாடு ...	326
கன்மம் ...	50
கல்விப்பயன்—கல்வி ...	54, 86, 215
நாடிவந்தவரைக் கைவிடலாகாது ...	55
ஷட்வித சம்பந்தமும் அஷ்டவித பக்தியும் ...	58
நன்றி ...	62
தந்திர மிக்க மந்திரமில்லை ...	63
தெய்வ மிகமேல் ...	82
அற்பம் அற்பமன்று ...	92
அற்பரோ டிணங்கேல் ...	94

விஷயம்.	பக்கங்கள்.
பரோபகாரம் ...	95
ஒழுக்கம் ...	97
குடியால்வரும் கேடுகள் ...	100
ஆன்றோர் வாக்கியங்கள் ...	107
மனை ...	108, 169
உண்மை நீதித்துண்டுகள் ...	117, 1[illegible], 265, 308
ஞானம் ...	122
பிராம்மணனென்பான் யார் ? ...	125
நட்பு ...	127, 177
[illegible]வதிபூஜை ...	130
முதுமொழிக் காஞ்சியின் மதுரத் [illegible]டுகள் ...	132
வியாபாரம் ...	133, 181, 218
பழக்கங்கள் ...	137
[illegible]றம் ...	140, 185, 215, 259, 304, 340, 378, 427, 453
ஜீவகாருண்யம் ...	143, 172
நான் சொல்வதைமட்டும் நம்பவேண் டாம், பிறர் சொல்வதையும் கவனி யுங்கள் ...	146
செல்வம் நிலையாமை ...	147
நாகரீக சீர்திருத்தம் ...	162
மானிடவாழ்க்கை யநித்தியம் ...	175
ஆன்றோர் வாக்கியங்கள் ...	183
பொறுமையும் போட்டியும் ...	202
விளையும்பயிர் முளையிலே ...	205
மௌனத்தின் மகிமை ...	208
சித்தி முத்தி ...	
பள்ளிக்கூடத் தோட்டமும் அதன் பிரயோசனமும் ...	212, 247
நாகரிகம் ...	223, 256
ஓர் கடிதம் ...	224
முன்னோர் நூல்கள் ...	232
நன்றிமறவேல் ...	242
	250

விஷயம்.	பக்கங்கள்.
கற்பசிகளின் மகிமை ...	192
ஸ்திரீ புருடர் ...	266
மாதர்களுக்கோர் எச்சரிக்கை ...	312
ஸ்திரீகளும் பரோபகாரமும் ...	348
ஸ்திரீ தர்மம் ...	350
[illegible]மையென் [illegible] மாதர்க்கணிகலம் ...	436
பெண் கல்வி ...	476
[illegible]	
[illegible]ச்சியக்குறிப்பு — ...	293
தமிழ்க் கல்வியும் நம் சிறார்களும் ...	300
இரங்கூன் சுதேச பரிபாலினி ...	307
தன்னைத்தானே சீர்திருத்தல் ...	331, 374
தந்தைதாய்ப் பேண் ...	335
கல்வியும் ஒழுக்கமும் ...	336
ஓர் கடிதம்—களவு ...	339, 430
திருஷ்டாந்த வாக்கியங்கள் ...	343
இந்து மதம் ...	344
பகவத்கீதை - நிராசை ...	345
பெண்கல்வியும் நாகரீகமும் ...	362
தமிழ்த் தூஷணை ...	369
மூதுரை (நீதிவெண்பா) ...	370, 425
ஏவது விலக்கேல் ...	372
விருந்தோம்பல் ...	381
உத்தம நியமனங்கள் ...	383
குற்றங் கண்டித்தல் ...	385
உண்மையுரை ...	387
ஊழும் ஊக்கமும் ...	389
சிலபழமொழி வாக்கியம் ...	394
சங்கங்கள் ...	402
ஜன்மபலன் ...	407
நாகம் ...	410
பிராம்மணர்கள் கலியாணம் ...	411, 466
வியாசமும் பத்திரிகாசிரியரும் ...	414
பகவத்கீதை—கர்மயோகம் ...	415, 457
தொழில்—தொழிலாளர் ...	418, 460

ஆனந்தபோதினி

காதி விலையாய் சொல்ப காபிகளை மிஞ்சும்படி நேரிட்டது.

இப்போ திருப்பலை மிகச் சொற்பு காபிகளே.

ஆனந்தபோதினி 2-ம் வருட புத்தகம்
முழு காலிகோவில் நேர்த்தியாக பைண்ட் செய்யப்பட்டது.

புத்தகசாலைகளை அழகுபடுத்தத் தகுதியானது. பல அரிய விஷயங்கள் அடங்கிய இச்சஞ்சிகைகள் எப்போதும் ஒரு சிறந்த நூல்போல் உபயோகமாயுமுள்ளது என்ற விஷயம் யாவருமறிந்ததே. 520-பக்கமுள்ளது.

விலை ரூபா **1—6—0** தபால் சார்ஜ் அணா 4 பிரத்யேகம்.
ஆப் பவுண்ட் விலை ரூபா **1—4—0** தபால் சார்ஜ் பிரத்யேகம்.
(அட்டை, காலிகோ முதலியுறைவ விலை யதிகமாயிருப்பதால் பைண்ட் கூலி அதிகமாயிற்று.)

2-ம் வருடத் தனி சஞ்சிகைகள் 12-ம் விலை ரூபா **1—0—0**
தபால் சார்ஜ் அணா 3 பிரத்தியேகம்.

ஆனந்தபோதினி ஆபீஸ், நெ. 6, வேங்கடேசமெஸ்திரி தெரு, சென்னை

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3	பிங்களவரு ஆடிமீ 1உ 1917ம்வரு ஜூலைமீ 16உ	பகுதி 1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - AUG 1917
MADRAS

கடவுள் வணக்கம்.

"பாராதி ககனப் பரப்புமுண் டோவென்று
படர்வெளிய தாகி யெழுநாப்
பரிதிமதி காணாச் சுயஞ்சோதி யாயண்ட
பகிரண்ட வுயிரெ வைக்கு
நேராக வறிவா யகண்டமா யேகமாய்
நித்தமாய் நிர்த்தொந்த மாய்
நிர்க்குண விலாசமாய் வாக்குமன மணுகாத
நிர்மலா னந்த மயமாய்ப்
பேராது நிற்றிநீ சும்மா விருந்துதான்
பேரின்ப மெய்தி டாமற்
பேய்மனதை யண்டியே தாயிலாப் பிள்ளைபோற்
பித்தாக வோமனதை நான்
சாராத படியதிவி னிருவிகற் பாங்கமாஞ்
சாசுவத நிட்டை யருளாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே."

"வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர்
வந்தெனை யீர்த்துவெங் காமத்
தீயிலே வெதுப்பி யுயிரொடுந் தின்னச்
சிந்தைநைந் துருகிமெய் மறந்து
தாயிலாச் சேய்போ லலைந்தலைப் பட்டேன்
ருயினுங் கருணையா மன்றுள்
நாயக மாகி யொளிவிடு மணியே
நாதனே ஞானவா ரிதியே."

ஆனந்த போதினி

பிங்களவு ஆடி மீ 1உ

"எல்லாம் அவன் செயல்"

"எல்லாம் அவன் செயல்" என்ற இவ்வாக்கியத்தை யாவரும் பன்முறை கேட்டிருக்கலாகும். இதில் அவன் என்பது கடவுளை குறிக்கிறது. இதையே "எல்லாம் கடவுள் செயல்" என்றும் "எல்லாம் ஆண்டவன் செயல் என்றும்" "எல்லாம் சிவன் செயல்" என்றும் கூறுவதுண்டு. உலகில் நடக்கும் எல்லா செயல்களும் கடவுள் செயல் என்றால், சீவராசிகளின் செயல் ஒன்றுமேயில்லை என்றாகிறது. அப்படியாயின் ஓர் துஷ்ட காரியத்தைச் செய்தவன் கூட "என் செயல் என்னவிருக்கிறது? எல்லாம் அவன் செயல்" என்று கூறிவிடலாமல்லவோ. அதோடு எல்லாம் அவன் செயலே யாயின் சீவர்களுடைய செயல்களென்றும், அவற்றிற்குத் தக்கபலன்களென்றும் ஏற்படுவானேன்? என்ற ஒரு கேள்வியும் உண்டாகிறது.

நாம் ஒரு காரியத்தை முயன்றால் அது நமது நோக்கத்தின்படி நிறைவேறுகிறதென்ற நம்பிக்கையில்லை. அம்முயற்சிக்கு இடை பாதியிலேயே விக்கினம் நேர்ந்தாலும் நேருகிறது. நாம் எவ்வளவோ அதற்காகக் கஷ்டப்பட்டும் கடைசியில் அது நிறைவேறாது போனாலும் போகிறது. ஒரு சமயம் நாம் நன்மைக்காக செய்யப்போய் அது முழுதும் தீமையாகவே முடிந்தாலும் முடிகிறது.

முதலாவது மனிதன் என் கால், என் கை, என் கண், என் நாக்கு, என் மூக்கு என்று மிக்க சுதந்திரம் பாராட்டிக்கொள்ளும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், என் மனம் என் மனம் என்று மிகப்பெருமையோடு கூறிக்கொள்ளும் அந்தக்கரணமும் இவன் சுவாதீனத்தி லிருக்கின்றனவா, எப்போதும் இவன் பிரியப்படி அவை நடக்கின்றனவா? இல்லை. இவ்வாற்றால் இவன் எதையும் செய்ய வல்லவனல்லவென்றும், சர்வ வல்லமையுள்ள எதுவோவொன்று இவனுக்குள்ளேயே யிருந்துகொண்டு இவனை யியக்கி வைக்கின்றதென்

றும் நன்கு விளங்குகிறது. இதைப் பற்றியே மெய்ஞ்ஞானச் செல்வராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் தாம் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரங்களில் ஒன்றில்,

"ஞான ஒளியாகிய ஆண்டவனே! நீர் ஊட்டி வைத்தால் யார்தான் உண்ணமாட்டார்கள் (உண்ணத் தெரியாதவன் கூட உண்பான் என்றபடி), நீ பாடவைத்தால் யார்தான் பாடமாட்டார்கள் (பாட்டின் வழியறியாதவனும் பாடுவான் என்றபடி), நீ யாட்டிவைத்தால் யார்தான் ஆடமாட்டார்கள், நீ காட்டி வைத்தால் யார்தான் காணமாட்டார்கள், நீ காட்டாவிட்டால் யார்தான் காணக்கூடியவர்கள் (ஒருவராலும் முடியாது என்றபடி)" என்று கூறி யருளியிருக்கிறார்.

மெய்ஞ்ஞானச்செல்வராகிய தாயுமான சுவாமிகளும், "அவனன்றி யோரணுவும் அசையாது" என்றும், "சிவன் செயலாலே யாதும் வரும் எனத் தேறேன்" என்றும் அருளினார்.

இன்னும் ஆன்றோர் எண்ணிறந்தோர் அவ்வாறே கூறியுள்ளார் என்பது யாவருமறிந்த விஷயமே. "எல்லாம் அவன் செயல்" என்ற வாக்கியத்தை யாவரும் மிகச் சாதாரணமாய்க் கூறுவதை நாம் கேள்விப்படுகிறோம்.

இவ்வாறு எல்லாம் அவன் செயலாக விருக்கச் சீவர்கள் செய்கைக்குத் தக்க நல்ல பலனையும் கெட்ட பலனையும், அதாவது புண்ணிய பாவங்களை யேன் அடையவேண்டும்? இதையே நாம் உணர வேண்டியது.

"எல்லாம் அவன் செயல்" என்று நாம் கூறுவது வஞ்சக வார்த்தையே யன்றி வேறில்லை. நாம் மனப்பூர்வமாய் அவ்வாறே நம்பி நடப்பதுமில்லை. அதன் உண்மையை யனுபவமாய்க் கண்டறிவதுமில்லை. நெஞ்சத்திலொன்றும் வாக்கில் வேறொன்றுமாய்க் கூறுகிறோம். நம்மால் தடுக்கமுடியாத ஆபத்தாவது நமது சிற்றறிவிற் கெட்டாத ஒரு சம்பவமாவது நேர்ந்து விட்டால், அப்போது மட்டும் "நம்மாலென்ன விருக்கிறது. ஒரு துரும்பையேனும் அசைக்க நம்மால் முடியுமா! எல்லாம் அவன் செயல். ஆகச் செய்பவனும் அவனே, அழியச் செய்பவனும் அவனே" என்று ஞானம்படித்து விடுகிறோம். ஆனால் அது வாய்ப்பேச்சு மட்டுமே யாதலால் மறு நிமிடமே அது நம்மனதை விட்டு நீங்கி விடுகிறது.

அடுத்த நிமிடம் ஒருவன் நம்மை நோக்கி "என்ன ஐயா!

தாங்கள் வாங்கிய நிலத்தைப் பறறி பூர்வபாததிய முண்டென்று ஒருவன் வழக்கு தொடுத்திருக்கிறானாமே ?" என்று கேட்டால் "அவன் கிடக்கிறான் மூடப்பயல். நம்மிடத்திலா அவனுடைய சட்டங்களும் ஜாலவித்தைகளும் செல்லும் ! என் சாமர்த்தியம் அவனுக்குத் தெரியாது. அவன் எத்தனை கோர்ட்டுகள் ஏறினாலும் நம்மைச் சற்றுவது அசைக்கமுடியாது. என்னோடு வழக்காடி வெல்கிற சூரன்கூட இருக்கிறானா ?" என்போம்.

கடைசியில் நமக்கு ஜெயம்கிடைத்து விட்டாலோ, "பார்த்தீரா இப்போது. அவன் எவ்வளவோ தந்திரமெல்லாம் செய்து பார்த்தான், நம்மிடத்திலா அதெல்லாம் செல்லும். அவன் செய்த தந்திரங்களுக்கு வேறு எவனாயிருந்தாலும் தோற்றேயிருப்பான். நான் பணச் செலவில்லாமலே ஜெயித்துக்கொண்டு வந்து விட்டேன்" என்போம். அச்சமயம் மரியாதைக் கேனுமாவது "முடிவில் கடவுள் தயவு செய்தார்" என்ற வார்த்தைகூட வாயில் வாராது.

வியாஜ்ஜியத்தில் தோல்வி யடைந்து விட்டாலோ,

"ஆ ஹா ! நான் எவ்வளவு சாமர்த்தியமான வேலையெல்லாம் செய்தேன் தெரியுமா ? ஜட்ஜ் தீர்ப்பு எழுதும்போதுகூடக் கட்டாயம் நமது பக்கம்தான் ஆகுமென்றே நம்பியிருந்தேன். எங்கள் வக்கீல் கூட அப்படியே யெண்ணியிருந்தார். நமது கெட்டகாலமே இப்படியாயிற்று. இல்லாவிட்டால் அவனாவது ஜெயிக்கிறதாவது நமக்குத் தெய்வபல மில்லாமற் போய்விட்டது. நாம் என்னதான் தலைகீழாய்ப் பாடுபட்டாலும் முடிவில் தெய்வ எத்தனம் இல்லாவிட்டால் எது தான் நடக்கும்" என்கிறோம்.

நண்பர்களே ! இதுதானா எல்லாம் அவன் செயல் என்று நம்பி நடப்பது. இதுதானா நமது செயலால் ஒன்றும் ஆவதில்லையென்று அகமமதை யொழிந்து நடக்கும் இலட்சணம். வெளியில் வாயால் மட்டும் "எல்லாம் அவன் செயல்" என்று கூறிவிட்டு செய்கையில் நம்மாலாகாத காரியங்கூட ஒன்றுண்டோ வென்று அடங்கா அகங்காரத்தோடு நடந்து கொண்டால் நமது செய்கையின் பயன் நம்மை விட்டெப்படி நீங்கும் ? ஏன் நீங்கும் ?

இருண்ட குகைக்குள் நுழைந்து கொண்டு "விளக்கு விளக்கு" என்று எத்தனை முறை கூறினும் வெளிச்சமுண்டாகுமோ, இருள் நீங்குமோ ? வீடு தீப்பிடித்தெரியும்போது "ஜலம் ஜலம்" என்று கூவினால் தீ யணையுமோ ? ஒருபோதுமில்லை. அதுபோ

லவே "எல்லாம் அவன் செயல்" என்று வாயால் மட்டும் கூறி விடுவதால் ஒரு பயனுமில்லை.

சாதாரணமாய்த் தேகம் நிலையல்ல, அநித்தியம், ஒரு நாளைக்கு அழிந்தே போகும் என்பது யாவருமறிந்ததே. பிரத்யக்ஷமாய் தினம் நமது கண்முன் ஒவ்வொருவராய் சிறியோர் பெரியோர் பாலர் என்ற முறையின்றி எதிர் பாராவண்ணம் இறந்துகொண்டே போவதைக் கண்ணால் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஒருவர் கூறக் கேட்டதல்ல, கண்ணாற்கண்ட பிரத்தியக்ஷ அனுபவம். அப்படியிருக்க யாராவது அதை மனதில் நினைத்து நடக்கிறார்களோ ? இல்லை. நமது நடக்கைகளைப் பார்த்தால் யுகக்கணக்காய் சாசுவதமாய் இருப்போம் என்ற நம்பிக்கையுடையவன் நடக்கைகளாகவே யிருக்கின்றன. நமக்குத் தெரிந்த ஒரு மனிதர் தமக்கு அறுபது வயது முடிந்திருந்தும், பணவிரயம் செய்து போட்டி போட்டுக்கொண்டு கஷ்டப்பட்டு புறம்போக்கு நிலத்திலிருந்த ஒரு கற்பாறையைத் தோண்ணூறு வருடங்கட்கு குத்தகை யெடுத்தார்.

ஏன் இப்படி நடக்கிறோமென்றால் நமக்கு மரணம்கூடவேயிருக்கிற தென்பதை அப்போதே மறந்துவிடுகிறோம். அதைப் போன்றே "எல்லாம் அவன் செயல்" என்பதும்.

அதை மறவாமல் நமது ஒவ்வொருசெய்கையிலும் அனுபவமாயறியவேண்டும். எல்லாம் அவன் செயலாயின் அதாவது நடக்கிற எல்லா செயல்களும், ஆகவே எல்லாருடைய செயல்களும் அவன் செயலாகவே யிருந்தால், எல்லாருள்ளும் இருப்பவன் அவனாகவே யன்றோ விருக்கவேண்டும். உலகத்தில் இது ஆண் இது பெண் இது மாடு, இது காகம் என்று ஜீவராசிகளில் வித்தியாசம் தோன்றச் செய்வதும், மனிதரில் இவன் கந்தன் இவன் இராமன் என்று பிரிவினை தோன்றச்செய்வதும் நாமரூபமாய்த் தோன்றும் ஸ்தூல தேகமேயாகும். நாமரூப திருஷ்டியை விட்டுவிட்டு உள்ளேயிருக்கும் ஆன்மாவைமட்டும் நோக்கும்பட்சத்தில் வித்தியாசமுண்டோ? நீசன் ஆன்மா கறுப்பாகவும் பிராம்மணன் ஆன்மா வெள்ளையாகவு மிருக்குமோ ? இல்லை. எல்லாம் களங்கமற்ற பரிசுத்த ஆன்மாவே. அவற்றில் எவ்விதவித்தியாசமு மில்லை. ஒருவன் நம்மைத் திட்டும் போது இந்த அறிவோடுநோக்கினால் நாமே நம்மைத் திட்டிக் கொண்டதாகுமேயன்றி வேறில்லை. அப்போது அவனுக்குக் கோபம் வர நியாயமேயில்லை. உன் கைவிரலே யுன்கண்ணிற் குத்திக்கொண்டு

நோயையுண்டாக்கினால் உனக்கு விரலின்மேல் கோபம்வருமோ இல்லை. ஏன்? கண்ணும், அதைக்குத்திய விரலும் இரண்டும் உன்னுடையவையே. உன்தேகத்தின் பகுதிகளே.

ஆகையால் அந்தநாட்டத்தில் கோபம் முதலிய சகல கெட்ட குணங்களும் தலைகாட்டாதொழியும். எப்போது எல்லாம் அவன் செயலென் றறிகிறானோ, அப்போது தன்செயலே யில்லையென்று உணர்ந்தவனாய்த் தான் செயலற்றவனாகிறான்.

" என்செயலாலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமேயாவும்
நின்செயலே யென்றுணரப் பெற்றேன்
* * * * * * * "

என்று நமது பட்டினத்தடிகள் அருளியவண்ணம் அவன் தன்செயலற்றவனாய் மனச்சேட்டை யோய்ந்தவனாகிறான். அவன் தன்னிடம் வரும் நன்மை தீமையாவும் வினைப்படிவந்த அவன் செயலென்று பொறுமையாயிருப்பானேயன்றி, வேறொருவர் அவற்றிற்குக் காரணமென்று கனவிலுங் கருதான். அவன் மனமற்றவ னாய்விடலால் அவனைக் கன்மபல னணுகாது. அந்த நிலையிலிருப்பவனுக்கு மாயை நீங்கி ஞானம் உதயமாகிறது. மாயை நீங்கி ஞானமடைந்தவன் அந்த நிலைக்குவருகிறான். அதாவது ஞானம்வந்தால் அந்நிலைவரும். அந்நிலையிலிருந்தால் ஞானம் உதயமாகும். அவனே " எல்லாம் அவன்செயல் " என்று உணர்ந்து அவ்வழியில் நடப்பவன். அவனுக்குச் செய்கையால் பயனுண்டாகாது. அப்படிக்கின்றி வாயால் மட்டும் அப்படிக்கூறிவிட்டு, நடக்கையில் " நான் " என்ற அகங்காரத்தைவிடாது நாம் நடக்கும் வரையில் நமது செய்கையின் பலன் நம்மைச்சார்ந்தே தீரும். ஆகையால் எல்லாம் அவன் செயலென்பதை யறிந்து நடக்க முயல்வோமாக.

ஆனந்தபோதினி.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாயும், பாவருடைய கோரிக்கைகளையும் ஈடேற்றும் கருணாநிதியாயும் விளங்கும் ஆண்டவனது கிருபையால் நமது " ஆனந்தபோதினி " யின் இரண்டாம் ஆண்டு நிறைவுற்று மூன்றாம் ஆண்டு உதித்திருக்கிறது. ஆரம்பத்தில் முதல் வருட சந்தாதாரர்கட்கு ஏற்படுத்திய சந்தாவிகிதமாகிய 12 அணாவை யுயர்த்தலாகாதென்றே கருதியிருந்தோம். ஆனால்

நாம் எதிர் பாராத விதமாய்க் காகிதம், முதலியவற்றின் விலை அளவு கடந்து ஏறியதால் சந்தாவை யுயர்த்தவேண்டியது அவசியமாயிற்று. சந்தாதாரர்களில் அனேகர், இவ்வளவு சஞ்சிகைக்கு மற்றவிடங்களில் சந்தா 2 ரூபாய்க்கு குறையாம லிருப்பதால் நீங்கள் சந்தாவை 1—4—0 அல்லது 1—8—0 ஆகவாவது உயர்த்தலாம் என்று எழுதி யிருந்தார்கள். நாம் எவ்வளவு சிந்தித்தும் அவ்வாறு செய்ய மனங்கொள்ளாமல், முதல்வருட சந்தாதாரைமட்டும் 4 அணா கூட்டி மற்ற பேரைப்போல் ஒரு ரூபாயாகவே செலுத்தி விடும்படி கோரிக்கொண்டோம். அவர்கள் அனைவரும் அவ்வாறே சந்தோடத்தோடு சம்மதித்ததற்கு நாம் மிக்க நன்றியோடு வந்தனமளிக்கிறோம்.

இடையில் நமது சந்தாதாரர்களில் பெரும்பாலார் சஞ்சிகையின் அபிவிர்த்திக்காக எடுத்துக்கொண்ட சிரத்தை தமிழ் நாட்டாரனைவரும் புகழற்பாலதாகும். சிலர் 7, 8, 10, 12, 20, 25 சந்தாதாரர்களைக் கூட சிபாரிசு செய்திருக்கிறார்களெனின், சஞ்சிகையில் அவர்களுக்கிருக்கும் அன்பும், தமிழ்க்கல்வி யென்னும் தாய்ப்பாஷையின் விஷயத்தில் அவர்கட்கிருக்கும் அபிமானமும், பொதுநலப் பிரியமும் எத்தன்மையதென இதை வாசிப்போரே யுணர்ந்துகொள்ளலாகும். அத்தகைய அன்பார்ந்த சந்தாதாரர்கட்கும், சிரமத்தையும் தபாற்செலவால் நேரிடும் பொருள் நஷ்டத்தையும் கருதாமல், எவ்வித கைம்மாறும் எதிர்பாராமல், பொது நல மொன்றையே கருதி விஷயதானம் புரிந்துவரும் கல்விவான்களான நண்பர்களுக்கும் நமது நன்றி யறிதலை யெவ்வாறு வெளியிட்டுக் காட்டுவதென நமக்கு புலப்படவில்லை. சர்வ வல்லமையுள்ள பரம்பொருள் சீக்கிரத்தில் அதற்கோர் மார்க்கத்தைக் காட்டுவாரென்று பூரணமாய் நம்புகிறோம். தற்சமயம் நமது இடையறாத, நன்றியுள்ள வந்தனத்தை யேன்று கொள்ளுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சஞ்சிகையைப் பெரிதாக்கவேண்டுமென்றும் இன்னும் அதிகமாய் மனதைக் கவரச்செய்யக்கூடிய உருவமாக்க வேண்டுமென்றும் நாம் மனதார உத்தேசித்திருப்பினும் யாவற்றையும் செய்து முடிக்கும் ஒருவன் இன்னும் நமது நாட்டம் ஈடேறும்வண்ணம் அருள்புரியவில்லை. அவனது இன்னருளால் இப்போதுள்ள தடைகள் மட்டும் நீங்கின், இந்த ஒருரூபா சந்தாவை யதிகமாக்காமலே நமது பிரியப்படி சஞ்சிகையை விர்த்திசெய்யக் கருதியிருக்கிறோம். அது விஷயத்தில் ஆண்டவன் கிருபையை நம்பியிருப்பதோடு, நமது

அன்பார்ந்த சந்தாதாரர்களின் அன்பும் சிரத்தையும் குறையாதென்றும், சந்தா குறைவாயிருப்பதற்குத் தக்கவாறாய் சந்தாதாரர்களின் தொகையை நண்பர்கள் விர்த்திசெய்து வைப்பார்களென்றும் நமக்குப் பூரண நம்பிக்கையுண்டு.

சஞ்சிகையை யாதரிப்பவர்கள் அனுபவத்தில் சந்தாதாரர்களும் விஷயதானம் புரியும் நண்பர்களுமே யாவர். பொது நலங்கருதி கடந்த இரண்டு வருடங்களாய் மேற்கூறியவாறு அன்போடும் சிரத்தையோடும் ஆனந்தபோதினியை யாதரித்து வந்த நமது சந்தா நேயர்களும் நம் தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகளும் இன்னமும் இவ்வாறே யாதரித்துப் புகழும் ஆண்டவன் அருளும் பெறுவார்களென்று பிரார்த்திக்கிறோம். எங்களனும் யாவுந்தானாய், அவரவர் உள்ளந்தோறும், அமர்ந்து ஆனந்தமாய, அருள் நடம்புரியும் அண்ணல், ஏழையேம் கருத்தை யீடேற்றுமா றிரைஞ்சிநிற்பாம்.

பத்திரிகாசிரியர்.

ஆனந்தபோதினி வாழ்த்துப் பாக்கள்.

பொன்னார் மணிமாடப் பூம்பொழில்சேர் சென்னைநகர்
மன்னார் முனிசாமி மால்பயந்த—மின்னணங்
ஆநந்த போதினியை ஆதரியா ரெய்துவரோ
தானந்த மில்லான் சரண். (1)

எளிய நடையுள்ளாள் இன்பம் உடையாள்
களிப்புடையாள் ஞானக் கருத்தாள்—தெளிதமிழர்
போற்றும் புகழுடையாள் ஆனந்த போதினியாள்
ஆற்றலுக் குண்டோ அளவு. (2)

ஆண்டொரு ரூபாய் அமைத்தசிறு சந்தாவும்
பூண்டுவரும் மேகலைக்கே போதாவாம்—நீண்டபொருள்
இல்லாள்நன் மக்கள் இவையிருந்தும் நங்கைவர
வில்லார்க்கங் கில்லைபுக ழே. (3)

A. துப்புசாமி அய்யர்.

இறைகளுக் குரிய நீதிநன் னெறிக ளிலங்கு மதத்
துறைகளுக் குரிய ஒழுக்கமும் பலவிதத் துயர் பிணியின்
நறைகளுக் குரிய நிவிர்த்தியும் நவில்வது நா னிலத்தில்
பொறைகளுக் குரிய வெலாந் திக ழானந்த போதினியே. (1)

குருவினிற் குரிய கூர்மைகள் பலபல கோள் விளையு
மருவினிற் குரிய கொடுமைகள் விதவித மன்னுயிரின்
உருவினிற் குரிய விலக்கண முரைப்பது உயர் மறையின்
பொருவினிற் குரிய வியல்பமை யானந்த போதினியே (2)

ஆனந்தபோதினி வாழ்த்துப் பாக்கள்

தெருளினிற் குரிய திறம்பெறு நயங்கள் செகத்திற் றெய்வ
வருளினிற் குரிய யருமைகண் மாந்தர்ஞ் ஞானமுறு
மருளினிற் குரியவை மாற்றி வளர்க்குமிம் மா னிலத்திற்
பொருளினிற் குரிய வைதரு மானந்த போதி னியே.

தாய்களுக் குரிய தருமநேர் கருமம் தகமை வாய்ந்த
சேய்களுக் குரிய திருத்தநேர் பொருத்தஞ் சீலத் தின்கூர்
நோய்களுக் குரிய கஷ்டத்தினமைப்பு நுவலரு மையப்
பேய்களுக் குரிய தரைவதே யானந்த போதி னியே.

வாழ்வினிற் குரிய மார்க்கங்க ணடைகள் வண்க ளுளர்தன்
ருழ்வினிற் குரிய சஞ்சலம் யாவுந் தடுத்திடு நியாயம்
ஊழ்வினிற் குரிய சூத்திரஞ் சாலத் தூய்மை நற்காலப்
போழ்தினிற் குரிய துரைப்பதே யானந்த போதி னியே.

கதியினைக் கொடுப்பதுங் கவலையைத் தடுப்பதுங் கருத்திடத்து
மதியினைக் கொடுப்பது மாய்வினைத் தடுப்பதும் வயம்பெறுநன்
னிதியினைக் கொடுப்பதும் நிந்தையைத் தடுப்பதும் நிறைந்த கல்விப்
பொதியினைக் கொடுப்பதுஞ் சென்னைவா ழானந்தா போதி னியே.

வருந்தா வகையிற் கற்றிட வைப்பதும் வன் பிணிக்கு
மருந்தான வைகள் வழங்கு விப்பதும் மடமை களிற்
றிருந்தா தவரை திருந்திட வைப்பதும் தீமை யொன்றும்
பொருந்தா துரைப்பதும் ஞான வானந்த போதி னியே.

அகவற்பா.

பூவுலகதனி லேவிதமான
பாவலரானும் பண்புடைவேத
சாத்திரமுணர்ந்த சான்றோரானும்
நேத்தியதாக நிகழ்த்துவியாஸமாந்
தேனைப்பிலிற்றுஞ் செந்தமிழ்வல்லி
யானவானந்த போதினிமாதே !
நீடுவாழ்க நீடுவாழ்க
பீடுறுவிஷயத் தோடுநீவாழ்க
சென்றவிரண்டாண் டதனிலுன்னை
நன்றுறக்காத்த நாதனருளை
யின்னங்கொண்டுன் இன்னலாகிய
காசிதப்பஞ்ச மாதியசிறுசிறு
துன்பந்துடைத்துத் தொல்சீரறிஞர்
அன்பைத்தேடியு னரியதந்தையாம்
முனிசாமிநாம மூதலியாரவர்களும்
நனிவாழ்திருக்க நாதனைக்கோரிச்
சந்தாநண்பனும் பந்தமதுடையோ
னாகிய கே. எஸ். ஆறுமுகம்மிது
வாகியவாழ்த்தே வாழ்த்தினன். சுபமே. சுபம்.

ஓர் வேண்டுகோள்.

இம்மாதம் 3 ம் வருட ஆரம்பமானதால் கல்வியாளர்களாய நண்பர்களிற் பலர் நமது ஆனந்தபோதினிக்கு வாழ்த்துப்பாக்கள் அன்போடனுப்பியிருக்கின்றனர். ஆனால் எல்லாவற்றையும் ஒரே சஞ்சிகையில் பிரசுரிக்க இடங்கொடாததற்காக மிக்க விசனிக்கிறோம். இது அன்பை வெளியிடுவதால் நாம் யாவற்றையுமே வந்தனத்தோடேற்றுக் கொள்ளுகிறோம். இம்மாதம் வெளியானவைபோக எஞ்சியுள்ள வாழ்த்துக்களை அனுப்பிய நண்பர்கள், சஞ்சிகையில் இடங்கொள்ளாத காரணத்தைக்கொண்டே அவற்றை மறு சஞ்சிகையில் வெளியிடவேண்டி நேர்ந்ததேயன்றி, அனுப்பியவர்களின் அந்தஸ்தையாவது, கல்வியின் தாரதம்மியத்தையாவது கருதி நாம் அப்படி செய்ததன்று என்ற உண்மையை யறிந்து மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறோம். பத்திராதிபர்.

நவவிதபத்தியும் அஷ்டவிதபுஷ்பமும்

நமக்கு கடவுளிடத்தில் உண்டாகும் அன்பே பக்தியெனப்படும். பக்தியாலன்றி கடவுளை வேறு எந்த உபாயத்தாலும் அடையமுடியாது. கடவுளையடைந்தாலொழிய பிறவித் துன்பம் நீங்காது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

"அறவாழி யந்தணன் றாள் சார்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது" என்ற திருக்குறளாலறிக.

பக்தியானது ஒன்பது வகைப்படும் அவையாவன

சுலோகம்

சிரவணம் கீர்த்தனம் விஷ்ணோர்ப்பாத சேவனம் ஸ்மரணம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்யப் ஆத்மநிவேதனம்

1-சிரவணம் என்றால் கடவுளினுடைய திவ்யாவதார லீலாவைபவ கதைகளைக்கேட்டு ஆநந்திப்பது. 2-கீர்த்தனம் என்றால் பகவானுடைய கீர்த்தி குணப் பிரதாபங்களை இராகதாளங்களுடன் கண்களில் ஆனந்தபாஷ்பம் பொழிய தேகம் புளகாங்கிதங்கொள்ள நாத்தழுதழுக்க கீர்த்தனங்களாற் பாடுவது. 3-பாதசேவையென்றால் கடவுளுடைய பாதாரவிந்தங்களுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம்செய்வது. 4-ஸ்மரணம் என்றால் கடவுளுடைய நாமத்தை அடிக்கடி உச்சரிப்பது. 5-அர்ச்சனம் என்றால் கடவுளுடைய விக்ரகங்களை அலங்கரித்து பத்திர புஷ்பங்களால் அஷ்டோத்ர சகஸ்ர நாமங்களாலருச்சிப்பது. 6-வந்தனம் என்றால் கடவுளை தியானித்து நமஸ்கரிப்பது. 7-தாஸ்யம் என்றால், ஓ கடவுளே ! நீர் என்னைப் படைத்துக் காப்பவர், நான் உமக்கடிமை ஆகையால் என் பிழைகளை பொறுத்து என்னுடைய பிறவித்துன்பத்தை நீக்கி யெனக்கு நித்யானந்த சுகத்தைக் கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்திப்பது. 8-சக்யம் என்றால் பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தத்தினிடத்தில் உள்ள ஆசைகளைவிட கடவுளிடத்தில் அதிகமா

யாசைவைப்பது. 9-ஆத்ம நிவேதனமென்றால் தன்னுடைய சித்தத்தைக் கடவுளிடத்தில் வைத்து இதர சங்கல்பங்கள் ஒன்றுமில்லாமல் நிர்ச்சங்கல்பனாயிருப்பது. இனி அஷ்டவித புஷ்பங்களை கூறுவாம்.

சுலோகம்.

அஹிம்சானும் ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்திர்ய நிக்ரகம்
சர்வபூதா தயாபுஷ்பம் க்ஷமாபுஷ்பம்

விசேஷத: சாந்திபுஷ்பம் தப: புஷ்பம் த தைவச சத்
யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணுர் ப்ரீதிகரம் பவேத்

நாம் மல்லிகை முல்லை இருவாக்ஷி முதலாகிய புஷ்பங்களைக்கொண்டு அர்ச்சிப்பதாலும் மாலை கட்டி சாத்துவதாலும் கடவுளுக்கு அவ்வளவு சந்தோஷம் உண்டாவதில்லை. இப்போதிதில் கூறப்படும் புஷ்பத்தை சாத்துவதாலேயே அதிக ஆனந்தத்தை யடைகிறார். 1. அஹிம்சை யென்றால் ஜீவ இம்சை செய்யாதிருப்பதே முதல் முக்கியமான புஷ்பமாம். இதனாலன்றோ நாயனாரும்

"அறவினை யாதெனில் கொல்லாமை கோரல்
பிறவினை யெல்லாந் தரும்" என்றார்

ஜீவனைக் கொல்லாதிருப்பதே மேலான தருமம் என்றார். 2-இந்திரிய நிக்ரகம் என்றால் ஆமையானது எப்படி தன்னுடைய அவயவத்தை வெளிக்குக் காட்டாமல் மறைத்து நித்திரை செய்கின்றதோ அதுபோல் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை அதனதன் யதேச்சையாய்ப் போக ஒட்டாமல் அந்தர்முகத்தில் திருப்பியிருப்பது. 3-பூததயை என்றால் பச்சாதாபம். அதாவது பிச்சைக்காரன் ரோகி இவர்களைப்பார்த்து அவர்களுக்குத் தன் சக்திக்கேற்ப அன்னபானாதிகளை யுதவி ஆதரிப்பது. 4-க்ஷமை யென்றால் தனக்கு ஒருவன் அபகாரம் பண்ணினாலும் திட்டினாலும் அடித்தாலும் இது தன் கர்மானுசாரமென்று அவன்பேரில் குரோதங்கொள்ளாமல் பொறுமையாயிருப்பது. 5-சதா பிரம்ம விசாரணை செய்திருப்பது. 6-சதா பிரம்மத்தை மானசீகமாய் தியானித்திருப்பது. 7-தான்செய்தபாவத்திற்கு பயந்து தன் பிழைகளை மன்னிக்கக் கடவுளைப் பிரார்த்திப்பது. 8-சத்யம் தவறாமல் எப்பேர்ப்பட்ட துன்பம் வரினும் பொய் சொல்லாதவனாய் கடவுளிடம் அன்பு செலுத்துவது.

இந்த அஷ்டவித புஷ்பங்களைக்கொண்டு எவன் கடவுளைப் பூசிக்கின்றானோ அவன் அதி சீக்கிரம் கடவுளுடைய கிருபைக்குப் பாத்திரனாவான். இவ்வஷ்டவிதபுஷ்பங்களே யோகத்திற்கும் ஞானத்திற்கும் சாதகமாயுள்ளது. பக்தி துவாரா யோகத்தையும், யோக துவாரா ஞானத்தையும், ஞானத்துவாரா விதேக கைவல்யமாகிய மோக்ஷத்தையும் அடையவேண்டும்.

வீ. தமீமன்ஸா செட்டியார், ஜலகண்டபுரம்

ஸத் ஸங்கம்

அடைவதற்கரிதிலும் அரிதான மானிட ஜன்மமடைந்தபின்னர், வாழ்க்கையெனும் நீண்டயாத்திரையை முடிக்க அன்பெனும் ஸாகரத்தையடைந்து இன்ப

மடைய. வேண்டின் ஸர்வபிராணிகளுடைய ஆசீர்வாதத்திற்குப் பாத்திரனாயும், ஸர்வாபீஷ்டமும், சித்திக்கவுரியவனாயும், ஸர்வகல்யாணகுணங்களுக்கும் வாசஸ்தானமாயும், இம்மானிலத்தில் ஒருமானிடன் தோன்றினும், அவன் முக்யமாய் கவனிக்க வேண்டுபவற்றுள் 'குன்றின்மேலிட்டதீபம்' போலும் 'நெற்றித் திலகம்போலும்' முன்னுறவிளங்கி மேன்மேலும் ஸர்வஸம்பத்தைக் விருத்தி செய்யக்கூடியவையாயும், காலமிருத்துவை நிவாரணம் செய்யக்கூடியவையாயுமிருக்கின்ற 'ஸத்ஸங்கம்' என்ற நன்குபொருந்திய வித்தை ஊன்றியே இக பரசுகத்தை அடையப்பெறலாம். ஓர் ஸத்புருஷனிடமிருந்து நல்லொழுக்கம் பழக்கிக்கொள்வது மிக்க கடினமான கார்யமேயாகும். தீயோர்களிடமிருந்து தீயொழுக்கம் பழக்கிக்கொள்வது கடினமான கார்யமல்ல. சுகமும் துக்கமும் நிலையற்றன. இளமைப்பருவத்தில் சரீரத்தை ஸத்கர்மாவில்செலவிடாது ஸ்வல்ப லாபத்தைக் கருதி, கஷ்டத்தைவிலக்கி, பின்னர் நஷ்டத்தை அடைவது மேன்மையல்ல. இதற்குச் சேர்க்கையேகாரணம். தீயோர்களுடன் பழகின் தீய குணமே அதிகரிக்கும் என்பதற்கு யேமுண்டோ? தீயோர்களின் சேர்க்கை எப்படிஎனின் முற்பகலில் தோன்றும் ஒருவிருக்ஷத்தின்சாயைபோல் ஆரம்பத்தில் பெரியதாயும் வரவரக்குறைந்துகொண்டும் கடைசியில் ஒன்றுமில்லாமலும் போய்விடும். சத்துக்களின் சேர்க்கையோ பிற்பகலில் தோன்றும் விருக்ஷத்தின்சாயைபோல் ஓங்கி வளரும். கீழ்மக்களுடைய சிநேகமோவென்றால்,—

"ஸம்தத்பாயஸி ஸம்ஸ்திதஸ்ய பயஸோ நாமாபி நஞ்யாயதே
டுக்தாகாரதயா ததேவ நலினீ பத்ரஸ்திதம் ராஜதே |
"ஸ்வாத்யாம் ஸாகரஸுக்தி மத்யபதிதம் ஸன்மௌக்திகம் ஜாயதே
ப்ராயேண தப்ரமத்யமோத்தமகுண: ஸம்வாஸதே ஜாயதே" ||

காய்ச்சின இரும்பில்விட்ட ஜலத்துளிகள்போல் அந்தக்ஷணமே மறைந்துவிடும். மத்யமானவர்களின் சேர்க்கையோவென்றால் தாமரை இலையில் தெளிக்கப்பட்ட நீர்த்துளிகள், முத்துப்போல் தோன்றி உடனே மறைந்துவிடுகிறதுபோலாம். உத்தமபுருஷர்களின் சேர்க்கையோ முத்துச்சிப்பியின் வயிற்றிற்குள்சென்ற நீர்த்துளிகள் முத்துக்களாக ஆகி எவ்வளவு காந்தியோடு பிரகாசிக்கின்றனவோ அப்படிப்போல மேன்மையையுண்டாக்கும்

இன்னமும்,

"வாஞ்சா ஸஜ்ஜனஸங்கம: பரகுணே ப்ரீதிர் குரௌ நம்ரதா
வித்யாயாம் வ்யஸனம் ஸ்வயோஷிதி ரதிர் லோகாய வாதாத் பயம் |
பத்தி: சூலினி ஸக்திராத்மனே ஸம்ஸர்கமுக்தி: கலே
ஏதேஷு வஸந்தி நிர்மல குணஸ்தேப்ய: மகத்பியோ நம:" ||

நல்லோர்களுடைய சேர்க்கையில் இச்சையும், பிறருடைய குணவிசேஷங்களில் சந்தோஷமும், குருவினிடத்தில் வணக்கமும், வித்தையில் முயற்சியும், தன்மனையாளிடத்தில் ப்ரீதியும், அபகீர்த்திக்குப் பயமும், பரமேச்வரனிடத்தில் பக்தியும், தன் மனதை அடக்குவதில் சாமர்த்தியமும், துஷ்டர்களோடு சேராமலிருத்தலும், இப்பேர்ப்பட்ட நற்குணங்கள் எவர்களிடத்தில் வாசஸ்தானமாய் இருக்கின்றனவோ அப்பேர்பட்ட மகான்களுக்கு நமஸ்காரம். மேலும், தானம்

செய்ததை வெளிப்படுத்தாமலிருப்பதும், வீட்டிற்கு அதிதிவந்தால் முகமலர்ச்சியுடன் உபசரிப்பதும், பிறர்செய்த அபகாரத்தை மறந்துவிடுவதும், செல்வம் சிறந்த காலத்தில் செருக்கடையாமலிருப்பதும், பிறருக்கு அவமானம் வாராது பேசுவதும், ஸுத்துக்களின் புகழத்தக்ககார்யங்களாகும். சத்துக்களோ வணங்கிக்கொண்டே உயர்கிறார்கள்; பிறர்குணங்களைச் சொல்லிக்கொண்டே தங்கள் குணங்களை பிரகாசிக்கச் செய்கிறார்கள்; பிறர் காரியங்களைச் செய்துகொண்டே தங்கள் காரியத்தைச் சுலபமாக முடித்துக்கொள்கிறார்கள்; பொறாமையினாலேயே பிறரை தூஷிக்கும் மூடர்கள் வாயை அடக்குகிறார்கள். துர்ஜனங்கள் எப்பொழுதும் பிறருடைய குணங்களில் குறைகூறுவதில் வல்லமை யுடையவர்கள். ஸுத்துக்களோ தங்களுடைய குணவிசேஷங்களை கூறவாவது, பிறர்களை நிந்திக்கவாவது, துணியமாட்டார்கள்.

ஸத்ஸங்கமானது இகபரஸாதனத்தையடைய நன்குபொருந்திய வித்தெனக்கூறினோம். 'அதெப்படி' என்ற கேள்விபிறக்கலாம். அதற்கு விடை பின்வருமாறு:—ஸத்ஸங்கமானது தீயவொழுக்கங்களை முற்றிலும்மாற்றி நற்போதனையே போதிக்கின்றது என்பது அறிந்த விஷயமே. 'ஸத்யம்வத, தர்மம் சர' என்றபடி ஸத்யத்தையே கூறும்படியாகவும் தர்மத்தையே செய்யும்படியாகவும் தூண்டுகிறது. தீய ஒழுக்கம் இருந்தாலல்லவோ மோக்ஷத்திற்கு அருகனல்லாதுஆய்விடுகிறான். அவன் நல்லசேர்க்கையோடுகூடுவதால் தீயகுணமென்பது அணுவளவும் அவனிடம் அண்டாது, நல்லகாரியங்களே மனதில் உதித்து பின்னர் இகத்திற்கும் பரத்திற்கும் சாதனமாய்ச் செய்துகொள்கின்றனன்.

மாணுக்கர்களுக்கு, இதுகாறும், நல்லசேர்க்கையே கிடையாததால் நற்குணங்கள் முற்றிலும் மாறுபட்டு, 'உயர்குலத்தோன்' என்பதைக் கிஞ்சித்தும் கருதாது, செய்யத்தகாதவைகளைச் செய்தும், சரீரத்தை ஸத்கர்மாவில் செலவிடாது வீணாக 'எப்படித் தாமரை இலைகளை பனியானது எரிக்கின்றதோ? அப்படிப்போல, தங்கள் சரீரத்தைத் தாங்களே கெடுத்துக்கொண்டும் நரகத்திற்கு ஆளாய் விடுகின்றனர்கள் எவ்வளவுபேர்! இன்னுமொருவிந்தை! சில பிராம்மணப்பையன்களும் ஒருகிருஸ்தவப்பையனும், சுருட்டுப் பிடித்துக்கொண்டு ஒரு தெருவில் உல்லாஸமாகச் சென்றுகொண்டிருந்தனர். இதை நான்கண்ணுற்று, அவர்களை உற்றுநோக்கியபின், பிராம்மணப்பையன்கள் எனக்கண்டு 'இதுவும் கலியுகத்து மகிமையா! உத்தமகுலத்தவராகிய ப்ராம்மணர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வித்யாப்பியாஸம் செய்விக்க வேண்டுமென ஆவல்கொண்டு பள்ளிக்கு அனுப்ப, பிள்ளைகளோ தங்கள் ஆசாரத்தையும், சரீரத்தையும் கெடுத்துக்கொண்டு, ஆபத்துக்காலத்தில் தெய்வம்துடைத் துணைநிற்க அஞ்சும்படியாசெய்து கொள்ளவேண்டும்! இதுவிந்தையினும் விந்தையே! அந்தோ! தீயோர்களின் சேர்க்கையினாலல்லவோ இது நேருகிறது? இதைப்பற்றி நான் என்னென்றுகூறுவது!

"ஸத்ஸங்காத்பவதி ஹி ஸாதுதா கலானாம்
ஸாதூனாம் நது கலஸங்க மாத்கலத்வம் |

ஆமோதம் குஸுமபவம் ம்ருதேவ தத்தே
ம்ருகந்தம் நஹிகுஸுமானி தாரயந்தி " ||

துஷ்டர்களுக்கு ஸாதுக்களோடு சேர்வதினால் நல்ல குணம் உண்டாகிறது, ஸாதுக்கள் துஷ்டர்களோடு சேர்வதினால் துஷ்டத்தன்மை உண்டாவதில்லை. புஷ்பத்தினால் உண்டான வாஸனையை மண் தரிக்கிறது. மண்ணினுடைய வாஸனை புஷ்பம் வாங்கிக்கொள்வதில்லை. மேலும் ஸத்சங்கமானது துன்மார்க்கமான புத்தியை வெகுதூரத்திற்கப்பால் விலக்கிவிடுகிறது. ஐஸ்வர்யத்தினால் உண்டான செருக்கை அடக்குகிறது. பிராணிகளிடத்தில் இரக்கத்தை உண்டு பண்ணுகிறது. ஸாதுக்களுடைய ஸங்கமானது எதைத்தான் உண்டுபண்ண மாட்டாது.

" தூரிகரோதி குமதீம் விம லீகரோதி
சேதஸ்திரம் தனமகம் சுகீகரோதி |
பூதேஷு கிஞ்ச கருணும் பகுலீகரோதி
ஸங்க: ஸதாம் கிமு ந மங்கல மாதநோதி ||

S. ஸந்தானம், போதனூர்.

சசிவர்ணபோதம்

(493-வது பக்கத்தொடர்ச்சி)

அப்பா! "காலத்தால் வருவதொன்றோ காமத்தாற் கனலும் வெந்தீ; சீலத்தா லலிவதன்றி செய்யத்தா னாவதுண்டோ ....." என்பது போன்று இக்காமத்தைச் சுயசீலம் வாய்ந்த நற்குணத்தால் நாளுக்கு நாள் அணைத்து வரவேண்டும். இவ்வாசையை அடியோடு அகற்றிவிட்ட அபூருபவான்களுக்கே தங்கள் சுய சுகானுபவம் இனிது விளங்கும்.

மேலும் திரண்டு உருண்டு சீறி அத்தென்றிசைக் கடவுளாரையுந் திகைக்கத் தீய்க்குந் தீவிர தீரம் வாய்க்கப்பெற்ற சினக்கொதியென்னும் கோபக் கனலாகிய வடவாக்கினி வதியப்பெற்ற திப்பிறவிப் பெருங்கடல்.

என்னே! இக்கோபத்தீயின் குணம் மும்மலங்களின் முயற்சியான் மூண்டெழுந்து முடுகி வளர்ந்து முன்பின் பாராது முகங்கடுத்து மூக்கின் மீது முத்து நீரூற மொழிவதோராது மொழிந்து மூதுணர்ந்தோராதியரது சாபக்கனலில் மூழ்கி முடிவில் மோசக்குழியிற்கிடத்தி மூடிவிடுமென்றால் இக் கோபத்தின் செய்கையை என்னென்று மொழிவது?

ஹே குமர! இக் கோபக்கனலானது குழவிப்பருவத்திருந்தே கொதித்தெழும்பி வயதேற வயதேற கொஞ்சங் கொஞ்சமாய் முதிர்ந்தோங்குங் குணமுள்ளது. சிறுவர் சிறுபி யென்னுஞ் சிறு பிராயத்திலேயே கடுஞ் சொற்களைக் காட்டாமல் செவ்விய தீஞ்சொற்களையும் நீதிகளையும் சிறிது சிறிதாய் சிந்தையிலூட்டித் தெளியச் செய்யப்

பழக்குவதும் துள்ளித் திரிகின்ற காலத்தே அவர்கள் துடுக்கடக்குவதும் பெற்றோர்களின் கடன்.

இஃதல்லாமல் இஷ்டப்படி விடுவதும் இளங்குலவு இசைப்பதுமான இவைகளாலேயே எண்ணக் கலக்கங்கள் எழுந்து இனிமையற்று கோப் வெழுச்சிக்குக் காரணமாகிறது. இக்கோபத்தீ பெருகிப் பெருகி நாளடைவிலே அனுபவத்திற்கு வந்துவிடுகிறது. சிறியவர் பெரியவர் என்ற சிந்தனையும் அற்று விடுகிறது. மேலோர் கீழோர் பெரியோர் சிறியோர் எவர் மாட்டும் வெகுளி கிளம்பி விடுகிறது.

அதனால்,

வலியவனிடத்து மொத்தான் மாட்டினும் வெகுளிகாத்தல்
பொலிவுசெ யறமதென்னப் பொருந்துறு தனையர்தம்பால்
கலிவுறு வெகுளிசெல்லா தாதலா னவியலாற்றா
மெலியவ ரிடத்திற்காக்கும் வெகுளியே யறமதென்பார்.

வைதவன் தன்னைநன்று வாழ்த்தின னெனவுந்திய
செய்தவன் தன்னைநல்ல செய்தவ னெனவுங்கொள்வோன்
கைதவ மகன்றமுத்தி கண்டவ னல்வாறுன்னான்
பொய்தவ னென்பதென்று புகன்றனர் புலவரன்றே

பெரியவர் தம்மைக்காய்ந்தான் பிறங்கல்கல் லியகோலொப்பான்
புரிவன புரியப்பட்டு புலம்புவ னெத்தார்காய்ந்தா
னெரிநரகதனில்வீழ்வ னிழிந்தவர்காய்ந்தா னென்றா
லொருவர்தம் மிடத்துஞ்சீற்ற முறாமையே நன்றுமாதோ.

(பிரபுலிங்கலீலை.)

என்பதுபோன்று கோபத்தைக் கைக்கொள்ளார் யாரோ அவரே இக்குவலயத்துள் பெரியராவர்.

ஆகையால் நின் தந்தைபெயர் வாய்ந்த சாந்த சீலத்தை முன்னிட்டுத் தரும்படி நடந்து நாளுக்கு நாள் இவ்வெகுளியைப் போக்கி விடுவதே நலமென்றறியக் கடவாய்.

எக்காரியங்களையும் செய்யத் தொடங்கும்போதோ, நிகழும் போதோ, முடிந்த பின்னரோ, விரோதமென்னும் விக்கினம் தோன்றி விபரீதமாக்குமோ வென்னும் அச்சத்தைக் கிளப்பி யலையச் செய்யும் தொழில்களையுடைய பயம் என்னும் முதலைகள் அளவற்று அங்கு வைகும்.

அப்பா, யோசித்துப்பார்! பிறந்து விட்டாயோ, இறந்து விடுவோமென்ற பயம்; பிழைக்கவேண்டுமோ, ஜீவனோபாய பயம்; ஜீவனோபாயமா, எஜமானனுக்கு அடங்கி நிற்கும் பயம்; செல்வமா, திருடர்பயம்; அதுவேண்டாமா, தாரித்திரபயம்; ராஜ்ஜியமா, விரோத பயம், அப்பா, போகமா, ரோகபயம் இன்னும் என்னவேண்டும்? பயங்களோ, பலவுள. இப்பயமோ, தன்னை யறியாது தேகத்தை உள்ளும் புறமும் தகித்து நடுநடுங்கச் செய்யுந் தன்மை யுள்ளது.

தெளிந்த நன்மார்க்கங்களை யறிந்த செவ்விய கல்வித் தெளிவின் தைரியங்கொண்டு அதை முன்னிட்டு நிதானித்து யோசித்து கேட்டுச் செய்து தெளியுங் குணமே இதற்குச் சீரிய மருந்தாகும்.

இப்பிறவிப் பெருங்கடலுக்கோ தன்னுள் ஆழயணுகற்குரிய சுற்றிலும் பற்பல துறைகள் பற்பலவாறாய்ப் பரவிக் கிடக்கின்றன. ஒன்றுகேள். பிரவிர்த்தி மார்க்கத்துள்ள எதை யவாக்கொண்டாலும் தாராளமாய் இக்கடலில் மூழ்கி ஆழ்ந்து அடியிற் போய்விட்டாலும்; இக்கடலின் தன்மையைக் கேள்,

நான்முகத் தொருவன் மற்றை நாரியோர் பாகநிற்க
பான்முகப் பரவைப் பள்ளிப் பாம்பணைப் பரனென்றாலுங்
காலனுக்கே யுஞ்சேற லரிதிது கடலின்றன்மை
மேலுமக்குறுவ தெண்ணிச் செல்லுமின் விரிவினாளீர்

(கம்பராமாயணம்)

என்றபடி முக்குறும்பு போக்கிய முனிபுங்கவருட்பட எவராலும் இக்கடலைக் கடப்பதற்கு அரிதாகுந் தன்மையுள்ளது. இவ்வபாரப் பிறவிப் பெருங்கடல் ஒன்றல்ல இரண்டல்ல. சப்த சாகரங்களைப் போன்று தோற்றங் கட்கொவ்வோர் கடலாக ஏழு கடல்களுள்ளன. என்றருளினார் மாநந்தி பாராயண முனிவரர்.

கேட்கக் கேட்க, மாறி மாறி அச்சமும் மகிழும் பூத்தெழுந்த அந்தணன் அமலசித்தமுனிவரரை நோக்கி,

ஹே மாதவ !

மனிதருளரக்கர்சித்தர் வானவர்கணங்கடம்முண்
முனிவருளென்போனின்றன் முழுதருள்பெற்றாரில்லை
யனியனைநிகர்வார்யாவ ரென்றருட்குரவனார்தம்
பனிமலரடியில்வீழ்ந்து பணிந்தனன்.....

என்றவாறு பணிந்தனன் சசிவர்ணன்.

3-வது பிறவிப்பெருங்கடல் முற்றிற்று.

(தொடரும்)

பண்டிட் எஸ். கிருஷ்ணசாமி அய்யர்.

ஓர் நல்வழி.

நித்தனாய் முனிகளால் தொழுங் கடவுளாய் நிராமயனுமா யெவர்க்கும்
கர்த்தனாய் பரம புருஷனாய்க் கருணாகரனுமாய் கதியருள் டேவாய்
சுத்தனாய் விமலனாய் வியாபகனாய் சுருதிபா ராயணனாய்
அத்தனாய் லோக நியாமகனா னேன்சரண் புகுக நெஞ்சமே.

ஆராயுங்கால் ஒருவன் தன்பொருட்டாகப் பொருளீட்டலும் மணம் புரிதலும் மகப்பெறுதலுமே யன்றி அவன் பிறர் பொருட்டாகக் கருதிச்செய்யுங் காரியங்களெல்லாம் அவன் பொருட்டாகவே முடியும். எங்ஙனேயெனின் ஒருவன் தன் மனையாளை விரும்பி அவள் விரும்பிய ஆடையாபரணங்களை

அவட்குக் கொடுத்து அவளை மகிழச் செய்கின்றான். கணவன் தன்னை மகிழச் செய்தலாலே மனைவி அவன் உவக்கும் விதத்தையெல்லாம் நாடி அவனுக்குச் செய்து அவனை மகிழச் செய்கின்றாள். ஆதலால் கணவன் மனைவிக்குச் செய்வதும் அவள் பொருட்டன்று, அவன் பொருட்டேயாம்.

தந்தை தன் மகனைக் கல்வி யொழுக்கங்களிற் சிறந்தவனாகவும் அதிகஞ் செல்வமுடையவனாகவுஞ் செய்கின்றான். அதுவும் மகன் பொருட்டன்று. யாங்ஙனமெனின், கல்வி யொழுக்கங்களாற் சிறவாத மகனாயின் தந்தையால் தனக்குபகாரமில்லாத காலத்திலவனைச் சிறிதும் வழிபடான். கல்வி யொழுக்கங்களாற் சிறந்த மகனாயின் தந்தையால் தனக்குச் சிறிதும் உபகாரமில்லாத காலத்தும் தந்தைக்கு மகன் வழிபடவேண்டிய முறைப்படி வழிபடுவான். அந்த மகனே அதிகஞ்செல்வமுடையவனாயின் தந்தையின் கருத்தெல்லாம் முற்றுவிப்பான். ஆதலால் தந்தை தன் மகனுக்குச் செய்வனவெல்லாம் தன் பொருட்டேயாம்.

ஒருவனை யொருவன் ஆபத்துகாலத்திற் பல உதவிசெய்து காக்கின்றான் அதுவும் காக்கப்பட்டவன் பொருட்டன்று. எப்படியென்றால், காத்தவனை உலகத்தோர் கொண்டாடி நமக்கோர் ஆபத்துநேர்ந்தால் இவன் நம்மையுமப்படியே காப்பான், நாம் அவனைச் சார்ந்து வாழவேண்டுமென்று கருதிச்சேர்வார்கள். அப்படி உலகத்தார் சேரவே அவனுக்குத் துணைவலி மிகுமாகலால் கைம்மாறு கருதாது பிறர்க்குச் செய்யும் உதவியுந் தன்பொருட்டேயாம்.

இன்னும், ஒருவன் பிறர்பொருட்டென்று செய்யுங் காரியங்களெல்லாம் அவன் பொருட்டாகவே முடிதலையுய்த்துணர்ந்து கொள்க. இவ்விதமே ஒருவன் பிறர்க்குச் செய்யுங் கெடுதலையும் தன் பொருட்டாக முடியுமென்பதை, அன்பார்ந்த நண்பர்களே, நாம் எளிதில் தெரிந்துகொள்ளலாம். இதற்குபமானம் எழுதுவதை விரிவஞ்சியும் மேற்குறித்த நன்மை விஷயம்போல் கெடுதலான விஷயம் எழுத மனம்பெறாது விட்டாம். இவ்வியாசத்தை வாசிக்கும் சகோதரிகளே, சகோதரர்களே, ஒருவருக்கொருவர் எப்பொழுதும் கெடுதல் செய்யாது நன்மையே செய்து ஒற்றுமையோடு வாழவேண்டுமாய் சர்வ வல்லமையுடைய சர்வேசுவரனை பிரார்த்திக்கின்றேன்.

அவன்பொருட்டே யாகுமென்று மேலேகூறிப்போந்தாலும் உண்மையில் அவன்பொருட்டாகுமோ வென்பதை ஈண்டு ஆராயவேண்டும். அவன் என்றது யாரை ? உடலையா ? அல்லது உயிரையா ? தேகாத்மபிராந்தியுடையோரல்லாதார் உடலைத்தாமென்றுகொள்ளார். மேலேகூறப்பட்டவையெல்லாம், உடலின் பொருட்டேயன்றி உயிரின்பொருட்டாகா வாகலால் அவன்பொருட்டாகா. உண்மையில் தன்பொருட்டாகாத மனைவிமுதலியோரின் பிரீதியைத் தன்பொருட்டாவதுபோலக் கருதிச் செய்துகொள்பவன் உண்மையில் தன்பொருட்டாகும் பகவத் பிரீதியை உயிருமுடலுங்கூடி யிருக்கையிலே முயன்றுபெற வேண்டாவோ.

தன்னூரினின்றும் பிறவூருக்குச்செல்லும் செல்வமுடையான் தன் சம்ரக்ஷணைக்காகவும் ரக்ஷிப்புக்காகவும் வாகனம் பரிசாரகர் ஏவலாளர் காவலாளர் முதலிய எத்தனையோ உபகரணங்களோடு போகின்றான். வரிஞனாயின் கட்டமுதாயினுங் கையில்கொண்டுபோகின்றான். தன்னூரினின்றும் பிறவூருக்கு யாதாயினுமோர் உபகரணத்தோடே செல்கின்றவன் தன்மனைவி மக்கள் சுற்றம் பொருள் என்பனமட்டுமன்றி சரீரத்தையும் விட்டுத் தான் போகும்பொழுது தன்னோடு வரக்கூடியன யாவையென்று விசாரித்துணர்ந்து உயிருமுடலுஞ் சேர்ந்திருக்கும்பொழுதே அவற்றைச் செய்துகொள்ளவேண்டாவோ.

ஒருநாளிற் சிறிதுகாலமாயினுஞ் சரீரபந்துவாகிய மனைவிமக்கள் நீக்கி ஆத்மபந்துவாகிய ஆசிரியனைச்சார்ந்து கிருக்குத் திருக்குக்களைவிட்டுச் சம்பாஷித்தால் உயிர் உடலை நீங்குங்காலம் நிச்சயமாய் ஒன்றுண்டென்பதும், அக்காலத்திற் சரீரபந்துக்களாலே உயிரைக்காக்கவாவது அதற்கோருதவி செய்யவாவதுமுடியாதென்பதையும், அப்பொழுது உயிரைக்காக்கின்றவன் பகவனொருவனே, உயிர்க்குதவிசெய்வது சத்கருமமேயென்பதும் வெளியாகும்.

சரீரத்தில் நோய் வியாபித்து வலிகுறைந்து நாக்குழறிக் கண்சுழன்று உயிர் போகுங்காலத்தே அவ்வுயிர்க்குறுதியாக ஒன்றுசெய்துகொள்ளவொண்ணுதென்பதை யறியாதார்யார். ஆனால் உயிரென்னும் ஒன்றுண்டோ? மோக்ஷம் நரகம் என்பனவுமுண்டோ? என்று கடாவுவாரு மிக்காலத்திற் சிலருளர். இவர் முன்னோர்களான நாஸ்திகர்கள் முற்காலத்தே இவ்வித நிரீசுவரவாதஞ்செய்து ஆஸ்திகரால் தக்கவிடைபெற்று மாண்டுபோயினர். ஆதலாலிவர்க்கு வேறுவிடை கூறவேண்டியதில்லை. முன்னர்க் கடாவுதலும் உறுதிகூறுதலுமேயமையும். மேலே கூறிய உயிர் முதலியன உண்மையில் உள்ளனவாயின் இறுதிகாலத்தில் உயிர் உடலை நீங்கித் தன்னைக்காக்கின்றவனின்றி யமபடர்கையிலகப்பட்டுத்துன்புறுமே. அப்பொழுது நீரென்செய்வீர்? யமபடரோடு அப்பொழுது இந்த நிரீசுவரவாதஞ் செய்யலாகுமோ.

உயிர்முதலியன உள்ளனவேயென்று நல்லொழுக்கத்தினின்று இயன்றமட்டில் பகவத்பக்திசெய்துவந்தால் உமதுகொள்கைபடி உயிர்முதலியன உண்மையில் இல்லையாய் முடியினும் ஒருசிறிதுங் குற்றமில்லை.

மனைவிமுதலியோரிடத்தில் பக்திசெய்து துச்சமான அவரருளைப் பெறுவதற்கு வருந்திப் பொருளீட்டல்வேண்டும். அவர்விரும்பியதைச்செய்யவேண்டும். மனைவிக்குத் தாசனென்று உலகத்தாரிகழ்தலையும் பொறுக்கவேண்டும். மனைவி ஏவுகின்றதைச் செய்தலாலே வரப்பட்ட அவமானங்களையுஞ் சகிக்கவேண்டும். பகவத்பக்தியால் ஆண்டவனது கடாக்ஷத்தைப் பெறுவதற்கு மேலே கூறியவற்றில் ஒன்றும்வேண்டா. மனத்தைச் சிறிது சுவாதீனப்படுத்துவதேயமையும். வனத்தில் வசிக்கும் ரிஷிகள் எதைக்கொண்டு பகவத்பக்திசெய்து அவனருளைப் பெற்று நிக்கிரகாநுக்கிரக சக்தியையுமடையாநின்றார்கள்.

ஒருவன் அதிகம் லௌகீககாரியங்களை மேற்கொண்டிருந்தாலும் தனக்குரிய ஒழுக்கத்திலேநின்று பகவத்பக்திசெய்து ஜனனமரணபீதியினின்றும் தன்னைக்காத்துக்கொள்வதற்கு ஒருசிறிதுங்குறைபாடில்லை. லௌகீககாரியங்களை மேற்கொண்டு இருப்பவனால் எப்படிபகவத்தியானம் எப்பொழுதுஞ் செய்யக் கூடுமென்றால் அதற்குபாயம் கீழே பதித்திருக்கும் இப்பாட்டுக்கூறும்,

கைவல்லியம், சந்தேகந் தெளிதற்படலம்
ஆசிரியன் மாணுக்கனுக்குச் சொல்லியது.

விவகார வேளையெலாஞ் சமாதி யென்றால்
விகற்பமன்றோ மனமலைந்து விடாதோ விட்டால்
அவதான நழுவுமன்றோ வென்று யாகி
லதற்கொருதிட் டாந்தாங்கே ளாசைகொண்டு
நவமாக பரபுருடன் றன்னைக் கூடி
நயந்தசுக மநுபவித்த நாரி நெஞ்சந்
தவமாக மனைத்தொழில்கள் செய்யும் போதுந்
தழுவியனு பவித்தசுகந் தனை விடாதே. (22)

இப்பாட்டின்கருத்து, ஒருத்தி ஒருபுதிய சோரநாயகன்மேலாசைகொண்டு அவனைப்புணர்ந்து அநுபவித்தசுகத்தையே, அவள் கிருககிருத்தியங்களைச் செய்துகொண்டிருக்கும்பொழுதும், அவளதுநெஞ்சம், எப்படிநினைத்துக்கொண்டேயிருக்குமோ அப்படி விவேகி எப்பொழுதும் பகவத்தியானஞ்செய்துகொண்டே பலவித லௌகீககாரியங்களையுஞ் செய்துகொண்டிருப்பானென்பது.

(தொடரும்.)

நா. அ. குருசாமி நாயுடு.

"தானமது விரும்பு"

இது லோகமாதா எனத்தகும் ஔவையார் அவர்களால் ஆத்திசூடி என்னும் நீதிநூலில் கூறப்பட்டுள்ளது. தானம் அது விரும்பு. (யாசகர்க்குச்) கொடுப்பதை நீவிரும்பு. அது - பகுதிப்பொருள்விகுதி. தானம் கொடை, ஈகை என்பன ஒருபொருட்சொற்கள். வறுமையால் வருந்துவோர் விரும்பியதைக் கொடுப்பதே தானம். இதுவே அறம் எனப்படும். "அறஞ்செயவிரும்பு" என்ற வாக்கியத்தை விளக்க எழுந்தது இவ்வாக்கியம். "ஈதலறம்" என்று வேறிடத்தில் கூறியிருத்தலால் தானமே அறமென்பது விளங்கும். தானம் என்பது வடமொழி. இதனையே தென்மொழியில் கொடை, ஈகை என்று கூறுகின்றது. தானமென்பது இம்மை மறுமைப் பயன்களைக்கொடுத்து ஜன்மாந்திரத்தில் மோட்சவின்பத்தையும் அளிப்பது. தானத்தினால் சத்துருவும் மித்திரனாகிறான். முன்பழக்கமில்லாதவனும் நண்பனாகிறான். தானத்தினால் ஆகாததொன்றில்லை. பூலோகத்தில் தானம்செய்கிறவன் சரீராந்தியத்தில் தேவசொரூபத்தைப்பெற்றுச், சொர்க்காதிபுண்யலோகங்களை அடைந்து ஆனந்தபோகத்தை அனுபவிக்கிறான். ஆதலால் எவ்வகையாலும் பிரயத்தனம் செய்தாவது தானம் கொடுக்கவேண்டு மென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. இதத்தில் புகழும் பர்த்தில் புண்ணியலோகவாழ்வையும் கொடுக்கும் அதன்மகிமையை உணர்ந்தே சுருங்கச்சொல்லல் என்னும் வனப்புவாய்ந்த சிறிய வாக்கியத்தைக்கூறியருளினார். இத்தகைய அரும்பொருள் இளமையிலேயே சிறுவர் மனதில் படிந்து வேரூன்றினால், நன்னிலத்திலிட்ட விதையைப்போல தகுந்தபருவத்தில் முதிர்ந்து நற்பயன்தரும் என்பதே அவர்கருத்து.

தானம் பலவகைப்படும். அவை தர்மம், அர்த்தம், இச்சை, வெட்கம், ஆனந்தம், பயம் என்ற ஆறுமாம். இவற்றுள் தர்மம் என்பது பிரதிபிரயோஜனத்தை விரும்பாமல் நல்லோர்களுக்குக் கொடுக்கப்படுவது. அர்த்தம் என்பது ஒரு பிரயோஜனத்தைத் தான் அடையக்கருதி பிறருக்குக்கொடுப்பதாம். இச்சை என்பது ஸ்திரீகள், மதுபானம், வேடிக்கை இவைகளை விரும்பிக்கொடுப்பது. வெட்கம் என்பது பலர்கூடிய சபையில் யாசகரால் புகழப்படுவதற்கு நாணிப்பிறர்க்குக் கொடுப்பது. ஆனந்தம், என்பது தம்மிடத்திலுள்ளபொருளைக் கண்டாவது கேட்டாவது விரும்புவோர்க்கு அப்பொருளை மகிழ்ந்து கொடுப்பதாம். பயம் என்பது சத்துருக்களுடைய இம்சைக்குப்பயந்து அதினின்று தப்பித்துக்கொள்வதற்காகக் கொடுக்கப்படுவது. இவ்வாறினுள் தர்மம், ஆனந்தம் என்பன சிறப்புடையன. மற்றவை பயனற்றன. அன்றியும் பிறர்படும்துன்பத்தைக்கண்டு அத்துன்பத்தை நீக்கும்பொருட்டு இரக்கத்தினால் கொடுப்பதும் ஒன்று. இது எல்லாவற்றினும் சிறந்தது.

பாபமார்க்கத்தால் அன்றித் தன்சொந்தமுயற்சியால் சம்பாதித்த பொருளையே கொடுத்தல்வேண்டும். "தீவினைவிட்டீட்டல் பொருள்" என்றார் அன்னையாரும். சுசியான மனத்தையுடையவனாய்த் தர்மசிந்தையுடன் சற்பாத்தி

ரத்தில் கொடுக்கப்படுவது பரலோகங்களில் சுகத்தையும் நித்தியானந்த மோட்சத்தையும் கொடுக்கும்.

எல்லாப்பொருள்களையும்விட அன்னமே சிறப்புடையது. அன்னத்தினாலேயே பிராணிகள் விருத்தியடைந்துஜீவிக்கின்றன. அன்னமே ஜீவனுக்கு ஆதாரம். பிரபஞ்சமெல்லாம் அன்னமயமே. ஆகையால் அன்னத்துக்கு மேற்பட்டதுவேறொன்றுமில்லை. பிராணிகள் அன்னத்தினால் திருப்தியும் சந்தோஷமும் அடைவதுபோல மற்ற வேறு பொருள்களால் அடையமாட்டா. எல்லாத் துன்பங்களையும்விடப் பசித்துன்பமே அதிகமானதுன்பம். பசிநோய் நீங்கின போது ஜீவாத்மாக்கள் அடையும் ஆனந்தத்துக்கு அளவிராது. அக்கருத்தினாலேயே "ஐயமிட்டுண்" என்று வேறிடத்திலுங்கூறினார். அன்னத்தைப் புசித்துப் பசிநோயற்று ஜீவாத்மாக்கள் ஆனந்தப்படும்போது எல்லாப்பிராணிகளுக்குள்ளும் அந்தர்யாமியாய் ஜீவசாட்சியாய்நிற்கும் சர்வேசுவரனும் களிப்படைவன். அதனால் அன்னமிட்டவன் அடையும்பலன் அளவிலடங்காது. ஆதலால் அன்னதானமே எல்லாவற்றிலும் மேலானதென்றும், அஞ்ஞானத்தை ஒழிக்கும் வித்தியாதானமும் அதற்குச் சமதையல்லவென்றும் எல்லாநூல்களும் கூறுகின்றன. இதுபற்றியே

"வையிற் கதிர்வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்க ணுங்கட்கிங்கு
வெய்யிற் கொதுங்க வுதவாவுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளுமுதவாதுகாணுங் கடைவழிக்கே.

பொருபிடியுங் களிறும் விளையாடும் புனச்சிறுமான்
தருபிடி காவலசண்முகவா வெனச்சாற்றி நித்தம்
இருபிடிசோறுகொண் டிட்டுண்டிரும்வினையோ மிறந்தால்
ஒருபிடி சாம்பலுங் காணுதுமாய வுடம்பிதுவே.

மலையாறுகூரிறழ வேல்வாங்கினானை வழுத்தியன்பி
னிலையான மாதவஞ் செய்குமினோநும்மை நேடிவருந்
தொலையாவழிக்குப் பொதிசோறுமுற்ற துணையுங்கண்டீர்
இலையாயினும் வெந்ததேதாயினும் பகிர்ந் தேற்றவர்க்கே"

என்று, மஹாத்மாக்கள் எல்லாரும் அன்னதானத்தின் மகிமையைப் புகழ்ந்து கூறினார்கள். செல்வமு மிளமையுந் தேகமுநிலையற்றன. அவை இவ்வுலகத்திலேயே அழிந்துகெடுவன. மனிதர்செய்த பாபபுண்ணியங்களே ஜீவாத்மாவைப் பற்றிநின்று எவ்விடத்துந்தொடரும். பாபம் துன்பத்தையும், புண்ணியம் சுகத்தையும்தரும். ஆதலால் தன்னைக்காப்பாற்றிக்கொள்ளவிரும்புகிற எவரும் ஏழைகளையிகழாமல் தம்மால் இயன்றஅளவு அன்னதானம் செய்வதே உத்தமம்.

"ஆறிடு மேடு மடுவும்போ வாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து"

என்று அன்னையாரும் அதனையே புகழ்ந்துகூறியுள்ளார். ஆதலால் நமது முன்னோர் நடந்துசென்ற அந்நெறிபற்றிச்சென்று நித்தியானந்த வாழ்வுபெற முயல்வோமாக.

சிவானந்தம்.

சிறுவர்கள் பக்கம் . ஸ்திரீகள் பக்கம்

பழமொழிகளின் அனுபவம்

(469-ம் பக்கத் தொடர்ச்சி)

இராஜகுமாரன் கடவுள் கிருபையால் கிடைத்த அளவற்ற திரவியங்களை எடுத்துக் கொண்டு ஏட்டின் எஞ்சிய பழமொழிகளாகிய

4. "பெண்டாட்டியைப் பிறர்தவீட்டுக் கடிக்கடி அனுப்பவேண்டாம்"
5. "மனையாளுக் குற்றதொன்று முரைக்கவேண்டாம்"

என்ற இவ்விரு பழமொழிகளையும் பரீக்ஷை பார்க்க எண்ணினவனாய் தனக்குக் கிடைத்த திரவியங்களெல்லாவற்றையும் பத்திரமாய் எடுத்துக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தான். சேர்ந்ததும் தனதில்லாளிடம் தான் ஊருக்குப்போன விடத்தில் தான் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் தனக்குக் கிடைத்த ஐசுவரியத்தையும் பற்றிற்ற துரையாமல் வெவ்வேறு விஷயங்களைச் சொல்லி க்ஷேம லாபங்களை விசாரித்துக்கொண்டிருந்தான். பிறகு இராஜகுமாரன் "பெண்மணி, இன்னும் ஓர் ஆச்சரியமான விஷயம் உண்டு. ஆனால் அது இரகசியமாய் வைத்திருக்கவேண்டும் இல்லாவிடில் பிராணஹானி நேரிடும்" என்றுகூறினான். அதற்கு அத்தேன் மொழியாள் "ஹே! பிராணநாதா தாங்கள் கூறும் இரகசியத்தை நான் வெளியாக்கி அதனால் தங்களுக்கு நேரிடும் ஆபத்தைக்கண்டு நான் மனம் சஹிப்பேனோ! தங்களுக்கே தெரியும் என் புத்தி. ஆகையால் சஞ்சலமில்லாமல் சொல்லுங்கள்" என்று புகன்றாள்.

உடனே இராஜகுமாரன் விவேகியாதலால் தன் காதலிக்கு அடியிற்கண்டவாறு விளம்பலானான் :—

"ஓ பெண்கள் நாயகமே, நம்மையாளும் இவ்வூர் மன்னர் புருஷ கர்ப்பமாயிருக்கிறாராம். சில மாதங்கள் சென்று வயிறு வெடித்து குழந்தை ஜனிக்குமாம். அப்போது ராஜா உயிர்துறந்து பரமபதம் அடைவாராம் என்றிவ்வாறு பிரபஞ்சமெங்கும் பிரஸ்தாபம். ஆகையால் இவ்வர்த்தமானத்தை யாருடனும் நவிலவொண்ணாம லிருக்கக் கடவாய்" என்று மொழிந்தான்.

இவ்வர்த்தமானத்தைக் கேட்ட அவனது மனைவி மிக்க வியப்படைந்தவளாய் அவ்வதிசய சங்கதியைப் பற்றி சிறிதுநேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்து இருவரும் போஜனமருந்திய பிறகு இராஜகுமாரன் களைப்பினால் படுத்து உறங்கிவிட்டான்.

இவ்வாச்சரிய சங்கதியானது இவள் மனதில் அடிக்கடி பிரகாசித்துக் கொண்டேயிருந்தது. ஆனால் இவ்விஷயத்தை வெளிவிடாம லிருக்க சாத்தியப்படவில்லை. அடக்கியும் பார்த்தாள். அடக்கவும் முடியவில்லை. அன்று சாயங்காலம் தண்ணீர் கொண்டுவரப் போனவள் தன் அருமைத் தோழியாகிய "அலங்காரம்" என்னும் அரிவையிடம் இப்பரம ரகசியத்தை ஒருவருடனும் சொல்லாமலிருக்கும்படி பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டாள். பிறகு இந்த ரகசியத்தைச் சொல்லி விட்டோமே அது எப்போதாவது வெளியாய் விடுமோ என்ற திகில் இவள் மனத்தைவிட்டு அகலவில்லை. ஐயோ பாவம். அந்த ரகசிய சங்கதியை வெளியிடுவானேன்? வெளியிட்டபிறகு வெளியாய் விடுமோ என்ற பீதியடைவானேன்? பெண்கள் பேதை நெஞ்சம் படைத்தவர்களானதால் தங்கள் மனதிலுள்ளவற்றை ஒன்றையேனும் ஒளியாமல் சொல்லிவிட்டால் தான் அவர்களுக்கு இரவில் நித்திரை வரும். ஆனபடியால் இராஜகுமாரன் மனை

விக்கு இப்போது தான், தான் ஒரு கௌரவமடைந்ததாகவும், கிருதார்த்தமடைந்ததாகவும் எண்ணி யிருந்தாள்.

மறுநாள் அலங்காரம், என்னும் பெண்மணி தனக்கு மிகவும் இஷ்டமுள்ள வளாகிய " ஆபரணம் " என்னும் மங்கையிடம், இச்சங்கதியை யாவரிடத்திலும் சொல்லாமலிருக்கும்படி சொல்லிவிட்டாள். இப்படியே ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு நேசமானவர்களிடம் இந்த இரகசிய வர்த்தமானத்தை வெளியாக்கினார்கள்.

இவை நிற்க: 20-மைல் தூரத்திலுள்ள 'காளிங்கபுரம்' என்னும் ஊரில் வாசஞ்செய்து கொண்டிருந்த இராஜகுமாரனது மாமன், மாமி இவர்கள், மருமகன் தேசாந்திரம்சென்று வந்திருக்கிற செய்திகேள்விப்பட்டு பார்க்கவந்தார்கள். ஒருவர்க்கொருவர் க்ஷேமலாபங்களைச் சற்றுநேரம்பேசிக்கொண்டிருந்து போஜனமருந்திய பின்னர், ஊருக்குப் புறப்படவெதாய்ச் சொல்லிக்கொண்டிருக்கையில், மகளும் நானும் கூடவருகிறேன் என்றுசொல்ல, பெற்றோர்கள் ஆனால் உன் கணவனை உத்திரவு கேட்டுவா என்றார்கள். இவள் கணவனிடம்சென்று என் பெற்றோர் ஊருக்குப்போகிறார்கள், நானும்போய் 10-நாளிருந்து பின்பு வருகிறேன் என்று கேட்டாள். இராஜகுமாரன் தன்மனைவியை அனுப்ப இஷ்டமில்லாதவனாயிருந்தாலும் பழமொழியின் அனுபவத்தை அறிய இச்சையுள்ளவனாகையால் இதுவே தருணமென்று நினைத்து அப்படியேபோய் வாவாமென்று உத்திரவுகொடுத்தான். இவர்கள் மூவரும் ஊருக்குப் புறப்பட்டுப் போனார்கள். மறுநாள் இராஜகுமாரன் மாறுவேடம்பூண்டு காளிங்கபுரத்திற்கு சூரிய அஸ்தமனத்திற்குப் பின்போய்ச்சேர்ந்து அங்கு தன்பெண்சாதிவீட்டுக்கு அக்கம்பக்க வீடுகளில் குரலைமாற்றி பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். இவன் மனைவி தன் எதிர்வீட்டில் தன்னுடன் சிறுவயதில் விளையாடினவனும் பள்ளியில் படித்தவனுமாகிய, இராமசுவாமி என்பவன்மேல் அதிகபிரியமுள்ளவள். அவன் இவள் வந்திருக்கிறசெய்தி கேள்விப்பட்டு அன்றுசாயந்திரம் இப்பெண் வீட்டுக்குவந்து க்ஷேமத்தை விசாரித்துக்கொண்டிருந்தான். பிறகு தாங்கள் சிறுவயதில் விளையாடின்போது நடந்தசங்கதிகளை ஞாபகத்துக்குக் கொண்டுவந்து சற்றுநேரம் சம்பாஷித்தார்கள். பிறகு ஒருவருக்கொருவர் பரிகாசமான பேச்சுக்களையும் சரஸமான பேச்சுகளையும் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டு மிருந்தார்கள். பெற்றோர்கள் தங்களருமைப் பெண்ணனபடியால் இவைகளை யொரு பொருட்டாய் கவனிக்கவில்லை. இராஜகுமாரன் தெருத்திண்ணையினின்று காளரத்தின்வழியாக உற்று நோக்கினான். இவன் மனம் சகிக்கவில்லையாயினும் மேல்நடக்கும் விஷயங்களையும் அறிய அவாவுடையவனாயிருந்தான். அப்போது இவன் மனைவி அப்பா இராமசுவாமி, இருட்டிவிட்டது இங்கேயே போஜனம் செய் என்றாள். பெற்றோர்களும் இராமசுவாமி இங்கேயேதான் சாப்பிடு என்றார்கள். பிறகு எல்லாரும் போஜனம் செய்த பின்னர், இராமசுவாமி! நீ நடையில் படுத்துக்கொள், இருட்டில் என் வீட்டுக்குப் போகவேண்டும் என்றார்கள். அப்படியே நடையில் இராமசுவாமி படுத்துக்கொண்டான். பெற்றோர்களும் அப்பெண்மணியும் ஒருவீட்டிற்குள் படுத்துக்கொண்டார்கள். வீதிகதவு தாழ்ப்பாள் போட்டு வருகிறேனென்று இப்பெண் எழுந்திருந்து இராமசுவாமியிடம்வந்து, அப்பா இன்றுதான் சந்தோஷமாயிற்று, எல்லாரும் உறங்கியபின் வருகிறேன் என்று சொல்லிக் கதவைத்திறந்து வெளியில்போய் ஜலாவஸ்தையை நீக்கப்போன் ஸமயம், அவ்விடத்தில் ஒன்றியிருந்த இவள் புருஷன் யாருமறியாமல் நடைக்குள் புகுந்து ஒரு குதிர்மறைவில் ஒளிந்திருந்தான். இப்பெண் உள்ளேவந்து தாழ்ப்பாளிட்டுப் போய்ப் படுத்துக்கொண்டாள்,

சிறிது நேரம் சென்றவுடன் இராஜகுமாரன் தன் ஜேபியில் இருந்த ஒரு தீக்குச்சியை எடுத்து விளக்கு ஏற்றினான். இராமசுவாமிக்கு திகில் ஏற்பட்டது. வெளிச்சத்தில் பார்க்க அவன் அவ்வீட்டு மாப்பிள்ளை யென்று தெரிந்து ஒன்றும் பேசாமல் கதவைத் திறந்துகொண்டு ஓடிப்போனான். இராஜகுமாரன் இராமசுவாமி படுத்திருந்த விடத்தில் யாதொரு கவலையு மில்லாமல் படுத்துக்கொண்டிருந்தான். கொஞ்சநேரம் சென்றபிறகு இவன் மனைவி சந்தடி செய்யாமல் எழுந்து இராமசுவாமி படுத்திருந்த விடத்துக்கு வந்து தன் புருஷனையே இராமசுவாமி என்று நினைத்து எழுப்பினாள். படுத்திருந்தவனும் மௌனத்தோடு எந்த இரகசியம் பேசினாலும் கைஜாடை காண்பிவித்தான். பிறகு இருவரும் சிறிது நேரம் சுகித்திருந்து பிறகு அப்பெண் 10 மைல் தூரத்திலுள்ள அமராவதி என்னும் ஊரில் நாளைக்கு ஆட்டம் நடக்கிறதாம், அங்குபோய் 2, 3 நாளிருந்து பார்த்துவிட்டு வரலாம். இன்றையதினமே என் பெற்றோர்களிடம் சொல்லிவிட்டு வருகிறேன் என்றாள். அப்படியே ஆகட்டுமென்று ஜாடை காண்பிக்க, இவன் மனைவி பெற்றோர்களிடம் போய் அமராவதியில் ஆட்டம் ஆடுகிறார்களாம். பெண்டுகள் எல்லாரும் போகிறார்கள். நானும் போகிறேன். என்று கேட்க, ஜாக்கிரதையாய்ப் போய் ஜாக்கிரதையாய் வந்து சேரம்மா என்று சொல்லிவிட்டார்கள். பிறகு இவள் புருஷனிடம்வந்து, இராமசுவாமி எழுந்திரு போகலாம் என்று சொல்ல இருவரும் புறப்பட்டார்கள்.

கணவன் முன்னே முக்காடுபோட்டு போர்த்துக்கொண்டு போக பெண்சாதி பின் சென்றாள். இவர்களிருவரும் சூரியோதயத்திற்குக் கொஞ்சம் முன்னதாக இருட்டாயிருக்கும்போது அங்குள்ள ஒரு சாவடியில் தங்கினார்கள். அப்போது இராஜகுமாரன் படுத்தான், நித்திரை வந்துவிட்டது. அருணோதயமாயும் இராஜகுமாரன் எழுந்திருக்காமலிருந்ததைக்கண்டு ராமசுவாமி, ராமசுவாமி எழுந்திரு, எழுந்திரு இதென்ன வேலை இவ்வளவு நேரமாயும் இன்னும் தூங்குகிறதா என்று எழுப்பினாள். புருஷன் தலை முக்காடிட்டுப் படுத்திருந்ததால் இவள் கூவக் கூவ உம் உம் என்ற சத்தம் கேட்டதே யொழிய எழுந்திருக்கவில்லை. கடைசியில் அடே ராமா, எழுந்திரு என்று தலை மூடியிருந்த வஸ்திரத்தை நீக்கினாள். புருஷன் முகத்தைப் பார்த்து விட்டாள். உடனே இராமசுவாமி யென்றல்லவா, இராத்திரி முதல் சொல்லத் தகாத வார்த்தைகளைச் சொன்னோம். கூடியிருந்தோம். இதென்ன விபரீதகாலமென்று அவள் பிரமித்து ஒன்றுந் தோன்றாதவளாகி, மௌனமாயுட்கார்ந்திருந்தாள். இச்சமயத்தில் இவள்பஞ்சபூதங்களும் ஆத்துமாவும் எத்துணை கிலேசப்பட்டிருக்குமென்று இதை வாசிப்போர் தெரிந்து கொள்ள வேண்டியது. பிறகு இராஜகுமாரன் எழுந்து உடனே ஒரு வண்டி தயார்செய்து, இருவரும் காவேரிபுரம் வந்து சேர்ந்தார்கள். அன்று பகலில் போஜனம் செய்துவிடு உட்கார்ந்திருந்தார்கள். இதுவரை ஒருவருக் கொருவர் சம்பாஷிக்கவு மில்லை. ஒருவர் முகம் ஒருவர் பார்க்கவுமில்லை. இஃதிவ்வாறிருக்க, இராஜகுமாரன் பரீக்ஷை பார்க்க வேணுமென்று தன் மனைவியிடம் சொல்லியிருந்த இரகசியம் அலங்காரம், ஆபரணம் என்னும் பெண்கள் மூலமாய் தினே தினே ஒரு வாரத்துக்குள் வேந்தன் காதிற் கெட்டியது. அவ்வரசன் எவ்வாறு இச்சங்கதி ஊரெங்கும் பரவியது என்று முறைமுறையாய் விசாரிக்க, கடைசியில் இராஜகுமாரனது மனைவி சொன்னதாக வெளியாயிற்று. இவளை யழைத்துவர ராஜ கிங்கரர்கள் வந்தார்கள். அவர்கள் இவனது மனைவியின் பெயர் சொல்லி யழைத்தார்கள். இவளுக்கு திடீரென்று ஒரு பீதி யுண்டாயிற்று. என்ன செய்வாள், எப்படியாவது ராஜாக்கினைக்குட்பட்டு மரணமடைவோம் என்று தீர்மானஞ்செய்துகொண்டு புறப்

பட்டாள். அப்பொழுது கணவன் இறைவன் கேட்கும் கேள்விக்கு என்ன சொல்லுகின்றனைஎன்றுவினவ, ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தாள். அப்போது என்பர்த்தா எனக்குச் சொன்னார் என்று சொல்லக் கடவாய் எனப் புகன்றான். அவ்வாறே இவளை இராஜசபையில் விசாரணைசெய்ய இவளும் உற்றதுரைத்தாள். உடனே இராஜகுமாரனைச் சேவகர்கள்வந்து அழைத்துப் போய் ராஜசமுகத்தில்விட அப்போது இராஜகுமாரன் ஆதியோடந்தமாய் நடந்த விருத்தாந்தங்களைக் கூறி இரத்தினங்களைமட்டும் காண்பித்தான். மேலும் இப்போது தன் பேரில் ஏற்பட்டிருக்கிற கேசும் தான் வேண்டுமென்று பரீக்ஷை பார்ப்பதற்காக பகர்ந்ததென்றும் உண்மையை விண்டான்.

உடனே அரசன் இவன் விவேகத்துக்கும் இடையறா முயற்சிக்கும், அளவற்ற ஆனந்தமடைந்து இவனைத் தன் முதல்மந்திரியாக்கிவைத்தான். தன்னனையாள் செய்த குற்றத்தை மன்னித்து இருவரும் புத்ர பௌத்ர களத்ர மித்ராதி பந்துவர்க்கங்களுடன் சௌக்கியமாய் வாழ்ந்துவந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், சிறுவர்காள்! 'ஏட்டுச்சுரைக்காய் கறிக்குத்வாது' என்பதைப்போல படித்துவிட்டோம் என்னும் அகந்தையை யடையாமல் எவ்விஷயத்தையும் நுட்பமாய் ஆராய்ச்சிசெய்து பலனடையவேண்டும்.

சிலர் 'பெண்சாதியைப்பிறந்த வீட்டுக்கனுப்பவேண்டாம்' என்ற பழமொழியைப்பற்றி அனுப்புவித்தால் எல்லாரும் அப்படியே செய்வார்களா? என்ற கேள்வி கேட்பார்கள். உண்மை எதுவென்றால்:—பொதுவாக ஸ்திரீகளுக்கு சுதந்திரமில்லை, தனிமையி லிருக்கவொண்ணாது. அவர்கள் பேதை மனமும், சஞ்சலஹிருதயமுடையவர்கள் அவர்களின் ஹிருதயத்தை யெப்படித் திருப்பினாலும் அவ்வாறு திரும்பும். ஆகையால் அவர்களுக்கு எப்போதும் ஸத்ஸங்கமும், வித்தையுமே துணையாயிருப்பன. தவிர பெண்களுக்கு சாதாரணமாய் புருஷன்வீட்டிலுள்ள பயம் தாய் வீட்டிலில்லை. அங்கு பரபுருஷருடன் பரிகாசம்செய்து சிரித்துவிளையாடினாலும் பெற்றோர்கள் கவனிக்கமாட்டார்கள். ஒருவேளை தீயச்செயல் நடைபெறினும் அதை வெளியாக்க இஷ்டப்படுவார்களா? என்று ஆலோசனை செய்யுங்கள். ஆனால் எல்லாரையும் அப்படியே எண்ணக்கூடுமோ என்றால் மஹா பதிவ்ருதைகளு மிருக்கலாம்.

G. ஹநுமந்தராவ்.

குறிப்பு:—நண்பர்காள்! மேற்கண்டவியாசத்தி னிறுதியிற் கூறியபடி தாய் வீட்டிற்கு அனுப்பப்படும் மனைவியார் யாவருமே விபசாரம் செய்வார்கள் என்று கூறப்பட்டதாய் இதை வாசிக்கும் சகோதர சகோதரிகள் கருதிவிடலாகாது. அது எங்கோ ஏகதேசமான திருட்டாந்தமேயன்றி வேறல்ல. மேலும், விபசார குணமுடைய ஸ்திரீகள் தாய்வீடு செல்லாது புருடன் வீட்டில் அல்லது வேறெங்குதான் இருந்தபோதிலும் விபசாரம் செய்தே தீருவார்கள். அது நிற்க, தாய்வீட்டிற்கு அடிக்கடி பத்தினியை யனுப்புவதால் மேற்கண்ட பெருந்துன்பமன்றி, வேறுபல அனுனுகூலங்கள் நேர்ந்து புருடன் முதலியோர்க்கு மனவியாகுலத்தை விளைவிக்கக்கூடும். அதற்கோர் சிறு அத்தாட்சி மட்டும் கூறுவாம்:—

பாலுண்ணும் குழந்தைகளுக்கு நோய்வரின் தாயே பத்தியம் காக்கவேண்டும். ஏனெனின் குழந்தை தாயின்பால் தவிர வேறு ஆகாரமுண்பதில்லை. தாயுண்ணும் ஆகாரமே இரத்தமாகிப் பிறகு பாலாய்மாறிக் குழந்தையாலுண்ணப்படுகிறது. இதனால் தாய் தகாத பொருள்களை யுண்டால் குழந்தைக்கு வியாதி வருவது திண்ணம். ஆகையால் குழந்தை பாலுண்ணும் மட்டும் தாய் தகாதபண்டங்களை யுண்ணாதபடி காக்கப்படுகிறாள். அத்தகைய ஸ்திரீகள் தன் தாய்வீட்டிற்குச் சென்றால் பெற்றோர் "நமது அருமந்தப் புதல்வி என்றைக்கோ ஒரு

நாளைக்குத்தானே வருகிறாள்" என்ற அன்பினால், அவள் "ஐயய்யோ பனம்பழம் குழந்தைக்காகாது எனக்குவேண்டாம்" எனினும், பெற்றோர் "பனம்பழம் வருடத்திற்கு ஒரு பண்டம்; வருகிற வருடம் இந்தகாலத்தில் நீ இங்கே வருவது என்ன நிச்சயம்; ஒன்று காப்பிட்டால் அப்படி ஒன்றும் பிரமாதமாய்விடாது" என்று திண்ணச் செய்கிறார்கள். கடைசியில் மனைவி வீட்டிற்கு வந்ததே புருடன் டாக்டர் வீட்டிற்குச் செல்லவேண்டியதே. மற்றப்படி தாய் தந்தையர் தமது புத்திரி செய்யும் குற்றங்களை வெளியிடமாட்டார்களென்பது அனுபவமான உண்மை.

பத்திரிகாசிரியர்.

தன் முயற்சி

"முயற்சி திருவினை யாக்கும்"--வள்ளுவர்.

தன் முயற்சியென்பது ஒருவன் தானாக முயற்சி செய்தலாம். தன் முயற்சியால் ஆகாத காரியம் எதுவும் இல்லை. ஸ்மைல்ஸ் (Smiles) என்னும் ஆங்கில பண்டிதர் எழுதியுள்ள 'தன் முயற்சி' யென்னும் அழகிய நூலைப்படித்தால், தன் முயற்சியின் ஆச்சரியமான நன்மைகள் தெரியவரும். தன் முயற்சியாலேயே உலகத்தில் தோன்றிய பெரிய மனிதர்களெல்லாம் முன்னிலையடைந்தார்கள்.

நமது பூர்வீக சரித்திரங்களைப் பார்ப்போம். தன் முயற்சியாலன்றோ துருவன் தேவரும் புகழும் சீரியனாயினன்? தன் முயற்சியின் அரிய நலங்களை அறிய விரும்புவோருக்குத் துருவ சரித்திரமே இன்னும் சான்றாக விளங்குகின்றது. மார்க்கண்டனைப் பாருங்கள். அவன் காலனையும் வென்றமை தன்முயற்சியாலன்றோ? இன்னும், இக்காலத்தில் தன்முயற்சியால் மேனிலை யடைந்தவர்கள் எத்தனை பேர்? மஹாதேவ கோவிந்த ரனடே, கோபால கிருஷ்ண கோகுலர், ராஜா மாதவராவ், திவான் சேஷைய சாஸ்திரி, ஜட்ஜ் முத்துஸாமி ஐயர், பச்சையப்ப முதலியார், கௌரவ ஸ்ரீநிவாஸ சாஸ்திரி, ராமமூர்த்தி, முதலிய மகான்களெல்லாம் தன் முயற்சியாலன்றோ முன்னிலை யடைந்தனர்?

நமது தேசத்தில் வரவரத் தன்முயற்சி குறைந்து வருகின்றது. எல்லாம் தானாய் வருமென்று வேதாந்தம் பேசுவோர் பலர். இத்தகையோர் தம்மனோவஞ்சையின்படி தாம் அடையவிரும்பும் பொருள்களை யடைவதிலும் தம் குரோதீப்படி ஒருவர்க்குத் தீங்கிழைப்பதிலும் மட்டும் மிக்க முயற்சி யெடுத்துக் கொள்கிறார்கள். நமது செல்வவந்தர்களிற் பலர் தங்கள் முன்னோர்கள் படாத பாடுபட்டுச் சம்பாதித்து வைத்த பணத்தை நாசமாக்கிக் காலங்கழித்து வருகின்றனர்.

தன் முயற்சியில்லாதவன் செல்வவானாயினும் அவன் சாப்பிடுவதற்குரியவனல்லன். இதனை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு தனிமனிதனது காரியாதிகளைப் போலவே ஒரு தேசத்தின் வியவகாரமுமாம். தன் முயற்சியற்ற மனிதர்களைக் கொண்டுள்ள தேசம் விரைவில் க்ஷீணிக்கத் தொடங்கிவிடும். நாம் நம்மால் ஆகக்கூடிய காரியங்களுக் கெல்லாம் ராஜாங்கத்தாரின் உதவியை நாடுகின்றோம். எப்பொழுதும் பிறரையே எதிர்பார்த்து நிற்கின்றோம்.

ஜப்பானியரைப் பாருங்கள். சுமார் 50 வருஷங்களுக்கு முன் ஜப்பான் என்னும் நாமதேயமே உலகத்தில் கேட்கப்படாமலிருந்தது. இப்பொழுதோ

ஜப்பான் உலகத்திலுள்ள வல்லரசுகளில் ஒன்றாய்த் திகழ்கின்றது. அதன் சிநேகத்தைப் பெறுவதில் ஐரோப்பிய வல்லரசுகள் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன. 50-வருஷங்களுக்கு முன் ஜப்பானியர் நாம் இப்பொழுதுள்ள நிலைமையை விட மிகவும் தாழ்ந்த நிலைமையில் இருந்தனர். அவர்கள் அரை நூற்றாண்டுக்குள் அடைந்துள்ள மகிமையைப் பாருங்கள். ஜப்பானியர்க்குள் தன் முயற்சி மிகுந்துவிட்டது. ஜப்பானில் குலமகள் முதல் குப்பைவாரி வரை அனைவரும் 'நமது நாடு சிறந்தோங்க வேண்டும்' என்ற சிந்தனையில், வாழ்கிறார்கள். ஜப்பானியர் முயற்சியில் சிறந்துவிட்டனர்; அதனால் திருவை வென்று வாழ்கின்றனர். ஜப்பானியரின் தீக்குச்சி நமது தேசத்துக்கு வருவது நமது முயற்சியின்மையைக் காட்டுகிறதன்றோ? கோப்பைகள், சிம்னிகள், கண்ணாடிகள் முதலிய பலவகை விசித்திரப்பொருள்கள் நமக்கு ஜப்பானிலிருந்து வருகின்றன. இதுபோலவே நமக்குவேண்டிய எண்ணிறந்தபொருள்கள் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து வருகின்றன. இதனால் நாம் சோம்பேறிகள் என்பது விளங்கும்.

நமது நாட்டில் இல்லாத வஸ்து ஏதேனும் உண்டா? இல்லவேயில்லை. அவ்வாறிருந்தும் நாம் முயற்சியின்றிப் பிறர் நகைப்புக்கிடமாகி வாழ்கின்றோம். நமது நாட்டிலுள்ள பஞ்சு சீமைக்குச்சென்று வஸ்திரமாய்த் திரும்பி வருகின்றது. அவரி சாயமாய் மாறி வருகின்றது. நிலக்கடலை ஸோப்பாக மாறி மீட்டும் வருகின்றது. பனந்தும்பு 'புரூஷ்' ஆகமாறி இங்கே திரும்பி வருகின்றது. நாம் அவற்றை வாங்கி மகிழ்கின்றோம். நமது செல்வவந்தர்களோ தங்கள் பொருளே தெய்வமென்று கருதிப் பிறரைக் கவனியாது பொருள்காத்த பூதங்களாக வாழ்கின்றனர். நம்மில் அநேகர் அறிவு, திறமை, ஊக்கம், முயற்சி முதலியன வின்றி, சோர்வும் சோம்பலும் கொண்டவர்களா யிருக்கின்றனர். 'முயற்சி திருவினை யாக்கும்,' 'முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்,' என்பனபோன்ற நீதி மொழிகளை நாம் நம்பி வேலை செய்யவேண்டும். தன் முயற்சி யில்லாதார் தாணியில் என்றும் சிறந்தோங்க முடியாது; ஆனால் முயற்சி யுள்ளவர்களுக்கு அடிமைகளாய் வாழ்வார்கள்.

உலகத்தில் இன்பமும் பயனு முள்ள வாழ்க்கையை அடைய விரும்புவோரெல்லாம் முயற்சி செய்தல் வேண்டும். எந்த முயற்சியும் செய்யலாம். முயற்சியில் உயர்வு தாழ்வு இல்லை. ஆனால் ஒவ்வொருவரும் ஏதாவது முயற்சிசெய்தல் அவசியமாம். பகவான் கிருஷ்ணன் பார்த்தனை நோக்கி, 'பார்த்தா, எனக்கு மூவுலகத்திலும் வேலையில்லை. ஆயினும் யான் சதா சலித்து முயற்சிசெய்து கொண்டிருக்கிறேன்' என்று கூறுகிறார்.

நாம் முயற்சி செய்வதற்காகவே பிறந்திருக்கிறோம். கடவுளும் முயற்சி செய்கின்றார். பஞ்ச பூதங்களும் முயற்சி செய்கின்றன. வான் ஒலியுண்டு பண்ணுகிறது. காற்று வீசிக் கொண்டிருக்கிறது. கடல் சதா சலித்துக் கொண்டிருக்கிறது. கடலில் ஒரு விநாடி நேரமாயினும் அலையடியாம லிருக்கிறதா? அங்ஙனமாயின் கடல் நீரே நாறிப்போய்விடும்.

முயற்சி உயிர்களுக்கும் புதிய உயிர், புதிய ஊக்கம், புதிய புதிய சக்தி, புதிய இன்பம் இவற்றை அளிக்கின்றது. ஆதலால் ஒவ்வொருவரும், அவர், பிரபுவாயினும் சரி, ஏழையாயினும் சரி, பாலராயினும் விருத்தராயினும் சரி, ஆடவராயினும் சரி, மாதராயினும் சரி, தன் முயற்சி கொண்டு இவ்வுலக வாழ்க்கையை இன்பமும் பயனுமுள்ளதாகச் செய்து கொள்வோமாக.

காருடை. நெல்லையப்பிள்ளை.

நம்பிக்கை

"மந்திரமுந் தெய்வம் மருந்துங் குருவருளும்
தந்திரமு ஞானத்தவ முறையும்—யந்திரமு
மெய்யென்றால் மெய்யாய் மேதினியிலே விளங்கும்
பொய்யென்றால் பொய்யாகப் போம்."

நமது ஆனந்தபோதினிக் குழந்தைக்கு இரண்டாமாண்டு நீங்கி மூன்றாமாண்டுக் குழந்தையாகி விட்டது. இனி இக்குழந்தைக்கு யாதொரு இன்னலும் உண்டாகாது கடவுள் காப்பார் என்பதற்கு ஐயமில்லை. எவ்வாறெனின் அறை வீட்டுக் குழந்தை பூரண வயதடையுமென்று நம்பிக்கைக் கொள்ளுவதில்லை. அக்குழந்தைக்கு பல பிணியும் அறைவீட்டில் உண்டாகி பாதிக்கும். அவ்விடுக்கணிலிருந்து தப்பிக்கும் குழந்தையே மேலானது. அதுபோல இக்கொடிய யுத்தகாலத்து ஆனந்தபோதினிக்கு வேண்டிய பொருள்கள் விலையதப் பெற்றிருந்தும் அதையும் கவனியாது இக்குழந்தை மூன்றாவது வயதை யடைந்து விட்டது. ஆனதால் இனி இக்குழந்தை நல்ல நிலைமையை யடையுமென்பதற்கு முதல் வருடம் முதல்வனைக் காட்டியது. இரண்டாம் வருடம் இன்னலை யொழித்தது. மூன்றாம் வருட முதல் உலகத்தாருக்கு இகபரசுகம் தந்தருளும் வழியைக் காட்டுமென்ற நம்பிக்கை கொண்டு நம்பிக்கை என்ற இவ்வியாஸத்தை வரையத் துணிவுற்றேன்.

மானிடப் பிறவிகொண்டுள்ள நமக்கு நம்பிக்கை யென்பது இன்றியமையாததோர் கொள்கை. நம்பிக்கை என்பது உறுதி. எக்காரியத்திற்கும் உறுதி இல்லாவிட்டால் அக்காரியம் நிறைவேறு தென்பதுண்மை. நாம் ஒரு காரியத்தைச் செய்யுங் காலத்து அக்காரியம் கைகூடுமென்ற உறுதியுடன் அக்காரியத்தைச் செய்தாலொழிய அது கைகூடுவது அசாத்தியமாகும். ஒரு உத்தியோகத்தை நாடும்போதும், வியாதிநீங்க மருந்துண்ணும் போதும், குரு அல்லது ஆச்சாரியார் முதிர்ந்தோர்களிடத்தும் உபதேசம் தீட்சைப் பெற்றுக் கொள்ளுங் காலத்தும், வேதவிதிகளை யனுசரிக்கும்போதும், பிறவித் துன்பத்தை நீக்கி ஞானமார்க்கத்தை யடைய விரும்பும்போதும், மற்றும் மானிடர்கள் செய்யும் ஒவ்வொரு தொழிலுக்கும், நம்பிக்கை அத்தியாவசியமானது என்பதற்கு நமது ஆனந்தபோதினி பத்திரிகாசிரியர், நம்பிக்கை கொண்டு நடத்தியதால் இப்பத்திரிகை கடவுள் வரவிடுத்த வேதவாக்கியமெல்லாம் வெளிக்கொண்டுலவி உலகத்தாரை சீர்படுத்தி புகழடைகிறது என்பதே போதிய திருட்டாந்தமாகும்.

தவிரவும், ஒரு வைத்திய பாம்பரையிலுள்ள ஒருவன் தன் வாழ்நாளை வீணாளாக்கித் தன்னை ஆதரிப்போர் முற்றும் ஒழிந்த பிறகு காலட்சேப வழிக்கு வைத்தியத் தொழிலைக் கைப்பற்றக் கருதினான். ஆயின் வாகட முறையறியாதவன். அப்போது கற்றுக்கொள்ளவும் தன்னால் ஆகவில்லை. அவர் ஓர் தினம் விநாயகர் கோவிலுள் புகுந்து விக்கிரகத்தின் மேலுள்ள அழுக்கைச் சுரண்டி மெழுகாக உருட்டி நம்பிக்கை கொண்டு சில் பிணியாளருக்கு கொடுக்க, அவர்களும் நம்பிக்கையுடன் வாங்கியுண்ண, நம்பிக்கை யென்ற ஔஷதம் அப்பிணிகளை வெருட்டி ஓட்டிக்கொண்டு வந்தது. வைத்தியர் உறுதிகொண்டு செய்ததால் புகழும் கீர்த்தியும் காலட்சேபமும் நடந்து வந்தது.

இது நிற்க, துரோணாச்சாரியரிடத்து வில்வித்தை கற்க எண்ணிய வேடனுக்கு அவ்வித்தையைக் கற்றுக்கொடுத்தல் தகாதென்று அவர் எண்ணி

தனக்கு அவகாச மில்லையென்றுரைக்க வேடன் பணிந்து சென்று, ஒரு மரக் கட்டையை வைத்து அதையே துரோணராகிய குருவென்று நம்பிப் பணிந்து தினமும் தன்னிச்சைப்படி ஆயுதப்பழக்கம் செய்ய நம்பிக்கை யென்ற குரு சகல வித்தைகளையும் பழக்கி அர்ச்சுனனுக்குச் சமதையாகச் செய்துவிட்டது.

இஃதன்றி ஒரு மடாலயத்திற்குத் தினம் விறகு கொண்டு வந்து போடும் விறகு தலையன் அங்கு வந்து உபதேசம் பெற்றுக்கொண்டு போகிறவர்களைத் தின்மும் பார்த்து தானும் உபதேசம் பெற்றுக்கொள்ள எண்ணி ஒரு தினம் குருவானவர் மாம்பழம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தனக்கு உபதேசம் செய்யும்படி வேண்டிக்கொண்டான். குருவானவர், நகைத்து தான் அருந்திக்கொண்டிருந்த எச்சில் மாங்கொட்டையைக் கொடுக்க அதைத்தான் உபதேசம் என்றெண்ணி நம்பிக்கையுடன் கொண்டுபோய் தன் அறிவிற்குத் தக்கவாறு பூஜித்து வந்ததால் உபதேசம் பெற்றவர்கள் உறங்கிக் கிடக்க, நம்பிக்கை என்ற உபதேசம் பெற்ற விறகு தலையன் தழியாத மோக்ஷவீட்டையடையும் சக்தியுடையவனாய் விட்டான்.

இதைப்போன்ற பல உவமைக் கதைகள் உள்ளன. ஆயினும் நாமறிய வேண்டுவது எதுவெனில், அவனியில் எத்தன்மையான காரியத்திற்கும் நம்பிக்கை யென்பது அவசியமானதாகும் என்பதைக் கருதி ஒழுகுவதே பயன்றரும். "நம்பிக்கை நலம் தரும்."

"கடவுளை நம்பினோர் கைவிடப் படார்"

S. சுவீழகம்.

சிறுவர்கள் பக்கம்

(மனோவல்லமையின் மர்மம்)

முன்சஞ்சிகையில் நித்திரைக்குச் செல்லும்போதும், விழித்தெழும்போதும் கடவுளைச் சிந்திக்கவேண்டும் என்ற விஷயத்தைப்பற்றி சற்றுவிவரமாய் இச்சஞ்சிகையில் வெளியிடுவதாய்க் கூறியிருந்தோமல்லவா. அவ்வாறு கடவுளைச் சிந்திப்பதால் என்னபயனுண்டாகுமென்பதையும் கூடியவரையில் உங்கள் மனதிற்குப் புலப்படும் வண்ணம் கூறுகிறோம்.

எல்லாஜன்மங்களிலும் மானிடஜன்மமே சிறந்ததென்பதும், இதில்தான் முக்தியடையலாகும் என்பதும் யாவருமறிந்தவிஷயம். ஆகையால் இச்சென்மத்தில் கடவுள் அருளைப்பெறவேண்டும். ஆண்டவனை மறவாமலிருக்கும் வரத்தைப் பெறுவதினும் நாம் அடையத்தக்கபாக்கியம் வேறொன்றில்லை. அதைப்பெறுவதற்கே பெரியோர்கள் கரடி புலி சிங்கம் முதலியன வசிக்கும் காரிருள்சூழ்ந்த கானகத்திலும், மலைக்குகைகளிலும், தீக்ஷணியமான வெயிலிலும், ஜலமும் கட்டிப்போகத்தக்க குளிரிலும் தேகசிரமத்தைக் கருதாதுகாய், இலை, சருகு, கிழங்கு, வாயு, ஜலம் முதலியவற்றைப்புசித்து பசிப்பிணியை நீக்கிக்கொண்டு அனேககாலம் கடுந்தவம் புரிந்திருந்தார்கள்.

தாயுமானவர்,

"கொந்தவிழ் மலர்ச்சோ நன்னீழல் வைகினும்" என்ற பாவின் இறுதியில்

"சந்ததமும் நின்னருளை மறவாவரந்தந்து தமியேனை ரட்சைபுரிவாய், சர்வபரிபூரண அகண்டதத்துவமான சச்சிதானந்த சிவமே" என்று கூறியருளியிருப்பது கவனிக்கத்தக்கது.

இச்சென்மம் நீங்கினால் வேறெந்த ஜன்மம் வரும் என்பது நமக்குத் தெரியாது. ஆறறிவுஇல்லாத மற்றஜனனங்களில் கடவுள் நினைப்புண்டாகாது. ஆகவே கடவுளை மறவாதிருக்கும் சாதகத்தை யிச்சென்மத்திலே பெறவேண்டும். பழக்கம் என்பது கஷ்டமான காரியத்தையும் சுலபமாய்ச் செய்துமுடிக்கவல்ல ஓர்தோழனாகும். ஆனால் நாம் விடாமுயற்சியென்ற நண்பனோடு அதையும் சினேகமாக்கிக்கொள்ளவேண்டும். அப்படிச்செய்தால் நாம் தலைப்பில் கூறியபடி தினப்பழக்கத்தால் ஆண்டவனை யொருபோதும் மறவாத பெரும்பாக்கியத்தைப் பெறலாகும். இனி அதை எவ்வாறு பெறுவோம் என்பதைச் சுருக்கமாய்க் கூறுவாம்.

ஆண்டவன் நாம் உணர்ந்துய்வதற்கு அவசியமான ஒரு பெரியநூலாகவே இந்த உலகையும் இதிலுள்ள அனுபவங்களையும் படைத்திருக்கிறார். நமக்குள் நடப்பனவும் நாம் அறியாமலிருப்பனவுமாகிய விஷயங்களின் அனுபவங்களுக்கு உலகில் சரியான திருட்டாந்தங்களை யமைத்திருக்கிறார். அதனால் அண்டலட்சணம் பிண்டத்திலுண்டு என்றுகூறப்பட்டிருக்கிறது. அண்டம் என்பது 'உலகம்' பிண்டம் என்பது நமது ஒரு 'தேகம்.'

அண்டத்தைப் பிரகாசிப்பிக்க சூரியன் சந்திரன் என்ற இரண்டிற்குப் பதில் நமதுதேகத்தில் இரண்டுகண்களிருக்கின்றன. உலகில் நதிகளிருப்பதுபோல் நமதுதேகத்தில் இரத்தம் ஓடும் நரம்புகளும், மலைகள் குன்றுகளைப்போல் அஸ்திகளும், மண்ணைப்போல் தசைப்பொதியும், வாயுவைப்போல் சுவாசமும், இவ்வாறே உலகிலுள்ள ஒவ்வொரு சிருஷ்டிக்கும் ஒப்பாக தேகத்தில் உண்டு. ஆனால் உலகில் எண்ணிறந்த சீவக்கோடிகள் பிறந்துகொண்டும் வளர்ந்துகொண்டும் அழிந்துகொண்டுமிருப்பதுபோல் தேகத்தில் ஒன்றும் காணவில்லையே யென்கிறீர்களோ? அப்படியல்ல. அவை நமது கண்களுக்குப் புலப்படவில்லையேயன்றி இல்லாமலில்லை. நம்தேகத்தின் உள்ளேயும் மேலும் கோடிக்கணக்கான கிருமியினங்களிருக்கின்றன. இந்த உலகம் நெடுங்காலமாய் இருந்துகொண்டேயிருக்க இதிலுள்ள சீவராசிகள் பிறந்துபிறந்து மாள்வதுபோல் நம்தேகத்திலும் பிறந்துகொண்டும் மடிந்துகொண்டுமே யிருக்கின்றன. சிலகிருமிகளுக்கு ஒருபகலே ஆயுள். காலைபிறந்து நடுப்பகல் யௌவனமடைந்து மாலையில் கிழமாய் மடிகின்றன.

இனி இவ்வுலகில் நாம் ஒரு ஜன்மத்தில் அனுபவிக்கும் அனுபவத்திற்குச் சமானமாய் தினம் அனுபவித்து வருகிறோம். ஆதாவது ஒரு ஆயுளின் அனுபவம் சுருக்கமாய் ஒருநாளையில் நடக்கிறது. நாம் அதையுற்று நோக்காததால் அதுபுலப்படவில்லை.

எவ்வாறெனின் நாம் தினந்தோறும் காலையில் விழித்தெழுகிறோம். அப்போதுதான் நினைப்புண்டாகிறது. பகல்முழுதும் தொழில்செய்கிறோம். மறுபடி இரவுவந்தபோது எல்லாம் மறந்து தூங்கிவிடுகிறோம். மறுபடிநேற்றுபோல் இன்று காலையும் விழித்து உலகை நினைத்துக்கொள்கிறோம். இப்படியே விழிப்பது, விஷயங்களில் ஊடாடுவது, பின் தூங்கிவிடுவது, மறுபடி விழிப்பதுமாகவே பலநாட்கள் நடக்கிறது. கடைசியில் ஒருநாளைக்குப்பெரிய தூக்கமாய்த் தூங்கிவிடுகிறோம். அத்தூக்கத்தோடு இத்தேகத்தைவிட்டு நீங்கிவிடுகிறோம்.

இவ்வாறு நம் ஆயுள்முழுதும் நடக்கும் விஷயம், சிறுஅளவில் தினந்தோறும் நடக்கிறது. எப்படியெனின், நாம் தூங்கிவிடுவதுபோலவே மரணம். பிறகு விழிப்பதுபோலவே ஜனனம். தினம் தூக்கமும் விழிப்பும் மாறி

மாறி வருவதுபோலவே நமது பிறவியும்மாறிமாறிவந்துகொண்டேயிருக்கிறது. ஒரு ஜன்மமாகிய ஆயுளில் பலதரம் தூங்கி விழிப்பதுபோல ஒரு நாளின் பகலிலும் பலதரம் விஷயங்களை மறப்பதாகிய தூக்கமும் நினைப்பதாகிய விழிப்புமடைகிறோம். இத்திருட்டாந்த விவரத்தை இம்மட்டோடு சுருக்கமாய் நிறுத்திவிட்டு மேல்கூறுவாம். இதில்சுருக்கமாய் நீங்கள் அறிய வேண்டியது. நாயனார்,

"உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு" என்று அருளியபடி, நித்திரை மரணத்திற்கும், விழிப்பு பிறப்பிற்கும் சமம் என்றமட்டில் தெரிந்துகொண்டால் தற்சமயம் போதுமானது.

இப்போது நாம் கூறிய நித்திரை விழிப்பு இரண்டிற்கும் காரணம் மனமாயிருக்கிறது. மனம் சிந்தனையற்று தன் தோற்றமே யில்லாத நிலையையே நித்திரை யென்கிறோம். மனம் அந்த நிலையைவிட்டு பகிர்முகத்திற்கு வந்து, நினைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும் நிலையை விழிப்பு என்கிறோம்.

இம்மனதின் வல்லமை அளவு கடந்தது. இதன் அமைப்பு மிக்க அபூர்வமானது. இதன் தொழில்களை யுள்ளபடி யறியவேண்டுமாயின் ஆயிரவருடந்தான் ஜடசாத்திர நூல்களை வாசித்தாலும் முடிகிறகாரியமல்ல. நித்திரை யிவ்வாறுண்டாகிறது, கனவு யிம்மாதிரி காரணத்தால் நேர்கிறது, இந்த விதமாய் விழிப்புண்டாகிறது, இன்ன காரணத்தால் கனவில் நடக்கும் விஷயங்கள் உண்மையாய்த் தோன்றுகிற அதே காலத்தில் உலகின் விஷயம் அடியோடு மறக்கப்பட்டிருக்கிறது, ஒரு நாளைக்கு விழித்ததே கனவு பொய்யென்றறிந்தும் மறுபடி அன்று இரவு காணும்போதும் கனவு மெய்யாகவே தோன்றுகிறது. சாக்கிரத்தில் ஒருவன் ஒரு சங்கதி மெய்யென்று நமக்குக் கூறினால் மறுபடி என்றைக்கு யார் அதைப்பற்றி கூறினும் அது பொய்யேயென்று திடமாய் உணர்கிறோம், கனவோ நாம் விழித்துக்கொண்டு அது பொய்யென்று நம் மனதாரப் பிரத்யட்ச அனுபவமாய் அறிந்துகொண்டும் மறுபடி அது மெய்யாகவே தோன்றுகிறது, என்றது முதலான விஷயங்களை அனுபவஞானி யொருவனே அந்த உண்மைகளைக்கண்டு அப்பாற் கடந்து சென்றவனாவான்.

இனி நடிக்கு இங்கு வேண்டிய விஷயத்தைமட்டும் கூறுவோம். மனம் புகைப்படம் பிடிக்கும் மருந்து பூசிய கண்ணாடியைப் போன்றது. அக்கண்ணாடி தன்முன் காட்டப்பட்ட உருவத்தை யப்படியே தன்னில் பதித்துக்கொள்வதைப்போல், மனமும் விஷயங்களைத் தன்னில் பதித்துக்கொள்கிறது. சாக்கிரத்தில், அதாவது விழித்துக்கொண்டிருக்கையில் நாம் செய்யும் செய்கைகளனைத்தும் மனதில் பதிந்துவிடுகின்றன.

இவ்வாறு பதிந்திருக்கும் விஷயங்களில் சில கனவில் வெளியாகின்றன. முக்கியமாய் மனம் எதில் அதிகமாய் ஊன்றியதோ அதுவே வெளியாகிறது. சில சமயங்களில் நெடுநாட்களுக்கு முன்பதியப்பட்டு நாம் மறந்துபோயிருக்கிற விஷயம்கூட திடீரென்று மேல்வரும். ஒவ்வொரு சமயம் நாம் அடியோடு ஸ்மரணையின்றி யிருக்கையில்கூட நம்மை யறியாமலே அவ்விஷயத்தை வாய் பிதற்றிவிடும். இக்காரணத்தால் அனேகருடைய பயங்கர செய்கைகளெல்லாம் வெளிவந்திருக்கின்றன. ஒவ்வொரு சமயம் நமது அனுபவத்திலில்லாதது கூட கனவில் தோன்றுவதுண்டு. இத்தகைய மனதின் இரகசியத்தை யொருவர் வரையறுத்துக் கூறுவது சாத்தியமல்ல.

இதைப்போலவே நித்திரைக்குச் செல்லுமுன் கடைசியாக் மனம் எதையுன்றி சிந்திக்கிறதோ, (மீண்டும் விழிக்கும்போது) அந்த சிந்தனையோடேயே விழிக்கும். மனதிற்கு அளவு கடந்த சக்தியிருக்கிறது. கொஞ்சம் விடாமுயற்சியோடு கூடிய பழக்கத்தால் மனதின் சக்திகளில் சிலவற்றையாவது நாம் கைப்பற்றி அவற்றால் பலனடையலாகும். திருட்டாந்தமாய் ஒருவன் சில நாட்கள் காலை 5-மணிக்கு நித்திரை விட்டெழும்ப பழகுவானேல் முதலில் கஷ்டமாய்த் தோன்றினும் பிறகு அது சர்வ சாதாரணமாகி தானே தினம் 5-மணிக்குக் கட்டாயமாய் விழித்துக் கொள்வான். கொஞ்சம் மனதின் சலனத்தை நிறுத்தக்கூடியவன், "இன்று இரவு 3-மணிக்கு நாம் இரயிலேற வேண்டும், ஆகையால் 2-மணிக்கே விழித்துக்கொள்ள வேண்டும்" என்று சிந்தித்து நித்திரை செய்வானேல் கட்டாயம் தவறாது அப்படியே 2-மணிக்கு விழித்துக்கொள்வான்.

அதைப்போலவே கொஞ்சகாலம் பழகினால் நித்திரைக்குச் செல்லும் போது கடவுளைச் சிந்திப்பதும் விழித்தவுடன் சிந்திப்பதும் அனுபவத்திற்கு வந்துவிடும். நித்திரை மரணத்திற்கும், விழிப்பு பிறப்பிற்கும் சமானமாகையால் மேற்படி பழக்க முடையவன் மரிக்கும் காலத்தில் தற்சுபாவமாகவே கடவுளைச் சிந்திப்பான், அச்சிந்தனை தானே வரும். அவன் மறுபடி பிறக்கும் போதும் கடவுளை மறக்கமாட்டான். ஔவை பிராட்டியார்,

"தெய்வத்தை யொருநாளும் மறக்கவேண்டாம்" என்று கூறியதைச் சிந்தித்தால் இது எவ்வளவு பயனை யளிக்கத்தக்கதென விளங்கும்.

அப்பர் சுவாமிகள் திருப்பாதிருப்புலியூர் தேவாரத்தில்,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்
* * * * * "

என்று அருளினார்.

ஆகையால் என் அரிய நண்பர்களே! மேற்கூறிய பழக்கம் அல்பமானதாய் இப்போது தோன்றக் கூடுமேனும், அதனாலடையக்கூடிய ஒப்பற்ற பெரும்பயனை யுணர்ந்து அதை இலட்சியம் செய்யாது இப்போதே கைப்பற்றிக்கொள்ளுங்கள். இனி இதை மறந்துவிட மாட்டீர்களென்று நம்புகிறேன். ஆண்டவன் அருள்புரிவானாக.

ஆரணி - குப்புசாமி முதலியார்.

ஸ்திரீகள் பக்கம்

பெண்கள் அறியவேண்டிய விஷயங்கள்.

பெண்களுக்குப் பருவம் ஏழுவகை உண்டு. அவையாவன? பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்பவை. ஏழுவயது வரைக்கும் உள்ள பருவத்துக்குப் பேதைப்பருவம் என்று பெயர். பெதும்பைப் பருவம் பதினொருவயது வரையில் இருக்கின்றது. இருபதுவயது வரை உள்ள பருவம் மடந்தைப்பருவம். இருபதுவயதுமுதல் இருபத்தைந்து வயதுவரையில் அரிவைப் பருவமென்றும், இருபத்தாறு வயதுமுதல் முப்பது வயதுவரை உள்ளது தெரிவைப் பருவமென்றும, நாற்பது வயதளவு உள்ளது பேரிளம்பெண் பருவமென்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

மேற்கண்ட பருவங்களில் மங்கைப்பருவம் முதல்கொண்டு மாதர்கள் சீர் தூக்கி நடக்க வேண்டிய விஷயங்கள் பல உள. அவையாவன ?—

(1) பெண்கள் சொற்பமாவது வாசித்திருத்தல் வேண்டும். ஏனெனில் உலகம் இன்ன தன்மையி லிருக்கிறதென்பதை யறிந்து இல்லறத்தை நடத்த அக் கல்வி மிகவும் இன்றியமையாததாய் இருக்கிறது.

(2) பெண்கள் தங்களுக்குரிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும் பாதுகாத்து விருத்தி செய்தல் வேண்டும்.

(3) பெண்களுக்கு எள்ளளவேனும் சுதந்தர மென்பதே கிடையாது. ஏனெனில் அவர்கள் மங்கைப் பருவமடைந்து கலியாணம் செய்து கொள்ளும் வரையில் தாய் தந்தையரால் காக்கப்படுகின்றனர். பின்னர் தம் கணவரால் காக்கப்படுவர், அப்பால் புத்திரரால் காக்கப்படுவர்.

(4) கன்னிகையா யிருக்குங் காலத்தில் தங்களிஷ்டப்படி அண்டை அயல் வீடுகளுக்குப் போகலாகாது. விவாகஞ் செய்துகொண்ட பின்னர் பிறர் வீட்டிற்குப்போக நேரிடின் கணவன் அநுமதிபெற்று ஒரு குழந்தையை யேனும் துணையாகக் கொண்டுபோக வேண்டும்.

(5) கற்பு நிலையில் நில்லாதவள், பொறுமை யுடையவள், உலோப குணமுடையவள் முதலிய இவர்களின் சகவாசம் கூடவே கூடாது.

(6) ப்ராப்த சந்தர்ப்பத்தால் தமக்கு வாய்த்த கணவர் கல்வி நலமில்லாதவராயினும், அழகில்லாதவராயினும், குஷ்டநோயால் பீடிக்கப்பட்டவராயினும், குருடனாயினும் அவரைத் தெய்வமாய்க் கருதி நன்கு உபசரிப்பதே பெண்களின் கடமை. அவளே மறுமைப் பயனை யடைவாள்.

(7) ஒய்யாரமாய் நடக்காமல் பெண்கள் பூமியைப் பார்த்தவண்ணமாய் அடக்க ஒடுக்கத்துடன் கைவீசாது நடக்கவேண்டும்.

(8) புருஷர் கோபங்கொண்டால் பெண்கள் தாமும் கோபிக்கலாகாது. இதம்பேசி அவர்கள் கோபத்தைத் தணித்தல் வேண்டும்.

(9) அன்னிய புருஷரைச் சகோதரராகவும் தன்னைப்போன்ற பெண்களைச் சகோதரிகளாகவும் பாவிக்கவேண்டும்.

(10) மாமன், மாமி, மைத்துனர் முதலாயினோர் இன்றியமையாத துணைவர்களாதலால் அவர்கள் மனம் நோகாதபடி நடந்துகொள்ளல்வேண்டும்.

(11) தங்கள் தாய், தந்தையர், புத்திரர் ஆகிய இவர்களெல்லாரைப் பார்க்கிலும் தங்கள் கணவர்மேல் அதிக அன்பு பாராட்டவேண்டும்.

(12) தங்கள் புருஷர் உண்டபின் தாமுண்பதும், அவர்கள் சயனித்த பிறகு தாம் சயனிப்பதும், தம் கணவர் நித்திரை நீங்கி எழுமுன் தான் எழுவதும் கற்புடைய மனைவிக் கடையாளம்.

(13) அன்னிய புருஷருடைய இளமை, அழகு, செல்வம் முதலியவற்றைக்கண்டு மயங்கி அவர்களிடத்தில் இச்சை போகும்படி இடந்தரலாகாது. அதுவே நரகத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும் வழியாகும்.

(14) தங்கள் கணவர் வரும்படி யறிந்து அதற்கேற்ற செலவு செய்தலும், உபகாரஞ்செய்தலும், வாழ்ககைக்குவேண்டிய பொருள்களைக் காப்பாற்றி வைத்தலும் மனைவியர் கடமையாகும்.

(15) தங்கள் உடமைகளைத் தங்கணவர் அநுமதியின்றி பிறருக்குக் கொடுத்தல் கூடாது. கணவர் எதை யாருக்களித்தாலும் தடுத்துக் கூறுவது பெரும் பாதகம்.

டி. ஆர். இராஜம், திருப்பத்தூர்.

ஸ்திரீகள் கணவனிடத்தில் நடந்துகொள்ளுதல்.

ஸ்திரீகளுக்கு லட்சணமாவது: 'கற்பெனப்படுவது சொற்றிரம்பாமை' என்னும் நீதி வாக்கியத்தைக் கடைப்பிடித்து கணவன் சொல்லை வேத வாக்கியமாகக் கொண்டு அவனதுள்ள முவக்குமாறு ஒழுகுதலேயாம்.

ஒரு துஷ்ட ஸ்திரீயை மனைவியாகக் கொண்ட ஒருவன் ஓர்நாள் பெரியவரொருவரை தன்னகத்திற்கு உணவுக்கழைத்து, தனக்குக் காலையில் சொந்த அலுவலாக அயலூர் போக நேரிட்டமையால் தன் மனைவியைக் கூப்பிட்டு பெரியவர் உண்ணவருவதை அவளுக்கறிவித்து, சமையல் முதலியன சித்தப்படுத்தி வைக்கும்படி கூறிவிட்டுப் போய் தன் காரியத்தை முடித்துக் கொண்டு மத்தியானம் பதினைந்து நாழிகைக்கு மீண்டும் வீடு வந்து சேர்ந்த போது, தனதில்லாள் வீட்டுப் புறத்திண்ணையில் முன்றானையை விரித்து கையைத் தலையணையாகக் கொண்டு படுத்திருப்பதைக் கண்ட கணவன் வேலை செய்த இளைப்பால் தூங்கிவிட்டாள் எனத் தனக்குள் எண்ணிக்கொண்டு மனைக்குட் புகுந்தான். அங்கே முற்றம் தாழ்வாரமெல்லாம் பெருக்கி மெழுகப்படாம லிருப்பதைக் கண்டு இன்று அதிக வேலையைத் தனியாகச் செய்ய நேர்ந்தமையால், மற்ற வேலைகளைக் கவனிக்க அவகாசமில்லை போலும் என நினைத்தவனாய் மடைப்பள்ளியில் புகுந்து பார்க்கும்போது, அங்கே எச்சிலைகள் மிதிபடக்கண்டு நம்மனைவி சிறுபெண்ணாமையால் பசி பொறுக்க மாட்டாது பழஞ் சோறுண்டான்போலும், இருக்கட்டும், நாம் பூஜை செய்து விட்டு பின்னர் எழுப்புவோம் என்று நீராடி அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பூஜிக்கத் தொடங்கி நைவேத்தியத்திற்கு சமைத்த பதார்த்தங்களை சுவாமியின் திருமுன்னர் கொணர்ந்து கொள்ளுதற் பொருட்டு சென்று அடுப்பினருகே போனபோது அங்கே சமையல் முதலியன செய்யாதிருக்கக் கண்டு கோபித்தவனாய் மனைவியிடம் வந்து, அடிதுரோகி, ஏன் சமைக்கவில்லை எனக் கேட்க அதற்கு அவள் உங்களப்பன் துரோகி, உங்களாத்தாள் துரோகி, நானேன் துரோகியாவேன் எனக்கூற, அவன், அடிமுண்டை, அவர்கள் மிக நல்லவர்கள், அவர்கள் திறத்தில் அபசாரப்படாதே யென, அவள் உங்கள் அக்காள் தங்கை முண்டைகளாகுக, நானேன் முண்டையாவேன் எனக்கூற, அவன் சினந்து என் வீட்டிலிராமல் ஓடிப்போ என்று கடுத்துரைக்க அவள் உமக்கேது வீடு பானைபிடித்தவள் பாக்யம் என்றபடி நான் வந்த பிறகு தானே வீடும் மாடும் மற்றெல்லாச் செல்வங்களும் வளர்ந்தோங்கின எனக்குத் தான் இல்லாள் எனவும் மனைவி யெனவும் பெயர். ஆகையால் நீரே ஓடிப்போம் எனக்கிஞ்சித்தும் அஞ்சாமல் எதிர்மொழி சொல்லக்கேட்ட கணவன் யாதும் செய்யவல்ல னல்லனாகி, இந்தப் பிடாரியைப் பெண்பிடித்து பேயனானேனே, எனத் துக்கித்தவனாய், ஏ கருணாநிதியே ! என்னைக் கொண்டு போகாயோ, என்றிரங்கி வருந்தியுரைக்க அவ்வடங்காப் பிடாரி, நீ போனால் சனி தொலைந்தது என, வேங்கைபோற் சீறி கணவனென்றெண்ணாமல் அவனை இழிந்துரைத்தாள். "அந்தோ, இப்படிப்பட்ட பெண்கள் செயலை நினைந்தன்றோ பேய் கொண்டாலும் கொளலாம் பெண்கொள்ளலாகாதே". எனக் கூறியிருக்கின்றார்கள்.

இவ்வாறின்றி ஒவ்வொரு உத்தம ஸ்திரீகளும்

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கல்வியி
னுண்ணிய வாய பொருளில்லை—கொண்டானின்
றுன்னிய கேளீர் பிறரில்லை யீன்றாரி
னென்ன கடவுளு மில்.

என்னும் செய்யுளில் கூறியிருக்கும் வண்ணம் தன் கணவனைத்தவிர சுற்றத்தினர் யாவருமில்லை "சுவரைவைத்துக்கொண்டே சித்திரம் எழுதவேண்டும்" என்னும் பழமொழிப்படி தன்நாயகனலன்றி தனக்குப்பெருமையில்லை என்பதை நன்ருய் மனதில்வைத்து தனக்குப் பால்யத்தில் தாய்தந்தையர்கள் கற்பித்த நல்லொழுக்கங்களை அனுசரித்து பர்த்தாவிடத்தில் பரிபூரணநேசம் வைத்து அன்புவணக்கம் முதலிய நற்குணங்களைப் பாராட்டி மிகமரியாதையாய் நடந்துகொள்ளவேண்டும். நயமொழியின்றிக் கடுமொழி கருத்திலும் கொள்ளக் கூடாது, கிரகிருத்தியங்களைச் சரிவரப்பார்க்கவேண்டும், வீடுதேடிவருபவர்களுக்கு இனிமையாய் விருந்தோம்பவேண்டும். இத்தகைய ஸ்திரீயைப்பெற்றோர்கள் என்னதவம்செய்தார்களோ என்றும் இவ்வுத்தமியை வாழ்க்கைத் துணையாகக் கொண்டவர் பாக்கியம் பொறுமைப்படத்தக்கதெனறும், உலகத்தார் கூறும்படி ஒரு ஸ்திரீ நடந்துகொள்வாளாகில் அவள் அடையவேண்டிய பெரும்பேறு இம்மையிலேயே கிடைத்துவிட்டது. மற்றும் ஒரு ஸ்திரீ கணவனுக்கு எதுவிருப்போ அதைவிரும்பவேண்டும், எதுவெறுப்போ அதைவெறுக்க வேண்டும், தன்னால் புருஷனுக்கு சுகத்துக்கும் மனச்சாந்திக்கும் இடைபூறு உண்டாகும்படி ஒருபோதும் நடந்து கொள்ளக்கூடாது "கொண்டான்டான் குறிப்பறிவாளன்றே பெண்டாட்டி" எனப்படுவாள். எவ்வழிகளிலும் கணவனின் வாழ்க்கையை இனிதாகச் செல்லச்செய்யும் ஸ்திரீ தன் வாழ்க்கையையும் அவ்வாறே செய்துகொள்ளுகிருள். கணவனுக்கு கஷ்டகாலங்களிலும் விசனகாலங்களிலும் தகுந்த யுக்திபுத்திகளைப் போதித்துத் தேற்றி உற்சாகப்படுத்தும் மனைவியைக்காட்டிலும் ஒருவன் விரும்பத்தக்கதெதுவிருக்கிறது. இப்படிஒழுகும் ஒரு ஸ்திரீ கணவன் எங்கிருந்தாலும் எச்சமயத்திலும் அவன் மனதில் குடிகொண்டிருப்பாள். அவளைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு கணமும் அவனுக்கு ஒரு யுகமாகத் தோன்றும். இவ்வாறுதான் நம் பூர்வீக ஸ்திரீ ரத்தினங்களெனப் பெயர்பெற்ற "நளாயினி, அருந்ததி, சீதை, துரோபதி, வாசுகி" முதலிய உத்தம பத்தினிகள் தங்கணவர்களையே தெய்வமாகப் பாவித்தும் அவர்களுக்கு மாருத் தொண்டுபூண்டும் ஒழுகினமையாலன்றே அவர்களுடைய மகிமைப் பிரதாபம் இன்னும் என்றும் அழியாப் புகழுடனும் பேருடனும் விளங்குகின்றது. ஆகையால் சகோதரிகளே இவ்விஷயத்தை நன்குணர்ந்து தெய்வபக்தியும், சாந்தமும், பொறுமையுமுள்ளவர்களாய் தங்களால் கூடிய வரையிலும் கணவனிடத்தில் திருப்தியாக நடந்துகொள்ள வேண்டும். இம்மாதிரி ஒரு ஸ்திரீ நடந்து கொள்வளேல் அவளுக்கு சர்வாபீஷ்டமும் நிர்விக்கினமாய்ச் சித்திக்குமென்பது திண்ணம்.

K. R. கணபதிபிள்ளை, துணியை.

வைத்திய குறிப்பு.

விஷசுரம் அடிக்கடி வருவதால் வயிற்றில் சுரக்கட்டி யுண்டாகின்றது. அக் கட்டியானது பலவிதமாய்க் காணப்படுகின்றது. அவையாவையெனில் பித்தப்பை வீங்குவது, சீரணப்பை வீங்குவது, நுரையீரல் வீங்குவது, இவற்றில் சாதாரணமாய் பித்தப்பை அநேகமாய் வீங்குவது வழக்கம். இதனையே (enlargement of spleen) என்று சொல்லுவதுண்டு. இதனால் இரத்தம் குறைந்து சரீரம்மெலிந்து வயிறு பெருத்து சுரம் அடித்துக்கொண்டிருக்கும். நுரையீரல் பெருத்துவரும் சுரங்களால் சோகை காமாலை முதலான வியாதிகள் வரும். சுரக்கட்டிக்காக உபயோகிக்கும் ஔடதங்களைப்பற்றி முன் சஞ்சிகைகளில் கூறியுள்ளோ மாகையால் பித்தசோகையின் சிகிச்சை இங்கு

சொல்லுவோமாக. பித்தசோகை யுண்டான ஜீவர்களுக்கு எத்தகைய உயர்தர ஔடதங்களை இரத்த விருத்திக்காக உபயோகித்தாலும், சீக்கிரம் இரத்தவிருத்யாகின்றதில்லை. ஜீரணப்பையானது மிகையான உப்பு சம்பத்தத்தால் வீங்குவது முண்டு. அத்தகைய வியாதியாளர்களுக்கு உப்பை நீக்கி ஔடதம் கொடுத்தால் கூடிய சீக்கிரம் வியாதி குணமாய்விடும். இல்லையேல் அயம், காந்தம், மண்டூரம், இத்தகைய மருந்துகளைக் கொடுப்பது நலம். மேல்நாட்டுச் சிகிச்சையில் Panopeptone, Syrup Hacmogbolim இன்னும் அநேக ஔடதங்கள் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். ஆனாலும் பித்தசோகைக்கு அயச்செந்தூரம் ஒரு அரிசி எடை எடுத்துக்கொண்டு வெள்ளாட்டுப் பால் ½ ஆழாக்கில் காலை மாலைகளில் சாப்பிட்டுவர சோகை நீங்கி விடுகின்றது. பத்தியம் உப்பு, புளி காரம் ஆகாது. பால்சாதம், சர்க்கரை, பழம் இவைகள் சேர்க்கலாம். இதுபோல் 3 நாள் சாப்பிட்டுவிட்டு மறுபத்தியம் 3 நாள் இருக்கவேண்டும். மறு பத்தியத்தில் வறுத்த உப்பு சுட்டபுளி சேர்க்கலாம். பிறகு தனக்குப் பிரியமான பலவிருத்தி ஔடதங்களைச் சாப்பிடலாம்.

டாக்டர் எம். மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை — நாவல்

(519-வது பக்கத்தொடர்ச்சி)

அச்சமயம் கலவரத்தால் அவனை யறியாமலே எப்படியோ ஒருகால் சற்று 13-வது படியில்பட்டது. உடனே படிகளின்கீழ் ஏதோ ஒரு இரும்பு எந்திரம் இயங்குவதுபோல் சத்தமுண்டாகவே அம்பலவாணன் நடுநடுங்கி ஓரேபாய்ச்சலாய் நாலைந்துபடிகள் மேலேறித்தாண்டி அங்கு நின்று திரும்பிப்பார்த்தான். அதற்குள் 13-வது படியிலிருந்து கீழுள்ள ஐந்தாறுபடிகள்வரை கைப்பிடிக்கிராதியுடன் அடியோடு கீழ்நோக்கித் தலைகீழாய்க் கவிழ்ந்துவிட்டிருந்தது. அம்பலவாணன் உள்ளமும் தேகமும் நடுங்கிக்கொண்டே எட்டிப்பார்த்தான். படிகள் முதலிய ஒன்றுமே தோன்றவில்லை. ஆழ்ந்து இருண்டபாதாளத்தினடியில் ஜலம் கொந்தளித்துச் செல்லும் சத்தம்மட்டுமே தோன்றியது.

அம்பலவாணன் திரும்பிப்பாராமல் மேலேறி அங்கிருந்த நீண்ட தாழ்வாரத்தின் முதலிலிருந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு அறைக்குட் சென்றான். நாம் தப்பித்துக்கொண்டுபோய் விட்டால் நமது ஆட்கள் இருவரும் என்னகெதியாவார்களென்று நினைத்தான். "ஆயினும் அவர்களுக்கு ஆபத்துநேரிடாது. எனெனில் அப்பாதகனாகிய பிரபு தன் கொலை மறைவதற்கு அவர்களையே கருவியாக்கிக்கொள்வான். காலையில் அவர்களையும் வீட்டிலுள்ள ஆட்களையு மழைத்து தெய்வகதியாய் படியுடைந்து நம் கட்டிடத்தின் கீழ்செல்லும் ஆற்றில்விழுந்து மடிந்ததாக ருசுப்பித்து மிக்க துயரடைந்தவன் போல் பாசாங்குசெய்து, உலகத்திற்கு மெய்ப்பிக்க நமது ஆட்களையே சாட்சியாய் வைத்துக்கொள்வான்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

அவள் உடனே எழுந்து தாழ்வாரத்தை யெட்டிப்பார்த்து அங்கு ஒருவருமில்லையென்று அறையின் கதவை மூடிக்கொண்டு உள்ளேசென்றான். அதே விநாடி கவசமணிந்த ஒருஆள் சாளரத்தின்வழியாய் அறைக்குள் குதிப்பதைக் கண்டான். இருவரும் ஹாவென்று சத்தமிட்டார்கள். வந்தவன் உடனே தன் வாளையுருவிக்கொண்டான். அம்பலவாணனோ சாளரத்தின் வழியாய்த்தோன்றும் நிலவின் வெளிச்சத்தால் அவனை யறிந்துகொண்டு,

"ஆ பிரபல்லவிங்!" என்றான்.

அவன்:—"ஆ! நீயா காப்டென் அமிர்தவிங்!" என்றான்.

அம்ப:—கத்தியை உரையில்போடு. நாம் இருவரும் இப்போது ஒரே ஆபத்தில் சிக்கியிருக்கிறோம்" என்றான்.

பிரப:—ஆ! கடவுளே! நீகூறுவதென்ன?

அம்ப:—தெய்வசங்கல்பமாய் நீ வழியில் கூறியகதையால் நான் இப்போதுதான் அந்த ஆபத்தான படிக்கட்டுகளைத்தாண்டி உயிர்தப்பினேன்.

பிரப:—அப்படியானால் நீ?

அம்ப:—நீ?

பிரப:—அடடா அப்படியானால் இந்தப்படுமோசக்காரனாகிய சுந்தரநாயகம் பிரபு.

அம்ப:—எனக்கு அம்மான்—உனக்கும் அம்மான். ஆகவே நீ

பிரபல:—நான் தேவபுரிஜாகீர்தார்.

அம்ப:—ஆ! திரவியசிங்கம்பிரபு—நான் கேசவபுரம்.

பிரபல:—ஆகா—கேசவபுரம் ஜாகீர்தாராகிய கண்ணபிரான் பிரபு.

உடனே சகோதரர் முறையாகிய இருவரும் ஆவலோடும் அன்போடும் சந்தோஷத்தோடும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டார்கள்.

இவர்கள் மனத்துடிப்பு சற்று அடங்கியதே அடியிற்கண்ட சம்பாஷணை நடந்தது

கண்ணபிரான்:—தெய்வசங்கல்பமே நம்மிருவரையும் ஒன்றாய்க்கூட்டியது.

திரவியசிங்கம்பிரபு:—சந்தேகமென்ன? இப்போது நடப்பது ஒவ்வொன்றும் தெய்வ எத்தனமே.

கண்ண:—நேற்று உன்னைச் சந்தித்தபோதே நம்மிருவருடைய காலகெதியும் ஒன்றாய்ச் சம்பந்தப்பட்டிருப்பதுபோல் என்மனதில் பட்டது.

திரவிய:—எனக்கு என்னையறியாமலே உன்மேல் அன்புண்டாயிற்று. ஆகா, நீமட்டும் அப்போதே ஒருவார்த்தை கூறிவிட்டிருந்தால்.

கண்ண:—நீர்தான் இக்காலத்தில் ஒருவனுடைய உண்மையை வெளியிடாமல் மிக்க சாக்கிரதையா யிருக்கவேண்டுமென்று பிடிவாதமாய் நடந்துகொண்டீர்.

திரவிய:—ஆம் ஆம். உண்மையே. காலம் அப்படியிருக்கிறது. இதோபார் தன்தங்கை புத்திரன் என்பதைக்கூட கவனியாமல் இத்துரோகி என்ன என்ன எண்ணங்கொண்டான் பார். வேறு திருட்டாந்தமேன்!

கண்ண.—ஆம். ஆம். இனிநடந்து போனதைப்பற்றி வருத்தப்படுவதில் பயனில்லை. நீர் முன்கூறியபடி இவனைப் பயமுறுத்தியே காரியத்தை முடித்துக்கொள்ள உத்தேசமோ.

திரவிய:—ஆம். இப்போது ஒரேமுயற்சியால் இருவர்காரியத்தையும் நிறைவேற்றிக்கொள்ளலாம். இவனுடைய குமாரன் இராணியிடம் அரண்மனையில் நல்ல பதவியிலிருக்கிறான். நமக்காக இராணியிடம் தக்க பிரயத்தனம் செய்யும் அவனுக்கு இவனிடமிருந்து ஒரு கடிதம் வாங்கிக்கொண்டு நான் துணிந்து இந்திரபுரி செல்கிறேன்.

அதன்பிறகு கண்ணபிரான் தன் ஆட்கள் அங்கு அகப்பட்டிருப்பதைக் கூறினான். திரவிய சிங்கம் பிரபு "என் ஆட்களை வெளியில் ஒரு தோட்டத்

தில் நிற்க வைத்திருக்கிறேன். உன் ஆட்களை விட்டுவிடும்படி செய்யலாம். ஒரு சங்கதி யிருக்கிறது. அதாவது ஒரு சமயம் இந்தப் பிரயத்தனத்திலேயே ஆபத்து நேர்ந்தாலும் நேரிடலாகும். நாம் இருவரும் இப்பாதகன் கையில் சிக்கினாலோ சந்தேகமின்றி கொலைசெய்யப்படுவோம். ஆகையால் அப்படி இக்கட்டு நேரிடுவதாயின் சமயோசிதப்படி ஒருவரேனும் தப்பித்துக்கொண்டு போய்விட வேண்டும். அப்போது மீதியிருப்பவரைக் கொல்லத் துணியான். உயிரிருக்கும் வரையில் நம்பிக்கை யிருக்கிறது. அப்படி யொருசமயம் நேர்ந்தால் யாருக்காவது ஏதாவதுசமாசாரம்கூறவேண்டியதோ அல்லது வேறெதாவது வேலையேயிருக்குமாயின் இப்போதே அதை யொருவருக்கொருவர் கூறிவிடவேண்டும், அப்படிப்பட்ட சமாசாரம் ஏதாவது நீ கூறவேண்டியதிருக்கிறதோ?" என்றார்.

கண்ணபிரான் சற்று சிந்தித்து, "ஆம் ஒரு சங்கதி யிருக்கிறது" என்றான்.

திரவிய:—"எனக்கும் ஒரு சங்கதி யிருக்கிறது. அதாவது எனது இரண்டு தம்பிமார்களும் மாநப்பன் காட்டில் தென்பாகத்திலிருக்கும் தனியான வெள்ளை வீட்டில் இருக்கிறார்கள். நான் இங்கு சிறையாயகப்பட்டுக் கொண்டாலும் அல்லது கொல்லப்பட்டாலும் அச்சங்கதியை யவர்களுக்கறிவித்துவிடவேண்டும்" என்றார்.

கண்ணபிரான் உடனே தன் சட்டைக்குள் இருந்து ஒரு சிறு பட்டுப் பையையெடுத்து அதையும் அதற்குள்ளிருந்த (கூந்தலிலிருந்து கத்தரிக்கப்பட்ட) சிறு உரோம முடிச்சையும் திரவிய சிங்கம் பிரபுவிக்குக் காட்டி யவற்றை யவரிடம் கொடுத்துவிட்டு,

"எனக்கு ஆபத்து நேர்ந்தால் தாங்கள் அதைக்கொண்டுபோய், இந்திரபுரிக் கருகிலுள்ள கற்கோட்டையிலிருக்கும் ஸர்தார் செல்வராயருடைய புத்திரியாகிய கமலாம்பாளை நேரிற்கண்டு அவளிடம் இதைக்கொடுத்து உன் கண்ணபிரான் முடிவுவரையில் உன்னை மறக்கவில்லை யென்று கூற வேண்டுகிறேன்" என்றான். அந்தப் பிரபு அவசியம் அப்படியே செய்வதாய் உறுதிவாக்களித்தார்.

அதே சமயம் அறையின் கதவு தடாலென்று திறக்கப்பட்டதும் ஒரு கூட்டமான ஆயுதம்தரித்த வீரர்கள் அறைக்குள் பாய்ந்தார்கள். கண்ணபிரானும் திரவியசிங்கம் பிரபுவும் தட்சணம் தங்கள் வாட்களை யுருவிக்கொண்டார்கள். உடனே அந்த அறையிற் கொடிய சண்டையுண்டாயிற்று. இரண்டொரு நிமிடங்களுக்குள் சுந்தரநாயகம் பிரபுவின் ஆட்களில் நாலைந்துபேர் தேகத்தில் இரத்தம் வடியக்கீழே விழுந்து தவித்தார்கள். அச்சமயம் திடீரென்று கண்ணபிரானுடைய வாள் கைப்பிடியருகில் உடைந்துவிட்டது. அவன் உடனே திரவிய சிங்கம் பிரபுவை நோக்கி "நீ ஓடிவிடு! ஓடிவிடு," என்று சமிக்கை செய்தான். திரவியவிங் பார்த்தான் "இனிப்பயனில்லை, தாமதித்தால் நாமும் சிக்கிக்கொள்வோம்" என்று துணிந்து துரிதமாய் சாளரத்தின் வழியாய் நுழைந்தான். அதைக்கண்ட ஓர் வீரன் ஒரு பாய்ச்சலாய் அவன்மேல் பாய்ந்தான். மறுவினாடியில் திரவியசிங்கம் பிரபுவின் வாளால் தன் மண்டை பிளக்கப்பட்டு அடியற்ற மரமென்ன வீழ்ந்தான். திரவியசிங்கம் பிரபு மறு நிமிடம் சாளரத்தின் வெளிப்புறமுள்ள எழுதகத்தின்மேல் நின்று அங்கு கைக்கெட்டிய மரத்தைத் தாவிப்பிடித்து பூமியில் இறங்கி மறைந்தான்.

11-வது அத்தியாயம்

கமலாம்பாளுடைய கலியாணச் சடங்கு தடைப்பட்டு ஐந்து வாரங்கள் கழிந்தன. இதற்கிடையில் . கமலாம்பாள் பிழைப்பது அரிது என்னும்படியான கொடிய வியாதியுற்றிருந்தாள். அவள் சுரத்தால் ஸ்மரணையற்று ஜன்னியால் பிதற்றிக்கொண்டிருந்தாள். அப்போது அவள் தன்னையறியாது கூறிய மொழிகளால் கண்ணபிரான்மேல் அவள் எவ்வளவு காதல் கொண்டிருக்கிறாளென்பதும், அவன் உருவம் மிக்க உறுதியாய் அவள் உள்ளத்தில் பதிந்திருக்கிறதென்றும் அவள் தந்தை அத்தை முதலியவர்களுக்கு நன்கு விளங்கியது. வைத்தியர்கள் இனியவன் பிராணனுக்குப் பயமில்லையென்றும், அவள் மனதில் சந்தேக விபரீதங்கள் தோன்றச் செய்யலாகாதென்றும் கூறினார்கள். ஆகையால் செல்வராயர் இனி ஒரு மர்மத்தையும் மறைக்காமல் யாவற்றையும் உள்ளபடி கூறிவிடவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்.

அதன்மேல் நடந்த சங்கதிகள் யாவும் உண்மைப்படி ஒன்றையும் ஒளிக்காமல் கூறிவிட்டார்கள். முதல் முதல் ஒருநாள் இரவு தன் தந்தையால் வீட்டிற்குள் கொண்டுவரப்பட்டவனும், இரண்டாம் முறை இரகசிய அறையில் காயமடைந்தவனும் கண்ணபிரானே யென்றும், அவன் தன் தந்தைக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தைக் கருதியே கமலாம்பாளிடம் தான் கண்ணபிரானல்லவென்றே சாதிப்பதாய்த் தன் தந்தைக்கு வாக்களித்து அதன்படி நடந்து கொண்டானென்றும் கமலாம்பாள் தெரிந்துகொண்டாள். அவன் மாறுபெயரோடு அங்கிருந்தபோது தன்னிடம் பேசியவற்றை நினைக்க அவனுக்குத் தன்மேல் பூரணக் காதல் இருக்கிறதென்று அவள் மனதிற்கு நன்றாய் விளங்கிவிட்டது.

கண்ணபிரானுடைய பெரிய தந்தை பழைய மதாசாரத்தைச் சேர்ந்தவனென்றும் கண்ணபிரான் அதற்கு உடன்படவில்லையென்றும், ஒருநாள் அவன் பெரிய தந்தை யவனைத் தந்திரமாய் ஐயம்பேட்டையில் தானும் தன் நண்பர்களும் கூடும் சதியாலோசனைச் சங்கத்திற்கு அழைத்துப்போய் அதில் சேரும்படி கூற, கண்ணபிரான் அப்போதுதான் சங்கதியறிந்து தான் அதிற் சேரமறுத்து தன் பெரிய தந்தையைத் தூஷிக்கத் தொடங்கினான். ஆனால் அச்சமயம் திடீரென்று இராணியின் போர்வீரர் வந்து அவர்கள் இருந்தவிடத்தைச் சூழ்ந்துகொள்ள யாவரும் ஓட்டமெடுத்தபோது கண்ணபிரானும் ஓடவேண்டியதாயிற்றென்றும், அப்போது குதிரையினின்று கீழேவீழ்ந்து மூர்ச்சை கிடந்தவனைத் தான் அன்றிரவு வீட்டிற்குள் கொண்டுவந்ததாகவும், அப்போது கண்ணபிரானுடைய பெரிய தந்தையும் வேறு சிலரும் அகப்பட்டுக்கொள்ள அவர்கள் மரணதண்டனை யடைந்தார்களென்றும், தப்பியோடிய கண்ணபிரானும் வேறு சிலரும் நாட்டைவிட்டோடிவிட நேர்ந்ததென்றும், கடவுள் தயவால் அவனுடைய நிரபராதத்தன்மை ருசுவாகும் காலம்வரின் இறந்துபோன அவனுடைய பெரிய தந்தையின் திரண்ட ஜாநீருக்கு அவனே சொந்தக்காரனென்றும் செல்வராயர் தன் புதல்விக்கியம்பினார்.

யாவும் அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அரியநாயகி அத்துயரமான சங்கதிகளைக் கேட்டு மனம் சகியாது மெதுவாய் அங்கிருந்து புறப்பட்டு தோட்டத்தில் உலவச் சென்றாள். அப்போது தான் சூரியன் அஸ்தமித்து இருள் சூழும் சமயமாயிருந்தது. அரியநாயகி தோட்டத்தி னிடையிலிருக்கும் செப்பனிட்ட பாதையே சிந்தனையோடு மெதுவாய்ச் சென்று கொண்டிருக்கையில், தனக்கு முன் சற்று தூரத்தில் பாலதையோரமாய் கறுப்பு உடை யணிந்த

ஒரு உருவம் செல்வதுபோ லிருந்தது. அவள் உற்றுப்பார்ப்பதற்குள் அது செடிகளில் மறைந்து விட்டதுபோலும், அந்தத்திக்கில் யாரோ உடையணிந்து செடிகளில் நுழைந்து செல்வது போன்ற சத்தம் கேட்பதுபோலுமிருந்தது. அரியநாயகி பயத்தால் திடுக்கிட்டு நின்றாள். பிறகு ஒரு சந்தடியும் கேட்கவில்லை. சே யிது என்னமோ மனக்கலவரம் என்று எண்ணிக்கொண்டாள். ஆயின் அப்பாதையை விட்டு வேறொரு பாதைவழியே நடக்கலானாள்.

சற்றுநேரத்திற்குள் அவள் அச்சம்பவத்தை யடியோடு மறந்துவிட்டு மெதுவாய்ச் சென்றுகொண்டே யிருக்கையில் பக்கத்திலிருந்த அடர்ந்த செடிகளில் இருந்து சலசலவென்ற சத்தம் கேட்டதும் நெடுக்கக்றுப்புடை யணிந்திருந்த ஒரு மனிதன் அவள் எதிரில் வந்து நின்றதும்,

"அம்மா, பயப்படாதே, நான் சத்தியமாய்க் கூறுகிறேன் உனக் கெவ்விதக்கெடுதியும் நான் செய்ய நினைந்து வரவில்லை" என்றான்.

அரியநாயகி:—"நீர் யார்?" என்றாள்.

அம்மனிதன் அதற்கு விடை யளிக்காது "அம்மா, நீதானா கமலாம்பாள் என்றமாது? தயவுசெய்து கூறும்" என்றான்.

அரிய:—அல்ல. நான் கமலாம்பாளுடைய உயிருக் குயிரான சினேகி.

வந்தவன் ஹா! என்று அவளை யுற்றுநோக்கினான். அரியநாயகியும் அவனை நன்று யுற்றுநோக்கி, அவன் கௌரவமான மனிதனென்று தெரிந்துகொண்டு நீர் கமலாம்பாளைக் கண்டு பேசவேண்டுமாக்கும் என்றாள்.

அவன்:—ஆம் எப்படியேனும் பேகவேண்டும். ஒரு சமயம் நீ அது மரியாதையல்ல வென்று நினைக்கின்றனையோ வென்று அஞ்சுகிறேன்.

அரிய:—இல்லை. கமலாம்பாள் அப்படி தகுதியற்ற விஷயமாய் ஒருவரைச் சந்திக்கச் சம்மதிக்க மாட்டாள் என்று நான் நன்றாய் அறிவேன்.

அம்மனிதன்:—நீ இந்த வீட்டிலேயே வசிப்பதோ அல்லது இங்கு தங்கிச் செல்லவந்திருக்கின்றனையோ?

அரியநாயகி:—"நான் இங்கேயே வசிப்பவள்" என்றாள்.

அதன்மேல் அம்மனிதன் "உன் முகத்தாலும் வாக்காலும் உன் கலங்கமற்ற உள்ளம் நன்கு புலப்படுகிறது. ஆகையால் நான் எதையும் மறைக்காமல் கூறுகிறேன். நான் கௌரவமான மனிதன். நான் கமலாம்பாள் விஷயத்தில் எவ்விதக் கெட்ட எண்ணமும் கொள்ளக் காரணமில்லை. முதலாவது அக் கன்னிகையின் பெயர்மட்டுமே யெனக்குத் தெரியுமன்றி ஆளை நான் கண்டதே யில்லை" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே அரியநாயகி மனதில் சந்தேகமும் பயமும் உண்டாயின. இராஜமாளிகை யென்ற கப்பலைச் சேர்ந்த பலராமன் முதலிய கடற்கொள்ளைக்காரர்கள் ஏதாவது மோச எண்ணங்கொண்டு யாரையேனும் அனுப்பினார்களோ வென்று நினைத்து, எதிரி லிருப்பவனை நோக்கி,

"அப்படியானால் நீ கமலாம்பாளிடம் என்ன விஷயமாய்ப் பேசவேண்டும்?" என்று கேட்டாள். அதற்கவன் "அம்மா, அந்த விஷயத்தை யுன்னிடம் கூறலாகாது நான் அக்கன்னிகையிடம் இரண்டொரு மொழியே கூற வேண்டும். ஒரே சமாசாரம் கூறிவிட்டுச் செல்லவேண்டும். ஆனால் அதை யக்கன்னிகையின் செவிகளுக்கு மட்டுமே கூறவேண்டும்" என்றான்.

(தொடரும்.)

பூரணி, துப்புசாமி முதலியார்.

" ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

பிங்களவரு ஆடிமீ சாலிவாகன 1839, கலியுகாதி 5018

பசலி 1326-27, கொல்லம் 1092-93

இங்கிலீஷ் 1917-ம்வரு ஜூலைமீ — ஆகஸ்டுமீ

ஜூலை	ஆடி	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
16	1	தி	துவா 0-48	மிரு-54-31	சித்த 60	வியாபாரம் செய்ய
17	2	செ	திர-1-49	திரு-60	மரண 60	சரிநாள்
18	3	புத	சது-3-30	திரு-2-48	சித்த 60	அமாவாசை விரதம்
19	4	வி	● அமா 7-2	புன-8-7	சித்த 60	புது பாத்திரம் புழங்க
20	5	வெ	பிர-11-5	பூச-13-46	மர 14 சித்	சாந்திசெய்ய
21	6	ச	துதி-15-53	ஆயி-20-51	மர 21 சித்	
22	7	ஞா	திரி-20-42	மக-26-28	மர 26 சித்	தனியநாள்
23	8	தி	சது-25-25	பூர-30-18	சித்த 60	புது உரல் புழங்க
24	9	செ	பஞ்-29-35	உத்-38-21	அமி 38 சி	தானியம் கட்டிவைக்க
25	10	புத	சஷ்-32-33	அஸ்-43-9	சித் 43 அ	சரிநாள்
26	11	வி	சப்-35-59	சித்-46-50	சித்த 60	உதயம் கர்ணவேதை, கேச
27	12	வெ	அஷ்-36-8	சுவா-49-21	சித்த 60	கஞ்சுகதாரணம் [கண்டனம்
28	13	ச	நவ-35-49	விசா-50-37	சித்த 60	வியாபாரம் செய்ய
29	14	ஞா	தச-34-29	அநு-50-39	மரண-60	5-க்குள் மழை
30	15	தி	ஏகா-31-44	கேட்-49-34	சித்த 60	வியாபாரம் செய்ய
31	16	செ	து-28-11	மூல-47-30	அமி 47 சி	கிருஷி செய்ய
1	17	புத	திர-23-33	பூரா-44-41	அமி 60	சமஸ்தாபரணம் தரிக்க
2	18	வி	சது-18-26	உத்-41-15	சித்த 60	பூமுடிக்க, கீதாரம்பம்செய்
3	19	வெ	○ பௌ 12-48	திரு-37-23	மர 37 சித்	
ஆகஸ்டுமீ 4	20	ச	பிர-6-48	அவி-33-23	சி 33 அமி	சரிநாள், தனியநாள்
5	21	ஞா	துதி-0-39	சத-29-26	சித்த 60	புது ஆபரணம் தரிக்க
			திரி-53-56			
6	22	தி	சது-48-51	பூரட்-25-24	மர 25 சித்	
7	23	செ	பஞ்-44-19	உத்-22-31	அமி 23 சி	புது அடுப்புபோட
8	24	புத	சஷ்-38-46	ரேவ-18-52	மரண-60	3-க்குள் மழை
9	25	வி	சப்-35-8	அசு-16-37	அமி 17 சி	கல் தூண் நட
10	26	வெ	அஷ்-32-19	பர-15-23	சித்த 60	மருந்துண்ண
11	27	சனி	நவ-30-30	*கார்-15-7	அமி-60	புது எருதுகளை எரில் கட்ட
12	28	ஞா	தச-30-2	ரோக-16-3	சித் 60	பூமுடிக்க, சாந்திசெய்ய
13	29	தி	ஏகா-30-47	மிரு-18-18	அமி 18 சி	புது வியாபாரம் செய்ய
14	30	செ	து-32-45	திரு-21-50	மர 22 சித்	9-க்குள் மழை
15	31	புத	திரி-35-55	புன-26-39	சித்த 60	மருந்துண்ண

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | பிங்களவரு ஆவணிமீ 1உ 1917ம்வரு ஆகஸ்டுமீ 16உ | பகுதி 2

கடவுள் வணக்கம்.

"குடக்கொடு குணக்காதி திக்கினை யுழக்கூடு
கொள்ளல்போ லுந்து பூதங்
கூடுஞ் சுருங்கிலைச் சரலேக மொன்பது
குலாவுநடை மனையை நாறும்
வடக்கயிறு வெண்ணரம் பாவென்பு தசையினுன்
மதவேள் விழாந டத்தி
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர்செ நீர்கணீர்
மலநீர்பு ணீரி ரைக்கும்
விடக்குத் துருத்தியைக் கருமருந்துக் கூட்டை
வெட்ட வெட்டத் தளிர்க்கும்
வேட்கைமா முறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
மெய்போ லிருந்து பொய்யாஞ்
சடக்கைச் சடக்கெனச் சதமென்று சின்மயந்
தானுகி நிற்ப தென்றோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே."

"ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடு
நாட்டமே நாட்டத்து ணிறைந்த
வானமே யெனக்கு வந்துவந் தோங்கு
மார்க்கமே மருளர்தா மறியா
மோனமே முதலே முத்திநல் வித்தே
முடிவிலா வின்பமே செய்யுந்
தானமே தவமே நின்னைநா னினைந்தேன்
தமியனேன் றனைமறப் பதற்கே."

ஆனந்தபோதினி
பிங்களவரு ஆவணிமீ 1உ

தாய்ப்பாஷையின் அபிவிருத்தி.

நமது தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷை பல்லாயிர வருடங்கட்கு முன்பே பூரணமடைந்து மிக்க உயர்ந்த நிலைமையில் இருந்ததென்பது யாவரும் உணர்ந்ததே. இதற்கு அன்னியமாகிய வேறொரு பாஷையின் உதவியும் வேண்டியதில்லை. வடமொழியாகிய சமஸ்கிருதமும், தென்மொழியாகிய தமிழும் இவை யிரண்டுமே வேறொரு பாஷையின் உதவியின்றி தனித்து நடைபெறக் கூடிய மகிமை வாய்ந்த பாஷைகளாகும். அவற்றின் நாமங்களே அவற்றின் அருமை பெருமைகளை விளக்குகின்றன. மேலும் இவை யிரண்டும் தெய்வீகத் தன்மையுடையன. அனேகம் பெரியோர் இவற்றால் பரமனைப் பாடித் துதித்து அவன் அருள் பெற்றதோடு அனேகம் மகிமைகளையும் விளக்கி யிருக்கிறார்கள். இவற்றின் சேர்க்கையால் பல பாஷைகள் உற்பத்தியா யிருக்கின்றன. மேல்நாட்டுப் பாஷைகளிலுள்ள அனேகம் வார்த்தைகள் சமஸ்கிருத தாதுவிலிருந்து வந்தனவென்று காணலாம்.

ஆதிநூலாகிய வேதமும், தர்க்கம், வியாகரணம், ஜோதிடம், கணிதசாஸ்திரம், வைத்தியம், தநுர்சாஸ்திரம், சங்கீத சாஸ்திரம், பாதசாஸ்திரம், அர்த்தசாஸ்திரம் யுத்தசாஸ்திரம், காவியங்கள், புராணங்கள் முதலிய எண்ணிறந்த நூல்களும் சமஸ்கிருத பாஷையிலேயே ஆதியிலிருந்தன வென்றும், பிற்காலத்தில் அவற்றில் அனேகம் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டன வென்றும் விளங்குகிறது. சங்கங்கள் இருந்த காலத்தில் தமிழ் உன்னத நிலையிலிருந்தது. அக்காலத்தில் சுதேச ராஜாக்களும் செல்வச் சீமான்களும் தமிழின் அருமை பெருமை யறிந்து அதை ஆதரித்தார்கள். அரசர்களில் அனேகர் மகா வித்வசிரோமணிகளாய் விளங்கி யிருந்தனர். பிற்காலத்தில் கலிகாலக் கொடுமையால் நமது நாடு ஜாதி மதம் பாஷைகளில் நமக்கு முற்றும் மாறுபட்ட வேற்றரசர்கள்

கையில் சிக்கியபிறகு நமது நாட்டாரின் சீரும் சிறப்பும் செல்வமும் எவ்வாறு குறையத் தொடங்கியதோ, அவ்வாறே நமது தாய்ப் பாஷையும் ஆதரிப்பாரின்றி மங்கத் தொடங்கியது. காருண்யம் பொருந்திய பிரிடிஷ் இராஜ்ஜியத்தில் முன்னிருந்த நமது துன்பங்களும் இடையூறுகளும் பெரும்பாலும் நீங்கினாலும், நமது தாய்ப் பாஷையை விர்த்தியடையச் செய்யப்போதுமான உதவி மட்டும் இல்லாமலே யிருக்கிறது. பாடசாலைகளில் சுதேச பாஷையைக் கட்டாயப்படிப்பாய் வைத்திருந்ததை நீக்கிவிட்டது முதல் நமது சிறுவர்களுக்குத் தாய்ப்பாஷையில் அபிமானக்குறைவும் உற்சாகக்குறைவும் ஏற்பட்டதோடு, தமிழ்ப் பாஷையின் இனிமையும் பெருமையும் அவர்களுக்குக் குறைவாய்ப் புலப்படத் தொடங்கியது. ஆங்கிலத்தில் பீ. ஏ. பட்டம் பெற்றவரில் பலர் தமிழில் நான்குவரி சரியாய் எழுதத் தெரியாதவர்களா யிருக்கிறார்கள். ஆங்கிலத்திலுள்ள ஒருவாக்கியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கச் சொன்னால் சரியான தமிழ்ப் பதங்கள் தெரியாதுவிழிக்கிறார்கள். அவர்கள் நம்மவர்முன்பாக நமது இலௌகிக விஷயங்களில் ஏதாவதொன்றைப்பற்றி பேசவேண்டுமாயின் ஆங்கிலத்தில் பேசமுடியுமே யன்றி தமிழில் பேசமுடியாது. அந்தோ! இது எவ்வளவு துயரமான விஷயமாயிருக்கிறது. ஒருவர் தாய்ப்பாஷையின் அபிவிர்த்தி யென்பதைப்பற்றி நமது நாட்டார் கூடியசபையில் ஒரு பிரசங்கம் செய்தார். எந்தப் பாஷையில்? ஆங்கிலத்தில்!

இப்போது நமது நாடு விருத்தி யடைந்து மற்றத் தேசங்களோடு சம அந்தஸ்தை அடைய வேண்டுமாயின், நாம் பல விஷயங்களிற் பயிற்சி யடையவேண்டி யிருக்கிறது. ஆன்மார்த்த நூல்களையுடைத்தா யிருப்பதிலும் அதன் ஆராய்ச்சியிலும் உலகிலுள்ள வேறெத்தேசத்தினரும் நமக்கு ஒப்புவமையாகார்கள். ஆனால் அது ஒன்றுமட்டும் உலகக்ஷேமத்தில் நம்மை முன்னேறச் செய்யப் போதியதல்ல.

நாம் மேல்நாட்டாரிடமிருந்து உலக சம்பந்தமான சடசாத்திரங்களில் மிகுதியானவற்றைக் கற்றுக்கொள்ளவேண்டியது அத்தியாவசியமா யிருக்கிறது. அவை நமது பாஷையில் இல்லாததனால் நம்மவர் அவற்றில் தேர்ச்சியற்றவர்களா யிருக்கிறார்கள். கலாசாலைகளில் இரசாயன சாத்திரம், தாவர சாத்திரம் முதலிய இரண்டொன்றைக் கற்கும் நமது பாலியர்கள் ஜீவனார்த்தத்திற்கென்றே அவற்றை

வாசிப்பதால் பரீட்சையில் தேறியதே, அக்கல்வியை உபாத்தியாயருக்கே தத்தம்செய்துவிட்டுச் சேஷவிர்த்திக்குச் சென்றுவிடுகிறார்கள். அவர்கள் அவற்றைக் கற்றதால் அவர்களுக்காவது அல்லது அவர்கள் தாய்நாட்டிற்காவது ஒரு இம்மியளவு பயன்கூடக் கிட்டப்போது.

நமதுமக்களுக்கு இளமையில் தாய்ப்பாஷையினிடத்து அன்பும் சிரத்தையுமில்லாமற் போவதால் இன்னொரு பெருந்தீங்கு விளைகிறது. ஹிந்துக்களாகிய நமக்கு நமது மதக்கொள்கைகளும் அவற்றைவிளக்கும் நூல்களுமே உயிரினும் சிறந்தன. நமது முன்னோர்கள் சொல்லொணா ஆபத்துகளிற் சிக்கியபோதும் சித்திரவதை செய்யப்பட்டபோதும், தங்கள் காணியாட்சி, திரவியம் முதலிய யாவற்றையும் இழக்க நேர்ந்தபோதும், எதுபோனாலும் போகட்டுமென்று தங்கள் ஆன்மார்த்த விஷயத்தைமட்டும் காப்பாற்றிக் கொண்டார்கள். நமது மக்களோ தாய்ப்பாஷையில் பற்றில்லாததால் மதசம்பந்தமான நூலுணர்ச்சியே யில்லாதவர்களாய் விடுகிறார்கள். ஆங்கிலத்தில் உயர்[illegible]ல்விகற்ற நம்மவர்களில் நூற்றுக்கு எத்தனைபேர் தங்கள் மத [illegible]களை ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் என்பதை நோக்கினால் இதன் உண்மை விளங்கும்.

அந்தோ! இதுமட்டுமல்ல, இவர்கள் தங்கள் மதநூல்களை ஆராய்ச்சிசெய்யாது போவதோடு நமது மதத்திற்குமாறான அன்னியமதக் கொள்கைகளையும் அன்னிய ஆசாரங்களையும் பற்றிப் படிப்பதும் கேட்பதுமாயிருக்கிறார்கள். அவை மெல்லமெல்ல இவர்கள் தங்கள் கொள்கைகளையும் ஆசாரங்களையும் பற்றித் தாழ்வாய் நினைக்கும்படி செய்கிறது. இவ்வாறு தங்கள்மதத்தைத் தாழ்வாய் மதிக்கிறார்கள். அன்னியமதக் கொள்கை ஆசாரம் முதலியவற்றின் உண்மையையும் தங்கள்மதத்தின் உண்மையையும் சீர்தூக்கிப் பாராததால், அன்னிய கொள்கை ஆசாரங்களில்மயங்கி அந்த ஆசாரங்களில் நமக்குத்தகாத சிலவற்றைக் கைக்கொள்கிறார்கள். ஆனால் அந்தமதக் கொள்கையை யனுசரிக்கமுடிவதில்லை. கடைசியில் எந்த மதக் கொள்கையையும் சரியாயுணராமல், அனுசரிக்காமல் பொருளீட்டுவதும் உண்பதும் உறங்குவதும்மட்டுமாய் வாழ்நாளைக் கழிக்கிறார்கள். இவர்களுக்கும் நிரீச்சுரவாதிகளுக்கும் சொல்பவித்தியாசமே. நிரீச்சுரவாதி கடவுள் என்று ஒரு பொருள் இல்லவேயில்லை யென்கிறான். இவர்கள் யாவர்க்கும் பொதுவான ஒரு தெய்வமிருக்கிற

தென்றுமட்டும் நினைக்கிறார்கள். போசனம் செய்யுமுன் கைகால் சுத்திசெய்துகொள்வது எப்படி ஒருமுறைமை யென்று செய்கிறார்களோ அதுபோல் நெற்றியில் பரம்பரை வழக்கம்போல் ஏதோ ஒருகுறியைத் தீட்டிக்கொள்கிறார்கள். அதுவும் ஒருவர் ஆயத்தமாய் விபூதியோ திருமண்ணோகுழைத்து கண்ணாடியோடு நீட்டினால் கின்றபடி தீட்டிக்கொள்வார்கள். சிலர் அதையும் 'சட் நான்ஸென்ஸ்' என்றுவிட்டுவிடுகிறார்கள். அவ்வளவேயன்றி அந்த ஒரே கடவுளுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? நாம் யார்? அக்கடவுளை நாம் அடையும் நீதி யாது? என்பது முதலிய ஒருசிந்தனையும் கிடையாது. தாய்ப்பாஷையில் அன்பும் சிரத்தையும்வைத்து வாசித்திருந்தால் எப்படியாவது தங்கள் மதக்கொள்கைகளைப்பற்றி ஆராய்ச்சிசெய்யாமலிரார்கள்.

சிலர் தமது தாய்ப்பாஷையிலிருக்கும் தமதுமதநூல்களை ஆலட்சியமாயெண்ணியிருந்து அதை யாரேனும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்தால் அந்தநூலைவாங்கி அப்போதுதான் அதற்குக் கௌரவம் வந்ததாய் மதித்துப் போற்றுகிறார்கள். திருட்டாந்தமாய் தமிழிலும் வடமொழியிலும் பகவத்கீதை உரையோடிருக்கிறது. அதை வாங்கி வாசிப்போர் எங்கோ ஒருவர். ஆங்கிலத்தில் அதே பகவத்கீதை மொழி பெயர்க்கப்பட்டு மிகச் சுருக்கமான நூலாய் வெளியானபோது ஆயிரக்கணக்கானபேர் அதை வாங்கிக் கொள்கிறார்கள்.

நமது மதநூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வாசித்தால் அப்போதுதான் அதுதெளிவாய் மனதில் படுமென்று சிலர் கருதுவதாய்த் தெரிகிறது. அந்தோ! இது விபரீத யோசனையேயன்றி வேறில்லை. நமது மதநூல்களை நமது தாய்ப்பாஷையில் சரியாய் அறிந்துகொள்வதே கஷ்டம். அதைச் சரியாய் வெளியிட ஆங்கிலத்தில் தக்கபதங்கள் கிடையா. தமிழ்ப்பதத்தை அப்படியே ஆங்கில எழுத்துகளால் எழுதினாலோ வார்த்தையின் சத்தம் அடியோடு தவறிப்போம். ஒரேயொரு வார்த்தைமட்டும் திருட்டாந்தமாய்க் கூறுகிறோம். அவஸ்தைகளில் ஒன்றாகிய துரியம் என்ற பதத்தை ஒரு ஆங்கிலநூலில் 'Thuriam' என்று எழுதியிருந்தது. தமிழில் அப்பதத்தை வாசித்திராதவன் இந்த ஆங்கிலவெழுத்துகளாலாகிய பதத்தை வாசிப்பானாயின், துரியம், துரியாம், தூரியம், தூரியாம், தரியம், தரியாம் என்ற இத்தனைவிதங்களில் எந்தவிதமாகவேனும்

வாசிக்கலாம். இத்தகைய வார்த்தைகள் எண்ணிறந்தன நமது நூல்களில் உள. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நமது மதநூல்கள் தமிழ்தெரியாத ஆங்கிலர் முதலிய அன்னிய நாட்டார் நமது மதக் கொள்கைகளை உணர்வதற்குப் பயன்படுமேயன்றி நமக்கு ஒருபோதும் பயன்படாது.

இப்போது நாம் மேல்நாட்டாரது ஜடசாத்திரங்களில் பெரும்பாலானவற்றை அறிந்துகொள்ளவேண்டியது நமது முன்னேற்றத்திற்கு அவசியமாயிருக்கிறது. நமது தாய்ப்பாஷையிலும் ஆங்கிலத்திலும் பயிற்சியுடையவர்கள் அந்தச் சாத்திரங்களை நமது பாஷையில் மொழிபெயர்த்து நம்மவர் பயிலும்படி செய்வது நமது தாய்நாட்டிற்கு க்ஷேமமுண்டாக்கும் செயலாகும். இப்போதோ தாய்ப்பாஷையில் நல்ல பயிற்சியுள்ள கல்விவான்களில் பெரும்பாலார்க்கு ஆங்கிலமேதெரியாது. இரண்டொருவர்க்குத் தெரியுமெனின் மிகச் சொற்பமே தெரியும். ஆங்கிலத்தில் தேர்ச்சியடைந்த உயர்தரக் கல்விபெற்றோர்க்கோ தாய்ப்பாஷையில் போதுமான விற்பத்தியில்லை. ஆகையால் நமது நாட்டார் கைத்தொழில் முதலியவற்றில் தேர்ச்சியடைவதற்கு அவசியமான சாத்திரங்களைக் கற்றுக்கொள்ள வழியில்லாமலே யிருக்கிறது. நாம் தாய்ப்பாஷையை அலட்சியம் செய்வதால் உள்ள தீங்குகள் பல. ஆகையால் நமது சிறுவர்கள் அதில் சிரத்தைவைத்து நல்ல பயிற்சியடையவேண்டுவதற்குத் தக்க ஏற்பாடுகளைச்செய்யவேண்டியதுதான் தாய்நாட்டின் க்ஷேமத்திற்காக நாம் மேற்கொள்ளவேண்டிய முக்கியகைங்கரியங்களில் ஒன்றாகும். ஆண்டவனை நம்பி முயன்றால் எதுவும் கைகூடும்.

ஆலய தரிசனம்

"தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்"

என்னும் திருவாக்கு நமது ஞானமாதாவாகிய ஔவையார் திருவாய்மலர்ந்தருளியதென்பது நாம் சிறுவயதில் பள்ளியில் கல்வி பயிலுங்கால முதற்கொண்டே நன்று யறிந்த விஷயம். அவ்வாறு கூறப்பட்ட நமதன்னையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு அதன்படிநடக்க நாமெல்லோரும் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் அதற்கு ஏற்ற சாதனம் ஒன்றுவேண்டும். எந்தச்சாதனத்தைக் கைக்கொண்டால் அதை நிறைவேற்ற முடியுமென்று சற்று ஆராய்ந்துபார்த்தால் ஆலயதரிசனமே அதற்கு ஏற்ற முக்கியசாதனமெனக் கண்டுகொள்ளலாம். நாம் அநித்தியமான இவ்வுலகபோகமென்னும் வலையினால் கட்டுண்டு கடவுள்

ஒருவர் இருக்கிறார் என்பதை அடிக்கடி மறந்துவிடுவதே இயல்பாக இருக்கிறது. அவ்விதமான மறதியை நிவர்த்திக்கவேண்டுமானால்

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று"

என்னும் முதுமொழிக்கிணங்க ஆலயதரிசனம் செய்வதைத்தவிர வேறுவழியில்லை. எப்படியென்றால் நாம் ஆலயத்தைத்தவிர வேறு எந்த இடத்திலிருந்த போதிலும் கடவுளைப்பற்றிய ஞாபகமே வருகிறதில்லை. ஆலயத்துள்ளே சென்று அதனுள் மந்திரசக்தியினால் அமைக்கப்பட்டிருக்கும் விக்கிரகத்தைக் கண்டதும் அதை சாக்ஷாத் எம்பெருமானாகவே பாவித்து அவருக்குரிய சகல ஸ்தோத்திரங்களையும் செய்கிறோம். அவ்விக்கிரகங்களுக்குச் செய்யும் ஸ்தோத்திரங்களையும் உபசாரங்களையும் சர்வேசுரனாகிய கடவுளுக்குச் செய்ததாகவே கருதுகிறோம். உண்மையும் அவ்விதமே. அப்படிக்கிருக்க நாகரீகத்தில் முதிர்ந்து விட்டோமென்று சொல்லிக்கொள்ளும் அநேகர் ஆலயத்தில் இருப்பது செம்பாலும் கல்லாலும் உண்டாக்கப்பட்ட மானிடரூபமான விக்கிரகமேயன்றி அதற்கு நம்மை ரக்ஷிக்கச் சக்தியில்லை. அதை வணங்குவதால் யாதொரு பயனும்கிட்டாது, அதற்குச்செய்யும் உபசாரங்களும் ஸ்தோத்திரங்களும் வீணானவைகள் என்றுசொல்லி இவ்வுலகத்தை முற்றிலும்துறந்து, தன்னையறிந்து, சதா ஈசனையே தியானம்செய்துகொண்டு தாம் அடைந்த நிலைக்கேற்ப மஹான்கள் திருவாய்மலர்ந்தருளிய சிலதிருப்பாடல்களை ஆதாரமாகக்கொண்டு ஆலயத்துக்குச் செல்வோரை ஏளனம் செய்கிறார்கள். மேலும் அவர்கள் "கோவிலுக்குப்போய்த் தான் கடவுளை ஸ்தோத்தரிக்கவேண்டுமோ, கடவுள் கோவிலில் மட்டும்தான் இருக்கிறாரோ? கடவுள் சர்வவியாபிதானே? அவர்தான் எங்கும் இருக்கிறாரே? நாம் எங்கிருந்து வேண்டுமானாலும் கடவுளைத் தியானம் செய்யலாமே? மஹான்களெல்லாம் இருந்த இடத்திலேயே இருந்து தியானம் செய்யவில்லையா" என்று இன்னும் மனம் போன போக்கெல்லாம் சொல்லுகிறார்கள். வாஸ்தவம்தான். நாமும் அம்மஹான்களின் நிலையை அடைந்துவிட்டோமானால், "ஆலயத்துக்குப்போகவேண்டிய அவசியமில்லை" என்பது ஒப்புக்கொள்ளத்தக்கதே. அம்மகான்கள் எல்லாவற்றையும் வெறுத்தவர்கள். தன்னை அறிந்தவர்கள். அவர்கள் ஈசுவரதியானத்தைத்தவிர வேறே ஒருவேலையையும் மேற்கொள்ளாதவர்கள். ஊண், உறக்கம் முதலியவைகளையே வெறுத்தவர்கள். அவர்களுக்கு விக்கிரகவணக்கம் அனாவசியமே. இவ்வுலகத்தில் ஒரேவர்க்கத்தைச் சேர்ந்த தோட்டிக்கும் சக்ரவர்த்திக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கின்றதோ, அதைவிடப்பதினாயிரம்பங்கு அதிகமாக இவ்வுலக பாசத்தினால் கட்டுண்ட நமக்கும் பக்தியையே ஆபரணமாகப்பூண்ட மஹான்களுக்கும் வித்தியாசமிருக்கின்றது. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நம் இருதயத்தில் வேரூன்றுமளவும் நமக்கு விக்கிரகவணக்கம் அத்தியாவசியமே.

பாண்டவர்களுக்கு வில்வித்தை கற்றுக்கொடுத்த துரோணரிடம் தனக்கும் அவ்வித்தையைக் கற்றுக்கொடுக்கும்படி ஏகலைவன் என்ற வேடன் வேண்டிக்கொள்ள, அவர் தான் பாண்டவர்களுக்கு உங்களைத்தவிர வேறொரு

வருக்கும் வில்வித்தை கற்றுக்கொடுப்பதில்லையென்று கொடுத்திருந்த வாக்கினால் கட்டுப்பட்டவராய்த் தனக்குக் கற்றுக்கொடாது நாள் கடத்தி வந்ததையறிந்த அவ்வேடன், சிலம்பக் கூடம் ஒன்றுகட்டி அதில் துரோணரைப்போல் ஓர் விக்கிரகம்செய்துவைத்து வணங்கி நாடோறும் வில்லை அவ்விக்கிரகத்தின் கையில்கொடுத்து பிறகு எடுத்து துரோணர் சொல்லிக்கொடுப்பதாகவே பாவித்து வில்வித்தை முழுதும் கற்றுக்கொண்டதுமல்லாமல் துரோணர்வில்வித்தையில் தேர்ச்சிபெற்ற அர்ச்சுனனுக்குமட்டும் கற்றுகொடுத்திருந்த ஓரம்பு உட்லெங்கும் பாயும்படியான அரிய வித்தையையும் கற்றுக்கொண்டானென்னும் சரித்திரம் நம்மில் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். அவ்வேடனுக்கு அவ்வளவு அரிய வித்தையைக் கற்றுக்கொள்ளும்படியான பக்தி எதன்மூலமாய் வந்தது? துரோணரைப்போல் செய்து வைக்கப்பட்ட விக்கிரகத்தின் மூலமாய்த்தானே. இன்னொரு திருஷ்டாந்தம். நமது சக்ரவர்த்தியின் படத்தைப்பார்த்து இகழ்ந்தோமானால் நாம் தண்டனைக்குள்ளாவோம். ஏன்? அது உயிரற்றபடந்தானே பேசச் சக்தியில்லாததுதானே. ஏனென்றால் அதை நாம் சக்ரவர்த்தியாகவே பாவிக்கிறோம். அதற்குச்செய்யும் ஒவ்வொரு மரியாதையும் சக்ரவர்த்திக்கே செய்தவர்களாவோம். அதுபோலவே கடவுளாகவே பாவிக்கப்படும் விக்கிரகத்தினிடம் செலுத்தும் பக்தியும் கடவுளுக் குரித்தானதே.

சக்ரவர்த்தியை நாம்நேரில் காணமுடியாமல் அவருடைய படத்தின்மூலமாய் எப்படி அவருக்கு மரியாதைசெய்கிறோமோ அப்படியே அரூபியான கடவுளையும் விக்கிரகத்தின்மூலமாய் வணங்குகிறோம். சக்ரவர்த்தியை நேரில் கண்டபிறகு படம் அவசியமில்லாததுபோல் கடவுளின் பாதாரவிந்தத்தையடைய முக்கியசாதனமாகிய பக்தியை மேற்கொண்டு அவர் உண்மை நிலையை யறிந்தவர்களுக்கு விக்கிரக வணக்கமும் அனாவசியமே "கோயிலில்லா ஊரில்குடியிருக்கவேண்டாம்" என்று நமதன்னை ஔவை மூதாட்டி கூறியிருப்பதும் சைவசமயாசாரிகள் நால்வர்களில் ஒருவரான திருநாவுக்கரசு சுவாமிகள்,

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற்
நீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருக்காலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ ரணியாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோவென்னிற்
பெருநோய்கள் மிகுலியப் பெயர்த்துஞ்செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே.

என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பதும் கோவிலுக்குப் போகக்கூடாதென்பதற்கல்லவே. ஆகையினால் நாம் தினந்தோறும் ஒருவேளையாவது ஆலயத்துக்குப்போய் சாக்ஷாத் எம்பெருமானின் ஞாபகார்த்தமாய் அமைக்கப்பட்டிருக்கும் விக்கிரகங்களின் மூலமாக அவரை வணங்கவேண்டிய தவசியந்தான். இவ்விதமான நோக்கத்தோடேயே நமது முன்னோர்கள் ஏராளமான பொருள்செலவு செய்து ஆலயங்கள் கட்டியும் அவைகள் என்றென்றைக்கும் நடைபெற்று வருவதற்காக ஏராளமான சொத்துக்களை இனாமாகக்கொடுத்து மிருக்கிறார்கள்.

ஆனால் குளிக்கப்போய், நம் தேகத்திலுள்ள சொற்பமான அழுக்கைச் சுத்தஞ்செய்துகொண்டு வருவதற்குப்பதிலாக, சேறு நிறைந்த குட்டையில் விழுந்து நம்தேகத்தில் ½ அங்குலச் சேற்றைப் பூசிக்கொண்டு வருவதுபோலத் தற்காலத்தில் ஆலயத்துக்குச் செல்வோர்களில் அநேகர் கள், களவு, காமம், சூது, கொலை என்னும் பஞ்ச மகாபாதகங்களையும் செய்கிறார்கள். கோவிலுக்குச் செல்லும் குலஸ்திரீகளில் பெரும்பாலர் தங்களைக்கண்டார் மெச்சிக்கொள்ளவேணுமென்ற எண்ணத்துடன் தலைவாரிப் பொட்டிட்டு உயர்ந்த ஆடையாபரணங்களாலலங்கரித்துக்கொண்டு, விலைமாதருக்கும் தங்களுக்கும் யாதொருவித்தியாசமும் தோன்றாதபடி செல்வதுந்தவிர ஆடவர்மேல் தங்கள் கண்வலையை வீசுகிறார்கள். ஏற்கனவே இவ்வித அலங்காரங்களோடு வரும் ஸ்திரீகளைக் கண்ணெடுத்துப்பார்ப்பதே தொழிலாகக்கொண்ட ஆடவர்களில் சிலர் கோவிலிலுள்ள விக்கிரகத்தின்முன் வாய் முணுமுணென்று பாடி கைகூப்பியபடியே யிருக்க, கைக்குள்மறைந்த கண்களிரண்டும் பக்கத்தில் நிற்கும் குலமாதரையோ விலைமாதரையோ நோக்கி அவர்கள் நோக்கத்தையணிய ஆவல்கொள்கின்றன. கூட்டம் அதிகமாயிருக்குமானால் கண்ணோக்கத்தோடுமட்டும் நில்லாது. இத்தகைய ஆடவர், பெண்டிர் இருபாலரும் கோவிலுக்குப்போய்ச் சம்பாதித்தபுண்ணியம்எவ்வளவு? கோவிலுக்குப்போய் இவ்விதமான பாவங்களுக் காளாகாமல் ஒழுங்காய்க் கடவுளைத் தியானித்துவந்தால் கிடைக்கும் புண்ணியம் எவ்வளவோ அதைவிட ஆயிரமடங்கு அதிகமான பாவத்தை இவர்கள் சம்பாதிக்கிறார்களே யன்றி வேறல்ல. இத்தகையோர் கோவிலுக்குப் போகாமலிருத்தலே நலம். இவ்வளவு பாவங்களுக்கும் காரணம் அவர்கள் நடையுடைபாவனையே. கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்யப்போவதற்கு அழகுவேண்டாம். அந்தஸ்து வேண்டாம். கடவுள்பேரிலுள்ள உள்ளன்பொன்றேவேண்டியது. இதனால் கோவிலுக்குப்போகும்போது ஸ்நானம்செய்யாமல் அசுத்தத்தோடு போகவேண்டுமென்று சொல்வதாக எண்ணிக்கொள்ளக் கூடாது. விசேஷமாய் அலங்கரித்துக்கொண்டும் தலைசீவி முடித்துக்கொண்டும் வாசனைத் திரவியங்க ளணிந்துகொண்டும் சாந்துப் பொட்டிட்டுக்கொண்டும் போகவேண்டுவது அவசியமில்லை யென்பதே இதன்கருத்து. நாம் கோவிலுக்குச்சென்று அங்கு வந்திருக்கும் ஜனங்களில் சுவாமியை உள்ளன்போடு தரிசிக்க வந்திருப்பவர்கள் எத்தனைபேர், தாசி வேசிகளையும் குலமாதரையும் கடைக்கண்ணினால் நோக்கவந்திருக்கும் ஆடவர் எத்தனைபேர், ஆடவரை தம் கண்வலையினால் மயக்கவந்திருக்கும் ஸ்திரீகள் எத்தனைபேர் என்று பிரித்துப் பார்த்தால் 100-ல் ஒருவர்கூட சுவாமியை உள்ளன்போடு வணங்கவந்தவராக அகப்படுதல் அரிது. கடவுளை வழிபடுவதற்கு சாதனமாகவிருக்கும் ஆலய தரிசனத்தை இவ்விதமாய் அசுசிப்படுத்தலாமா?

இவ்விதமாய் நமது மனச்சாட்சிக்கும் முன்னோர்களின் நோக்கத்துக்கும் கடவுள் வழிபாட்டுக்கும் விரோதமாகநடந்தால் திட்டமாய்த் தெய்வதண்டனைக்கு ஆளாவோம். ஆகையால் நாமெல்லோரும் தினமொருவேளையாவது மெய்ப்பக்தியோடு ஆலயத்துக்குச் சென்று சாக்ஷாத் எம்பெருமானை வழிபட்டுய்வோமாக.

A. M. சங்கரநாராயணன், அம்பாசமுத்திரம்.

கன்மம்.

இந்தப் பிரபஞ்சம் *சரம் *அசரம் என்று இருவகையா யிருக்கின்றது. சரம் என்பது தானாகவே தனக்குவேண்டிய ஆகாராதிகளைத்தேடி உண்ணும், தன்மையுடையது; கருதிய இடங்களுக்குச் செல்லக்கூடியது. ஆதலால் இவற்றை இயங்குவவென்றும், ஜங்கமமென்றும், அசையும்பொருள்களென்றும் நூல்கள் கூறுகின்றன. இவை நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன, ஊர்வன என நான்குவகையாம். இவற்றைத் தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன என்று ஆறுவகையாய் விரித்துக்கூறலாம். அசரம் என்பது இருந்த இடம்விட்டு நீங்காமல் நிற்பது. ஆதலால் இதனைத் தாவரம், அசையாப் பொருள், நிற்பன என்று நூல்கள் கூறுகின்றன.

ஆகச் சராசரப் பகுதி எழு. இவ்வேழையுமே எழுவகைப்பிறப்பு என்பர். இவைகள் தோன்றும் வகை நான்கு. அவை அண்டஜம், சராயுஜம், சுவேதஜம், உற்பீஜம் என்பனவாம். அண்டஜம், பட்சிகள்போல் முட்டையிற்பிறப்பன; சராயுஜம் மனிதர் மிருகங்கள்போல் பையிற் கட்டுண்டிருந்து பிறப்பன. சுவேதஜம், பேன் முதலியபோல் வியர்வையிற்பிறப்பன. இம்மூன்றும் சரப்பொருள்களாம். உற்பீஜம் மரம் செடிகள்போல் வித்தில் தோன்றுவன. இது அசரம். இந்த அசரம், செடி, கொடி, மரம், புல் என நான்குவகைப்படும். ஆகச் சராசர பேதம் பத்துவகைகளாம். இப்பத்துவகையும் எண்பத்துநான்குலட்சம் பேதங்களாயுள்ளன வென்று கூறப்படும். இவையே நால்வகைத்தோற்றம், எழுவகைப்பிறப்பு, எண்பத்துநான்கு நூறாயிரம் ஜீவராசிகளா மென்க. இவையனைத்தும் சர்வேசுவரனுடைய சிருஷ்டி விநோதங்களாம்.

ஜீவர்களை ஒரேமாதிரியாகச் சிருஷ்டியாமல் இத்தனை பேதங்களாகச் சிருஷ்டிப்பானேன் என்று கேட்குங்கால், வினைகாரணமென்று நூல்கள்கூறுகின்றன. வினை கன்மம் என்பன ஒருபொருளன. கன்மம் என்பது யாது எனின், ஜீவான்மாக்கள் மனமொழி காயங்களால் செய்கிற செய்கைகளாம். இச்செய்கைகள் பலவகைப்பிறப்புகளுக்குக் காரணமாமெனின் அது மிகவும் கொடிதாம். இக்கன்மம் நல்வினை தீவினை யென்று இருவகையாம். நல்வினை புண்ணியமென்னப்படும். தீவினை பாபம் என்னப்படும். புண்ணிய கன்மத்தால் மனிதர் தேவர் முதலிய உயர்தரப் பிறப்பும், பாபத்தினால் பசு பட்சி செடி கொடி யாதி பிறப்புகளும் உண்டாகின்றன. ஆதலால் நல்வினையைச் செய்து தீவினையை ஒழிக்கவேண்டுமென்று பெரியோர் கூறுகின்றனர். நூல்களும் கூறுகின்றன. இதுபற்றியே அன்னையாரும் "தீவினையகற்று" "அறஞ்செய விரும்பு" என்று கூறினர். "நன்மைகடைப்பிடி" என்றதும் இதுபற்றியேயாம். நல்வினைப்பயத்தால் சத்தியம், பொறுமை, ஜீவகாருண்யம், தானம், தவம், அவாவின்மை, தெய்வபக்தி, குருபக்தி, மாதாபிதாக்களிடம் பக்தி, பெரியோர்வணக்கம், சுசி, மெய்ஞ்ஞானம், யாக்கை இளமை, செல்வங்களின் மேல் வெறுப்பு முதலிய நற்குணங்கள் உண்டாகும். இவைபற்றி ஒழுகுதலே நன்னெறி யென்னப்படும். இந்நெறியே மோட்சமார்க்க மென்று புகழ்ந்து நூல்களாற் கூறப்படுவது. மனிதஜனனம் எடுத்தவர்கள் இவற்றைக் கைக்கொண்டு நன்னெறியில் ஒழுகித் தெய்வகிருபைக்குப் பாத்திரராய்ச் சிறப்புற்றுவாழ்ந்து அந்தத்தில் முத்தியடைவதே பயனாம். இதனைவிடுத்து உண்டு உடுத்து உறங்கிக்

* சரம் = அசைவு, நடை அதாவது இடம் பெயர்ந்து போகக்கூடியவை.

* அசரம் = அசைவின்மை—அதாவது இடம்பெயர்ந்து செல்லக்கூடாதவை.

காலங்கழித்து மறுமைப்பயனையும் இழந்து நரகவேதனைக்குள்ளாய் வருந்துவது பசு பட்சிகளின் செயலாம். தீவினைப்பயனால் முற்கூறிய குணங்களுக்கு மாறான குணங்களே உண்டாகும். இது தீநெறி என்னப்படும். இந்நெறி யொழுகினால் ஈனப்பிறவிகளையடைந்து வருந்தநேரிடும். மனிதராய்ப்பிறப்பினும் வறுமை, பிணி முதலிய துன்பங்களை நுகர்ந்து மறுமையில் நரகவாதனையடைந்து வருந்தநேரிடும். ஆதலால் அறிவுள்ளவர்கள் தீவினையை ஒழித்து நல்வினையையே செய்ய முயலவேண்டும்.

கன்மம் என்பது ஜீவர்களின் செய்கை. அது நிகழ்ந்தபொழுதே அழிந்து போவது. அதுமீண்டும் பிறப்பையளிப்பது யாங்ஙனமெனின், அதுகூறுதும். சர்வேந்திரியங்களுக்கும் மேலானது மனமே. அதுவே இந்திரியராஜன் என்று கூறப்படும். இக்கருத்தினாலேயே "மக்கடாமே யாறிறிவுயிரே" என்றார் பிறரும். அதாவது மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலவறிவுடன் மனவறிவையுங்கூட்டி அறிவு ஆறென்றது. மனமே எல்லாப் புலன்களையும் நடத்துவது. மனதின்சகாயமில்லாவிடின் சரீரத்திலுள்ள எக்கருவியும் தொழிற்படாது. வாக்கு, காயம் இவற்றின்தொழில் நிகழ்வதற்கும்மனமேகாரணம். மனதாலும் வாக்காலும் காயத்தாலுமே சகல கருமங்களும் செய்யப்படுகின்றன. தொழில் நிகழ்தலாவது மனமொழி மெய்களின் அசைவாகிய விகாரப்பாடேயாம். அங்ஙனம் விகாரப்படுங்கால், கோபம், பகை, அச்சம், பொறாமை, செருக்கு முதலியவற்றால் செய்யப்படுமாயின் அதுவே தீவினையால் மனமாதிகருவிகள் கடினப்படும். நல்வினைசெய்வதனால் மனம் மிருதுத் தன்மையுடைய தாகும். கடினப்படுவதால் மனவொளி மழுங்கிக் கறுத்து இருளுருவம்போலாகும். அப்போது அம்மனம் நல்வினையொன்றையு முணராது. அதனாலே பாவச்செய்கைகளே மேலுமேலுஞ் செய்யப்படும். மிருதுத்தன்மை யடைதலால் மனம் மாசகன்று ஒளிவடிவாகும். அவ்வொளியே தெய்வசொரூபமாகிய ஞானமெனப்படும். அதனாலே ஆகாதது ஒன்றில்லை. அந்தஞானம் தோன்றவே ஜகதீசனுடைய திவ்ய தேஜோமயாநந்தவடிவம் அதில் பிரதிபலிக்கும். அதுவே தெய்வசாந்நித்யமாம். அதனால் இகபரசாதகங்களை யடைந்து அந்தத்தில் முத்தியின்பமும் கைகூடும். இம்முறை விளக்கப்புகின் மிக விரியுமாதலால் ஈண்டு வேண்டியமட்டுமே கூறினம்.

இதுகாறும் கூறியதனாற் பயன் யாதோவெனில், அதுகூறுதும். ஆன்மாக்களுக்குச் சரீரம் பலவுண்டென்று நூல்கள் கூறுகின்றன. அவை ஸ்தூலம், சூக்ஷமம், குணம், கஞ்சுகம், காரணம் என்பனவாம். காரணசரீரமாவது அவித்தியாமய சரீரமென்பர். அவித்தியையே பாசம் அல்லது மலமென்பது ஆகமம். இந்தக்காரண சரீரமே காலாந்தரத்தில் பரிபாகப்பட்டு ஸ்தூல சரீரமாகவளர்கின்றது. ஏனையநிற்க, ஈண்டுவேண்டுவன ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களே. காரணசரீரம் முறையே சூக்ஷ்மசரீரமாய்ப் பின் கர்ப்பாசயம் புக்கு ஸ்தூலசரீரமாய்ப் பரிணமித்து வெளிவந்துலாவும். எனவே சூக்ஷ்மசரீரத்தின் பரிணாமமே ஸ்தூலசரீரமாம். சூக்ஷ்மமானது இலிங்கசரீரம், புரியட்டகசரீரமெனப் பலபெயர்பெறும். அந்த லிங்கசரீரம் எட்டுக்கருவிகளினாலாகிய சூட்சுமமான ஒருசரீரம். ஞானக்கண்ணுக்கேயன்றி நேத்திரமுதலிய புலன்களுக்கும், பூதக்கண்ணாடிமுதலிய எவ்விதக் கருவிகளுக்கும் புலப்படாதது. அவ்வளவு நுட்பமானது. எட்டுக்கருவிகள் யாவையெனில், சப்த, பரிச, ரூப, ரச, கந்தமென்கிற தன்மாத்திரைகளாகிய சூட்சும பூதங்களைந்தும், மனமும், மனத்தொடுவேறுபடாத சூட்சுமகன்மங்களும் ஆகிய எட்டுமாம். இந்தச் சூக்ஷ்மகன்மங்களே வாசனாமலமென்பர். கற்பூரம், கஸ்தூரி பெருங்காயம் முதலிய பாத்

திரங்களினின்றும் அவ்வஸ்துக்கள் எடுக்கப்பட்டாலும் அவற்றின்வாசனை நெடுங்காலம் ஒழியாது நிற்பதுபோல, ஸ்தூல சரீரம் கெட்டாலும் மனமாகிய இலிங்கசரீரக்கருவியோடு நல்வினை தீவினைகள் அகலாமல் சூட்சுமமாய் நிற்பது பற்றி அது வாசனாமலமென்று பேர்பெற்றது. சூக்ஷ்மசரீரத்தில் நல்வினை தீவினைகளாகிற கன்மங்கள் சூக்ஷ்மரூபமாய் அடங்கிநிற்குமென்றும், ஸ்தூலத்தை அடையும்போது அந்தக்கன்மங்கள் பரிபாகப்பட்டு அவையும் ஸ்தூலத்தோடு சம்பந்தப்பட்டுத் தத்தம்பயன்களாகிய இன்பதுன்பங்களைக் கொடுக்குமென்றும், பாபகன்மபயனால் பசு, பட்சி, செடி, கொடி, மரம், புல், ஊர்வன, நீர்வாழ்வன வாதி ஜன்மங்களுண்டென்றும் விளக்கிச் சர்வேசுரனுடைய சிருஷ்டிப் பிரதாபத்தை மகிமைப்படுத்தலேயாம்.

ஈசுவரன் சிருஷ்டிக்குக் கன்மமே காரணமாம். நற்கன்மஞ்செய்தால் தேவர், மனிதர் முதலிய உயர்ந்த பிறப்பு உண்டாகும். அதனால் இகபரபோகங்களை அனுபவித்து இச்சை ஒழியும். இச்சையுள்ளவரைக்குமே கன்மநிகழும். இச்சையொழிந்தால் கன்மம்புரிதலில்லையாம். கன்மம்புரியாதுவிடவே பந்தமுமில்லையாம். பந்தமில்லாமையே முக்தியென்னப்படும். நல்வினைப்பயனால் சொர்க்கபோகாதி புவனபோகங்களையும் பூலோகத்தில் ஒப்பற்றவாழ்வையும் பெறலாம். அப்போதும் ஆன்மாவுக்குப் பேர்கசரீரமுண்டு. தீவினைசெய்தால் மறுமையில் நரகவேதனை அனுபவிக்கிற யாதனாசரீரமும், பூலோகத்தில் பிணி வறுமை முதலியவற்றை அனுபவிக்கிறசரீரமும் உண்டாம். அதிகபாபஞ் செய்திருந்தால் ஈனஜந்துக்களாகவும், ஸ்தாவரவர்க்கங்களாகவும் ஜனிக்கநேரிடும். ஆகவே நல்வினையையும் தீவினையையும் சரீரத்திலிருந்தே அனுபவிக்க வேண்டியிருத்தலால் அவ்விரண்டும் பந்தமேயாம். இருவினைகளாகிற இந்தப்பந்தத்தில் கட்டுண்ட ஆன்மா, சூத்திரக்கயிறுபூட்டிவிட்ட காற்றாடி அந்தரத்தில் பறப்பதுபோல, அண்டங்கடோறும் சுழன்றுதிரியும். இருவினைகளும் பந்தமே என்று விளக்குதற்கே "இருள்சேரிருவினை" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார். இருவினைகளும் ஒழித்தலே பந்தமறுதல் என்பது நூல்களின் கருத்து. இருவினைகளும் மனத்தொடு சூக்ஷ்மவடிவாய்ப் பிணைந்து நின்று எவ்விடத்தும் ஆன்மாவைத்தொடர்ந்துசென்று அவ்வவ்வினைப்பயனுக்குரிய சரீரத்தைக் கொடுப்பதே வினைகளின்செயல். வினையே சரீரமாய்ப் பரிணமித்தது என்று நூல்களும் கூறுகின்றன. ஸ்தூலசரீரமொழிந்த அப்போதே வினையுமொழிந்துவிடும் என்பது நூலுணர்வில்லார் கொள்கையாமென்க. அவர்கள் தெய்வமில்லையென்று வாதிப்பவர்கட் கினமாவார். வினைக்கீடாகவே பிரமதேவர் சரீரத்தைப் படைக்கின்றார். "தாந்தாமுன் செய்தவினை தாமேயனுபவிப்பார், பூந்தாமரையோன்பொறிவழியே" என்று அன்னையார் கூறுதலாலுமுணர்க.

உண்மை ஞானம்பெற்ற மஹான்களே யிருவினையும் அகன்று நிற்பர். ஏனையோர்க் கது அரிதேயாம். தெய்வபக்தியினாலேயே உண்மைஞானம்முண்டாம். ஆதலால் பிரபஞ்சஞானத்தை வெறுத்துச் சதாதெய்வசிந்தனையிலிருக்கும் புண்ணியமுடையோரே இருவினைப்பந்தமுமறுத்து முத்தியின்பமடையப் பெறுவோராம். இதனை "இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன்—பொருள்சேர்புகழ்புரிந்தார் மாட்டு" என்பதனால் தெய்வப்புலவர் விளக்கியருளினார். அப்புண்ணியமில்லாதவர்கள் தெய்வசிந்தனையுடன் நல்வினைகளைப் புரிதல் வேண்டும். அதுஜன்மாந்தரத்தில் பயனளிக்கும். தீவினைசெய்தால் அது ஆன்மாவைத்தொடர்ந்து சென்று பலவகையான துன்பங்களை விளைவிக்கும்.

"எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.
தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயாதடி யுறைந் தற்று"

என்பனவற்றால் தீவினை ஆன்மாவைவிடாது பற்றிச்சென்று தன்பயனாகிய துன்பத்தைக் கொடுத்தேதீரும் என்று கூறினர். மீண்டும்,

"தீவினையா ரஞ்சார் விழுமிய ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு"

என்றதனால் பிறவிகடோறும் பாவங்களையே செய்துபழகிய கீழ்மக்கள் பாவம் செய்யச்சிறிதும் அஞ்சாரென்றும், நன்மக்களேபாவம் செய்யப்பயப்படுவரென்றும் கூறியருளினார் தேவர். இவற்றினால் ஒருவர்செய்த நல்வினை தீவினைகளே அவரைத் தொடர்ந்துசென்று பயன்தருவனவாமென்றுணர்ந்து, தீவினையையொழித்து நல்வினையைச்செய்து தேவன் திருவடிக்கு ஆளாய், இகபரபோகங்களை நுகர்ந்து அந்தத்தில் அழிவில்லாத நித்தியானந்தப் பேறு பெற்றுய்வதே மனிதஜன்மத்தினாலாகும் பயனாமென்று துணிந்து, எம்பெருமான் திருவடியை வாழ்த்திப் பணிவோமாக.

சிவானந்தம்

ஓர் நல்வழி.

(19-ம்பக்கத் தொடர்ச்சி.)

இதற்கு இப்பாட்டைக்கூட உட்கொள்ள வேண்டா ஒரு விஷயத்தைத் தாம் எண்ணியவாறு முடிக்கவேண்டி அதைப் பிறரறியாமலே தம் மனத்திலோர் புடையில் தனியாகவைத்து நடித்து முடிக்குஞ் சூக்ஷியுடையார் இக்காலத்திலும் பலருளர். இவ்வித மனவலியுடையார்க்கு பகவத் தியானத்தைச் செய்தவாறே தமக்குரிய லௌகீக காரியங்களைச் செய்வது மாத்திரமோ அரிதாகும்? ஆகாதாயினும் பகவத்தியானஞ் செய்யாமைக்குக் காரணம் யாதென்றால், ஒருகாலத்தில் நமக்கு மரணமுண்டென்று அவரெண்ணாமையே யென்க.

திருக்குறள், 34-ம் அதி. நிலையாமை.

நாச்செற்று விக்குண்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்
நெருநலுள னொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத் திவ்வுலகு.

நாலடியார்.

புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்கவறவினை—யின்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப் படுதலான்.

என்னும் இப்பாடல்களையுங் கொண்டு நமக்கும் மரணம் உண்டென்பதை யுணர்ந்து பகவத்பக்தி செய்வதிலும் மூடபக்தி செய்யாமற் பராபரத்துவங்களை யுணர்ந்து ஞானபக்தி செய்தலே சிறந்தது.

இக்காலத்திலே சிலர் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படுவதாகிய தமது சுயபாஷையைச் சிறிதுங் கல்லாது இம்மைக்கு மாத்திரம் பயன்படுகின்ற

ஆங்கில பாஷையை மட்டுங் கற்றுக் கிணற்றுத்தவளை கடலை யறியாமல் அக்கிணற்றையே கொண்டாடுதல் போல அப்பாஷையே சிறந்ததென்று கொண்டாடுவர். இன்னும், அவர், ஸ்ரீ மகாபாரதம் முதலிய நூல்களை அவை ஆதியிற் பிறந்த பாஷையிலே படித்து அந்நூல்களின் உண்மையை யுணர்ந்து புண்ணியத்தையு மடையாமல் ஆங்கில பாஷையில் தப்பாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்ற மகாபாரதம் முதலியவற்றைப் படித்து உண்மையை யுணராமலும் புண்ணியத்தை யடையாமலும் காலத்தை வியர்த்தமாகக் கழிக்கின்றனர். ஆகையால் நமது தாய்ப்பாஷையிலுள்ளவற்றைத் தள்ளி அன்னிய பாஷையிலிருப்பவைகளைப் படித்து நாம் அடையும்பயனென்னே? நாம்ஜென்ம மெடுத்ததின் பயன் உலக வைபவங்களைக் கண்டு மயங்கி மாயையிலகப்பட்டு உழலவோ, அல்லது ஞானத்தை யடைந்து மோக்ஷமடையவோ, என் அன்புள்ள சகோதரர்களே, சகோதரிகளே, கவனித்துப்பாருங்கள். வாழ்நாட்களை வீணே கழிக்காதீர்கள். ஆசையால் சகலமு முண்டாகின்றது. இதை விரித்துரைப்பின் என்னுயுளே போதாது. அவரவர்கள் மனத்தாலே யோசித்துப் பாருங்கள். அப்பொழுது உங்களுக்கே புலப்படும். நமது தாயுமான சுவாமிகள் வாயிலாக,

ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல்லாங் கட்டி யாளினும் கடல்மீதிலே
யாணைசெலவே நினைவர் அளகேச நிகராக அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்துராசவாத வித்தைக் கலைந்திடுவர் நெடுநாளிருந்தபேரும்
நிலையாகவேயினுங் காயகற்பந்தேடி நெஞ்சுபுண் ணுவரெல்லாம்
யோசிக்கும்வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்
உள்ளதேபோது நானுனெனக்குளறியே ஒன்றைவிட் டொன்றுபற்றி
பாசகக்கடற்குளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணாநந்தமே.

(தொடரும்)

நா. அ. தருசாமி நாயுடு, போத்தனூர்

கல்விப் பயன்

[ஸ்ரீ வாலையாநந்த சுவாமிகள் எழுதியது.]

அரிதினும் அரிதான மானுட சரீரத்தைப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் அதன் பயனை அனுபவிக்கவும், ஒரு குடும்பம், ஒரு கிராமம், ஒரு மாகாணம், ஒரு தேசம் உன்னதநிலையை அடையவும் முக்கிய கருவியாயிருப்பது கல்வி.

நாம் அடையவேண்டிய புருஷார்த்தங்களான அறம், பொருள், இன்பம், வீடென்பவைகளை நமக்குத் தருவது கல்வியே.

நாம் பொருளைச் சம்பாதிப்பதற்குரிய விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளை நீதியுடன் திறமையாய் விருத்திசெய்ய உதவியாவது கல்வியே.

பலதேசங்களின் நாகரீகங்களையும், சரித்திருத்தங்களையும், பல மதங்களின் உண்மைகளையும், பலதேச ஜனசாரங்களையும் நமக்கு உணர்த்தும் பத்திரிகைகளைப் படிப்பதற்கு நம்மைத் தகுதியாக்குவது கல்வியே.

மனித ஜாதியிற் பிறந்த ஒவ்வொருவரும் தாம் அடிமைத்தனத்தில் ஆழாது தமக்குரிய சுதந்தரங்களை அறிந்து அவற்றைப் பெறச்செய்வது கல்வியே.

நமக்குரிய அஞ்ஞானத்தை நீக்கி நமக்கு நல்லறிவு கொளுத்துவது கல்வியே.

ஒருவனுக்குப் பிறப்பு, ஜாதி, மதம் முதலியவற்றால் ஏற்பட்ட வித்தியாசத்தைக் கவனியாது அவனை மேலோர் சபையில் உயர்த்துவது கல்வியே.

தனது தேசத்தில் மாத்திரம் சிறப்புறும் அரசனிலும் உலகமெங்கும் ஒருவனைச் சிறப்படையச் செய்வது கல்வியே.

ஒருவர் சொல்லும் வார்த்தைகளின் குணாகுணங்களை அறிந்து மதிக்கச் செய்வது கல்வியே.

ஒருவனுக்கு அன்பு, அடக்கம், பொறை, இன்சொல், ஒழுக்கம் முதலிய நற்குணங்களை உண்டாக்குவது கல்வியே.

இத்தகைய கல்வி ஒருவனுக்கு இல்லாவிடின் அவனை மரமென்றும், முருக்கம் பூவென்றும், குருடனென்றும், அவனுடைய இரண்டு கண்களும் முகத்திலுள்ள இரண்டு புண்களென்றும் பெரியோர் கூறியிருக்கின்றனர்.

ஆகையால் சகோதரர்களே, நாம் ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டியது அவசியம். ஆனால் இங்கே நாம் கவனிக்கமேண்டியது ஒன்று உண்டு. உலகத்தில் படிப்பதற்காக எற்பட்டிருக்கிற நூல்களோ கணிக்கமுடியாதவை. அவைகளை யெல்லாம் நாம் படிப்பதானால் நமக்கு ஆயுள் போதாது. ஆதலால் நாம் கற்கவேண்டிய நூல்களை நமது நல்லாசிரியர் வாயிலாகத் தெரிந்து அவற்றை அவர் முன்னிலையில் ஐயந்திரிபறக் கற்று மேன்மை அடைய வேண்டும்.

மனித வாழ்க்கையில் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றி ஓயாது மோதுகின்ற பிரபஞ்ச வாசனைகளாகிய அலைகளிற் பட்டுழலும் பருவத்தை யடைவதற்கு முன் "இளமையிற் கல்" என்ற அமிர்தமொழிக் கிணங்கச் சிறு பிராயத்திலேயே நாம் வருந்தியும் கல்வி கற்று இன்புறுவோமாக.

"நாடிவந்து நயந்தவரைக் கைவிடுதல் நன்றன்று"

இவ்வாழி சூழுலகின்கண் மானிட ஜென்மமெடுத்து அவதரித்தோரில் அனேக சாதிபேதங்களுண்டு. ஒவ்வொரு சாதிபேதத்திலும் வறியவர் என்றும் தனவந்தர் என்றும் இருவகுப்பினர் உளர். அவருள் பெரும்பாலும் வறியவரே "தரித்திரம்" என்னும் பகைவனுக்கஞ்சி யோடுபவர்கள். அப்படி யோடியும் முடியாது எதிர்க்கவேண்டிய சமயத்துத் "தனவந்தன்" என்னும் உறைவிடத்தைக் கண்ணுற்று அவண் சென்று, தமக்குற்ற இடரை யறிவித்து, அவர்களை (தனவந்தர்)த் தமது பகைவனை யோட்டும்படி, கெஞ்சிக் கேட்கும்காலை, ஒரு போதும் அவர்களை (வறியவர்)க் காப்பாற்றாது விடுதல் சற்குண சீலராகும் செல்வர்க்குச் சிறப்பான தொன்றன்று என்பதே மேற்காட்டிய வியாசத்தின் தாற்பரியமாம்.

ஆனதுபற்றியவர்கட்கு "அஞ்சேல்" "அஞ்சேல்" என்று அபயஸ்தங்கொடுத்து அவர்கள், கைங்கரியங்களைத் தமதுபோலப்பார்த்து யாதோர் குறைவுமின்றிக் காத்தல் அவர்களின் சிரேஷ்ட கடமையாம். அதைவிட்டு விட்டுக் காப்பாற்றாது விடுவதாயின் எவ்வளவு விசனப்படத்தக்க காரியம்!

"ஆழ அமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழிமுகவாது நாணாழி—தோழியே
நிதியுங் கணவனும் நேர்படினும்தந்தம்
விதியின் பயனே பயன்"

என்ற ஆன்றோரின் அமுதவாக்கிற்கிணங்க எப்போதும் செல்வம் ஒருவருக்குத்

தானேவந்தடைவது அசாத்தியம். அவரவர் முன் ஜன்மத்திலே செய்து கொண்ட புண்ணியங்களினால்லவா வந்தடையும். தாய்தகப்பன் செய்த புண்ணியங்களினாலோ அல்லது தாம் செய்த நற்றருமங்களினாலோ வந்தடையும் செல்வத்தைச் சில சார்பார் மூடர்கட்கும் குடிகேடர்க்கும் வியாபாரிகட்கும், இன்னும் இவைபோன்ற ஏனையோர்க்குமளித்து அவர்கள் மூகஸ்துதியை யன்புடனங்கீகரித்துக்கொள்கிறார்கள். அம்மம்மா !! இதை விட மடமை யுலகிலிருக்கிறதோ. (மேலுமிக் கலிகாலத்திலோ உருட்டு, புரட்டு, திருட்டு, ஆகிய கோலங்கள் எவ்விடமுமிருக்கையில் இதையொரு மடமையாகக் கவனிக்கமாட்டார்கள்.)

இத்தகைய சார்பார் தமது பொருள்போனதையும் ஈட்டைபண்ணுது மற்றையோரை வியபசாரத்திற்கும், மதுமுதலிய மயக்கவஸ்துக்களைப் பாவிப்பதற்கும், தூண்டிவிடும் ஓர் தூண்டுகோலாக இருக்கிறார்கள். இதுமட்டோ ! இன்னும் மேற்குறிப்பிட்டோரால் வரும் பாவங்களையும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இவர்களின்கதியையும், தூண்டப்பட்டவர்களால் வரும் சதியையும், அன்னவரின் யோக்யதையையும் இதைவாசிக்கு மன்பர்களே உணவீர்களாக.

இன்னொரு சார்பார் தமக்குவந்துற்ற பொருளைச் " சூதும்வாதும்வேதனை செய்யும் " என்னும் மூதுரையை நன்குணராதவராய்ச் சூதிலும் வாதிலும் அபரிமிதமான பொருட்களை யள்ளி யிறைக்கிறார்கள். கேவலம் ! இவர்கள் மதியிருந்தவாறு !! முதலிலே யவர்கள் " இச்செல்வம் நமக்கு ஈசனாலளிக்கப்பட்டது. நம்முடையதல்ல " என்பதைத் தெள்ளிதினறிந்து அப்பெருமானின் கடாட்சம் பெறச்செய்வதும் தமக்கு இம்மையிலும் மறுமையிலும் பயன்படக் கூடியதுமான அரும்பெரும் செயல்களாகும் திருப்பணிமுதலியனசெய்வித்தல், இடிந்தகோபுரத்தைப் புதுப்பித்தல், எளியோர்க்கும், அடியோர்க்கும், அனாதைப் பிள்ளைகட்கும் அன்னவஸ்திரமளித்தல் ஆகிய பல நற்கிரியைகளைச் செய்வாராயின் அவர்கள் நாமம், பரம்பரைபரம்பரையாக ஒவ்வொருவர்நாவிலும், இருக்குமென்பதிற் சந்தேகமுளதோ ? செல்வம் ஒருவரிடத்தில் நிலைத்து நிற்கக்கூடிய ஓர்வஸ்துவன்று. " இன்றைக்கிருந்தாரை நாளைக்குக் காண்பதரிது " ஆகையால் இருக்கும்வரைக்கும் இயன்ற உதவிகளைத் தங்களாலானமட்டும் தம்மிடமடைக்கலம்புகுந்த ஏழைகட்கும், தரித்திரம் என்னும் பிணி நீங்காதோர்க்கும், முகமலர்ச்சிகாட்டி, இன்சொற்புகன்று தருமஞ்செய்தல் சிரேஷ்டபுண்ணியங்களுளொன்றெனவுக்கத்தகும்: இப்படிப்பட்ட செயல்களைச் செய்துவருவாராயின் ஓர் கிணற்றின்நீரை இறைக்க இறைக்க எப்படிப்பெருகிக்கொண்டிருக்குமோ அப்படியே அவர்செல்வமும் பெருகிக்கொண்டேவரும்.

" வாங்குங் கவளத் தோர்சிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறு—ஆங்கதுகொண்
டோ மெறும்பிங் கொருகோடி யுய்யுமுமால்
ஆருங் கிளையோ டயின்று "

என்னுஞ் செய்யுளை இவ்விடம் கவனிப்பதுகன்று.

கோவில்களில் அல்லது அரண்மனைகளில் யானைகளைவைத்துப் போஷிக்கிறார்களே. அவர்கள் அவ்வியானைகட்கு கால்கோணி அல்லது அரைக்கோணி அரிசிவைப்பது வழக்கம். அவைகள் புசிக்கும்போது ஒருகவளம் அல்லது இருகவளங்களைச் சிந்திவிட்டால் அதனால் அவைகட்குக் கிலேசமுண்டோ ? இல்லை. ஆனால் சிந்தின அரிசியோ ஆயிரக்கணக்கான் எறும்புக்கூட்டங்கட்கு நிரம்பின ஆகாரமாகிறது. யானைகட்குக் கொஞ்சம் எறும்புகட்குச் சாஸ்தியான ஆகாரம். அதுபோலத் தனவந்தர்கட்கு 10-அல்லது 15-ரூபாய்

ஒரு பொருட்டல்ல. ஆனால் அதுவே ஏழைகட்குப் பெருஞ்செல்வம். ஆகையால் ஒவ்வொருவரும் அவரவர்கள் சக்திக்குத்தக்கபடி, தம் உதவியைநாடும் சுற்றத்தார்கட்கோ, அல்லது கூன், குருடு, செவிடு, சப்பாணி, முடம், முதலானவர்கட்கோ, இயன்றபடி தருமஞ்செய்தல்வேண்டும்.

சிலர் " தாய்ப் பசித்திருக்க மகன் 63-வர் பூசைசெய்ததுபோல்" சுற்றத்தார் பட்டினியாயிருக்க அன்னதானம், கோதானம், சொர்ணதானம், வித்தியாதானம் முதலியன செய்கிறார்கள். இத்தகையோர் " அழையாவீட்டிற்கு அழையாச்சம்பந்திகள்போல " ரௌரவாதி நரகங்கட்கு மீளா அடிமைகளாகிறார்கள்.

வேறு சிலர் உதவியற்றவர்க்கும், தரித்திரப்பிணி நீங்காதோர்க்கும் அபயஸ்தங் கொடுத்துப் பின் " நடுச்சமுத்திரத்தில் தள்ளிவிட்டதுபோல் " இடைநடுவில் விட்டுவிடுகிறார்கள். முதலிலே அவர்கள் அபயஸ்தங்கொடுக்கும்போது தம்மால் அடைக்கலம்புகுந்தோரைத் தக்கபடிகாக்க இயலுமோ என்று கவனிக்க வேண்டியது. அப்படி இயலாதாயின் தமது விருத்தாந்தங்களை நவின்று அடைக்கலத்திற்குவந்தோனை இன்னும் வேறு யாரிடமாவது புகும்படிசொல்லிவிடுவது உத்தமம். அடைக்கலம் புகுந்தோரைக் கைவிடக்கூடாதென்று சாஸ்திரங்களெல்லாம் முழக்கமிடுகின்றன.

இன்னுஞ் சிலர் தமக்குப் பொருளிருந்தால், தமது மனைவி மக்களை யணிகலனால் அலங்கரிப்பதைவிட செய்யத்தக்கது வேறு ஒன்றும் இம்மையிலும் மறுமையிலும் இல்லை என்று திட்டமான மனத்துடனிருக்கிறார்கள். இவர்களைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

இப்படிப்பட்ட செல்வச் சிரஞ்சீவிகள் 1000, அல்லது 2000 ரூபாய் பெறும்படியான நகைகளைச் செய்வித்து மனைவி மக்களைப் பாதாதி கேசபரியந்தம் ஜோடித்து விடுகிறார்கள்.

இதனாலவர்கட்கு என்றும் நீங்காத் தலைச்சுமையாவது மன்றி திருடர்பயமுமதிகரிக்கின்றது. எந்தச் சமயம் திருடர்வந்து வீட்டிற்புகுந்து நகைகளைத் திருடிக்கொண்டுபோய் விடுவார்களோ என்னும் பயத்தால் இரவு முழுதும் மொட்டு மொட்டென்று விழித்துக்கொண்டு காவல் யிருக்கவேண்டியது தான். இப்படி இருக்குஞ் சமயத்தில் நாய் குலைத்துவிட்டாலோ, திருடர் வந்திருப்பார்கள் என்னும் பயத்தால் வீட்டிலுள்ளோர் எல்லாரையு மெழுப்பிக்கொண்டு, கலவரத்தோடு " கொள்ளிவாய்ப் பிசாசின் குஞ்சுகள்போல"த் திரியவேண்டியதுமன்றி எல்லார் தூக்கமும் குழப்புண்டு, மறுநாள் தத்தம் வேலையை விட்டுத் தூங்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

இன்னும் ஓர் ஊர்க்குப் பிரயாணம்பண்ணுவதாகில் " சதையுள்ள இடத்தில் கத்திநாடு" மென்பதற்கிணங்க யார் கனக்க உரக்க அலங்கரித்துக்கொண்டு வருகிறார்களோ என்று கண்ணுங்கருத்துமாய்த் திருடர்கள் பதிவிருப்பார்கள். சில ஸந்தர்ப்பங்களில் திருடர் மானபங்கஞ் செய்வதுமல்லாமல் சீவமோசமுஞ் செய்துவிடுவார்கள். இவை யெல்லாவற்றையுஞ் சீர்தூக்கிப்பார்க்கின் பணத்தாலேயே தமது ஜீவனை அநியாயமாய்த் திருடர்கையில் கொடுத்துவிடுகிறார்கள். இவற்றாலாகும் பிரயோசன மென்னவென்பதைத் தமியேன் கிஞ்சிற்று மறியவல்லேன்.

இத்தகைய இடர்க்குள்வீழ்த்தும் செல்வத்தை நல்வழியில் ஈசனடியார்க்கும் பக்தர்கட்கும் சுயநலம்கருதாது பொதுநலம் கருதி கோவில், சத்திரம் முதலியன கட்டுவாராயின் அவர்கள் இம்மையில் தமது கீர்த்திப்பிரகாசமானது எட்டுப்பரந்து உலகெங்கும் பிரகாசிக்கச் செய்வதோடு நோயற்றவாழ்வு குறைவற்ற செல்வம் முதலிய இகபோகபாக்கியங்களை யனுபவிப்பது மல்லாமல், சர்வவியாபகராகும்

சச்சிதானந்தப் பரம்பொருளின் கிருபாகடாட்சமும் பெறுவார்கள் என்பதில் கிஞ்சித்தேனும் ஐயமில்லை. இதனால் "நாடிவந்து நயந்தவரைக் கைவிடுதல் நன்றன்று" என்பது நன்கு பெறப்படும்.

எ. வி. நம்பி, கோடைக்கானல்.

சட்வித சம்பந்தமும் அஷ்டவித பக்தியும்.

அகண்டபரிபூரண சச்சிதாநந்த சொரூபியாகிய கடவுளிடத்தில் நாம் பக்தியின்றி மோக்ஷமடைய முடியாது. மோக்ஷம் என்பது மோசனம் எனப்படும். அதாவது பந்த விமோசனமாம். பந்தமாவது ஆணவம் காமியம் மாயை என்ற மும்மலங்களால் ஜீவர்களாகிய நாம் பந்திக்கப்பட்டிருக்கின்றோம். இப்பந்தம் நீங்குவதே மோக்ஷமென்று சொல்லப்படும். பந்தமாகிய பாசக்கட்டை கடவுள் அனுகிரகத்தால்தான் நீக்கப் பெறல்வேண்டும். கடவுளினுடைய அனுக்கிரகம் அடைய திரிகரணசுத்தியுடன் மனதை யொடுக்கி பக்தி செலுத்த வேண்டும்.

"ஆணவமாதிய விலங்குகளைக் கழற்ற நம்மால் முடியாது அவைதாமாகவும் கழலா. நாம் மனதை யொடுக்கி ஆண்டவனிடம் பூரணபக்தி செலுத்தினால் அவர் தன் கிருபையாகிய கரத்தால் அவ்விலங்குகளைக் கழற்றி விடுவார்" என்று சத்திய ஞானபோதம் என்ற நூல் கூறுகிறது. ஆகையால் பக்தியே முக்திக்கு முக்கிய காரணமாயுள்ளது. பக்தி செய்வதற்கு கடவுளுக்கும் நமக்குமுள்ள ஆறுவித சம்பந்தத்தைத் தெரிந்து பக்தி செய்யல் வேண்டும். ஆறுவித சம்பந்தமாவன, ஜன்ய ஜனகத்வம், பிராப்ய பிராபகத்வம், ஆதிபத்ய தாசத்வம், பிரேர்ய பிரேரகத்வம், வேத்ய வேதகத்வம், அம்சாம்சகத்வம் என்பனவாம். 1. ஜன்ய ஜனகத்வமென்றால் கடவுள் மாயாசகிதமாய் நம்மை பிறப்பித்தவர் நாம் அவித்தியா விருத்தியால் தாய் கர்ப்பத்திலிருந்து பிறந்தவர்கள் என்றறிவது. 2. பிராப்ய பிராபகத்வம் என்றால், ஞானபக்தி யோக வைராக்கியம் சத்கர்மானுஷ்டானத்தால் நாம் கடவுளை யடைய வேண்டியவர்கள். அவர் நம்மைத் தம்மிடம் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் என்றறிவது. 3. ஆதிபத்ய தாசத்வம் என்றால் நாம் கடவுளுடைய சிருஷ்டிக் குட்பட்டவர்கள் ஆனதால் அவர் நம்மை இரக்ஷிக்கும் பிரபு நாம் அவர் ஆக்கினைக் குட்பட்டவர்கள் என்றறிவது. 4. பிரேர்ய பிரேரகத்வம் என்றால் நாம் செய்யும் புண்ணிய பாவ கர்மங்களுக்குத் தக்கபடி நம்மை சுவர்க்க நரகங்களில் சேர்ப்பிப்பவர் என்றறிவது. 5. வேத்ய வேதகத்வம் என்றால் நாம் நம்முடைய நேத்திரத்திற்கும் காதிற்கும் கோசரிக்கும் பதார்த்தத்தை அறிபவர்கள். கடவுள் அந்தபதார்த்தத்தையறியும் ஞானத்தை நமக்கு உண்டாக்கினவர் என்றறிவது. 6. அம்சாம்ச கத்வம் என்றால் (அமைவாம்சோ ஜீவபூதசனாதந:) என்ற வாக்கியப்படி நாம் அவர் அம்சமாய் பிறந்தவர்கள். கடவுள் நமதுஜென்மத்திற்கு ஆஸ்ரயமானவர் என்றறிவது. இந்த சட்வித சம்பந்தம் தெரிந்து பக்திசெய்து அவர் அனுக்கிரகத்தால் பிரம்மக்யானம் அடைந்து முத்தியடையலாகும். இனி அஷ்டவித பக்தியைக் கூறுதும்.

ஸ்லோகம்.

மத் பக்த ஜனவாச்சல்யம் பூஜாயாம் சாநுமோதனம்
ஸ்வயமப்யர்ச்சனம் சைவ மதர்த்தே டம்பவர்ச்சனம்
மத்கதா சிரவணேபக்தி: சர்வநேத்ராங்க விக்ரியா
மமானு ஸ்மரணம் நித்யம் யச்சமாம் நோப ஜீவிதி
பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிர்ண் ம்லேச்சேபி
வர்த்ததேஸ விப்ரென்ரோ முனிஸ்ரீமான்சயதி ஸ்ஸச பண்டித:

1. பகவத் பக்தரிடத்தில் பிரியமாயிருப்பது. 2. பகவானைப் பக்த சிகாமணிகள் பூசிப்பதைப் பார்த்துச் சந்தோஷிப்பது. 3. கடவுளைத் தானே பூசிப்பது. 4. கடவுளைப் பூசிப்பதில் இடம்பம் இல்லாமலிருப்பது. 5. கடவுளினுடைய திவ்யாவதார லீலாவைபவ கதைகளைக்கேட்டு உற்சாகமடைவது. 6. கடவுளிடத்துண்டான பக்திவிசேஷத்தால் தேகம்புளகாங்கிதங்கொள்ள கண்களில் ஆனந்தபாஷ்பம்சொரிய நாத்தழுதழுத்தல் முதலியகுறிகளோடு தியானிப்பது. 7. சதா சிவபக்தர்களாயின் சங்கரா சிவா மகாதேவ பசுபதி உமாபதியென்றும், ஹரிபக்தராயின் நாராயண கோவிந்த தாமோதரா வாசுதேவா என்றும் பகவானுடைய நாமங்களை அடிக்கடி உச்சரிப்பது. 8. பகவானைமறந்திருக்க சற்றும் பொறுக்காது சதாபகவத்தியானபரனாயிருப்பது. இந்த எட்டுவித பக்தியுடையவன் மிலேச்சனானாலும், பரையனானாலும், அவனே பிராமணோத்தமன். அவனே ரிஷிசிரேஷ்டன், அவனே ஸ்ரீமந்தன், அவனே பரமசந்யாசி, என்று பகவான் கூறியிருக்கின்றார்.

சுலோகம்.

பத்ரம், புஷ்பம், பலம், தோயம், சதாராதன காரணாத்
யோமே ததாதி ஸததம் சதாபக்தி ப்ரியேமம.

என்று கூர்மபுராணத்தில் கூறியபடி பத்திரமாவது புஷ்பமாவது பழவர்க்கமாவது ஜலமாவது எவன் தான் அனுபவிப்பதற்கு முந்தி எனக்கு சமர்ப்பித்து பிறகு தான் புசிக்கிறானோ அவனே எனக்குப் பிரியமான பக்தன் என்று பகவான் கூறியிருக்கின்றார். அன்றியும்,

திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகம்.

திருநாமம் ஐந்தெழுத்துஞ் செப்பாராயின்
தீவண்ணர் திறமொருகால் பேசாராயின்
ஒருக்காலுந் திருக்கோவில் சூழாராயின்
உண்பதன்முன் மலர்பரித்திட் டுண்ணாராயின்
அருநோய்கள் கெடவெண்ணி றணியாராயின்
அவர்களெலாம் பிறந்தவாறேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கே யிடமாகி யிறக்கின்றாரே.

என்றதால் கடவுளுடைய பஞ்சாக்ஷரத்தைச் சொல்லாதவரும், அவருடைய கீர்த்திப் பிரதாபங்களைப் பேசாதாரும், பகவான் கோவிலுக்குப் போகாதாரும், புசிப்பதற்கு முந்தி கடவுளுக்குப் புஷ்பம் சாத்தாதாரும், திருவெண்ணீறணியாதாரும், இவர்களெல்லாம் பெரிய வியாதிகளால் பீடிக்கப்பெற்று பிறப்பிறப்பாகிய துன்பத்திற்கே ஆளாகின்றார்கள்.

திருநாவுக்கரசு தேவாரம்.

பூக்கைக் கொண்டான் பொன்னடிப் போற்றிலர்
நாக்கைக் கைக்கொண்டான் நாமம் நவின்றிலர்
ஆக்கைக்கே யிரைதேடி யலமந்து
காக்கைக்கே யிரையாகிக் கழிவரே

என்றதால் புஷ்பத்தைக் கைக்கொண்டு கடவுள் பொன்னடிக்குச் சாத்தாமலும் நாக்கால் அவருடைய நாமத்தைச் சொல்லாமலும் தேகபோஷணைக்கான உணவுகளைத்தேடி கடைசியில் மேன்மைதங்கிய விம்மானிடசரீரத்தால் அடையும்படியாகிய முத்தியையடையாது காக்கைகள் கொத்தித்தின்னும் ஆகாரமாகிய பிணமாகின்றனர் என்றார். ஆனதால் நாம் கடவுளைப் பூசிப்பதற்கும் தியானிப்ப

தற்கும் சோம்பேரிகாளாய்ப் பிராணப்பிரயாணகாலத்தில் யமன் கோபத்திற் காளர்காமல் பகவான் அனுக்கிரகத்தை யடையவேண்டும்.

திருமந்திரம்

கற்றுக்கொள்வன வாயுளநாவுள்
இட்டுக்கொள்வனப் பூவுளநீருள
கற்றைவார்சடையா றுளன்நாமுளேம்
எற்றுக்கோநமனூர் முனிவுண்பதே

என்றார் திருமூலர். கடவுளை தோத்திரம்செய்யக் கற்றுக்கொள்வதற்கு வாயும் நாவும் இருக்கவும், அவருக்கபிஷேகம்செய்து சாத்துதற்கு ஜலமும் புஷ்பமும் இருக்கவும், முன்மார்க்கண்டனுக்காக எமனையுதைத்த கத்தையுங்கிய நீண்டஜடா பாரத்தையுடைய சிவபெருமான் இருக்கவும், எதற்காக நாம் எமனுடையகோபத் திற்காளாகவேண்டும்? என்றதால், நாம் ஜலமும் புஷ்பமும் கடவுளுக்குச் சாத் தித்துதிப்போமாயின் நம்மிடம் காலன் அணுகமாட்டான் என்பது கருத்து. அன்றியும் திருவிளையாடற்புராணத்தில், 'குடங்கைநீரும் பச்சிலையும் இடுவார்க் கிமையாக் குஞ்சரமும் படங்கொள்பாயும் மலரணையும் தருவாய்மதுரைப்பர மேட்டி,' என்றதால் உள்ளங்கையளவு ஜலமெடுத்து கடவுள் திருமுடிக் கபி ஷேகம் செய்து வில்வத்தைச் சாத்தும் அன்பர்களுக்கு தேவேந்திரபதம் முதலிய உயர்ந்த பதவிகளையும்கொடுக்கும் கருணாநிதியல்லவோ கடவுள் என்று அறிகிறோம். தற்காலத்தில் திருஷ்டாந்தமாக ஒருவருக்குப்புதையல் அகப்படி னும் செல்வம்பெருகினும் அதைப்பார்த்து இதுமுன் அவன்செய்த பூஜாபலம் என்று உலகத்தில் வழக்கச்சொல்லாய் வழங்கிவருவதைக் கேள்விப்படுகிறோம். ஆனதால் அவரவர் மதாசாரப்படி அவரவர்களுடைய கடவுளைப்பூசித்து புண்ணி யத்தை நாளுக்குநாள் அபிவிருத்திசெய்து பாவம் நசியும்படி கடவுளைப் பிரார்த் திக்கவேண்டும். கடவுளைப் பூசிக்குங்காலையில் மனதையொடுக்கி இந்திரிய நிக்ரகம் செய்து இதரவிஷயங்களில் செல்லாமல் தியானத்தில் நிறுத்தல் வேண்டும்.

வேமன்ன பத்தியம்.

ஆத்ம சுத்திலேனி ஆசாரமதி யேல
பாண்ட சுத்திலேனி பாகமேல
சித்த சுத்திலேனி சிவபூஜ யேலரா
விஸ்வதாபிராம வினுரவேமா

என்றதால் உள்ளம் சுத்தமில்லாத வெளியாசாரம் எப்படி பயனற்றதோ, சுத்த மில்லாத பாண்டத்திற் சமைக்கும் பதார்த்தங்கள் எப்படி சிலாக்யப்படாதோ அதுபோல் சித்தசுத்தி யில்லாத, அதாவது மனதைச் சலனமின்றி நிறுத்தாமல் செய்யும், பூசையும் பயனற்றதாகும் என்று நன்குவிளங்குகிறது.

சிவவாக்கியம்.

இருக்குநாலு வேதமும் எழுத்தறவே யோதினும்
பெருக்கநீறு பூசினும் பிரானுவந் தணுகிடான்
உருக்கிமனதை யுட்கரைத் துவந்துகூட வல்லிரேல்
சுருக்கமற்ற சோதியைத் துடர்ந்துகூட லாகுமே

என்றதால் நான்குவேதங்களையும் பிழையறவாசிக்கினும், தேகமாதியந்தம் விபூதி தரிக்கினும், கடவுள் அணுகார். மனமுருகி எவன் பகவானிடம் அன்புசெலுத்து கிறானோ அவனே கடவுளை யடையமுடியும். அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஜலம் பழம் தேங்காய்களைப் படைத்தால் அவருக்கு உவக்காது. அன்பின்றி பூசைசெய் பவர்களைப்பார்த்து கடவுள் இந்தப்பயல் நம்மை ஏமாற்றவல்லவோ பார்க்கின் றான் என்று சிரிக்கின்றார். "பொக்கமுளார் கொண்டுசெயும் பூசைஎலயக்கண்டு

நகும்பராணபோற்றி" என்றதாலுணர்க. இதற்குத் திருஷ்டாந்தமாக ஒன்று கூறுதும்:—போஜலபாவா என்னும் ஒரு விஷ்ணுபக்தர் வருடந்தோறும் ஏகா தசிக்கு பண்டரிபுரத்திற்குச் சென்று ஆயிரக்கணக்காக பிராமணசமாராதனை யும் அதிதியாராதனையும் செய்துவருவார். இவர் தரித்திரதசையடைந்து விறகு விற்று ஜீவனம் செய்யும்படியான காலம் இவருக்கேற்பட்டது. வருடந்தோறும் பண்டரிக்கு போபவராதலால் தரித்திரதசையிலும் தானும் தன்பெண்சாதியும் விறகுவிற்றி அதனால் கிடைத்த பணத்தைக்கொண்டு பண்டரிபுரம் சென்று விரதமிருந்து துவாதசி நாள் கோதுமையரிசி வாங்கி மாவாக்கிக்கொண்டு கடவுளை நான் வருடந்தோறும் அனேக அதிதிகளுக் கமுதளித்தன்றோ விரதம் முடிப்பேன். இவ்வருடம் தரித்திரத்தால் அதிதியாராதனை செய்யச் சக்தியற்றவனானேன். இப்பொழுது நான் வைத்திருக்கும் கோதுமைமாவை பெற்றுக்கொள்வதற்கு ஒரு அதிதியும் காணோமே. லட்சாதிபதிகள் செய்யும் ஆராதனையைவிட்டு கேவலமாக நான் கொடுக்கும் மாவைக்கொள்ள யார்வருவா ரென்று விசனப்பட்டுக்கொண்டிருக்க பகவான் ஓர் ஏழை பிராமணவடிவங் கொண்டு மெல்லத் தடியூன்றிக்கொண்டு போஜலபாவா விருக்குமிடம்வந்து, அப்பா எனக்குப்பசிக்கின்றது, உன்னிடம் ஏதாவதிருந்தால் கொடுவென்று கேட்க, போஜலபாவா சந்தோஷத்துடன் கோதுமைமாவை ஸ்வாமி இதை ரொட்டிசெய்து சாப்பிடும் என்று கொடுத்து விறகு பொருக்கப்போனார். அப்பொழுது ருக்மிணி பிராட்டியார் பிராமணஸ்திரீ வடிவங்கொண்டு தானும் அவ்விடம் வந்துசேர்ந்தாள். போஜலபாவா விறகு கொண்டுவந்துகொடுக்க அம்மாவை ரொட்டியாக்கி சாப்பிட, போஜலபாவா கடவுள் எனத்தெரிந்து ஸ்வாமியைத் துதித்து ஸ்வாமி பெரிய லக்ஷாதிபதிகள் செய்யும் சமாராத னைக்குப் போகாமல் கேவலமாகிய மாவை யிச்சித்து அடியேனிடம் வந்த காரணம் யாதென்று கேட்க, பகவான் "அன்பா, அவர்கள் இடம்பத்திற்காக செய்கின்றார்களேயொழிய அன்புஅவர்களிடத்தில் சற்றுகிலும்இல்லை. உன்னு டைய அன்பிற்காக நான் வந்தேனேயொழிய இம்மாவுக்காக வரவில்லை. பிரபுக் கள் செய்யும் ஆராதனையும் அவர்கள் குணத்தையும் காட்டுகிறேன். நீ மறைவா யிருந்து பார்" என்று தடியூன்றி தள்ளாடிக்கொண்டு ஓர் இலட்சாதிபதிசெய்யும் ஆராதனைக்கு சென்று அங்கு அவர்கள் இலைபோட்டுக்கொண்டிருக்க இவரும் கூடாரத்திற்குள் நுழைந்தார். இலட்சாதிபதி பார்த்ததே சேவகனை அழைத்து "நம்ம பிரார்த்தனைபிரகாரம் ஆயிரம்பேராய்விட்டது. இந்தப்பிராமணனுக் கிடங் கொடுத்தால் இன்னும் அனேகர் வந்து தொந்தரவு செய்துகொண்டேயிருப்பார் கள். ஆனதால் இந்தப்பிராமணனை வெளியேயிழுத்துத்தள்ளு" என்று சொல்ல, சேவகர் கடவுளாகிய பிராமணனை வெளியே யிழுத்துத்தள்ள இவர் தடுமாறித் தத்தளித்துவிழுந்து புரண்டுருண்டெழுந்து அவர்களைத்திட்டிக்கொண்டுபோஜல பாவாவிடம்வந்து, "பக்தா! பார்த்தனையா, அவர்கள்செய்யும் அதிதியாராதனையை. ஆயிரம்பேர் உண்ணும் இடத்தில் ஓர் அதிதிக்கு அன்னமில்லாமற் போகுமா. இவர்கள் இடம்பத்திற்காகசெய்வதேயொழிய என்னிடத்தில் சற்றும்அன்பிலை" என்று பேசிக்கொண்டிருக்க, ஒரு பெருங்காற்றடித்து இலக்ஷாதிபதியின் கூடாரங்களைக் கிழித்து சாப்பிடும்படியான அதிதிகளுடைய இலை நிறைய மண்ணை யிறைத்துக் கொண்டுபோக கல்லென்று சாப்பிடுபவ ரனைவரும் எழுந்து கைகளைக் கழுவிக்கொண்டு கடவுளுடைய மாயையென்று அனைவரும் வியப்படைந்தனர். பகவானும் பிராட்டியாரும் மறைந்தனர். போஜலபாவாவும் வியப்படைந்து கடவுளைத்துதித்துப் பிறகு தம்மூர் போய்ச்சேர்ந்தார். ஆனதால் அன்பே முக்கியமென் றறியவேண்டியது.

வீ. நீம்மன்னாசெட்டியார், ஜலகண்டபுரம்.

நன்றி

இப்பூவுலகின் கண் மனிதராய்ப் பிறந்தவர்கள் ஒருவர்க்கொருவர் உதவியின்றி வாழ்தல் கஷ்டம். எவருமே பிறனொருவனை அனுசரியாது வாழமுடியாது. பிறர் தயை தனக்குச் சிறிதும் தேவையில்லை யெனக்கருதும் லக்ஷாதிகாரிக்கும் அவன் நினைக்கும வண்ணம் காரியம் கைகூடுவதில்லை. சமயாசமயங்களில் பிறனை யனுசரிக்கத் தான் வேண்டி யிருக்கின்றது. ஆகையால் மனிதனென்பவன் பிறந்தபோதே உலகத்தில் உதவி யென்பதும் கூடப்பிறந்தது. இவ்வாறு தனக்குப் பிறர்செய்த உதவியை மறவாது சமயம் வாய்த்தபோது அவருக்கு உதவி செய்வதே நன்றியறிதல் அல்லது பிரதியுபகாரம் எனப்படும்.

நாம் ஒருவனுக்கு உபகாரம் செய்தால் அவன் திரும்பவும் நமக்கோர் உதவி புரிவானெனக் கருதாது செய்யப்பட்ட உதவியே பயன்றூக்காது செய்த உதவி யெனப்படும். பிறனொருவன் நமக்கு யாதொரு உதவியும் செய்யாதிருக்க அவனுக்கு நாம் செய்யும் உதவிக்கு காரணமின்றிச் செய்யப்பட்ட உதவி யெனப் பெயர். ஒருவனுக்கு ஆபத்து வந்துற்றகாலத்து அவனுக்குச் செய்யப்பட்ட உதவியே காலத்தினால் செய்யப்பட்ட உதவியென்பது.

பயன்றூக்காது செய்த உதவிக்கும் காரணமின்றிச் செய்த உதவிக்கும் காலத்தினாற் செய்த உதவிக்கும் பூமியையும் சுவர்க்கத்தையும் கைம்மாறாகத் தந்திடினும் அவைக் கிவை ஈடாகா.

> தினையனைத்தேயாயினுஞ் செய்தநன் றுண்டாற்
> பனையனைத்தா வள்ளுவர் சான்றோர்—பனையனைத்
> தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாடை
> நன்றிலநன் றறியார் மாட்டு.

என்றபடி ஒருவர்க்குச் செய்த உதவி தினையளவினதாயினும் அதை நல்லோர்கள் பனையளவினதாய்க் கருதிப் போனவிடமெல்லாம் தமக்கு உதவி செய்தாரைப் போற்றிப் புகழ்வர். இப்படிக்கின்றி தீயோர்க்குப் புரியப்பட்ட உதவி பனையளவினதேயாயினும் அதனை யவர் தினையளவினதாய்க் கருதி, 'ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம் நீர்மேலெழுத்துக்கு நேர்' என்றபடி, உடனே மறந்து விடுவர். நமக்கு நன்றி செய்தவரிற் சிலர் ஒரு காலத்து தீமைசெய்தார்களாயினும் அப்போது "குணநாடி குற்றமு நாடி யவற்றுள்—மிகை நாடி மிக்க கொளல்" என்பதற்கியைய அவர் செய்த நன்மையின் அளவையும் தீமையின் அளவையும் சீர்தூக்கிப் பார்த்து அவற்றுள் அதிகமாயிருப்பதையே மனத்திற் கொண்டு சொற்பமா யிருப்பதை மறந்துவிடவேண்டும். நூறு நன்மை செய்தவர்கள் பத்துத் தீமைகள் செய்திருந்தாலும் 'நன்றிமறப்பது நன்றன்று. நன்றல்ல தன்றேமறப்பது நன்று,' ஆகையால் அவர் செய்த தீமையை மறந்து நன்மையை மறவாது உள்ளத்திருத்திச் சமயம் வாய்த்தபோது நாம் உதவி செய்வது இன்றியமையாதது.

இப்படி ஒருவர் செய்த நன்றியை மறவாது அறிதலே நமது கடமையெனக்கொண்டு அதன்படி ஒழுகாது விடுவோமாயின் உலகத்தில் மனிதனாய்ப் பிறந்ததன் பயன்தானென்னே? மேற்கூறியபடி நமக்கொருவர் சிறிது நன்றி செயினும் அதனை யவ்வளவினதாய்க் கொளாது பெரிதென மதித்து நாம் அவரிடம் என்றும் நன்றி பாராட்டவேண்டும் அன்றியும்,

நாம் பிறர்க்குச் செய்யும் உபகாரமனைத்தினையும் எதிர் நலம் கருதாது செய்தலே மிகவும் மேலானது. காலத்தில் செய்த உதவிஎவ்வளவு சிறியதேனும் அது ஞாலத்திலும் மிக்கப் பெரியதேயாதலின் நமது நண்பர்களுக்கு இடர்பாடு

நேர்ந்த காலத்து விரைவுடன் சென்று அவர்களுக்குத் தம்மாலியன்ற ஒத்தாசை புரியவேண்டும். இவ்வாறன்றி நமக்கொருவர் நன்றி செய்திருப்பின் அதனை மறந்து விடுவோமாயின் இகத்திலும் பரத்திலும் சொல்லொணாத் துன்பத்தை யனுபவிப்போம். நிற்க,

தற்காலத்தில் நல்ல ஸ்திதியிலிருக்கும் சில கண்ணியமுள்ள புண்ணியவான்கள் சிறுவயதில் தாங்கள் வெகு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுக்கு உண்டி உடையளித்தும் மற்றுந் தங்களுக்கு வேண்டிய உதவி ஒத்தாசை முதலியன செய்து தங்களை மேன்மைக்குக் கொண்டு வந்தவர்களை முற்றிலும் மறந்துவிடுகிறார்கள். தாம் இவ்வளவு நல்ல நிலைமைக்கு வந்ததற்குக் காரணமா யுள்ளவர்களைக் கனவிலும் நினைப்பதில்லை. சிலர் மாதா பிதா பாட்டன் பாட்டி முதலானோர்கள் தமக்கு இளமையிற்செய்த நன்றியைமறந்து தன்பெண்சாதியே பெரிதெனநினைத்து அவர்களைக் கண்ணெடுத்துப்பார்ப்பதில்லை. மற்று மனைகர் தமக்கு நல் உத்தியோகங்கிடைத்த காலத்து தங்கள் இளம்பருவத்தில் கல்வியுறிவூட்டி மேம்பாடுயும் வண்ணம் போதித்து வந்த வித்யாகுருவை வழியில் பார்த்தாலும் பார்க்காதவர்போல் போய் விடுகிறார்கள். பலர் காரியமாக வேண்டி யிருக்கும்போது காலைப்பிடிப்பதும் காரியம் தீர்ந்தபின்பு கழுத்தைப் பிடிப்பதுமா யிருக்கிறார்கள். இப்படி உண்டவீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் உத்தமர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்கள். இவர்களெல்லாம் தங்கள் தீவினைப்பயனாக அனுபவிக்கப் போகும் துன்பங்களுக்கு ஓர் வரம்பு கிடையாது. கேவலம் மிருக ஜெந்துக்களில் இழிபிறப்பெய்திய நாயன்றோ தன் எஜமானன் செய்த நன்றியை என்றும் மறவாது அவன் இடுக்கணெய்திய காலத்து தன்னாலியன்ற உதவிபுரிந்து கலக்கத்தைநிவர்த்திக்கின்றது. நன்றியறிதலில்லா நயவஞ்சகர் இந்நாயினும் கடையரே யாவர்.

ஆதலால், சகோதரர்களே! எதை மறக்கினும் மறக்கலாம், ஒருவர் செய்த நன்றியை மாத்திரம் மறக்கக்கூடாது. அப்படி மறப்போமேயானால் இம்மையிற் பழியும் மறுமையில் நரகமும் அடைவோம். இதுதிண்ணம். சுபம்.

K. R. கணபதிபிள்ளை, துணியை.

"தந்திரமிக்க மந்திரமில்லை"

இது நமது மூதாட்டியாகிய ஔவைபிராட்டியார் அருளிய வாக்கியமென்பது யாவருமறிந்த விஷயம். இது "தந்திரம் மந்திரத்தைவிட மேலானது" என்று பொருள்படும். "மந்திரத்தால் மாங்காய் விழுமா" என்னும் பழமொழியாலும் இது நன்கு விளங்கும். அநேகர் தந்திரம் தந்திரம் என்று சொல்லுகிறார்கள். சிறு பையனுங்கூட "நான் தந்திரத்தால் அவனிடமிருந்து இப்பொருளைக் கவர்ந்தேன்" என்று சொல்லிக் கொள்வதை யாவரும் கேட்டிருக்கலாம். ஆனால், தந்திரம் என்பது யாது? தக்க சமயத்தில் ஒருவன் எண்ணிச் செய்யும் சூழ்ச்சியே தந்திரம் எனப்படும். தந்திரத்தை நல்ல வழியிலும் உபயோகிக்கலாம், கெட்ட வழியிலும் உபயோகிக்கலாம். எதனையும் நல்வழியில் உபயோகிப்பதே மேன்மை. தந்திரத்தால் ஆகாதது ஒன்றுமில்லை. அதிலும் சமயத்திற்கேற்க தந்திரம் செய்யவேண்டும். இது நிற்க, இதனை விளக்க ஒருகதை கூறுவாம்.

தசரதசக்ரவர்த்தியின் திருக்குமாரராகிய ஸ்ரீராமர் சிறுகுழந்தையா யிருக்கும்போது அரண்மனையில் தாயாரான கௌசல்யாதேவி சாயங்காலம் பாலூட்டிக் கொண்டிருந்தாள். அப்போது கிழக்கில் பூரணசந்திரன் ஒளியோடு உதய

மாயிற்று. ராமர் சந்திரனை விளையாட்டுப் பண்டமெனக்கருதி அதனை வைத்து விளையாடவேண்டுமென்று பேரவாக் கொண்டார். அதனைப்பிடிக்க எண்ணித் தம் கைகள் இரண்டையும் நீட்டினார். குழந்தை விரும்பியது தாயார் இன்னதென்று அறியமுடியவில்லை. குழந்தை அழுத்து 'உனக்கு என்னவேண்டுமென்று' தாயார் பல தடவை கேட்டாள். குழந்தை சந்திரனையே சுட்டிக் காட்டிற்று. அருமை மகன் விரும்பியது இன்னதென்று அறிந்தாள். பல இனிய மொழிகளைக் கூறினாள். அது எத்தனையோ மைல் தூரத்தில் இருக்கிறது. ஒரு குழந்தையும் சந்திரனைப் பிடித்து விளையாடினதில்லை. உனக்கு வேண்டுமானால் சந்திரனைவிடப் பிரகாசமான ஆபரணங்களைத் தருகிறேன். அவற்றை வைத்து விளையாடு என்று நயம்படவுரைத்து அழகான நகைகளைக் கொண்டுவந்து கொடுத்தாள். ராமர் அவற்றை எடுத்து வீசி எறிந்து விட்டு ஓயாமல் அழுதுகொண்டிருந்தார். அங்கே பலபேர் வந்து கூடினார்கள். ஒருவராலும் அவரைச் சமாதானம் செய்ய முடியவில்லை. "ஏதோ திருஷ்டி தோஷம் ஏற்பட்டிருக்கிறது, மந்திரவாதியைக் கூப்பிட்டு விபூதி போடவேண்டும்" என்றார்கள். ஒன்றும் பயன்படவில்லை. பிறகு கௌசல்யை மகாராஜாவைக் கூப்பிடச் சொல்லியனுப்பினாள். அவர் வந்தும் சமாதானப்படுத்த முடியவில்லை. கடைசியில் தன் பிரதான மந்திரியைக் கூப்பிட்டுச் சொன்னார். அவர் உடனே ஒரு கண்ணாடி கொண்டுவரச் சொல்லி அதனை ராமர் கையிற் கொடுத்தார். அதில் சந்திரனது பிம்பத்தைக் கண்டவுடன் ராமர் சந்திரன் தன் கரத்தில் வந்துவிட்டதாகக் கருதி ஆனந்தங்கொண்டு எப்பொழுதும்போல சந்தோஷமாக இருந்தார். இதில் மந்திரி செய்த சாமர்த்தியமே யாவரும் மெச்சத் தக்க சமயோசிதமான தந்திரமாகும்.

K. R. சுப்ரமண்யன், உடுமல்பேட்டை.

சிறுவர்கள் பக்கம்

குடும்பம்

1. தம்பி,—நீ கடவுளுக்கு இரண்டாவது யாருக்குக் கடமைப்பட்டிருக்கிறாயென்றால் உன்னைப் பெற்றெடுத்த தாய்தந்தையர்களுக்கே. ஆகையால் அவர்களைச் சிநேகிப்பது உன் முதல்கடமை என்றறி. பிதா மாதாக்களைச் சிநேகியாதவன் மிருக ஜாதியிலும் கேடுகெட்டவன்.

2. தகப்பனார் உனக்கு அன்னவஸ்திரம் கொடுப்பதற்காகவும் நீ படித்து மேன்மேலும் முன்னுக்கு வரவேண்டும் என்றும் தினந்தோறும் வெயில், மழை, பனி இதுகளையும் கவனியாது மிகவருந்தி உழைக்கிறாரல்லவா? மேலும் அவர் உன்னைப்பற்றி எவ்வளவோ பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறார்? ஆனதனால் ஒவ்வொருவரும் தன் தகப்பனை நேசிக்கவேண்டும், அவரை சங்கிக்கவேண்டும், அவருக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டும் என்பது பிரத்தியட்சம்.

3. தாயிடத்தில் நீ பக்ஷமாகவும் அமைவாகவும் நடக்கக் கடவாய். உனக்கு அமுது ஊட்டி, உன்னைச் சீராட்டித் தாலாட்டி வளர்த்தவள் அவளல்லவா? உனக்கு நடக்கவும் பேசவும் கற்றுக்கொடுத்தவள் அவளல்லவா? நீ வியாதியாயிருக்கும்போது, அன்னபானத்தை மறந்து, நித்திரையின்றிக் கண்விழித்து, இராப்பகலாய் உன் தலைமாட்டின் அருகில் உட்கார்ந்துக்கொண்டு, உனக்கு வேண்டிய சவாக்ஷணை எல்லாம் செய்தவள் அவளல்லவா? உனக்காக அவள் காத்த பத்திய பரிகாரமென்ன? பட்ட கஷ்டங்கள் என்ன? செய்த ஜெப

தபங்களென்ன? அன்றியும் அவள் வாழ்ந்திருப்பதெல்லாம் உனக்காகவே அவளது நம்பிக்கை நீயே; அவளதுபெருமை, சந்தோஷம், ஆறுதல் முதலியயாவும் நீயே. அப்படியானால் தாயை உருக்கத்துடன் நேசிக்கவேண்டுமென்று சொல்லவும் வேணுமா? தம்பி! காலம் கெட்டகாலம். தாயை முதலாய்ப் பழிக்கிற பிள்ளைகளும் சிலர் தற்காலம் இருக்கிறார்கள். குடும்பத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்புகள் அவர்கள்தான். அன்னவர்கள் தங்களிட தாய் தந்தையர்கள் ஏதேனும் உரைத்து விட்டால் சிங்கக்குட்டிபோலச் சீறி, முறுமுறுத்து கண்களில் நெருப்புப் பொரி பறக்க ஆரவாரித்து அம்முது குரவரை, ஐயோ பாவம்! என்ன என்ன கொடுமைகள் செய்கிறார்கள். இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளும் அறிந்தே இருப்பார்கள். ஆகையால், தம்பி, நீ அவர்களிடம் சிநேகம் செய்யாதே. அவர்களிட மாயவலையில் சிக்காதே. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை யுன்னி நட.

4. தாய்தகப்பன்மார்கள் கிழவர்களானாலும், ஏழைகளானாலும், அல்லது கற்றறியாதவர்களானாலும் அவர்களைத் தங்கள் பெற்றோர்களென்றுசொல்லக் கூச்சப்படுகிற பிள்ளைகளும் இருக்கிறார்கள். இதென்ன காலாகோலம்! அப்பேர்ப்பட்ட பிள்ளைகள் அணிப்பிள்ளை, கீரிப்பிள்ளை இதுகளைவிடக் கேடுகெட்ட நன்றியற்ற மிருகங்கள் ஆவார்கள்.

5. தாய்தந்தையர்கள் ஓர் கட்டளை கொடுத்தால் உடனே அதை நிறைவேற்றவேணும். சிலர் கட்டளையை நிறைவேற்றினாலும், முணுமுணுத்துக் கொண்டு அடிக்குப்பயந்து கீழ்ப்படிவார்கள். அடங்காப் பிடாரிகள் தாய்தகப்பன்மார்களுக்குப் பெரும் பாரச்சுமை. உன்னையல்லாமல் அவர்களுக்கும் பல துன்ப துரிதங்களிருக்கின்றனவே. ஏன், உன் துர்நடத்தையினால் அந்த பாரத்தை அதிகப்படுத்துகிறாய்? ஆனால் அதைமுற்றும் துறந்துவிட வழிதேடிக்கொள்.

6. தாய்தகப்பன் அண்ணன், அக்காள், உபாத்தியாயர் முதலிய எல்லாப் பெரியவர்களிடத்தும் பேசும்போது, ஒருக்காலும் "நீ" என்று சொல்லாதே. எப்போதும் "நீங்கள், தாங்கள்" என்று மரியாதையுடன்பேசு.

7. அவர்கள் விருத்தாப்பிய தசையிலிருக்கும்போதும், வியாதியிலிருக்கும்போதும், கஷ்டப்படும்போதும், நோக்கமறிந்து அவர்களுக்கு வேண்டிய உதவி ஒத்தாசை செய்யவேண்டுவது உன் கடமை.

8. உனக்கு சகோதர சகோதரிகள் இருந்தால், அவர்களுடன் சந்தோஷத்துடனும், சமாதானத்துடனும் ஜீவிக்கவேண்டும். சகோதரர்கள் என்றால் சகோதரபட்சம் இருக்கவேண்டும். பாண்டவர்களாகிய தர்மர், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்பவர்கள் சரித்திரத்தை நீ பலதரம் வாசித்தும் கேட்டும் இருப்பாய் அல்லவா? தம்பி, அவர்கள் தங்களுக்கு நன்மையோ, தீமையோ, இன்பமோ, துன்பமோ, சுகமோ, துக்கமோ எது நேரினும் எப்போதும் ஒருவருக்கொருவர் ஒத்து உரிமை பாராட்டி நடக்கவில்லையா? அப்படியே நீயும் நடக்க கடமைப்பட முயலவேண்டும். "ஒற்றுமை இல்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்" என்பதை நீ நன்றாய் யூகித்துப்பார்.

9. வீட்டில் அனேக பிள்ளைகளிருந்தால் வேறிடத்துக்குப் போகாமல், அவர்களோடு உல்லாசமாய்ப் பேசிச் சிறித்து விளையாடுவது உத்தமம்.

10. உன்னுடைய உறவின் முறையார்களுக்குச் செய்யவேண்டிய சங்கையைச் செலுத்தத் தவராதே? அப்பேர்க்கொத்தவர்கள் ஏழைகளானாலும் சரி, பணக்காரர்களானாலும் சரி, கிழவர்களானாலும் சரி, கிழவிகளானாலும் சரி, அவர்களுக்குரிய மரியாதையைச் செலுத்தத் தவராதே.

11. சில பிள்ளைகள் வலிமையற்றவர்களிடம் தங்கள் வலிமையைக் காண்பிப்பார்கள். அப்படியே வீட்டில் ஓர் கிழவன் அல்லது கிழவியிருந்தால், அல்லது வியாதிஸ்தனிருந்தால், அவர்களை விருதாவில் தொந்தரை செய்வார்கள். இப்படிச் செய்கிறவர்கள் பரம கோழைகள்.

12. வீட்டிலுள்ள வேலைக்காரர்களை உன் அடிமைகள் போல் பாவியாதே. சிலர் அற்பகாரியத்திற்கும் அவர்களைத் திட்டுவார்கள், அடிப்பார்கள், உதைப்பார்கள். நீயோ அப்படிச் செய்யாமல் அவர்களைப் பக்ஷத்துடன் நடத்து. அவர்களும் உன்னை ரொம்பவும் நேசிப்பார்கள்.

13. எந்தப் பிராணியையும் அனாவசியமாய் வருத்தப்படுத்தாதே. சிலர் நாயோ, பூனையோ, ஆடோ, மாடோ, எதுவானாலும் சரி, கல்லால் அடிப்பதும், பலவிதமான ஹிம்சை செய்வதுமாகவே இருப்பார்கள், அவர்கள் குரூர குணமுள்ளவர்கள், மஹா கெட்டவர்கள்.

14. அவசரமின்றி வீட்டைவிட்டு வெளியே போகாதே. இருட்டான பின்பு வெளியிடங்களில் அலைந்து திரிகிறபையன்கள் போக்கிரிப்பையன்கள் அவர்கள் பரிசுத்தப்பிள்ளைகளாக ஜீவிப்பது மகா அருமை.

15. தம்பீ! இன்னொன்று சொல்லுகிறேன்கேள். மிகவும் உனக்கு ரொம்பவும் அவசியமானது. அது என்ன என்பாயா? நீ தொலை தூரங்களுக்குப் போகும்போது எப்போதும் தனியாக போகப் பிரயத்தனப்படாதே, அப்படிச் செல்லுவது ரொம்பவும் பிசகு. "துணையோ டல்லது நெடுவழி ஏகேல்" என்பதை யுன்னி நடந்துக்கொள்ளுவாயாக.

S. அப்புபிள்ளை, அம்முண்டி.

சிறுவர்கள் கவனிக்கவேண்டிய சிலவிதிகள்.

1. வாசிக்கும்போது நிதானமாய்த் தன் செவிக்கு மட்டும் கேட்கும்படியாய் வாசிக்கவேண்டும்.

2. உரத்த சத்தமிட்டு வாசிப்பதாவது துரிதமாய் வாசிப்பதாவது கூடாது.

3. புத்தகத்தை கண்ணுக்கருகில் வைத்துக்கொண்டு வாசிக்கலாகாது.

4. பார்வை குறைவாயிருந்தாலன்றி கண்ணாடிபோட்டுக்கொள்ளலாகாது.

5. அது ஒரு நாகரீகமென்றாவது அழகென்றாவது நினைத்து கண்களுக்குக் கண்ணாடி யணிந்துகொள்வது பயனற்ற செய்கையேயாகும்.

6. உலவிக்கொண்டே பாடம்படிப்பதும் நடந்துகொண்டே வாசிப்பதும் கண்களுக்குக் கெடுதியையுண்டாக்கும்.

7. ஒருவன் எப்போது நாம் மிக்க புத்திசாலி, நம்மிலுங் கெட்டிக்காரனில்லையென்று கருதுகிறானோ அந்த நிமிடமுதல் அவனுடைய அறிவின் வளர்ச்சிக்கு அவனே அணைபோட்டு விடுகிறான்.

8. ஒருவன் எவ்வளவு கல்விகற்றாலும் "நாம் கற்றது மிக்க கொஞ்சம் நம்மிலும் அதிகமாய்க் கற்றோர் எண்ணிறந்தோர் இருக்கிறார்கள். நாம் கற்க வேண்டியனவும் அவ்வாறே யளவிறந்தன விருக்கின்றன" என்று மனதாரக் கருதவேண்டும். ஏனெனில் உண்மை அவ்வாறே யிருக்கிறது.

9. தாய்தந்தை குரு இவர்களுக்கு எப்படிப்பட்ட இழிவான பணிவிடை செய்யநேர்ந்தாலும், அப்படிச்செய்யச் சமயம்நேர்ந்ததே நமது பெரும்புண்ணியமெனக் கருதி சந்தோஷமாய் முகங்கோணாது செய்யவேண்டும்.

10. எந்தப்பாடம் நமக்குக் கஷ்டமாய்த் தோன்றுகிறதோ, அந்தப்பாடத்தைக் காலையிலெழுந்தவுடன் கவனத்தை வேறுவிஷயத்தில் செலுத்தாமல் வாசிக்கவேண்டும். அப்போது அதன் கஷ்டம் குறையும்.

11. நமது தாய்தந்தையரைப் பற்றியாவது குருவைப்பற்றியாவது, யாராவது அவமதிப்பாய்ப் பேசினால் அவர்கள் முகத்தைப்பாராமல் தூரப்போய்விட வேண்டும்.

12. யாராவது அன்னியமதஸ்தர் நமதுமதத்தைத் தூஷித்துக்கொண்டும் அதிற் குற்றங்கூறிக்கொண்டு மிருந்தால் அந்தவிடத்தில் ஒரு வினாடிகூட நாம் நிற்கலாகாது.

13. "கடவுள் இல்லை" யென்றுகூறும் நாஸ்திகனிடம் வாதாடலாகாது. கூடியவரையில் அவன் முகதரிசனத்தையே நீக்கவேண்டும். ஏனெனில் அவனுடைய பாபச்சுமை மிகப்பாரமானதால் அவன் ஆறறிவுடைய மானிடப்பிறவி பெற்றும் மிருகத்தினும் தாழ்ந்த அறிவுடையவனா யிருக்கிறான்.

மேற்கண்ட விதிகளின்படி நடப்பதால் மிக்க பயனுண்டென்பது இப்போது உங்களுக்கு விளங்காவிடினும் பிறகு நன்றாய் மனதில் விளங்கும். ஆகையால் இவற்றை யலட்சியம் செய்யமாட்டீர்களென்று நம்புகிறோம்.

ஆணி. குப்புசாமி முதலியார்.

ஸ்திரீகள் பக்கம்.

மாதர் மறுமணம்.

(472-வது பக்கத்தொடர்ச்சி)

மிருதி சுத்திர முதலியவைகளி லெல்லாம் ஸ்திரீகளுக்கு பிரமச்சரியமும் தேகத்தியாகமும் எவ்விதம் அநுசரிக்கப்பட்டிருக்கிறதோ அவ்விதம் மாதர் மறுமணத்தைப்பற்றி ஓரிடத்திலும் விதித்ததாய்க் காணப்படவில்லை. அல்லாமலும் ஸ்திரீ புனர்விவாகம் அதிக நிர்ப்பந்தத்தோடு கூடாதென்று தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

"நமது நாமாபிகிரகணீயால் பத்யௌப்ரேதேபரவிது" கணவன் காலதருமத்தைக் கொண்டொழிந்து விதவையாகிற ஸ்திரீக்கு அன்னியனுடைய பேர்கூடச் சொல்லக்கூடாதென்பதாம் இப்படி பர்த்தாவினுடைய மரணத்திற்குப்பின் ஸ்திரீக்கு அன்னியனுடைய பேர்கூட, சொல்லக்கூடாதென்று திறமாக சித்தாந்தப்படுத்தியிருக்க புனர்விவாகம் கேவலம் அயுக்தமாகுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ. அதுமாத்திரமல்ல விவாக பிரகரணத்தில் விதவா விவாகத்தைப்பற்றி ஒரெழுத்தாவது ஒரு ஸ்மிருதிக்காரர்களும் சொல்லாதிருப்பதோடு அஃது கேவலம் பசுதர்மமாமென்றும் மனுவினுடைய பிரக்ஞையுமுண்டு.

"நவிவாஹவிதாவுக்தம் விதவாவேதனம்புந:"
"அயம்த்துவிஜைர்ஹிதுவாத்பி: பசுதர்மோவிகர்ஹித:"

ஒரு ஸ்மிருதியிலும் விவாகத்தைக் குறித்துச்சொல்லுகிற சந்தர்ப்பத்தில் விதவா விவாகத்தைச் சம்பந்தப்படுத்தி ஒரு சங்கதியும் பிரஸ்தாபப்படுத்தி யிருப்பதாய் காண்பதற்கில்லை. இஃது விசேஷ ஞானமில்லாத மிருகாதிகளுக்குமாத்திரம் சேர்ந்ததாகையால் சாஸ்திரீகரூபுள்ளவர்களால் விதவா விவாகம் வெறுக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஸ்மிருதிகளிலும் மற்றும் இவ்விவாகத்தை நிராகரித்திருப்பதுமட்டுமல்ல புராணங்களிலும் இதைப்பற்றிச் சொல்லியிருப்பதெவ்வாறென்றால், பர்த்தாமரணத்திற்குப் பின் பிரம்மசரியம் அனுஷ்டிக்க

வாவது உடன் சிதையிலேயே ஆத்மத்தியாகமே உத்தமமென்றும் அதல்லாமல் மற்றொரு புருஷனைக் கணவனாக சுவீகரிக்கக் கூடாதென்றும், கட்டிலின் மீதாவது வேறேஉயரமான இடத்திலாவதுபடுத்து நித்திரைசெய்யக்கூடாதென்றும் நித்திரைசெய்கிற அறையின் கதவு நன்றாய் அடைத்து தாளிட்டிருக்கவேண்டுமென்றும், அப்படிக்குத் தாளிட்டிருக்கிற அறையில்தான் நித்திரைசெய்யலாமென்றும், உப்பு, எரிவு முதலான ரசங்கள் அதிகமுள்ள சாதனங்களை அருந்தக் கூடாதென்றும், ஒருபொழுதும் ஓர் அன்னிய புருஷனைப்பற்றி மனதில் நினைத்தலும் ஆடவர்கள் கூடுகிற இடத்திற்குப் போகலும்கூடாதென்றும் பர்த்தாவினுடைய சீலமான கதியையடையப் பரிசிரமிக்கவேண்டுமென்றும் பகவத்நாமோச்சாரணம் எப்பொழுதும் செய்துகொண்டிருக்க வேண்டுமென்றும், இன்னும் பல நியமங்களையும் ஆதித்தபுராணஞ் சொல்லுகிறது. சாக்ஷாத் வேதத்தில்கூட இது மறுக்கப்பட்டிருக்கிறது. யஜுர்வேதத்தில் ஓரிடத்தில் அடியிற்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது.

" யதேகஸ்மின் யூபேத்வேரசநே பரிவியயதி
தஸ்மாதேகோ துவேஜாயே விந்ததே "

" யன்னைகாம் ரசநாம் துவயோரியூபயோர: பரிவியயதி
தஸ்மான்னைகாதுவௌ பதீவிந்ததே "

ஒரு யக்ஞஸ்தம்பத்தின்மேல் மந்திர பரிசுத்தமான இரண்டு கயிறுகள் கட்டுகிறதுண்டு. ஆகையினால் ஒரு ஆடவனுக்கு இரண்டு ஸ்திரீகளை விவாகஞ்செய்யலாம். இரண்டு ஸ்தம்பங்களிலாக ஒருகயிறு கட்டுகிறதில்லை. ஆகையினால் ஒரு ஸ்திரீக்கு இரண்டு ஆடவர்களை விவாகம்செய்வதுகூடாது. இந்தவேதவாக்கியம் விதவாவிவாகத்தை எவ்வளவு தெளிவாய் விரோதித்திருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது. இம்மாதிரி நம்முடைய எல்லாகிரந்தங்களிலும் விதவாவிவாகத்தை வெறுப்பதுமல்லாமல் அங்கீகரித்ததாய் காணவில்லை. ஸ்மிருதிகளிலும் இம்மாதிரி விளக்கப்பட்டிருப்பதில் ஒன்றாகும் விதவாவிவாகம் இதுவெகுவாய் தெரிந்துகொள்ளக்கூடியதே யாம். இந்த ஸ்திதிக்கு (நஷ்டமிர்தே பிரவிர்ஜிதே) என்று மேலே சொன்ன பராசரவசனம் விதவைகளுடைய விவாகத்தை அங்கீகரித்ததாகு மென்று சொல்லுவது ஞாயவிரோதமல்லவா. சகல சாஸ்திரங்களுக்கும் பொருத்தமான ஒருவிஷயத்தை மகாமேதாவியான பராசர மகரிஷியும் நாரதர் முதலானவர்களும் சுவீகரித்திருக்கிறார்களென்று அபிப்பிராயப்படுவது கொஞ்சமாவது ஆலோசனையின்பேரி லாகவேண்டுமல்லவா? ஆயின் சிலர் இம்மாதிரி சந்தேகிக்கலாம். ரிஷிகளெல்லாம் எப்பொழுதும் கட்டுப்பாடற்றவர்கள், அவர்கள் எதுவானாலும் சொல்லவும் அஞ்சமாட்டார்கள். அவர்களை எல்லாரும் பின்பற்றுவதல்லாமல் அவர்கள் ஏனையோரை பின்பற்றுவதில்லை. அம்மகரிஷிகளுக்கு தங்களுடைய ஆக்ஞையை யாவரும் அனுசரிக்க வேண்டுமென்ற விருப்பமுண்டு. ஆகையால் பராசரர் முதலானவர்களுடைய அபிப்பிராயத்தை நாம் எவ்வாறு 'அங்கீகரிக்கமுடியும் வேதத்தில் விரோதப்படுத்தியதை பிரமாணக்காரர் ஸ்மிருதிகளை விரும்பி வேதத்திற்கு அத்தாட்சி சொல்லப்பட்டதான சித்தாந்தம் எவ்வாறு சாதுவாகும்.

" சுருதிஸ்மிருதி விரோதேது சுருதிரேவ பலியஸீ "

சுருதிக்கும் ஸ்மிருதிக்கும் ஒன்றுக்கொன்று விரோதம் உண்டானால் சுருதி விதித்தத்தை வழங்கவேண்டும் என்றல்லவா பிரமாணம். இதனால் பராசர முதலான வசனத்தை அஸ்திரப்படுத்தல் உத்தமம் என்றாலோ இச்சந்தேகம் அவ்வளவு மேன்மையாகத் தோன்றவில்லை. சுருதிக்கு விரோதமில்லாத நிலைமையில் ஸ்மிருதிவாக்கியத்திற்கு அர்த்தஞ் செய்யவேண்டியதும் சுருதிக்கு முற்றிலும் விரோதமாயிருக்கிற ஸ்மிருதிவாக்கியத்தை தள்ளுபடி செய்யவேண்டியதுமாகும் சாஸ்திரத்தின் சித்தாந்தம். ஆகையால் மேற்சொல்லிய பராசரவசனத்தைச் சுருதிக்கு அனுகூலமாய் சேர்ப்பதற்கு மார்க்கமுண்டோ வென்று யோசிக்கவேண்டு மல்லவா. ஒரு ஸ்திரீயானவள் தனக்கு விவாகக்கிரியைகள் நடக்குமுன் ஒரு புருஷன்மீதுகொண்ட காதலைமாற்றி வேறொருவன்மீதில் காதல்கொள்வதை விரோதப்படுத்தி சுருதிவாக்கியம்கூறுகின்றது. விவாகத்தில் ஹோமம், பாணிக்கிரணம், முதலான கிரியைகள் ஆனதின்பின் வரனாகப்பட்ட கணவன் கன்னிகையினுடைய கையைக்கோர்த்துப் பிடித்துக்கொண்டு ஏழு அடி நடக்கவேணுமென்ற நியமமுண்டு. அந்நியமம் நடந்தபிற்பாடுதான் அவ்வரன் கணவனென்று தீர்மானமாகிறது. இக்கிரியைகளுக் குள்பட்ட ஒருஸ்திரீ வேறொருவன்மீது காதல்கொள்ளலாகா தென்பதைச்சொல்வது அனாவசியமேயாகும்.

" நோதகேநவா வாசா கன்னியாய: பதிருச்சியதே
பாணிகிரகண சம்ஸ்காராத் பதித்துவம் சப்தமெபதே "

என்ற ஸ்மிருதிவாக்கியத்தின்படி வாக்குதத்தம் உதகதானம் என்றிவை செய்வதைக்கொண்டு புருஷன் வதுவாகிய கன்னிகைக்கு பர்த்தாவாய்விடமுடியாது. பாணிக்கிரகணமும் " சாப்தபதினம் " என்ற கிரியையும் நடந்தால்தான் சரியானபர்த்தாஸ்தானம் சித்திக்கும். இம்மாதிரிதான் கிரியைக்குப்பின் கன்னிகைக்கும் பாரியை (மனைவி) ஸ்தானம் சித்திக்கும் என்று மனுவும் சிந்தாந்தப்படுத்தி யிருப்பதினால் வாக்குத்தானமோ மற்று மோகளிந்தால் சப்தவதீ பரீபிரமனைத்திற்கு வதுவரன்களுக்கு பாரியைஸ்தானமும் பர்த்தாஸ்தானமும் உறுதியாகாம லிருப்பதால் அந்தபர்த்தா மரணமானால் அவளை வேறொருவனுக்கு விவாகம் செய்துகொடுப்பது விரோதமல்ல என்பதுதான் ஸ்மிருதிக்காரருடைய அபிப்பிராயம்.

" அத்பிவாசாபதத்தாயாம் மிருரியேதாதேளவரோயதி
நபமந்திரோபநீதாவியாத் குமாரீபிதுரேவஸா "

உதகதானமோ, வாக்குத்தானமோ செய்தபின் வரன் இறந்துபோனால் மந்திர புரசரமான ஹோமம், சாப்தபதீனம் முதலான கிரிகைகள் நடக்காததால் வதுவாகிய கன்னிகையை சம்பந்தித்துச் சகல அதிகாரமும் அவளுடைய தந்தைக்கு மட்டும் உண்டென்றிருப்பதால் சப்தவதீபரீகரமணத்திற்குமுன்பு இக்கன்னிகையை குறித்துள்ள எல்லாபொறுப்பும் தந்தைக்குத்தானென்று சித்திக்கிறது இந்தஸ்திதிக்கு அவளை விவாகஞ்செய்து கொடுப்பதற்கும் மற்றும் பிதாவிற்குத்தானதிகாரமென்றே யூகிக்கவேண்டும். இம்மாதிரி எல்லா சாஸ்திரக்காரர்களும் சித்தாந்தப்படுத்தியிருப்பதால் வாக்குத்தானத்திற்குப்பின் விவாக கிரியைகளுக்கு முன் நிச்சயிக்கப்பட்ட புருஷன் மேலே சொல்லிய ஐந்துவித ஆபத்திலகப்பட்டுவிட்டால் அப்புருஷனை திரஸ்கரித்துவிட்டு வேறொருவனை சுவீகரிக்கலாமென்று தான் நஷ்டமிர்தேஎன்ற (முன்சொன்ன) வசனத்தால் பராசரர் விதித்ததாய் சொல்லவேண்டும். இதுதான் நியாயம் இதல்லாமல் விவாகக்கிரியைகள் நடந்தபின் விதவையான ஸ்திரீக்கும் புனர்விவாகம் செய்யலாமென்று பராசரன் அபிப்பிராயங்கொண்டதாய் நினைப்பது அடாது. அப்படியானால் மேலே எழுதிய சுருதி பிரமாணங்களுக்கு விரோதம்வாராதல்லவா வேறு பிரமாணங்களைக்கொண்டு பதிஎன்பதைவிட " கௌணபதி " என்றர்த்தங்கொடுப்பதில் தோஷமொன்று முண்டாவதில்லை " கௌணபதி " என்றால் ஒருகன்னிகைக்கு விவாகக்கிரியை நடக்காமுன் வாக்குதானத்தினால் நிக்

யிக்கப்பட்ட புருஷன் என்றர்த்தம். மேலேசொல்லிய "நஷ்டமிர்தே" என்ற சமஸ்கிருதஸ்லோகத்துக்குள்ள ப்தத்திற்கு இலக்கிய இலக்கண உதாரணசாஸ்திரானுசரணங்களோடு அர்த்தஞ்செய்வதாயிருந்தால் கௌணபதி என்று சொல்வதுதான் பொருந்தும். அப்படிக்கு கணவன் ஸ்தானும் நிலைபெறாத கௌணபதிக்குத்தான் அவ்வித ஐந்து ஆபத்துகள் நேரிட்டால் ஸ்திரீகளுக்கு வேறொருவனை விவாகஞ்செய்யலாமென்பது விளங்குகிறது. பதிஎன்ற வாக்கியத்தை பதியைப்போலுள்ளவனென்று கொள்ளவேண்டும். சம்ஸ்கிருத ஸ்லோகங்களுக்கு இலக்கிய இலக்கணமாய் அர்த்தபதம் விளக்கிக்காட்டவேண்டுமானால் தமிழில் சாத்தியப்படாததால் அதன் முடிவுமட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆகையால் விவாகக்கிரியைகள் நடந்துகௌணபதிஎன்ற ஸ்தானம்விலகி பதிஸ்தானம் ஏற்பட்டபின் இந்தவிஷயம் சுருதிவிரோதமானபடியால் கூடாதென்று தெளிவாகிறது. அன்றியும் "நஷ்டமிர்தே" என்ற பிரமாணம் யுகாந்தரவிஷயமென்று மாதவாச்சாரியார் சொல்வதுண்டு என்றால் "கலௌ பாராசர: ஸ்மிருத:" என்ற பிரமாணப்பிரகாரம் பராசரமாய் மிருதி கலியுக விஷயமாமென்றிருப்பதாலும் அடுத்தயுகத்தை சம்பந்தப்படுத்தி யிருக்கிற வேறொரு பந்தனங்கொண்டு பிரயோஜனமில்லாததாலும் மாதவாசாரியாருடைய அபிப்பிராயம் சுவீகரிக்கக்கூடியதல்ல பராசரஸ்மிருதியினுடைய "வித்வன்மனோஹர" என்ற வியாக்கியானத்திலிம்மாதிரி சொல்லியிருக்கிறது (விவாகக்கிரியைகளுக்கு) முன் பதிஸ்தானம் பூர்ணமாகாததினால் அப்படியுள்ள பதிக்குமேற்கூறிய ஐந்துவித ஆபத்துநேரிட்டால் கன்னிகைக்கு மறு விவாகஞ் செய்வது விரோதமல்ல இதனால் "நஷ்டமிர்தே" என்ற வசனத்தைப் பின்பற்றிக்கொண்டு சாஸ்திரானுசரணவிவாகம் நடத்தியபின் விதவையாகிற ஸ்திரீக்கு புனர்விவாகம்கூடுமென்று சொல்வது தீர்மானமாய் அயுக்தமாமென்று தெளிவாய் விளங்குகிறது.

(தொடரும்)

E. S. சிவராமலிங்கம்பிள்ளை, புனலூர்.

ஸ்திரீகள் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள்.

I. ஸ்திரீகள் கர்ப்பவதிகளா யிருக்கையில் அனுசரிக்கவேண்டிய விதிகள் சிலவிருக்கின்றன. அவற்றைப்பற்றி வைத்திய சாத்திரங்களில் விரிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. அதை யவசியம் கவனிக்கவேண்டும். ஈண்டு முக்கியமான இரண்டொன்றை மட்டும் கூறுகிறோம்.

(1) தேகத்தையும் உடையையும் சுத்தமாய் வைத்துக்கொண் டிருக்க வேண்டும்.

(2) ஆகாரத்தில் மிக்க ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டும். மனம் பிரியப்பட்டவற்றை யெல்லாம் புசிக்கலாகாது. சுத்தமான உணவுகளையே காலக்கிரமப்படி அருந்தவேண்டும். ஜீரணமாகக் கடினமாயிருக்கும் பதார்த்தங்களையும் பழைய பதார்த்தங்களையும் வைத்திய நூற்களில் விலக்கப்பட்டவைகளையும் புசிக்கலாகாது.

(3) செல்வவந்தர் வீட்டு மாதரில் சிலர் கர்ப்பவதிகளா யிருக்கும் காலத்தில் ஒருவேலையும் செய்யவிடாதபடி அவர்களை அசையாமல் உட்காரவைத்து விடுகிறார்கள். இது பிறகு பெருந்தீங்கை விளைவிக்கும். ஒவ்வொரு சமயம் பிரசவகாலத்தில் பெரிய ஆபத்தை யுண்டாக்கிவிடும். ஆகையால் கர்ப்பவதிகள் அதிக பாரமான வஸ்துவைத் தூக்குதல், உயரமான விடத்திற்கு ஏறிச் செல்லுதல் முதலிய முரட்டுத்தனமான வேலைகளைமட்டும் செய்யலாகாது. ஆனால் புயங்கள் முதலிய அங்கங்கள் அசையக்கூடிய சாதாரண வீட்டு வேலைகளைச் செய்துகொண் டிருத்தல்தான் நலம்.

(4) இன்னொரு விஷயம் மிக்க முக்கியமானது. அதாவது அக்காலத்தில் அவர்கள் மனோ நிலைமை பரிசுத்தமானதா யிருக்கவேண்டும். தினந்தோறும் கடவுளைத் துதிக்கவேண்டும். மனதில் சந்தோஷத்தையும் தெய்வ பக்தியையும் உண்டாக்கத் தக்க சத்விஷயங்களடங்கிய அடியார் சரித்திரங்கள் முதலிய நூல்களை வாசிக்கவேண்டும். மனதில் கெட்ட எண்ணங்கள் உதிக்கவிடலாகாது. துயரம் பயம் இரண்டும் மனதில் தாக்காதபடி பாதுகாக்கவேண்டும். மனம் திடுக்கிடக் கூடிய காட்சிகளையும், விசனத்தை யுண்டாக்கும் காட்சிகளையும் விகார உருவங்களையும், அவர்கள் பார்க்கும்படி விடலாகாது. மனதில் துயரம் பயம் அருவருப்பு முதலியவை எவ்வளவு அதிகமாய் உறுத்துகின்றனவோ அவ்வளவு அதிக தீமையை யுண்டாக்கும். கர்ப்பகாலத்தில் ஸ்திரீயின் மனோ நிலைமை யெவ்வாறிருக்கிறதோ அவ்வாறே கர்ப்பத்திலுள்ள குழந்தைக்கு மனோ நிலைமை யமையும் என்பது நமது முன்னோரியற்றியுள்ள சாத்திரங்களின் துணிபு. இது உண்மை யென்பதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் உண்டு. இரண்டொன்று மட்டும் கூறுகிறோம்.

நமது நாட்டையாண்ட சக்ரவர்த்திகளில் ஒருவருடைய மனைவி கர்ப்பமாயிருந்தாள். அம்மாதுக்கு ரோஜா புஷ்பத்தின்மேல் அதிக பிரியம். ஆகையால் அம்மாது தான் சவகாசமாய் உட்கார்ந்திருக்கும் போதெல்லாம் ஒரு குச்சியால் தன் உள்ளங்காலில் ரோஜாமலரைப்போல் எழுதிக்கொண்டே யிருந்தாள். அம்மாது பிரசவித்த குழந்தையின் காலில் ரோஜா மலரைப்போலவே வடுவிருந்தது என்று சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. கடைசியாய் நடந்த பர்மா யுத்தத்திற்குச் சென்றிருந்த நமது நாட்டுச்சிப்பாய் ஒருவனுடைய மனைவி கர்ப்பமாயிருந்தாள். யுத்தத்தில் சிப்பாய்க்கு மண்டையில் கத்திவெட்டுபட்டது. அவன் தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தில், தனக்குத் தலையில் இன்னவிடத்தில் இத்தகைய வெட்டுபட்டதென்றும் அக்காயம் இப்போது ஆறி உலர்ந்து என்றைக்கும் மாறக்கூடாத ஒரு வடுவாய் விட்டதென்றும் விவரமாய் எழுதியிருந்தான். மனைவி அச்சங்கதியை யறிந்தது முதல் அவள் மனதில் அது நீங்காத நினைப்பாயிருந்தது. கடைசியில் அவள் பிரசவித்தபோது அக்குழந்தையின் சிரசில் அதன் தந்தைக்கு உண்டான அதே மாதிரி வெட்டு காயத்தின் வடு போன்ற ஒரு வடுவிருந்தது.

ஆகையால் கர்ப்ப ஸ்திரீகளின் மனோநிலைமை மிக்க ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கப்பட வேண்டும்.

II. தற்காலம் வரவர நமது நாட்டுமாதர் தங்கள் ஸ்தனப்பாலால் தங்கள் குழந்தைகளை வளர்ப்பது மிகக் குறைவாகிக்கொண்டு வருகிறது. ஏனெனில் அவர்களுக்குப் பால் உண்டாவது மிகக் குறைவாகி வருகிறது. சிலருக்கு ஆரம்பத்திலிருந்தே யில்லாமற் போகிறது. இது மிக்க துக்ககரமான சம்பவம். ஏனெனில் குழந்தைக்குச் சிலகாலம் வரையில், எல்லாஜீவராசிகளையும் அததற்கு இன்னின்ன காலத்தில் இன்னின்ன ஆகாரம் தகுதியானதென்று அததற்குத் தக்கவாறமைத்து இரட்சிக்கும் எல்லாம் வல்ல பரமதயாநிதியாகிய ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கும் தாயின் பாலே யாவற்றினும் சிறந்த உணவாகும். அந்தப் பருவத்தில் அதுவே சீக்கிரமாய்ச் சீரணித்து இரத்தமாய் மாறிக் குழந்தையை வளர்க்கத்தக்கது வேறெந்த ஆகாரமும் அதற்குச் சமமாகாது. அதற்கடுத்தது பசும்பால் என்று கூறப்படுகிறது. தற்காலத்தில் நமது சென்னை

இராஜதானியில், அதிலும் சென்னையில், பசும்பால் கலப்பிலாததாய்க் கிடைப்பது முயற்கொம்பே யென்னலாம். அகப்படினும் தாயின் பாலுக்கும் மிருகத்தின் பாலுக்கும் எவ்வளவோ பேதமிருக்கிறது. குழந்தைக்கு அமுதம்போன்ற தாய்ப்பால் குறைந்து போவதன் காரணம், தாய் கர்ப்பகாலத்தில் தன் ஆகாரத்தைப் பற்றி ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளாததே முக்கிய காரணம்.

அதோடு அவர்கள் வரவர நமக்குத் தகுதியானவையும், சர்வஞானமுடைய மகான்களாகிய நமது முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டவைகளுமான நமது ஆசாரங்களைக் கைவிட்டு நாகரீகமென்ற மாயவலையிற் சிக்கி நமக்குத் தகாத் அன்னிய ஆசாரங்களை யனுஷ்டிக்கத் தொடங்குவதும் இதற்குக்காரணமென்று அறிவாளிகளால் கூறப்படுகிறது. திருட்டாந்தமாய் மஞ்சளில் பல நற்குணங்களிருக்கின்றன. பல ஔஷதங்களில் அது உபயோகப்படுத்தப்படுகிறது. அவையெல்லாம் நமது முன்னோர்களறிந்தே அதை நாம் பலவழிகளாய் உபயோகிக்கும்படியான ஆசாரத்தை யேற்படுத்தி யிருக்கிறார்கள். முக்கியமாய் ஸ்திரீகள் அதை யுபயோகிக்கும்படி ஏற்படுத்தியது அதனால் அவர்களுக்குண்டாகும் பல நன்மைகளைக் கருதியே. பாலில்லா ஸ்திரீகளுக்கு மஞ்சளை மந்திரித்துக் கொடுத்து தேகத்தில் பூசிக்கொள்ளச் செய்கிறார்கள். இதனால் பாலையுண்டாக்கும் குணம் அதனிடத்தில் இருக்கிறதென்று நன்கு விளங்குகிறது. இக்காலத்தில் நமது மாதரில் அனேகர் அத்தகைய மஞ்சளை விட்டுவிட்டு சோப் பூசிக்கொள்ளுகிறார்கள். இது நன்மைக்குப் பதிலாய்த் தீமையை யுண்டாக்கிக் கொள்ளும் செய்கை. இவ்வாறு நமது ஆசாரத்தைக் கைவிட்டு அன்னியர் ஆசாரங்களைக் கைக்கொள்வதால் உண்டாகும் தீமைகள் பல. இவற்றைப்பற்றி பிரத்யேகமாய்ப் பிறகு கூறுவாம்.

தாய்ப்பால் இல்லாக் குழந்தைகளுக்கு, பசுவின்பால் கலப்பில்லாமலகப்படுவது கடினமானதால் அனேகர் அன்னிய நாட்டிலிருந்து வரும் பலவித ஆகாரங்களில் எதையேனும் கொடுத்துக் குழந்தைகளை வளர்க்கிறார்கள். இதனால் பல கெடுதிகளுக்கு வழியுண்டாகிறது. எவ்வாறெனின் (தொடரும்.)

ஆணி. துப்புசாமி முதலியார்.

சசிவர்ணபோதம்

நான்காவது அத்தியாயம்

நல்லறிவு.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

பணிந்தெழுந்த வேதபாரகன் அருகே அருள் பாலித்து நோக்கும் மாகந்தி பாராயணப் பண்ணவரைப் பார்த்துப் பரிவுகூர்ந்து பகர்வதானான்.

சுவாமி! ஜனனசாகர சம்பவத்தால் என் மனம் தயங்குகின்றது, தைரியமும் சக்தியும் தணந்துவிட்டது. என் இழிவை நோக்குங்கால் என்னை என்னென்றிகைப்பது. பாமரனாகிய நான் பாலியத்திருந்து பக்குவ காலமெய்தும் வரை நல்வழிகளிற் பழகாத தோஷமாகும். தேவே! சிறுபிராயமுதல் தெருண்டறி வெய்துங் காலம் வரை சீலமேயின்றி, சேர்க்கை வாசனையால்—தேசமுற்றுந் திரிந்துழன்றேன்.

தெய்வ சங்கல்பமோ! தேக இயற்கையோ! தீயபழக்கமோ! செல்வ செருக்கோ! என் தேகாவயவங்கள் சிறிது சிறிதாய் வளர்ந்து செழித்துச் செவ்வி பெறுவதாய்க் கொண்டு, எனக்குள் நானே சிந்தித்து இயற்கை யெழிலேயன்றி செயற்கை யெழிலானுஞ் சிறிது சிறப்பித்துக் கொண்டேன். ஹே மாதவ! வயதேற வயதேற ஓர் மயக்கம் வந்து கலக்கியது. அதைத்தான் இப்பொழுது மமதை யென்றெண்ணுகிறேன். மமதை வந்தணுகவே! வடிவமை நூலிற் சொல்லும் வனப்பெலாம் நானே யென்று மதித்து மன்மதனையும் இகழ்ந்து மகிழ்ந்தேன். எனக்குள் நானே இணையற்றவனென்ற எண்ணம் கொண்டேன்.

ஹே இறைவ! இழிவு கருதியோ! இயற்கை யறிவோ! யாது காரணமோ! என்போன்ற யவ்வன ஆடவர் பட்சம் நீத்து எக்காலும் எழில் படைத்த யவ்வன மாதரார் மருங்கேவைக எண்ணமிழுத்தது. புறபூஷண சுந்தர ரூப சரச பொன்மொழிகளாற் பூரிக்கச்செய்யும் பூரண காமக் கலைஞானப் புங்கவர்பாற் புகுந்து வைகினேன்.

பருவக் கிளர்ச்சியோ! பாரர்ப்பயனோ! பவத்தூண்டுதலோ! பழகிய தோஷமோ! ஆசையென்னும் வேசி யணுகினாள். கணநேரத்தின் காற்பகுதிக்குள் காமனுங் கவலையுங் கலந்தடித்தார்கள். ஹே! முனிவரா! மூடம் என்ற ஓர் முக்காடு மூடியது. அதன் மேல்,

> ஈட்டுப்பத்தாயம்புகுது மெலிபோம்வழிபார்ப்பதுபோல
> மூட்டுங்காமம்வழிதேடி முட்டிப்பார்க்குமல்குவினார்
> பூட்டும்மையமயற்கருத்தார் பூக்குந்தருணப்பூங்கொடியார்.
>
> (உசித சூடாமணி.)

பூட்டுமகம் புகுந்து புகுந்து போகக்கடலில் ஆழ்ந்து ஆழ்ந்து பொங்கிவழிந்து அதோகதியிற் போந்தேன். போகப்போக வப்போகப் புணரி யென்னையோர் ரோகப் புணரியுட் புகுத்திவிட்டது. பிணிகள் வந்து பிடித்துத்தின்றன. ஆக்கைகுறைந்து அத்தி (என்பு) யானேன். தட்டித்தடுமாறி தளராமனத்தோடு தனத்தையும் பலத்தையும்வாரித் தத்தஞ்செய்தேன். தணந்தபாடில்லை. தூக்கம் என்பதனைத் துறத்தி துக்கங்கள்வந்து துணை நின்றன.

ஹே சீரிய! தெய்வபலமோ! சீரியோர் கருணையோ! ஜெந்மாந்திர புண்ணியமோ! தேவரீரருளோ என்னைத் தம் திவ்விய பதத்திற் சேர்த்தது. பவக்கடல் பட்டுழன்ற பாவியேன் தரைக்கடலைக்கடந்து தனியனானேன் பிதாவே! இப்பிறவிக் கடலினின்றும் என்னைப்பிரிக்க வேண்டுகிறேன்.

உற்றது சொன்னால் அற்றது பொருந்தும் என்றவாறு என்னை அற்றுப்போன ஞானக்கலைகள் யாவும் மீண்டும் வந்தணுகுமென்றே

நான் பண்டு உற்றதை தேவரீர்பால் உரைத்துக் கொண்டேன். சுவாமி! எல்லாம் தெய்வச்செயல்.

ஐயோ! இப்பிறவிப் பெருங்கடல் அளவிலாததே! எக்காலத்துக் கரையேறுவது! எக்காலத்து இவ்வல்லலகல்வது! இறைவ என்செய்வது! எவ்வாறுய்வது! என்றிவ் வண்ணமாற்றிய இளையோனைநோக்கிய தாபதர் சாந்தவசனங்களால் தயிரியந்தந்து தழுவியனைத்துத் தன்மொழிகளாற் சாற்றுவதானுர்.

சசிவர்ணு! சற்றுக்கவனி. தராதலத்துள்ள மாயைபுரியும் இயற்கைச்செயல்கள் எவராலும் உள்ளவா றறிந்து உரைக்கத் தக்கவையன்று. சுருதி யுக்தி யனுபவங்களால் உணரவேண்டும்.

கவனித்துக்கேள்.

நிர்மலமாகிய சத்துவக்கடலில் ஆழ்ந்து தேசுபெற்று விளங்கும் மனதுடைய மகான்கள் ஞானவழியாய் இயற்கையாலேவப்பட்ட யோகோபகரணங்களின் முறைப்படி சுவாசத்தால் தத்துவங்களைச் சுத்திசெய்து, படிப்படியாய்ச் செய்துவரும் பழக்கங்களால் சாதனை செய்து செய்து, அமலமாகிய தம்மனந்தங்கும் நெஞ்சமாகிய ஆசனத்தையும் அழுக்கறத்துலக்கி, அதுமூலமாகவே முறையே புனிதம் புகுத்தித் தேகத்தையும் பரிசுத்தமாக்கித் தேசுபெற்று விளங்குவார்கள். ஆகவே அவர்கள் ஆக்கையிலும் ஆக்கைக்குள் வைகும் அனைத்திலும் உள்ளிருக்கும் மாசுகளைந்து பரிசுத்தம் பெற்றுப் பவுத்திர மிகுக்க மிகுக்க, ஆடியாற் செய்து விளங்கும் ஆக்கைபோற் பிரகாசிக்கிறுர்கள்.

அமலத்தால் ஆக்கையை விட்டுக் கழிந்த மலமாகிய மாயை வெளியே நின்று ஆக்கையை யணுகாமல் அகன்று நின்று அடிமைத் தொழில் பெற்று அவர்கள் இஷ்டப்படி நடக்கும். இத்தகைய யோகிகள் கர்மபூமியில் சஞ்சரிக்க வேண்டின், மாயையாம் போர்வையைப் போர்த்து மனிதர்போலும், தங்கள் இஷ்டம்போலும் விளங்குவார்கள்.

ஹே மைந்த மாயையை வசியங்கொண்ட இம் மகான்கள், தங்கள் சவுகரியப்படி காண்போர் மனது பிரமிக்கும்படி:—

வரை யாகுவர் புலியாகுவர் மதயானையு மாவார்
கரை யாகுவர் புனலாகுவர் காடாகுவர் கணத்தில்
விரை யாகுவர் மலராகுவர் வீழ்காரளி யாவார்
தரை யாகுவர் விண்ணுகுவர் தாழ்சாகர மாவார்.

பொன்னுவ ரிரும்பாகுவர் புயலாகுவர் புயலின்
மின்குவர் மழையாகுவர் வீழும்மிடி யாவார்
என்னுகப் நினைப்பாரிட மீரேழுலகத்தும்
உன்னுதன வில்லையுரு வாகாதன வில்லை.

எவ்வாறுரு வாவாரென யார்க்குந் தெரியாதார்
மைவாரண வுரியானருள் பெற்றேர் மகிமைகளை
இவ்வாறென வளவிட்டிட எவரான் முடியுந்தான்
சைவாகல விளைவாயினர் தாமே யளவிடுவார். (காபுரநாதர்புராணம்)

(தொடரும்.)

பண்டிட். எஸ். கிருஷ்ணைசாமி அய்யர்.

கற்கோட்டை—நாவல்

(39-ம்பக்கத் தொடர்ச்சி.)

அரிய:—இது மிக்க அதிசயமா யிருக்கிறது. நீ யிம்மாதிரி பொழுதமர்ந்து இருள்மூடும் சமயத்தில் கள்ளத்தனமாய் வந்தது..... என்றதே,

அம்மனிதன்:—"ஆம் இவையாவும் எனக்கு விரோதமாகவே தோன்றுகின்றன. அப்படி யிருந்தாலும் நான் உண்மையானவன். ஒரு கௌரவமான பெரிய மனிதன்" என்ருன்.

அரியநாயகிக்கும் ஒன்றும் சிந்திக்க முடியவில்லை. அவன் முகத்தையும் வார்த்தைகளையும் நோக்கினுல் அவன் உண்மையானவனே யென்று புலப்படுகிறது. கடைசியில் "நீ யுனது பெயரைக்கூட கூறவில்லையே?" என்ருள்.

அம்மனிதன்:—என்பெயர் பிரபலசிங்கம்.

அரிய:—சரிதான் அவளுடைய தந்தை, அத்தை, நான், நாங்கள் மூவரும் அவளிடம் மிக்க அன்புள்ளவர்கள். நாங்கள் அறியலாகாத சங்கதி நீ என்ன அவளிடம் கூறப்போகிருய்?

பிரபலசிங்கன்:—"நீ யோசிக்கலாகாதா. யாராவது ஒருநண்பன் என்னிடம் ஏதேனும் ஒரு இரகசியசங்கதி சொல்லி யனுப்பியிருக்கலாகாதா. அதைநேரில் அக்கன்னிகையிடமே கூறும்படி என்னிடம் உறுதிமொழி பெற்றுக்கொண்டிருக்கலாகாதா" என்ருன்.

இதைக்கேட்ட அரியநாயகி பின்னும் கலவரமடைந்து "நீ யாரைக் கூறுகிருய். ஒருவேளை யந்த..." என்பதற்குள் பிரபலசிங்கன் "அம்மா உன் உத்தேசம் எதுவாயிருந்தாலும் நான் இதற்கு மேலொன்றும் உன்னிடம் கூறவியலாது. ஆனுல் நான் கமலாம்பாளிடம் ஏதேனும் கூறுவதையும் கொடுப்பதையும் நீ தடையின்றி அருகிலிருந்து பார்க்கலாம். ஆயினும் நான் மிக்க ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டி யிருக்கிறது. ஆனுல் என் நண்பன் கோரிக்கையை நான் சரியாய் நிறைவேற்றினேன் என்று கமலாம்பாளே ஒப்புக்கொள்வாளென்பது நிச்சயம்" என்ருன்

அரிய:—நீ கூறப்போவது சந்தோஷ சங்கதியா துயரமான சங்கதியா? என்ருள்.

பிரபல சிங்கன் சற்றுநேரம் சிந்தித்து "அம்மா, நான் இனி எக் கேள்விக்கும் விடையளிக்க முடியாது. நான் கூறியவற்றினின்றும் நீ யென் உண்மையை யறிந்து கொள்ளலாம்" என்ருன்.

அரியநாயகி சற்றுநேரம் சிந்தித்தாள். ஒருவேளை கண்ணபிரானிடமிருந்தே வந்திருப்பானே வென்று சிந்தித்தாள். வாய்விட்டுக் கேட்கலாமென்ருல், தானே இரகசியத்தை வெளியிட்டு விட்டதாய் முடியும். கடைசியில் பிரபலசிங்கன் முகத்தை யுற்றுநோக்கி,

"ஐயா! எப்படியாயினும் சரி. நான் உமது வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கிறேன். நாளைமாலை இதே வேளையில் இதேவிடத்தில் கமலாம்பாள் உன்னைச் சந்திப்பாள். ஆனால் ஒரு நிபந்தனை. அதாவது நான் அதோ அந்தச் செடிகளின் மறைவிலிருந்து பார்த்துக்கொண் டிருப்பேன்" என்றாள்.

பிரபல:—"சரி. 24 மணி நேர ஆலசியத்தால் ஆபத்து வந்துவிடாது. உன் பிரியம்போல் செய். நான் உன்னை நம்புகிறேன். ஒன்றுமட்டும் கூறுகிறேன். நீ ஏதோ தவறான சந்தேகங்கொண்டு எனக்குத் தீங்கு நினைத்தாயோ பின்னால் இறக்க மட்டும் மனோவேதனைப்படுவாய்" என்றான்.

அரியநாயகி:—ஐயா, நான் ஒருவருக்காவது தீங்கு நினைக்கும் சுபாவமுடையவளல்ல. என் பெயர் அரியநாயகி. என்னைப்பற்றி அக்கம்பக்கத்தில் விசாரித்தால் என்னுடைய குணம் இத்தன்மையதென்று அறிந்துகொள்வாய்" என்றாள்.

பிரபலசிங்கன் என்ற திரவியசிங்கம் பிரபு "ஆம் ஆம் நான் உன்னை நம்புகிறேன். உன் முகமே யுன் குணத்தைக் காட்டுகிறது. நான் இன்று மதில் சுவரேறி உள்ளேவந்தேன். சாதாரணமாய்வர வழி யில்லையோ?" என்றான். அரியநாயகி அவனைத் தோட்டத்தின் ஒருபுறமா யழைத்துச்சென்று "அதோ வேலி தெரிகிறதே அங்கு சென்றால் ஒரு சிறுபாதை செல்லும், அது தோட்டத்திலிருந்து சுலபமாய் உன்னை வெளியிற் கொண்டுபோய் விடும்" என்று கூறி அவரை யனுப்பிவிட்டு, அவர் மறைகிறவரை பார்த்திருந்து திரும்பும் சமயம் "ஆ! முன்பு யாரோ ஒரு மனிதன் மறைந்து சென்றது இந்த விடத்தில்தானே" யென்று நினைப்புவந்தது. உடனே "அடடா! இந்தப் பிரபலசிங்கன்தான் இங்கிருந்து மறுபக்கம் சுற்றிக்கொண்டு நம்மெதிரில் வந்திருக்கவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு மாளிகையை நோக்கிச் சென்றாள்.

அவள் சென்று சில நிமிடங்கள் கூட ஆகவில்லை. ஒருமனிதன் அங்கிருந்த செடிகளின் மறைவிலிருந்து வெளிப்பட்டு "ஓஹோ! நாளை யிதே வேளை யிதேவிடத்தில்—பேஷ்! பார்த்துக்கொள்வோம்" என்று தனக்குத்தானே மொழிந்துகொண்டு வழி நன்றாய்த் தெரிந்தவன்போல் சீக்கிரத்தில் தோட்டத்தை விட்டு வெளிப்பட்டான்.

12-வது அத்தியாயம்.

நாம் இப்போது கமலாபாய் இராணியின் அரண்மனையில் நடக்கும் சில சம்பவங்களைக் கவனிக்கவேண்டி யிருக்கிறது. இராணிக்கு இப்போது வயது அறுபதிற்கு மேலாகிறது. முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த மறுநாட்காலை சுமார் பத்துமணிக்கு இராணி தன் அரண்மனையிலுள்ள ஒரு சிறு சபாமண்டபத்தில் தன் மந்திரிமார்களில் பிரதானமான இரண்டு மூன்று பெயர்களோடு துரைத்தன விஷயங்களைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டிருக்கிறாள். வயது அதிகமாயினும் அந்த வயதிலும் தான் மிக்க வனப்பு வாய்ந்தவ ளென்பதே இராணியின் அபிப்பிராயம். தேகமே நீர் மேற்குமிழி யென்பதும், இளமை வனப்பு முதலியவை கண்மூடித்திறப்பதற்குள் மறைந்து போம் க்ஷணபங்கத் தோற்றங்களென்பதும், வயோதிகமும் நரை திறையும் வியாதியும் சாக்காடும் அதி துரிதமாய் நம்மைநோக்கி வந்துகொண்டிருக்கின்றன வென்பதும் அரசியின் உணர்விற்குப் புலப்படவேயில்லை. ஆகையால்

அந்தவயதிலும் அவள் விலையுயர்ந்த உடைகளாலும் ஆபரணாதிகளாலும் தன் தேகத்தை யலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

இராணியும் மந்திரிமாரும் அச்சமயம் பாஞ்சாலநாட்டரசனைப்பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். இராணி பிரதான மந்திரியைநோக்கி,

"அப்படியானால் பாஞ்சால அரசன் தான் இவ்வளவுகஷ்ட மெடுத்துக்கொண்டு நிலைநிறுத்த முயன்ற புதுமதக்கொள்கையைக் கைவிட்டு பழையமதத்தில் திரும்பிவிட நினைப்பது உண்மைதானோ?" என்றாள்.

மந்திரி:—"நமக்குக் கிடைத்திருக்கும் சமாசாரங்களாலும் கடிதங்களாலும் அப்படித்தான் அஞ்சவேண்டி யிருக்கிறதென்றே நினைக்கிறேன்" என்றான்.

இன்னொரு மந்திரி "அடியேனும் அவ்வாறே அபிப்பிராயப்படுகிறேன்" என்றான்.

இன்னொரு மந்திரி "ஆயினும் எதுவும் உண்மையென்று உறுதியாய்த் தெரிகிறவரையில் தாங்கள் இந்த வதந்திகளுக்குச் செவி கொடுக்கலாகாது" என்றான்.

பத்மாபாயரசி தனக்கொருவர் புத்திமதி கூறுகிறதைச் சகிக்கும் குணமுடையவளல்ல. ஆகையால் அவள் உடனே கோபமடைந்து,

"பேஷ் இந்த வதந்திகளுக்குச் செவி யளிக்கலாகாதா. நல்ல புத்தி உடனே நானே என் கைப்பட அந்த அரசனுக்கு ஒருகடிதம் எழுதவேண்டும். அவன் புதுமதத்தைத் தன்நாட்டில் ஸ்தாபிக்கப்போவதாய் நாம்நம்பியதாலன்றோ அவன் பக்கத்து நாட்டாராகிய பழைய மதஸ்தர்களோடு சமீபகாலத்தில் அவன் யுத்தம் புரிந்தபோது நாம் பணத்தையும் ஆட்களையும் தந்து உதவிபுரிந்தோம். நமது உயர்தர வீரர்களையும் அவன்படையில் சேரும்படி அனுமதியளித்தோம். அவர்களாலேயே அவன் ஜெயமடைந்தான். கடந்தவருடம் நடந்த யுத்தத்தில் மிகப் பிரக்யாதிபெற்ற ஒருவீரன் நமது நாட்டான்றானே" என்றாள்.

மந்திரி:—"ஆம், ஆம். காப்டென் அமிர்தஸிங் என்பவன்" என்று மொழிந்தான்.

இராணி:—அந்த யுத்தத்தில் பிரசித்திபெற்ற நமது நாட்டுவீரர்களின் பெயர் முதலிய விவரங்கள் அடங்கிய ஒருபட்டியனுப்பும்படி நாம் கேட்டிருந்தோமல்லவா?

மந்திரி:—ஆம் மகாராணி! பட்டிவந்தது. அதன் தலைப்பில் காப்டன் அமிர்தஸிங் பெயர்தான் இருந்தது. ஆனால் அச்சமயம் அவன் திடீரென்று ஆச்சரியமான விதமாய் ஒருவர்க்கும் கூறாமல் சைனியத்தைவிட்டுப் போய்விட்டதால் அவனைப்பற்றிய விவரம் ஒன்றும் அறிய அனுகூலப்படவில்லை யென்று குறிப்பிட்டிருக்கிறது.

இராணி:—நமது நாட்டிலிருந்து அனேகம் பிரபுக்களும் ஜமீன்தார்களும் இராஜத்துரோக குற்றத்திற்காக தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மரணதண்டனை யடையவேண்டிய சிலரும் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டிருக்கிறார்கள். அவர்களில் யாரேனும் பாஞ்சாலநாட்டுச் சேனையில் சேர்ந்துகொண் டிருக்கிறார்களா வென்று கண்டு பிடிப்பதற்காகவே நாம் அப்படியை வரவழைத்தது. ஆனால் அதில் ஒருவருடைய அடையாளமும் விளங்கவில்லைபோல் காண்கிறது.

மந்தி:—இல்லை. நாளாய்விட்டதால் அவர்கள் உருவில் மாறியிருப்பார்கள்

மேலும் மாறுபெயர்வைத்துக்கொண்டிருப்பார்கள்: திருஷ்டாந்தமாய்தேவ புரி ஜாகீர்தார் திரவியசிங்கம்பிரபுவும் அவர் தம்பிமார் இருவரும் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு 12-வருடங்களாயின. அப்போது அந்தப்பிரபு நல்லவாலிபராகவும் தம்பிமார் சிறுவர்களாகவு மிருந்தார்கள். இப்போது அவர்களைக்கண்டால் அடையாளம் தெரிந்துகொள்வது சுலபமாயிரா தென்று நினைக்கிறேன்.

இராணி:—ஆ! அக்கண்ணபிரான் சிறுவன்...அவன் தன் பெரிய தந்தையின் தூர்ப்போதனையிற் சிக்காமலிருந்திருந்தால் இதுவரையில் நல்ல நிலைமைக்குவந்துவிட்டிருப்பான். ஆ! அன்று ஸர்தார் செல்வராயருடைய குமாரத்திக்கு கலியாணச்சடங்கு நடந்ததினம் ஏதோ விசேஷசம்பவம் நேர்ந்து கலியாணம் தடைபட்டதென்று கூறினார்களே அதன்விவரமென்ன?

மந்திரி:—மகாராணி! அதுவிஷயமாய்ப் பூரணவிவரம் வெளிவரவில்லை. பாஞ்சாலநாட்டு வர்த்தகவாலிபன் ஒருவனுக்கு அக்கன்னிகையைக் கொடுக்க ஏற்பாடாயிருந்ததாகவும், கடைசிசமயத்தில் கவசமணிந்த ஒரு வீரன் அங்குவர, அதனால் கலியாணம் நிறைவேறாமற் போனதாகவும், அப்படிவந்தவன் அக்கன்னிகையின்மேல் காதல்கொண்டிருந்தவனென்றும், இவ்வளவே தெரிகிறது

இராணி:—ஆயினும் இதுமிக்க அதிசயசம்பவமே. இதைப்பற்றி விசாரிக்க வேண்டும்." என்றாள்.

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் இராணியின் வேலையாட்களில் ஒருவன் வந்து மிக்க பயபக்தியோடு அரசிக்கு வந்தனை வழிபாடு செய்து "பாஞ்சாலநாட்டுப் பெரியமனிதரான ஒருவாலிபர் ஏதோ ஒரு முக்கியவிஷயமாய் மகாராணியவர்களைக்கண்டு பேசவேண்டும் என்று கூறுகிறார்" என்றான்.

இராணிகோபத்தோடு "யாராயினும் என்காரியஸ்தர் மூலமாய்த்தான் என்னிடம் வரவேண்டுமென்ற விதியை யறிந்திருந்தும் நீ என்ன காரணத்தால் இப்படி திடீரென்றுவந்து அத்தகைய சங்கதியைக் கூறினாய்" என்றாள்.

வேலைக்காரன் மிக்கபீதியடைந்து "அம்மா, அப்பொழுதே நான் அவனுக்குக் கூறினேன். தனக்கு இதெல்லாம் தெரியாதென்றும், தான் கூறவேண்டியவிஷயம் தங்களுக்குமிக்க அவசியமானதென்றும், அதைக்கேள்விப்பட்டால் தங்களுக்கு மிக்க திருப்தியுண்டாகும் என்றும் கூறினான். அதனாற்றான் அடியேன் சமுகத்திற்குவந்து விண்ணப்பித்துக்கொண்டேன்" என்றான்.

இராணி "ஆ! அப்படியா கூறுகிறான். நல்லது அவனை இங்கழைத்துக்கொண்டுவா" என்றாள்.

இரண்டொரு நிமிடங்களில் நேர்த்தியான உடையணிந்த அந்தப் பாஞ்சால நாட்டு வாலிபன் இராணியின்முன் நின்று மிக்க தாழ்மையோடு வந்தனமளித்தான். இராணியவனைநோக்கி "நீ கூற வேண்டுவதை என்னிடம் தனியே கூறவேண்டுமா, அல்லது இந்த மந்திரிமாராகிய பிரபுக்கள் எதிரிலேயே கூறுகிறாயோ" என்றாள்.

அவ்வாலிபன்:—"என் உண்மையை நிரூபிப்பதற்காக இப் பிரபுக்களின் முன்பாகவே கூறுகிறேன்" என்றான்.

இராணி அப்படியானால் கூறு என்றதே அவன், "மரணதண்டனையி

லிருந்து ஓடி யொளித்துக்கொண் டிருக்கும் இராஜத்துரோகிகளில் ஒருவனை நான் பிடித்துக் கொடுக்கிறேன். அவனைப் பிடித்தளிப்பவர்க்குப் பரிசளிப்பதாய்ப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது" என்றான்.

இராணி:—"நீ முன்னே அவனைப்பிடித்துக் கொடுத்துவிட்டு பிறகு பரிசைப் பெற வந்திருந்தால் ஒழுங்காயிருந்திருக்கும்" என்றாள்.

வாலிபன்:—அந்தப் பரிசைப்பற்றி யெனக்கு அவசியமில்லை. கிடைத்தாலும் நான் அதைத் தருமத்திற்கு அளித்துவிடுவேன்.

இராணி:—பேஷ்! அந்தத்துரோகி யார்?

வாலிபன்:—அவன் பல மாறுபெயர்களை வைத்துக்கொண் டிருக்கிறான். எனக்குத் தெரிந்து அம்பலவாணன் என்றும் காப்டென் அமிர்தலிங் என்றும் அழைக்கப்பட்டு வந்தான்.

இராணி:—ஆ! பாஞ்சால சேனையில் பிரக்கியாதி பெற்றவனாகிய காப்டென் அமிர்தலிங்கா?

வாலிபன்:—ஆம். ஆனால் அவன் உண்மை நாமதேயம் கேசவபுரம் ஜமீன்தாராகிய கண்ணபிரான் பிரபு வென்று நம்புகிறேன்.

இராணி:—ஆகா! அவன் இப்போது உன் வசத்திலா இருக்கிறான்?

வாலிபன்:—தாங்கள் கட்டளையிட்டால் இன்றுமாலையே யவனைப் பிடித்துத் தருவேன்.

இராணி:—அதற்காக என் கட்டளைபெற வரவேண்டிய அவசியமில்லையே. அத்தகைய குற்றவாளிகளை யார் வேண்டுமாயினும் பிடிக்கலாமே.

வாலிபன்:—மகாராணி! ஒருவிஷயத்திற்காக நான் அஞ்சவேண்டியதாயிருந்தது. அதாவது ஒரு மரியாதையான குடும்பம் அவனுக்கு அடைக்கலஸ்தானமாயிருக்கிறது. அக்குடும்பம் மிக்க செல்வாக்குடைய குடும்பம். ஆனால் தங்களுக்கு அது ஒரு துரும்புமாதிரியே யெனினும் அன்னிய நாட்டில்தனியாயிருக்கும் என்னை அவர்கள்சுலபமாய் அழித்துவிடலாகும்.

இராணி:—நீ அதற்கெல்லாம் அஞ்சவேண்டாம். நான் உன்னைப் பாதுகாக்கிறேன்.

வாலிபன்:—ஆகையால் என்மேல் யார் என்னகுற்றம் கூறினும் தாங்கள் செவிகொடுக்க மாட்டீர்களென்று நம்புகிறேன். ஒருசமயம் அக்குற்றத்தில் ஏதேனும் உண்மையாய்த் தோன்றுவதாயினும்.....

இராணி:—ஆகா! தெரிகிறது. நீ, நமது நாட்டுச் சட்டங்களுக்கு ஏதோ விரோதமாய் நடந்திருக்கிறாய். ஆயினும் இருக்கட்டும். நான்சொன்ன வாக்கின்படி உன்னைப் பாதுகாக்கிறேன். இன்னம் என்ன சங்கதி?

வாலிபன்:—நான்குவருடங்கட்கு முன் ஐயம்பேட்டை சதியாலோசனைக்காரர் பிடிக்கப்பட்டபோது கண்ணபிரான் நான் கூறிய அக்குடும்பத்தில்தான் சிலநாட்கள் ஒளிந்திருந்தான். சில மாதங்கட்குமுன் மறுபடியவன் அதே வீட்டில் சில நாட்கள்வந்து பதுங்கியிருந்தான். கடந்தமாதம் அக்குடும்பத்தில் கலியாணம் நடந்தபோது அவன் கோயிலில் வந்து அவர்களைக் கண்டான். இந்த மூன்று சமயங்களிலும் அவர்கள் அவனைக்கண்டும் பிடித்துக்கொடாமலே யிருந்திருக்கிறார்கள். நேற்று மாலை அவ்வீட்டின் தோட்டத்திற்குள் நுழைந்து அக்குடும்பத்தைச்சேர்ந்த ஒரு ஆளைக் கண்டு பேசினான். இன்று மாலை அதேவேளைக்கு மறுபடி அதேவீட்டிற்கு வரப்போகிறான்.

(தொடரும்.)

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

பிங்களவரு ஆவணிமீ சாலிவாகன 1839, கலியுகாதி 5018,
பசலி 1326-27, கொல்லம் 1092-93,
இங்கிலீஷ் 1917-ம்வரு ஆகஸ்டுமீ—செப்டம்பர்மீ

ஆகஸ்டுமீ ஆவணிமீ		வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
16	1	வி	சது-39-24	பூச-31-43	அமி 32 சி	பூ முடிக்க
17	2	வெ	*அமா44-41	ஆயி-37-57	மர 60	அமாவாசை விரதம்
18	3	ச	பிர-49-42	மக-44-23	அமி 41 சி	7-க்குள் மழை
19	4	ஞா	துதி-54-25	பூர-50-38	சித் 51 அ	பலராமஜயந்தி
20	5	தி	திரி-58-51	உத்-56-33	சித்த 60	கிரகப்பிரவேசம்
21	6	செ	சது-60-0	அஸ்-60-0	சித்த 60	விநாயக சதுர்த்தி
22	7	புத	சது-2-12	அஸ்-1-33	சித்த 60	சீமந்தம்
23	8	வி	பஞ்-4-35	சித்-5-29	சித்த 60	சஷ்டி விரதம்
24	9	வெ	சஷ்-5-44	சுவா-8-14	அ 8 சித்	கரிநாள்
25	10	ச	சப்-5-17	விசா-9-43	சித்த 60	9-க்குள் மழை
26	11	ஞா	அஷ்-4-14	அனு-10-5	மர 60	
27	12	தி	நவ-1-45 தச-56-32	கேட்-9-17	சித் 57 அ	பிரயாணம்
28	13	செ	ஏகா-53-50	மூல-7-43	சித்த 60	வாழை கமுகுநட
29	14	புத	து-48-36	பூரா-4-51	அமி 5 சி	பொன்னுருக்க
30	15	வி	திர-42-58	உத்தி-3-2 திரு-56-13	சித்த 60	சீமந்தம்
31	16	வெ	சது-37-3	அவி-53-38	சித்த 60	அனந்தவிரதம்
1	17	ச	○பௌ30 0	சதை-49-31	அமி 50 ம	பூமுடிக்க
2	18	ஞா	பிர-25-2	பூர-45-34	சித் 46 அ	மாளய ஆரம்பம்
3	19	தி	துதி-19-19	உத்-41-56	சித்த 60	வித்யாரம்பம் சீமந்தம்
4	20	செ	திரி-14-1	ரேவ-38-49	சித்த 60	உளுந்து விதைக்க
5	21	புத	சது-8-41	அசு-35-38	ம 36 சித்	
6	22	வி	பஞ்-5-25	பர-34-10	சித் 34 மர	மஹாபரணி
7	23	வெ	சஷ்-2-41	*கார்-34-26	சி 35 மர	கிருத்திகைவிரதம்
8	24	சனி	சப்-50-51	ரோக-35-4	அ 35 சித்	ஸ்ரீ ஜயந்தி
9	25	ஞா	அஷ்-0-22	மிரு-36-59	சித்த 60	சமஸ்தாபரணம் தரிக்க
10	26	தி	நவ-1-1	திரு-40-5	அமி 40 சி	விவாக நிச்சயம்செய்ய
11	27	செ	தச-3-11	புன-44-21	சித்த 60	2-க்குள் மழை
12	28	புத	ஏகா-6-25	பூச-49-11	சித்த 60	கரிநாள்
13	29	வி	துவா-10-41	ஆயி-55-42	சித் 56 அ	ஜபம் பூர்த்திசெய்ய
14	30	வெ	திர-15-7	மக-60-0	மர 60	
15	31	ச	சது-20-22	மக-2-3	சித் 60	கிரகபாதை நிவர்த்திசெய்ய

(செப்டம்பர்மீ)

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | பிங்களவரு புரட்டாசிமீ 1உ 1917ம்வரு செப்டெம்பர்மீ 16உ | பகுதி 3

கடவுள் வணக்கம்.

1. "கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினும்
குளிர்தீம் புனற்கை யள்ளிக்
கொள்ளுகினு மந்நீ ரிடைத்திளைத் தாடினும்
குளிர்சந்த் வாடை மடவார்
வந்துலவு கின்றதென முன்றிலிடை யுலவவே
வசதிபெறு போதும் வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர
மகிழ்போதும் வேலை யமுதம்
விந்தைபெற வறுசுவையில் வந்ததென வமுதுண்ணும்
வேளையிது மாலை கந்தம்
வெள்ளிலை யடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிது யிலினுஞ்
சந்ததமு நின்னருளை மறவா வரந்தந்து
தமியேனை ரக்ஷை புரிவாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே."

2. "பெற்றவர் பெற்ற பெருந்தவக் குன்றே
பெருகிய கருணைவா ரிதியே
நற்றவத் துணையே யானந்தக் கடலே
ஞாதுரு ஞானஞே யங்க
ளற்றவர்க் கருத நட்புடைக் கலப்பே
யனேகமாய் நின்னடிக் கன்பு
கற்றதுங் கேள்வி கேட்டதுநின்னைக்
கண்டிடும் பொருட்டன்றோ காணே."

(1) குளிர்தீம்புனல்=குளிர்ச்சிபொருந்திய தித்திப்பான நீர். முன்றில்=முற்றம். வேலை=கடல். வெள்ளிலையடைக்காய்=வெற்றிலைபாக்கு.

(2) வாரிதி=கடல். ஞாதுரு=காண்பான். ஞானம்=காட்சி. ஞேயம்=காணப்படுபொருள்.

ஆனந்த போதினி

பிங்களவரு புரட்டாசி மீ 1உ

தெய்வ மிகழேல்.

தண்ணருளே உருவாகக்கொண்ட பரம்பொருளின் உண்மை நிலையை உணர்ந்த மெய்ஞ்ஞானச் செல்வியாகிய நமது ஔவைப்பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளிய தெய்வமிகழேல் என்ற வாக்கியம் தமிழ்மக்களில் பெரும்பாலோரும் உணர்ந்ததே. ஆயினும் அதன்உண்மைக்காரணத்தை யுணர்ந்து அம்மூதாட்டியின் அருள்வாக்கின்படி நடப்போர் சிலரேயென்று சொல்லவேண்டும். நன்றாய்ப் பார்க்கப்புகின் கல்விப்பயிற்சியும் சாத்திர ஆராய்ச்சியுமில்லாத பாமரஜனங்களில் பெரும்பாலோரே மேற்கண்டவாக்கியத்திற்கு மாறாய் நடக்காதவர்கள் என்று விளங்கும். அவர்களேனும் மூடபக்தியோடு "அடதெய்வமென்றால் எல்லாம் ஒன்றுதான்" என்று கூறி விஷ்ணுவாயினும்சரி, சிவனாயினும்சரி, விநாயகர் சுப்பிரமணியராயினும் சரி, முனீஸ்வரன், காட்டேரி, மாடன், கருப்பண்ணன், பிடாரி, காளியாயினும்சரி, அல்லாசாமி, மேரி (ஏசுவின்தாய்) கிருஸ்து எதுவாயினும் சரி மனதாரக் கையெடுத்து நமஸ்காரம்செய்து விடுகிறார்கள். அந்தோ படித்தவர்கள் என்று பெயர்வைத்துக்கொண்டிருப்போரில் பெரும்பாலாரோ மேற்கண்ட ஔவையாரின் திருவாக்கிற்கு நேர்மாறாய் நடப்போர்கள் என்பது வெளிப்படை.

இவர்கள் ஏதோ சில மதநூல்களை உலக கௌரவத்திற்காக வாவது மேல்போக்காய் வாசித்துவிட்டு மதசம்பந்தமான பட்டப்பெயர்களை வைத்துக்கொண்டு பரம்பொருளின் உண்மை நிலையை நேரேபோய் கையால் தடவிப் பார்த்துவிட்டு வந்தவர்களைப்போல் ஒருவரோடொருவர் வீணான குதர்க்கவாதங்கள் செய்துகொண்டு தேவதூஷணைசெய்வதோடு ஆங்காரங்கொண்டு கைச்சண்டையும் இட்டுக்கொண்டு நியாயஸ்தலத்திற்கு இழுக்கப்பட்டுத் தண்டனையுமடைகிறார்கள். இவர்கள் கடவுளின் உண்மையான சொரூபத்தைக் கண்டதன்பலன் இவ்வாறாய் முடிகிறது. சிவ என்கிற வார்த்தையை

ஒருவர் கூறினால் உடனே செவிகளில் கைவைத்து மூடிக்கொள்ளும் வைஷ்ணவர்களும், அப்படியே ராமா என்றதைக்கேட்டதே காதைப்பொத்திக்கொள்ளும் சைவர்களும் எத்தனையோபேர் இருக்கிறார்கள். வேதாந்தமே உண்மைமுடிவென்றும் சித்தாந்தமே உண்மை முடிவென்றும் ஆயுள்முழுமையும் சண்டையிடுகிறார்கள். "உண்மையில் வேதாந்தமார்க்கமாய் முத்தியடைந்த மகான்கள் எண்ணிறந்தோர். அப்படியே சித்தாந்தத்திலும் எண்ணிறந்தோர் என்று நூல்களால் விளங்குகிறது. ஆன்றோர் இரண்டும் ஒன்றென்றும் அனுசரிக்கத்தக்கவையென்றும் அருளியிருக்கிறார்கள். அப்படியிருக்க இரண்டில் ஒன்று எப்படி குற்றமுள்ளதாகும்? சரியாய் ஆராய்ந்துபார்த்தால் இவையிரண்டின்முடிவும் ஒன்றாகவேதானிருக்க வேண்டும். அது நமக்கு விளங்காததன் காரணம் நாம் அர்த்தம் செய்துகொள்வதில் ஏதோ தவறியிருக்கிறது" என்று இவர்கள் அறிவில் புலப்படுவதில்லைபோலும்.

நாம் நூலாராய்ச்சி செய்யவேண்டியது எதற்காக? மேல் கடவுள்வணக்கம் என்ற தலைப்பில் இரண்டாவது பாவில் நமது ஞானமூர்த்தியாகிய தாயுமானவர் "நின்னைக்கண்டிடும் பொருட்டன்றோ" என்று அருளியுள்ளபடி பரம்பொருளின் நிலையை யுணர்ந்து அதையடையும் பொருட்டாகவேயாகும். அதைவிட்டு உலகில் பெருமையடையக்கருதி மனசாக்ஷிக்கு ஒவ்வாதிருந்தாலும் நமது கட்சியையே நிலைநாட்டவேண்டுமென்று வீணான குதர்க்கவாதங்களில் பிரவேசிப்பதால் மேற்கண்ட அனர்த்தங்கள் விளைவதோடு நமது மதத்தையிழிவுபடுத்திக் கூறுவோர்க்கு இடங்கொடுப்பதாகிறது.

பரம்பொருளின் நிலைமை யிவ்வாறென வேதங்களிற் கூறியுள்ளதுபோல் உலகிலுள்ள வேறெந்த நூல்களிலும் கூறப்படவில்லையென்பது உண்மை. அதன்படி.

கடவுள் ஒருவரே. அவர் எங்கும் நிறைந்திருப்பவர். எல்லா மதங்களாலும் பிரதிபாதிக்கப்படுபவர் அவர் ஒருவரே. நாம் செய்யும் பிரார்த்தனையை யெந்தக் கடவுள் ஏற்றுக்கொள்கிறாரோ அவரே மற்ற எல்லாமதஸ்தருடைய பிரார்த்தனைகளையும் ஏற்றுக்கொள்கிறார். ஆறுகளனைத்தும் எங்கெங்கோ உற்பத்தியாகி எந்தெந்த திக்குகளிலோடினாலும் முடிவில் கடலையே சேருகிறது. எந்தெந்த மதஸ்தர் அவரை எவ்வாறு எவ்வாறுபாவித்து எந்தெந்த நாமத்தால் துதித்தாலும் எல்லாருடைய துதியும் அவர் ஒருவரையேபோய்ச் சேரு

கிறது. நாமரூபமாயுள்ள எல்லாவஸ்துக்களும் அழியத்தக்க அநித்தியப்பொருள்களே. எல்லாவற்றிலும் நிறைந்திருக்கும் சர்வவியாபியாகிய அப்பரம்பொருள் ஒருவரே என்றும் அழியாது முக்காலத்திலுமிருப்பவர். அவர் நமக்குள்ளுமிருப்பதால் நாம் என்ற வஸ்துவையறிந்தால் அவ்வரை யடையலாம் என்பதே வேதமுடிவு. அழியத்தக்க எல்லாவஸ்துக்களிலும் நிறைந்துள்ள அழியாத நித்தியப்பொருள் அவரேயாதலால் ஞானிகளுக்கு எங்கும் நிறைந்த ஏகவுருவாகிய பரம்பொருள் ஒன்றே விளங்கிக்கொண்டிருக்கிறது. வேறு எப்பொருளுமில்லை. நமக்கு உலகமாகியபொருள் தானே புலப்படுகிறதெனில் அது பார்க்கும் நம்மிடமிருக்கும் தோஷமேயாகும். இதைப்பற்றி இச்சஞ்சிகையின் மற்றோர் பக்கத்தில் வெளியிட்டுள்ள மாயை யென்னும் வியாசத்தில் சற்று விவரமாய்க் கூறப்பட்டிருக்கிறது. ஆண்டு காண்க.

பிரகலாதர் துரும்பிலும் தூணிலும் பகவான் இருக்கிறாரென்று கூறி அவ்வாறு மெய்ப்பித்ததே பெரிய திருட்டாந்தமாகும். மதஸ்தாபகர்கள் இந்த உண்மையை அனுபவமாயுணர்ந்தவர்க ளாதலாற்றான் கோடிக்கணக்கான ஜனங்கள் தங்கள் போதனையை யேற்றுக் கொள்ளும்படி செய்யச் சக்திவந்தர்களானார்கள். ஆனால் எல்லா மதங்களிலும் இப்படியே கூறப்பட்டிருக்க வில்லை யென்றாலோ, அந்தந்த மதஸ்தாபகர்கள் தோன்றியகாலத்தில் அந்தவிடங்களில் இருந்த ஜனங்களின் மனோநிலைமைக்கு எவ்வாறு எவ்வளவு போதிக்க வேண்டுமோ அவ்வளவே போதித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பூரண ஞானிகளே. இதைப்பற்றி இரண்டே திருட்டாந்தங்கள் இங்கு கூறுகிறோம்.

1. ஏசுகிருஸ்துவை ஒரு சந்தர்ப்பத்தில் மிக்க செலவவந்தனான ஒரு யூதன் சந்தித்து "சுவாமி எனக்குப் பரலோகவழியைக் காட்டவேண்டும்" என்று போற்றினன். அதற்கவர் "நாம்கூறிய பத்துக்கட்டளைகளின்படி நட" என்றார். அவன் எனக்குப் "புத்தி வந்ததுமுதல் அப்பத்து கட்டளைகளின்படியே தான் நடந்துவருகிறேன். பரலோக ராச்சியம் கிடைக்கவில்லையே" என்றான். அதற்கு ஏசு "அப்படியானால் நீபோய் உன்வீடு நிலம் ஆபரணம் ரொக்கம் முதலிய உனக்கு இவ்வுலகிலுள்ள ஆஸ்தி முழுமையும் ஏழைகளுக்குத் தானம்செய்துவிட்டுவா" என்றார்.

அச்செல்வவந்தன் குருவின் கட்டளைப்படியே செய்துவிட்டுத்

திரும்பிவந்து "அப்படியே செய்துவிட்டேன். பரலோகம் இன்னும் சித்திக்கவில்லையே" என்றான். அப்போது ஏசுகிருஸ்து "பரலோக இராஜ்ஜியம் இன்றைக்கென்றும் நாளைக்கென்றும் விளையாட்டாகவாராது. அது உனக்குள்ளேயே யிருக்கிறது" என்றார் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதனால், அவர் படிப்படியாய் அவனுக்கு, முன்னே மனத்தின் தீயகுணங்களை நீக்கியபிறகு புறத்துறவை யடையச்செய்து, அதன்பின் தன்னையறியப் போதித்தாரென்று நன்கு விளங்குகிறது. அக்காலத்திலிருந்தவர்களிலும் எங்கோ ஒருவன் ஞானோபதேசம் பெறக்கூடிய பக்குவத்தையுடையவனாயிருந்திருக்கிறான்.

2. இஸ்லாம் மதஸ்தாபகராகிய மகம்மது நபி பரலோகமடைந்த பிறகு மதத்தலைவராக அவர் ஸ்தானத்தில் யாரை ஏற்படுத்துவதென்று யாவரும் யோசனைசெய்து அவரிடம் அதிகமாய் நெருங்கியிருந்தவர்களில் பிரதானமான மூவரைச்சோதித்து அதில் ஒருவரைத் தெரிந்தெடுப்பதென்று தீர்மானித்தார்கள். அதன்படி மதநூலில் தேர்ச்சிபெற்ற சிலர் கூடி மூவரையும் தனித்தனி கண்டு ஒரு கேள்விகேட்டார்கள். அதாவது,

"நீர் இவ்வளவுகாலமாய் நமது மஹம்மது நபியவர்களிடம் நேசமாய் இருந்தீரே, கடவுளின் நிலைமையையெவ்வாறு காண்கிறீர்?" என்பதே.

1-வது ஆள்: "உலகத்தைக்கண்டு அதன்மூலமாய்க் கடவுளைக் காண்கிறேன்" என்றார்.

2-வது ஆள்: "கடவுளைக்கண்டு அதன்பின் உலகைக் காண்கிறேன்" என்றார்.

3-வது ஆள்: மகம்மது அவர்களின் சகோதரர் புத்திரரும், மகம்மதுவின் மருமகனுமாகிய அலி என்பவர். அவர்,

"நான் எங்கும் ஆண்டவனாகவே காண்கிறேன். வேறு அன்னியமானது எதுவுமில்லை" என்றார்.

பிறகு அவர்கள் அலி என்பவர் சதசசமாதியாகிய முடிவு நிலையிலிருப்பவராதலால் அவர் உலகோர்க்கு மதபோதகராயிருந்து நமது மதத்தைப் பரவச்செய்யத் தகுதியானவ ரல்லவென்றும் அஞ்ஞான நிலையிலுள்ள உலகோர்க்கு உலகின் மூலமாய்க் கடவுளைப்பற்றி போதிக்க முதல் ஆளாமிவே தக்கவரென்றும் தீர்மானித்தார்கள்.

ஆகவே கடவுள் ஒருவரே எங்குமிருப்பவர் என்றும் எதை

யார் கடவுளாய்ப்பாவித்துத் துதித்தாலும் அந்த ஒரே பரமான்மாவையே துதிக்கிறார்களென்றும் அதையே நாமும் கடவுளாய்த் துதிக்கிறோமென்றும் நன்குவிளங்குகிறது.

இரண்டாவது ஒரு வஸ்து இருந்தாலன்றோ ஒன்றை யுயர்த்தியொன்றைத் தாழ்த்திக் கூறலாம். ஒன்றாகவேயிருப்பதால், எப்படி எதைக் கடவுளென்று துதித்தாலும் அந்த ஒரே கடவுளைத் துதித்ததாய் முடிகிறதோ, அப்படியே எந்தத்தெய்வத்தைத் தூஷித்தாலும் ஏகநாயகனாகிய அந்தப் பரம்பொருளைத் தூஷித்ததாகவே முடியும்.

ஆகையால், ஔவைப் பிராட்டியார் திருவாய்மலர்ந்த, "தெய்வமிகழேல்" என்ற வாக்கியத்தை நாம் ஒருபோதும் அலட்சியம் செய்யாது நடந்துகொள்ளும் வண்ணம் அருள்புரிய வேண்டுமாய் எல்லாம்வல்ல அப்பரம்பொருளையே மன்றாடிப் பிரார்த்திப்போமாக.

கல்வி.

கல்வி என்ற பதம் கல் என்னும் வார்த்தையிலிருந்து பிறந்தது. கல் என்ற பதத்திற்கு, தோண்டு அல்லது பிடுங்கு என்பதும் ஒரு பொருள். இதை 'அறத்தை வேர் கல்லும்' என்ற அடி தெளிவாய் விளக்கும். எனவே, கல்வி என்பதற்குத் தோண்டுதல் என்பது பொருளாம்.

ஆயின் எதைத் தோண்டுவது? எதைப் பிடுங்குவது? பேரறிவினனாகிய ஈசுவரனையன்றிப் பிறிதொன்று மில்லாத இடத்து மூடமாகிய அவித்தை-அறியாமை எப்படி வந்தது என்பது மாந்தர் எவரையும் மயக்கும் ஒரு பெரும் கேள்வி. இக்கேள்வி அறிவு நிலையிலேயின்றி அறிவற்ற அந்தகார நிலையிலே எழுவதாகலின், இதற்கு விடைகூறல் தவறாக முடியும். அது எப்படியாயினும் ஆகுக. நமது அறிவற்ற இந்த நிலையிலே இது காண்கிறோம்:—

மனிதன் பேரறிவினன்; ஏதோ ஒன்றினாலே தன்னைச் சிற்றறிவினன் என்று எண்ணி மயங்கிக் கிடக்கிறான். இம்மயக்கத்தைத் தீர்க்கவே இங்கு இவ்வுலகத்துக்கு வந்திருக்கிறான்; இப்பிறவி எடுத்திருக்கிறான். இது, கடவுளின் லீலை என்றும், அநாதியாகிய வினையின் விளைவென்றும் கூறுவார் கூறட்டும். அவன் தனது உன்னத நிலையை மறந்து, இவ்வற்ப உடலே தானென்று கொண்டு மயங்கி மடிகிறான். இம்மயக்கத்தைத் தீர்க்க இம்மனுஷியசரீரமும் இப்பிரபஞ்சமும் களங்கள், கருவிகள்.

ஆகவே இம்மயக்கத்தைத் தொலைக்க இவன் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் கல்வி ஆகும்; தோண்டுதல் ஆகும்.

இப்பரந்த உலகத்திலே, மனிதன் சற்று கவனத்தோடு தனது பஞ்சேந்திரியங்களை உபயோகிப்பானாயின், கணந்தோறும் தனதுமூடத்தனத்தை விலக்குவதற்கான அறிவு சம்பாதித்த வண்ணமாயிருப்பான். கணந்தோறும் இறந்துபடும்

பல்லாயிரக் கணக்கான ஜந்துக்களை இவன் கண்ணால் மனத்தோடு பார்த்து அறிவு நிலைக்குக்கொண்டு மதிப்பானாயின், அந்தோ! அச்சிறு பிராணிகளெல்லாம், "ஏ, மானுடா, இவ்வாழ்வு நித்யமென்றெண்ணாதே. இவ்வுடம்பு பொய். இது தோன்றி மறையும் இயற்கையுள்ளது, சாவு இதற்குண்டு. ஆதலின் ஜாக்கிரதை, செய்வது செய்க" என்று இவனுக்குப் புத்திகூறிச் செல்வதை நன்றாய்க் காண்பானல்லவோ? இப்படியே, இவன் உண்மையில் ஒவ்வொரு புலனையும் உபயோகித்துப் பார்ப்பானாயின் சில நாட்களுக்குள்ளேயே இப் பிரபஞ்சத்தின் உண்மை இன்னதெனத் தெளிந்து களிப்பானன்றோ?

இத்தகைய தெளிவுக்கு, இத்தகைய அறிவுக்குக் காரணமாயிருக்கின்ற பஞ்சேந்திரிய வாயிலாலான விசாரணையே கல்வி ஆகும்; தோண்டுதல் ஆகும். இதனாலேயே தமிழ் மறையாளரும் "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்" என்றார். அறிவு தருவது கல்வியின் பயன் என்பது பெரியோர் கொள்கை. இல்லை இல்லை, அறிவு தருவதல்ல. அறிவை மறைத்துக்கொண்டிருக்கும் மூடம் நீங்கக் காரணமாயிருப்பது கல்வி. ஓர் உண்மை கண்டவுடன் இவனது இயற்கை அறிவை மூடியிருந்த அறியாமையின் ஒரு திரை படீரென்று தெறித்தோடுகிறது. இப்படியே மூடமூடத்தையும் கிழித்தெறியக் காரணமாயிருக்கும் விசாரணையே கல்வி என்றேற்படுகின்றது. இதையே (observation) நுணுகிப் பார்த்தல் என்று ஆங்கிலர் சொல்லுகின்றனர்.

அந்த விசாரணை வாய்க்கப் பெற்றவரே சடகோபர், ஞானசம்பந்தர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர். இவர்க்கு உலகத்தார் 'கல்வி' என்று சொல்கின்ற எழுதல் படித்தல் இல்லை. பிறர் எழுதிவைத்த புஸ்தகங்களை இவர்கள் பார்த்துக் கிள்ளைபோல வாய்ப்பாடமாய் ஒன்றும் ஒப்புவித்ததில்லை. தாமே தமது கண், காது என்ற இந்திரியங்களை நன்றாய் உபயோகித்து, "உலகம் இது; இதன் இயற்கை இது; உண்மை இது" எனத் தெளிந்துகொண்டனர். இவரே ஓதாதுணர்ந்த பெரியர். இவரே மெய்க்கல்வி பெற்ற பேரறிவாளர்.

ஆயின் வள்ளுவர் முதலிய ஆன்றோரும் "எண்ணும் எழுத்துமே கல்வி" என்று கூறியிருப்பது என்ன நினைந்தோ எனின், சொல்வோம். தமது புலன்களை உய்த்துணரவிட இயலாத போலி மனிதருக்கு, ஓதாதுணர்ந்த பெரியோர் கூறிய உண்மைகளை எழுத்திலே கண்டு இனியேனும் விசாரிப்பதற்கு முக்கிய காரணமாயிருப்பதுபற்றியே.

இதனாலேயே கல்விக்கு லக்ஷணம் சொல்லவந்த ஸ்வாமி விவேகாநந்தர், "Education is manifestation of Knowledge already in man: மனுஷியனிடம் ஏற்கெனவே இருக்கும் அறிவை விகாஷிக்கச் செய்வது கல்வி" என்று கூறியுள்ளார்.

ஆகவே, எழுதப்படிக்கத் தெரிந்த சகோதரர்களே, நீங்கள் எழுத்துக் கூட்டத்தெரிந்த இந்தக் காரணத்தாலேயே கற்றோர் என எண்ணிக் களிக்கவேண்டாம். உலகத்தை உங்கள் பஞ்சேந்திரியங்களாலும் முடியப் பாருங்கள். பெரி

யோர் சொல்லிய உண்மைகள் உங்கள் அநுபவத்திற்கும் ஒத்திருக்கவேண்டும். உங்கள் பேரறிவு, மேலே திரைபோலக்கிடக்கும் அறியாமை விலக விலகச் சிறிது சிறிதாகக் கதிர் காட்டவேண்டும். எக்காலத்தில் அறியாமை பூரணமாக நீங்கி, 'வாலறிவன் நற்றாள்' தொழ நீங்கள் யோக்யராகிறீர்களோ அக்காலமே உங்கள் படிப்பு பூரணம் பெற்றதாக எண்ணுங்கள். அதற்கு முன்னெல்லாம் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளே நீங்கள்.

எழுதப்படிக்கத் தெரியாத சகோதரர்களே! நீங்கள் உங்களைக்கல்லாத மூடர் என்றெண்ணி ஒதுங்கி நிற்கவேண்டாம். உலகில் நடக்கும் காரியங்களைப் பஞ்சேந்திரிய வாயிலாக நீங்களும் உட்கொண்டு விசாரித்துத் தெளியுங்கள்; உங்கள் அஞ்ஞான இருளும் சிறிது சிறிதாக விலகும். எழுதப் படிக்கத் தெரியாதது மூடமாகாது. உலகத்தைப் பார்த்து அதில் நடக்கும் காரியங்களைக்காண விசாரணை செய்யாத அறிவே மூடமாமும். நாளொன்றுக்கு ஓர் உண்மை காணுங்கள். நீங்களும் கற்றவர்களே, அறிஞர்களே. நாளடைவில் உங்கள் மூடமெல்லாம் இவ்வாறு விலகப்பெற்று உங்கள் பூரணத்துவமும் வெளிப்படும்.

சுப்ரமணியம்.

சசிவர்ணபோதம்

நான்காவது அத்தியாயம்

நல்லறிவு.

(75-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி ஞானிகளிடம் செல்லவேண்டின், அம்மாயப்போர்வையை நீத்துப் பரிசுத்தராய் மாணிக்க மணிபோன்று சோதியாய் விளங்குவார்கள். சசிவர்ணா! சாதனை மிகுக்க மிகுக்க, இச் சோதியாய்த் தோன்றும். ஆக்கையுட்பட்ட உருவம் தேசு மிகுத்து மிகுத்து ஆக்கை அருவம்போலும், மிகுத்தெழுந்து விளங்கும் சோதி உருவமாயும் காணப்படும்.

கவனித்துக் கேள்! இவ்வகைய சரீரமே பாரமற்றது, பவமில்லாதது, இத்தகையோரே காயசித்தி யடைந்தவர். இவரே சித்தரெனப்படுவர். இச்சித்த யோகிகள், தங்கள் சுய தேகத்தோடு சொர்க்க மத்திய பாதாள முதலிய எங்கணும் உலவி வரலாம்.

இன்னொன்று:—பரிசுத்தமான மனதோடு இந்நரதேகமாகிய பளுவைத்தாங்கிக் கர்மபூமியில் வைகும் மகான்களாகிய, மாந்தர்கள், இம் மலசம்பந்தமான பாரமாகிய தம் தேகத்தை இங்கு நீத்த பின்னரே கனமும் களங்கமுமற்ற பிரகாசம் பொருந்திய சூக்கும சரீரத்தோடு மேற்கூறியபடி செல்லுந் திறனுடையவராவர். இவ்

விருவகைய மகான்களுங் கூட, இப்பிறவிக் கடலுக்கு அஞ்சுவரென்றால், ஏனையோரைப் பற்றி இயம்புவானேன். இவ்விக்கட்டான இடுக்கண் கடலில் முழுகித் தவிப்பதென்றால் எவருக்குத்தான் இயலும். இவ்விவரம், எல்லோருக்குமே தெரிந்து விடாது. இவ்விதமாகவே யாவரும் ஏமாந்து போகின்றனர்.

ஆகவே இப்பிறவிக் கடலினின்றும் பிரிந்து தெரிந்து கரையேறி விடவேண்டியது அத்தியாவசியமானதாகும் என்றருளிப் அருந்தவரை நோக்கிய அந்தணன் அவாக்கொண்டு அறைவதானான்.

சுவாமி!

விரிபவ சலதியாழ்ந்து வேதனை யுறவோர்க்கெல்லாம்
எரிபொலங் குன்றமேற விருங்கல முண்டுகொல்லோ
தருமமே யுருவந்தாங்கும் தாபத மாலேயெந்தன்
பரிபவமனைத்துந்தீரப் பகர்ந்தருள்புரிதல்வேண்டும்

என்பதைக் கேட்டருளிய இருடி புங்கவர், புன்னகை பூத்து இளைஞனை நோக்கி, அப்பா! எவ்வகைப்பட்டவரும், எம்மார்க்கமுள்ளோரும், இப் பெருங்கடலைக் கடந்து போவதற்கு அவரவர்கள் இதயத்துள்ளேயே அறிவெனும் ஓர் இருங்கல முண்டாகி விளங்குகின்றது. அதனை யோராது அகலுவோர் அநேகர். தெரிந்தும் தெளியாதவர் சிலர். பார்த்தும் பள்ளத்தே விழுந்து விடுவோர் பலர்.

ஒன்று கேள்:—

அறிவு மாக்கலத்தி லாரோ கணித்தாற்
பிறவிக் கடலைப் பிரித்துத்—துறையாம்
பிறவாழிக் குரிய பேரின்ப வீட்டில்
உறவாக வைக்கு முகந்து. (அனுபவசார வெண்பா.)

என்றதுபோல ஒவ்வொருவரும் ஐயந்திரிபற்ற அனுபவம் வாய்ந்த அறிவு என்னும் தோணியைக் கைப்பற்றியொழுகவேண்டும்.

கற்பவையாங் கல்விக் கேள்விகளினாற்றிரட்டிச் சேர்த்த சீராம் சங்களின் தன்மை, அறிவுடைமை. புந்தியின் மனம் சென்று மீளும் புலன்களினும் விடயங்களினும் போகவிடாமல் திருப்பி, பொறுமையோடு பொருள்களின் தன்மைகளைப் புரட்டி யாய்ந்து, பொய்ம்மை பொல்லாமை போக்கிப், புனிதத்திற் புகுத்திவிடுவது புத்தி.

விகாரங்களையும் விபரீத விசாரங்களையும் வெகுளி வெட்க மிவைகளையும் விலக்கி, வில்லங்கமின்றி விளங்கி வீண்காலம் போக்காமல் வித்தியா துரத்தில் விழைவு கொண்டு, மேலோரை விசுவாசித்து விஷயங்களின் தன்மைகளை வெகுவாய் வினவி, உண்மை வித்தையை விரும்பி விருத்திசெய்து விஞ்ஞானமாய் விளங்கச் செய்வது விவேகம்.

ஞாபகத் துணைக் கருவிகளான அறிதற்குக் காரணமாயுள்ள கருவிகளேந்தையும் அடக்கி ஞாபகவேதுவான, இவ்வைந்து மின்றி

பிறகாரணத்தா லுணர்த்தும் பொருள்களையும் இந்நானிலத்தேயுள்ள நால்வகை யோனிகளால் உற்பவிக்கும் தோற்றங்களின் இயல்புகளையும் நன்கு தெளிந்து ஞாதாக்களை நாடி ஞானநூல் கற்று, தத்துவங்க ளுணர்ந்து மனத்தே நாட்டி நலியச் செய்யும் விதிகளை நசித்து, அகப்பொருளில் நாட்டம் வைத்து, கால ஞானங் கண்டு நரரடையும் பேறாகிய நாலாம் பதத்தை நாடி நிற்பது ஞானம்.

அப்பா! எல்லாம் ஒன்றேயா மென்றறி. ஆயினும் இந்த அறிவானது பர அறிவு, அபர அறிவு என்னும் இரு பிரிவினை யுடையது. இவ்வண்ட கடாகத்தை ஆக்கி ஆதியந்தமின்றிச் சுயம்புவாயும் சிதாகாச தேஜோமயமாயும் விளங்கும் சச்சிதானந்த மூலப் பரம் பொருளாகிய கடவுளாரின் தன்மைகளையும், உருவங்களையும் செய்கைகளின் வளங்களையும், திறங்களையும், காரணங்களையும் செவ்வனே விரித்துக் கூறும் நான்கு வேதங்களைக் கற்பதும், ஆயுள் வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவ வேதம் ஆகிய உபவேதங்களை யோதி உணர்வதும், வேதத்தின் உச்சார லட்சணங்களை உணர்த்தும் சிக்ஷை, பதவிலக்கணங்களை உணர்த்தும் வியாகரணம், பதங்களுக்கு விவரணங்களைக் கூறும் நிருத்தம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் முதலியவற்றால் வைதீக கருமங்களை செய்வதற்குரிய காலங்களை யறிவிக்கும் சோதிடம், ஆசுவலாயீயம், போதாயநீயம், ஆபத்தம்பம், முதலிய சூத்திரங்களிலிருந்து வைதீககருமங்களைப் பிரயோகிக்கும் முறைமைகளைக் கூறும் கற்பம், வேதங்களின் உக்தை முதலிய சந்தோ பேதங்களுக்கு அக்கர சங்கியை கற்பிக்கும் சந்தோவிசிதி, ஆக இவ்வாறு முறைகளடங்கிய வேதாங்கங்களைக் கற்பதும், பதி, பசு, பாசம் முதலிய இலக்கணங்களைக் கூறும் ஆகமப்பொருளை யறிவதும், நன்மார்க்கம், சகமார்க்கம், புத்திரமார்க்கம், தாதமார்க்கம் ஆகிய இவைகளை யறியும் மார்க்கங்களும், சிவரகசியம், பாரதம், இராமாயணம், முதலிய இதிகாசங்களை அறிவதும், இயல், இசை, நாடகம் என்னும் இலக்கணங்களைக் கற்பதும், அறிவிற்கு அன்னியமானவைகளை யவாக்கொண்டறிவதும், ஆகிய இவைகளை புறவறிவென்னும் அபரவறிவாகிய *சிற்றறிவாகும்.

இனி பதினெண் புராணங்களையும், எண்ணென் கலைக்கியான நூல்களையும், கற்பதும், அவ்வாறே அபர வறிவா மென்றறி. இவ்வபர வறிவைப் படைத்த பின்னரே பர அறிவு தோன்றுவது ஒன்று. ஜென்மாந்திர வாசனையால் நிலையறிவு தோன்றுவது மற்றொன்று ஆக இவ்விரண்டி லொன்றாய்ப் பர அறிவு தோன்றும் பான்மையாகும்.

சசிவர்ணா! இதுகாறுங் கூறியவற்றில் உனக்கேதேனும் சந்

* சிற்றறிவு = இது மூலபாடத்தின் 30-வது கவி முதல் 34-வது கவி வரையுள்ள நான்கு கவிகள்.

தேகம் தோன்றியதானுற் சொல்வாயாக வென்றருளிய குருவின் பாதகமலங்களைக் கும்பிட்டிறைஞ்சிய குளிர்மதி வண்ணன் கூறுவானாயினன்.

"சுவாமி! தூய்மைத்தனம் வாய்ந்த சுருதிகளையும் இதிகாச ஆகம புராணங்களையும் அவற்றிற்குரிய இலக்கணங்களையும் கற்றுக் கொள்வதும் கற்கப்புகுவதும் சிற்றறிவே யாமென்று திருவாய் மலர்ந்தருளினீர். இதனால் இத்தகைய கலைகளால் பேரறிவேயின்றி சர்வ சாதாரணமான அறிவு தான் உண்டாமென்று விளங்குகிறது.

ஹே, விமல! வேதங்களின் தன்மையும் புனிதமும் இவ்வாறென எவரானும் விரித்துரைக்கற் பாலதன்று. இவ்வையத்தையே தாங்கி நிற்கும் விராட் ஸ்வரூபத்தின் இலக்ஷண விவரங்களையும் அதனை யடையும் மார்க்கங்களையும் விரித்துரைப்பனவன்றோ வேதங்கள். இதற்குச் சான்றாக தங்களைப்போன்ற பெரியோர்கள் இருடிகள் முனிவர் முதலாயினோர் முதல் முதல் வேதங்களைப் பயிலத் தொடங்கிப் பழகி நிற்கிறார்கள். அதனால் இது மிக்க சிரேஷ்டமானதெனத் தெரிகிறதன்றோ. இதனைக் கற்பது எவ்வாறு சிற்றறிவாகும் என்பது ஒன்று.

ஆகம புராண சாஸ்திரங்களை ஆராய்வதினாலும் அனவரதம் அப்பியசித்தலாலும் பாராயணத்தாலும் அளவிலாச் சுகிர்தங்களெய்து மென்றும் அச்சுகிர்தங்களாற் பரத்திற் சுகமடையலாமென்றுஞ் சொல்லப்படுகிறதே. இவைகளைக் கற்பது சிற்றறிவாவதெங்ஙனம்? என்பது மற்றொன்று.

இனி இதிகாச நூல்களிலே அதனை என்றும் பாராயணம் செய்பவர்க்கும் கேட்டவர்க்கும் மீண்டும் ஜனனமேயின்றி தெய்வபதத்தே சேர்ந்து சிதானந்தமாய்ச் சீவித்திருப்பரென்று செப்புகின்றனவே இவைகளிற் பயில்வது சிற்றறிவாகுமா? என்பது மூன்றாவது.

இவ்வுலகத்தே யவதரித்த பேர்பெற்ற ஞானிகள் பக்தர்கள் தொண்டர்கள் யாவரும் இச் செகம் உய்யும்பொருட்டுத் தம் சீவிய காலத்தே செய்து வைத்த தேவ ரகசியங்களடங்கிய பிரபந்தங்கள் எவ்வளவோ சிறந்ததாய் ஞானத்திறல் பெற்று விளங்குகின்றனவே; இவைகளைக் கற்பதும் சிற்றறிவோ? என்பது நான்காவது. ஆயின் இச்சிற்றறிவாகிய நூல்கள் என் உண்டாயினவென்பது ஐந்தாவது.

ஐய! இவ்வைந்து கொண்ட ஐயங்களைத் தேவரீர் திருத்திச் செவ்வனே எவர்க்கும் விளங்குமாறு விளக்கியருளல் வேண்டுமென்று வேண்டிய வேத பாரகனை நோக்கிய விமலர் விளம்புவாராயினர். (தொடரும்)

பண்டிட். எஸ். கிருஷ்ணசாமி அய்யர்.

அற்பம் அற்பம் அன்று.

நம்மவருட் பெரும்பான்மையோர் எதனையும், "இது அற்பம்! இது ஒன்றுக்கு முதவாது!" என்று இகழ்வதை யாவரும் சாதாரணமாகக் கண்டிருக்கலாம். ஆனால் எதனையும் ஆழ்ந்துபார்த்தால் அற்பமான தொன்றுமில்லையென்று யாவருக்கும் நன்கு புலப்படும். பெரிய மலையாவது யாது? பல அணுக்களின் கூட்டமல்லவா? 'அணுவை ஒன்றுக்கு முதவாது' என்றிகழ்ந்தால், ஒன்றுக்கு முதவாத அணுக்கள் பலசேர்ந்து, இன்றியமையாத மலையொன்றாகுமா? ஒருபோதுமாகாது. பெரியவெள்ளம் துளிகள் பல சேர்ந்துண்டானதல்லவா? இதனை நன்றாகவிளக்கவே, "பலதுளி பெருவெள்ளம்," என்றும், "சிறுதுரும்பும் பற்குத்த வுதவும், என்றும் நமது முன்னோர் வற்புறுத்தி யிருக்கின்றனர்.

சகோதரர்களே! அற்பமான பல விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டமையே இப்போது நமக்கு இன்றியமையாத பலபொருள்களைக் கண்டுபிடிப்பதற்கு ஆதாரமாகவிருந்தது. கடிகாரம் கால அளவைச் சரியாகக் காட்டுவதற்குப் 'பெண்டுலம்" (Pendulum) என்னும் கருவியைத் தொங்கவிடவேண்டுமென்று கலிலேயோ கண்டுபிடித்தது, பைசா நகரத்துக்கோவில் மண்டபத்தில் தொங்கிக்கொண்டிருந்த விளக்கைப் பார்த்தல்லவா? மழைபெய்த ஒருநாட் காலையில் உலாவச்சென்ற சர் சாமுயல் ப்ரௌன் என்பவர் வழியில் தொங்கிக் கொண்டிருந்த சிலந்திக்கூட்டைக் கண்ணுற்றே ட்வீட் என்னும் நதியின்மீது தொங்குபாலம் கட்டலாம் என்று கண்டுபிடித்தார்.

இப்பொழுது நாம் புதியவுலகமென்று வழங்கும் அமெரிக்காக்கண்டத்தைக் கண்டுபிடிக்கக் கொலம்பஸ் போனபோது, நாம் ஒன்றுக்குமுதவாதென்றிகழும் கடற்பாசியைக் காட்டியல்லவா ஒருதேயம் சமீபத்திலிருக்கிறதென்று சொல்லித் தன் கப்பலில் எழுந்த குழப்பத்தை யடக்கினார். நமது தேசத்திற் காணப்படும் பெரிய புற்றுக்களெல்லாம் சிறிய கறையான்களால் அமைக்கப்படுவதைப்போலவே இங்கிலாந்திலுள்ள பெரிய சுண்ணாம்புப் பாறைகளெல்லாம் மிகச் சிறிய செதில்களால் அமைக்கப்படுகின்றன. அற்பமான பல செதில்கள் சேர்ந்து பெரியமலையை அமைக்கின்றன வல்லவா? புதைவண்டு என்னும் ஒரு வகையான சிறிய உருவமுடையவண்டு இறந்த பெரிய ஜந்துக்களையும் கொண்டு போய்ப் பூமியிற் புதைத்துவிடுகிறது.

ஜேம்ஸ் வாட் என்பவர் சிறுவயதா யிருக்கும்போது நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்ததுதான், இப்போது காற்றின் உதவியில்லாமலே பெரிய கப்பல்கள் கடலின்மீது ஓடவும், இருப்புப்பாதையின்மீது பாரமான வண்டிகளை யிழுத்துச்செல்லவும், இது முதலான இன்னுமளவற்ற காரியங்கள்செய்ய நீராவி யந்திரங்கள் ஏற்படுத்தவும் ஆதாரமாயிற்று. ஊன்றிப்பார்க்குந் திறமையின்றி மேற்புல்லை மேயுமொருவன் காடெல்லாஞ் சுற்றினாலும் ஒரு விறகுக்குச்சி கூடக் கொண்டுவரமாட்டான். ஆழ்ந்துபார்க்குந் திறமையுள்ளவன் தான்பார்க்கும் பொருள் எவ்வள வற்பமாகிலும் அதிலும் ஓர் புதுமை கண்டுகொள்வான். சாதாரணமான மனிதர்கள் ஒரு உப்பரிகையைப்பார்த்து எவ்வளவு தெரிந்து கொள்வார்களோ 'அதைவிடப் பன்மடங்கதிகமாக அறிவாளிகள் ஒரு குடிசையைப்பார்த்துத் தெரிந்துகொள்வார்கள்.

அநேகர், "இது எதனையும் ஆரம்பிக்கத் தருணமன்று. இப்பொழுது நாம் யாதுசெய்யமுடியும் என்று காலத்தை வீணேகழிப்பர். ஆனால் பெரியோர்களின் எண்ணம் அப்படியன்று. இதனை "ஒவ்வொரு நிமிடமும் நாளின் பகுதியே" என்னும் முதுமொழி வற்புறுத்துகின்றதன்றோ?

"உலகத்தீரே உலகத்தீரே,
நாக்கடிப்பாக வாய்ப்பறையறைந்து
சாற்றக்கேண்மின் சாற்றக்கேண்மின்
மனிதர்க்குவயது நூறல்லதில்லை
ஐம்பதிரவில் அகலுந்துயிலினால்.
5. ஒட்டிய இளமையில் ஓரைந்து நீங்கும்
ஆக்கை யிளமையில் ஐம்மூன்று நீங்கும்
எழுபது போகநீக் கிருப்பன முப்புநே
அவற்றுள்
இன்புறு நாளும் சிலவே யதாஅன்று
துன்புறு நாளுஞ் சிலவே யாதலால்.
10. பெருக்கா றொத்தது செல்வம் பெருக்காற்
றிடிகரை யொத்த திளமை யிடிகரை
வாழ்மர மொத்தது வாழ்நா ளாதலால்
ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
15. இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும் இன்னும்
நாளை நாளை யென்பீ ராகில்
நமனுடை முறைநா ளாவது மறியீர்
நம்முடை முறைநா ளாவது மறியீர்."

* * * * *

எனக் கற்றோரிற் சிறந்து விளங்கும் கபிலர் அருளியதை உணர்வாராயின் ஒரு நிமிடமுங்கூட வீணிற்கழிக்க ஒருவரும் மனந்துணியாரென்பது திண்ணம். அநேக வித்வான்கள் தமக்கு ஓய்வுநேரம் கிடைக்கும்போதும், ஒருதேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குப் பிரயாணம் செய்யும்பொழுதும் அநேக நூல்கள் இயற்றியிருக்கின்றனர். மாசன் என்னும் வைத்தியர் ஒரு நோயாளி வீட்டிலிருந்து இன்னொரு நோயாளிவீட்டிற்குப் போகும்தருணத்தில் லுக்ரீஷஸ் என்னும் சிறந்த கிரந்தத்தை மொழிபெயர்த்தனர். ஹெலி என்பவர் தன் உத்தியோகஸ்தரை மேல்விசாரணைசெய்யச் சஞ்சாரம் செய்யும்போது ஒரு புத்தகம் எழுதினார். எலியூவென்பவர் தன் காலக்ஷேபத்திற்காகக் கருமாரவேலை செய்துகொண்டே பற்பல பாஷைகளைக் கற்றார். டாக்டர் டார்ன் என்பவர் தனக்குக்கிடைத்த ஒழிவு நேரங்களிலெல்லாம் எழுதி ஒரு பெரிய புத்தகத்தை முடித்தார். இவ்வாறே அநேகர் தமக்குக்கிடைத்த நிமிஷ நிமிஷமான ஒழிவு நேரங்களிலெல்லாம் செய்து எவ்வளவோ காரியங்கள் முடித்திருக்கின்றனர்.

பரீட்சையில் விடையெழுதும் மாணவரிற் பலர், எல்லாம் நன்றாக எழுதியும் கடைசியில் ஒன்றோ, இரண்டோ 'மார்க்' (Mark) வேண்டியிருப்பதால் பரீட்சையில்தேராமல் போகிறார்கள். யத்தாவதுவகுப்பில் பரீக்ஷைக்குச் சென்ற எனது நண்பரில் ஒருவர் எல்லாவற்றிலும் தேர்ந்தும் சரித்திரத்தில் இரண்டே 'மார்க்' வேண்டியிருந்ததாலும், மற்றொருவர் ஆங்கிலத்தில் ஒரு 'மார்க்' வேண்டியிருந்தாலும் பரீக்ஷையிற் றேராமற்போனார்கள். ஈதெல்லாம் அற்பம், அற்பம் அன்று என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கவில்லையா?

நாம் மூன்றாம்வகுப்பில் வாசித்த 'சிங்கமும் சுண்டெலியும்' என்ற கதை

யில் சிங்கம் அற்பம் என்று நினைத்திருந்த சுண்டெலியே, அது வலையிற் சிக்கிக் கொண்டிருந்தபொழுது அதன் உயிரையுங் காப்பாற்றிவிட்டது.

நாம், ராஜாங்கதண்டனையாலும், நம் முன்னேற்றத்திற்கு இடையூறு வருமென்ற பயத்தாலும், எல்லோரும் ஏளனம்செய்வார்களே என்ற வெட்கத்தாலும், பெரிய குற்றங்கள் யாவும் செய்யாமலிருப்போம்.

ஆனால் நாம் அற்பமென வெண்ணும் கோபம், வன்சொல், முதலியவைகளைத் தவிர்த்து வாழ்தலே மேன்மை.

கடவுள் சிருஷ்டியிலுள்ள ஒன்றையும் அற்பம் என்று தள்ளிவிடாமல் அஃது செய்யும் காரியங்களை ஆராய்ந்தறிந்து நமது அறிவை விசாலமாக்கிக் கொண்டு வாழ்வோமாக. M. K. மலையப்பன், உடுமலைப்பேட்டை.

"அற்பரோ டிணங்கேல்"
"நல்லோரைத் துணைக்கொள்"

நமக்குச் சிநேகம் அவசியமானவைகளில் ஒன்று; அஃதெங்ஙனமெனில் நற்சிநேகம் எங்ஙாளும் நீடித்திருப்பதோடு கெட்டமனிதனை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர முயலும். அப்படிக்கின்றி அற்ப சிநேகித்தத்தைக் கொண்டால் நம் பொருளெல்லாம் வீண் தூர்க்கிருத்தியங்களில் செலவாகி நாமும் பிராணசங்கடத்திற் குள்ளாவோம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்.

இதைக் குறித்துத்தான் நம் பெரியோர்கள் "அற்ப சிநேகிதம் பிராண சங்கடம்" என மொழிந்துள்ளார்கள். இதற்குச் சான்றாக மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் அணு மஹாரிஷி ஒரு சிற்றறிவுடைய நாயினிடத்தில் அன்பு வைத்து" அதை உயர்நிலைக்குக் கொண்டுவர, அந்நாய் தன் சிறியகுணத்திற்குத் தக்கபடி ஷி ரிஷியையே கொல்ல எத்தனித்தது. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நற்சிநேகிதத்தையும் சற்ஜன சகவாசத்தையும்கொண்டு நம் அறிவை நல்வழியில் விசாலிக்கச்செய்வதுதான் முறையாகும். சாதாரண அனுபவத்தில் ஒரு அழுக்குவஸ்திரத்தை வெண்மைப்படுத்த வேண்டுமெனில் எவ்வளவு கஷ்டம் பாருங்கள். அதற்குச் சுண்ணாம்பு, தண்ணீர், தீ, உழைமண் ஆகிய இவைகளைக்கொண்டு பக்குவமாய்ச் சுத்தம்செய்தால் வெண்மைநிறமாகும். அப்படிக்கின்றி வெள்ளைவஸ்திரத்தை அசுத்தம் செய்யவேண்டுமெனில் அரை நிமிஷத்தில் செய்துவிடலாம். இஃது எவ்வளவு எளிதாயிருக்கிறது. அதைப் போலவே நற்சிநேகிதம் கிடைப்பது அரிதாய்த்தான் இருக்கும். துஷ்டசிநேகிதம் வேண்டுமென்று நினைத்தால் ஒருநொடியில் நம்முடன் ஆயிரம்பேரென்றாலும் சேர்ந்துவிடுவார்கள். முடிவில், நேயர்களே! நமக்குச் சுத்த வெள்ளைவஸ்திரம் தேவையா அழுக்குவஸ்திரம் தேவையா வென்பதை யோசித்துப்பாருங்கள். நாம் நற்சகவாசத்தையே கைக்கொள்ளவேண்டு மென்றே நம்மனதில் தோன்றுகிறதன்றோ. ஒரு வெள்ளைவஸ்திரத்தை ஒரு சிகப்பு அல்லது மஞ்சள் நிறவேஷ்டியுடன் சேர்த்துவைத்தால் சிகப்பு நிறமாவது அல்லது மஞ்சள் நிறமாவது வெள்ளைவஸ்திரத்தில் படியுமன்றோ? அதுபோல் நல்லோர்கள் தீயர்களுடன்கூடுவதும்அப்படியே. நமக்குத்தற்சமயம் நல்லசிநேகிதனாகவும் ஆசிரியனாகவும் நம்மிடம் மாதாமாதம் வந்து நமக்கு நல்ல உபதேசம் செய்யும் ஸ்ரீ ஆனந்தபோதினியும் அதன் தகப்பனாராகிய N. முனிசாமி முதலியாரும் நம்தமிழர்களுக்காகவே அவதரித்திருக்கின்றனர். ஆதலால் இவர்கள் நீடூழிவாழ நம்குகப்பெருமான் திருவருள்புரிவாராக. சுபம்

. சி. ராமசாமி ரெட்டி, நாமக்கல்.

பரோபகாரம்.

வடக்கே ஹிமவத் பர்வதத்திலிருந்து தெற்கே கன்யாகுமாரி வரையில் மஹா உன்னதமான மலைத்தொடர்களால் அலங்கரித்துப் பிரவாஹ மிகுதியும் உற்பத்தி ஸ்தானம்கூட அறியக்கூடாததுமாகிய கங்கை காவேரிமுதலிய புண்ய நதிகளால் சோபிக்கப்பட்டு, அதிக அகலமும் ஆழமும்கூடி கம்பீரமாய் விளங்கா நின்று முத்து முதலிய நவரத்தினங்களும் கொடுத்துதவுகின்ற ஸமுத்திரங்களுடன் கூடிச் சிறப்புற்று விளங்குவது நம் இந்தியா தேசமே.

இத்தேசத்தின் செழிப்பையும் வனப்பையும் கூறப்புகின் விரியுமென் றஞ்சி நிறுத்துகிறோம். எங்ஙனமெனில் தங்கம், வெள்ளி, வைரம், வைடூரியம் முதல் இரும்பு, செம்புகளான பஞ்சலோகங்களும் கிடைத்தற் கரிய தானிய வகைகளையும், கொடுப்பது நம் தாயாகிய இந்தியாவே.

இத்தகைய புண்ய பூமியில் பிறந்து வளர்ந்து வசித்துவரும் நாம், இப்புண்ய பூமியை பரதக்கண்டமென்று சிறப்புற்றுக் கூறுமாறு நம் முன்னோர்கள் அனுஷ்டித்த ஆசாரங்களையும் நன் நெறியையும் கடைப்பிடித்துச் செல்ல முற்றிலும் முயலவேண்டும்.

அவர்கள் அனேகம் மேன்மை பெற்ற குணங்களை அடைந் திருந்தார்கள்; அவற்றுள் சில குணங்களை நம்மால் எடுத்துரைக்கக் கூடுமானவை.

அவர்களிடம் சிறப்புற்று விளங்கின ஈகை இரக்கம் பரோபகாரம் பச்யாதாபம் தயை தாக்ஷிண்யம் வருவிருந்தோம்பல், இத்தகைய குணங்கள் அவர்கள் வம்சத்தவரான நமக்கு லவலேசமேனும் இருக்க வேண்டியது மிக்க அவசியமேயாகும். இத்தகைய மேன்மைக்குணங்களில் மிகவும் அருமையானதும் விசேஷமானதும் (பரோபகாரம்) நம்மில் இருக்குமாகில் மற்றைய குணங்கள் 'தன்னிச்சையில் கைசேரும். அஃதெப்படியெனில் பரோபகார சிந்தையுள்ள ஒருவன் தான் எவ்வளவு வறுமையால் சிறுமைப்பட்டும் தன்னால் இயன்றமட்டும் உதவி புரிய பின்னடைய மாட்டான்; யாசிப்போருக்கு இல்லையென மாட்டான்

"ஆற்றுப்பெருக்கற்று அடிசுடுமன்னாளும்
ஊற்றுப்பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்லகுடிப்பிறந்தார் நல்கூர்ந்தராலும்
இல்லையெனமாட்டார் இசைந்து"

"காவேரியானது பிரவாஹமின்றி வற்றி இருக்கும் காலத்திலும் ஊற்றினால் உலகத்தவருக்குத் தண்ணீரைக் கொடுக்கும். அதுபோல் நல்ல குடிப்பிறந்தோர் வறுமையான தசையை அடைந்தும் தம்மை வந்தடைந்து யாசிப்போருக்கு இல்லையென்று சொல்ல மனந்துணிய மாட்டார்."

பெரிய சக்ராதிபதியாய் ஈகையென்பதே உருவெடுத்துவந்ததோ என்று ஐயமுறுமாறு வித்வான்களால் புகழப்பட்டும் ஸன்மானிக்கப்படும் உள்ள குமுண சக்கிரவர்த்தி தன் ராஜ்யத்தை இழந்தும் தம்பியினால் காட்டிற்குத் துறத்தப் பட்டும் வசித்துவருகையில், தன்னை யாசித்த வித்வானுக்குத் தன் தலையையும் அக மகிழ்வுடன் கொடுக்கச் சித்தமாய் இருந்தனனன்றோ?

நம் மஹாபாரதக் கதையில் கொடைமாளி என்று மிகவும் கொண்டாடப் படும் கர்ணன் யாசிப்போருக்கு இல்லையென்னாமல் எதையும்கொடுத்துவந்தான். மஹாவீரர்களாகிய பீமார்ஜுனர்களும் நகுல ஸஹாதேவர்களும் போர்புரியும் போர்முனையில் அர்ஜுனனுக்கெதிர் நின்று போர்புரியும் கர்ணனின் அதிக ஸாஹஸமுள்ள அஸ்த்ர சஸ்த்ரங்கள் யாவும் நசித்துப்போயின.

அப்பொழுது மஹாதர்மசாலியும் எற்றவர்க்கு இல்லையென்னுதவனுமான கர்ணனின் தர்மமானது அர்ஜுனனுக்கு எதிர்நின்று மஹா அற்புதமாய்ப்போர்புரிந்தது. அதைக்கண்ட க்ருஷ்ணபகவான் பிராம்மணவுருக்கொண்டு கர்ணனிடம் சென்று யாசகம் வேண்டினார். அப்பொழுது கர்ணன் "ஓய் சீரும் சிறப்பும் வாய்ந்த அந்தணரே, ரணகளத்தில் இருக்கும் மஹாபாபியாகிய என்னிடம் என்ன இருக்கிறது" என்று வங்கினான். அதுகண்ட பரமாத்மா, எல்லார் உள்ளத்தையும் அறிந்தவர் ஆகையால் நீ செய்த தானங்களின் பலனை தர்மத்தை எனக்குக் கொடு என்றார்; தக்ஷணமே தயங்காமல் அப்பூமானும் தான் ஆயுள் முழுவதும் செய்த தர்மத்தின்பலன்களை கைத்தத்தினால் நீர்வார்த்து இத்தகைய பேருதவிசெய்யும் சமயம்வாய்த்ததே என்ற பேரானந்தத்துடன் தத்தம் செய்தான். மறுநிமிஷமே அர்ஜுனனுடைய பாணத்தினால் உயிர்துறந்தான். தன் உயிரையும் த்யஜித்து தானம்செய்ய வல்ல மஹா பெருக்குணம் அவனிடம் சிறந்து விளங்கியது.

இனி பரோபகார கிரமத்தைக் கூறுவோம்.

இவ்வுலகில் மனிதன் தனக்குரித்தான வஸ்துக்கள் யாவையும் தானே சித்தம்பண்ணிக்கொள்ளுகிறான் இல்லை. அவன் ஆடையை நெய்யநெசவுக்காரனும் வெளுக்க வண்ணானும் தேவையாய் இருக்கிறது. அவ்வாறே மற்ற உணவுப்பொருள்களும் இருக்கின்றன. ஆகையால் மற்றவரின் உதவியை அவசியமாய் நாடுகின்றவனாய்இருக்கிறான். ஜீவனத்திற்கு அன்னியருடையஉதவியும் அவனுக்கு அவசியம். அதைக்குறித்தே "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" என்றும் பெரியோர்கள் கூறுகிறார்கள். நாம் உற்றுநோக்கின் ஸகலமும் அறிந்த மானிடரேயல்லாது மற்றச்சராசரங்களும் பரோபகாரம் புரியக் காண்கிறோம். அற்பமான புல்லைப்புசிக்கும் பசுவானது கிடைத்தற்கரியதும் அமிர்தத்திற் கொப்பானதுமான பாலை மனிதன் பொருட்டன்றோ கொடுக்கிறது? கப்பும் கிளையுமாய் செழித்திருக்கும் மரமானது தான்கொடிய வெயிலை ஸஹித்துக்கொண்டு தன்னை யடைவோர்க்கு தாபத்தைத் தணித்து இன்பமான நிழலையும் மதுரமான காய் கனிகளையும் கொடுத்துதவுகிறது. இவ்வாறு ஜடவஸ்துக்களே சுயநலங்கருதாது பரோபகாரம் புரியின் ஆறறிவுவாய்ந்த நாம் செய்யவேண்டியது எவ்வளவு முக்யமான கடமையாகும்.

நம்மில் கூறப்படும் நான்காசிரமங்களில் கிருஹஸ்தாசிரமத்தையே மிஹ உத்தமமானதென்று கூறுகிறார்கள்; அதை அனுஸரித்தே "இல்லறமல்லது நல்லறமன்று" என்றும் இல்லறமே இன்பவீடையும் எணியாய் இருக்கிறதென்றும் அறிந்தோர் கூறுகிறார்கள். ஏனெனில் க்ருஹஸ்தாசிரமத்தில் இருப்போர்கள் மற்ற மூன்றாசிரமத்தினோருக்கும் அதிதிபூஜை அன்னமிடுதல் முதலியது செய்யக்கூடியவர்களாய் இருக்கிறபடியால் அத்தகையோர் சிறப்புற்றுக் கூறப்படுகின்றனர்.

நம் இந்தியாதேசத்திற்காக 25 வருஷகாலமாய் இடைவிடாமல் உழைத்து இப்பொழுது பந்தோபஸ்தில் இருக்கும் மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார்செய்த அநேகம் அற்புதப் பிரஸங்கங்களில் ஒன்றில் "இந்தியர்கள் மிகப் பரோபகாரகுணமுள்ளவர்களாய் இருந்தார்களென்றும், அதற்கு அத்தாக்ஷி வருவோர் தங்குவதற்குத் திண்ணையில்லாமல் அவர்கள் வீடுகட்டார்கள் என்றும் கூறிஇருக்கிறார்." ஆனால் இக்காலத்தில் சிலகனவான்கள் பெரிய(Compound) சுற்றுச்சுவரெடுத்து பங்களாக்கட்டி வருவோரை உள்ளே விடாமல் காக்க நாயையும், சேவகர்களையும், "Not at home" பெட்டிகளையும் காவல் வைத்து விடுகிறார்கள்.!!

நம்மிலும் ஏழ்மையுடையோரைக் காப்பாற்றும் கடமை நாம் ஒவ்வொருவருக்கும் உள்ளதென்பதை மறக்கலாகாது. பிறருடைய சுகத்தைத் தன் சுகமாகவும் அவர் கஷ்டங்களை தன்கஷ்டமாகவும் கருதவேண்டும். மற்றவர்களுக்கு ப்ரதி எதிர்பாராமல் நம்மால் இயன்றவரையில் த்ரிகரணங்களாலும் உதவிபுரியச் சித்தமாய் இருக்கவேண்டும். சகலஜீவர்களும் ஈஸ்வராம்சமாகையால் எல்லாரிலும் விளங்குவது ஒன்றென்று நன்கறியப்படவேண்டும்; ஆகையால் உயர்வுதாழ்வென்பதைக் கனவிலும் கருதலாகாது. இவ்வாறு ஜீவராசியின் சகோதரத்தன்மையை உணர்ந்து சண்டைகளை நீக்குவதேநலம். அஷ்டமா சித்திகளும் சித்தித்து ஞானோதயமானதால் புத்தரென்ற காரணப் பெயரைத் தரித்த அம்மஹானும் உடனே மோக்ஷவீட்டை அடையக்கூடியவரானாலும் ஜனங்களின் அஞ்ஞானத்தை ஒழித்து ஞானம் புகட்டுவதற்காகவன்றோ அவ்வளவுகாலம் ஹிதோபதேசம் செய்வதில் தன் காலத்தைக் கழித்தார்? அவ்வாறே மற்றும் அநேகம் மஹான்கள் பரோபகாரத்திற் கென்றே தம் வாழ்நாளைச் செலவழித்திருக்கின்றார்கள்.

இவையாவும் உணர்ந்த நாம் எல்லாம் பிரம்மமயமானதென்றும் சகல ஜீவர்களும் ஈஸ்வரனின் பாலர்களென்றும், ஒருதாயின் வயிற்றிற் பிறந்த அனேகங் குழந்தைகளில் புத்தியிலோ தனத்திலோ குறைவாய் இருக்கிற ஒருவருக்கு மற்றொருவர்செய்யும் உபகாரத்தைக்கண்டு தாயானவள் எப்படி களிப்படைவளோ, அதுபோலவே பாலஜீவர்கள் ஒருவர்க் கொருவர் செய்யும் உதவியைக்கண்டு பரமாத்மாவும் களிப்படைந்து அருள்புரிவார். ஓம் தத் ஸத்.

(Selfless life and Deathless life are one) என்கிறபடி பரோபகாரசிந்தனைஉள்ளவர்கள் சிரஞ்சீவிகளாவார்கள். அரியபெரிய விஷயங்கள், ஆத்மார்த்தமாகவும் லௌகீகமாகவும் அடங்கியதும் மிகக்குறைந்த சந்தாவிலும் வெளிவருகிறதுமாகிய நம் ஆனந்தபோதினி சீக்கிரத்தில், 10000, சந்தாதாரர்களை உடையதாய் சிறந்த வ்யாஸங்களையடைந்து மேன்மேலும் செழித்தோங்குமாறும் ஆனந்தமளிக்குமாறும் எல்லாம்வல்ல ஈசனைப் பிரார்த்திக்கிறோம்.

எஸ். பி. "ஓர் ஸகோதரி"

ஒழுக்கம்.

ஒழுக்கமென்பதை ஆசாரமென்பர் வடநூலார். அதாவது வைதிகநூலில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். இதுவே அறநெறி எனப்படும். எனவே ஒழுக்கமே அறமாம் என்பது. இதனை "அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அது ஒழுக்கம், வழக்கம், தண்டம் என மூவ்வகைப்படும். ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று, அவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகல். ஈண்டு தெய்வப் புலவர் திருவள்ளுவரார் "சிறப்புடை ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது" என்று பரிமேலழகர் கூறியதனால் உணரப்படும். இதனால் வைதிக நூலில் இது செய்க எனவிதித்ததே அறம். அவ்வழி ஒழுகுதலே ஒழுக்கமாம் என்க. விலக்கப்பட்டனவற்றைச் செய்யாதொழிதலும் அறமேயாம். வைதிக நூல்களாவன வேதம், ஸ்மிருதி, புராணம், இதிகாசம் என்பவைகளாம். வேதம் நான்கு, புராணம் ஒன்று, தர்க்கம்ஒன்று, மீமாம்சைஒன்று, அங்கம் ஆறு, தர்ம சாஸ்திரம் (ஸ்மிருதி) ஒன்று ஆகப் பதினாலும் வித்தியாஸ்தானங்களென்றும் வைதிகநூல்களாமென்றும் ஸ்மிருதிகள் கூறுகின்றன. இவைகளே தர்மத்துக்காதாரமாம்.

இவற்றுள் தர்மங்களை விரித்துக்கூறுவது ஸ்மிருதியே. ஸ்மிருதி பதினெட்டு என்ப. அவற்றுள் மநுஸ்மிருதியே சிரேஷ்டமானது. எல்லாஸ்மிருதிகளுக்கும் மூலமாயுள்ளது. மநுஸ்மிருதிக்கு விரோதப்பட்டவை யெல்லாம் பிரமாணமாகா. ஆகவே மநுநூலுக்கு விரோதப்படாதவற்றுள் கூறப்பட்ட விதிகளை அனுசரித்து நடப்பதே ஒழுக்கமாம். "இனி மனு முதலிய அந்நூல்களாற் பொதுவாகக்கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங்கும்; அஃதறிந் தடக்கிக்கொள்க; யாமுரைக்கிற் பெருகும்" என்று பரிமேலழகர் கூறியதனால் திருக்குறளிற் கூறப்பட்ட அறங்களெல்லாம் ஸ்ருதிநூல்களினின்றுந் தொகுத்துக் கூறப்பட்டவைகளே யென்று விளங்கப்பெறும். வைதிகநூலாகிய ஸ்மிருதியர்த்தங்களைத் தொகுத்துக்கூறியதனாலேயே திருக்குறள் தமிழ் வேதமென்று பெரியோர்களாற் புகழ்ந்து கூறப்படுகின்றது.

அவ்வொழுக்கந்தான் நல்லொழுக்கம் தீயொழுக்கமென்று இருவகைப்படும். இந்த நல்லொழுக்கமே விதியெனப்படும். தீயொழுக்கம் விலக்கு எனப்படும். நூல்களிற் கூறப்படும் நல்லொழுக்கங்களுக்கு மாறானவையெல்லாம் தீயொழுக்க மென்று கழிக்கப்படும். நல்லொழுக்கமே அறமென்று புகழப்படும். அவ்வறம் சிறப்பும் பொதுவுமென இருவகைத்தாம். சிறப்பு எனப்படுவது நான்குவருணத்தாருள் ஒவ்வொருவருணத்தாருக்கே உரியதாய்ப் பிறர்க்குப் பயன்படாதது. பொது என்பது நாலுவருணத்தாரும் ஒப்ப ஒழுகுதற்குரியது. இப்பொது ஒழுக்கத்தினையே திருவள்ளுவநாயனார் விரித்துரைத்தருளினார். சிறப்போ ஸ்மிருதியாதி நூல்களினின்றும் அவ்வவ்வருணத்தார் உணர்ந்து கொள்ளத்தகுவது. ஆதலால் அதனைவிடுத்துப் பொது ஒழுக்கத்தில் சிலவற்றையாம் இங்கு எடுத்துக்கொள்வோம். ஒழுக்கமுடைமை, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், நன்றியறிதல், நடுநிலைமை, அடக்கமுடைமை, பொறையுடைமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனிலசொல்லாமை, தீவினையச்சம், ஈகை, புகழ், அருளுடைமை, புலான்மறுத்தல், தவம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, கொல்லாமை, மெய்யுணர்தல் முதலியனவாம். இந்நெறிதவறாது நடத்தலே ஒழுக்கம் என்பதாம்.

இவ்வொழுக்கத்தைக் கூறுவதனால் யாது பயனெனின், ஸ்தூலசூட்சும காரண சரீரங்களிலும் கலந்து மறைந்துநின்று ஆன்மாவைப் பந்தித்து, சொர்க்காதிபுவனங்களோறும் கறங்கெனச்சுழல்வித்து, இன்பத்தாற் களிக்கவும் துன்பத்தால் துக்கப்படவும் செய்து, அநாதிதொடங்கிவிடாமல் தொடர்ந்துவருகிறதும், மேலேவரும் ஜன்மங்களுக்கு வித்தாய்நிற்பதுமாகிய கன்மபந்தத்தை யறுத்துக்கொண்டு விடுபடுவதற்கு இவ்வொழுக்கத்தை யன்றி வேறு கருவி காணப்படாமையால் மிக்க பயனுண்டாமென்க. எனவே ஒழுக்கத்தால் கன்மபந்தங் கழன்று களங்கமற்றுப் பிரகாசிக்கும் ஜீவான்மாவே மோட்ச இன்பமனுபவித்தற் குரியதாம். கடவுளைப்பிரத்தியக்ஷத்திற் காணவிரும்புகிறவர்களும், இகபரபோகங்களை யடையவிரும்புகிறவர்களும், நித்தியானந்தப் பேரின்பப் பேற்றை யிச்சிக்கிறவர்களும் மேற்கூறிய வைதிகவொழுக்கந் தவறாது நடத்தல் வேண்டும். முற்காலத்திலிருந்த ரிஷிகள் முதலாயினோரும் இந்நெறி யொழுகியே பெருமைபெற்றார்கள். ஆதலால் இவ்வறநெறி மிகச்சிறப்புடையதாம். அறம் மிகவும் நுட்பமானது. அதன் இரகசியம் காண்பதற்கரியது. ஆதலால் அறநெறி யொழுகுவோர் அவசியம் கல்வியை விரும்பி ஐயம்திரிபறக் கற்க வேண்டும். கல்வி யறிவில்லாவிட்டால் இடர்ப்படநேரிடும். அறமும் வழுவும். அதுபற்றியே அன்னையாரும் "நூன்முறைதெரிந்து சீலத்தொழுகு" என்

றருளினர். அதாவது நூல்களில் கூறப்பட்ட அறமுறைமையை யுணர்ந்து அந்நெறி தவறாது ஒழுகுகவென்பதாம்.

ஏனெனில், அறம்போலவே மறமும் ஒரு சமையந்தோன்றும். ஆதலால் அறநெறியிது, மறநெறியிது என்று கண்டறிவது கஷ்டமாயிருக்கும். இதனைத் தர்மசங்கடமென்பர் பெரியோர். இச்சங்கடநேர்ந்தகாலத்துக் கல்வியறிவாலன்றி அவற்றின் உண்மை உணரவியலாது. ஆதலால் கல்வி யறிவு அவசியம் வேண்டப்படும். இதுபற்றியே "ஓதாதார்க்கில்லை யுணர்வொடுமொழுக்கம்." என்றார். கல்விப்பயிற்சி யில்லாதார்க்கு நல்லஞானமும் நல்லொழுக்கமும் கிடையா என்பது. கல்வியிலையேல் ஞானமில்லை. ஞானமிலதாகவே ஒழுக்கமுமிலதாம். அறிவு ஒழுக்கமிரண்டிற்கும் கல்வியே காரணமாகவிருக்கின்றது. கல்வி யறிவுடையனாய் அறநெறியொழுகுவான் எளிதிற்குறித்த பயன் பெறுவான். இவ்வொழுக்கம் உயர்ந்தோர்க்கும் இழிந்தோர்க்கும் ஒப்பப் பயனளிப்பதாதலால் எல்லாரும் கடைப்பிடித்தொழுகுதலே நன்று. "ஒழுக்கமுடைமை குடிமையிமுக்க, மிழிந்தபிறப்பாய்விடும்" என்றதனால் ஒழுக்கமுடைமையே உயர்குலத்துக்குக் காரணமென்றும், ஒழுக்கம்தவறுபடில் இழிந்தகுலமாகச் செய்யுமெனவும் பெறப்பட்டது. "ஒழுக்கம் விழுப்பந்தரலானொழுக்க முயிரினு மோம்பப்படும்". அறிவுள்ளோர் ஒழுக்கத்தைத் தமது உயிரைவிடச் சிறந்ததாகக் கருதவேண்டும்; ஏனெனின் அதுவே மேன்மையைத்தருவதாம் என்று பெறப்பட்டது.

"ஓதலினன்றே வேதியர்க்கொழுக்கம்"
"மறப்பினுமோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்"

என்பனவற்றால் முதல்வருணத்திற்பிறந்த உயர்ந்தோராகிய பார்ப்பார்க்கு வேதமோதுதலாகிய தொழிலைவிட நல்லொழுக்கமுடைமையே சிறந்தது என்றும், பார்ப்பான் வேதத்தை மறந்துவிட்டாலும் மறுபடியும் படித்துக்கொள்ளக்கூடும்; ஒழுக்கத்தினின்று தவறுவானாயின் தன்குடிப்பிறப்பின் உயர்வுகெட்டுத் தாழ்ந்த வருணத்தானாய்விடுவான். அங்ஙனமாயின் அவன் வேதமோதவும் வைதிக கருமங்களைச் செய்யவும் அருகனாவதில்லை. இல்லையாகவே அவன் இம்மையில் நீங்காப்பழியையும், மறுமையிற் கொடியநரக துன்பானுபவத்தையும் அடைவான் என்பது விளங்கின. இதனையே "நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க, மென்று மிடும்பைதரும்" என்றதனால் நாயனார் விளக்கியருளினார். அதாவது, நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் நின்று இருமையினும் இன்பந்தரும். உலகத்தில் புகழையும் சிறப்பையுந் தரும். மறுமையில் புண்ணிய உலகவாழ்வையளிக்கும். தீயொழுக்கமோ இகபரமிரண்டிலும் துன்பத்தையே தரும் என்பதாம். இதனால் நல்லொழுக்கம் நன்னிலத்தில் விதைக்கப்படும் நல்லவிதையைப்போன்று மறுபிறப்பிலும் நன்மையை அளிக்கும். தீயொழுக்கமாகிய பாவமும் அவ்வாறே மறுபிறப்பில் துன்பத்தையே தரும் என்று கூறித் தீயொழுக்கத்தை விலக்கவும், நல்லொழுக்கத்தைப்பற்றிக் கொள்ளவும் நாயனார் போதித்தருளினார். கல்வி யறிவுள்ளோராயினும் முன்னோர் ஒழுகிய நெறிபற்றியே நடக்கவேண்டும். அவ்வடிச்சுவடுதவறின் வடுப்படும்.

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலாதார்."

நூலுணர்ச்சியிற் சிறந்தபெரியோர் ஒழுகும் நெறியறிந்து ஒழுகாதவர் பலநூல்களைக் கற்றிருந்துங் கல்லாதவராகவே கருதப்படுவாரென்பது. பெரியோர்

பரம்பராக்கிரமத்தில் சிக்கற வுணர்ந்துள்ளவராதலால் அவரொழுகும் நெறி மாசற்றநெறியாம். ஆதலால் அறநூல் வல்ல பெரியோர்பாற்கேட்டு, ஐயம் திரிபு அறியாமை என்னும் குற்றமறத்தெளிந்து, அறநெறியில் மாறுபடாதொழுகப்பெறின் கன்மமென்னும் அநாதிபந்தமொழிந்து, சர்வேசுரனுடைய கருணைக் குப்பாத்திரராய், அழிவில்லாத நித்தியானந்த மோட்ச சாம்ராஜ்யத்தை ஜயித்துப்பேரின்பத்தில் மூழ்கிவாழலாம். சிவானந்தம்.

குடியால் வரும் கேடுகள்.

(1) தேகத்தில் நாளடைவிலே சக்திகுறையும். நரம்புகள் தளர்ச்சியுறும். பீடித்த வாதநோயுண்டாம்.

(2) தோலிலுள்ள இரத்தப்பைகள் விரிவமைந்து அதிலே அளவுக்கு மிஞ்சிய இரத்தம் விழும். இதனால் இரத்தக்கட்டு உண்டாகும்; சரீரபோஷணைக் குறைவும் சக்திக்குறைவும் உண்டாம்.

(3) சரீரத்திலே ஒருவித விஷமும் பரவுமெனப் படுகிறது. அப்பொழுது ஜீரணக் கருவிகளில் அநேகவிதமான நோய்கள் பிறந்து துன்புறுத்தத் தலைப்படுகின்றன. பின் இரப்பையும் ஈரலுங் கெட்டுப்போவதன்றி இரப்பையின் சீதளமான ஜவ்வும் வெந்து புண்ணாகின்றது. இதனால் அன்னாசயத்துக் குரிய பாசன நீரின் பெருக்குத் தடைப்படுகிறது.

(4) பிராண வாயுவைக் கிரகித்து உட்செலுத்தும் சக்தியும் கெட்டியாகும் சக்தியும் இரத்தத்திற்குக் குறைகிறது. அதனால் சரீரத்தின் சீதோஷ்ணஸ்திதி குன்றி வேலைசெய்யும் சக்தியும் குறைகிறது. தேகம் சிறிது அசௌக்கிய மடையும்போது அபாயகரமான நிலையை யடைகிறது.

(5) இருதயத்திலே படபடப்பு அதிகரிக்கும். நரம்புகளுக்குப் போதுமான போஷணை யில்லாமற்போய்க் கடைசியாக இரத்த விருத்திக்கே இடமில்லாமற் போய்விடுகிறது. கடைசியில் மரணத்திற்கே மதுபானம் ஏதுவாக முடிகிறது.

மதுபானம் செய்ய விரும்புகிறவனும் வியாதியஸ்தனாகவே எண்ணப்படுவானெனின், அதனை ஓயாமல் பருகி மயங்கியலையும் மதியீனர்கள் பலவிதமான வியாதிக்குட்பட்டுக் கடைசியில் அகால மரணத்திற்குப் பாத்திரவான்களாவார்கள் என்பதில் ஐயமுண்டோ? சரவணன்.

சிறுவர்கள் பக்கம்

சிரஞ்சீவி ரகசியம்

(வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.)

பூர்வகாலத்தில் காசியில் ஓர்வகையான பிராம்மணர்கள் இருந்தார்கள். அவர்கள் இராஜா வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய குடும்பப்பெயர் தர்மபாலு. அக்குடும்பத்தில் தர்மபாலு என்பவன் அரசாட்சிசெய்துகொண்டிருந்தனன். அவனுக்கு ஓர் சற்புத்திரன் உதித்தனன். அவனுக்கும் தன்பெயரையே அவன் தகப்பனார் வைத்தனர்.

இந்த தர்மபாலு என்னும் ராஜகுமாரனுக்கு வித்தியாப்பியாசம் செய்யவேண்டிய பருவம் வந்தவுடன் அவன் தகப்பனார், அவனை, அக்காலத்தில் கல்வியிற்

162405

சிறப்புற்றிருந்த தேசலை என்னும் பட்டணத்திலுள்ள பண்டிதரொருவரிடம் அனுப்பினார்.

அப்பண்டிதரிடத்தில் தர்மபாலு வித்யாப்பியாசம் செய்துகொண்டு வருங் காலத்தில், பண்டிதருடைய குமாரன் இறந்துவிட்டான். அவனை அடக்கம் செய்வதற்காகப் பண்டிதர் தமது சிஷ்யர்களுடன் முதுகாட்டிற்குச் சென்றார். தர்மபாலுமாத்திரம் செல்லவில்லை.

குரு, தன்புத்திரனுக்குச் செய்யவேண்டிய கிரியைகளனைத்தையும் செய்த பிறகு சிஷ்யவர்க்கங்களுடன் வீடுவந்துசேர்ந்தார். அப்போது தர்மபாலுக்கும் மற்றையசிஷ்யர்களுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது:

தர்மபாலு: "நீங்கள் நமது குருவின்மகன் சிறுவயதிலேயே இறந்துவிட்டானென்று வியசனப்படுகிறீர்கள். ஆனால் மனிதர்கள் சிறுவயதில் இறந்துபோகக் கூடாதுதான்.

மற்றசீஷர்கள்: எல்லாஜீவ ஜந்துக்களுக்கும் எக்காலத்திலும் மரணம் உண்டென்பதை நீ யறியாயா?

தர்மபாலு: ஆமாம், நீங்கள் சொல்வதுசரிதான். ஆனாலும் மனிதர் விருத்தாப்பியமானபிறகு இறக்கவேண்டுமே யொழியச் சிறுவயதில் இறந்துபோகக் கூடாது.

மற்றசீஷர்கள்: ஆனால் உங்கள் வம்சத்தில் சிறுவர் இறப்பதில்லையா?

தர்மபாலு: ஆமாம். எங்கள் வம்சத்தில் ஒருவர்தவறாமல் எல்லாரும் இரட்டைக் கிழவர்களாகி (மிக்கவயதுமூதிர்ந்து) இறக்கிறார்களே தவிர ஒருவரும் சிறுவயதில் இறப்பதில்லை.

இவன் இப்படிச் சொல்லவே மற்ற சீஷர்கள் ஆச்சரியமடைந்து குருவினிடம் இச்சங்கதியைக்கூற அவர் தர்மபாலுவையழைத்து, "உங்கள் வம்சத்தில் ஒருவராவது சிறுவயதில் இறப்பதில்லையா?" என்று கேட்டார்.

அதற்கு தர்மபாலு: "ஆமாம். எங்கள் குலத்தில் ஒருவரும் சிறுவயதில் இறப்பதில்லை" என்றான்.

இதைக்கேட்டு குரு மிக்க ஆச்சரியப்பட்டு பின்வருமாறுயோசித்தார்.

"இதென்ன அதிசயம்! நான் தர்மபாலுவின் தகப்பனிடம் இதைச் சொல்லி இதன் உண்மையை அறியவேண்டும். அவர் இது நிஜந்தானென்று சொன்னால், அவர்களிடம் குடிகொண்டிருக்கும் குணாகுணங்களைக்கேட்டு அறிந்து அதன்படி என்னைச் சீர்திருத்திக்கொள்ளக்கடவேன்."

அப்படியே அவர் ஐந்துநட்களுக்குக்குப்பிறகு ஓர்கூலியாளின் தலையின் மேல் ஒருவெள்ளாட்டின் எலும்புகளை மூட்டையாகக் கட்டுவித்து, அவனுடன் காசிப்பட்டணம்வந்துசேர்ந்தார்.

இவர் தர்மபாலுவின் வீட்டிற்குவந்ததும் தர்மபாலுஅரசன் இவரை மிக்க உபசாரத்தோடழைத்து, அவருடைய பசியையாற்றி ஓராசனத்தின்மேல் வீற்றிருக்கச்செய்தான். குருவானவர் "ஓ அந்தணா! மிகவும் புத்திசாலியாயிருந்த உன்னுடைய குமாரன் இறந்துபோய்விட்டான். ஆனால், உனக்கு எல்லாப்பொருட்களும் அநித்தியம் என்று தெரியுமாதலால், வீணாக வியசனப்படாதே" என்றார்.

அரசன்: (சிரித்துக்கொண்டு) என்மகன் இறந்துபோகவில்லை. வேறு யாராவது இறந்துபோ யிருக்கவேண்டும்.

பண்டிதர்: (ஆச்சர்யமடைந்து) உன் சொந்தமகனே இறந்துவிட்டான். இதோபார் அவனுடைய எலும்புகள்.

அரசன்: இவ்வெலும்புகள் ஓர் ஆட்டினுடையதா யிருத்தல்வேண்டும். என் மகனுடையதல்ல. எங்கள் வம்சத்தில் ஏழுதலைமுறைகளாக ஒருவரும் சிறு வயதில் இறந்துபோனதில்லை.

பண்டிதர்: நீர் என்னவிரதங்களை அனுட்டிக்கிறீர்? என்ன நீதிகளை அனுசரிக்கிறீர்? உம்வம்சத்தில் சிறுவர்களை மரணத்தினின்றும் காப்பாற்றும் மர்மமான சங்கதி எது?

தர்மபாலு என்பவர் சொன்னதாவது.

1. நாங்கள் மாசற்ற தர்மவழியில் நடக்கிறோம்.

2. பொய்யென்பது எங்களிடம் நாடாது.

3. பாபச் செயல் எங்களைக் கண்டால் விலகும்.

4. எது பாவமான காரியமோ அதைத்தவிர்த்து புண்ணியமான காரியங்களைத் தழுவுவோம்.

5. நல்லவர்கள் செய்யும் பிரசங்கங்களைத்தான் கேட்போம்.

6. துஷ்டர்கள் எங்கள் காதினிடம்வந்து உரத்துக் கூவினாலும் செவி கொடோம்.

7. நாங்கள் துஷ்டர்களைத்தள்ளி சிஷ்டர்களைச் சிநேகிதர்களாக்கிக்கொள்வோம்.

8. அதிதிகளுக்கு மிக்க சந்தோஷத்துடன் பிக்ஷை கொடுக்கிறோம்.

9. அப்படிப்பட்ட தர்மத்தின் பலனாகக் கடவுள் எங்களுக்கு சௌக்கியத்தைத் தந்தருளுகிறார்.

10. அதிதிகள் மனங்குளிர்ந்து எங்களை ஆசீர்வதித்துக் செல்லுகிறார்கள்.

11. நாங்கள் பிராம்மணகுல சிரேஷ்டர்களையும், திக்கற்றவர்களையும், களைத்துப் போனவர்களையும், பிச்சைக்காரர்களையும் எங்கள் பந்துக்களைப் பூஜிப்பதுபோல் பூஜிக்கிறோம்.

12. எங்களிடம் களங்கமற்ற பதிவிரதாதர்மம் குடியிருக்கிறது.

13. எங்களுக்கு, எங்களது சுந்தரமான மனைவிகளைத்தவிர, வேறொருவர் மீதும் விருப்பம் கிடையாது.

14. எங்கள் மனைவிகளோ என்றால், தங்களுடைய அரும்பர்த்தாக்களைத் தவிர வேறொருவரையும் பார்த்திருக்கமாட்டார்கள்.

15. இப்படிப்பட்ட பதிவிரதா தர்மங்களின் பலனாக, எங்களுக்கு புத்திகூர்மையும், சாஸ்திர விஷயங்களில் மிகவும் பயிற்சியும் குண சீலமும், குழந்தைகள் உற்பத்தியும், உண்டாகின்றன.

16. எங்கள் பந்துக்களும், மித்திரர்களும், சேவகர்கள் முதலிய எல்லோரும், இம்மாதிரியே புண்ணிய தசையை நாடுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

17. உண்மையான புண்ணியவழி எங்கள் மனதில் குடிகொண்டிருக்கிறது. எங்களகத்தை அசுத்தப்படுத்த, ஒரு நோய்க்காவது, ஒரு விசனத்திற்காவது தைரியம் இல்லை.

18. எங்களுடைய நெற்றி எல்லையில்லாச் சந்தோஷத்தில் முழுகியிருக்கிறது.

19. இவைகளின் பலன்தான், எங்களுடைய சிறுவர்களை மரணத்தினின்றும் காப்பாற்றுகிறது.

20. பனையிலையாற் செய்த குடை எப்படி வெயிலைத் தடுக்கிறதோ, அப்படியே பரிசுத்தமான மனத்தை யுடையவர்களுக்கு நேரும் துன்பங்களை அவர்களுடைய புண்ணியங்கள் தடுத்துவிடும்.

ஆகையால் தர்மபாலு இறக்கவில்லை. இவ்வெலும்புகள் யாருடையதோ எனக்குத் தெரியாது.

குருவானவர் அவர்களுடைய மகிமையை வியந்து வெட்கிப் போய்விட்டனர்.

ஆகையால் இதைப் படிக்கும் எல்லாரும் மேற்சொன்னவாறு நடந்து நீடித்த வாழ்வைப் பெற்று சுகமாய் வாழ்வார்களாக.

ஆரணி. மசு. விசுவநாத சாஸ்திரி.

ஸ்திரீகள் பக்கம்.

மாதர் மறுமணம்

(70–ம் பக்கத் தொடர்ச்சி.)

சாஸ்திரோக்தங்களை நன்கு ஆராய்ந்து அதன் நியமங்களை உணர்ச்சியோடு பரிசீலனை செய்து பார்த்தால் இன்னும் தெளிவாய்ப் புலப்படும். விவாக காலத்தில் கன்னிகையினுடைய தகப்பனு தெய்வசாட்சியாயும், ஹோமபுரஸ்ஸரமாயும், மந்திர பூர்வகமாயும் கன்னிகையை வரனிடம் கொடுக்கிறான். அதன்பின் வரனும் வதுவும் உள்ளிணங்கி ஆத்ம ஐக்கியப்பட்டுப் பரஸ்பரம் வரித்துக்கொள்கிறார்கள்.

அதன்பிறகு பிதாவிற்கு அக்கன்னிகையை சம்பந்தித்து யாதொரு அதிகாரமுமில்லை. அக்கன்னிகை சம்பந்தபட்டமட்டில் எல்லாப் பொறுப்பும் பர்த்தாவிற்கே சேர்ந்து விடுகிறது. பர்த்தாவினுடைய குலத்தோடு மாத்திரந்தான் அவளுக்கு பந்துத்துவமுண்டு. இதன் மூலமாய்ப் பிதாவினுடைய குலத்தைச் சம்பந்தித்து எல்லாப்பந்தமும் விலகிவிடுகின்றது. பிண்டம், கோத்திரம், சூதகம் என்றிவைகளிலெல்லாம் கணவனோடுதான். இஃது ஐக்கியத்தைக் குறிக்கிறது. வேளாளரிற் சிலர் நாமமிடுவது வழக்கம். விபூதி யிடக்கூடியவர்கள் நாமதாரிகளிடம் பெண்கொண்டால் அப்பெண் விவாகத்திற்கு முன் நாமமேயிட்டுவந்தபோதிலும் கணவன் விபூதியை யிடுவதால் அவளும் விபூதியே யிட வேண்டும். அங்ஙனஞ் செய்வாளேயன்றி பிதா வீட்டிலிருக்கும் பொழுது போட்டுவந்த நாமத்தை மறுபடி போட்டுக்கொள்ளாள். இதுபோல் விபூதி யிடக்கூடிய பெண் நாமமிடக்கூடிய ஒருவனுக்குப் பெண்டாகச் சென்றால் அதுவரை யிட்டுவந்த விபூதியை நிறுத்திவிட்டு நாமத்தைத் தானிடுவாள். ஆகையால் பெண்கள் பிறந்தகுலத்தின் பர்ங்குகளை ஒழித்துப் புகுந்தகுலத்தின் பாங்குகளைத்தான் அநுசரிக்கவேண்டும்.

" ஏகதத்வம் ஸாகதா பர்த்து: பிண்டே
கோத்ரே பகுதகே "

" சுவகோத்ராத் ப்ருசிதே நாரீ
விவாஹாத் சப்தமேபதே "

இம்மாதிரியாகும் ஸ்மிருதிக் காரருடைய சித்தாந்தம். இதன் பிரகாரம்

ஸ்திரீகளுக்கு பிதா குலத்தில் யாதொரு பந்தமு மில்லை. எனினும் அவளுக்குள்ள சுவாதந்திரியமும் பந்தமும் எல்லாங் கணவன் குலத்தை சம்பந்தப்பட்ட வரையிற் ருனென்று தெளிவாய்விளங்குகிறது. அல்லாமலும் விவாகக்காலத்தில் உபயோகப்படுத்துகிற ஒவ்வொரு மந்திரங்களையும் மற்றுங் கிரியைகளையும் பற்றி அர்த்தஞ் செய்கிறதாயிருந்தால் கன்னிகை விஷயமாய் சுவதந்திரம் பிதாவிற்கோ மற்ருே அணுவளவாகிலும் மில்லை. அப்படி யிருக்க விவாகஞ் செய்யப்பட்டவரன் மரணமானபின்பு வதுவினுடைய பிதாவிற்கோ வேறே பந்தப்பட்டவர்க்கோ ஸ்திரீயை வேருெருவனுக்கு விவாகஞ்செய்து கொடுப்பதற்குள்ள அதிகாரம் எப்படி உண்டாகும்.

மேலே பிரஸ்தாபப்படுத்திய சங்கதிகளெல்லாம் "கன்னியாதானம்" என்ற ஒரே ஒரு வாக்கிலேயே ஸ்மிருதிக்காரர் அடக்கி யிருக்கிருர்கள். தானம் என்ருல் என்ன? தன்னுடையதா யிருக்கப்பட்டதை அன்னியனுடைய தென்ற சம்பந்தத்தை உண்டாக்கிக்கொள்கிறதாகும். ஓர் பசு பிராம்மணனெருவனுக்குத் தானம் செய்யப்பட்டது என்ருல், தானஞ் செய்தவனுக்குச் சொந்தமாயிருந்த அப்பசு பிறகு தானஞ் செய்யப்பட்டவனான பிராம்மணனுக்கு சொந்தமாய்விட்டது என்று அர்த்தம். இம்மாதிரி கொடுத்த பசுவை மறுபடி வேருெருவனுக்கு இரண்டாவது முறை தானஞ்செய்ய முன் தானஞ் செய்தவனுக்கு அதிகாரமில்லை யல்லவா? அதுபோல கன்னிகாதானத்திலும் கன்னிகையி னுடைய பிதாவிற்கு அவளைக் குறித்துள்ள சுவாதந்தரியம் விட்டுப்போவதும், பர்த்தாவிற்கு ஆத்மசம்பந்தமாயுள்ள ஸ்திதி உண்டாவதுமாகும். இதனுல்தான் "ஸக்ருத்ப்ரதீயதே கன்யா" என்று பாரதத்திலும் "சக்ருத் கன்யா ப்ரதீயதே" என்று மனுஸ்மிருதியிலும் "தத்தாகன்யா நதீயதே" என்று வேறேயுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இறந்துபோன கணவனை உத்தேசித்து விதவை எள்ளு முதலியவை கொண்டு தற்பணம் செய்யவேண்டுமென்ற சித்தாந்தமு மிருக்கிறது. இந்த ஸ்திதிக்கு சாஸ்திர யுக்தி ரஹித விரோதமான விதவாவிவாகத்தை நடத்த எண்ணுவது சாஸ்திரங்களுக்கும் தருமத்திற்கும் சத்தியத்திற்கும் அருவெறுப்புக்கிடமாகிற தென்று விசேடமாய் சொல்ல வேண்டியது முண்டோ.

இன்னும் சாஸ்திரக்காரர்கள் வது வரன்களுக்கு அவசிய மிருக்க வேண்டிய சிலகுணங்களைப்பற்றி பிரத்தியேகமாய்ச் சொல்லப்பட்டவைகளில் இன்ன விதத்திலுள்ள ஸ்திரீகளை மாத்திரம் விவாகஞ் செய்யலாமென்று வரையறுத்து ஒருவாறுசொல்லியிருக்கின்றனர். ஸ்திரீயானவள் விவாகத்திற்கு யோக்கியதையாகவேண்டுமென்ருல் அன்னியனுலிச்சிக்கபபட்டிராதவளும் அல்லது அன்னியனேடு யாதொரு விதமாகவும் சம்பந்தப்பட்டிராதவளும், வேருெரு புருஷனிடத்தில் நாணத்தை இழக்காதவளுமான ஸ்திரீயைத்தான் விவாகஞ் செய்ய வேண்டும்

"அவிலுப்த பிரம்மசர்யோ லக்ஷண்யாம்
ஸ்திரிய முத்வஹேத்
அநன்னிய பூர்வீகாம் காந்தா
மஸபிண்டாம் வவீயஸீம்"

(யாஞ்ஞவத்கயமுனி வசனம்)

என்ற விதிப்பிரகாரம் பிரம்ம சரியத்தை அநுசரித்து வருகிற வரன் விவாகத்திற்குரிய வதுவிற்கு சொல்லியிருக்கும் எல்லா லக்ஷணங்களும் நிறைந்தவளும் அன்னியனுல் வெட்கவோ அல்லது வேறு சிநேக சம்பந்த பூர்வமோ இல்லாதவளும் பிண்டமுதலிய கர்மங்களில் சம்மந்தப் படாதவளுமான வதுவையைத்

தான் வேட்கவேண்டும் என்றுதான் இச்சுலோகத்தினுடையபொருள். வேறே தரும சாஸ்திரக்காரர்களு மிதனை ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். இவ்விஷயங்களை உணர்கிற விஷயத்தில் விதவாவிவாகம் யோக்கியமுள்ளதுதான் என்று எங்ஙனங் கழறமுடியும்? அன்றியும், கன்னியரல்லாத ஸ்திரீகள் பாணிக்கிரகணத்திற்கு அருகரல்ல கன்னியரல்லாத விவாகம் ஸ்மிருதிகளால் கண்டிப்பாய் வெறுக்கப்படுகிறது. ஸ்திரீகளுக்கு கன்னிகாத்துவம் விட்டுப்போவது "ஸாப்தபதீ பரிகிரகணம்" என்ற விவாகக்கிரிகை யாற்ருன். கன்னிகாத்துவம் விட்டுப்போவதன் நிமித்தம் ஸ்திரீகளுக்கு மறுமணம் யோக்கியதையல்ல வென்று விளங்கும். இவ்விஷயமும் இச்சந்தர்ப்பத்தில் மிக்க வேண்டுவதுதான்

ஞானதிருஷ்டியினுல் உலகத்தினுடைய ஸ்திதி முழுவதும் சூக்ஷ்மமாய்க் கண்டறிந்துள்ள பிரமாணக்காரர் அபிப்பிராயப்படுவது ஸ்திரீகள் பதிவிரதைகளா யிருக்கவேண்டு மென்றுதான். ஸ்திரீகளுக்கு பதிவிரதாதன்மை யென்ற ஒரே ஒரு குணமில்லாத பட்சம் மற்றெல்லாக் குணங்களும் பூர்த்தியா யிருந்தாலும் அவை யெல்லாம் நிஸ்ஸாரமாகும். ஸ்திரீகளுக்கு முக்கியமான ஆபரணம் பதிவிரதாதன்மை ஒன்றுதான். சௌந்தர்ய முதலியவை யில்லாவிட்டாலும் கற்பு நிலைமை ஒன்றுமட்டு மிருந்தால் அவள் சாத்வீக மணிகளுடைய கூட்டத்தில் முன்னணியில் நிற்பவளாய்க் கருதப்படுவாள். சாத்வீகமணிகளின் மகிமைகள் அசாத்தியமாய், பூலோகத்தில் மட்டுமல்ல, சுவர்க்காதி லோகங்களிலும் அளவிடற்கரிதென்று சொல்லப்படுகின்றது.

E. S. சிவாமலிங்கம்பிள்ளை, புனலூர்.

ஸ்திரீகள் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள்.

(72-ம் பக்கத் தொடர்ச்சி)

தாய்ப்பாலாவது பசும்பாலாவது இல்லாக் குறையால் அன்னிய நாட்டிலிருந்து வரும் பலவிதமாக்கள் முதலியவற்றைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் போது கீழ்க்கண்டபடி நமது அஜாக்கிரதையாலேயே தீங்கு நேர்கிறது.

அந்த ஆகாரங்களை இன்னவிதமாய்த் தயார்செய்யவேண்டும் என்று அவற்றைப்பற்றிய விளம்பரங்களில் கூறப்பட்டிருக்கிறது. நம்மவர்களோ பெரும்பாலும் அவற்றை முறைப்படி செய்வதுமில்லை, அளவின்படிக்கும் காலக்கிரமப்படிக்கும் குழந்தைகளுக்குக் கொடுப்பதுமில்லை. அப்படிச் செய்யாததால் குழந்தையின் தேகத்திற்கு அசௌக்கியத்தை யுண்டாக்குமென்று அவர்கள் சிந்தனைக்குப் புலப்படுவதேயில்லை. இவ்ற்றிற்குக் காரணம் நமது மாதரில் பெரும்பாலார்க்குக் கல்வியில்லாத குறையேயாகும்.

அவ்வாறு அந்த ஆகாரத்தை முறைப்படி செய்யாததால், அது குணத்தில் மாறுபட்டு விடுகிறது. அதோடு அளவின்படிக்கும் காலக்கிரமத்தின் படிக்கும் கொடாததால், குழந்தைகளுக்கு முதலில் அஜீரணமுண்டாகிப் பிறகு பலவித வியாதிகளுண்டாகின்றன. இத்தகைய ஆகாரங்களைக் கொடுக்கும்போதுமுதலில் ஆகாரம் அளவில் கொஞ்சமாகவும் தடவைகள் அதிதமாகவும் இருக்கவேண்டும். பிறகு போகப்போக அளவைக் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்துக் கொண்டு போக வேண்டும். ஆனுல் தடவைகள் குறைந்துகொண்டே வரவேண்டும். அதாவது ஆரம்பத்தில் தினம் 6 தடவை கொடுத்தால், குழந்தை வளரவளர 5 தடவை 4 தடவை, 3 தடவை, இப்படி குறைந்துகொண்டே வரவேண்டும். குழந்தை நாளுக்குநாள் வளர்வதால், ஆகாரம் அளவில் அதிகமாகிக்கொண்டு வரவேண்டும்.

குழந்தைக்குப் பற்கள் எப்போ துண்டாகின்றனவோ, அதற்குமேல் அன்னம் கொடுக்கலாம் என்பதற்கு அதுவே அறிகுறியாகும். ஆகையால் பற்கள் முளைத்தபின் எவ்வளவு சீக்கிரமாய் அன்னம் கொடுத்துப் பழக்கிவிடுகிறோமோ அவ்வளவும் நலமே.

ஆனால் அன்னம் கொடுக்க ஆரம்பிக்கும்போது, முன் விதியை யனுசரித்து ஐந்துதரம் ஆறுதரம் தரலாகாது. ஆரம்பத்தில் நன்றாய்க் குழைய வேந்த அன்னத்தைக் கொஞ்சமாய் தினம் ஒருதரமே கொடுக்கவேண்டும். அதுவும் பகலில்தான் தரவேண்டும். மற்ற வேளைகளில் முன் கொடுத்துவந்த ஆகாரத்தையே கொடுக்க வேண்டும். பிறகு கொஞ்சங் கொஞ்சமாய் உணவை யதிகப்படுத்து முன்பே இரண்டுவேளை கொடுத்துப் பழக்க வேண்டும். அதிக சத்துள்ளவையும் சீக்கிரத்தில் ஜீரணமாகாதவையுமான பதார்த்தங்களை ஆரம்பத்தில் தரலாகாது.

(5) சிறு குழந்தைகளின் மார்பிலும் பாதங்களிலும் ஈரம் குளிர்காற்று படவொட்டாமல் முக்கியமாய்ப் பாதுகாக்க வேண்டும். அப்படிக்கின்றேல் அதனால் கொடிய வியாதிக ளுண்டாகின்றன.

(6) குழந்தைகளின் மழலைச்சொல் தேவாமிர்தம் போன்றது. பெற்றோர் செவிக்கு அதனினும் இனிய சத்தம் வேறொன்றில்லை. தெய்வப் புலமை திருவள்ளுவனாரே,

> " யாழினிது குழலினிது என்பர் தம்மக்கள்
> மழலைச்சொற் கேளா தவர் "

என்று அருளி யிருக்கிறார். அத்தகைய சொற்களைக் குழந்தைகள் மொழியுங் காலத்தில் நாம் துர்ப்பாஷைகளை அவைகளுக்கு ஒருபோதும் கற்பிக்கலாகாது. " மாமாவை உதை " " தூ என்று காரியுமிழ் " " சீசீ என்று கூறு " என்று இவ்விதமான துர்ப்பழக்கங்களைக் கற்பிப்பது நமது நாட்டாரில் அனேகர்க்கு வழக்கமா யிருக்கிறது. அப்படிச் செய்வதால் நமது மக்களுக்கு நாமே தீங்கு செய்கிறவர்க ளாகிறோம்.

குழந்தைகளுக்கு விளையாடும் பருவம் வந்தபோதும், எப்போதுமே அவர்கள் வாக்கில் துர்ப்பாஷைகள் வரவொட்டாதபடி நாம் கண்டித்துப் பாதுகாத்து வரவேண்டும். துர்ப்பாஷைகளுக்கும் துர்நடக்கைகளுக்கும் அதிக தூரமில்லை. துர்ப்பாஷைகளைப்பேசும் சிறுவரோடு நமது மக்களைச் சேரவிடாதபடி மிக்க ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். கிளிப்பிள்ளை போல் கேட்டவார்த்தையைப் பாடம் செய்துகொள்வதிலும், ஒருவர்செய்கிறபடி தாமும் செய்வதிலும் சிறுவர்களுக்கு மிக்கபிரியம். ஆகையால் அவர்கள் முன்னிலையில் நாம் துர்ப்பாஷைகளைப் பேசலாகாது. பேசினால் கட்டாயம் அவர்கள் அதைப் பாடம்செய்து கொள்கிறார்கள்.

(7) குடும்பத்தில் பெற்றோர் முதலியவர்கள் எவ்வாறு சம்பாஷிக்கிறார்களோ, எத்தகைய குணங்களையும் செய்கைகளையும் வெளியிடுகிறார்களோ, அவ்விதமாகவே அவர்கள்மக்களும் தங்கள் பிற்காலத்தில் நடந்துகொள்வார்கள். ஆகையால் தாய்தந்தையர்களாகிய மனைவியும் புருஷனும் எப்போதும் மரியாதையாகவே சம்பாஷிக்கவேண்டும். சிலபுருடர்கள் தங்கள் மனைவிமாரிடம் மரியாதையின்றி சம்பாஷிப்பதோடு, அவர்களைத் துர்ப்பாஷையாலும் வைகிறார்கள். சிலர் அடிக்கிற பழக்கமுடையவர்களாகவு மிருக்கிறார்கள். இவை யாவும் அறிவில்லார் செய்கைகளேயாகும். இவர்களுடைய கெட்ட பழக்கங்கள் இவர்கள் மக்கள் மனதில் பதிந்துவிடுகின்றன. தாயார் தன் தந்தையிடம் எவ்வாறு

நடந்துகொள்கிறாளோ, அதைப் பார்த்துக்கொண்டிருக்கும் புத்திரி வாழ்க்கைப் படும்போது தன் கணவனிடத்தில் அப்படியேதான் நடந்துகொள்வாள்.

தாய்மார்கள் அன்னியமாதரோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கையில், சிறு பெண்களைக்கூடவே யிருந்து வாய்பார்த்துக் கொண்டிருக்கும்படி விடலாகாது. அவ்வாறு பழகச்செய்வதால் பெண்கள் வாய்ப்பேச்சு கேட்கும் பழக்கமுடையவர்களாகி, பிறகு யார் பேசிக்கொண்டிருந்தாலும், தாங்கள் செய்துகொண்டிருக்கும் வீட்டுவேலையையும் விட்டுவிட்டு, பேசுகிறவர்கள் எதிரில் போய் நின்றுகொண்டு பேச்சுகேட்கும் சுபாவமுடையவர்க ளாகிறார்கள். கடைசியில் பெரியோர் ஒருசொல் சொன்னவுடனே பதிலுக்கு இரண்டுசொல் சொல்கிறவர்களாகி, " அப்பா இப்பெண் மிக்க பேச்சுக்காரி, பெரிய வாய்ப்பட்டி " என்று கண்டோர் கூறும்படியான நிலைமை யடைகிறார்கள். ஆகையால் இவ்விஷயத்தில் தாய்மார்கள் மிக்க எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும்.

ஆரணி. குப்புசாமி முதலியார்.

ஆன்றோர் வாக்கியங்கள்.

1. ஒவ்வொருவரும் சிறுவயதிலேயே கல்வி கற்றுக்கொள்ளவேண்டும். பின்பு சம்சாரத்தில் விழுந்து வருத்தமடையும்போது, படித்தாலும் கல்வி நன்றாய் புத்தியிலேறாது—அழுக்குப்படியாத துணியிலே சாயம் நன்றாக ஏறும் அழுக்குப்படிந்த துணியிலே நன்றாய் ஏறாது.

2. கல்வி யறிவுள்ளவன் அழகில்லாவிட்டாலும் அவன் யாவர்க்கும் இஷ்டனாவான். கல்வி யறிவில்லாதவன் அழகிருந்தும் யாவர்க்கும் இஷ்டனாகான்—வாசனையுள்ள விலாமிச்சைவேர் அழகில்லாதிருந்தும் யாவர்க்கும் இஷ்டமாகிறது. வாசனையில்லா முருக்கம்பூ அழகாயிருந்தும் ஒருவரும் இஷ்டப்படுவதில்லை.

3. அசுத்தமாகிய சிறியவரும் பரிசுத்தமாகிய பெரியவரைச் சேர்ந்தால் அவர்களும் பரிசுத்தராவார்கள்—அசுத்தமாகிய சலதாரைநீரும் பரிசுத்தமாகிய பெரிய குளத்தில் சேர்ந்தால் பரிசுத்தமாகும்.

4. உயர்ந்தகுலத்திலே பிறந்தாலும், குணமில்லாதவனை ஒருவரும் சேர்க்க மாட்டார்கள். தாழ்ந்தகுலத்திலே பிறந்தாலும், குணமுள்ளவனை அனைவரும் விரும்புவார்கள்—இனிய கரும்பிலேபிறந்த பூ வாசனை யில்லாமையால் ஒருவராலும் கைக்கொள்ளப்படுவதில்லை. கசந்த அவரியிலே பிறந்த பூவில் வாசனையிருப்பதால் யாவரும் அதைக் கைக்கொள்ளுகிறார்கள்.

5. புத்தியுள்ளவன் தூரத்திலிருந்தும் ஒருவன்குணத்தை நன்கு அறிவான். மூடன் சமீபத்திலிருந்தும் மேலோர் குணத்தை அறியமாட்டான்—வண்டு தூரத்திலிருந்து வந்து தாமரைப்பூவினது தேனையுண்ணும். தவளையோ அதன் சமீபத்திலேயே எப்போதுயிருந்தும் அத்தேனை யுண்ணவறியாது.

6. பெரியோர்கள் உயர்நிலையிலிருந்து தவறினால் மிகுந்த வருத்தமடைவார்கள். சிறியோர்கள் உயர்நிலையிலிருந்து தவறினால் வருத்தமடையமாட்டார்கள்—யானை முதலிய பெரியபிராணிகள் கீழேவிழுந்தால் பிழைப்பதரிது. எறும்பு முதலிய சிறியபிராணிகள் விழுந்தால் சற்றும் துன்பமடையா.

7. எவரும் பெரியோர்க்கு வணங்கி நடந்தால் சுகம் பெறுவார்கள். எதிரிட்டு நின்றால் கேடுசம்பவிக்கும்—பிரவாகத்திற்குமுன் வணங்கின கோரைப்

புல் மற்றும் தலையெடுத்துப் பிழைக்கிறது. வணங்காமல் எதிர்த்து நிற்கும் விருக்ஷங்கள் முறிபட்டுப் போகின்றன.

8. ஒருவன் யாருடனும் இதமாகப் பேசினால் மரியாதைகிடைக்கும். கடினமாகப் பேசினால் அவமானங்கிடைக்கும்—கிளிப்பிள்ளை சந்தோஷமுண்டாகப் பேசுவதனால் யாவரும் அதோடு கொஞ்சுகிறார்கள். காக்கை கோபமுண்டாகக்கூவுவதால் கோலாலடிக்கிறார்கள்.

9. தன் காரியத்திற்கு துஷ்டன்சகாயம் வேண்டியிருந்தால் அவனுடன் கொஞ்சமாகவே சிநேகிக்கவேண்டும். அதிகமாய் சிநேகித்தால் அவன் வருத்தமுண்டாக்குவான்—வெற்றிலைபாக்குடன் சுண்ணாம்பு கொஞ்சமே சேர்க்க வேண்டும். அதிகம் சேர்த்தால் வாயில் புண்ணையுண்டாக்கும்.

10. மேலோர்க்கு உபகாரம் செய்தால் அவர் பிரதியுபகாரம் செய்வர். கீழோர்க்கு உபகாரம்செய்தால் அவர் அபகாரமே செய்வார்—பசுவுக்கிரைகொடுத்தால் மதுரமான பாலைத்தரும். பாம்புக்கிரைகொடுத்தால் கொடியவிஷத்தையே தரும்.

11. உத்தமர்க்குச்செய்த உபகாரம் நன்றாய் பிரயோஜனப்படும். மத்திமர்க்குச் செய்த உபகாரம் பிரகாசிப்பதுபோல் தெரியும். அதமர்க்குச் செய்த உபகாரம் அப்பொழுதே மறைந்துபோம்—சிப்பியிலேவிழுந்த மழைத்துளி முத்தாகும். தாமரையில்விழுந்த மழைத்துளி முத்தைப்போல் பிரகாசிக்கும். மணலிலேவிழுந்த மழைத்துளி அப்பொழுதேமறைந்துபோம்.

12. உத்தமர்கள் ஆரம்பத்தில் ஒருநாள் உபகாரம் செய்தவருக்கும், மத்திமர் சிலநாள் விடாவிட்டுப் பலதரம் உபகாரம் செய்தவருக்கும், கடையானவர் தினந்தோறும் விடாமல் உபகாரம் செய்தவருக்கும் பிரயோஜனத்தைத் தருவார்கள்.—பனைமரம் விதைபோட்டு தொடக்கத்தில் ஒருநாள் சலம்விடுகிறவனுக்கும், தென்னைமரம் சிலநாளைக் கொருதரமாகப் பலநாட்கள் சலம்விடுகிறவனுக்கும், பாக்குமரம் அனுதினமும் தவறாமல் சலம்விடுகிறவனுக்கும் பலனைக் கொடுக்கும்.

கே. ஆர். கணபதிபிள்ளை, துணையை.

மாயை

இது இரண்டு உயிர்மெய் யெழுத்துகளாலாகிய ஒருமிகச் சிறியபதம். இதைப் பெரும்பாலும் யாவருமே கேட்டிருப்பார்கள். பலசமயங்களில் வாயாற் கூறியுமிருப்பார்கள். ஆனால் இதைக் கண்ணால் பார்த்தவர்கள் ஒருவருமில்லை. இதுயாவரையும் மயக்கித் தன் அடிமைகளாக்கிக் காற்றடிபோல் ஆட்டி அலக்கழித்து விடுகிறது. ஆன்மாக்களுக்குண்டாகும் பிறவித் துன்பத்திற்கு இதுவே காரணம். அப்படியிருந்தும், இதென்ன? இதனாலுண்டாகும் துன்பத்தை யெவ்வாறு நீக்கிக்கொள்வது? என்பதைப்பற்றி சிந்திப்பவர்கள் மிகச்சிலரே. ஆயினும் எங்கோ ஒவ்வொருவர் இதனோடு போராடி இதைவென்று, சகல துன்பங்களிலுமிருந்துநீங்கி, நித்தியமாகி பேரின்பவாழ்வைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களில் சிலர்மட்டுமே வெளிப்படையாய் உலகத்தாரால் அறியப்பட்டவர்கள். அவர்களெல்லாம் தமது நன்மையைத் தேடிக்கொள்வதோடு திருப்தியடையாது, உலகோர்க்கும் அந்த முக்திமார்க்கத்தைக் காட்டியவர்கள். அவர்களே அப்பர் சம்பந்தராதியர், ஆழ்வாராதியர், பட்டினத்தடிகள் தாயுமானவர் முதலிய மகான்கள். இப்போதும் ஒவ்வொருவர் அம்மார்க்கத்தில் சென்று கொண்டேதா னிருக்கிறார்கள். அதிலும் புண்ணியபூமியும், அழியாத சத்தியமாகிய மெய்ஞ்ஞானமார்க்கத்தை அனுதிகாலந்தொடுத்து அனுசரித்து வருவது

மாகிய நமது தாய்நாட்டில், சதாகாலமும் அத்தகையமகான்கள் இருந்து கொண்டே யிருக்கிறார்கள் என்பது உண்மை.

இத்தகைய மாயையென்பது என்னவென்பதைப்பற்றியும், அதனாலுண்டாகும் தீமையினின்று தப்பித்துக்கொள்வதற்கு வழியிருக்கிறதா என்பதைப் பற்றியும் ஆற்றலுடைய மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் ஆராய்ச்சி செய்யக் கடமைப்பட்டவர்களே.

மாயை யென்பது என்ன? என்றால், அது இன்னவிதமானது, இப்படிப்பட்டது என்று வரை யறுத்துக்கூற ஒருவராலும் முடியாது. அது உருவமுடைய வஸ்துவல்ல. இவ்வாறு வாக்கால் இப்படிப்பட்ட வஸ்துவென்று கூற முடியாத பொருளுக்கு அநிர்வசனீயம் என்று பெயர். அப்படியாயின், அதை நாம் எப்படி தெரிந்துகொள்வது? மாயையென்று ஒன்றிருப்பதாய் எப்படி நம்புவது என்றால், காற்றைப்போல் அதன் காரியத்தால் அறியலாம். காற்றை நாம் காணாவிடினும், அதுதேகத்தில் படும்போதுண்டாகும் உணர்ச்சியால் காற்று இன்னது என்று தெரிந்து கொள்கிறோம். இவ்வாறே உலகில் நாம் கண்ணால் காணக்கூடாத மின்சாரம்முதலிய பல வஸ்துக்களை அவற்றின் காரியங்களால் அறிகிறோம். இனி மாயையின் காரியங்களில் சிலவற்றைக் கூறுவாம்.

(1) உலகில் பிறக்கிறவர்களெல்லாம் ஒவ்வொருவராய் இறந்துகொண்டே போவதை நாம் தினம் கண்ணால் காண்கிறோம். நாமும் ஒருநாளைக்குக் கட்டாயம் மடிந்து போவோம் என்று நமக்கு நிச்சயமாய்த் தெரியும். அதோடு அந்த மரணம் என்றைக்குவரும் என்று நமக்குத் தெரியாது. ஆனால் திடீரென்று எப்போது வந்தாலும் வரும் என்றுமட்டும் தெரியும். அதாவது நாளைக்கு உயிரோடிருப்போம் என்று நம்பமுடியாது. இவ்வளவு உண்மைகளையும் மறைதா அறிந்திருந்தும், அதை யடியோடு மறந்து நெடுநாளைக்கு இருப்போம் என்று நிச்சயமாய் அறிந்திருப்பவன்போலவே நடந்துகொள்கிறோம். இதுதான் மாயை.

(2) உலகில் தோற்றப்படும் பொருள்க ளனைத்தும் அழியும் பொருள்களேயென்று நமக்கு நன்றாய்த்தெரியும். அதோடு அவற்றிற்கு முன்பு நாமே அவற்றைவிட்டுப் பிரிந்துவிடுவோம் என்றும் தெரியும். அப்படி யிருந்தும் பல பாபசெயல்களைச் செய்தேனும் அந்த அநித்தியவஸ்துக்களைத் தேடவே பெரு முயற்சிசெய்கிறோம். என்று மழியாததும் துக்கமற்றதுமான ஒருபொருளிருக்கின்றதென்று தெரிந்தும், அதை யடைய முயற்சிசெய்கிறோமில்லை. இதுதான் மாயை.

(3) இரத்தத்தைத் தொட அசங்கியப்படுகிறோம். அதுமேலேபட்டால் ஸ்நானம் செய்கிறோம். எலும்பையும் அப்படியே. மலத்தையோ கண்ணாற் பார்க்கவே வெறுப்படைகிறோம். மலம் வைத்திருக்கும் பாண்டம் நவரத்தினங்களிழைத்த தங்கப்பாண்டமே யாயினும், அதைத்தீண்ட மிக்க அருவருப்பே. ஆனால் நிறைய மலத்தை யெப்போதுமுடையதும், நவத்துவாரங்களின்வழியாய் அசுத்தத்தை யெப்போதும் கழித்துக்கொண்டிருப்பதும், இரத்தம், மாமிசம், எலும்பு, நரம்பு முதலியவற்றால் செய்யப்பட்டதுமாகிய பாண்டத்தையோ (தேகம்) மிக்க உயர்வாய்க்கருதி முத்தமிடுகிறோம், அதன்மேல்புறத்தைக் கழுவி வாசனைபூசிப் பட்டாடைசுற்றி நவமணியணிவித்து அலங்கரித்துப் போற்றி வருகிறோம். உற்றுச் சிந்திக்கின் இதைவிட வெட்கக் கேடான காரியம் வேறுண்டோ! இதுதான் மாயை.

(4) அநித்திய உலகை நித்தியமானதாக மதித்து நடக்கிறோம். பல வருடங்களாக மண்ணில் புதைந்து மக்கிக்கிடந்த ஒரு எலும்பை நாய் கண்டு கடிக்

கும்போது, அதன் பற்களிலிருந்துவரும் உதிரத்தைப் பசையற்ற அந்த எலும்பி லிருந்துவரும் சத்தென்று கருதி, மிக்க திருப்தியோடு சுவைத்து நக்குகிறது. இந்த சுவை நம்மிடத்திலுள்ளதேயென்ற உண்மையைச் சுணங்கன் சற்று மறி யாது. அதைப்போலவே நாமும் ஆன்மாவாகிய நம்மிடத்திலுள்ள இன்பத்தையே உலகத்திலுள்ள சடப்பொருள்களி லிருப்பதுபோல் மயங்கி நினைத்து அனுப விக்கிறோம். உண்மையில் துன்பத்தையே தரும்பொருள்களையெல்லாம் மயக் கத்தால் இன்பந்தருவனவென்றெண்ணி, அவற்றைப் பெறவும் போற்றவும் படாத பாடுபட்டு நாய்போல் அலைகிறோம். இதுதான் மாயை.

(5) அகண்டமாய் ஏகமாய் ஆனந்தமயமான பரமாத்மசொரூபமாகிய பரம் பொருள் ஒன்றே மயிர்முனைக்கு மிடமின்றி எங்கணும் நிறைந்துநிற்க, நமது கண்களுக்கோ நாமரூபமயமாகிய அழியத்தக்க இப்பிரபஞ்சமும் இதிலுள்ள அநித்திய சடப்பொருள்களுமே தோற்றமாகின்றன. இதுவே மாயை.

இம்மாயையின் காரியங்களை யளவிட்டுக்கூறமுடியாது. இப்போது மாயை யென்ற ஒன்றிருக்கிறதென்று மேற்கண்ட அதன் காரியங்களால் தெரிந்துகொள்கிறோம்.

இப்போது இதைப்பற்றிய ஆராய்ச்சியில், இந்த மாயை யெப்படியுண்டா யிற்று? ஏன் உண்டாயிற்று? பரிசுத்தமான கடவுளிடத்தில் இந்த மாயை யாகிய இருள் எப்படியுண்டாயிற்று? சுத்தத்தோடு அசுத்தம் சேர்ந்திருக்கும்? மாயை நித்தியமா அநித்தியமா? என்பது முதலான பலகேள்விகளுக்கு இட முண்டு.

மாயை எப்படி யுண்டாயிற்று என்ற கேள்விக்கு விடை சிற்றறிவுடைய மனிதன் அறிவிற்கு எட்டக்கூடியதல்ல. ஏனெனில், அதுபேரறிவுடைய கட வுளின் இரகசியம் என்பதோடு, மாயையிலிருந்து விடுபடுகிறவரையில், அம் மாயையில் சிக்கிக்கொண்டிருக்கும் மனிதனால் அதை யறியமுடியாது. அதை முன்னே அறியவேண்டுமென்ற அவசியமும் இல்லை. சிலர் அத்தகைய வீண் வாதங்களில் பிரவேசித்து காலத்தை வீணாய்க் கழித்துவிடுகிறார்கள். அதுவே அவர்கள் ஞானத்தையடைய முயற்சி செய்வதற்குப் பெரிய இடையூறாய்விடு கிறது. இதைப்பற்றி ஒருமுறைக்குமேல் முன்பே நமதுபோதினியில் விவகரிக் கப்பட்டிருக்கிறது.

உண்மையில் இல்லாததை யுண்டுபோல் தோற்றுவிக்கிறது அல்லது ஒன்றை மற்றொன்றாய்த் தோன்றச்செய்கிறது எதுவோ அதுவே மாயை. எவ்வாறெனில் வெயில் பிரகாசமாய் இருக்கும்போது, சாதாரண மிளிஞ்சில் சூரியப்பிரகாசத்தின் ஜொலிப்பால் வெள்ளியைப்போல் தோன்றுகிறது. கொஞ்சம் இருட்டாயிருக்கையில் கயிறு பாம்பைப்போல் தோன்றுகிறது. இவ்வாறே சச்சிதானந்தமாகிய பரம்பொருளில், மாயையினால் இந்த அநித்திய மான பிரபஞ்சம் தோன்றியிருக்கிறது.

இவ்வாறு திருட்டாந்தங்கூறப்பட்டிருப்பதிலும் பெரும் வாதங்கள் நடக் கின்றன. இது வேதாந்த சித்தாந்தச் சண்டையைச் சேர்ந்தது. இவற்றைப்பற்றி யெல்லாம் விரிவாய்க்கூறுவதெனின் அதுவே ஒரு நூலாய்விடும். ஆகையால் இதைச்சுருக்கமாய்க்கூறிவிட்டு, நமக்கு அவசியமான விஷயத்தைப்பற்றி மொழி வோம். இந்த திருஷ்டாந்தப்படி, கயிற்றில் பாம்புதோன்றுவதுபோல், எங்கும் நிறைந்த கடவுளிடத்தில் உலகம் மாயையால்தோன்றி யிருக்கிறது. உண்மை யில் திருட்டாந்தத்தில் எப்படி பாம்பில்லை கயிறே யிருக்கிறதோ, அப்படியே தாட்டாந்தத்திலும் உலகம் பொய்த்தோற்றம், உண்மையாயிருப்பது எங்கும் நிறைந்த பரம்பொருள் ஒன்றே என்பதைமட்டுமே நாம் உணரவேண்டும்.

அதைவிட்டு "இதில் பாம்பு என்ற ஒன்று உண்மையாயிருக்கிறது. அதை நாம் பார்த்திருப்பதால் கயிற்றைப் பாம்புபோல் மயங்கி நினைக்கிறோம். அப்ப டியே தாஷ்டாந்தத்தில் உலகம் என்பது உண்மையாய் ஒன்றிருந்து நாம் பார்த் திருக்கிறோமா" என்று வாதாடுகிறார்கள். இத்தகைய வாதங்களெல்லாம் வீண்காரியங்களாகும். ஏனெனில், நாம் கண்ணுக்குப் புலப்படாத சூக்கு மப்பொருள்களுக்கு உலகிலுள்ள சடப்பொருள்களைத் திருட்டாந்தம் காட்டு கிறோம். இதில் திருட்டாந்த தாட்டாந்தங்கள் ஒவ்வொரு அம்சத்திலும் ஒத் திருக்கவேண்டுமென்று ஒருபோதும் எதிர்பார்க்கலாகாது. முக்கிய அம்சம் எதுவோ அதைமட்டுமே பொருத்தி யுணரவேண்டும். "தாயுமானவர்வாக்கு தேவாமிர்தம்போலிருக்கிறது" என்ற வாக்கியத்தில், அமிர்தம் எப்படி இனிப்போ அப்படி தாயுமானவர்வார்த்தை இனிமையானது, என்றமட்டுமே உணரவேண்டியதன்றி, "அவர் வார்த்தை அவர் வாயினின்றும் வந்தது, அமிர் தம் கடலிலிருந்துவந்தது. கடலில் மீன்களிருக்கின்றன கப்பல்கள் ஓடுகின் றன. அவர் வாயில் மீன்களிருக்கின்றனவா? கப்பல் ஓடுமா?" என்று கேட்பது வீணான குதர்க்கமன்றி வேறில்லை. அவ்வாறே மேற்கூறப்பட்ட வாதங்களும்.

(தொடரும்)

சீடன்.

சென்னையில் க்ஷயரோக ஆஸ்பத்திரி

இச்சென்னையின்கண் க்ஷயரோகம் அதிகரித்திருக்கினறபடியால் இக் கொடிய வியாதியை நிவர்த்திக்க நமது இராஜாங்கத்தார் எவ்வளவோ பணம் செலவிடுகின்றார்கள். அப்படிச்செலவிட்டும் மேற்படிவியாதியை நிவர்த்திசெய் யத்தக்க தீர்மானங்கள் நாளதுவரையில் அடைந்ததாகத் தெரியவில்லை. ஆனால் சென்றமாதம் சென்னை எழும்பூர் ஏரியில் நமது கனம் கவர்னர் அவர்கள் க்ஷய ரோக ஆஸ்பத்திரி ஒன்று புதுப்பிக்க அஸ்திவாரக் கல்போட்டார் என்று தெரிந் துக்கொண்டோம். ஆனால் கனம் கவர்னர் அவர்கள்செய்தகாரியம் நமக்கு நன் மையைத் தரவேண்டும் என்னும் எண்ணமேயன்றி வேறில்லை யானாலும் அவர் செய்த காரியமானது நன்மையைத் தருவதற்குப் பதிலாய் துன்பத்தை விளை விக்கும் என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. எப்படியெனில் க்ஷயரோக மானது தொத்துவியாதி என்பதில் ஒருவர்க்கும் சந்தேகமிராது. நமது மேல் நாட்டு வைத்தியர்களும் தொத்துவியாதி என்றே தீர்மானித்திருக்கின்றார்கள். அத்தகைய தொத்துவியாதியை வளரச்செய்யும்முறையை விருத்திசெய்வதற் காகவே சென்னையின்கண் க்ஷயரோக ஆஸ்பத்திரி புதுப்பிப்பதாய் தீர்மானிக் கலாம். அல்லது மேற்படி ஆஸ்பத்திரியையுண்டுபண்ணாலும் அதற்குத்தகுந்த சிகிச்சை இன்னதென விளங்கவில்லை. சிலவருஷங்களாக (Tuberculine Injection) டியூபர்குலேன் இன்ஜெக்ஷன் என்னும் சிகிச்சை செய்யப்பட்டுவந் தது. அச்சிகிச்சையினால் குணமேற்படாமையால் அவ்விதசிகிச்சையையும் தற் காலம் வழங்கிவருவதை நிறுத்திவிட்டதாய் தெரிகின்றது. வேறு எந்தசிகிச்சை களும் பயன்படவில்லை என்றும், பரிசுத்தமும் வரண்ட காற்றும்மேற்படி வியா தியை குணப்படுத்துகின்றனவென்றும் தீர்மானம்செய்திருக்கின்றார்கள். இதை யே சானிடேரியம் என்று சொல்லுவது. இத்தகைய ஆஸ்பத்திரிமதனப்பல்லியி லிருக்கின்றது. அத்தகைசிகிச்சைகள் சென்னையின்கண் செய்யச்சாத்திய மில்லை. பரிசுத்தகாற்று சென்னையிலில்லாமையால் தற்காலத்தில் கட்டப்போவ தாய் தீர்மானித்திருக்கும் சென்னை க்ஷயரோகஆஸ்பத்திரியானது பயனற்றதாய்

முடியும். ஆனபடியால் வேறு எந்தகாரணத்தாலோ மேற்படி ஆஸ்பத்திரியைக் கட்டுவதாய்த் தீர்மானித்தார்கள் என்பது என்புத்திக்குப் புலப்படவில்லை.

க்ஷயரோகமானது நம்தேசத்தில் பூர்வீகமாயுள்ளநோய்களில் ஒன்றேயானாலும் சுமார் 20-வருஷங்களுக்குமுன் இந்த வியாதியானது உறங்கினவன் கண்ட கினவுபோல் இருந்தது தற்காலத்திலோ இவ்வியாதியானது எங்கும் பறவிவிட்டது. இதற்குச் சில காரணங்கள் இருக்கவேண்டுமென்பது சகலரும் யூகிக்கவேண்டிய விஷயமாயிருந்தாலும், என்மனதிற் கெட்டியவரையில் எழுத முற்பட்டேனானாலும், இதில் ஏதாவது நியாயவிரோதமாக காணப்பட்டால் இச் சஞ்சிகை மூலமாகவே பலரும் தெரிவிப்பார்கள் என்பது திண்ணம்.

க்ஷயரோகமாவது நாசத்தை யடைவிக்கும் வியாதியென்றே சொல்லலாம். க்ஷயம் என்பதற்கு க்ஷீணம், நசித்தல் என்றே அர்த்தமாகின்றபடியாலும் முன்னோர்களும் இந்த வியாதியைக் கூறியிருப்பதாலும் இவ்வியாதியின் காரணம் உஷ்ணம் என்றுசொல்லலாம். மிகையான உஷ்ணத்தினால் சரீரத்திற்கு க்ஷீணம் உண்டாகுமென்பது பிரசித்தம். ஆனால் நமக்கு அத்தகைய உஷ்ணம் வருவதற்கு காரணமும் அவற்றின்பரிகாரமும் ஒருவாறு சொல்லமுற்பட்டேனானபடியால் அடுத்த சஞ்சிகையில் விஸ்தாரமாய் எழுத நினைத்துள்ளேன்.

(தொடரும்)

டாக்டர் எம். மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை—நாவல்

(79-ம்பக்கத் தொடர்ச்சி.)

இராணி:—" ஆ! அப்படியா! இராஜத்துரோகிகளுக்கு அடைக்கலங்கொடுப்போரும் நல்லதண்டனை யடைவார்கள். ஓ! நீ அக்குடும்பத்தின் பெயரைக்கூறவில்லையே " என்றாள்.

அதற்கு அவ்வாலிபன் " மகாராணி! அக்குடும்பம் மிக்க செல்வம் பொருந்திய வர்த்தகரும் நகரத்தலைவருமாகிய சர்தார்செல்வராயருடைய குடும்பம் " என்றான்.

இம்மொழிகளைக்கேட்டதே இராணி திடுக்கிட்டுவிட்டாள். அவள் முகம் வெளுத்துவிட்டது. " என்ன அதிசயம்! இராஜத்துரோகியாகிய அந்தக் கண்ணபிரான் அக்குடும்பத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறானா? அடடா! நான் அக்காலத்தில் வேடிக்கையாய் அந்தக்கமலாம்பாளை யிவன் மணம்புரியவேண்டுமென்று கூறியது பெரும்பாலும் என்னை யறியாமலே நிறைவேறினாலும் நிறைவேறிவிடும்போல் இருக்கிறதே. ஆ! என்புத்தியிற்படுகிறது. ஆம் ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும். நீதான் செல்வராயருடைய புத்திரியை மணம்புரிய முயன்றவன்போலும். ஆ மெய்யே, உன்முகம் தெரிவித்துவிட்டது. ஆகையால் அக்கலியாணச்சடங்கை நிறைவேறவொட்டாது தடுத்தவன் கண்ணபிரானே. சரி. சரி. இப்போது நீ வஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டியே இவ்வாறு நடந்துகொள்கிறாய். ஆயினும் பரவாயில்லை. அவன் பிடிக்கப்படவேண்டியதே. ஆனால் நீ வஞ்சம் தீர்த்துக்கொள்வதற்காகவே நான் செல்வராயர் குடும்பத்திற்குத் துன்பம் உண்டாக்கலாகாது. அதைப்பற்றி சிந்தித்தேபிறகு எதுவும் செய்யவேண்டும். ஆகையால் அக்குடும்பம் இராஜத்துரோக குற்றம் சாட்டப்பட்ட ஒருவனுக்கு அடைக்கலமளித்தது என்ற சங்கதியைப் பிரஸ்தாபிக்கவே கூடாது. தெரிகிறதா " என்றாள்.

பலராமன் ஒன்றும் சொல்லக்கூடாதவனாய் மௌனம் சாதித்தான். கண்ணபிரானைப் பிடித்துக் கொடுப்பதாய் முன்வந்த இவ்வாலிபன் கடற்கொள்ளைக்காரனும், இராஜமாளிகை யென்றகப்பலின் கப்பித்தானுமாகிய தேவதத்தன் புதல்வனேயென்று இதுகாறும் நேயர்கள் உணர்ந்துகொண்டே யிருப்பீர்கள்.

முடிவில் இராணி தன் மந்திரிகளில் ஒருவன்வசம் பலராமனை யொப்பித்து " இவனை நாளையவரையில் உமது பாதுகாப்பில் வைத்துக்கொண்டிரும். இரவு கண்ணபிரானைச் சிறைசெய்வதற்காகப் போதுமான வீரர்களை யிவனுக் குதவியாயனுப்பும். அந்தக்கண்ணப்பன் பிடிக்கப்பட்டதே அவனை நேராய் நகரக்கோட்டைக்குக் கொண்டுபோய் தனிக்காவலில் வைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அங்குள்ள கோட்டைத் தலைமையதிகாரியைத் தவிர வேறொருவரோடும் அவன் பேச சந்தர்ப்பம் இருக்கலாகாது. பத்திரம், பத்திரம்" என்று கூறிவிட்டு சமையலறையைவிட்டுச் சென்றாள். அம்மந்திரி பலராமனை யழைத்துச்செல்ல மற்ற அமைச்சர்களும் தத்தம் விடுதிக்கேகினர்.

13-வது அத்தியாயம்.

பிரபலசிங்கன் தன்னிடம் கூறிவிட்டுச் சென்ற சமாசாரத்தை அரியநாயகி மறுநாள் மாலைவரையில் கமலாம்பாளிடம் கூறவேயில்லை. பொழுதமரும் வேளையாகச் சந்திக்கவேண்டிய காலமும் நெருங்கிவிட்டது. அப்போது சமயமும் அனுகூலமாய் வாய்ந்தது. செல்வராயர் தன் அறையில் உட்கார்ந்து ஏதோ எழுத்து வேலையிலிருக்கிறார். தங்கம்மாள் சமையலறையில் சுறுசுறுப்பாய் வேலைசெய்து கொண்டிருக்கிறாள். அச்சமயம் பார்த்து அரியநாயகி கமலாம்பாளிடம், முன்தினம் பிரபலசிங்கன் என்ற ஒரு ஆள்வந்திருந்ததும், அவன் கமலாம்பாளிடம் ஏதோ முக்கியமான சமாசாரம் கூறவேண்டுமென்று விளம்பியதும் யாவும் கூறினாள்.

அவற்றைக் கேட்டதே கமலாம்பாளுக்குச் சுபாவமாகவே கண்ணபிரானைப் பற்றி நினைப்புவந்தது. ஆயினும் எல்லாம் பெரிய மர்மத்திலிருக்கிறதே யன்றி, அரியநாயகி கூறியதில் எதுவும் உண்மையாய் ஏற்படவில்லை. அப்படி யிருந்தும், கமலாம்பாள் கண்ணபிரானிடமிருந்தே சமாசாரம் வந்திருக்கிறதென்று மனதில் தீர்மானமாய் எண்ணிக்கொண்டாள். அதனால் சந்தோஷசங்கதி வந்திருக்கிறதோ துயரமான சங்கதி வந்திருக்கிறதோ வென்று அவள்மனதில் மிக்க கலவரமுண்டாயிற்று. அரியநாயகி, தங்கம்மாள் திடீரென்று கமலாம்பாளை யெதற்காகவேனும் தேடாதிருக்க உத்தேசித்து, அவளிடம்போய், " கமலாம்பாள் ஏதோ தலைவலியாயிருந்து இப்போதுதான் நித்திரை போய்விட்டாள், நானும் சென்று அவளருகில் இருக்கிறேன் என்று கூறிவிட்டுத் திரும்பினாள்.

சந்திக்கவேண்டிய வேளை நெருங்கிவிட்டதே, கமலாம்பாளும் அரியநாயகியும் வீட்டின் பின்பக்கவழியாத் தோட்டத்திற்குச் சென்றார்கள். சற்றுதூரம் சென்றபோது அரியநாயகியின் மடியிலிருந்து ஏதோ ஒருபொருள் கீழே விழ அவள் சட்டென்று அதை யெடுத்து மடியில் வைக்கும்போது கமலாம்பாள் பார்த்து " அதென்ன அதென்ன காட்டு!" என்றாள். அரியநாயகி இனி மறைப்பதிற் பயனில்லையென்று கருதி " அது கைத்துப்பாக்கி இதோ பார் " என்று எடுத்துக்காட்டி, " இன்னொன்று கூடவிருக்கிறது, இரண்டும் ஆயுத்தமாய் கெட்டிக்கப்பட்டிருக்கின்றன " என்றாள்.

கமலாம்பாள் மிக்க வியப்பும் திகிலுமடைந்து "ஐயோ தெய்வமே! அரியநாயகம், என்ன! ஆபத்து நேரிடப்போகிறதென்று நம்புகிறாய்?" என்றாள்.

அரிய:—"அப்படியில்லை. இக்காலத்தில் எதற்கும் 'எச்சரிக்கையுடன் நடப்பது நலம். இந்தவிஷயமும் மர்மமாய் இருப்பதால் நாம் ஜாக்கிரதையாயிருப்பதே நலமென்றெண்ணினேன்" என்றாள்.

இருவரும் குறித்த ஸ்தலத்திற்குச் சென்றதே, மறுவினாடி பிரபலசிங்கன் அவர்கள் எதிரில்வந்து நின்றான். அரியநாயகி அவனைநோக்கி,

"ஐயா, என் வாக்குதத்தத்தை நிறைவேற்றிவிட்டேன். இந்தம்மாள் தான் கமலாம்பாள். நமது நிபந்தனைப்படி நான் அதோ அம்மரத்தருகில்போய் நிற்கிறேன். தாங்கள் இந்தம்மாளிடம் கூறவேண்டிய சங்கதியைக் கூறும்" என்று கூறிவிட்டு, தூரத்தில்போய் நின்றாள். தான் நிற்குமிடத்திலிருந்து அவள் இவர்களை நன்றாய்ப் பார்க்கக்கூடும். அவள் சென்றதே பிரபலசிங்கன் கமலாம்பாளைநோக்கி,

"அம்மா, நான் ஆலசியமின்றி சங்கதியைக்கூறிவிடுவேன். ஆனால் அதை யின்னவிதமாயத் தொடங்குவதென்பதுதான் புத்திக்குப்புலப்படவில்லை. ஆயினும் ஒரு சங்கதிகேட்கிறேன், அதாவது தங்களுக் கன்பானவர்கள் யாவரிலும் தங்கள் மனதிலிருந்து நீக்கக்கூடாத விதமாயிருப்பவர் யாராவது ஒருவருண்டோ கூறும்" என்றான்.

கமலாம்பாள்:—"ஆ! அவருக்கென்ன? அவருக்கென்ன?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

பிரபல:—நான் கூறுவது யாரைத் தெரிகிறதா?

கமலா:—ஆம், ஆம். கண்ணபிரான் பிரபு, கேசவபுரம் ஜமீன்தார்.

பிரபல:—"ஆம், கேசவபுரம் ஜமீன்தாரே. அவர் இதோ இந்தஅடையாளத்தையும்மிடம் அளிக்கச்சொன்னார். இதில் சிகைத்துண்டில் பாதியிருக்கிறது. பாதியை அவர் வைத்துக்கொண்டார். ஏனெனில்-ஏனெனில்" என்று அப்புறம் கூறமுடியாமல் தியங்கினான்.

கமலாம்பாள் அக்குறிப்பால் இவன் ஏதோ துயரமான சமாசாரம் கொண்டு வந்திருக்கிறான் என்று அறிந்துகொண்டு, "ஆ! என்மனதை வேதனையில் வைக்கவேண்டாம். எந்தசங்கதியாயிருப்பினும் தயவுசெய்து உடனே கூறிவிடுங்கள்" என்றாள்.

பிரபல:—நீ துயரமான சங்கதியைக் கேட்கவேண்டியிருக்கிறது.

கமலா:—"என்ன சங்கதி? இப்போது அவர் உயிரோடிருக்கிறாரா? எங்கேயிருக்கிறார்?" என்று மிக்க ஆவலோடு கேட்டாள்.

பிரபல:—உயிரோடியிருக்கிறாரென்றே நம்புவோம். நான்வரும்போது அவரையவருடைய சொந்த அம்மானாகிய சுந்தரநாயகம் பிரபுவிடம் விட்டுவந்தேன்

கமலா:—ஆ! அப்படியாயின் க்ஷேமமாகவே யிருப்பார் என்பதிற் றடையேயில்லை.

பிரபல:—"அந்தோ! அப்பிரபு மகாத்துரோகி. அதனாலேயே நான் மிக்க பயப்படுகிறேன். கண்ணபிரான் இறந்துவிட்டால் அவனுடைய திரண்ட ஆஸ்தி முழுமையும் இப்பிரபுவுக்கே சட்டப்படிகிடைக்கும். இதற்காகவே அச்சண்டாளன் கண்ணபிரானுக்கு எவ்விதத்தீங்கும் செய்துவிடுவான். நான் இங்கு வந்தகாரணம் என்னவெனில், என்சகோதரனுக்கு" என்றதே,

கமலாம்பாள் மிக்க வியப்புற்று "ஆ! உங்கள் சகோதரரா?" என்றாள்.

பிரபல:—"ஆகா! வாய்தவறிக் கூறிவிட்டவரையில் இனி மறைப்பதில் பயனில்லை. ஆம் கண்ணபிரான் என்சகோதரன்றான். என்தாயும் அவன் தாயும் ஒரே தாய்தந்தைகட்குப் பிறந்தவர்கள். அவன் ஆபத்தில் சிக்கிக்கொண்டால் நான் அந்த அடையாளத்தை யுன்னிடம்கொடுத்து, கண்ணபிரான் முடிவுவரையில் உனக்குத்துரோகம் நினைக்கவில்லை யென்று உன்னிடம் கூறுவதாக கண்ணபிரானுக்குப் பிரமாணிக்கம் செய்துகொடுத்திருக்கிறேன்" என்றான்.

இம்மொழிகளைக்கேட்டதே! கமலாம்பாளுக்கு ஆவிசோர்ந்தது. அவள் கண்களினின்றும் ஜலம் தாரைதாரையாய் வடியத்தொடங்கிற்று. பிரபலசிங்கன் "அம்மா! இனிவா, உன்னையழைத்துச்சென்று உன்சினேகியிடம்விட்டு விடுகிறேன்" என்றான்.

கமலாம்பாள் துயரத்தோடு திரும்பும் சமயத்தில் நெருக்கமான செடிகளின் மறைவிலிருந்து திடீரென்று ஐந்தாறு போர்வீரர்கள் பாய்ந்துவந்து பிரபலஸிங்கனைப் பிடித்துக்கொண்டார்கள். கமலாம்பாள் கோவென்றலறிக் கீழே விழுந்துவிடப்போனாள். ஆனால் அதே நிமிடம் இன்னொரு செடிமறைவிலிருந்து ஒருவன் பாய்ந்து வந்து அவளைப்பிடித்துக்கொண்டு,

"பேசாமலிரு. இப்போது நீ என்கையில் சிக்கிக்கொண்டாய்—நாளையெப்படியேனும் நீ என் மனைவியாய்விடப்போகிறாய். நீ காதல்கொண்ட என் விரோதியாகிய அந்தப்பயல் நகரக்கோட்டையிலுள்ள சிறைச்சாலையில் வைக்கப்படப் போகிறான்" என்றான்.

அவன் குரலைக்கேட்டபோதே கமலாம்பாள் கருடனைக்கண்ட நாகம்போல் நடுநடுங்கிவிட்டாள். ஏனெனில் அவன் கப்பற்கொள்ளைக்காரனாகிய பலராமனேயென்று தெரிந்துகொண்டாள். ஆகையால் மிக்க பயங்கொண்டு கோவென்றலறினாள்.

இதற்குள் பிரபலஸிங்கன் தன்னைப்பிடித்துக்கொண்ட ஆட்களைநோக்கி, "இதென்ன அநீதம்? நீங்கள் என்னகாரணத்திற்காக என்னைப்பிடிக்கிறீர்கள்?" என்று வினவினான்.

அப்போர்வீரர் கூடவந்திருந்த வாலிபனாகிய உத்தியோகஸ்தன் "நாங்கள் துரைத்தனப் போர்வீரர்களென்று தெரியவில்லையா? பிரபுவே! தங்களைப் பிடிக்க என்னிடம் வாரன்டிருக்கிறது" என்றான்.

அதேநிமிடம் சற்றுதூரத்தில் துப்பாக்கி வெடிச்சத்தமும், யாரோ ஆ! வென்று கூவியதும் கேட்டது. அரியநாயகி ஓடிப்போய் கமலாம்பாளை யன்போடுபிடித்துக்கொண்டாள். கள்ளப்பயலாகிய பலராமன் துப்பாக்கி குண்டுபட்டு கீழேவிழுந்து கிடக்கிறான்.

இவ்வாறு நேர்ந்த குழப்பத்தால் பிரபலஸிங்கன் இதுதான் சமயமென்று அந்த வீரர்களிடமிருந்து தப்பியோடிவிட முயன்றான். ஆனால் அவர்கள் ஐந்தாறு பெயராகையால் மறுபடி யவனைக்கெட்டியாய் பிடித்துக்கொண்டார்கள். அந்த சச்சரவில் பிரபலஸிங்கன் தன்முகம் மறையும்படி யணிந்திருந்த ஒருவித தொப்பிகழன்று விழுந்துவிட, அவன் முகம் யாவர்க்கும் நன்றாய்ப்புலப்பட்டது. அதைக்கண்ட படைத்தலைவன் முகம் வேறுபட்டு,

"அடடா இதென்ன! பெரிய தவறாய்விட்டதே" என்றான்.

அச்சமயம் பலராமன் " ஐயா காப்டன் கங்காவிங் ! எனக்குக் காயம்பட்டிருக்கிறது. சற்று உதவி செய்யுங்கள் " என்றான்.

காப்டன் தன் ஆட்களைநோக்கி " மாதரைப்பிடிக்க நமக்கு வாரண்டில்லாதிருக்க இந்தப்பயல் அம்மாதைப்பிடித்ததால் ஆபத்தில் சிக்கிக்கொண்டான். ஆயினும் அவனை நாம் கைவிடலாகாது " என்றான்.

அதற்குள் ஒருவன் ஓடிப்போய் பலராமனைத்தூக்கி யுட்காரவைத்தபோது அவன் தலைநிமிர்ந்து பிரபலவிங்கன் முகத்தைக்கண்டதும் முகம் வேறுபட்டுக் கலவரமும் பீதியுமடைந்தான். படைத்தலைவன் அவனைநோக்கி,

" பேஷ், நீ தவறான ஆளைக்காட்டி யெங்களுக்கு வீண்தொந்தரை கொடுத்தாய். சரியாய் இருபத்திரண்டு வயதுகூட ஆகாதவனும் நன்றாய் மீசையே முளைக்காத வாலிபனுமாகிய கண்ணபிரான் பிரபுவுக்கும் இந்த ஆளுக்கும் என்னசம்பந்த மிருக்கிறது ' என்றான்.

இவை யாவும்கேட்ட பிரபலவிங்கன் படைத்தலைவனைநோக்கி, " ஐயா, நான் கண்ணபிரான் பிரபுவல்லவென்று நீர் நிச்சயிப்பது உண்மையே. நான் அந்தப் பிரபுவல்ல ஆகையால் என்னை விட்டுவிடும்படி தங்கள் போக்கிரிப்பயல்களுக்கு கட்டளையிடுங்கள் " என்றான்.

அந்தோ, அவன் அப்படியே விட்டுவிடச்சொல்லியே யிருப்பான். ஆனால் பிரபலவிங்கன் போக்கிரிப்பயல்கள் என்ற வார்த்தையை யுபயோகித்தது கெடுதியாய் முடிந்தது. எப்போதும் இன்சொல்லால் காரியசித்தி யுண்டாகுமேயன்றி வன்சொல்லால் நன்மை கிடைக்காது.

அங்கிருந்த போர்வீரர்களில் வயதுமுதிர்ந்த ஒருவன், போக்கிரிப்பயல்கள் என்ற வார்த்தையைக் கேட்டதே கோபமடைந்து,

" ஓகோ போக்கிரிப்பயல்களோ ! ஐயா காப்டென் ! இம்மனிதர் கண்ணபிரான் பிரபுவல்லவெனினும், இவர்பிடிக்கும்படி கட்டளை பிறந்திருக்கிறவர்களில் ஒருவராகிய தேவபுரி ஜாகீர்தார் திரவியசிங்க பிரபுவென்று நான் சத்தியம் செய்வேன். இவர் அத்தூஷணவார்த்தை கூறாதிருந்தால் நமக்கென்னவென்று நான் மௌனமாயிருக்கவே எண்ணியிருந்தேன் " என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே யாவரும் மிக்க வியப்படைந்தார்கள். ஏனெனில் அப்பிரபு தேசத்தில் முதல்தர அந்தஸ்தும் செல்வமுமுடையவர். கமலாம்பாளும் அரியநாயகியும்கூட மிக்க வியப்படைந்தார்கள்.

பிரபு என்னதந்திரம் செய்துபார்த்தும் பலிக்கவில்லை காப்டென் கங்காவிங் " பிரபுவே தாங்கள் திரவியசிங்கம் பிரபுவா அல்லாவாவென்பதை அதிகாரிகளே தீர்மானிக்கட்டும். ஒருவன் உறுதியாய்க் கூறுகிறவரையில் நான் என் கடமைப்படி நடந்தேதீரவேண்டும் " என்றான்.

நேயர்களே ! ஆத்திரத்தால் கூறிய ஒரு கடின மொழியால் பிராணபத்து நேர்ந்தது பார்த்தீர்களா. எப்போதும் வன்மொழியால் கெடுதியேயுண்டாகுமென்பதை மறவாதீர்கள்.

துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டதே வீட்டிற்குள்ளிருந்தவர்கள் குழப்பமடைந்தார்கள். செல்வராயர் தன் ஆட்களை யழைத்துக்கொண்டு தீபத்தோடு அங்குவந்தார். நடந்த சங்கதிகளைக்கேட்டு அவரும் மிக்க வியப்படைந்தார். அவர் நகரத்தின் மேயர் பதவியிலிருப்பவராதலால், அதிகாரிகளுக்கு அவர் உதவி செய்யவேண்டியவர். காப்டென் கங்காவிங் நடந்தசங்கதியை யவரிடம் கூறிவிட்டு, " இவர் திரவியசிங்கம் பிரபுவென்று கூறப்படுகிறபடியால், இவரை நான் சிறையாக்கிச்செல்கிறேன் என்று முடித்தான்.

செல்வராயரும் கங்காவிங்கும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், வீரர்களும் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் திரவியசிங்கம் பிரபு எட்ட இருக்கும் அரியநாயகியைநோக்கி " உன்னிடம் ஒரு சங்கதி கூற வேண்டுமென்று சமிக்கைசெய்தார். அரியநாயகி சூக்குமபுத்தியுடையவள். சற்றுமுன்பு பிரபு தப்பித்துக்கொள்ள முயன்றபோது. இவர் தொப்பி கீழே விழுந்து விட்டதென்று கூறினோமல்லவா. அது சற்று தூரத்திற் கிடந்தது. அரியநாயகி அதை யெடுத்துப் பிரபுவிடமளிப்பவள்போல் சற்று எட்ட நின்று "பிரபுவே தங்கள் தொப்பி யிதோவிருக்கிறது" என்று கையைநீட்டினாள். பிரபு சட்டென்று மிக்க வந்தனம் அம்மா என்று கூறிக்கொண்டே நான்கடி முன்னுக்குச் சென்று அவள் அருகில்நெருங்கித் தொப்பியை வாங்கிக்கொள்ளும்போது " நாளை காலை மாரப்பன் காட்டிலுள்ள வெள்ளை வீட்டில்—என்சகோதரியிடம் நடந்ததைக் கூறு " என்றார்.

அரியநாயகி செல்வராயரை நோக்கி "அந்தப் பலராமன் ஒரு சமயம் சமயோசிதஉதவியில்லாமல் மடியப்போகிறான் " என்றாள். செல்வராயர் இல்லையில்லை. நாம் உடனே அவன் காயத்தைக் கவனிப்போம் என்றார்.

காப்டென் கங்காவிங் அவரை நோக்கி, " அப்படியாயின் அவனைத் தங்கள் வசத்தில் விட்டுவிட்டுச் செல்கிறேன் " என்றியம்பி, அவர்களுக்கெல்லாம் வந்தன மளித்துவிட்டு திரவிய சிங்கம் பிரபுவையும் தன் ஆட்களையும் அழைத்துக்கொண்டு சென்றான். (தொடரும்)

பூணி தப்புசாமி முதலியார்.

---

* உண்மை நீதித்துண்டுகள்.

1. "நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்—மேற்சென்றிடித்தற் பொருட்டு " என்றபடி ஒருவரோ டொருவர் சிநேகஞ் செய்தல் தாமிருவருங் கூடிக் கண்டபடி பேசி விளையாட்டு வகையால் மகிழ்தற்கேயன்று. தம்மில் ஒருவருக்கொருவர் ஸத்விஷயங்களை எடுத்துக்கூறி இருவரும் நல்வழிப் படுதற் பொருட்டே யாதலால், அங்ஙனம் இம்மை மறுமைக்கு உபயோகமாகத் தரும நூற் பொருள்களை எடுத்துக்கூறும் மேன்மையுடையவர்களே நண்பர் என்று சிறப்பித்துக் கூறுதற்கு ஏற்றவர் ஆவர்.

2. ஒருவன் கண்டபொழுது முகமலர்ச்சி காட்டி வாயாலும் மனங்கலந்து பேசுவர் பாலக் கல்லு முருகும்படி கனிவாகப்பேசி, அவன் காணாதபொழுது அவனையே புறங் கூறுகிற அற்பர்களின் தன்மைக்கு அஞ்சியே தேவர்கள் இங்ஙனம் கண் இமையாது நற்றற்கு சமத்காரமாக ஒரு காரணங் கற்பித்து கூறுதலினாலே புறங்கூறுவர் பக்கல் எத்துணை வல்லாரும் கண் விழிப்பாயிருக்க வேண்டி யுள்ளதென்ற இயல்பு நன்கு விளங்கும்.

3. வெளிக்குப் பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தல்பற்றி உட்பகைவரது சேர்க்கை பொருளழிவு முதலிய பல தீங்குகளை உண்டாக்குமாதலால், அவ்வகப் பகைவர் அணையாமலும் அவர்க்குத் தாம் உடன்படாமலும் இருத்தல் வேண்டும். " உடம்பாடி லாதவர் வாழ்க்கை குடங்கருட், பாம்போடு னுறைந்தற்று."

4 இன்பநுகர்ச்சியையே முக்கியமாகக் கொண்டு வேறு எதையும் பொருள் செய்யாதிருந்தவன் பிறகு பலவகைகளால் துன்பமடைவன் (சச்சந்தனென்னும் அரசன் தன்மனைவியாகிய விஜயையினிடத்து அளவிறந்த காதல் கொண்டு அவளோடு இடைவிடாது இன்பமுற்றிருக்கவெண்ணி நிமித்திகன்

முதலிய மந்திரிகள் சொன்ன உறுதிமொழிகளைச் சிறிதுங்கொள்ளாமல், கட்டியங்காரனென்னும் மந்திரியை நம்பி அவனிடம் இராச்சியத்தை ஒப்பித்து அவனையே அரசனுக்கிவிட்டு, தான் அந்தப்புரத்திற் சென்று சுகித்திருந்து அக் கட்டியங்காரனாற் கொல்லப்பட்டனன்) என்பது உணரத்தக்கது.

5. சக்கரம் கழலாதபடி அச்சின் கடையிற் செருகும் ஆணி மிகப் பெரிய தேர்க்கு இன்றியமையாத ஆதரவாவதுபோல, நிரம்பக்கற்ற பேரறிவினர்க்கு ஆதரவாகத்தக்க ஒரு சொல் சிற்றறிவினரிடத்தும் ஒரோவிடத்து உண்டாகலாம். ஜீவகனென்னும் இராஜகுமாரன் இளமையில் தோழருடன் நகர்ப்புறச் சோலையில் விளையாடிக்கொண் டிருக்கையில் மகாபண்டிதனான ஒரு முனிவன் வந்து 'குமார! சமீபமாக இவ்விடத்து ஊருண்டோ என்று வினவ, ஜீவகனும் புன் சிரிப்புக்கொண்டு சிறுபிள்ளைகளாகிய நாங்கள் இங்குவிளையாடுவதைக் கண்டதனால் ஊர்சமீபத்ததே யென்பது சொல்லாமலே விளங்கவில்லையோ" என்று சொல்ல அதுகேட்டு அத்துறவி மனமுவந்தனன் என்பதனான் நன்கு விளங்கும்.

6. பிராணிகட்கு ஆயுள் முடிவுகாலம் வந்துவிட்டால் அழுதாலும் தொழுதாலும் அலறினாலும் எழுந்தாலும் மற்று என்செய்தாலும் யமன் இரங்கிவிட்டுப் போவதில்லை. செல்வம் அதிகாரம் முதலியவற்றிற்கு அஞ்சியும் அப்பாற் செல்வதில்லை. ஆகவே எப்படிப்பட்டவர்க்கும் மரணம் நிச்சயமாம் என்பது கருதி யாக்கை நிலையாமையை மனங்கொள்ளாமல் தவஞ்செய்யாது வீணே காலத்தைக்கழிப்பது தவறு.

7. "நெஞ்சிற்றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணாரில்" என்றபடி மனம் விஷயாந்தரங்களின்மேற் சென்றுகொண் டிருக்கையில் ஸந்யாஸாசிரமத்தை மேற்கொண்டு அத்துறவுநிலைக்கு ஏற்ற காஷாயவஸ்திரமும் தண்டகமண்டலங்களும், தலைமயிரை மழித்தலும் நீட்டலும் முதலிய கோலங்களைக் கொண்டவர்களுடைய அத்தவவேஷமானது உயிர்க்குப் பாதுகாவலாகாமையேயன்றிச் சட்டைப்போல உடற்குப் பாதுகாவலாவதுமன்று. ஐம்புலன்களைப்பாதுகாவாமையிற் கஞ்சுகமும் தவப்போர்வையும் ஒக்குமாயினும். கஞ்சுகம் குளிர் முதலியவற்றால்வருந்தாதபடி உடம்பொன்றையாவதுபாதுகாக்கும். இந்தப்போலித் தவவேடமோ அதனையுங்காவாது அகத்துக்கொண்ட சிற்றின்பவாசை காரணமாக உண்டாகின்ற மயிர்சிலுத்தல் முதலிய மெய்ப்பாடுகள் போலித்தவ வேடங்கொண்டவரது உடம்பில் மறைதலின்றி வெளிப்படுதலால் (இப்புலமுங்காவாதிது.)

(சீதையைக் காதலித்து வஞ்சனையாற் கவர்தற்குக் கபடசந்யாசி வேஷங்கொண்ட இராவணன் அப்பெண்மணியைப் பார்த்தமாத்திரத்தில் உடல்வியர்த்தல் முதலிய உவகை மெய்ப்பாடுகள் தோன்றப்பெற்றதை இராமாயணத்திலும், சுபத்திரையை இரகசியமாக மணஞ்செய்துகொள்ளுங் கருத்துடன் சந்யாசி வேடங்கொண்ட அருச்சுனன் அவளைக்கண்டமாத்திரத்தில் மெய்சிலிர்த்து இமையாக்கண்ணுயினன் என்பதைப் பாரதத்திலுங்காணலாம்) ஆகவே அகத்தே துறவாமற் புறத்தேதுறந்தார்போல நடிப்பதில் பயனில்லை துறவுக்கு மனத்தூய்மையே முக்கியம்.

*சில நீதிநூற்களினின்றும் எடுத்து எழுதப்பட்டன. (தொடரும்.)

கு. ப. அ. ச. சதாசிவம் பிள்ளை, அம்மளூர்.

"நீர்விளையாடேல்"

ஆழமாகிய குளம் ஏரி முதலிய நீர்நிலைகளில் நெடுநேரம் நீந்தியும் முழுகியும் விளையாடுவது சிறுவர்களுக்குப் பெரும்பாலும் பிரியமா யிருக்கிறது. குளக்கரையில் உயரமான விடங்களிலிருந்து ஜலத்தில் பாய்ந்து குதிக்கிறார்கள். இத்தகைய விளையாட்டால் சிற்சில சமயங்களில் பெரிய ஆபத்துகள் நேரிடுகின்றன. அதிலும் முன்பின் பழக்கமில்லாத குளங்களில் அப்படிச் செய்வது இன்னும் மிக்க ஆபத்து.

மனிதனாய்ப் பிறந்தவன் நீந்தத் தெரிந்துகொண்டிருப்பது நலமே. ஆனால் எப்போதேனும் கால்சறுக்கி ஆழமான ஜலத்தில் விழுந்துவிட்டால் அச்சமயம் அந்த ஆபத்தினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மட்டுமே அதைக் கற்றுக்கொண்டிருக்கவேண்டுமன்றி சிறுபிள்ளை விளையாட்டாய் மனஞ்சென்றபடி கண்டகுளங்களிலும் குட்டைகளிலும் குதித்தும் நீந்தியும் காலத்தைக்கழிப்பதோடு தனக்குக் கெடுதி தேடிக்கொள்ளவல்ல.

அதனால் என்ன கெடுதியெனில் அவற்றில் சிலவற்றைமட்டும் ஈண்டு கூறுகிறோம்:—

1-வது. ஜலத்தில் அதிலும் குளிர்ச்சியான குளம் குட்டைகளிலிருக்கும் ஜலத்தில் அதிகநேரம் இருப்பதால் தேகத்தில் வியாதியுண்டாகும்.

2-வது. ஜலத்திற்குள் நமக்குக் கெடுதியை யுண்டாக்கத்தக்க வஸ்துக்கள் என்ன விருக்கின்றனவென்று நாம் காணமுடியாது.

ஜலத்தில் விஷத்தையுடைய பாம்பு முதலிய ஜந்துக்கள் இருப்பதுண்டு. அவையன்றி ஜலத்தின்கீழ் ஒருவிதக் கொடிப்பாசி யிருப்பதுண்டு. அவை தேகத்தில் சுற்றிக்கொண்டால் நம் இஷ்டப்படி கைகால்களை யியக்கி மேலே கிளம்பிவர முடியாது.

சாதாரணமாய் குளங்குட்டைகளில் கீழே சேறுதானிருக்கும். சில குளங்களில் அச்சேறு மிக்க மிருதுவாய் அதிக ஆழமிருப்பதுண்டு. கரைமேலிருந்து குதிக்கையில் வேகத்தால் தேகம் முழங்காலுக்குமேல் இடுப்புவரையில்கூட சேற்றிற் புதைந்துவிடும். பிறகு வெளிவரமுடியாது.

மூன்று சிறுவர்கள் ஒரு குளத்தில் குதித்து விளையாடும்போது கரையிலிருந்து குதித்த ஒருசிறுவன் ஜலத்தில் முழுதும் முழுகாமல் சிரசும் தோளும் மேல் தெரியக் கதரிக் கூவினான். பிறகு பேச முடியவில்லை. மற்ற சிறுவர்கள்சென்று பெரியவர்களை யழைத்துவந்து பார்த்தபோது அவன் இறந்துபோயிருந்தான். காரணம் என்னவெனில் இரண்டு மூன்று மாதங்கட்குமுன் அக்குளத்தில் சலம் மிகக் கொஞ்சமா யிருக்கையில் ஜலத்தை யிரைப்பதற்காக கால் வைத்து நிற்கவேண்டிய குறுக்குச் சட்டத்தைத் தாங்க மூங்கில் கட்டிருந்தார்கள். பிறகு ஜலம் நிறையவந்தபோது மூங்கிலின் முனைக்கு ஒரு ஜாண் மேலே வந்துவிட்டது. மறைந்திருந்த மூங்கிலுக்கு நேராய் சிறுவன் குதிக்கவே அது கழுவேற்றிய மாதிரியாய் அவன் தேகத்தில் ஏறிவிட்டது.

இவ்வாறு பல ஆபத்துக ளுண்டாதலால் நம் மூதாட்டி கூறிய "நீர் விளையாடேல்" என்ற நற்புத்தியின்படி நாம் நடக்கக் கடமைப்பட்டவர்களாகிறோம்.

சீடன்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

பிங்களவரு புரட்டாசிமீ சாலிவாகன 1839, கலியுகாதி 5018,
பசலி 1326-27, கொல்லம் 1092-93,
இங்கிலீஷ் 1917-ம்வரு செப்டம்பர்மீ—அக்டோபர்மீ

செப்டம்பர்மீ	புரட்டாசிமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
16	1	ஞா	● அமா 36-17	பூர-8-26	சித் 8 அமி	மாளயஅமாவாசைவிரதம்
17	2	தி	பிர-29-38	உத்-14-25	சித்த 60	சமஸ்தாபரணம் தரிக்க
18	3	செ	துதி-33-14	அஸ்-19-36	சித்த 60	பகுக்களைக் கட்ட
19	4	புத	திரி-35-41	சித்-23-51	சித்த 60	பலராமஜயந்தி
20	5	வி	சது-37-32	சுவா-26-51	அ 38 சித்	உதயம் ஏர் உழ
21	6	வெ	பஞ்-37-1	விசா-28-43	சித்த 60	கீதாரம்பம் செய்ய
22	7	ச	சஷ்-35-43	அனு-29-15	சித்த 60	சஷ்டி விரதம்
23	8	ஞா	சப்-33-16	கேட்-28-43	மா 29 அ	பாத்திரம் புழங்க
24	9	தி	அஷ்-28-5	மூல-27-9	சித்த 60	தனியநாள்
25	10	செ	நவ-25-33	பூரா-24-41	சித்த 60	முத்துபவழம் வாங்க
26	11	புத	தச-20-29	உத்தி-21-27	அமி 21 சி	வித்யாரம்பம் செய்ய
27	12	வி	ஏகா-15-0	திரு-17-49	சித்த 60	நாமகரணம்
28	13	வெ	து-9-27	அவி-13-40	சித்த 60	முடி வாங்க
29	14	ச	திர-3-5	சதை-9-39	அமி 10 ம	கிணருக்கு ஏற்றம் வைக்க
			சது-57-49			
30	15	ஞா	○ பௌ 51-28	பூர-4-26	சித் 4 அ	கம்பு விதைக்க
1	16	தி	பிர-46-14	உத்-1-51	சித்த 60	கரிநாள்
				ரேவ-56-43	சித்த 60	
2	17	செ	துதி-41-42	அசு-55-59	சித்த 60	சிலவிடங்களில் காற்றதிகம்
3	18	புத	திரி-38-43	பர-54-15	சித்த 54	பாகசாலையில் அடுப்பிட
4	19	வி	சது-35-55	*கார்-55-28	மரண 60	கிருத்திகைவிரதம்
5	20	வெ	பஞ்-33-21	ரோக-55-0	மா 55 சி	
6	21	சனி	சஷ்-32-12	மிரு-54-45	சித்த 60	பல விருக்ஷம் நட
7	22	ஞா	சப்-33-45	திரு-58-16	சித்த 60	கன்று காலிகள் வாங்க
8	23	தி	அஷ்-35-51	புன-60-0	அமி 60	கொள்ளு விதைக்க
9	24	செ	நவ-39-9	புன-1-36	சித்த 60	தனியாநள்
10	25	புத	தச-43-34	பூச-7-21	சித்த 60	புது உறள் வாங்க
11	26	வி	ஏகா-48-11	ஆயி-13-16	சித் 13 அ	பசுக்களை வாங்க
12	27	வெ	துவா-53-24	மக-19-37	மா 20 சித்	
13	28	ச	திர-58-22	பூர-26-1	சித் 26 ம	ஆயுதம் பிரயோகிக்க
14	29	ஞா	சது-60-0	உத்தி-32-6	அமிர் 60	கரிநாள்
15	30	தி	● அமா 60-0	அஸ்-37-31	சித்த 60	அமாவாசை விரதம்
16	31	செ	அமா-6-36	சித-42-2	சித்த 60	ஆலய நவராத்திரி

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

ஓம்
பரப்பிரஹ்மணே நம

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | பிங்களவரு ஐப்பசிமீ 1உ 1917ம்வரு அக்டோபர்மீ 16உ | பகுதி 4

கடவுள் வணக்கம்.

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமாளிகை மேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசா லக்கோலம்
வஞ்சனை பொருமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வஞ்சனை யிலாத கனவே
யெந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லா விடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோ மயாநந் தமே.

நானுனிங் கெனுமகந்தை யெனக்கேன் வைத்தாய்
நல்வினைதீ வினையெனவே நடுவே நாட்டி
யூனுரு முடற்சுமையென் மீதேன் வைத்தாய்
உயிரெனவு மென்னையொன்று யுள்ளேன் வைத்தா
யானுமை யாயகில நிகில பேத
மனைத்தினுள்ளுந் தானாகி யறிவா னந்தத்
தேனுகிப் பாலாகிக் கனியாய்க் கன்னற்
செழும்பாகாய்க் கற்கண்டாய்த் திகழ்ந்த வொன்றே.

ஆனந்த போதினி

பிங்களவுரு ஐப்பசி 1உ

ஞானம்.

ஞானம் எனினும் அறிவு எனினும் ஒன்றே. தெளிந்த அறிவே அதாவது பூரண அறிவே ஞானம் எனப்படுகிறது. இந்த அறிவே ஆன்மா என்பதும். உலகில் அறிவில்லாத பிராணி ஒன்றுமேயில்லை. ஆனால் அந்த அறிவின் பிரகாசம் பல தாரதம்மியமுடையதாய் மங்கி யிருக்கிறது. ஒருவனை நோக்கி "என்னடா உனக்கு அறிவில்லையா?" என்றும் "இவனுக்குச் சுத்தமாய் ஞானமேயில்லை" என்றும் கூறுகிறோம். அப்படிக் கூறுவதால் அவனுக்கு அறிவு அடியோடில்லையென்று அர்த்தமல்ல. அறிவின் பிரகாசம் அதிகமாய் மங்கி யிருக்கிறது என்பதே கருத்து. ஓரறிவுள்ள தாழ்ந்த சிருட்டி முதல் ஆறறிவுடைய உயர்ந்த படைப்பு வரையில் அறிவு இருக்கவே யிருக்கிறது.

"மனிதருக்கு மட்டுமே ஆன்மாவிருக்கிறது. மனிதனைத் தவிர மற்றத்தாழ்ந்த ஜந்துக்களுக்கு ஆன்மாயில்லை. ஆகையால் அவற்றைக் கொல்வதால் பாவமில்லை" என்பது சிலர் கொள்கையா யிருக்கிறது. பகுத்தறிவு இருந்தால்தான் ஆன்மா இருக்கிறது என்பது இவர்கள் கொள்கை. இது ஆன்மாவின் இலட்சணம் இன்னதென அறியாக்குறையால் உண்டான குற்றமேயன்றி வேறல்ல. ஓரறிவுள்ளவை முதல் ஆறறிவுள்ளவை வரையில் யாவும் ஆன்மாவை யுடையனவே. அறிவையன்றி ஆன்மா இல்லை, ஆன்மாவை யன்றி அறிவில்லை. அறிவின் பிரகாசத்தில் பலவிதமான ஏற்றத் தாழ்வுகள் உண்டு. பகுத்தறிவு இல்லாததாலேயே ஆன்மா இல்லையென்பது முழுதும் தவறு. ஆண்டவன் அதனதன் பிறவிக்குத்தக்க அளவாய் அறிவை யமைத்திருக்கிறார். பக்ஷிகள் தங்களுக்கு அவசியமான காலத்தை யறிந்து கூடுகட்டிக்கொள்கின்றன. மிருகங்கள் தங்கள் விரோதிகளை யறிந்துகொள்கின்றன. பழக்கத்தால் அனேகம் விஷயங்களைச் செய்கின்றன. மனிதனுக்கு மட்டும் பிறக்கும்போதே ஆறறிவும் உதயமாயிருப்பதில்லை. முதலில் ஸ்பரிச உணர்ச்சியொன்று

மட்டுமேதான் உண்டு. கண் பார்வையைக் கிரகிக்கும் சக்திகூட பிறகே யுண்டாகிறது. சத்தத்தை யறியும் சக்தி சிலநாட்களுக்குப் பின்புதான் வருகிறது. கண் பார்வையைக் கிரகிக்கும்போதுதான் குழந்தை மனிதர் முகத்தைக்கண்டால் உற்றுநோக்க ஆரம்பிக்கிறது. சத்தத்தை யுணரும் சக்தி வந்தபிறகுதான், அழும்போது கைதட்டினால் அழுகையைவிட்டு சத்தத்தை யுற்றுக் கேட்கிறது. பிறந்த உடனே குழந்தையின் அறிவின் நிலை மிக்க மங்கலாகவே யிருக்கிறது. மிருகம் தன் விரோதியைக்கண்டால் தெரிந்துகொள்ளும். குழந்தையோ ஒன்றையும் தெரிந்துகொள்ளாது. அக்காலத்தில் பகுத்தறிவும் இல்லை. இதனால் குழந்தைக்கு ஆன்மா இல்லையென்று கூறலாகுமோ.

இந்த அறிவு என்ற ஞானம் எல்லா மானிடர்க்கும் இருந்தபோதிலும், எங்கோ ஒவ்வொருவர் மட்டுமே ஞானிகள் (ஞானமுடையோர்) என்று அழைக்கப்படுகிறார்கள். மற்றபேருக்கும் ஞானமிருந்தும் இவர்கள் ஞானிகள் என்று அழைக்கப்படுவதில்லை. என்னெனில் இவர்களுடைய அறிவு மேகத்தில் மறைந்திருக்கும் ஆதித்தன்போல் மங்கலா யிருக்கின்றது. மாயையென்ற மேகம் இவர்கள் அறிவை மூடிக்கொண்டிருப்பதால் அறிவின் பிரகாசம் பூரணமாய் விளங்கவில்லை. பூரணப் பிரகாசமுடைய அறிவே ஞானம். அதையுடையோரே ஞானிகள். ஆகையால் இச் சந்தர்ப்பத்தில் ஞானம் இரண்டுவகையாய்க் கூறப்படுகிறது. அதாவது சொரூப ஞானம் என்றும் விருத்தி ஞானம் என்றும் இரண்டுவகை. இப்படிக் கூறுவதால், பிரத்யேகமான இரண்டு ஞானங்கள் இருக்கின்றன வென்பது கருத்தல்ல. ஒரு ஆளே கொஞ்சம் வயதுடையவனா யிருக்கும்போது பையன் என்றும் அதிக வயதுடையவனானபோது மனிதன் என்றும் அழைக்கப் படுவதுபோல, ஒரு ஞானமே இரண்டு நிலைமைகளில் இரண்டு பெயரால் அழைக்கப்படுகிறது.

1. சொரூப ஞானம்:—இதற்குச் சாமானிய ஞானமென்றும் பெயர். இதுவே யாவரிடத்திலு முள்ளது. இதனால் யாவர்க்கும் உலகம் அநித்தியம், கடவுள் ஒருவர் உண்டு, என்பது முதலானவை மட்டும் தெரியும். இந்த ஞானத்திற்கு அஞ்ஞானத்தை யழிக்கும் சக்தி கிடையாது. அக்னி அந்தகாரத்திற்கு விரோதியேயாயினும் கொள்ளிக்கட்டையி லிருக்கும் அக்னிக்கு இருளைப் போக்கடித்து வெளிச்சத்தையுண்டாக்க எப்படிச் சக்தியில்லையோ, அதுபோலவே இந்த சொரூப ஞானத்திற்குத் தன்னோடுகூட விருக்கும் அஞ்ஞா

னத்தை யழிக்கச் சக்தியில்லை. ஆகையால் இந்த ஞானமிருந்தும் நாம் இது நித்தியம் இது அநித்தியம் என்ற உண்மை யொருவாறறிந்திருந்துங்கூட அதை மறந்து, மரணம் உண்டென்பதையும் மறந்து, அநித்தியத்தையே பற்றிக்கொண்டு, அதிலேயே வாஞ்சை வைத்து, அதற்கே யுழைத்து பிறவிப் பெருஞ்சாகரத்தில் அலக்கழிந்துகொண் டிருக்கிறோம்.

2. விருத்தி ஞானம்:—முன்னேகூறிய பொருபஞானமே, தன்னிடத்துள்ள மாசு நீங்கி, மேகத்தினின்றும் வெளிப்பட்ட சூரியன் போல் தன் முழுப்பிரகாசத்தையும் அடைந்தபோது விருத்தி ஞானமாகிறது. இதன்முன் அஞ்ஞானம் எள்ளளவும் நிற்காது. கொள்ளிக் கட்டையிலிருந்த அக்னிக்கு இருளை நீக்கச் சக்தி யில்லாவிடினும் அக்கட்டையைக் காற்றில் அசைத்தபோது, அதே அக்னி சுடர்விட்டெரிந்து இருளை யடியோடுநீக்கி, அறைக்குள் இருக்கும் பண்டங்கள் யாவும் புலப்படுமாறு பூரண பிரகாசத்தை யளிக்கிறது. அது போலவே, தான் சொரூப ஞானமா யிருந்தபோது தனக்கு அழிக்கச் சக்தியில்லாதிருந்த அந்த அஞ்ஞான இருளையிப்போது தான் விருத்தி ஞானமாக மாறியபோது அடியோ டழித்துவிடும்.

ஆகையால் நாம் ஞானத்தைப் பெறவேண்டுமெனின் அடியோடில்லாத ஒன்றைப் புதிதாய்ச் சம்பாதிக்கப்போகிறதில்லை. உள்ள அறிவை நன்றாய்ப் பிரகாசிக்கச்செய்யவே முயலவேண்டும். அதற்காகவே நூல்களைக் கற்பது. அறிவை வளர்க்காத கல்வியால் ஒரு பயனுமில்லை. எத்தனை நூல்களை மனப்பாடம் செய்வதாலும் ஒரு பயனுமில்லை. சாஸ்திரவாசனையும் அசுத்தவாசனையே யென்று கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் அதில் ஆவல் எப்போதும் அடங்காதென்பதோடு "நாம் அறிந்த அவ்வளவு சாத்திரங்கள் யாருக்கும் தெரியாது. நம்மிலும் படித்தவனில்லை" யென்ற அகங்காரத்தையுண்டாக்கும். அசமமதைகளற்று, மனச்சேட்டையற்று, உள்ளம் வெட்ட வெளிபோல் மாசின்றி, சலனமின்றி, ஆண்டவனிடத்தில் வைத்த அன்புருவாய், நாம் என்ற உணர்ச்சியும் முன்னிலைச் சுட்டும் தோன்றாது நிற்பதே பூரணமான சுத்த ஞானமெனப்படும்.

அதற்குமாறாய்க் கல்வியால் அசமமதைகளை யதிகரிக்கச்செய்து கொள்வது நமது அறியாமையே யாகும். ஆகையால் நமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! நாம் கல்வியாலடையவேண்டிய பயன் இன்னதென்பதை யுணர்ந்து,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்"

என்று நாயனார்கூறியதை மறவாது, கல்வியால் அறிவை விசாலிக்கச் செய்து, அஞ்ஞானத்தை யொழித்து, எதை யறிந்தால் யாவும் அறிந்ததாகுமோ, எதைப்பெற்றால் வேறெதன்மேலும் அவா செல்லாதோ, எதையடைந்தால் யாவும் அடைந்த பரிபூரண திருப்தியுண்டாகுமோ, எது துக்கமற்றதும் சதா ஆனந்தமயமுமானதோ அதை யடையவே முயலுவோமாக.

ஓம்தத்ஸத்.

பிராமணன் என்பான் யார்?

பிராமணன் என்பான் என்னவிதமாய் இருக்கவேண்டும் என்பதை நண்பர்கள் அறியவேண்டும்.

அஞ்ஞானத்தைக் கண்டிக்கின்ற ஒரு ஆயுதம்போன்றதும், அறிவிலிகளுக்கு ஒரு தூஷணமாகி, ஞானிகளுக்கு ஒரு பூஷணம்போன்றதும் ஆகிய "வஜ்ரசூசி" என்னும் உபநிஷத்தில் சொல்லி யிருக்கின்றதைச் சொல்லுகின்றோம். நண்பர்கள் கவனிப்பார்களாக:

"பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்" என்று சொல்லப்படுகின்ற நான்கு வருணத்தாருள்ளும் பிராமணன் ஒருவன்மாத்திரம் சிரேஷ்டன் என்று வேதமும் சுருதிகளும் முறையிடுகின்றன. இங்ஙனஞ் சொல்லுகின்றதை யாம் விசாரணைவாயிலாய்மட்டும் ஒப்புக்கொள்ளுதல் உசிதம் ஆகும். பிராமணன் என்னும் பெயருக்கு உரியவன் யார்? தேகமா? ஜீவனா? ஜாதியா? ஞானமா? கர்மமா? எது?

மேற்சொல்லியவைகளில் ஜீவன் பிராமணன் என்று சொல்லில், இது வரைக்கும் வந்து போனவைகளும், இனி வரப்போகின்றவைகளுமான அநேக தேகங்களுடைய ஜீவன் ஒரேரூபத்துடன் இருப்பதினாலும், கர்மாதீனத்தினால் அநேக தேகங்களில் பிறக்கின்றதினாலும் ஜீவன் இன்ன ஜாதியென்று கூறுவதற்கில்லை. தேகம் பிராமணன் என்று சொல்லில், தேகம் பஞ்சபூதங்களாகிய சத்ததாதுக்கள் கூடியதினாலும், பிராமணன் ஆதியாகச் சண்டாளன் ஈறாகச் சகல மனிதருக்கும் தேகங்கள் ஒரேவிதமாய் இருப்பதினாலும், விருத்தாப்பியம், மரணம், தருமம், அதருமம் முதலியவைகள் எல்லாதேகத்திற்கும் சமானமானவைகளாய் இருப்பதினாலும், பிராமணன் வெண்மையாகவும், க்ஷத்திரியன் சிவப்பாகவும், வைசியன் மஞ்சளாகவும், சூத்திரன் கறுப்பாகவும், இருக்க வேண்டிய நியமம் இல்லை யாதலினாலும், தேகம் பிராமணன் ஆகமாட்டாது. அதாவது தேகத்தால் பிராமணன் ஆகமாட்டான்.

ஜாதி பிராமணன் என்று சொல்லில், ஒரு ஜாதியில் அநேக ஜாதிகள் உண்டாகின்றன. அநேக மஹரிஷிகளுடைய பிறப்பைக் கவனித்துப் பார்க்கும் போது ருஷியசுருங்கர் பெண் மிருகத்துவயிற்றில் பிறந்திருக்கின்றார்; கௌசி

கர் தர்ப்பையில் பிறந்திருக்கின்றார், ஜாம்பூகர் நரியின்வயிற்றில் பிறந்திருக்கின்றார்; வியாசர் செம்படத்தியின் வயிற்றில் பிறந்திருக்கின்றார்; கௌதமர் முயலிடத்திருந்து பிறந்திருக்கின்றனர். வசிஷ்டர் ஊர்வசியின் வயிற்றில் பிறந்திருக்கின்றார்; அகஸ்தியர் கடத்தினின்றும் பிறந்திருக்கின்றார் என்று சொல்லிக்கொள்ளுவதை நாம் கேட்டிருக்கின்றோம். ஆகின் இவர்கள் பிராம்மண குலம் என்று இப்போது சொல்லுகின்ற பிராம்மண ஸ்திரீகளால் பெற்ற புத்திரர்கள் அல்ல. எனினும் இவர்கள் காலத்தில் இவர்கள் ஞானத்தையுண்டாக்கிப் பிரகாசித்துக்கொண்டு வந்தார்கள். ஆனதுபற்றி ஜாதியும் பிராமணன் ஆகமாட்டாது. ஞானம் பிராமணன் என்று சொல்லில், அரசர் முதலாயினோரில் அநேகர் உண்மையை அறிந்துகொண்டிருந்தார்கள் ஆகவே, ஞானம் பிராமணன் ஆகமாட்டாது, அதாவது ஞானத்தினால் பிராமணத்துவஞ் சித்திக்கமாட்டாது.

கருமம் பிராமணன் என்று சொல்லில், 'சஞ்சித, பிராப்த, ஆகாமிய,' கருமங்கள் அனைவருக்கும் சமமாகவே இருக்கின்றதினாலும், கருமத்தினால் பிரேரேபிக்கப்பட்ட ஜனங்கள் அந்தக் கருமங்களுக்குத் தகுந்த காரியங்களையே செய்கின்றார்கள் ஆதலினாலுங் கருமம் பிராமணன் ஆகமாட்டாது. அதாவது கருமத்தினால் பிராமணன் ஆகமாட்டான்.

தருமஞ் செய்கின்றவன் பிராமணன் என்று சொல்லில் க்ஷத்திரியர் முதலாயினோர்கள் பலருந் தருமஞ்செய்கின்றார்கள். ஆதலினால் தருமம் பிராமணன் ஆகமாட்டாது. அதாவது தருமத்தினால் பிராமணன் ஆகமாட்டான்.

ஜீவன், தேகம், ஜாதி, ஞானம், கருமம், தருமம் ஆகிய இவைகள் பிராமணன் இல்லை, அல்லது இவைகளால் பிராமணன் ஆகமாட்டார்கள். மற்றும் யாவன்தான் பிராமணன் என்று சொல்லப்பெறுவன் என்னில், ஒருவனாகி, ஜாதி குணபேதங்களற்று "ஜனனம் மரணம்" என்று சொல்லப்படுகின்ற பிராண தருமம், "சுகந் துக்கம்" என்று சொல்லப்படுகின்ற மனோதருமம் அஸ்திதே, ஜாயதே, பரிணமதே, விவர்த்ததே, அபக்ஷீயதே, வினஸ்யதே என்று சொல்லப்படும் ஷடூர்மிக்குரிய ஷட்பாவங்கள் முதலிய சகலதோஷ சங்கமத்தினின்றும் விலகிச், சத்தியஞானானந்த சொரூபனாய், ஸ்வயம் நிர்விகல்பமானதும், எல்லாகல்பங்களுக்கும் ஆதாரமானதும், சமஸ்தபூதங்கட்கும் அந்தரியாமியாகியும், உள்ளும்புறம்பும் ஆகாயம்போல் இருப்பவனும், அகண்டானந்த ஸ்வரூபமானவனும், விஷயங்களுக்கு எட்டாமல் அனுபவத்தினாலேமட்டும் அறியப்படுபவனும், அபரோக்ஷமாகமாத்திரம் பார்க்கின்றதற்குரிய பகவானைக் காதலாகமலமாகப் பிரசன்னம் ஆக்கிக்கொண்டு, கிருதகிருத்தியனாய், ஆசை முதலான தோஷங்கள் அற்றவனாய்ச் சாந்திமுதலாகிய குணங்களுடையவனாய், மோஹம், மாச்சரியம், அகங்காரம், டம்பம் முதலானவைகளினாலே ஒட்டப்படாத மனதுடைவனாய் இருக்கின்றவன் எவனோ, அவன்மாத்திரம் பிராமணன் என்று சொல்லப்பெறுவன். இவனையே வேதம், புராணம், இதிகாசங்களும் பிராமணனென்று ஒத்துக்கொள்ளும். இதற்கு வேறாகப் பிராமணத்வ சித்தி கிடையவேகிடையாது.

ஆனதால் நித்தியமானதும் அனைத்தையுங் கண்டறிவதும் ஆநந்தரூபமுடையதும் ஆகிற பிரத்யகாத்மாவான தன்னைத்தானறிந்துகொண்டு சத்தியஞானானந்த ரூபமுடைய பகவானாகிற பரபிரஹ்மத்தைப் பாவிக்கவேண்டும்.

N. கருப்பணவாத்தியார், மொண்டிபாளையம்.

நட்பு.

ஒருவரிடத்தில் மற்றொருவர் நண்ணுவது நட்பாகும். இந்நட்பு மனநட்பென்றும் உடல் நட்பென்றும் இருவிதமாக உளது. மனநட்பாவதென்னெனின்? தூரதேசத்திலோ, அல்லது சமீபத்தில் தத்தம் இருப்பிடத்திலோ, இருக்குமவரிடத்தில், அவர்களைக் காணமுடியாவிடினும் அவர்களது குணானுபவங்களைக் கேள்விப்பட்டு அக்கொற்ற மாந்தர்மேல் விருப்பு வைத்தலும், அவர்களை யெங்கேயாவது கண்டாலும் சந்தோஷகரமாகச் சம்பாஷித்தலும், முன்பின் பாராதவர்களாயிருந்தாலும் மனநட்பினால் பலகாலம் பழகினாற்போல் நடத்தலும், அவர்களுக்கு ஏதாவது ஓர்காலத்தில் ஆபத்து, அல்லது, துன்பம் ஏற்பட்டால், அதை தன்னதாகப்பாவித்து தைரியமாய் என்ன துன்பம், உயிர்ச்சேதம், தன்னை யடையினும் அடையட்டும் என்று அம்மித்திரருடைய இடுக்கணை யொழிக்க அவர்க்கு உதவிபுரிதலுமாம். இந்நட்பைக் கடவுளிடத்தில்வைத்தால் பக்திவென்றும், குலகுருவினிடத்தில் வைத்தால் விசுவாசம் என்றும், தாய்தந்தையரிடத்தில் வைத்தால் அன்பு என்றும், புத்திரபௌத்திரரிடத்தில் வைத்தால் வாஞ்சை யென்றும், புதிதாக ஒருவரிடம் வைத்தால் நேசம் எனவும் அதற்குப் பெயர். இனி உடல் நட்பைச் சொல்லி மனநட்பை விரித்துரைப்பாம்.

உடல் நட்பாவது:—ஒருவரைக் கண்டால் மாத்திரம் மரியாதையாக வார்த்தையாடுவது. காணாவிடில் அவர்மேல் வெறுப்புக்கொள்ளுவது, வழிப்போக்குகளில் கண்டாலும் காணாதவரைப்போல் இருந்துவிடுவது, தப்பித்தவறி பார்வைச் சம்பந்தம் ஏற்பட்டாலொழிய பேசாதிருப்பது, தனக்கேதாவது காரியம் ஆகவேண்டி யிருந்தால், அதற்காகப் பற்றுள்ளவனைப்போல் பேசி, அக்காரியத்தை முடித்துக்கொள்ளுவதும், கண்டால் அன்பாயும் காணாவிடில் கசடாயும் இருப்பதும் உடல் நட்பாகும். இதில் மனத்தின் பற்று கொஞ்சமேனும் கிடையாது. ஆனால் எந்நட்பு மேலானதென யோசித்தால்

'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்—தகநக நட்பது நட்பு.'

என்றபடி மனநட்பே மேன்மையன்றி வெளிநட்பு மேன்மையன்று. இம்மேலான நட்பிலும் நன்னட்பு தீநட்பு என இருவகையுண்டு. நல்லோருடன் பழகுவது நல்நட்பு. கொடியவருடன் பழகுவது தீநட்பு,

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

என்றபடி தீநட்பு பலவிதத்திலும் துன்பத்திற்காதாரமாயிருத்தலால், அத்தகையருடன் நண்ணுதிருத்தலே உத்தமமன்றோ? அத்தகைய தீயர் எக்கொற்ற குணங்களோ டிருப்பரெனின்?

ஸ்லோகம்.

ஜாட்யம் ஹ்ரீமதி கண்யதே வ்ரதரதே தம்பஸ்ஸு சௌகைதவம்
விரே நிர்க்குண தாமுனௌ விமதிதா தைன்யம் ப்ரியாலாபினீ
தேஜஸ்வின்யப லிப்ததா முகரிதா வக்தவ்ய ஸக்திஸ்திரே
தக்தோநாம குணேபவேத் ஸுகுணினாம் யோதூர்ஜனோ நாம்கித:

அதாவது:—பெருந்தன்மையுள்ளவனால் ஜடனென்றும், விரதங்களை அனுஷ்டித்தால் டம்பமானவனென்றும், ஆசாரமுள்ளவனை கபடமானவனென்றும், அதிக பலசாலியை புத்தியில்லாதவனென்றும், மௌனமாயிருந்தால் மதியற்றவன் அதனால்தான் பேசவில்லையென்றும், எல்லோரிடத்திலும் அன்பாயிருப்பவனை இவன் தரித்திரன் ஏதோ காசு, பணம் வாங்கத்தா னிப்படி நடிக்கிறானென்றும், அதிகமாய்ப் பேசினால் இவன் வாயாடியென்றும், இப்படிப் பலவிதத்திலும் குற்றத்தையே ஒருவன்மேல் சுமத்தித் தூற்றுவார்கள். எவ்வளவு நல்லவனானாலும் இவர்களை மெய்ப்பிப்பது அசாத்தியம். இக்கொற்றமாந்தரைக் கண்டுவிட்டால் கருடனைக்கண்ட சர்ப்பம்போல் அடங்கி ஒடுங்கி மறைந்திருப்பதே உத்தமம். ஏனென்றால், அவர்கள் பழக்கத்தால் நமக்குள்ள நற்குணம் முழுதும் நாசமடையும், தெய்வசிந்தனை மறக்கும். இன்னும் அநேக வருத்தங்கள் ஏற்படும். ஆதலால், நண்பர்களே!

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்பு கரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர் தங்கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்லோர் நெறி.

என்னும் செய்யுளின் கருத்தையறிந் தொழுகுவதே மேன்மை யன்றோ?

மேலும் இத்தகைய தீயருறவாடினால் நமக்கென்ன ஏற்படுமோ சற்று யோசிப்போம். முதலில் ஸ்நேக ஆரம்பத்திலேயே ஒருதகாதவார்த்தையைச் சொல்லி பிறகு சமாதானப்படுத்திக் கொள்ளுவர். இரவும் பகலும் ஒரிடத்தில் இருக்கவொட்டார். ஏதாவதொருதீங்கு யாருக்காவது செய்வதிலேயே கண்ணோக்கமாயிருப்பர். அச்சமயத்தில் அவர்களிஷ்டப்படி சினேகன் நடந்து கொள்ளாவிட்டால் இவனுக்கே கஷ்டம்வந்துவிடும். இக்கொற்ற பழக்கத்தால் கல்வியிருந்தால் கலவரமடைந்துவிடும், நன்னடக்கை நாசமடைந்துவிடும். ஆசாரம் அடியோடு வேகும். துர்ப்பாஷைகளே வாக்கில் செழித்தோங்கும். மானமென்பது மடிந்தே போகும். பரத்தையர்மேல் பக்ஷமேற்படும். தனக்குள்ள நற்குணம் முழுவதும் நாசமடைந்து, துர்க்குணமே செல்வக்குழவிபோல் விருத்தியடையும். அம்மம்ம! எவ்வளவு பெருந்துன்பத்தை விளைவிக்கின்றது. எனதன்பர்களே! இக்கொடிய பழக்கத்தை யாரேனும் அனுசரித்தாலும் தக்க முயற்சியுடன் தடை செய்வீராக.

தீயாருடைய ஸ்நேகம் எப்படி தீநட்பென்று பெயர் வகித்ததோ, அம்மாதிரியே, நல்லோருடைய ஸ்நேகம் நன்னட்பு என நாமம் வகித்தது. ஆனால் நல்லோர் என்பதற்கென்ன இலக்கணம்? அவர் பழக்கத்தாலுண்டாகும் நன்மையென்ன? எனக்கேட்கில்—

ஸ்லோகம்.

முகம்ப்ரஸன்னம் விமலாசத்ருஷ்டி: கதானுராகே: மதுராசவாணீ
ஸ்நேஹாதிகஸ் ஸம்ப்ரமதர்ஸநம்ச, சதானுரக்தஸ்யஜனஸ்ய லக்ஷணம்.

அதாவது:—அகத்தழகு முகத்திற் றெரியும் என்பதுபோல தன்னுள்ளத்தில் எவ்வளவு கருணைமுதலிய நற்குணங்களடங்கி யிருக்கின்றனவோ, அவ்வளவும் பொங்கிவழிந்து வருவதைப்போன்ற முகப்பொலிவும், கருணைநிறைந்த பார்வையும், நண்பருடைய வார்த்தையைக் கேட்கவேண்டுமென்கிற ஆவலும், விசேஷித்த சினேகரைக் கண்டமாத்திரத்தில் சந்தோஷமும், தேனைப்போல் இனிமையாக வார்த்தையாடுவதும், எப்போதும் பிரியமுள்ளவருமா யிருப்பது முதலியன. இத்தகைய

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

எப்படியெனில் புன்சிரிப்புள்ள அந்நல்லவரைக் கண்டமாத்திரத்தில் உள்ளம் குளிர்ச்சி யடைகிறது. மேலும் அவர்களது மதுரமாகிய வார்த்தையைக் கேட்டுவிட்டால் எல்லாத்துன்பங்களும் விலகி நிற்கின்றன. பிறகு நமக்கு வேண்டிய நன்னடக்கைகளைச் சொல்லப்புகின், சர்க்கரைப்பந்தலிற் றேன்மாரி பொழிந்தாற்போல வாகின்றது. அல்லது அந்நல்லவரது குணாதிசயங்களை நாம் மற்றொருவருக்குப் பெருமையுடன் சொல்லிக்கொண்டிருப்பதனால், அக்குணங்கள் நம்மனத்தில் நிலைத்து நம்மையும் அந்நல்வழிக்கே இழுத்துக்கொள்ளுகின்றன. இவையே யிப்படியென்றால், இன்னும் அவர்களுடன் பழகிவிட்டாலோ! அந்த நன்மையை வர்ணித்துச்சொல்லுவ தசாத்தியம். ஆனாலும் முன்னோருரைத்ததைச் சுருக்கமாக விளம்புவாம்.

“ முத்தி தனையளிக்கும் மோன நிலைசேர்க்கும்
பத்தி மிகப்பெருக்கும் பன்னரிய—சித்தியெலாங்
கூட்டுவிக்கும் நீர்சூழ் குவலயத்தே நன்னெறியி
னூட்டுவிக்கும் நல்லோர்தம் நட்பு.

ஆஹா! என்ன சகாயம்! என்ன பெருமை!! என்ன பேரின்பம்!!! கடலாற் சூழப்பட்ட இப்பூவுலகில் நல்லவரது சினேகம் முதலில் நல்ல விதிபூர்வகமான தர்மங்களில் பிரவர்த்திக்கும்படி செய்யும். பின்பு எல்லாச் சித்திகளையும் அடைவிக்கும், பகவானிடத்திலும் சாதுக்களிடத்திலும் பக்தியையுண்டாக்கி வளர்க்கும், பக்திமேலிட்டு அதனால் சர்வம் சின்மயம் என்னும் திடஞானம் தோன்றி உலகத்தோற்றம் மறந்து மௌனநிலையை யுண்டாக்கும். இம் மௌனநிலையென்று சித்தியாயதோ, அன்றே மறுபடி உலகத்தில் பிறக்கும் வழியற்றது. இவ்வழியொழிந்ததே முத்தியெனப்படும். இம்முத்தியையும் கொடுக்கக்கூடியதா யிருக்கும்போது, இவவுத்தமர் நட்பை என்னவென்று வர்ணித்துச் சொல்லுவது? ஆஹா! ஆச்சரியம்! இவ்விதமாகவே நல்லோருறவு படிப்படியாகஉயர்ந்திவிடுமேயன்றி ஒருக்காலும் கெடவிடாது. ஆதலால் இந்நன்னட்பே பலவிதத்திலும் மேலானதென்பது நிச்சயம்.

ஆனால் மற்றொருவிஷயம், ஒருவரிடம் நல்லவரெனத் தெரிந்து நண்ணினால் மறுபடி எக்காலத்திலும் நட்பைக் கைவிடாமையே உத்தமம். அப்போதுதான் மேற்கூறியவைகள் ஏற்படும். அப்படியின்றி நடுவில் விட்டுவிடுவதனால் என்ன பிரயோசனம்? என்ன யோக்யம்? என்ன நன்மை? ஒன்றுமே யில்லை. இக்காலத்தில் சில பள்ளிக்கூடப்பிள்ளைகள் தாங்கள் கல்வி பயிலும்வரையில் ஒருவர்க்கொருவர் அன்பாயிருப்பதும், பிறகு தம்தம் வீடுகளில் தங்களுக் கேற்பட்டகாரியங்களைக் கைக்கொண்டு, செல்வப்பெருக்காலோ, அல்லது வேறெந்த விஷயத்தையோ முன்னிட்டு பழையநட்பை மறந்துவிடுகிறார்கள். இக்காலத்திலென்ன? முற்காலத்திய சங்கதியைப்பற்றியே பேசுவோம். பூர்வம், துரோணாசாரியும், துருபதராஜனும் இளமையில் ஒரு ஆசிரியரிடம் கல்வி கற்றவர்கள். அக்காலத்தில் அரசருக்கேற்ற விதிப்படி, யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை முதலியவைகளையும், வேதாத்யயனம், தர்மசாஸ்திரம் முதலானவற்றையும் கற்றுக்கொண்டிருக்கையில், துருபதன், "நான் நகரத்திற்குப்போய் ராஜ்யபரிபாலனம் பண்ணுகையில் தங்களுக்குவேண்டிய உதவிபுரிவேன். என்னைத் தாங்கள் மறக்கக்கூடாது" என்று துரோணரிடம்சொல்ல அதற்கு நான் என்றும் மறவேன், நீயும் மறக்கலாகாது என்று துரோணரும் பேசிக் கொள்ளுவது வழக்கம். (தொடரும்)

ஆ. ராமசாமய்யர்.

சரஸ்வதி பூஜை.

இந்த ஐப்பசிமீ 9-ந்தேதி புதவாரம் சரஸ்வதி பூஜை வருகிறது. பாரத நாட்டில் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையுள்ள இந்துக்களால் மட்டுமன்று, இந்த உலகத்தில் இந்துக்கள் குடியேறியுள்ள மற்ற நாடுகளிலும் சரஸ்வதிபூஜை விமரிசையாகக் கொண்டாடப்படும்.

சாதாரணமாய் எப்போதும் புரட்டாசிமாசம் வரும் சரஸ்வதிபூஜை யிந்த வருடம் ஐப்பசி மாதத்தில் வருகிறது. அன்று சரஸ்வதி தேவிக்குப் பூஜை செய்தல் இந்துக்களாகிய நமக்குத் தொன்று தொட்ட வழக்கமாயிருந்து வருகின்றது. சரஸ்வதி பூஜையன்று நாம் எல்லோரும் சரஸ்வதியின் உருவத்தை அலங்கரித்துப் பண்டபலாதிகள் சமர்ப்பித்துத் தொழுகின்றோம். ஆயினும் இதனை மட்டுமே உண்மையான சரஸ்வதி பூஜையாக நமது முன்னோர்கள் கருதவில்லை.

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்—வெள்ளை
யரியாசனத்தி லரசரோடென்னைச்
சரியாக வைக்கின்ற தாய்.

என்று சரஸ்வதியை (படிகநிறம்) களங்கமற்ற சுத்தவெண்மை நிறமாகவும் அவள் ஆடை, அணி, ஆசனம் முதலியவற்றையும் சுத்த வெண்ணிறமாகவும் வர்ணித்த நமது ஆன்றோர்கள், சரஸ்வதி சுத்த அறிவுமயம் என்பதை விளக்கவே அங்ஙனம் வர்ணித்தனர். சரஸ்வதி அறிவு ரூபமானவள், அறிவு தூய வெண்ணிறமானது. அதுபற்றியே கம்பரும் 'தூய உருப்பளிங்கு போல்வாள்' என்றும், 'படிகநிறமும்' என்றும் சரஸ்வதியின் உருவத்தை வர்ணித்தார்.

சுத்தசிவம், சுத்த அறிவு-இவற்றிற்கு நமது முன்னோர்கள் கொடுத்த

நிறம் தூய வெண்மையாகும். சுத்த அறிவு வடிவமாக விளங்கும் சரஸ்வதிக்கு படிக நிறத்தைக் கற்பித்தமை இதனால் தெளிவாகும்.

ஸரஸ்வதி கல்விக்கு அதிஷ்டான தேவதை. கல்வியே அறிவை வளர்ப்பது. ஆகையால் அறிவை விர்த்திசெய்யும் பொருட்டுத் தீராத ஆவலோடும் சிரத்தையோடும் கல்விபயிலும் மாணாக்கன் ஒவ்வொருவனும் உண்மையில் சரஸ்வதியைப் பூசிக்கிறவனாகிறான்.

அறிவைப் விர்த்திசெய்ய முயல்வோரெல்லாம், சரஸ்வதியைத் தொழுவோரேயாவர். வானத்தில் வைரமணிகள் பதித்தாற்போன்று எண்ணிறந்தவாகத் திகழும் கோளங்களின் இயக்கங்களை அறிய விரும்பி வானசாஸ்திரம் பயில்வோனும், வானத்தில் ஆகாய விமானத்தில் சஞ்சரிக்க விரும்பிக் கமன சாஸ்திரம் பயில்வோனும், பிரம்மவித்தையைப் பெற விரும்பி வேதங்கள், உபநிடதங்கள் முதலியவற்றைப் பயில்வோனும், போர்வீரனாக விரும்பி யுத்த சாஸ்திரம் பயின்று அஸ்திர சஸ்திரப் பயிற்சி செய்வோனும், பூகோளத்தின் இயற்கையை அறியவிரும்பிப் பூததத்வசாஸ்திரம் பயில்வோனும், இயற்கையின் எண்ணற்ற அற்புதங்களை அறிய விரும்பி இயற்கை சாஸ்திரம் பயில்வோனும், இன்னும் அறுபத்திநான்கு சாஸ்திரங்களின் பகுதியான எந்த சாஸ்திரத்தைப் பயில்வோனும் உண்மையில் சரஸ்வதியைப் பூஜை செய்வோனாவன்.

இவ்வாறாக நோக்கும்பொழுது, நாம் சரஸ்வதியை உண்மையாகப் பூஜை செய்கின்றோமா என்று பார்த்தால், நாம் சரஸ்வதி பூஜை செய்வதில் மிகவும் பின்னடைந்தவர்களாக இருக்கிறோம் என்பது விளங்கும். ஐரோப்பிய, அமெரிக்க நாட்டார்களே உண்மையாக ஸரஸ்வதி பூஜை செய்கின்றார்கள். நாம் சரஸ்வதி பூஜை என்ற வெளி விவகாரத்தை மட்டும் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஐரோப்பிய, அமெரிக்க நாட்டாரெல்லாம் அறிவுப் பயிற்சி பெறுதலே உண்மையான சரஸ்வதி பூஜை என்பதை அறிந்து ஒவ்வொரு சாஸ்திரத்தையும் கற்றுத் தேர்ந்து வருகின்றார்கள்.

நமது நாட்டிலே நூற்றுக்குத் தொண்ணூறுபேர் படியாதவர்கள். எனவே, அவர்கள் அனைவரும் சரஸ்வதி பூஜை செய்யாதவர்கள் என்பதில் சந்தேகம் என்ன? உட்கருத்துக்களுக்கு இணங்க நமது முன்னோர்கள் வெளிவிவகாரங்கள் சிலவற்றை ஏற்படுத்திப் போயினர். நாமோ இப்பொழுது அவர்களது உட்கருத்துக்களை யெல்லாம் மறந்துவிட்டு வெளிவிவகாரங்களை மட்டும் பிடித்துக் கொண்டிருக்கிறோம். நெல்லுள்ளிருக்கும் அரிசி நீங்காதிருக்கும் வரையே அதனை மூடியிருக்கும் உமி பயனுள்ளதாகும். அதுபோல உள் விவகாரங்களும் வெளிவிவகாரங்களும் பொருந்தி நடக்கும் பொழுதுதான் வெளி விவகாரங்கள் பயனுள்ளனவாகும். அகத்தில் தீய குணங்களைத் தீப்போல வளர்த்துக்கொண்டு விபூதியை மட்டும் நெற்றி நிறையப் பூசிக்கொண்டிருப்பதால் என்ன பயன்?

அறிவைப் பெறுமாறு முயல்பவன் சரஸ்வதி பூஜை செய்பவனாவான்; பொருளைச் சம்பாதிக்குமாறு விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றைப் புரிவோன், செம்மையாக நாடுகாப்போன், இவர்கள் லக்ஷ்மியைத் தொழுவோராவர். அகத்தில் எழும் காழக்ரோதாதி குணங்களை அடக்கி, சக்தியை வளர்ப்போர் காளிபூஜை செய்வோராவர். சக்தியற்றவர்கள் பலமற்றவர்கள் தெளிவாக உணர்ந்து ஒழுகவேண்டும். அப்பொழுதுதான் நாம் சீரும் செல்வமும் பெற்று சிறந்தோங்குதல் கூடும்.

ப. சு. நெல்லையப்ப பிள்ளை.

'முதுமொழிக்காஞ்சியின் மதுரத்துண்டுகள்'

(1) (கேடில் விழுச்செல்வம்) என்று பாராட்டப்படுகின்ற கல்வியின் சிறப்பு உலகப்பிரசித்தமானது. பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தம் மக்கள் கல்வியில் முன்னேற்றமடையப் பாடுபடுவது முக்கிய கடமையாகும்.

(2) உயர்குலத்தில் பிறந்தவரும் கல்வியிலராயின் தாழ்வடைவராதலாலும் இழிகுலத்திற் பிறந்தவரும் கல்வியுடையராயின் உயர்வடைவராதலாலும் உயர் குடிப்பிறப்பைக் காட்டிலும் கல்வி யறிவுடைமை சிறக்கும். உடம்போடு ஒழியும் குலப்பெருமையினும் உயிரோடு செல்லும் கல்வியுயர்ச்சி சிறந்ததென்பதும் உணரத்தக்கது. கல்லாதாரது குலப்பெருமையால் பயனில்லை. "எக்குடி பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்" என்கிற நறுந்தொகையும் "ஆக்குமறிவானலது பிறப்பினால் மீக்கொளுயர் விழிவு வேண்டற்க" என்னும் நன்னெறியும் நோக்கத்தக்கன.

(3) பெரிய தொழிலைச் செய்யத்தொடங்கி ஒருக்கால் அதனை முடிக்காவிட்டாலும் பெருமையுண்டு. சிறிய தொழிலைச் செய்யத்தொடங்கி முடித்துவிட்டாலும் பெருமையில்லை. ஆகவே பெரிய தொழிலைச்செய்யக் கருதுவதே மேலோரியல்பு.

(4) சிறுபான்மை தேசபேதத்தால் ஆசாரம் வேறுபடுதலுண்டாதலால் தான் அறியாத தேசத்திற் சென்று அத்தேயத்தார் ஆசாரத்தை தனது தேசாசாரத்தோடு ஒத்திராமை கருதி யிகழலாகாது.

(5) உபகாரம் செய்யாமலாவது அபகாரம் செய்துகொண்டேயாவது, உபகாரஞ் செய்பவர்போல வெளிக்குக் காட்டி ஒழுகுபவர் மிகவும் அதமர். இக்கரும் சண்டாளர் ஜாதிசண்டாளர்களினும் இழிந்தவராவார்.

(6) தன் கணவனது குணத்தை யுணர்ந்து அதற்கு ஏற்ப ஒழுகுகின்ற கற்புடையவளே இல்வாழ்க்கைக்குத் துணையாதற்கு ஏற்ற உத்தம பத்தினியென்று சிறப்பித்துக் கூறத்தக்கவள். அங்ஙனம் ஒழுகாது தன் மனம்போனபடி நடப்பவள் இல்வாழ்க்கைத் துணைவியான மனைவியென்னும் பெருமைக்கு உரியளாகாள். "மனைமாட்சி யில்லாள்கணில்லாயின் வாழ்க்கை—எனை மாட்சித்தாயினுமில்" என்ற திருக்குறட்பா நோக்கத்தக்கது.

(7) துணையோடல்லது நெடுவழியேகேல் என்றபடி துணைவரை யுடைமை ஒருவனுக்கு நன்மை தருவது என்பரேனும், பெரியாரைத் துணைக்கொள் என்றபடி அறிவிற்சிறந்த பெரியாரைத் துணைக்கொள்வது நன்மை தருவதாகுமேயன்றி, அறிவில்லாதவரைத் துணைக்கொள்வது நன்மை தராமையோடு பல வகைத் தீமைகளையும் விளைக்குமாதலால் அதனினும் யாதொரு துணையுமின்றி தனித்திருத்தலே மேலானது. பேரறிவுடையோர் துணைவராயின் தீநெறியினின்று விலக்கி நன்னெறியிற் செலுத்துவர். அறிவிலாதாரோ நன்னெறியினின்றும் விலக்கி தீநெறியிற் செலுத்துவர். ஆதலின் அவரது துணை மேலானதன்று. திருவள்ளுவநாயனார் திருக்குறளில் "பெரியாரைத் துணைக்கோடல்" "சிற்றினஞ்சேராமை" ஏன அதிகாரங்கள் வகுத்திருத்தல் காண்க. இணக்கமறிந்திணங்கு, மூர்க்கரோடிணங்கேல், நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும் என்பனவும் நோக்கத்தக்கன.

து. ப. அ. க. சதாசிவம்பிள்ளை, அம்மளூர்.

வியாபாரம்.

கனவான்களே,

பொருள்களை வாங்கியும் விற்பனை செய்தும் லாபம் அடைதலையே வியாபார மென்பர். ஆனால் நஷ்டமடைந்தால் அது வியாபார மில்லையோ என்று ஒரு கேள்வியுண்டாகும். அதுவும் வியாபாரந்தான். வியாபாரஞ் செய்யுமொழுங்காய்ச் செய்தால் லாபமே கிடைக்குமென்பது திண்ணம். ஆகையினாற்றான் லாபமடைதலையே வியாபாரமென்பார் என்று சொல்லப்படுகிறது.

பண்டைக்காலத்தில் அதாவது ஆரியர் இந்தியாவில் புகுந்தநாளில் நான்காக வகுக்கப்பட்டது. பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு வருணத்தார். பிராமணருக்குரிய தொழில் வேதமோதுதல்; க்ஷத்திரியருக்குரியது போர்புரிதல்; வைசியர்தான் வியாபாரஞ் செய்யத்தகுந்தவர். சூத்திரர்களோ வேலைக்காரர்கள். ஆனால் இப்போது ஒரு வித்தியாசமுமின்றி யாவருமே வியாபாரஞ் செய்கின்றனர். இவ்வித மாறுபடுவதற்குக் காரணம் நாகரீகமே. இந்தியாவிற்றான் இவ்விதபகுப்புண்டு. மற்றதேயங்களில் இவ்வித ஜாதி வகுப்பு கிடையாது. ஆதலால் அவ்விடங்களில் யாவரும் ஒரு வித்தியாசமுமின்றி வியாபாரஞ்செய்கின்றனர். நம் இந்தியாவிலும் அவ்விதமாகவேயானது மிகவு நன்று.

கனவான்களே! நம்மிந்தியர்கள் கல்வி கற்று பி.எ., எம்.எ., பட்டம் பெற்றவரும் பெறாதவரும், கைத்தொழில், வியாபாரம், கிருஷித்தொழில் இவைகளை அலக்ஷியமாக எண்ணி உத்தியோகஞ்செய்ய முயற்சிக்கின்றனர். இது நம் இந்தியரின் பெருங்குறைவு. ஏனெனில், வியாபாரம் கைத்தொழில் ஆகிய இவைகளில் நல்லஸ்திதியையடைந்த அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான் இந்நாடுகளில் கல்வி கற்றவர்கள்தான் வியாபாரம், கைத்தொழில் இவைகளைச்செய்து தங்கள் நாடுகளை மேல் நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள் என்பது யான் சொல்லாமலே உங்களுக்கு விளங்கும். இந்தியாவில் இங்கிலீஷ் துரைத்தன மேற்பட்டது அவர்களது வியாபார முயற்சியாலேயே. முதன்முதல் அவர்கள் இந்தியாவிற்குவரும்போது வியாபாரிகளே. அவ்விதந் தங்கள் வியாபாரத்தை நன்முயற்சியோடு விருத்திசெய்து இப்போது அவர்கள் அடைந்திருக்கின்ற ஸ்திதியை என்னென்று சொல்வேன். ஆகையால் கல்வி கற்றவர்கள் வியாபாரத்தை ஆக்ஷேபிப்பது அறியாமையே. கற்றவர் செய்யுந் தொழிலுக்கும், கல்லாதார்செய்யுந் தொழிலுக்கும் வித்தியாசமெல்லையற்றிருக்கும். ஒவ்வொருவருக்கும் இன்னபொருளை இன்னவிடத்தில் இன்னவிதமாய் வாங்கவேண்டும், இன்னவிதமாய் விற்கவேண்டும் என ஊகித்தறிதற்குக் கல்வியறிவே முக்கிய சாதனமல்லவா? வியாபாரஞ்செய்வதற்குக் கணக்குத் தெரிந்திருப்பது அவசியம். ஆகையால் கல்வி கற்றவர்கள் வியாபாரத்தை ஏளனஞ்செய்வது தகுதியான காரியமன்று.

கல்விகற்றாலும் போதாது, வர்த்தகத்திற்குப் பழக்கமேகாரணம். அதற்கொரு பாடசாலை கிடையாது அனுபவமே (Practical experience) மேலானது. ஆகையால் ஒரு கடையிலிருந்து வியாபாரியிடத்திற் பழகவேண்டும். வர்த்தகவிருத்திக்காக ஏற்படுத்திய பத்திரிகைகளையும், வர்த்தகத்தில் விருத்தியானவர்களின் சரித்திரங்களையும் படிப்பதால் மனோவிசாலம், யுக்தி, சாமர்த்தியம் முதலியவை உண்டாகும். கற்றுத்தேர்ந்த தொழிலாளிகளைவிட அனுபவமுள்ளவர்களே விற்பனர்களா யிருக்கின்றார்கள். பெரியவீட்டுப்பிள்ளை யானாலும் படிப்பை விட்டவுடனேயே ஒருதொழிலை யாரம்பிப்பது கஷ்டமாகவே

தோன்றும். ஆதலால் கொஞ்சநாள் வியாபாரியிடத்திலிருந்து பழகவேண்டும். ஆரம்பத்தில் ஒருகடையில் சம்பளத்திற்கிருந்தால் சொற்பசம்பளந்தான் கிடைக்கும். அவ்விதமிருந்தாலும் அதை ஆக்ஷேபியாது ஊக்கத்தோடு உழைத்து தன் எஜமானனுக்குத் திருப்தியையுண்டாக்கித் தன் சம்பளத்தை அதிகரிக்க வழி தேடவேண்டும். அவ்விதஞ் சம்பளத்திலிருந்து பழகினவுடன் வேறே ஒரு கடைவைத்து வியாபாரஞ்செய்ய முயலவேண்டும். வாலிபர்கள், நாம் சீமான் வீட்டுப் பிள்ளையென்று எண்ணி, தொழிலிற்பயிலுவது கண்ணியக் குறைவெனமதித்து, சும்மா இருக்கக்கூடாது. அவ்விதம் எண்ணுவோனுக்கு முடிவிற் கஷ்டமேசம்பவிக்கும். பணக்காரப்பிள்ளைக்குத் தன்தொழிலில் அருமை தெரிந்தாற்றான் பணத்திலும் அருமைதெரியும். அல்லது தனக்கிஷ்டமானவர்களைக் கூட்டிக்கொண்டு தன் பணத்தையெல்லாம் வீண் செலவுசெயவான். ஆகையால் வறியனாயினும் வாலிபனாயினும் தொழிலில் பழகுவது உயர்ந்த நிலைமையைத் தரும்.

யான் இதுவரை பாலியர்கள் பழகவேண்டிய விதத்தைச் சொன்னேன். இனிமேல் ஒருதொழிலை யாரம்பிப்பதற்கு என்னவேண்டு மென்பதைச் சிந்திப்போம். என்னவேண்டு மென்றால் பணம் வேண்டுமென்று தாங்கள் எண்ணக்கூடும். அஃதன்று. பின்னே யென்னவெனின், ஒருதொழிலை யாரம்பிக்குமுன் தீர்க்காலோசனை வேண்டுமென்பதே. தன் மனம்போனவழி எண்ணத்தை விடாதபடி இன்னது செய்யவேண்டும் என்று முன்னே நன்றாய்ச் சிந்தித்து உறுதியாய் எண்ணி அக்காரியத்தைச்செய்ய முயலவேண்டும். உற்றார் உறவினர் இவர்களது ஆலோசனையைக் கேட்பது ஒருசமயம் கேடாய்விளையும். ஆதலால் தனக்குள்ளேயே தீர்க்காலோசனை பண்ணிச் செய்யவேண்டும். வர்த்தகத்தில் ஆலோசிப்பதே முக்கிய காரணமென்று எண்ணவேண்டும். வியாபாரி அல்லது எந்தத் தொழிலாளியானாலுஞ் சரி, எவ்வளவு பணம் முதன் முதலிற் போடவேண்டும் என்றும் அதிலிருந்து லாப நஷ்டங்கள் இவ்வளவாகுமென்றும் திட்டமாய்க் கணக்கிடுவது வழக்கம். ஆனால் "எட்டுச்சுரைக்காய் கறிக்குதவாதது" போல் இவர்கள்போட்ட கணக்குப்படி நிறைவேறுவதில்லை. முக்கியமாய் நாம் ஏதேனும் ஒன்றைச் செய்யவிரும்பினால் அதற்கு எவ்வளவோ தடங்கல்கள் ஏற்படுகின்றன. அந்தச் சந்தர்ப்பங்களில் முணுமுணுத்தாலுஞ் சரி கோபங்கொண்டாலுஞ் சரி ஏதேனுங் காரியத்திற் பிரயோஜனமுண்டா? இத்தடங்கல்களெல்லாம் தீர்க்காலோசனை யென்பதற்குப் பயந்துவிடும். ஆகையால் தீர்க்காலோசனையே இன்றியமையாக் காரியம்.

கனவான்களே! தீர்க்காலோசனை செய்து வியாபாரத்தை ஆரம்பித்தாலும் போதாது. கண்ணில் மையிட்டு எவ்விதந் தேவடியாள் மயக்குகிறாளோ அதுபோல வியாபாரிகளுக்கு ஒரு மை வேண்டும். இந்த மைக்கே பொறுமை எனப்படும். இந்த மையில்லாவிடில் வியாபாரத்தை யொருவன் செய்து கொள்ளமாட்டான். "மாதர்க்கணிகலம் எதிர்பேசாதிருத்தல்" அதுபோல வர்த்தகர்களுக்கு அணிகலம் சாந்தகுணமே "பொறுமை பொருமைதரும்" என்பது உண்மை. "உலகம் பலவிதம்" ஆகையால் நம்மிடம் வியாபாரஞ் செய்ய வருபவர்கள் பலவினத்தாராய் விருக்கக்கூடும். கோபக்காரர்களும், சண்டைக்காரர்களும், துஷ்டர்களும், போக்கிரிகளும், சாதுக்களுமாக பலதினுசாயிருப்பார்கள். நாம் அவர்கள் எல்லோரிடத்திலும் ஒருமாதிரியாகத் தான் பொறுமையுடன் பேசவேண்டும். வியாபாரஞ்செய்ய வருபவர்களிடம் நல்ல மிருதுவான பேச்சுப் பேசுவதினால் அவர்களுக்கு நம்மிடம் ஒருவிதமான நல்ல அபிப்பிராயம் உண்டாகின்றது. அந்த நல்ல அபிப்பிராயம்

நாம் வியாபாரஞ்செய்யும் சரக்குகளிடம் சுலபமாக மாறும். நல்ல மொழிகளினால் எப்படிப்பட்டவர்களையும் சிநேகமாக்கிக் கைவசப்படுத்திக் கொள்ளலாம். துஷ்டர்கள் நமக்குக் கோபத்தை யுண்டாக்கும்படியான பேச்சுப் பேசுவார்கள். அப்படிப்பேசினபோதிலும் நாம் பொறுமையாய்ப் பதில் சொல்லுவோமாயின், அவர்கள் வெட்கிப்போவதுடன் பக்கத்தில் நிற்பவர்களுக்கும் நம்மிடத்தில் ஒரு நல்ல அபிப்பிராயம் உண்டாகும். "இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண-நன்னயஞ் செய்துவிடல்" என்றுஞ் சொல்லப்படுகிறது. நாம் துஷ்டர்களோடு சண்டை போடுவோமாயின் பக்கத்தில் வியாபாரஞ்செய்யவந்து நிற்பவர்கள் சண்டை யோய்கிறவரையிற் காத்திருக்கப் பிரியமில்லாதவர்களாய் வேறிடத்திற்குப் போய்விடுவார்கள். நம் கடைக்கு மறுபடி வரமாட்டார்கள். ஒன்றோடுகூட இரண்டுமூன்று விற்பனையிழக்குழ்படி நேரிடுகிறது. சிலருக்கு மலிவாகக் கொடுத்தாலும் அவர்கள் மனதிற்குச் சமாதானப் படுகிறதில்லை. சும்மா கொடுத்தாலுங்கூடக் குற்றங் கண்டு பிடிப்பார்கள். இது மனித யியற்கை யென்றெண்ணி நாம் கோபங் காட்டாமற் புன்சிரிப்புக் கொண்டே பேசவேண்டும். ஜனங்களுடைய சுபாவமறிந்து எவரெவரிடம் எந்தெந்தமாதிரி நடக்கவேண்டுமோ அவ்விதமே நடக்கவேண்டும். சிலர் ஜாஸ்தியாய்ப் பேசுவதிற் பிரியமுடையவர்களாக விருப்பார்கள். சிலருக்கு அதிகப் பேச்சுப் பிடிக்கிறதில்லை. சரக்கு நன்றாயிருத்தல் மாத்திரம் போதாது. நமது ரூபத்தை, குணம், நமது கடையிலிருக்கும் சரக்கு ஆகிய இவைகளெல்லாம் ஜனங்களை யிழுப்பதில் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின்றன. வியாபாரிகளுக்கு ஜனங்கள் ஜாஸ்தியாய் வரவேண்டும் என்ற நோக்கத்தைவிட மேலான நோக்கம் யாது? ஆகையால் மேலே கூறியவைகளைச் சற்று நன்றாய்க் கவனிக்கவேண்டும். வியாபாரிகளுக்கு முகமலர்ச்சி யவசியம் வேண்டும். வியாபாரியைப் பார்த்தவுடனேயே இவர் நல்லவர் என்பது தோன்றவேண்டும். இவ்விதமிருந்தாற்றான் வியாபாரம் விர்த்தியாகும். இதனாற் புகழுமுண்டு.

கனவான்களே! ஒரு தொழிலை யாரம்பித்துப் பொறுமையோடு வியாபாரத்தை நடத்தினாலும் போதாது. ஊக்கமும், விடாமுயற்சியும் அவசியம் வேண்டும். (Perseverence is the Secret of Success). ஒரு தொழிலை யாரம்பித்துவிட்டு அதில் லாபமில்லை யென்று நினைத்து மற்றொரு தொழிலுக்கு முயற்சிப்பது தகாதகாரியம். எந்தத் தொழிலிலும் வைராக்கியமே சித்தி பெறும். ஒருவன் வெற்றிலைபாக்கு கடை வைக்கிறான். அதில் லாபமில்லையென்று அரிசிக்கடை வைக்கிறான், ஆகவே "பல மரங்கண்டவன் ஒரு மாமும் வெட்டான்" "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்ற பழமொழிக்கிணங்க இரண்டிலும் லாபமில்லாமலே யாகும். லாபம் கிடைத்தாலும் நஷ்டம் வந்தாலும் பொறுத்து ஒரு தொழிலை விருத்திக்குக் கொண்டுவரவேண்டும்.

நம்மவரில் அநேகம்பேர் நல்லகாலம் எப்போது வரும் என்று காத்துக் கொண்டு ஒரு தொழிலையும் ஆரம்பிக்காமல் இருப்பதைக் கண்டும் கேட்டுமிருக்கிறோம். இவ்விதம் பார்ப்பது அனாவசியம். ஏனெனில் முயற்சியும் ஊக்கமும் உள்ளவனுக்கே நல்ல காலம் வரும் என்பது தெள்ளிதிற் புலப்படும். ஒரு மாணாக்கன் தன் பரீக்ஷை விஷயத்தைப்பற்றி ஒரு ஜோதிடம் பார்க்கின்றான். ஜோதிடரும் ஏதோவொரு கணிதத்தால் ஜெயிக்குமென்று சொல்லுகிறார். அவ்விதஞ் சொன்னதினால் படிக்காமலிருந்துவிடலாமா? படியாமலிருந்தால் ஜோஸ்யர் சொன்னது பொய்க்குமென்பது திண்ணம். ஒருவர் "விதிவிதி யென்போரை மதியிலார் என்று சொல்லவேண்டும்" என்றார்.

ஆகையால் ஒருவனுக்கு வேண்டுவன ஊக்கமும், மனோதைரியமும், விடா முயற்சியுமே. "முயற்சி திருவினை யாக்கும்"; "மெய் வருந்தக் கூலிதரும்"; "வருந்தினால் வாராதது ஒன்றுமில்லை"; இவ்வித ஆன்றோர் மொழிகளை நன்கு நம்மனதிற் பதியவைத்து ஊக்கத்தோடு வேலை செய்யவேண்டும். "To-morrow never comes" என்ற ஆங்கிலப் பழமொழிப்படி நாளை நாளை யென்று சொல்லாது உடனே செய்ய முயலவேண்டும். ஒரு விஷயத்தை ஒருவர் புகழ்வர். மற்றொருவர் இகழ்வர். ஒருவருக்கு இனிமையாயிருக்கும். மற்றொருவருக்குக் கசக்கும். இஃது உலகவியற்கை தகப்பன், மகன், கழுதை என்ற கதையைப் போலாகாமல் ஒருவருடைய சொல்லையுங் கவனியாது தன் சிரத்தையிலேயே கண்ணுங் கருத்துமாக விருக்கவேண்டும்.

வியாபாரத்தை ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் செய்தால் மாத்திரம் போதாது. ஆனால் வியாபாரத்தில் நம்பிக்கை ஒற்றுமை, கூட்டுறவு இன்றியமையாக் காரியங்கள். நம்பிக்கை யென்பது உயர்ந்த பொருள். அதைச் சம்பாதித்தவன்தான் வியாபாரி. நம்பிக்கை யற்றவனிடத்தில் எவ்வளவு செல்வமிருக்கினும் பயனில்லை. நம்பிக்கை யென்னும் நாணயமுள்ளவன் எளியனாயினும் செல்வவானே. ஜனங்களுடைய வறுமை யென்னும் பிணியை நம்பிக்கை யென்னும் ஔஷதந்தான் போக்கும். வர்த்தகம் நீடித்து நடப்பதற்கும் பெருகுவதற்கும் நம்பிக்கை யென்பது அடிப்படை. ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கும் நம்பிக்கை அவசியமானது. கொடுத்தவனுக்கு தன்னுடையபணம் போகாது என்று நம்பிக்கை யிருத்தல் வேண்டும். எப்படியாயினும் பணத்தை வாங்கினவன் கொடுத்தவனுக்கு நம்பிக்கை யுண்டாகும்படி நடக்கவேண்டும். இதுதான் பரஸ்பர நம்பிக்கை. சிலர் அயலார் பொருள் சிக்கினவுடன் நம்பிக்கை யென்னும் நாணயத்தை மறந்து விடுகின்றனர். இவ்விதம் நம்பிக்கைத் துரோகஞ் செய்வது வீழா நரகத்தில் வீழ்த்துமென்பதிற் றடையில்லை. இந் நம்பிக்கையே ஒற்றுமையையும் கூட்டுறவையும் உண்டாக்கும். மேனாட்டார் வியாபாரத்தில் விருத்தியடைந்தது கல்வியினாலேயும் கூட்டுறவாலேயுமே. நாமும் அவ்விதக் கூட்டுறவை யடைந்தால் ஏன் முன்னிலைமையை யடையக்கூடாது? இத்தேசத்தார் முன்னுக்கு வர கவர்ன்மென்டார் உதவி வேண்டியதில்லை. வேண்டிய இன்றியமையாக் காரியங்கள் மூன்று அவையாவன கல்வி, நம்பிக்கை, கூட்டுறவு. நம் இந்தியர்களின் குறைவு இம் மூன்றிலும் அடங்கி யிருக்கின்றது. நமது காருண்ய சக்ரவர்த்தியார் டில்லி தர்பாரிலும் பிறவிடங்களிலும் இவைகளைப்பற்றி நன்கு அருளியிருக்கின்றனர். இவைகளை யடைவதற்கே நாம் முயலவேண்டும்.

சிலர் ஜாதி மத வேறுபாட்டினாலே இத்தேசத்திற் கூட்டுறவு கைகூடவில்லை யென்று சொல்லுகின்றனர். ஜாதி மதம் என்பவைகளை அவரவர் தங்கள் வரையில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜாதி மத விரோதம் பெருந் தீங்கு தரும். ஒருவருக்கொருவர் மதங்களைப்பற்றி தூஷிப்பது கெட்ட வழக்கம். எந்த மதத்திலும் உண்மையுண்டு. ஆகையால் அன்னியமதங்களைத் தூஷியாது கூட்டுறவைச் சம்பாதித்து வர்த்தகஞ் செய்ய முயல்வது நன்று.

வியாபாரத்தைப் பொறுமையோடும் ஊக்கத்தோடும் செய்தால் மாத்திரம் போதாது. ஆனால் விற்பனைச் சாமர்த்தியம் வேண்டும். வெளுத்ததெல்லாம் பாலாகாது. அதுபோல எல்லா வியாபாரிகளும் விற்பதின்றிறனை யுடையவர்களாயிரார்கள். அத்திறமை சிலருக்கு மாத்திரமேயுண்டு. விற்பனை செய்வதில் கெட்டிக்காரனாக வேண்டுமாயின் அதையும் ஒரு வித்தையாக எண்ண வேண்டும். இதைப்பற்றி யறியவேண்டியவை எவ்வளவோ விருக்கின்றன.

இருந்தாலும் ஜனங்கள் தங்களுக்குத் தெரியுமென்று சொல்வதெல்லாம் கொஞ்சந்தான். விரிவாக எடுத்துச்சொல்வதுங் கஷ்டந்தான்.

சில சமயங்களில் வியாபாரிகள் வந்தவர்கள் நோக்கம் பார்த்துப் புதுமாதிரியான வழியில் செல்லவேண்டி வருகிறது. வியாபாரம் ஒரு வித்தையென்று சொல்லப்பட்டுளது. அஃதாவது வந்தவர்களை வெறுங்கையோடுபோகும்படி சம்மதியாமல், அவர்களைத் தன்னிடம்ஏதேனும் வாங்கச்செய்துப் போகச்சொல்லும் வல்லமையே. சிலபேர்கள் யாதொரு தூண்டுகோலுமில்லாமல் கடைக்குவந்தால் வந்தசுவடு தெரியாமலே வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு போய் விடுவார்கள். இவர்களிடத்தில் வியாபாரிகளுக்குத் தொந்தரவேயில்லை. ஒருவர் ஒரு கடையில்வந்து வியாபாரங் கொள்ளவந்தால் அன்றோடு போகாமல் மறுபடியும் அதேகடைக்குவந்து சாமானை வாங்கச்செய்வது வியாபாரியின்சாமர்த்தியம். விற்பனை செய்வதில் வேறொரு தந்திரமும் வேண்டும். இதை விசேஷமாய் கடைகளுக்கு சாமான் வாங்கும் உத்தேசமில்லாமலே வரும் ஜனங்களிடத்தில் உபயோகிக்கவேண்டும். அதென்னவென்றால், கடைக்கு வருபவர்களை சாமான் வாங்கும்படி அவர்கள் மனதில் ஒரு எண்ணத்தை உண்டுபண்ணுவதும், அந்த எண்ணம் அவர்கள் மனதிற்பதிந்துவிட்டது என்று தெரிந்ததும், சாமானை வாங்கத்தான் வேண்டுமென்று அவர்களுக்குள் ஒருவிதமான அபிப்பிராயத்தைக் கொள்ளச்செய்வதும், அபிப்பிராயம் கொண்ட பிற்பாடு வாங்குவதற்கு ஆர்டர் கொடுக்கும்படி செய்வதுமே. (தொடரும்)

A. S. முத்தப்ப முதலியார், கோட்டார்.

பழக்கங்கள்.

இம்மாதாந்த சஞ்சிகையை வாசிக்கப் பாக்கியம் பெற்றுள்ள எனது சகோதர சகோதரிகளே! நாம் இவ்வுலகில் மானிடராதப் பிறந்ததின் பயனாக, ஒருவர்க்கொருவர் நன்மை புரிந்தும், சமாதானத்துடன் ஒத்து வாழ்ந்தும், நமது வாழ் நாட்களையும் நம் பின்னர் நமது குமாரர் குமாரத்திகளது வாழ் நாட்களையும் இன்புறச் செய்ய வல்ல மார்க்கங்களைக் தேடுவதே உசிதமாகும். அதற்கு நம்மில் ஒவ்வொருவருக்கும் நன்னடையும் நற்குணமும் பொருந்தி யிருத்தல் வேண்டும். மானிடருக்கு அமைந்துள்ள நற்குணங்களும் தீக்குணங்களும் அவ்வவர்களது இளமையிலேயே வளர்ச்சி பெற்றுள்ளன. அவை வயது முதிரவே, தாமும் முதிர்ச்சிபெற்று பின்னர் களையமுடியாதவண்ணம் உறுதிபெறுகின்றன. எப்பயிற்சியும் நம் மனதில் நன்கு பதிவது நம்மிளமையிலேயே, ஆதலால் ஔவையார் 'இளமையிற் கல்' என்று கூறியுள்ளார். பின்னர் நம் வாழ்நாட்களை இன்புறச் செய்வது நம் நற்குணங்களே யாதலால், அக்குணங்களை நமது இளமையிலேயே கற்றுப் பயிலல் வேண்டும்; அவ்வாறே நமக்குக் கேட்டை விளைவிக்கும் தீக்குணங்களைக் கைவிடுதலும் வேண்டும்.

சிறுவர்களும் சிறுமிகளும் தத்தம் பெற்றோர்களிடமும், மற்றைய பெரியோர்களிடமும் மிகவும் வணக்கத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ளப்பயிலல் மிகவும் இன்றியமையாத பழக்கமாகும். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றபடி, பெற்றோரைத் தெய்வமாக வணங்கியும், 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை' என்ற முதுநூலைக் கடைபிடித்து, பிதிர் வாக்கிய பரிபாலனம் செய்தும், உற்றார் உறவினரிடம் பயபக்தியுடனும், சகோதர சகோதரிகளுடன் அன்புடனும், பக்குமாகவும் நடந்து கொள்ளுதல் சன்மார்க்கமாகும்.

நாம் வைகறையாமத்தில் துயிலெழுதலும், வைகறையிலேயே துயிலச்செல்லலும் வேண்டும். அவ்வாறின்றி இரவில் வெகுநேரம் நித்திரையின்றிக் கண் விழித்தலும், பகலில் தூங்குதலும், தேகசௌக்கியத்திற்குக் கேட்டை விளைவிப்பது திண்ணம். ஆதலால் கடவுள் நியமித்தவாறே இரவில் சீக்கிரம் நித்திரை செய்தலும், அதிகாலையில் எழுதலும் நமது சுகத்திற்கும் சௌக்கியத்திற்கும் முக்கிய காரணமாகும். காலையில் எழுந்தவுடனே நமது நித்தியகர்மானுஷ்டானங்களைச் செய்து முடித்து, ஆரோக்கியமாக ஸ்நானஞ்செய்து, அவ்வவாது கொள்கைப்படி வழிபடுகடவுளை வணங்கியபிறகு, தத்தம் கருமாதிகளை நாடிச் செல்லுதல் எல்லவர்க்கும் நன்முறையாகும்.

செய்யத் தலைப்படும் ஒவ்வொரு கருமத்திலும் நமது முழு மன விருப்பத்தையும், 'செய்து முடித்தல்வேண்டும்' என்ற ஊக்கத்தையும் செலுத்திச் செய்ய ஆரம்பித்தல் அவசியம். அன்றேல் அக்காரியங்கள் அணுவளவாயினும் நமக்கு மலையாகத்தோன்றி முடிக்க வியலாததாகத் தோன்றும். 'முயற்சி திருவினையாக்கும்' 'முயற்சியின்மை இன்னல் புகுத்திவிடும்' என்று தெய்வப் புலவர் திருவள்ளுவநாயனார் கூறியுள்ளபடியே, நாம் எக்காரியத்திலும் நன்மை பெற முயற்சிசெய்து, இடைவிடாது நம் கருமத்திலேயே கண்ணுயிருத்தல் வேண்டும். 'எவ்வளவு சீக்கிரம் முடித்து விட்டோம்,' என்று எண்ணாமல், எவ்வளவு பிழையின்றிச் செய்தோம்' என்று எண்ணி எக்கருத்தையும் பிழையின்றிச் செய்தல் வேண்டும். இவ்வாறு பழகிக்கொண்டால், செய்யும் எக்காரியத்தையும் மறுமுறை பரிசோதித்தல் அவசியமின்றிப் போகும். மேலும் நமது மனம் விரும்பிய வேளையில் செய்யாமல் ஒவ்வொரு காரியத்தையும் அவ்வவற்றிற்குக் குறிப்பிட்டுள்ள வேளைகளில் தப்பாமல் செய்யவேண்டும். இவ்வித பழக்கத்தால் செய்யவெண்ணிய எக்காரியமும் குறிப்பிட்ட வேளையில் ஒரு தடையும் மறதியுமின்றி முடியும்.

எப்பொழுதும் நல்லோரையும் பேரறிவாளரையுமே நாடி, அவருடனேயே கூடியிருந்து, அவரது நன்னடைகளையும் நற்குணங்களையுங் கண்டு கற்று, அவ்வவற்றின்படியே ஒழுகுதல் வேண்டும். திருவள்ளுவரும் அதற்குச் சான்றாக, 'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்—நிற்கவதற்குத்தக' என்றும் கூறியுள்ளார். நாமறியாத நன்மைதர வல்லவைகளை அறிந்துகொள்ளும் பேரவாபொருந்தியிருத்தல்வேண்டும். பிறர் நம்முடன் சம்பாஷிக்க விருப்பங் கொள்ளுமாறு புன்னகைகொண்ட முகமலர்ச்சியுடன், எவருடனும் மமதை கொள்ளாமலும், கடுமொழிபகராமலும், எக்காலத்திலும் வணக்கமாகவும், சாந்தமாகவும் பேச வேண்டும். எளியவர்களிடம் மிகவும் பக்குமாகவும், அன்புடனும், ஆதரவுடனும் சம்பாஷிக்க வேண்டும். பிறர் செய்த நன்றியை ஒருக்காலும் மறக்கலாகாது. பிறர் நமக்குத் தீங்கு செய்வாராயினும், அதை முற்றிலும் மறந்து, அதற்கு கைம்மாறாக நன்மையையே செய்தல் மேன்மக்களது இயல்பாகும். இரப்பவர்க்கு ஈந்தும், கொலைபாவத்திற்கு அஞ்சியும் ஜீவகாருண்யத்துடனும் இருத்தல் வேண்டும்.

பின்னும் நாம் கற்றுப் பழக்கவேண்டிய நற்குணங்கள் எவ்வளவோ வுள்ளன. அவைகளை யெல்லாம் ஒரே முறையில் வரைந்து காட்டுவது எளிதல்ல. மற்றையவைகளை ஒவ்வொன்றாக அநுபவத்தில் கண்டறிதல்வேண்டும். ஆயினும் நாம் விலக்கவேண்டிய தூர்க்குணங்களை இனிக் கூறுவோம். தீதுதரவல்ல தீயோருடன் எக்காலத்திலும் இணங்கி யிருத்தலாகாது. அவரைக் காண்பதுவுந் தீதே யாதலால் அவரது சேர்க்கையை முற்றிலும் விலக்கவேண்டும். இதற்கேற்ப, 'துட்டரைக்காணின் தூர நில்' என்ற பழமொழியும் வழங்குகிற

தல்லவா? பிறகு கொடிய கோபத்தை விடல்வேண்டும். கோபம் பாதி பைத்தியத்திற்குச் சமானம். கோபவேளையில் மானிடர் மெய்ம்மறந்து தமது கௌரவத்திற்கு ஹீனமாகிய செயல்களையும் செய்வது இயல்பே. மேலும் கோபத்தினால் விளையும் கொடுமைகள் இவ்வளவவ்வளவல்ல. ஆகவே அம்பலவாணக் கவிராயர், தமது அறப்பளீசுர சதகத்தில்,

'கோபமே பாவங்களுக்கெலாந் தாய்தந்தை கோபமே குடிகெடுக்கும்
கோபமே யொன்றையும் கூடிவர வொட்டாது கோபமே துயர்கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு கோபமே வுறவறுக்குங்
கோபமே வழிசெய்யுங் கோபமே பகையாளி கோபமே கருணைபோக்கும்
கோபமே மீனமாம் கோபமே யெவரையுங் கூடாம லொருவனுக்குங்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர கக்குழியிற் றள்ளுமால்
ஆபத்தெல்லாந் தவிர்த் தென்னையாட்கொண்டருளு மண்ணலே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவ னே'

என்று கோபத்தின் கொடுமைகளைக்காட்டி, அக்கொடுமைகளுக் காளாக்காமல் கடவுளைப் பிரார்த்திக்கின்றார். இத்தகைய கோபத்தை விடுதலும் நன்மைக்கேயல்லவா? ஒருவர்மீது கோள்சொல்லியாவது, ஒருவரை யிகழ்ந்துபேசியாவது, ஒருவரது மனதைப் புண்படுத்துதல் பெரும்பாவமாகும். பிறர் நம்மை வருத்தினால் நாம் எவ்வண்ணம் வருந்துவோமோ, அவ்வாறே அவர்களும் மனம் வருந்துவர் என்று எண்ணிப் பிறரது சுகதுக்கங்களையுங் உணர்ந்தறிதல் வேண்டும். எக்காலத்திலும் பெருமையையும் நன்மையையுமீந்து உதவுவது யோக்கியமே; ஆகவே பொய், வஞ்சனை, மோசம், களவு முதலிய தூர்க்குணங்கள் நம்மிடம் நாடாமல் வேரறவிலக்குத லவசியம். எக்காரணத்தைக் கொண்டும் பிறரைக்கண்டு அழுக்காறுகொள்வது அறிவிலிகளின் தன்மையாகும். இத்தீக்குணமாகிய அழுக்காற்றினால் மனோவேதனையும் மனச்சஞ்சலமு முண்டாகிறதேயன்றி ஒருவித நன்மையு முண்டாவதில்லை. செல்வத்திலாயினும், கல்வியிலாயினும், பெருமையிலாயினும், பின்னும் மற்றைய எதிலாயினும் நம்மைவிடப் பிறர் மேன்மைபெற்றிருப்பாராயின், 'அப்பதவியை நாமும் அடைதல்வேண்டும்' என்று எண்ணித் தக்கபடி முயற்சிசெய்தல் தகுமேயன்றி, அப்பிறரது மேன்மையை யழிக்கமுயலுதல் மடமையாகும். நம்மால் கூடியமட்டில் மானிடருக்கு உதவவேண்டும். அவ்வாறு நம்மால் இயலாவிடினும், பிறர் உதவுவதையாவது விருத்தி செய்யவேண்டும்.

இளமையிலேயே இவ்வண்ணம் நற்குணங்களைப் பழக்கியும், தூர்க்குணங்களை விலக்கியும் வருவோமாயின், நமது பழக்கங்கள் நாளடைவில் முதிர்ச்சி பெற்று உறுதியடைகின்றன. எவ்வாறெனில், காற்றில் எளிதில் பறக்கக் கூடிய பஞ்சு, முதலில் நூலாகவும், அநேக நூற்பிரிகள் கயிறாகவும், கயிறுகள் வடமாகவும் முறையே திரிக்கப்பட்டு, கடைசியில் அவ்வடமானது ஒரு பெரும் மரக்கலத்தையும் பிணிக்கவல்ல உறுதிபெறுகின்றதல்லவா? அவ்வாறே நாம் அப்பியசிக்கும் பழக்கங்கள் ஒவ்வொன்றும் முதலில் மிகவும் அற்பமாகவும் சிறியவையாகவுந் தோன்றினும், அவை நாளடைவில் ஒருங்குசேர்ந்து, வடத்தைப்போல வுறுதிபெற்று நமக்கு மானிடரில் பெருமையையும், இம்மையில் சுகமான வாழ்க்கையையும் ஈந்து, மறுமையில் முத்தியையும் தரவல்லன.

சித்தூர் ஜி. ராமராவ், ஜோலார்பேட்டை.

சமயோசித புத்தி.

சமயோசித புத்தி சமயத்தில் உதவும் ஓர் ஊரில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஐந்து உபாத்தியாயர்கள் இருந்தார்கள் ஒருநாள் அந்தப் பள்ளிக்கூடத்து இனிஸ்பெக்டர் பரீக்ஷைக்கு வந்துவிட்டார். முதல் வகுப்பில் வாசித்துவந்த ஒரு பையனை அவன்பாடத்தை வாசிக்கச்சொன்னார். அப்பையன் கீழ்வருமாறு வாசித்தான்.

"சோம்பேறிஎறும்பினிடத்தில் ஞானத்தைக் கற்றுக்கொள்ளலாம்" என்று வாசித்தான். உடனே இனிஸ்பெக்டர் பையன் சொல்லியது சரிதானா என்று கேட்டார். இனிஸ்பெக்டர் அந்த வகுப்புப்பிள்ளைகளை கேட்டுவிட்டு நான்கு உபாத்தியாயர்களையும் கேட்டார். அவர்கள் யாவரும் பையன் சொன்னது சரிதான் என்றார்கள். கடைசியாக இனிஸ்பெக்டர் தலைமை உபாத்தியாய (Head master) ரைக் கேட்டார். அவர் தாங்கள் தயவுசெய்து புஸ்தகத்தை என்னிடம் தரல்வேண்டுமென்றார். உடனே இனிஸ்பெக்டர் இவ்வளவு நேரம் சொல்லிக் கொண்டிருந்தது தெரியாதா என்றார். உடனே அத்தலைமை உபாத்தியாயர் கீழ்வருமாறு சொன்னார்.

சோம்பேறி என்னுமிடத்தில் ஒரு (காமா) என்று சொல்லும் காற்புள்ளிக் குறியைவைத்து வாசித்தால் சரியாயிருக்குமென்றார். உடனே இனிஸ்பெக்டர் சரிதான் என்று சந்தோஷப்பட்டார். ஆதலால் எக்காரியத்திற்கும் சமயோசிதமான புத்தியிருப்பது மிகவும் நல்லது.

பி. ஆர். சிங்காரவேலு முதலியார்.

அறம்.

(100-வது பக்கத் தொடர்ச்சி)

மேற்கூறிய ஒழுக்கத்தைக்கொண்டு இயற்றப்படுவது அறம். அவ்வறம் இல்லறம் துறவறமென்றிருவகைப்படும். இவ்விருவகை யறமும் மோட்ச மார்க்கங்களாம். இவ்விருவகை யறங்களுள்ளும் இல்லறமென்பது எல்லா நூல்களாலும், எல்லாப் பெரியோர்களாலும் புகழ்ந்து கூறப்பட்டது. "அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை" என்றும், "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்—போஒய்ப் பெறுவதெவன்" என்றுங்கூறித் திருவள்ளுவ நாயனார் இல்லறத்தைப் புகழ்ந்தார். "இல்லறமல்லது நல்லறமன்று" என்று ஔவையார் கூறினார். எதனாலிவ்வாறு புகழப்பட்டதோ வெனின், உலகத்திற்குரிய சிற்றின்பங்க ளெல்லாவற்றையுங் குறைவறவனுபவித்துக்கொண்டே பேரின்ப முத்தியடையும் மோட்ச மார்க்கமாதலால் என்க. மோட்சமார்க்கமென்பது தெய்வ வழிபாடு. தெய்வத்தை யாராதித்தே மோட்சத்தை யடைய வேண்டுவதன்றி வேறு எவ்வாற்றானு முத்திநெறி கூடாது. தெய்வவழிபாடாகிய இல்லற துறவறங்க ளிரண்டையும் நமது பூர்வ பிதாக்கள் தமது தபோ மகிமையாற் கண்டுணர்ந்து நமக்குபகரித்தனர். இல்லறம் வைதிகத்தொடு கலந்த இலௌகிக நெறியாதலால் சர்வ ஜனங்களாலும் அனுசரித்து நடத்தக்கூடியது. ஆதலால் அது மிகச்சிறந்தது.

இது புருஷனும் அன்புடைய மனைவியுமாகிய இருவராலும் மனமொத்து நடத்தப்படுவது. ஒருவராலியலாது. 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங், கைப்புலத்தாறோம்பறலை" என்றதனால் பிதிர்க்கள், தெய்வம்,

அதிதி, சுற்றம் இவர்களை யாராதித்துச் செய்யப்படுமற மாதலால் ஒருவரான் மாத்திரம் நடத்த முடியாதென்க.

ஆதலால், சாமுத்திரிகா சாஸ்திரத்தில் கூறிய சுபலட்சணங்களமைந்த சௌந்தரியவதியும், நல்ல குணங்களும், உயர்குடிப்பிறப்பும், சிற்றின்பங்களிற் குறைந்தவாசையும், மோட்சத்திலிச்சையும், தெய்வவழிபாடும், பெரியோர் வணக்கமும், அன்பும், கருணையும், ஏழைகளிடத்திலிரக்கமும், விருந்தினரைப் பூசிப்பதில் பக்தி சிரத்தையும், வரவுக்குத் தக்க செலவு செய்தலும், சோம்பலின்மையும், குடும்ப காரியங்களில் சாமர்த்தியமும், கற்புநிலை குலையாது தன்னைக் காத்துக்கொள்ளும் பேராற்றலும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கிற நான்கு காவலும், பதிபக்தியும், எவ்வகையிலும் புருஷனை யெதிர்த்துப் பேசாமையும், புருஷன் சொல்லுக்கு அடங்கிக் கீழ்ப்படிந்து நடத்தலும், வம்புபேசாமையும், அயல்வீடு செல்லாமையும், வீண்செலவு டம்பங்களிற் பிரியமில்லாமையுமுள்ள பெண்மணியை விதிப்படி மணந்து அவளுடன் கூடி மனமொருமித்து நடத்தப்படுவது இல்லறம். இது எவ்வகையிலும் மோட்ச வின்பத்தை யெளிதிலளிக்குமென்பதிற் சந்தேகமேயில்லை. 'அன்புமறனு முடைத்தாயி னில்வாழ்க்கை, பண்பும் பயனுமது' என்றதனா லிருவரு மொருமித்துச் செய்யாவழியது பயன்படாது.

முக்கியமாய் இல்லறநெறிக்கு அதிதிபூசையும், ஏழைகளுக்குப் பிச்சையிடுதலுமே சிறப்புடையன. "ஈதலறம்" "ஐயமிட்டுண்" என்று ஔவையாரும், "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு—மில்வாழ்வா னென்பான் றுணை" "பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயி னில்வாழ்க்கை—வழியெஞ்சலெஞ்ஞான்று மில்" என்று தேவரும் ஐயமிடுதலையே இல்வாழ்க்கையின் முக்கிய நெறியாகக் கூறுவது காண்க. "பொங்கார வேலையில் வேலை விட்டோ னருள்போலுதவ, வெங்காயினும்வரு மேற்பவர்க்கிட்டது" என மற்றவருங் கூறினார்கள். இச் செய்யுளால் மறுமைவாழ்வு வகுத்துக்கூறப்பட்டது. இதுவே யில்வாழ்க்கையாலாகிய பயன். "மனத்துக்கண் மாசிலனாதலனைத்தறம்" என்றபடி மனதிற் குற்றமின்றிச் செய்வதே யில்லறமாம். மனத்தினிடத்தில் குற்றமாவது, வஞ்சம், பிறர்மெச்சச் செய்வது, அழுக்காறு, சிரத்தையின்மை, துரோகசிந்தை முதலியனவாம். இவையுள் வழி அறத்தின்பயன் தன்னை யடையாமையால் செய்தும் பிரயோசனமில்லை யென்று கூறப்பட்டது.

இவ்வறம் புரியுங்கால் புருஷன் தன் குருவை எப்போதும் மறவாமற் சிந்திக்கவேண்டும். மனைவி தன் புருஷனையே சிந்தித்துக்கொண் டிருக்கவேண்டும். புருஷனுக்குக் குருவும், மனைவிக்குப் புருஷனுமே தெய்வமாதலால் இது அவசியம் செய்யத்தக்கது. ஏனெனில் தெய்வந் தனக்கென்று யாதொரு சொரூபமுமில்லாதது. பக்தர்கள் எண்ணினபடி சொரூபங்கொண்டு அனுக்கிரகம் செய்யும் இயல்புள்ளது. உருவமில்லாத பொருளைச் சிந்திப்பது எவ்வாற்றானுமியலாது. ஏனெனின், மனமெப்பொழுது மொன்றைப்பற்றி நிற்பதே யன்றித் தனித்துநிற்கு மியல்பில்லாதது. அதனாலேயே மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐம்புலன் வழியே சதா அலைந்து திரிந்து அவ்வவ் விஷயங்களைப் பற்றி நிற்கின்றது. விஷயப்பொருள்கள் பலவாதலால் மனமும் ஒரு நிலையின்றி எப்பொழுது மலைந்துகொண்டே நிற்கும். இம்மனதை ஒரு நிலையில் நிறுத்துவது மிகவுமருமை. இதனாலேயே மனதை ஒரு வழிப்படுத்தி நிற்கும் யோகிகளுக்கு நூல்கள் பெருமை கூறின. "ஆயின் மிக்க வறிவோர் செயலெலாம், நேயமிக்க மனத்தை நிறுத்தல் காண்" என்ற வச

னத்தாலு மஃதுணரப்படும். இம்மனதை யொருவழிப்படுத்துவதற்கே விக்கிரகாராதனை, குருதெய்வ தியானம் முதலிய வேற்பட்டுள்ளன. குரு லிங்க சங்கம பக்தியென மூவகை கூறுவாருமுளர். விக்கிரகத்தில் ஆராதிப்பதை விடக் குருவையும் அடியாரையும் வழிபடுதல் தெய்வ வாராதனையிற் சிறந்ததாம். சங்கம பக்தியென்பது அடியார் பூசை, அது அதிதி பூசையிலடங்கும். விக்கிரகாராதனையும் குருவை யாராதிப்பதும் சிரேஷ்டமானவை அவற்றுள்ளும் குருவாராதனையே மிகச் சிலாக்கியமானது. ஏனெனில், கல், மரம், உலோகம் முதலியவற்றாற் செய்யப்பட்ட விக்கிரகங்களை விடச் சேதனவடிவமான குருவடிவம் மேலானதாம். விக்கிரகங்களில் தெய்வத்தை வருவிக்கும் முறைமை விதிக்கப்பட்டுள்ளது. அம்முறை தவறினால் அவைகளில் தெய்வசாந்நித்திய முண்டாவது கடினமாம். அங்ஙனமின்றிச் சர்வசக்தியுடைய தெய்வத்தால் சிற்சொரூபமாக வுண்டாகப்பட்ட குருவடிவத்தில் இயல்பிலேயே தெய்வசானித்தியமுளது. சகல சிருஷ்டிகளையுந் தெய்வ சொரூபமாகக்கருதி வழிபடுகவென்று ஞானிகளுக்கு விதித்ததும் இம்முறை பற்றியேயாம். அங்ஙனங் கூறியவற்றாற் குருவே தெய்வசொரூபி என்பது நூல்களின் கருத்தாகக் கருதப்படும். தனக்கு உபதேசித்த குருவின் சொரூபத்தையே தெய்வத்தின் சொரூபமாகக்கருதி வழிபடுவதே சிறப்புப்பெற்ற ஆடவருக்குரியதாம். இந்தக் குருஆராதனையை விட்டுச் செய்யப்படும் விக்கிரகாராதனை பயன்படாது. விக்கிரகாராதனையே லிங்கபக்தி என்று கூறப்படும்.

இவ்வாறே ஸ்திரீகளுக்குப் புருஷனையே தெய்வமாகக்கருதி வழிபடவேண்டுமென்று நூல்கள் விதித்தன. சான்றோரும் இதனையே ஒப்புக்கொண்டார்கள். புருஷனுக்குப் பதி என்று ஒருபேருண்டு. கடவுளுக்கும் பதி யென்று பேருண்டு. புருஷனாகிய பதியையே தெய்வசொரூபமாகக்கொண்டு வழிபடும் ஸ்திரீ பதிவிரதை யென்று புகழப்படுகிறார்கள். இதுவே கற்புடைமையென்று வியந்து கூறப்படுவது. இங்ஙனம் புருஷனையே தெய்வமாகக்கொண்டு வழிபடும் பெண்ணரசியைப் புகழ்ந்து "தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை" என்று தேவர் கூறினர். அஃதுடன்மையாற் கற்புடைமாதரைப்புகழ்ந்து "பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின்" என்று கூறினர். இவ்வாறு கணவனைத் தெய்வமாக வழிபடுங் கற்புடைமாதர்க்குப் பயன்கூறுமாற்றால், "பெற்றார் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்—புத்தேளிர் வாழுமுலகு" என்பதனால் இத்தகைய கற்புடையார் மறுமையிற் சொர்க்கலோகத்தில் தேவர்கள் வணங்கும்படியான பெருஞ்சிறப்பைப் பெறுவர் என்றார். புருஷனைத் தெய்வமாகக் கொண்டு வழிபடுதற்குக்காரணம் யாதென்றால் உபநயனகாலத்தில் புருஷர்களுக்குக் குருவைக்காட்டி இவரே தெய்வம் இவரை வழிபடுக என்று உபதேசிப்பது முறைமையாம். அம்முறையே பெண்களுக்கு விவாகமே உபநயனமாதலால் புருஷனையே குருவாகவும் தெய்வமாகவுங் கூறி உபதேசிக்கப்படும். அவ்வழி நின்று புருஷனைக் குருவாகவும் தெய்வமாகவும் வழிபடுதலே பெண்களுக்கு விதிக்கப்பட்டது. பெண்களின் மனம் சலன சுபாவமுடையது. உலகவின்பத்தில் அதிக விருப்பமுடையது. ஆதல்பற்றி உலகவின்பத்தையனுபவித்தற்குரிய கணவனைத் தெய்வமாகக்கருதி வழிபடுதல் சலன சித்தமுள்ள பெண்களுக்கு எளிது. தன் நாயகனைத்தவிர வேறொரு தெய்வமுமில்லை யென்கிற நிச்சயபுத்தியுள்ள பெண்களுக்கு நாயகனிடத்தில் அதிக அன்பும், பக்திசிரத்தையும் உண்டாம். அதனால் அவர்கள் மனமொரு வழிப்பட்டு நிற்கும். மனம் ஒரு நிலையில் நிற்பதே முத்திக்குரிய மார்க்கமாதலால் பெண்

களுக்குப் பதிபக்தியே குருதெய்வ வழிபாடாக விதிக்கப்பட்டது. இங்ஙனங் கூறப்பட்ட குணவதியான பெண்ணுடன்கூடி மனமொருமித்து இல்லறநெறி தவறாது நடந்துவருவானானால், அவ்விருவரும்முறையே பதமுக்திகளைப் பெற்றுப் பிறகு பேரானந்தவீடாகிய சாயுஜ்யமுத்தியையும் பெறுவார்கள். பதமுக்தி யாவது இந்திரலோகம், சந்திரலோகம், சூரியலோகம், பிரமலோகம், வைகுண்டம், கைலாசம் என்னும் பதவிகளையடைந்து ஆங்காங்குள்ள போகங்களை நுகர்தலாம். சாயுஜ்யமுத்தியாவது பரப்பிரமத்துடன் தானதுயென்னும் வேற்றுமையறத் தானேயது அதுவேதா னென்னும்படி கலந்து நிற்பது.

முற்கூறிய இலக்கணங்க ளமையப்பெற்ற ஸ்திரீயுடன் கூடின புருஷன் பொய், வஞ்சகம், பொறாமையாதித் தீயகுணங்களையொழித்துச் சத்தியம், அன்பு, இரக்கம், ஈகை, இன்சொற்கூறல் முதலிய குணங்களையுடையவனாய்ச் சாஸ்திரங்களை யோதியும், அவற்றின் கருத்தைப் பெரியோர்பாற்கேட்டும் ஐயந்திரிபறவுணர்ந்துகொண்டு, அவற்றின் சாராம்சங்களைத் தன் மனைவிக்கு அடிக்கடி உபதேசித்து நல்வழிப்படுத்தவேண்டும். சொர்க்கம், நரகம், மோட்சம் இவற்றின் தன்மைகளை நன்றாய் விளக்கவேண்டும். "கண்ணுக்குமுன் பெண்டாட்டி" என்னும் மூதுரையை யுணர்ந்து அவளைப்பிரியாமற் கூடிவாழவேண்டும். இங்ஙனங்கூறிய இல்லறநெறி தேவர்களாலும் புகழப்படுவதாம். அநேக ரிஷிகளு மிதை அனுஷ்டித்து மோட்சம்பெற்றார்கள். சிலர் இல்லறநெறி கடவாது நடந்து சரீரத்துடனேயே சாகாமல் முத்தியுலகஞ் சென்றார்கள். இவ்வரியநெறியைக் கடைப்பிடித்தொழுகி யாவரும் மேலானபதவியைப் பெற்று வாழுமாறு செந்திலாண்டவன் திருவடியை இரவும்பகலும் சிந்திப்போமாக.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

ஜீவகாருண்யம்.

ஜீவ்காருண்யமென்பது அதனுடைய அர்த்த புஷ்டியில் பெரும்பாலும், ஜீவர்கள்பால் நாம் கொள்ளும் கருணையை மாத்திரம் விளக்குவதாயினும், அதன் முதற்படியாகவுள்ள புலான் மறுத்தலையும் முன்னர் கூறி, பின்னர் காருண்யத்தை விளக்குதலே எனது கடமையாகும். ஏனெனில் "கொல்லாத விரதங் குவலய மெல்லா மோங்க, யெல்லார்க்குஞ் சொல்லுவ தென்னிச்சை பராபரமே" என்ற தாயுமானவர் வார்த்தையை சீர்தூக்கியும்

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்"

என்ற நாயனார் வாக்கைக் கடைப்பிடித்தும் ஈண்டு எடுத்துரைக்க முன் வந்தேன்.

ஜீவகாருண்ய மென்பதை, நாம் எதை ஆதாரமாகக்கொண்டு பெற்றோம் என்று சிந்திக்குமளவில், அது நம் மதக்கிரந்தங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயுள்ளவேதத்தில் கூறப்பட்டிருப்பதாகத்தெரிகிறது. அது நாளடைவில் எங்ஙனமிருந்து வந்ததென்பதைச் சிறிது ஆராயிவாம். அத்தகைய ஆராய்ச்சிக்கு நமக்காதாரமாயுள்ளன பூர்வீக இந்தியதேச சரித்திரங்களேயாவன. இப்போதைக்குச் சில ஆயிர வருடங்களுக்கு முன்னர், அதாவது ரிக் வேதம் உண்டான காலத்து, அதைப்பற்றிய ஆதாரங்கள் சிறிது கிடைக்கின்றன.

முற்காலத்தில் எல்லா வருணத்தாரும் ஜீவவதை செய்து மாமிச பக்ஷணம் செய்து வந்ததாகத் தெரிகின்றது. ஆகாரத்தின் பொருட்டு கணக்கற்ற ஆடு

மாடுகளும் குதிரைகளும் கொல்லப்பட்டு வந்ததால், பிற்காலத்தில் கால்நடைகள் மிகக் குறைந்து விவசாயம் கெடுவதை யறிந்து யாகத்தின்பொருட்டு மாத்திரம் உபயோகித்து வந்தார்கள். ஆனால் அநேகர்கள் ஆகாரத்திற்குச் சிறிது மாமிசம் குறைவுபட்டபடியால் இது காரணமாகவே யாகங்களை அதிகமாகச் செய்யலானார்கள்.

இவைகள் யாவும் யாகத்தின் பொருட்டு விதிக்கப்பட்டிருந்தாலும், அவைகள் அக்காலத்தியவர்களால் கொண்ட தீய பழக்கமேயன்றி வேறல்ல. பிறகு நெடுங்காலத்திற்குப் பின் தோன்றிய, கௌதம புத்தர் இவ்விஷயத்தை உணர்ந்து "அஹிம்சாபரமோதர்மா" என்னும் வேத விதியைக் கடைப்பிடித்து முற்காலத்தில் அக்கிரமமாக ஆடு, மாடு, குதிரைகளை யாகத்தின் பொருட்டு செய்துவந்த கொலையை மறுத்து வந்தார். அது முதற்கொண்டுதான் உயிர் வதை இந்தியாவில் அநேகமாய்க் குறைந்து வந்தது. ஆனால் இவைகளனைத்தும், நமது பூர்வீக புராணங்களில் கூறியிருந்தாலும், ஆன்மார்த்த சம்பந்தமாகச் சிறிது விசாரிக்குமளவில் இவ்வழக்கம் தவறெனவே புலப்படுகின்றன.

பெரும்பாலும் மதக்கிரந்தங்களிலேயே ஜீவகாருண்யத்தைச் சொல்லவருங்கால் இவ்வுயிர்வதையை ஒன்றாக எடுத்துக்கொண்டு அதை முழுதும் மறுத்துக் கூறும் ஆதாரங்கள் புலப்படுகின்றன. இப்பொழுது மதக்கிரந்தங்களில் ஏன் இவ்விஷயத்தை முற்றிலும் மறுத்திருக்கின்றது என்பதை ஆராய்வோமானால், அதிலிருந்து நமக்கு இரண்டு பெரிய தத்துவங்கள் விளங்குகின்றன. ஒன்று மனதைப் பொறுத்தது, மற்றொன்று ஸ்தூல தேகத்தைப் பொறுத்தது. மனதைப் பொறுத்ததாவது, ஒருவன் ஜீவர்களிடத்து காருண்யமில்லாது தன் சுகத்தைக் கருதி மற்ற ஜீவர்களுடைய வதையை விரும்புவானேயானால், ஆன்ம ஞானத்தில் செல்லும் முதற்படியில், அவன் இரக்கங்குன்றி மன நெகிழ்ச்சியை இழந்தவனாய் கடின சித்தத்தைப் பெறுகிறான். அப்பொழுது "சர்வ பூதே ஹிதேரதாஹா" அதாவது சர்வ பூதங்களுடைய நன்மையைக் கோரினவனாயிருத்தல் எனும் கீதா வாக்கியத்திற் கூறியபடி அதைப் பரிபாலனம் பண்ணுகிறதில்லை. தன்னுயிரைப்போல் மன்னுயிரையும் பாராத ஒருவனுக்கு, ஆன்மப் பிரகாசம் எங்ஙனமுண்டாகும். இரண்டாவது ஸ்தூல தேகத்தைப் பொறுத்தமட்டில் ஒருவன் எந்தவிதமான ஆகாரத்தை உட்கொள்ளுகிறானோ, அதன் சுபாவத்திற்கு இணங்கவே அவன் தேகத்தின் சுபாவமும் ஏற்படுகிறது என்பது இயற்கை விதிமட்டுமல்ல, நம் மதக்கிரந்தங்களிலும் கூறியுள்ளது.

மனிதன் உட்கொள்ளும் ஆகாரமோ மூன்று வகையாக வுள்ளன. அவை தமஸ், ரஜஸ், சத்வம் என்பனவாம். இதில் தமோகுணமென்பது, மனிதனிடத்துள்ள ஈஸ்வர சைதன்னியமாகிய அறிவை முழுதும் மறைத்து அற்ப உலக விஷயத்திலுங்கூட அறிவை கெடுக்குங் குணமுடையது. இரஜோகுணமென்பது, சரீரத்தில் சுறுசுறுப்பையும், உலக காரியங்களில் ஆசையையும் சாஸ்திர விசாரணையும் சொற்ப பாகம் விவேகத்தின் கூர்மையையும் உண்டு செய்வது. சத்வகுணமாவது, மனிதனுக்குத் தன்வாழ்வில் சம்சார சம்பத்தாலும் இயற்கைப் பொருள்களாலும் தெய்வீக சக்திகளாலும், உண்டாகிற துன்பங்களால் எப்பொழுதும் சலனமடையாத சாந்த மனதையும், சித்த சமாதானத்தையும், ஜீவகாருண்யம், ஆன்மஞான விருப்பு ஈஸ்வர பக்தி ஆகிய மோக்ஷ சாதனங்களையும் உண்டு செய்வது.

எதுவரையில் மனதானது சரீர சுகத்தையும், அதனிடத்துண்டாகும் உணர்வையும், தன் சுகமாகவும் தன்னுணர்வாகவும், தன்னிடத்திருந்து அதை

வேறுபிரிக்காது, தானாகவே அபிமானித்திருக்கிறதோ அதுவரையில் சரீரத்தில் உண்டாகக்கூடிய ஒவ்வொரு வுணர்ச்சியும், மனதைச் சார்ந்தே தீரும். ஆனது பற்றித்தான் மனிதன் எவ்வித ஆகாரத்தை உட்கொள்ளுகிறானோ அதன் சுபாவத்திற்கிணங்க் மனதும் பக்குவப்படுகின்றது. இப்பொழுதுதான் நாம் எடுத்துக் கொண்ட ஜீவகாருண்யம் எனும் விஷயமானது நன்கு நிரூபிக்கப்படுகிறது.

ஒருவன் இவ்விதியை அனுசரித்து, ஜீவவதையால் மனது இரக்கங்குன்றி கடினமடைகிற தென்பதையும், மாம்ச ஆகாரம் தமோகுண ஆகாரமாக சுபாவத்தில் ஏற்பட்டிருப்பதால், அதை ஜீவ வதையால் அடைந்து ஆகாரத்தின் பொருட்டு உபயோகப்படுத்தினால் சரீரத்தில் தமோகுணத்தை விருத்தி செய்து சரீர வுணர்வை தன்னுணர்வாக அபிமானித்திருக்கிற மனதையும், தமோகுண மயமாக்கிவிடுகிற தென்பதை அறியவேண்டும்.

ஆன்ம மார்க்கத்திற் செல்லும் ஒருவனுக்கு மனம் சத்வகுண சொரூபத்தை அடைந்தாலன்றி, அவன் முக்திக்குரியோனாமாட்டானென்பது நிச்சயமாதலால், அவன் அதற்குத் தடையாகவுள்ள தமோகுண ஆகாரங்களில் தாழ்ந்ததாத்ததாகிய மாமிச ஆகாரத்தை முற்றிலும் விலக்கியே தீரவேண்டும். இப்படி அவன் தமோகுண ஆகாரத்தை விலக்குவதற்காக ஜீவகாருண்யத்தின் ஓர் பாகத்தை அவசியம் கைக்கொள்ளுகிறான். அன்றியும், ஆன்மஞான முதிர்ச்சியடையும்பொழுது, அவன் சரீர அணுக்கள் முற்றிலும் சத்வகுண முடையதாகவே யிருக்கவேண்டும். ஒருவன் யோகப் பயிற்சியால் தன்னிடத்துள்ள சத்வகுண சொரூபமான பிராணசக்தியை, பிராணாயாம யோகாப்பியாசத்தால் மேற் கிளம்பும்போது, சரீரத்தில் தமோகுண சம்பந்தம் சிறிதிருக்குமேயாயின், அவன் சரீரத்திற்கே நாசமுண்டாகுமென்பது திண்ணம். மேற்கூறிய இவைகளனைத்தும் ஆதாரமாகக்கொண்டுதான், மதக்கிரந்தங்கள் முற்றிலும் ஜீவகாருண்யத்தை ஆமோதித்தும், மாமிச ஆகாரத்தை முழுதும் நிஷேதித்தும் வாதமிடுகின்றன.

இவ்வாதம் ஒருபுறமிருக்க, தற்காலத்தில் சரீரக்கூறறிந்த மேல்நாட்டு விற்பன்னர்களாகிய டாக்டர்கள் என்ன கூறுகின்றார்க ளென்பதைச் சிறிது யோசிப்போம். இவர்களில் ஒரு கூட்டத்தார், மனிதன் மாமிச ஆகாரத்தைக் கொள்ளுவதால் கெடுதலில்லை யென்றும், மற்றொரு கூட்டத்தார், அதனால் மனித தேகத்துக்குக் கெடுதலுண்டென்றும் வாதித்து வருகின்றார்கள். இப்படி ஒன்றற்கொன்று விரோதித்திருக்கும் இரு வகுப்பினரும், காய், கறி, கிழங்குகளாகிய தாவர ஆகாரங்கள் மனித சரீரத்திற்கு, சுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளே என்று ஒரேவித அபிப்பிராயமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். இங்ஙனம் இரண்டு கக்ஷியாரும் தாவர ஆகாரங்கள் நன்றென்று ஒப்புக்கொள்ளுவதால், அவ்விடத்தும் மனிதனுக்கு மாமிச ஆகாரம் தேவையில்லை என்பது பெறப்படுகிறது.

அன்றியும், மனித தேகமானது அதனுடைய இயற்கைத் தத்துவத்தில் எவ்வித பக்ஷணத்தைக் கொள்ள உரியதென்பதை யோசிப்போம். பிராணிகள் இயற்கையில் சாக பக்ஷணிகளாகவும், மாமிச பக்ஷணிகளாகவுமிருக்கின்றன. சாகபக்ஷணிகளாகிய யானை, குதிரை, ஆடு, மாடு, மான் முதலியவைகளுடைய சரீர சுபாவத்தையும், அமைப்பையும், மாமிச பக்ஷணிகளாகிய புலி, கரடி, சிம்மம், நாய், பூனை முதலியவைகளுடைய சரீர சுபாவத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, மனிதனை இவ்விரண்டு வகுப்பில் எத்தோடு சேர்க்கலாமென்பதை ஊகிப்போம்.

(தொடரும்)

கோவை-எஸ். சுவாமிநாத முதலியார், கோயம்பத்தூர்.

நான் சொல்லுவதைமட்டும் நம்பவேண்டாம் பிறர் சொல்வதையுங் கவனியுங்கள்.

காபி, டீ யைப்பற்றி அரிய பெரிய பிரமுகர்கள் சொல்வதையுங் கவனியுங்கள். இதைப்பற்றி நமதானந்தன் தனதங்கத்தில் முந்தி பலதடவைகளிலும் அறிவுறுத்தி யிருக்கின்றான்.

சகோதர சகோதரிகளே! கனம். ஆர். இராகவேந்திரராவ் பீ. ஏ.. எம். பி. ஸி. எம். அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

"பிறக்கப்போகும் குழந்தையின் நன்மையை உத்தேசித்து, தாய்மாருடைய தேகாரோக்கியத்தை அவளுடைய கர்ப்பத்திலிருந்தே கவனிக்க வேண்டியது அவசியம். புஷ்டியைக் கொடுக்கக்கூடிய ஆகாரங்களை அவள் யதேஷ்டமாய்ச் சாப்பிடவேண்டும். காபி, டீ முதலிய பானங்களைக் குடிக்கவே கூடாது. தாய்க்கு ஒத்துக்கொள்ளும் ஆகாரம்" என்பதிலிருந்து இது கெடுதியை யுண்டுபண்ணும் என்பது விளங்கவில்லையா? மேலும் இது 'குழந்தைகளின் பாதுகாப்பு' விஷயமாய் எழுதும்போது கூறுவதாகும்.

ம-ா-ா-ஸ்ரீ, அ. சேதுராமையர் அவர்கள் தாமெழுதியுள்ள அருமையான 'விவசாயபோதினி' என்னும் நூலில் "தேயிலை ஒரு பிரமை உண்டாக்கும், அல்லது மயக்கம் தரக்கூடிய சத்தை உடைத்தாயிருக்கும் பயிர்" என்கிறார்.

சென்னை 'கில்ஸன்' கம்பெனியார்; "நம் மிந்தியா தேசத்தில் காப்பித்தண்ணீர் டீ தண்ணீர் குடிப்பது அநேகருக்கு வழக்கம். இவைகள் சரீர ஆரோக்கியமுள்ளவைகளல்லவென்று தேர்ந்த டாக்டர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, காப்பியைக் குடிக்கும் எல்லா ஜனங்களுக்கும் உண்டாகும் வியாதிகள் அநேகம். அவைகளில் முக்கியமானது மதுமேகம். (Diabetes) அதாவது பகு மூத்திரம். காப்பியைக் குடித்து இப்படிப்பட்ட வியாதிகளை சம்பாதித்துக்கொள்வானேன்" என அறிவுறுத்துகின்றார்.

ஐயோ! 'விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுவாரு முண்டோ?' திரவியம் சம்பாதிக்க எண்ணங்கொண்ட காப்பிக் கிளப்புக் காரர்கள் இவ்வித தீமையை யுண்டுபண்ணும் காப்பி, டீயை ஏராளமாக விற்பனை செய்கிறார்கள். இக்கடைகளே தற்போது மதுபானக் கடைகளாக மாறி யிருக்கின்றன. அன்றியும் ஒவ்வோர் கடையின் சுவர்களிலும் துளியிடமின்றி டீ பானத்தின் விளம்பரங்கள் பிரஜைகள் மயங்கும்படியான வசனங்களையும் படங்களையும் அச்சிட்டு ஒட்டிவைத்திருப்பது மன்றி, மிகப் பெரிய எழுத்துக்களில் அட்டைகளில் எழுதியும் சுவர்களில் எழுதியும் பொருள்பறிக்க ஏற்பாடு செய்திருப்பதைக்காண, இதுவும் காலத்தின் கூத்தோவென நகைப்பொரு பக்கமும் துக்கமொரு பக்கமும் உண்டாகின்றன.

இவைகளை அதிகச் சூடாகச் சாப்பிட்டு நாவையும் தொண்டையையும் உள்ளிருக்கும் அவயவங்களையும் வேகவைத்துப் புண்ணாக்கி சுரணையற் றிருக்கச் செய்கின்றனர். அவயவங்கள் சுட்டிஞல் நொந்துபோஞல் என்ன பலமிருக்கும். அந்தோ! பரிதாபம். தூக்கத்தைத் துரத்தி சோம்பலையும் உஷ்ணத்தையும் உண்டுசெய்து இன்னலை விளைவிக்கும் தேயிலை காப்பியின் செய்கையை விவரிப்பதென்ருல் சுலபத்தில் முடியா. பல ஐரோப்பியர்களும் டாக்டர்களுமே இவற்றின் துர்க்குணத்தைக் கண்டு நீக்கி யிருக்கிறார்க ளென்ருல் 'புலியைக்கண்டு சூடிட்டுக்கொண்ட' தைப்போல் அவர்களைப் பார்த்து (மத்

தியகாலத்தில்) அநுசரித்த நாம், அநுபவித்துத் தூர்த்த தசையை யடைய முயல்வது எவ்வளவு மதியீனம். கவனியுங்கள்! டம்பமான விளம்பரங்களைக் கண்டு ஏமாருதீர்கள்! திரேகத்தைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள்! விழித்துக் கொள்ளுங்கள். ஜாக்கிரதை! ஜாக்கிரதை!!

P. பரிமணப்பல்லவாயர்.

செல்வம் நிலையாமை

உலகத்தின் கண் நாம் எவ்வகைப்பட்ட அபூருபமான பொருள்களையும் எளிதில் அடைவதற்குக் காரணமாயிருப்பது செல்வமேயாம். பெறுதற்கரிய மானிடப் பிறப்பையடைந்த ஒவ்வொருவரும் அடைதற்பாலதாகிய தருமார்த்த காம மோக்ஷமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களுள் முன்னைய மூன்ருகிய தர்மம், அர்த்தம், காமம் என்பனவற்றுள்—நடுவனவாகிய செல்வமொன்றை மாத்திரம் ஒருவன் அடையப் பெறுவானேயாகில் அவனை ஏனைய அறமும் இன்பமும் தாமே வந்தெய்தும்.

உலகத்தில் அறத்தைப் புரிவதற்கும் இன்பமடைவதற்கும் இன்றியமையாத காரணமாயுளது செல்வமென்பதை யாவரும் மறுக்கார். தருமம் செய்யாவிடத்து மோக்ஷவீடு அடையக்கூடாததாலின், அந்தத் தருமத்திற்கு ஏற்றதாய் நிற்கும் செல்வம், மோக்ஷத்திற்கும் ஏற்றதென்பது சொல்லாமலே விளங்கும். சாக்ஷாத் சர்வேசனது திருவடிச் செல்வமொன்று தவிர மற்ற உலகத்திலுள்ள அரும்பொருளனைத்தும் இமைநேரத்தில் மாய்ந்துவிடத் தக்கதென்பதுயாவரும் அனுபவமா யறிந்த விஷயமே.

இதற்குக் காரணமாகி நிற்பவை இளமை, செல்வம், யாக்கை ஆகிய இம்மூன்றுமாம். உலகத்தில் அடைதற்கரிதான நிலையாமையிற் சிறந்தனவாயுள்ள எல்லாப் பொருள்களிலும் மேற்கூறிய இளமை, செல்வம், யாக்கை ஆகிய இம்மூன்றுமே சிறந்தனவா யிருக்கின்றன. இவற்றுள் நிலையாமையிற் சிறந்தது செல்வமே. மானிடருக்கு வயது நூறு என்றும் இவற்றுள் இளமைப்பருவம் முப்பது வயது வரை என்றும், அறிஞர் இளமைக்கு ஒருகால வரை கண்டு நிர்ணயத்திருக்கிறார்கள். அவ்வாறு செல்வத்திற்கு யாவரும் ஒரு வரம்பேற்படுத்தியதாக நாம் இதுவரை கண்டதில்லை. எவ்வித வஸ்துக்களையும் விட செல்வத்தினிடத்து நமக்கு அதிக ஆசை இருத்தற்கு இரண்டுவிதக் காரணமுண்டு.

முதல் காரணம். மேல்கூறியபடி எவ்வகைப்பட்ட வஸ்துவையும் அடைதற்குச் செல்வம் பெருங்கருவியா யிருப்பதால் அதனிடத்து மானிடர்களுக்கு அதிக ஆசையுண்டாகிறது.

இரண்டாவது. நம்மிடமிருக்கும் செல்வமானது வெகு சீக்கிரத்தில் உடையானை விட்டகலு மியல்புடையதாதலின், அதனிடம் நமக்கு அவா மிகுதியா யிருக்கிறது. எந்தப் பொருளானது வெகு சீக்கிரத்தில் உடையானை விட்டு நீங்கும் தன்மையதோ அது அவ்வளவுக்கவ்வளவு மிக்க அவாவைக் கொடுக்கத்தக்கதா யிருக்கிறது.

மாதர்கள் இன்பத்தை மஹாமேருவைப்போல் நம்மை நினைக்கச் செய்வதும் அதை அடிக்கடி அவாவும்படி நம்மைத் தூண்டுவதும் எது? அவ்வின்பத்தின் நிலையாமையேயாம். அவை க்ஷணநேரத்தில் அழிகின்றபடியாற்ருன் அதனை மீண்டும் அடையவேண்டுமென்று பேரவா மானிடர்களிடம் நிகழ்கின்றது. இதுபோலவே அநித்தியமே அதனை நாம் அவாவுதற்குக் காரணமாயிருக்கிறது.

செல்வம், தரித்திரம் என்னும் இருபதங்கட்கும் சில தமிழ்ப்புலவர்கள் ஒருவித விநோதமான உரை கூறுவதுண்டு. செல்வமானது தன்னை யுடையானைக்கண்டு எப்போதும் செல்(வோம்)வம் (யாம் உன்னை விட்டுப்போவோம்) என்றும், தரித்திரம் தன்னையுடையானை நோக்கி தரித்தி(ரோம்)ரம் (யாம் உன்னிடத்தில் தரித்திருக்கமாட்டோம் என்றும் கூறுவதாகப் பொருள்படுகிறது. இந்த உரை இப்பதங்களின் உண்மையான பொருள் அல்லவாயினும் ஒருவகை உண்மையை விளக்குகிறது.

தம்மிடம் செல்வம் வந்தகாலத்துக் காலதாமதமின்றி நமக்கும் பிறருக்கும் பெரும்பயனைத் தரத்தக்க கருமங்களை வெகு சீக்கிரத்தில் செய்து முடிக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டே ஜெகதீசன் அதற்கு நிலையாமையைத் தந்திருக்கிறார். இதனை உணராது சிலர் செல்வம் வந்த காலத்து உண்ணாதும் உடுக்காதும் தானதருமம் செய்யாதும் புதைத்து வைக்கிறார்கள். அத்தகைய செல்வம் எத்தன்மையுடைய தெனில், தேனீக்கள் வெகு சிரமப்பட்டு தாங்கள் சேர்த்து வைத்த தேனையுண்ணாமல் பிறருக்குப் பயன்படுத்துகிற தன்மையை யொக்கும். இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு கதையுண்டு. அதாவது,

ஒரு ஊரில் தனபாலன் என்ற ஒரு வணிகன் இருந்தான். அவன் மென்மேலும் பொருள் சேர்ப்பதிலேயே ஊக்கமாய் இருந்தானேயன்றி, அதில் எள்ளளவும் தானதருமம் செய்யவோ அல்லது தானாவது உண்டு உடுத்து அனுபவிக்கவோ நினைத்தவனல்லன். ஆதலால் அவன் செல்வமானது நச்சுமரம் பழுத்து ஒருவருக்கும் பயன்படாது போல பயனற்றிருந்தது. வணிகன் பின்னும் பொருள் சேர்ப்பதில் மிகவும் ஊக்கம் கொண்டு செல்வநாயகியாகிய லட்சுமியைக் குறித்து சதா ஸ்தோத்தரித்து வந்தான்.

அம்மாது அவனுடைய நல்வினையால் வேண்டிய செல்வத்தை விருத்தி செய்துகொண்டே வந்தாள். இப்படியிருக்க ஒருநாள் தனபாலன் தன்னுடைய செல்வத்தை யெல்லாம் பார்த்து இவையெல்லாம் ஒருகாலத்தில் என்னைவிட்டகலுமோ வெனத் துக்கித்து அன்று லட்சுமியை நோக்கிப் பிரார்த்திக்கவே அவள் தரிசனமாகி உனக்கு யாதுவரம் வேண்டுமென்று வினவினாள். வணிகன் அம்மா ! இச்செல்வம் என்னிடம் தங்கியிருப்பதற்கு நீயே காரணமாயிருப்பதாலும் நீ பிரிவையேல் இச்செல்வமும் என்னைவிட்டுப் பிரியுமாதலாலும் நீ என்னைவிட்டு அகலாது இருக்கவேண்டுகிறேன். ஒருக்கால் நீ செல்லவேண்டியிருந்தால் என்னை நேரில் கண்டு சொல்லிவிட்டு என்னிடம் செலவு பெற்றுப் போகவேண்டுமென முறையிட அம்மாது அவ்வாறே வரங்கொடுத்தேகினள்.

பிறகு சிலகாலஞ் சென்றபின் ஒருவாறு தனக்குள் யோசிக்கலானான். அஃதென்னவெனில், திருமகள் என்னை விட்டகலும்போது என்னிடம் விடைபெற்றுப் போவதாய் உறுதிமொழி கூறினாள். அத்தேவியார் சொற்றவறாள். நான் இறந்துபோவேனேயாகில் தன்வாக்குப்படி என்னைப் பார்க்க அவளுக்கு இசையாது. என்னிடத்தில் சொல்லாமலே என் வீட்டை விட்டகல அம்மாதுக்குக் காரணமில்லை. ஆதலால் நான் இறந்துபோவதே சரியான மார்க்கம் என்றெண்ணி ஒரு பாழ்ங்கிணற்றில் இறங்கி வீழ்ந்துயிர் துறந்தான்.

அந்தோ ! நிலையில்லாச் செல்வத்தினிடத்து அப்புல்லறிவாளனுக்கிருந்த பேரவா அவனுடைய அகால மரணத்துக் கேதுவாயிற்று. அவன் அச்செல்வத்தால் அல்லவா மிகவும் அவாவுற்று உயிர் துறந்தான்.

ஐயோ பாவம் !

ஓடமிடு மிடமது மணற்சுடுஞ் சுடுமிடமு மோடமிடவே நடக்கு
முற்றதோ ராற்றின்மடு மேடாகு மேடெலா முறுபுனல்கொண் மடுவாயிடும்
நாடுகா டாகுமுயர் காடுநா டாகிவிடு நவில் சகடுமேல் கீழதாய்
நடையூறு சந்தைபல கூடுமுடனே கலையு நன்னிலவு மிருளாய்விடும்
நீடுபகல் போயபின் பிரவாகு மிரவுபோய் நீதியோர் மிடித்திடுவர் மிலியோர்
[செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வு கண்டாய் மாடுமனை பாரிசன மக்கணிதி பூஷணமு
மருவ கனவாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.
(குமரேசர் சதகம்.)

ஆதலால் நல்வினைப்பயனால் செல்வம் வந்துற்றபோது அகங்கரித்து அநீதிகளைச் செய்யாது, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்ற பழமொழிப்படி, நல்வழியில் தானதருமங்களைச் செய்து நற்கதிபெற முயல்வோமாக. அத்தானதருமமும் பாத்திரமறிந்து செய்தாலே பயனுண்டென்பதை மறக்கலாகாது.

R. வரதராஜய்யர், அம்மாபாளையம், புதூர்.

சசிவர்ணபோதம்

(91–ம் பக்கத் தொடர்ச்சி.)

வேதாகம இதிகாச சாஸ்திர புராண கலைக்கியானங்களைக் கற்றுக்கொண்டு காலமெல்லாங் கழித்துக்கொண்டிருப்பது எவ்வாறு சிற்றறிவாம் ? என்பது தானே உனது கேள்வி.

சொல்லுவதைக் கேள் ! இவ்வுலகத்திலே மிக்கப் பிரசித்தி வாய்ந்து பவித்திரம் பெற்றுள்ளனவான பதினெண் புராணங்களுள்ளன. இப்புராணங்களோ *ஐம்மதங்கொண்ட பிரிவுகளை யுடையனவாய் விளங்கும். இவைகளில் ஒன்றையும் விடாமல் சேர்த்து மனனஞ் செய்துவிட வேண்டியது அவசியமே. வேண்டாமென்று தடுப்பது வெகு தோஷம். முதலிலே ஒரு புராணத்தை யெடுத்துக்கொண்டு அதிலுள்ளவற்றை யெல்லாம் ஐயந்திரிபற அறிந்துகொள்வதற்கு அவசியமானது ஐயாண்டாவது வேண்டும். பின்பே பிறிதொன்றைத் துவக்கவேண்டும். ஆக இப்பதினெண் புராணங்களையும் அவைகளி னியல்புகளையும் அவற்றில் உள்ள ஏற்றத்தாழ்வு இதுவெனத் தெரிந்து செவ்வனேவிளங்க அறிவதற்கு கணிதப்படி தொண்ணூறுவருஷங்கள் வேண்டும்.

அப்பா ! இதற்குள்ளே மலைத்துவிடாதே. பலவாறாக எண்ணாதே, இழிவு கருதிக்கூறுவதன்று. அப்புராணங்களினியல்புகளை யறிவதற்கு இவ்வளவு காலமாமென்று யுக்தி, முகத்தாலறிந்து உள்ள

* ஐம்மதங்கொண்ட புராணப் பிரிவுகளாவன. சைவ மேம்பாட்டைச் சொல்லும் புராணங்கள் 10. வைணவ சிரேஷ்டத்தைச் சொல்வன 4. பிரம்மத்தைக் குறித்து சிலாக்கித்துச் சொல்வன 2. ஆதித்தனை விசேஷித்துச் சொல்வது 1. அக்கினியை ஆதியாகக் கொண்டுரைப்பது 1. ஆக பதினெண் புராணங்களும் இவ்வாறு ஐந்துமதப் பிரிவுகளையுடையன வென்பதாம்.

வாறு உவந்துரைப்பதாகும். இதன்பின்னரே இதிகாச நூல்களை யெடுக்கவேண்டும். இவற்றிலே முதன்மையானது சிவரகசியமென்பது. இந்நூலினுட் பொருளைச் செவ்வனே சிந்தித்து ஒருவாறு தெளிவதற்குரிய காலமோ! அதமபட்சம் ஆறுண்டு செல்லும். ஏனைய தொடர்ச்சி நூல்களான பாரதம். ராமாயணம் ஆக இம்மூன்றற்கும் மூவாறுண்டு வேண்டியதாகிறது.

இதற்குமேல் இயல் இசை நாடகம் என்னும் இலக்கண நூல்களைக் கற்கவேண்டும். இவ்விலக்கணம் ஒவ்வொன்றுக்கும் ஈராறுண்டாக மூன்றும் முப்பத்தாறு வருஷங்களில் முடியலாகும்.

ஹே! அந்தண! மறந்துவிடாதே அதன்மேல்—அறுவகையான சாஸ்திரங்களை ஆராய்புகவேண்டும். முறையே ஒன்றன்பின் மற்றொன்றாகப் பயிலப்பயில இவ்வாறு சாஸ்திரங்களும் எழுபத்தீராண்டோடு முடியும். அதன்மேல் தொடர்ச்சியாக பதி, பசு, பாசம் என்ற ஆகமப்பொருள்களிலே பிரவேசிக்கவேண்டும். இவைகளை யாய்ந்தறிவதற்கு ஜென்மாந்திர வாசனை யிருந்தால் ஒருவாறு பனிரெண்டாண்டில் முடியலாம்.

ஹே இளைஞ! இதற்குமேல்தான் வேதங்களைப் பற்றிய விசாரம். இவ்வேதங்கள் எல்லை கடந்தனவென்பதும் பரம்பொருளாகிய தனிமுதல் கணிதமேயின்றி வேறு எத்தேவர்களாலும் விரிஞ்சனாலும் விரித்துரைக்கப்படா வென்பது விளக்கமென்றும், இக்காரணத்தாலே கண்ணடைத்த மாந்தர்க்கு விவேகமூட்டி மேலோங்கச் செய்யுமாறு வியாதனார் அவ்வேதங்களின் அமிசைகளின் ஒன்றை பூலோகத்திற்குத் தந்து அதனையே நான்கு கூறாகச்செய்தனர் என்பதின் உண்மையை மேலே படித்து முடித்துவிட்ட இதிகாச இலக்கணங்களால் எளிதில் அறியலாகும்.

இதன்மேல் இருக்கு வேதமாகிய முதற்பாகத்தைப் பாராயணம் பண்ணி மனனஞ்செய்வது மட்டுமெல்லாது அதனுட் பொருள்களையும் ஆழ்ந்து கவனிக்கவேண்டும். இவ்வாறு நான்கு கூறுகொண்ட வேதங்கள் ஏறக்குறைய நூறு வருஷங்களை நுங்கிவிடும்.

கேட்டனையோ 'சசிவர்ணா' இதுவரை எல்லையற்ற எண்ணிலா வேதங்களின் அணுவாம் ஓர் அம்சையின் அளவாயிற்று. கற்கத் தொடங்கியது முதல் இதுவரை முன்னூற்று இருபத்தெட்டு வருஷங்கள் கணக்காய்விட்டன. இனி தேவலோகஞ்சென்று ஆங்குள்ள தனிவேதங்களை யெல்லாம் முறையே கற்கவேண்டும். அவைகளின் எல்லை கண்டபிறகே இவ்வேதங்கள் எவ்வளவு வரை யெட்டுகிறதென்று எட்டிப் பார்க்கவேண்டும். எல்லாம் வல்ல இறைவனாகிய பரம்பொருள் வேதங்களுக்கும் எட்டாதவன் என்பது பிறகுதான் விளங்கும்.

தீர்க்காயுளோடும் திடதேக வலிமையோடும் ஜீவித்திருந்த

சென்ற யுகங்களிலுள்ள சீலம் வாய்ந்த சீரியோருங்கூட வேதங்களை முழுவதும் பாராயணம் செய்து முடிப்பது கஷ்டமெனக்கருதி ஒவ்வொருவரும் வேதத்தின் *ஒவ்வொரு பாகத்தை மாத்திரம் அத்தியயனம் செய்திருக்கின்றனர்.

இப்படியிருக்க பறப்பொருள்களாகிய எல்லா நூல்களையும் ஒருவன் கற்ப தெங்ஙனம்? வேதங்களுக்கே விமலன் சொரூபம் எட்டாதபோது பாராயணம் செய்து தினங்களைக் கழிப்போனுக்கு விளங்குவ தெவ்வாறு?

ஆனால் இன்னொரு விசேடம்! இத்தகைய நூல்கள் பரம்பொருளாரின் சொரூபங்களையும் குணவிசேடங்களையும் வலிமையையும் மகிமைகளையும் ஆட்கொள்ளுந் திறன்களையும் விளக்குவன வென்று முன்னரே கூறியுள்ளேன். யோசித்துப்பார்! நமக்கு இறையாயும் அன்பாயும் முக்கியமாயுள்ள ஒருவருடைய சகல குணங்களையும் பலவாயிலாய்த் தெரிந்து காலமெல்லாஞ் சொல்லிச் சொல்லிப் புகழ்ந்து கடைசியில் காணாமலிருப்பது பெரிதா? அல்லது அவைகளின் நுட்பங்களையும் தக்க வழிகளையும் உபதேச மூலமாய் ஊகித்தறிந்து அவ்வழிகளிற் சுருக்கமாயுள்ள ஓர் வழியில் ஓரேமனதாய்ச் சென்று அன்னோரைக்கண்டு ஆனந்தப் பட்டுய்வது அரிதா? என உற்று நோக்கும் யூகவான்களுக்கே இதன் உண்மை எளிதில் விளங்கும்.

பொதுவாக எல்லா நூல்களையும் கற்றுக்கொள்ள விரும்புவது கல்வியினாலாய வேட்கை. இதனைப் புற அறிவென்பர். தான் அடைய வேண்டிய பேறாகிய பரமான்மாவைத் தனக்குள்ளே கண்டு களிக்க முயலுவது ஞானமாகிய உள்ளுணர்வின் அபேட்சை. இதனை அகவறிவென்பர் ஆய்ந்தோர்.

இதனாலே இத்தகைய நூல்கள் எல்லாம் வல்ல இறைவனைப் புகழ்ந்துரைப்பதற்கே உண்டாயின வென்றும் இவைகளைக் கற்போர் இதன்படி காணாமலே நின்று இறையோனைப் புகழ்ந்துகொண் டிருப்பதாகுமென்பதும், எந்நூல் மூலமாயாவது எம் மதச் சார்பைச் சேர்ந்தாவது கூடுமானவரை அவசியமான நூல்களின் சுருக்கமாகிய உபநிடத சாரங்கள் ஞான சாரங்கள் ஆக இவைகளைத் தெரிந்துகொள்ளும் முறைகளறிந்து தத்துவ ஆராய்ச்சி செய்து வழக்கப்படுத்தி அதன்படிநடந்து அவனைக்கண்டு ஆனந்த பரவசமாய் விளங்கவேண்டு மென்பதாயிற்று.

---

* ஒவ்வொரு பாகத்தை மாத்திரம் பாராயணம் செய்தனரென்பது:—இருக்குவேதத்தைப் பைலரும், சாமவேதத்தை சைமினியாரும், அதர்வணவேதத்தைச் சுமந்தரும், அத்தியயனம்செய்தனர். எஜுர்வேதத்தை யறிந்தவர் வைசம்பாயனர் ஒருவரே. இதிகாச புராணங்களைத் தெரிந்துகொண்டவர் ரோமஹர்ஷணர் என்பதாகும்.

(பாகவதம் 1-வது ஸ்கந்தம் 4-வது அத்தியாயம் 21-22 சுலோகங்கள்.)

சசிவர்ணா! இனி பேரறிவைப்பற்றி பேசுவோம். கட்புலனைக் கபோலஞ் செலுத்திக் கல்மஷமற்று செவிப்புலனைக் கொண்டு சிந்தித்துக்கேள். இத்தராதலத்திலேயுள்ள சகலகுண சம்பன்னனானாலும் சகல கலாவல்லபனானாலும் சகவாசியாயினும் மற்றெவரானாலும் தங்கள் தனுவுக்குந் தத்துவங்களுக்கு முள்ள தன்மைகளறிந்து தன் வழிப்பட்டு நின்று, தக்கவாறு சாதித்து சாதித்து, உள்ளுணர்வாலொழுகுந் தன்மையை சந்ததம் விருத்திசெய்து, சகதாத்துமாவாகிய பரமான்மாவைத் தனக்குள்ளே கண்டு தெளிவது சத்துவமாகிய பேரறிவு. மற்றையாவும் சிற்றறிவேயாம். என்று தெளி.

(தொடரும்)

பண்டிட். எஸ். கிருஷ்ணசாமி அய்யர்.

சிறுவர் பக்கம்.

"தந்தை தாய்ப்பேண்"

அளவிடற்கரிய பல அண்டங்களையும் அவற்றி லடங்கியுள்ள சர அசரங்கள் யாவற்றையும் படைத்தவர் எங்கும் நிறைந்த சச்சிதானந்த சொரூபியாகிய ஆண்டவனே. ஆயினும் நாம் இவ்வுலகில் உருவமா யுதித்ததற்குப் பிரத்தியட்சமாகிய காரணமா யிருப்பவர்கள் நமது தாயும் தந்தையுமே யாவர். நமது தேகமே அவர்கள் தேகத்தின் ஒருபாகமா யிருக்கிறது. அவர்களுடைய இரத்தமே நமதுதேகத்தில் ஓடுகிறது. அவர்களே இவ்வுலகில் நமக்கு முதற் சுற்றமா யிருக்கிறார்கள். அவர்களே நாம் பிரத்தியக்ஷமாய்க்காணும் தெய்வமா யிருக்கிறார்கள். அவ்வருமை நோக்கியே ஞானமாதாவாகிய நமது ஔவை பிராட்டியார் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். தந்தை நமக்கு போஷகர்த்தாவாயினும் தாயே நமக்காகச் சொல்லொணா கஷ்டங்களை யனுபவித்து குழவிப்பருவம் முதல் சதா நம்மேல் கண்ணோக்கமாயிருந்து, நமக்காகத் தான் பத்தியங்காத்து இராக்கண்விழித்து நம்மைப்போஷித்து வளர்த்தவள். தாயார் நமக்கு ஒருநாள்செய்த நன்றிக்கு நாம் பதில்செய்ய வேண்டுமாயின், பல ஜனனங்களெடுத்து ஆயுள்முழுதும் அவளுக் கடிமையாய்த் தொண்டுசெய்யினும், திரிலோகங்களையும் ஜெயித்து அவற்றை யவளுக்குப் பாதகாணிக்கையாக சமர்ப்பிக்கினும், அப்போதும் அவள்செய்த நன்மைக்கு இலட்சத்தில் ஒருபங்கிற்குக்கூட ஈடாகமாட்டாது என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். முற்றுந்துறந்த மகாஞானியாகிய பட்டினத்தடிகள், திரண்ட செல்வம் உத்தமபத்தினி முதலிய யாவற்றையும் கைவிட்டு உலகநாட்டத்தையே யொழித்தாரேனும், தமது மாதாவிற்குச் செய்ய வேண்டிய கடமையைமட்டும் மறந்தாரில்லை.

கல்வி யில்லாது கஷ்டசீவனம்செய்து அதில் மிச்சம்பிடித்து பிள்ளைக்குக் கல்விகற்பித்து முடிந்தபின் பிள்ளைபாஸ்செய்து ஒரு துரைத்தன உத்தியோகத்தில் அமர்ந்ததே கல்வியில்லாத தகப்பனைத் தனக்குத் "தந்தையென்று ஒப்புக்கொள்ளாமல் "இவர் எங்கள் கிராமத்திலிருக்கிறவர்" என்று ஜாடையாய்க் கூறிவிடுகிறான். அந்தோ! இத்தகைய சண்டாளப்பிள்ளைகள் எத்தனையோ பேர்உளர். பெண்களேனும் மணம் செய்துகொண்டு போகுந்தனிலும் தந்தை தாய்க்குப் பணிவிடைசெய்கிறார்கள். ஆண்மக்களோ கொஞ்சம் வயதுவரு

முன்பே தாயை யலட்சியமாய் நடத்துகிறார்கள். குழந்தைப் பருவமுதல் தன்னை யெவ்வளவோ சிரமப்பட்டு போஷித்துவளர்த்த தாயைத் தான் குடும்பஸ்தனான பின் (வயோதிகமடைந்த தாயை) சற்றேனும் கவனியாது உபேட்சை செய்கிறான். அந்தோ, அக்காலத்தில்தான் தாய் தந்தையர் நமக்குச்செய்த உபகாரத்திற்கு நம்மாலியன்றமட்டும் உபசரித்துப் பதில் நன்றியைச் செய்யவேண்டும்.

தாய் தந்தையருடைய கட்டளைகளை வேதவாக்காய் நினைத்து நடக்கவேண்டும். அவர்கள் கூறும் யாவும் நமது நன்மையைக் கருதியே யன்றி வேறல்ல. அச்சமயம் அக்கட்டளை நமக்குப் பிரியமில்லாததாகவும் கஷ்டமானதாகவும் தோன்றினாலும் முடிவில் அது நமக்கு நன்மையையே பயக்குமென்பதை நாம் உறுதியாய் நம்பவேண்டும். அதைப்பற்றி ஒரு திருட்டாந்தம் கூறி யிதை முடிப்போம். நாம் கூறுவது சிறு கதையாய்த் தோன்றினாலும் அது உண்மையாய் நடந்த விஷயமேயாகும்.

ஒரு ஊரில் ஞானசுந்தரம் என்ற ஒருவாலிபன் இருந்தான். அவனுடைய சிறுவயதிலேயே அவன் தகப்பனார் இறந்துபோகத் தாயாதிகள் அவனுடைய செல்வத்தை யபகரித்துக்கொண்டார்கள். ஆயினும் எவ்வளவு கஷ்டதசையிலிருந்தாலும், அவன்தாய் அவனுக்குக் கல்விமட்டும் கற்பித்தாள். ஞானசுந்தரத்திற்கு 16, 17-வது வயது வந்தபோது கல்வியின் அருமையை யறிந்து இன்னும் அதிகமாய்க் கற்க ஆவலுடையவனானான். ஆனால் அவ்வூரில் உயர்தரக் கல்வி கற்க அனுகூலமில்லை. அதற்காகச் சுமார் 15 நாள் பிரயாண தூரத்திலிருக்கும் இராஜதானி நகரத்திற்குச் செல்லவேண்டும். இடையில் ஓர்பெருங் காடிருப்பதால் வர்த்தகர் கூட்டமாய்ச்சேர்ந்து அந்த நகரத்திற்குச் செல்லும் போதுதான் பிரயாணிகள் கூடச்செல்வது வழக்கம்.

ஞானசுந்தரம் தன் விருப்பத்தைத் தன் தாயிடம்கூறி, அவ்வாறு சென்று கல்விகற்கக் கொஞ்சம் பொருளும்வேண்டுமே, நம்மிடமோ ரொக்கம் ஒரு காசுமில்லையே யென்று வியாகுலப்பட்டான். தாயார் கல்வியில் அவனுக்கிருக்கும் விருப்பத்திற்காக மிக்க சந்தோஷமடைந்து "ஓ என் அருமைப்புதல்வனே! உன்தந்தை யிறந்தவுடனே நீ சிறுவனாயிருந்ததால் தாயாதிகள் வந்து நமது பொருளையெல்லாம் கைப்பற்றிக்கொண்டார்கள். அச்சமயம் நான் அவர்களை யறியாமல் நாற்பது சவரன்கள் மறைத்து வைத்திருக்கிறேன். அதுவே உனக்காக நான் வைத்துக்கொண்டிருக்கும் ஆஸ்தி. நீ யதையெடுத்துக்கொண்டுபோய் கல்வி கற்றுக்கொள்" என்றாள். ஞானசுந்தரன் சந்தோஷமடைந்து சிலதினங்கள் கழித்து சுமார் முப்பது நாற்பது வர்த்தகர் கூட்டமாய்ப் புறப்படும்போதுதானும் அவர்களோடு பிராணப்பட்டு இராஜதானி நகரம்செல்ல ஆயத்தமானான். அவன் தாயார் அந்த நாற்பது சவரன்களையும் அவனுடைய உள் அங்கியின் அக்குளின் கீழ் உட்பக்கம்வைத்து தைத்துவிட்டாள். இதனால் அவனிடம் பணம் இருக்கிறதென்பதே யார்க்கும் புலப்படாது.

கடைசியில் ஞானசுந்தரம் பிரயாணப்பட்டு தன்தாயின் பாதகமலங்களில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து விடையளிக்கும்படி வேண்டிக்கொண்டான். தாயார் அவனுக்கு ஆசிகூறி "அப்பா க்ஷேமமாய்ப்போய் கல்விகற்று நல்ல பண்டிதனாய்த் திரும்பிவா. வழியில் ஜாக்கிரதையாய் நடந்துகொள். நான் பெண்பிள்ளை, உனக்கென்ன அதிகமான புத்திமதிகூறக்கூடும். ஆயினும் ஒன்று மட்டும் கூறுகிறேன். அதை யொருபோதும் உன் உயிருள்ளமட்டும் மறவாதே. அதாவது "என்ன ஆபத்துதான் நேரிடுவதாயினும்சரி, ஒருபோதும் பொய்யாட்டும் கூறாதே, எப்போதும் உண்மையையே மொழி. இதுவேநான் உனக்குக் கூறும் உபதேசம்" என்றாள். ஞானசுந்தரன் அவ்வாறே நடந்துகொள்வதாய் தன்தாய்க்கு வாக்களித்துவிட்டு வர்த்தகரோடு கூடப் பிரயாணப்பட்டான்.

சுமார் ஏழெட்டுநாள் பிரயாணம்செய்தபின் காட்டுவழியில் சென்றுகொண்டிருக்கையில், அந்த வர்த்தகக்கூட்டதார் ஒருநாள் மாலைப்போது ஒருவிடத்தில் இரவைக்கழிக்கத் தங்கினார்கள். அச்சமயம் திடீரென்று சுமார் நாற்பதைம்பது பேர் ஆயுதந்தரித்த கள்ளர்கள் வந்து அவர்களைச் சூழ்ந்துகொண்டு கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். வர்த்தகர்கள் கள்ளரை யெதிர்க்கமுடியவில்லை. ஆகையால் சிலர் கேட்டபோதே தம்மிடமிருந்தவைகளைக் கள்ளரிடம் கொடுத்துவிட்டார்கள் சிலர் அடிவிழுந்தபின் கொடுத்துவிட்டார்கள். ஞானசுந்தரம் வாலிபனானதால் இவனிடம் என்னவிருக்கப் போகிறதென்று ஆரம்பத்தில் இவனை யாரும் நெருங்கவில்லை. கொள்ளைமுடியும் சமயம் ஒரு கள்ளன் அவனிடம் வந்து "அடே சிறுவனே உன்னிடம் பணம் இருக்கிறதா?" என்றான்.

தன் மாதாவின் உபதேசத்தை மறவாத ஞானசுந்தரம் "ஆம் இருக்கிறது" என்றான்.

கள்ளன் எவ்வளவிருக்கிறதென்று கேட்டதற்கு வாலிபன் நாற்பது பவுன் என்றான். அக்கள்ளன் இவன் கேலிசெய்கிறானென்று எண்ணிக் கடக்கச் சென்றான். பிறகு இன்னொரு கள்ளனும் அதன்பிறகு மற்றொருவனும் கேட்டதற்கும் வாலிபன் அவ்வாறே கூறினான். கள்ளர் இந்தப்பயல் பயமின்றி நம்மைக் கேலிசெய்கிறானென்று கோபமடைந்து அவனைத் தங்கள்கூடவே பிடித்துக்கொண்டுபோய், சற்றுதூரத்தில் ஒரு மலைக்குகையிலிருந்த தங்கள் தலைவனிடம் சென்று, கொள்ளையடித்த பொருள்களையெல்லாம் அவன் முன் வைத்தார்கள்.

கள்ளத்தலைவன்:—" இந்த வாலிபன் யார்? இவனை யேன் பிடித்துவந்தீர்கள்?" என்றான்.

கள்ளர்:—" தலைவனே இவனைத் தண்டிக்கவேண்டும். இவன் எங்களைக் கேலிசெய்தான்" என்று நடந்தசங்கதியைக் கூறினார்கள்.

தலைவன் வாலிபனைநோக்கி "உன்னிடம் 40 சவரன்கள் இருக்கின்றது உண்மையா?" என்றான்.

வாலிபன் ஆம் என்றான்.

தலைவன் எங்கே யிருக்கிறதென்று கேட்டதற்கு ஞானசுந்தரம் "என் உட்சட்டையின் அக்குளின்கீழ் வைத்து தைக்கப்பட்டிருக்கிறது" என்றான். தலைவன் உடனே சோதித்துப்பார்த்தபோது அப்படியே யிருக்கக்கண்டு மிக்க வியப்படைந்து வாலிபனைநோக்கி "கள்ளர் அபகரித்துக்கொள்வார்களென்று தெரிந்திருக்க நீ ஏன் உண்மையைக் கூறினாய்?" என்று வினவினான். ஞானசுந்தரம் தன்தாய் கூறியதைக்கூறி "என்தாயார் உபதேசப்படியே நான் உயிருள்ளமட்டும் நடப்பேன்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட கள்ளர்தலைவன் "ஆ! நீ இந்தவயதில் உன்தாய் சொல் தவறாது நடக்கும் உத்தமனாயிருக்கிறாய். நானோ பிறந்ததுமுதல் நீதிகளுக்கு விரோதமாய் நடந்து பாவியாய்விட்டேன். இன்று முதல் நீயே யென் குரு. நான் இனி இக்கள்ளத்தொழிலை விட்டுவிட்டேன். இதுவரையில் என்னிடம் சேர்ந்திருக்கும் பொருளை நீர் பாதகாணிக்கையாக அங்கீகரிக்க வேண்டும்" என்று கூறி அப்போதே தன்கூட்டத்தைக் கலைத்துவிட்டு வர்த்தகரிடம் கொள்ளையடித்த பொருளை யவரவர்களிடம் கொடுத்துவிட்டான். ஞானசுந்தரம் பிற்காலத்தில் ஓர் பெரிய பிரக்யாதிபெற்ற ஞானவானாய்ப் பிரகாசித்தான்.

ஆகையால் நாமும் நமது தாய்தந்தையர் சொல்படி நடந்து ஆண்டவன் அருள்பெற்று நற்கதியடையோமாக. ஓம் தத் ஸத்.

ஸ்திரீகள் பக்கம்

மாதரொழுக்கம்.

கதிரெழுந்திடன்முன் கணவனைத் தொழுதெழுந்தே
இதமுறச்சவுசாதிய விதிவழி யியற்றிப்
பதிநல பெறபற்பல பணியினி தாற்றல்
துதிபுரிந்திடு கற்புடைத் தோகையர் செயலே

(1) என்று கூறியவாறு சூரிய உதையத்திற்குமுன் நித்திரைவிட்டெழுந்து, கணவனை உள்ளன்புடன்வணங்கி, நன்மையுண்டாகும்படி சவுசமுதலிய கிரியைகளைத் தருமநூல்களிற் சொல்லியவண்ண மினிதாகச்செய்து, கணவனுக் கின்பமுண்டாகப் பலவகைப்பட்ட பணிவிடைகளையு நன்மையுடனே செய்தல், யாவருந்தோத்திரஞ் செய்வதற்குரிய மயில்போலுஞ் சாயலையுடைய கற்பிற்சிறந்த மாதர்களது செய்கையாகும்.

(2) குற்றமற்ற கற்பிற்சிறந்த மாதர்கள், அன்புமிகுந்த தங்கள் தங்கள் கணவர்களின் கட்டளையில்லாமல், எவ்வித தெய்வங்களையேனும் வாழ்த்தி வணங்குதலும், தெய்வத்தன்மைபொருந்திய கங்கைமுதலிய புண்ணியநதிகளில் ஸ்நானஞ்செய்ய விரும்புதலும், நன்மையைத்தரும் பலவகைப்பட்ட விரதங்களை யனுஷ்டித்தலும், திருவிழாமுதலிய சிறப்புக்களை மனமகிழ்ச்சியுடன் பார்த்தலுமாகிய விவைகளை யொருபோதுஞ் செய்யார்கள்.

(3) தங்களை விவாகஞ்செய்துகொண்ட நாயகர்களது பொருள் வருவாய்க்குத் தக்கபடி, இல்வாழ்க்கைக்குவேண்டிய எல்லாகாரியங்களையும் அன்புடனே நடத்துகின்ற நற்குண நற்செய்கைகளையுடைய மங்கையர்களே, கற்பிற்சிறந்த உயர்வுபொருந்திய மங்கையர்களாவார்களென்று மேலோர்கள் சொல்லுவார்கள். நற்குணங்களாவன, துறந்தவரையுபசரித்தல், விருந்தாராய்தல், வறியவரிடத்தே யருளுடமை முதலானவையாகும். நற்செய்கைகளாவன, வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து காப்பாற்றிவைத்தல், உண்டிசமைத்தல், உபசாரஞ் செய்தல் முதலானவையாகும்.

(4) மேன்மை பொருந்திய தங்கள் கணவர்கள் புசித்தபின்பே தாங்களினிதாகப் புசித்தலும், கணவர்கள் யாதொரு வருத்தமுமின்றி நித்திரைசெய்தபின்பு தாங்கள் நித்திரைசெய்தலும், கணவர்கள் நித்திரைவிட்டெழுந்திருப்பதன் முன்னமே தாங்கள் நித்திரைவிட்டெழுந்திருத்தலும், கெடுதியில்லாத கற்பினையுடைய மாதர்களது செய்கைகளாகுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

(5) குற்றமில்லாத கற்பினையுமுடைய மாதர்கள், வயதில் முதிர்ந்து நற்குணமமைந்த பெரியோர்களின் துணையில்லாமல் யாதொரு விடத்திற்குந் தனித்துப்போகமாட்டார்கள். தாங்கள் வசிக்குமிடத்தைவிட்டு அன்னியருடைய வீட்டிற் பிரவேசியார்கள். பரிகாசமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார்கள்.

(6) கற்பிற்சிறந்தமாதர்கள், எப்பொழுது மன்புடனே கேட்பவர்களுடைய காதுக்கினிமையைத் தரத்தக்கதான நல்ல வார்த்தைகளையே தங்கள் நாவினாலெடுத்துப் பேசுவார்கள். தங்கள் வீட்டிற்கு வேண்டிய யெல்லாப் பொருள்களையுங் கிரமப்படி சேகரித்துக் கொள்வார்கள். கூடியவரையில் தங்கள் பொருள்களை வீண்விஷயங்களிற் செலவிட்டழிக்கமாட்டார்கள்.

(7) கற்பினையுடைய மாதர்கள், திருமகள் வசிக்குஞ் சிறப்பினையுடைய வுலக்கையின்மீதும், மேலோர்களால் விலக்கப்பட்ட வுரலின்மீதும், அகன்ற

வாயினையுடைய முறத்தின்மீதும், வாயிற்படியின்மீதும், விளங்காநின்ற அம்மிக்கல்லின்மீதும், தங்கி இருந்தால் செந்தாமரைமலரில் வசிக்குந் திருமகள்கடாக்ஷம் விலகுமென்று நினைத்து ஒருபோதுமுட்காரமாட்டார்கள்.

(8) மிகுந்த சிறப்பையுங் கற்பையுமுடைய தெய்வமகளிரையொத்த மாதர்கள், நன்மைபொருந்திய தங்கள் கணவர்கள் மிகவும் மனமகிழ்ச்சியடையும்படி அழகுபொருந்திய ஆடையாபரணமுதலியவற்றால் தங்களை யலங்கரித்துக் கொள்வார்கள். ஆனால் தங்கள் கணவர்கள் பிரிந்திருக்குங்காலத்திற் றங்களை அவ்வாறலங்கரித்துக் கொள்ளார்கள்.

(9) கற்பினையுடையமாதர்கள், தங்கள் கணவர்களுடைய வயதானது குறையுமென்று பயந்து, அவர்களுடைய பெயர்களைத் தங்கள் வாக்கினாற் சொல்லமாட்டார்கள். நற்குண மமைந்த குற்றமற்ற கணவர்களை யிகழ்ந்து, அவர்கள்மேற் குற்றஞ்சொல்லி யலர்தூற்றுகின்ற துஷ்டப்பெண்களுடைய முகத்தையும் பார்க்கமாட்டார்கள்.

(10) குளிர்ச்சிபொருந்திய சொற்களையுடைய கற்பிற்சிறந்தமாதர்கள், தங்கள் தங்கள் கணவர்களுக்கு ஆயுள்வர்த்தியுண்டாகத்தக்க, மிகுந்தவழகைத் தரும் மாட்சிமைப்பட்ட மஞ்சளைத் தேகமுழுமையும் பூசிக்கொள்வார்கள். தன்னை யன்பின் மிகுதியாற் கலந்த நாயகனது மிச்சிலைக்கிடைத்தற்கரிய தேவாமிர்தமென வியந்து அன்புடனே புசிப்பார்கள்.

(11) தம்கணவரையே தெய்வமாகக்கொண்ட கற்பிற்சிறந்தமாதர்கள், ஒப்பற்ற தங்கள் கணவர்களுடைய மனோபீஷ்டங்களை, அவரெடுத்துச் சொல்லுவதன்முன்னமே குறிப்பினாலறிந்து, அவர் மன முவக்கும்படி நடப்பார்கள். குற்றமற்ற தங்கள் கணவர்களுட்கார்ந்திருக்கும்போதல்லாமல், மற்றக்காலங்களிலவருக்கெதிரே யுட்கார்ந்திருக்கமாட்டார்கள்.

(12) கற்பிற்சிறந்த மாதர்கள், தங்கள் கணவர்கள் மிகுந்த அழகில்லாதவராகவிருந்தாலும், தரித்திரத்தாற்பீடிக்கப்பட்டவராயிருந்தாலும், நாளுக்குநாள் விருத்தியாகத்தக்க வியாதியுடையவராயிருந்தாலும், பலவீனராயிருந்தாலும், தகுதியற்ற மூப்பினராயிருந்தாலும், அவர்களைத் தங்கள் வாக்கினால் யாதொரு ப்ழுதுஞ் சொல்லாமல் அவர்களிஷ்டப்படி நடப்பார்கள்.

(13) குற்றமற்ற கற்பிற்சிறந்தமாதர்கள், தங்கள் கணவர் தங்களைக்கோபத்தினால் பலவாரிகழ்ந்து பேசினாலுந் தாங்களதற்கு எதிர்மொழியாக யாதொன்றுஞ்சொல்லமாட்டார்கள். எந்தவிஷயத்திற்கும் தாங்களவர்கள்மேற் கோபித்து அதனால் வருங்குற்றத்திற் காளாகமாட்டார்கள். தம்கணவர் எக்கட்டளையிடினும் அவர்கள் சொல்லி முடிப்பதன் முன்னமே, செய்து முடித்தேனென்று சொல்லி மனமகிழ்ச்சியோடு அவ்வாறே செய்து முடிப்பார்கள்.

(14) கற்பையே ஆபரணமாகப்பூண்ட மகளிர் தங்களை நடத்துங் கணவரது கட்டளைமீறி நடவாதிருத்தலே, இஷ்டதேவதைகளை வழிபடுதலும், பற்பல தருமங்களைச்செய்தலும், நன்மைபொருந்திய தவங்களைச்செய்தலும், பலவிரதங்களை யனுஷ்டித்தலும், எப்போதும் கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்களிற் சென்று ஸ்நானஞ்செய்தலுமாகிய, இந்த சற்கருமங்களையெல்லாஞ் செய்தபலன்களைப் பெறுவார்களென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

(15) கற்புடைய மாதர்கள் கணவரிட்ட கட்டளையின்படி, அவர் நல்ல வழியிற் றேடும் பொருள்களை, வியாதியஸ்தர், தரித்திரர்கள் தங்களுக்கு வேண்டும் பணிவிடைசெய்யுந்தொழிலாளர்கள், முற்றத்துறந்த பெரியோர்கள், குற்றமற்றவிருந்தினர்கள், பிதுர்க்கள் தங்கள் குலதேவதைகள், நீக்குதற்கரிய உறவினர்கள், பசுக்கள், முதலானவர்களுக்கும் இயன்றவரையிற் பகுந்துகொடுத்துத் தாங்களு முபயோகித்துக் கொள்ளுவார்கள்.

(16) கற்பினையுமுடைய பெண்மணிகள் கிடைத்தற்கரிய மேலான தேவாமிர்தத்தையொத்த போசனங்களைப் புசிக்குங்காலத்துந், தங்கள் நாயகர் தங்களை யழைப்பார்களாயின், உடனே அவ்வகைப் போஜனத்தையும்விட்டு அவர்களிடத்திற்குச்சென்று அவர்கள் பணியைச்செய்வார்கள். தங்களை மெய்வருந்திப்பெற்று வளர்த்தமாதா பிதாக்கள், தாங்களன்புடனே பெற்ற புத்திரர்களாகிய இவர்களிடத்திற் றாங்கள் கொண்டிருக்கும் அன்பைப்பார்க்கிலும், கணவரிடத்து மிகுந்த உள்ளன்புடையவர்களாயிருப்பார்கள். (தொடரும்)

என். ஜி. கே. கிருஷ்ண ஆச்சாரி, நாகவனாய்க்கன்பட்டி.

க்ஷயரோகம்.

(112-வது பக்கத்தொடர்ச்சி)

ட்டியூபர்குலோசிஸ் என்னும் க்ஷீணரோகமானது சகல ரோகத்திலும் கொடியது என்று பலரும் உணர்ந்திருந்தபோதிலும் இதுவரையில் அதற்குத் தக்க சிகிச்சைகளை எத்தேசத்தவர்களும் கண்டுபிடித்தார்களில்லை. ஆனால் ஜப்பான் தேசத்தவர்கள் ஏதோ ஒரு ஔடதத்தைக் கண்டுபிடித்து உபயோகித்ததில் சிற்சிலர்களுக்கு குணமாயிருப்பதாயும் இன்னும் அம்மருந்தை சீர்திருத்தி சகல தேசங்களுக்கும் அனுப்பவேண்டுமென்றும் பத்திரிகைகளின் மூலமாய் வெளியாக்கினார்கள். அம்மருந்தின் பெயரும் வெளியாக்கினார்கள். மருந்து தாம்பரம் என்று தெரியவந்தது. அதை அவர்கள் காப்பர்சைனேட் என்று சொன்னார்கள். அம்மருந்து இன்னும்ஜப்பான்தேசத்திலேயே பரீட்சைசெய்யப்பட்டு வருவதால் இதரதேசங்களில் அம்மருந்து வெளியாகவில்லை. என் சிற்றறிவுக் கெட்டியவரையில் தாம்பிரபஸ்பத்தால் க்ஷயம் நீங்குவதற்கு ஏதுவுண்டு என்பதில் சந்தேகமிடையாது. எப்படியெனில் சாதாரணமாய் (ஓமயோபதி) என்னும் மேல்நாட்டு சிகிச்சைகளில் சொல்லுவதாவது, எம்மருந்து என்ன வியாதியை உண்டுபண்ணுகின்றதோ அம்மருந்தே அத்தகைய வியாதியுள்ளவர்களுக்கு உபயோகிக்கப்படலாம் என்று சொல்லுகின்றார்கள். எப்படியெனில் சாதாரணமாய் அபினியின் குணமானது மலபந்தத்தை யுண்டாக்கும் என்பது சகலர்க்கும் தெரிந்த விஷயமே. அப்படியிருக்க மேற்படி சிகிச்சைகளில் மலபந்தமுள்ள புருஷர்கள் குறைந்த அளவு அதாவது 1 குண்டுமணியில் 1000-த்தில் 1 பங்கு உட்கொண்டால் பேதியாகின்றது. அன்றியும் நேர்வாளம் என்னும் மருந்தை 1 குண்டுமணி உட்கொண்டால் அது 15 தரம் பேதியாய்விடுகின்றது. மேற்படி வாளமில்லாமலே 15 தரம் பேதியாகும் புருஷர்களுக்கு 1 குண்டுமணி வாளத்தில் 1000-த்தில் ஒருபங்கு கொடுத்தால் பலத்தை கட்டிவிடுகின்றது. அளவின் நிதானத்தால் குணபேதமுண்டென்று இச்சிகிச்சா முறைகளினால் நமக்கு நன்றாய் விளங்குகின்றது. அதுபோல் சாதாரணமாயிருக்கும் சரீரிகள் தாம்பரபஸ்பம் உபயோகித்தால் லோகசத்திருந்தால் சுவாசப்பை முதலானதுகளை துளைத்துவிடுமென்று பூர்வீகமாய் வழங்கிவருவதால், மேற்படி சிகிச்சாமுறைப்படி சுவாசப்பை முதலானது துளைப்பட்டுள்ள க்ஷயரோகமான வியாதி தாம்பர சம்பந்தமான ஔடதத்தை குறைந்த அளவில் உபயோகித்தால் குணமாகுமென்று கருத இடமிருக்கின்றது. அன்றியும் கதாமூலியமாய் அநேக க்ஷயரோகங்களை தாம்பிர சுன்னம்கொடுத்து குணமாக்கினதாய் கர்ணபரம்பரையாய் கேள்விப்பட்டிருக்கின்றோமல்லவா. (தொடரும்.)

டாக்டர் எம். மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை—நாவல்

(117-ம்பக்கத் தொடர்ச்சி.)

வேலைக்காரர் முன்னிலையில் அரியநாயகி தானும் கமலாம்பாளும் உலவ வந்ததாகவும் அச்சமயம் திரவியசிங்கம்பிரபு திடீரென்று வந்து "என்னைத் துறத்திப் பிடிக்க வருகிறார்கள். மறைவிடங் காட்டுங்கள்" என்று கேட்டதாகவும், அதற்குள் வீரர்கள் வந்துவிட்டதாகவும், அவர்கள் கூடவே முன்பு கமலாம்பாளை மணம்புரிய ஏற்பாடாகித் தவறிப்போன லோகநாயகன் வந்து அவளைப் பலவந்தமாய்த் தூக்கிச்செல்ல முயன்றதால், தான் அவனைச் சுட்டதாகவும் கூறினாள். அவன் கடற்கொள்ளைக்காரன் என்பது வேலையாட்களுக்குத் தெரியாது. ஆகையால் அவள் கூறியதை யவர்கள் நம்பிக் கொண்டார்கள்.

செல்வராயரும் அதைக் கேட்டுக்கொண்டு மௌனமாகவே யிருந்தாரெனினும், அரியநாயகியைப் பிறகு தனியே சந்தித்து, "அரியநாயகி! வேலைக்காரர்களுக்கு நல்ல கதையே கட்டிவிட்டாய். ஆனால் நடந்த உண்மையைப் பிறகு சாவகாசமா யியம்புவா யென்று நம்புகிறேன்" என்றார். அம்மாது ஆகா அப்படியே கூறுவேன் என்றாள்.

பலராமன் இன்னும் ஸ்மரணையற்றிருந்ததால் வேலைக்காரர் அவனையொரு அறைக்கு எடுத்துச்சென்றார்கள். பிறகு நடந்த சங்கதியாவும் அரியநாயகியால் கேள்விப்பட்ட செல்வராயர் தன் புத்திரிக்காகவும் கண்ணபிரானுக்காகவும் மிக்க வருத்தமுற்றார். உண்டான மனக்கலவரத்தால் கமலாம்பாள் அசௌக்கிய முற்றாள்.

14-வது அத்தியாயம்

மறுநாட்காலை கமலாம்பாளுடைய படுக்கை யருகில் அவளுடைய தந்தையும், அத்தையாகிய தங்கம்மாளும், அரியநாயகியும் உட்கார்ந்திருக்கிறார்கள். அப்போது செல்வராயர் அரியநாயகியையும் கமலாம்பாளையும் நோக்கி இப்போது நடந்த சங்கதிகளை யெல்லாம் தெளிவாய்க் கூறினால் கண்ணபிரானுக்கு உதவிசெய்ய வழியிருக்கிறதா வென்பதைப் பற்றி சிந்திக்கலாகும் என்றார்.

கமலாம்பாள் அவ்வாறே பிரபலலிங்கன் என்று மாறுபெயர் வைத்துக் கொண்டிருந்த திரவிய சிங்கம் பிரபு கூறிய சங்கதிகள் யாவும் விவரமாய்க் கூறினாள். அதன்பிறகு அரியநாயகி தான் கூறவேண்டியவற்றைக் கூறி முடித்தாள். கமலாம்பாள் மிக்க கலவரத்தோடு தன் தந்தையை நோக்கி, "அப்பா! கண்ணபிரானைக் காப்பாற்ற ஏதாவது வழி யிருக்கிறதா, இப்போது கூறும்" என்றாள். செல்வராயர் "அவன் என்னதான் குற்றம் செய்திருந்தாகவேயிருந்தாலும் திடீரென்று அவனுக்குப் பிராணபத்தை யுண்டாக்கிவிடத் துணிவார்களென்று நான் நினைக்கவில்லை" என்றார்.

அச்சமயம் அரியநாயகி "ஆ! ஒன்று மறந்து விட்டேன். மாரப்பன் காட்டிலுள்ள வெள்ளைக் குடிசைக்குச் சென்று அங்குள்ள தமது சகோதரர்களுக்கு எச்சரிக்கை செய்யும்படி திரவியசிங்கம் பிரபு கூறியிருக்கிறாரே" என்றாள். அவள் அப்படிக்கூறி வாய் மூடுமுன் தங்கம்மாள் "அரியநாயகம்! நீ கட்டாயம் சென்று அவசியம் அவ்வாறே எச்சரிக்கை செய்யத்தான் வேண்டும்" என்று ஒருவித தீர்மானத்தோடு கூறினாள்.

அரியநாயகி "ஆகா, அப்படியே நான் வாக்குத்தத்தம் செய்து விட்டேன். அப்படியே சென்று எச்சரிக்கை செய்வேன்" என்றாள். செல்வராயர் திரவிய

சிங்கம்பிரபு நமது தேர்ட்டத்திற்குள் வந்து இங்கு சிறையாக்கப்பட்டது ஆபத்தான விஷயம். அது என்னை யெம்மட்டு பாதிக்குமோ கடவுளுக்கேதெரியும்."

தங்கம்மாள்:—"இராஜத் துரோகிகளுக்கு உதவி செய்ததாய் அனுமானிக்கப்படுகிறவர்கள் விஷயத்தில்கூட இப்போதிருக்கும் சட்டம் சொல்லொணாக் கடுகிமயாயிருக்கிறது" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே கமலாம்பாளும் அரியநாயகியும் அச்சம்பவும் நேர்ந்ததற்குத் தாங்களே காரணமென்று தங்களைத் தாங்களே சபித்துக்கொண்டார்கள். செல்வராயர் அவர்களுக்குத் தேறுதல் கூறி "நீங்கள் வேண்டுமென்று இப்படிச் செய்தவர்களல்ல. ஆகையால் அதற்காக நீங்கள் மனம் வருந்தவேண்டாம். என்ன துன்பம் நேரினும் கட்டாயம் கருணாநிதியாகிய ஆண்டவன் காப்பாற்றுவார் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" ஆயினும் இத்தகைய இக்கட்டில் கண்ணபிரானை யெப்படி காப்பாற்றுவதென்று எனக்குப் புலப்படவில்லை" என்றார்.

கமலாம்பாள் இதைக்கேட்டதே திடுக்கிட்டு "அந்தோ! அப்படியாயின் கண்ணபிரான் இறக்கவேண்டுமோ. திரவியசிங்கம் பிரபுவும் மடிய வேண்டுமோ!" என்று பரிதபித்தாள், செல்வராயர் "அந்தோ! என்ன செய்வது!" என்றார்.

அச்சமயம் அருகிலிருந்த தங்கம்மாள் தட்டென்று எழுந்து நிமிர்ந்து நின்று, முகத்தில் ஒருவிதப் பிரகாசம் தோன்றத் தீர்மானத்தோடு "எது வேண்டுமாயினும் செய்தே தீரவேண்டும்." என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே கமலாம்பாள் மனம் பூரிப்படைந்தது. செல்வராயரும் மிக்க வியப்படைந்தார். கமலாம்பாள் "அத்தையே! ஓகோ ஏதோ உளவிருக்கிறது. நீ யிதில் உதவிசெய்வாய் என்று என்மனதில் ஒருவாறு உதித்திருந்தது" என்றாள்.

தங்கம்மாள்:—சும்மா இருக்க வேண்டிய காலம் போய்விட்டது. இதுவரையிலேயே அதிககாலம் சும்மாவிருந்துவிட்டேன். ஆயினும் நான் இனி சும்மா விருக்கமாட்டேன். இன்னும் பரம இரகசியங்களை வெளியிட வேண்டுமாயினும் தடையின்றி வெளியிட வேண்டியதே. அதற்கொரு தடையுமில்லை. இச்சமயம் நான் ஒரு வல்லமையைக் காட்ட வேண்டியதே. இதுகாறும் இருந்ததுபோல் இனி யிருக்கலாகாது. நான் இதெல்லாம் கூறுகிறேன் என்று என்னைப் பைத்தியம் பிடித்தவளென்று நினைக்கவேண்டாம். நான் என்ன செய்கிறேனென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் நான் எதுவும் என் இஷ்டப்படியே செய்வேன். வேளை வருகிறவரையில் என்னை யொருகேள்வியும் கேட்கலாகாது.

தங்கம்மாளுடைய வார்த்தைகளைக் கேட்ட அவள் தமையனான செல்வராயர் தன் தங்கைக்குப் புத்தி தடுமாறி விட்டதென்றே யெண்ணிக்கொண்டு தலையசைத்தார். இதை யறிந்த கமலாம்பாளுக்கும் இந்த நம்பகம் ஒழிந்து விட்டது. ஆனால் அரியநாயகியின் யோசனைமட்டும் வேறுவிதமா யிருந்தது.

தங்கம்மாள் யாவர் கருத்தையு மறிந்துகொண்டு,

"நான் சொல்வதாவது, அரியநாயகி நாளை இராணியிடம் சொல்ல வேண்டும்" என்றாள்.

(தொடரும்)

ஆணி தப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

பிங்களவரு ஐப்பசிமீ சாலிவாகன 1839, கலியுகாதி 5018,
பசலி 1326-27, கொல்லம் 1092-93,
இங்கிலீஷ் 1917-ம்வரு அக்டோபர்மீ—நவம்பர்மீ

அக்டோபர்மீ	ஐப்பசிமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
17	1	புத	பிர-9-10	சுவா-47-14	சித்த 60	தீதாரம்பம் செய்ய
18	2	வி	துதி-10-28	விசா-47-29	சித்த 60	இரவு 4க்குமேல் கன்னி
19	3	வெ	திரி-10-42	அனு-48-29	சித் 48 மர	தனியநாள் [குடிபோக
20	4	ச	சது-9-34	கேட்-46-6	சித்த 60	பாத்திரம் புழங்க
21	5	ஞா	பஞ்-7-13	மூல-46-43	அமிர் 60	கஷ்டி விரதம்
22	6	தி	சஷ்-3-51	பூரா-44-24	சித் 44 ம	கரிநாள்
			சப்-55-46			
23	7	செ	அஷ்-54-39	உத்தி-41-24	சித்த 60	கிருஷிசெய்ய
24	8	புத	நவ-49-55	திரு-38-34	சி 39 மர	ஆயுதபூஜைசெய்ய
25	9	வி	தச-43-22	அவி-33-55	சித் 34 ம	புது ஆபரணம் தரிக்க
26	10	வெ	ஏகா-37-24	சதை-29-45	சித்த 60	சங்குஸ்தாபனம்
27	11	ச	து-31-41	பூரட்-25-45	மர 26 சி	பசுக்களைக் கட்ட
28	12	ஞா	திர-28-29	உத்-21-55	அமி 60	பும்சவனம்
29	13	தி	சது-20-57	ரேவ-18-31	சித்த 60	வியாபாரம் செய்ய
30	14	செ	பௌ10-22	அசு-15-43	சித்த 60	உதயம் ஏர் உழ
31	15	புத	பிர-12-45	பர-13-43	சி 14 அமி	கிருத்திகைவிரதம்
1	16	வி	துதி-7-35	*கார்-10-28	மரண 60	
2	17	வெ	திரி-7-50	ரோக-12-19	மர 12 சித்	விவாக நிச்சயம்
3	18	சனி	சது-8-5	மிரு-14-9	சித்த 60	ஆபரணம் தரிக்க
4	19	ஞா	பஞ்-9-11	திரு-16-43	சித்த 60	கர்ப்பாதானம்
5	20	தி	சஷ்-11-19	புன-20-29	அமி 20 சி	கரிநாள், தனியநாள்
6	21	செ	சப்-14-41	பூச-25-19	சித்த 60	ருதுசாந்திசெய்ய
7	22	புத	அஷ்-18-58	ஆயி-31-6	சித்த 60	ஜெபம் பூர்த்திசெய்ய
8	23	வி	நவ-23-50	மக-37-16	அமி 37 சி	கதிருகளையறுக்க
9	24	வெ	தச-29-51	பூர-43-49	சித்த 60	கிரகபாதை நிவர்த்திசெய்ய
10	25	ச	ஏகா-34-13	உத்தி-49-54	மரண 60	5-க்குள் மழை
11	26	ஞா	துவா-38-45	அஸ்-55-35	அ 56 சித்	புதுபாத்திரம் புழங்க
12	27	தி	திர-42-24	சித-60-0	சித்த 60	நரக சதுர்த்தசி ஸ்நானம்
13	28	செ	சது-45-7	சித்-0-20	சித்த 60	தீபாவளிபண்டிகை
14	29	புத	●அமா46-34	சுவா-3-57	சித்த 60	அமாவாசை, கேதாரீ விர
15	30	வி	பிர-46-28	விசா-6-26	சித்த 60	[தம்

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

3 - DEC 1917 MADRAS

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | பிங்களவரு கார்த்திகைமீ 1உ 1917ம்வரு நவம்பர்மீ 16உ | பகுதி 5

கடவுள் வணக்கம்.

புத்தமிர்த போகமும் கற்பகந னீழலிற்
பொலிவுற விருக்கு மியல்பும்
பொன்னுலகி லயிரா வதத்தேறு வரிசையும்
பூமண்ட லாதிக் கமும்
மத்தமதி யினர்வேண்டு மாலென்று தள்ளவுமெ
மாலுமொரு சுட்டு மறவே
வைக்கின்ற வைப்பானன் மௌனதே சிகனென்ன
வந்தநின் னருள்வாழி காண்
சுத்தபரி பூரண வகண்டமே யேகமே
சுருதிமுடி வான பொருளே
சொல்லரிய வுயிரினிடை யங்கங்கு நின்றருள்
சுரந்துபொழி கருணை முகிலே
சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே
தேடரிய சத்தாகி யென்
சித்தமசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோ மயானந் தமே.

உள்ளமே நீங்கா வென்னைவா வாவென்
றுலப்பிலா வானந்த மான
வெள்ளமே பொழியுங் கருணைவான் முகிலே
வெப்பிலாத் தண்ணருள் விளக்கே
கள்ளமே துறக்கும் தூவெளிப் பரப்பே
கருவெனக் கிடந்த பாழ்மாயப்
பள்ளமே வீழா தெனைக்கரை யேற்றிப்
பாலிப்ப துன்னருட் ப்ரமே.

ஆனந்த போதினி
பிங்களவரு கார்த்திகை மீ 1உ

நாகரீகச் சீர்திருத்தம்.

இப்போது நாகரீகச் சீர்திருத்தம் என்று நாம் கூறத்தொடங்குவது, தற்காலத்தில் நம்மவரிற் பலர் மெய்யான சீர்திருத்தமே யடைகிறோம் என்று மயங்கி அன்னியருடைய ஆபாச ஆசாரங்களைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றி, அதனால் உண்டாக்கிக் கொள்ளும் அவலட்சணங்களில் ஒன்றைப்பற்றியே யாகும்.

நம்மவரில் பலர் இப்போது அனாவசியமாக அன்னிய பழக்கங்களை யனுசரித்து வருகிறார்களென்பது யாவருமறிந்த விஷயம். வாலிபர்கள் தலைமயிரை வெட்டிக்கொண்டு காலர் கழுத்துப்பட்டை காற்சட்டை பூட்ஸ் முதலிய வணிந்துகொள்வதுதான் நாகரீகசீர்திருத்தமென்று கருதுகிறார்கள். அதனால் தாங்களும் சற்றேறக்குறைய ஐரோப்பியராக மாறிவிட்டதாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆனால், அந்தோ பாபம், ஐரோப்பியர் இவர்களைக்கண்டு எவ்விதமாய் மதிக்கிறார்களென்பதை யிவர்களுணர்வதில்லை. இவ்வாறு வேடம் தரித்ததால் இன்னும் மற்ற விஷயங்களிலும் மேல்நாட்டாரைப் பின்பற்றினால்தான் பூரணநாகரீக மடைந்ததாய்க் கருதப்படும் என்றெண்ணி, ஒரு ரூபா ஸிகரெட் டப்பியும் ஒருகாசுக்கு விறகும் ஒரு ஜப்பான் தீக்குச்சிப்பெட்டியும் எப்போதும் ஆயத்தமாய்ச் சேபியில் இருக்கவேண்டியது அவசியமென்று கருதுகிறார்கள். இவ்வாறு இந்த துர் ஆசாரங்கள் விடம் ஏறுவதுபோல் ஏறிக்கொண்டே வருவது மிக்க விசனிக்கத்தக்க விஷயமாயிருக்கின்றன. ஆயினும் இச்சமயம் இவைகளைப் பற்றி அதிகமாய் விவகரிக்க இடமில்லை. இன்னொரு பழக்கம் இப்போது முளைத்து விரைவாய் வளர்ந்து வருகிறது. அதைப்பற்றி கூறவேண்டியது நமது கடமையாகும்.

அது நம்மவர் தங்கள் பெயர்களை அர்த்தமற்ற விதமாய்ச்சுறுக்கி விடுகிறார்களே அந்த விஷயமே. மேல்நாட்டாரைப் பார்த்து இவ்வாறெல்லாம் நமது ஆசாரத்தை மாற்றிக் கொள்வதுதானா நாகரீக

சீர்திருத்தமென்பதை நமது சகோதரர்கள் நன்று ஆலோசிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம். முதலாவது, அவர்கள் பெயரிட்டுக் கொள்வதற்கும், தொன்று தொட்டு நமது முன்னோர்கள் தம் மக்களுக்கு நாமம் சூட்டுவதில் அனுசரித்துவரும் ஆசாரத்திற்கும் உள்ள தாரதம்மியம் என்னவென்று பார்ப்போம்.

மேல்நாட்டாருடைய பெயர்களுக்குப் பெரும்பாலும் காரணமாவது பொருளாவது கிடையாது. பெயரில் இரண்டு வகையுண்டு. இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என்று இரண்டு. அவற்றில் இடுகுறிப்பெயர் என்றால் ஒரு பொருளை யறிந்து கொள்வதற்காக குறிப்பான ஒரு பெயரிடுவது. அதாவது நெல், உப்பு, வேம்பு, வாழை, கந்தன், சாத்தன் முதலியன. காரணப்பெயர் என்பது ஒரு காரணத்தைக் கொண்டு ஒரு பொருளுக்கு அல்லது ஒரு பிராணிக்கு ஒரு பெயரைச் சூட்டுதலாகும். அதாவது கறியன் (கறுப்புநிறமுடையவன்), குள்ளன் (குட்டை யுருவமுடையவன்), நாற்காலி (நான்கு கால்களை யுடையது), அதிமதுரம் (அதிக இனிப்புடையது.) முதலியன. ஐரோப்பியருடைய பெயர்களோ பொருளற்றனவாக அல்லது பலவித தாழ்ந்த பொருள்களை யுடையனவாக விருக்கின்றன. திருட்டாந்தமாய்ச் சிலவற்றை அவற்றின் சொற்பொருளோடு கூறுகிறோம்.

Butler (பட்லர் = முதல் வேலைக்காரன்), Longman (லாங்மென் = நீளமான மனிதன்), Cook (குக் = சமையற்காரன்,) Barber (பார்பர் = க்ஷவரகன்), Cock (காக் = சேவல்), Fisher (பிஷர் = மீன் பிடிப்போன்), Coachman (கோச்மென் = சாரதி), Tailor (டெய்லர் = தையற்காரன்), Goldsmith (கோல்ட்ஸ்மித் = தட்டான்), Kite (கைட் = பருந்து, காற்றாடி), Hill (ஹில் = குன்று), Page (பேஜ் = வேலைக்காரன், கடிதத்தின்பக்கம்), Wood (உட் = கட்டை), Baker (பேகர் = ரொட்டிக்காரன்), Short (ஷார்ட் = குட்டையன்), முதலியவைகளும், சில அர்த்தமில்லாத வார்த்தைகளும், ஊர்களின் பெயர்களுமா யிருக்கின்றன. அவர்கள் தேசாசாரத்திற்கு அது ஒத்திருக்கிறது.

நமது முன்னோர்களோ, ஒவ்வொரு விஷயத்திலும் ஆன்மார்த்தத்தையே மேலானதாய்க் கருதி யிருந்தார்கள். ஆகையால் தம் மக்களுக்கு நாராயணசாமி, கோவிந்தசாமி, இராகவன், இராமன் சுப்பிரமணியன், சிவலிங்கம், சங்கரன், கோபாலன், இலக்ஷ்மி,

சிவகாமி, பார்வதி, கங்காபாய், பத்மாசனி, உலகநாயகி முதலிய கடவுளர் நாமங்களையே சூட்டினார்கள். இன்றும் நமது நாட்டில் அவ்வாறு நாமங்களே பெரும்பாலும் வழங்கி வருகின்றன. ஏன் அவர்கள் அப்படிச் செய்தார்கள்? நமது நாட்டாரும் உலகிலுள்ள மற்ற நாட்டாரைப்போல் உலக விஷயங்களில் ஈடுபட்டிருந்தாலும் மறுமைப்பயனையே முதன்மையாய்க் கருதியவர்கள். அதற்கென்று எண்ணிறந்த நூல்களிருப்பினும் கடவுளை யடிக்கடி சிந்திக்கவேண்டிய வேலையை இலௌகிகத் தொழில்களிலெல்லாம் ஸ்தாபித்திருக்கிறார்கள். "கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்று மூதாட்டியார் அருளினார். பலவிடங்களுக்கு நாம் செல்கிறோம். எந்த வேலையாய்ச் செல்வதேனும் வழியில் ஒரு கோயிலைக்கண்டால் கடவுளை நினைத்து நமஸ்காரம் செய்கிறோம். கோயிலின் மணிச் சத்தம் கேட்கும்போதும், உற்சவம் முதலியவை நடக்கும்போதுண்டாகும் சத்தத்தைக் கேட்கும்போதும் கடவுளை நாம் நினைத்துக் கொள்கிறோம். மரத்தால் செய்யப்பட்ட குதிரையைக் காணும் போது எப்படி உயிருள்ள குதிரையின் நினைப்பு மனதிலுண்டாகிறதோ, அவ்வாறே கோயிலிலிருப்பது கற்சிலை விக்ரகம் முதலியவைகளேயாயினும் அவை அகண்ட பரிபூரண சச்சிதானந்த மூர்த்தியாகிய அக்கருணாநிதியின் நினைப்பை யுண்டாக்குகின்றன. அவ்வாறே மேற்கூறப்பட்ட நாமங்களும் நமக்கு அடிக்கடி ஆண்டவனை நினைப்பூட்ட உதவியாகின்றன. ஒரு வஸ்து அல்லது பிராணியின் பெயரைச்செவியில் கேட்கும்போது, அந்த வஸ்துவை அல்லது பிராணியை மனதில் நினைத்துக் கொள்கிறோம். இன்னும் அதை மனக் கண்ணால் பார்க்கிறோம். வழியில் செல்லும் ஒருவன் தன் புத்திரனை சங்கராவென்று அழைத்தால், அந்த நாமம் நமது செவியில் விழுந்தவுடனே நமக்குச் சங்கரபகவானை நினைப்பூட்டுகிறதன்றோ.

சாதாரணமாய் ஒருவர் இறக்கும் காலத்தில் ஆண்டவனை ஸ்மரிக்க வேண்டுமென்றும், இறப்போர்க்கு அச்சமயம் சக்தியின்றேல் வேறொருவரேனும் அவர்கள் செவியில் ஈஸ்வர நாமத்தையுச்சரிக்க வேண்டுமென்றும் விதியுண்டு. சாதாரணமான ஜனங்கள் இறக்கும் தருவாயில் தாங்கள் அதிக வாஞ்சை வைத்திருக்கும் தம் புதல்வர் பத்தினி முதலியவர்களைப் பெயரிட்டழைப்பதுண்டு. அந்தப் பெயர்கள் ஈசுவர நாமங்களா யிருப்பதால் ஈசுவரனை ஸ்மரிக்கிறவர்களாகிறார்கள். மறந்திருப்பதை நினைப்பூட்டுகிறதாகிறது. ஒரு

ஔடதத்தை நாம் ஔடதம் என்ற நினைப்பில்லாமல் வேறொன்றாய்க் கருதி யுண்டுவிட்டாலும் அது தன் குணத்தைக் காட்டாது விடாது. அதுபோல் எப்படிக் கூறினாலும் ஈஸ்வர நாமம் அடியோடு பயனளிக்காது போகாது.

இத்தகைய பயனுள்ள நாமங்களை நமது முன்னோர் நமக்குச் சூட்டியிருக்க நாம் அதைக்குறைத்துக் கூறுவதே பாபமாகும். கோவிந்தசாமி என்ற நாமத்தை ஆங்கில எழுத்தாகிய 'ஜி' என்ற ஒன்றோடு சாமி என்று கூட்டி ஜி. சாமி என்றால் எவ்வளவு இலக்ஷணக்குறைவாகி விடுகிறது பாருங்கள். ஒரு நண்பர் ம. ஸ்ரீனிவாசன் என்பதை M. S Vasan (யம். யஸ். வாசன்) என்றெழுதுகிறார். இது மிக்க விசனிக்கத்தக்கதே. சிலர் பெயர்களையே யடியோடு விழுங்கிவிட்டு இரண்டொரு ஆங்கில வெழுத்துகளால் முதல் எழுத்துகளைமட்டும் வைத்துக்கொண்டு "எ. டி. யஸ் பிள்ளை" "கெ. யம். அய்யர்" "எ. யன். முதலியார்" என்று இவ்வாறு கையொப்பமிடுகிறார்கள்.

அந்தோ, இதுவும் நாகரீகமாகுமோ! சில உத்தியோகஸ்தர்கள் தினந்தோறும் பலநூற்றுக்கணக்காக கையொப்பமிடவேண்டி யிருக்கிறது. அவர்களும் பெயரைக் குறிப்பாய்க் குறிக்கவேண்டிய சந்தர்ப்பங்களில்மட்டுமே யப்படிச்செய்கிறார்கள். மற்ற விடங்களில் முழுப் பெயரையுமேதான் எழுதுகிறார்கள். இப்போது சிலர் எப்போதுமே மேற்கண்டவாறு இரண்டொரு எழுத்துக்களைமட்டுமே யெழுதும் வழக்கத்தை யனுசரிக்கிறார்கள். இதனால் ஒவ்வொரு சமயத்தில் இது தமது பெயரேயென்று நிரூபிக்க வழியில்லாமற் போய்விடக் கூடும். வேலூர் கோபாலன் என்பவன் ஆங்கிலத்தில் வி. ஜி. என்று எழுதிவிட்டால் வாணியம்பாடி கங்காதரனும், விழுப்புரம் கோவிந்தனும் கூட அது தங்கள் பெயரேயென்று கூறலாம். சஞ்சிகையை யனுப்பும்படி ஒரு நண்பர் அவ்வாறு கையொப்பமிட்டிருந்தார். ஒரு எழுத்து பலபெயர்களைக் குறிக்குமாகையால் தபாலாபீஸில் வி. பி. யை யெடுக்க மறுத்துவிட்டார்கள்.

நண்பர்களே! எல்லாவற்றிலும் நமது பூர்வீக ஆசாரத்தை யலட்சியம்செய்து அன்னிய ஆசாரத்தைக் கைக்கொள்வது நன்மை பயக்குமென்று ஒருபோதும் கருதாதீர்கள். அதிலும் இந்த விஷயத்தில் நன்மைக்குப் பதில்கெடுதியே யுண்டாகுமென்பது திண்ணம். ஒரு செடியை முளையில் கிள்ளிவிடுவதுதான் சுலபம். ஆகையால்

இப்போதே இக்கொடிய வழக்கத்தைக் கைவிடும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். இவ்வேண்டுகோளை யேற்றுக்கொள்ளுமாறு உங்களைத் தூண்டும்வண்ணம் கருணாநிதியாகிய பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் தத் ஸத்.

சசிவர்ணபோதம்

(152-ம் பக்கத் தொடர்ச்சி)

சசிவர்ணா! இங்கு மற்றோர் விஷயம் கவனிக்கத்தக்கது. இச்சாபோக மென்பதேயின்றி, இம்மையிலே இகபோகமென்று கொண்ட இன்றுயில் நித்திரைகொள்ளுவது ஓர் இன்பமெனக் கருதுவதோர் இயல்பாகும். இதன்காரணத்தை இசைந்து நோக்குங்கால் அவ்வின்பமானது இந்திரியங்களின் எழுச்சியின்றி இணங்கி ஒடுங்கிக் கிடப்பதினாலாயதன்றோ. இதனால் இந்திரியங்கள் அடங்குவதே இன்பமான சுகமென்றும் அவ்வாறடங்காதது துன்பமே யென்றும் எவரும் எளிதில் அறியலாகும்.

சாக்கிரக் காலத்தினுங் கூட தம் புலன்களை யடக்கித் தணிந்திருக்கத் தக்க சாதனங்களைக் கொண்டு சாதித்து சாதித்துப் பழக்கப்படுத்தி, தசவாயுக்களையும் ஒன்றுக்கொன்று உராய்ந்து கொள்ளாமலும் மனதை மோதவிடாமலும் ஆங்காங்கே அடங்கச் செய்து, பின்னர் மனதை ஒரு நிலைப்படுத்தி நிலைக்கச் செய்து, யோகத்துயில் கொள்ளும் உத்தம யோகவான்களடையும் இன்பச் சுகானுபவங்களின் அளவை எவ்வாறு கணித்தியம்புவது.

பழகிப் பழகி நெடுநாள் வயப்பட்ட அனுபவங்களின் பேரில் தனித்திருந்து, உண்ணோக்கங்கொண்டு உறங்கி உடலுக் கிறையாகிய உத்தமப் பொருளின்மீது நாட்டம் வைத்து, உண்ணிலையைத் துலக்கித் துலக்கி உற்றுநோக்க மேற்காட்டிய சுகானுபவ இன்பத்தினாற் சிரமந் தோன்றாத முயற்சியின் சத்துவ விளக்கத்தால், மூடுண்ட ஞானக்கண் மிரளப் பெற்று அறிவினுக் கறிவாய் விளங்கி அகத்தூடு வைகும் ஆன்மாவைக் காணலாகும். கவனித்துக்கேள்!

> எப்பொருட் கண்ணு மன்னி யிலங்கிடு மறிவா மீசன்
> அப்படி விளங்கு கின்ற தறிதலே யவன்றனக்கு
> மெய்ப்படு பூசை வேறோர் செயலினாலன்று மெய்யே
> இப்படி ஞானந்தன்னா லிறைஞ்சிடப் படுவானீசன்.
>
> (அறிவானந்த போதம்.)

என்பதும் இப்பரமான்மாவையே. இதுவே தன்னை யறியும் பலவகை மார்க்கங்களில் ஒன்றாகும், இவ்வழியை யறிந்து ஐம்புலன்க ளடக்கி அவ்வாறு நடந்து கொள்ளக் கூடிய

> சுட்டறிவு கெட்டிருக்குந் தூயவர்களானாலும்
> நிட்டையிலே மெய்யறிவில் நேசமுற்றால்—சிட்டருளத்
> தற்புதமா யாடுகின்ற வானந்தப் பேரொளியின்
> தற்பதத்தைப் பெற்றிலார் தான். (அனுபவ சாரவெண்பா.)

ஆகவே ஐயுணர் வெய்தியக்கண்ணும் மெய்யுணர்வு விளங்க நிற்பதே மேம்பாடுடைத்து என்பது விளங்குகிறது. இதனாலே "தன்னை யறிவதே யறிவென்றும் அஃதன்றிப் பின்னை யறிவது பேயறிவாமே" எனப் பேசினர் பெரியோர்.

இன்னொன்று கேள்! பிரம்மம் இரண்டற நின்றது ஒன்றே யென்றும், சீவான்மா வேறு, பரமான்மா வேறு எனப் பகுத்துரைப்பதும், சகம் சீவம் பரம் என மூன்றாகப் பேணுவதும், ஆக இம் மூன்று தன்மைகளில் சகவாசத்திற்குத் தக்கவாறு ஏதேனும் ஒன்று நிழல்போல நீங்காது இதயத்தேயே நிலவி நிற்கும். தன்னை யறியும் பக்குவகாலம் வரை இப்பிடிவாதம் விடாது. தன்னை யறிந்துபார்த்து ஆலோசித்த பின்பே இம் மூன்றிலொன்றோ, இம் மூன்றுங் கடந்ததோ உண்மை யெதுவோ, அது எளிதில் விளங்கிவிடும். மும்மையும் உணர்ந்தோருக்கு உலகாபேட்சை யில்லை. உலகப்பற்றுடையோர் உண்மை இன்னதுதானென்று உணரப் போவதில்லை. இப்பற்றுகளுள்ளவரை உழைப்புதான். இதை யறிந்தே முன்னோர்கள் தவத்தைக்கருதி

> வாணியா சிறைக்குமோர் மலர்ச் செந்தாமரைக்
> காணியார் கேள்வர்க்குங் கங்கை சூடிய
> வேணியார் தமக்குமேல் வீட்டிற் கென்னியல்
> ஊணியால லதவற் கேற்றற் பாலதோ. (பிரபோத சந்திரோதயம்.)

என்று நிச்சயித்து

> கருதுநினை வொழித்தொடுங்கிக் கார்வரையின் முழையிடத்திற் கருங்கற்போல
> நிருவிகற்ப சமாதியினா லெக்கால மசைவற்ற நிலையினிற்ப
> னொருமைபெறு தியானத்தா லிளைப்பாறு மென்னுடைய வுச்சிமீதே
> குருவினங் கூடமைத்துக் குடியிருப்ப தெக்காலங் குஞ்சியாலே
>
> (ஞானவாசிட்டம்.)

எனப் போற்றா நின்றனர்.

தேக அறிவையும் ஏக அறிவையும் பாகுபடுத்திப் பார்க்குங் காலத்திலே பஞ்ச பூதங்களாலாயது தேகமென்று தெரிந்து, அவ

யவங்களையும் காணும் எல்லாப் பறப்பொருள்களையும் தன்னுடையதென்று பாவித்துச் சொல்லுந் தன்மையாலும், தேகம்வேறு ஆன்மா வேறெனத் தெரிந்து தனிப்பட வேண்டியதாகிறது. அவ்வாறு சடமாகிய தேகத்தை வேருகப் பாவித்து விலக்கிக் கருதியபடியே, இதனுட்டனித்தும் சேர்ந்தும் வைகிய இந்தியங்களும் பிறவும் ஒருக்கால் தர்ஞமோவென ஊகித்தறியும் பொழுது, இவ்விந்தியங்களின் முதன்மையான நயனங்கள் சோம சூரியாக்கினிகளின் துணையின்றி சுயமாய்ப் பிரகாசிப்பன வன்று. மற்றைய நான்கும் பொருள்களைக் கொண்டறிவதல்லாது தாமே அறியத்தக்க சக்தியில்லை ஆகவே இந்தியங்கள் நீ யன்று என விளங்குகிறது.

இனி உண்ணும் உணவோ ! முற்கூறு என்புகட்கும், நடுக்கூறு தசைகட்கும், கடைக்கூறு மேற்றோலுக்கும், உபயோகப்பட்டு நிற்பதால், அன்னமும் நீயன்று. கொள்ளும் ஜலமானது முற்கூறு உவர் நீராகவும் நடுக்கூறு உதிரமாகவும் கடைக்கூறு பிராணனுகவும் மாறுதலடைவதால் தண்ணீரும் நீயன்று. பிராணன் வாயு ரூபமானதாலும் துஞ்சும் பொழுது உணர் வின்மையாலும் பிராணனும் நீயன்று.

தத்துவங்கட்கு இனமென்று சொல்லப் படுகிற அந்தக் காரணங்களில் முதன்மையானது மனம், இம்மனம் தேகம் முதலிய சகலமும் தன்னுடையதென்று சாதிக்குந் தன்மை பெற்றுள்ளதாலும், அன்னத்தின் ஒரு பாகமானதாலும் மனம் நீயன்று. ஏனைய மூன்றுங் கருவிகளானதால் அவையும் நீயன்று. உன்னுல் தனுகரண புவன போகாதி சகலமும், ஓர்ந்து எண்ணப்படும் பொருள்கள் யாவும் உன்னுடையதும் அன்று. ஆகவே இத்தேகத்தைப் பற்றிப்

பூதல ரையர் வையம் போய்வர வுற நடாத்துஞ்
சூதனுங் கொருவ னிந்த வுடலெனத் தொகுத்த வையம்
மேதினி யுற நடாத்து மேலவ னொருவ னுண்டால்
ஆதவ னொளியும் போல வறிந்துநீ பிரிந்திடாயே.

(ஆனந்தபோதம்.)

என்று கூறப்படுவதால், இதனினின்றும் வேறுபட்டே பிரிந்திருக்க வேண்டும். பேசுங்காலத்துங் கூட தேகத்தை வேறுபடுத்தியே பேசிவரவேண்டும். இது ஆன்மதத்துவ பாக்கியமென் றறியக் கடவாய் என்றருளியதைக் கேட்ட சீடனுகிய சசிவர்ணன் பணிந்தெழுந்து கேட்பானுயினன். (தொடரும்.)

பண்டிட்-எஸ். கிருஷ்ணசாமி ஐயர்

மாயை..

(111-வது பக்கத்தொடர்ச்சி.)

நாம் அவசியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய உண்மைகள் எவை யெனின்;—

எப்படி கொஞ்சம் இருட்டால் கயிற்றைப் பாம்பாய்க் காண்கிறோமோ அப்படியே மாயையால் கடவுளே எங்கும் நிறைந்திருப்பதாகக் காண்பதற்கு பதில் பிரபஞ்சமாய்ப் பார்க்கிறோம். திருட்டாந்தத்தில் இருட்டிற்குப் பூரணவல்லமையில்லை. இருந்தால் கயறும் அடியோடு தோன்றுதபடி கண்களை மறைத்துவிடும். அதுபோல் மாயையும் அறிவின் கண்ணை யடியோடு மறைக்கமுடியாது. ஆகையால் கடவுள் ஒருவர் உண்டு, நாம் என்ற ஒன்றுண்டு, என்ற சாமானிய ஞானத்தை மறைக்க மாயைக்குச் சக்தியில்லை. ஆனுல் கடவுளின் உண்மையான சொரூபம் இவ்வாறிருக்கிறதென்றும், ஆன்மசொரூபம் இவ்வாறிருக்கிறதென்றும், இவை இரண்டின் ஒற்றுமையிவ்வாறென்றும் தோன்றுது மட்டுமே மறைத்திருக்கிறது.

விளக்கேற்றி அந்த சொற்பஇருளை யொழித்துவிட்டால் எப்படி பாம்பில்லை கயறுதான் இருக்கிறதென்று காண்கிறோமோ, அவ்வாறே முயற்சி செய்து அஞ்ஞானமாகிய இருளை நீக்கிக்கொண்டால், உலகம் பொய்த்தோற்றமென்றும், எங்கும் நிறைந்திருப்பது சச்சிதானந்த சொரூபமாகிய பரம்பொருள் ஒன்றேயென்றும், அன்னியமாயொன்று மில்லவேயில்லையென்றும் அனுபவமாய்க் காணலாம்.

சச்சிதானந்த சொரூபமாகிய பரம்பொருளிடத்தில் மாயையில்லை. மாயை ஆன்மாவின் கண்ணைத் திரைபோல் மறைத்துக்கொண்டிருக்கிறது. பரம்பொருளைவிட்டு வேருகவும் மாயையில்லை. இந்தப் பிரபஞ்சம் தோன்றுவதும் மறைவதும் அப்பரம்பொருளிலேயே. கடலில் அலை, திவலை, நுரை இவை தோன்றி மறைந்தாலும் யாவும் நீர்மயமே நீரையன்றி வேறில்லை. உருவத்தால் மட்டுமே அலை, நுரைமுதலிய பெயர்கள் உண்டாயின. அவை யொழிந்தால் யாவும் நீராகவேதோன்றும். அலை திவலை நுரை இவைகளின் உருவமிருக்கும்போதும் அவைகள் நீரையன்றிவேறில்லை. குடம் உண்டாகுமுன்பும், குடமாய்த் தோன்றும்போதும், உடைந்தபோதும், முக்காலத்தும் இருப்பதுமண்ணே. உருவமும் பெயருமே தோன்றுவதும் மறைவதும். அதுபோலவே பிரபஞ்சம் தோன்றினும் மறையினும் யாவும் பரம்பொருளே. முக்காலமுள்ளது அது ஒன்றே.

மாயை அநாதியே. அதாவது கடவுளைப்போலவும் ஆன்மாவைப்போலவும் எப்போதுண்டாயிற்றென கூறமுடியாது. ஆனுல் கடவுள் அநாதி நித்தியம் மாயை அநாதியெனினும் அநித்தியம் அப்படியிருக்க நித்தியமென்றும் அநித்யமென்றும் போராடுகிறார்களே ஏன், எனில், வீண்போராட்டமே. மாயையழியாததெனில் ஒருவரும் மோக்ஷமடைவதில்லை. ஆனுல் அதிலுள்ள உண்மைப் பொருள் பின்வருமாறு:—

யாரொருவன் மாயையைக்கடந்து விடுகிறானோ அவன்வரையில் மாயையழிந்ததே. ஆனுல் மற்ற பிரபஞ்சமாகிய மாயை யொழிவதில்லை. சுரநோய் நீக்கக்கூடியதே. அதாவது ஒருவனுக்கு சுரம் வந்தால் ஔடதம் கொடுத்து தீர்த்துவிடலாம். ஆனுல் உலகில் சுரநோயே யில்லாமற்போய்விடாது. ஆயினும் சுரத்தைத் 'தீரும்வியாதி' என்கிறோமேயன்றி 'தீராவியாதி' என்பதில்லை. அதுபோல் மாயையும், அநாதியெனினும் அநித்தியமா யொழியத்தக்

கதே. மேல்கூறியபடி மீதியான பிரபஞ்சமாயை யொழியாம லிருப்பதைக் கொண்டு அதை நித்தியமென்று கூறின் வீண் அனர்த்தத்தை யுண்டாக்கும். அதாவது மாயை என்றும் ஒழியாத நித்தியப்பொருளாயின் மோக்ஷமடையப் பிரயத்தனிப்பது வீண் என்ற மயக்கத்தை யுண்டாக்கும்.

மாயையைப் பற்றிய இவ்வளவு உண்மையைமட்டுமறிந்துகொண்டு, அதை நீக்கிக்கொள்ள வழியிருப்பதால், அப்படிச்செய்ய முயலவேண்டியதேயன்றி, அதைவிட்டு மாயையெப்படி எப்போது உண்டாயிற்று என்பது முதலிய வீண் கேள்விகளிலும் வாதங்களிலும் தலையிடுவது ஒருபோதும் ஞானத்தையடைய அனுகூலமாகாது. அதற்கு இடையூறேயாகும். ஒரு திருட்டாந்தம் கூறுகிறோம்:—

பாம்பு விஷஜந்துவென்று தெரியும். வீட்டில் அதைக்கண்டதே தடியெடுத்தடித்துப் போடுவது அல்லது பிடித்துப்போய் காட்டில் விடுவதை விட்டு, முன்னே "வீட்டிற்குள் இது எப்படிவந்தது? எங்கிருந்துவந்தது? இது எந்தப் பாம்பின்குட்டி, பிறந்து எத்தனைகாலமாயிருக்கும்?" என்று ஒருவன் விசாரித்துக்கொண்டிருந்தால் அதற்குள் அப்பாம்பு எங்காவது மறைந்துகொள்ளுமேயன்றி இவன் அந்த ஆபத்திலிருந்து தப்பப்போகிறதில்லை. அதோடு யாவரும் அவன் செய்கையைப் பைத்தியக்காரன் செய்கையாகவும் மூடன்செய்கையாகவுமே மதிப்பார்கள். ஆகையால் மாயையை யொழிக்கும் வழியையே யறிந்து முயலவேண்டும்.

இங்கு ஒருகேள்வி யுண்டாகலாம். அதாவது, மோக்ஷமடையத் தன்னைத் தானறியவேண்டும் என்றும் பிறகு தலைவன் தானே விளங்குவானென்றும் கூறியிருக்க, நேரே பரம்பொருளை யறியும் மார்க்கத்தில் செல்வதைவிட்டு மாயையை யொழிக்க வழிதேடுவானேன்? என்பதே.

ஆனால் தன்னை யறிவதும் மாயையை யொழிப்பதும் இரண்டுமொன்றே. மாயை யொழிந்தால் ஆன்மப்பிரகாசம் தோன்றும். அதாவது ஞானோதயம் உண்டாகும். ஞானோதயம் உண்டாயின் மாயையழியும். ஒன்றின் நீக்கமே மற்றொன்றின் தோற்றம். நாம் சுகத்தை யனுபவிக்க ஒருவிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில், நம்மை அங்கு சேரவொட்டாது செய்யவும் இடைவழியில் மயக்கித் தவறான மார்க்கத்தில்போகச் செய்யவும் எண்ணங்கொண்டு ஒருவிரோதி நம்பின்னால் வருகிறானென்று வைத்துக்கொள்வோம். அந்த விரோதியேமாயை. நாம் திரும்பி அவனை யெதிர்த்து அழித்துவிட்டால், பிறகு அச்சமின்றி நாம் நாட்டங்கொண்ட விடத்தைச் சேரலாமன்றோ. திஷ்டாந்தத்தில் எதிரியை யழித்த பின்பும் நாம் வழியைக் கடந்து செல்லவேண்டிய வேலையிருக்கிறது. தாஷ்டாந்தத்தில் அப்படியில்லை. எந்தவினாடி அந்தஎதிரியை யழிக்கின்றோமோ, அதே வினாடி நாம் நாடிய ஸ்தலத்தை யடைகிறோம்.

ஞான அப்பியாசி நீர்நிறைந்த ஒரு பெரிய ஏரியின் கரைமேல் நின்றுகொண்டிருக்கும் ஒருவனுக்குச் சமமாயிருக்கிறான். அம்மனிதன் கரையின் மேல் நின்று கரையின் பின்பக்கம் அதாவது ஏரியின் வெளிப்புறம் நோக்கினால் கண்ணுக்கெட்டியவரையில் கழனிகளையும் நீர்க்கால்வாய்களையும் கால்நடைகள், உழவோர், கிராமத்தின் வீடுகள், தோட்டங்கள், மனிதர் முதலிய பல வகைப்பட்ட காட்சிகளைக் காண்கிறான். அதைவிட்டு மறுபக்கம் திரும்பிப் பார்த்தாலோ கண்பார்வைக் கெட்டுமட்டும் அகண்டமாய், ஒரே சொரூபமாய், சலனமற்றிருக்கும் நீர்நிலையைக்காண்கிறான். ஏககாலத்தில் இரண்டு புறமும் காணமுடியாது. ஒரு பக்கத்தின் பார்வையை நீக்கினாற்றான் மறுபக்கம் திருஷ்டிக்குப் புலப்படும்.

அதைப்போலவே மாயையைப் யொழித்தால் ஞானம் உதயமாகும். இருளும் ஒளியும் ஏககாலத்தில் தோன்றுவாறு மாயையொழிந்தாலன்றி ஞானம் உதயமாகாது. மாயை நாமரூபத்தோற்றமாகிய உலக உருவமாய் இருக்கிறது. கயறே அரவமாய்த் தோன்றுவதுபோல * சச்சிதானந்த சொரூபமே மாயாசக்தியால் நமக்குப்பிரபஞ்சமாய்த் தோன்றுகிறது. அதாவது சச்சிதானந்த சொரூபம் ஒன்று, பிரபஞ்சம் அல்லது நாமரூபத்தோற்றம் ஒன்று இரண்டே விவகாரத்தில் உள்ளன. ஆனால்

இரண்டும் ஏககாலத்தில் புலப்படா. ஒன்றே மற்றொன்றாய்ப் புலப்படுவதால் நாம் ஒன்றின் நாட்டத்தை விட்டால்தான் மற்றொன்று புலப்படும். அதாவது உலகமாகிய நாமரூப நாட்டத்தைவிட்டால் (பகிர்முக நாட்டம் விட்டு உள்முக நாட்டம்பெற்றால்) சச்சிதானந்தம் தோன்றும். நாமரூபநாட்டம் உள்ளளவும் அது தோன்றாது. உண்மையில் எல்லா வஸ்துக்களிலும் கல்லிலும் மண்ணிலும் நீரிலும் நெருப்பிலும் வானிலும் வளியிலும் மிருகத்திலும் பகுத்தியிலும், மனிதனிலும் எங்கும் உள்ளும் புறம்புமாய் எல்லையற்று ஏகமாய் நிறைந்து நிற்பது அப்பரமானந்த சொரூபமே. சிலவற்றில் நித்திரையிலிருப்பதுபோல் சற்றும் தோன்றாமலும், சிலவற்றில் வளர்தல் அசைதல்மட்டுமாய்க் கொஞ்சம் தோன்றியும், சிலவற்றில் நகர்தல் முதலியவற்றோடு சற்று அதிகமாய்த்தோன்றியும், மனிதனில் பகுத்தறிவோடு பிரகாசித்துக்கொண்டும் இவ்வாறு பல நிலைகளில் விளங்கிக்கொண்டிருக்கிறது.

சகோதர சகோதரிகளே! இவ்வாறு நாமரூப நாட்டத்தைவிட்டால் மாயை நீங்கி சச்சிதானந்தம் தோன்றும் என்று தெரிந்துகொள்கிறமட்டோடு இருந்துவிட்டால் ஒரு பயனுமில்லை. வாயால் அப்படிக் கூறிவிடுவது சுலபமே. ஆனால் நாமரூப நாட்டத்தை யொழிப்பது சுலபமான காரியமல்ல. அசிப்பிணியை யொழிக்கவேண்ணிய ஒருவன் நளவீமபாகசாத்திரத்தைப் படித்து மனப்பாடம் செய்துவிட்டால் பசி நீங்குமோ. முதலாவது அதிற் கூறப்பட்ட பட்டங்களைச் சம்பாதிக்கவேண்டும். பிறகு பக்குவமறிந்து சமைத்துப் புசிக்க வேண்டும். அப்போதுதான் பசி நீங்கும்.

அதுபோல் நாமரூபநாட்டத்தை விடக்கூடிய அப்பியாசங்களைச் செய்ய வேண்டும். முதலாவது மனதிலுள்ள தீயகுணங்களை யொழிக்கவேண்டும். மனம் ஒடுங்கினாலன்றி உலகநாட்டம் ஒழியாது. மனம் எப்போது ஒடுங்கும்? இச்சையற்றால்தான் மனமொடுங்கும். ஏனெனில், மனதின் சம்பந்தமும் தொழிலும் எப்போதும் நாமரூபத்திலேயே. நாமரூபமின்றேல் மனதிற்குத் தொழிலில்லை. மனம் இச்சையினாலேயே நிகழ்கிறது. இச்சையே அதன் சொரூபம். இச்சையே அதற்கு உயிர். மனம் தன்விரோதியை நினைப்பதற்குக்

* சச்சிதானந்தம் என்பது கடவுள் இலட்சணம். அதாவது சத்து + சித்து ஆனந்தம் என்ற மூன்று இலக்ஷணங்கள்.

1. சத்து = எப்போது மழியாது முக்காலத்துமுள்ளது.
2. சித்து = சுயப்பிரகாசமுடையதாய், அன்னியபிரகாசத்தை விரும்பாததாய், தானே யாவற்றையும் பிரகாசிக்கச்செய்வது.
3. ஆனந்தம் = துக்கமற்ற தன்மை.

அக்னியில் சூடு, பிரகாசம், சிவந்தஉருவம் இம்மூன்று இலட்சணங்களும் பிரிக்கக்கூடாவிதமாய் எப்படியிருக்கிறதோ, அப்படியே கடவுளிடம் இம்மூன்று இலட்சணங்களும், ஏகமயமாய் விளங்கிக்கொண்டிருக்கின்றன. சத்தே சித்து சித்தே ஆனந்தம், இதேயவன் சொரூபம். ஆதலால் ஆண்டவன் சச்சிதானந்த சொரூபன் எனப்படுகிறான்.

கூட இச்சையேதான் காரணம். எவ்வாறெனின், நமக்கு விருப்பமான விஷயத்திற்கோ மனிதருக்கோ ஒரு கெடுதியை ஒருவன் செய்தாலே யவனை நாம் விரோதியாய் நினைக்கிறோம். நமக்கு விருப்பில்லாத ஒன்றிற்குக் கெடுதிசெய்தால் அவனைவிரோதியாய் நினைப்பதில்லை. ஆகையால் நாம் விரோதியை நினைப்பதுங்கூடநாம் ஒருபொருளின்மேல் கொண்டிருந்த விருப்பத்தினாலேயே.

ஆகையால் இச்சையற்றால்தான் மனமொடுங்கும். இச்சை யெப்படியறும்? முதலாவது நாமரூபத்தோற்றமாகிய, அதாவது ஒருபெயரை வைத்துக்கொண்டு ஒரு உருவமாய் நமது கண்களுக்குப் புலப்படும் பொருட்களாகிய யாவும் அழியத்தக்கவையே, அதாவது அநித்தியமே என்று சிந்தித்துச்சிந்தித்து அது திடஞானமாய் அடிக்கடி மனதில் உறுத்தும்வண்ணம், அப்பியசிக்கவேண்டும். பிறகு "நாம் பலஜன்மங்களில் இவ்வித அநித்தியமான போகபாக்கியங்களனைத்தையும் அனுபவித்தே யிருப்போம். ஆகையால் இன்னும் அனுபவிக்க வேண்டியது பாக்கியாய் ஒன்றுமே யிராது" என்ற சிந்தனையால் யாவற்றிலும் விரக்தியுண்டாகவேண்டும். அதன்பின் " இந்த நாமரூபமே நாம் பலஜன்மங்களில் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் ஒருவிதகாரணமா யிருக்கிறது. இப்போதும் நாமரூபமாகிய இந்த அசுத்தத்தேக மிருப்பதாலேயே நாம் துன்பமனுவிக்கிறோம்" என்று தேகத்தின் அமைப்பை நன்றாய்ச் சிந்தித்து நாமரூபத்தின்மேல் வெறுப்புண்டாகவேண்டும். அப்போது இச்சையொழியும். தேகத்தை விரோதியாய் உணர்ந்து வெறுப்போடு நோக்கநோக்கத் தேகத்தின் நினைப்பே நழுவிவிடும். எப்போதும் சச்சிதானந்தமயமாகிய ஆண்டவன் ஒருவனே நித்தியமாதலால் அவனிடம்வைத்த பக்தியோடு ஆரம்பமுதல் அப்பியசிக்கவேண்டும். அந்தபக்தியின்றி யொன்றும் கைகூடாது. பகவானிடத்து வைத்த அன்புருவாய் இருப்பவனே இந்த அப்பியாசத்திற்குரியவன். அத்தகையோனுக்கு மேற்கூறிய வண்ணம் இச்சையற்று அவன் தேகநிலையே உண்டில்லையென்று கனவுபோல்நிகழும்போது, நாமரூபநாட்டம் தானேஒழியும். அஃதொழிந்தமாத்திரம் அவன் அன்புருவாய் நிற்க, அதே உருவமாக எங்கும் நிறைந்திருக்கும் சச்சிதானந்தமயம் அவனை விழுங்கிக்கொள்ளும். அவன் நமக்குத்தோன்றுவது சச்சிதானந்த சொரூபம் என்ற முன்னிலையும் விட்டு, தான் என்கிற கொஞ்சம் இருப்பையும் விட்டு, தானே யதுவாய் அதுவே தானாய் ஒரே ஆனந்தமயமாய் விளங்குவான். பிராரப்த அளவின்படி தேகம் விழும்மட்டும் அவன் நம்போல் ஒருமனிதாய்த் தோன்றிக்கொண்டு, நடக்கும் பிணம்போல் திரிந்துகொண்டிருந்தாலும், அவன் ஜீவன் முக்தனே. இத்தேகத்திலிருக்கும் போதே அவன் மோக்ஷானந்தத்தை யனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

ஆகையால் நமதரிய நண்பர்களே! நமக்கு உலகவிவகாரம் எவ்வளவிருப்பினும், நாம் ஒவ்வொருவரும் மாயையை யொழிக்கும் வேலைக்காகவே நமக்கு இவ்வரிய மானிடஜன்மம் அளிக்கப்பட்டதென் றுணர்ந்து அத்தொழிலையே நமது முதன்மையான கடமைத்தொழிலாகக் கருதி, பக்தியோடு அந்த அப்பியாசத்தைச்செய்து கடைத்தேறும் வண்ணம் பரம்பொருள் கிருபைபுரிவாராக.

சீடன்.

ஜீவகாருண்யம்

(145-ம்பக்கத் தொடர்ச்சி.)

சாகபக்ஷணிகளுடைய சரீர அமைப்பில் அவைகள் அரைத்துத் தின்னும் தட்டையான பற்களை உடைத்தானவைகளாயும், எவ்வித பாரத்தையும் சுமக்கும் வன்மையுடையனவைவாயும், தட்டையான குளம்புகளோடும், எளிதில் கோபங் கொள்ளாதவைகளாகவும் உள்ளன. மாமிச பக்ஷணிகளுடைய சரீர அமைப்பில், கூறிய நகங்களும் சந்துவிட்ட பற்களும் நெருப்பைப்போலெரியும் கண்களும் சிறுத்த இடையுமுள்ளன. சிறிதும் கஷ்டத்தைச் சகியாது, அற்பவுழைப்பால் நாக்கைத் தொங்கவிடுகின்றன. பாரம் சுமக்கமாட்டாது சடுதியில் கோபங்கொள்ளத் தக்கவைகளாகவு மிருக்கின்றன.

இவ்விரண்டில், மனிதனை இயற்கையில் எவ்வித பக்ஷணி என்று நாம் நிர்மானிக்கலாம் எனின், சரீர அமைப்பால் சாகபக்ஷணி யெனவே புலப்படுகின்றது. ஆதலால் எவ்விதத்தும் மனிதனுக்கு மாமிச ஆகாரம் தேவையில்லை யென்பது நிரூபிக்கப்படுகிறது. நிற்க, ஜீவனிடத்தில் காருண்யமுள்ளவர்கள், தாம்ஜீவவதைசெய்து புசித்தல்பாவமென அறிந்து, பிறரால்வதைசெய்யப்பட்ட பிராணியின்மாமிசத்தைப்புசிப்பாராயின், அவர்களுக்கு எங்ஙனம் காருண்யமுண்டெனக் கருதலாம். ஆதலால் உயிர்களிடத்துக் காருண்யமுடையவர்கள் எவ்வகுப்பினராயிருந்தபோதிலும், கண்டிப்பாய் மாமிச ஆகாரத்தை நீக்குதல்தான் அவர்களின் முதற்கடமை. அங்ஙனம் நீக்கினாலன்றி அவர்களிடத்து காருண்யமுண்டாகமாட்டா தென்பதும், இகபரசாதனங்கள் எளிதில் கிட்டாதென்பதும் நிச்சயம்.

அன்றியும், நகர்தேவதை குலதேவதை முதலான தெய்வங்களுக்கு ஆடு, கோழி, எருமை முதலியவைகளைப் பலியிடுகின்றார்கள். இங்ஙனம் இடாதவரையில், தங்கள் பூசையை ஏற்றுக் கொள்ளாவென்றும், அதனால் தீங்கு நேரிடுமென்றும் கருதுகின்றார்கள். உயிருள்ள ஜீவனை வதைசெய்ய தெய்வந்தான் சம்மதிக்குமா? இதை அறியாத மூடர்களும் இக்காலத்திலிருக்கின்றார்களே என் செய்வது. எங்ஙனமாயினும் இத்தீய பழக்கத்தையும் அறவே நீக்க முயல வேண்டும். அவ்வாறு நீக்கினாலன்றி அன்னவரிடத்து காருண்யம் உண்டாகாதென்பது சத்தியம்.

மேற்சொன்ன நியாயங்களால், எடுத்துக்கொண்ட ஜீவகாருண்யத்தின் வாதம் ஒரு பாகம் மட்டும் நிரூபிக்கப்பட்டது. ஜீவகாருண்யமானது, மனோதத்துவத்தையே ஆதாரமாகக் கொண்டுள்ள ஒரு பெரும்விஷயமாதலால், மனிதனிடத்து ஜீவர்கள்பால் அன்பும் ஆதரவும் சினேகத்தன்மையும், பரிவும், இருக்கவேண்டி யிருக்கிறது. இவையே முக்திமார்க்க சோபானமுறையில் இரண்டாவது படியாகும். இப்படியில் ஒருவன் முழுதும் தேர்ச்சியடைந்தாலன்றி, முக்திக்கு உரியோனாகமாட்டானென்பது திண்ணம். இவையனைத்தும் மனிதனுடைய முக்திக்குத் தடையாயிருக்கின்ற சுயநயத்தைப் போக்கும் சாதனங்களாவன.

சுயநயத்தை இழந்து பரநயத்தைக் கருதாத ஒருவனுக்கு பரமனருள் ஒரு சிறிதும் உண்டாகாது. பரமென்னும் பதமானது, எல்லாம் அல்லது சர்வம் எனும் தத்துவத்தை விளக்குகிறபடியால், ஒரே ஆன்ம சொரூபத்தை எல்லா உயிர்களுள்ளும் நிறைந்து நிற்கும் ஈஸ்வர சைதன்னியமாக ஒருவன் பார்க்கும் பொழுது, அவன் எந்தப்பிராணி யிடத்துதான் கருணையுள்ளவனா யிருக்கமாட்டான். அவனே மனிதக்கூட்டமெனும் வனத்தில் மலர்ந்த ஓர் சிறந்த புஷ்பத்திற்கு ஒப்பாவான். இவனுக்கு ஜீவபேதமாவது, மதபேதமாவது ஒரு சொற்பமுமில்லை. அவன் வாழ்வு முற்றிலும் உயிர்களின் நன்மைக்கெனவே தியாகம் செய்யப்பட்டுள்ளது. கபீர்தாசர் ஓர் சமயம் மூன்றுநாள் பட்டினி கிடந்து தனக்குக் கிடைத்த ரொட்டியை உண்ணப்போகும் சமயம், ஓர் நாயானது அதை எடுத்துச் சென்றது. இதுகண்ட நம் கபீர் எல்லா ஜீவர்களையும் ஈஸ்வர சொரூபமாகப் பார்ப்பவரானபடியால், அந்த நாயையும் அவ்வண்ணமே

நினைந்து, "ஹே நாராயணா? ஹே நாராயணா? ரொட்டித் துண்டைமட்டும் புசித்தால் உன் தொண்டையில் விக்கிக்கொள்ளும். இதோ நெய்யுமிருக்கிறது" என்று கூவிக்கொண்டே தன்னிடமிருந்த நெய்யையும் எடுத்துக்கொண்டு பின் சென்றார். இது, அவரிடத்திருந்த சர்வத்தையும் ஈஸ்வர சொரூபமாகவே பாவிக்கும் ஜீவகாருண்யத்தை விளக்குகின்றதல்லவா?

ஆனதுபற்றித்தான், நமதருமை ஔவைப்பிராட்டியாரும் "ஈசனெனக் கருதி யெல்லாவுயிர்களையும், நேசத்தால் நீ நினைந்துகொள்" என்று கூறியுள்ளார். எல்லாவுயிர்களையும் ஈசனெனக் கருதும் காருண்யமுடைய மனிதனுக்குக் கவலையில்லை. எல்லாருடைய நன்மையும் அவனுடைய நன்மையாயிருக்கின்றது. பிள்ளைகளுடைய நன்மையை, தாய் தனது நன்மையாகக் கருதுகிறாள். ஆயினும், தான் வேறு பிள்ளைகள் வேறு என்ற எண்ணம் அவளுக்கிருப்பதால், அவளன்பும் பரிபூரண அன்பன்று. எல்லாம் ஒன்று என்று அறிந்த ஞானியின் அன்போ, தாய் அன்பிலும் மேலான அன்பு. ஆதலால் எல்லாம் ஈசன் என்று அறிந்து கொள்வதை விட அன்புண்டாவதற்கு வேறு வழியில்லை. பிறவுயிர்களிடத்து செலுத்தும் காருண்யத்துக்கும் அன்பு தான் முதற்படியாகவுள்ளது. ஒருவனிடத்து மிக்க அன்பு பாராட்டியவன், ஓர் சமயம் அந்த அன்பனுக்கு ஏதேனும் துன்பம் வரக் கண்டவுடனே அத் துன்பத்தினின்றும் காப்பாற்றுவதை நாம் நிதரிசனமாய்க் காண்கின்றோமல்லவா?

நீற்க, இவ்வுலகமெல்லாம் ஒருவனுடைய அழியாவுடம்பாகவும், அவன் இவ்வுலகத்துக் கெல்லாம் அழியாவுயிராகவும் பார்ப்பதில் தீமையுண்டாகுமா? தீமையில்லாத வழியில் நடப்பதற்கு யார்தான் அஞ்சுவார்கள். வேதம் இந்த வுண்மையைத்தான் உரைக்கின்றது. அன்றியும், தேசக்ஷேமத்தின் பொருட்டு சுயநயமிழந்து, பரநயமே மேலெனக்கொண்டு பாடுபடுவதாலும், சர்வத்ர சகோதரபாவமும், அன்பும், வாஞ்சையும் கொள்ளப்பெறுவதாலும் மேற்கூறிய ஈஸ்வர ஐக்யம் எளிதில் உண்டாகின்றன.

தற்கால நிலைமையில் இவ்வித மனோ நிகழ்ச்சியே நம்மவர்கள் ஒவ்வொருவரிடத்தும் உண்டாகவேண்டியிருக்கிறது. ஜீவர்களிடத்து அன்பும் கருணையும் கொள்ளாமலும் அவர்கள் நலமே தன்னலமென்று கருதாமலும் இருந்திருப்பார்களேயானால், நமது மாட்சிமைதங்கிய மகான் காந்தியவர்கள் சிறையகம் புகுந்து அருமையான காரியங்களைச் செய்திருக்க முடியவே முடியாது. அதுபோலவே தம்வாழ்வையும் மனதையும் எப்பொழுதும் ஒருபெரும் ஓயாப்போருக்குள்ளாக்கி தேசகாரிய நிர்ணயங்களை அவ்வளவு விவேகமாமவும், தெளிவாகவும் காலஞ் சென்ற நமது உத்தம கோபால கிருஷ்ண கோகலே அவர்களும் செய்திருக்க முடியவே முடியாது. இவர்களிருவரும் ஜீவகாருண்யமெனும் விஷயத்திற்கு தற்காலத்தில் பெரும் இலட்சியமாக வுள்ளவர்கள்.

ஒரு தேசஜன சமூகத்தின் விருத்தியானது, மூன்று பெரும் விஷயங்களை ஆதாரமாகக்கொண்டுள்ளது. ஒன்று மதவிஷயம், மற்றொன்று ஜனாசாரம், இன்னொன்று இராஜாங்கவிஷயம். இம்மூன்றும் ஒருதேச ஜனசமூகத்திற்கு இன்றியமையாதன. ஆதலின் நாம் இம்மூன்று விஷயங்களிலும் மனச்சாக்ஷிக்கு விரோதமன்னியில், உண்மையோடு நிதானத்துடன் பரநயங்கருதி பாடுபடவேண்டியதே தற்காலத்து நாம் கைக்கொள்ளவேண்டிய ஜீவகாருண்யமாகும். ஜீவர்களுக்கு எக்காலத்திலெது அவசியமோ, அதைத்தெரிந்து செய்வதுதான் உத்தம தருமமாகும்.

சுருங்கச் சொல்லின், ஜீவர்கள் பால் நாம் பாராட்டும் காருண்யமே உண்மையான ஈஸ்வர சேவையாகும். இதுபற்றியே, நம் தாயுமானசுவாமிகளும்,

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்று கூறினார் போலும்.

கோவை-எஸ். சுவாமிநாத முதலியார்.

மானிட வாழ்க்கையே அனித்யமானது.

(Evanescence of Human life).

ஸகலலோக சரண்யனாகிய சச்சிதானந்தப் பரம்பொருளின் மாயா அம்சத்தால் சிருஷ்டிக்கபபட்ட இப் பிரபஞ்சமானது அவர் அவர் கர்மபலன்களுக்கேற்ப ஜீவராசிகளை உடைத்தானதாய் இருக்கிறது.

இத்தகைய ஜீவர்கள் பந்தமென்னும் பாசத்தால் சுட்டுண்டு உலகவாழ்க்கையில் உழலுபவர்களாய் இருக்கிறார்கள். உற்றாரும் உறவினரும் பந்துக்களும் மனைவி மக்களும் மற்றும் வாழ்க்கைக்குரிய பல சாதனங்களையும் உடைத்தான மனிதனானவன் பகுத்தறிவை உடையவனாய் இல்லறமென்கிற பள்ளியில் வாசித்து வருகிறான்.

பள்ளிக்கூடத்தில் படித்துவரும் ஒரு மாணாக்கன் எவ்வாறு தினே தினே வித்தையில் தேர்ச்சி யுடையவனாகின்றானோ அவ்வாறே காரணார்த்தமாக எடுக்கப்பட்ட சரீரத்தையுடைய ஜீவனானவன் பூலோக அனுபவத்திலும் நாளுக்கு நாள் முதிர்ச்சி அடைகிறான்.

இச் சரீரத்திற்கு காரண சரீரமென்று பெயர் வந்தது யாதுபற்றி எனில், பூர்வ ஜன்மாந்திர கன்மபலன்களை நுகர்வதற்கும், வருகிற ஜன்மங்களுக்குரிய கன்ம பலன்களைச் சேகரிப்பதற்கும் ஹேதுவாய் இருப்பதாலேயே இச்சரீரத்திற்கு காரண சரீரமெனப் பெயர் வழங்கலாயிற்று.

இதையும் தவிர, காரண, காம, ஸூக்ஷ்ம மென்கிற மூவகைச் சரீரத்தை கூட நாம் உடைத்தானவர்களாய் இருக்கிறோம். காரண அல்லது ஸ்தூல சரீரமானது ப்ருதுவி அம்சமானதாயும், காம சரீரமானது புவர்லோக அம்சமானதாயும், ஸூக்ஷ்மசரீரமானது ஸ்வர்க்கலோக அம்சமானதாயும் இருக்கிறது.

இத்தகைய சரீரங்களை மேன்மைபெறச் செய்யவிரும்பின் ஸ்தூல சரீரத்தினால் ஸுகர்மங்களையும், ஆசா சரீரத்தினால் நல்ல ஆசைகளையும், ஸூக்ஷ்ம சரீரத்தினால் நல்ல எண்ணங்களையும் உடைத்தானவர்களாய் இருக்கவேண்டும்.

தேஹம்வேறு தேஹிவேறு என்பதை உய்த்துணர்ந்து தேஹம் எத்தகைய நிலையையுடைய தென்பதையும் நன்கறிய வேண்டும்.

தேஹாபிமானம் மேலிட்டு எல்லாவற்றையும் தனதாகவே பாவித்து தானென்ற அஹம்பாவம் மேலிட்டு தன்னிலும் உயர்ந்தோர் இல்லை யெனவே கருதி இறுமாப்படைவதற்காக நாம் பிறக்கவில்லை.

இத்தேஹமானது அனித்யமானது.

பிறக்கும்பொழுதே இறப்பானது கூடவே நிற்கிறது. ஒரு மனிதனுடைய ஆயுளின் நிலை கணக்கிட முடியாததாய் இருக்கிறது.

ஸூர்ய நாராயணனானவர் லோகோப காரார்த்தமாய் பிரகாசிப்பதோடுகூட மனிதர்களின் ஆயுளின் ஒவ்வொரு நாளையும்கூட கணக்கிட்டுக்கொண்டே

போகிறார். "வானதிலிரவியுன்றன் வயதெலாங்கொடுபோகின்றான்..." என்று மேலோ ரருளியிருக்கின்றனர். ஆகையால் நாளுக்குநாள் நம்ஆயுள் க்ஷீணித்துக் கொண்டே போகிறதே ஒழிய வளருகிறதில்லை.

ஆலைவாய்க்கரும்பும் பாம்பின் வாய்த்தேரையும் திரும்பி வருகினும் நம்மில் கழித்த ஆயுளானது திரும்பி வரமாட்டாது.

ஆகையால் எமனோலை வருமுன்னே மரணத்தைக் கோரினவர்களாய் இருக்கவேண்டும்.

ஏன் எனில் " முடிசார்ந்த மன்னரும் பிடி சாம்பலாயினர் " என்றபடி ஊர்முழுமையும் கீர்த்திபெறவே ஆண்ட கோமான்களும் அந்திய காலத்தில் மண்ணுக்கிறையே ஆனார்கள். இதைக்குறித்தே தாயுமானவரும்,

" இன்றைக்கிருந்தவரை நாளைக்கிருப்பாரென் றெண்ணவோ திடம் இல்லையே ; அனியாயமாய் இந்த வுடலை நானென்று வரும் அந்தகர்காளாகவோ " என்றும் கூறி இருக்கிறார்.

இத்தகைய அனித்தியமான சீவன் நம்மிடத் திருக்கையிலேயே நம்மாலியன்றளவு புண்ய ஸத்கர்மங்களைச் செய்து நம்மிடம் பொருளிருக்கும் பொழுதே அருளைத் தேடிக்கொள்ள முயலவேண்டும்.

எங்கனமெனில்

" பொருளிலார்க் கிவ்வுலகமில்லை
அருளிலார்க் கவ்வுலகமில்லை "

என்றபடி அருளை யடையாதவரையில் அவ்வுலகிற்குச் செல்லமுடியாது.

ஆனால் நம் செல்வமோ " நீரின்மேல் குமிழி " இளமை நிறை செல்வம் "நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்" என்றதுபோல் உடனிருந்து உடனே போகக் கூடியது.

ஆகையால் "இப்பொழுது நமக்குக் கொஞ்சம்தான் வயதாகிறது. புண்ய கர்மாக்கள் செய்ய இப்பொழுதே அவசரமில்லை" என்று வெகு சாவகாசமாய் நினைத்துக்கொண்டால், அந்தோ, அந்தகன் ஓலை நாம் அறியாமலே அதி விரைவில் வந்துவிடுகிறது.

ஒருக்கால் அதிக வயது இருந்தபோதிலும் ஜரை என்ற புலி நம்மைக் கண்டுவிட்டால் விடுகிறதில்லை.

அது வந்துவிட்டாலோ மனம் எண்ணியபடி தேகம்நடப்பதில்லை; கால்கள் ஓய்ந்து கண்கள் மங்கி சித்தம் ஸ்வாதீனமில்லாமல் போகின்றது.

சூத்திரக் கயற்றினால் ஆட்டி வைக்கப்படும் பொம்மையானது எவ்வாறு அக்கயறறுந்தால் அசங்காமல் நிற்கிறதோ, அதுபோலவே ஈசனால் ஆட்டி வைக்கப்படும் ஜீவனானவன் ஆயுள் முடியும் காலத்தில் ஒன்றும் செய்யமுடியாதவன் ஆகிறான்.

அதிபால்ய வயதுடையவனும், திடகாத்திர சரீரமுள்ளவனும், பாதுகாக்கப் பத்துப்பேர் உடையவனுமான வாலிபனுக்குச் சுற்றிலும் பந்துக்கள் சூழ்ந்திருக்க எவ்வாறோ எம தூதர்கள் அவனைக் கொண்டுபோய் விடுகிறார்களே !!

அந்தோ, ஆனையுண்ட விளங்கனியில் ஓடு வோடாகவே யிருக்க உள்ளிருந்தது போனவிடம் தெரியாததுபோலவே, ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை உடைய தேகமானது தேஹமாகவே இருக்க, உள்ளிருந்த ஜீவனானவன் போனவிடம் தெரியாமல் நிமிஷத்தில் போய்விடுகிறான். பிரிவு என்கிற வெட்டினால் ஒருதரம் துண்டிக்கப்பட்ட இருதயமானது மறுபடியும் சேர்கிறதில்லை. ஒரு

கட்டாய்க்கட்டப்பட்ட அநேகம் கட்டுமரங்கள் சமுத்திரத்தில் எறியப்படின், கொஞ்சதூரம் சேர்ந்து சென்று ஒரு பெரும்பாறையில் மோதப்பட்டு பிறகு எவ்வாறு தனித்தனியே பிரிந்து செல்லுகிறதோ அவ்வாறே பாசமென்ற கயற்றால் கட்டுண்ட ஜீவர்களானவர்கள், எமனென்ற பாறையில் மொத்துண்டு தனித்தனியே பிரிந்து செல்லுகிறார்கள்.

ஆகையால் பல கஷ்டங்களும் அநேக ஜன்மங்களும் எடுத்ததின் பின் கிடைப்பதற் கரிதாய்ப்பெற்ற இம்மானிட ஜென்மத்தைப் பயன்பெறவே செய்யவேண்டியது மிகவும் அவசியமானது.

அவன் அருளால் அவன்றாள் வணங்கி என்றபடி அவனை வணங்கி, தாயுமானவர் கூறியபடி,

" உன்னை யலங்கரித்து உன் அழகைப்பாராமல்
என்னை யலங்கரித்து இருந்தேன் பராபரமே "

என்றதுபோல் அவனை அலங்கரிப்பதிலேயே மனம் செல்லவேண்டும்.

அதி தீவிரமான ஞானவைராக்கியத்தை அடைந்து, எத்தகைய பரம்பொருளின் அம்ச பூதமாய் ஸ்ருஷ்டிக்கப் பட்டோமோ அத்தகைய சச்சிதானந்த பரபிரம்மத்தை நாடும் வழியை நன்கறிய வேண்டும்.

அம்பாவாணேஸ்வரர், எம். ஏ., பி. எல்., திருச்சினாபள்ளி.

நட்பு.

(130-ம் பக்கத்தொடர்ச்சி.)

துருபத விளவரசன், நான் நகரத்திற்குப்போய் ராஜ்யபரிபாலனம் பண்ணும்போது தங்களுக்கு வேண்டிய உதவிபுரிவேன் தாங்கள் என்னிடம் கொண்ட நட்பை நழுவவிடக்கூடாது என்று துரோணரிடம் சொல்லுவதும், அதைச் செவியுற்ற துரோணர் "நான் எக்காலத்தினும் உன்னை மறவேன், நீ நகரமேகி முடிசூட்டிக்கொண்டால் அந்த அளவற்ற செல்வத்தாற் சூழப்பட்டு என்னைப்போன்ற ஏழைகளை மறந்துவிடக்கூடும், ஆதலால் அந்நினைவு உனக்குத்தானிருக்கவேண்டும்" என உரைத்தலும், அதற்கு அவன் மகிழ்தலும் வழக்கமாக இருந்தது.

இவ்வளவு பற்றுள்ள துருபதன் தான் கற்கவேண்டியவற்றைக் கற்றபின் குருதக்ஷிணைக்கை செலுத்தி குருவினிடம் விடைபெற்று, துரோணரிடத்துள்ள அன்பினால் மறுபடி கூடிப்பிரியேல் என்னும் வாக்கியப்பொருளை யுரைத்து, தன்பட்டிணமேகி சிலநாள் கழித்து முடிசூட்டிக்கொண்டு சர்வமங்களமுமமைய அரசாண்டுகொண்டிருந்தான். துரோணாசாரியார் மணம்புரிந்து அஸ்வத்தாமனென்னும் குழவிச் செல்வமடைந்து அம்மகவுக்குத் தாய்ப்பாலின்றி தவித்து, ஒருபசுவிருந்தால் நன்றென நினைத்து யாரிடம் யாசிப்பதெனயோசித்து, துருபதனிடமே போவோமெனத் தீர்மானித்தார். அவ்வாறே யவர் அவ்வேந்தனையடைந்து, ஹே நண்பா ! நான் ஒருகாரியத்தை முன்னிட்டு உன்னிடம் வந்தேன் என்றார். அதற்கந்நிருபன் " நீர்யார் ? என்ன காரியமாக வந்தீ " ரென, அந்தணர், " நண்பா ! நான் இன்னானென்று உனக்குப் புலப்படவில்லையா ? நாமிருவரும் இளமையில் நமதாசிரியரிடம் கல்வியயிலுங் காலத்தில், "நான் நாடாளுங்காலத்தில் தங்களுக்கு வேண்டிய உதவிசெய்வேன் அளவற்ற செல்வமளிப்பேன். என்னிடத்துள்ள நட்பை மறக்கொணாது என்று நீ உரைக்கவில்லையா ? இப்போது எனக்குச் செல்வ மொன்றும் வேண்டாம். நான்

முளை களிப்படையக் கன்றுட னொருபசுவை யீந்தால் போதுமானது. அதற்கெனவே வந்தேன்" என்றார். இம்மொழியைச் செவியுற்ற இறைவன் முகஞ்சுளித்து தலைசாய்த்து "போம். போம். வேலையிருந்தால்பாரும். நான் அரசன். நீரோ ஏழைப்பார்ப்பான். உமக்கும் எனக்கும் எப்போதாவது நேசம் உண்டா, என்னுடைய ஸ்திதியென்ன? உமது அந்தஸ்தென்ன? நீருரைப்பது வெகு விந்தையாயிருக்கிறதே, தற்காலம் பசுவைக்கவர பாசாங்கு பண்ணுகிறீரோ, அக்காரிய மொன்றும் நடவாது" எனப்பலவாறாக இகழ்ந்து பேசினான். இதைக்கேட்ட துரோணர் அடங்கா வெகுளி கொண்டு, "உனக்கிவ்வளவு கர்வமா? செல்வமே சிவலோகமாய் விட்டதோ?" எனப் பலவாறாக நிந்தித்து "என்சீடனைக்கொண்டு உன்னை யவன் தேர்க்காலில் கட்டிக் கொண்டுவரச்செய்து பங்கப்படுத்தாமற் போனால் நான் துரோணனா" எனச் சபதங்கூறிச்சென்றார். அச்சபதத்தின்படியே அர்ச்சுனனுக்கு வில்வித்தைகற்றுக்கொடுத்து முடிந்தபின், அவன் அவரை நோக்கி குருதக்ஷணை யென்ன வேண்டுமென்று கேட்டபோது, துரோணர் தான்செய்துகொண்ட சப்தத்தைக் கூறி, "ஆகையால் அர்ச்சுன, நீ சென்று அத்துருபதனோடு அமர்புரிந்து அவனை யுன் தேர்க்காலில் கட்டிக்கொண்டுவந்து இராஜசபையில் என்முன் நிறுத்துவாயாயின் அதுவே நீ யளிக்கும் குருதக்ஷணை" என்றார். அர்ச்சுனன் அவ்வாறே செய்து முடித்தானென்பதைப் பாரதத்தில் விரிவாய்க் காணலாம். இக்கொற்றநேசம் என்னநேசம். சிலருக்கப்படித்தான் பணம் பெருத்தால் பிணமாய்த்திரிவது.

வாக்கிருந்தும் மூங்கரையாய் வாய்ந்தமரை போலிலங்கும்
நோக்கிருந்து மந்தகராய் நுண்செவியின்—போக்கிருந்து
மில்லாரா யென்று முயிர்ப்பிணமா யாக்குமே
பொல்லாரே போற்றும் பொருள்.

என்று ஒரு மகான் சொல்லியுளார். ஏனென்றால் செல்வம் பெருகில் தனக்குச் சமானமானவர் ஒருவருமில்லையென்றும், தானே எல்லோரிலும் பெரிய பதவியடைந்தவனென்றும், தனக்கதுவே பிரம்மானந்தமாகவும் தோன்றுவதால், மற்ற ஏழைகள் எவ்வளவு நேசமுள்ளவர்களானாலும், என்னமோ, அற்பரெனமதித்துப் பேசாமலும், கண்டாலும் காணாதவனைப்போலவும், பலாத்காரமாக வார்த்தையாடினாலும் கேளாதவனைப்போலுமிருக்கும் அற்பரைப் பிணமென்பதற்கோரையமுண்டோ. அவ்வுடலில் பிராணவாயுவானது யாத்திரை செய்துகொண்டிருப்பதால் உயிர்ப்பிணம் (நடைப்பிணம்) என்றுரைக்கலாகும். நேயர்களே! இத்தகையாரோடுறவாடுதல் அறியாமையாகும். எவ்வளவு செல்வம் செழித்திருக்கினும் நட்பை நழுவவிடாதிருத்தலே உத்தமம். அதுவே பெருமை. அதுவே யோக்கியம். இதை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே அனுஷ்டித்துக் காட்டியுளார். எப்படியெனின்? கண்ணனும் குசேலரும் தாம் கற்கவேண்டிய எல்லாகலைகளையும் சாந்தீபமுனிவரிடம் கற்று விடைபெற்று தத்தம் இருப்பிடத்திற் கேகிய பின்னர், கண்ணன் ருக்மணியை மணந்து துவாரகையை யடைந்து அளவற்ற செல்வத்தாற் சிறந்து இராஜாதிராஜனாக விளங்கினார். குசேலர் அவந்தியில் சுசீலாவை மணந்து சின்னாளில் மக்கள் இருபத்தேழு பேரை ஈன்று, அதனால் வறுமை மேலிட்டு உண்ணவுணவும் உடுக்கத்துணியுமின்றி மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கத்தான் வழக்கம்போல் வயற்புறங்களில் சிந்திக்கிடக்கும் தானியங்களைப் பொருக்கிக் கொணர்ந்து மனையாளிடம் சேர்த்து, அக்குடிசையினொருபுறத்தில் யோகு செய்திருப்பர். சுசீலாவோ அம்மக்கள் படும்பாட்டிற்குச் சகிக்கமுடியாமல் ஓர்நாள் நாயகனை விளித்து, தன்

மைந்த ரின்னலை வணக்கமாகச்சொல்லி, அதற்கிடையூறாக ஏற்பட்ட முனிவர் மொழிகட்குத் தக்கமாதிரி இன்பமானவார்த்தைகளாடி முனிவர்க்கும் முருந்தனுக்குமுள்ள பால்யநேசத்தை நினைப்பூட்டி, "கண்ணனிடம் சென்று பொருள் பெறாவிடினும் அப்பகவானது தரிசனமாவது கிடைக்குமன்றோ? ஆதலால், நாதா! தாங்கள் தயைசெய்து துவாரகையை யடைந்துவரின் நன்றெனத்தோற்றுகிறது. தங்கள் திருவுள்ளமெப்படியோ?" என உரைக்கச் செவியுற்ற முனிவரும், இளமையிலன்றோ கோபாலனைவிட்டுப் பிரிந்தோம், இப்போது அவரைக் காணுங்காலம் வாய்ந்ததெனக் களித்து, ஆனால் கையுறை வேண்டுமெனக்கேட்டு கந்தையினொருபுறத்தே முடியிட்டுக்கொடுத்த அவற்பொதியுடன் பலவனங்களில் நடந்து கடலையடைந்து எகுதற்கிடைந்து, மாலுமியாற் கடந்து, துவாரகையை யடைந்து, தெருக்கள்தோறும் நடந்து அரண்மனை வாயிலை யடைந்து வாயில் காப்பவரிடம் தன்விஷயத்தையுரைத்தார். அவர்கள் கூடாதெனமறுக்க இவருத்தமரென் றங்கிருந்தோருரைக்க, ஆனாலெங்கள் குற்றத்தை சுவாமிகள் பொறுக்க வெனக்கண்ணனைநாடி வேகமாயோடி தோத்திரம்பாடி வணங்கி ஹே ஸ்வாமி!

ஆதிநாளாயி னின்னோ டார்ந்தகலை கற்றவனுங்
கோதிலா நன்னட்பே கொண்டவனுங்—தீதிலாப்
பண்புடையான் கந்தைகொளும் பார்ப்பான் குசேலனென
மண்பரவுவான் வந்தான் மற்று.

வற்றியெலும் பார்யாக்கை மாதவனின் மேல்வைத்த
பற்றதனை யாமோ பகுத்தறிவோ—மிற்றைநாள்
வந்து திருவாய் வதிகின்றான் மற்றிதுவே
பைந்துளவோ யெம் விண்ணப்பம்.

என்றதைச் செவியுற்ற அந் நிகரற்ற செல்வத்திற் சிறந்த நீலவண்ணன்,

தாயது வருகை கேட்ட தனியிளங் குழவிபோன்று
நேயமிக் குடையோனாகி நெஞ்சினி லுவகை பூப்பப்
போயழைத்திடுமினின்னே போயழைத்திடுமினின்னே, போயழைத்
யென விரைபொருளிற் சொற்றான். [திடுமினின்னே

ஆஹா! என்னநேசம்! என்ன அன்பு! என்னபக்தி! ஹே நேயர்களே! அணுவளவு கர்வமேனும் கண்ணனுக்கிருந்ததாகத் தோற்றுகிறதா? இன்னும் பாருங்கள். இம்மொழியைக் கேட்டவுடனே அவ்வாயில் காப்போர் அதிவேகமாயோடிவந்து அந்தண ரடிகளில் தாழ்ந்து, ஹே, ஸ்வாமி! தாங்கள் விரைந்து உட்செல்லாவிடில் பிரபுவே இவ்விடம் வந்துவிடுவாராதலால் தாங்கள் இக்ஷணமேனுந் தாமதிக்கொணாது எனக் கேட்ட முனிவர் மகிழ்வுடன் மாயவனிருப்பிடத்திற் கேகுங்கால், எம்பெருமான் தன்னிடத்தி லிருக்கப்பொறாமல் சரேலென ஆசனம் விட்டிழிந்து அன்பாயோடிவந்து, ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு

இன்றே சுபதினமா மின்றே சுபதினமா
மின்றே சுபதினமா மென்றனுக்கு—நன்றே
யறம் பலித்த வில்லு மடைந்ததுவே வாழ்வும்
மறம் பறந்த நின்வரவான் மற்று.

இன்னவிதந் தான்புகழ்ந்தே யெம்மான் மறையோனைச்
சொன்னபீ டத்தேற்றித் தூநீராற்—பொன்னவிர

நீராட்டிப் பட்டாடை நேர்பெறவே தானுடுத்திப்
பாராட்டி நின்றான் பரிந்து.

ஆஹா ! என்னநட்பு ! என்னபெருமை என்னவாத்ஸல்யம் ! இம்மட்டிலுமா ?

தும்பை மலரனமே தூவெள்ளி மால்வரையாச்
செம்பொற் பருப்பே சிகரமா—வம்புனலா
நெய்யே கருணை நெடுங்குன்றுத் தான்படைத்தான்
செய்ய சிற்றுண்டி பலசேர்த்து.

உண்டபிறகு,

விரைசேரு நற்சாந்த மெய்யெல்லாம் பூசி
யுரைசேரு மின்சொல் லுரைத்தே—புரைசேரா
மஞ்சத்தே யேற்றி மகிழ்ந்தளித்தான் பாகடையுங்
குஞ்சத்தாற் கால்வீசிக் கொண்டு

இன்னவிதமாயுபசரித்து,

முன்படித்த முதலுன்னை யான் கண்டே
யன்ப நெடுநாட்க ளாயிற்றால்—பின்பு
கலியாணஞ் செய்தனையோ கான்முளைதா னுண்டோ
சலியாமற் றானெனக்குச் சாற்று.

என்றும் இம்மாதிரி பலக்ஷேமசமாசாரங்களையும் எவ்வளவோ அன்போடு அக்கந்தை யுடுத்த வந்தணனைக் கமலக்கண்ணன் வினவி, பால்யநேசமன்றோ, ஆதலின் தின்பண்டமேதாயினும் கொண்டுவந்திருப்பீர் அதைக்கொடுமெனக் கேட்டு, கந்தையில் முடிந்துவந்த அவலிலொரு பிடிஎடுத்து வாயிற்போட்டு, மதுரம், மதுரம், வெகுமதுரமென வவந்தியிற் செல்வம் பெருகும்படி தலையை யசைத்தசைத்து மென்றுதின்று தனது அன்பை வெளியாக்கினார்.

நேசமென்றால் இதுவன்றோ நேசம். இப்படியின்றிச் செல்வம் பெருத்த மாத்திரத்தில், பண்டை யன்பரை யவமதிப்பது மிகவும் அறியாமையாகும். இக்காலத்திலுஞ்சிலர், தங்களுக்கு ஏதாவதோர் உத்தியோகங்கிடைத்துவிட்டால் அதனாலேயே சகல புருஷார்த்தங்களையுந் தானடைந்துவிட்டதாகவும் அதனாலடையுங் கௌரவமே மோக்ஷானந்தமெனவுமதித்து, பழைய நட்பினரைக் கண்டாற் பழிக்குந் தொழிலிற் பழகுகிறார்கள். ஆதலால் நேயர்களே ! இவ்விதமாயிராமல், என்னசெல்வம், என்னபட்டம் வந்தபோதிலும் சமரசமென்பதை மனதிற்பதித்து அன்பரைக்கண்டபோது ஆவலுடன் ஆதரிப்பதனால் சாக்ஷாத் எம்பெருமானது அருள்கிடைக்கு மென்பதற்கோரையமில்லை.

நட்பே திரவியமா நட்பே பெரும்பேறு
நட்பே யிருள்சீக்கு நற்கதிரா—நட்பே
பவமறுக்குங் கூர்வாளாம் பண்புடையார் நட்பே
தவமளிக்குந் தன்மையதாந் தான்.

என்பதையுன்னி நடத்தலே நன்றெனப்பது மேலோரெண்ணம், அதை யனுசரித்தே நாமும் சிறப்படைவோமாக.

ஆ. இராமசாமய்யர்.

வியாபாரம்.

(137-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சில்லரைவியாபாரி ரெயில்வேஸ்டேஷனுக்குப் பக்கத்தில் சுருட்டு பழம் முதலான் சில்லரை சாமான்கள் விற்றுக்கொண்டிருந்தான். அவன் கடைக்குப் பக்கத்தில் இன்னும் நாலைந்து கடைகள் இருந்தன. பக்கத்துக் கடைகளைவிடத் தன் கடையில் வியாபாரம் அதிகமாய் நடக்க ஒரு யுக்திதேடினான். அந்த ஸ்டேஷனுக்கு அநேகர் பைசிக்கிளில் ஏறிவருவது வழக்கம். வாடகைக்கு இடந்தேடி சைக்கிளை வைத்துவந்தார்கள். இந்தக் கடைக்காரன் சைக்கிளைத் தன் கடைக்குப் பின்புறத்தில் சும்மா வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டான். அவர்கள் சிநேகம் இவனுக்குக்கிடைத்ததும் அவர்கள் சுருட்டு முதலானவை வாங்கத் தலைப்பட்டார்கள். கொஞ்சகாலங்கழித்துப் பக்கத்தில் சாராயக்கடை ஏற்படுத்தினான். குடிக்கும் அபிப்பிராயமுள்ள சிநேகிதர்கள் அந்தக் கடையில்வாங்க ஆரம்பித்தார்கள். பிறகு அதற்குப் பக்கத்தில் டென்னிஸ், கிரிக்கட் முதலான பந்து விளையாடுவதற்கு வேண்டிய பாட், பந்து முதலான கருவிகளை விற்கும் கடையொன்று ஏற்படுத்தினான். இவ்விதமாகச் சிறுகச் சிறுக வியாபாரத்தைத் தன் சாமர்த்தியத்தால் விருத்தி செய்தான். ஆகையால் வியாபாரிகளுக்கு விற்பனைச் சாமர்த்தியம் அவசியம் வேண்டும்.

எவ்வளவு சாமர்த்திய மிருந்தபோதிலும், கனவான்களே ! நம்பிக்கையுள்ள வேலைக்காரர்கள் இல்லாவிடில் அக்கடையில்வரும் பிரயோஜனம் யாது? ஆகையால் வியாபாரிகள் கவனிக்கவேண்டியது நம்பிக்கையும் நற்குணமுமுள்ள வேலைக்காரர்களைத் தெரிந்தெடுப்பதே. ஒருவர் தெரிந்தெடுக்கிற வேலைக்காரர்கள் நற்குணம் நல்லொழுக்கம் வாய்ந்தவர்களா வென்பதை ஆராய்ந்தறிய வேண்டும். வேலைக்காரர்கள் நம்பிக்கையா யிருந்தால்மட்டிலுந்தான் வியாபாரம் ஒழுங்காய் நடக்கும். அவ்விதமில்லாவிடில் சொந்தக்காரர் வியாபாரத்தில் நோக்கமுடையவராக விருப்பர். ஆனால் வேலைக்காரர்களோ களவு செய்கின்றார்கள். இஃதவருக்குத் தெரியாது. ஆண்டாண்டுதோறும் கணக்குப்பார்த்தால் வியாபாரத்தில் நஷ்டமேயொழிய வேறில்லை. இவர் நினைப்பது வியாபாரம் சரியாய் நடக்கவில்லை யென்பது. கடைசியில் அவர் தன் தலைமேல் கைவைக்கும்படியாக இந்த வேலைக்காரர்கள் செய்வார்கள். இவ்விதம் அநேகவிடங்களில் நடக்கின்றன. ஆகையால் நம்பிக்கையான வேலைக்காரர்களைத் தெரிந்தெடுத்து அவர்களிடத்திலும் நம்பிக்கையா யிருக்கவேண்டும். வேலைக்காரர்களை நமக்கு அடிமையென்று கருதலாகாது. அவர்களை நம் சிநேகிதர்களென்று கருதவேண்டும். ஒரு இயந்திரத்திற்கு சிறு சாமான்கள் எவ்விதம் அவசியமோ அவ்விதமே ஒரு வியாபாரிக்கும் வேலைக்காரர்கள் அவசியம். ஒரு வியாபாரி நஷ்டமடைவதும் லாபம் அடைவதும் வேலைக்காரர்களாலேயே. நமக்கு அதிக வேலைக்காரர்கள் இருக்கிறார்களென்று கர்வங்கொள்ளலாகாது. அவர்கள் குற்றஞ்செய்தால் தன் சகோதரர்கள் குற்றஞ்செய்ததாக வெண்ணி மென்மொழியால் அவர்களுக்கு நற்புத்தி கூறவேண்டும். மேலும், வேலைக்காரர்களுக்குத் தக்க சம்பளங் கொடுக்கவேண்டும், அவ்விதமில்லாவிடில் எவ்விதமாவது திருட யத்தனம் பண்ணுவார்கள். வேலைக்காரர்கள் ஒழுங்காகவும் மரியாதையாகவும் இருந்தாற்றான் வியாபாரங்களில் தக்க லாபங்கிடைக்கும். வேலைக்காரர்கள் வியாபாரங்களுக்குப் பிரதிநிதி. ஆகையால் வேலைக்காரர்களை நம்பவேண்டும். எவரெவர் எதெதில் சாமர்த்தியமுள்ளவரா யிருக்கின்றாரோ அதில் வேலை கொடுக்கவேண்டும். ஒரு வேலைக்காரன் தன் எஜமானனைவிட

சாமர்த்தியவானாக யிருந்தால் அவனைக்கண்டு பொறாமைகொள்ளாது அவனுக்கு ஊக்கங்கொடுக்கவேண்டும்.

கனவான்களே! விற்பனைச் சாமர்த்தியமிருந்தாலும் போதாது. வியாபாரிக்கு கறார்விலை அவசியம் வேண்டும். கறார் விலை யென்றால் ஒரே விலை (Fixed Price). ஒரே விலைக்கும் பல விலைக்கும் மெத்த வித்தியாசமுண்டு. இதை நமது நாட்டுவர்த்தகர்கள் அறியாதிருப்பது நம்மவர்த்தகர்களின் பெருங் குறைவு. ஒரே விலைவைத்து வியாபாரஞ்செய்வதால் உண்டாகும் பயனை அவர்கள் தெரிந்தார்களில்லை. பல விலை சொல்வதால், வந்தவர்களுக்கு வியாபாரியின் பேரில் அவநம்பிக்கை யுண்டாகிறது. அதனால் வியாபாரங் கெட்டு வரும். ஒரே விலைவைத்து வியாபாரத்தில் கோடிக்கணக்கான திரவியஞ் சம்பாதித்தவர்கள் அநேகர். ஒரேவிலையென்று சொன்னால்மாத்திரம் போதாது, பக்கத்துக்கடையைவிடக் கூடுதலாகவு மிருக்கக்கூடாது. அவ்விதங் கூடுதலாக விருந்தால் கறார் விலை செல்லாது. ஒருவர் கறார்விலைக் கடையில் சாமான் எடுத்து அயற்கடையில் விசாரிக்கும்போது கூடுதலாகவிருக்குமாயின் திரும்ப அக்கடைக்குப் போகார்கள். இது கறார்விலையாகாது. கறார்விலை யென்றால் பக்கத்துக்கடைக்குச் சமானமாகவாவது இருக்கவேண்டும். அவ்வித மிருக்குமாயின் அவர்போர் எங்கும் விளங்கி மற்றக்கடையைவிட அவர்கடையில் அதிக சாமான் செலவாகும். ஆகையால் ஒரேவிலைவைத்து நடத்துவதில் ஒரு குற்றமுமில்லை. கறார் விலையென்று சொல்லி ஒரு ரூபாய்க்கு அரையணா தள்ளுபடியென்பதும் கறார்விலை யாகுமா? ஆகையால் கறார்விலை கறாராகவே யிருக்க வேண்டும். சிலர் ஒரு அணா பெறுமானதை ஒரு ரூபா சொல்லி "உங்களுக்கு இஷ்டமானால் ஒருகாசுக்கு கேளுங்கள் சம்மதம்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதேபொருளை நாலணாவிற்குக் கேட்டுவிட்டால் உடனே வியாபாரி "எந்த ஊரையா நீ? இதுவரை இதைப் பார்த்ததுண்டா? போய்யா போ" என்கிறார். கேட்டவர் வழியேபோகுஞ் சமயம் வியாபாரி "வாய்யா, வாய்யா, போவட்டும் ஐந்தணாகொடுக்கக்கூடாதா" என்று வினவி, கேட்டவனுக்கு முடிவில் நாலணாவுக்கே கொடுக்கிறார். வந்தவர் அடுத்தகடையில் விசாரிப்பாரானால் மறுபடி அக்கடைக்குப் போகார் என்பது உறுதி.

ஆகையால் வர்த்தகசிகாமணிகளே! ஒரே விலைவைத்து வியாபாரஞ் செய்தால் அதிக வேலைக்காரர்கள் வேண்டாம். ஒரு குழந்தைகூட வியாபாரஞ் செய்யலாம். ஆகையால் அந்த வைராக்கியத்திலேயே உங்கள் மனதைச் செலுத்துங்கள். இன்றுமுதல் ஒரே விலையென்று உறுதிப்படுத்துங்கள். யான் சிறுவனாயினும் எனது அபிப்பிராயத்தைச் சற்றுத் தயைகூர்ந்து கேட்டு அதன்படி தாங்கள் நடந்து அதில் கிடைக்கிற லாபத்தைச் சற்று கவனியுங்கள்.

கனவான்களே! தபால்மூலமாயோ ரெயில்வேமூலமாயோ பொருள்களை விரும்பினால் என்செய்வீர்களோ! உங்கள் செலவுகளை எவ்விதம் திட்டம்செய்கிறீர்களோ அவ்விதமே நீங்கள் விரும்பும் லாபத்தையும் ஒரு திட்டமாய் ஏற்படுத்துங்கள். அதனால் வரும் பலவித லாபத்தையும் அனுபவத்தில் கண்டு கொள்வீர்கள். எந்தப்பொருள் அதிகமாய் விரும்பப்படுகிறதோ அதற்குரிய லாபத்தைச் சற்றுக்குறைத்துவிடுவோமாயின் அதிக விற்பனையாகும். எவ்வளவுக்கு அதிக விற்பனையோ அவ்வளவுக்கு லாபமும் அதிகம். இதற்கோர் உதாரணங் கூறுவேன். ஒருவன் நூறு ரூபாய் விற்பனையாகும் பொருள்களில் பத்து ரூபாய் லாபம் அடைந்தான். அதே சாமானை சற்று விலை குறைத்து விற்றால் இருநூறு ரூபாய்க்கு விற்பனையாகிறது. அதினாற்கிடைக்கும் லாபம் பதினைந்து ரூபாய். இதனால் எது மேலென்று சற்று கவனியுங்கள். திட்டமாய்

இரண்டாவது விற்பனையே அதிக லாபமென்று அறியவேண்டும். இதனால் போட்டிகளுக்காக மற்றக் கடைகளிலிருந்து லாபத்தைக் குறைத்துவிடக் கூடாது. வியாபாரத்தில் ஒற்றுமையாயிருப்பது மிகுந்த நன்மைதரும்.

வியாபாரஞ் செய்யுமுறையைப்பற்றி முன்னுஞ் சொல்லியிருக்கின்றேன். இன்னுமொரு நன்முறையுண்டு. அஃதாவது விளம்பரம் (Advertisement). இது வியாபாரத்திற் கின்றியமையாதது. "குமஸ்தாவின்றி தன் வியாபாரத்தை எப்படி நடத்தமுடிகிறதில்லையோ அப்படியே விளம்பாமின்றி வியாபாரஞ் செய்ய முடிகிறதில்லை" என்று ஒரு ஆங்கில வியாபாரி எழுதுகிறார். விளம்பாரஞ் செய்வதில் ஒருவித்வத்தன்மை வேண்டியது விளம்பாரஞ்செய்வது. மேல் விலாசமாத்திரம் தெரிவதற்காக வன்று. யாவர்க்கும் எளிதில் புலப்படும்படியாகவும் நன்கு மனதிற்படும்படியாகவும் உற்சாகங் கொடுக்கும்படியாகவும் இவ்விதமாக உள்ள விளம்பாரஞ் செய்யவேண்டும். பிரசித்திபெற்ற பத்திரிகைகளிலேயே பிரசுரம்செய்வது நன்று. முதல்வார்த்தையும் நல்வார்த்தையாக தலைப்பில்வைத்துப் பிறகு விஷயத்தை வெளியிடல்வேண்டும். விளம்பரம் செய்தவுடனே கைமேல் பலன்கிடைக்குமென்று நம்பியிருத்தல் கூடாது. ஒருமாசம் விளம்பரம் செய்துவிட்டு அதற்குள்ளாக ஆர்டர் வரவில்லையென்று விளம்பரத்தை நிறுத்திவிடுகிறது கூடாதகாரியம். ஏறக்குறைய ஒருவருடம் தொடர்ந்து விளம்பாரஞ் செய்யவேண்டும். விளம்பரத்தால்வரும் பலன் பெரிது. இப்போது அனேகர் விளம்பாரஞ் செய்கின்றனர். பேரும் மிக்க நேர்த்தியாய் தலைப்பில்வைத்து ஒருசாமான்வாங்கினால் இனும் சாமான்கள் கிடைக்குமென்று விளம்பரம் இரண்டரை ரூபா விலையுள்ள ஒரு கெடியாரம் வாங்கினால் ஒரு பௌண்டன் பென் (Fountain Pen), ஒரு சீப்பு முதலிய சாமான்கள் இனாமாக அனுப்பப்படும் என்று விளம்பாரஞ் செய்யப்படுகிறது. ஆனால் அவர்களிடத்திலிருந்து சாமான் வருவிப்போமாயின் பெரும்பாலும் அதிருப்தியாகவேயிருக்கும். முதற்றடவை வாங்கினவன் மறுபடி வாங்கமாட்டான். இப்பேர்க்கொத்த வியாபாரிகளுக்கு என்ன சித்திபெறும். ஆகையால் விளம்பாரஞ் செய்தாலும் போதாது. நம்பிக்கையாய் சாமான் அனுப்பப்படவேண்டும். நம்பிக்கையில்லாவிடில் விளம்பாரஞ்செய்வது யாது பிரயோஜனம். இவ்வாறு விளம்பரம் செய்து வியாபாரத்தை விர்த்தி செய்யவேண்டுமாயின் கறார் விலை யேற்படுத்த வேண்டியது அவசியம்.

A. S. முத்தப்ப முதலியார், கோட்டார்.

ஆன்றோர் வாக்கியங்கள்

(1) ஒருவனுடைய உள்ளத்தைக் கண்ணாடிபோற் காட்டுங்கருவி அவனுடைய பழைய நண்பனேயாகும். (அதாவது ஒருவனுடைய பழைய நண்பனின் குணத்தை யறிந்தால் அவன் குணத்தை யறிந்த மாதிரியே.)

(2) பொன் (பணம்) பேசும்போது எல்லார் வாய்களும் மூடிக்கொள்ளும்.

(3) தற் பெருமைக்காரர்கள் எல்லோரிலும், தன் குலப்பெருமையைக் கூறிக்கொள்பவனே முழுமூடனாகும்.

(4) மரணம் ஒரு பிரகாசமான விடத்திலிருந்து மற்றொரு பிரகாசமான விடத்திற்குச் செல்லும் பாதையிலுள்ள ஓர் இருண்டபாலம் போன்றதேயாகும்.

(5) பாதி மெய்போலத் தோன்றும் பொய்யே மிக்க ஆழ்ந்த பொய்

யாகும்.—சினேகன்பேல் அபிநயிக்கும் விரோதியே அஞ்சத்தக்க கொடிய விரோதி.

(6) அன்பே கடவுளாகும். அன்புருவா யிருப்பவன் கடவுளிலிருக்கிறான், கடவுள் அவனில் இருக்கிறார்.

(7) நீ கடவுளின் கோயிலென்பதையும் கோயிலாகிய உன் உள்ளத்தில் கடவுள் வசிக்கிறாரென்பதையும் அறிந்துகொள்—அதை யெப்போதும் மறவாதே.

(8) ஒரு காரியத்தைச் செய்யும்முன் எப்போதும் உன்னைவிட்டுப் பிரியாதிருக்கும் உண்மைத் தோழனாகிய 'மனச்சாக்ஷி' என்பவனுக்கு அது சம்மதமாவென்று கேட்டுச்செய்.

அன்னியபிராணிக்கு (மனிதனாயினும் எந்தப் பிராணியாயினும்) ஒன்றைச் செய்ய நீ விரும்பினால், நீ அவனுக்குச் செய்ய விரும்புகிற மாதிரியே அவன் உனக்குச் செய்தால் உனக்குச் சந்தோஷமாயிருக்குமாவென்று யோசித்துப்பார். சந்தோஷமே யென்று தோன்றினால் செய், இன்றேல் செய்யாதே. இவ்விதியை யனுசரித்து நடந்தால் ஒருபோதும் பாபம் உன்னைச்சேராது.

(9) தனக்கிருக்கிற நல்ல பதவியைப்பற்றி ஒருவன் பெருமை பாராட்டிக் கொண்டால், கடவுள் நாம் இவனுக்கு ஏன் இப்படிப்பட்ட பதவியளித்தோமென்று வெட்கமடைவாராம். (அதாவது தன் செல்வ நிலையைப்பற்றி பெருமை பாராட்டுகிறவன் கடவுளருளை யிழந்து விடுவான்.)

(10) கடவுள் மனிதனைப் பார்த்துக் கூறுகிறார்—"நான் உனக்கு வருத்தத்தை யளிப்பது உன்னைச் சுகப்படுத்த—விசுவாசங் காட்டுவது தண்டிப்பதற்காக"

ஆ. கு.

உண்மை நீதித் துண்டுகள்.

(118–ம் பக்கத் தொடர்ச்சி.)

(8) பூதவுடம்பு அழியவும், புகழுடம்பு அழியாது என்றும் நிலைபெறுதலால் புகழ்பெறுதல் சிரஞ்சீவியாய் வாழ்தற்குச் சமானம். அதாவது ஒருவன் பெயர் அழியாது புகழினால் உலகத்தில் வழங்குகின்றவளவும் அவன் நிலைபெற்று வாழ்பவனாவன். ஆனதுபற்றி இந்நிலத்துமன்னுதல் வேண்டின் இசைநடுக. புகழ்பெறாதவன் உயிருடனிருந்தும் இறந்தவனோ டொப்பன்.

(9) தானே ஆராயவல்லவனா யிருந்தாலும் ஆலோசனையில் தேர்ந்த துணைவருடன் இருந்து ஆராய்தல் சிறந்ததென்க. இலாப நஷ்டங்கள் முதலியவற்றை நன்றாக ஆராய்ந்து தொழில் செய்பவருக்கே காரியம் சித்தித்தலால், நல்வாழ்வு வாய்க்கும். "தூக்கி வினைசெய்" "துண்ணிய கருமமு மெண்ணித் துணி" என்றார் ஔவையாரும்.

(10) கற்றுணர்ந்தவரைப் பொருளை முதலியவற்றால் அறியாதவரென்று இகழாமற் புகழ்வதும், உற்ற உறவினரை அனுகூலரல்லாதவரென்று நினையாமல் தழுவுதலும், இல்லற வாழ்க்கையை நீத்தவர்களான சந்யாசிகட்கு உணவும் உறைவிடமும் உடையும் கொடுத்து அவர்களை ஆதரித்தலும், ஆகிய இந்த நல்லியற்கைகள் கல்வித் தேர்ச்சியின் பயனாதலால் இவற்றை யுடையவரே பண்டிதரென்று கொண்டாடப்படுவரன்றி, வெறுங்கல்வி கற்ற மாத்திரத்தால் அதற்கு ஏற்ற இவ்வொழுக்கமில்லாதவர்கள் பண்டிதர் என்று புகழப்படார்.

(11) மனவொற்றுமையே சிநேகத்திற்கு முக்கியகுணம். "புணர்ச்சி

பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்—நட்பாங்கிழமை தரும்." "மனத்தினமையாதவரை யெனைத்தொன்றுஞ்—சொல்லினாற் றேறற்பாற் றன்று."

(ஒருவரோடு சினேகம் செய்வதற்கு, அவர்களோடு ஒரேவிடத்திலிருக்க வேண்டுமென்றும் அடிக்கடி பழகவேண்டுமென்றும் அவசியமில்லை. மனமொத்த அறிவே சினேகமாகும் உரிமையைக் கொடுக்கும்—மனமொத்திராதவரை எந்த கருமத்தாலும் எந்த சொல்லாலும் தெளிவித்தலாகாது என்பது பொருள்.) (தொடரும்.)

கு. ப. அ. க. சதாசிவம்பிள்ளை, அம்மனூர்.

அறம்.

(143–ம் பக்கத்தொடர்ச்சி)

முற்கூறிப் போந்த வில்லறநெறியொடு முற்று மாறுபட்டொழுகு மற்றோர் நெறியுமுளதாம். அஃதெதனாற் பெறப்படுமெனின்,

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று
அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.
இல்லற மல்லது நல்லற மன்று."

எனப்போந்த வாப்தவாக்கியங்களுள் "அஃது" என்ற சுட்டுச்சொல்லானும், "புறத்தாறு" என்ற பிறிதுகூறுமொழியானும், "அல்லது" என்ற எதிர்மறைக்கிளவியானும் குறியாக்கப்பட்டதனாற் பெறுதுமென்க. அங்ஙனம் பெறப்பட்டவறமே துறவறமெனப்படும். "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்" "துறந்தார்க்குத் துறப்புரவுவேண்டி" "வேண்டினுண்டாகத்துறக்க" "தலைப்பட்டார் தீரத்துறந்தார்" எனப்போந்தவற்றானும் பிறவாற்றானும் துறவறமெனத் துணியப்பட்டதாமென்க.

இங்ஙனந் துணியப்பட்ட துறவறம் ஒப்புயர்வற்ற நெறியென்க. எனதென்னும் மனைவி மக்கள் பசு மனை செல்வ முதலிய புறப்பற்றுகளையும், யானென்னு மகப்பற்றையும் முற்றத்துறந்து எக்காலத்து மெவ்விடத்து மெப்பொருட் கண்ணுங்குறைவற நிறைந்தும், ஊனக்கண்கொண்டு காண்பப்படாது மறைந்து நின்று, ஐந்தொழிலியற்றி யான்மகோடிகளின் பாசபந்த மறுத்துப் பேரானந்த நித்தியசுகவாழ்வளித்தருளும் அநாதிமலமுத்தசித்துருவனாகிய சர்வேசுரன் திருவடியை இதயாரவிந்தத்திலிருத்திப், பகலிரவென்னுஞ் சகல கேவலமகன்ற ஞானஜோதியிலமர்ந்து இடையறாது தியானித்து, அப்பொருளுடன் தானதுவென்னும் வேற்றுமையின்றி வொன்றி நிற்கும் நிலைமையாகிய வித்துறவறநெறி ஒப்புயர்வற்றதென்பது கூறவும் வேண்டுமோ ?

ஆயின் "நல்லறமன்று" என அன்னையார் கூறியது வழுவாம்பிறவெனின், அற்றன்று. கீழ்ப்பட்ட பலகோடி ஜனனங்களிலிழைத்த புண்ணிய தவப்பலமுடையார்க்கேயன்றி யேனையார்க் கியற்றப்படாத வத்துறவறத்தின் பெருமைக்கூறவெழுந்த வாக்கியமேயன்றி, யதனை யிழித்துக்கூறியதன்றாமென்க. ஏனோவெனின், "மகமாயை களைந்திடவல்லபிரான், முகமாறு மொழிந்து மொழிந்திலனே, யகமாடைமடந்தையர் மக்களெனும், சகமாயையுணின்று தயங்குவதே" என்றதனாற் சகமாயை முற்றத்துறந்த துறவிகளையும் மயக்கித் தன்வசப்படுத்திச் சனனமரணப்படுகுழியிலழுத்தும் மஹாசக்தியுடைய

தாம். பிராரப்தகன்மவசத்தால் மாயையாற் சரீரம்படைத்த சின்னாட் பல் பிணிச் சிற்றறிவுடைய சீவான்மாக்களால் வெல்லுந்திறமுடையதன்றென்பது பசுமரத்தாணிபோ னிலைபெறுமன்றே. இதனா னெல்லாராலு மெளிதிலியற்றற்கியலு மியல்புள்ள வில்லறத்தினின்று நெறிதவறாதொழுகிச் சித்தமாசகன்று ஜன்மாந்தரங்களில் பெறத்தகுவதாய துறவறம் மஹாபுண்யமுடையதே. அந்நெறிக் குலகமுழுமையும் விரோதியாய் நிற்றலின் அளவிறந்த விடையூறுகணேர்தல் கூடும். அவைகளை ஞானவாள் கொண்டு வென்று தன்னிலை கெடாது நிலைத்துநிற்றல் யாவர்க்கு மரிதினுமரிதேயாம். அவ்வொழுக்கத்திற் சிறிது தவறுதலுண்டாயினும் மீளாநரகுக்காளாய் நித்திய துன்ப மனுபவிக்க நேரும். அதனை விளக்குதற்கே, "அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை யஃதும், பிறன்பழிப்பதில்லாயி னன்று" துறவறமும். பிறனால் (இல்வாழ்வானால்) பழிக்கப்படுவ தின்றாயி னன்று என்று கூறியதா மென்க. துறவறம் பூண்டும் அந்நெறி நில்லாது இல்லறத்தார்க்குரிய வைம்புலனுகர்ச்சியின் மயங்கிக்கிடக்கும் கூடாவொழுக்கமே பிறனாற் பழிக்கப்படுவதாம். பஞ்சேந்திரிய வசப்பட்டு விஷயவிருப்பால் தான் வளிமுற்பட்ட (காற்றின்வாய்ப்பட்ட) தீபச்சுடர்போன்றலையாது, சுவரிலெழுதிய தீபச்சுடர்போ (சித்திரதீபம்போ) லசைவற்று மலைபோல நிலைத்துக் கடல்போற் கலங்காத சித்தமுடையவனே துறவறத்திற்குரியவனாம். இத்தகைய பல கஷ்டங்களுடைமையற்றியும், நிலையற்ற மனமுடையா னதனை யியற்றப்புகின் மாயாமயக்கத்தா னிலைதவறி நித்தியநரகம் புகுவானென்பது கருதியுமே, அன்னையாரதனை நல்லறமன்று எனவும், இல்லற மியாவர்க்கும் பயன்றரு மியல்புடைய தாதலாலதனை நல்லறமென்றுங் கூறினாரேயன்றி துறவறமே சரியாமென்க.

இத்தகைய பெருமைவாய்ந்த துறவறம் பூண்டோனுக்கு "அவா" என்கிற ஆசையே பெரும்பகையாம். அதனை யொழிப்பதே துறவறத்திற்கு முக்கியகாரணமாம். ஆசையாவது ஐம்புலன்களாலுணரப்படும் விஷயங்களின் மேல் மனம்விரும்பிச் செல்லுதலாம். மனமென்னுங் கருவியே இந்திரியராஜனும். அதுவே யான்மாவுக்கு மந்திரியையும் தண்டத்தலைவனையு மொப்பதாம். அதனைத் தன்வசப் படுத்திக்கொள்ளின் விடய விச்சைகளைவெல்வதெளிதாகும். அம்மனத்தினை வசமாக்குவதற்கே யோகமார்க்க முண்டாக்கப்பட்டது. பிராணவாயு வியங்குந்தோறும் மனமுஞ்சலிக்கும். அவ்வாயு வடங்கின் மனமுமடங்குமென்பர் ஹடயோகானுபவச் செல்வர். "வாயுநிற்க மனமுமுடனிற்குந், தோயநிற்குறி னிற்குந் துரும்புமே" என்ற மூதுரையானஃ துணரப்படும். இவ்வாறு ஹடத்துடன் வாயுவை நிறுத்தி மனதை வசப்படுத்துதல் கடினமென்றும், விருப்பத்திற்குக் காரணமாகிய விடயங்களின் மேற்செல்லாதபடி மனதையடக்குத லெளிதென்றும் கூறுவர் ஞானயோக நெறியோர். இவ்வாறு செய்தல் கஷ்டமற்ற நெறி யாதலால் யாவரும் எளிதில் இதனை யப்பியசித்தல் கூடும். இதுவே தேவர்கொண்ட நெறியுமாம்.

இது "ஆரவியற்கை யவா நீப்பி னந்நிலை பேராவியற்கை தரும்" என்பதனால் விளக்கப்பட்டது. இவ்வவாவை யொழிப்பதற்கோ ருபாயமுங்கூறினர். அதுவிது.

"யாதனின் யாதனி னீங்கினா னோத
லதனினதனி னிலன்"

ஒருவன் எப்பொருளை யொழிப்பானோ அவன் அதனால்வருந் துன்பத்தை நீக்கினவனாவான் என்பது. அகப்பற்று புறப்பற்றுக ளெல்லாவற்றையு மொருங்கே துறப்பது அசாத்தியமாதலின், ஒவ்வொன்றாய்த் துறக்கவென்ற

தாம். ஒவ்வொன்றாய் ஐம்புலப்பற்றுகளைத் துறக்கவே அகப்பற்றொழியும். அகப்பற்றொழியவே புறப்பற்றுகள் தாமாகவே யெளிதினீங்கிவிடும். அகப்பற்றையொழிக்க முயல்வதே முக்கியமானது. அவ்வாறு புலப்பகையை ஒழிக்கக்கூடுமெனின், ஐம்புலவறிவுகளினும் நாவுங் கண்ணு மிகச் சிறந்தனவாம். எவ்வாறெனின், மூக்கு செவி மெய் என்னும் புலன்களா னுகர்ந்த விடயப் பொருள்களை மனது சீக்கிரத்தில் மறக்கும். கண்ணானும் நாவானுமுணர்ந்தன வற்றை மறப்பது மிகவுமரிது. எங்ஙனமெனிற் கண்ணால் நெடுங்காலத்துக்கு முன்கண்ட பொருளைச் சிந்திப்பின் அப்பொருள் இப்பொழுது காணப்படுவது போல எதிரில் தோன்றுவதும், நாவாலுணர்ந்த வுருசிப்பொருளை நினைப்புழி நாவினீரூறுதலாதி விகாரப்பாடு தோன்றுதலுமே பிரத்தியட்சமாம். மற்றைய புலன்களாலுணர்ந்த கந்தம், தொனி, பரிசங்கள் அவ்வாறில்லாமையு மநுபவத்தி லறியக்கூடியதாம். ஆதலால் கட்புலனாலுணரத்தக்க மங்கையராதி யுருவப் பொருள் காணாதவாறு காத்துக்கொள்ளுதலும், காணநேரிடின் நிருவிகற்பமாக வுணரப்பழகுதலும் நாவுக்கு ருசியான வுணவுப்பொருளை விரும்பாதொழிலும், உண்ணநேருங்கால் தெய்வசிந்தனையுடன் தேவநாமங்களை யுச்சரித்துக்கொண்டு ருசியைக் கருதாதுண்ணப் பழகுதலும், ஆகியவிவற்றை விரதமாகக்கொள்ளின் அவ்விருபொறிகளு மடங்கினவாம். இவ்விரண்டுமடங்கவே ஏனைய பொறிகளை யெளிதி லடக்குதல்கூடும். இவ்வாறு ஐம்புலப்பகைவரை வெல்லவே மனம் பற்றற்று நிற்கும். அக்கினியைப்போல ஒன்றினைப்பற்றியே நிற்கு மியல்புள்ள மனம் புலப்பற்றைவிட்டொழியவே தனக்கு வேறொருபற்றை நாடும். அப்பொழுது உலகங்கடந்த பரம்பொருளாகிய தெய்வத்தினிடத்திற் செலுத்த விம்மனமும் அப்பற்றைவிடாது பற்றிநிற்கும். இதனை

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற திருவாக்கினுள்ளும் இவ்வுபாயங்கள் அடக்கிக் கூறப்பட்டனவற்றைக் கூர்ந்துணர்ந்து கொள்க. இவ்வுபாயங்கள் நிலைபெறுதற்கே தவவிரதங்களை உண்மைநூல் விளக்கிக்கூறின. தவவிரதங்களால் அவாவறுத்தல் கூடுமென்பது கருத்து. நூலுணர்ந்த பெரியோர்களு மதனை வியந்து கைக்கொண்டுள்ளா ரென்பது நூல்களாலும், அனுபவத்தாலு முணரக்கூடும். இத்துறவறநெறிக்கு, அருளுடைமை, வாய்மை, கொல்லாமை, புலான்மறுத்தல், கள்ளாமை, தவம், வெகுளாமை, இன்னாசெய்யாமை நித்தியாநித்திய வஸ்துவுணர்ச்சியாதிய விலக்கணமாமென்று கொள்ளப்படும். இந்நெறியினின்று குறிப்பிட்டவைகளைக் கைக்கொண்டு, மனதை வசப்படுத்திச் சர்வகாரணப் பொருளை யிதயக்குகையிலிருத்திச் சிந்தித்து, எங்கு மதுவாகக்கண்டு, கருவி காரண வியாபாரமொழிந்து, ஜீவன் முத்தனாகிச் சதானந்த நிஷ்டை கூடிப் பேரின்பமுத்திபெற்றுச் சர்வஜீவான்மாக்களுங் கரையேறி யுய்யத் திருவருள் புரியுமாறு, கந்தனை யகில காரணப்பொருளாஞ் செந்திலாண்டவனைச் சந்ததந் துதித்து வணங்குவோமாக. சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

ஸ்திரீகள் பக்கம்

மாதர் மறுமணம்

(105-வது பக்கத் தொடர்ச்சி)

"ஏகபத்நீ" விரதம் ஸ்திரீகளை எல்லா ஆபத்துகளிலிருந்தும் கொஞ்சங் கூட பிரயாசையில்லாமல் இரட்சிக்கிற ஒரு காமதேனுவாகும். பதிவிரதையி

னுடைய ஹிதத்தைக் கடப்பதற்கு ஒரு இந்திரனும் சந்திரனும் சாதிக்கத்தக்கதல்ல. உலகத்தினுடைய சிருஷ்டி, திதி, சங்கார கர்த்தாக்களாகிய சுவாதந்திர தேவர்களுங்கூட பதிவிரதா மணிகளுக்குத் தாழ்ந்தவரென்றே சொல்லவேண்டும். இவ்விஷயம் சந்திரமதி, தமயந்தி, அநுசூயை, சாவித்ரி, நளாயணி, திருவள்ளுவர் மனைவி முதலான நாரீமணிகளின் சரித்திரங்களால் நன்கு விளங்கும். பதிவிரத நிலையுள்ள ஸ்திரீகள் எதுகாலத்திலும் எது தேசத்திலும் எதவஸ்தையிலும் சுபாசுப கர்மரூபமான ஒரு மகாதேவதை யாமென்று சொன்னால் அச்சிரோமணிகளுடைய ஸ்திதியைப் பற்றி நிரூபணஞ் செய்ய யாவராலியலும்,

பதிவிரதையில்லாத ஸ்திரீகள் யாவராலும் எப்பொழுதும் நிந்திக்கப்பட்டவர்களே யாவர். அவர்களுக்கு இகத்திலும் பரத்திலும் யாதொரு கீர்த்தியுமுண்டாவதில்லை. அதற்குப் பதிலாக அவர்களுடைய ஜீவகால முழுவதும் பெரும்பாதகமான அபகீர்த்தியுமுண்டாகும். அன்றியும் மேதாவிகள் அப்பேர்ப்பட்ட ஸ்திரீகளை குரூர சர்ப்பங்களைப்போலவும், விஷம் நிறைந்த பொன் பாத்திரங்களைப் போலவும், கருதி வருகிறார்கள். உலகத்திலுள்ள வஸ்துக்களில் எதாவதொன்று கெட்டுப்போனால் அதற்கு எத்தனையோ வித பரிகாரங்களைத் தேடி நன்றாக்கி விடலாம். அப்படிச் செய்வதால் அது முன்னிலும் அதிகப் பிரகாசப்பட்டுத் தோன்றும். ஆனால் ஸ்திரீகள் பதிவிரதாத்தன்மையைக் கெடுத்துக்கொண்டால் அதை நிவர்த்திக்க எப்பொழுதும் எவராலும் முடியாது. இதனால்தான் உலகத்தில் கெட்ட வஸ்து பதிவிரதாதன்மையை இழந்த ஸ்திரீகளே யல்லாமல் வேறே யில்லை என்பதாய் மகான்களுடைய அபிப்பிராயம். ஆகையால் ஸ்திரீகள் பதிவிரதைகளா யிருக்கவேண்டுமென்று விசேடமாய்ச் சொல்லவேண்டியதில்லை.

மனோ வாக்கு கர்மங்களைக் கொண்டு கணவனுடைய இஷ்டப்பிரகாரம் நடப்பதுதான் பதிவிரதத்தன்மையாகும். இவ்விரதத்தன்மையைப்பற்றி ஓர் பண்டிதன்

"ஆர்த்தார்த்தே முதிதே ஹிருஷ்டா ப்ரோஷிதே மலிநாக்ருசா
மிருதே மிரியே தயாநாரீ சாஸ்திரீஞ்ஞேயா பதிவிரதா"

இதனால் நாம் உணரவேண்டிய தென்னவென்றால், எவ்விஷயத்திலும் தன்னுடைய பர்த்தாவோடு உள்ளிணங்கி நடந்துகொள்க, அவனுக்குண்டாகிற சந்தோஷ சுகாதிகளில் பங்கு கொள்க. அவனுடைய குணத்திலோ தோஷத்திலோ மனதைச் செலுத்தாமல் அவனை ஈஸ்வரனைப்போல் கருதி பக்தி விஸ்வாசத்தோடும், சிசுருஷை முதலிய சிரேஷ்டத்தோடு மிருப்பவள்தான் பதிவிரதை. இவ்வித நியாயம் இரண்டோ அதிலதிகமோ பர்த்தாக்கள் ஏற்பட்டு அவர்களுக்கும் மேல்கண்டவாறு செய்கிறவளாயிருந்தாலும் அவளைப் பதிவிரதையாகக் கணிப்பது கூடாதல்லவா. "யாமேசபத்நீ விரதா:சிலாம்" என்று காளிதாஸன் சொன்னதும் இந்த அபிப்பிராயத்தைத் தழுவித்தானென்று சொல்வதுண்டு.

முதல் முதல் ஐக்கியப்படுத்தி பாணிக்கிரகணஞ் செய்த பர்த்தா இறந்து போனால் மற்றொரு பர்த்தாவினை யதேஷ்டம் சுவீகரிக்கலாமென்று வரும்பொழுது, முன்சொன்ன பதிவிரதம் ஸ்திரீகளுக்கு எவ்வாறு நிலைநிற்கும்? நிலைநிற்கமாட்டாதல்லவா? ஆகையால் இரண்டாவது மணஞ் செய்தால் அவளுடைய பதிவிரதம் விட்டுப்போயிற்றென்றும், அசத்தியம் அவளிடத்தில் வியாபித்திருக்கிற தென்றும் கொள்ளவேண்டும். இஷ்டானுசரணம் கணவனாக மாறி மாறி சுவீகரிக்கலாமென்று வரும்பொழுது ஸ்திரீகளுக்கு புருஷன்

மீதிலுள்ள சிநேக பக்தி விஸ்வாசங்கள் சின்னபின்னங்களாகத்தானிருக்கக் கூடுமென்று தீர்மானமாய்ச் சொல்லலாம்.

நியாயமாக விதவா விவாகத்திற்கும் வியபிசாரத்திற்கும் மிக்க வித்தியாசமில்லை என்றே சொல்லவேண்டும். இந்நிலைமைக்கு விதவைகளுக்கு சம்பந்தக்காரர்களைத்தேடிக்கொள்வது எவ்வளவு அயுக்தமாமென்று சொல்வதற்குண்டோ.

இனி பிராசீன (பழய) காலத்தினுடைய ஸ்திதியைப்பற்றி பரிசோதிக்கிறதானால் இவ்விவாகத்திற்கு ஏதாவது தடங்கலுண்டோ வென்று ஆலோசித்தறிவோமாக. சரித்திரக் கிரந்தங்களிலிருந்துதான் நமக்கு பண்டைய காலத்து ஞானங்கிடைத்தது. இந்துக்களுக்கு சரித்திரக் கிரந்தங்களுள்ளதெல்லாம் புராணங்கள் மாத்திரமேயாகும். பௌராணிக காலத்து ஸ்திதியை சம்பந்தித்து ஆலோசித்து பார்க்கிறதானாலும் இதனுடைய விலக்கு தெளிவாகக் கூடியதுதான் புராணங்களில் எந்த இடத்திலும் விதவைகளுக்கு விவாகம் நடத்தியதாய்க் காணவில்லை. அப்படியிருக்க இது முன்காலத்தில் சர்வசம்மதமென்று *மர்க்கட முஷ்டிபந்தஞ் செய்வதுண்டு. நளமகாராசனைக் காணாதபோது தமயந்தி இரண்டாவது சுயம்வரத்திற்கு வட்டங்கூட்டியதும் "இரண்டுதரம் வேட்கப்பட்டவள்" "இரண்டுதரம் வேட்கப்பட்டவளுடைய புருஷன்" "இரண்டுதரம் வேட்கப்பட்டவளை தன்னுடைய மனைவியாக்கி வைத்த பிராம்மணன்" என்றிவைகளின் அர்த்தங்களிலும் மற்றும் சமஸ்கிருத வாக்குகள் நடப்பிற்கு வந்ததும் நம்முடைய நிரூபணக்காரர்களுக்கு விதவாவிவாகம் முன்காலத்து சர்வ சம்மதமாமென்றுள்ள தெளிவுகள். அதனுடைய உண்மையைப் பற்றிச் சிந்தியாமல் தோன்றுவதானால் இவ்வுக்திகள் கொஞ்சங்கூட பலமில்லாதவை யென்று பிரத்தியட்சப்படுவதாகும்.

தமயந்திக்கு இரண்டாவதொரு விவாகம் நடத்தவேண்டுமென்று உத்தேசமில்லை யென்பதும், தன்னுடைய தெய்வமென்றுள்ள கணவனை எப்படியாகிலும் கண்டு பிடிக்கவேண்டுமென்ற அவாமட்டுமே தானென்பதுவும் என்றால் தமயந்தியினுடைய புனர்விவாக விஷயம் கேட்டமாத்திரத்தில் இராஜனான இருதுபன்னன் மிகுந்த சந்தோஷப்பட்டு அதி சீக்கிரம் தேர் மீதேறி பீமராஜ (தமயந்தியின் தந்தையி) னுடைய நகரம் வந்து சேர்ந்தானே அப்படியானால் ஸ்திரீ புனர்விவாக சம்பிரதாயம் அக்காலத்து நடப்பில்லாத பட்சம் அவ்விதம் இருதுபன்னன் அநுஷ்டிக்க வேண்டியதில்லை யல்லவா என்று சந்தேகப்படலாமென்றாலும், இருதுபன்னனுக்கு அப்பொழுதுள்ள நிலைமையை ஆலோசித்துணர்ந்தால் இச்சந்தேகங் கொள்ளவேண்டியதில்லை. மரியாதையும், சீலகுணமும் உலகஞானமும் பதிவிரதாதன்மையுமில்லாத சில ஸ்திரீகள் புனர் விவாகத்தை விரும்புமென்றாலும் தமயந்தியைச் சம்பந்தப்படுத்தி ஒன்றுஞ் சொல்வதற்கிடமில்லை. அவள் பதிவிரதாசீலமணிகளின் முன்னணியிலுள்ளவளேயாகும். இருதுபன்னன் அவ்விதம்செய்தது அவனுடைய புத்தி சூன்யமும் காமாதூரத்தனமுமே யாம். அன்றியும் அவன் அதிக சந்தேகங்கொள்ளாத நிலைமையில் உடனே வந்துவிடவேண்டுமென்றே தமயந்தியானவள் இங்ஙனம் கறபித்து இருதுபன்னனுக்குக் கூறும்படி பருணதனென்னும் ஒற்றனாகிய பிராமணனுக்கு அறிவித்தாள்.

நாட்டமூன்றுடை நாயகன்வரத்தினு னங்கே
மீட்டுங்கன்னிகை யாயினள் சுயம்வரம் விழைந்தாள்

---

* குரங்கு கைப்பிடி.

கேட்டுமோநிலக்கிழவரு மவ்வுழி யிறுத்தார்
பூட்டுவார் சிலைமன்னநீ போதியேற் போவாய்.

நாளை நன்மணம்புணர்வது நிடதநாடளிக்குங்
காளை யாருயிருளன்கொலோ கழிந்தனன்கொல்லோ
வாளி மொய்ம்பினுயென்று நீயறைகெனவறைந்தான்
வாளைவென்றரி பரந்துமைதோய்ந்த கண்மடவாள்.

இப்படித் தெய்வானுகூலத்தால் தமயந்தி மீட்டுங் கன்னிகையாகி நாளை புவர் விவாகமென்றும் அதற்கேனைய அரசர்கள் வந்திருக்கின்றனர், நளன் உயிருடனிருக்கின்றானோ அல்லது ஒழிந்தானோ அஃது சந்தேகமென்றும் நீ போக வேண்டுமானால் உடனே போவாயென்றும் (கொண்ட கற்பனையே) பருணுதன் இருதுபன்னனுக்கு அறிவித்தமையால் இருதுபன்னன் ஆச்சரியமடைந்து தமயந்தி தேவர்களாலும் புகழப்பட்ட அழகுடையவளாதலால், அப்பிரமையாலும் மதிமயங்கி தன்னிடம்விட்டு உடனே குண்டினபுர (தமயந்தி, பிறந்த நகர) யாத்திரையை விரைவிற்கொண்டானே யல்லாது வேறல்ல. மேலும் கன்னித் தன்மையை இழந்தவள் மறுபடி மணம் புரிவது சம்பிரதாயமாயிருந்திருந்தால், பருணுதான் "பரமசிவனருளால் தமயந்தி மறுபடி கன்னித்தன்மையைப் பெற்றிருக்கிறாள்" என்று கூறவேண்டிய அவசியமில்லை. இதனாலும் அக்காலத்திலும் ஒருதரம் கன்னித்தன்மையை இழந்தவள் மறுபடி மணம்புரியலாகாதென்றே விதியிருந்ததாகத் தெரிகிறது. இவ்வாற்றால் புனர் விவாக சம்பிரதாயம் அக்காலத்தி லில்லாதிருந்தால் இவன் இப்படி பிரயாணப்படக் காரணமில்லை என்று சொல்வது எங்ஙனம் பொருந்தும். சத்தியம், நீதி, தருமம், மரியாதை முதலிய சீலங்களைவிட்டு சில துர்ச்சுபாவமுள்ள ஸ்திரீகள் கேவலம் சில துர்ச்சுகத்திற்குவேண்டிய அக்காலத்தும் இக்கருமத்தை அனுஷ்டித்திருக்கலாம். தருமத்திற்கு விரோதமாய் சுயேச்சையாயுள்ள ஒருவர்க்கு எப்பொழுதும் எதுவானாலும் செய்வதற்கு ஒரு தடங்கலு மில்லையன்றோ.

(தொடரும்)

E. S. சிவாமலிங்கம் பிள்ளை, புனலூர்.

மாமி மருகியை நடத்தும் முறை.

ஸ்திரீகள் தங்கள் வாழ் நாட்களின் முடிவிற்குள்ளாக ஐந்து வகையான அந்தஸ்தை அடைகின்றார்கள். அவை. குழந்தை, பெண், மனைவி, தாய், மாமி என்பவைகளே இவ்வைந்தினுள் முறையே விளையாடும் பருவத்திற்கு குழந்தையென்றும், கல்விகற்கும் பருவத்திற்குப்பெண்ணென்றும், விவாகம் முடிந்தபின் மனைவி யென்றும், புத்திரோற்பத்தியான பின் தாயென்றும், அப்புத்திரர்க்கு விவாகம் நடந்த பின் மாமி யென்றும் பெயர் படைக்கின்றார்கள். குழந்தையென்னும் அந்தஸ்தில் விளையாடுவதும், பெண் என்னும் அந்தஸ்தில் கல்வி யொழுக்க முதலியன கற்பதுவும், மனைவி யென்னும் அந்தஸ்தில் தன் கணவனிடமிருந்து சுகாநுபவங்களை யனுபவித்து தானே குடும்பத்திற்கு தலைவியாயிருந்து, குடும்ப விவகாரங்களை யெல்லாம் சீர் திருத்தி வருதலும், தாயென்னும் அந்தஸ்தில் குடும்ப விவகாரங்களை நடத்திவருவதுடன் குழந்தைகளைப் போஷிக்கவும் அவர்களை வளர்க்கவும் அவர்களுக்கு கல்வி ஒழுக்க முதலியவைகளைப் பயிற்றுவித்தலும் ஆகும்.

மாமியென்னும் கடைசி யந்தஸ்தில் தனது சிறு பிராயமுதல் அப்பருவம் வரையில் சகல சுகாநுபவங்களையும் விகயாண்டு குடும்ப விவகாரங்களனைத்

தினும் அனுபோக முடையவளாய் விட்டபடியாலும், தன்னுடைய முதுமைப் பருவம் அதிசீக்கிரம் அடுக்க விருப்பதாலும், ஓர் அரசன் தன் முதுமைப் பருவத்தில் தனது பட்டத்திற்குரிய மைந்தனுக்கு பட்டாபிஷேகம் செய்து முடிசூட்டி அரசாக்ஷியை அவனுக்குத் தருவதுபோல மாமிகளும் இதுபரியந்தம் தான் குடும்பத் தலைவியாயிருந்து நடத்திவந்த குடும்ப விவகாரத்தைத் தன் குடும்பத்திற் குரியவளாக வந்த மருமகளையே நடத்திவரும்படி எஜமானி யென்னும் பட்டத்தை அவளுக்குக் கட்டிவைத்து, அவ்வளவில் தான் இளைப்பாறலும் இயற்கை. இவ்வாறு தான் பட்டங்கட்டிவைத்த பிறகு தன்மருமகளுக் கருகிலிருந்து அவளிடத்தில் அத்தியந்த விசுவாசமும், அன்பும், பக்தியும்வைத்து அவளைத்தன் வயிற்றிற்பிறந்த மகளைப்போல் பாவித்து அவளுக்கிதமான வார்த்தைகளைச் சொல்லி குடும்பவிவகாரங்களை யவளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். அவளால் உண்டாக்கப்பட்ட தவறுதல்களை அன்பான வார்த்தைகளால் திருந்தச்செய்தல் வேண்டும். மருமகள் என்பதற்குத் தன்மகளை மருவும் மகள் எனப் பொருள்படுதலால் அவளும் தன் மகள்போன்றவளே யென்பதிற் றடையில்லை. தன் மகன் செய்தகுற்றத்தை எவ்வளவு பக்ஷமாய் சகிக்கின்றார்களோ, அவ்வாறே மருமகள் செய்த குற்றத்தையும் பக்ஷமாய் சகித்துக்கொண்டு, சிறுகச் சிறுக அவளைச் சீர் திருத்தல் வேண்டும். தான் அருமையாய் ஈன்றெடுத்த புதல்வனுக்கு இன்பந்தாவந்த பத்தினி யாதலின், தன் புத்திரன்மீது வைத்திருக்கும் அன்பைப் போலவே அவளிடத்தும் வைக்கவேண்டும்.

அப்படிக்கின்றி வீம்பும் வைராக்கியமும் அவள்பேரில் வைக்கலாகாது. மேலும் தான் இதற்கு முந்தி மருமகள் அந்தஸ்திலிருந்தபோது தன் மாமி தன்னைப் பட்சமாய் நடத்தியிருந்தால் அதனால் தான் அடைந்த சுகத்தையும் சந்தோஷத்தையும், அப்படி நடத்தி யிராதிருந்தால் தான் எவ்வளவு கஷ்டத்தையும் மனோவருத்தத்தையும் அடைந்திருக்க வேண்டும் என்பதையும், தன் மாமி தன்னைப் பட்சமாய் நடத்தி யிராவிட்டால் அதனால் தான் அடைந்த கஷ்டத்தையும் வியாகூலத்தையும் சிந்தித்துப் பார்த்தால், தான் தன் மருமகளைப் பட்சமாகவே நடத்த வேண்டுமென்று மனதிற்படும். மேலும் தனது மகளை அவளுடைய மாமி குரூரமாய் நடத்தும் பக்ஷத்தில் தன்மகளுக்கும் தனக்கும் தன் கணவனுக்கும் எவ்வளவு துன்பமும் மனவருத்தமும் நேரிடுமோ அவ்வளவு துன்பமும் மனவருத்தமும் தன்மருமகளைத் தான் குரூரமாய் நடத்தும் பக்ஷத்தில் அவளுக்கும் அவளுடைய தாய்தந்தையர்க்கும் நேரிடுமல்லவா வென்பதையும் சிந்திக்க வேண்டும்.

மானிடராய்ப் பிறந்த நாமனைவரும் குற்றமுள்ளவர்களேயன்றி குற்றமற்றவர்களல்ல வென்பதையும் நாம், பிரதிதினமும் கடவுள் கட்டளைக்குமாறாக நடத்தும் அளவிறந்த குற்றங்களைக் கடவுள் சகிக்கின்றாரல்லவா என்பதையும் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும். சில மாமிமார்கள் நூதனமாய்த் தன் வீட்டிற்கு வந்திருக்கும் பேதமையை ஆபரணமாகப் பூண்ட மருமகளின் அற்பக் குற்றத்திற்காக துரும்பைத் தூணாக்குவதுபோல் பிரமாதமாக்குவது பெரும் பேதைமைத் தனமேயாகும்.

சில மாமிமார் மருமகள் வந்தபின்பே மிக்க சிக்கனம் பாராட்டி, யாவற்றையும் தங்கள் வசத்தில் வைத்துக்கொண்டு, அரிசி உப்பு முதல் அளந்து கொடுப்பதோடு அற்பத்திலெல்லாம் குற்றம் கண்டுபிடித்து கண்டிக்கிறார்கள். இதனால் மருமகளுக்கு "இது நமது பொருள், இதை நாம் வீண்செய்யலாகாது" என்ற எண்ணமுண்டாகாமல், வீம்புக்கேனும் பொருள் அழிவை யவட்சியமாய்க் கவனிக்கும்வண்ணம் துவேஷத்தை யுண்டாக்குகிறது. குற்றம் நேர்ந்து கண்டித்

தாலும் பட்சத்தோடும் கருணையோடும் கண்டிக்கவேண்டும். குடும்பவிவகாரங்களைக் கற்றுக்கொடுப்பதற்கு மாமியானவள் உபாத்தியாயர் ஸ்தானத்திலிருப்பதால், தான் சற்குணவழியாயிருந்து தன் புதல்வனுக்கென்று கொள்ளும்போது எவ்வளவு பக்ஷமும் அன்புமுடையவளா யிருந்தாளோ, அவ்வாறே கடைசிவரையும் அவளைச் சீர்திருத்தி நல்லவழிக்குக் கொண்டு வந்து நற்பெயரை நாட்டவேண்டும். சுபம் சுபம் சுபம்.

K. R. கணபதி பிள்ளை, துணியை.

கற்பரசிகளின் மகிமை.

கலாபமயிலிருந்த பாகத்தார், கங்கை
உலாவுசடைமேல் உறையும்,—நிலாவை
வழியவார்த்தா லன்னமாநீற்றார், நாகம்
கழியவார்த்தார், நமக்கோர் காப்பு.

நீர்வளமும் நிலவளமும் பொருந்திய காவேரி யாற்றின் கரையே அமைந்துள்ள திருக்காட்டுப்பள்ளி என்னுமிடத்தில் வேம்பு அய்யர் என்று ஒருஉலோபி இருந்தார். சுமார் ஏழுலட்ச ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் அவருக்கு இருந்தன. மல்லிகை, முல்லை, இருவாட்சி முதலிய புஷ்பங்களுள்ள நந்தவனங்களும், வாழை, கமுகு, முந்திரி, பலா, மா முதலிய மரங்களும் கூடிய தோட்டங்களும் அவருக்கு உண்டு. மாடுகளோ அவருக்கு அபரிமிதமாய் இருந்தன. ஆனால் அவர் தர்மம் என்பதைக் கனவிலும் கருதியவரல்ல. இவைகளை எல்லாம் நமக்கீந்த ஒரு ஸர்வேஸ்வர னிருக்கிறாரே, அவரை நாம் ஒரு நிமிஷமாவது நினைக்க வேண்டுமே என்று அவன் சிந்தித்ததில்லை. இந்தப் பசுக்கள், மரங்கள் முதலியவைகளி னின்றாவது ஏதாவது ஒரு விஷயம் அவன் அறிந்தானா? இல்லை. மாமரமானது வெயிலாலுலர்ந்து பனியால் நனைந்தும், வெய்யிலின் தாபத்தால் கஷ்டப்படுகிறவர்களை அருகே அழைப்பதுபோல் ஓங்கி நின்று தனதண்டையில் வருபவர்க்கு நிழல் தந்து, பிறகு அவனுடைய பசிக்காகத் தன் கனிகளை அவனுக்குக் கொடுக்கிறது. இந்தக் கனியானது லேசில் கிட்டுகிறதா? மிகவும் உயரத்தில் தொங்குகிறபடியால், கீழே சிரமப்பரிகாரம் செய்யும் மனிதனானவன் மிக்க சிரமத்துடன் கல்லினால் அடித்தோ, அல்லது துரட்டினால் அறுத்தோ புசிக்கிறான். அம்மரமானது கல்லால் இவன் அடிக்கிறானே என்று கொடாமல் இருக்கிறதா அப்பா "தாராளமாய் எடுத்துக்கொள்" என்று தனது பழங்களனைத்தையும் கீழ்புறம் நோக்கித் தொங்கலிட்டுக்கொண் டிருக்கின்றது. இன்னும் அனேகவிதங்களில் இம்மாமரமானது வாயில்லாதபோதிலும், தனது ஸ்வதர்மத்தைச் செய்து வருகின்றது. அந்தோ! மானிடர்கள் இக்காலத்தில் பிராசீன விதிகளைவிட்டு, நூதன கோட்பாடுகளைக் கைக்கொண்டு, ஸ்வதர்மங்களை விட்டுவிடுகிறார்களே, ஆனால்

திருட்டுமாடே, வரப்புவிட் டோடினால்
உன்னை அடிக்க, முருகனிருக்கான்

என்ற சுவாமிகளின் வார்த்தையை மறந்தனர் போலும்.

பகவானது அமிருத மூர்த்தியாகிய ஸாக்ஷாத் பகவானுக்கு பல விதத்திலும் உதவிபுரிந்து, மானிடர்கட்கு பயன்களைத் தந்தருளுகின்றது. திவ்ய தீபாராதனையின்போது திவ்ய நாதங்களைக்கொடுக்கும் கருவிகட்கு தன்சர்மத்தையும், தன்கொம்புகளையும் கொடுத்து, பகவானுடைய திவ்ய ஸ்நானத்தின் பொருட்டு தனது அமிருதத்துக் கொப்பான பாலைக்கொடுத்து, பிராயச்சித்தம், புண்யாவசனம் இவைகட்கு தனது பஞ்சகவ்யத்தை மானிடர்கட்கு ஈந்தருளுகிறது. லோபி வேம்பையன் இதற்கு நல்ல கொட்டில்கள் கட்டாத போதிலும், வயிற்றுக்குச் சரியான தீனி போடாவிடிலும் அவனுக்குப் பால் தராமலிருந்ததா? இப்பாவி வேம்பையன் தனது எச்சற் கையினால் ஒரு காக்கையைக் கூட ஓட்டான். யாராவது அந்தணர்கள் யாசகார்த்தமாவது, அல்லது, போஜனார்த்தமாவது, அவனண்டையில் வந்திடில் "என்ன! இது கஜானாவோ? சத்திரமோ?" என்று இரைந்து அவர்களை ஓட்டிவிடுவான். இப்பேர்க்கொத்த மகா லோபிக்கு ஸதா பகவானையே ஸ்மரித்துக்கொண்டிருக்கும் லக்ஷ்மி என்னும் திவ்ய நாமத்தைக் கொண்டிருந்த ஒரு தர்மபத்னி வாய்த்திருந்தாள். இது நமது பூர்வஜன்மாந்திர பலன் என்று அவள் வாய் திறந்தாளில்லை.

ஏனெனில், அவள் கணவனுக்கு எதிர்மாறு பேசாமல் அவன் கட்டளைப்படி நடக்கும் உத்தம பத்தினியாகிய கர்ப்பரசி. கணவன்குணமறிந்தும் அவனைச் சற்றேனும் அவமதித்தவளல்ல.

ப்ரஹ்மாயேன குலாலவன் நியமிதோ பாஹ்மாண்ட பாண்டோதரே
விஷ்ணுர்யேன தசாவதார கஹனேக்ஷிப்தோமஹா ஸங்கடே!
ருத்ரோயேன கபாலபாணி புடகேபிக்ஷாடனம் ஸேவதே
ஸூர்யோப்ராம்யதி நித்யமேவககனே தஸ்மைநம: கர்மணி!!

"நாதா! இன்றைக்கு திருவண்ணாமலை ஸ்வாமிகள் 'கருடகர்வபங்கம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு காலக்ஷேபம் செய்யப்போகிறாராம். அதற்கு நாமும் போவோம் வருகிறீர்களா" என்று கேட்டால் "காலணா கொடுக்காத பக்ஷத்தில் நீபோ. அந்தநேரத்தில் நான் எவ்வளவோ காரியம்செய்து பணம் சம்பாதித்து விடுவேன்" என்று பதில் சொல்வார். இப்படியே இவர்களுடைய வாழ் நாட்களும் கழிந்து கொண்டு வந்தன. இம்மகாலக்ஷ்மி ஒருநாள் காசிக்குப்போக வேண்டுமென்று மிகவும் வணக்கமாகக் கேட்டுக்கொள்ள, அய்யரவாளும், காசு செலவுசெய்ய மனமில்லாமல் நடந்துபோகச் சம்மதித்தார். வழியே யாசகம் செய்துகொண்டு பலபேரின் வாழ்த்துகளையும் வசவுகளையும் கேட்டுக்கொண்டு, வெயில், மழை, பனிமுதலியவைகளைப் பாராட்டாமலும், நதிகள், மலைகள், அரண்யங்களைக் கடந்தும், சிரமத்தைப் பாராட்டாமல் விஸ்வநாதரையே மனதில் தியானம் செய்துகொண்டு லக்ஷ்மி அம்மாள் தனது பர்த்தாவுடன் மூன்றுமாதங்கள் எல்லா கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு நடந்து பின்னர் காசி க்ஷேத்ரத்தை அடைந்தார்கள். காசியில் ஸ்நான கட்டத்தில் (Ghat) இறங்கும் தறுவாயில் கையில் வெள்ளித் தடியுடன், தலையில் பெரிய தலைப்பாகையுடன், உள்ள பண்டாக்களில் ஒருவன்வந்து "மஹராஜ்! ஸங்கல்ப தக்ஷணை தலைக்கு ஒருரூபாய் கொடுக்கவேண்டும்," என்று சொல்ல "அடியே! பயித்தியக்காரி, பார்த்தாயா! நான் காலணா செலவு பண்ணக்கூடாது என்றிருக்க இவன் ஒருரூபாய் கேட்கிறானே! ஸ்நானம் வேண்டாம்" என்று அதிவிரைவாய் படிகளேறி வீட்டை நோக்கிப்புறப்பட ஆரம்பித்தார். இவ்வளவு சிரமங்களைப் பொறுத்தும், கங்கை ஸ்நானமும் காசிவிஸ்வநாதர் தரிசனமும் நமக்குக் கிட்டவில்லையே என்று மனம் வருந்திக் கொண்டே இலக்ஷ்மியம்மாள் கண்களில் நீர்ததும்ப, தனது ப்ராண நாதரின் பாதங்களைப் பற்றிக்கொண்டு "கட்டங்களை யெல்லாம் கடந்து, ஒருவருமில்லாத இடத்திலாயேனும் ஸ்நானம் செய்வோம்" என்று புலம்பவே, அவரும் அதற்கிணங்கி அறுபத்தினான்கு கட்டங்களையுங் கடந்து ஒருவரும் இல்லாத ஒருவிடத்திற்குவந்து சேர்ந்தார்கள். துறையில்லாமல், சுழல்களோடு, ஜலமானது 'ஹோ' என்று ப்ரவாஹமாய் ஓடிக்கொண்டிருந்தபோதிலும், பணச் செலவில்லாமல் காசிதரிசனமும், கங்கை

ஸ்நானமும் கிடைத்தால் போதுமென்று அதில் இறங்கினார்கள். யாவருள்ளத்திலும் நடம்புரியும் சர்வேசன் லக்ஷ்மி யம்மாளுடைய கற்பை மகிழ்ந்து மனமிரங்கி அவளுக்குத் தரிசனம் தரவும், அவள் புண்ணியத்தால் லோபியாகிய அவள் கணவனும் பரிசுத்தனாகவும் ஒரு திருவிளையாடலைப் புரியத் திருவுளங் கொண்டு, அவர்கள் முழங்கால் நனையும் முன்னரே, ஒரு பண்டா (பண்டாரம் போன்றவர்) உருவந்தாங்கி வேம்பய்யரின் முன் தோன்றி "மஹாராஜ்! அஹம் விஸ்வனாத பண்டாஹை. ஸங்கல்பதக்ஷிணா பாவனாதேஹி" என்று செப்பவே 'ஐயோ' என்று பத்துமைல் சென்று அங்கு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஜலத்தில் இறங்கினார்கள். ஸ்ரீமத் சங்கராசார்யாரையே யரையன் வேஷம் போட்டு பரிசீலனை செய்த காசிநாதர், இந்த அற்பலோபியை சும்மா விட்டுவிடுவாரா. அங்கும் இவர்முன் தோன்றவே அங்கிருந்தும் ஓடி மனித ஸஞ்சாரமேயில்லாத ஒருவனப் பிரதேசத்தை யடைந்து அங்காவது பணச் செலவில்லாமல் ஸ்நானம் செய்யலாமென்று இறங்கினார்கள். அவர் முழுகும் தருணத்தில் அவர் முகவாயைக் கையினாலேந்தி "மஹாராஜ்! ஸங்கல்ப தக்ஷிணை காலணா கொடுக்காமல் ஸ்நானம் செய்யக்கூடாது" என்று சொல்ல "அட இழவே! இவன் எங்கேயடா ஜலத்துக் குள்ளாகவேயே வந்துவிட்டானா" என்று யோஜித்து காலணா எப்படியடா கொடுக்கிறது என்று மனதில் ஸங்கடப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, "பிரபோ! நீங்கள் காசை இவ்விடம் கொடுக்க வேண்டாம். காலணா உங்கள் வீட்டில் வந்து வாங்கிக் கொள்கிறேன். கங்கை ஜலத்தை எடுத்து தத்தம்செய்து கொடுங்கள்" என்றார். உடனே வேம்பு அய்யர் "இவனாவது நம்முடைய வீட்டுக்கு வரவாவது காலணா காசுக்காக. எந்த மடையனாவது இவ்வளவு தூரம்வருவானா" என்று நினைத்து கையில் ஜலத்தை யெடுத்து பண்டாரத்திற்கு தத்தம்செய்து பின்னர் ஸ்நானம் செய்து வீடு நோக்கி பரம உத்ஸாஹத்துடன் திரும்பினார். சில காலம்சென்றபின் வீட்டை அடைந்தான். இவன் பணத்தால் அவனுக்கு என்ன சுகம்.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தை புதைத்துவைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா எந்தப் பணம்"

என்று ஔவையும் அருளி யிருக்கிறாரல்லவா. வீடுவந்து சேர்ந்து கதவைத் தாளிட்டபின் சிரம பரிஹாரத்திற்காக கூடத்திலுள்ள ஊஞ்சலில் படுத்தாரோ இல்லையோ, உடனே கதவை யாரோ "படீர், படீர்" என்று தட்டினார்கள். யார்க்கே என்று லக்ஷ்மி அம்மாள் கேட்க, "அஹம் விஸ்வனாத பண்டாஹை. பாவனா தக்ஷிணாதேஹி" என்று பதில் அளிக்க, வேம்பையர் "அட இழவே! இவன் இங்கும் வந்துவிட்டானே! அடியே! நான் செத்த பிரேதம்போலிருக்கிறேன். நீ புலம்பிக்கொண்டு கதவைத்திறந்து தெருவிற்சென்று புழுதியில் விழுந்து புரண்டு அலறு" என்றுசொன்னான். அவளுக்கோ இன்னது சொல்வதென்று தெரியவில்லை. "ஹே கோபாலா! இவ்வுலகத்தில் இப்பேர்பட்ட லோபியும் இருப்பானோ? இவரோ நமது பர்த்தா. குலமகட்கழகு கொழுநனைப் பேணுவது" என்று மூதாட்டியாரும் சொல்லியிருக்கிறாரல்லவா" என்று சிந்தித்து "ஹே பரமேஸ்வரா! நீதான் எனக்கருள்புரியவேண்டும்" என்று கதவைத்திறந்து அழ ஆரம்பித்தாள். பண்டாவும் விடா முண்டனாய் அவளோடு உள்ளே பிரவேசித்து "அம்மணீ உங்கட்குப் புத்திரப் பேறுண்டா" எனக் கேட்டார்; இல்லை என்று லக்ஷ்மி அம்மாள் பதிலளிக்க, நானே உங்களுக்குப் புத்திரனாகவிருந்து செய்யவேண்டிய கருமங்களை நடத்தி உங்கள் பர்த்தாவின் ஆத்மாவிற்குப் பிரீதிசெய்கிறேன் என்று சொல்லி, லோபியைப் பாடையில்

வைத்துக்கட்டி சுடுகாட்டிற்குக் கொண்டுபோனான். கொள்ளியும் இட்டாய் விட்டது. லோபி அப்பொழுதும் வாயைத் திறந்தானில்லை. பணமல்லவா அப்படி அவனை ஆட்டிவைக்கிறது. ஆனால் எவ்வளவு தூரம்தான் அவனால் தாங்கமுடியும். நெருப்பு ஜ்வாலையானது அவன் தேஹத்தை அண்டவே அவன் ஐயோ என்று அலறிக் கீழேகுதித்தான். பண்டாவோ உடனே "மஹாராஜ்! பாவனாதேஹி, பைசாகொடும்" என்றார். ஐயர் அடே! நான் சாம்பலாய்ப் போயிருந்தால் உனக்கு அந்தக் காலணா எப்படிகிடைக்கும் என்று கோபத்தோடு கேட்டார். பண்டா "அப்பனே, நீ என்னைச் சாம்பலாண்டி என்று தெரிந்து கொள். நீ சாம்பலாய்ப் போயிருந்தால் நான் அதை யெடுத்துப் பூசிக்கொண்டு போயிருப்பேனே" என்று கர்ஜித்து, அவனைத் தன் சூலத்தால் தொட்டார். துருவனை ஸ்ரீ விஷ்ணுபகவான் தனது சங்கத்தால் தொட்டவுடன் மெய்ஞ்ஞானம் வந்து எப்படி,

யோந்த: பிரவிச்யமமவாசவிமாம் ப்ராலுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகில சக்திதர: ஸ்வதாம்னா
அன்யாம்ஸ்சஹஸ்த சரணாத்ரவணஸ்வகாதின்
பராணான் நமோபகவதே புருஷாயதுப்யம்

என்று பாடினாரோ,அப்படியே வேம்பய்யருக்கும் பகவானுடைய சூலாயுதத்தின் ஸ்பரிசம் பட்டமாத்திரத்தில் அவனுடைய அஞ்ஞானம் பறந்துபோய் மெய்ஞ்ஞானம் உதித்துவிட்டது. ஏதோ! லக்ஷ்மி அம்மாள் புண்ணியத்தால் இவருக்கு இவ்வளவு பதவி கிட்டியது. பகவான் உடனே அந்தர்த்தியானமாய் விட்டார். வேம்புஐயர் பகவானிடத்துப் பதிந்த அன்பே உருவமானவராய் கண்களில் நீர்ததும்ப, மெய்சிலிர்க்க ஆனந்த பரவசமாகி, தன் ஆஸ்தி அனைத்தையும் காசிவிஸ்வநாதருக்கு எழுதிவைத்து அதுமுதல் மெய்ஞ்ஞான சொரூபனாய்த் திகழ்ந்து முடிவில் பெறற்காரிய முக்தியைப்பெற்றார். லக்ஷ்மி அம்மாளும் தனது பூஜாபலத்தால் மாங்கல்யத்தோடு தனது பர்த்தாவின் மரணத்திற்கு முன் பரமேஸ்வரனுடைய திருவடி நிழலை யடைந்தாள்.

ஓ சகோதரர்களே, சகோதரிகளே, கற்பின் மகிமை யெவ்வாறிருக்கிறது சிந்தித்துப் பாருங்கள். சற்றும் தெய்வசிந்தனையென்பதைக் கனவிலும் கண்டறியாத பரமலோபியாகிய வேம்பு ஐயரின் அஞ்ஞானத்தைப் போக்கி, அவனுக்கு மிக்க அரியபேறாகிய பகவானது தரிசனத்தைத்தந்து, அவனை மெஞ்ஞான சொரூபியாக்கி மோக்ஷவீட்டை யடையச்செய்தது எது. அவனது மனைவியின் கற்பல்லவா. இலக்ஷ்மியம்மாள் தன்கணவனுடைய தாழ்ந்தகுணத்திற்காகஅவனை இகழ்ந்து வெறுக்காது, அவனையே தெய்வமாய் நம்பி அவன் சொற்கடவாது நடந்துவந்த கற்பின் மகிமையல்லவா இருவர்க்கும் பெறற் கரிய பதவியை யளித்தது. ஆகையால், கற்பினை உயிரினும் இனியதாய்க்கருதி யொழுகி இவ்வுலகில் அழியாப் புகழையும், மறுமையில் பேரின்பச் செல்வத்தையும் பெற முயல்வதை மறவாதீர்கள். கருணாநிதி யுங்கட்கருள் புரிவானாக.

கந்திரமௌலீஸ்வரன், திருச்சினாபள்ளி.

மாணவர் பக்கம்

கடவுளைக் காட்டு!

ஓர் ஊரில் ஒரு வாலிபன் இருந்தான். அவன் கடவுளைப்பற்றி யாராவது பக்தியாய்ப் பேசினால் அவர்களை நோக்கி "கடவுளுமில்லை ஒன்றுமில்லை. இருந்தால் காட்டு பார்ப்போம்" என்று கூறிக் கேலிசெய்வது வழக்கம். யாவரும் இவனைக்கண்டால் வெறுப்போடு எட்டப் போய்விடுவார்கள்.

ஒருநாள் அவ்வூர் குளக்கரையில் ஒரு சந்நியாசி வந்து உட்கார்ந்து கடவுளைத் தோத்திரம்செய்து கொண்டிருந்தார். அச்சமயம் அவ்வழியாய் வந்த அந்த வாலிபன் சந்நியாசியை நோக்கி "யார்மேல் பாட்டு பாடுகிறாய்?" என்றான். அதற்கு அப்பெரியவர் "அப்பா நம்மை யெல்லாம் சிருஷ்டிசெய்து பாதுகாத்து வரும் ஆண்டவனைப் பஜிக்கிறேன். நீயும் பயபக்தியோடு கேள்" என்றார்.

வாலிபன்:—"அட வேலையற்றவனே கடவுள் எங்கே யிருக்கிறார்?" என்றான்.

சந்நியாசி:—"கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். அவர் இல்லாதவிடமே யில்லை" என்றார்.

வாலிபன்:—"பேஷ், நீயும் ஒரு மூடனே. கடவுளேது கிடவுளேது எதோ இருந்தால் சற்று காட்டு பார்ப்போம்!" என்று அகங்காரத்தோடு கேட்டான்.

சந்நியாசி உடனே பக்கத்திலிருந்த ஒரு உலர்ந்த மண்ணுங்கட்டியை யெடுத்து அவன் தலைமேல் அடித்தார்.

வாலிபன் கோவென்று கூவிக்கொண்டுபோய் அவ்வூர் நியாயாதிபதியிடம் முறையிட்டுக் கொண்டான்.

நியாயாதிபதி உடனே சந்நியாசியை யழைத்துவரச் சொல்லி,

"என் ஐயா! இவ்வாலிபன் கடவுளைக்காட்டு என்று உம்மைக்கேட்டால் அதற்குப் பதில் கூறாமல் அவன் தலைமேல் மண்ணுங்கட்டியா லடித்து நோய் உண்டாக்கி யிருக்கிறீராமே. ஏன் அப்படிச் செய்தீர்?" என்றார்.

அதற்குச் சந்நியாசி:—"நான் மண்ணுங்கட்டியாலடித்ததுதான் இவன் கேட்ட கேள்விக்கு விடை" என்றார்.

நியாயாதிபதி:—"அது எப்படி கடவுளைக் காட்டு என்ற கேள்விக்கு விடையாகும்?" என்று கேட்டார்.

சந்நியாசி:—"நான் இவன் தலைமேல் மண்ணுங்கட்டியா லடித்து நோய் உண்டாக்கினதா யல்லவோ கூறுகிறான். நோய் எதோ இருக்கிறது. என் கண்களுக்குத் தெரியவில்லையே. உங்கள் கண்களுக்காவது இன்னம் யார் கண்களுக்காவது தெரிகிறதா. எதோ இவன் அந்த நோயைக்காட்டட்டும் நான் கடவுளைக் காட்டுகிறேன்" என்றார்.

வாலிபன் வெட்கமடைந்து அதுமுதல் கடவுளில்லையென்பதையும், இருந்தால் காட்டு என்று கேட்பதையும் விட்டு விட்டான்.

பிள்ளைகளே! கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அந்த வாலிபன் தலையில் நோய் உண்டாயிருந்தது எப்படிமெய்யோ, அப்படியே நம்கண்களுக்குத் தெரியாவிட்டாலும் கடவுள் எங்குமிருக்கிறார் என்பது உண்மை. ஆனால் கடவுள் அந்த நோயைப்போலவே துன்பமா யிருக்கிறாரென்று எண்ணிக்கொள்ளாதீர்கள். அவர் எப்போதும் ஆனந்தமாயிருப்பவர், அழியாதவர். ஞானிகள் அவர் நிலையைக் காண்பார்கள். நாம் அவரை யெப்போதும் மறக்காமல் தினம் தியானம் செய்துவந்தால் நமக்கு நல்ல பலன்களை யளிப்பார்.

ஆரணி—துப்புசாமி முதலியார்.

க்ஷயரோகம்.

(157-வது பக்கத்தொடர்ச்சி)

சாஸ்திரங்களிலும் க்ஷயரோகிகளுக்கு சொர்ணசெந்தூரம் கொடுக்கும்படி சொல்லுவதால் தாம்பிரமே சொர்ணமென்பதாலும், களிம்பினால் தாம்பிரம் என்றபேர் உண்டான தென்றதாலும், வகையாய்ச்செய்த தாம்பிரத்தை க்ஷயரோகிகளுக்கு உபயோகிக்கலாம். அப்படிவகையான தாம்பிர பஸ்பம் செய்வெகுசாய் தெரியாதபடியால் சொர்ணபஸ்பமே மேலானதென நினைக்கலாம். க்ஷயரோகிகளுக்கு முக்கியமாய் ஆகாராதிகள் முக்கியமானவை. பலம் தரும்படியானதும் மிருதுவானதும் சீக்கிரம் ஜீரணமாகக்கூடியதுமான ஆகாரங்களையே உபயோகிக்கவேண்டும். அதாவது கேழ்வரகுகஞ்சி, கம்புகஞ்சி, கோதுமை சத்து முதலான ஆகாரங்களுடன் பசுநெய் பசுமோர்கொடுத்தல்வேண்டும். மேல்நாட்டார்களின் சிகிச்சைகளில் சாஞ்டொஜன், ஆர்லிக்ஸ் மால்ட்டட்மில்க், ஒவல்டின் காட்லிவர் ஆயில், கோழிமுட்டை முதலானதுகள் உபயோகித்து வருகின்றார்கள். முற்சொன்ன கம்பு கேழ்வரகு முதலான ஆகாரங்கள் பிற்சொன்னவைகளைவிட உயர்ந்ததென மதிக்கவேண்டும். அநேகர்கள் கேவலமென்றும் கெடுதல் விளையுமென்றும் நினைக்கக்கூடும். மதனப்பல்லியில் ஸ்தாபித்திருக்கும் க்ஷயரோக ஆஸ்பத்திரியில் கேழ்வரகு கஞ்சியே தற்காலத்தில் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. நம்தேசத்தவர்கள் கேழ்வரகு கஞ்சிசெய்யும் முறை தெரியாதவர்களா யிருந்தாலும் அதைக் கேவலமாய் நினைக்கக்கூடினவர்களாயும் அதனால் சுரம் முதலான வியாதிகள் சம்பவிக்கின்றனவென்னும் கெட்ட எண்ணத்தை கேழ்வரகின்மேல் வைத்திருப்பதால், உபயோகமற்றவைகளாகிய பார்லி முதலான கூட்டுவர்க்கங்களால் நம்மை ஏமாற்றி பணம்பரிக்கும் வர்த்தகதந்திரத்தை நம்பி நம்தேச மேலான ஆகாரங்களை பயன்படுத்த வகையறியாது மயங்கிக்கிடக்கும் நம்தேச சகோதர சகோதரிமார்களுக்கு கேழ்வரகின் குணம் சிறிதுமாத்திரம் இங்குக் கூறுவோம். நம் தேசத்தவர்கள் கேழ்வரகை மாவுசெய்து சலத்தில் ஊரவைத்து கூழ்சமைத்து உட்கொள்ளுவது வழக்கம். அல்லது மாவைக் களிசெய்து உபயோகிப்பது. களிசெய்து உபயோகப்படுத்துவதில் யாதொரு தோஷமும் சொல்லுவதில்லை. கூழ்சமைப்பதில் சில தோஷங்களுண்டு. அவை யாவையெனின், சாதாரணமாய் மாவை சலம்விட்டு கறைத்து இரண்டு மூன்றுநாள் ஊரவைத்து புளிப்பேறிய பிறகு பாகம் செய்கின்றார்கள். கூழில் புளிப்பேறியபடியால் அக்கூழானது சீதளத்தை யுண்டுபண்ணுகின்றது. இதற்கு திருஷ்டாந்தமாய் புளிப்புள்ள எந்த வஸ்துவை உபயோகித்தாலும் சலுப்புஉண்டாகும். எப்பழங்களேனும் புளிப்புள்ளவை சலுப்புள்ளவை, இனிப்புள்ளவை உஷ்ணமுள்ளவை யென்று அங்கீகரித்திருக்கின்றார்கள். இதற்குச் சான்றாக பிரஹ்தாரணிய உபநிஷத்தில் யாஞ்ஞவல்கிய மகரிஷியானவர் சொல்லுவதாவது, "சுரமுள்ள எத்தகைய புருஷரும் இனிப்புள்ள தயிரை யுட்கொள்ளலாம், அல்லது தயிரில் சர்க்கரைசேர்த்து உட்கொண்டால் தயிரினிடத்துள்ள தோஷங்கள் நீங்குவதுமன்றி உட்கொள்பவர்களிடத்துள்ள சீதள முதலான வியாதிகளைக் கண்டிப்பதே போல" என்று திருஷ்டாந்தம் சொல்லி யிருக்கின்றபடியால் புளிப்புள்ள வஸ்துவே சீதளத்துக் கேதுவானது. இங்கு கேழ்வரகால் தயார்செய்யும் கூழானது புளிப்பேறியிருப்பதால் சலதோஷ முதலான வியாதிகளுக் கேதுவாகின்றது. கேழ்வரகில் புளிப்பேற்றாமல் அப்போதைக்கப்போது தயார்செய்து உபயோகித்துவந்தால் சகலவியாதிகளையும் கண்டிக்கும். அடுத்த சஞ்சிகையில் கேழ்வரகின் உபயோகமும் அவற்றால் தீரும்வியாதிகளும் யுக்தி பூர்வமாயும் அனுபவமாகவும் புத்திக்கெட்டியவரையில் எழுதி பிறகு வியாதியின் விஷயத்தைச் சொல்லுவாம். (தொடரும்)

டாக்டர் எம். மாசிலாமணி முதலியார்

கற்கோட்டை—நாவல்

(159-ம் பக்கத் தொடர்ச்சி)

இதைக்கேட்ட அரியநாயகி திடுக்கிட்டு முன்பு கமலாபாய் இராணி கற்கோட்டைக்கு வந்திருந்தபோது அவளுக்கும் தனக்கும் நடந்த விஷயங்களையும் பதக்கத்தைக் கண்டு இராணி திடுக்கிட்டதையும் பிறகு நடந்த சம்பாஷணைகளையும் யாவற்றையும் நினைத்துக்கொண்டாள்.

செல்வராயர் வியப்புற்று "அரியநாயகி இராணியிடம் செல்கிறதா!" என்று தலையசைத்தார்.

தங்கம்மாள் "நீ எனக்குப் பித்தம் பிடித்ததென்று எண்ணிக்கொண்டிருக்கிறாய். நான்கூறுவதில் ஏதாவதுவிவகாரம் இருக்கிறதாவென்றுகேள்" என்றாள்.

அரியநாயகி:—"ஆம், நான் இராணியிடம் செல்லவேண்டியதற்குக் காரணம் இருக்கிறது. அதுமட்டுமல்ல. நான் ஜெயமடைவேன் என்று நம்பிக்கை கொள்ளக் காரணமும் இருக்கிறது" என்றாள்.

செல்வராயர்:—"சரி சரி எப்படியாயினும் அரியநாயகி இராணியிடம் செல்வதில் ஒரு பயமுமில்லை" என்றார்.

இவையாவும் கேட்ட கமலாம்பாள் சற்று நம்பிக்கையும் சந்தோஷமுமடைந்தாள்.

அச்சமயம் செல்வராயருடைய அந்தரங்க வேலைக்காரன் வந்து அழைக்க அவர் வெளியில் சென்றார். உடனே தங்கம்மாள் அரியநாயகியை நோக்கி,

"நீ நான் கூறுகிறபடி நட. நாளை காலை புறப்பட்டு திரவியசிங்கம் பிரபு கூறியபடி அக்காட்டிலுள்ள வெள்ளைக் குடிசைக்குச் சென்று அப்பிரபுவின் சகோதரர்களுக்கு அவர் கூறியபடி எச்சரிக்கைசெய்துவிட்டு நேராய் இராணியிடம்செல். அங்கு செல்லும் சங்கதியை அவர்களிடம் கூறாதே. ஆனால் பிறகு ஏதாவது சங்கதி தெரிவிக்கவேண்டுமாயின் அவர்கள் எங்கிருப்பார்கள் என்பதைமட்டும் தெரிந்துகொள். பிறகு நேராய் அரண்மனைக்குச் சென்று இராணியின் பாதங்களில் விழுந்து பதக்கத்தை அவளுக்குக்காட்டு" என்றாள்.

இதைக்கேட்ட அரியநாயகி வியப்புற்று "ஆ! இந்தப்பதக்கத்தில் மகிமையிருக்கிறது உண்மைதான்" என்றாள்.

தங்கம்மாள்:—"அதைப்பற்றி யிப்போது ஒன்றும் என்னைக் கேட்காதே. நான் சொல்வதுபோல் நட" என்றாள்.

அரியநாயகி:—"ஆகா அப்படியே நடந்து கொள்வேன்" என்றதே,

தங்கம்மாள் கமலாம்பாளை நோக்கி "குழந்தாய்! நாங்கள் ஏதோ இரகசியமாய்ப் பேசிக்கொள்கிறோமென்று மனவருத்தமடையாதே. யாவும் உனது நன்மைக்கே" என்றாள்.

கமலாம்பாள்:—"அத்தையே! அது எனக்கு நன்றாய்த் தெரியும். எல்லா விஷயங்களையும் உன் பிரியப்படி நடத்து, ஒன்றுமட்டும் கூறு. அதாவது ஏதாவது நம்பிக்கை வைக்கலாமா வென்பதை மட்டும் தயவுசெய்து கூறு" என்றாள்.

தங்கம்மாள்:—"காரியம் ஒன்றும் மிஞ்சிப்போயிராவிட்டால் நீ எவ்வளவு வேண்டுமாயினும் நம்பலாகும்" என்றாள்.

அச்சமயம் செல்வராயர் கையில் பிடித்த ஒரு கடிதத்தோடு அறைக்குள் வந்தார். அவர் இவர்களை நோக்கி,

"காரியம் அவ்வளவாய் அபாயமானதல்ல. அந்தக் கள்ளப்பயலாகிய பலராமனை இன்னும் இரண்டு வாரங்கள் பயமின்றி இங்கு வைத்துக்கொண்டிருக்கலாம். அவனிடமிருந்து ஒருமுக்கியமான கடிதம் அகப்பட்டது. ஆ! போக்கிரித் துரோகிப்பயல். தோட்டத்தில் அரியநாயகி சந்தித்தது கண்ணபிரானேயென்று அந்தப் பயல் நம்பிக்கொண்டு இராணியிடம் போய் சங்கதியைத் தெரிவித்திருக்கிறான். ஒரு அம்பால் இரண்டு குருவிகளைக் கொல்வது போல், கண்ணபிரானுக்குப் பிராணபத்தை யுண்டாக்கிவிட்டு கமலாம்பாளையும் களவாடிச்செல்ல அப்பயல் சதியாலோசனை செய்தான். அடடா! அத்தகையத் துரோகியை என் வீட்டில் வைத்து ஆதரிக்க நேர்ந்ததைப்பற்றி மிக்க விசனிக்கிறேன். இப்போது இந்தப் பத்திரத்திலிருக்கும் சமாசாரத்தை வாசிக்கிறேன் கேளுங்கள்" என்று பின் வருமாறு வாசிக்கத் தொடங்கினார்:—

"இதை வைத்துக்கொண்டிருக்கும் மனிதன் நமது விசேஷவேலையில் அமர்த்தப்பட்டிருப்பதால் நமது பாதுகாப்பில் இருக்கிறான். ஆகையால் இத்தேதிமுதல் இவன் க்ரிமினல் அல்லது ஸிவில் சம்பந்தமான எத்தகைய குற்றத்திற்கு கைதுசெய்யப்பட்டபோதிலும், அது எத்தகைய சுபாவமுடைய குற்றமெனினும் இவன் உடனே விடுதலைசெய்யப்படவேண்டியது. அதுமட்டுமல்ல. மறுபடி அத்தகைய எந்த குற்றத்திற்காகவும் இவனை யாரும் ஒருதொந்திரவும் செய்யலாகாது. நமது இராஜ்ஜியத்திலுள்ள எல்லா மாஜிஸ்டிரேட்டுகளும் நீதவான்களும், எல்லா அதிகாரிகளும் இவ்வுத்திரவிற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று இதனால் எச்சரிக்கை செய்யப்படுகிறது. ஒருவரும் இதற்கு விரோதமாய் நடக்கலாகாது.

15—ஆ எப்ரல்மீ 20உ நமது இராஜரீக அரண்மனையில் நமது ஸீலும் கையொப்பமும் வைக்கப்பட்டது.

கமலாபாய் இராணி"

செல்வராயர் இதை வாசித்துக்காட்டியபின் தன்புத்திரி, தந்தை, அரியநாயகி இவர்களைநோக்கி "பார்த்தீர்களா! இக்கள்ளப்பயல் தன் தலைமட்டும் தப்பும்படி மிக்க ஜாக்கிரதையெடுத்துக்கொண்டான்" என்றுகூறி அக்கடிதத்தை மேஜைமேல்வீசி யெறிந்தார். இரண்டொரு நிமிடங்களுக்குள் அவர்கள் வேறு விஷயங்களைப்பற்றி சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

இச்சங்கதிகள் யாவுங் கேட்டதே கமலாம்பாளுடைய முகத்தில் ஒருவித ஆச்சரியமான பிரகாசம் உண்டாயிற்று. அவள் தனக்கு மிக்க ஆயாசமாயிருப்பதாய்க் கூறவே, அவள் தந்தையும் அத்தையும் அவளுக்கு உபசார வார்த்தைகள் கூறி சயனித்துக்கொள்ளும்படி கூறிவிட்டு அறையை விட்டுச்சென்றார்கள். அரியநாயகிமட்டும் கமலாம்பாளின் முகத்திலுண்டான குறியை யுணர்ந்துகொண்டாளாதலால் அவள் தந்தையும் அத்தையும் சென்றபின் அவளை நோக்கி, "நான் கூடப் போய்விடவேண்டுமோ?" என்று கேட்டாள்.

கமலாம்பாள் சற்று நிதானித்து "ஆம். எனக்கு ஆயாசமாயிருக்கிறது சற்றுநேரம் நித்திரை செய்தால்தான் நலமாயிருக்குமென்று நம்புகிறேன்" என மொழிந்தாள். இம்மொழிகளைக் கேட்ட அரியநாயகி அவளுக்குத் தேறுதல் கூறி அறையைவிட் டகன்றனள்.

அரியநாயகியும் சென்றதே கமலாம்பாள் சட்டென்றெழுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு தன் தந்தை கோபத்தோ டெறிந்துவிட்ட இராணியின் கடிதத்தை யாவலோடெடுத்து இரண்டு மூன்றுதரம் வாசித்தாள். (தொடரும்)

ஆணி-துப்புசாமிமுதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

பிங்களவரு கார்த்திகைமீ சாலிவாகன 1839, கலியுகாதி 5018,

பசலி 1326-27, கொல்லம் 1092-93,

இங்கிலீஷ் 1917-ம்வரு நவம்பர்மீ—டிசம்பர்மீ

நவம்பர்மீ	கார்த்திகைமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
16	1	வெ	துதி-45-14	அனு-7-28	சித் 7 மர	கரிநாள்
17	2	ச	திரி-42-56	கேட்-4-25	சித்த 60	கொத்தமல்லி விதைக்க
18	3	ஞா	சது-39-39	மூல-6-21	அ 6 சித்	விவசாயம்செய்ய
19	4	தி	பஞ்-36-11	பூரா-4-59	சித் 5 ம	வெள்ளைப்பூண்டுநட
20	5	செ	சஷ்-31-21	உத்தி-1-51	சித்த 60	சஷ்டி விரதம்
				திரு-56-32		
21	6	புத	சப்-24-58	அவி-53-54	மா 54 சி	
22	7	வி	அஷ்-19-19	சதை-49-52	மா 50 சித்	7-க்குள் மழை
23	8	வெ	நவ-13-31	பூரட்-45-49	சித்த 60	கிழங்கு வகையராக்கள் நட
24	9	ச	தச-7-40	உத்-41-58	சித் 42 ம	கடலை விதைக்க
25	10	ஞா	ஏகா-1-19	ரேவ-37-37	அ 38 சி	கரிநாள்
			து-54-46			
26	11	தி	திர-52-40	அசு-35-25	சித்த 60	கர்ப்பாதானம்
27	12	செ	சது-49-54	பர-33-13	சித்த 60	பாணிதீபம்
28	13	புத	○பௌ 46-25	*கார்-32-31	அமி 33 சி	கிருத்திகை, சர்வாலயதீபம்
29	14	வி	பிர-44-53	ரோக-31-51	மா 32 சித்	விஷ்ணுதீபம்
30	15	வெ	துதி-43-55	மிரு-35-3	சித்த 60	விவாகம்
1	16	சனி	திரி-46-15	திரி-35-1	சித்த 60	எருதுகளை வாங்க
2	17	ஞா	சது-48-21	புன-38-35	சித்த 60	கர்ப்பாதானம்
3	18	தி	பஞ்-51-51	பூச-43-12	சித்த 60	விவாகம்
4	19	செ	சஷ்-56-11	ஆயி-48-36	சித்த 60	ஜெபம் பூர்த்திசெய்ய
5	20	புத	சப்-60-0	மக-55-37	சித் 58 அ	மீனம் விவாகம்
6	21	வி	சப்-1-23	பூர-60-0	சித்த 60	சித்திரங்கள் எழுத
7	22	வெ	அஷ்-6-33	பூர-1-6	சித்த 60	விதைவிதைக்க
8	23	ச	நவ-11-42	உத்தி-7-30	மரண 60	
9	24	ஞா	தச-16-14	அஸ்-13-17	அமி 13 சி	புதுபாத்திரம்புழங்க
10	25	தி	ஏகா-19-54	சித்-16-36	சி 17 அ	வேதாப்பியாசம் செய்ய
11	26	செ	துவா-22-32	சுவா-22-5	அமி 22 ம	வாகனங்கள் வாங்க
12	27	புத	திர-23-45	விசா-24-52	சித்த 60	கிணறுகள் வெட்ட
13	28	வி	சது-23-47	அனு-25-56	சித்த 60	தூண்நட
14	29	வெ	•அமா 22-41	கேட்-26-28	ம 26 அ	அமாவாசை விரதம்

(டிசம்பர்மீ)

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | பிங்களவரு மார்கழிமீ 1உ 1917ம்வரு டிசம்பர்மீ 15உ | பகுதி 6

கடவுள் வணக்கம்.

"வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லா
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா வெடுத்து ரைக்கு
மோதரிய துவிதமே யத்துவித மார்க்கத்தை
யுண்டுபண்ணு ஞான மாகு
மூகமனு பவவசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவா திகள் சம்மத
மாதலி னெனக்கினிச் சரியையா திகள்போது
மியாதொன்று பாவிக்க நா
னதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கி
னத்துவித மார்க்க முறலா
மேதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செய்:
யெந்தைநீ குறையு முண்டோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே."

"மூற்றுமோ வெனக்கினியா னந்த வாழ்வு
மூதறிவுக் கினியாய்நின் முளரித் தாளிற்
பற்றுமோ சற்றுமிலை யையோ வையோ
பாவிபடுங் கட்கலக்கம் பரர்த்தி லாயோ."

"பார்த்தனவெல் லாமழியு மதனாற் சுட்டிப்
பாராதே பார்த்திருக்கப் பரமே மோன
மூர்த்திவடி வாயுணர்த்துங் கைகாட் டுண்மை
முற்றியென் றல்லல்வினை முடிவ தென்றோ."

ஆனந்தபோதினி
பிங்களவரு மார்கழிமீ 1உ

பொறாமையும், போட்டியும்.

ஒருவன் எந்த விஷயத்திலேனும் நம்மிலும் மேலான நிலைமையை யடைந்தால் அதைக்கண்டு நாமும் அத்தகைய நிலைமையை யடைய வேண்டுமென்று முயல்வது நியாயமான போட்டியாகும். "ஐயோ! நாம் தாழ்ந்த நிலையிலேயே யிருக்க அவன்மட்டும் மேலேறிவிட்டானேயென்று மனந்தாளாது வருந்தி, அந்தோ அவன் அந்நிலையினின்றும் நம்மினும் கீழிறங்கி விடமாட்டானு" என்று கோருவது பொறாமை. சிலர் பொறாமைக் குணத்தை வைத்துக் கொண்டு பிறர் தூஷணைக்கஞ்சி "என்வரையில் நானும் அவனைப் போலாகப் பாடுபடுகிறேன். இது எப்படி கெட்டகுணமாகும்?" என்று கூறுகிறார்கள். அதாவது பொறாமையல்ல போட்டியென்று அபிநயிக்கிறார்கள். ஆயினும் அவர்கள் செய்கையால் உண்மை எப்படியும் வெளியாய்விடும். ஏனெனில் பொறாமைக்கும் போட்டிக்கும் மிக்க தாரதம்மியமுண்டு. எவ்வாறெனின்;—

(1) பொறாமை யென்பது இழிகுணமென்றே யாவராலும் கருதப்படுகிறது. அதையுடையவன் மனம் சதா எரிந்துகொண்டே யிருக்கும். அதற்கு எரிச்சல், வன்கண், ஆற்றாமை என்ற நாமங்களிருப்பதே அதற்கு அத்தாக்ஷி. பிறர் மேன்மை யடைவதைக்கண்டு ஏங்கி மனம் வேவதே பொறாமையின் சுபாவம். அதனால் அவன் உற்சாகங்குன்றித் தன் நாட்டத்தில் சித்திபெறமாட்டான். சான்றோர் வெறுப்பே யிவன் பெறும் இலாபம்.

போட்டியுடையவன் பற்றவன் மேன்மை யடைந்ததைக்கண்டு சந்தோஷப்படுவனாதலால், அவன் சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் தானும் மேன்மைய்ய யடைய முயல்வான். இவன் சான்றோருடைய மதிப்பையும் ஆசீர்வாதத்தையும் பெறுவான்.

2. பொறாமை யுடையவன் அன்னியனைப்போல் தானும் மேலேற முயல்வதற்கு என்னசெய்ய வேண்டுமோ அதை விட்டு

விட்டு, அவன் குற்றங்களை யெடுத்து வெளிதூற்றுவதையும், அவன் அவ்வுயர் பதவிக்குத் தகுதியுடையவனல்லவென்று அவனை யிழிவு படுத்திக்கூறுவதையும், அவன் அந்த உயர் நிலையை யிழக்கவேண்டுமென்று கோருவதையும் தன்வேலையாய்க்கொள்வான். இதனால் அவ்வாறு மேல்நிலையடைந்தவனையும் அவனைச்சேர்ந்தவர்களையும் தனக்கு விரோதிகளாக்கிக் கொள்வான்.

போட்டிசெய்பவன் மேல்நிலையடைந்தவனைச் சினேகமேசெய்து கொள்வான். அதனால் அவன் "நம்மைப்போல் இவனும் மேல் நிலைக்குவர நாம் வழிகாட்டி யுதவவேண்டும். இன்றேல் இவன் நம்மைப்போலாவதைச் சகியாது, நாம் பொறாமைப்படுவதாய் யாவரும் நினைப்பார்கள்" என்று கருதுவான்.

3. ஆகையால் பொறாமை விரோதத்தையும் பிரிவினையையும் உண்டாக்கும், போட்டி (Happy Competition) அப்படிச் செய்யாது. பொறாமையுடையோனுக்கு வேறு விரோதி வேண்டியதில்லை. அப்பொறாமையே எல்லாக் கெடுதிகளையும் செய்துவிடும்.

"அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது"

என்று நாயனார் கூறியதன்கருத்து இதுவேயாகும்.

போட்டியால் பிறனைப்போல் தானும் மேலேறுங்க முயல்பவன் அதற்கு வேண்டிய சாதனங்களைத்தேடி அதை யடைய முயல்வானேயன்றி, தூஷணையிலும் பிரிவினையும் விரோதமும் பாராட்டுவதிலும் ஒருபோதும் தலையிடமாட்டான்.

பிரிவினை நமது விரோதிக்கு அதிக பலத்தை யளிப்பதால் பிரிவினையே பெரிய விரோதியென்றுணரவேண்டும். ஏனெனில் அது ஒற்றுமையின் சத்துரு. உன் விரோதிகளுக்குள் பிரிவினை யுண்டானால் அது உனக்குச் செயத்தையளிக்கிறது. விரோதிகளுக்குள் ஒற்றுமை பலப்பட்டால் உன்பலங் குறைந்து அவர்கள் பலம் அதிகமாகிறது. இங்கு ஒரு சிறு திருட்டாந்தம் கூறுகிறோம்:—

"பூர்வீகத்தில் டில்லியில் அரசாண்ட (ஔரங்கஸீப் அல்லது) அக்பர் பாதுஷாவென்ற சக்ரவர்த்தி தன் அந்திய்காலத்தில் தனது சந்ததியார் மந்திரிப்பிரதானிகள் முதலியவர்களை யழைத்து வரும்படி கட்டளையிட்டார். யாவரும் சபையில்வந்து உட்கார்ந்ததே சக்ரவர்த்தி இருபது முப்பது அம்புகளை ஒன்றுய்ச்சேர்த்து பட்டுக்கயிற்றால் ஒருகட்டாய்க்கட்டி ஒவ்வொருவரிடமும் அக்கட்டைக்கொடுத்து

இதை அப்படியே யுடைப்பார்ப்போம் என்றார். ஒருவராலும் உடைக்க முடியவில்லை. பிறகு அதைவாங்கிக் கட்டையவிழ்த்துவிட்டு தனித்தனியாய் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு அம்பைக்கொடுத்து இப்போது உடையுங்கள் என்றார். அவர் சொல்லி வாய்மூடுமுன் ஒவ்வொருவரும் தம் தம்மிட மளிக்கப்பட்ட அம்பைத் தண்டு துண்டாய் உடைத்தெறிந்தார்கள். அதன்மேல் சக்ரவர்த்தி அவர்களைநோக்கி,

"நான் சொல்வதைக் கவனமாய்க்கேட்டு மனதில் நிலைக்கச் செய்யுங்கள். இப்போது நீங்கள் ஒற்றுமையின் நலத்தையும் பிரிவினையின் தீமையையும் அனுபவமாய்க் கண்டீர்கள். ஒற்றுமையே ஜயத்தையளிக்கும் பலமென்றும், பிரிவினையே தோல்வியையளிக்கும் பலகீனமென்றும் அறிந்தீர்கள். இவ்வாறே எனக்குப்பின் நீங்கள் பிரிவினை படைந்து விரோதமுண்டாக்கிக் கொள்ளாது, யாவரும் ஒற்றுமையோடு காரியங்களை நடத்திவந்தால் எந்த விரோதியாலும் உங்களை வெல்லமுடியாது. நீங்கள் பெருமையோடு க்ஷேமமாய் வாழ்வீர்கள். நம்நாடும் சீரும் சிறப்பும் விளங்கிப் பிரகாசிக்கும்.

அப்படிக்கின்றி நீங்கள் முதலில் இரண்டு கட்சியாகவும் பிறகு மூன்று நான்கு ஐந்து ஆறு இப்படி பல கட்சிகளாகவும் பிரிந்து ஒருவருக்கொருவர் விசுவாசமும் ஒற்றுமையு மின்றி, இராஜ்ஜியத்தையும் பலபாகங்களாகப் பிரித்துக்கொண்டீகளோ, உங்கள் பகைவர் உங்களை வெகு சுலபமாய் யழித்துவிடுவார்கள். நீங்களும் உங்கள் நாடும் சீரும் சிறப்பு மிழந்து சொல்லொணாத் துன்பத்திற்காளாவீர்கள். இதே நான் என் மரணத்தருவாயில் உங்களுக்குக் கூறும் புத்திமதி. ஆண்டவன் அருள் புரிவானாக" என்றார்.

சகோதரர்களே! மேற்கண்ட விஷயங்களை யேதோ சமாசாரம்போல் வாசித்துவிட்டு அசட்டையா யிருந்துவிடாதீர்கள். நமது தாய்நாடு நல்ல நிலைமையை யடையவேண்டுமாயின், நமது சந்ததியார் க்ஷேமாபி விர்த்தியடையவேண்டுமாயின் இவ்விஷயங்களை நன்றாய்ச் சிந்தித்துப் பாருங்கள். எது நன்மையை யுண்டாக்கும் எது தீமையை யளிக்கும் என்பதை நன்றாய்ச் சிந்தித்து, பிரிவினையையும், பேதத்தையும், விரோதத்தையும் உண்டாக்கும் போதனைகளுக்குச் செவிகொடுப்பதையும், அத்தகைய வழிகளில் பிரவேசிப்பதையும் நஞ்சினும் கொடியதென வஞ்சி விட்டுவிடுங்கள். அப்போது தான் ஆண்டவனும் நமக்கருள்புரிவார். வீண்கௌரவத்தை நாடிப் பிரிவினையை யுண்டாக்கிக்கொண்டால் நமது காரியசித்திக்கு நாமே

பலத்த விரோதியை யுண்டாக்கிக்கொள்வோமென்பதில் சந்தேகமேயில்லை. காரியம் மிஞ்சிப்போனபின் மனஸ்தாபப்படல் அறிவிலார் செய்கை. எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!! ஆண்டவன் உங்கள் மனதை நேர்வழியிற் திருப்புவாராக.

"விளையும்பயிர் முளையிலே"

இவ்வாக்கியத்தின் கருத்தாவது, ஒரு சிறிய செடியின் வளர்ச்சியின் செழிப்பினால் நாம் அச் செடியின் பிற்காலத்திய வளர்ச்சி எத்தன்மையதாகவிருக்குமென்று அறிந்து கொள்வதுபோல், ஒரு மனிதனுடைய இளம் பிராயத்தின் அப்பியாசம் குணம் முதலியவற்றின் தன்மையால் அவனுடைய பிற்கால வாழ்நாளின் தன்மையை நன்கு அறியலாகுமென்பதே. உதாரணமாய் மூங்கிற் செடிகள் இளங்குருத்துகளா யிருக்கும் பருவத்தில் நாம் அவைகளை எவ்விதம் வளைத்து வைக்கிறோமோ அவ்விதமே அச்செடிகள் பெரியதாக வளர்ந்து முற்றுமே யல்லாமல் அவைகளின் இயற்கை உருவத்தை அடையமாட்டா. அத்தன்மையாகவே நாம் இளம் பிராயத்தில் நம்முடைய வாழ் நாட்களை எவ்விதம் செலவு செய்கின்றோமோ அத்தன்மையே யாகும் நம்முடைய பிற்கால வாழ்வு. அக்காரணம் பற்றியே "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது," என்னும் பெரியோர் வாக்கும் கூறுகின்றது.

சிறுவர்களின் முதற் பயிற்சியானது தங்களுடைய பெற்றோர் மற்றும் தங்களுக்கு கடமைப்பட்ட பெரியோர்களைப் பொறுத்ததாகும். ஏனெனில் குழந்தை ஜனித்த காலந் தொட்டு அதற்கு கல்வி பயில இயல்பு வரும் பருவம் வரையில் அக்குழந்தை இருமுதுகுரவர்களின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதால், அப்பருவங்களில் குழந்தை மதலைச் சொற்களை தன்னுடைய நாவினால் வெளியிடுவது தன் பெற்றோர் முதலிய மற்றோர் பேசும் வார்த்தைகளை செவியிடுகிறபடியால் ஏற்படும் உணர்ச்சியினாலே யாகும். ஆகையால் குழந்தைகளின் முதற்பயிற்சி பெரும்பாலும் பெற்றோர்களைப் பொறுத்ததாகும். "பருவத்தாலன்றிப் பழா" என்னும் கருத்துக்கிசைய, குழந்தைகளுக்கு கல்வி கற்கப் போதுமான காலம் வரும்வரையில் அக் குழந்தைகளிடத்து அவர்களின் பெற்றோர்கள் எவ்வளவுக் கெவ்வளவு கவனம் செலுத்துகின்றார்களோ அவ்வளவுக் கவ்வளவு குழந்தைகளின் திறமை ஏற்படும். அதற்குப் பின் அவர்கள் குழந்தைகளைப் பாடசாலையில் கல்வி கற்க அனுப்பிவைக்கிற படியால் அக்கல்வி பயிலும் காலம் தொட்டு அவர்களுடைய மாணாக்க ஆயுள் முடியும் வரையில் அவர்களுடைய குணமும் நல்லொழுக்கமும், சகவாசமும் எத்தன்மை யனவாகப் படிகின்றனவோ அத்தன்மையை யோட்டியே அவர்களுடைய வாழ்நாள் உயர்வையோ தாழ்வையோ அடையும். அக்காரணந் தொட்டே மானிட ஆயுளில் பலவாறாய் பகுக்கப்படும் பிரிவுகளில், மாணாக்க வாழ்க்கை (Student life) மிகவும் முக்கியமானது. ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் தன்தன் மாணாக்க வாழ்க்கை

யாகிய சிறு பிராயத்தின் பயிற்சியினாலும் வழக்க வொழுக்கத்தாலும் தான் அப் பருவத்தில் நடந்து கொள்ளும் தன்மையே தன்னுடைய பிற்கால வாழ்வின் உருவமாய்ப் பெரும்பாலும் அமையு மாகையால், ஒவ்வொருவரும் தன் தன் கல்வி பயிலும் காலத்தை முக்கியமாய் நோக்கமிட்டு தன் தன் தற்கால நிலைமை பிற்கால வாழ்நாளுக்கு எத்தன்மையாலும் இடையூறு விளைவிக்காவண்ணம் தன்னுடைய பகுத்தறிவென்னும் ஆராய்ச்சியால் நன்கு உற்றுணர்ந்து சீர்திருத்திக்கொள்ளவேண்டும். (அவரவர்கள் காரியத்தில் அவரவர்களே ஜாக்கிரதையும் கவலையு மெடுத்துக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமானபோதிலும், இப் பருவத்தில் சிறுவர்கள் தங்கள் ஞானத்தை அவ்விதம் செலுத்தும் இயல்பில்லாதவர்களா யிருப்பார்களானதால், இவர்களை நல்லொழுக்கமுறையே செலுத்துவது பெற்றோர்களுடைய முக்கியகடமைகளி லொன்றாகும்) ஏனெனில் இம்மானுக்க வாழ்க்கை பெரும்பான்மை இளய பிராயங்களில் நடை பெருகிறபடியால் அக்காலங்களிலுண்டாகும் பயிற்சி வளரும்பசுமரத்தில் ஆணி அறைந்தாற்போல் மனதில் நன்கு வேரூன்றிப் பதிகின்றபடியால் நாம் நம்முடைய வாழ் நாள்களுக்குள் முக்கியமான இக்காலத்தில் நம்முடைய பகுத்தறிவென்னும் நன்கொடையால் (God's Gift) நாம் நற்குணத்தையும் நன்னடக்கையையும் பெரும்பான்மை நம்முள் குடிகொள்ளுமாறு செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் நம்முடைய பிற்கால வாழ்நாள் மிகவும் மேன்மையாயும் நற்பயனை விளைவிப்பதாயு மிருக்குமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. அக்காரணத்தை முன்னிட்டே "பருவத்தே பயிர்செய்" என்னும் ஔவையின் வாக்கும் கூறலாயிற்று. மேற்சொல்லிய காரணங்களை முன்னிட்டு ஒவ்வொரு மனிதனுடைய வாழ்நாளிலும் இப்பருவம் மிகவும் கவனிக்கத் தக்கதென்று நாம் உணரவேண்டும். மேலும் "இளமையிற் கல்" என்னும் ஔவை முதுமொழியால் நாம் முதுமைப் பிராயத்திலே கற்கும் கல்வி எறுதென்றும் இளமைப் பிராயத்தை வீணாக்காமல் கற்கவேண்டியவைகளை கற்றுக்கொள்ள வேண்டுமென்பதும் இங்குமுக்கியமாய்க் கருதத்தக்கது.

மேலும் இளம்பிராயத்தின் பழக்க வழக்கங்கள் மனிதனின் பிற்கால வாழ் நாளில் எவ்விதம் ஒவ்வுமென்பதை நாம் எவ்வாறுணரலாகுமெனின்;-ஒவ்வொருவரும் தன்தன் இளம்பிராயத்தில் ஒவ்வொரு விதமான குறித்த விளையாட்டுகளில் மிக்க ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்கள். அவரவர்களுடைய இளம்பிராய விளையாட்டுகளுக்கொத்தவாறு அவரவர்கள் மன நோக்கங்கள் அவ்வவ்விதமான கருமங்களில் செல்லுகிறபடியால் அவரவர்களுடைய வாழ்நாளிலும் அதற்கிசைந்த வேலைகளில் அமர்ந்து தங்களுடைய வாழ் நாளைக்கழிக்கிறார்கள். உதாரணமாக "ஒரு பையன் தன்னுடைய இளம்பிராயத்தில் பாதைகளில் ஜலம் ஓட நேரிடும் காலங்களில் அஜ்ஜலத்தை ஒரு சிறிய குளமாகத் தேக்கி அங்கிருந்து அநேக சிறிய கால்வாய்களை யுண்டாக்கி, அச்சலத்தை அச்சிறிய கால்வாய்களின் வழியாய்ப் பாயும்படி செய்கிறான்" அவ்வித விளையாட்டில் தன்னுடைய புத்தியைக்காட்டிய அச்சிறுவன் தன்மானுக்கர் வாழ்வு முடிந்த

பின் உலக-சஞ்சாரத்தில் புகுங் காலத்தில் தன் இளம் பிராயத்தில் செய்துவந்த விளையாட்டுகளைக் கருதாவிட்டாலும் தன் இயற்கைக் குணத்தால் (Natural Habit) அவ்வித வேலைகளில் விருப்புற்று அதற்குரிய கல்விகளைப் பயின்று தான் அவ்விதவேலைகளிலேயே அமர்ந்து தன் வாழ்நாட்களைச் செலவிடுகிறான். அனேகருடைய பழக்கத்தால் உண்மை நன்கு புலப்படும். இதனால்தான் "விளையும்பயிர் முளையிலே" என்னும் பெரியோர் வாக்கும் பிறந்தது.

சிறுவர்கள் ஒரு நற்காரியத்தைச் செய்யத் தலைப்படுகிறதானது தங்களுடைய சுய அறிவைக் கொண்டே என்பது மிகவும் அரிது. ஆனால் பெரும்பான்மை ஊக்கமுள்ள மற்றவர்களுடைய செய்கையைத் தாங்கள் கண்டு அறிவதால் அவ்விதமே தாங்களும் செய்ய முயல்கிறார்கள். அப்படி யவர்கள் ஊக்கம் பெருவதற்குத் தக்க-ஏதுக்கள் என்னவெனில் அவர்கள் அவ்வித ஊக்கமுடையோர்களுள் கலந்தாகிலும் அடிக்கடி சந்திக்கவாகிலு மிருக்கிற நிலைமையினாலென்பதாம். ஆனால் அவர்கள் வேறுவிதமாய் ஊக்கமடையக்கூடாதாவென்று கேட்குங்கால், அடையவுங்கூடும். ஆயினும் பெரும்பான்மை மேற்சொன்னவிதம் ஊக்கம் பெருகின்றதைப்போல் வேறு வகைகளால் அவர்கள் அவ்வளவு பூர்த்தியான ஊக்கத்தை அவர்களுக்குப் பிரயோஜனத்தைத்தரத்தகும் வண்ணம் பெருகிறதில்லை. ஆகையால் (Environment shapes the character of a man) அதாவது "சகவாசத்தால் ஒருவனுடைய நடக்கை உருவத்தையடைகிறது" என்னும் வாக்கியத்தின் கருத்து இங்கு நன்கு உணரத்தக்கது.

நம்முடைய செய்கையின் பயனாக நாம் ஒரு பழக்கத்தைப் பெறுகிறோம். அப் பழக்கமானது நம்மைவிட்டு அகலாததால் நாம் செய்யும் காரியங்கள் இன்னதென்று நன்குணர்ந்து செய்வோமானால் நாம் கெட்ட பழக்க வழக்கத்திற்கு ஆளாகமாட்டோம். இளம்பயிர்களில் புற்பூண்டுகள் முளைத்து பயிரின் செழுமையான வளர்ச்சியைக் கெடுத்து விடுகிறதுபோல், சிறுவயதில் படிந்த கெட்ட பழக்கங்கள் பிற்காலத்தில் நற்காரியங்களைச் செய்ய இடங்கொடாமல் தடுத்துவிடும். கெட்ட பழக்கமானாலும், நல்ல பழக்கமானாலும் சிறு வயதில் ஒரு மனிதனுடைய மனதில் படியுமானால் எக்காலத்திலும் அம்மனிதனுடைய இருதயத்தை விட்டு அவை அகலமாட்டா. ஆகையால்தான் மனிதனுடைய இளம்பிராயத்தில் எடுத்துக்கொள்ளும் ஜாக்கிரதையே அவனுடைய பிற்கால வாழ்வுக்குக் காரணமாகும். இளம் பிராயத்தில் மனிதனுடைய பயிற்சி முக்கியமாயிருப்பதுபோல், தேக ஆரோக்கியத்திற்கும் சிறு பிராயத்தில் எடுத்துக் கொள்ளும் ஜாக்கிரதையும் கவனமுமே காரணமாகும். ஏனெனில் ஒரு மனிதனுடைய இளம்பருவத்தில் அவனுடைய தேகம் க்ஷீண தசை யடையுமானால் அது பிற்காலத்தில் மறுபடியும் ஆரோக்கியத்தை யடைவது மிகவும் துர்லபம். இவைகள் நல்லவிதமாய்க் கைகூடவேண்டுமானால் ஒரு மனிதன் "இணக்கமறிந்திணங்கு" என்னும் ஔவையின் வாக்கின் கருத்திற்கியைய ஆராய்ந்து பார்த்து சினேகஞ் செய்ய வேண்டும். இல்லாவிடில் அந்தச் சினேகம் துன்பத்தைத் தருமென்பதனால், தன் இளம் பிராயத்தில் செய்யும் சிநேகித

மெத்தன்மையாலும் தனக்கு யாதொரு தீங்கும் விளைவிப்பதற்கு ஏதுவாகாமல் நாலுவிதத்திலும் நற்பயனை விளைவிக்கக் கூடியதாயிருக்கவேண்டும். ஆனதால் நாம் சாகுபடி செய்கின்ற பயிர் நமக்கு நல்ல பயனைத் தரவேண்டுமென்கிற ஆவலுள்ள நாம், அப்பயிர் இளமையிலேயே நன்கு செழித்து, கடைசிவரையில் தழைத்துச் செழிப்புற்று நீடித்து வளரவும் நற்பயனை விளைவிக்கவுந் தக்க எரு முதலிய உணவுகளை வேண்டும் வரையில் அதற்குத் தக்க காலத்தில் நாம் போடாது போனால் அவ்விதம் ஆவலுடன் நாம் நற்பயனை எதிர்பார்ப்பதால் பயனுண்டோ? இல்லை என்பது திண்ணம். அவ்விதம் நாம் வேண்டுமளவு தேவையான உணவுப்பொருள்களை அதற்குத் தக்கபருவத்தில் அளித்திருப்போமானால் நாம் கண்குளிர அதன் அழகிய செழுமையான வளர்ச்சியைக் காண்பதுமன்றி அதனால் நாம் தக்க பயனை யடைவோமென்பதிலும் ஐயமில்லை.

ஆகையால் (Child is the father of the man) "விளையும்பயிர் முளையிலே" என்பதுபோல் நாம் வளர்க்கின்ற பயிருக்கொத்த நம் சிறுவர்களையர்களுடைய யிளம்பிராயத்தில் அவசியமாய் மிக்க ஜாக்கிரதையோடும் கண்ணோக்கத்தோடும் கவனித்து, அவர்களுக்கு நூற்பயிற்சியும், நல்ல சகவாசமும் பொருந்தியிருக்கும்வண்ணம் செய்யவேண்டும். அப்போதுதான் பிற்காலத்தில் அவர்கள் வாழ்வும் கண்ணியமும் சுகமும் சந்தோஷமும் பொருந்தியதாயிருக்கும்.

கோஸ். அ. துப்துல் மஜீது.

மௌனத்தின் மஹிமை.

அண்டாண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்து சகல ஜீவர்களையும் சிருஷ்டித்துக் காப்பவர் ஈஸ்வரன்.

அவருக்கு ஸர்வேஸ்வரனென்றும் ஸர்வக்ஞரென்றும் ஸர்வவியாபி என்றும் பெயர். அவருடைய அநேக சிருஷ்டிகளின் தோற்றங்களுக்குள் மானிடவர்க்கமே மிகச்சிறந்ததெனப் பொருந்தும். அம்மானிட வர்க்கத்தின் பலஜாதிக்குள் சிறந்து விளங்குவது ப்ராம்மணஜாதியே.

எங்ஙனமெனில்

"கேனவிப்ரா விசேஷேண தாரயந்தி தாந்திச"
"ஜபைர் மந்ரச்ச ஹோமச்ச ஸ்வாத்யா அத்யயனேனச நாவம்
வேதமயீம் க்ருத்வா தாரயந்தி தாம் திசா"

யாதுகாரணத்தினால் பிராமணர்கள் ஜனனமாகிற ஸாகரத்தைக்கடந்து மற்றவர்களையும் கரையேற்றுகிறார்கள் என்றால், ஜபமென்ன, மந்திரபூர்வமான ஹோமங்களென்ன, வேதமோதுதல்என்ன, ஒருவர்க்கு வேதாப்யாஸம் செய்வித்தல் என்ன இத்தகைய கார்யங்களாலேயே தான்மாத்திரம் அல்லாமல் கப்பலானது எவ்வாறு தன்னை யடைந்தவரைக் கரைசேர்க்கிறதோ அதுபோலவே தங்களை யடைந்தவரையும் கரைசேர்க்கின்றனர்.

அதுவுமல்லாமல் சிருஷ்டி ஆரம்பகாலத்திலேயே ப்ராம்மணர்கள் ப்ரம்மாவின் முகத்திலிருந்தும் க்ஷத்திரியர்கள் புஜத்திலிருந்தும் வைசியர்கள் தொடையிலிருந்தும் சூத்திரர்கள் பாதத்திலிருந்தும் உண்டானதாகக் கூறப்படுகிறது.

இதனால் இரண்டுதத்துவங்கள் விளங்குகின்றன.

யாதெனில் எப்படி இன்னான்கில் ஒரு அங்கம் இல்லாதவன் கிரியைகள் செய்ய வருத்தமுறுவானோ, அதுபோலவே இன்னான்கு வருணத்தாருக்கும் ஒற்றுமை இல்லாவிடில் காரியங்கள் நடவாது என்றும்,

"ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிரப்ரதானம்"

என்றதுபோல் மனிதனுடைய அவயவங்களில் சிரஸானது எப்படி சிறந்து விளங்குகிறதோ, அதுபோல் எல்லா வகுப்பினருக்குள்ளும் பிராம்மணர் சிறந்தவரெனக் கருதப்படுகிறது.

இத்தகைய மேன்மைபெற்ற நாம் மோக்ஷத்தை எவ்வளவு நெருங்கினவர்களாக இருக்கிறோம் என்பதை பலர் அறியாமல் மேல்நாட்டில் உதித்தவரே மிகச் சிலாக்யமானவர்கள் என மதித்து அவர்களின் நடை யுடை பாவனையைப் பின்பற்றுகிறார்கள்!!

இஃதெப்படி இருக்கிறதென்றால் மிகப்பசியால் வாடிய கோழியானது குப்பையைக் கிளறிப்பார்க்க அதில் மூன்று மாணிக்கங்கள் கிடைக்கப்பெற்றதால் மிக் வருத்தமுற்று, இம்மாணிக்கங்களுக்குப் பதிலாக மூன்று கடலைகளோ அல்லது மூன்று கிருமிகளோ கிடைக்கப்பெறின் எவ்வளவு ஸந்தோஷமுள்ளவனாய் இருப்பேன் என்று வருந்தியதுபோ லிருக்கிறது. அதுபோல் ப்ரம்மதத்துவத்தை யுணர்ந்து ப்ரம்ம தேஜஸுடன் விளங்கவேண்டிய ப்ராம்மண ஜன்மத்தை யடைந்தும் நம்மிலும் குறைந்த ஆசாரத்தை யுடையவர்களைப் பின்பற்றுவது மிகக்கேவலமானதே.

இது நிற்க,

ஈச்வரனின் அம்சபூதமான மானிடன் அவரைச்சேர பலவழிகள் இருக்கின்றன. அவைகளுள் நோன்பும் காயக்கிலேசமும் சித்தசுத்தியுமே முக்யமானவைகளாக இருக்கின்றன.

நோன்பென்பது கொன்றுதின்னாமை என்றவாறு ஜீவஹிம்ஸை செய்யாதிருத்தலே முக்யமான விரதம்; ஆதல்பற்றியே ஆன்றோர்.

"அஹிம்ஸாஞ்ச ப்ரதமம் தர்மம்"

என்றும், ஈஸ்வரனுக்குப் பிரியமான எட்டுபுஷ்பங்களில் முக்யமானது அஹிம்ஸையே

"அஹிம்ஸாஞ்ச ப்ரதமம் புஷ்பம்"

என்றும் கூறி யிருக்கின்றனர்.

இரண்டாவது காயக்கிலேசமென்றால் சரீரத்தை ஒடுக்குவது என்று கருத்து; அதாவது விருப்பு வெறுப்பற்று சரீரத்தைத் தன்வசப்படுத்தலே. சரீரத்தை நாம் அடக்கியாண்டால்தான் ஆடித்திரியும் நம்மனதையும் ஓர்வழிப்படுத்தக்கூடும். மனதையடக்கினால்தான் சித்தமானது சுத்திப்படும். சித்த சுத்தியே பரமாத்மாவை அடையும் வழியும் ஜன்மஸாபல்யமார்க்கமுமாய் இருக்கிறது. இத்தகைய மனோநிலைவாய்த்தவரே மஹாத்மாக்கள் எனக் கூறப்படுவோர். இத்தகைய மஹான்கள் ஈசனாகவும், தன்னினின்றும் விலகிநிற்கும் மாயைஎன்னும் போர்வையை வெளிக்குப்போர்த்தி, மனுஷ்யராகவும், நீறுபூத்தநெருப்புப்போல காணப்படுவார். அவர் எல்லாவிதமாகவும் தோற்றப்படுவார்கள். அவரைக்கண்டறிதல் மிக அருமை. இவர்களே அணிமா, மஹிமா, ல஘ிமா, கரிமா, ப்ராப்தி,

ப்ராகாம்யம், ஈசத்வம், வசித்வம் என்னும் அஷ்டமாஸித்திகளும் ஸித்திக்கப் பெற்ற பெரியோர். இத்தகையோரின் ஸித்திகளில் மௌனஸித்தியென்பது ஒன்றாய் இருக்கிறது. மௌனமென்றால் பேசாமை என்றுபொருள்.

இதனால் ஸாதிக்கக்கூடாதவை எல்லாம் ஸாதிக்க வல்லமையுடையவர்களாவர்கள்.

எவ்வாறெனில், எப்படி ப்ராணாயாமத்தினால், வெளியில்போகிற ஸ்வாஸங்கள் அடக்கப்பட்டு ஆயுள் விருத்தியாகிறதோ அதுபோல் பேசுவதனால் செலவழியப்பட்ட சிலசக்திகள் மௌனத்தால் வெளிப்போகாமல் உள்ளிருத்தப்பட்டு ஆயுள் வளருகிறது. இஃதன்றியும் மௌனம் பலவிதமான பாவங்களில் வீழ்வதினின்றும் நம்மைத் தடுக்கலாகும். பாம்பைப்போல் பொந்துக்குள் மறைந்து கிடக்கும் நாவானது மற்றோரை வன்சொற்களால் தீண்டாமல் பாதுகாக்கப்படலாம். ஆதல் பற்றியே "மௌனம் ஸர்வார்த்தஸாதகம்" என்றோர் மூதுரையும் வழங்குகிறது. இதற்குத் திருஷ்டாந்தமாய் ஒரு சிறுகதை கூறுவோம்.

ஓர் காலத்தில் மூன்று கந்தர்வர்கள் ஆகாயமார்க்கமாய் விமானத்திலேறிச் சென்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது மிகப்பசியால் வாடிக்கொண்டிருந்த ஓர் பாம்பானது ஒருதேரையைப்பிடித்து தின்பதைக்கண்ட ஓர் கந்தர்வன் ஐயோ! பாவம் எதேச்சையாய்ச் சென்ற இத்தேரையை இக்கொடிய பாம்பானது ஏன் தின்னவேண்டும் என்று உருக்கப் பகர்ந்தான். உடனே பாம்பு தன் வாய்த் தேரையை விடுத்து பூமியில் சுருண்டு விழுந்தது. பாம்பின் பசியின் சாபம் அக்கந்தர்வனைச் சாரவே அவன் தன் விமானத்தினின்றும் கீழேவிழுந்துவிட்டான். அதுகண்ட இரண்டாம் கந்தர்வன் தேரையானது பாம்பின் ஸஹஜ ஆஹாரமாய் இருக்க அதைவிடுத்து ஏன்சுருண்டுவிழுகிறது? என்றான்.

அதுகேட்ட பாம்பானது மறுபடியும் தேரையைத் தின்ன ஆரம்பிக்க அத்தோஷம் அவனைச்சாரவே அவனும் ஆகாசத்திலிருந்து கீழ்விழுந்தான். இதைக் கண்ணுற்ற மூன்றாம் கந்தர்வன் எல்லாவற்றையும் படைத்துக் காத்து ஸம்ஹரிக்க ஈசன் இருக்க நமக்கு யாதொன்றும் ஸம்பந்தமில்லை யெனக் கருதியவனாய் மௌனமாய்ச் செல்ல, அவனுடைய விமானம் மேலே கிளம்பிச் சென்றது. இதனால் மௌனத்தின் சிறப்பு நன்கு விளங்குகிறது.

இத்தகைய மேன்மை பெற்ற மனோ மௌனத்துடன் தபசுசெய்யும் பெரியோர்களுக்குப் பசிதாக மிருப்பதில்லை. ஏனெனில் ஈசனால் அமிர்தத்திற் கொப்பாகிய ஓர் வஸ்து நம் சிரசில் வைக்கப்பட்டிருக்கிறது. நிம்மதியாய்த் தபசு செய்யும் அப்பெரியோர்களுக்கு அவ்வமிர்தமானது நேராய் உந்தியில் விழுகிறபடியால் பசிதாக மிருப்பதில்லை; இணையற்றதான ஸமாதியில் இருக்கும் அப்பெரியோர்களுக்கு நேமம் அனுஷ்டானம் யாதொன்றுமில்லை. "பெரு நெருப்பிற் கீரமில்லை" என்றவாறு அத்தகைய மஹாத்மாக்களை யாதொரு பாபங்களும் அணுகா.

முற்காலத்தில் ஜடபரதர் என்றொரு மஹாத்மா இருந்தார். அவர் பூர்வஜன்மத்தில் ராஜாவாய் இருந்து பிறகு ரிஷியாய்க் காட்டில் தபசுசெய்துகொண்டிருந்தார். ஆகாரார்த்தமாய்க் காட்டில் செல்லுகையில் வழியில் அனாதியாய்க் கிடந்த ஓர் மான் குட்டியைப் பார்த்து இரக்கத்துடன் எடுத்து வளர்த்துவந்தார். ராஜ்யம் பெண்டுபிள்ளை பொருள் இவைமுற்றும் துறந்த தபசியான அவருக்கு நாளடைவில் இம்மான் குட்டியினிடம் அதிக வாச்சல்யம் உண்டாய்விட்டது. கடைசியில் அவர் அந்தியகாலத்தில் ஈசனை நினைந்து தன் பிராணனை விடாமலும் எல்லாவற்றையும் காக்க எல்லாம் வல்ல பரம்பொருள் ஒருவர் இருக்கிறார் என்பதை என்னாதவருமாய், மான்குட்டியை யார் பாதுகாப்பார் என் றெண்ணமிட்டுக் கொண்டே தன் பிராணனை விட்டார். ஆகையால் அத்தகைய பெரியோர்க்கும் மான்ஜன்மமெடுக்க நேர்ந்தது. அப்படி மான்ஜன்மத்தில் வந்த அவர் மான் கூட்டங்களுடன் சேராமல் பூர்வக்ஞானமுடையவராய் இருந்தமையால் பின்பு மனிதஜன்மமும் ஏற்பட்டது. ஏற்படினும் பூர்வக்ஞானமுடைய அம் மஹாத்மாவானவர் இனி நாம் ஜன்மத்தை யொழித்து மேல் போக வேண்டும் என்று கருதினவராய் வாயால் ஒன்றும் பேசாமல் எப்பொழுதும் ஸமாதியிலேயே இருப்பார்.

அதுகண்ட பெற்றோர் அவருக்கு ஜடபரதர் எனப் பெயரிட்டார்கள். சிறிதுநாள் சென்றதும் வாயால் பேசாத பரிபூரணரான அப்பெரியோரை மூடனென்று கருதிய பெற்றோர் அவரை வீட்டைவிட்டுத் துறத்திவிட்டார்கள். ஒன்றுக்கும் உதவாதவ னென்று துறத்தப்பட்ட அப்பெரியார் பேரானந்தம் கொண்டு காட்டில் தபசு செய்துகொண்டிருந்தார். இப்படி இருக்கையில் ஓர்நாள் ஞானத்தை விரும்பிய ஓர் அரசன் அருகாமையில் வசிக்கும் ஓர் மகாத்மாவிடம் உபதேசம் பெரும்பொருட்டு பல்லக்கில் அக் காட்டின் வழியாய் வந்தான். பல்லக்கு மெதுவாய்ச்செல்லும் காரணம் யாதென்றரசன் போயிகளை வினவ, அவர்களும் இன்னம் ஒரு ஆள் தேவையென்று சொன்னார்கள். அரசன் வழியில் கண்டவர்களை சேர்த்துக்கொள்ளுங்கள் என்றனுமதி கொடுத்தான்.

அவ்வாறே மூடர்களான அப்போயிகளும் அங்கு தபசு செய்துகொண்டிருக்கும் அம்மஹாத்மாவான ஜடபரதரைத் தட்டிஎழுப்பி தங்கள்கூடப் பல்லக்கைச் சுமக்கச் செய்தார்கள். ஜீவஹிம்ஸையைக் கனவிலும் கருதாத அப்பூமானும் பாரம் சுமக்கமுடியாது, மெதுவாய்ச்செல்ல அரசன் கோபம்கொண்டான். அதற்குப் போயிகள் புதிதாய்வந்த யோகியின்மேல் குறைகூற அரசன் அவரை இரண்டு அடி அடிக்கச் சொன்னான். அவ்வாறே அடியுண்ட ஜடபரதரும் இவனுக் குபதேசிக்க இதுதான் தக்கசமயம் எனக் கருதினவராய் மௌனத்தை விடுத்து, ஓ! அரசே பல்லக்கில் போகும் நீ யார்? உன்னைச் சுமப்பது யார்? எல்லாம் பரப்ரம்மத்தின் அம்சங்களல்லவா? என்றுரைக்கக் கேட்ட அரசனான திடீரென்று பல்லக்கை விட்டிறங்கி அவர் பாதத்தைப் போற்றிச் சரணம் செய்தான்.

"நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்"

என்றவாறு ஜடபரதர் அரசனை மன்னித்து மஹா கருணையுடன் நீ உபதேசம் பெறப்போவது முக்கியந்தான், ஆகிலும் ஜீவகாருண்யமும், அரசனாகிய உனக்கு எல்லாரையும் தன்னைப்போல் பாவிக்கும் குணமும், "குருவைக்காணப் போகும் உனக்கு வணக்கமும் அத்யாவசியமாய் இருக்க வேண்டும்" என்றார். அதுகேட்ட அரசனும் மிக அன்பு வினயத்துடன் பல்லக்கை விடுத்து நடந்து சென்றான்.

இது இங்ஙனமிருக்க, இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது யாதெனில், மஹாத்மாக்கள் நீறுபூத்த நெருப்பைப்போல் உலகில் உலவுவார்கள் என்றும் தக்க சமயத்தில்தான் தங்கள் மஹிமையை வெளியிடுவார்களென்றும் உணர வேண்டும். ஆனால் வெளிக்குப் போலிவேஷம் போடுவரை நாம் இங்கு குறிப்பிட வில்லை. சகலத்தையும் கற்றுணர்ந்து மாயையைக் கடந்து மறைவிலிருக்கும் பொருளை யுணர்ந்து அடங்கி இருப்போரையே விவகரிக்கின்றோம்.

இத்தகைய மேன்மை பெற்றோர் ஜனஸங்கத்தை நீக்கி ஏன் காட்டில் வாஸம் செய்கிறார்கள் என்றால், அசஞ்சலமானதும் மனதைக் கவராததுமான

தனிமையானது இவர்களின் ஸமாதிக்கு உற்றதுணையாய் இருக்கிறது. ஆதல் பற்றியே நம் மூதாட்டியாகிய ஔவையும் "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்று கூறி இருக்கின்றார். இதற்குதாரணம் கூறுவோம்.

கல்யாணமாகும் தருணத்திலிருந்த ஓர் குடியானப் பெண்ணைப் பார்க்க வரான் வந்துவிடவே சோறுசமைக்க அரிசியின்மையால் நெல்லுக் குத்தவேண்டி வந்தது. அப்பொழுது அவள் கையில் இருந்த இரண்டு வளையல்களி லிருந்து ஒலி கிளம்பிற்று. ஆகையால் மிக வருத்தமுற்றவளாய் தன் வளையல்களில் ஒன்றை உடைத்து பிறகு சத்த மின்மையால் சந்தோஷத்துடன் குத்தி எடுத்து சமைத்தாள். அதுபோல் இரண்டுபேராய் இருந்தாலும் மௌனத்திற்கு பங்கம் வருமாகையால்தான் அவர்கள் தனிமையை விரும்புகிறார்கள்.

நம் தமிழ் நாட்டு மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமானவர்

"கனியேனும் வரியசெங் காயேனும் உதிர்சாகு கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப்புசித்துநான் கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற் கெண்ணினேன் எண்ணமிது சாமிநீ அறியாததோ?"

என்று கூறியதால் இத்தகையோர் மௌனத்தை எவ்வளவு சிறப்பித்துக் கூறி யிருக்கின்ற றென்பது நன்கு விளங்குகிறது.

"கண்ணே கருத்தே என் எண்ணே எழுத்தே கதிக்கரிய மோனவடிவே"

என்றதால் அவர்கள் ஈசனையே மௌனவடிவாய் கூறி இருக்கின்றன ரென்பதும் நன்கு பலப்படுகிறது.

இத்தகைய மேன்மைபெற்றோருக் கென்றே ஈசனால் அமைக்கப்பட்டுள்ள நிம்மதியான வனங்கள் சுற்றிலும் மலைக்குகைகளால் சூழப்பட்டு அருகாமையில் ஸ்படிகம்போலுள்ள தடாகங்கள் தாமரை ஆம்பல் நீலோத்பலம் முதலிய புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டு அவர்களின் ஹ்ருதயத்தில் பரமாத்மாவானவர் எப்படி குதூஹலித்திருப்பரோ அவ்வாறே வெளியிலும் ஆனந்தமானது தாண்டவமாடுகிறது.

இத்தகைய சிறப்பில் 1000-த்தில் ஒரு பங்கு நாம் அடையவேண்டின் நம் மூடைய காலத்தைச் சிறிதும் வம்பிலும் வீண்வார்த்தையிலும் அனாவசியமான தூஷணையிலும் கழிக்காமல் நாளின் ஒவ்வோர் நிமிஷத்தையும் பகவானிடம் உள்ளன்புடன் செலுத்தியமனதை உடையவராய் ஸதாசாரமுடையவராய் இருக்க வேண்டுமென்பதை நன்கறிய வேண்டும்.

சொற்சுவை பொருட்சுவை என இருசுவை பொருந்திய எளிய நடையிலும் தேனீயானது அதிமதுரமாய்ச் சேர்க்கும் தேனையொத்த வித்வத் சிரோமணிகளின் வியாஸங்களை அடைந்து, புத்தியை விசாலப்படுத்தக்கூடிய பல நீதிகளையும் கற்பித்து, பரோபகாரத்திற் கென்றே அவதரித்து தமிழர் குலதிலகமாய் விளங்காநிற்கும் நம் ஆனந்தபோதினியானது சந்தாதார்கள் அன்பெனும் ஹிருதயத்தில் நன்கு வேரூன்றி செழித்தோங்குமாறு எல்லாம் வல்ல ஈசனைப் பிரார்த்திக்கின்றோம்.

S. P. ஓர் ஸகோதரி.

சித்தி-முத்தி.

நமது சஞ்சிகையின் சந்தாநேயர்களில் சாத்திராவிசாரணைசெய்யும் இரண்டொருவர் சித்திகளாலடையும் பயன் இன்னவையென்பதும், அவற்றால் முத்திகிட்டுமாவென்பதும், சிலர் சித்தர்நூல்களால் காயசித்தி பெறுவதாய்

இயம்புவது உண்மைதானாவென்பது முதலான சந்தேகங்களைப்பற்றி சஞ்சிகையின் மூலமாய்த் தெரிவிக்கும்படி விரும்பினராதலின் இதை வரையலாயினோம்.

சித்தி

சித்திகள் எட்டுபிரிவுகளாய் கூறப்பட்டிருக்கின்றன. அவை, (1) அணிமா, (2) மகிமா, (3) கரிமா, (4) இலகிமா, (5) பிராப்தி, (6) பிராகாமியம் (7) ஈசத்வம் (8) வசித்வம் ஆகிய வெட்டாம். இதனாற்றான் இவற்றிற்கு அஷ்டமாசித்திகள் என்று பெயர்வந்தது.

இவற்றில்—

1. அணிமா (என்றால்)=தேகத்தைத் தூக்கினால் அணுவிலும் இலேசாகத்தோன்றுதல்.
2. மகிமா=தேகத்தைத் தூக்கினால் பெருமலையினும் பாரமாயிருத்தல்.
3. கரிமா=தேகத்தை யதிக பிரம்மாண்டமானதாய்ச் செய்துகொளல்.
4. இலகிமா=தேகத்தை மிக்க சூக்குமமானதாய்ச் செய்துகொளல். (காற்றுநுழையும் சிறுதுவாரத்தில்கூட நுழையத்தக்கதாய்)
5. பிராப்தி=நினைத்தமாத்திரத்தில் எந்த உலகிற்குவேண்டுமாயினும் சென்று சஞ்சரித்தல், எதுவேண்டுமாயினும் கிடைக்கச் செய்துகொள்ளுதல்
6. பிராகாமியம்=ஒருதேகத்தைவிட்டு வேறொருதேகத்திற் பிரவேசித்தல். இதைப் பரகாயப் பிரவேசம் என்பர்.
7. ஈசத்துவம்=ஈசுவரனைப்போல் சிருஷ்டி, திதி முதலிய பஞ்சகிருத்தியங்களைச் செய்தல்.
8. வசித்துவம்=திரிலோகத்திலுள்ளோரும் தனக்கு இணங்கி நடக்கச் செய்துகொள்ளுதல்.

இன்னும் இவை ஒவ்வொன்றிலும் எட்டெட்டு பிரிவுகள் உள்ளடங்கி மொத்தம் 64-சித்திகள் என்று கூறப்படுவதுமுண்டு. ஒருயோகியின் தேகம் பலதுண்டுகளாய்த் தோன்றல், இறந்தவரை யெழுப்பல், அக்னிஸ்தம்பனம், ஆகாயகமனம், இரசவாதம், சாபாநுக்ரகசக்தி முதலிய எல்லா அற்புதச்செயல்களு மவற்றுளடங்கிவிடும்.

இத்தகைய சித்திகளை யடையும்மார்க்கம் எவ்வாறெனின், பிராணாயாமவழியாய் யோகசாதனையிலேயே யடையவேண்டும். இது மிகவும் கஷ்டமானமார்க்கம். ஏனெனில்:—

இதற்குரிய சேடன் அதற்குத் தகுதியாகிய தேகமுடையவனா யிருத்தல் வேண்டும். எப்படி யிருக்கவேண்டுமென்பதை குரு ஆராய்ந்துணர்ந்த பின்பே உபதேசிப்பார். அவன் உலகபோகத்தில் பிரவேசிக்குமுன்பே குருவை யடுத்து உபதேசம்பெற்று அவர் பார்வையிலிருந்தே குறைந்தது பன்னிரெண்டு வருடங்கள் அப்பியாசம் செய்யவேண்டும். அந்த அப்பியாசம் பிரதானமாய் பிராணாயாமாதி சுவாச சம்பந்தமான அப்பியாசமாதலால் குரு சந்நிதானத்திலிருந்து செய்யாவிட்டால் மிகக்கடுமையான ஆபத்துகள் நேரிடும். ஆகையால் கட்டாயம் குருசந்நிதானத்திலிருந்தே அப்யாசிக்கவேண்டும். அதோடு பிரணவ பஞ்சாக்ஷராதி ஜபத்தோடு தபசை யனுசரிக்கவேண்டும். மனம் களங்கமற்று ஈசுரோபாசனையில் நிலைக்கவேண்டும். இதோடு தேகம் ஆயுட்பிரம்மாணத்தைக் கடந்து நெடுநாள் அழியாதிருக்கவேண்டி அவ்வாசானால் குறிக்கப்பட்ட

மூலிகையாதி ஒன்டதங்களை யவர் நியமிக்கும் விதிப்படி யுண்பார்கள். இவற்றிற்கே காயகற்பம் எனப்பெயர். இவ்வாறு 12-ஆண்டு அப்பியசித்து ஜெயம் பெற்றால் அப்போதுதான் சித்திகளில் முதற்படியை யடைந்தவனாவான்.

இதற்குவேண்டிய ஆசான் அஷ்டமாசித்திகளும் கைவந்தவரா யிருத்தல் வேண்டும் என்பது நாம் கூறாமலே விளங்கும். அத்தகைய ஆசான்கள் உலகினர் கூட்டத்தில் சேர்ந்து வசிப்பவர்களல்ல. மலைக்குகைகளும் மனிதர் சாதாரணமாய் நுழையாத பயங்கரமான அரண்யங்களுமே அவர்களுடைய இருப்பிடமாகும். புண்ணியபூமியாகிய இப்பரதகண்டமே அத்தகைய புண்ணியபுருடர்களுக்குத்தாயாகும் பெருமை பெற்றுவிளங்குவது. எப்போதோ ஒரோர்காலத்தில் அவர்கள் ஜனசமுகத்தில் தோன்றினாலும் கண்ணிமைகொட்டுமுன் மாயமாய் மறைந்துவிடுவார்கள். ஆகையால் அவர்கள் தரிசனை கிடைப்பதே மிக்க அருமையாகும். அதிலும் இக்கலிகாலம் முதிரமுதிர மகா அருமையே.

அப்படியிருந்தும் நமது தாய்நாட்டில் மெய்ஞ்ஞானமார்க்கம் எப்போதும் சிரஞ்சீவியா யிருப்பதன் அறிகுறியாக அவர்கள் சந்ததிவிர்த்தியடைந்து வருகிறதேயன்றி குறையவில்லை. பிரதிவருடமும் நம்தாயாகிய பாரதமாதா அவர்களுக்கு ஒன்றிரண்டு புத்திரர்களை யளித்துக்கொண்டே யிருக்கிறாள். அம்மகான்களில் யாரேனுமொருவர் நாட்டில் பிரவேசித்து வேட்டுவன் ஆராய்ந்து பார்த்து தனக்குத் தகுதியாகிய கீடத்தை யறிந்து எடுத்தேகுதல்போல், தக்க சீடனை யறிந்து அழைத்துப்போகிறார்கள். மனிதர் இன்றும் உட்புகமுடியாததும் எத்தகைவீரதீரரும் அதன் கர்ப்பத்தில் நுழைந்து அங்குள்ள அதிசயமும் கெம்பீரமுமான காக்ஷிகளைக் காணமுடியாததுமான இமயகிரியே பெரும்பாலும் அவர்கள் வாசஸ்தலம். கொஞ்சகாலத்திற்குமுன்புகூட விசேஷ புண்ணியகாட்களில் அவர்கள் கூட்டமாய் வெளிப்பட்டு மலையோரத்திலுள்ள கங்காதீரத்திற்குவந்து நீராடிச் சென்றுகொண்டிருந்தார்கள். அக்காலத்தில் அங்குள்ள ஜனங்கள் அவர்கள் வருகையைக்கண்டதே கங்கையைவிட்டு தூரத்தில் சென்று நின்று, அங்கிருந்தபடி பயபக்தியோடு அவர்களுக்கு நமஸ்காரம்செய்துவிட்டு, அவர்கள்திரும்பிச்சென்றபின் தாங்கள்சென்றுநீராடுவார்கள். இப்போது காட்டிலாகா முதலியவைகளேர்ப்பட்டு ஜனங்கள் இமயமலைச்சாரலில் கொஞ்ச தூரம்வரை உட்பிரவேசிக்கப் பழகிவிட்டதாலும், வேறுசிலகாரணங்களாலும் அவர்கள் இமயமலையின் மேற்குபாகத்தில் திபெத் ஆப்கானிஸ்தான் முதலிய நாடுகளுக்கிடையில் ஒரு இராஜ்ஜியத்துடனும் சேராதிருக்கும் பயங்கரமான காடுகளில்போய் பெரும்பாலு தங்கியிருக்கிறார்கள் என்று கருதப்படுகிறது.

இவ்வாறு மிக்க கஷ்டத்தோடு அடையக்கூடிய சித்திகள் வேறு, முத்தியும் முத்தியையளிக்கும் ஞானமும் வேறு. ஆதலால் சித்தர்கள்வேறு ஞானிகள் வேறு. சித்தர்களும் ஞானத்தைப் பெற்றாலே முத்தியையடையலாம். இதனால் மோக்ஷத்தையடைய ஞானமே யின்றியமையாத சாதனமன்றி சித்திகளல்ல வென்று உணரவேண்டும். ஞானிக்கு அவன் விரும்பாமலே பிராரப்தவசத்தால் ஒன்றோ பலவோ சித்திகள் தானே யுண்டாகலாகும். சமயாசாரியர், ஆழ்வாராதியர், பட்டிணத்தார் முதலியோர்செய்த இறந்தவரை யெழுப்பியது, முதலை வாய்ப்பிள்ளையை வரவழைத்தது, ஆண்பனை பெண்பனையானது, கடலிற் கல்மிதந்தது முதலிய அற்புதங்களே இதற்குத் திருட்டாந்தமாகும். ஆனால் சித்திகள்மட்டு மடைந்தோனுக்கு ஞானம் அப்படி தானே யொருபோது முண்டாகாது அவன் சித்திகளைவிளையாட்டாய் அனுபவிக்கும் இச்சையையும் அறவேவிட்டு "சே. இன்னும் காயகற்பம் புசித்து எத்தனை நாட்கள்தான் இத்தேகத்தை வைத்திருந்தாலும் இது ஒருநாளைக்கு அழிந்தேதீரும் இதனால்

துன்பமே யுண்டாகும்" என்றுணர்ந்து தேகத்தையும் சித்திகளையும் வெறுத்து ஞானமார்க்கத்தை யனுசரித்துதான் ஞானத்தைப் பெறவேண்டும்.

சித்திகளுக்காகச் செய்யும் தவம் காமியத்தவம் என்றுபெயர். அதாவது தான் ஆசைப்பட்ட ஒன்றை யனுபவிக்கச் செய்யும் தவம்.

முக்தியைமட்டு மடையச்செய்யும் முயற்சி நிஷ்காமியத்தவம் எனப்படும். அதாவது ஆசையற்ற முயற்சி.

இதிலே யறிஞர்கள் இரண்டிற்குமுள்ள உயர்வு இழிவுகளை யறியலாகும்.

"காமி யத்தவம் காமிய மொன்றையும் கருதிடாத் தவமென்றும்
பூமி யிற்றவமீரு வகை சித்தியும் போதமுந் தருமைந்தா
ஆமி வற்றிலோன் றியற்றினு லோன்றையே யடைதுவ ரிதுதீர்வை
யாமு ரைத்தவவ் விரண்டையு மியற்றினு ரன்றுள பெரியோரே"

இதன்பொருள்:—ஒன்றின்மேல் இச்சைகொண்டு செய்வது காமியத்தவம் என்றும், நிராசையோடுசெய்வது நிஷ்காமியத்தவமென்றும் தவம் இருவகையாம். இதில் ஒன்றைமட்டும் செய்தோர் ஒன்றையே பெறுவர். முற்காலத்து பெரியோர் இரண்டையும் செய்தனர். சீடன். (தொடரும்)

(187-வது பக்கத்தொடர்ச்சி)

கல்வி.

மேற்கூறிப் போந்த இருவகை யறநெறிகளையும் குற்றமறவியற்றுதற்கு நூலுணர்ச்சி அவசியம் வேண்டப்படும். நூலாராய்ச்சி செய்தற்குக் கல்வியின்றியமையாச் சிறப்பினதென்ப. கற்கப்படுவனவெல்லாங் கல்வியேயாயினு மீண்டு கூறப்படுங்கல்வி நூலாராய்ச்சி செய்தற் கின்றியமையாச் சிறப்பினதாய இலக்கணவிலக்கிய வாராய்ச்சியேயாம். இதனையே "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழுமுயிர்க்கு" என்பதனால் தேவரும், "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்று அன்னையாருங் கூறியருளினர். பூதப்பொருள்களைக் கண்டுணரும் ஊனக்கண்களைப் போன்று *மனவிரு ளிரியநூறி யுண்மைப் பொருள்களை யாராய்ந்துணருந் தன்மைவாய்ந்த பேரறிவினையே ஈண்டு கண்ணென வியந்து கூறியது. கண் போன்றவிற் கண்ணெனக்கொள்க. ஆதலின் மக்கட்பிறப்பினும் மாண்மகனு யுதித்தோன் எவ்வாற்றானு முயன்று கல்வி கற்பது அவசியமாம். அங்ஙன முணராக்கால் இல்லறத் துறவற நெறிகளின் பாகுபாடுணர்ந்து நன்னெறி கடைப்பிடித்தொழுக வியலாதாமென்க. ஆகவே யிருவகை யறங்களும் தத்தம் நிலையிற் பிறழ்ந்து நன்மை பயவாமையே யன்றித் தீமைக்கிடனாய் நரகதுக்கானுபவத்துக்கு மிடமாமாதலின் கல்வியைக் கசடறக் கற்றல் வேண்டும்.

ஆயின், கல்விப்பயிற்சியும் நூலுணர்ச்சியும் இல்லாதவரும் யோகஞான நெறிகளைப்பற்றி யொழுகுதல் கண்கூடாகக் கண்டாமாதலின், கல்வி †யொருதலையன்றாமெனின் அஃதறியார் கூற்றாமென்க. துறவறத்துட் கூறியவாறு பூர்வ ஜன்மகோடிகளிற் கல்விப் பயிற்சியு நூலாராய்ச்சியு முடையராய், விட்டகுறை முற்றுற வவதரித்த சில புண்யாத்மாக்கள் கல்வியும் நூலாராய்ச்சியுங் குருவுபதேசமும் வேண்டாது சுபாவத்திலேயே மெய்ஞ்ஞானமும் மெய்த்துற

---

* மனவிருளிரிய நூறி—மனதிலுள்ள அஞ்ஞான இருளை யழித்து.

† ஒருதலை யன்றாமெனின்—அவசியமல்ல வென்றால்.

வும் கைவரப்பெற்றுச் சன்மார்க்கத்தொழுகி மோக்ஷானந்த சாம்பிராஜ்யத்தை யடைந்துளாரென நூல்களிற் கூறப்படுவதுண்டு. அத்தகையோர் எத்தனையோ கோடானு கோடிகளிலொருவர் காணப்படலாகுமே யன்றி சர்வ சாதாரண மன்றாம். அப்படியுண்டென வெளிப்படுவாரேலவர்கள் பசுத்தோல் போர்த்த புலியாவாரென்க.

" பல்லூழிகாலம் பயின்றரனை யர்ச்சிக்க
நல்லறிவு சற்றே நகும் "

" பல்லூழிகாலம் பயின்றரனை யர்ச்சிக்க
நல்லறிவு பெற்ற நலம் "

என்ற ஆன்றோருரையால் அஃதுணரப்படுமாதலின் கல்வியொருதலை யான் வேண்டப்படும். கசடறக்கல்வியை யுணர்ந்து நால்வகை நூல்களையு மாராய்ந்து, முத்திமார்க்கத்துக் கேதுவாகிய வர்ணாசிரம ஆசாரங்களை ஐயந்திரி பறத் தெரிந்துகொண்ட பின்னரே யொருவன் இருவகை யறங்களில் தன் சக்திக்கேற்ற தொன்றைப் பற்றியொழுகவேண்டும். நால்வகை நூல்களாவன:— அறநூல், பொருள்நூல், இன்பநூல், வீட்டுநூல் என்பன. இந்நூல்கள், தத்தம் பிரமேயங்களை விளக்கப்புகுங்கால் விரிவஞ்சியும், கற்போருக்கறிவு வளர்தற் பொருட்டும், எழுவகைமதம், முப்பத்திரண்டுத்தி, பத்தழகு, ஆற்றொழுக்கு, அரிமாநோக்கம், தவளைப்பாய்த்து, பருந்தின் வீழ்க்கையெனச் செய்யுணிலைகளானும், பொருள் கோள்வகையானும் உபலக்கணவகையானுங் கூறுப. அங்ஙனங் கூறுக்கால் நூல்மிக விரியும். விரியவே சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோராகிய மக்கட் பிறப்பினர் அவற்றை யோதியுணர வாயுட்காலம் போதாதவராவார். ஆகவே அவர்கள் நல்லறிவு பெறுதல் மிகக் கஷ்டமாமென்க. அப்படிக்கின்றி நால்வகைகளு ளொன்றினைக் கற்பினமையாதோ ? நால்வகை நூல்களையுங் கற்றல்வேண்டுமென்னு நியதியேனோவெனின் கூறுவாம். அறத்துக்குப் பொருளும், பொருளுக்கறமும் காரணங்களா யமைந்துள்ளன. இம்மூன்றுமே யில்லறவாழ்க்கைக் கின்றியமையாதன. இம்மூன்றனையும் பயிலாக்கால் இலௌகிக விருத்தி குறைவுபடும். குறைவுபடவே யில்லறஞ் சீர்பெற நடவாதாம். நடவாதொழியவே, மூன்றனையு நிரம்ப வனுபவிக்க இயலாதாம். அனுபவியாக்கா லவற்றின்கண் வெறுப்புண்டாகாது. உண்டாகாதாயின் வீடுபெறுதலில்லையாம்.

" ஈதலறத் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு "

என்றதனால் மேற்கூறியது விளங்குமாறறிக. இவற்றுக்கு நூலுணர்ச்சி யவசியம் வேண்டப்படும். அந்நூலுணர்ச்சியாற் றங்கண்மரபிற்கும் ஆசிரமத்துக்கு மேற்றவா றொழுகுதலே யில்லறதுறவற நெறிகளாமாதலினானென்க. இதனை " ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து — வேண்டும் பனுவற் றுணிவு " என்ற செய்யுளுரையில், " ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது,— தத்தம் வருணத்திற்கும், நிலைமைக்குரிய வொழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும். அறம்வளரப் பாவந்தேயும், பாவந்தேய வறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்தவநித்தங்களது வேறுபாட்டுணரவும், அழிதன்மாலையவாய இம்மை மறுமை யின்பங்களின் உவர்ப்பும் பிறவித்துன்பங்களுந் தோன்றும், அவை தோன்ற வீட்டின்கணாசை தோன்றும், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லா நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சி யுண்டாம். அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யானென்பதும் விடும், ஆதலான் இவ்விரண்டு பற்றுகளையும் இம்முறையே வெறுத்து விடுதலெனக்கொள்க" என்று உரையாசிரியர் பரிமேலழகியார் கூறியவாற்றானு முணர்க. யோகப்பயிற்சியும் தத்துவ வுணர்வும் கூடினன்றி வீட்டு நெறி காண்பரிதாம் என்க. அன்றியும், " நல்லாற்றா னொடியருளாள்க " என்றதினல்லாற்றான் என்றதற்குரை கூறுமிடத்து, " அளவுகளானும் பொருந்து மாற்றானும் என்று கூறி, அளவைகளாவன பொறிகளாற் காணும் காட்சியும், குறிகளானுய்த்துணரும் அனுமானமும், கர்த்தாமொழியாகிய ஆகமமென மூன்றும், ஒப்புப்பற்றி யுணரும் உவமையும், அருத்தாபத்தியும், அபாவமுமென வாறும்" என்று கூறினர். நூலுணர்ச்சியானன்றிப் பிரமாண வியல்கொண்டு பொருள்களை யளந்தறிதல் கூடாமையின் கல்விப்பயிற்சி அவசியம் வேண்டப்படுமென்க.

இதனாற்றான் " நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு " என்று அன்னையார் கூறியருளினர். நூலாராய்ந்து தெளிந்து ஒளிருமொள்ளறிவினாற்கன்றி அறத்தின் பாகுபாடறிந்தியற்றலும், பொருளீட்டும் வகையும் அவற்றாலடையும் பயனும், இன்பத்தை யனுபவிக்கு நெறியும், ஆயவனைத்து முணர்ந்து கோடலேனையர்க் கரிதாமென்க. " அறம் பொருளின்பம் வீடடைத லாற்பயனே" என்று கூறிய மூதுரையானு முணர்க. " கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ—னற்றாடொழாஅ ரெனின் " என்றதனால் தேவரும் அதனை விளக்கியருளினர். இத்தகை பிரபலப் பிரமாணங்களாற் கல்வியறிவாலன்றி அறிவெய்தப் பெறுதென விளங்குதலான் கல்வியுணர்ச்சி அவசியம் வேண்டப்படும். அஃதின்றி மெய்ஞ்ஞானம் பெற்றாருளரேலது பூர்வ ஜன்மங்களிற் கற்றுணர்ந்த நூலுணர்ச்சியின் பயனே யென்றுகொள்க. அவ்வாறின்றி ஞானவொளியினை யெல்லாரும் பெறுவாரென்பது *கனாவிந்தம் மலடிமகனை யொப்பாகு மென்க. இதனானன்றே,

" தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு "

" கேடில்விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை "

என்றுங் கூறியருளினர். அதுவன்றிக் கல்வி கல்லாமையி னுறுவனவாய தீமைகளனைவில்லனவா மென்பது தோன்ற,

" கல்லாதான் சொற்காமுறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.
கல்லா வொருவன் றகைமைதலைப் பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.
உளரென்னு மாத்திரையா லல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.
நுண்மா ணுழைபுல னில்லா னெழிலல
மண்பாண் புனைபாவை யற்று."

என்பனவற்றையு மருளிச்செய்தார். " விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனை யவர் " கல்லாதவரை விலங்கெனக் கூறி யிகழ்ந்தார்.

இனிக் கல்விகற்பதும் இக்காலத்துச் சில புத்திமான்கள் உரை யெழுதப்

* கனாவிந்தம்—ஆகாயத்தாமரை.

பட்டுன்ன பற்பல புத்தகங்களை விலைகொடுத்து வாங்கி யிரகசியமாய்ப் படித்துக் கொண்டு தாம் சகலகலைகளையுங் கற்றுவிட்டதாகக் கருதி யிறுமாந்திருப்பது போலக் கற்பது கல்வியல்ல. நல்லாசிரியனைக் கண்டடைந்து முறைப்படி வழிபாடியற்றி, அவன் மனமுவப்ப நடந்து "உடையார் முன்னில்லார் போலேக்கற்றுங் கற்றார்" என்ற மூதுரைக் கிலக்கியமாகவிருந்து கற்றவரே கற்றவராவார். "குருவில்லாவித்தை குணமில்லாப்பெண்டிர், விருந்தில்லான் வீடும் விழல்" என்றபடி குருமுன்னிலையிற் கற்றுணராத கல்வி பயன்படுமா றில்லை. நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியு, முலகியலறிவோ டுயற்குண மினையவு, மமைபவனாகிய நல்லாசிரியனையடைந்து, "கற்கக் கசடறக் கற்பவை" என்றபடி கற்கவேண்டியவைகளை யவனாணுணர்ந்து ஐயம், திரிபு-அறியாமை யென்னுங் குற்றங்களறக்கற்று, அவற்றின் பொருள்களைப் பலகாற்சிந்தித்து தெளிவதுமன்றிக் கற்றோர்பாற் கேட்டுத்தெளிவதுமே யாமென்க. இவ்வாறு கற்றகல்வியே "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்-கெழுமையு மேமாப் புடைத்து" என்று தேவராற் புகழ்ந்துகூறப்பட்ட கல்வியாமென்க. எழு மையு மேமாப்புடைத்து என்றதனாற் பூர்வஜன்மங்களிற் கற்ற கல்வி மேல் ஜன்மங்களோடுந் தொடர்ந்துவருமென்பது காண்க. இதுவே பூர்வஞான மென்றும் புகழ்ந்துகூறப்படுவதாம். இக்கல்வியறிவானுணர்ந்து இல்லறத்தை நெறிதவறாதியற்றித் துறவுபூண்டு, அந்நெறி பிறழாதொழுகி யிறைவனடிக் கமலஞ்சேர்தலாகிய பேரின்பமுத்திபெற் றுய்யுமாறு எங்குநிறைந்த சர்வஜீவ தயாபரன் திருவருள்புரிவாராக.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

வியாபாரம்.

(183-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெர்மனியில் ஒரு புஸ்தகத்தை விளம்பரஞ்செய்ய பின்வருமாறு ஒரு யுக்திசெய்யப்பட்டது. எல்லாப் பத்திரிகைகளிலும் ஒரு பெரிய தனவான் கலியாணஞ்செய்துகொள்ள இஷ்டப்படுகிறார் என்றும், அவருக்கு மனைவி தம் கதைப்புஸ்தகத்தில் வர்ணித்திருக்கும் கதாநாயகியைப்போல் பெண்வேண்டு மென்றும் புத்தகம் அச்சிட்டவர் வெகு சாதுர்யமாய் விளம்பரஞ்செய்தார். ஜெர்மனியிலுள்ள கலியாணவயதுள்ள ஒவ்வொரு பெண்ணும் அந்தக் கதா நாயகி எப்படிப்பட்டவளென்று பார்ப்போமென்று ஒவ்வொருவரும் ஒரு புஸ்தகத்தை வாங்கினார்கள். இதனால் புத்தகம் நன்றாய் விற்றது. சிலர் விளம் பரஞ்செய்வது அனாவசியமென்று எண்ணுகிறார்கள். விளம்பரஞ்செய்வதினால் வீண்செலவுதானே யென்றும், "எங்கள் சரக்கு நல்ல சரக்காகவிருந்தால் பலாப் பழத்திற்கு ஈப்பிடித்துவிடவேண்டுமா" என்ற பழமொழிபோல் தாங்களே வலியவந்து வாங்குவார்களென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் நல்லசரக்கு இருக்கின்றதென்பது விளம்பரஞ்செய்யாது எப்படித்தெரியும்? ஆகையால் எந்தவகையிலும் விளம்பரஞ்செய்வது அவசியம். விளம்பரஞ் செய் தால் நல்ல வியாபாரம் நடக்கும். அதிக வியாபாரம் நடந்தால் அதிக இலாபங் கிடைக்கும். ரூபாய்க்கு சொற்பலாபம் வைத்துவிற்றால், இதரக்கடைகளைக் காட்டிலும் விளம்பரஞ்செய்வோனுக்கு மொத்தத்தில் இலாபம் அதிகமாய்க் கிடைக்கும்.

கனவான்களே! நமது வர்த்தகர்களின் பெருங்குறைவு என்னவெனின் இருந்தவிடத்தைவிட்டு ஏழாமல் வியாபாரஞ்செய்வதே. வியாபாரிகள் எப்போ

தும் இருந்தவிடமே பகல்முழுது மிராமல், சாயங்காலம் கொஞ்சநேரமாவது உலாத்தப்போதல் அவசியம் வேண்டும். ஐரோப்பியர்கள் உலாத்தப்போதலைக் கட்டாயமான ஒருவேலையாக வைத்துக்கொள்கின்றார்கள். நம் இந்தியவியாபாரி களில் அநேகம்பேர் தாங்கமுடியாத வயிற்றை யுடையவர்களாக விருக்கிறதை நாம்தினந்தோறும் காண்கிறோம். இவ்வயிற்றை அவ்விதமாக்காது தணிப்பதற் காகவே (Evening walk) சாயங்காலம் உலாத்தப்போதல் அவசியம். சில விடங்களில் காலை 6 முதல் 12 வரை வியாபாரம் நடைபெறுகின்றது. சில விடங்களில் காலை 7 முதல் 11 வரையும் மாலை 3 முதல் 8 வரையும் வியாபாரம் நடைபெறுகின்றது. சிலவிடங்களில் காலை 7 முதல் மாலை 12 வரையும் ஓயாத வியாபாரம் நடைபெறுகின்றது. கடைசியிற்சொன்ன முறைப்படி வியா பாரஞ்செய்தால் அசௌக்கியத்திற்கு இடங்கொடுக்கும் ஆகையால்இரண்டாவது முறையைக் அனுஷ்டிப்பதே சிறந்தவழி. இனி யொருமுறைகூடவுஞ் சொல்லப் பட்டது. அஃதாவது காலை 9 முதல் மாலை 7 வரையும். இதுவும் உசிதமான வழி. ஏனெனில் இரர்ப்பள்ளிக்கூடத்திற்கு கடைவேலைக்காரர்களை அனுப்புவ தற்கு ஏற்றவழியாகும். கடைகளில் அநேகம் வேலைக்காரப்பிள்ளைகள் படிப்புத் தெரியாதிருக்கின்றார்கள். அவர்களுக்கு நான்காவது சொல்லியமுறை சிறந்தது என்பது அடியேனாகிய எனது அபிப்பிராயம்.

இடம் போதாதினால் சிலவிஷயங்களை விட்டு எழுதியிருக்கின்றேன். இதுகாறுமுள்ள விஷயங்களின் சுருக்கம்போல் கூறுகின்றேன்.

வியாபாரம் என்றால் என்ன என்பதுவும், வியாபாரஞ் செய்யத்தகுந்தவர் வைசியர்தான் என்பதுவும், இப்போது யாவருமே வித்தியாசமின்றி வியா பாரஞ் செய்கின்றனர் என்பதுவும், கல்விகற்றவர் வியாபாரத்தை ஆக்ஷேபிப்பது உசிதமன்று என்பதுவும், கல்விகற்றவர்கள்தான் மற்ற தேயங்களில் வியா பாரஞ்செய்து மேல் நிலைமைக்கு வந்திருக்கிறார்கள் என்பதுவும், வியாபாரத் தில் பழக்கம் வேண்டுமென்பதுவும், வியாபாரிக்குப் பொறுமைவேண்டுமென் பதுவும், வியாபாரத்தில் தீர்க்காலோசனை வேண்டுமென்பதுவும், வியாபாரிகள் எப்பொழுதும் முகமலர்ச்சியோடு இருக்கவேண்டுமென்பதுவும், வியாபாரி களுக்கு ஊக்கமும், விடாமுயற்சியும் வேண்டுமென்பதுவும், ஒருதொழிலில் லாபமில்லையென்று மற்றொருதொழிலுக்குப் பிரவேசிப்பதுத் தகாதகாரியம் என்பதுவும், எப்போது நல்லகாலம்வரும் என்று காத்திருக்கக்கூடா தென்பது வும், சிரத்தையே நல்லகாலம் தரும் என்பதுவும், வியாபாரத்திற்கு நம்பிக்கை, கூட்டுறவு, கல்வி இன்றியமையா சாதனங்கள் என்பதுவும், விற்பனைச் சாமர்த்தியம் வேண்டுமென்பதுவும், நம்பிக்கையுள்ள வேலைக்காரர்களைத் தெரிந் தெடுக்கவேண்டுமென்பதுவும், அவர்களை அடிமையாக பாவிக்கக்கூடாதென்பது வும், வியாபாரத்தில் ஒரேவிலை அவசியம் என்பதுவும், லாபங்குறைத்துவிற்றால் அதிகம் செலவழியும் என்பதுவும், அவ்விதமாயின் அதிகலாபங் கிடைக்குமென் பதுவும், வியாபாரத்திற்கு விளம்பரம் அவசியமென்பதுவும், வியாபாரிகளுக்கு சாயங்காலம் உலாத்தப்போதல் அவசியமென்பதுவும், காலை 7 முதல் 11 வரை யும் மாலை 3 முதல் 8 வரையும் அல்லது காலை 9 முதல் மாலை 7 வரையும் வியாபாரஞ்செய்வது நன்று என்பதுவும், இந்த வியாபாரத்தின் சுருக்கம்.

இது கோட்டாறு வியாபாரச் சங்கத்தின் மூன்றாவதுவருடக் கூட்டத் தன்று வாசிக்கப்பெற்ற வியாசம்.

A. S. முத்தப்ப முதலியார், கோட்டார்.

[குறிப்பு:—நம்நாட்டு வியாபாரிகள் சங்கங்களாய்க்கூடி இத்தகைய சீர் திருத்த வழிகளை வெளியிடத் தொடங்கியது மிக்க சந்தோஷமான விஷயம்

ஆனால் மற்ற ஸ்தலங்களிலுள்ள வியாபாரிகளும் இதைக் கவனித்துப் பின்பற்ற ஆலசியமின்றி முயற்சியெடுத்துக்கொண்டால்தான் இது நம் நாட்டிற்குப் பயனை யுண்டாக்கும். மேல்கண்ட ஏற்பாடுகளை நடவடிக்கைக்குக் கொண்டு வரவேண்டும். வியாபாரிகள் தம் மக்களுக்குக் கல்வி கற்பித்து அவர்களுக்கு அனுபவஞான முண்டாகச்செய்து, பிறகு வர்த்தகத்தில் பிரவேசிக்க விட வேண்டும். அதைவிட்டு இதை வாயால் படித்துவிட்டு சும்மாயிருப்பதால் ஒரு பயனுமில்லை. அது மேல் நிலைமைக்கு வர முயலுமறிவாளிகளின் செய்கையுமல்ல. ஆகையால் நமது வர்த்தகச் சகோதரர்களே! உடனே அவரவர்கள் ஸ்தலங்களிலும் கோட்டார் வர்த்தக சங்கம்போல் ஒவ்வொரு சங்கம் ஸ்தாபித்து மேல்கண்ட வழிகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வாருங்கள். எந்தெந்த ஊரினின்று "வர்த்தகர் சங்கம்" ஸ்தாபிக்கப்பட்டதென்று சஞ்சிகைக்கு சமாசாரம் வருமோவென நாம் மிக்க ஆவலோடு எதிர் பார்க்கிறோம். கடவுள் உங்கள் முயற்சி நல்ல பயன்றருமாறு அருள்புரிய வேண்டுமாய் மிகவும் தாழ்மையோடு பிரார்த்திக்கின்றோம். பத்திரிகாசிரியர்.]

சசிவர்ணபோதம்

(152-ம் பக்கத்தொடர்ச்சி.)

இன்னொரு விஷயம் இங்கு கவனிக்கத்தக்கது. நம் கண்ணால் காணப்படும் பொருள்களில் எப்பொருளையாவது ஒன்றை யெடுத்துக்கொண்டு உற்றுநோக்கி, அதன் மூலகாரணத்தைப்பற்றி யோசித்துப்பார். நாம் பார்க்கப்படும் பொருள்கள் யாவும் இவ்வுலகமாகிய பிரிதிவி பூதத்திலிருந்தே உண்டாயிருக்கின்றன வென்பதுண்மை. உதாரணமாக ஒன்றுபார். நாம் உட்கொள்ளும் ஆகாரத்தைப் பற்றி யோசி. இவ்வாகாரத்தின் மூலம் தாவரவர்க்கங்களி லொன்றாகிய பயிரால் விளைவது. அப்பயிரோ பூமியிலிருந்து முளைத்து எழுகிறது. இந்தப் பூமியோ பிரிதிவியாகிய ஓர் கட்டிபோன்றது. அக்கட்டியாகிய மண்ணோ நுண்ணிய பல அணுக்கள் சேர்ந்தது. இவற்றில் ஓர் அணுவோ பரமாணுக்கள் பல சேர்ந்து திரண்டது. அப்பரமாணுவோ, கட்புலனாகாத அருவமாகிய வெட்டவெளியின் சக்தியாலுண்டானது. நிர்மலமான சக்தி கொண்டது. இச்சக்தியோ (இல்லாததினின்று உண்டானதன்று-சூனியமன்று. அதாவது) சலனமில்லாத காற்றைப் போன்றது. மிக்க சூக்குமமானது. அளவற்ற சக்தி நிறைந்தது. எந்தப் பொருளையும் எடுத்து யோசித்துப்பார். எல்லாம் இறுதியில் அருவத்தில்தான் வந்துமுடியும். ஆகவே, கண்ணுக்குப் புலப்படாத அருவநிலையாகிய வஸ்துவே உருவமாகிய எப்பொருளுக்கும் காரணமாய் நிற்பது. அதன் வழியாய் உண்டாகிய பல தோற்றப் பொருள்கள் யாவும் (காரியம்) ஒவ்வொரு காரியத்தை உத்தேசித்து உண்டானது.

ஆகையால் இவ்வுலகத் தோற்றத்திலே இதுதான் அது வென்று கண்டு சுட்டிக் காட்டக்கூடாத பொருள் ஒன்று உள்ளதாகையால் அப்பொருளே எவற்றிற்கும் மூலமானது. கண்ணால் கண்டு மதித்து

இதுதானென்று தொட்டுக் காட்டக்கூடிய உருவங்கொண்ட தேகாதிப் பிரபஞ்சம் காரியமாய் வந்தது. காரணம் வேறொன்றிருக்க அதிலிருந்து உண்டான காரியமான தேகாதிவர்க்கங்களை நான் என்றியம்புவ தெவ்வாறு?

சொல்லி வருவதை யெல்லாம் தொடர்ச்சியாய்க் கேட்டுவிட்டு மேனோக்காய் நின்று ஒன்றும் விளங்கவில்லை யென்று மலைத்துவிட்டாயோ, இதுவரை படித்த, கேட்ட அவையெல்லாம் வியர்த்தமாய் வந்துமுடியும். சற்று ஊன்றிப் பார்க்குந் திறல் கொண்டாலன்றி எளிதில் விளங்காது. போகப்போக சூக்கும ரூபமாயுள்ள விஷயங்களை வருமாதலினால் நன்கு கவனித்தாலன்றி கருத்திற் பதியாது.

இப் பிரம்மானந்த சைதன்னியத்தை இன்னதென்று அறியப் புகும் இயல்பைக்கேள். யோசிக்க யோசிக்க உதித்தெழும் ஞான நோக்கத்தைப் பெருக்கி, எவற்றிற்கும் மூலமாய் விளங்கும் பிரம்மானந்தத்தை அறியவேண்டு மல்லாது, தூலதேகத்திலே தோன்றுகின்ற ஊனநோக்கப் புலன்களைக் கொண்டு அறிவது மிக்க அரிதாய் முடியும்.

இதனாலேதான் முன்னோர்கள்,

> முகத்தின் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
> அகத்தின் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்
> மகட்குத் தாயர் மணாளனோ டாடிய
> சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே.
>
> (திருமந்திரம்.)

> நேசமார் தொண்டர் ஞான நேத்திரங் கொண்டு காணும்
> ஈசனை முகத்தின் கண்ணால் இகத்தில்யார் காண வல்லார்.
>
> (வேதநாயகம் நீதிநூல்.)

என்று, சொல்லாமற் சொல்லியிருப்பது இங்கு நோக்கற்பாலது.

ஹே! உத்தம! உனக்காகச் சொல்லுகிறேன். இவ்வுருவமானது * பிரதிபிம்ப வடிவத்தைப் போன்ற நிலையான தோற்றமென்று கொள்ளவேண்டும். இதனாலே தூலதேகங்கொண்டு சுற்றிச் சுழல்கின்ற நீ, தேகப் பிரிவுபடுத்தி முறைமுறையே யுள்ள மூலகாரணங்களை யுன்னி ஒவ்வொன்றாய் நாடிப்போவையானால், இறுதி

---

*பிரதிபிம்ப வடிவம்:—உதாரணம், பிறனில் விழைவுகொண்ட காமியொருவன் தனித்து இரவே பள்ளியமர்ந்துக் காதலித்துக் கண்மூட எதிரே தோன்றி மறையும் தான் விழைந்த பெண்ணின் சூக்கும வடிவமாகும். பக்தர்கட்கும் ஞானிகட்கும் தாம் காண விழைந்த கடவுட்டோற்றமும் அவ்வாறே. அடியிற்கண்ட பிரதி பிம்பத்தோற்ற உதாரணம் வேறு. இவ்வுதாரணம் வேறு. இவ்வுருக்கட்டோன்றி மறைந்து போவன. பிரம்மநிலை மறையாது நிற்பதாம். கம்பராமாயணம் மாரீசன் வதைப்படலம் 148, 149 செய்யுள்கள் இத்தோற்றத்திற்கு உதாரணமாகக் கொள்க.

யில் நீயும் அருவநிலையிலே ஒன்றுவாய் என்ற கருத்தை யுள்ளிட்ட வேதங்களுக்கு அணியாய் விளங்கும் சாமவேத சாரங்களைத் திரட்டி முடிந்து நின்ற †தத்வமசி என்னும் மகா வாக்கியத்தின் கருத்தும் இதுவேயாகும்.

ஆகவே,

உனையுணர்த்திப் பரச முதறி யுடையோன்
தனையுணர்த்தில் நீயே தலமாங்—கனலை
விறகிடமாக் காணிலதன் வெம்மையை வேறாக்கி
அறியகிலாப் போலதுநீ யாம். (ஒழுவிலொடுக்கம்.)

என்பதை அறிந்துகொள். இனி காரண உடற்படைத்த ஈசனி யல்பை இயம்பக்கேள். ஞானேந்திரியங்கள் ஐந்தும் ஒன்றறிந்த புலன் மற்றொன்று அறியாது என்னும் மூடமில்லாமல் தானே சகல மும் அறிவதனாலே சர்வக்ஞன் என்றும், இந்தியங்களெல்லாம் அழிந்த காலத்தும் தான் அழியாது நிற்பதனால் சர்வகாரணன் என் றும், இந்தியங்களுக்கெல்லாம் உள்ளீடாய் நின்றறிகையினாலே சர் வாந்தர்யாமி யென்றும், இந்தியங்களுக்கெல்லாம் மேலாய் நின்று விளங்குகையாலே சர்வேச்வரன் என்றும், இந்தியங்களெல்லாந் தனக்குள்ளே தோன்றுகையாலே சர்வசிருஷ்டி யென்றும், இந்தியங் களெல்லாந் தானே ரக்ஷிக்கையாலே சர்வஸ்திதி யென்றும் இந்தியங் களெல்லாந் தனக்குள்ளே அடங்குகையாலே சர்வசம்ஹாரன் என் றும் ஆக எழும் தன்னிடத்தே தங்கிநின்ற சப்தாதீகன் எனப்படு வன்.

இனி காரிய உடற்படைத்த ஜீவனுடைய தன்மையைச் சாற்று வோம், கவனித்துக்கேள். ஒரு புலனையே யன்றி மற்றொரு புலனை யறியக்கூடாத மடமைகொண்ட இந்தியங்களும், எப்போதும் சலித்து சங்கடப்பட்டுழலும் மனமும், மனதைத் தன் வயமாக்க இழுத்து இழுத்து இளைத்து நிற்கும் புத்தியும், பற்பலவாறு அதாவது மனம் போனவாறு சிந்தித்துழலும் சித்தமும், நானே நானென்று கொள் ளும் அகங்காரமும், சற்று பிசகினால் பிடிங்கிக்கொண்டேகும் பிரா ணனும், ஆக நிலையிலா இவ்வேழுங்கொண்ட, சற்றும் நிலையில்லாத தும் நம்பத்தகாததுமான தேகத்தை திடமென நம்பி ஒட்டிக்கொண் டுழல்வது உயிராகிய ஜீவன். இதனைக் காரிய உடலெனப்படும்.

என்னே! இவ்வுடலின் இழிவு. இவைகளில் எதற்கேனும் சுகமென்பதுண்டா. துன்பத்திற்கேதுவாகிய இவைகளை நம்பி எப் பலனை எவ்வாறடைவது? ஈசிவர்ணு முற்கூறிய காரண உடற்

† தத்வமசி:—என்பது தத் + அது = மலாதீதமான பிரம்மம்.
த்வம் = நீயாகிய ஜீவன்.
அசி = ஆகிறாய். அதாவது, மலரகிதமாகிய சீவன் ஈசன் இரண்டும் ஒன்றாவது என்பது. (மூலம்.)

கொண்ட ஈசர்க்கும், இக்காரிய வுடற்கொண்ட ஜீவர்க்குமுள்ள தார தம்மியங்களைக் கவனித்துப் பார்க்கின், மேற்கூறிய காரணத்தினாடு இக்காரிய உடல் அடங்கும் தன்மையதென்று சந்தேகமற விளங் கும்.

பரத்தினது காரண உடலுக்குள்ள உயர்ச்சிகளையும், ஜீவனது காரிய சரீரத்துள்ள இழிவுகளையும், ஆக இரண்டையும் வேதங்களை யோர்ந்து அதினின்றும் தேர்ந்தெடுத்த லக்ஷண வாக்கியப்படி பிரித் துப் பார்க்குங்காலத்தில், ஜீவன் ஈசுவரன் ஆக இரண்டின் தன்மை யும் ஓர் உருவெளித் தோற்றமாகவே காணப்படும்.

இனி மேற்கூறிய இலக்கண வாக்கியமென்பதென்ன? அதைக் கொண்டு எவ்வாறு பிரித்துப் பார்த்து ஜீவேசுவரர் இருவர் தன் மையும் ஒன்றெனக் கொள்வது என்பதைப்பற்றிச் சொல்லுவோம்.

(தொடரும்)

பண்டிட்-எஸ். கிருஷ்ணசாமி ஐயர்.

பள்ளிக்கூடத்தோட்டமும் அதன் ப்ரயோஜனமும்.

நண்பர்களே!

சிறு குழந்தைகளிடம் நூதனமாய் ஒரு காகிதப் பெட்டி அல்லது ஒரு பொம்மை முதலானவற்றைக் கொணர்ந்துவைத்தால், அதை எடுத்து ஆட்டிப் பார்ப்பதும் அதற்குள் என்ன இருக்கிறதென்று தெரிந்துகொள்ளுமாறு பிய்ப்ப தற்கு முயலுவதையும் நாம் அடிக்கடிப் பார்த்திருக்கிறோம். இதனாலேயே சிறு பிள்ளைகளுக்கு ஆராய்ந்து அறியும் சக்தி இயற்கையாகவே அமைந்துள்ள தென்று தெரிகிறது.

ஆகையால் சிறுவர்கட்கு எவ்விஷயத்தைப் போதிப்பதானாலும் எழுத்து மூலமாயும் சொற்கள்மூலமாயும் போதிப்பதினும், ஒவ்வொன்றையும் நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளும்படி பழக்குவோமானால், இவ்வாறு தெரிந்து கொள்ளத்கூடிய விஷயம் எப்போதும் ஞாபகமிருக்கும்; மேலும் பிள்ளைகளும் ஆவலுடன் கவனிப்பார்கள்.

சிறுவர்கள் கல்விபயிலும்போதே, பாடசாலைத்தொழில்களுடன் தோட்ட வேலையும் சேர்த்து கற்பித்துவருவது சிலாக்கியமாகையால், ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் பெரிதாக இல்லாவிடினும், சிறிதாகவாவது ஒருபள்ளித்தோட்டம் அவசியம் இருத்தல்வேண்டும். இத்தோட்டத்தின் உதவியினால் தாவரவர்க் கத்தைப்பற்றிய ஒவ்வொருபாடத்தையும் உபாத்திமார் பிள்ளைகளுக்குப் போதிக் கும்போது, பிள்ளைகளைத் தோட்டத்திற்கு அழைத்துப்போய், அவைகளைநேரில் காண்பித்து போதிப்பது சிறந்தவழியாகும். இத்துடன் இயற்கைப் பாடங் களில் கற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்களை, நேரில் பரீசீலனைசெய்து தெரிந்து கொள்ளவும் கூடும்.

இஃது இவ்வாறிருக்க, நமது பட்டணங்களிலிருக்கும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு ஸாதாரணமாய் நெற்பயிர் எப்படிவிளைகிறதென்றும், எம்மாதிரி இருக்கிறதென்றும் தெரிய அவகாசமிராது. இதற்காக அம்மாணுக்கர்களை கிராமாந்தரப் பள்ளிக்கு அனுப்புகிறதா? இவ்விதமான குறையை நமது பள்

ளிக்கூடத் தோட்டத்தைக்கொண்டு ஒருவாறு நீக்கலாம். அதாவது நமது பள்ளித்தோட்டத்தில் ஒருபாகத்தில் (கிணறு இருந்தால் அதன் சமீபத்தில்) கொஞ்சம் நெல்லைவிதைத்து, பிள்ளைகளை அதை கவனிக்கச்செய்து, நாளுக்குநாள் உண்டாகும் மாறுதல்களைக் கவனித்து, அதை ஒரு புஸ்தகத்தில் தேதிவாரியாக குறித்துவரச்செய்தால், பிறகு நெற்பயிரைப்பற்றின அறிவு கூடுமானவரை பிள்ளைகளுக்கு நன்கு ஏற்பட்டுவிடும்.

மேலும், பள்ளித்தோட்டத்தில் வேலைசெய்து வருவதினால், ஸ்தாவரங்களின் இயற்கை யமைப்புகளைத் தெரிந்துகொள்வதுடன், பூசாரத்தின் தன்மைகளும், எருவின் உபயோகமும் பிள்ளைகளுக்குப் பிரத்தியக்ஷமாய்த் தெரியும். இதுவுமின்றி பயிர்களைப் பாதுகாக்கவும், அவைகளைச்செழுமைபெற வளர்க்கவும், பால்யம் முதலாகவே பயிலுவதற்கு இடந்தருகிறது.

இக்கருத்துக்கொண்டே, மேல்நாட்டார் ஒவ்வொரு பாடசாலையிலும் பள்ளித்தோட்டம் ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதையனுசரித்து நமது விவஸாய இலாகா அதிகாரிகளும் எலிமெண்டெரிபாடசாலையின் சேர்க்கையாய் ஒருதோட்டம் (School Garden) ஏற்படுத்தி, விவஸாய ஸம்மந்தமான படிப்பை போதிக்கவேண்டும் என்று உரைக்கிறார்கள்.

இவைகளை யோசிக்குமளவில் நம்முடைய பாடசாலையின் பக்கத்திலுள்ள சொற்ப இடத்திலாவது சிறியதோட்டம் ஒன்று ஏற்படுத்தி, அதில் நமது பாடசாலையில் வழங்கிவரும் பாடபுத்தகங்களில் வரக்கூடிய (தாவரஸம்மந்தமான) பயிர்களையும், அந்தந்த கிராமங்களில் விசேஷமாய்ப் பயிரிடக்கூடிய தாவரங்களையும் பயிர்செய்து, பிள்ளைகளை சரிவரக் கவனிக்கச்செய்து, விளையும் மாதிரிகளும் அவைகளுக்குச் செய்யப்படும் அலுவல்களையும் குறித்துவரச் செய்வோமானால், மாணுக்கர்களுக்கு பாடங்கள் நடத்துவதில், அவர்களுக்குப் பாடசம்மந்தமான விஷயங்களை நன்கு அறிந்துகொள்ள ஸாதகமாகும். மேலும் இவ்வாறு அடையக்கூடிய அறிவானது மறவாமல் நிலைபெற்றதாதவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

(தொடரும்.)

ஜி. நாறுயணசாமி ஐயர், கைக்குரிச்சி.

நாகரீகம்.

நமது நாட்டிலுள்ள ஸ்திரீபுருஷர்கள் தற்காலம் நாகரீகமுள்ளவர்களாகப் பிரயாசப்படுகின்றனர். இவ்விதம் அவர்கள் எண்ணி நடக்க விருப்பதைப் பார்க்க நமக்கு அதிக ஸந்தோஷமுண்டாகிறது. ஆனால் ஒருநாளில் நாகரீகம், ஸூக்ஷ்மகாரியங்களில் வாரா. தாங்கள் எந்தவிஷயத்தில் சீர்திருத்தமுடையவர்களாக வேண்டுமென்று கோருகிறார்களோ, அதை முதலில் ஆலோசித்துக் கொள்ளவேண்டும். ஒருகாரியம் செய்யுமுன் அதிலுள்ள ஸாதகபாதகங்களை நன்றாய்ப் பரிசீலனை செய்வது அவசியமாகும். ஆரம்பிக்கும் காரியம் நீடித்து நிற்கக்கூடியதா? அல்லது நடுவில் கரைந்துபோகக்கூடியதா? நமக்கு நன்மை விளைவிக்கக்கூடியதா தீமைவிளைவிக்கக்கூடியதா? இந்தக் கேள்விகளுக்குத் தகுந்த ஸமாதானம் அறிந்து கையாடுவோரே விவேகிகள். அற்பவிஷயமாயினும் அதிலுள்ள ஸுகாஸுகங்களை யறிந்து அதைக் கைக்கொள்வதே புத்தியின் லக்ஷணமாகும். பூர்வகாலத்திலிருந்த ஆபரணவஸ்திராதிகளுக்கும் இக்காலத்திலுள்ள உடமை, புடவைகளுக்கும் எத்தகைய வித்தியாச மிருக்கிறதென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? பிராசீனஸ்திரீ புருஷர்கள் சாஸ்

திரீயமாய்க்கொண்டாடிவந்த அணியுடைகள் இக்காலத்தாருக்கு அருவெறுப்பைத் தந்திருக்கின்றன வென்பதற்கு ஸம்சயமுண்டோ? பாட்டிபாடின வைதீகப் பாட்டுக்கும் பௌத்திரி கானம் செய்யும் வர்ணமெட்டு சிந்துகளுக்கும் ஏதாவது ஸம்பந்தமுண்டா? மஞ்சள் குங்குமம், சாந்துகளுக்கும், ஸோப், லவாட சூன்யம், ஸெண்டு, பௌடர்களுக்கும் உறவுண்டா? தாரா அணிந்தவிபூதி, நாமம் முத்ராங்கிதம், சந்தனம், அட்சதை, சிகை, பூணூல் முதலிய சாஸ்திரீய அலங்காரங்களுக்கும், இப்போது வாலிபர்களிடம் காணப்படும் கிராப், காலர், நெக்டை, ஸிகாரட் வாஸனைகளுக்கும் எத்தகைய வித்தியாசமுண்டென்பதை நாம் கூறவும் வேண்டுமோ?. அவர்கள் பொழுதுவிடிந்ததுமுதல் மறுதினம் வரையில் ஸ்நானம், ஜெபதபம், வேதபாராயணம், ஈசுர உபாசனை முதலிய வைதீக கர்மங்களைச் செய்துவந்தனர். நமது பாலர்களோ எழுந்ததுமுதல் காப்பீ, டீ, பலகாரம், ஆகாரம், அன்புள்ள நேசர்கள் நேசிகள், முகக்ஷவரங்களில் நாளையோட்டுகின்றனர். ஆண் பெண்களின் உடைநடைகளே வேறுவிதமாயின. ஜாதிவகுப்புகளை அறியமுடியவில்லை. அதிக கர்நாடகமாயிருந்த முன்னோர்களுக்கும், மிதமிஞ்சிய நேர்மாறான நாகரீக சீர்திருத்தத்தைக் கைப்பற்றும், சிறுவர்களுக்கும் மத்தியில் மற்றொரு வைதீக பிராயஸ்தர்கள் ஏற்படுவது அவசியமாயிருக்கிறது. அதிக ஆசாரம், அதிக அநாசாரம், இவ்விரண்டிலும் கஷ்டமுண்டாகும். நமது மதக்கர்மங்களைப் பொறுமையோடு ஓதி அதின் அர்த்தங்களைத்தெரிந்து பூர்வாசாரத்திலுள்ள குணதோஷங்களைப் பரிசீலனைசெய்து ஸாரமானதைக் கிரகித்து தற்காலநாகரீகத்தை நல்வழியில் விருத்திசெய்து வருபவர்களே புத்திமான்கள் நம்மிடமுள்ள குறையை நீக்கிக்கொண்டு பிறகு மற்றவர்களின் குணவிசேஷங்களைப் பின்பற்ற முயலவேண்டும். சகோதர சகோதரிகளே, தயவுசெய்து இவ்விஷயத்தை நன்குசிந்தித்து இப்போதே எச்சரிக்கையடையுங்கள். இன்றேல் பிறகு நமக்கும் நமது சந்ததியார்க்கும் பெருந்திங்காய் முடியும்.

K. A. துரைசாமிமுதலியார், கடுவலூர்.

மாணவர் பக்கம்

கோள் சொல்லல்.

கோள் சொல்வது கெட்ட நடக்கைகளில் ஒன்று. இது பொறுமையாலும் உண்டாவதுண்டு. ஒருவன் தனக்கு மற்றொருவன் ஏதோ தீங்கு செய்ததாக அவனை நம்முன் தூஷிக்கிறான். அதை நாம், தூஷிக்கப்பட்டவனிடம் சென்று, இன்ன மனிதன் உன்னை இன்னவிதமாய்த் தூஷித்தான் என்று கூறுவது கலகம் செய்யும் கெட்ட குணமே. அவன் சொன்னது உண்மைதான் என்பதினாலேயே அது குற்றமற்ற நடக்கையாகாது. அப்படிச் சொல்வதிலும் அவன் கூறியதன்மேல் இன்னும் சில வார்த்தைகளைத் தாமே கூட்டிச்சொல்வது பின்னும் அதிக கெட்ட நடக்கை. சிலர் இப்படிப்பட்ட நடக்கைகளில் மிக்க சந்தோஷமுடையவர்களா யிருக்கிறார்கள். இவ்வாறு கோட்சொல்லும் குணம் சிறுவர்களிடம் அதிகமா யுண்டெனினும், வயது வந்தவர்களிலும் சிலர் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். கோள் சொல்லுகிறவன் கடைசியில் இரு கட்சியாராலும் வெறுக்கப்பட்டு அயோக்கியன் என்று மதிக்கப்படுவான். பாடசாலைகளில் சிறுவர்கள் ஒருவர்மேலொருவர் உபாத்தியாயரிடம் கோள் மூட்டுவதுண்டு. தான் யோக்கியனென்றும் மற்றவன் அயோக்கியனென்றும் உபாத்தியாயர் மதிக்கவேண்டுமென்பதே கோள் மூட்டியின் கருத்து. அவ்வாறே ஒருஎஜமானனிடம் வேலைசெய்யும் ஆட்களில், எஜமானன்

தன்மேலேயே அதிக அன்பும் அபிமானமும் வைக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டு ஒருவன் மற்றொருவன்மேல் எஜமானனிடம் கோள் சொல்வதுண்டு. இத்தகைய மூடர்கள் கடைசியில் தங்களுக்கே அழிவைத் தேடிக்கொள்வார்கள். இதற்குத் திருட்டாந்தமாக ஒரு சிறு கதை கூறுகிறோம் :—

அவந்தி என்ற காட்டில் வீரகேசரி என்ற ஒரு சிங்கம் அரசனாயிருந்தது. அதற்கு சுபுத்தி என்ற நரி முதல் மந்திரியாகவும், ஜாம்புவன் என்ற கரடி இரண்டாம் மந்திரியாகவும், மந்தன் என்ற கழுதை மூன்றாம் மந்திரியாகவும் இருந்து வந்தன. நரி, அரசனுக்கு இரண்டாவது பதவியான முதல்மந்திரி பதவியில் இருப்பது, மந்தன் என்ற கழுதையின் மனதிற்குச் சகிக்கவில்லை. ஆகையால் அதன்மேல் சிங்கத்தினிடம் கோட் சொல்லி அதை யழித்துவிடக் கருதி எப்போது சமயம் வாய்க்குமெனப் பார்த்துக்கொண்டிருந்தது.

ஒருநாள் சிங்கத்திற்குக் கடுமையான வயிற்றுவலி கண்டு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தது. அன்று நரி ஏதோ அசந்தர்ப்பத்தால் மாலை வரையில் சிங்கத்தை வந்து காணவில்லை. கழுதையும் கரடியும்மட்டும் தங்கள் அரசனாகிய சிங்கத்தினிடத்திலேயே உபசாரம் செய்துகொண் டிருந்தன. காட்டிலுள்ள மற்ற மிருகங்களனைத்தும் வந்து தங்கள் அரசனாகிய சிங்கத்தைக் கண்டு விசாரித்துவிட்டுச் சென்றன.

தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள இதுவே சமயமென்று எண்ணி கழுதை சிங்கத்தின் பாதங்களில் பணிந்து "அரசனே, சில காலமாய் ஒரு சங்கதியைப்பற்றி தங்களிடம் மனு செய்ய வெண்ணியிருந்தும், அச்சத்தால் கூறாமலே யிருந்தேன். இன்னும் கூறாவிடின் தங்களுக்குத் துரோகம் செய்வதாய் முடியுமாதலால் கூற அனுமதி கேட்கிறேன்" என்றது. சிங்கம் அச்சமின்றிக் கூறு என்றது. கழுதை.

"மகாராஜனே! சில காலமாய் நரி தங்களைப்பற்றி மிக்க அலட்சியமாய்ப் பேசத் தொடங்கியதோடு நடக்கவும் தொடங்கியிருக்கிறது. திருட்டாந்தமாய் இன்று தாங்கள் இவ்வளவு வியாதியுற்றிருக்க யாவரும் வந்து பார்த்தும், முதல் மந்திரியாயிருக்கும் நரி வந்ததா பாருங்கள். தாங்கள் இறந்துவிட்டால், தான் அரசனாகலாம் என்பதே அதன் ஆசை. அதற்காக எங்கே தங்களுக்குச் சமயம் பார்த்து ஏதாவது தீங்கு செய்துவிடுமோ வென்று அஞ்சுகிறேன்" என்றது.

இதைக் கேட்ட சிங்கம் மிக்க கோபமடைந்து, "வரட்டும் அந்த நரி இன்றே அதோகதி செய்துவிடுகிறேன்" என்றது. நடந்த சங்கதி யாவும் தன் நேசரால் கேள்விப்பட்ட நரி, மாலை வந்தபோது சிங்கத்திற்குச் சற்று தூரத்திலேயே நின்று வணங்கிற்று. சிங்கம் "என் இன்னேரம் வந்து நம்மைக் காணவில்லை?" என்றது.

நரி :—"மகாராஜா! நான் அதிகாலையில் தங்களிடம் வந்துகொண்டே யிருக்கையில், தாங்கள் கொடிய வயிற்றுவலியால் அவஸ்தைப்படுவதைக் கேள்விப்பட்டேன். 'அந்தோ! நாம் அரசனிடம்சென்று வாயால் உபசாரம் கூறிக்கொண்டிருப்பதால் என்ன பயன். எங்கேனும் தேடி உடனே வியாதி நிற்கத்தக்க ஔஷதம் கண்டுபிடித்து எடுத்துச் செல்லவேண்டும்' என்று தீர்மானித்துச்சென்று காடெல்லாம் தேடிக் கடைசியில் ஒரு மகானைக் கண்டு அவரால் மருந்தையறிந்து, அன்னகாரமின்றி களைப்போடு மெதுவாய்நடந்துவந்ததால் இன்னேரமாயிற்று, மன்னிக்கவேண்டும் மகாராஜா" என்று நமஸ்கரித்தது.

இதைக்கேட்ட சிங்கத்திற்கு உடனே அதன்மேலிருந்த கோபம் அடியோடு நீங்கிச் சந்தோஷமடைந்து "ஆ, என் அன்பான மந்திரியே! ஏதோ மருந்தைக் கொடு" என்றது.

நரி.—"மஹாராஜா! அது மிக்க இரகசியமானதென்றும், தங்களைத் தவிர வேறொருவர் செவியில் கூறலாகாதென்றும் அந்த மகான்கூறினார்" என்று சிங்கத்தினருகிற் சென்று அதன் செவியில் "ஆண் கழுதையின் ஈரலைச் சுடச்சுடப் புசித்தால் உடனே இன்னோய் தீருமாம். நான் மகா பாபி. அவன் நரியின் ஈரலையென்று கூறியிருந்தால், எவ்வளவோ ஆனந்தத்தோடு இந்தப் பயனற்ற தேகத்தை யென் அரசருக்காக அர்ப்பணம் செய்து புண்ணியப் பேறடைவேனே" என்றது.

இதைக்கேட்டதே நரி, வயிற்றுவலியின் கொடுமையால், உடனே அருகிலிருக்கும் மந்தன் என்ற கழுதைமேல் பாய்ந்து அதைக் கொன்று ஈரலைப் புசித்துவிட்டது. தெய்வ கதியாய் நோய் நின்றுவிட நரி மிக்க கண்ணியம் பெற்றது.

ஆகையால் கோட் சொல்லுவது மிக்க கெட்ட நடக்கை யென்றுணர்ந்து சிறு வயதிலேயே அதற்கிடங்கொடாமல் தப்பித்துக்கொள்ளவேண்டும். ஆ-கு.

ஸ்திரீகள் பக்கம்

மாதரொழுக்கம்.

(157-வது பக்கத் தொடர்ச்சி)

(17) கற்பிற்சிறந்தமாதர்கள், பூப்படைந்து வீட்டினின்றும் நீங்கிப் புறத்தே வசிக்கின்ற மூன்றுநாள்களிலும், தங்கள், கணவர் தங்கள் முகத்தைப் பார்க்கும்படி எதிரில் வரமாட்டார்கள். வீட்டுக்குள் பிரவேசியார்கள். ஒரு வேளை போஜனமேயன்றி மறுவேளை போஜனஞ் செய்யமாட்டார்கள். தங்கள் கணவரெதிரில் நின்று வார்த்தை சொல்லார்கள். தங்களையொத்த பூப்படைந்த மாதர்களுடன் சேரமாட்டார்கள்.

(18) கற்பினையுடைய மாதர்கள், கிரமப்படி குற்றமற்ற நான்காவது நாளில், அழகிய சுத்தஜலத்தில் ஸ்நானஞ்செய்து, எல்லாநன்மையு முண்டாகும்படி தங்கள் கணவரை யன்புடனே மனதில் தியானித்துக்கொண்டு, இடமகன்ற ஆகாயத்திற் பிரகாசியாநின்ற சூரியபகவானை தரிசனஞ் செய்வார்கள்.

(19) பழித்தற்கிடமில்லாத கற்பிற்சிறந்த மாதர்கள் வசிக்கப்பெறாத மாளிகையானது, நான்கு திக்கிலும் பரவும்படி பிரகாசியானின்ற கிரணங்களை வீசுகின்ற மேன்மைபொருந்த நவரத்தினங்க ளிழைக்கப்பெற்றுப் பேரழகு வாய்ந்து விளங்குவதாயிருந்தாலும், பேய்கள் வாழ்தற்கிடமாகிய சுகமில்லாத காட்டுக்குச் சமானமாகுமென்று மேலோரெடுத்துச் சொல்வார்கள்.

(20) இப்பூமியின்கண்ணுள்ள பலரும் வியந்துபுகழத்தக்க கற்பிற்சிறந்த மாதர்களின் பாதங்கள், இப்பூமியில் எவ்வெவ்விடங்களிற் படுகின்றனவோ அவ்விடங்களே, ஒப்பிலாத பலவகைப்பட்ட திவ்யஸ்தலங்க ளெல்லாவற்றினு மிகுந்த புகழ்பெற்று விளங்கும் புண்ணியஸ்தலமாகுமென்று மேலோர் கூறியிருக்கிறார்கள்.

(21) வெண்மைநிறம்பொருந்திய அலைகளானது, குற்றமற்றுயர்ந்த முத்துக்களை வாரிக்கரையினிடத்து வீசிமடங்குகின்ற தெய்வத்தன்மை பொருந்திய, கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களெல்லாம் தங்கள் தங்கள் பாவங்களனைத்தும் நீங்கும்படி, கற்பிற்சிறந்த மாதர்களன்புடனே முழுகி நீராடவேண்டுமென்று மனதில் விருப்பத்தைக் கொண்டிருக்கும்.

(22) மிகுந்த அழகினையும் பசிய நிறத்தினையுமுடைய சப்த அஸ்வங்கள் பூட்டிய ரதத்தையுடைய ஆயிரங்கிரணங்கள் பொருந்திய சூரியனும், இருட் கூட்டங்கள் விலகும்படி வெள்ளிய வமுத கிரணங்களை யுலகமெங்கும் பரவச் செய்கின்ற சந்திரனும், வீசுகின்ற தங்கள் தங்களழகிய கிரணங்களானவை, இப் பூமியில் வசிக்கும் குற்றமற்ற கற்பினையுடைய மாதர்களின்மேற் படுங்காலங்களில் தத்தம் மனதில் மிகுந்த அச்சத்தை யடைவார்கள்.

(23) கற்பிற் சிறந்த மாதர்களைப் பெற்ற தாய் தந்தையர்களின் வமிசத்திலுள்ளவர்களும், அம்மாதர்களன்புடனே குடிவாழ்க்கை செய்யப்புகுந்த வமிசத்திலுள்ளவர்களும் சுவர்க்காதி போகங்களை யடைவார்கள். கற்பு நெறியிற் றவறிய மாதர்கள் பிறந்த வமிசத்திலுள்ளவர்களும், புகுந்த வமிசத்திலுள்ளவர்களும், பொலிவற்ற கொடிய எரிவாய் நரகங்களிற் சேர்வார்கள்.

(24) தங்களுக்குரிய கணவரை வந்தனை வழிபாடுகள் செய்து வணங்குவதையே வுயர்ந்த விரதமாகக் கொள்ளாமல், உயர்வாகச் சொல்லப்பட்ட விரதங்களுடனே செய்தற்கரிய தேவபூஜை முதலியவற்றைச் செய்யுமாதர்கள், கொடிய நரகவாதனையை யனுபவிப்பார்கள். குற்றமற்று விளங்குந் தங்கள் கணவர்மேல் குற்றங்களைச் சொல்லிப் பலரறியத்தூற்றி, அவர்கள்மே லன்பில்லாதவராய்க் கோபித்தெதிர்த்துப் பேசும் மாதர்கள், மறு சனனத்தில் பெண் நாயாகப் பிறப்பார்கள்.

(25) தங்களை மருவிச் சேர்ந்த கணவர் தங்களைக் கோபிப்பார்களாயின், அதுகாலை யவர்கட் கெதிரிலிருந்து உதாசீனமாகப் பேசுமாதர்கள் சீற்றத்தையுடைய புலியாகப் பிறப்பார்கள். பிற புருஷர்களி னுருவ லக்ஷணங்களைக் கண்டு வியந்து பேசுமாதர்கள் யாவருங் கொடியதென்று நினைக்கத் தக்க வைசாசமாகப் பிறப்பார்கள். தங்கள் கணவர் பசியுடனிருக்க அவர் பசியைத் தணிக்காமல் மிகுந்த சந்தோஷத்துடனே போஜனஞ் செய்யுமாதர்கள் முழுமல தேகியாகிய பன்றியாகப் பிறப்பார்கள்.

(26) தங்களை மணந்த கணவரிறப்பாராயின் உடனே தங்களுயிரை நினைத்த மாத்திரத்தில் விட்டுவிடக்கூடிய மாதர்களே உத்தம கற்புடைய புண்ணியசாலிகளாவார்கள். (ஜெயதேவ சுவாமிகளின் பத்தினியே இதற்கு அத்தாட்சி.) அவ்வாறிறந்த கணவரைத் தகனஞ்செய்யு மக்கினியி லவர்மீதிருக்கு மன்பின் மிகுதியினாலே விழுந்துயிரைவிடு மாதர்கள் தங்கள் கணவருடனே ஒப்பற்ற சுவர்க்கலோகத்தில் இப்பூமியிலுள்ள பலரும் புகழும்படி அழிவற்றகாலஞ் சிறப்புற்று விளங்கி வாழ்வார்கள் என்று நூல்கள் மொழிகின்றன.

(27) ஆபரணங்களையிழந்த கைம்பெண்கள், தங்களுக்கு விதித்த நல்லொழுக்கங்களிற் றவறுவராயின், அவ்வாறு தவறியமாதர்கள் தங்கள் குலத்திற்பிறந்த வனைவரையும் பஸ்மீகரப்படுத்துமக்கினிமயமாகிய கொடியநரகத்திற் காளாவார்கள்.

(28) மாதர்கள் தங்கள் கணவரிறப்பாராயின் பகற்காலத்தில் ஒரேவேளை போசனஞ்செய்து, பெரியோரால் விலக்கவேண்டுமென்ற விதிப்படி தாம்பூல தாரணத்தையும் சுகமானபடுக்கையையும் நீக்கி செய்தற்கரிய பலவகைப்பட்ட விரதங்களையும் மிகுந்த அன்புடனே கிரமப்படி யனுஷ்டிக்கவேண்டும்.

(29) கைம்பெண்கள் வேதங்களிற்கூறும் மேன்மைபொருந்திய விரதங்களை யனுஷ்டித்து வருவதுமன்றி உயர்ந்ததவங்களையுஞ் செய்வாராயின், பெருமகிழ்ச்சியுடனே தங்கள் கணவர்கள் வசிக்குமிடத்திற்சேர்ந்து அவருடனே தாங்களும் பழிப்பில்லாத மகத்தாகிய போகங்களை யனுபவிப்பார்கள் என்பது திண்ணமாம். சுபம்.

N. G. K. கிருஷ்ண ஆச்சாரி, நாகலாபுரம்கன்பட்டி.

மாதர் மறுமணம்.

(190-வது பக்கத்தொடர்ச்சி)

இதில் தமயந்தியினுடைய புனர் விவாகவிஷயம் கேட்டபோது நளமகாராஜனுக்குண்டான விசாரங்களைச் சொல்லுகிற மஹாபாரதத்தில்

"தமயந்தீ பவே தேவம்
கின்னு துஃகேன மோகிதா |
அஸ்மதார்த்தே பவேதுவாய—
முபாயஸ்சு விந்தோமகான் ||
நிருசம்ஸம்பத! வைதர்பீ
கர்த்து காமாத மஸுவிநீ |
மயாக்ஷுத்ரேண நிக்ருதா
க்ருபணு பாபபுத்திநா |
ஸ்திரி சுபாவஸ்சுலோ லோகே
மமதோஷ ஸ்சுதாருண :"

இந்த வாக்கியத்திலிருந்து ஸ்திரீ புனர்விவாக விலக்கைப்பற்றி சரியாக உணர வேண்டும். புனர்விவாகம் விரோதமில்லை என்றிருந்தால் ஸ்திரீகளுடைய பேதமையைத் தமயந்தி செய்துவிட்டாளென்று தோன்றுகிறசமயத்தில் பலவிதமாய் யோசித்து யோசித்து நளன் பச்சாதாபப்பட ஆவசியமிராதல்லவா. இந்த நிலைமைக்கு புராதனகாலத்தில் விதவாவிவாகம் நடப்பிக்கவில்லையென்று நிச்சயமாயும் யுக்தி பூர்வமாயும் விளங்குகின்றது. நைடதத்திலும், தமயந்தியா லனுப்பப்பட்ட சேசினி என்னுந்தோழி வேற்றுருவத்தோடு விளங்கிய நளனிடம் வந்து தணலும் புனலும் (நெருப்புந் தண்ணீரும்) இன்றி, சமைத்தல் தொழிலை நளனல்லாது செய்பவரில்லை. நீ நளனிடம் கற்றுக்கொண்டாய் போலும், ஆயின் அந்நளன் யாங்குளன் என்று வினவியபோது, வேற்றுருவந்தாங்கிய நளன்

மேய விஞ்சையோர் நளனெடுங் கற்றிலன் விறல்வேற்
சேயனு னினிதுறைவ திவவிடமெனத் தெருளேன்
றூய கற்பினுர் காதலர் துறப்பினு மற்றோர்
நாயகற் பெற நினைவர் கொலோவென நவின்றான்

களனது இருப்பிடம் நானறியேன் கற்புடைய மங்கையர் தம் காதலரைத் துறந்தாலும், வேறொரு நாயகனையடைய நினைப்பார்களோ வென்று பிரலாபித்திருக்கின்றான்.

இரண்டுதரம் வேட்கப்பட்டவ ளென்றும் மற்றும் அர்த்தத்திலுள்ள சம்ஸ்கிருத பதங்களும் விதவா விவாகத்தினுடைய விஷயத்தை ஸ்தாபிக்கிறவையல்ல. சில துற்சீலமுள்ள ஸ்திரீகள் புருஷனது மரணத்திற்குப் பின்னரோ அல்லது, அவன் சீவனோடு இருக்கும் பொழுதோ காரணமொன்றுமில்லாமல் அன்னிய புருஷனை சுவீகரித்திருக்கலாம். அந்தஸ்திரீகளுடையவும் அவளுடைய கணவனுடையவும் மற்றுங்குறிக்கப்படுகிற வாசகபதங்களைச் சொல்லாது விடமார்க்கமில்லையல்லவா! ஆகையாற்றான் அம்மாதிரி பதங்கள் பாஷையில்வந்து சேர்ந்ததென்று உணரவேண்டும். சோரநாயகனுடைய மகன் என்றும் மற்றும் அர்த்தத்திலுள்ள சம்ஸ்கிருத பதங்களுள்ளது கொண்டு களவு, சோரத்தனம் முதலானவைசெய்வது உசிதமென்றும், இது முன்காலத்தில் பாரதகண்டத்தில் சர்வானு மதமான ரீதியில் பிரசுரித்திருந்ததென்றும் சொல்வது எங்ஙனம் பொருந்துமோ? அதுபோலதான் "புனர்ப்ரு:" என்றிம் மாதிரியுள்ள பதங்களைப்பற்றி அபிப்பிராயப்படவேண்டும் அதுதான் யுக்தம் ஆகையால் "புனர்ப்

ரு:" திதிஷூ:. என்ற பதங்கள் சமஸ்கிருதபாஷையி லுள்ளது நிமித்தம் அப்பதங்கள் விதவா விவாகத்திற் குரியவையென்று தீர்மானிப்பது கேவலம் அறிவிலாததேயா மென்று சொல்லாதிருப்பதற்கு வழியில்லை என்றால்

ஊடாயா: புனருத்வாஹம்
ஜ்யேஷ்டாம்ஸம் கோவதம்ததா||
கலௌ பஞ்ச நகுர்வீத
ப்ராத்ருஜாயாம் கமண்டலும்||

என்று சூரிய புராணத்திலும் ப்ருஹந்நாரதீயத்திலும் இம்மாதிரியே ஸ்மிருதி களிலும். கலியுகத்தில் நீக்கப்பட்டவைகளை ஒப்புக்கொண்ட விஷயங்களில் இம்மறுமணத்தையும் உட்படுத்திக் காண்கிறதினாலும் கலியுகத்தில் பிரத்தியே கம் நீக்கப்பட்டிருக்கிறவை யென்று சொல்லப்பட்டவைகள் முந்திய யுகங்களில் அநுஷ்டானத்தி லிருந்ததாய்த் தோன்றுவதாலும், அக்காலத்தும் இம்மறு மணத்தை ஆதரிக்கவில்லை என்று சொல்வது நியாயமோ வென்பதாய் ஒரு கேள்வி பிறக்கிறது. இதற்குச் *சமாதான மிகவெளிது. இருடிகள் திரிகால திருஷ்டியுள்ளவர்களாகையால், அவர்களுக்குக்கடந்த காலத்திலேயுள்ள சம்பவங் களைப்பற்றி சரியாய் அறிந்துகொள்ள முடியும். இந்தஸ்திதிக்கு கிரேதாதியுகங் களில் ஜனங்கள் நன்மையை கடைப்பிடித்தவர்கள் கலியுகத்தில் அவ்விதமில் லாதலால் அதர்மாபிலாசம் யாருக்கும் உண்டாகுமென்றும் அதனால் விதவா விவாக முதலான அதர்மங்களில் பந்தப்பட்டுத் தீருமென்றும் யுகதர்மானு சா ணம் அவர்கள் தீர்மானப்படுத்தி இவ்விதம் விரோதித்திருக்கின்றனர். இந்த இடத்தி லிவ்வணந்தான் வித்துவ சிரோமணிகள் அபிப்பிராயப்படுகின்றனர். ஆகையால் பௌராணிககாலத்தின் ஸ்திதியைக்குறித்து ஆலோசித்துற்று நோக்கும்பொழுது, விதவா விவாகம் சர்வ சம்மதமானதோ ரிடத்திலும் அநுஷ் டிக்கப்படவில்லை யெனத்தெரிகிறது.

புராதனமான இருடிகள் கலியுகத்தின் அவஸ்தைகளைத் திருஷ்டி பூர்வங் கண்டு இவ்வாறு விதித்திருப்பதால், விதவா விவாகத்தை ஆதரித்து நாரத ஸ்மிருதி சொல்லுமானால் அந்த ஸ்மிருதிகளுக்கு கதிதுர்லபமா மென்றுள்ள சங்கையையும் அது வாக்குதானத்திலுள்ள கன்னிகைகளை மாத்திரம் குறிக்கு மென்றுள்ள சமாதானத்தால் நிராகரிக்கவேண்டும்.

இவ்வளவு தூரஞ் சொன்னதிலிருந்து முன்காலத்தில் பிரஸ்தாபவிவாகம் இல்லையென்றே சித்திக்கிறது. இனி நாம் விசாரிக்கவேண்டியது விதவா விவாகத்தை தீர்க்கதரிசி (முக்கால வர்த்தமானங்களையு மறிபவர்) கள் இப்படிக் கடினமாய் விரோதப்படுத்த தக்ககாரண மேதாகிலு முண்டோ வென்பதேயாம்.

இவ்விவாகம் ஸ்திரீகளுக்கு அதி முக்கியமான பதிவிரதா தன்மையைக் கெடுத்துவிடக் கூடியதென்றும், இதற்கும் வியபிசாரத்திற்கும் பேதமொன்று மில்லை என்றும் முன்னே சொன்னோமல்லவா. என்றால் இவ்விவாகம் யுக்தமா மென்று சித்தாந்தஞ் செய்கிறவர் இந்த அபிப்பிராயத்தோடு அவ்வளவு யோசித் திருப்பதாய்க் காணவில்லை. அவர்கள் இவ்விஷயத்தில் கொண்டுவந்த யுக்தி என்னவென்றால் இஷ்டமுள்ள புருஷர்களை நியமங்கூடாமல் சேருகிறது வியபிசாரமென்றும், (ஸ்திரீ) புனர்விவாகமோ அம்மாதிரியல்லாமல் முதல் வெட்கப்பட்டவன் பரலோகஞ் சென்றால் வேறே ஒரு புருஷனைமாத்திரம்

* சமாதானமென்றால் சிலர் சமாதானந்தானே வேறே யென்னவென்று சாதாரணப்படுத்தி விடுகின்றனர். சமாதானந்தான் மிக முக்கியமானதும் தருமமானதுமா மென்பதுதான் அறிஞர்களுடைய அபிப்பிராயம்.

சுவீகரிப்பது மாத்திரமே தானென்றும் அபிப்பிராயங் கொள்கின்றனர். நியம மில்லாமல் இஷ்டப்பிரகாரம் பலபுருஷர்களை சுவீகரிக்கிற வேசைகளுக்கும் விதவைகள் வைதவ்வியம் (அமங்கிலித்தன்மை) ஆகும் பொழுதெல்லாம் நியமப்படி ஒவ்வொரு புருஷர்களை மாத்திரம் அங்கீகரிப்பவளுக்கும் பரஸ்பரம் அதிக வித்தியாசமில்லை யாதலின், புனர்விவாகம் வியபிசாரந்தானே வென் றுரைப்பது சரியானதல்லவென்பதுதான் மகான்களுடைய அபிப்பிராயம்.

விதவா விவாகஞ்செய்கிற புருடனை சாஸ்திரங்களில் ஓரிடத்திலும் பார்த்தா வென்று பகுத்துச் சொன்னதாய்க் காணவில்லை. அதற்குக் காரணம் விதவை களுக்கு விவாகம் நடப்பில்லாததுதான். நடப்பில்லாததை நடத்தும்பொழுது அது விவாகமாவதல்ல விவாகதத்துவ மில்லாததால் புருஷ தத்துவமுமில்லை தானே. இந்நிலைமை பார்த்தாவல்லாத ஒரு புருஷனை சுவீகரிப்பதானது வியபி சாரந்தானென்றும் பாணிக்கிரகணமென்ற சாஸ்திரவிதியை வேசைகள் அநுஷ் டிக்காததாலும் யுக்திஹீன நிமித்தம் விதவைகளுக்கு பாணிக்கிரகணம் சாஸ்தி ரானு சானமில்லாததாலும் புனர்விவாகத்தை விரும்புகிற விதவைகளுக்கும் வியபசாரிகளுக்கும் வித்தியாசமில்லை என்பதும் தர்க்கமற்ற சங்கதிதான்.

(தொடரும்)

E. S. சிவராமலிங்கம் பிள்ளை, புனலூர்.

வைத்தியக் குறிப்பு.

கேழ்வரகின் குணம்,

கேழ்வரகானது நம்தேசத்தில் எங்கும் பயிரிடக்கூடியதும் பலரும் உப யோகித்து வருவதுமான ஆகாரமேயானாலும், அதைப் பெரும்பாலும் ஏழை ஜனங்களே தற்காலம் உபயோகப் படுத்துகின்றார்கள். நாகரீகமும் செல்வமும் அதிகரித்த பெரும்பாலார் கேழ்வரகு என்றநாமத்தையும் அதன் உபயோகத்தை யும் காதில் போட்டுக்கொள்ளமாட்டார்கள் என்பது திண்ணம். ஆயினும் நாம் எடுத்துக்கொண்ட விஷயங்களுக்கு சார்பாகச் சொல்ல வேண்டியனவற்றைச் சொல்லவேண்டுவது கமது கடமையாய் இருப்பதால் சிறிதுமாத்திரம் இங்கு கூறுவோமாக.

கேழ்வரகானது சகல ஆகாரங்களிலும் மேன்மைப்பட்ட தென்பதில் கொஞ்சமேனும் சந்தேகம் கிடையாது. அப்படி யாராவது இல்லையென்பார் களேயானால், தத்துவசாஸ்திரமூலமாய் ருசுப்படுத்தும் பட்சத்தில் நான் அவர் களுக்கு 100 ரூபாய் இனாம் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன். ஆனபடியால் கேழ்வரகென்பது நம்தேசத்தவர்களுக்கு தாழ்ந்ததாய்த்தோன்றினாலும், ஆராயும் காலத்து கேழ்வரகில் தாம்பிரத்தின் சத்திருத்தலால், சகல ஆகாரங்களைவிட உயர்ந்ததே என்பதில் சந்தேகம்கிடையாது. இதற்குச் சான்றாக முற்காலங் களில் கிராமவாசங்களிலிருந்த சகலர்களும் கேழ்வரகை அதிகமாய் உபயோ கித்து வந்தார்களென்றும், அவற்றால் நோயற்றவர்களாயும், பலசாலிகளாகவும் நீண்ட ஆயுளுள்ளவர்களாயும் இருந்தார்கள் ஏன்பது சகலர்க்கும் கண்கூடான விஷயமே. ஆனால் கேழ்வரகினால் வியாதியற்றவர்களாய் எப்படிக் காணப்பட் டார்கள் என்று சந்தேகங்கொள்ளுங்கால், சாதாரணமாய் தற்காலநாகரீக தத்துவ சாஸ்திரிகள் சொல்லுவதற்கிணங்க, எந்த ஆகாரம் ஜீரணப்பைக்கு அதிகவேலை யைத் தராதோ அந்த ஆகாரமானது சகலவியாதியையும் தடுக்கும் என்பது சாஸ்திரயுக்தமானதால், கேழ்வரகானது சீக்கிரத்தில் ஜீரணமாகக்கூடியதும்

மிருதுவானதுமானபடியால் மேற்சொன்ன சகலகுணங்களும் இந்த ஒரு ஆகாரத்தின்பாலே யுளவாகப்படியால், தற்காலம் வழங்கிவரும் சகல ஆகாரங்களிலும் உயர்ந்ததாய் மதிக்கவேண்டிய ஆகாரம் நம்தேசக் கேழ்வரகேயாகும். இதற்குத் திருஷ்டாந்தமாய் சிலவற்றைக் கூறுவோம். இராஜாங்கத்தாரால் குற்றவாளிகளுக்கென்று எற்படுத்தப்பட்டுள்ள சிறைச்சாலைகளில் சாதாரணமாய் கேழ்வரகே ஆகாரமாயளிக்கப்படுகிறது. நமது இராஜாங்கத்தார் எந்தக்காரணம்பற்றிக்கேழ்வரகை உபயோகித்துவந்தபோதிலும், குற்றவாளிகளுக்கு அது ஓர் உயர்தர ஆகாரமெனவே மதிக்கவேண்டும். எப்படியெனில், இராஜாங்க ஜெயில் ரிபோர்ட்டை வாசித்துப்பார்க்கும்பட்சத்தில், முதல்முதல் குற்றவாளிகள் சிறைச்சாலையில் சேர்க்கப்பட்டபோது அவர்களின் சரீரத்திலுள்ள வியாதிகளையும் அவர்களின் மொத்த இடைகளையும் பதிந்துக்கொள்ளுகின்றார்கள். மறுபடியும் அவர்களை விடுதலைசெய்யும்காலத்திலும் பதிவுசெய்கின்றார்கள். அதனால் பிரதி குற்றவாளியும் சிறைக்குச் செல்லுங்காலத்தில் 90-பவுன் அல்லது 100-பவுன் இடையுள்ளவனா யிருந்து விடுதலடையும் காலத்து 150, 200-பவுன் நிறையுள்ளவனாய் காணப்படுகிறான் என்று அனுபவமாய் விளங்குகிறது. அன்றியும் மெலிந்தும் வியாதிகளால் பீடிக்கப்பட்டும் காசம் க்ஷயம் மூலம் மேகம் சுரம் முதலான வியாதிகளோடும் சிறைக்குச் சென்ற ஒவ்வொரு குற்றவாளியும் 6-மாதத்திற்குள் சகல வியாதிகளினின்றும் வேறாய் சரீரம்பலத்து திடகாத்திரர்களாய் விடுதலை யடைவதை மேற்படி புஸ்தகபதிப்புகளிலும் அனுபவத்திலும் பார்த்துக்கொள்ளலாம். பாருங்கள், சிறைச்சாலையில் என்ன டானிக் சாப்பிட்டார்கள்? என்ன ஔடதம் உட்கொண்டார்கள்? ஒன்றுமே கிடையாது. ஆனால் நம்தேச உயர்தர ஆகாரமாகிய கேழ்வரகு ஒன்று மாத்திரமே உபயோகப்படுத்தினார்களே யொழிய வேறில்லை. அன்றியும் காகிநாடா கோரங்கி மசுலிபட்டணம் பீம்லிபட்டணம் விசாகப்பட்டணம் மைசூர் முதலிய இடங்களில் உள்ளவர்கள் க்ஷயம் காசம் நீரிழிவு முதலான வியாதிகள் பெரும்பாலும் இல்லாதவர்களாகவும், தேகதிடமுள்ளவர்களாகவும் நீண்ட ஆயுளர்களாகவும் காணப்படுகிறார்கள். ஏனெனில் அத்தேசங்களில் கேழ்வரகை யுபயோகித்துவருதலால்தான். கேழ்வரகானது சகல பலகாரங்களுக்கும் உபயோகப்படும். முன்சஞ்சிகையில் சொன்னதுபோல் மேல்தோலை நீக்கிய மாவை கோதுமைக்குப் பதிலாய் உபயோகிக்கலாம். பிறந்த குழந்தைகளுக்கும் மேற்சொன்ன மாவு உபயோகப்படுத்தலாம். ஆனால் மாவு முன் சொன்னதுபோல் செய்து கொள்ளப்படவேண்டும். இத்தகைய அருமைவாய்ந்த ஆகாரமானது நம்தேசத்தில் கிடைக்க ஏனோபயனற்ற ஆகாரங்களை நம்தேச டாக்டர்மார்கள் உபயோகிக்கும்படி உத்தரவிடுகின்றார்கள். இதனால் அவர்கள் பிறர் பிரசுரத்தைக்கண்டு அவர்கள் சொல்லுவதை உபயோகிக்கும் தன்மையர்களேயல்லாது தனக்கென ஒன்றும் தோன்றாதவர்களே யென மதித்தல்வேண்டும்.

மே. மாசிலாமணி.

ஓர் கடிதம்.

நமது அரிய நண்பர்களே!

நான் உங்களுக்கு தற்போது சொல்லப்புகும், விஷயத்தை வாசிப்பதோடு மட்டுமல்லாமல் அடிக்கடி அதை ஞாபகப்படுத்தி அதன்படி முயன்றுவருவீர்களாயின் நம் தாய்நாட்டிற்கு, நாம் துரோகம் செய்யாதவர்களாவோம். அதாவது தற்போது நம்தேச நிலைமை மிகவும் பரிதாபகரமா யிருக்கிறது. அதற்கு மூல காரணம் கல்வியில் ஊக்கமில்லாமையேயாகும் என்பது தெற்றெனவிளங்கும்

ஆகையால் நம்நாட்டிற் கல்வி பரவுவதற்குறிய வழிகள் எதுவோ அதைப் பின்பற்றி யொழுகவேண்டும். நமதுகாருண்ய கவர்ன்மெண்டாரும் கல்வி விஷயத்தில் அநேக உதவிபுரிந்திருக்கின்றனரென்பது செவ்வனே விளங்கும். இருப்பினும் நம் தாய்ப்பாஷையாகிய தமிழில் அபிமானமுள்ள புண்யவான்கள் மிகக் கொஞ்சமே என்று தெரிகிறது. தற்காலத்தில் ஆங்கிலம்கற்ற இந்துக்களில் சிலர் நம் தாய்ப்பாஷையை அடியோடு மறந்தேபோய் விட்டார்கள். நாம் பரத்கண்டத்தில் அவதரித்து தாய்ப்பாஷையை இகழ்ந்து மறப்பதைவிட பாபகரமானசெய்கை வேறு உண்டோ? ஆகையால் நம் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! இனியாகிலும் நம்பாஷை யபிவிர்த்தி யடைவதற்காகவென்றே ஆண்டவனருளால் தோன்றியுலவும் நமது 'ஆனந்தபோதினி' போன்ற மேலான தமிழ்ப் பத்திரிகைகளை ஊக்கத்துடன் வரவழைத்து உணர்வதுடன், உங்கள் சிநேகிதர்களையும் ஷை பத்திரிகைக்கு சந்தாதாரராய்ச் சேர்க்க முயற்சிசெய்ய வேணுமாய்க் கோருகிறேன். ஊக்கமுடமை யாக்கத்திற்கழகு, என்னும் முதுமொழிக்கிணங்க நடத்தலே நம்மனோர் கடமையாகும். நம் ஆனந்தபோதினி என்ற பத்திரிகை வெளியாவதற்குமுன் இருந்த நம்முடைய அறிவைவிட, தற்போது ஷை பத்திரிகை ஒன்றைமட்டும் இந்த 2 வருஷமாய்ப் படித்ததிலிருந்து எவ்வளவோ மேன்மையடைந்திருக்கிறோ மென்பது நிச்சயம். நாம்மட்டும் வாங்கி வாசித்துப் பயனடைந்துவிட்டால் போதுமென்று கருதுவதுகாருண்யமல்லவே. அப்படி நினைத்து நடந்தால் நம் தாய்நாடு எக்காலத்தில் க்ஷேமமடையும்? கல்வியின் அருமையுணர்ந்து அறிவை விர்த்திசெய்துகொள்ள வேண்டியவர்கள் இன்னும் எண்ணிறந்தோர் இருக்கின்றனரே. நாம் ஒவ்வொருவரும் வருடம் ஒவ்வொருவரையேனும் சந்தாதாரராய்ச் சேர்த்தால் நமது தாய்நாட்டின் நன்மைக்கு உழைப்போராவோம். அதோடு நமக்குப் பிரத்யட்சமாய் நன்மையளித்துவரும் நம் ஆனந்தபோதினியையும் விர்த்தியடைந்து நிலைத்தோங்கச் செய்வோம். நாம் ஒவ்வொருவரும் செய்யும் முயற்சி மிகக் கொஞ்சமேனும் பலதுளி பெருவெள்ளமென்பதுபோல் அம்முயற்சி பெரிய நன்மையையளித்து நம் பாரதமாதாவின் க்ஷேமாபிவிர்த்திக்கு ஓர் இன்றியமையாக் காரணமாய் நிற்கும் என்பதில் சற்றும் ஐயமின்றாம். ஆகையால் சிறியேன் வேண்டுகோளை யலட்சியமாய் வாசித்தறிவதோடு விட்டுவிடாதீர். அனுபவமாய் சொல்ப பயனையேனும் அளிக்கும் முயற்சியை ஒவ்வொருவரும் செய்வீர்களென்றும், நமது ஆனந்தபோதினியை விர்த்திசெய்து அதிகமாய்ப் பரவச்செய்வதில் ஒவ்வொவரும் மனப்பூர்வமாய் ஊக்கமெடுத்துக் கொள்வீர்களென்றும் பூரணமாய் நம்புகிறேன்.

சர்வலோக நாயகனாகிய பரமேஸ்வரன் நம்மையும் நம் தாய்நாட்டையும் நம் நண்பனாகிய ஆனந்தபோதினியையும் ஷை பத்திரிகைக்கு, இனிமையான விஷயங்களை எழுதும் புண்ணியவான்களையும் நம் போதினியின் தந்தையாகிய முதலியாரையும் ஆசீர்வதித்து நமது மேற்கண்ட முயற்சியை ஈடேற்றிவைக்க வேணுமாய்ப் பிரார்த்திப்போமாக. சுபம் சுபம் சுபம்.

ஓலப்பாளையம்.
28-11-17

கே. நாக்சியப்ப கவுண்டர்.

கற்கோட்டை—நாவல்

(199-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆம், ஆம். இதுவே நல்லயோசனை. அரியநாயகி இராணியிடம்செல்லும் காரியம் ஜெயமடையுமென்று என்ன நிச்சயம். ஒருசமயம் வயதுமுதிர்ந்த நமது அத்தை நம்மேல் வைத்திருக்கும் அளவுகடந்த அன்பினால் புத்தி சபலித்துத் தன் வல்லமையை யதிகமாய் நம்பி மனப்பால் குடித்துக்கொண்டிருக்கலாகும். உயிரே ஆபத்திலிருக்கையில் பன்னிரண்டு மணி நேரத்தில் என்ன நடக்குமென்று நமக்குத் தெரியும். நாம் எண்ணியதே சரி" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு அக்கடிதத்தைப் பத்திரமாய்த் தன் உட்சட்டைச் சேபியில் வைத்துக்கொண்டு துரிதமாய் எழுந்தாள். உடனே தன் உடுப்புப் பெட்டியைத் திறந்து இரண்டு ஜதை உடுப்புகளையும் தன்னிடமிருந்த ரொக்கப்பணத்தையும் எடுத்துக்கொண்டு, தன் தந்தைக்கு ஒருகடிதம் எழுதி மேஜைமேல் வைத்துவிட்டு, அறையிலிருந்து புறப்பட்டு மெதுவாய் குதிரைகளிருக்கும் லாயத்தை நோக்கிச் சென்றாள். அங்கு முழுதும் இருள் சூழ்ந்திருக்க ஒரு அறையில் மட்டும் தீபவொளி புலப்பட்டது. அது குதிரைலாயத்தின் தலைமை யதிகாரி வசிக்குமிடம்.

கமலாம்பாள் அவ்வறை யருகிற்சென்று கதவை மெதுவாய்த் தட்டியதே வயது முதிர்ந்த ஒருவன் வந்து கதவைத்திறந்ததும் "என் இங்கு வந்தீர்கள்?" என்றான்.

கமலாம்பாள் சட்டென்று அவன் அறைக்குள் நுழைந்து கதவைத்தாளிட்டு "கந்தப்பா! என் நடவடிக்கை யுனக்கு நன்றாய்த் தெரியுமல்லவா. நான் எந்த சமயம் என்ன சம்பவித்தாலும் என் கௌரவத்திற்குக் கெடுதியையுண்டாக்கும் காரியத்தைச் செய்வேனென்று நினைக்கிறாயா?" என்றாள். கந்தப்பன் "அம்மா உம்மைக் குழவிப்பருவம் முதல் நான் சீராட்டிவளர்த்தவன். நீ யொருபோதும் நெறிதவறி நடக்கமாட்டாயென்று நான் சத்தியம் செய்வேன்" என்றான்.

கமலாம்பாள்.—"அப்படியாயின் நீ யெனக்கு ஒரு உதவிசெய்வாயா?" என்றாள்.

கந்தப்பன்.—நான் தங்களுக்காக நெருப்பிலும் இறங்க அஞ்சமாட்டேன். உமது கட்டளை எதுவாயிருந்தாலும் சரி, கண்களை மூடிக்கொண்டு துணிகரமாய் அக்கட்டளைப்படி நடப்பேன். ஆனால் தங்கள் தந்தையின் பிரியத்திற்கு விரோதமானதா யிருந்தால்" என்றான். மறுபடி யவனை நிதானித்துக்கொண்டு, அவருக்கு வெறுப்பை யுண்டாக்கத்தக்க சங்கதியில் நீ தலையிடமாட்டாயென்றெனக்குத் தெரியும். ஆயினும் என்னாலாகவேண்டிய காரியமென்ன?" என்றான்.

கமலாம்பாள்.—நான் ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்காக நெடுந்தூரம் பிரயாணம் போகவேண்டும். ஆகையால் நீ தயவுசெய்து ஒரு நல்லகுதிரைக்குச் சேணம்கட்டிச் சீக்கிரம் ஆயத்தப்படுத்தவேண்டும். நீயும் உதவியாய் வரவேண்டும். இதுவே நீ செய்யவேண்டிய சகாயம். இதை யான் ஒருபோதும் மறக்கவேமாட்டேன்" என்றாள்.

கந்தப்பன்.—"அம்மா, ஸர்தார் என்மேல் கோபித்துக்கொள்வாரே" என்றான்.

கமலாம்பாள்.—"நீ யொன்றுக்கும் அஞ்சவேண்டாம். நான் என் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போகிறேன். அவர் உன்மேல் எள்ளளவும் கோபங்கொள்ளமாட்டார். உனக்குத் தொந்தரை நேரும்

வண்ணம் நான் ஒருபோதும் நடந்துகொள்ள மாட்டேன்" என்று அவனுக்குத் தக்க சமாதானம் கூறினாள்.

கந்தப்பன் குழந்தைப் பருவமுதல் கமலாம்பாளை விசுவாசித்துத் தன் குழவிபோல் சீராட்டி வளர்த்தவனாதால் அவன் மன மிளகிவிட்டது. "அம்மா, சரி கடவுள் இருக்கிறார். எனக்கு என்னநேர்ந்தாலும் நேரட்டும். உன் பிரியப்படியே யிதோ ஒருநொடியில் குதிரைகளை ஆயத்தம் செய்கிறேன்" என்றான்.

கமலாம்பாள் அவனுக்கு மிக்க நன்றியறிதலோடு வந்தனமளித்துவிட்டு தான் பிரயாணத்திற்கு ஆயத்தமாவதற்காகத் தன்னறைக்குச் சென்றாள்.

பலராமனுக்கு காயம்பட்டபின் வேலைக்காரர்கள் அவனையொரு அறைக்குக் கொண்டுபோய் படுக்கவைத்து அவனுடைய மூர்ச்சை தெளிவதற்காக சிகிச்சை செய்தார்கள். துப்பாக்கிக்குண்டு அவனுடைய மார்பின் வலதுபக்கம் சதையில் புதைந்திருந்ததாய்த் தெரிந்தது. ஆகையால் ஒரு இராணவைத்தியரை யழைத்து வரும்படி நகரத்திற்கு ஒரு ஆள் துரிதமா யனுப்பப்பட்டான். பலராமனுக்குச் சுவாசம் தாராளமாய் வருவதற்காக அவன் சட்டைகளைத் தளர்த்தியபோது உட்சட்டையின் ஜேபியில் இருந்து ஒருகடிதம் அகப்பட்டது. வேலைக்காரர்கள் உடனே யதைக்கொண்டுபோய்த் தங்கள் எஜமானிடம் கொடுத்துவிட்டார்கள். அக்கடிதமே செல்வராயர் கமலாம்பாள் முதலியவர்களுக்குப் படித்துக்காட்டியதும், பிறகு கமலாம்பாள் எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டதும்.

இராணவைத்தியர் வந்து அவனைச் சோதித்தபோது வேலைக்காரர் அனுமானித்தபடியே குண்டு மாமிசபாகத்திலேயே யிருந்தது. குண்டை யெடுத்துவிட்டு வைத்தியர் தக்க ஔடதமளித்து, "இனிப்பயமில்லை. நிம்மதியாய் இவன் இரவுமுழுதும் நித்திரைசெய்யட்டும். இரண்டு வாரங்களில் பூரணசுகமடைவான்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

வைத்தியர் சென்றதே வேலையாட்கள் பலராமனை நோக்கி "உனக்கு இரவு யாராவது ஒருவர் இங்கு துணையா யிருக்கவேண்டுமோ?" என்று கேட்டார்கள்.

பலராமன் ஒருவரும் வேண்டாம் என்று கூறவே, அவர்கள் யாவரும் கதவை மூடிக்கொண்டு சென்றார்கள்.

யாவரும் சென்று தான் தனியாயிருப்பதைக் கண்டதே, பலராமன் மிக்க சுறுசுறுப்புடையவனாய்ச் சட்டென்றெழுந்து அங்கு நாற்காலியின்மேல் போட்டிருந்த தன் சட்டையை யெடுத்துச் சேபிகளில் தடவிப் பார்த்து, கோபத்தோடு சபித்து, தன்னிடமிருந்த இராணி கொடுத்த பத்திரத்தை வேண்டுமென்றே யெடுத்துக் கொண்டார்கள் என்று தனக்குள் எண்ணிக் கொண்டான்; "சரி நாம் செல்வராயர் கையில் பூராய்ச் சிக்கிக்கொண்டோம்" என்று எண்ணிக் கொண்டான். தான் செய்த பிரயத்தனம் தவறிவிட்டது. "கண்ணபிரானுக்குப் பதில் திரவியசிங்கம் பிரபுவே சிக்கிக்கொண்டாலும், தான் இராணிக்குக் கொடுத்த வாக்குத் தத்தம் தவறிவிட்டது. அதோடு கமலாம்பாளைப் பிடித்துக் கொண்டுபோக முயன்றது ஒரு பெருங் குற்றம். அதோடு இராணி கொடுத்த பத்திரம் போய்விட்டது. இனி இத்தேசத்திலிருப்பது பெரிய ஆபத்து. ஆகையால் நாம் உடனே யிங்கிருந்து தப்பித்துக்கொண்டு போய்விடுவதே காரியம்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். ஆனால் தன் தேகம் இருக்கும் நிலைமையில் நெடுந்தூரம் கால் நடையாய்ச் செல்ல முடியாது. ஆகையால் தனக்குள் ஏதோ யோசனை செய்துகொண்டு, உடனே உடை

யணிந்து மெதுவாய் அறையைவிட்டுப் புறப்பட்டான். வீட்டின் அமைப்பு முழுதும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் நேராய்க் குதிரைலாயம் இருக்குமிடத்திற்குச் சென்றான். -

அங்கு வெளிச்ச மொன்றுமில்லை. குதிரைகளிருக்கும் இடம் பலராமனுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் அந்த விடத்திற்குச் சென்றான். அங்கு கதவு சற்று திறந்திருப்பதைக் கண்டு வியப்படைந்து எட்டிப்பார்த்தான். சந்திரன் நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்ததால் உள்ளிருக்கும் பொருள்கள் நன்றாய்ப் புலப்பட்டன. உள்ளே கந்தப்பன் ஒரு குதிரைக்குச் சேணம் போட்டுப் பிரயாணத்திற்குப் ஆயத்தம் செய்துவிட்டு, இன்னொரு குதிரைக்குச் சேணம் போட்டுக்கொண் டிருப்பதைக் கண்டான் அவனுக்கு மிக்க வியப்பாய் விட்டது. "இது என்ன சங்கதி, யாரோ வெளியில் செல்லப் போகிறார்கள் ஆயினும் இதுவும் நமது நல்லகாலமே" என்று தீர்மானித்துக் கொண்டான். அச்சமயம் அவனிடம் ஒரு மடிப்புக்கத்தி யிருந்தது. கந்தப்பனுக்குத் தெரியாமல் மெதுவாய் உள்ளே சென்று பூனைபோல் பதுங்கிக் கந்தப்பனை யோங்கி ஒரு குத்து கத்தியால்குத்த, அவன் உடனே சவம்போல் தரையில் விழுந்தான்.

பலராமன் கந்தப்பன் மூர்ச்சை யடைந்தானென்பதையும் மரித்தானென்பதையும் உணராதவனாய், அவனை யிழுத்துக்கொண்டு போய் இருட்டாயிருந்த ஒரு மூலையில் போட்டுவிட்டு, அவன் உடையைக் கழற்றித் தான் அணிந்து கொண்டான். அச்சமயம் யாரோ ஒரு ஸ்திரீ முகமூடி யணிந்துகொண்டு மேல் போர்வையோடு உள்ளே வருவதைக் கண்டான். அது யார் என்று அவனுக்கு மிக்க வியப்பாய்விட்டது. அவ்வாறு அங்கு வந்தது கமலாம்பாளே யென்று இதைவாசிக்கும் நண்பர்கள் அறிந்துகொண் டிருக்கலாகும்.

கமலாம்பாள் அங்கு வந்ததும் "கந்தப்பா, எங்கே இருக்கிறாய்? நாம் சீக்கிரம் புறப்பட வேண்டும். துரிதமாய்ப் புறப்படு" என்றாள்.

அவள் குரலைக் கேட்டதே பலராமன் அவள் கமலாம்பாளென்றும், அவன் கந்தப்பனோடு கூட அந்த இரவில் எங்கோ போகப் போகிறாளென்றும் தெரிந்து கொண்டான். அவன் மனதில் மிக்க சந்தோஷ முண்டாய் விட்டது. இதுவும் நமது நல்லதிர்ஷ்டமே யென்று எண்ணிக்கொண்டு, இப்போது நாம் சமயோசிதமாய் நடந்து கொண்டால் இவளைக் கைப்பற்றிக்கொண்டு போகலாம் என்று தனக்குள் கூறிக்கொண்டு, அவள் எதிரில்வந்து பேசாமலிரு வென்று சமிக்கை செய்துவிட்டு, இரண்டு குதிரைகளையும் பிடித்துக்கொண்டு வெளியில் வந்தான். அச் சமயம் அவனுக்கு வேண்டுமென்றே உதவி செய்வதுபோல் சந்திரன் இருண்ட மேகத்தில் மறைந்து கொண்டான்.

கமலாம்பாள் "கந்தப்பன் மிக்க ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டுமென் றெண்ணி வாயாற் பேசாமல் சமிக்கை செய்கிறான்" என்று எண்ணிக் கொண்டு,

"கந்தப்பா! சீக்கிரம் சீக்கிரம். எனக்கு இலிங்கபுரம் ஜில்லாவிற்குச் செல்ல வழி தெரியாது. அது வடக்கிலிருக்கிறதென்று மட்டும் தெரியும். நீதான் முன்னே நடந்து வழிகாட்ட வேண்டும்" என்றாள்.

பலராமன் "ஓகோ! இவள் வடக்கு திக்குதான் செல்லப் போகிறாள். நாம் எங்கு வழிதிரும்ப வேண்டுமோ அதுவரையில் இவளுக்கு நம்மை வெளியிட வேண்டிய அவசியமில்லை. மேலும் கொஞ்சதூரம் செல்வதற்குள் இவளுக்கு இன்னதிக்கு செல்கிறோமென்று தெரியாதபடி குழப்பம் உண்டாக்கி விடலாம்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, மௌனமாகவே இரண்டு குதிரைகளையும் வெளியில் நடத்திச் சென்றான். அவன் உருவமும் கந்தப்பன் உருவமும் ஒரே யுயரமாக விருந்ததாலும், கந்தப்பன் உடையைப் பலராமன் அணிந்து கொண்டிருந்ததாலும், கமலாம்பாள் இவன் கந்தப்பனல்ல வென்று சந்தேகிக்கக் காரணமேயில்லை. ஆகவே யுடனே இருவரும் குதிரை யேறிக் கொண்டு புறப்பட்டார்கள். பலராமனுக்கு ஊர்வழி நன்றாய்த்தெரியுமாதலால் முன்னே வழி காட்டிக்கொண்டு சென்றான். அவன் மௌனமாய்ச் செல்வதை இரகசியமாய்ப் போகவேண்டுமென்ற யோசனையோடு செல்கிறானென்று கமலாம்பாள் கருதிக்கொண்டாள்.

இருவரும் நெடுந்தூரம் வேகமாகவே சென்றார்கள். கடைசியில் கமலாம்பாளால் வேகமாய்ச்செல்ல முடியவில்லை. ஆயாசமாய்விட்டது. அவள் சமாளிக்கமுடியாமல்,

"கந்தப்பா! கந்தப்பா! என்னால் இவ்வளவு வேகமாய்ச் சவாரிசெய்ய முடியவில்லை. சற்றுநேரம் நிதானிக்கவேண்டியதே" என்றாள். அச்சமயம் சற்று வெளிச்சமாயிருந்ததால் தூரத்தில் ஒரு கப்பலின் மூன்று பாய்மரங்கள் புலப்பட்டன. அப்போது பலராமனும் தன் குதிரையை நிறுத்தியபடியால் கமலாம்பாள் அவனருகிற் சென்று,

"கந்தப்பா! அதோ தெரிகிறதே ஜலம், அது என்ன? நாம் படகில் ஏறி அதைக்கடந்து செல்லவேண்டுமோ?" என்றாள்.

பலராமன்.—"ஆ! அந்த ஜலம் இந்திரா நதி, அக்கப்பல் "இராஜமாளிகை" அது என் காதலியாகிய உன்னை யேற்றிக்கொண்டு இன்னாட்டைவிட்டுச் செல்லப்போகிறது" என்று கக்கடக்கக்கட நகைத்துக்கொண்டே கூறினான்.

அக்குரலைக் கேட்டதே கமலாம்பாளுக்குத் தன் தலைமேல் பேரிடி விழுந்ததுபோலிருந்தது. அவள் உடனே அவன் தன்னை வஞ்சித்து மணம் செய்து கொள்ள முயன்ற உலோகநாயகன் என்ற கள்ளப்பயலே யென்று தெரிந்து கொண்டாள். தான் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டதாய் உடனே மனதில் பட்டுவிட்டது. அவள் இருதயம் பிளந்துவிடும்போலிருந்தது. தன்னை யறியாமலே கதரிக் கோவென்றலறியதும் ஸ்மரணையற்று சாய்ந்துவிட்டாள். பலராமன் உடனே பிடித்துக்கொண்டிராவிட்டால் குதிரைமேலிருந்து பூமியில் விழுந்தேயிருப்பாள். அவளுக்கு ஸ்மரணை வந்தபோது, தான் கப்பலில் ஒரு அறையில் இருப்பதையும், பலராமன் தன் சிரத்தைத் தாங்கிக்கொண்டிருப்பதையுங் கண்டாள்.

15-வது அத்தியாயம்

கற்கோட்டையில் மறுநாள் காலை வேலைக்காரர்கள் எழுந்தவுடன் பெருங் குழப்பம் உண்டாய்விட்டது. கந்தப்பன் குதிரைலாயத்தில் ஸ்மரணையின்றி சவம்போல் விழுந்துகிடக்கிறான். அவன் தலையின் பின்புறம் பலத்தகாயம் பட்டு மிக்க இரத்தம் தோய்ந்திருந்தது. மேலும் அவன் குத்தப்பட்டவிடத்திலிருந்து தூரத்தில் இழுத்துக்கொண்டு போகப்பட்டிருக்கிறானென்று தெரிந்தது. தரையில் ஆளையிழுத்துச்சென்ற அடையாளமும் அவ்வழி முழுதும் இரத்தக்கறையும் இருந்தன. நன்றாய் எங்கும் பார்த்தபோது, இரண்டு குதிரைகள் காணப்படவில்லை. ஜேணங்கள் இருந்தவிடத்தைச் சோதித்தபோது, கமலாம்பாளுடைய ஜேணமும் காணப்படவில்லை. அதோடு முன் எச்சரிக்கையாக இரவில் காவலிருக்கும் நாய்களெல்லாம் ஒரு அறையில் அடைக்கப்பட்டிருந்தன. கடைசியில் பலராமனும் ஓடிவிட்டானென்று தெரிந்தது. அவன்

அணிந்திருந்த உடைகள் குதிரைலாயத்தில் வைக்கோலின் கீழிருந்தன. அந்தோ! கமலாம்பாள் காணாமற்போனதை யறிந்ததே அவள் தந்தை முதலானவர்களுக்குண்டான துயரம் சொல்லமுடியாது.

செல்வராயரும் அரியநாயகியும் முதலில் பலராமனே யிதற்குக் காரணமென்று கருதினார்கள். ஆனால் தங்கம்மாள் "அவசரப் படவேண்டாம். அவ்வளவு காயம்பட்டிருந்த அவன் தனியாகவே ஒரு வாலிபப் பெண்ணைக் களவாடிச் செல்வது நடக்கக்கூடிய காரியமல்ல. எதற்கும் நன்றாய் ஆராய்ச்சி செய்து பார்ப்போம்" என்றாள். உடனே மூவரும் கமலாம்பாளுடைய அறைக்குச் சென்றார்கள். இரவு படுக்கையில் கமலாம்பாள் சயனிக்கவே யில்லையென்று தெரிந்தது. அவள் அரிய நாயகியிடம் பேசிக்கொண் டிருக்கையில் உடுத்தியிருந்த உடை நாற்காலிமேல் கழற்றிவைக்கப்பட்டிருந்தது. மேஜைமேல் ஒரு கடிதம் இருந்தது. அதன்மேல் செல்வராயருடைய விலாசம் வரையப்பட்டிருந்தது. அதைக் கண்டவுடனே அவர் ஆத்திரத்தோடு எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"என் பிரியமான தந்தையே, நான் காணாமற்போவதைப்பற்றி தாங்கள் விசனப்பட வேண்டாம். திடீரென்று ஒருசந்தர்ப்பம் நேர்ந்தது. அதனால் நேரிட்ட வேலையைச் செய்யவேண்டியது என் கடமை யென்று தோன்றிற்று. தாங்கள் வெறுப்பு காட்டிய இன்னொரு வஸ்துவும் அதே காலத்தில்காணாமற் போவதால், ஒரு சமயம் தாங்கள் ஊகித்துக்கொள்ளலாம். என்னைத் தேடி வருவது வியர்த்தமாகும். கூடிய சீக்கிரத்தில் நான் திரும்பிவந்து தங்கள் பாதங்களில் விழுந்து மன்னிப்பு கேட்டுக் கொள்வேன். என் அன்பார்ந்த அத்தைக்கும் அரியநாயகிக்கும் வந்தனம். கமலாம்பாள்"

இதை வாசித்ததே செல்வராயர் அடக்க முடியாத கோபங்கொண்டார். "அடி சண்டாளத் துரோகி, நன்றிகெட்டவளே, அந்தக் கள்ளப்பயல் கூடத்தானா நீ செல்லவேண்டும்....." என்று பிரலாபித்தார். ஏனெனில் கமலாம்பாள் பலராமனோடு ஓடிவிட்டாளென்று அவர் எண்ணிக்கொண்டார். அரியநாயகியோ, "ஒருக்காலும் அப்படிநடந்திராது. அவளாவது அந்த அயோக்கியப் பயலோடு செல்வதாவது. இதில் ஏதோ இன்னும் நமக்குப் புலப்படாத மர்மம் இருக்கிறது" என்றாள். செல்வராயர் அதை யொப்பவில்லை. "ஒரு மர்மமுமில்லை. கடிதத்தில் அவள் நன்றாய்க்கூறி யிருக்கையில் இன்னும் வேறுயோசனை யென்ன விருக்கிறது. உனக்கு வெறுப்பான வஸ்துவும் அதே காலத்தில் காணாமற் போவதால் ஊகித்துக் கொள்ளலாம் என்றால் எனக்கு வெறுப்பான ஆள்யார். அந்தக் கள்ளப்பயல்தான்" என்றார்.

அச்சமயம் அறை முழுதும் என்னமோ தேடிக்கொண்டிருந்த தங்கம்மாள் "ஆம் ஆம் உனக்கு வெறுப்பான அக்கடிதத்தை யெடுத்துக் கொண்டுபோய் விட்டாள். மர்மம் வெளியாய் விட்டது. அக்கடிதத்தைக் கொண்டு கண்ணபிரானைக் காப்பாற்றச் சென்றாள்" என்றாள்.

இதைக் கேட்டதே யாவர்க்கு முண்டான சந்தோஷத்திற் களவேயில்லை. அச்சமயம் செல்வராயரின் அந்தரங்கவேலைக்காரன் அறைக்குள்வந்து,

"கந்தப்பனுக்கு ஸ்மரணை வந்திருக்கிறது. அவன் தான்கூட கமலாம்பளோடு செல்லச் சம்மதித்திருந்தானாம். குதிரைகளை ஆயத்தப்படுத்திவிட்டு அங்கு நின்றபோது, அந்தக்கள்ளப்பயல் பின்புறமாய் வந்து திடீரென்று தலையின்மேல் அடிக்கவே மூர்ச்சையாய் விழுந்து விட்டானாம், அதன் பின் நடந்தது ஒன்றும் தெரியாதாம்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே யாவர்க்கும் நிம்மதியாய்விட்டது. அவள் எவ்வித அகௌரவ நோக்கத்தோடும் செல்லவில்லை யென்றும், நம்பிக்கையான வேலைக்காரனைத் துணையாய்க் கூட்டிக்கொண்டு செல்ல விருந்தாளென்றும் தெரிந்தது. ஆகையால் பலராமன் கந்தப்பனை யடித்து வீழ்த்திவிட்டு கமலாம்பாளைப் பலவந்தமாய்ப் பிடித்துக்கொண்டு போய்விட்டான் என்று ஊகிக்க வேண்டியதா யிருந்தது. செல்வராயர் உடனே நகரத்திற்குச் சென்று கமலாம்பாளைத் தேடிப் பிடிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை யெல்லாம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார்.

அவ்வாறே, யவர் நகரத்திற்குச் சென்றதே தங்கம்மாள் அரியநாயகியை நோக்கி, "குழந்தாய், நீ யுடனே புறப்பட்டு இராணியிடம் சென்று பதக்கத்தைக் காட்டு" என்றாள்.

அரியநாயகி.—"அந்தோ! இப்போது அரசியைக் காண்பதால் என்ன பிரயோசனம்?" என்றாள்.

தங்கம்மாள்.—"ஓ அரியநாயகி! சங்கதியை மறந்து விட்டாயோ. இராஜத்துரோகிகளுக்கு அடைக்கல மளித்த குற்றத்திற்காகப் பெரும்பாலும் செல்வராயனுக்குக் கெடுதி சம்பவிக்கக் கூடும்" என்றதே

அரியநாயகி.—"ஆம் ஆம். கலவரத்தில் மறந்து விட்டேன்" என்றாள்.

தங்கம்மாள்.—"அதுமட்டுமல்ல, கண்ணபிரான் பிராணபத்தில் சிக்கி யிருக்கிறான். ஒரு சமயம் வேறெந்த முயற்சியாலும் அவனைக் காப்பாற்ற முடியாவிட்டால், இதன் மூலமாய்த்தான் அது நிறைவேறலாகும்." என்றாள்.

அரியநாயகி.—"நான் உடனே புறப்படுகிறேன். முற்காலத்தில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறதென்றும் சமயம்வரும்போது வெளியிடுவதாயும் கூறியிருந்தாயே, அதை வெளியிட இப்போது சமயம் வந்திருக்கிறதா?" என்றாள்.

தங்கம்மாள்.—"இப்போது வேண்டாம் வேண்டாம். நீ பேசாமல் சென்று இராணியிடம் பதக்கத்தைக்கொடுத்து, அவள் பாதத்தில் விழுந்து உனக்கு வேண்டிய வரங்களை யெல்லாம் கேட்டுக்கொள்" என்றாள்.

அரியநாயகி.—"நான் கட்டாயம் போகிறேன்" என்று கூறிவிட்டு, உடனே பிரயாணத்திற்கு ஆயத்த மாகும்படித் தன் அறைக்குச் சென்றாள்.

* * * * *

* * * * * *

அதேதினம் பிற்பகல். இராணி தன் அரண்மனையில் என்ன நிலைமையிலிருக்கிறாள் என்று பார்ப்போம். பகல் பத்துமணி யிருக்கும் இராணி தன் அறையில் மூன்று நான்கு சீமாட்டிகளோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கிறாள். அவர்கள் கூட சுந்தரநாயகம் பிரபு (கண்ணபிரானுடைய அம்மான்) வின் குமாரனாகிய காப்டென் தினகரனும் இருக்கிறான். அவன் இராணியின் அரண்மனையில் நல்ல கௌரவமான பதவியி லிருக்கிறான். அவன் இராணியின் தற்காப்புப் படையின் தலைவன். இவன் மிக்க வனப்புடையவன். வயது சுமார் இருபத்தைந்து இருக்கும்.

அச்சமயம் இராணி மிக்க வேடிக்கையாய்ப் பேசிக்கொண் டிருந்தபடியால், அவள் தினகரனை நோக்கி "என் என் பரிவாரத்திலுள்ள வனப்புடைய கன்னிகைகளில் ஒருத்தியை நானே உனக்கு மனைவியாகத் தெரிந்தெடுத்தாலோ?" என்றாள்.

(தொடரும்.)

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

பிங்களஸு மார்கழிமீ சாலிவாகன 1839, கலியுகாதி 5018,
பசலி 1326-27, கொல்லம் 1092-93,
இங்கிலீஷ் 1917-ம்ஸு டிசம்பர்மீ—1918ஸு ஜனவரிமீ

டிசம்பர்மீ	மார்கழிமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
15	1	ச	பிர-21-7	மூல-25-37	சித்த 60	தனுர்பூஜை ஆரம்பம்
16	2	ஞா	துதி-17-39	பூரா-23-42	சித் 24 அ	7-க்குள் மழை
17	3	தி	திரி-13-26	உத்தி-21-4	மா 23 அ	தனியநாள்
18	4	செ	சது-8-27	திரு-17-42	சித்த 60	கோதுமை விதைக்க
19	5	புத	பஞ்-3-2	அவி-13-53	மா 14 சித்	சஷ்டி விரதம்
			சஷ்-54-15			
20	6	வி	சப்-51-3	சதை-9-54	சித்த 60	கரிநாள்
21	7	வெ	அஷ்-45-45	பூரட்-5-49	சித்த 60	புது அடுப்புபோட
22	8	ச	நவ-40-16	உத்-1-49	சித்த 60	8-க்குள் மழை
23	9	ஞா	தச-35-22	அசு-55-5	சித்த 60	கழுகுநட
24	10	தி	ஏகா-31-43	பர-52-43	சித்த 60	வைகுண்ட ஏகாதசி
25	11	செ	து-27-31	*கார்-51-12	சித் 51 அ	கிருத்திகை விரதம்
26	12	புத	திர-25-11	ரோக-50-49	சித்த 60	உதயம் கிருஷிக்குப்போக
27	13	வி	சது-23-51	மிரு-51-33	மரண 60	கர்ப்போட்டம் 45-0
28	14	வெ	○பௌ23-50	திரு-53-33	சித்த 60	சூளையில் நெருப்பிட
29	15	சனி	பிர-25-23	புன-56-59	சித்த 60	பந்தக்கால் நட
30	16	ஞா	துதி-27-33	பூச-60-0	சித்த 60	காலை 9-க்குள் சீமந்தம்
31	17	தி	திரி-31-15	பூச-1-3	சித்த 60	ஜெபம் பூர்த்திசெய்ய
1	18	செ	சது-35-43	ஆயி-6-28	சித்த 60	பசுக்களை வாங்க
2	19	புத	பஞ்-39-59	மக-11-42	சித் 12 அ	தானியம் இருப்புவைக்க
3	20	வி	சஷ்-45-24	பூர-18-25	சித் 18 ம	தனியநாள்
4	21	வெ	சப்-51-19	உத்தி-25-14	சி 21 அ	புதுபாத்திரம் புழங்க
5	22	ச	அஷ்-55-48	அஸ்-31-12	மரண 60	
6	23	ஞா	நவ-59-39	சித்-36-25	சித்த 60	பூமியில் கிருஷிசெய்ய
7	24	தி	தச-60-0	சுவா-40-24	அமி 40 சி	உதயம் வெங்காயம் நட
8	25	செ	தச-2-3	விசா-43-33	மா 44 சி	4-க்குள் மழை
9	26	புத	ஏகா-5-21	அனு-45-20	சித்த 60	புதுபாத்திரம் புழங்க
10	27	வி	துவா-3-15	கேட்-45-50	சித்த 60	காப்போட்டம் நிவர்த்தி
11	28	வெ	திர-2-1	மூல-45-13	சித்த 60	கோபந்தனம்
			சது-57-39			
12	29	ச	•அமா 56-1	பூர-43-33	சித்த 60	அமாவாசை விரதம்
13	30	ஞா	பிர-51-54	உத்-40-57	அமி 60	போகிபண்டிகை

1918ஸு ஜனவரிமீ

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | பிங்களஸு தைமீ 1உ 1918ம்ஸு ஜனவரிமீ 14உ | பகுதி 7

கடவுள் வணக்கம்.

ஆரா ரெனக்கென்ன போதித்து மென்னவெண்
ணறிவினை மயக்க வசமோ
வண்டகோ டியையெலாங் கருப்பவறை போலவு
மகிக்கடுக் காவ மைத்துப்
பேராம னின்றபர வெளியிலே மனவெளி
பிறங்குவ தலாதொன் றிலும்
பின்னமுற மருவாது நன்னயத் தாலினிப்
பேரின்ப முத்தி நிலையுந்
தாராது தள்ளவும் போகாது ஞலது
தள்ளினும் போகே னியான்
றடையேது மில்லையாண் டவனடிமை யென்னுமிரு
தன்மையிலு மென் வழக்குத்
தீராது விடுவதிலை நவோன கடவுளே
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோ மயானந் தமே.

பேசா வனுபூ தியையடியேன் பெற்றுப் பிழைக்கப் பேரருளாற்
றேசோ மயந்தந் தினியொருகாற் சித்தத் திருளுந் தீர்ப்பாயோ
பாசா டவியைக் கடந்தவன்பர் பற்று மகண்டப் பரப்பான
வீசா பொதுவி னடமாடு மிறைவா குறையா வின்னமுதே.

இன்பக் கடலிற் புகுந்திவோ னிரவும் பகலும் நின்னடிக்கே
யன்பிற் கரைந்து கரைந்துருகி யண்ணு வரசே யெனக்கூவிப்
பின்புற் றழுசே யெனவிழிநீர் பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்
துன்பக் கடல்விட் டகல்வேனோ சொரூபா னந்த சுடர்க்கொழுந்தே.

ஆனந்தபோதினி
பிங்களவுல தைமீ 1உ

முன்னோர் நூல்கள்.

நேயர்களே! நமது ஆன்றோர் நாம் கடைத்தேறும் வண்ணம் வடமொழியிலுள்ள வேதப்பொருள்களையும், வேறு எண்ணிறந்த நூல்களையும் தமிழில் இயற்றியிருப்பதோடு, தமிழிலும் அனேகம் நூல்களை யியற்றித் தங்கள் அனுபவத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கலிகால பலத்தால், இப்போதுண்டாயிருக்கும் நாகரீகப் புரழ்ச்சியில் மயங்கியிருக்கும் நம்மவரிற் பெரும்பாலார், ஆங்கிலபாஷை கற்று மேல்நாட்டு நாகரீக வாசனையேறவே, நம்முன்னோர் நூல்களை யலட்சியமாய்க் கருதுகின்றனர். புத்தக வியாபாரிகள் அத்தகைய ஆன்மார்த்த நூல்களை அச்சிடவே யஞ்சுகிறார்கள். ஏனெனில் அதற்கென்று முதல்வைத்து அவற்றை யச்சிட்டால், அவை சீக்கிரத்தில் செலவழிவதில்லை. இதனால் மிக்க அருமைவாய்ந்த நம்முன்னோர் நூல்களில் ஒன்றிரண்டுகூடப் பிழையில்லாத நல்ல உயர்ந்த பதிப்பில் கிடைப்பது மிக்க அருமையாயிருக்கிறது. இது ஒன்றே நாம் மேற்கூறிய உண்மைக்குப் போதிய அத்தாட்சியாகும்.

அவ்வாறு அலட்சியம் செய்வோரே, நம்முன்னோர் நூற்களிலொன்றை யாராவது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால், அப்போதுதான் அந்நூலுக்கு மிக்க கௌரவம் வந்ததாக மதித்து, அதை வாசித்துணர்ந்து பயனடையா விட்டாலும், விலைகொடுத்து அதை வாங்கியாவது ஜேபிக்கும் கைக்கும் அழகாய் வைத்துக் கொள்ளுகிறார்கள். இதற்கு நாம் கண்ணுற்கண்ட ஒரு திருட்டாந்தம் மட்டும் கூறுகிறோம். சுமார் முப்பது வருடங்கட்கு முன்பு பகவத்கீதையென்ற பெயரே, சில வைதீகர்களுக்கும் ஆன்மசாத்திர ஆராய்ச்சி செய்வோர்களுக்கும் தவிர, மற்ற பெரும்பாலார்க்குத் தெரியாது. தியாஸாபிகல் சங்கத்தார் அதை முக்கிய நூலாய்க்கருதி ஆராய்ச்சி செய்வதாலும், அதில் மேல்நாட்டார் அனேகர் சேர்ந்திருப்பதாலும்

அச்சங்கத்தார் அதைச் சுருக்கமாய் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்கள்.

பிறகு ஆங்கிலம் கற்றவர்களில் அனேகம்பேர் அதை வாங்கத் தொடங்கினார்கள். அந்தோ இது எவ்வளவு விசனிக்கத்தக்க காரியமாயிருக்கிறதென்பது சற்று சிந்தித்தால் நன்கு விளங்கும். இது சுயமதிப்பையும் சுய கௌரவத்தையும் உணரார் செய்கையன்றோ. ஆகையால் இந்தத் தவறான வீண்மயக்கு நம்மவரை விட்டொழிவதற்காக இந்த இரண்டுவித நூல்களில் எது நமக்கு உண்மையில் பயனளிக்கத்தக்கது, எதை யாராய்ச்சி செய்தால் உண்மையான அனுபவ ஞானத்தை யடையலாமென்று ஆராய்ந்து பார்ப்போம்.

ஒரு நூலாசிரியர் என்ன கருத்துகொண்டு, அதாவது தன் நூல் என்ன பயனை விளைவிக்கவேண்டுமென்று கருதி அதை யியற்றுகிறாரோ, அதற்குத் தக்கவாறாய்த்தான் அந்நூலின் குணமும் விஷயங்களும் அமையும். விஷயம் ஒன்றாகவே யிருப்பினும் நூலாசிரியரின் கருத்திற்குத் தக்கவாறு அதில் அமைந்துள்ள விஷயங்கள் வேறுபடும்.

பொன்னைப்பற்றி இருவர் எழுதுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். க என்பவர், பொன்னை முன்பின் னறியாததால் இரும்புதான் யாவற்றிலும் உயர்ந்த உலோகம் என்று எண்ணியிருக்கும் ஒரு நாட்டாருக்கு பொன்னின் உயர்வை யறிவிக்கவேண்டுமென்ற கருத்தோடு எழுதுகிறார். ம என்பவர் பொன்னின் உயர்வையுணர்ந்தவர்களும், தங்கள் நாட்டில் பொன் சுரங்கங்களை யுடையவர்களுமான ஒரு நாட்டாருக்கு, அவர்கள் அதையடைந்து அனுபவிக்க வேண்டிய வழியை யறிவிக்கவேண்டுமென்ற கருத்தோடு எழுதுகிறார்.

இருவரும் பொன் என்பதைப் பற்றியேதான் எழுதுகிறார்கள். ஆயினும் இரண்டு நூல்களும் ஒரே பயனை யளிக்குமென்று நாம் கருதலாகுமோ? ஒருபோதுமில்லை.

ஏனெனில், க என்பவர் இரும்பே உயர்ந்ததென்று மயங்கியிருப்போர்க்குப் பொன்னின் உயர்வை நிரூபிக்கக் கருதியவராதலால், இரும்பிலுள்ள கெட்ட குணங்கள் பொன்னில் இல்லையென்றும், பொன்னுக்குள்ள சில உயர்குணங்கள் இரும்பிலில்லையென்றும், நயத்திலும், உறுதியிலும், சுத்தத்திலும் நாள்பட நாள்படக் குறையாத்

தன்மையிலும் பொன்னே யாவற்றிலும் சிறந்ததென்றும் அவர்களுக்கு நன்கு விளங்க எந்தெந்த விஷயங்களையும் திருட்டாந்தங்களையும் கூறவேண்டுமோ அவற்றைத்தான் கூறுவார்.

ம என்பவரோ அவற்றைக் கூறவேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில் அவர் நூலை வாசிப்போர்களுக்கு அவை யாவும் தெரியும். அவர்கள் பொன்னே யுயர்ந்ததென்பதை யுணர்ந்து அந்த உண்மையில் நம்பிக்கை யுடையவர்களாயும், அதைப்பெற்று அதனாலடையும் பலனை யனுபவிக்க வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாயு மிருக்கிறார்கள். ஆகையால் அவர் "நீங்கள் கிடைத்தற்கரிய பொன்னை பூமியில் புதையுண்டுகிடக்க விட்டிருப்பதால் என்ன பயன் என்று கூறி, பூமியிலிருந்து பொன் மண்ணைத் தோண்டியெடுத்து, அதிலுள்ள மண்ணைப் பிரித்து சுத்திசெய்து, கெட்டித் தங்கமாக்கிக் கொள்ளும் வழியையும், பிறகு அதைப் பலவகைப் பணிகளாக்கி யனுபவிக்கும் மார்க்கத்தையும் பற்றியே கூறுவார்.

இப்போது நாம் இருவர் நூலுக்கும் உள்ள வித்தியாசத்தை நன்கறியலாம். இந்த இருவரும் யார் யாருக்கென்று கருதித் தம் நூல்களை யியற்றினார்களோ, அவரவர்களுக்குத் தான் அந்தந்த நூல் பயன்படும். ஒருவர்க்குக் கூறப்பட்ட நூல் இன்னொருவர்க்குப் பயன்படாது.

நமது முன்னோர் நூல்கள் எழுதியது நமக்கு நமது மதத்தில் நம்பகம் உண்டாக்க வேண்டுமென்ற கருத்து கொண்டல்ல. நாம் பல நூல்களை ஆராய்ச்சி செய்து ஞானத்தை யடையவேண்டுமாயின் மிக்க காலமும் கஷ்டமும் வேண்டுமாதலால், அவைகளைக் குறைத்து நாம் சுலபமாய் ஞானத்தை யடையக்கூடிய மார்க்கத்தைக் காட்டும் பொருட்டேயாகும். அவர்கள் கூறுவது உண்மை, அவ்வழி சென்றால் நாம் நற்பயனடைவோம் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

இப்போது சுவாமி விவேகானந்தர் முதலிய மகான்கள் நமது ஞான நூல்களை ஆங்கிலத்தில் இயற்றியது எதற்காக? இவர்கள் நம் முன்னோர் நூல்களை நம் தாய்ப்பாஷையில் வாசித்து ஆராய்ந்து பயனடைந்தவர்கள் தானே! அப்படியிருக்க ஏன் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்? நம்மவர் ஆராய்ச்சி செய்பவரா? இல்லை. நமது பாஷையை யுணராதவர்களுக்கு, நமது மதத்தின் சத்தியத்தையும், அழியா உண்மையையும், இதில் கூறியுள்ள கடவுள் முழு இலட்சணங்களையும், ஹிந்துக்கள் பல கடவுள்கள் உண்டென்ற கொள்கையுடையவர்களல்ல வென்பதையும், ஆனால் கடவுள் ஒருவரே யென்றும், அவரைவிட அன்னியமாய் வேறொன்றுமில்லை, எல்லாம் அவர் மயமே யென்ற கடவுளின் உண்மைநிலை வேதத்தில்தான் கூறப்பட்டிருக்கிறதென்பதையும், ஹிந்துக்கள் அவ்வுண்மைப்படி எதையும் அந்த ஏக மூர்த்தியாய்க் கருதித் தொழுபவர் என்பதையும் விளக்கிக் காட்டவேண்டி அவர்கள் தாய்ப்பாஷையிலேயே எழுதி யிருக்கிறார்கள்.

ஆகையால் அவைகளை நாம் வாசிக்கலாகாதென்று நாம் இகழ்ச்சியாய்க் கூறுவதாக நண்பர்கள் கருதலாகாது. ஆனால் முன்னோர் நூலை அலட்சியம் செய்துவிட்டு, ஆங்கிலத்தில் எழுதப்பட்டதுகொண்டே அதற்கு கௌரவம் கற்பிப்பதும், அதை மட்டும் வாசித்து உணர்ந்ததனாலேயே நாம் பயனடைந்து விடலாமெனக் கருதுவதும் முற்றும் தவறான கொள்கையே யாகும் என்பதாம்.

நமது மதநூற்கள் நம் மதத்தைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்டிருந்தால்தான் நாம் வாசிக்கத் தகுதியுடையவையாகும். நம் மதத்தில் நம்பிக்கையில்லாத புறமதஸ்தரால் எழுதப்படுவதை, அது ஆங்கில பாஷை யென்பதைக்கொண்டே அதை வாசிப்பதால் நன்மைக்குப் பதில் தீமையேயுண்டாகும். திருட்டாந்தமாய்த் திருவாசகம் இருக்கிறது. தமிழ்ப் பாஷையில் மனதையுருக்கிக் கடவுளிடத்தில் அன்பைப் பெருக்கக்கூடிய ஓசை யமைந்த வார்த்தைகள் பொருந்திய பாசுரங்களை வாசிப்பதை விட்டு, ரெவரெண்ட் போப் என்பவரின் ஆங்கில மொழிபெயர்ப்பை மட்டும் வாசித்தால் என்ன பயன் தரும். ஒரு ரூபாய்க்குள் கிடைக்கும் திருவாசகத்தைக் கனவிலும் நினைக்காதவர்கள் கூட, மேற்படி மொழிபெயர்ப்பைப் பத்து ரூபாய் கொடுத்து வாங்கி அலமாரிக்கழகாய் வைத்துக்கொண்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம்.

நம் முன்னோர் அரியநூல்களை யெல்லாம் பாக்களாகவே யருளியிருக்கிறார்கள். அவற்றிற்கு நம்மவர் எழுதியுள்ள உரைகளிலேயே பல வித்தியாசங்களிருப்பதால், அவற்றில் சரியானவற்றை ஆராய்ந்துணர்ந்து ஆராய்ச்சி செய்வதிலேயே மிக்க கஷ்டமிருக்கிறது. ஏனெனில் உரையாசிரியரில் பெரும்பாலார் நூலாசிரியரின் கருத்தை யறியாமலோ, அல்லது அனுபவ மில்லாமலோ தங்கள் அபிப்பிராயப்படியே உரைசெய்து விடுகிறார்கள்.

நாம் தெளிவடைவதற்கென்றே நம் தாய்ப்பாஷையில் எழுதப்பட்ட நம்முன்னோர் நூல்களை ஆராய்ச்சிசெய்து பயனடைவதிலேயே இவ்வளவு சிரமமிருக்கும்போது, வெவ்வேறு கருத்துகளோடு அன்னியபாஷையி லெழுதப்பட்ட நூற்களால் நாம் எவ்வாறு பயனடையலாகும். ஒருவர் நம்முன்னோர் நூலொன்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் நன்றாய் விளங்குமென்று கருதி அப்படியே செய்யக் கருதுவதாய் எழுதுகிறார். அந்தோ! நம்மவர்க்கு இத்தகைய தவறான அபிப்பிராயங்கள் இருப்பது மிக்க விசனிக்கத் தக்கதே. நமது தென்மொழி வடமொழிகளில் உள்ள வார்த்தைகளுக்கு அருமையான அர்த்தங்கள் அமைந்துள்ளது. வேதம் என்ற வார்த்தையில் 'ஞானத்தை யளிப்பது, மோட்சமளிப்பது' என்ற பொருள் அமைந்திருக்கிறது. இவ்வாறு முக்கியமான எண்ணிறந்த வார்த்தைகள் உள. ஆங்கிலத்தில் அவற்றில் ஒன்றுக்கேனும் சரியான மறுமொழி கிடையாது.

ஆகையால், நமது அரிய சகோதர சகோதரிகளே! நமது முன்னோர் நூல்களை யொருபோதும் அலட்சியம் செய்யாதீர்கள். ஆங்கில பாஷையிலுள்ள அவைகளின் மொழிபெயர்ப்பை வாசிப்பதால் மட்டும் பயனடையலாமென்று ஒருபோதும் நம்பாதீர்கள். நாம் ஆங்கிலம் மட்டும் எவ்வளவுதான் வாசித்துப் பட்டங்கள் பெற்றுவிட்டாலும், நம் முன்னோருடைய ஆன்மார்த்த நூல்களை யாராய்ச்சி செய்து மறுமைப்பயனையடைய முயலாதவரையில், நாம் புண்ணிய பூமியாகிய ஞானபூமியில் பிறந்தோம் என்றபெயருக்கும், நமது முன்னோர் தெய்வீகம் பொருந்தியவர்கள் என்ற கௌரவத்திற்கும் சற்றும் அருகராகமாட்டோம். ஆகவே முன்னோருக்குத் துரோகிகளாவோம். ஆன்மார்த்தத்திற்காக முயற்சி செய்யாதவன் ஒருபோதும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவனாகான். புருஷார்த்தத்திற்குப் பாடுபடாதவன் புருடனல்லவென்று தாயுமானவரும் அருளியிருக்கிறார். இதைக் கவனித்தொழுகும்வண்ணம் நமக்கு அருள்புரியுமாறு சச்சிதானந்தப் பரம்பொருளை மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் தத் ஸத்.

சித்தி-முத்தி.

(215-வது பக்கத் தொடர்ச்சி)

அதாவது காமியத்தவம் அஷ்டமாசித்திகளையும், நிஷ்காமியத்தவம் முத்தி சாதனமாகிய ஞானத்தையும் அளிக்கும். இரண்டையும் செய்த முற்கால பெரியோர் இரண்டையுமடைந்தார்கள்.

இக்காலத்தில் அப்படி யடைவது சாத்தியமல்லவென்று உணர்க.

மேற்கண்ட காரணங்களால் சித்திகள் ஆசை காரணமாய் அடையப்பட்டவையாதலின் அவற்றால் பெருமையும், சிற்சிலசமயங்களில் அகங்காராதிகுணங்களும் உண்டாகி அவற்றின் துவாரா பாபத்திற்கிடமுண்டாகி தபோ சித்திக்கே அழிவு நேர்ந்தாலும் நேரிடும். கொங்கணர் கொக்கை எரித்த தபோபலத்தின் அகங்காரத்தால் திருவள்ளுவருடைய பத்தினியிடம் அவமானமடைந்தது இதற்கோர் அத்தாட்சியாகும். இதுவுமன்றி காயகற்பமுண்டு ஆயுளை எவ்வளவுகாலம் அதிகமாக்கிக்கொண்டாலும் பிரளயத்திலேனும் அத்தேகம் அழியவேண்டியதே. சித்திவிளையாட்டால் பல துன்பங்கள் நேர்வது முண்டு. தேகமுள்ளபோது துன்பமிருந்தே தீரும்.

திருமூலர், பிராணனை யிழந்து கதறியழும் பசுக்களைக்கண்டு மனமிரங்கி தமதுதேகத்தை ஒரு இரகசியவிடத்தில் வைத்துவிட்டு மூலன்என்ற இடையன் தேகத்தில் புகுந்து நடித்தபோது, அவ்வூர் மந்திரி யாரோ மகானுடைய ஆன்மாவே இவ்விடையன் தேகததில் பிரவேசித்திருக்கவேண்டுமென்று ஊகித்து, காட்டில் தேடிப்பார்த்து திருமூலர் தேகத்தைத் தகித்துவிட்டதால், அவர்பிறகு நெடுங்காலம் இடையன் தேகத்திலே வசித்துக்கொண்டு இக்கன்மபூமியில் இருக்கவேண்டி நேர்ந்தது. சித்திகளால் அகங்காரமுண்டாகுமென்பதற்கும், ஞானத்தின்முன் சித்திப் பயன்படாதென்பதற்கும் ஒருதிருட்டாந்தம் கூறுகிறோம்:—

காசியில் இராமானந்த ஸ்வாமிகள் என்ற மகான் ஒருவர் இருந்தார். அவரிடம் பிராம்மணராகிய சீடர்கள் அநேகரிருந்தனர். கபீர்தாஸ் அவருடைய சீடரே. ஆனால் அவர் மடத்திற்குள் சேர்க்கப்படவேதில்லை. ஆயினும் அவர் ஈஸ்வர உபாசனையிலும், குருபக்தியிலும் சிறந்தவர். சித்தர்களில் கோரக்கசித்தர் என்பவர் அகங்காரங்கொண்டு யாவரோடும் வலிச்சண்டைக்குச்சென்று தன் சித்தி பலத்தால் அவர்களை அவமானப்படுத்துவது வழக்கம்.

ஒருநாள் அவர் காசியிலுள்ள இராமானந்தர் மடத்தெதிரில்வந்து தன் சூலத்தை அந்தரத்தில் நிறுத்தி அதன்மேல் உத்தரீயத்தை விரித்து உட்கார்ந்து அட்டகாசம்செய்து, இராமானந்தரைப் பலவாறு தூஷித்து, "அடே இராமானந்தா! உனக்கும் ஒரு ஸ்வாமி பட்டமா! ஒரு மடமா! சீடர்களா! உனக்கென்ன சித்திகள் தெரியும்! வா என் முன்! என்னைச் செயித்து பட்டந்தரித்துக்கொள்! இன்றேல் என் பாதத்தில் வந்து வணங்கு. இல்லாவிட்டால் உன் மடத்தையும் இக்காசிப்பட்டணத்தையும் ஒரு நொடியில் பஸ்மீகரப்படுத்திவிடுவேன்" என்று

ஆர்ப்பாட்டம் செய்தான். மகாசாதுவாகிய இராமானந்தர் மனம் நடு நடுங்கி சிங்கத்தைக்கண்ட யானையைப்போல் ஆவி சோர்ந்தார். மடத்திலுள்ள சீடர்களோ யாவரும் பின்புற வழியாய் ஓட்டம் பிடித்தார்கள். இராமானந்தர் கடைசியில் சரணமடையவே இருந்தார். ஆனால் சங்கதியறிந்த வாலிபராகிய கபீர் சென்று தம் குருவை வணங்கி, "தாங்கள் அந்த அகங்காரிக்கு வணங்குவதாவது—அடியேனை ஆசீர்வதித்தனுப்பும். நான் ஸ்ரீராமநாம பலத்தால் அவன் கொட்டத்தை அடக்கிவிடுகிறேன்" என்று வேண்டி, மிகக் கஷ்டத்தின்மேல் விடைபெற்று, கோரக்கர் எதிர் சென்று நின்று, தரி நெய்யத் தன் கரத்தில் வைத்திருந்த நூல் உருண்டையின் ஒரு முனையைக் கையில் பற்றிக்கொண்டு "ஜெ சீதாராம்" என்று உருண்டையை ஆகாயத்தில் விட்டெறிய அந்நூல் வானத்தில் நெடுந்தூரம் சென்று நீண்ட கம்பிபோல் நின்றது. 'கபீர் அதன்மேலேறி நூலின் உச்சிமுனைமேல் பத்மாசனமிட்டு உட்கார்ந்து "அடே கோரக்கா அங்கென்ன பூமியில், ஒரு குலம்—அதன்மேல் ஒரு விரிப்பு—என்போல் அந்தரத்தில் வந்து நில் உன் வல்லமையை அடக்கிவிடுகிறேன்" என்றார். பிறகு இருவருக்கும் யுத்தம் நேர்ந்தது. கோரக்கர் சித்திவல்லமையால் அபூர்வமாயைகளைச் செய்தும் பயன் படாமல் தோல்வியடைந்து ஓட்டம் பிடித்தார். பக்தவிஜயத்தில் இதன் விபரமறியலாகும்.

தாயுமானவர் சித்தர் கணத்தில், அவர்கள் சித்திவல்லமைகளைப் புகழ்ந்து கூறியும் கடைசி பாசுரத்தில் "யாவரும் மிரளும்படி செய்யக்கூடிய வித்தையால் முத்தி கிடைக்குமோ கிடைக்காது" என்று பொருள்படும்படி,

"வெல்லாமல் எவரையும் வெருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்தி தருமோ....." என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

இன்னும் அம்மகானே,

"சின்மயானந்தகுரு" வில் "பத்திநெறி நிலைநின்று நவகண்டபூமி பரப்பை வலமாகவந்தும்....." என்ற தொடக்கத்தையுடைய பாசுரத்தில் "அடயோக முதலிய வற்றால் அமிர்தபானஞ்செய்து இத்தேகம் கற்பகலமிருக்கும்படி காயசித்தி முதலிய செய்துகொண்டாலும், ஞானமடைந்தாலன்றி முத்தி கிட்டாது" என்று தெளிவாய்க் கூறியிருக்கிறார்.

கைவல்லிய நூலில்,

"புத்திமான்களாகிய ஜனகன், பகீரதன் முதலியோர் ஞானத்தைமட்டும், அடையமுயன்றனரே யன்றி, சித்திக்காக முயலவில்லை. ஏனெனில் "முனிவர் சித்திகள் விஞ்தைமாத்திரம் தரும், முத்தியைத் தாராவே" அதாவது சித்திகள் அதிசயமான விளையாட்டைக் கொடுக்குமேயன்றி ஞானத்தைத் தாரது" என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், பரமசிவம் பார்வதீதேவிக் குபதேசித்த 'தேவிகாலோத்திரம்" ஒன்ற அரிய நூலில்,

"அட்டமாஞ் சித்திகளும், அனைத்துள்ளபேறுகளும் — கட்டமாங்கதிகள் தரும் பரகதிகாணக்கொடா" என்றருளினர்.

சிலர் கல்விக்குறைவாலும், தக்க ஞானாசிரியரை யடையாததாலும், "காயத்தைச் சித்திசெய்துகொண்டால்தானே பிறகு நீண்டநாள் யோகம் சாதித்து ஞானத்தைப் பெறலாம்" என்று கூறுவதுண்டு. அது முழுதும் தவறு. அப்படி காயசித்தி யடைய முடியாதென்பதைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறோம். அதற்குமாறாய் சித்தர்நூல்கள் என்ற புத்தகங்களில் கூறப்பட்ட பலவித யோகமுறை ஔடதங்களை யுண்டு கடுமையான பத்தியங்களிருந்து பலர் க்ஷயம், பித்தம், கிராந்தி, கண்ணெரிச்சல், தீராத்தேக வெதுப்பு, சீதபேதி இத்தகைய கொடிய வியாதிகளை யடைந்து மிக்க வருந்தியதையும், இறந்தே போனதையும் பிரத்யட்சமாய்க் கண்டிருக்கிறோம்.

இனி அந்நூற்களில் கூறப்பட்ட வாதத்தின் உண்மை பின்வருமாறு:—

முன்பு சேரமான் பெருமான் நாயனார் கயிலையங்கிரிக்கு சுந்தரமூர்த்திகளோடு சென்றபோது அவரால் ஆதரிக்கப்பட்டுவந்த புலவர்களுக்கு வருமானமில்லாமற்போயிற்று. ஆகவே அவர்கள் பொருள் சம்பாதிக்கும்வண்ணம் ஏதாவது நூல்செய்ய நினைத்தார்கள். ஞானம், வைத்தியம், வாதம், மந்திரம் இவற்றில் ஒன்றைப்பற்றிமட்டு மெழுதினால் சிலர்தான் வாங்குவார்கள். ஆகையால் யாவற்றையும் கலந்து எழுதி சித்தர்களால் எழுதப்பட்டதென்று பெயர் வைத்தார்கள். அந்த நூல்கள்தான் இச்சித்தர்நூல்கள் என்று நம்பத்தக்கவர்களும், சகலசாத்திர பண்டிதர்களுமாகிய பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கிறோம். திருட்டாந்தமாய், ஞான அனுபவியாகிய ஒருவர் ஞானத்தைப்பற்றி எழுதும் நூலில் ஞானத்திற்கு முழுவிரோதியாகிய பேராசையை மூட்டும் பொன்செய்யும் வித்தையையும், மகா பாபகிருத்தியங்களாகிய ஸ்திரீ வசியம், வைப்பு, மாரண மந்திரம், இவற்றை யெங்கேனும் கூறுவாரோ. அறிவாளிகளுக்கு இது நன்றாய்ப் புலப்படும்.

தாயுமானவர் சின்மயானந்த குருவில் "கருமருவு குகையனைய காயத்தி நடுவுட்....." என்ற பாவில் ஞானப்பயிற்சியை செம்பைப் பொன்னாக்கும் வாதவித்தைபோல் உருவகப்படுத்தி யிருக்கிறார். அதுபோலவே மேற்படி நூற்களிலும் இரண்டு பொருள் தரத்தக்கவிதமாய் பல பாட்டுகளுள்ளன. அனேகர் அதை நம்பி மாயக்காரரால் மயக்கப்பட்டு கடையிலுள்ள சரக்குகளை வாங்கிச் சுட்டுச்சுட்டு நஷ்டமடைகிறார்கள். ஒருதரம் தீயதிகமாய்விட்டது, அப்புறம், அறைப்புபோதாது, பிறகு, வாலை சரியாய் சுத்தியாகவில்லை, ஒருவன் நான் 800 ரூபாய் செலவிட்டு எல்லாம் முடித்துவிட்டேன் கடைசிபுடத்தில் கொஞ்சம் தீயதிகமாய்விட நீற்றுவிட்டது, இப்போது ஜாக்கிரதையாய் முடிக்கலாம், எப்படியும் 10-இல்லாவிட்டால் 9-கண்டிப்பாய் தேரும். இப்படி யிவர்கள் தானும்கெட்டு அன்னியனையும் கெடுக்கிறதேயன்றி ஒருவனாலது பலனடைந்தவன் கிடையவே கிடையாது. அதற்கு மாறாகச் சிலர் கண்ணைப் போக்கடித்துக்கொண்டும், சிலர்பாஷாணப்புகை சுவாசவழியேறி கொடிய வியாதிகளுக் காளாயுமிருக்கிறார்கள். உண்மையில், அது சுயநலங்கருதாத மகான்களுக்கே அருளாற் கிடைக்கத்தக்கது.

சித்தியால் ஞானம் ஒருபோதும் கிட்டாது. ஞானத்தை யடையவேண்டுமாயின் உபாசனாமூர்த்தியிடம் பக்திபொருந்தி முன்றப்படி மனதை லயம் செய்து அருளை முன்னிட்டு மாயையைவென்று தன் நிஜ சொரூபத்தை யறிய வேண்டும். "தன்னை யறிவதே யறிவு. பின்னை யறிவது பே யறிவாமே" என்றபடி உன்னை நீ யறிவாயாகில் உனக்கொரு கேடுமில்லை. இதுவொன்றே முக்தியடைய மார்க்கம்.

ஆகையால் நண்பர்களே! காயசித்தி இரசவாதம் முதலிய அறிவிலிகள் கூறும் இத்தகைய மாயையிற் சிக்காது ஈசுரபக்தியோடு அனுபவியாகிய தக்க ஆசானையடுத்து மேற்கூறியவண்ணம் இராஜயோகவழியாய் ஞானத்தை யடைய முயலுங்கள். இம்முயற்சி செய்வோர்க்கு ஆண்டவன் அறிவிற் கறிவாய் உள்ளத்திலிருந்தே உதவிபுரிவாரென்பது திண்ணம்.

சீடன்.

" நன்றி மறவேல் "

என்பது நமது ஔவை பிராட்டியாரின் அமுதவாக்கு. இதற்கு ஒருவர் நமக்குச் செய்த நன்றியை மறக்கலாகா தென்பதே பொருள்.

இந்த ஞாலத்தின் கண்ணே மனிதர்களாய்ப் பிறந்த யாவரும் ஒருவர்க்கொருவர் உதவியின்றி வாழமுடியாது. தனக் கொருவருடைய உதவியும் அவசிய மில்லையெனக் கருதும் பெருஞ் செல்வவந்தனும் பிறருதவியைத் தேட வேண்டிவரும். சாமானியமாக நாம் உடுக்கும் உடையை நெய்ய நெசவுக்காரனும், அதை வெளுத்துக்கொடுக்க வண்ணானும் வேண்டுவதுபோல் பின்னும் பலவற்றிற்குமாகும். ஆதலால் மனிதனாய்ப் பிறந்தபொழுதே நமக்கு உதவியிருந்தே தீரவேண்டும். அவ்விதம் ஒருவர் ஒருகால் நமக்குச் செய்த உதவியை நாம் என்றும் மறவாது அதற்குப் பிரதி நன்மையை அவருக்குச் செய்ய முயலவேண்டு மென்பதே ஔவையார் கூறியதன்கருத்தாகும். அப்படிக்கின்றியதை மறந்தோமே யானால், செய்ந்நன்றி கொன்ற பாதகராவோம். மேலும் நமக்கு ஒருகால் நன்மை செய்தவர் பின்னும் பல தீமைகள் செய்தபோதிலும், அத்தீமைகளை மறந்து, நன்றியை மறவாது இருதயத்திருத்தி ஏற்ற சமயத்தில் அவருக்கு உதவிபுரியவேண்டும். இதை வற்புறுத்தியே " நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல—தன்றே மறப்பது நன்று " எனத் தெய்வப்புலவரும் திருவாய்மலர்ந் திருக்கின்றனர். அவ்விதம் பிறர்செய்த தீமையை மறந்து அவருக்கே நாம் திரும்ப நன்மை செய்வோமானால், அவர்கள் தம் குற்றத்தை யுணர்ந்தறிந்து கொள்ளுவதோடு, நற்புத்தியு மடையக்கூடும்.

தன் நலத்தைப் பாராட்டாது பிறர் நலத்திற்கே பாடுபடுபவன் சான்றோரினத்தில் உத்தமனாவான். தன் நலத்துடன் பொது நலத்திற்குப் பாடுபடுபவன் மத்திமனாவான். பிறரது கஷ்ட நஷ்டங்களைப் பாராட்டாது தன் நலத்தையே பெரிதும் விரும்புபவன் இராக்ஷதன்போன்ற அதமனாவான். தனக்கும் பிறருக்கு மின்றி பாடுபடுபவனது இழிவை யித்தகையதெனவுங் கூறவும் வேண்டுமோ? பின்னும்,

ஸ்லோகம்.

பத்மாகரம் தினகரோ விகசம் கரோதி சந்திரோ விகாஸயதி
கைரவ சக்ரவாளம்
நாப் யர்த்திதோ ஜலதரோபி ஜலம்ததாதி ஸம்தஸ்வயம்
பரஹிதே விஹிதாபி யோகா :

அதாவது, சூரியன் தாமரைப்பூவை மலரச் செய்கின்றான். சந்திரன் குமுத புட்பத்தை மலரச்செய்கின்றான். யாசிக்காமலேயே மேகங்கள் ஜலத்தைப் பொழிகின்றன. அவ்வாறே சான்றோர் ' பரோப காரார்த்த மிதம் சரீரம்' எனத் தம் காலத்தை முற்றும் பிறருக்கு உதவிபுரிவதிலேயே கழிப்பர் என்பதாம்.

தம்முயிருக்குத் தீங்கிழைத்தோருக்குந் திரும்பத் தாம் நன்மையே செய்த நல்லோர்கள் பலருண்டு. இதற்கு நமதைந்தாவது மறையெனப் புகழ்பெரும் பாரதத்தில் கூறியுள்ள நாபீகஜங்கனென்னும் பக்ஷிசிரேஷ்டரின் சரித்திரமும், அர்ச்சுனன் தமக்கின்னலிழைப்பவனாகிய அரவக்கொடியோனை (துரியோதனன்) அரண்யத்தில் சித்திரசேனனென்னுங் கந்தர்வனிடத்தினின்றுஞ் சிறைமீட்டு ரக்ஷித்ததுவுமே போதிய சான்றாகுமன்றோ? இவ்வித நீதியை நாம் ஓர் மரத்தின் செய்கையாலு மறியக்கூடும். எவ்வாறெனில், சில மனிதர்கள் கூடி ஓர் பெரிய விருட்சத்தை வெட்டத்துவக்கி அதனைச் சிறிது பாகம் தறித்ததின்பின் தாமடைந்த களைப்பையாற்றிக் கொள்ளுமாறு அவர்களம்மரத்தின் நிழலிலேயே தங்குகின்றனர். அப்போதவ்விருட்சம் அவர்களைத் தன்னிக்குப் பொல்லாங் கிழைப்பவர்களெனப் பொருட்படுத்தாது தன் நிழலின் குளிர்ச்சியை யளிக்கின்றதன்றோ? அவ்வாறே பெரியோர்களுந் தமக்குக் கெடுதி செய்ய முயலுபவர்களுக்கும் தாம் நன்மையே செய்வர். இக்கருத்தையே,

" சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்கு மாங் கண்டீர் மரம் "

என்று ஔவையார் வெளியிட்டிருக்கிறார். " நீ மனம் பதைபதைக்காதே. நீ எப்பொழுதும் போல் கள்ளங்கபடும் சூதுவாதுமின்றி யிரு. உனக்கு எவரெவர் தீங்கு செய்கிறாரோ செய்யட்டும். அவன் உனக்குத் தீங்கு செய்கிறதில்லை. தனக்குத் தானே தீங்குசெய்து கொள்ளுகிறான் " என்று ஆன்றோர் மொழியொன்றுண்டு. இவ்விதமெல்லா மிருக்க நாம் ஒருவர் செய்த நன்றியை மறப்பது நன்றல்ல.

" எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்றபடி எவ்வகைத் தருமங்களை யழித்தவர்களுக்கு மீட்டேறும் வழியுண்டாம். இச்செய்ந்நன்றியை மறந்தவர்களுக் கீட்டேறும் வழியில்லை. கேவலம் மரங்கூட ஒருவர் செய்த நன்றிக்குப் பதில் நன்மை செய்கிறதெனப் பெரியோர்கள் கீழ் குறித்தவாறருளி யிருக்கின்றனர்.

நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லன்னன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

மேலும் " தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாகக் கொள்வர் பயன் றெரிவார் " என்னு மான்றோர் வாக்கின்படி, பிறர்செய்யு முதவி தினையளவாயினும் அதை நல்லவர்கள் பனை யளவாகக் கொண்டு என்றும் மறவாது பிரதி யுதவியைச் செய்யமுயல்வர். தீயோர்கள் பிறர்செய்த உதவி பனையளவினதாயினும், (" ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம் நீர்மேலெழுத்திற்கு நேர் " என்பதற் கியைய) அதைத் தினையளவாகவேனும் மதியாது உடனே மறப்பர். இவ்வகைகளில் எது உத்தமமான தென்னுங் கேள்விக்குச் சாமானியரும் ஏற்ற விடை பகரவல்லார். பின்னும்,

" காலத்தினாற் செய்த நன்றிசிறி தெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது "

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது"

என்று நந்தமிழ் மறை பறை யறைவிக்கின்றபடி ஏற்றகாலத்திற் செய்த உதவிக்கும், பிரதியுதவியை எதிர்பாராது செய்யு முதவிக்கும் இப்பூமியையும், சுவர்க்கத்தையும் கைம்மாறாகத் தந்திடினும் அவைக்கிவை 'யொருபோது மீடாகா.

ஆதலின் இவைகளைச் சிந்தித்து, இவைகளுக்கேற்ப நாம் பிறருக்கு ஏற்ற சமயங்களில் தக்க உதவிபுரிய வேண்டுமென்பதே ஔவை பிராட்டியாரது ஆழ்ந்த கருத்தென வுன்னி, நாம் நம்மாற் கூடுமானவரை பரோபகார சிந்தனையைக் கடைப்பிடித் தொழுகுவோமாக. சுபம். என். வேங்கிடரமணன்.

உண்மை.

"யாகா வாராயினு நாகாக்கக் காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்றருளினார் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவநாயனார்.

அதாவது, "எதைக் காக்காவிட்டாலும், நாக்கொன்றையே முக்கியமாய்க் காக்கவேண்டும். இன்றேல், சொற்குற்றத்தி லகப்படுத் துன்பப்படுவர்."

ஓர் சிறு அக்கினித்துண்டானது எப்படி மிகப் பெரிதானதொரு வனத்தைச் சாம்பல்மயமாக்குகிறதோ, அப்படியே (அவ்வக்கினித் துண்டுக்குச் சமமான) நம் நாக்கானது, நம் சரீரமுழுவதையும் கறையாக்குகிறது. இப்படிப்பட்ட நாக்கைத் தன்வயப்படுத்துபவர்களே யுத்தமபுருடர்களாவர்.

'உள்ளதை யுள்ளபடி கூறுவதே உண்மையாகும். உள்ளதை மாற்றிக் கூறுவதும், தெரியாததைத் தெரிந்ததுபோற் கூறுவதும் பொய்யென்று கூறப்படும். இரண்டர்த்தம் படும்படியான சொற்களைப் புகல்வதும் பொய் யுரைத்தலே. ஓர் கவிவாணர், ஒரு செல்வவந்தனிடம் யாசகத்திற்குச் சென்றார். ஆண்டு, அவரைப்புகழ்ந்து பாடியபாட்டில், செல்வவந்தரை, "ஓ புத்தியிலாதவரே" என்றறைந்ததால், செல்வவந்தர் கவிவாணரைத் தண்டிக்க, கவிவாணர், "அண்ணலே! தங்களை அறிவில் சூரியனைப்போன்றவ ரென்றுதானே சொன்னேன். (புத்தியில்—அறிவில், ஆதவர்—சூர்யனைப்போன்றவர்) தாங்கள் சித்தத்திற் சீற்றங்கொள்வானேன்?" என்று (தான் தப்பித்துக்கொள்வதற்காகச்) சொன்னார். இதுவும் பொய் யுரைத்தலே. வாக்கால் உண்மையையே கூறினும், கேட்போர் இவன் கேலியாய்க் கூறுகிறான் என்று நம்பாதுவிடும் வண்ணம் கூறுவதும் பொய்யே. எப்படியெனில், ஒரு கள்ளன் ஓடிவந்து ஒரு அறையிலுள்ள மேல்மச்சு அறையில் (பரணை அறை) ஒளிந்துகொண்டான். அதன்கீழ் அறையில் அவனுடைய சினேகன் உட்கார்ந்திருக்கிறான் கள்ளனைப்பிடிக்கத் துறத்திவந்தவர்கள் கீழிருப்பவனைக்கண்டு "இப்படி ஒருவன் வந்தானே அவன் எங்கே?" என்றார்கள். அதற்கு அம்மனிதன் ஆத்திரத்தோடும் கோபத்தோடும் "இதோ என்தலைமே லுட்கார்ந்திருக்கிறான்" என்றான். வந்தவர்கள் இவன் கோபத்தால் கூறுகிறானென்று போய்விட்டார்கள். இதுவும் பொய்யே. இத்தகைய பொய்கள். சாதாரணமாய் உள்ளதை மறைத்துக்கூறும் பொய்யினும் கொடியவை. பொய் யுரைத்தலுக்கு முக்கியமான காரணம் தன்னயங் கருதும் மோசக்கருத்தே.

இம்மாதிரி பொய் யுரைத்தலில் மூன்று தீக்குணங்களுள்ளன. அவை, மடத்தனம், இழிவு, கெடுதி, ஆகிய இவைகளே. ஒருவன் தன்னயங்கருதியே

பொய் சொல்லுகிறான். ஆயினும்மப் பொய்யானது அவனைக் கெடுக்கின்றதென்பதை யவனறியவில்லையே. பலநாட் பொய்ய னொருநாளகப்படுவான். பொய்யனுக்கு மறதிகூடாது. அவனெவ்வளவு ஜாக்கிரதையா யிருப்பினும் பொய்யானது, அவன் சொல்லும் முன்னுக்குப் பின் முரண்படும் வார்த்தைகளால் வெளிப்பட்டு விடுகிறது. அவ்வாறானதும், இவனது எண்ணம் பலிக்காததுடன் இவனை யொருவரும் நம்பார்கள். ஒரு குற்றத்தை மறைக்கவே யொருவன் பொய் சொல்லுவான். ஆனால், தான் ஒருகுற்றத்தை மறைக்க எண்ணிய தந்திரம் இரண்டுகுற்றத்திற் கொண்டுவந்துவிட்டதை யவன்றியாதது மடத்தனம் அல்லவா?

இனி, உண்மைசொல்லுவது மிகவு மெளிது. மிகவும் சிரமப்பட்டு ஒரு பொய்யைக் கூறுவதால் தன்னைத் துன்பப் படுத்திக்கொண்டு இழிவையே பயனாகவடைகிறான்.

நல்வாக்கைக்கூறி, நம்மை மேன்மைப்படுத்த ஏற்பட்ட இந்நாக்கானது கொடும் வாக்கைக் கூறுவது பெருங்கெடுதி யல்லவா? இதனால், அவநம்பிக்கை ஏற்பட்டு விடுவது நமக்கு பெருங் கேடல்லவா?

இனி, பொய்கூறும் நிலைமையி லிருந்தெப்படி நீங்கலா மென்பதைப்பற்றி விசாரிப்போம்.

நாம் அதிகமாகவும், அனாவசியமாகவும் பேசலாகாது. நாம் அதிகமாகச் சொல்வோமாயி னதில் கொஞ்சங்கொஞ்சமாய்ப் பொய் சேர்ந்துகொண்டே வரும். ஆதலின், ஒன்றைப்பற்றிக் கூறவேண்டும்போது நாம் இதைக் கூற வேண்டிய தவசியமா யென்று யோசித்து, அவசிய மின்றேல், அதைக் கூறாமலிருப்பின் நாம் பொய்யைப்பேச அவசிய மிராது.

மறைக்கவேண்டிய விஷயங்களுள்ள வேலையில் நாம் பிரவேசித்தலாகாது.

மறைக்கவேண்டிய விஷயங்களுள்ள வார்த்தைகளை யொருவரிடமும் சொல்லக்கூடாது. ஏனெனில் மறைவாய்ச் செய்யவேண்டுமென்ற காரியங்களும், மறைவாய்ப்பேசவேண்டுமென்ற விஷயங்களும் பெரும்பாலும் தீயவைகளாகவேயிருக்கும்.

ஆனால், சிற் சில சமயங்களில், பொய் கட்டாயமாய்ச் சொல்லவேண்டிவரும். அச்சமயத்தில், நாம் எவ்வெண்ணத்தைக் கொண்டு பொய் சொல்கிறோமென்பதைக் கவனிக்கவேண்டும். தன்னயங் கருதாது, பிறர் நலங் கருதி அப்பொய்யைச் சொன்னால், இவனுக்கொரு கெடுதியுமில்லை.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த—
நன்மை பயக்கு மெனின்" என்றார் நாயனார்.

(பிறர்க்குக் குற்றமில்லாத நன்மையை யளிக்குமாயின் பொய்யும் மெய் கூறியது போலவேயாம்.)

உதாரணங்கள்.

1. ஒரு துன்மார்க்கன் ஒருவனுடைய கற்பை யழிக்கப் பார்க்கிறான். அவன் நமக்குத் தெரிந்த ஓரிடத்தி லொளிந்துகொள்கிறான். அத் துன்மார்க்கன், "அவனெங்கே" என்று நம்மைக் கேட்கிறான். நாம், "எனக்குத் தெரியாது," என்றுசொல்வதால் குற்றம் சற்றுமில்லை.

2. குழந்தைகள் மருந்தைக் குடிக்கா. அப்போது, அதில் சிறிது சர்க்கரை கலந்து, "இது சர்க்கரை, தின்றுவிடு" என்கிறோம்.

இம்மாதிரி அநேகம் உள. இவைகளுக்கே தர்மசங்கடமென்று பெயர். இக்காலங்களில், பொய்யைச் சொல்லியே தீரவேண்டும். இவ்விஷயமான கதைத எனேகமுள.

(1) தருமர் தன்னயத்திற்காக ஆராயாமல் பொய் கூறியதால் நரகம் பார்த்தார். (2) கௌசிகன் திருடருக்கு, ஊராரொளித்திருந்த விடத்தைச் சொல்லியதால் நரகமடைந்தார். எனெனில் அவர் மெய்கூறினாலும், அதனால் பிறர்க்குத் தீங்குநேர்ந்தமையின் பாபமே சம்பவித்தது.

இவைகளி லிருந்து, (பொதுவாகப்) பொய் யுரைக்கலாகாதென வறிந்தோம். ஆகையால் நாம் ஒருபோதும் பொய் சொல்லலாகாது.

ஆணி ம. க. விசுவநாத சாஸ்திரி.

அன்னதானம்.

தானமென்பது பலவகையுண்டு. கோதானம், ஸொர்ணதானம், பூதானம் முதலியவை எல்லாவற்றிலும் அன்னதானமே சிறந்ததெனப் புகல்கின்றனர் பெரியோர். இதுபற்றியே பணமுள்ள பலரும் சத்திரஞ் சாவடிகளை கட்டிவைக்கின்றனர். கட்டிவைத்தாற் போதுமா? சரிவர நடக்கின்றதாவென கவனிக்காது மேல்பார்வைக்கு மணியக்காரர்களை நியமித்துவிடுகின்றனர். அந்தோ! அவர்களோ தனக்குப் பிரியமான சில ஆடவர்களைச் சமையல் வேலைக்கும் துர்க்குணம்வாய்ந்த அம்மமார்களை சிறுதொழிலுக்கும் தகுந்த சம்பளமும் ஈந்து உண்டுகளித்துச் சேர்க்கின்றனர் பாபமூட்டைகளை. சத்திரங்களிலோ யோக்கியர்கள் தங்குவதுகிடையாது. ஸ்ரீ காசிமாநகரில் 364-சத்திரங்கள் மிகச் சிறப்பாய் நடந்து வந்தன. ஆனால், கலிகாலகசடர்கள் சோற்றுக்கில்லாது ஒவ்வொரு தினமாக முறையே வருஷங்களாகக் கழித்தனர். இங்ஙனம் மாக்ஷிமைதங்கிய புண்யவான்களுக்கு அன்னமிட்டுவந்த அனேகம் சத்திரங்களும் பாழாகிவிட்டன. மனப்பூர்த்தியாய்ச் செய்வதே தருமம்.

ஒரு ஸஹஸ்ரபோஜனம் நடத்துங்கால் கணக்கிற்கு மேல் ஒருவன் வந்துவிட்டால் அந்த தர்மகர்த்தா, காவலாளருக்கேனும் கைப்பணம்கொடுத்து அவனை வெளியேதள்ள உத்திரவளிக்கின்றான். பின்னும் இம்மாதிரி குறித்ததினத்தில் 1000-பேர்களுக் கன்ன மளிப்போன் மற்றயதினத்தில் ஒரு ஏழைவந்து காணமிட்டு யாசித்தாலும் அவனுக்கு அவ்வூர் சத்திரத்திலுங்கூட சீட்டுக்கொடுப்பதையும் கெடுக்க முயலுகிறான். அம்மம்மா! இவர்கள் பெறும் கதிதானென்ன? அந்தரங்கபக்தியுடன் செய்யும் தர்மம் அணுவளவாயினும் போதுமானதே. அண்டினோரை ஆதரிப்பதும் யாசித்தவர்க்கில்லையென்னாதுமே சிறந்த புண்யமாகும்.

ஓர் அக்ரகாரத்தில் அந்தணர் குலத்துதித்த அருந்தவப்புதல்வராம் அனந்தநாராயணய்யரென்பவர், அதிசெல்வத்துடனும் தன்புத்திக்கிசைந்த பத்தினியுடனும் வாழ்ந்துவருவாயினர். இவர் தினந்தோறும் பகல் 1-மணிக்கு ஸதா அடைப்பட்டிருக்கும் வாசற்கதவைத் திறந்து அண்டை அயலார் செவிடுபட தொண்டைகிழிய "அதிதிகள் யாராவதுண்டா" எனக்கதறி, கண்ணிமைப் பொழுதிற் கதவை படாரென வடைத்து வட்புகுந்து அன்னமருந்தி காலந்தள்ளி வந்தார். இவரது அரும்பெருங்குணம் அவ்வூரானைவரும் நன் கறிவர். இந்நாளில் ஒருதினம் யாசகனொருவன் அந்தக் கிராமாதிகாரியிடம்வந்து தன் குக்ஷிபாதையைத் தணிக்க வேண்டினான். கிராமாதிகாரியும் மற்றும் சிலரும் கூடி, அனந்த நாராயணய்யர் கிரகத்துச் செய்தியை அறிவித்து, அங்கேசென்று

போஜனஞ் செய்துவந்தால் தக்க பரிசளிப்பதாய் உரைத்தார்கள். "ஆசை வெட்கமறியாது" என்றபடி தேசாந்திரி சரியெனக்கொண்டு டி அய்யரகத்துத் திண்ணையில் உட்கார்ந்தார். மணி ஒன்றானதும் செல்வவந்தன் வெளிப்போந்து "அதிதிகள்—" என்னும்போதே, ராமசந்திரா! வயித்தியபதே! என்று பகவந்நாமோச்சாரணத்துடன் உட்சென்றார் அதிதி. தனவானும் மனங்கலங்கி திகைப்புற்று "என்னடீ இலையைப்போடேன்—நேரமாச்சே" என்றார். மனதிற்குகந்த மனையாட்டி "ஆஹா! மாடா மனுஷாளா—எலையெங்கிருக்கு போடாரத்துக்கு. சட்டியிலிருந்தான்னு முட்டையிலேவரும். ஔபாசனம்பண்ணபோது சொன்னேனே—வாங்கிகொண்டாருங்கோ" என்று மொழிந்தது கேட்ட கணவன், நாய் பே யென்று வைதுகொண்டு தடியை எடுத்து அடிக்கச் சென்றார் மனைவியை. உடனே அதிதி "நான் போய் இலை வாங்கிவருகிறேன்—அடியாதேயுங்கள்" என்று எழுந்து வெளிப்போந்ததும், கதவை யிரண்டுதாளிட்டு சனி துலைந்ததென உண்டுறங்கினர் தர்மகர்த்தா. அதிதியோ இலைவாங்கிவந்து கதவைத் தட்டித்தட்டிப்பார்த்தான். திறப்பாரில்லை. திண்ணையிலேயே படுத்தான். மறுநாட்பகலே கதவு திறக்கப்படும். அடுத்தநாள் ஒரு மணிவந்ததும் முறைதப்பாது கதவு திறக்க வாரம்பிக்கவே "இலையுடன் வந்தேன்" என்று நுழைந்தான் அதிதி. இனி தப்ப முடியாதெனவறிந்து தன் மனைவியைநோக்கி "நேற்று அப்படிச் சொன்னாயே—இன்றென்னவுனக்கு—ஆய் தர்மத்திற்கு ஆயிரம் விக்னம்—என் அழுகிறாய்—வலி வந்துவிட்டதா—உனக்கு ஸமாராதனை தரேன்" என பெருந்தடியொன்றேந்தி அடுக்களை சென்று மனைவியை கதவிடுக்கிற்றள்ளி படார்படாரென கதவின்மேல் ஓங்கியடித்தார். ஓவென கதறினாள் பாவை. செவியுற்ற அதிதி "எனக்கு ஒன்றும் வேண்டாம்—நான் போகிறேன்" என்று தெருக்கதவைத் திறந்து திரும்ப வடைத்து, உள்ளேயே ஒளிந்துகொண்டான். ஒழிந்தானென தனவான் மனையாளை நோக்கி தன் சாமர்த்தியத்தை மெச்சவாரம்பித்து, 'அடி நான் ஒயாமலடித்தேனே' என்றான் மனையாள் 'நான் ஒயாம லழுதேனே' என்றாள். கணவன், 'நோகாமல் அடித்தேனே' என்றான். "நானும் போகாமல் வந்தேனே" என்று ஒளிந்த அதிதியும் ஓடிவந்து, தம்பதிகள் தமக்கெனப் பரிமாறி யிருக்கும் இலைகளிலுட்கார்ந்து பலாத்காரமாய்ப் புசித்துச் சென்றான்.

இப்படிப்பட்ட தர்மம் செய்வதிலும் செய்யாதிருப்பதுநலம். தர்மம் செய்வது தனவந்தர்க்கு மாத்திரமல்ல. மனதாலும் காயத்தாலும் கூடப் புரியலாகும். அறிவு தானம் செய்வதரிது. இது அன்னதானத்திலும் சிறந்ததே. அப்படிப்பட்டஅறிவுதானஞ் செய்துவரும் ஸ்ரீ ஆனந்தபோதினியை வாழ்த்துவோமாக.

இ. வே. மஹாதேவய்யர், இலத்தூர்.

வேதாந்தசாரம்.

(1) அநேகவருஷங்களாய் இருளடைந்திருந்த வோரறையில் தீபத்தை ஏற்றினால் அந்த க்ஷணமே அவ்வறையி னிருள் நீங்கிவிடும்; அதுபோல, ஜீவனுக்கு ஞானமுதிக்குமாயின் உடனே கற்பகோடி காலமாயிருந்த அவனுடைய அஞ்ஞானமானது அந்த ஞானத்தீயா லொழியும்.

(2) கடவுள் எள்ளுக்கு ளெண்ணெய்போல் எல்லா மனிதரிடமு மிருக்கிறார். ஆனால் எல்லா மனிதரும் கடவுளிடத்திலில்லை. அதினாற்றான் அவர்களுக் கவஸ்தை.

(3) நிறையக் கனிகளை யுடையமரம் அதிகமாய்வளையும். அதுபோல், நீ

மேன்மையுடையவனாக விரும்பினால் அடக்கமும், சாந்தமும், பணிவுமுடையவனாகவிரு.

(4) கடுகத்தனை காமமிருந்தாலும் கடவுளைக் காணமுடியாது. ஆகையால் உன்னுடைய ஆசைகளை உன்பகுத்தறிவினாலாராய்ந்து விலக்கவேண்டியவற்றை விலக்கு.

(5) சாதுக்கள் அல்லது ஞானிகளுடைய சகவாசம் கடவுளைக் காணவோர் முக்கிய வழியாம்.

(6) ஒருவன் தாமரையிலையும் தண்ணீரும்போல் இவ்வுலகின்கணிருப்பின் தாமரையிலையைத் தண்ணீர் நனைக்காததுபோல் உலகமு மிவனைப் பாதிக்காது.

(7) குதிரைபோல் செய்த விளையாட்டுப் பொம்மை எப்படி உண்மையான குதிரையை நினைப்பூட்டுகிறதோ அப்படியே ஆலயத்தின்கண் விக்கிரகங்கள் அருபியான சச்சிதாநந்தக் கடவுளை ஞாபகப்படுத்துகின்றன.

(8) உலகாபிமானம், தேகாபிமானம், சாஸ்திராபிமானம் முதலிய இராஜோகுண வாசனைகளும், அசுரசம்பத்தாகிய தமோகுணத்தன்மையும் நீங்கினாலன்றி கடவுளைக் காண முடியாது.

(9) இராகத் துவேஷாதிகளான பதிமூன்று குணங்களையும், மூவாசை (மண், பெண், பொன்) களையும் துறந்தாலன்றி மோக்ஷத்துக்கு வழியில்லை.

(10) ஒருவனுக்கு ஜீவகாருண்யம், அன்பு, மனவாக்குக் காயசுத்தம், சத்தியம், வைராக்கியம், அடக்கம், பக்தி முதலிய சத்துவகுணங்களுண்டாகுமானால் அவனுடைய இருதயத்தில் கடவுள் வெண்ணெயில் நெய்போல் குடியிருக்கிறாரென நினை.

(11) தன்னுடைய சொந்தப்பந்துக்கள் அதாவது பிதா, மாதா, சகோதரன், சகோதரி, மனைவி, புத்திரர்களாகிய இவர்களின்பேரிலுள்ள அபிமானம் அல்லது பற்றுக்கு மாயை என்றும், அதே அன்பை உலகிலுள்ள எல்லாப் பிராணிகளிடமும் சமமாய்ச் செலுத்தினாலதற்கு தயை அல்லது காருண்யம் என்றும் சொல்லப்படும்.

(12) ஆன்மாக்கள் விரும்பத்தக்கதான சர்வதுக்க நிவர்த்தியும், பரமானந்த சுகப்பிராப்தியும் பிரஹ்மஞான மொன்றினாலடையப்படும். கன்மம், பக்தி, யோக மூன்றும் சித்தசுத்திக் கேதுவன்றி அநர்த்தநிவிர்த்தியும், ஆநந்தப்பிராப்தி வடிவான மோக்ஷத்தைத் தாராது. ஞானம் ஒன்றே முத்தியை யளிக்கும்.

T. E. சுந்தரலிங்கம் பிள்ளை, மதுரை.

பள்ளிக்கூடத்தோட்டம் அமைத்தல்.

(224-வது பக்கத் தொடர்ச்சி)

நாம் இதுவரை பள்ளிக்கூடத் தோட்டமும் அதன் பிரயோஜனங்களையும் பற்றிச் சொல்லிவந்தோம். இனி பிரதம பாடசாலைகளில் தோட்டம் அமைப்பதில் கவனிக்க வேண்டிய ஒழுங்குகளைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

பாடசாலைத் தோட்டம் அமைக்க ஆரம்பிக்கும் முன்னர், முதன் முதலில் ஜலவசதிக்குத் தகுந்த கிணறு அல்லது குட்டை ஏதாகிலும் பாடசாலையின் பக்கத்தில் இருக்கிறதாவென்று கவனித்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஜலவசதியும் பாடசாலையைச் சுற்றிலும் சுவரும் இருக்குமானால் அப் பாடசாலைகளில் தோட்டம் ஆரம்பிப்பதற்கு யாதொரு தடையுமிராது.

அப்படி பாடசாலையைச் சுற்றி சுவரில்லாமல் போதுமான இடமுள்ள பாடசாலைகளில், முதலில் வேலிபோடப் பிரயத்தனம் செய்ய வேண்டும். அப்படி வேலியாகப் போடுவதற்கு கொடுக்காப்புள்ளிகா, ஆமணக்கு மருதாணி, சீமைக்கள்ளி, வாதராஜா, சவுக்கு முதலிய நாற்றுகள், அல்லது குச்சிகள் கொண்டுவந்து சுற்றிலும் வாய்க்காலாக வெட்டி அதில் ஊன்றி வைக்கலாம்.

இம்மாதிரி வேலி தயாரானதற்கு மேல், போதுமான இடமிருந்தாலும்சரி, அல்லது சொற்ப இடமாயிருந்தாலும், தோட்டத்தை மூன்று விதமாகப் பிரித்துக் கொண்டு, அதில் ஒரு பாகத்தை அழகுக்காக வென்றும் (இது பாடசாலைக்கு எதிரில் இருக்கவேண்டும்), ஒரு பாகத்தை பரிசீலனைக்காகவென்றும், ஒரு பாகத்தை பிள்ளைகள் தோட்டம் என்றும் வகுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதமாகப் பிரித்து, மேல் நிலத்தை கோல்கொண்டாவது கயறுகொண்டாவது அளந்து, குறைந்தது 3 அடி அகலம் 6 அடி நீளம் உள்ள பாத்திகளாகக் கட்டவேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் மத்தியில் நடந்துபோகப் பாதையுமிருப்பது அவசியம்.

பாத்தி கட்டியானபிறகு ஒவ்வொரு பாத்தியையும் நன்றாய் சுமார் 3 அடி ஆழம்வரை கொத்தி மண்ணிலுள்ள ஓடு கற்கள் முதலியவைகளைப் பொறுக்கிவிட்டு, உப்பு மண்ணாகவாவது, களி மண்ணாகவாவது இருந்தால் அவற்றை மாற்றும் பொருட்டு முறையே மணலும் சாம்பலும், மண்ணும் சாம்பலுமாக கலந்துகொண்டு பாத்தியில் போட்டுப் பிறகு பயிரிடலாம்.

அழகுக்காக வென்று வைத்திருக்கும் தோட்டத்தைப் பொதுவாய் பிள்ளைகளைக் கவனித்து வரச்செய்தாலும், மற்ற இரண்டு தோட்டங்களிலும் ஒவ்வொரு பையனுக்கும் பாதி கொடுத்து கவனித்து வரச்செய்தல் வேண்டும்.

ஏனெனில் பரிசீலனைக்கு என்றுள்ள பாத்தியில் பாடபுத்தகங்களில் வரக்கூடிய ஸ்தாவரங்களைப் பயிர்செய்து பரிசீலனைசெய்வதற்கும், பிள்ளைகள் தோட்டம் என்றுள்ளதில் அந்தந்த ஊரில் விசேஷமாய்ப் பயிரிடக் கூடியவற்றை பயிர்செய்து விளையும் மாதிரி முதலியவைகளைக் கவனிக்கச் செய்வதற்கு அநுகூலமாகும்.

மேலேகண்டவேலைகளை மேல்வகுப்புப் பிள்ளைகளையே கூடுமானவரையில் கொஞ்சம் கொஞ்சமாய் நாளடைவிலேயே செய்யும்படி செய்து, உபாத்தியாயர் அடிக்கடி மேல்பார்த்து, அவர்களால் கவனிக்கப்படாத குறைவான அலுவல்களை மட்டிலும் ஒவ்வொரு மாணாக்கனுக்கும் எடுத்துக்காட்டி செய்யச் சொல்வது சிலாக்கியம்.

இவ்வாறெல்லாம் பாத்திகளுக்கு இடம் தயாரித்ததுமுதல் பின்பு நடக்கும் ஒவ்வொரு அலுவலையும், தினசரி கவனித்து தெரிந்துகொள்ளும் பிரதி விஷயத்தையும், தேதியுடன் சரிவரக் குறித்து வைக்கும்படி இதில் வேலை செய்யும் ஒவ்வொரு மாணாக்கனுக்கும் திட்டம்செய்து, அதை உபாத்தியாயர் கவனித்து தவறுதலானவற்றை திருத்திக்கொள்ளச் செய்துவந்தால், இந்தத் தோட்ட வேலை ஒருவாறு பிரயோஜனப் பட்டதாகும்.

ஜி. நாராயணசாமி ஐயர், கைக்குரிச்சி.

நேசம் பாராட்டல்.

தனக்குற்ற நண்பரிடம் வைக்கும் அன்பிற்கே நேசம் எனப் பெயர். நல்ல துணை என்பது இன்றி யமையாததே. "துணையோடல்லது நெடுவழியேகேல்" அல்லாமலும் "சுவரோடாயினும் சொல்லியழு" என்றபடி உற்றவரிடம் சொன்னு லல்லாது நேர்ந்த இன்பதுன்பங்கள் ஆறாது மனதைப் புண்படுத்தும். ஆனால் "அற்ப ஸ்நேகிதம் ப்ராணஸங்கடம்" என்று கேட்டிருக்கலாம். "மூர்க்கரோ டிணங்கேல்" "அற்பனுக்கு கோபம் அரைநாழியில்வரும்," "சிறு பானை சீக்கிரம் சூடுபிடிக்கும்." "ஸம் ஸர்காதோஷ குணுபவந்தி" என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஒருவனது ஸ்வபாவம் அவனுடைய கூட்டத் தாரைப் பொருந்தியதாகும். இதன் ஆங்கிலப் பழமொழியை நந்தாயாம் போதினி முதற்சஞ்சிகையில் கூறியது மறந்திருக்கமாட்டீர்கள். ஆதலின் நற்குணம் வாய்ந்த நண்பரை நாடு.

நன்மதி யுடைமை குடிகுணங்குற்ற நல்லினத்தானு மெத்திறத்தும்
பன்முறை யாய்ந்து நட்பினைக் கொள்க.

பாலும் நீரும்போல என்றும், நகமும் சதையும் போலவெனவும் உலகத் தார் சொல்வதுண்டு. மாந்தர் பாலினின்று நீரைப் பிரிக்கவேண்டி பாலைக் காச்சுகின்றனர். நீர் வற்றியவுடனே பாலானது அதுகாறும் தன்கூடவேஇருந்த உயிர்த்தோழனைக் காணாது பரிதபித்து நண்பனைத்தேடி நாலாபக்கமும் உலாவி நோக்கி பொங்கி அக்னியிற்குதிக்க எத்தனிக்குந் தருணம் சிறிது நீரைத்தெளிக் கின்றனர். தக்ஷணமே தன் பழைய நண்பன் வந்தானென வுற்சாகங்கொண்டு அடங்கிவிடுகின்றது. அப்பப்பா! என்னநட்பு! இங்ஙனமன்றோ இருக்க வேண்டும்? ஆன்றோர்வாக்கு அருமையானதன்றோ? ஆயிரம் பொன்கொடுப்பி னும் இணையாகுமோ! நற்குணவானுடைய நட்பினைக்கொண்டால் நற்கருமத்திற் செல்லுதலே இயற்கையாய்விடும். நம் ஆனந்தபோதினிபோன்ற நண்பர் கிடைப் பது மிகவரிது. ஒருமாதமுடிவில் நாம் அடுத்தமாதத்தை எதிர்பார்க்கிறோம். புதுமாத முதல்தேதிவந்தால், பாலானது நீரைத் தேடியோடுவதுபோல ஸ்ரீ ஆனந்தபோதினி வரவில்லையே! வரவில்லையே!! என்று மிகவாடி தபா லாபீஸுக்கு ஓடி வாங்கி மனநிம்மதியாய் மறுபுத்தகம் வரும்வரை திரும்பத் திரும்ப படிக்கின்றோமல்லவா? பலராலும் புகழத்தக்க நண்பனையன்றோ சிநே கங்கொள்ளவேண்டியது. அம்மம்மா!! சிநேகத்தின்பெருமை, செப்புவதருமை நட்பின்பெருமை நவிலுவதருமை. "கனகபூஷணா" த்தினிடம் பிச்சப்பன் என்பவன் கொண்ட நேசமே போதுமான ஸாக்ஷியாகும்.

ஓர் ஊரில் ஏழை யொருவன் தன் அநுதாப நிலையைக் குறித்த கடித மொன்றைத் தன்மகனிடங்கொடுத்து, அதைத் தன் பழய நண்பனும் ஓர் தனவா னிடத்துச்சென்று கொடுத்து தனம்பெற்று வாவென வனுப்பினான். செல்வச் சிறுவனும் மறுஊர்சென்று கொடை மடம் எனப் பெயர்பூண்டுவாழும் தன வானைக்கண்டு லிகிதங்கொடுத்து கைகட்டி பக்தியோடு நின்றனன். புதுப் பணம் படைத்த புராதனனும் புதுவீட்டைப்பற்றி புகழவாரம்பித்து பையனை நோக்கி 8000-ரூபாய் செலவு செய்தவீட்டின் மாடிகளொவ்வொன்றையும் திறந்துகாட்டி திறமைபேசி, தான்செய்த கலியாண விமர்சையைப்புகழ்ந்து, கட்டிலையும் மெத்தையையும் உலைத்துப் புரட்டிப்புரட்டி விலைமதிக்கச் சொன் னான். பசியின் மிகுதியால் மனங்கசிந்த சிறுவன் கோபமிகுதியால் செல்வ வந்தனைநோக்கி, "ஐயா! எல்லாம் சரிதான். தாங்கள் இந்தாவது மேடையி னின்று திடீரென இறந்துபோனால், எப்படி ப்ரேதமானது வெளியிற்போகும்.

மிகுந்த பணம் பிடிக்குமே" என, அதைக்கேட்ட செல்வவந்தன் கோபத் துடன் பையனை ஒரு சிறு அறையில் அன்னமிடாது அடைத்துவிட்டான். மகனைக் காணாத தந்தை, தள்ளாடி தனவானை யணுகி என்னவென வினவ, அப்போதும் வீட்டைப்புகழ்ந்து சிறுவன் செப்பியதையும் ஒப்பித்தான். ஏழை யும் சிரித்துக்கொண்டு "ஆ! சின்னப்பயல், உளறினான். என்ன ப்ரமாதம். இந்த இரண்டு சுவரைத்தான் இடிக்கணும்" என்றான். உடனே இருவரையும் வெளியே தள்ளிவிட்டான் பழய நண்பன். இத்தன்மை நட்பு இல்லாதிருப் பது எத்தனையோ மேன்மை. "அற்பரோடிணங்கேல்" நற்றுணையான நம் ஆனந்தபோதினியை நேசங்கொண்டால்—வம்பு பேச நாவெழாது, கோபம் பறந்தோடும், அநேகம் நண்பருடன் பழகலாகும், அறிவைப் புகட்டும்— தாயென்று சொல்ல என்ன தடை? அது மார்க்கண்டேயர் போல என்றும் இளமையோடு சிரஞ்சீவியா யிருக்கவேண்டுமாய் ஆண்டவனைப் பிரார்த்திப்போ மாக.

இ. வே. மஹாதேவய்யர், இலத்தூர்.

அறம்.

(218-ம் பக்கத் தொடர்ச்சி.)

பொருள்.

கல்விகேள்விகளிற் சிறந்து, கற்றவண்ணம் நன்னெறி பயில்வானொரு வன் இல்லறத்தைப்பற்றி யொழுகவேண்டும். அவனே யந்நெறி வழுவா தொழுகுவான். இவ்வில்லறத்திற்கு ஐவகை வேள்விகள் பிரதானமாம்: அவையாவன:—பிரமயக்ஞம், தேவயக்ஞம், பிதிர்யக்ஞம், பூதயக்ஞம், மானிடயக்ஞம் என்பனவாம். வடநூலார் இவற்றைப் பஞ்சமஹாயக்ஞ மென்பர். வேதமோதுதல் பிரமயக்ஞம் என்னப்படும். அக்கினிகாரியம் தேவயக்ஞமாம் பிதிர்க்களை உத்தேசித்துத் தர்ப்பணம் முதலியன செய்தல் பிதிர்யக்ஞமாம். வாயசபலிமுதலாயின பூதயக்ஞமாம். அதிதிபூசை, யாசகர்க் கீதல் முதலியன மானிடயக்ஞமாம். இவற்றுள் அதிதிபூசையே மிகுதியும் சிறப் புடையது. அதிதியென்றால் முன்னாளில் ஒருநாளும் வந்திராதவன். புதிய வன் என்பது பொருள். தமிழில் விருந்து என்று கூறப்படும். அப்படிப் புதிதாய்வந்தவர் ஒருபகலும் இரவும் அதிதி என்னப்படுவார். ஒருநாள் கடந் தால் அவர் அதிதியல்லர் நண்பர்களாவார்கள். பகற்பொழுதில் போஜன வேளை யில் வருகிறவன் தேவன் என்று ஸ்மிருதிகளில் கூறப்படுகின்றது. அவ னுக்கு அன்னமுதலிய கொடுத்துபசரித்தால் அக்ஷயபலனுண்டாம். தானங்கள் எல்லாவற்றிலும் அன்னதானமே மேலானது. அதிதிகளுக்கு அன்னதானம் செய்து மகிழ்விக்கிறவன் இகபரமிரண்டிலும் மேன்மைபெறுவான். அவன் ஒருபோதும் தரித்திர தசையை அடையமாட்டானென்று உண்மை நூல்கள் கூறுகின்றன. அதிதி பூஜையாகிய அன்னதானமே இல்லறத்திற்குச் சிறந்த தர்மமாதலால் கிருகஸ்தன் அவசியம் அதிதிபூசை செய்யவேண்டும். அது பொருளின்றி யமையாது.

"ஒண்பொருள் காழ்ப்ப வியற்றினார்க் கொண்பொருள்
ஏனை யிரண்டு மொருங்கு"

என்ற பிரமாண வசனத்தால் நிரம்பப்பொருளீட்டினோர் அறமும் இன்பமும் எளிதி லடையக்கூடும் என்று விளங்குதலால், பொருள் அவசியம் வேண்டப் படும். ஏனெனில் பொருளாற்பொருளும், அறமும், இன்பமும் அடையப்

படுதலால். வறுமையா னொந்துவந்து யாசிப்பவருடைய பசிநோய்தீர அமுதூட்டவும், மற்றும் பலவகைத் துயரால் மெலிந்தடைந்தார் துன்பந்துடைத்தற்கும் திரண்டதிரவியமுடையார்க்கேயன்றி ஏனையர்க்கியலாது. பசிப்பிணியைப்போன்று நோயியற்றும் பிணிவேறின்று. அது மற்றநோய்களைப்போன்று யாதேனு மொருகாரணம்பற்றி வருவதுமன்று; கர்ப்பத்திலுருக்கொண்டு ஜனிக்கும்பொழுதே கூடத்தோன்றுவது; எவ்வகை ஔஷதங்களாலும் தீர்வதுமன்று. இத்தகைய பசிநோயுண்டாயின் எவ்விதமான உணவையாவது புசித்தே தீரவேண்டும். புசியாக்கால் ஒரு சமயம் மரணத்தையும் உண்டாக்கும். மரணத்திற்குச்சரியான இப்பசியுண்டாயின் பிராணிகள் எவ்வகைப்பட்ட தொழிலையும் செய்து பசியைத் தீர்த்துக்கொள்ள முயல்வதியற்கை, மனிதர்களோ கொலைமுதலிய மஹாபாதகங்களையும் செய்யத்துணிவர். இதுபற்றியே,

" மானங் குலங்கல்வி வண்மை பொருளுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்துபோம்.

என்ற செய்யுளால் பசியினு லுண்டாகுந் தீமைகளை விளக்கி யருளினர் அன்னையார். ஆன்மாக்க ளிவ்வகையான பாவங்களைச் செய்யாமல் விலக்குவதும், நீக்குதற்கரிய பசிநோயை ஒழித்து மகிழச்செய்வதுமான அன்னதான மெவ்விதமான புண்ணியமுடைய தென்பதைப் புத்திமான்கள் தங்களறிவினுலுணரத்தக்கதேயன்றி ஒருவர் கூறத்தக்கதன்று. இத்தகைய பெரும்புண்ணியம் இல்லறமுடையாரா லடையப்படுவதே யன்றி ஏனைய வாச்சிரமத்தாரா லடையப்படுவதில்லை. ஆதலால் இல்லறத்தாருக் கிது சிறந்த தருமமாயிற்று. இதுவும் பொருளின்றி யமையாததொன் றென்பது சொல்லாமலே யமையும். அப்பொருளும் நன்னெறியாலாக்கப்படல்வேண்டும். பாவமார்க்கத்தாலீட்டப்படும் பொருள் தர்மச்செயலுக்குப் பயன்மடுமாறில்லை. நன்மார்க்கத்தாலீட்டப்படும் பொருளே புருஷார்த்தங்களைப் பயக்கும். ஆதலால் துன்மார்க்கத்தை யொழித்து நன்மார்க்கத்தாற் கூடியவளவு பொருளீட்டிச் சீவான்மாக்கள் மாட்டருளுமுடையராய் அறம்புரிந்து நாற்பாற் பொருள்களையு மொருங் கெய்தல் வேண்டும். இவற்றை,

" அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு.

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். "

என்பனவற்ரு னுணரக்கிடந்தமைகாண்க, இனிப்பொருளீட்டு முபாயங்களாவன. போதனை, கிருஷி, வர்த்தகம், சிற்பம், யாசகம், உத்தியோகமென வறுவகையாம். மற்றுமுளவே லவை இவற்றுள் அடக்கிக்கொள்ளப்படும்.

இவற்றுள் முதல்நான்கும் சிறப்புடையன. ஏனைய நிந்திக்கப்படுவன. மாணவர்களுக்கு வித்தையைப் போதித்து, அவர்கள் கஷ்டப்படாமல் அளிக்கும் பொருள், அமிர்தம்போல்வதாம். இந்தத் தனத்தினுல் செய்யப்படும் தர்மம் அக்ஷய பலனைத்தரும். தானத்திலும் அன்னதானம்போல் வித்தியாதானமும் சிறந்தது. போதகா விருத்தியில் பாவம் என்பது சிறிதும் அணுகாது. ஆனுல் அது தற்காலம் முரணிநிற்கின்றது. கிருஷி அதாவது பயிரிடுந்தொழில் போதகாவிருத்திக்கடுத்தது. இதனையே "மேழிச்செல்வங் கோழைபடாது" "தொழுதுண்சுவையி னுழுதுண்ணினிது" "உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்று அன்னையார் பலதரம் புகழ்ந்துகூறியது. ஒருவருக்கு அடங்கி வாழாமல் சுவாதீனமா யிருக்குந்தன்மையுடையதாதலால் விவசாயம் மிகுந்த சிறப்புடையது. அன்றியும் பிரயாசைக்குத்தக்க பலனளிப்பது. ஒருகாலத்திற் குறைந்த பலன்கொடுத்தாலும் மற்றொரு காலத்தில் நிறைந்த பலனளிப்பது. பொய் வஞ்சகம் முதலிய தீச்செயல்களோடு கூடாதது. இதிலும் பூமியை உழுதல், உலக்கையாலிடித்தல், மண்வெட்டியால் வெட்டுதல் முதலியவற்ருல் சிறிது பாபம் உண்டாகும்; அந்தப்பாப நிவிர்த்திக்காகப் பஞ்ச மஹா யக்ஞங்களைச் செய்யவேண்டும். இதைச் செய்வதனுல் பாபங்களினின்றும் விடுபட்டு மறுமைப் பயனையடைவான்.

மூன்ருவதான வாணிபம் (வியாபாரம்) விவசாயத்திலும் தாழ்ந்தது. அதைவிட அதிக பாபமுள்ளது. பண்டங்களைக் கொள்ளல், விற்றல்களின் அலைச்சல், கவலை, அவற்றிற்குரிய காலங்களை ஏமாருமல் கவனித்திருத்தல், கொண்டபதார்த்தங்களை விற்றற்குரிய காலம் வருமளவும் காப்பாற்றிவைத்தல் முதலிய கஷ்டங்களும், விற்பனை செய்யும்போது நஷ்டம் வராமலிருக்கும் பொருட்டுப் பொய் பேசுதலும், அதனுற் பிறரை வஞ்சித்தலுமாகிய பாபச்செயல்களும் நேரிடுவதால், அதுவு மிழிவுதானதென்று கூறப்படுகின்றது. எவ்வாருயினும் கடவுளுக்குப் பயந்து பிறரை வஞ்சியாமலும், பொய்கூருமலும், தான்கொண்ட விலையில் எட்டிலொருபாகம் லாபம் வைத்துச் சிறியோர் பெரியோர் எல்லாரிடத்தும் ஒரேவிலைக்கு விற்றுச் சம்பாதிக்கப்படும் பொருள் புகழத்தக்கதே. கிருகஸ்தன் இந்தத் தொழிலாலும் பொருளீட்டலாம்.

நான்காவதான சிற்பம் (கட்டிடம் புரிதல், சித்திரமெழுதுதல் விக்கிரகம் வார்த்தல், யந்திரங்களியற்றல் முதலியனசெய்தல்) என்பது எல்லாராலு மியற்றப்படத்தக்கதன்று. ஆயினும் அதுவும் வர்த்தகத்தோடொத்ததே. ஐந்தாவதான யாசகம் மிகவும் இழிவுடையதே. இதனையே " ஏற்பதிகழ்ச்சி " என்று அன்னையார் இகழ்ந்துகூறினுர். இத்தொழிலாற் சீவிப்பவன் செத்தபிணத்தோடொப்பாவான். இவன் உலகத்தாராலும் நிந்திக்கப்படுவான். மறுமையிலும் நற்கதி பெருன். இவன் இல்லறம்புரிதற்கு அருகனுகான். ஒருதொழிலாலும் ஜீவிக்க வியல்பில்லாதான், மானம்விட்டு யாசிப்பது குற்றமாகாது என்பது சான்ருேர் கருத்து. எனெனில், தன்னையே பற்றுக்கோடாக அண்டியிருக்கும் மனைவிமக்கள் முதலியவரைக் காப்பாற்றவேண்டிய கடமை யிருத்தலால் என்க. தன்னை நம்பினவர்களைக் கைவிட்டுத் தானுந் துன்புற்று மடிவது தற்கொலையோடொத்த பாதகமாகுமென்பர். இரப்பவன் கோபம், பிறரை யிகழ்தல், கொடாரைத் தூஷித்தல் முதலிய குற்றமற்று மனவடக்க முடையவனுய், பிறர்மாட்டிரக்கமுற்று, உள்ளது கரவாதியும் உத்தமகுணமுடையவரையாசித்து, அவர் மனமகிழ்ந்துகொடுப்பது பெற்றுத் தன் குடும்பத்தைப் போஷித்துக் கூடியவளவு தருமமும் செய்தல் வேண்டும்.

" இன்பமொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முருஅ வரின்.

கரப்பிலா னெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேர ருடைத்து.

இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்ருதார் மாட்டு "

என்றவற்றால் இரந்து குடும்பசவரக்ஷணை செய்வதுங் குற்றமாகாதென்று நாயனார் கூறியருளினர். இதுவும் சக்தியிலாதார்க்கு ஜீவனோபாயமாகவே கருதப்படுவதேனும் இழிந்த தொழிலேயாமென்க.

" தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
தண்ண வி னூங்கினிய தில்
இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு
காவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்"

என்று நாயனாரே யிரத்தற்றொழிலை நிந்தித்துக்கூறியிருத்தலாலும், " போனகமென்பது தானுழந்துண்டல்" என அன்னையார் கூறி யிருத்தலானும், பிரத்தியட்சத்தானு மிரந்து ஜீவித்தல் இகழப்படுவதேயாம். ஆதலால் எவ்வகைப்பட்ட வறுமைநேர்ந்துழியும் இரவாது தன் முயற்சியாலடையப்படும் அற்பப்பொருளைக்கொண்டு சொற்பஜீவனம் செய்தலே சால்புடைத்தாம்.

ஆறாவது உத்தியோகமென்பது இக்காலத்தாராற் புகழ்ந்து மேற்கொள்ளப்படும் சேவகாவிருத்தி, இதுமிகுதியுமீனமுடைத்து. பிறனொருவனிடத்தும், அரசாங்காத்தாரிடத்தும் சேவகத்திலமர்ந்து ஜீவித்தல் சான்றோரால் சுவானவிருத்தியென்று இகழ்ந்து கூறப்பட்டது. சுவானவிருத்தியென்பது நாய்த்தொழிலென்பதாம். நாயானது தன் யஜமானனுக்கடங்கி, அவனுக்குத் தயவுண்டாம்படி பற்காட்டிக் கெஞ்சி, அவன் கோபத்துக்கஞ்சி யொடுங்கி நடப்பது போலச் சேவகாவிருத்தி செய்பவனும் தன் எஜமானனுக்குப் பயந்து, அடங்கி நடக்கவேண்டியிருப்பதால் சுயாதீனமற்றுப் போகிறான். எவனுக்குச் சுவாதந்தரியம் இல்லையோ அவன் தர்மகாரியங்களைச்செய்ய அருகனாகான். அங்ஙனம் செய்யத் துணிவானேல் எஜமானனுக்குத் துரோகம் செய்த பாபத்தை யடைவான்; அவனுக்கு அடிமைத்தொழில் செய்வதற்கே காலம் போதாமையாகும். எந்தத் தொழிலைச் செய்வதற்கும் எஜமானன் உத்தரவிற்கு எதிர்பார்க்கவேண்டும். தானினைத்த காரியத்தை நினைத்தபடி நினைத்தபொழுது நிறைவேற்ற முடியாது. தன்சரீரசுகத்தைப் பாதுகாத்தற்பொருட்டுப் போஜனமுண்பதற்கேநேரம் கிடைப்பதருமை. உலகத்துக்கு முற்றும் விரோதமான பரபோககாரியங்களைச் செய்ய நேரமேது? அன்றியும் அத்தொழிலிற் கொஞ்சம் அதிகாரமிருந்துவிட்டால் பரிதானம் வாங்குதல் பிறர்க்குத் துரோகம்செய்தல், ஏழைகளை வருத்தல், வேண்டாதார்க்குத் தீமைசெய்தலாகிய மஹாபாவங்களுண்டா மாதலால், இந்தச்சேவகாவிருத்தி சன்மார்க்கநிலைர் ஒருபோதுங் கைப்பற்றத்தக்கதல்ல. இழிவாகக் கூறப்பட்ட இத்தொழில்களாலும், சூதாடல், விகடம் செய்தல், கூத்தாடல், அழிவழக்காடுதல், பொய்ச்சாட்சிகூறல், கோட்சொல்லல், பிறர்பொருளை யபகரித்தல், திருடல், ஒத்துவாழுங்குடும்பத்தில் பகையுண்டாக்கி விடுதலாதித் தீயதொழில்களை யொழித்து, விவசாயம் வர்த்தகம் முதலிய தொழில்களில் தனக்கிசைந்ததைக் கைப்பற்றிப் பிறரை வஞ்சியாமற் செய்த பொருளைக்கொண்டு பஞ்சமஹா யக்ஞங்களைச் செய்து, தன்குடும்பத்தையும் தன்னை யண்டியிருப்பவர்களையுங் காப்பாற்றித் தானும் குறைவற உண்டு சன்மார்க்கத்தில் நடக்கும் புண்ணியமுடையவனே இல்லறத்தாலடையப்படும் பெரும் பயனைப்பெற்று, இம்மை மறுமைச் சுகங்களையும், ஜன்மாந்தரங்களில் மோட்சானந்தத்தையும் அடைந்து மேன்மை யுறுவானென்று உண்மை நூல்களும், அந்நூல்களை யுணர்ந்த சான்றோர்களுங் கூறுகின்றனர். இவ்வாறு

சன்மார்க்கத்தில் பொருளீட்டித் தர்மங்களைச்செய்து முன்னோர் நடந்த வழி பற்றி நடப்பதே மானிடர்க்குரிய கடமையாம்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

சிறுவர் பக்கம்.

மாணவர்களும் உபாத்தியாயரும் கவனித்து நடக்கவேண்டிய சில குறிப்புகள்

1. மாணவர்கள் தங்கள் தாய்ப்பாஷையில் எப்போதும் பிரத்தியேக அன்பும் கவனமும் வைக்கவேண்டும். ஆங்கிலபாடசாலைகளில் நம் தாய்ப்பாஷை போதிக்கப்படுவது மிகச் சொற்பகாலமே. தாய்ப்பாஷையைச் சரியாய்க் கற்காத்தால் நேரிடுங் குறைகளும் தீங்குகளும் மிக அதிகம். தாய்ப்பாஷையைக் கல்லாவிடின், நமது உண்மையை நாம் அறிவதற்குச் சந்தர்ப்பமில்லாமலே போகிறது. நமது முன்னோரின் பெருமையை யுணர்ந்து, அவ்வழி நாமும் நடந்து நமது பூர்வீகப்பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற உற்சாக முண்டாக வழியில்லாமலே போகிறது. நம் முன்னோரின் நாகரீக உயர்வும். அநாதியாயுள்ளதும், சத்தியமும், நித்தியமுமாகிய உண்மையை அஸ்திவாரமாகவுடையது மாகிய நமது பரிசுத்த மதத்தின் இயல்பை யுணராது வெளிப் பகட்டாய்த்தோன்றும் வீண்மாயங்களிற் சிக்கி நமது மறுமைப் பயனையே யிழக்க வழியுண்டாகிறது. தன் உயர்வையும் சுயமதிப்பையும் உணராதவன் யாவர்க்கும் மிக்க தாழ்ந்தவனாகவே யாவான்.

திருட்டாந்தமாய் இப்போது ஆங்கிலத்தில் உயர்தரக்கல்வியில் தேர்ச்சியடைந்து உத்தியோகம் செய்பவர்களில் பெரும்பாலோர் தாய்ப்பாஷையிலுள்ள நூல்களைச் சரியாய்க் கல்லாததாலும், பிறர்மதத்தைச்சேர்ந்த பாஷாநூல்களில் கூறியுள்ளவற்றை மட்டுமே கற்பதாலும், சுயமதத்தை யலட்சியமாய் நினைத்து, அதன்வழியொழுகாது, ஜாதிப்பிரஷ்டம்மட்டும் ஆகாமல் (அதுவும் சிலர் மேலுக்குமட்டுமே) தெய்வ உபாசனையின்றி உலகபோக அனுபவம் மட்டுமாய் காலங்கழிக்கிறார்கள் இத்தகையோர், அன்னியமதமே சிறந்ததென்று மட்டும் கருதுவதும், கருதுவதோடு சிலர் கூறுவதுமாயிருக்கிறார்கள். ஆனால் உலக அபவாதத்திற்கும் ஜாதிப்பிரஷ்டத்திற்கு மஞ்சி அப் புறமத வழியும் ஒழுகுவதில்லை. அந்தோ! இவர்கள் இந்த அநித்தியமாகிய அற்பகாலவாழ்வுமுடிந்து கண்பஞ்சடைந்து இந்திரியங்களொடுங்கி, நாவடங்கி, எமன் கையிற் சிக்கவேண்டிய காலம் நெருங்கும்போது, ஆதரவோடு நம்பிக்கையாய்ப்பற்ற ஒருதெய்வமுமில்லாதால் எந்த நாட்டமும் கிட்டாது, தெய்வ உணர்ச்சியில்லாத பசு பட்சிகளின் சீவன்களைப்போல் தேகத்தைவிட்டுப் பிரிவதால், பசு பட்சியாதி ஜன்மங்களையே தேடிக்கொள்கிறார்கள். அறிவாளிகள் சற்று சிந்தித்து நோக்கின் இதன் உண்மை நன்கு புலப்படும்.

ஒரு இராஜகுமாரன் தன் பிறப்பை யறியாதிருந்தால், தன்னிலும் கீழான எவரையும் மேலானவராக மதித்து, அவர்களுக் கூழியம் செய்துகொண்டுதானிருப்பான். தன் உயர்ந்த பிறப்பு தெரிந்தால், அச்சுயகௌரவ பதவியை யெப்படியேனு மடைந்து அதைக் காப்பாற்றிக்கொள்ள முயல்வான்.

ஆகையால் உபாத்திமார்களே தாய்ப்பாஷையின் அவசியத்தை நீங்கள் நமது பிள்ளைகள் மனதில் நன்கு விளங்கும் வண்ணம் போதித்து, அவர்களுக்கு அதில் விசுவாசமுண்டாகச்செய்து, அதில் பிரத்யேக சிரத்தையெடுத்துக்கொள்

ளும் வண்ணம் கவனிப்பீர்களாயின், நம்து சந்ததியாரின் க்ஷேமாபிவிர்த்திக்கும் நமது தாய்நாடு பூர்வீக உன்னதநிலையை யடைதற்கும் பேருதவிசெய்த பெரும் புண்ணியம் பெறுவீர்கள். இதைச் செய்ய, உங்கள் புண்ணிய வசத்தால், உங்களுக்குத்தான் நல்ல சந்தர்ப்பம் வாய்ந்திருக்கிறது. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றபடி இச்சமயத்தை வீணாக்காது அந்தப்புகழையும் புண்ணியத்தையும் சம்பாதித்துக்கொள்ளும்படி பிரார்த்திக்கின்றோம்.

2. உபாத்தியார் ஒருபிள்ளையைக் கேள்விகேட்டு ஒன்றைப்பற்றி போதிக்கும்போது, மற்றபிள்ளைகள் "அவனைத்தானே உபாத்தியாயர் கேள்விகேட்கிறார், நமக்கென்ன" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருப்பதும் கவனத்தை வேறெங்காவது செலுத்திக்கொண்டிருப்பதும் பெரும்பாலும் வழக்கம். இதற்கு உபாத்தியாயர் ஒருபோதும் இடந்தரலாகாது. பாடவேளைகளில் எல்லாப் பிள்ளைகளின் கவனமும் தன்னிடத்திலேயே யிருக்கும்படி செய்ய வேண்டும். இதுவே உபாத்தியாயரின் முதற் கடமையாகும்.

3. பிள்ளைகளுக்கு பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதோடு தன் வேலை முடிந்துவிட்டதாகக் கருதும் உபாத்தியாயர் ஒருபோதும் தமது கடமையைச் சரிவர முடித்தவராகவேமாட்டார். பிள்ளைகளுடைய எண்ணங்களும் நடக்கைகளும் நல்வழியிற் செல்லும் வண்ணம் செய்யவேண்டியது உபாத்தியாயரின் கடமையாகும். ஒருவனுக்கு நடக்கைக்கு இரண்டாவதே கல்வி. கல்வி யில்லாமல் நன்னடக்கையும், சாந்தம், தயை, ஈசுரபக்தி, பரோபகாரம் முதலிய நற்குணங்களும் மட்டுமிருந்தாலும் அவனுக்குக் கௌரவமும் மரியாதையுமுண்டு, அப்படிக்கின்றி படிப்புமட்டுமிருந்து, நன்னடக்கை முதலியவை யின்றேல் அவன் மதிக்கப்படமாட்டான். இதனாலேயே நமதுநாட்டில் குருபதவி கடவுளுக்கு இரண்டாவதாக மதிக்கப்படுகிறது. குருவினிடத்தில் பூரணபக்தி விசுவாசங்காட்டித் தொண்டுசெய்யவேண்டுமென்று விதித்திருக்கிறது. முற்காலத்தில் அவ்வாறு நடந்தே அனேகர் தெய்வீகம் பொருந்திய கவிவாணர்களாயிருந்தார்கள். குருவினிடம் பக்தி விசுவாசமுள்ள சீடன் சரஸ்வதி யருள் பெற்று பிரகாசமடைவானென்பது உண்மை. அதிலும் ஞானகுருவாயின் சீடன் அவரையே கடவுளாக மதிக்கவேண்டுமென்பது விதி.

இத்தகைய கடமைகளை மனப்பூர்வமாய் நிறைவேற்றுவதில் அதிக கஷ்டமிருக்கிறது. ஆகையாற்றான் உபாத்தியர்வேலை புண்ணியத்தொழிலாவதோடு, யாவற்றிலும் கஷ்டமான தொழிலாகிறது. ஒருநாடு முன்னுக்கு வரவேண்டுவதற்கு இவர்கள் முதன்மையான காரணராகிறார்கள்.

அந்தோ, இத்தகைய முக்கியமானவர்களுக்கு முற்காலத்திலிருந்த உபாத்தியாயர்கள் அனுபவித்த சௌகரியங்களில் நூற்றில் ஒருபங்குகூட இக்காலத்திலில்லை. நமது காருண்ய துரைத்தனத்தார் ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்கிறார்கள். துரைத்தன ஊழியர்களுக்கு ஆரம்பச்சம்பளம் 15 ரூபாயாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படி யிருந்தும் தேசநன்மைக்குவேண்டிய அவசியமானதும், அதிலும் சிறுவர்களுக்குவேண்டிய ஆரம்பக் கல்வியைப் போதிக்கும் மிக்க கஷ்டமானதுமாகிய தொழிலைச்செய்யும் உபாத்திமார்களுக்கோ, உணவுக்குப் போதுமான சம்பளங்கூட இல்லை. அவர்களுடைய நிலைமையை விவரித்துக் கூறப்புகின், மிக்க பரிதாபமாகும். அவர்களுக்கு மனோநிம்மதியும் தக்க உற்சாகமுமில்லாமலிருப்பது உண்மையில் நமது சந்ததியாருடைய க்ஷேமத்திற்கு எவ்வளவோ இடையூறை யுண்டாக்கத்தக்கது. அந்தோ, நமது கெட்டகாலமே துரைத்தனத்தார் இவர்கள்மேல் கருணைகாட்டாததற்குக் காரணம்போலும். ஒரு அன்னிய பாஷையைக் கற்பிக்கும் பண்டிதருக்கு ஐந்நூறு ரூபா சம்பளமென்றால், நமது தாய்ப்பாஷையைக் கற்பிக்கும் பண்டிதருக்கு ஐம்பது கூட இல்லை. அந்தோ, நகரச் சங்கங்களிலும், சட்டசபைகளிலும், மந்திராலோசனை சபைகளிலும் அவயவிகளாயிருந்து நாட்டிற்குப் பல நன்மைகளைப் புரியும் நம்மவர்களில் யாரேனும் இந்த ஆரம்பப்பாடசாலை உபாத்திமார்களின் பரிதாப நிலைமையைநீக்க முயலலாகாதா! அது அவர்களுக்குப் புகழையும் பெரும் புண்ணியத்தையும் அளிக்குமன்றோ. அதனால் அவர்கள் தாய்நாட்டிற்குச் செய்யும் நன்மை அளவுகடந்த தன்றோ.

எல்லாம்வல்ல கருணாநிதியாகிய ஆண்டவன் கடைக்கண் நோக்குவாராயின் அவர்கள் மனம் திரும்பி இப்புண்ணியத்தைச் செய்ய முயல்வார்கள். ஆதலால் அவ்வாறே நமது கோரிக்கையை யீடேற்றும் வண்ணம் நாம் உள்ளன்போடு மனப்பூர்வமாய் மன்றாடிப் பிரார்த்திப்போமாக.

ஆரணி. தப்புசாமி முதலியா

உண்மை நீதித் துண்டுகள்.

(185-வது பக்கத் தொடர்ச்சி)

(12) (ஒரு காரிய நிமித்தம் தம்மிடத்து வருபவர் தூரத்திலேயே திரும்பிப் போய்விடாதபடி தாம் பார்க்குங் குளிர்ந்த பார்வையை அரும்பாகவும், அவர் நெருங்கும்படி தாம் காட்டுகின்ற முகமலர்ச்சியை மலராகவும், அவர் நெருங்கிய பின்பு "உமக்கு என்னாலாகவேண்டியது யாது? என்று தாம் வினவுகின்ற இன்சொற்களின் வாய்ப்பை இனிய காயாகவும், பிறகு தாம் கொடுக்கும் கொடையைப் பழமாகவும் கொடுப்பவரைக் கற்பகத் தருவாகவும், நம் குமரகுருபர சுவாமிகள் நீதிநெறி விளக்க மென்னு நூலிலே உருவகப்படுத்தியிருத்தலினாலே) ஒருவர் தம்மிடம் வரும்பொழுது அவரை அன்போடு குளிரப் பார்த்து முகமலர்ச்சி கொண்டு மெய்ம்மையுள்ள இன் சொற்களைப் பேசித் தம் மாலியன்ற வளவும் அவர்க்கு உதவி செய்பவர் கற்பக விருட்சமென்று கொண்டாடத் தக்கவர் ஆவர் என்பதாம்.

(13) அறிவுடையார் பேதையர்க்கு ஒன்றைப் போதிக்குங்கால், அவர்கள் அதனை உபேக்ஷித்தலால், தாம் அவமான மடைகிறார்கள். இவ் விஷயத்திற் குற்றம் போதிக்கும் அறிவுடையாரதே யன்றி உபேக்ஷிக்கும் அறிவிலாதவரதன்று. எங்ஙன மெனின்,—அறிவிலாதவர் இவர்கள் போதனையின் பெருமையை அறியாமலிருப்பது இயல்பே.—அறிவுடையார் அறிவில்லாதாரது பேதமையை அறியாதது குறைவன்றோ? ஆகவே மூடர்க்கு நற்புத்தி உபதேசிக்கலாகாது.

(14) ஒருவன் முன்சொன்னதற்குப் பின் சொல்வது மலைவாகவும் ஒரு நிலையில் நில்லாமல் தாறுமாறாகவும், உறுதியின்றித் தளர்ச்சி படவும் பேசுவனாயின், அவனது அச்சொற் சோர்வுகொண்டு அவன் மனதிற் கெட்ட எண்ணங்களையும் செயலிற் கெட்டவிஷயங்களையும் கொண்டுள்ளவ னென்பதை யறிதல் கூடும். இத்தன்மை வியவகார விசாரணைகளில் நன்கு விளங்கும். "சொற் சோர்வுபடேல்" என்பது ஆத்திசூடி.

(15) பக்ஷபாதமாக ஒன்றினிடத்து விருப்பம் வைத்தால் அதன் தோஷமும், வெறுப்பு வைத்தால் அதன் குணமும் தெரியா தாதலால், அறிவுடையோர் ஒவ்வொரு பொருளின் குணாகுணங்களையும் விருப்பு வெறுப்பின்றி நடுநிலைமையில் நின்று ஆராய்ந்து உள்ளபடி உணர்வர்.

(16) ஒருகாலத்தில் ஒருவர் இயேசுவி னிடத்தில் வந்து "உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம் பரியத்தை என் மீறி நடக்கிறார்கள். கை கழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே" என்றார்கள். அவர்களை நோக்கி அவர் பிரதி யுத்தரமாக "நீங்கள் உங்கள் பாரம் பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை என் மீறி நடக்கிறீர்கள். வாய்க்குள்ளே போகிறது தீட்டு படுத்தாது. வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப் படுத்தும். வாய்க்குள்ளே போகிறதெல்லாம் வயிற்றில் சென்று ஆசனவழியாய்க் கழிந்துபோம் என்பதை நீங்கள் இன்னும அறியவிலையா? வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும். அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படி யெனில், இருதயத்தி லிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித் தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப் படுத்தும் கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப் படுத்தாது" என்றார். இதனால் இருதயத்தினின்று வரும் தீயவெண்ணங்களே தீட்டு என்பதும், புறச்சுத்தத்தைவிட அகச்சுத்தமே வேண்டியது என்பதும் உணரத் தக்கது (எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு) என்றார் நம் அருமைத் திருவள்ளுவர். (தொடரும்.)

கு. ப. அ. க. சதாசிவம்பிள்ளை, அம்மனூர்.

ஸ்திரீகள் பக்கம்

ஸ்திரீ புருடர்.

நாம் பன்முறை ஸ்திரீகள் நடந்துகொள்ள வேண்டிய முறைமைகளைப் பற்றியே நமது சஞ்சிகையில் வரைந்து வருகிறோம். அப்படியாயின் அவர்கள் நடக்கைகளுக்கு மட்டுமே விதி நிஷேதங்கள் உண்டென்றும், ஆடவர் நடவடிக்கைகளைப் பற்றி ஒன்றுமேயில்லை, அவர்கள் மனம்போனபடி நடக்கலாம் என்றும் சகோதர சகோதரிகள் கருதிவிடலாகாது. ஸ்திரீகளே இல்லறத்தை நடத்துவதில் முக்கிய கருவியா யிருக்கிறார்கள். இல்லறத்திற்கு கௌரவத்தையேனும் அகௌரவத்தையேனும் ஒரு நொடியில் அவர்கள் கொண்டு வரலாகும். கற்புடைய உத்தமஸ்திரீ தன் கணவனுடைய குற்றங்களைக் களைந்து அவனைப் பரிசுத்தவானாக்கி விடக்கூடும். அதோடு பெரும்பாலான ஸ்திரீகளிடம் இரண்டொரு துர்க்குணங்கள் இயற்கையா யமைந்திருக்கின்றன. அவை யெவையெனின்,

ஸ்திரீகளிடம் சாதாரணமாயிருக்கும் சிக்கனம் (பொருளை வீணாகவும் அனாவசியமாகவும், செலவிடாமல் அல்லது அழியவிடாமலிருத்தல்) என்ற நற்குணம் அனேகரிடம் உலோபகுணமாய் மாறிவிடுகிறது ஒன்று, கபடத்தனம், கணவன் எத்தகைய நிஷ்கபடியாயும் களங்கமற்ற உள்ளமுடையவனாயு மிருப்பினும், தாங்கள்மட்டும் தங்களுடைய சில விஷயங்களை யவனுக்கறிவியாது மறைத்துவைத்தல் முதலியவையேயாம். நாம் இப்படிக் கூறுவதற்காகச் சகோதரிகள் நம்மேல் வருத்தமடையலாகாது. இக்காரணங்களால் ஸ்திரீகளுக்கு அதிகமாய்க் கூற வேண்டியதாகிறது. இனி ஆடவர் கடமைகளைப் பற்றி கூறுவாம்:—

1. ஒரு குடும்பத்தில் புருடன் பாலப்பருவம் முதல் கல்விகற்று முடியுந்தனிலும் எவ்வித கஷ்டத் தொழிலையும் செய்யாது சுகமாகவே காலத்தைக் கழிக்கிறான். உண்டி உடை முதலிய உபசாரங்கள் யாவும் அவனுக்குக் கௌரவத்தோடேயே குறைவின்றி நடக்கிறது. பெரும்பாலும் தாய் தந்தையர்க்கு

நடப்பதை விட மேலாகவே நடக்கிறது. இவன் அஞ்ஞானத்தால் அனுபவிப்பதாய்க் கருதும் துன்பங்கள் உண்மைத் துன்பங்களாகா. அவை யெவையெனின் குழந்தைப் பருவத்தில் தன் மலஜலத்திலேயே தான் உழன்றுகிடத்தல், தன்னைத் தூக்கிக்கொள்ளவில்லை யென்றும், தாய் அருகிலில்லை யென்றும் அழுதல், ஔஷதம் உட்கொள்ளவும், ஸ்நானபானாதிகள் நடக்கும்போதும் பெரிய துக்கப்படுதல், பிறகு பாடசாலைக்குச் சென்று வாசித்தலைப் பெரிய பலவந்தத் தொழிலாய்க் கருதி வருந்துதல் முதலியன. பாலப்பருவம் கழிந்து வாசிப்பு முடிந்து மணம்புரிந்து தான் குடும்பப் பாதுகாப்பை யேற்றுக்கொண்ட பிறகு தானே குடும்பத்தின் அரசனாயிருக்கிறான். தொழிலைச் செய்துவிட்டு வருமானத்தை மனைவியிடமளித்து விடுவதே பெரும்பாலும் இவன் செய்யும் தொழில்.

அந்தோ! ஸ்திரீகள் ஜன்மமோ அப்படிக்கில்லை. பிறந்து வளரும்போது முதல் ஒருவேளை யில்லாவிட்டாலும் ஒருவேளை அலட்சியமாகவே நடத்தப்படுகிறார்கள். "என்ன? ஆண்பிள்ளை கெட்டு விட்டதோ, பொட்டச்சிக்கென்ன பகல் பதார்த்தத்தையே இரவிற்கும் வை, போதும்", "பசியெடுத்தா லென்னடி, ஆண்பிள்ளை பள்ளிக்குப் போகிறவன். அவன் சாப்பிட்டுவிட்டுப் போகட்டும், பிறகு பழையது மீந்தால் சாப்பிடுவாய். நாளைக்கு மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்றால்—எல்லாருமிருக்க எனக்கு முன்னே பசியென்று இலைபோட்டுக் கொள்வாயோ. இந்தப் பழக்கந்தானே நாளைக்கும் அங்கு வரும்," "எத்த மிறைக்கிற பிள்ளை யிளைச்சுப்போனா போவுது, பரியம் போடுகிற பெண்ணை பாத்து விசாரிங்கொ" என்பது முதலிய வாக்கியங்களை நாம் குடும்பங்களில் சாதாரணமாய்க் கேட்கலாம். இவர்கள் பாடசாலைக்குச் சென்று வாசித்து வந்தாலும் அதற்கேனும் மரியாதையுண்டா? இல்லை. வீட்டு வேலையும் செய்தே தீர வேண்டும். இன்றேல், "ஓகோ! படிச்சு பாஸ்பண்ணிவிட்டு நாற்காலி மேலே உட்கார்ந்திருக்கப் போகிறாயோ, நாளைக்கு ஒரு மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்றால் வேலை செய்யாவிட்டால் மாமியார் சும்மாவிடுவாளா" என்று வசை மொழி பெறவேண்டியதே. பிறகு மணம் முடிந்து மாமியார் மாமனார் நாத்திமார் முதலியவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது, அது ஒரு கண்டகாலமென்றே கூறவேண்டும். ஏதோ புண்ணியவசத்தால் மாமியார் உத்தமியாயிருந்தால்தான் கஷ்டமில்லை. அவள் மருமகளை அடிமைபோலும், கொடூரமாகவும் வஞ்சனையோடும் நடத்துகிறவளாயிருந்தால், அவர்கள் கஷ்டம் கடவுளுக்கே பிரீதி. அதோடு புருடனும், தன் அறிவில்லாக் கொடிய் தாயின் சொற்படி சுய அறிவின்றி கண்மூடித்தனமாய் நடக்கும் மூடனாயிருந்து விட்டாலோ, அந்தோ, சில கன்னிகைகள் தற்கொலைகூட புரிந்துகொண் டிருக்கிறார்கள். இந்தப் பெரிய முக்காலே யரைக்கால் கண்டமாகிய காலங்கழிந்து கொஞ்சம் வயதும் முதிர்ந்து உலக அனுபவமும் கைவந்தபின், தானே குடும்பத் தலைவியாய் புருடன் மக்களோடு இல்லறம் நடத்தும்போது (புருடன் எல்லா விஷயத்திலும் உத்தமன் என்று வைத்துக்கொள்வோம். அப்போதும்) குடும்பக் கவலை முழுதும் அவளே யேற்று அனுபவிக்கவேண்டும். சுருக்கமாய்க் கூறிவிடுகிறோம் பணத்தைக் கொண்டுவந்து கொடுத்து விடுவதோடு புருடன் கவலையொழிந்து விடுகிறது. பிறகு புருடனுக்குப் பிரியமான ஆகாராதிகளை காலக்கிரமப்படி சமைத்து அவனுக்கு வேண்டிய உப்சாரமனைத்தும் செய்வதும், எவ்வளவோ கஷ்டத்தோடு தானே பத்திய ஆகாரம் உண்டு மக்களை வளர்ப்பதும், விருந்தினர் முதலியோரைத் தக்கபடி உபசரித்து புருடன் மனங் கோணாதபடியும் அவனுக்கு அகௌரவம் வாராமலும் நடந்து கொள்வதும் முதலிய குடும்பத் தொல்லைகள் யாவும் அவளுடையதே. இதுமட்டுமோ, ஒவ்வொரு மகப்

பேறுக்கும் சொல்லொணாக் கஷ்டத்தை யனுபவித்து பிராணபத்தான இக் கட்டை யனுபவிக்கவேண்டும்.

நண்பர்களே! இவ்வாறு ஜன்மமெடுத்தது முதல் கஷ்டத்தை யனுபவித்து, நமக்கு வாழ்க்கைத் துணையாயமர்ந்து, தந்தை தாய் முதலிய யாவரையும் விட்டு நம் ஒரே ஆதரணையைப் பின்பற்றி நிற்கும் மனைவியரிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்? மனைவி ஒரு விஷயத்தில் தாய்போலவும், ஒரு விஷயத்தில் மந்திரிபோலவும், எப்போதும் மனமொத்த சினேகிதி போலவும் நமக்கு உதவுகிறவளா யிருக்கிறாள். ஆகையால்,

1. ஆகாராதிகள் விஷயத்தில் நமது வயிற்றிற் பிறந்த மக்களிடம் நாம் எப்படி நடந்து கொள்கிறோமோ அவ்வாறே மனைவியிடத்தில் நடந்துகொள்ள வேண்டும். சுபாவமாகவே ஸ்திரீகள் முன்பு தம் கணவனையும், மக்களையும் உபசரிப்போடு புசிப்பித்துவிட்டு மிச்சத்தையே தாங்கள் புசிக்கும் வழக்க முடையவர்கள். அவர்களை யுபசரித்து புசிப்பிக்க வேறு யாருமில்லை. ஆகை யால் அவர்கள் ஏறக்குறையவாவது நம்போலவே வஞ்சனையின்றி உண்ண வேண்டுமென்று ஆடவர் கருதவேண்டும்.

சிலர் ஸ்திரீகளுக்கு மிச்சமிருந்தாலும் சரி, இல்லாமற்போனாலும் சரி, என்று கவனியாமலே, தாங்கள் திருப்தியடைந்தாற் போதுமென்று பாத்திரத் தைத் துடைத்து வைத்தாலும் புசித்துவிடுகிறார்கள். சிலர் புருடர்களே உயர்ந்த வற்றைப் புசிக்கவேண்டும், ஸ்திரீகள் தாழ்ந்தவற்றையே புசிக்கவேண்டும் என்ற கொள்கையோடு நடந்துகொள்கிறார்கள். இத்தகைய மனிதத் தன்மையில்லா வஞ்சகர்களைப் பற்றி நாம் இங்கு அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை.

2. புருடன் எப்போதும் தான் அனுபவிக்கிற இன்பங்களை யெல்லாம் தன் மனைவியும் அனுபவிக்கவேண்டும் என்கிற எண்ணமுடையவனா யிருக்க வேண்டும்.

3. மனைவியிடத்தில் எப்போதும் அன்புடையவனாகவே யிருக்கவேண் டும். பேசும்போதும், குற்றங்கண்டு கண்டிக்கும்போதும் அன்போடு மரியாதை யான வார்த்தைகளையே யுபயோகப்படுத்தவேண்டும். சிலர் அல்ப குற்றத்திற் கும் தாசி, வேசியென்று தூர்ப்பாஷைகளை யுபயோகிப்பதோடு அவர்கள் மனம் நோகும்படி அவர்கள் தாய் தந்தையர் முதலியவர்களையும் வைகிறார்கள். இது கல்வியாவது சுய அறிவாவது கிஞ்சித்தும் இல்லாத அறிவீனர் செயலே யாகும்.

4. சிலர் நமது மிருக இச்சையைத் திருப்தி செய்துகொள்வதற்கும், நமக்கு வேலை செய்யவுமே நாம் மனைவியை மணம்புரிகிறோமென்று கருது கிறார்கள். விளைப்பயனால் மனைவி வியாதியுற்று மேல்கண்ட விஷயங்களுக்கு கொஞ்சகாலம் பயன்படாவிட்டாலோ, இச்சண்டாளர் அவள் முகத்தைக் கூட ஏரெடுத்துப் பாரார்கள். இவர்கள் கட்டாயம் ஆண்டவனுடைய தண்டனைக் காளாகி நரகவேதனை யனுபவிப்பார்கள்.

5. மனைவியரிடத்து அன்பிருந்தாலும் அவர்கள் தங்களுடைய தர்மத்தை மீறி நடவாமல் காக்கவேண்டியது புருடன் கடமையாகும். கணவன் சொல் லுக்கு மாறு கூறாது நடக்கவேண்டியது மனைவியின் கடமையாகையால், அதில் அவள் தவறி நடக்கும்படி விடாமல் காக்கவேண்டியது புருடன் கடமையாகும். புருடன் மனைவியின் அபிப்பிராயத்தை யனுசரித்து நடக்கவேண்டிய சந்தர்ப்பங் களும், அவள் யோசனையை யங்கீகரிக்கவேண்டிய சமயங்களும் உள. எப் போதும் ஸ்திரீயின் பேச்சைக் கேட்கவே கூடாது என்று கருதுவதும் தவறு.

ஆனால், எல்லா விஷயத்திலும் மனைவியின் அனுமதி பெற்றே நடப்பதும், தன் தீர்மானப்படி நடப்பதாகிய சுதந்திரத்தை யடியோடு விட்டு, தனக்கு விருப்பமில்லாத காரியத்தையும் மனைவிக்கஞ்சி அவள் கட்டளைப்படி நடத்து வதும் மிக்க தவறேயாகும். அத்தகைய புருடன் ஸ்திரீயினும் இழிந்தவனென்று தெய்வப்புலமை நாயனாரே அருளியிருக்கிறார். அவன் பலராலும் இழிந்துரைக் கப்படுவதோடு, கடைசியில் மிக்க பாபத்திற்குப் பாத்திரனுமாவான். இதை விரித்துரைக்கின் பெருகுமென்றஞ்சி யித்துடன் நிறுத்துகிறோம்.

6. சகோதரர்களே! மிக்க விசேஷமானது இன்னொன்றிருக்கின்றது. அதை மனிதன் முதன்மையாய்க் கருதவேண்டும். அதாவது மனைவிக்குத் துரோகம் செய்யாமை. கலியாண சமயத்தில் இருவருமே பரஸ்பரம் ஒரு வரை யொருவர் துரோகம் செய்வதில்லையென்று கடவுள் முன்னும் தேவர்கள் முன்னும் சத்தியம் புரிகிறார்கள். மேலும் மனம் யாவர்க்குமொன்றே யாத லால், மனைவி தன்னைத் துரோகம் செய்து சோரம்புரிந்தால் தன் மனம் எவ் வாறு வேதனைப்படுமோ அவ்வண்ணமே, தான் அவளைத் துரோகம் செய்தால் அவள் மனமும் வேதனையடையும் என்று அதோடு கொடிய நரகத்தையும் தான் அனுபவிக்கவேண்டி வரும் என்றும் நாம் நண்குணரவேண்டும் ஆனால் புருடனிடத்திருக்கவேண்டிய இந்த நடக்கைக்கு இரண்டொருவர் கருதுகிறபடி 'கற்பு' என்று பெயரல்ல. அது ஸ்திரீகளுக்கே உரியது. புருடனுடைய இந்த நடக்கைக்கு 'ஏகபத்னிவிரதம்' என்று பெயர். "கற்பு" என்ற நாமத்தால் ஸ்திரீக்கு எத்தகைய கௌரவம் உண்டோ அத்தகைய கௌரவம் புருடனுக்கும் உண்டு என்பது அந்த நாமதேயத்தாலேயே விளங்கும். 'கற்பு' என்பதில் வேறு சில குணங்களும் தெய்வீக வல்லமையும் அடங்கி யிருப்பதால் அது ஸ்திரீகளுக்கு மட்டுமே யுரியது.

ஆணி-தப்புசாமி முதலியார்.

மாதர் மறுமணம்.

(231-ம் பக்கத்தொடர்ச்சி.)

அதுமாத்திரமல்ல. இஃது நடப்பிற்குவந்தால் ஒருஸ்திரீ விதவையான பிற் பாடு ஒருபுருஷனைமட்டுமே சுவீகரிக்கலாமென்ற நியமமில்லை. ஒருபர்த்தா இறந்துபோனபிற்பாடு, இரண்டாவதாக வேறொரு பர்த்தாவை சுவீகரிப்ப தெவ் வாறோ அவ்வாறே இரண்டாவது பர்த்தா இறந்தால் மூன்றாவதாயும் அம்மூன்று வது புருஷனுமிறந்தால் நாலாவதுமாக மேலு மேலும் இவ்வண்ணப்படி வரை யரை யின்றி புருஷர்களை கணவன்களாக சுவீகரிப்பதற்கு யாதொரு தடங்கலுமில்லை. ஒருஸ்திரீ இவ்வாறு அதிகம்பேரை விவாகஞ் செய்வதாமோ வென்ற சம்சய மும் நிலையில்லாததாகும். விதவா விவாக வழக்கத்தை அநுசரித்து வருகிற ஜாதி களில் எட்டும் பத்தும் புருஷர்களை சுவீகரித்த ஸ்திரீகளுமுண்டு. விசேடமாய் அமரிக்காவில் ஒரு ஸ்திரீமுறையாய் இருபத்தெட்டு புருஷர்களைக் கணவனாக் கிக்கொண்டதாய் கேட்டதுண்டு. அம்மாதிரி ஸ்திரீயும் ஒருகணவனிருக்க மற்றொரு கணவனை அங்கீகரித்ததாயு மில்லையாம். ஒருவனை சொந்த பர்த்தாவா யிருக்கிற நரகக்குழியிலிருந்து கடத்திய பின்னரே தான் மற்றொருவனை சுவீ கரித்ததேயாம். இவ்வாறாமிகிலும் இதற்கும் வியபசாரத்துக்கும் பரஸ்பரம் யாதொரு பேதமில்லை என்பதாய்த்தான் நாம் கொள்ளவேண்டும். அநேக புரு ஷர்களை சம்சயமில்லாது சுவீகரிக்கின்ற வேசையும் ஒருபுருஷனை அசட்டை செய்வதல்லாமல் மற்றொரு புருஷனை அங்கீகரிப்பதில்லையல்லவா, அவ்வாறு

செய்கிற வேசைகளுக்கு பதிவிரதா தன்மை சித்திக்காததுபோல புனர் விவாகத்தை அநுஷ்டிக்கிற விதவைகளுக்கும் கற்புநிலைபை யில்லையென்றுதான் தீர்மானிக்கவேண்டும். ஆதலால் வியபிசாரத்திற்கு விதவா விவாகத்திற்கும் வித்தியாசமில்லை என்று சொல்ல கொஞ்சங்கூட யோசிக்க வேண்டியதில்லை.

இச்சமயத்தில் இவ்வாறு வாதிக்கின்றனர்:—"எத்தனையோ ஸ்திரீகள் நிர்ப்பாக்கியவசத்தால் கணவனிறந்த பிற்பாடு காதலைச் சகிக்க முடியாமல் துர்ப்பிரவிர்த்தியிலிறங்கி அதனிமித்தம் கர்ப்பஹத்தி முதலான பல துஷ்கிருத்தியங்களைச் செய்துவருவது நமக்குள்ளே அனுபவமான சங்கதிதான் என்றும், அப்படி அவர்கள் துர்க்குணவதிகளாகாம லிருக்கவேண்டுமானால் கட்டாயங் கணவன் வேண்டும். அதனால் விசேடகுண மேற்படாமல் போனாலும் விதவைகளை ஒரு புருஷனுடைய ஆதீனத்தில் வைப்பதுதான் நலம்.

இப்படிச் சொல்லுகிறபட்சம் இது வியபிசாரந்தானென்று பிரத்தியேகஞ் சொல்லவேண்டியதில்லை. காமசன்னிய விகாரத்தை சகிக்கமுடியாத ஸ்திரீகளுக்கு மறுமணம் உசிதமாமென்றும் அது நிந்திக்கத்தக்கதல்ல வென்றும் அபிப்பிராயப்பட்டால் கணவனிருக்கும் பொழுதுங்கூட அவர்களுக்கு இன்னொருவன்மீது ஆசைவைப்பது நியாயமென்றுவரும், வியபிசாரஞ்செய்வதும் விகாரத்தி னிமித்தமாமன்றோ; கணவனில்லாதபோது புருஷனை சுவீகரிப்பதற்கு இடமுண்டானால் அதாவது ஆதாரமேற்பட்டால், புருஷனிருக்கும்பொழுதும் விகாரத்தினால் கஷ்டப்படுகிற ஸ்திரீகளும் வியபசாரஞ்செய்யத் தொடங்குவார்களென்பதில் யாதொரு சம்சயமுமில்லை. ஆகையா லிவ்வபிப்பிராயம் யுக்தமென்று சொல்லுவதற்கிடமில்லை. இன்னும் உற்றுநோக்கி உணர்வோமானால் இவ்விவாதத்தினால் வியபசாரங் குறையுமென்று கூறுகிறவர்கள் அங்ஙனமில்லாது, அதனால் வியபசாரம் அதிகப் படுமென்றே யறிய வேண்டும்.

ஒருவனுக்கு ஓரன்னிய பதார்த்தத்தைப்பற்றியுள்ள விபரமொன்றுந் தெரியாதிருந்தால் அதன் விபரம் அனுபோகந் தெரியுமட்டும் எவ்வளவு காலமாகின்றதோ அவ்வளவு காலம்வரை அப்பதார்த்தத்தின்மேல் பிரிய முண்டாவதில்லை. அநுபவித்தறியாத வஸ்துவில் யாருக்கும் இஷ்டமில்லாதிருக்கிற சங்கதி உண்மைதான். எப்படியென்றால் மதுபானத்தினுடைய ரசம் தெரியாத சைவ சமயத்தார்கள் அதில் விருப்பம் வைப்பதில்லை. அவ்வண்ணமே தான் மாம்ஸத்தினுடைய ரசம் அறியாதவர்களுக்கும் மாம்ஸபக்ஷணத்தின்மேற் பிரியம் வருவதில்லை. அன்றியும் அவைகளை அருவருப்போடு வெறுக்கின்றனரல்லவா. அதுபோலவே ஸ்திரீகள் எவ்வளவு காலம்வரை பரபுருஷ சேர்க்கையை அறியாதிருக்கின்றனரோ அதுவரையும் அவள் மனதிலது கூடாது என்றுபட்டுவிட்டால் அதற்கப்புறமும் தன் பிராணன் போகிலும் பரபுருஷனை சுவீகரிக்கமாட்டார்கள். புனர் விவாககாலத்து ஸ்திரீகளுக்கு அன்னியபுருஷனை சுவீகரிப்பதான வழக்கம் வந்துவிட்டால் அதுமுதல் பரபுருஷசேர்க்கையை அறியாதிருந்தாலும் அனுபவங்கொண்டு அன்னிய புருஷர்களோடுகூடி அபிலாசைவதிகளாகித் தீர்வர். அப்படியானால் விதவா விவாகம் தடங்கலில்லாத ஒரு வியபசாரகாரியமாமென்று உணரவேண்டும்.

பதிவிரதா சிரோமணிகள் தன் கணவனால் இகத்திலுமட்டுமல்ல பரத்திலும் பரமசுகத்தை அநுபவிக்கலாமென்று இருப்பதினால் கணவனை ஈஸ்வரஸ்தானத்தில் வைத்து பயபக்தி விஸ்வாசத்தோடு பூசிக்கவும் அவனைத் தன் பிராணனைவிட அதிகமாய்மதிக்கவும் அவனல்லாது வேறுகதியில்லாமையால் அவனுக்குத் திரிகரணசுத்தியாய் கீழ்ப்படிந்து வருகவுமாக யிருக்கும்பொழுது

இக்கணவனிறந்தால் வேறொரு கணவனை அடையலாமென்று உணர்ந்தால் அவர்கள் பர்த்தாமீதுள்ள மேற்கண்ட சீலங்கள் சின்ன பின்னப்பட்டுவிடும். தற்காலத்தில் புருஷனைவிட்டால் வேறுகதியில்லை. அவனுக்கு அடங்கித் தான் நடக்கவேண்டுமென்ற கடோமான நிபந்தனை யிருக்கும்பொழுதே மேல்கண்ட சீலங்கள் முழுவதும் அனுசரிக்கத்தக்க ஸ்திரீகள் அபூர்வமென்றே சொல்ல வேண்டும். காலவித்தியாச வேறுபாட்டால் அச்சீலங்கள் குறைவுபட்டுப் போனாலும் ஏகதேசமாய் புருஷனுக்கு அடங்கியே நடந்து வருகின்றனர். அநேக குடும்பங்களில் ஸ்திரீ பூமான்களுக்குள் சச்சரவுகள் பல ஏற்படுவது வழக்கமாய்விட்டது. அப்படி யிருந்தபோதிலும் ஸ்திரீகளுக்கு புருஷனைத் தவிர வேறுகதி யில்லையென் றிருத்தலாற்றான் அச்சச்சரவுகளை ஏகதேசம் அப்போதைக்கப்போது மறந்து மன்னிக்கும்படி செய்துகொண்டும் மறுபடியும் இணங்கி நடந்து வருகின்றனர். சில துஷ்ட ஸ்திரீகள் இதனைமீறி கொலைபாதகங்களுங்கூட செய்துவிடுகின்றனர்.

ஒரு கணவனை வரிப்பது ஐக்கிய சுகத்துக்கு வேண்டியென்றும் மற்றொரு புருஷனை சுவீகரிப்பது விரோதமல்லவென்றும் துஷ்டைகளான ஸ்திரீகளுடைய மனதிலுரைந்து வேரூன்றி நிலை நின்றுவிட்டால் புருஷர்களுடைய ஜீவிதமானது மிக மிக மலினப்பட்டு துக்கப் பிராப்தியில் வந்து சேருமென்பதற்கு ஐயமுளதோ, அம்மம்ம, இக்கொடுங்காரியங்கள் மனிதருடைய அவதியி (அளவி) ல்லாத ஆபத்துகளுக்கு பிரதானமாயன்றோ முடியும் பிரஸ்தாப விதவா விவாகம் இதனால் விளையும் தீங்கை யாவரால் அளவிட்டுறைக்க முடியும். புருடனிறந்தால் நறுபுருடனை மணக்கலாமென்றிருந்தால், புருடனிடம் எதற்காகவேனும் அதிருப்திநேரின், அல்லது அவன் வயோதிகமடையின், ஏழையாய்விடின், அல்லது தனக்கு செல்வவந்தன் அல்லது வாலிபமும் அழகுமுடைய வேறொருவன்மேல் காதலுண்டாய்விடின், அப்போது கணவன் இறக்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்தும், அது சீக்கிரம் நிறைவேறாவிடின் அக்காதலனோடு யோசித்து புருடனைக்கொன்றும் மீளா நரகுக் காளாவார்களென்பது திண்ணம்.

இப்போது மறுவிவாக வழக்கமுள்ள மேல்நாட்டில் எத்தனையோ பெயர் அவ்வாறு கணவர்களைக் கொன்றுவிட்டே யிருக்கிறார்கள். ஒரு அழகிய கன்னிகை ஒரு ஏழை வாலிபன்மேல் காதல்கொண்டு இருவரும் இரகசியத்தில் சதிபுருடராய் விடுகிறார்கள். பிறகு இருவரும் தந்திரமாய் யோசனை செய்துகொண்டபடி, அக்கன்னிகை மிக்கசெல்வவந்தனான ஒரு 60-வயதுள்ள சீமானை மயக்கத் தொடங்குகிறாள். அழகுள்ள வாலிபக்கன்னிகையின்மேல் ஆசைவைத்து கிழவன் அவளை மணம் புரிந்துகொள்கிறான். ஐந்தாறுமாதங்களுக்குள் கிழவன் விஷம் வைத்தாவது வேறுவழியாயாவது கொல்லப்பட்டபிறகு அக்கன்னிகை இரண்டாம் முறையாகத் தன்பழைய காதலனை மணந்துகொள்கிறாள். இவ்வித அத்தாட்சிகள் அனேகமுண்டு.

முடிவாய்க் கூறும்பட்சத்தில் நமது முன்னோர்கள் ஸ்திரீகளின் ஆன்ம லாபத்தைக்கருதி அவர்கள் நன்மையின் பொருட்டே மறுவிவாகத்தை நிஷேதித்தனர். அப்படிக்கின்றேல் அடியோடு நெறிதப்பி கற்பென்பதே யொழிந்து சற்றேறக்குறைய மிருக ஆசாரமாகவே நிகழநேரிடும். உலகில் அவ்வனுபவத்தைப் பிரத்யட்சமாய்க் காணலாம். ஆதலின் நமது மாதரின் மறுமைப் பயனைக் கருதுவோர் எவரும் அவர்கள் மறுமணம் புரியலாமென்று கூறவே மாட்டார்கள்.

E. S. சிவராமலிங்கம் பிள்ளை, புளலூர்.

முற்றிற்று.

வைத்தியக் குறிப்பு.

இதைக்கண்ணுறும் சகோதர சகோதரிகளுக்குத் தெரிவிக்கும் விண்ணப்பம். கார்த்திகைமாத சஞ்சிகையில் வெளியிட்டுள்ள க்ஷயரோகத்தை யொட்டியே பேசவேண்டியதா யிருந்தாலும், மத்தியில் ஆகாரவிஷயத்தைப்பற்றி பேசவேண்டி யேற்பட்ட விஷயத்தால் மார்கழிமாத சஞ்சிகையில் கேழ்வரகின் குணத்தை சிற்றறிவுக் கெட்டியவளவு சொல்லியுள்ளேனாலும், அது விஷயமாகவே இன்னும் சிலவற்றைச்சொல்லி முடித்துக்கொண்டு, வியாதியின் தொடர்ச்சியைப்பற்றிப் பேசுவோமாக.

முன் சொன்ன கேழ்வரகின் குணத்திற்குச் சமமான இன்னும் சில ஆகாரங்களும் உண்டு. அவை யாவையெனில், கம்பு, சோளம், தினை, வரகு முதலான ஆகாரங்கள். இவற்றையும் கேழ்வரகுக்குச் சொல்லிய முறையே அனுஷ்டித்துத் தயார்செய்து உபயோகித்தால் மேலான குணத்தை இவைகளினின்றும் அடையலாமென்பதில் சந்தேகமில்லை. பாருங்கள், சாதாரணமாய் நம் தேசத்தில் மலிவாய்க்கிடைக்கும் ஆகாரங்களை விட்டுவிட்டு அயல் நாட்டிலிருந்து வரும் ஆகாரமே உயர்ந்ததென நாமனைவரும் மயங்கி நினைக்கும்படியான காலம் நமக்கு ஏற்பட்டபடியால் நாம் நம்தேச உயர்தர ஆகாரங்களைக் கேவலமாய் மதித்து பிறரால் தயார்செய்யப்படும் ஆகாரங்களை எதிர்பார்த்தவர்களா யிருக்கின்றோம். அன்றியும் சிலடாக்டர்கள் மேல்நாட்டு ஆகாரம் வத்திராவிட்டால் நம்தேசஸ்தர்கள் கஷ்டப்படுவார்கள் என்றும் நினைக்கின்றார்கள். இப்போதும் யுத்தகாரணத்தால் சில ஆகாரங்கள்மேல் நாட்டிலிருந்து வாராததால் விலையையும் அதிகரிக்கச் செய்துவிட்டார்கள். நம்மவர்கள் எவ்வளவு விலையானாலும் மேல்நாட்டு ஆகாரம் இல்லாவிட்டால் நமது வியாதியஸ்தர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆகாரமே இல்லாதொழிந்துபோமென்று நினைக்கின்றார்கள். அது சுத்த தவறான அபிப்ராயம். இப்பொழுது மேல்நாட்டு ஆகாரங்கள் சுமார் 100 வருஷங்களுக்குமுன் கிடையாதென்று சகலர்க்கும் தெரிந்த விஷயமே. அக்காலங்களில் வியாதியஸ்தர்களும் குழந்தைகளும் இல்லாதிருக்கவில்லை. அக்காலங்களில் எத்தகைய ஆகாரங்கள் உபயோகப்பட்டு வந்தன என்று இதைக்கண்ணுறும் ஒவ்வொருவரும் யூகிக்கத்தக்கது. அன்றியும் தற்காலத்தில் உபயோகப்படுத்தும் ஆகாரங்கள் மேல்நாட்டில் உற்பத்தியாவன வன்று. நம்நாட்டு ஆகாரங்களே சுத்தமாய் பாகம் செய்யப்பட்டு நமக்கனுப்பப்படுகின்ற ஆகாரமென மதிக்கவேண்டும். இதற்கு திருஷ்டாந்தமாய் ஒருவிஷயம் சொல்லுகின்றேன் சென்ற 1917 ஆ டிசம்பர் மாதம் 21-ம் தேதி கனம் ரைட் ஆனரபில் மிஸ்டர் மாண்டேகு என்னும் நமது இந்தியா மந்திரியவர்களால் திறக்கப்பட்ட மதராஸ் பொருட்காட்சிகாலையில் கோயமுத்தூரிலிருந்து வந்த கவர்ன்மெண்ட் விவசாய கலாசாலையிலிருந்த ஆகாரவகைகளைக் கண்ணுறுங்காலத்தில் மேல்நாட்டிலிருந்து வரும் ஆகாரங்கள் பூராவும் நம்தேச தானியங்களாகவே இருந்தன. அவற்றுள் ஆர்லிக்ஸ் மால்டட்மில்க் என்னும் ஆகாரம் எதனால் தயாரிக்கப்பட்டது எனப்பார்க்குங்கால், அந்தப் புட்டியில் (This is prepared by ragi and cholam) இது கேழ்வரகு சோளம் இவைகளால் தயார் செய்யப்பட்டது என்று எழுதப்பட்டிருந்தது அதைக்கண்ணுற்றதும் என் மனம் கலங்கிவிட்டது. ஏனெனில் நம்தேசக் கேழ்வரகை நம்மிடத்திலேயே வாங்கி நமக்கே பெரும்லாபத்திற்கு விற்று கணக்கற்ற திரவியத்தை நம்தேசத்திலிருந்து கொண்டுபோகின்றார்களல்லவா! நம்தேசத்தவர்களுக்கு எந்த காலத்தில் சுயபுத்தியுண்டாகி, கேள்விப்பேச்சை விட்டு சுவதேசவஸ்துக்களை ஆராய்ச்சிசெய்து புராதன ஆசாரங்களைக் கைக்கொள்ளப் போகின்றார்கள் என்

நும் வருத்தம் உண்டாயிற்று. இன்னும் இத்தகைய விஷயங்கள் எவ்வளவோ தெரிந்துகொள்ள வேண்டியவர்களா யிருக்கின்றோம். தற்காலத்தில் நமது இராஜாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் கல்வியால் நமக்கு யாதொரு பயனும் தரா தென உணர்ந்திருந்தாலும், இராஜபாஷையாதலின் ஜீவனத்துக்கு அவசியம் வேண்டியதாயிருப்பதால் சுயபாஷையைவிட்டு அன்னியபாஷையில் பிரவேசிக்கக்காரணம் ஏற்பட்டுவிட்டது. சாதாரணமாய் நமது நாகரீகம் சாஸ்திரங்களிலும் சகல விஷயங்களிலும் மேலானதாய் இருந்திருந்தபோதிலும் உணர்வாரின்றியழிந்தன. தற்காலத்து புத்தியைவிட அக்கால புத்திசாலிகளே விசேஷம். உதாரணம் ஜயினமதத்தில் ஸ்ரீபுராணம் என்னும் சாஸ்திரத்தில் ஒரு பூண்டு முளைத்திருக்கும் நிலத்தைப்பார்த்து அப்பூமியிலுள்ள சகல குணங்களையும் தெரிந்துகொள்ளக் கூடியனவென்று ஒரு பெரியவர் சொல்லியுள்ளார். இஃது விரிக்கிற் பெருகுமாதலால் இதை யிம்மட்டோடு நிறுத்தி, அடுத்த சஞ்சிகையில் எடுத்த விஷயத்தைத் தொடங்குவாம்.

மே. மாசிலாமணி.

கற்கோட்டை—நாவல்

(239-வது பக்கத் தொடர்ச்சி)

காப்டென் தினகரன்.—"ஆ, தாங்கள் எனக்கு எப்போதும் நன்மையையே செய்கிற வழக்க மாதலால் தாங்கள் உண்மையாகவே யப்படிக் கருதினாலும், அப்போதும் தாங்கள் நன்மை செய்வதாகவே நான் கருதுவேன்" என்றான்.

இராணி.—"ஆ! நீ யுண்மையாகவே என் பிரியப்படி சம்மதிப்பாயா?"

காப்டென் தினகரன்.—"தடையின்றி. தங்கள் கட்டளைப்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றான்.

இராணி.—நீ மரியாதைக்கு மட்டுமே யப்படிக் கூறுகிறாய். மனப் பூர்வமாய்க் கூறக் கூடுமா?

கா—தினமான்.—சற்று சிந்தித்துப் பிறகு, "இல்லை யில்லை. மனப் பூர்வமாகவே கூறுகிறேன்" என்றான்.

இராணி.—"பத்திரம் பத்திரம். இதை மறவாதே" என்றாள்.

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டே யிருக்கையில் இராணியின் வீட்டுக் காரியதரிசிகளில் ஒருவன் அங்கு வந்து,

"மஹாராணி! யாரோ அரியநாயகி யென்ற ஒரு வாலிபச் சீமாட்டி தங்களைக் காண வந்திருக்கிறாள்" என்றான்.

இதைக் கேட்டதே இராணி திடுக்கிட்டாள். அவள் மனதில் விகாரமுண்டாயிற்று. யாவும் மறைத்துக் கொண்டு,

"ஆ! இப் பெயரை நான் கேட்டிருப்பதுபோல் தெரிகிறது. இவள் லார்தார் செல்வராயரின் சுற்றத்தாளோ அல்லது அவர்கள் வீட்டிலிருக்கும் தோழியோ தெரியவில்லை. அவள் என்னைக்காண வந்தவரையில் தனியே தரிசிக்க விரும்புகிறாளென்று நம்புகிறேன்" என்றாள். இதைக்கேட்ட காப்டென் தினகரனும் இராணியின்கூட விருந்த தோழிகளும் உடனே யெழுந்து வெளியிற் சென்றார்கள். சற்று நேரத்திற்குள் காரியதரிசி அரியநாயகியை இராணியிடம் அழைத்து வந்து விட்டுவிட்டு கதவை மூடிக்கொண்டு சென்றான்.

சென்றதும் அவன் தன் னறைக்குச் சென்று லெப்டினெண்ட் கங்கா ஸிங்கை யழைத்து நீ நேற்று செல்வராயர் வீட்டுத் தோட்டத்தில் திரவியசிங்கம் பிரபுவைக் கைதுசெய்தபோது கமலாம்பாளின் கூடவிருந்த கன்னிகையின் பெயரென்ன ? " என்றார்.

லெப்டி.—கங்காஸிங் —" அவள் பெயர் அரியநாயகி " என்றான்.

காரியதரிசி.—ஆ ! அவள்தான் இப்போது இராணியைக்காண வந்திருக்கிறாள். அது இராணிக்குப் பிரியமில்லை யென்று அவள் முகக்குறியால் தெரிந்தது. கடைசியில் இராணி அவளை ஏகாந்தத்தில் காணவேண்டுமென்று கூறினாள். என்ன மர்மமோ தெரியவில்லை.

லெப்-கங்கா.—" அப்படி யவள் வந்தால் நான் கைது செய்துவந்த ஆளைப் பற்றி சிபாரிசு செய்யவே வந்திருப்பாள் " என்றான்.

காரியதரிசி.—" அல்லது கண்ணபிரான் பிரபுவிற்காகப் பேசவோ ? " என்றார்.

லெப்-கங்காஸிங்.—(மிக்க வியப்போடு) என்ன ! கண்ணபிரான் பிரபுவா?

காரிய.—" என் ? கண்ணபிரான் பிரபு கைது செய்யப்பட்டது உனக்குத் தெரியாதோ ? " என்றார்.

லெப்—கங்காஸிங் எனக்குத் தெரியாதென்றதே, காரியதரிசி " நேற்றிரவு நீ அந்தப் பலராமனோடு செல்வராயர் வீட்டிற்குச் சென்ற சற்று நேரத்திற்குள் கண்ணபிரான் இலிங்கபுர ஜில்லாவில் கைது செய்யப் பட்டதாய் சமாசாரம்வந்தது.

கங்காஸிங்.—கண்ணபிரான் பிரபு எவ்வாறு கைது செய்யப்பட்டார் ?

காரிய.—அவன் துணிகரமாயத் தன் சுற்றத்தானாகிய சுந்தரநாயகம் பிரபுவிடம் பண ஒத்தாசைக்குச் சென்றான். அந்தப் பிரபு மிக்க இராஜபக்தியுடையவரானதால் உடனே பிடித்து அவ்வூர் நியாயாதிபதியிடம் ஒப்பித்துவிட்டு இராணிக்குத் தெரிவித்தார்.

கங்கா.—இராணி யென்ன கட்டளையிட்டாளோ ?

காரிய.—சுந்தர நாயகம் பிரபு தன் ஆளையே கூட அனுப்பினார். இராணி சற்றுநேரம் சிந்தித்து அந்த ஆளை நோக்கி, " உன் எஜமானன்செய்த காரியத்தால் அவருடைய பூரணமான இராஜ விசுவாசம்நன்குவிளங்குகிறது. நாம் அவர் விஷயத்தில் மிக்க சந்தோஷமடைகிறோம். கண்ணபிரானைப் பற்றி நாம் ஒன்றும் கூறவேண்டுவதில்லை. அங்குள்ள நகர அதிகாரிக்கு சட்டப்படி அவருக்கு எப்படி நடப்பதாய் நீதியென்று தோன்றுகிறதோ சந்தர்ப்பத்தை யனுசரித்து அப்படியே நடந்துகொள்ளட்டும் என்றாள்" என்று கூறினான்.

கங்கா.—அப்படியானால் இராணியுடைய எண்ணம் அவன் மரணதண்டனையடைய வேண்டுமென்பதே யென்று நினைக்கிறேன்.

காரி.—ஆம். இப்போது, நேற்று நீ பிடித்து வந்தவன் திரவியசிங்கம் பிரபுதானா வென்று தெரியவில்லை. அதைப்பற்றி சிறைச்சாலைக்கவர்னர் இன்னும் ஒன்றும் வெளியிடவில்லையோ ?

கங்கா.—இன்னுமில்லை.

காரி.—அதைப்பற்றி விசாரிக்கவே யுன்னை யழைத்தேன். இப்போது அந்த அரியநாயகி இராணியிடம் வந்திருப்பது அவனுக்காகவா யிருந்தால் இராணி அதைப்பற்றி விசாரிப்பாள். இராணிக்குக் கோபம் வந்தால் அது யாரையேனும் தாக்கும். ஆகையால் நீபோய்த் துரிதமாய் அதை விசாரித்துக்கொண்டுவா.

கங்கா.—" தங்கள் கட்டளைப்படியே போய்த் தெரிந்து வருகிறேன் " என்றுகூறி விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

16-வது அத்தியாயம்

நாம் இப்போது இராணியின் அறையில் என்ன நடக்கிறதென்று பார்ப்போம். அரியநாயகியும் இராணியும் தனியாய் அறையிலிருக்கிறார்கள். இருவரும் சந்தித்துப் பன்னிரண்டு வருடங்கள் ஆயின. அப்போது அரியநாயகி பத்தொன்பது வயதுடைய கன்னிகையாயிருந்தாள். இப்போதோ பூரண வளர்த்தியும் பழுத்த அழகுமுடைய கெம்பீரம் பொருந்திய மாதரசியாயிருக்கிறாள். இராணி அவளுடைய கெம்பீரத் தோற்றத்தைக்கண்டு சற்றுநேரம் பிரமித்து மௌனமாயிருந்தாள். இராணி என்னதான் நாணயமான கெம்பீர உடைகளை யணிந்துகொண்டிருந்தாலும் தன் வயோதிகத்தை மறைக்க எவ்வளவு செயற்கைத் தந்திரங்களைச் செய்திருந்தாலும் அரியநாயகியின் பார்வைக்கு இப்பன்னிரண்டு வருடங்களில் இராணி மிக்க கிழத்தனமடைந்ததாகவே தோன்றியது.

அரியநாயகியைக்கண்ட இராணிக்கு அவளை யெவ்வாறு வரவேற்பதென்று புலப்படவில்லை. அவள் எழுந்து இரண்டடி முன்சென்றதும் மனக்கலவரத்தால் திகைத்து நின்றாள்.

அரியநாயகி உடனே இராணியின் பாதங்களிற் படிந்து "ஓ மகாராணியே! நான் இங்குவந்து தங்களுக்குத் தொந்தரை கொடுப்பதற்காக மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன். ஓ அரசியே ! இதில் ஏதாவது சக்தியிருக்குமாயின் இதன் மூலமாய் என் வேண்டுகோளுக்கு அருள்புரியும். இதோ விதைப்பார்த்தருளும்" என்று தன்னிடமிருக்கும் பதக்கத்தை யெடுத்து இராணியிடமளித்தாள்.

அதைக்கண்டதே இராணியின் முகம் வெளுத்துவிட்டது. அவள் மனதில் உண்டான கலவரம் சொல்லமுடியாது. ஆயினும் மிக்க சாமர்த்தியத்தோடு யாவற்றையும் மறைத்துக்கொண்டு அரியநாயகியை நோக்கி,

" உன்னை யிங்குவரும்படி யார் கூறியது ? இதை யென்னிடம் காட்டும்படி யார் கூறியது ?" என்றாள்.

அரியநாயகி.—எப்போதும் எனக்கு அருமையான சினேகியாகிய ஒருத்தியே.

இராணி.—அவள் உனக்கு என்ன கூறினாள் ?

அரிய.—இதைத் தங்களிடம்ளித்து எனக்கு வேண்டிய வரங்களைக் கேட்கும்படி கூறினாள்.

இராணி.—" இவ்வளவுதானா கூறினாள். என்னை ஏமாற்ற நினைக்காதே "

அரிய.—" நான் ஒருக்காலும் தங்களையேமாற்ற நினைக்கமாட்டேன். அவள் அவ்வளவே கூறினாள். தாங்கள் பன்னிரண்டு வருடங்களுக்குமுன் என்னைக் கண்டபோது " உனக்கு எப்போதேனும் ஒரு ஆபத்தாவது கஷ்டமாவது நேரிட்டால் உன் அரசியாகவேனும் சிநேகியாகவேனும் என்னை நம்பி என்னிடத்தில் வந்தால் நான் உனக்கு அவசியம் உதவிசெய்வேன்" என்று தாங்கள் மிக்க அன்போடு கூறியதை யான் மறக்கவில்லை. இப்போது அந்த சந்தர்ப்பம் நேர்ந்தது. ஆகையால் தங்களிடம் வந்தேன். தங்கள்

பாதங்களில் அடைக்கலம் புகுந்தேன்" என்று கூறிக்கொண்டே இராணியின் பாதங்களில் வீழ்ந்து சாஷ்டாங்கமாய்ப் பணிந்தாள்.

இராணி.—"எழுந்திரு எழுந்திரு! நீ அந்தத் துரோகியாகிய கண்ணபிரானுக்காக மன்னிப்பு கேட்க வந்ததாயின் அது வீணான காரியமாகவே முடியும்" என்றாள்.

அரிய.—"ஓ கருணைபொருந்திய இராணியே! தங்கள் வாக்கால் அப்படிக்கூற வேண்டாம். அந்த வாலிபன் அத்தகைய குற்றத்தை யொருபோதும் செய்திருக்கமாட்டான்" என்றாள்.

இராணி.—"எப்படிப்பட்டவர்களும் என்வார்த்தைக்கு மறுவார்த்தை கூறத் துணியமாட்டார்கள். ஆயினும் பரவாயில்லை. காரியம் மிஞ்சிவிட்டது. கண்ணபிரான் கைதுசெய்யப்பட்ட சங்கதியைக் கூறவந்த ஆளிடமே சட்டப்படி நடத்தும்படி பதில்கூறி யனுப்பிவிட்டேன். ஆகையால் இனி அதைப்பற்றி பேசுவதில் பயனில்லை" என்றாள்.

இதைக்கேட்ட அரியநாயகி வியாகுலத்தோடு "ஆ! இந்தப்பதக்கத்தில் உண்மையாகவே மகிமையிருக்கும்பக்ஷத்தில் எப்படியும் நமது காரியம் ஜயிக்கும் எல்லாம் போகப்போகப் பார்ப்போம்; எதற்கும் ஆண்டவன் ஒருவர் இருக்கிறார்" என்று தனக்குத்தானே சிந்தித்துக்கொண்டிருக்கையில், இராணி அவளை நோக்கி "அரியநாயகி! உனக்காக ஒரு வேண்டுகோளும் இல்லையா? நான் அளிக்கத்தக்கதாய் உன் சொந்த நன்மைக்கு ஏதேனும் கேட்பதற்கில்லையா. நான் கொடுத்த வாக்குத்தத்தத்தை மறக்கவில்லை" என்றாள்.

அதன்மேல் அரியநாயகி "அப்படியாயின் திரவியசிங்கம் பிரபுவையும் அவர் சகோதரர்களையும் காப்பாற்றும்" என்றாள்.

அம்மொழிகளைக் கேட்டதே இராணி திடுக்கிட்டலறினாள். அவள் முகத்தில் திகிலும் கலவரமும் தோன்றின. தன்னால் கூடியமட்டும் ஒருவிதமாய்ச் சமாளித்துக்கொண்டு,

"ஆகா! என்ன! என்ன! திரவியசிங்கம் பிரபுவா! அவரைப்பற்றி யுனக்கென்ன தெரியும்? அவரைக் காப்பாற்றவேண்டு மென்கிற கவலை யுனக்கெப்படி யுண்டாயிற்று? கூறு! கூறு சீக்கிரம்" என்று மிக்க துடிதுடிப்பாய்க் கேட்டாள்.

அரியநாயகிக்குப் பின்னும் கலவரம் அதிகமாய் விட்டது "ஐயோ கடவுளே! என்வாயில்வரும் பெயர்களெல்லாம் தங்களுக்கு வெறுப்பையேயளிக்கத் தக்கனவாக விருக்கவேண்டுமா" என்று கூறிவிட்டு இராணியை நோக்கி,

"ஆம் திரவியசிங்கம் பிரபுதான். அவர் எங்கள் வீட்டுத்தோட்டத்தில் தானே கைது செய்யப்பட்டார்" என்றாள்.

இதைக்கேட்டதே இராணியின் ஆச்சரியமும் கலவரமும் பின்னுமதிகமாய் விட்டன. "என்ன, என்ன! திரவியசிங்கம் பிரபு கைது செய்யப்பட்டாரா?" என்றாள்.

அரியநாயகி "நேற்று அங்கு கைதுசெய்யப்பட்டு கோட்டைக்குக்கொண்டு போகப்பட்டார்" என்றாள்.

இராணி "ஆஹா, அப்படியா எனக்குச் சங்கதிதெரியாதே! அகப்பட்டவன் பெயர் இன்னதென்று எனக்கவர்கள் இன்னும் அறிவிக்கவே யில்லையே. ஆ! அந்தத்தங்கம்மாள் பதக்கத்தை யுன்னிடமளித்தபோது ஒன்றுமே கூறவில்லையா. என்ன, ஏமாற்ற முயலாதே, பத்திரம் பத்திரம். உண்மையைக் கூறு" என்றாள்.

அரியநாயகி.—"உண்மையில் அவள் எனக்கு அதிகமாய் ஒன்றும் கூறவேயில்லை" என்றாள்.

இராணியின் மனதில் அதற்குள் ஏதோ யோசனைதோன்ற அவள் முகம் கறுத்து மிக்க கலவரமும் துயரமும் திகிலுமடைந்து எழுந்து அரியநாயகியின் தாளைக்கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு,

"அரியநாயகி! அவன் ஏன் அங்குவந்தான். என்ன காரியமாய் வந்தான். சீக்கிரம் உண்மையைக்கூறு. உன்னைக்காணவா வந்தான்?" என்று கேட்டாள். அரியநாயகி மிக்க கலவரமடைந்தாள். என்ன சொன்னால் எப்படி முடியுமோவென்று அவளுக்கு மிக்க திகிலும் மனக்குழப்பமு மாய்விட்டது. அதனால் அவள் இராணியை நோக்கி,

"மகாராணியே! உன்னை மிகவும் வேண்டிக்கொள்கிறேன். என்னையொன்றும் இப்போது கேட்காதே. அந்தத் திரவியசிங்கம் பிரபுவைக் காப்பாற்றுவதாய் வாக்களித்தால் அதன் பின்பு யாவும் கூறுகிறேன்" என்றாள்.

அதன்மேல் இராணி ஒன்றும் தோன்றாது எழுந்து சற்றுநேரம் அறையில் அப்படியும் இப்படியும் உலவினாள். பிறகு சட்டென்று நின்று அரியநாயகியை நோக்கி,

"திரவியசிங்கம் பிரபுவையும் அவர் சகோதரர்களையும் காப்பாற்ற வேண்டுமென்று உனக்கு என்ன அக்கரை வந்தது?" என்றாள்.

அரியநாயகி என்ன கூறுவதென்று சிந்தித்தாள். ஒன்றும் தோன்றவில்லை. திரவியசிங்கம் பிரபுவின் விஷயங்களைப்பற்றி இராணியிடம் எப்படி கூறுவது. கூறினால் கடைசியில் என்ன விதமாய் முடியுமோ என்று தனக்குள்ளாகவே சிந்திக்கலானாள்.

இராணி.—மிக்க குழப்பத்தோடு ஏன் மௌனமாயிருக்கிறாய். என்ன உன் அர்த்தம்? திரவியசிங்கம் பிரபு இரகசியமாய் அங்கு சதியாலோசனை செய்ய வந்தாரோ?

அரிய.—கடவுளறிய அப்படி யொன்றுமே நடக்கவில்லை. அவர் அங்கு வந்ததே செல்வராயருக்கும் அவர் சகோதரிக்கும் தெரியாது. முடிவில்தான் தெரியும்.

இராணி.—"ஓகோ, அப்படியானால் உன்னிடம் பேசவந்தாரோ? நீ யவர்மேல் காதல் கொண்டிருக்கிறாயோ? உண்மையைக்கூறு, சீக்கிரம் சீக்கிரம்" என்று மிக்க ஆத்திரத்தோடு கேட்டாள்.

இதைக்கேட்ட கன்னிகை ஒரு பக்கம் நாணமும் ஒருபக்கம் கோபமும் கொண்டவளானாள். உண்மையைக் கூறலாமென்றாலோ கமலாம்பாள் கண்ணபிரான் இவர்களுடைய இரகசியங்களனைத்தும் வெளியிட வேண்டியதாய் நேரிடும். ஆகையால் "இராணி இச்சமயம் எப்படியேனும் எண்ணிக்கொள்ளட்டும். நாம் ஒரு விபரமும் கூறாது மௌனம் சாதிப்பதேநலம். இதனால் நமக்கு என்ன துன்பம் வந்தாலும் வரட்டும். நம்மை மகள்போல் ஆதரித்த செல்வராயருக்காவது அவரைச் சேர்ந்தவர்களுக்காவது ஒருதுன்பமும் வரலாகாது" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள்.

இராணியோ அரியநாயகி மௌனமாயிருந்ததாலேயே தான் கருதியது உண்மையென்று நம்பிக்கொண்டு,

"ஆ தெரிகிறது தெரிகிறது. நீ யப்பிரபுவை தற்செயலாய் சந்தித்தாய். அதன்மேல் ஒருவருக்கொருவர் காதல் கொண்டீர். ஹா ஹா! உன் முகத்தாலும் உன் மௌனத்தாலுமே உண்மையென்று விளங்கிவிட்டது" என்றாள்.

தான் அப்பிரபுவின் மேல் காதல்கொண்டதாய் நினைக்கும் தவறான எண்ணத்தால் இராணிக்கு என்ன காரணத்தாலோ அதிக கோபமும் கலவரமு முண்டாகின்றனவென்று அரியநாயகிக்குப் புலப்பட்டது. அவள் உடனே அரசியை நோக்கி,

"மகாராணியே! திரவியசிங்கம் பிரபுவை விடுதலைசெய்து விடுங்கள். நான் என் உயிருள்ளமட்டும் இனியவரைப் பார்க்கிறதேயில்லை" என்றாள்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட இராணி அரியநாயகியின் முகத்தைச் சற்று நேரம் உற்றுப்பார்த்துவிட்டு,

"அரியநாயகி! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது. நீ யிங்கேயிரு. நான் மறுபடி திரும்பி வருகிறேன். உன்னை மறந்துவிடுவேனென்று நினைக்காதே" என்று கூறி, அறையைவிட்டுச் சென்றாள்.

அரியநாயகி இன்னது நடக்கப்போகிறதென்றும் தான் வந்த காரியம் எப்படி முடியுமென்றும் அறியாதவளாய் மிக்க கலவரத்திலிருந்தாள். இராணி இன்னொரு அறைக்குச்சென்று ஓர் ஆளைவிட்டு அரண்மனைக் காவல்சேனையின் தலைவனாகிய காப்டென் தினகரன் என்பவனை வரவழைத்து, "கோட்டைச் சிறைச்சாலையிலிருந்து ஏதாவது சமாசாரம் வந்ததா? கற்கோட்டையின் தோட்டத்திலிருந்து சிறைசெய்துகொண்டு வரப்பட்ட ஆள் யாரென்று தெரிய வந்ததா?" என்று வினவினாள்.

காப்டென் தினகரன்.—"கோட்டை கவர்னர் இன்னும் அதைப்பற்றி தெரிவிக்கவில்லை. லெப்டினென்ட் கங்காஸிங் அதைப்பற்றி அறிந்துகொண்டு வரப் போயிருக்கிறான்" என்றான்.

இராணி புன்னகையோடு "ஒருவேளை நீ அந்த ஆள் உன் சுற்றத்தானென்று எண்ணி அதை மறக்க வுத்தேசித்திருக்கிறாயோ?" என்றாள்.

காப்டென் தினகரன்.—மகாராணி யவர்கள் என் விஷயத்தில் அவ்வாறு கருதலாகாது. திரவியசிங்கம் பிரபு என் சுற்றத்தார் தான். அவர் துன்பமடையாதிருந்தால் நான் சந்தோஷமடைவேன் என்பது உண்மையே. ஆயினும் அவருக்கேனும் இன்னும் யாருக்கேனும் நான் எனக்குரிய கடமையினின்றும் தவறேன். ஆயினும் இப்போது அகப்பட்டிருப்பது அவராயிராதென்றே நான் பூரணமாய் நம்புகிறேன்.

இராணி.—என்ன காரணத்தால் அப்படி நம்புகிறாய்?

காப்டென் தினகரன்.—"அவர் அவசரப்பட்டு முட்டாள் தனமாய் இராஜதானி நகரத்திற்கு வந்து ஆபத்தில் சிக்கிக் கொள்ளமாட்டார் என்பதே என் நம்பிக்கை" என்றான்.

இராணி "உன் விடையால் நான் பூரண திருப்தி யடைகிறேன். இப்போதுனக்கு ஒரு நுட்பமான பணிவிடை யிடுகிறேன். அதாவது என் அறையில் அரியநாயகி வந்திருக்கிறாள்; நீ அங்கு சென்று அவளிடம் சம்பாஷித்துக்கொண்டிருந்தால், நான் கங்காஸிங் என்ன சமாசாரம்கொண்டு வருகிறானென்பதை யறிந்துகொண்டு வருகிறேன். நீ அவளிடம் அவள் என்ன சமாசாரத்திற்காக வத்தாளென்பதைப் பற்றி பேசவேண்டாம். அதைப்பற்றி யென்ன செய்வதென்று என் மனதிலேயே யின்னும் சரியாய்ப் புலப்படவில்லை. அவளும் மிக்க மனக்குழப்ப மடைந்திருக்கிறாள். அக்குழப்பம் நீங்கும் விதமாய் நீ அவளிடம் சந்தோஷமான வார்த்தைகளால் சம்பாஷிக்க வேண்டும். இத்தகைய சமயங்களில் இனிய வார்த்தைகளால் மனத்துயரைப் போக்கி உற்சாகத்தை யுண்டாக்குவதில் நீ சமர்த்தன் எனபது என் அபிப்பிராயம்" என்றாள்.

காப்டென் தினகரன் அவ்வாறே சம்மதித்துத் துரிதமாய் இராணியினறையை நோக்கிச் செல்லும்போது, இடையில் ஒரு தாழ்வாரத்தில் இராணியின் தோழிகளில் ஒருத்தியாகிய கோகிலாம்பாளைச் சந்தித்தான். அவள் காப்டென் தினகரனைக் கண்டதும்,

"ஆ! மாலைப்போது இராணி உலவுவதற்காக எங்கு செல்வதாய் ஏற்பாடு?" என்றாள்

தினகரன்.—"இன்னும் அதைப்பற்றி ஒரு ஏற்பாடும் ஆகவில்லை" என்று கூறிவிட்டு, மன்னிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டே நடக்க அடியெடுத்து வைத்தான்.

கோகிலம்.—"ஆகா! என்ன? சற்று நின்று பேசக்கூட அவகாசமில்லாத அவ்வளவு அவசரகாரியம்?" என்று சற்றுவிசனத்தோடு வினவினாள்.

தினகரன்.—"எனக்கு ஒரு விநாடி நிற்க அவகாசமில்லை. நான் இராணியின் அறைக்குச் செல்லவேண்டும்" என்றான்.

கோகிலம்.—"ஓகோ! இராணியினிடம் சற்று முன்புவந்து பேசிக்கொண்டிருந்த அச்சிமாட்டி போய்விட்டிருப்பாளென்று எண்ணி நான் இப்போதுதான் அங்கு சென்றேன். அம்மாது இன்னும் அங்கேயே யிருக்கிறாளே, நீ எப்படி அங்கு செல்வாய்?" என்றான்.

தினகரன்.—"ஆம் ஆம். அம்மாதிற்காகத்தான் நான் அங்கு செல்கிறேன். இராணி யெனக்கு ஒரு நுட்பமான கட்டளையிட்டிருக்கிறாள்" என்றான்.

கோகிலம் இதைக்கேட்டு வியப்புற்று என்ன வேலை யென்றாள். தினகரன் "அங்கு வந்திருக்கும் அரியநாயகி யென்ற மாது மனக் குழப்பத்தோடிருக்கிறாளாம். அவள் மனக்குழப்பம் நீங்கும்படிக்கும், காலம் செல்வது தெரியாமல் அவள் உற்சாகமடையும் வண்ணமாகவும் அவளிடம் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்படி இராணி கட்டளையிட்டாள்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே கோகிலத்தின் முகம் கறுத்து வாட்டமடைந்தது. அவள் கண்களில் ஒருவித பிரகாசமுண்டாயிற்று. அவள் தினகரனையுற்றுநோக்கி "அப்படியா ஆ! அந்த அரியநாயகி மிக்க வனப்புடையவள். அவள் அழகைக்கண்டு நான் உண்மையில் வியப்புற்றேன்" என்றாள். தினகரன் "சரி. அப்படியானால் என் காலமும் சந்தோஷமாகவே கழியும் என்பதற்றடையில்லை" என்று கூறிவிட்டுத் துரிதமாய்ச் சென்றான்.

கோகிலம் இரண்டு மூன்று நிமிடங்கள் அங்கேயே மரம்போல்நின்றாள். அவள் மனதில் பொறாமையென்னும் தீ கொழுந்துவிட் டெரிந்தது. கடைசியில் அவள் வாய்விட்டு, "ஓகோ! இப்படியா சங்கதி! இராணியின் தந்திரத்தை நன்றாய் அறிந்து கொண்டேன். பார்த்துக் கொள்வோம்" என்று கூறிவிட்டுத் திரும்பித் தன் அறைக்குச் சென்றாள்.

காப்டென் தினகரன் இராணியை விட்டுச் சென்ற அரைமணி நேரத்திற்குள், கோட்டைக்கு அனுப்பப்பட்டிருந்த லெப்டினென்ட் கங்காஸிங் திரும்பி வந்து இராணியைக் கண்டான்.

இராணி.—என்ன சங்கதி கொண்டுவந்தாய்?

கங்காஸிங்.—"கோட்டை கவர்னர் தங்களுக்கு அனுப்பவேண்டிய முழு விவரங்களு மடங்கிய அறிக்கையின்னும் எழுதி முடியவில்லை. ஆகையால் முக்கியமான சங்கதியை மட்டும் அறிந்துகொண்டு வந்தேன். அதாவது, சற்று நேரத்திற்கு முன்புதான் நேற்று கைது செய்யப்பட்டவர் தான் தேவபுரம் ஜாகீர்தாராகிய திரவியசிங்கம் பிரபு என்று ஒப்புக்கொண்டார்" என்றான்.

(தொடரும்.)

ஆணி தப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

பிங்களவரு தைமீ சாலிவாகன 1839, கலியுகாதி 5018,

பசலி 1326-27, கொல்லம் 1092-93,

இங்கிலீஷ் 1918-ம்வரு ஜனவரிமீ—பிப்ரவரிமீ

ஜனவரிமீ	தைமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
14	1	தி	துதி-45-50	திரு-37-52	அ 38 சித்	பொங்கல்பண்டிகை
15	2	செ	திரி-40-21	அவி-34-11	சித் 34 மா	கோ பூஜை
16	3	புத	சது-34-39	சதை-28-57	சித் 29 அ	தனியநாள்
17	4	வி	பஞ்-28-51	பூரட்-26-6	சித்த 60	8-க்குள் மழை
18	5	வெ	சஷ்-23-11	உத்-22-6	சி 22 அமி	சஷ்டி விரதம்
19	6	ச	சப்-17-43	ரேவ-18-24	மா 18 சி	கன்று காலிகள் வாங்க
20	7	ஞா	அஷ்-12-46	அசு-15-8	சித்த 60	சமஸ்தாபரணம் தரிக்க
21	8	தி	நவ-8-34	பர-13-2	சித் 13 ம	கிருத்திகை விரதம்
22	9	செ	தச-5-11	*கார்-10-54	சித் 11 அ	கன்றுகாலிகள் வாங்க
23	10	புத	ஏகா-2-44	ரோக-10-12	சித்த 60	விவாகம்
24	11	வி	து-1-30	மிரு-10-40	மரண 60	கரிநாள்
25	12	வெ	திர-1-38	திரு-12-24	சித்த 60	குளையில் நெருப்பிட
26	13	சனி	சது-2-38	புன-15-18	சித்த 60	வியாபாரஞ்செய்ய
27	14	ஞா	○பௌ 5-35	பூச-18-29	சித்த 60	சீமந்தம்
28	15	தி	பிர-9-20	ஆயி-24-38	சித் 25 மா	தனியநாள்
29	16	செ	துதி-13-55	மக-30-24	சித்த 60	கிருஷிசெய்ய
30	17	புத	திரி-18-44	பூர-36-35	சித்த 60	கரிநாள்
31	18	வி	சது-25-18	உத்தி-43-19	சித் 13 மா	4-க்குள் மழை
1	19	வெ	பஞ்-29-23	அஸ்-49-21	அ 49 சி	விவாக உபனயனம்
2	20	ச	சஷ்-33-56	சித்-54-51	மா 55 அ	
3	21	ஞா	சப்-37-23	சுவா-59-17	சித் 59 மா	வித்தியாப்பியாசம்
4	22	தி	அஷ்-39-46	விசா-60-0	மரண 60	
5	23	செ	நவ-40-57	விசா-2-37	மா 3 சித்	தூண்கட
6	24	புத	தச-40-47	அனு-4-41	சித்த 60	புதுபாத்திரம் புழங்க
7	25	வி	ஏகா-39-1	கேட்-5-29	சித்த 60	புது தானியம் புசிக்க
8	26	வெ	துவா-37-43	மூல-4-22	அமி 4 சி	வித்தியாப்பியாசம்
9	27	ச	திர-33-14	பூர-3-41	சித்த 60	உதயம் கிருஷிசெய்ய
10	28	ஞா	சது-28-51	உத்-1-22	அமி 60	கந்தவனம் வைக்க
				திரு-56-56		
11	29	தி	•அமா 24-37	அவி-55-21	சித்த 60	அமாவாசை விரதம்

(1918ஞு பிப்ரவரிமீ)

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | பிங்களவரு மாசிமீ 1உ 1918ம்வரு பிப்ரவரிமீ 12உ | பகுதி 8

கடவுள் வணக்கம்.

ஐவ ரென்றபுல வேடர் கொட்டம
தடங்க மர்க்கடவன் முட்டியாய்
அடவி நின்றுமலை யருகி னின்றுசரு
காதி தின்றுபனி வெயிலினால்
மெய்வ ருந்துதவ மில்லை நற்சரியை
கிரியை யோகமெனு மூன்றதாய்
மேவு கின்றசவு பாக நன்னெறி
விரும்ப வில்லையுல கத்திலே
பொய் முடங்குதொழில் யாத தற்குநல
சார தித்தொழி னடத்திடும்
புத்தி யூகமறி வற்ற மூகமிவை
பொருளெ னக்கருது மருளன்யான்
தெய்வ நல்லருள் படைத்த வன்பரொடு
சேர வுங்கருணை கூர்வையோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

இன்பக் கடலிற் புகுந்திடுவா னிரவும் பகலுந் தோற்றாமல்
அன்பிற் கரைந்து கரைந்துருகி யண்ணா வரசே யெனக்கூவிப்
பின்புற் றழுசே யெனவிழிநீர் பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்
துன்பக் கடல்விட் டகல்வேனோ சொரூபா னந்தச் சுடர்க்கொழுந்தே.

தானே யகண்டா காரமயந் தன்னி லெழுந்து பொது நடஞ்செய்
வானே மாயப் பிறப்பறுப்பான் வந்துன் னடிக்கே கரங்கூப்பித்
தேனே யென்னைப் பருகவல்ல தெள்ளா ரமுதே சிவலோகக்
கோனே யெனுஞ்சொல் நினதுசெவி கொள்ளா தென்னோ கூறாயே.

ஆனந்தபோதினி

பிங்களவரு மாசி மீ 1உ

மதக்கல்வி.

இப்பூவுலகின்கண் புண்ணியபூமியாகிய பரதகண்டமே மற்றெல்லா நாடுகளினும் நாகரீகம், செல்வம், ஞானம் முதலிய எவற்றினும் அனாதிகாலந்தொடங்கி சிறப்புற்று விளங்கியிருந்ததென்பது உலகமறிந்த விஷயமே. ஆனால் காலசக்கிரத்தின் மாறுதலால் இடையில் மேற்கண்ட சீரும் சிறப்பும் மயங்கிவிட்டன. ஆயினும் இப்போது நமது நாட்டார் கண்விழித்துக்கொண்டு நமது தாய்நாடு பூர்வீக நிலைக்கு வரும் வண்ணம் முயற்சி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் நமது முயற்சிகளனைத்தும் பெரும்பாலும் எழுதுவதிலும் வாய்ப்பேச்சிலும் மட்டுமாயிருக்கின்றனவேயன்றி அனுபவமாய்ச் சிறிது பயனையேனும் அளிக்கும் முயற்சியைச் செய்கிறோமில்லை. "சீக்கிரத்தில் ஆறு பெருக்கெடுத்து வரும்போலிருக்கிறது. ஆகையால் உடனே அணைபோடாவிட்டால் ஊருக்கு ஆபத்துவரும்" என்று அறிந்ததே, யாவருங் கூட்டமாய்க் கூடிக்கொண்டு பெரிய கருங்கற்களால் கடைகால்போட்டு, 50-அடி அகலத்தில், முன்னூறடி நீளத்தில், 15-அடி உயரத்தில், இன்னவிதமாய் கரைபோடவேண்டுமென்றும், இன்ன மனிதனை யதற்கு மேஸ்திரியாக அமர்த்தவேண்டுமென்று பேசிக்கொள்வதும், இன்னொரு கூட்டத்தார் வேறிடத்தில் கூட்டங்கூடி அந்தக் கூட்டத்தார் செய்த ஏற்பாடு சற்றும் சரியானதல்ல, நாம் இன்னின்னவிதமாய்க் கரைபோடவேண்டுமென்று தீர்மானித்து, ஆரம்பத்திலேயே இரண்டு கட்சியாய்ப் பிறிந்து, ஒருகட்சியை யொருகட்சி தூஷித்துக்கொண்டிருப்பதுமாக விருக்கின்றதே யன்றி, எவனும் ஒருகூடை மண்ணையாவது கொண்டுபோய் கரையில் கொட்டுவது மட்டும் பூச்சியமே. கடைசியில் வெள்ளம் கரையை யுடைத்துக்கொண்டுவரும்போது, இரண்டு கட்சியாரையும் புத்திர மித்திர களத்திராதியரோடு, கூண்டோடு அடித்துக்கொண்டு போய்விடும். இதுவே இவர்கள் அறியாமையின் பலன்.

நம்மவர் இப்போது செய்யும் முயற்சிகள் பெரும்பாலும் இவ்வாறேயிருக்கிறது. ஓ நமது சகோதர சகோதரிகளே! நமக்கு நன்மையை யளிக்கும் ஒருபோதனை அல்லது எச்சரிக்கையைப் பற்றி நாம் வாசிப்பதோடும் பேசுவதோடுமட்டும் இருந்துவிட்டால் ஒருபோதும் நாம் பலனடையமாட்டோம். மேல்நாட்டார் ஒரு காரியத்தைப்பற்றிப் பேசி, ஒரு தீர்மானத்தைச் செய்வார்களேயானால், அந்தவேலைமட்டிலாவது பரஸ்பரம் ஒருவர்க்கொருவர்க்குள்ள மனஸ்தாபம், விரோதம் முதலிய யாவற்றையும் ஒருபக்கமாய்க் கட்டிவைத்துவிட்டு, பொதுகலந்தரும் அக்காரியத்தை அனுபவமாய்ச் செய்து முடித்தே தீர்வார்கள். நாமோ நாகரீக சீர்திருத்தமடைகிறோம் என்று பறை யறைந்துகொண்டு, நமக்குத் தகாதவையும் தீங்கிழைக்கத் தக்கவைகளுமான விஷயங்களில் மட்டும் அவர்களைப் பின்தொடர்ந்து, மேலுக்கு அவர்களைப்போல் வேடம் போட்டுக்கொள்ளத் தொடங்குகிறோம். அதிலும் பூரணமடைய நம்மால் கூடவில்லை. ஏனெனில் நமது கறுப்புத்தோலை வெள்ளையாக்க நமக்கு மருந்தகப்படவில்லை. அதையும் அவர்களே நமது நாட்டிலுள்ள மூலிகைகளையேகொண்டு செய்துக்கொடுத்தால், அதுகாலணாகூட மதிப்புள்ளதா யிராவிடினும், ஒரு ரூபாயேனும் கொடுத்து வாங்கிக்கொள்வோம். ஆனால் அவர்களிடத்துள்ளவைகளில், நமக்குப் பயன்றருவனவாகிய செய்கைகளிலேனும் குணங்களிலேனும் அவர்களைப் பின்பற்ற முயலுகிறோமில்லை.

அந்தோ! இவ்வாறாயின் எக்காலத்தில் நமது நாடு பூர்வீக நிலைமையை யடையப் போகிறது என்பதை யவரவர்களே சிந்தித்துப் பார்க்கலாம்.

ஆகையால் நம் சகோதர சகோதரிகளே! இப்போது கூறப்புகும் விஷயத்தை வாசிப்பதோடு விட்டுவிடாமல் அனுபவத்தில் அதனால் பயனடையும் வண்ணம் முயற்சி எடுத்துக்கொள்ளும்படி உங்களைப் பிரார்த்திக்கிறேன். நாம் பின்னுக்கு க்ஷேமமடையவேண்டியதற்காக முயற்சி செய்யவேண்டியது ஒருபக்கமிருக்க, முதலாவது நமக்குக் கெடுதியை யுண்டாக்கத்தக்கதும் உண்டாக்கிக்கொண்டிருப்பதுமான விஷயத்தைத் தடுக்க முன்னே முயற்சிசெய்யவேண்டும். அத்தகைய விஷயத்தை யீண்டு கூறுகிறோம்.

கடந்த சஞ்சிகையில் உபாத்தியாயரும் பிள்ளைகளும் நமது தாய்ப்பாஷையில் பிரத்யேக சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டும் என்ற விஷயத்தைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. அதைக் கவனித்து மறவாமல் அது விஷயத்தில் அனுபவமாய் உபாத்தி மார்கள் முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டியது நமது சந்ததி யாரின் க்ஷேமாபிவிர்த்திக்கு இன்றியமையாத சாதனமென்பதை யவர்கள் உணர்ந்திருப்பார்களென்றே பூரணமாய் நம்புகிறோம். அவர்கள் அவ்வாறு கண்ணோக்கம் வைக்கவேண்டிய விஷயம் இன்னொன்றிருக்கிறது. அதுவும் மிக்க அவசியமானதே. அதைக் கவனிக்காவிட்டால் நாம் நமது உயிரினும் சிறந்ததாய்க் கருதும் நமது மறுமைப்பயனுக்கே பெரிய இடையூறு நேரிடும். அதென்னவெனின் :—

மதக்கல்வியேயாகும். மற்ற எல்லாவித ஞானங்களைக் காட்டி லும் மதத்தைப்பற்றிய ஞானமே நமக்கு முதன்மையானது. நமது முன்னோர் தங்கள் அரிய பொக்கிஷங்களையும் காணியாக்ஷிகளையும் நாட்டையும் இழப்பதாயினும், அப்போதும் உயிரை யிழந்தாலும் மதத்தை யிழக்காத ஞானிகள். ஏனெனில் பரம்பொருளின் இலக்ஷணத்தை யுள்ளபடி பூரணமாய் வெளியிடுவதும், ஆன்ம சொரூபத்தை யுள்ளபடி யுணர்ந்து நித்தியமான மோக்ஷத்தை யடைய இன்றியமையாத ஒரேமார்க்கமான மெய்ஞ்ஞானநெறியை யங்கை நெல்லிபோல் போதிக்கத்தக்கதும் இவ்வொரு மதமே யாதலின் என்க.

அப்படி யிருந்தும் கடவுள் இலக்ஷணம் ஆன்ம இலக்ஷணம் ஞானமார்க்கம் இவை யொன்றுமே கூறப்படாத மதத்தை யனு சரிப்போர், நமது மதத்தின் உள்ளக்கருத்தைச் சற்று முணரச் சக்தியற்றவர்களாய் நமது மதத்தில் வீண்குற்றங்களைக் கற்பித்து தங்கள் மதமே உண்மையென்று கூறும்போது, சுயமத ஆராய்ச்சி யில்லாத நம்மவர் அச்சமயமேனும் சித்தப்பிரமைகொண்டு மயங்க நேர்கிறது. இதனால் பெருந்தீங்கு விளையுமென்பது நாம் கூறாமலே விளங்கும். நமது மதத்திற்கு விரோதிகளாய்த் தோன்றுபவர் நமது சிறுவர்களையும், நம்மில் கல்வியில்லாதவர்களும் சொல்ப கல்வியுடைய பாமரருமாகியவர்களையும் மயக்கிக் கெடுப்பதன் பொருட்டு நமது மதத்தில் குற்றங் கூறுவதெல்லாம், சரியை கிரியைகளைப்பற்றி போதிப்பதில் கடவுளை சகளீகரித்த மூர்த்த

மாய் உருவகப்படுத்திக் கூறியுள்ள பாகத்திலேயே. மற்றபடி யோகம் ஞானம் இவற்றைப்பற்றி யவர்கள் பேசுவதேயில்லை. ஏனெனில் அவர்கள் மதநூலில் அவற்றைப்பற்றி கூறப்படவே யில்லை. அவை யின்னவையென்று அவர்கள் அறியவுமில்லை. "ஹிந்துக்கள் பிரம்மா விஷ்ணு உருத்திரன் என்று தங்களுக்கு மூன்று கடவுளர் உண்டென்றும், அவர்களுக்கு மனைவியர் மக்கள், பந்துத்வம், சிநேகம் விரோதம் முதலிய யாவும் உண்டென்றும், அவர்கள் நம்மைப்போலவே உருவம் உடையவர்களென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால் ஹிந்துக்கள் மதத்தில் கட வுள் ஒருவரே, அவர் உருவமற்றவர் என்ற ஞானமேயில்லை....." என்று புறச்சமய சஞ்சிகை யொன்றில் கடந்தவாரம் நாம் கண் ணுற்றோம்.

மேற்கூறப்பட்ட விஷயங்கள் உண்மையில் நமது வேதத்தின் போதனைக்கு எவ்வளவு நேர்விரோதமான தென்பதும், அதைக் கூறுபவர் நமது மதத்தின் உண்மையைச் சற்றும் உணரவில்லை யென்பதும் நமக்கு அங்கை நெல்லிபோல் விளங்குகிற தென்பது வெளிப்படை. இது மத ஆராய்ச்சிசெய்து உண்மையை யறிந்து உய்யக் கருதுவோருடைய செய்கையன்றும். ஆனால் சுயநலங் கருதிச்செய்யும் ஜீவியத்தொழிலின் கடமைக்காக வேண்டித் தன் மதத்திலுள்ள குற்றத்தைப் பாராமலே, அன்னியர் மதத்தில் இல்லாத குற்றத்தையும் எடுத்துக்கூறித் தன்மதத்தைப் பரவச் செய்வோர் நடக்கையேயாகும்.

அவ்வாறாயினும், அத்தகைய விஷயங்களை, மதக்கல்வியில்லாத நமது சிறுவர்களும் ஏனையோரும் வாசித்தால், அவர்களுக்குச் சுயமதத்தில் நம்பிக்கையும் அன்பும் குறையுமன்றோ. ஆகையால் நமது மக்களுடைய ஆன்மார்த்தத்தைக் காப்பாற்றுவதை நமது முதற்கடமையான தொழிலாய் நாம் கொள்ளவேண்டும்.

மேற்கூறியவாறு அந்த விரோதி மதஸ்தர் (நமது மதத்தில் குற்றங்கூறித் தூஷிப்பதால் நமது மதத்திற்கு விரோதிகள் எனக் கூறினோம்) சரியை கிரியைகளைப்பற்றிமட்டுமே உண்மை யறியாது குற்றங்கூறி நம்மவரை யேமாற்றமுயல்வதால், நாம் நமது மக்க ளுக்கு அவைகளைப்பற்றி மட்டுமாவது தெளிவாய்க் கற்பிக்க வேண்டும். நமது துரைத்தனத்தார் அன்னியமதஸ்த ராகையால் அவர்கள் நமது மதவிஷயத்தில் பிரவேசிப்பதில்லை. ஆகையால்

பாடசாலைகளில் மதக்கல்வி போதிக்கப்படுவதில்லை. ஆயினும் நமது மக்களுக்கு மதக்கல்வி போதிக்க வசதியில்லாமலில்லை. பாடசாலைகளில் பெரும்பாலும் நம்மவர்களே உபாத்தியாயர்களாகவிருக்கிறார்கள். அவர்கள்மட்டும் இது நாம்வாங்கும் சொல்ப சம்பளத்திற்குச் செய்யவேண்டிய தொழிலல்லவே யென்பதைக் கருதாமல், நமது நாட்டின் க்ஷேமத்தைக் காப்பாற்றும் புண்ணிய கைங்கரியத்தை மேற்கொண்டு செய்யவேண்டுமென்ன வெண்ணங் கொண்டால் தடையின்றி கட்டாயம் செய்யலாகும். கடவுள் ஒருவரே யென்ற நமது வேதக்கொள்கையையும், அந்த ஒன்றே மூன்றாய் விவகரிக்கப்பட்டிருப்பதன் காரணத்தையும், அவ்வாறு வெவ்வேறு நாமரூபங்களாய் விவகரிக்கப்பட்டிருப்பதால் உண்டாகும் பல நன்மைகளைப்பற்றியும், பல வுருவங்களாய்ப் பாவிக்கப்படினும் எங்கும் நிறைந்த ஒரே கடவுளே யாவுமென்ற உயர்ந்த ஞானம் நமது வேதக்கொள்கையில் அடங்கியிருக்கிற தென்பதைப்பற்றியும் தெளிவாய்ப் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். இப்போதனை நமது சமயத்தின் உட்பிரிவுகளாகிய சைவம், வைஷ்ணவம் முதலிய எல்லா மதத்தினர்க்கும் பொதுவானதே யாதலால் எல்லாச் சிறுவர்களுக்கும் போதிக்கத்தக்கதே யாகும். பெற்றோர்களும் வீட்டில் தம்மக்களுக்கு இதைப்போதிக்கவும், இக்கல்வியை யவர்கள் பெறுகிறார்களா வென்று கவனிக்கவும் வேண்டும். இதைப்பற்றிய போதனையை ஒரு சிறு நூலாய் நமது சஞ்சிகையில் வெளியிடும் வண்ணம் முயற்சிசெய்யக் கருதியிருக்கிறோம்.

உபாத்தியாயர்களும் பெற்றோரும் மேற்கண்ட விஷயத்தை வாசிப்பதோடு விட்டுவிடாமல், அதில் சிரத்தையெடுத்துக்கொள்ள வேண்டுமாய் சச்சிதானந்தப் பரம்பொருளை முழுமனதோடும் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

ஓர் வேண்டுகோள்.

நமது ஆனந்த போதினியின் ஜனனகாலம்முதல் நமது அரிய நண்பராகிய மகா-ா-ா-ஸ்ரீ டாக்டர் எம். மாசிலாமணிமுதலியாரவர்கள் பொது நலங்கருதி வைத்தியகுறிப்பு என்னும் தலைப்பின் கீழ் பல அரியவிஷயங்களை யெழுதிவருவது நமது சஞ்சிகைகளை வாசிப்போரனைவரு மறிந்த விஷயமே. அவற்றில் யாவரும் சுலபமாய்

வைத்தியர் உதவியின்றி தாங்களே சாதாரண வியாதிகளுக்கு சிகிச்சைசெய்துக் கொள்ளக்கூடிய அனுபவமான சிகிச்சா முறைகளும், வியாதிகளின் காரணத்தை யறிந்து, அவை யணுகாவண்ணம் தடுத்துக் கொள்ளக் கூடிய மார்க்கங்களும், இன்னும் தேகசுகத்தைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய பல விஷயங்களும் உள்ளன வென்பது நாம் கூறுமலே விளங்கும்.

நேயர்களே! இப்போது நாம் கூறியதையே மறுபடி கூறுகிறோமென்று நம்மேல் வருத்தங் கொள்ளா திருக்கப் பிரார்த்திக்கிறோம். ஏனெனில் நமக்குத் தீமையை யுண்டாக்கும் குற்றம் நம்மிடத் திருப்பதால், நாம் அதை யடிக்கடி மனதிற் குறுத்தினாற்றான் அக் குற்றத்தை நாம் களைய வழியுண்டாகும். எந்தக் குற்றமெனில், நாம் நாகரீகச் சீர்திருத்த மடைகிறோமென்று பறையறைந்துகொண்டு, நமக்குப் பொருந்தாதனவும், நிலையாய் நிற்கக் கூடாதனவும், நன்மை பயவாது தீமையை யுண்டாக்கத்தக்கனவும், செல்வந்தராது வீணான செலவை யுண்டாக்கக் கூடியனவுமாகிய விஷயங்களில் மட்டுமே மேல்நாட்டாரைப் பின்பற்ற முயல்கிறோமன்றி, நமக்குப் பயன்றரக்கூடிய விஷயங்களில் அவர்களைப் பின்பற்றுகிறோ மில்லை யென்கிற குற்றமே.

டாக்டரவர்கள் கேழ்வரகின் குணத்தைப் பற்றிக் கூறிய வியாசத்தைச் சந்தாநேயர்க ளனைவரும் வாசித்தே யிருப்பீர்கள். நமது நாட்டிலுண்டாகும் தானியங்களை நாம் அவமதிப்பதும், அவற்றையே அன்னியநாட்டார் கொண்டுபோய் பக்குவம்செய்து கொண்டுவந்து விற்றால், அதை உயர்ந்த பொருளாய் மதித்து, காலணாவில் நாமே தயாரித்துக் கொள்ளக் கூடியதை நாலணா கொடுத்து வாங்கி யுபயோகிப்பதுமாகிய நமதுநடக்கை, அந்தோ! எவ்வளவு அறிவீனமானதும் அகௌரமானது மாகிய நடக்கை யென்பதை நாமே சிந்தித்துப் பார்த்தால் நன்கு விளங்கும். ஆங்கில வைத்தியங்கற்ற நமது நாட்டாரே அந்த அன்னிய நாட்டுச் சரக்கை உயர்ந்த ஆகாரமாய் மதித்து, அது வாராதிருந்தால் இந்தியாவிலுள்ள குழந்தைகளும் நோயாளிகளும் பிழைப்பதரிது என்று கூறி, அவற்றையே உபயோகிக்கும்படி தங்கள் நோயாளிகளுக்கு சிபாரிசு செய்கிறார்க ளெனின், நமது நாட்டு ஆகாரங்களின் நற்குணங்களை நமக்கு அறிவித்து அவற்றை யுபயோகிக்கும் முறையைக் கற்பித்து நமக்கு நன்மை செய்யவேண்டிய அவர்

களுக்கே—ஒன்று—இந்த உண்மை தெரியாதென்றுவது—அல்லது அன்னியநாட்டுச் சாமானைப் புகழ்ந்து அதை யுபயோகிப்பதே நலம் என்று கூறுவதுதான் நாம் சீர்திருத்த மடைந்தோமென்ற கௌரவத்திற்கு அறிகுறி யென்று நினைக்கிறார்க ளென்றுவது நாம் கருதவேண்டியதாயிருக்கிறது. அன்னியநாட்டுச் செயற்கை யாகாரங்களும் மற்றவைகளும் வருவதற்குமுன் நாம் எந்த ஆகாரங் களை நோயாளிகளுக்கும் குழந்தைகளுக்கும் உபயோகித்துவந்தோ மென்பதையும், ஆனால் இப்போதிருக்கும் அதிகச்செலவு அப்போ தில்லாததே அக்காலத்திற்கும் இக்காலத்திற்கு முள்ள முக்கிய வித்தியாச மென்பதையும், அப்போது எக்குறைவுகளாலும் நம் மவர் துன்பமடையவில்லை யென்பதையும் இவர்கள் சிந்திக்கவில்லை போலும்.

கேழ்வரகு முதலிய தானியங்கள் மட்டுமேயல்ல, பருத்தி, பட்டு, தோல், ஆமணக்கு, தேங்காய், நீலி, மூலிகைகள், முதலிய நம் நாட்டி லுற்பத்தியாகும் எண்ணிறந்த பொருள்கள் மேல் நாடுகளுக்குச் சொல்ப விலைக்குக் கொண்டுபோகப்பட்டு, வேறுரு வங்களாக மாறி, மறுபடி யிங்குவந்து எண்மடங்கு அதிகமான விலைக்கு நமக்கே விற்கப் படுகின்றன. நமது நடக்கை யிவ்வா றிருந்தால், நாம் என்னதான் பி. ஏ. யம். ஏ. முதலிய பட்டங்களைப் பெற்றுவிட்டாலும், அன்னிய நாட்டார்? நம்மை மூடர்கள் என்று மதிக்காமல் வேறென்னவென்று மதிப்பார்கள்? இப்போது நாம் எல்லா வஸ்துக்களையும் பற்றி இங்கு விவகரிக்கவில்லை. ஏனெனில் பஞ்சு முதலிய வஸ்துக்களிலிருந்து அன்னிய நாட்டார் உற்பத்தி செய்யும் சரக்குகளை நாமே யுற்பத்தி செய்து கொள்ளலாமென் றால், அதற்குப்பல இடையூறுகளுண்டு. முதலாவது பெரிய இயந் திரங்கள் முதலியவற்றிற்காக பெருந்தொகை முதல்வைக்கவேண் டும். நம்மவர்க்கோ முதலாவது ஒற்றுமையில்லை. மேல்நாட்டா ரைப்போல் அனேகர் ஒன்று சேர்ந்து இலட்சக் கணக்கான பெருந்தொகையை முதல்வைத்து ஒரு பெரிய தொழிற்சாலையை வைத்து நடத்தமாட்டார்கள். வெறும் படிப்பைப் படித்து சேவகாவிர்த்தி செய்வதே பெரிய கௌரவமென்று மதிப்பார் களேயன்றி, செல்வத்தை யடையும் வழியில் பிரவேசிக்க மாட் டார்கள். பொது நலமாகிய ஒன்றைச் செய்யப் பத்துபேர் கூட் டங் கூடினால், அதில் ஒவ்வொருவரும் சுய கௌரவத்தை நாடி

நான் பெரியவன் நீ பெரியவன் என்று சச்சரவு உண்டாக்கிக் கொண்டு, அன்றே இரண்டு கட்சியாய்ப் பிரிந்து, ஒருவரையொரு வர் தூஷிக்கத் தொடங்கி எடுத்த காரியத்தை நட்டாற்றில் விட்டு விடுவார்கள். இவைகளிலெல்லாம் மேல்நாட்டாரைப்போல் நடந்து கொண்டால்தான் நாம் சீர்திருத்தமடைந்து நமது நாட்டை முன் னுக்குக் கொண்டுவருவோம் என்று நம்மவர் கருதவில்லை. ஆசா நத்தைவிட்டு அநாசாரமாய் மேல்நாட்டாரைப்போல் மேல்வேடந் தரித்துக்கொண்டு சிகையைவெட்டி, காற்சட்டை பூட்ஸ் மாட்டிக் கொண்டு, ஒரு அகன்ற தொப்பியும், மீசை முளைக்குமுன் மூக்கின் மேல் கண்ணாடியும், வாயில் ஒரு ஸிகரெட்டுமாய், நமது முன் னோர் ஆசாரத்திற்கு மாறாய் நடப்பதேதான் சீர்திருத்த மென் றும், அப்போதுதான் மேல்நாட்டார் நம்மைச் சமமாய்க் கருது வார்களென்றும் இவர்கள் எண்ணி யிருக்கிறார்கள். அந்தோ! இது முற்றும் நேர்மாறான எண்ண மென்பதை நம்மவர் எப்போ துணர்வார்களோ அறியோம். மனோவேதனையைத் தரும் இவ் விஷயத்தை விவரித்துக் கூறப்புகின் பாரதமாய் முடியும்.

இனி நாம் மேற்கூறியபடி பெரிய விஷயங்களைச் செய்யத் தான் பல இடையூறுகளிருக்கின்றன. நமது நாட்டிலுண்டாகும் தானியங்களின் நற்குணத்தை யினியேனு முணர்ந்து, அவற்றைச் சரியாய்ப் பாகப்படுத்தி உணவுப் பொருள்களாய் உபயோகப் படுத்திக்கொள்ள பணச்செலவுமில்லை, கூட்டமும் வேண்டியதில்லை, அவரவர்கள் வீட்டிலேயே நம்மாதரைக் கொண்டே செய்து கொண்டு, அதிக விலை கொடுத்து அன்னியநாட்டாகாரங்களை வாங்குவதை யொழிக்கலாகாதா. இப்போது நமது டாக்டரவர் கள் சிரத்தையோடு நமக்குச் செய்துவரும் பேருதவிக்கு நாம் என் றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோ மல்லவா? ஆம்.

ஆனால் அப்படி வாசாஞானமாய்க் கூறிவிட்டால் என்ன பயன்? இவ்வுலகில் பிரதிபலனைக் கருதாமல் எவரும் ஒன்றைச் செய்வதில்லை. ஆகையால் நமது டாக்டரவர்களும் ஒருபயனைக் கருதியேதான் செய்கிறார் என்பது உண்மை. அந்தப் பலனை நாம் அளிக்காவிட்டால் அவர் செய்யும் உதவிக்கு நாம் கைம்மாறு செய்தவர்களாக மாட்டோம். நாம் செய்யவேண்டிய கைம்மாறு எதுவெனின், அது பணங்காசல்ல, உயர்தரப்பட்டங்கள், மெடல் கள் அல்ல. அவ்வளவு சிரத்தையோடு நமது நன்மைக்காக அவர் கூறும் போதனைகளை யலட்சியம் செய்யாது, அதனைப் பயனற்ற தாக்கிவிடாது, அதன்படி நடந்து நாம் பயனடைய வேண்டுவதே யாகும். அதுவே அவர் நம்மிடம் எதிர்பார்க்கும் கைம்மாறாகும்.

ஆகையால் நமது சகோதர சகோதரிகளே! டாக்டர் கூறும் தானியங்களைப்பற்றிய வியாசங்களை வாசிப்பதோடு விட்டுவிடாது

அதன்படி செய்து பயனடையுங்கள். இதுகாறுங் அலட்சியம் செய்த கேழ்வரகு முதலியவற்றை யவர் கூறுகிறபடி செய்து உபயோகித்தால், தேக சுகமடைவதோடு செலவும் குறையுமென்ற அனுகூலத்தைக் கருதுங்கள். இனியும் கேழ்வரகை யுண்பது அகௌரவமென்று நினைத்தல் மதியீனமென்று கருதுங்கள். ஆண்டவன் நமது அகிரத்தையை யொழித்து ஊக்கத்தையும் நேர்வழியில் செல்லும் அறிவையும் தந்து, நம் நாடு முன்நிலைமைக்கு வருவண்ணம் கிருபாநோக்கம் பாலிப்பானாக.

ஆத்மா அழிவற்றது.

ப்ரம்மமே ஜகத்தாய் ஆரோபித்திருக்கிறது. இஜ்ஜெகமானது மாயா அம்சத்தால் ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ளது. இதை எத்தகைய ரூபமுடையது என்றும், எத்தனைவகைத் தோற்றங்களுடையதென்றும் கண்டறிவது மிகச்ரமசாத்யமானதே. கருணாநிதியான பரமேசனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ள எண்பத்து நான்குலக்ஷ பேதமான ஸ்ருஷ்டிகளில் மானிட ஸ்ருஷ்டியே சிறந்ததாகிறது. ஊர்வன, பறப்பன முதலிய யாவுமே ஆத்மாவையுடைத்தானவைகயாய் இருப்பினும், மனிதன் மட்டுமே பகுத்தறிவாகிய ஞானத்தோடு படைக்கப்பட்டவன். கொல்லன் உலையினின் றெழும் பல ஒளிச்சுடர்கள் (விம்ஸுலிங்கங்கள்) போலவே, பரமாத்மாவின் பல அணுச்சுடர்களே ஜீவாத்மாக்கள் (Sparks of the Divine fire) யோகிகளுக்கும் எட்டக் கிட்டாதவரான பரமாத்மாவே நம் ஹ்ருதயத்தின்கண் ஜீவாத்மாவாக விளங்குகிறார். இஜ் ஜீவாத்மாவானவர் எத்தகைய ஸ்வரூபமுள்ளவர் என்றறிந்தால்தான் பரமாத்மாவின் ஸ்வரூபத்தை அறிய முடியும். கேவலம் மிக்கமனமொத்த இரண்டு நண்பர்கள் கூட ஒருவர்க்கொருவர் வெளித்தோற்றமாகிய முகங்களைப் பார்த்துக்கொள்ளக் கூடுமேயொழிய அவர்களுக்குள் அந்தர்யாமியாய் இருக்கும் ஆத்மாவைக் கண்டறியமுடியாது. இதன் கருத்தைக்கொண்டே ஒரு மஹாத்மாவும்,

"தன்னை யறிந்தாற் றலைவனை யறியலாம்" என்று கூறியுள்ளார். (Self-realization leads to God-realization)

"தன்னையறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே
யுன்னையறிதற் குபாயம் பராபரமே" (தாயுமானவர்)

இத்தகைய ஆத்மா வசிக்கும் பொருட்டு, பஞ்சபூதங்களாலாகிய இத்தேகமானது அவரவர் பூர்வ ஜன்ம கர்மங்களுக் கேற்ப ஈசனால் அமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் தேஹமின்றி ஆத்மாவால் யாதொரு கிரியையும் செய்ய முடியாது; அவ்வாறே ஆத்மாவில்லாச் சவத்தாலும், யாதொன்றும் செய்ய முடியாது. கர்ம பூமியில் பூர்வ ஜன்ம கர்மங்களை அனுபவித்திடவும், வருகிற ஜன்மங்களுக்குரிய கர்மங்களைச் சேமித்திடவுமே இத்தேஹத்துடன் ஆத்மா வசிக்கிறது. ஆகையால் பரமாத்மாவின் அம்சமாகிய ஜீவாத்மா வசிக்கும் இத்தேகம் ஓர் ஆலயமாகிறது.

"தேஹோ தேவாலய ப்ரோக்தோ ஜீவோதேவஸ் ஸனாதனஹ"

(இத்தேகம் ஒரு ஆலயத்திற்குச் சமம்; ஜீவன் அவ்வாலயத்தில் இருக்கும் ஈச்வரனுக்குச் சமம்) இத்தகைய மேன்மையான ஜீவாத்மா வசிக்கும் ஆலயமான நம் தேஹத்தை எவ்வளவு பரிசுத்தமாய் வைத்துக்கொள்ள நாம் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம்.

நம் வீட்டிற்கு ஒரு பெரிய மனிதர் விருந்துண்ண வரப்போகிறார் என்றால், நாம் எவ்வளவு சிரத்தையுடன் வீட்டைச் சுத்தப்படுத்தி ரத்னக் கம்பளங்கள் விரித்து வாசனை புஷ்பங்கள், சந்தனம், வேண்டிய அறுசுவையுண்டி முதலானதுகள் தயாரித்து எவ்வாறு வரவேற்கிறோம்?

அப்படியிருக்க, இயற்கையில் நிர்மலஸ்வரூபியான ஜீவாத்மா நம்மில்வஸிக்கும்பொழுது அஹம் புறம் இரண்டிலும் நாம் எவ்வளவு தூய்மையுடையவர்களாய் இருக்கவேண்டும்? நமது தேஹமாகிய வீட்டிலுள்ள, இராகாதி 13 குணங்களாகிய அசுத்தங்களை ஒழித்து, பரிசுத்தமாக்கி களங்கமற்ற உள்ளம் என்னும் பாய்விரித்து, பக்தியென்னும் நீரளித்து, உடல் பொருள் ஆவி மூன்றினையும் நைவேத்தியமாக வைத்து, ஈசனைத் தொழவேண்டும். ஸஞ்சிதத்திலிருந்து கொஞ்சம் பாப புண்ணியம் எடுத்து அதற்கனுகுணமான தேஹத்தையடைந்து அது முடிந்தவுடன், ஜீரணமான உடைகளை அகற்றி, நாம் எவ்வாறு புது வஸ்திரங்கள் தரித்துக்கொள்கிறோமோ, அவ்வாறே ஜீவனும் இத்தேஹத்தைவிடுத்து வேறு புதிய தேஹத்தை அடைகிறான். ஆகையால் சாவென்பது இத்தேஹத்தை ஜீவன் விடுத்தான் என்றர்த்தமே தவிர ஆத்மாவுக்கு ஒரு நாளும் அழிவில்லை. அவன் என்றைக்கும் அழியா நித்தியவஸ்து. நாம் தரித்த மலினமான வஸ்திரத்தைப் பார்க்கவும் நாம் எவ்வாறு அறுவெறுக்கிறோமோ, அதுபோலவே, தான் விட்ட சரீரத்தைப் பார்க்கவும் ஜீவன் அருவெறுக்கிறான். இச்சென்மத்தில் எத்தகைய எண்ணங்கள் ஞானங்கள் உடைத்தாயிருந்தனோ அதற்கேற்றவாறு மறுமையில் மானஸ கோசத்தை அடைகிறான். சுருங்கக் கூறில் இவனுடைய கர்ம பரிபாகங்களுக்கேற்ற மறு ஜன்மமும், சத்ரு மித்ரர்களும், குணமும், யாவும் ஏற்படுகின்றன. ஆகையால்தான் ஒரே வயதுடைய பல வாலிபர்களிலும் அவர்களின் குணம் நடத்தை புத்தி கோசரீம் முதலியதும் பலவாறாய் இருக்கிறது. சிலர் மிகுந்த ஞான முள்ளவர்களாயும் விவேகிகளாகவும் இருக்கின்றனர். மற்றும் சிலர் அஞ்ஞானிகளாய் ஈசனொருவர் உண்டென்பதையே அறியாதவர்களாய் இருக்கிறார்கள்; ஏன் என்றால் பரமாத்மா எல்லார் உள்ளத்திலும் சமமாய் வசிப்பவராய் இருந்தபோதிலும், படிகம்போலுள்ள நிர்மலமான தடாகத்தில் சூரியன் தன் முழு கிரணங்களுடன் பரிசுத்தமாய் பிரகாசித்தாலும், அதே சூரியனானவன் சேற்றில் தங்கி இருக்கும் மலின நீரில் மங்கலாகவே காணப்படுகிறார். அதுபோலவே பரிசுத்தமானவரிடம் வசிக்கும் ஆத்மாவும் பிரகாசமுடையவராய் காணப்பட்டு அவர்களிடம் ஆனந்தமாய் விளங்குகிறது. அஞ்ஞானிகளிடத்து சேற்றுநீரிலுள்ள சூரிய பிம்பம்போல் மங்கலாகவே காணப்படுகிறது. மஹா ஞானியான வள்ளுவரின் தாய் தந்தையர்கள் கங்காஸ்னானத்தின் பொருட்டு புறப்படும்பொழுது கணவன் வேண்டுகோளுக் கிணங்கி தனக்குப் பிறக்கும் சிசுக்களை அவ்வவ்விடத்திலேயே விட்டுவிடுகிறேனென்று வாக்குக் கொடுத்தாள். முறையே அவ்வை உலுப்பை வள்ளி வள்ளுவர் முதலிய குழந்தைகள் பிறக்க, மூன்று குழந்தைகளையும் விட்டுப் பிரிய மனம் வராமல் தயங்க அக்குழந்தைகள் முறையே மூன்று பாடல்கள் பாட அவைகளை விட்டுப் பிரிந்தாள். கடைசியில் வள்ளுவர் பிறக்க அவரை விட்டுப்பிரிய மனந்துணியாது பரிதபிக்க அக்குழந்தை அன்புடன் தன் தாயை நோக்கி,

"எவ்வுயிருங் காக்கவொரு வீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரில் யானொருவ னல்லவோ—வவ்வி
யருகுவது கொண்டிங் கலைவதே னன்னே
வருகுவது தானே வரும்."

என்று பாடியதாய்க கூறி யிருக்கிறது.

அப்பொழுதே பிறந்த அச் சிசுவுக்கு அத்தகைய ஞானம் எவ்வாறு வந்ததெனில், நம் நாட்டைச் சீர்திருத்துவதற்கென்று ஸரஸ்வதி அவ்வையாகவும் பிரம்மா வள்ளுவராகவும் அவதரித்ததினால்தான் என்பது நன்கு விளங்கும்.

பலபேர் மரணமடைவதைக் கண்ணினால் கண்டும், நமக்கு மரணமுண்டென்பதை நன்கறிந்தும், நாம் சாசுவதமாக இருப்போம் என்ற எண்ணம் ஞானிக்கு எதனால் உண்டாகிறது எனில், நித்தியனாயும் ஆதி அந்தமில்லாதவனாயுமுள்ள பரமாத்மாவே நம்மில் ஜீவாத்மாவாகப் பிரதிபலித்து வலிப்பதினாலே நாம் நித்தியன் என்ற எண்ணம் ஞானிக்கு அனுபவமாய்த் தெரிந்திருக்கிறது. அதனால் ஞானிகளாகிய நிஷ்டாபரர்கள் உலகில் மனிதரூபமா யிருந்தாலும், தங்களுக்கு மரண முண்டென்று (நாம் நினைப்பதுபோல்) நினைப்பதில்லை.

"ஜகமீ திருந்தாலும் மரணமுண் டென்பதைச் சதாநிஷ்டர் நினைவதில்லை....." (தாயுமானவர்.)

இத்தகைய ஆத்மாவானவர் நம்மில் இன்னும் துலக்கமாய் விளங்கும்படி லகல லோக சரணயன் அருள்புரிவாராக"

S. P. ஓர் ஸஹோதரி.

துணை.

மக்கள் யாவருக்கும் துணை அவசியம் வேண்டுவது. இதுகொண்டே "துணையோடல்லது நெடுவழி யேகேல்" என்றார், நம் அதிவீரராம பாண்டியரும்.

யாவனொருவன் துணையின்றி பிரயாணம் புரிகின்றானோ, அவன் பல துன்பங்களை யடைவான் என்பது திண்ணம். இருவராய்ச், செய்யும் பிரயாணத்திற்கும், ஒருவனாய் செய்யும் யாத்திரைக்கும் எவ்வளவு பேதம் என்பது அனுபவத்தில் கண்ட விஷயமே. கல்வி, இதர வித்தைகள் முதலியனவும் உற்ற துணையே. எங்ஙனமெனில், பிறர் துணையின்றி அயல்நாடு செல்பவன், கல்வியின் சிறப்பாலும், வித்தைகளின் பிரபாவத்தாலும், யாவரையும் துணையாகச் சேர்த்துக் கொள்வதைக் கண்டும், கேட்டு மிருக்கிறோம்.

இதுகாறும் கூறியவை யாவும் இம்மைக்கு உற்றதுணையேயன்றி, மறுமைக் குதவுமோவென ஆராய்ந்தால், உற்றதுணை யாகாதெனவே தெற்றெனப் புலப்படும்.

நம் துணைக்காக சம்பளம் கொடுத்து ஆள்வைத்துக் கொண்டாலும், உண்மையாக (இம்மைக்கே) உதவிபுரிவது கிடையாது. ஆபத்துவரின், "தன் எஜமானனாயிற்றே, அவனிடம் பொருள்பெற்று அனுபவித்தோமே" என்று நினையாமல் தன் உயிரைக் காத்துக் கொள்ளவே முயல்வான். இவ்விதமின்றி தன்னை யண்டினவர்களுக்கு, உயிர் கொடுத்தாயினும் காப்பாற்றிய மெய்ச் சேவகர்கள் மிகச் சிலரேயாவர்.

"துணையோடல்லது நெடுவழி யேகேல்" என்றதால், முக்கியமாய் தூர யாத்திரைக்கே துணை வேண்டும் என்பதாயிற்று. நமது யாத்திரைகளில் யாவற்றினும் மிகத் தூரமானதும், கட்டாயம் தக்க துணை வேண்டியதுமான யாத்திரை யெது? இப்பொய் யுலக வாழ்க்கையையும் மலபாண்டமாகிய இச் சண்ம தேகத்தையும் விட்டுச் செல்கிறோமே மரணயாத்திரை அதுவே துணை

யவசியம் வேண்டிய தூரயாத்திரையாகும். 'இத்தகைய யாத்திரையில்' எந்த மெய்ச்சேவகனாயினும் நமக்குத் துணையாய்வந் துதவிபுரியக் கூடுமோ?

அப்படி இம்மை, மறுமை, இருகாலங்களிலும் நம்மைக் (உண்மையான உற்றதுணையாய்) காப்பாற்றக்கூடிய சேவகன் யாவனென்று ஆராய்ந்துணர்ந்து அவனைத் தேடிக் கொள்வதன்றோ பெருமை. அந்த மெய்ச் சேவகனைப் பற்றி நமக்கு, நம் ஸ்ரீமணிவாசகப் பெருமான் நன்றாய் விளக்கி யிருக்கிறார். "அன்பு" என்ற ஒன்றையே மெய்ச் சேவகனாகிய ஸ்ரீ பரமேசுவரன் தனக்கு கூலியாகப்பெற்று, எக்காலமும், எந்நிலையிலும், யாண்டும் உடன் இருந்து காப்பாற்றுகிறார்.

நற்றுணைவனும், மெய்ச் சேவகனும், நம் அருட் பெரும் சோதியாகிய அண்ணல் அன்றி வேறுயார் உளர்? இதுபற்றி யன்றோ, ஸ்ரீ வாகீச வள்ளலும்,

"நற்றுணையாவது நமச்சிவாயவே" என்றும்.

ஸ்ரீ வாதவூர் தேசிகனும் திருவாசகத்தில்,

"தேவதேவன் மெய்ச்சேவகன்
தென்பெருந்துறை நாயகன்
மூவராலுமறியொணா முதலாய
வானந்த மூர்த்தியான்
யாவராயினும் அன்பறன்றி
யறியொணாமலர்ச் சோதியான்
தூயமாமலர்ச் சேவடிக்கணம்
சென்னிமன்னிச் சுடருமே" என

மெய்ச் சேவகன் குணங்களையும் அவர் பெருமையையும், அவரை யடைய மிக்க சுலபமான வழியையும் விளக்கி யிருக்கிறார்.

அன்பு என்ற கூலி கொடுத்து, மெய்ச்சேவகனை யடைந்து, பயமின்றி என்றும் சிவமாய் ஆனந்தத்தை யடைந்து வாழ நாம் முயலவேண்டும்.

சொல்லற் கரியனவும், பெறுதற்கரியனவுமாகிய "அன்பு" என்ற அமுதத்தை தன்னகத்தே கொண்டு, என்றும் ஆனந்தமாய் உலவும், நம் அருமைக் குழந்தை "ஆனந்தபோதினியை" ஆதரவுடன் எடுத்து முத்தாடி, சீராட்டி, பாலூட்டி வளர்ப்போமாக.

வேலூர். ஏ. தப்புசாமி அய்யர்.

பரோபகாரம்.

(வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.)

மரங்கள் காய்க்கத் தொடங்கிய உடனே (அவைகளின் கனத்தால்) தாழ்கின்றன. மேகங்கள், புதுநீர் கொண்டதும், (பெய்வதற்காக) வெகுதூரம் திரிகின்றன (அதுபோல்) நல்லோர், சம்பத்து சேரவே, (அனைவரும் அணுகும்பொருட்டு) கர்வமற்றிருப்பார்கள். இது பரோபகாரிகளுடைய சுபாவமே.

செவிக்கழகு சாஸ்திரங்களின் கேள்விகளே யல்லது, குண்டலங்களல்ல. கைகளுக்கு அழகு கொடையே யல்லாது கங்கணங்களல்ல. அருளுடையாரின் உடம்பிற் கழகு, பிறர்க்குதவியே யல்லாது சந்தனப் பூச்சல்ல.

சூரியன் தாமரையையும், சந்திரன் ஆம்பலையும் மலரச் செய்கிறான். ஒருவர் யாசிக்காமலே, மேகங்கள் மழை பெய்கின்றன. நல்லோர்கள் (அவ்வாறே,

ஒருவர் யாசிக்கும் வரையில் காத்திராமல்) தாமாகவே, பிறர் நன்மைக்காக கிருஷி செய்வார்கள்.

தம் காரியத்தையும் விட்டுவிட்டு, பிறர் நன்மையைத் தேடுபவர் பெரியோர். சுய நன்மைக்கு இடையூறின்றி பிறர் நன்மைக் குழைப்பவர் சாதாரண ஜனங்கள். தம் காரியம் நிறைவேறும் பொருட்டு பிறர் காரியத்தைக் கெடுப்பவர் மனிதவேடம்பூண்ட அரக்கரேயாவர். தமக்கு யாதொரு லாபமு மில்லாமல் பிறர் நன்மையைக் கெடுப்போரை என்னவென்று சொல்வதோ அறியோம்.

உண்மையான நண்பன், தன் நண்பனை தீய செயல்களி லிருந்து மீட்டு, நற்செய்கைகளில் ஏவுவான். மறைக்க வேண்டியதை மறைத்து, குணங்களை வெளியிடுவான். ஆபத்தில் கைவிடான். சமயத்தில் கொடுத்து உதவுவான். இவைகளே உண்மையான நட்பின் லக்ஷணமாம்.

உதாரணமாக,

பால் தன்னை யடைந்த ஜலத்திற்கு தன் குணங்கள் யாவற்றையும் அளிக்கிறதல்லவா? (அப்படிப்பட்ட) பாலானது, தபிக்கும்போது பார்த்து, அந்த ஜலமானது அக்கினிப் பிரவேசம் செய்கிறது. (ஆவியாய் விடுகிறது.) தன் மித்திர (ஞானஜலத்தி) னுடைய ஆபத்தைக்கண்டு, பால், தானும், அக்கினியில் புகுவதற்குத் தயாராய் எழும்புகிறது. பிறகு ஜலம் தன்னுடன் சேர்ந்தால் உடனே சாந்தியடைகிறது. இப்பேர்ப்பட்ட தல்லவா நல்லோர் சிநேகம்!

மூவரே ஜன்ம மெடுத்தவர்கள். உலகம் யாவற்றையும் தன்முதுகிற் சுமந்த ஆமையொன்று. கிரகங்களையும், நக்ஷத்திர மண்டலங்களையும், தன் வழியில் நடத்திவரும் துருவ நட்சத்திரம் ஒன்று. "அகங்களிந் துபகரிக்கும் கொடையாளி யொருவர்." திரிலோகங்களிலும், இம்மூன்றைத் தவிர இருக்கும் ஜீவராசிகள் பழங்களிலிருக்கும் இரக்கையுள்ள பூச்சிகளைப்போல், ஜன்ம மெடுத்தும் வியர்த்தமானவைகளே.

ஆசையை அறு. பொறுமையை அடை. கர்வத்தைக் கொல்லு. பாபத்தில் பிரீதி வைக்காதே. உண்மை பேசு. சன்மார்க்கத்தில் நட. பெரியோர்களைப் பூசைசெய். சத்துருவி னிடத்திலும் பிரியமாயிரு. அறிவுடையோரைத் தேடு. வணக்கமாயிரு. "கஷ்டப் பட்டவரிடம் கருணையைக் காட்டு." இவை நல்லோர்களின் ஒழுக்கமாம்.

ஆரணி. ம. சு. விசுவநாத சாஸ்திரி.

சசிவர்ணபோதம்

(234-வது பக்கத் தொடர்ச்சி)

பூசுரா!

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணந்
தன்னை மறைத்தது தன் காரணங்களாந்
தன்னின் மறைந்தது தன் காரணங்களாம். (திருமந்திரம்.)

என்றவாறு, தான் எனப்படும் சீவன், தன்னுள் வைகிய அந்தக் காரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம், என்னும் நான்கு தத்துவாவயவங்களின் மாயச் சுழலாட்டச் செய்கைகளின் மயக்கத்தினால் எவ்வாற்றானுந் தன்னைத் தான் காணவியலாது, கர்மபந்தங்களினாலும் உலகவாஞ்சைகளினாலுங் கட்டுப்பட்டு உணர்வுகெட்டு, ஒதுங்கிநிற்க வியலாது தளர்ந்து, நடியுழன்று, இவ்வாறு

தன்னை வெளிக்காட்டாது மறைந்து நின்றதையும், அவ்வாறு தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் காரணங்கள் நான்கும் (தானாகிய) சீவனுக்குள்ளாகவே மிக்க சாமர்த்தியமாய் இன்னவிடமென்று தெரியாமல் ஒடுங்கிநிற்கின்றமையும் காண்கிறோம்.

அந்தக்காரணங்கள், என்னுடையதுதானென்று சீவன் அதைத் தனக்குச் சொந்தப்படுத்திச் சொல்லிக்கொள்ளும் சொல்வழக்கினாலேயே தானாகிய சீவன் வேறு, தன்னுடையதாகக் கூறப்படும் காரணங்கள் வேறு, என்பது வெளிப்படை.

இவற்றில் தான் வைகுமிடம்விட்டு மாறிமாறி, வழிகளைந்தினும் சென்று வெளியேறி யலைந்து, மண் மனைவி மக்கள் இவர்கள் பாசத்தில்வீழ்ந்து மகிழ்ந்து, மலம் மாயை யென்ற மாசுபெற்று வருந்தி, மங்கிய தூமம் (புகை) போன்றெழுந்து மயங்கி மடங்கி, மாத்திரைப்பொழுதில் வையகமுழுதும், சுற்றி யோடி வளைத்துக் கண்ட பொருளை யெல்லாம் வௌவும் நிலைமைத்தாய், வலித்திழுத்துத் தனக்குள் நிறுத்த முயற்சிக்கும் அறிவிற்கும் அகப்படாது வழவழத்துக் கழன்றோடி யாடும் வலிமைபெற்று, தான் வைகிய மலமற்ற சீவனையும் மையல் என்ற சிறைக்குள் மாட்டி வாட்டும் மகத்துவம் பெற்றது மனம்.

இத்தகைய மனப்போக்கின் மார்க்கத்தை என்னென்று சொல்லுவது? கண்கூடாகக் கண்டவைகளையும், காணாப்பொருள்களையும், கருதிக் கருதிக் காமியமென்னுங் கலக்கமெய்தி சீவனைக் கலவரப்படுத்தி நிற்பது மிகுந்த கஷ்டத்திற் கிடமாமன்றோ.

சசிவர்ணா! இம்மனப் பாங்கானது மகாவலிமைபெற்றது. அவ்விஷயங்கள் அல்லாதவற்றிற் சற்று பிரவேசித்து நுணிகி யாராய்ந்து நோக்கிச் செல்லுமானால் அதுசெல்லும் செவ்விய வழியின் அளவை அருந்தவ முனிவராலும் அளவிட்டு அறியப்படாததாகும். ஆகவே மனம் நிர்மலமானால் சீவனுக்குள் ஒடுங்கி அறிவை பிரகாசிக்கச் செய்யும் உயர்ச்சியும், நினைத்ததுபோலவே கிருமித்து நிறுத்தச் செய்யத்தக்க நிலைமையும், பகரானிற்கும் வாக்கியவரங்களும் அவ்வவ்வாறே பலிக்கச் செய்யத்தக்க பான்மையு முடைத்ததாகும்.

துர்க்கிரியைகளிற் செல்லும் சுழலுக்கும், நற்காரியங்களில் முயன்று நடப்பதற்கும், இது நடுவாய் நிற்றலால் எவற்றிற்கும் மனமே காரணம் என்றனர் மேலோர். சீவனுக்கு முக்கிய உபகரணங்களாயுள்ள நான்கினுள் இம்மனம் முதன்மையானது. இதனால் மனதின் தன்மை இன்னவாறென்றும் அதன் இடமும் குறித்தவாறாயிற்று.

இவ்வாறு போக்குத் தொழில் கொண்டு புரண்டோடி புரட்டித்திரியும் மனத்தின் புறத்தும் அகத்தும் புகுந்து நின்று, போதச் சுடராய் விளங்கி, சீவனுக்கோர் பூடணம் போன்றிருப்பது புத்தி.

சசிவர்ணா! அவனியின்பால் அயிர்ப்புவீங்கி யதிகரிக்காதபடி எக்காலும் மனத்தை அறிவின்பால் அடங்கச்செய்வதே மிக்க அழகாகும். இதனால் அறிவின் தன்மை யின்னதென்றும், அதன் இடமும், ஒருவாறு உணர்த்தா நின்றோம். இஃது இரண்டாவது உபகரணமாம்.

இனி, அங்காவயவங்களின் தத்துவத் தன்மைகளையும் அகத்திறையின் ஆட்சித்திறனையும் அறியாது, அகண்டாகாரத்தின் அகன்றுள்ள ஆன்ற அறிவு முழுது மடைந்ததுபோன்று மமதைகொண்டு அபிநயித்து, ஆணவமலத்தில்

அழுந்தி, அழியத்தகும் யாக்கையை நானென்றுகொண்டு ஆரவாரித்து நிற்பது அகங்காரம்.

என்னே! இவ்வகங்காரத்தின் அதிர்ச்சி. அவாவென்னும் ஆவியிற்பட்டு அழுந்தி உண்மையோராது கண்டபடி கடைசியில் காமாதுரனாய் நிற்பதும் ஓர் காட்சியாமோ! நான் என்பதின் பொருள் சீவனென்று கொள்ளாது, உடலை நானென்று கொள்ளுவது ஒவ்வாத்தன்மையன்றோ. இது உண்மையாமோ? ஆகவே ஒவ்வொருவரும் முன்னடி தத்தம் நிலைமை யின்னதென்றறிந்து தக்கபடி அடங்கியே நிற்றல் வேண்டும். அகங்காரத்தின் இயல்பும் இடனும் ஒருவாறு உணர்ந்து நின்றோம். காரணங்கள் நான்கினுள் இதுமூன்றாவதாகும்.

ஹே, சசிவர்ணா! செவ்விய தெளிவுபெற்ற சீவதாத்துவாய் விளங்கும் தெய்வீகத் தன்மையைச் சிவணி (பொருந்தி) தேகசம்மந்தமாய்க் காரணங்களோடு சேர்ந்து, செஞ்செயலற்றுச் சிறந்த சிதாத்துமாவைத் தன்னுட் சேரப் பெற்று விளங்குவது சித்தம்.

சாற்றுதற்கரிய விஷய சாகரங்களைத் தன்னுள் ஏற்று, தக்க தக்க சமயங்களில் மனத்தோடு தாக்கி, உயரிய ஞாபகத்திறல் உதிக்கச்செய்து, சமய சம்பாஷணைகளிற் றேர்ந்த சக்தியைக் கொண்டுள்ள சித்தத்தின் திறனையோர்ந்து எவ்வாறு செப்பற் பாலதாகும்? தேகதத்துவங்களின் சக்திகளெல்லாம் ஒருங்கே சேரப்பெற்று வைகுவதற்குரிய இடமாயும், அருவசக்தியான அநாகதமென்னும் ஆதாரவடிவமாக விளங்குவதே சித்தமாமென்று தெளி. இதனால் சிந்தையின் திறனும் அதுகொண்டுள்ள சக்திகளின் வகையும், இடனும் இயம்பியவாறாயிற்று. இதுநான்காவது காரணமாகும்.

கேட்டனையோ சசிவர்ணா! இக்காரணங்களின் கலக்கங்கள். உருவமேயில்லாவிக் காரணங்களின் தன்மைகள் உணர்ச்சியாலறிந்தும், அனுபவமார்க்கப்படி ஆராய்ந்தும், யுக்திமார்க்கப்படி ஊகித்தும் உரைக்கப்பட்டனவாகும். ஒரே மனதாய் நின்று விஷயசாரங்களை உற்றுக் கேட்போருக்குமட்டும் இதன் உண்மை வெளிப்படுமல்லாது, மேனோக்காய் நிற்போருக்கு விளங்காது.

சொல்லுவதைக்கேள் சசிவர்ணா! விழியை என்மீதுவிட்டு உன் மனதை உண்ணோக்கிச் செலுத்திச் சற்று ஊன்றியபடியே நின்று உற்றுக்கேள். இவ்வாறு கலக்கங்கொண்ட காரணங்களோடு கலந்து நிற்கும் சீவனுடைய தன்மையை எவ்வாறு கண்டுகொள்வது? கலங்கிக் கலங்கியலைவுபெறும் (உவர்) நிலத்தே) கட்டுப்பட்ட நீரின் நிலைமைபோன்று மும்மலங்களினால் நிறையுண்டு மூழ்கிக்கிடக்கும் சீவன் தன்மை மலினப்பட்டே மயங்கி நிற்பதைக் காணலாம்.

இனி இக்காரணங்களின் தன்மைகளை வெவ்வேறாகப் பிரித்துப் போக்கி, இவைகளோடு ஒன்றிநிற்கும் ஆன்மாவின் சொரூபலட்சணம் எவ்வாறிருக்கிறதென்பதை இயம்புவோம்.

தன்னை மலம்பற்றும் தன்னின் மறைந்துள்ளதுமான தன்காரணங்களில் முதன்மையான மனதானது, தன்மலத்தன்மைகளை முற்கூறிய விதிப்படி களைந்து, புனிதம்பெற்று நின்றபின், பொலிவுபெற்ற புத்திகோசரத்துட் கலந்து, மாறிலாது அடங்கி, அறிவொளியாகவே நின்றுவிடுகிறது. நான் என்ற அகங்காரமும் தனது மூடத்தன்மையைத் தணந்து, அடங்கித் துலக்கமெய்தி அந்த விவேகத்தோடே கலந்து நிற்க, இம்மூன்றும் ஒரே சோதியாய்ப் பிரகாசித்து, விளங்குகிறது. மலமற்ற மனதும் அகங்காரமும் மதியோடு கலந்தபின், மும்மடங்கு தேசிற் சிறந்த அறிவும், சீவனுக்குட் சேர்ந்து ஒடுங்கி

ஒன்றாய் நிற்கிறது. ஆகவே இச்சீவன் தெள்ளிய திவாகரசொரூப திவ்விய சோதியாய் சிதானந்தமாய் சின்மயமாய் *பிரகஸ்பதி நட்சத்திரத்தின் தண்ணிய பிரகாசம்போன்று உடலுக்குத் தக்கவாறு நிறைந்து ஒடுங்கி நிற்கிறது. காரணங்கள் விளக்கமெய்திய பின்னரே மனத்தே பொருந்தி வைகும் அகக்கண் மிளிரப்பெற்று ஆன்மா தன் ஒளி நிலையைத் தானே கண்டு தன் வாழ்நாளெல்லாம் சொப்பனமென்றெண்ணி, சகத்தை மறந்து சந்ததம் பேரின்ப சந்துஷ்டியடைந்து சாக்ஷாத் தனிமுதலைச் சாருகிறது. இதுவே நிர்மலமாகிய சீவசொரூபமாகும்.

சுட்டிக் காட்டமுடியாத சூக்குமசொரூபமாய் விளங்கும் சீவன் என்பது, ஆகாயம் என்ற பூத சனனத்தின் மூலப்பொருளோடு சமப்பட்டு ஒளியாய் நிலவும் சத்துப்பொருளாகிய ஓர் அம்சபாகமேயாமென்பதை இதனால் உணர்த்தா நின்றோம்.

இனி பரம் பொருளாரின் சுத்த சொரூப லட்சணத்தன்மை இப்படிப்பட்டதென்றும், ஜீவனும் பரமும் ஒன்றாகுவ திவ்வாறென்றும், இயன்ற ஆதாரங்கொண்டு இணைத்துக் காட்டுவோம்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம். (திருமந்திரம்)

என்ற மந்திரத்தைக்கொண்டு மரத்தினாலாக்கிய ஓர் மாதங்கத்தின் (மாதங்கம்=யானை.) வடிவை நோக்கி அது யானையேயென்று கொண்டு கண்டு விஸ்தரித்துப் பேச, அவ்வியானையினுள் மரமானது உள்ளும் புறமுமாய் வெளித்தோற்றமாகவே மறைந்து நிற்பதைக் காண்கிறோம். யானையின் வடிவை நீக்கி இது என்ன மரத்தாற் செய்யப்பட்டதென விவரிக்க, யானையென்ற கொள்கையானது மேற்கண்டவாறு மறைந்து மரமாய் நிற்பதையும் காண்கிறோம்.

அதுபோல இப்புவனத்துள்ள சகல சராசரத் தோற்றங்களும், நிறைந்த ஐம்பூதங்களாகவே அகன்று விளங்குகின்றன. அவ்வைம் பூதங்கள், எல்லாம் வல்ல பரம் பொருளால் இயற்றப் பட்டபடியால் அப்பரம் பொருளே ஐம்பூத வடிவமாகிய யாவுமாய் விளங்கி நிற்கும்போது மூலமாம் பொருள் அப்பஞ்சபூதங்களுட் புகுந்து நிற்கிறது.

* பிரகஸ்பதி நட்சத்திரத்தின் பிரகாசம் போன்றது சீவனொளி யென்பது.—இதில் உடலைக் காட்டாது ஒளியைமட்டும் உவமித்துக் காட்டியது. என்னையெனின், பதியாயிலகும் பரமான்மாவின் பரந்த ஒளியினுட் சீவன் ஓர்பாகமாய்நின்று உடலுக்குள்ளடங்கிப் பசுத்தன்மை பெற்றிருத்தலால் பரந்த சோதியை உவமித்துக் காட்டாது அதன் அம்சமாகிய குறுகிய ஒளியைக்காட்டும் நிமித்தம் அகநோக்கிற்காட்ட, அறியவியலாது புறநோக்கிற்கு ஒப்பிட்டுக் குறித்துக்காட்டி அகநோக்கிற்கும் அவ்வாறே உடலுக்குள் ஒளியாய் விளங்கி நிற்றல் அறியவேண்டியாகும். பிரகஸ்பதி என்றது அறிவு. அதன் ஒளி அறிவின் ஒளி ஆனதுபற்றியென்க. தண்ணியவொளி யென்பது (சகல சோதிகளையும், தன்னுள்ளடக்கித்) தணிந்து நிற்கும் ஒளி. ஆனதுபற்றி உடு வொளியை அதுமானித்துக் காட்டப்பட்டது. பரமான்மா பகவத் கீதையில் பிரகஸ்பதியும் நானே யாகிறேன் என்றது இங்கு குறிப்பு. ஆதிதேவரவ ரெம் மறிவினுக் கறிவரோ—யார் மனத்து மிருக்குஞ் சோதி—அறிவான தெய்வமே—என்பன இதற்கு ஆதாரங்கள். மற்றுமுள்ள ஞான நூல்களும் இவ்வறிவையே சொல்லுகின்றன.

பாத்தினால் ஆக்கப்பட்ட பூதங்கள் அப் பரத்திற்குள்ளேயே மறைந்து விளங்குகின்றன வென்பது நன்கு புலப்படுகிறது. இதனாலேயே எல்லாம் வல்ல இறைவன் இப் பூதங்களாகிய மூலப் பொருளெதுவோ அதுவாய் நின்று, தோற்றத்திற்குப் பூதங்களாகவும் விளங்கி, அவைகளில் தான் மறைந்தும், தன்னுள் அவைகளை மறைத்துக் கொண்டும் விளங்குவதால், அப் பரம் பொருள் நின்று நிலவும் இடம் எங்கும் உள்ளதென்பது எளிதில் விளங்கும்.

பஞ்ச பூதங்களாகிய பொருளாய் நிற்கும் போது பரம் விளங்காமையால் அப்பரம் பொருளினின்று இப்பொருள்கள் முறையே எவ்வாறுண்டாயினவோ அவ்வாறே திருப்பி ஒவ்வொன்றுக்குமுள்ள மூல ஜனனத்தை முன்னிட்டறிய, ஒவ்வொரு பூதமும் தன் பழய வடிவமாக மாறுங்கொள்கை யுடையதாகையால் ஒவ்வொன்றுகுள்ளாக உட்படுத்திப் புகுத்திப் பார்க்கும் பொழுது, பிரிதிவி மறைந்து அப்புவாய் மாறி, அப்பு மறைந்து தேயுவாய் விளங்கி, தேயு மறைந்து வாயுவாகாரமாய், வாயுமறைந்து ஆகாச வடிவமாக, அவ்வாகாச வொளி அது சனித்த பொருளாய் நின்று, தொட்டுக்காட்ட வொண்ணாத தோற்றமற்ற எல்லையாய் சுயம்பிரகாசமாய்ப் பரஞ்சோதியாய் பரிபூரணமாய் தனக்குத்தானே அளவிடக் கூடாத சச்சிதானந்தத் தன்மையாய் அகன்று எங்கும் நிலவுவதை ஒருவாறு ஊகித்தறியலாம்.

இதனாலே பார் முதலிய பூதங்களின் முதல் நிலையே பரம்பொருளென்றும், அந்நிலவே *மோக்ஷ உலகமென்றும், கைவல்லியம், சாயுச்சியம், துறக்கம், முத்தி யென்ற பல பெயர் வாய்ந்த ஓர் பதவி யாகிறது.

மேற்காட்டிய சீவ சொரூபத் தன்மையின் நிலையும் முடிவில் இவ்வாறே நிற்றலால், முடிவில் சீவேசுவர பேதங்கள் இரண்டல்ல வென்றும், மித்தையுழ் அல்லவென்றும், கண் கூடாகக்கண்டு கலந்த கைவல்லியம் என்றும் கொள்ளவேண்டும்.

கேட்டனையோ சசிவர்ணா! சீவ ஈசரபேதத் தன்மைகளும் சிதானந்தப்பட்டு ஒன்றுசேரும் மார்க்கங்களும் இவ்வாறாகும் என்று திருவாய்மலர்ந்தருளினார் மாநந்தி பாராயண முனிவர்.

இவை யனைத்தும் ஏகோபித்து ஆய்ந்து கேட்டு கேட்டு அறிவெய்திய அந்தணன், அடியற்ற மரம்போல் அருந்தவ ரடியிணைகளில் வீழ்ந்து புரண்டு அங்கம புளகிப் பெய்த ஆனந்தக் கண்ணீர்பெருகி அருவியாயோட, முனிபுங்கவர் பாத பங்கயங்களில் பணிந்து எழுந்து தேகபாவசனாய் நின்று, செங்கை கூப்பிச் சிரசு சேர்த்துத் தொழுது,

ஹே! தெய்வஞானச் சிந்தை தங்கிய தேசிக மூர்த்தியே! ஹே! சுத்தானந்தத்தூய சின்மய சுகப்பிரம்ம சோதியே! விளக்கம் பெற்ற தேவரீர் திருக்கடாட்ச வீக்ஷணியத்தினால் மிக்க மேன்மைதங்கி விளங்கிய மோக்ஷ வீட்டி

---

* மோட்ச உலகம். = மாறாத பேரின்பப் பதவி. ஆகாய பூதத்திற்கும் அப்புறத்தது. பரமான்ம சொரூபம்.

உதாரணம்.

சீதங்கொண் மலருளோனூர் தேவரு மென்பதென்னே
வேதங்கள் காண்கிலாமை வெளிநின்றே மறையும்வீரன்
பாதங்கள் கண்ணிற் பார்த்தான் படிவங்கோ ணெடியபஞ்ச
பூதங்கள் விளியுகாளும் போக்கிலா வுலகம் புக்கான். என்பது

(கம்பராமாயணம்.)

னுக் கமைவதான மெய்ந்நெறி வெளியிற்றாகக் காட்டிய காட்சி யெல்லாங் கண்ணாரக்கண்டு கண்டுக் கனிவெய்தி களித்துமிக்க அமைதியாயிற்று. "எப்பொருட் கண்ணு மன்னி யிலங்கிடும் அறிவாமீசன் அப்படி விளங்குகின்ற தறிதலே அறிவு" என்பதை இப்போதறிந்தேன் ஐயனே. ஹே! வேத வித்தகக் கனியே, ஞானசாரக் கண்டே, கடவுளே! அடியேனை யாட்கொண்டருளி உபதேசித்தருள வேண்டும். ஹே உத்தமோத்தம! இனி உடலந் துறந்து உயரியதான தனிமையைச் சாரும்வண்ணம் அடியேன் உடல் பொருள் ஆவி மூன்றும் தத்தஞ்செய்து விட்டேன்.

என்று வணங்கி நின்ற சீடனை நோக்கி ஆசிரியர், உளங்களி கூர்ந்து பிரம்மோபதேசஞ் செய்யும் பொருட்டுத் தம்பாதோத கத்தினாற் பூர்ணாபிஷேகம் செய்வித்து, புத்தி கோசரம் தந்து, பிரம்மானுபவ முறையறியும் ஞான நேத்திரத்தைத் திறந்து காட்டி, உயரிய ஞானத் தன்மைகள் யாவும் உபதேசித்து, சித்துணர்வின் தேசு நிலையைச் சிந்தையிற் சேர்த்து, எவ்விடம் பார்க்கினும் அவ்விடம் அதுவாக செவ்வியோன் நின்றது செப்பரிதாகச் செய்வித்துப் பரமானந்தப் பேற்றை பாலித்தருளப்பெற்ற சசிவர்ணன், தன் குருவின் பாத சேவைகொண்டு கும்பிட்டவாறே தம் படிவந்துறந்து பரமானந்த ஒளியிற் பரந்து நின்றான்.

என்னே! ஆசாரியரின் அபிமானம். ஆசாரியன் எங்கே! சீடன் எங்கே! இருவருக்கும் என்ன? எங்கு? எவ்வாறு? சம்பந்தம். யோசித்துப் பார்க்குங்கால் புஷ்பங்களின் வாசனையானது காற்றடித்துக்கொண்டு வருவது போன்று பரிபக்குவகாலங் கிட்டத் தம்விதியே நெட்டித் தள்ளிக்கொண்டு வந்துவிடு மென்பது மிக்க நேரிதாம் பாமரர்களுக்குங்கூட பதவி கொடுத்தருளுங் கனிவுவாய்ந்த பரப்பிரம்மமே இப்படி வடிவம்புனைந்து நின்றபோது நாம் பகரப்போவது யாது? குருகீதையை யறிந்தோர்கட் கன்றி ஏனையோருக்குக் குருவின் விசேஷத் தன்மையறிந்து கூற வியலாதென்பது வெளிப்படை.

சசிவர்ணனைப் பயந்த தாய்தந்தையரும் சந்ததம் சந்துஷ்டியடையும் பேரின்பப் பேறெய்தினார்கள். குல சோத்திரத்தோர் யாவரும் நரகக் கும்பியிற் கிடந்தோரும் விடுபட்டு அக்கணமே கைவல்லிய பதவி கிட்டும் காட்சி பெற்றார்கள்.

பூவுலகத்திலே புனிதமான மானிடதேகம் வாய்க்கப் பெற்றவர்கள் சகல மங்கள யோகங்களையும் துகர்ந்து, பொதுநலங் கருதி, புடவி (புவி)க்கோர் உபகாரியாய் நின்று விளங்கி இறுதியாக மெய்ஞ்ஞானபோத மடையவேண்டுமென்பது இச்சரிதத்தால் நன்கு புலப்படுகிறது.

ஆகவே, அவனியிலுதித்த ஆண் பெண் மக்களனைவரும் கல்விநலங் கமழ்ந்து அதன்படி நடந்துவர, அபாரமுள்ள அநேக ஞானநூல்கள் அளவற்றிருந்தாலும், அத்தகைய நூல்களின் சாரங்களை ஒருங்கு சேரத்திரட்டி, அறிஞர் அகமகிழும் வண்ணம் சசிவர்ணபோதம் என்ற வசனமாகிய இந்நூல் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்நூல் அன்பு நலம் புனைந்த நேச அறிஞ தெய்வங்களின் இன்னருளால் ஆக்கப்பட்டதன்றி, சிறியேன் பெற்ற கல்வியின் திறத்ததன்று.

ஆகவே சீரியோர் மாட்டும், வாணியாரவர்களின் செவ்விய வல்லருள் பெற்ற வாசகர் மாட்டும், வந்தனைசெய்து, இந்நூல் வழங்கி வைகி வருமிடந்தோறும் எக்காலும் மங்கள வாழ்வெய்தி மகிழ் சுரந்திருக்க வரமருளுமாறு மாட்சிமைப்பட்ட மாநந்தி பராயண மகதவேந்திர முனிபுங்கவர் பொன்

னடிகளை முப்போதும் ஆனந்தசாகர மூழ்கிய முழுமனதோடு தியானித்து வழுத்துகின்றேன். சுபம்.

நான்காவது அத்தியாயம் நல்லறிவு முற்றும்.

சசிவர்ணபோதம்

முற்றுப் பெற்றது.

பண்டிட்-எஸ். கிருஷ்ணசாமி ஐயரீ.

குறிப்பு:—ஞானசாரமுழுதும் திரட்டி யமையப்பெற்ற இந்நூலின் அருமையும் பெருமையும் ஆன்றோரால் மிகவும் புகழப்பட்டது. இத்தகைய விசேட மமைந்த நூலை, யெள்ளளவு பிரதிபலனையும் கருதாது, பொது நலமொன்றையே கருதி, மிக்க சிரத்தை யெடுத்துக்கொண்டு நமது ஆனந்தபோதினிக் கோரணியென வமைத்து, யாவரும் கற்றுணர்ந்து பேரின்பமெய்தும் வண்ணம் பூரணமாய் வெளியிட்ட பிரம்ம ஸ்ரீ. பண்டிட். கிருஷ்ணசாமி ஐயரவர்கட்கு நாம் மனப்பூர்வமான நன்றிபாராட்டி வந்தனமளிக்கிறோம். இவாருளிய இப்பேருதவிக்குத் தமிழ்மக்களனைவரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டவர்களே யாகும். இவர் நீடுழிகாலம் சுகதேகியாயிருந்து ஆனந்தபோதினியின் வாயிலாய் நம்மனைவர்க்கும் ஞானநெறி போதித்து வரும் வண்ணம் 'விண்மதிசூடுமொண்ணுதற் கண்ணனும் தண்ணருட் கடவுளை முழுமனதோடும் பிரார்த்திப்போமாக. பத்திரிகாசிரியர்.

தமிழ்க் கல்வியும், நம் சிறார்களும்.

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்.

(காஞ்சிப்புராணம்.)

சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டு பாஷைகட்கும் முதலாசிரியர் சிவபெருமான். அவர் சம்ஸ்கிருதமொழியைப் பாணினி முனிவருக்கும், தமிழ்ப் பாஷையை அகத்தியமுனிவருக்கும், திருவாய்மலர்ந்தருளினர். அம்முனிவர்கள் இருவரும். அம்முதனூற்கள் இரண்டின் வழியாக முறையே பாணினியம் அகத்தியம் என்னும் இலக்கணநூற்களை அருளிச்செய்தார்கள்.

நம் தமிழ் இலக்கணமாகிய அகத்தியத்துள்ளே, இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் மூன்று தமிழும், விரவிக்கூறப்பட்டன. அவற்றுள் இயற்றமிழை வேறுபிரித்துக் கூறியவர் தொல்காப்பியர் முதலாயினோரும், இசைத்தமிழை வேறுபிரித்துக் கூறியவர் பெருநாரை, பெருங்குருகு முதலிய நூலுடையாரும, நாடகத்தமிழை வேறுபிரித்துக்கூறியவர் முறுவல், சயந்தம், குணநூல், முதலிய நூலுடையாருமாவார். அகத்தியமுனிவரின் சீடர்கள் பன்னிருவரும் பன்னிரண்டு இலக்கணங்களை யியற்றியபோதினும் மேற்கூறப்பட்ட தொல்காப்பியமுனிவர் அருளிய தொல்காப்பியம் என்ற இலக்கணநூலே உலகில் வழங்கி வருவதாயிற்று.

தமிழ்பாஷை "குணகடல் குமரி குடகம் வேங்கடம்" என்னும் நான்கு எல்லைகளையும் உடைத்தான இத் தென்னாட்டில் வழங்கி வருவதாயிற்று.

162-405

தமிழ்க்கல்வியை, அக்காலத்தில் சோ சோழபாண்டியர்களாகிய தமிழ் மன்னர்களும், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் முதலான சமைய குரவர்களும் கம்பர், காளிதாஸர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, ஔவை முதலான இருடிகளும் நன்றாய் ஆதரித்து வந்தார்களென்பதை அவ்வவர்களா லியற்றப்பட்ட நூற்களால் காணலாம். இம்மட்டோ, முன்பு தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் (இதில் சிவபெருமான் அக்கிராசனம் வகித்தார்) என்னும் மூன்று சங்கங்கள் இருந்தனவென்பது நாம் நன்றறிந்த விஷயமே. அமிழ்தினுஞ் சிறந்த நம் தமிழ்க்கல்வியின் சிறப்பை சிற்றறிவுடையேமாகிய யாம் ஒரு சிறிதும் சொல்லத்தரமன்று:—"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை—யுண்ட பாலனை யழைத்ததும் எலும்பு பெண்ணுருவாக்—கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததும் கன்னித்—தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"—இவ்வுன்னத நிலைமை வாய்ந்த நம் தாய்ப் பாஷையாகிய தமிழ்க் கல்வியைத் தற்காலத்தில், ஆதரிப்பவர்கள் மிகவும் குறைந்திருக்கின்றனர். இதன் காரணத்தைச் சற்று ஆராய்வாம். கொஞ்சம் பொருட்செல்வம் படைத்தவர்களின் குடும்பத்திற் பிறந்த நம் சகோதரச் சிறுவர்களை அவ்வவர்களின் பிதாமார்களே நம் செந்தமிழ் பாஷையைப் புறக்கணித்துவிட்டு அன்னிய பாஷையைக் கற்கும் பொருட்டு நியமித்து விடுகின்றனர். அச்சிறுவர்களோ அன்னியர் பாடசாலைக்குள் நுழைந்த உடனே, தாம் தேவேந்திர பதவியை அடைந்து விட்டதாக நினைத்து தமது மூதாதைகள் அனுசரித்துவந்த முறைகளையு மறந்து, தமது குடும்ப மேம்பாட்டையு மறந்து, நவீன நாகரீகத்தை யடையவேண்டுமென்று வாய்ப்பறை யறைந்து தலைமயிரை வெட்டிக்கொள்ளுதல் முதலான அன்னியர் நடையுடை பாவனைகளைக் கைப்பற்றிக் கொள்ளுகின்றனர். அப்பால், அவர்களை நம் சைவமதத்தினர் வைணவமதத்தினரென்றாவது, அல்லது இன்ன குலத்தில் ஜெனித்தவ ரென்றாவது நினைப்பதற்குச் சற்றும் யோக்கியதையற்று, தாம் கற்கப்புகுந்த அன்னிய பாஷையையாவது நன்றாய்க் கற்றுக்கொள்ளாமலும், வீண் படாடோபிகளாய்த் தமது முன்னோர்கள் தேடிவைத்த சொற்ப ஆஸ்திகளையும் மனம்போனவாறு செலவு செய்துவிட்டு தாந்தோன்றித் தம்பிரான்களாய்த் திரிகின்றனர். இஃது இங்ஙனமிருக்க,

பொருட் செல்வம் கொஞ்சங் குறைந்தனவான குடும்பங்களில் ஜெனித்த நம் சகோதரச் சிறுவர்களைத் தமது பிதாமார்களோ அல்லது தம்மை சம்ரக்ஷணை செய்பவர்களோ, திண்ணைப்பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பி அவர்கள் ஏதோ சில அரிச்சுவடி எண்சுவடி முதலான வயிறு வளர்க்கும் சாதாரணக் கல்வியைக் கற்றதே நமது குழந்தை தமிழ்ப்படித்து விட்டான், தமிழில் கொஞ்சம் எழுதப் படிக்கத்தெரியும். இப்போதே அவனை ஒரு வியாபார ஸ்தலத்தில் அமர்த்தி விடவேண்டும். அமர்த்திவிட்டால் மாசம் 1-க்கு ரூபா 7—8—0 சம்பளம் கிடைக்கும் என்ற வொருகருட்டு எண்ணத்தை மட்டும் எண்ணி அவ்வாறு செய்து விடுகின்றனர். அப்பால் அவர்களிடத்தில் என்ன ஐயா தங்கள் பையன் என்ன படிக்கிறான் என்று சற்று வினவினால், நமது "பையன் தமிழ்ப் படித்தாய் விட்டது. கோமுட்டிக் கோதண்டராமன் செட்டி கடையில் வேலை பார்க்கிறான். மாசம் 1-க்கு சம்பளம் ரூபா 7 நடக்கிறது. நமது கண் உள்ள போதே பையனுக்கு ஒரு ஊசியில் நூலைக் கோர்த்து விடவேண்டும்" என்று ஒரு கர்ணடகப் பழமொழியைப் பகர்ந்து விடுகின்றனர்.

மீண்டும், அவ்வயோதிகப் பழங்களிடத்தில் அவர்களின் கருநாடகச் செயல்களைக் கேட்க விரும்பி, "சரிதானையா நீங்கள் சொல்லுகிறது. தங்

கள் பையனுக்கு இப்போது வயசு 15 தானே யாகின்றது. இன்னம் தமிழில் படிக்கவேண்டிய ஔவையார் நீதி நூற்கள் திருக்குறள், நாலடியார், நன்னூல், நிகண்டு, முதலான இலக்கண இலக்கிய நூற்களிருக்கின்றனவே, இவைகளை யெல்லாம் நன்றாய்க் கற்றுக்கொடுக்க வேண்டாமா? இவைகளெல்லாம் நன்றாய்த் தெரிந்தால்தானே நம் செந்தமிழ்ப் பாஷையை நன்றாய் எழுதவும் பேசவுந் தெரியும். கற்றோர்கள் நிறைந்த சபைக்குப்போனால் ஓர் வியவகாரத்தை எடுத்து நன்கு பேசவும், இப்பிரபஞ்சத்தில் நல்லது இன்னது கெட்டது இன்னது என்று பகுத்தறியவுங் கூடும். இவைகளை யெல்லாம் விட்டுவிட்டு இப்போதே பையனுக்கு கலியாணஞ் செய்யவேண்டு மென்கிறீர்களே" என்று வினவினால், "நீர் சொல்வதெல்லாம் நியாயந்தான். கிணற்றுத் தவளைக்கு என் நாட்டு வளப்பம். என்னமெல்லாமோ படிக்கவேண்டு மென்கிறீர் நன்னூலையும் திருக்குறளையும் படித்து விட்டால் பையன் வயிறு நிறம்புமா? கீழவீட்டுப் பையன் எதுகளை எல்லாமோ படித்தானும், எங்கெல்லாமோ பிரசங்கம் பண்ணினானும், இப்போது அவனை போலீஷ்காரர் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களாம். தெற்கு வீட்டுப்பையன் எல்லாச் சாஸ்திரங்களையும் படித்தானும், இப்போது அவன் சாமியாராய்ப்போய் திருவாடுதுறை மடத்தில் வயிற்றுச் சோற்றுக்கு குந்திக்கொண்டிருக்கிறான். இதுதானோ உம்முடைய தமிழ்ப் படித்ததின் லக்ஷணம்? நம்முடைய பையனையும் நீர் சாமியாராய் ஆக்கிவிடப் பார்க்குறீர் போலும். அடுக்களைத் தூணுக்கு அழகு வேண்டுமோ? ஆயிசு வேண்டுமோ?" என்று கண் மூடித்தனமான ஒரு நீண்ட பிரசங்கம் செய்து விடுகின்றனர். அந்தோ! எமனுக்கு எழுபிள்ளை கொடுத்தாலும் உற்றாருக்கு ஒருபிள்ளை கொடுக்க மனமில்லாத இந்த வயோதிகப் பழங்களை இன்னமும் பின்பற்றலாகுமோ.

ஓ என் அருமைச் சகோதரர்காள்! நம்முடைய முன்னேற்றத்திற்கும், நம் செந்தமிழ்க் கல்வி அபிவிர்த்திக்கும், தடை கல்லாய் நம் முன்னோர்களிற் சிலர் முற்காலத்திலும் இருந்திருக்கிறார்கள் என்பதை ஓர் தமிழ்ச்சங்க வித்துவான் ஓர் செய்யுளால் நன்கு விளக்கிக் காட்டி யிருப்பதை இங்குக் குறிப்பிடுதல் பொருந்தும்.

"உள்ளிக் கொடுக்கின்ற ஆடையுஞ் செம்பொன்னு மாதரவாற்
கொள்ளிக்கும் பட்டகடனுக்கு மென்னைக் குறித்த தல்லாற்
துள்ளித் திரிகின்ற காலத்திலே யென்றடுக் கடக்கிப்
பள்ளிக்கி 'வைத்திலனே தந்தையாகிய பாதகனே"

எனப் பாவிப்பட்டமுஞ் சூட்டி யிருக்கின்றார். ஆகலின்,

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து முந்தி யிருப்பச்செயல்"

என்ற நம்தேவர் திருவாக்கைமதித்து நமது மக்களுக்கு நம் தாய்ப் பாஷையைக் கட்டாயம் நன்றாய்க் கற்பிக்க வேண்டுமென்று தீர்மானங்கொண்டு நடவுங்கள்.

"அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றழிங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை" ஆதலால்,

கல்வியே மக்கட்குரிய இன்றியமையாத பொருளாகலின் அதனைக் கூறுவாம். முன்னரீட்டிய இருவினைக்கீடாக இறைவன் கருணைமேலீட்டாற் றரப்பெற்ற மக்கள் யாக்கையுடையர் அனைவரும் தமக்கு இயற்கையாக அமைந்துள்ளதும், மும்மல மறைப்பால் வெளிப்படாததும், எல்லாம் வல்ல இறைவன் றிருவருளால் ஒவ்வோரமயம் வெளிப்பட்டு விளங்கும் இயல்பினதும், எல்லா

வுயிர்கண் மாட்டும் ஒரே படித்தாக அழிவின்றி யிருப்பதும் ஆகிய இயற்கையறிவைக் கருவியாகக் கொண்டு செயற்கை யறிவாகிய நூலறிவைப் பெற வேண்டுவ தவசியமே.

என்னை? அச் செயற்கையறிவே நம் ஆன்மவிசாரணைக் குரிய ஆராய்ச்சியில் நம்மை முற்படுத்தி நாம் எய்தவேண்டிய அறம், பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பயன்களை எய்தற்குத் துணைநின்று அழிவிலாப் பேரின்ப நுகர்ச்சியிற் றலைப்படுத்து மாகலினென்க. நூலுணர்ச்சியின்றி இயற்கை நுண்ணறிவுடையாரும் பலருளரே. அன்னார்க்குக் கல்வி எற்றிற்கெனின் "கல்லாதா னொட்பங் கழியநன்றாயினுங்—கொள்ளா ரறிவுடையார்" என்பது நம் பொய்யில் புலவர் திருமொழியாகலின், அவரெட்டுணை மதிநுட்பமுடையராயினும் கல்வி கற்றிலராயின் அவரறிவை நல்லறிஞர் பொருட்படுத்தாரென்க. கல்வியின் காரியமாகிய பகுப்புணர்வினாற்றான் (ஐம்பொறி யுணர்ச்சியானும், உண்டி, உறக்கம், பெண் விழைச்சு முதலியவற்றானும் நம்மோடு ஒப்புடைய) விலங்கினத்தினின்றும் மனிதர் மேம்பாடுடையராவர். அஃதில் வழி அவ்விலங்கினத்தோடு ஒருங்கெண்ணப்படுவர். இது கருதியன்றோ,

"விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல்—கற்றாரோ டேனையவர்" எனவும்,

"கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர்கருத் தறியாரே" எனவும்,

"கல்லாது நீண்டவொருவன் உலகத்து நல்லறிவான நிடைப்புக்கு—மெல்ல விருப்பினும் நாயிருந்தற்றே இரா அ துரைப்பினும் நாய்குரைத்தற்று" எனவும், நம் ஆன்றோர்களும் அறிவுறுத்துகின்றனர். இதனால் அவயவச் சிறப்பாலன்றி மனவுணர் வுடைமையாற்றான் மக்கட்பிறப்பு பயனுடையதாகு மென்பது வெளியாம். இனி அவ்வுணர்வு தானும் கல்வியானன்றி வாராது. என்னை? கல்வியே செய்யத்தக்கது இன்னது, தகாதது இன்னது என்று பகுத்துணர்தற்குக் கருவியாகலின் இதனை,

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி எழுந்தாலன்றிக்
கருதுநிலப் பல்பொருளும் காண்டலறிதா முலகிற்கண்போல் யார்க்கும்
பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலும் நூலுணர்ச்சி பெறாரேயாகில்
திருவளர்புண் ணியபாவம் இம்மைமறு மையும்வீடும் தெரியாவன்றே"

என, கல்விகற்காத மூடர்களை மிருகவர்க்கத்தினரெனவும், அவர்களின் முகாலோபனமுங் கூடாதெனவும், அம்மூடன் கற்றவர்கள் நிறைந்த சபைக்குப்போய் அங்கு சற்று உட்கார்ந்தாலும் நாய் உட்கார்ந்ததற்குச்சமமென்றும், அல்லது அச் சபையில் ஒன்றைப் பேசத்துணிந்தாலும் நாய் குரைத்ததற்கு சமமென்றும், எவ்வளவு இழிவுபடுத்திக் கூறுகின்றனர் பார்த்தீர்களா?

ஆதலால், ஓ என் அருமைச் சகோதரர்காள்! நாம் இப்போதே நம் செந்தமிழ்ப் பாஷையை நன்றாய்க் கற்கும்பொருட்டு மகா கல்வி வல்லுனர்களிடத்திற்குச் செல்லல் வேண்டும் அவர்களை நம் மனமொழி மெய்களால் வழிபட்டு அவர்களிடத்தில் சதாவிசுவாசம் வைத்து அவர்களிடத்தில் இலக்கண, விலக்கிய, தர்க்க முதலான கருவி நூற்களை நன்றாய்க் கற்றுக்கொள்ளல் வேண்டும். அவர்களிடத்தில் கேட்ட பாடங்களை நாம் தனியாகவிருந்து சிந்தித்துத் தெளிதல் வேண்டும். ஏதேனும் சங்கை கிளம்பினால் மீண்டும் அவர்களிடஞ் சென்று

வந்தனை வழிபாடுகளுடன் நம் சங்கைக்குச் சமாதானம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இம்மட்டோ? பின் திருக்குறள் நாலடியார் முதலான நீதிநூற்களை நன்றாய்க் கற்றுக்கொள்ளல் வேண்டும் பின் நம் சமயகுரவர்களாற் றிருவாய் மலர்ந்தருளப்பட்ட தேவார திருவாசகங்களை நிரம்பவும் பக்தியோடு பாராயணம் பண்ணல் வேண்டும். பின் ஞானாச்சாரியரை அடைந்து அவரையே முதற்கடவுளாகப் பாவித்து வழிபட்டு அவரது ஆணைவழிநின்று ஞானவாசிட்டம் கைவல்லியம் முதலான ஞானநூற்களை கற்க அதன்பொருளை உள்ளவாறு வுணரவேண்டும். அவ்வாறு செய்து ஜனன மரணமாகிய துன்பத்தை நீக்கி என்றும் அழியாத பேரின்ப வாழ்வை எய்த நம் சத்குருநாதன் கிருபைபுரிவாராக. சுபம். சுபம். சுபம்.

பேட்டை. சோ. சிவசங்கரன், கொழும்பு.

அறம்.

(263-வது பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கைத் துணை.

முற்கூறியவாறே யறநெறிவழுவாது பெரும்பொருளீட்டிய வொருவன் இல்லற நடத்தற்குரியவனாவான். அவ்வறநடத்தற் கேற்ப இடமும் ஏவலும் அமைத்துக்கொள்ளல்வேண்டும். ஏவலு மிடனுமின்றேல் அறம் செம்மையுறாது. வழிநடை யாளர்க்கு இரவிலும் பகலிலும் தங்குவதற்கு இடனளித்துபசரிப்பது மில்லறதருமமாம். அங்ஙனந் தங்குவார் விரும்பிய பொருள்களைத் தருவித்தளித்தற்கு ஏவலும் அவசியமேயாம். இவையெல்லாம் அமையப்பெற்றாலும் வாழ்க்கைத்துணை (மனைவி) யின்றேல் இல்லறம் சிறிதும் நடைபெறாது. ஆதலால் இல்லறத்திற் குணமொத்தமனைவியே சிறப்புடையவள். ஆதலால் நற்குண நற்செய்கை யமையப்பெற்ற ஒருபெண்ணை விவாகம் புரிந்துகொள்ளல்வேண்டும்.

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்"

மனைவியிடத்தில் இல்லறத்திற்குரிய குணங்களில்லாதிருந்தால் அந்த இல்வாழ்க்கை எவ்வளவு சிறப்புடையதா யிருந்தாலும் அதுபயன்படாது என்ற கருத்துடைய பிரமாணவாக்கியத்தால் மனைவி யில்வாழ்க்கைக்குரிய குணமுடையவளா யிருத்தல் வேண்டும். அதனை,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்றதனால் விளக்கி யருளினார். மனைத்தக்க மாண்பாவன தன்கணவனைத் தெய்வமாகக்கொண்டு வழிபடுவதும், அவன் சொல் மீறி நடவாமையும், சோம்பல், அதிகநித்திரை, பேருண்டி முதலியன இன்றி யிருத்தலும், விருந்துகண்டு மனம் வருந்தாது உவப்புடன் முகமலர்ந்திருத்தலும், வேலைசெய்யுந் திறமையும், தன் வேலைக்காரர்களை நன்றாய்ப் பரிபாலித்து வேலைகொள்ளுந் திறமையும், குடும்பவாழ்க்கைக்குவேண்டிய பொருள்களைத் தட்டின்றிச் சேகரித்து வைத்துக்கொள்ளுதலும், அறுசுவை உருசியுடன் அடிசிலாக்கும் வல்லமையும், அதிதிகளை வாய்வுபசரித்தலும், ஆஸ்திகபுத்தியும், பெரியோரை வணங்குதலும், ஜீவன்போவதாயிருந்தாலும் கற்பினின்றுந் தவறாத திடசித்தமும், கணவன் துயின்றபின் தான்தூங்குதலும், அவன் துயிலெழுமுன் எழுந்திருத்தலும்,

வீடு பாத்திரம் முதலியவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதலும், இவை போல்வன பலவுமாம் என்க. தன்கணவனுடைய வருமபடிக்கு உட்படவே செலவு செய்தலுமாம்.

தன்வருணம் குலமிவைகளுக்கு ஒத்திருக்கும் இத்தகைய பெண்ணைத் தெரிந்து, எண்வகை மணங்களுட் சிறந்த பிராம்மண முறைப்படி அக்கினி சாட்சியாக மணம்புரிந்துகொள்ளல்வேண்டும். குற்றமற்ற தாய்வழி தந்தைவழி யிரண்டினுஞ்சிறந்து மானத்துக்கஞ்சு மியல்புடையபெண் இல்வாழ்க்கைக்கு சிறந்தவளாவாள். பிராம்மணவிதிப்படி விவாகம் செய்துகொள்ளப்பட்டபெண்ணே தர்மபத்தினியென்னப்படுவாள். அவளோடுகூடித் தர்மஞ்செய்தலே சால்புடைத்தாம். நயத்தாலும் பயத்தாலும் தன்மனைவியை வசீகரித்துக்கொள்ள வேண்டும். இச்சைப்பட்ட ஆடையாபரணங்களா லவளை மகிழச்செய்யவேண்டும். எந்தவீட்டில் ஸ்திரீயும் புருஷனும் மனமொத்து மகிழ்ந்து வாழ்கிறார்களோ அந்தவீட்டில் இலக்ஷ்மிதேவி தானேவந்தடைவாள். சகல தேவர்களும் அந்த வீட்டில் வசிப்பார்கள்.

"மங்கலமென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு"

என்றதனால் நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியே வீட்டுக்கு மங்கலம் என்று பெறப்பட்டது. ஆதலால் இல்வாழ்க்கைக்கு மனைவிக்கு மேற்பட்ட சிறந்தபொருள் ஒன்றுமில்லை. பிராம்மணமுறைப்படி விவாகம் செய்யப்பட்ட பெண், கணவன் குணங்களோடு மாறுபடாமலே யிருப்பாள் என்பது நூற்றுணிபு. ஏனென்றால் இந்தமணத்தில் ஆரியப்பெரியார்கண்ட ஒரு மகிமையுளது. அது ஆணும் பெண்ணுமாகிய இருவர் சரீரத்தையும ஒரு தன்மைப்படுத்தலாம். அதனாலேதான் மனைவி புருஷனுக்குப் பாதிசரீரமாவாள் என்றும், ஈருடம்பு மோருடம்பே என்றும் நூல்களும் நூல்களையுணர்ந்த பெரியோரும் கூறுவதாம். அதனை மேலே விவாகப்பிரகரணம் நேர்ந்துழி விளக்குவோம்.

அன்றியும், தகப்பன் வம்சத்தில் ஏழுதலைமுறைக்கு மேற்பட்டவளும், தாய்வம்சத்தில் ஐந்துதலைமுறைக்கு மேற்பட்டவளும், சகோத்திரமாகாதவளும், வயதினால் தனக்கு இளையவளும், ரோகமில்லாதவளும், சகோதரர்களை யுடையவர்களும், மெதுவான கூந்தலையுடையவளும், நல்ல பற்களையுடையவளும், அன்னம் பிடியாளைப்போன்ற நடையையுடையவளும் விவாகம் செய்துகொள்ளத்தக்கவளாவாள்.

தேகத்தில் உரோமமுள்ளவளும், தலையில் மயிரில்லாதவளும், ஆறுவிரல்கள் முதலிய அதிக அங்கங்களையுடையவளும், மீசையுடையவளும், புருஷனைப் போன்ற தோற்றமுடையவளும், கறகறவென்று பேசுகிறவளும், காக்கை போன்ற குரலையுடையவளும், உருண்டையான கண்களையுடையவளும், அதிக குட்டையாயிருப்பவளும், அதிக உயரமாயிருப்பவளும், கூடிய புருவமும் விலகிய பற்களுமுள்ளவளும், விபசாரசந்ததியிற் பிறந்தவளும், காக்கைவலி முதலிய கொடிய ரோகமுள்ள வம்சத்தில் பிறந்தவளும், வேறொருவனுக்கு வாக்குதானம் செய்யப்பட்டவளும், பிறனால் கங்கணங்கட்டப்பட்டவள், தாராதானம் செய்யப்பட்டவள், பாணிக்கிரகணம் செய்யப்பட்டவள், பக்தியுடன்கூடி அக்னியை வலம்வந்தவள், பிரசவித்தவள், சிற்றப்பன் பெரியப்பன் அத்தையிவர்களுடைய புத்திரியும், மாமன் மகளுமாகிய இவர்கள் தர்மவிவாகத்திற்கு ஏலாதவர்களாவார்கள்.

இப்படிப்பட்ட குற்றங்களில்லாதவளும் தனக்கு ஒத்தவருணகுலங்களிற் பிறந்து நற்குண நற்செய்கைகளையும் சுபலட்சணங்களையுமுடைய பெண்ணே தர்மவிவாகத்திற்கு அருகமாவாள். விவாகநிச்சயத்திற்கு முந்தி பிராத்திரியில் பசுத்தொழுவம், வேதிகை, சூதாடுகிற இடம், மடு, களர்நிலம், விளைநிலம், சந்தி, சுடலை இவ்விடங்களிலுள்ள மண்ணைத்தனித்தனியே எடுத்து உருண்டையாக உருட்டி, அந்த எட்டு உருண்டைகளையும் விவாகப்பெண்முன் வரிசையாக வைத்து, அவைகளில் எதையாவதொன்றை எடு என்று சொல்லவேண்டும். அந்தப்பெண் எடுத்த உருண்டை முதலாவதானால் அவள் விசேஷமான தானியமுள்ளவளா யிருப்பாள். இரண்டாவதானால் பசுக்களையுடையவளா யிருப்பாள். மூன்றாவதானால் யாகாதி கிருத்தியங்களுக்கு அருகமாயிருப்பாள். நாலாவதானால் நல்ல அறிவுள்ளவளாயும் பெரியோர்களைப் பூசிக்கிறவளாயுமிருப்பாள். ஐந்தாவதானால் ரோகமுடையவளா யிருப்பாள். ஆறாவதானால் மலடியா யிருப்பாள். ஏழாவதானால் விபசாரியாயிருப்பாள். எட்டாவதானால் விதவையாவாள். இவ்வகையான பரிட்சையினால் பெண்ணுக்குரிய தொழில் முதலியவற்றை யறிந்துகொள்ளலாமென்றும் ஸ்மிருதியாதி சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

மேற்குறித்த லட்சணங்களை யறிந்து சுபலட்சணங்களும் சற்குணங்களையுமுடைய கன்னிகையை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்றும், புருஷன் வயதில் மூன்றில் ஒருபங்கு வயதுள்ள பெண்ணை மணக்கவேண்டுமென்றிருக்கிறது. இவ்வாறின்றி ஒன்றிரண்டு வயதுள்ளவளும், சமமான வயதுள்ளவளும், தன்வயதுக்கு அதிகமான வயதுள்ளவளுமான பெண்ணை விவாகம் செய்துகொள்ளக்கூடாது. ஏனெனில் இயற்கையிலேயேயுள்ள பரிபாகக்குறைவினால் மலமிகுதியாயுள்ள பெண்சரீரம் ஆடவனுடைய சரீரசக்தியை அழித்து ஆயுசையுமபகரித்தவிடும். அன்றியும் பெண்சந்ததி யதிகமாக உண்டாகும். அவ்வாடவன் பிணிகளினால் வருந்துவான். கிரமமாகக் குறிக்கப்பட்ட வயதுடைய பெண்ணை மணந்துகொண்டபோதிலும் இயல்பிலேயே மலமிகுந்துள்ள பெண் சரீரம் ஆடவன் சக்தியைக் குறைத்துவிடும். பெண் சரீரத்திலுள்ள அந்த மலசக்தியைக் குறைப்பதற்காகவே மஞ்சட்குளித்தல், சொர்ணபரண இரத்தினபரணங்களை யணிதல், செம்மை மஞ்சள் முதலிய வர்ணமுள்ள ஆடைகள் தரித்தல் முதலியன பெண்களுக்கு விதிக்கப்பட்டது. இவற்றின் பிரயோசனமின்னதென்றறியாத பிற்காலத்தார் ஆபரணமணிதல் தகாதென்றும், மஞ்சட்குளிகூடாதென்றும்விலக்குவாராயினர். அந்தோ, அவர்பேதைமதியிம்மட்டோ! எப்போதுங் குளிர்ச்சியையுடைய தேசத்தில் வசிக்கும் ஜனங்களுக்குப் பயன்படுவதான சுண்ணும்புகலந்த ஸோப் என்னும் ஒருபொருளை மிகுதியாக உபயோகிக்கவும் தொடங்கினார்கள். அது அதிக உஷ்ணமான நமது தேசத்துப் பெண்களின் மெதுவான சரீரத்தைச் சீக்கிரத்தில் கெடுத்துப் பலவகையான வியாதிகள் உண்டாகச்செய்வதைக் கருதாமற்போனார்கள். நடையுடை யாகாராதிகளெல்லாம் அவ்வத்தேசத்திற்குரிய சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கவாறே கருணைக்கடலான சர்வேசுவரனால் அமைக்கப்பட்டன வென்பதையும் கருதாராயினர். இவ்விஷயத்தை யீண்டு விளக்கப்புகின் விரியுமாதலால் மேலே பிரகரணநேர்ந்தழி விளக்குவோம்.

மேற்குறித்த சுபலட்சணங்கள் அமைந்துள்ள பெண்ணை வேதவிதிப்படி அக்கினிசாட்சியாக மணந்து, தத்தம் வருணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள முறைதவறாமல் ஒழுகுதலே இல்லறநெறியாம். இத்தம்பதிகளின் கூட்டுறவு இகலோகத்தில் கீர்த்தியும் இன்பமும் பயக்கும். மறுமையிலும் பேரின்பமளிக்கும். இத்தகைய பெண்ணை மணந்த புருஷன் தன்மனைவிக்குப் பாவமிதுவென்றும், புண்ணியமிதுவென்றும், அவற்றினாற் பெறும்பயன் இதுவென்றும், போதிக்கவேண்டும். தெய்வபக்தி குருபக்திகளின் மகிமையையும், இதிகாசபுராணங்களின் இரகசியமான கருத்துகளையும், வேதத்தின் விதிகளையும், தர்மசாஸ்திரங்களையும் காளடைவிலே யெளிதிற் புகட்டவேண்டும். இல்லறத்திற்கின்றியமையாத அதிதிபூஜையையும், அதனாலுண்டாகும் பயனையும, சொர்க்கநரகாதி யின்பதுன்பங்களையும் விளக்கி யுபதேசிக்கவேண்டும். பதிவிரதைகள் நடந்துகொள்ள வேண்டிய முறைமைகளையும். பதிவிரதைகளின் மகிமைகளையும் செவ்வனே விளக்கவேண்டும். அவளை மிகவும் அன்பாய் நடத்தவேண்டும். அகாரணமாகக் கோபித்தல், வைதல் இழிவாகப்பேசுதல், அவளுடைய குலகோத்திரங்களையும் மாதா பிதாக்களையும் இகழ்ந்துரைத்து அவள்மனதைப் புண்படுத்தாமல் எப்போதும் சந்தோஷமா யிருக்கும்படி செய்யவேண்டும். இவ்வாறு பக்குவப்பட்ட சற்குணவதியான மனைவியே வாழ்க்கைத்துணை யென்னப்படுவாள். அவளுடன் கூடிச்செய்யும் இல்லறதர்மம் இகபரபோக வாழ்வையும், மோட்சானந்தத்தையும் தருமென்று வேதாதிகலைகளும் பெரியோருங் கூறுகின்றனர்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

இரங்கூன் சுதேச பரிபாலினி.

நமது சந்தா நேயர்களே !

கீழ்க்காணும் விஷயத்தைச் சற்று கவனிப்பீர்களெனக் கோருகிறோம். சந்தாதாரர்களும் விஷயதானம் புரிவோர்களும் தாங்கள் அபிமானிக்கும் பத்திரிகைக்கு எப்போதும் கௌரவத்தை யுண்டாக்க வேண்டுமேயன்றி அப்பத்திரிகாசிரியர் இன்னொருவர் கேள்விக்கு பதில் அளிக்கும் வண்ணம் நடந்து கொள்வது தகுதியாகுமோ வென்பதை நீவிரே யோசிக்கலாகும். சிலர் அன்னியர் ஒரு பத்திரிகையில் வெளியிட்ட விஷயத்தைத் தாமெழுதியதாக வேறொரு பத்திரிகைக்கு அனுப்பி பிரசுரம் செய்யச் செய்கின்றனர். இதனால் தமக்குக் கௌரவம் கிடைக்குமென்று கருதுகின்றனர் போலும். அந்தோ உண்மையானதென்று இவ்வுலகில் கருதப்படும் கௌரவமே அறிவாளிகளால் மதிக்கத் தக்கதல்ல. அதிலும் இத்தகைய நடக்கையால் முன்புள்ள கௌரவமும் அழிவதன்றி வேறில்லை.

3-ம்வருட(பிங்கள) ஆடிமாத (1917ஆம் ஜூலைமீ) ஆனந்தபோதினியின் 31-32-33-34-பக்கங்களில் "பெண்கள் அறியவேண்டிய விஷயங்கள்" என்ற தலைப்பின்கீழ் வெளியிடப்பட்டுள்ள விஷயங்களை நேயர்கள் அறிந்தே யிருப்பீர்கள். அதேவிஷயம் வேறொருவரால் எழுதி யனுப்பப்பட்டதுபோல் 1917ஆம் நவம்பர்மீ 2உ வெளியான "இரங்கூன் சுதேசபரிபாலினி" என்ற பத்திரிகையின் 2-3 பக்கங்களில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. ஆனந்தபோதினியிலிருந்தெடுக்கப்பட்டதாய்க் கூறப்படவேயில்லை.

இதைப்பற்றி ஒரு லிகிதர் கண்டித்து எழுதி அக்கடிதத்தைப் பிரசுரிக்கும்படி சுதேச பரிபாலினியின் பத்திராதிபருக்கு அல்லது பத்திரிகாசிரியருக்கு அனுப்பியதாகவும், அதை யவர் பிரசுரிக்கவில்லை யென்றும், நமது சந்தா நேயர் ஒருவரால் அறிகிறோம். இஃதுண்மையாயின், இவ்விஷயத்தில், விஷயத்தை யனுப்பியவர் ஒரு சமயம் முறைமை தெரியாது நடந்துகொண் டிருக்கலாகும். இதை யறிந்த பத்திரிகாசிரியர் தமது கடமைகளை யுணராது தாமே முறைமை தவறி நடப்பது எவ்வளவு வியக்கத்தக்க விஷயமென்பதை யிதை வாசிக்கும் நண்பர்களே சிந்திக்கலாகும்.

பத்திரிகாசிரியர்.

உண்மை நீதித் துண்டுகள்.

(266-வது பக்கத் தொடர்ச்சி)

ஸாலோமானுடைய நீதிமொழி:—பரஸ்திரீயின் சகவாசம் ஆரம்பத்தில் இனிமையாகவே யிருக்கும். அவள் செய்கையின் முடிவோ எட்டியைப்போலக் கசப்பும் இருபுறமும் கருக்குள்ள பட்டயம்போல கூர்மையாயு மிருக்கும். நீ ஜீவ மார்க்கத்தைச் சிந்தித்துக் கொள்ளாதபடிக்கு அவளுடைய நடைகள் மாறி மாறி விகாரப்படும். அவைகளை அறியமுடியாது—ஆதலால், பிள்ளைகளே, இப் பொழுது எனக்குச் செவி கொடுங்கள். என் வாயின் வசனங்களைவிட்டு நீங்கா திருங்கள்.—உன் வழியை அவளுக்குத் தூரப்படுத்து. அவளுடைய வீட்டின் வாசலைக் கிட்டிச் சேராதே—சேர்ந்தால் உன் மேன்மையை அன்னியர்களுக்கும், உன் ஆயுளின் காலத்தைக் கொடூரருக்கும் கொடுத்து விடுவாய்—அன்னியர் உன் செல்வத்தினால் திருப்தி யடைவார்கள். உன் பிரயாசத்தின் பலன் புறத்தியா ருடைய வீட்டில் சேரும். முடிவிலே உன் சரீரக் உருவழியும்போது நீ துக்கித்து ஐயோ நற்போதனையை நான் வெறுத்தேனே, கடிந்துகொள் ளுதலை என்மனம் அலட்சியம் பண்ணினதே. என் போதகரின் சொல்லை நான் கேளாமலும் எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாய்க்காமலும் போனேனே.—சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் சேராமற் போனேனே—எல்லாத் தீமைக்கு முள்ளானேனே என்று முறையிடுவாய்—நீ யுன் மனைவியோடே மகிழ்ந்திரு. மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண் களுக்கு முன்பாக இருக்கின்றன. அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார்.—துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித் துக்கொள்ளும் என்று கூறுகிறார். இவ்வாறே சுருங்கக்கூறி விளங்கவைக்கும் நம் ஔரும் பெரும் ஔவை மூதாட்டியாரும்—(மைவிழியார் மனையகல், மெல்லி னல்லாள் தோள்சேர் என்று கூறுகிறார். ஆகையால் பரஸ்திரீகளைத் தாய் போலும், நெருப்பைப்போலும் கருதவேண்டும்.

(18) (விசாரணை) நல்லஞான சாத்திரத்தினால், தெளிவான பரிசுத்த நுட்பவறிவினால் ஆத்ம விசாரணையைச்செய்க. அவ்வாத்ம விசாரணையை பூரணமாகச்செய்க. அவ்வாத்மவிசாரணை பூரணமானால் சமானமில்லாத வறி வானது அதிக நுட்பமாகப் பரமபதத்தை யறியும். இவ்விசாரணையே காரிய காரணங்களைக் குறித்தறிய மறிவுள்ளவர்களுக் குண்டான கொடிய ஜனன வியாதிக்கு அரிதான ஔடதமாம். கறுத்த அந்தகாரத்தில் மறையாததாகியும், மிகுந்த பிரகாசத்துக்கொளிமழுங்காததாகியும், பார்ப்பதற் கரியவஸ்துக்களியா வையும் பார்ப்பதாயுமிருக்கின்ற விசாரதிருஷ்டியினால் யானெப்படிப்பட்டவன்? சகத்தான சம்சாரமுண்டான கிரமமென்ன? மிகுந்த சம்சாரம் யாரையுடை யது? என்று விசாரணைசெய். விசாரிக்கத்தக்க விசாரணையானது அஞ் ஞானாந்தகாரமான ஆபத்தென்னும் வியாதிக்கு ஔடதமாம். விசாரஞானத் தினாற் சித்தையுஞ், சடத்தையுஞ், சிற்சடமான மாயையும் விசாரித்து அஞ் ஞானத்தைக் கெடுத்து ஆனந்தத்தை யடையவேண்டும்.

(19) மனமானது யுத்தியினன்மையினா லல்லாமல் வெல்லப்படாது. கோபங்கொண்ட மதயானையானது அங்குசத்தத்தினா லன்றிச் சயிக்கப்படுமோ? ஒன்றாகிய ஞானத்தை யறிதலும், நன்மையுள்ள சத்துக்களுடன் சேர்தலும், துக்கவாசனையை விடுதலும், பிராண சலனமில்லாமலடக்குதலும், ஆகிய இந் நான்குவகையும் மனதை யடக்குகின்ற யுத்திகளாம். குற்றமற்ற இந்த யுத்தி களுக்கு மனமடங்குதல் மேகவருடத்திற்குப் பூமியிலடங்கும் புழுதிக்கொப்பா

கும். சொல்லப்பட்ட இந்த யுத்திகளையல்லாமல் மனதை யடமாய்க் கெடுப்ப வர்கள் விளக்கைவிடுத்து இருளை இருளினாற் கெடுக்க முயல்பவர்களுக்கிணை யாம். முன்சொன்ன யுத்திகளையல்லாமல் வேகமாய் புலத்தினால் மனதைச் செயிக்க முயல்பவர்கள் தெரிசிக்கின்ற மதயானையைத் தாமரைத் தண்டினுள்ளி ருக்கின்ற வொருநூலினால் கட்டமுயல்வோராவார். இளைக்கின்ற அந்த மூடர்க ளுடைய மனது பயத்தோடுந்துன்பத்தையடைந்து மிகவுஞ் சிறுமையாய் வருத்து மென்று பட்டணத்தில்வந்து பய்ந்த மானைப்போல ஒன்றையு நம்பமாட்டாது. இந்நான்கு யுத்தியினொன்றினாலாவது மனதை யடக்கின் அடங்கும், இஃதில்லா விடின் அடங்காது, என்று வாசிட்டத்தில் ஸ்ரீராமருக்கு ஸ்ரீவசிஷ்டமுனிவர் கூறுகின்றார்.

(தொடரும்.)

தி. ப. அ. க. சதாசிவம்பிள்ளை, அம்பாளூர்.

சிறுவர் பக்கம்.

உபாத்தியாயர்களும் மாணவர்களும்

உபாத்தியாயர்களுக்கு இருக்கவேண்டிய குணங்கள்.

கீழ்க்காணும் குணங்களை யுடையோரே உபாத்திமைத் தொழிலுக்குத் தகுதியுடையோராவார் என்று முன்னோர் நூல்கள் கூறுகின்றன:—

(1) கடவுள் வழிபாடும், சீவகாருண்யமும், சாந்தகுணமும் உடையவரா யிருத்தல்வேண்டும்.

(2) கூடியவரை பலநூற்களை யாராய்ச்சி செய்தவரா யிருத்தல்வேண்டும். அதோடு நூலாராய்ச்சியில் விருப்பமுடையவராய், தான் உபாத்தியாயராயிருப்பி னும், தன்வரையில் ஒருசீடனைப்போல் சதா தன் கல்வியை விர்த்திசெய்து கொண்டிருப்பவராய் இருத்தல்வேண்டும்.

(3) நூலுணர்ச்சி யெவ்வளவிருப்பினும் உலக அனுபவமறிந்தவராயு மிருத்தல்வேண்டும்.

(4) கல்விகற்கும் திறமைவேறு, தான்கற்ற கல்வியை யொருவர்க்குப் போதிக்கும் திறமைவேறு. அனேகர் கல்விகற்ற மேதாவிகளாயிருக்கின்றனர். ஆனால் தான் கற்றதை மற்றொருவர்க்கு ஊட்டும் திறமை எல்லோருக்குமே யிராது.

உபாத்தியாயர் தன்னிடம் வாசிக்கும் ஒவ்வொரு சீடனுடைய அறிவின் அளவையுமறிந்து அவனவனுக்குத் தக்கவிதமாய், அவன் மனதிற் றெளிவாய்ப் புலப்படும்படி போதிக்கும் திறமையாய்ந்தவரா யிருத்தல்வேண்டும். சிலர் தங் கள் வரையில் கல்வியைக் கிரகித்து மனதிற் சேர்த்துக்கொள்ளும் சக்தி யுடையவர்களாயிருந்தாலும், அற்பவிஷயத்தைக்கூட பிறருக்குப்போதிக்க முடி யாதவர்களா யிருக்கிறார்கள். அத்தகையோர் உபாத்திம வேலைக்குத் தகுதி யுடையவர்களல்ல.

(5) உபாத்தியாயரே பிள்ளைகளுக்குச் சகலவிஷயங்களிலும் நற்புத்தி புகட்டவேண்டியவர். ஆகையால் அவர், தாம் பிள்ளைகளுக்குக் கூறும்வண் ணம் எப்போதும் நடந்துகொள்ள எச்சரிக்கையா யிருத்தல்வேண்டும். அப்ப டிக்கின்றி "நான் இரவு பிரசங்கத்தில் சாப்பிடலாகாது என்று கூறியது ஓட்டுச்சுரைக்காய் வீட்டுச்சுரைக்காயையல்ல" என்ற கதைபோல், உபாத்தி யாயர் பிள்ளைகளுக்கு கூறும் புத்திமதிக்குத் தான்தானே மறாய் நடப்பதைப் பிள்ளைகளறிந்தால், பிறகு ஒருபோதும அவருடைய நற்போதனைகளை இலட்சி யம் செய்யவே மாட்டார்கள்.

(6) உபாத்தியாயர் எப்போதும், விசேடமாய்ப் பாடம் கற்பிக்கும்போது, முகமலர்ச்சியுடையவராய் இருத்தல்வேண்டும். கோபமே யிருக்கலாகாது. அதிலும் போதிக்கும் காலங்களில் தண்டிப்பது சற்றும் தகாத நடக்கை. அப்போதனை யொருபோதும் பிள்ளைகளின் மனதில் தரிக்காது. அத்தகைய உபாத்தியாயர் ஒரு சிறுவனைநோக்கி "இப்போது நான் கூறியது உன்மனதிற்கு நன்றாக விளங்கியதா?" என்றால், அவன், இல்லையெனில் அடிவிழுமெனப் பயந்து, "தெரிந்தது தெரிந்தது" என்று ஆத்திரத்தோடு கூறிவிடுவான். ஒரு முறை அறிந்துகொள்ளாவிட்டால் கோபியாமலே அச்சீடன் கிரகிக்காததன் காரணத்தை யறிந்து, தக்க வேறுவழியில் அவனுக்கு விளங்கச் செய்யக்கூடியவரே சரியான உபாத்தியாயராவார். சில உபாத்திமார்கள் சதா கடுகடுத்த முகத்தோடு, சீடர்கள் தம்மைக்கண்டால் புலியைக் காண்பதுபோல் நடுங்கும்படி நடந்துகொள்வதுதான் தகுதியென்று கருதுகிறார்கள். இது மிக்க தீமையையுண்டாக்கும் கொடிய குணமாகும். அத்தகைய உபாத்தியாயரிடமுள்ள பிள்ளைகள் பாடசாலைக்குள் வந்ததுமுதல் "எப்போது மணியடிக்குமோ! இந்தச் சனி பிடித்தவனைவிட்டு எப்போது வெளிதாண்டுவோமோ" என்ற பிரார்த்தனையிலேயே யிருப்பார்கள் என்பது உண்மை. சீடர்கள் தமது சகவாசத்திலிருக்க எப்போது பிரியப்படும்படி உபாத்தியாயர் நடந்துகொள்ளவேண்டும்.

(7) சிறுபிள்ளைகளுக்குப் போதிப்பதே மிகக் கடினமானவேலை. அவ்வுபாத்திமார் பிள்ளைகளோடு அதிகமாய்க்கலந்து சகவாசம் செய்வதோடு, அவர்களுடைய பெற்றோர் முதலியவர்களோடு அறிமுகம் செய்துகொண்டும், அவர்களுடைய தொழில், குடும்பநிலைமை முதலிய விஷயங்களைத் தாமுணர்ந்திருத்தலும் வேண்டும். இதனால் பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது அவரவர்களுடைய அனுபவத்திற்குத் தக்க திருட்டாந்தங்களைக்கூறித் தமது போதனையை நன்றாய் விளங்க வைக்கலாகும். இதுவுமன்றி பிள்ளைகள் அப்போது உபாத்தியாயரைத் தங்கள் குடும்பத்தோடு சினேகப்பட்டவரா யுணர்ந்து, அவரிடம் அதிக விசுவாசம் கொள்வதோடு, பாடசாலையைவிட்டு வீட்டிலும் வேறிடங்களிலும் இருக்கும்போதுகூட தகாதகாரியங்களைச் செய்யப் பயப்படுகிறார்கள். உபாத்தியாயர் தமது பெற்றோருக்கு அறிமுகமானவர் என்று கண்டால், பிள்ளைகள் மிக்க சந்தோஷமடைவதும் அதுமுதல் அவரைத் தமக்கு நெருங்கியவராகக் கருதுவதும், அதைப் பெருமையாய் நினைப்பதும் சுபாவம்.

மாணவர்களுக்கான சிலபுத்திமதிகள்

பின்வரும் புத்திமதிகளை மாணவர் கவனிக்கும்படி செய்யவேண்டும்.

(1) மாணவர்கள் கீழ்க்கண்ட விடங்களுக்குச் செல்லலாகாது.

(1) கூச்சலும் அமளியும் நடக்குமிடம்.
(2) சண்டை சச்சரவு நடக்குமிடம்.
(3) ஸ்திரீகள் கூட்டமா யிருக்குமிடம்.
(4) ஒருவரோடொருவர் துர்ப்பாஷைகளால் வைதுகொண்டிருக்குமிடம்.
(5) சூதாடுமிடம்.
(6) (காரணமின்றி) சமயலறை.
(7) காலியாயிருக்கும் வீடு.
(8) பாழடைந்த கோயில் முதலியன.

(2) நாம் ஒரு குற்றத்தைச்செய்துவிட்டால், அதைப் பகிரங்கமாய் ஒப்புக்கொண்டு மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறவனே யோக்கியனென்று மதிக்கப்படுவான். அப்படிக்கின்றி அக்குற்றத்தை மறைக்கவாவது, இன்னொருவன்மேல் சுமத்தவாவது எண்ணிப் பொய் சொல்லுகிறவன் இரண்டு குற்றங்கள் செய்தவனாகிறான். அவன் எப்போதும் அயோக்கியனாகவும், பொய்யனாகவும், துஷ்டனாகவும் கருதப்படுவான்.

(3) கோயிலுக்குச் செல்லும்போது, முன்னே தேகத்தை, அல்லது கைகால்கள் முகம் முதலியவற்றைமட்டுமாவது சுத்தி செய்துகொண்டு, லலாடத்தில் விபூதியாவது திருமண்ணாவது தரித்துக்கொண்டு சுவாமியைத் துதித்துக்கொண்டே உள்ளேசெல்லவேண்டும். ஆரம்பமுதல் மறுபடி கோயிலைவிட்டு வெளிவருமளவும் மனது கடவுள் சிந்தனையிலேயே யிருக்கவேண்டும். வேறெந்த விஷயத்திலும் சிந்தனை செல்லலாகாது. கோயிலுக்குள் செல்லும்போது அரையிலுள்ள வேஷ்டிமட்டு மிருக்கவேண்டும். அதுவும் முழங்கால்களுக்குக்கீழ் தொங்கலாகாது. மேல்வேட்டியை அரையில் கட்டிக்கொள்ளவேண்டும். சட்டை தொப்பி முதலியவை யணிந்துகொண்டு செல்லலாகாது. கோயிலுக்குள் விருக்குமட்டும் கடவுளைத் தோத்தரிப்பதைத்தவிர வேறு எதைப்பற்றியும் கருதலுமாகாது பேசலுமாகாது. கோயிலில் மூக்குசிந்தல் எச்சையுமிழ்தல் முதலிய அசுத்த காரியங்களைச் செய்யலாகாது. பயபக்தியோடுகூடிய கடவுள் சிந்தனையை மறக்கலாகாது. அங்கு ஸ்திரீகளிருந்தால் அவர்களைக் கண்ணால் ஏறெடுத்துப் பார்த்தலே கூடாது.

(4) யாராவது இரகசியமாய்ப் பேசிக்கொண்டிருந்தால் அவர்களருகிற் செல்லல் அல்லது என்னபேசுகிறார்களென்று ஒத்துக்கேட்குதல், ஒருவர் யாருக்காவது கடிதம் எழுதிக்கொண்டிருக்கும்போதாவது, அல்லது தனக்கு வந்த கடிதத்தை வாசித்துக்கொண்டிருக்கும்போதாவது, அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்று எட்டிப்பார்த்தல், இத்தகைய செய்கைகள் மிக்க அயோக்கியமான செயல்களாகும். அவற்றால் அவமானமும் நேரிடும். இதற்கொரு சிறு திருட்டாந்தமுண்டு:—

ஒருவன் தன்மனைவிக்கு கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். வேறொரு அயோக்கியன் அவன் உட்கார்ந்துகொண்டிருக்கும் நாற்காலியின் பின்னால் நின்று அவன் எழுதுவதைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அதை யறிந்த அம்மனிதன் தான் எழுதும் கடிதத்தில் பின் கண்டபடி வரைந்தான். அதாவது:—

"நான் எழுதும் சங்கதிகளை யிம்மட்டில் நிறுத்திவிட்டு மற்றசங்கதிகளை மறுகடிதத்தில் எழுதுகிறேன். ஏனெனில், நான் எழுதிக்கொண்டேயிருக்கையில் ஒரு புத்திகெட்டகழுதை யென்பின்னால் வந்துநின்று நான் எழுதுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது" என்றெழுதினான்.

அதைப்பார்த்த அம்மூடன் "நான் எங்கடா உன் கடிதத்தைப் பார்த்தேன்?" என்று கோபத்தோடு சண்டைக்குப் புறப்பட்டான். அச்சமயம் இரண்டு மூன்றுபேர் அங்குவர அவர்கள் நடந்ததைக்கேட்டு, அவனைநோக்கி "அவன் எழுதுவதை நீபார்க்காவிட்டால் அவன் கழுதையென்று உன்னைக் குறித்து எழுதியது உனக்கெப்படிதெரிந்தது?" என்றார்கள். பாபம் அவன் வெட்கமும் அவமானமுமடைந்து தலை நாணிச் சென்றான்.

(தொடரும்.)

ஆரணி-துப்புசாமி முதலியார்.

ஸ்திரீகள் பக்கம்

மாதர்களுக்கோர் எச்சரிக்கை.

இப்போது நாம் கூறத்தொடங்குவது ஹிந்து குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர்களும், மிக்க முக்கியமாய்த் தாய்மார்களும் மற்றமாதர்களும் அதிக அவசியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமாகும்

கடந்த ஜனவரிமீ 18-ம் தேதி கள்ளிக்கோட்டையில் வெளியான ஒரு ஆங்கிலப்பத்திரிகையில் கீழ்க்கண்ட மிக்க துயரளிக்கும் விஷயத்தைக் கண்டோம்:—

"கொச்சியிலுள்ள ஸென்ட்மேரி கன்வென்டில் (கன்னிகா ஸ்திரீகள் மடம்) லாசித்துக்கொண்டிருந்த ஒரு ஹிந்துப் பெண் ஒருநாள் வீட்டிற்கு வந்து சேரவில்லையென வறிந்த அவளுடைய பெற்றோர் விசாரணை செய்ததன்மேல் அப்பெண் கிருஸ்தவமிஷனுருடைய பாதுகாப்பில் சிக்கி யிருக்கிறாளென்றுணர்ந்து, உடனே ஸப்மேஜிஸ்டிரேட்டிடம் பிராது கொடுக்க, அவர் அதைப் போலீஸாருக் கனுப்பினார் போலீஸார் அப்பெண்ணுக்கு வயது பதினெட்டுக்கு மேலாயிற்றென்ற காரணத்தால் அதில் பிரவேசிக்க மறுத்துவிட்டார்கள்.

அந்தோ எமனிடம் கொடுத்து விடுவதைவிட எத்தனையோ மடங்கு மேலான துன்பத்திற்கு ஆளாகவிடப்பட்ட தங்கள் அருமை மகளைப்பற்றி பெற்றோருடைய மனம் என்னவேதனைப்படும் அந்தோ! அதிலும் தமது அஜாக்கிரதையாலேயே யிப்படி நேர்ந்ததென்று அவர்கள் மனமே உள்ளே சுடும்போது எத்தகைய மனோவேதனையை யவர்கள் அனுபவிக்கவேண்டும்.

• இந்த உலகபோகத்தில் விரக்தியடையாதவனுக்கு ஒருபோதும் ஆண்டவனருள்கிட்டா தென்பது உண்மை. சற்றேனும் அருள்பெறுதவன் உலகோர்க்கு மோக்ஷமார்க்கத்தை யுபதேசிக்க முன்வருதல், குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதுபோ லாகும். திருட்டாந்தமாய், உண்மையில் ஞானத்திற்குக் காரணம் அகத்துறவே யெனினும் அதற்கு இரண்டாவது புறத்துறவு. ஆகையால் புறத்துறவேனும் அடையாத ஒருவனை நாம் மதபோதகனாகிய ஆசானாய் மதிப்பதே யில்லை. நமது நூற்றுணிபும், நமது கொள்கையும், அனுபவமும் அவ்வாறே. நமது நாட்டில் நாம் அனுபவமா யறிந்தமட்டில் இஸ்லாம்மார்க்கத்தவருள்ளும், பௌத்தர், சமணர் முதலிய மதத்தவருள்ளும் கூட அனுபவமிவ்வாறே யிருக்கிறது. ஏட்டில் படித்துவிட்டு வாசாஞானமாய் 'ஞானம் பேசக்கூடியவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் மோக்ஷத்திற்கு வழிகாட்டிகளாக மதிக்கப்படுவார்களோ? ஒருக்காலுமில்லை.

இதுமட்டுமல்ல, நமது மதக்கொள்கைகளை நாம் வலிய ஒருவருக்குப் போதிப்பதில்லை. ஒரு உயர்ந்தபொருளை யொருவன் அடையவேண்டுமெனின் அவன் அதனுடைய அருமையை யுணர்ந்து, அது இருக்குமிடம் சென்று முயற்சிசெய்து மிக்க கஷ்டப்பட்டு அடையவேண்டுமே யன்றி அதை வலியவே வீதிவீதியாய்க் கூவிக்கொண்டே வந்து யாராவது கொடுப்பார்களென்று எதிர்பார்க்கலாகுமோ. அதுபோலவே மோக்ஷமார்க்கத்தை யுணரவேண்டுமாயின் அதற்குவேண்டிய சாதனங்களைப்பெற்று அம்மார்க்கத்தையங்கை நெல்லிபோலுணர்ந்து, அநித்தியமாகிய இவ்வுலகப்பற்றை யறவே யொழித்து, இவ்வனித்தியதேகத்தி லிருக்கும்போதே மோக்ஷானந்தத்தைப் பிரத்தியக்ஷமாய் அனுபவித்துக் கொண்டிருக்கும் குருவை யடைந்து மோக்ஷமார்க்கத்தைப் பெறவேண்டும். இதுவே நமது மார்க்கக்கட்டளை. ஏனெனில்

நமது மார்க்கம் ஆன்மா இத்தேகத்தைவிட்டு நீங்குமுன்பே "கண்ணைகல்ஞானம் மதிக்கத்தானே யுள்ளங்கையில் நெல்லிக்கனிபோலக் காட்சியாக" மோக்ஷமார்க்கத்தைக் காட்டக்கூடியது. இறந்து மண்ணில் புதைக்கப்பட்டபின் வரும் என்று கண்மூடித்தனமாய் நம்பச்செய்வதல்ல.

அத்தகைய ஆசானிடம் சென்றாலும் அவர் எவ்வளவோ சோதித்தபின்பே வழிகாட்டுவார். பிறகு நாமும் எவ்வளவோ கஷ்டப்பட்டே அனுபவமா யறிய வேண்டும். இவ்வுலகிலுள்ள அநித்திய வஸ்துவில் ஒன்றையடையவே எவ்வளவோ பிரயாசை யிருக்கும்போது இரண்டொரு வார்த்தைகளை வாயால் மட்டும் கூறக் கேட்டுக்கொண்டால் என்றுமழியாத மோட்சத்தையடைய மார்க்கம் தெரிந்துவிடுமோ. சொற்பபுத்தியுடையோர் கூட இதைச் சுலபமா யறிந்துகொள்ளலாமே. மேலும் எல்லா சமயங்களிலுமுள்ளவர் ஒரே கடவுளென்றும், ஆகையால் எச்சமயத்திருந்தாலும் ஞானநெறி யடைந்தால் கடவுளைச் சேரலாமென்றும், ஆகையால் ஒன்றையும் தூஷிக்கலாகாதென்றும் நமது வேதம் முறையிடுகிறது. அனுபவஞானிகளும் "வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்துபார்க்கின் விளங்கு பரம்பொருளே நின்விளையாட்டல்லால், மாறுபடுங் கருத்தில்லை முடிவில்மோன வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா" என்று கூறியுள்ளார்கள்.

அந்தோ பாதிரிமார்களுக்கு இவ்வுண்மை தெரியாது. அதிலும், அதில் ஒரு வகுப்பாராகிய பெரும்பாலார் சாதாரணமனிதரைப்போல் மூவாசையில் மூழ்கி யனுபவித்துக்கொண்டிருப்பவர்களே யன்றி, மதபோதகராகிய ஞானகுருவிற்கு இன்றியமையாததான உலகவிரக்தி எள்ளளவும் அடைந்தவர்களல்ல. உலகபோகங்களில் எள்ளளவைக் கூட நீக்கியவர்களல்ல. இத்தகையோர் மோக்ஷத்திற்கு வழிகாட்டக்கூடுமோ வென்பதை யிதை வாசிப்போரே எளிதிலுணராகும். ஆயினும், தங்கள் ஜீவியத்தொழிலின் கடமைக்காக தம்மதத்தைப் பரவச்செய்ய வேண்டியவர்கள். ஆகையால் சுயமத ஆராய்ச்சியில்லாத பிள்ளைகள் பெண்களுக்குப் பலவித போதனைகள்செய்து, ஆசை தந்திரம் முதலியவற்றால் மயக்கிவிடுகிறார்கள். மற்றபடி உலகமே இத்தன்மையதென அறியும் சக்தியற்ற பாலியருக்கு உலகத்துக் கதீதமான மோக்ஷத்திற்கு இன்னமதத்தில் சரியானவழி யிருக்கிறது இன்னமதத்தில் சரியானவழி யில்லையென் றுணரச் சக்தி யிருக்கிறதென்று யார் நம்பக்கூடும். எங்கள் மதத்திற்கு வந்துவிட்டால் இப்படி யிருக்கலாம், அப்படி யிருக்கலாமென்று வீண் ஆசை காட்டினால் அதில் மட்டுமே அவர்கள் உண்மை யறியாது நம்பிக்கை வைக்கக்கூடும். எப்படியாவது அவர்கள் ஜீவனத்தொழிலை யவர்கள் செய்யவேண்டியதே. அவர்கள்மேல் நாம் குற்றங்கூறக் காரணமில்லை. ஆனால் நாம் நமது மதத்தில் சேர்த்துக் கொள்ளும் இவ்வாலிபர்களுக்கு மதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யத்தக்க அறிவில்லை யென்று தெரிந்திருந்தும், இவர்கள் குடும்பத்திற்கே பெருந்துயரை யுண்டாக்குகிறோமே யென்ற கருணையின்றி நடந்துகொள்கிறார்களே இதுவே மிக்க விசனத்தை யுண்டாக்குகிறது.

நமது மக்களுக்கு இத்தகைய ஆபத்து நேரிடுவதற்கும், பெற்றோர் அதற்காக மரணமட்டும் மனோவேதனை யடைவதற்கும், அதோடு நமது மக்களுடைய ஆன்மார்த்தத்தை ஜாக்கிரதையோடு பாதுகாக்க வேண்டியதாகிய கடமையினின்றும் தவறிவிட்டதற்காக கடவுளுடைய தண்டனையைப் பெறவேண்டியதற்கும் காரணம் யாது?

பெற்றோரே இதற்குக் காரணமாகும். அந்தோ! கல்வி யாவர்க்கும் அவசிய

மானதே யெனினும், நமது ஆன்மார்த்தத்தைவிட கல்வி விசேஷமானதென்று யார் கூறக்கூடும். கல்வியே யெதற்காக ?

"கற்றதும் கேள்வி கேட்டதும் நின்னைக்கண்டிடும் பொருட்டன்றோ காணே" என்று நமது மெய்ஞ்ஞான வள்ளலாகிய தாயுமானவர் கூறியபடி பரம்பொருளி னருளைப்பெறும் வழியையறியக் கல்விகற்பதே யன்றி, செருப்பு வாங்கப்போய் அதன்விலைக்காகக் காலைவெட்டிக்கொடுத்த கதைபோல், ஆன்மார்த்தத்தை யடியோடு போக்கடித்துக்கொள்ளவா. அந்தோ, நமது நாட்டில் வேறு பாடசாலைக ளில்லையோ! எத்தனையோ அத்தாட்சிகளைக் கண்ணாற் கண்டும் காதாற் கேட்டுமிருந்தும், எத்தனையோ பத்திரிகைகளால் பாதிரிமார் பாடசாலைக்கு நமது மக்களை யனுப்புவதாலுண்டாகும் தீமைகளைப்பற்றி எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தும், நம்மவர்களுக்கு இன்னும் ஜாக்கிரதையுண்டாகாதிருப்பது என்ன வெட்கக்கேடான காரியம்!

தாய்மார்களே! இக்குற்றத்திற்குக்காரணம் பாதிக்குமேல் உங்களுடையதே. இது உண்மை. அதுபற்றியே இதை நேரா யுங்களுக்கே கூறுகிறோம். உண்மை யுணராதார், ஹிந்துக்கள் தங்கள் ஸ்திரீகளை அடிமைகள்போல் நடத்துகிறார்கள் என்று கூறியபோதிலும், இல்லறமாகிய இராஜாங்கத்தில் நீங்களே அரசாளுவது உண்மை. இத்தகையவிஷயத்தில் ஆடவர் ஒருபோதும் உங்களுக்கு மாறாய் நடக்கமாட்டார்கள். மேலும் பெண்ணின் நடவடிக்கையால் நேரிடும் கௌரவ அகௌரவங்கள் தாயையேசேரும். ஆகையால் சகோதரிகளே, இது விஷயத்தில் இனியேனும் ஒவ்வொருவரும் எச்சரிக்கையா யிருங்கள். பாதிரிமார் பாடசாலைக்கு நம்மக்களை யனுப்புவதைவிட கல்வி யில்லாமலே விட்டுவிடுவது மிகவும் உத்தமம் என்ற உண்மையை மறவாதீர். அந்தோ, வீணாய் நமது மக்களுடைய ஆன்மார்த்தத்தை யழிப்பதோடு அதற்காக நீங்களும் கடவுளின் தண்டனைக்காளாவீர்கள். அத்தண்டனையின் ஒருபாகம் இப்போதே பிரத்தீயட்சத்தில் ஆரம்பித்துவிடுகிற தல்லவோ! ஆண்டவன் உங்களுக்குச் சர்வ ஜாக்கிரதை யருளவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஓர் ஹிந்து.

க்ஷயரோகம்.

(273-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்த வியாதிக்குக் காரணம் சொல்லி தற்கால சிகிச்சைகளும் கூறினோம். ஆனாலும் இந்த வியாதியின் காரணங்கள் உஷ்ணமே எனப் பறை சாற்றலாம். அவ்வுஷ்ணத்திற்குக் காரணம் நாகரீக உணவுகளென்று நம்மவர் கருதும் அயல் நாட்டுப் பொருள்களேயாகும். நமது நேயர்கள் பண்டைய உணவுகளை மாற்றியதின் பயன் நாம் வியாதியின் இருப்பிடமா யிருக்கின்றோம். அன்றியும் சுகாதாரமின்றிய நிலைமையிலிருக்கும் நமக்கு இராஜாங்கத்தார் சுகாதாரத்தை ஏற்படுத்தியதாய் சிலர் சொல்லிக் கொள்ளுகின்றார்கள். கவனிக்குங்கால் நமக்கு ஒரு சுகாதாரமும் நாளது வரையில் கிடைக்கவில்லை. எப்படியெனில் மானிட சரீரங்களுக்கு சுகத்தைத் தரக்கூடியவை முதல் முதல் உட்கொள்ளும் ஆகாரங்களாக விருக்கின்றன. அவற்றைக் கவனிக்குங்கால் நெய்யில் பல வஸ்துக்கள் கலந்து விற்கப்படுகின்றன. எண்ணெயிலும் பல தினுசுகள் கலப்பிருக்கின்றன. அரிசி முதலிய இவைகளைச் சுத்தமாய் உபயோகிக்க வியாபாரிகளுக்கு என்ன சட்டம் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டு அமுலுக்கு வந்திருக்கிறது? அன்றியும் காபிஹோட்டல் முதலிய விடங்களில் விற்கப்படும் ஆகாரங்களைப்பற்றி என்ன ஏற்பாடுசெய்தார்கள்? ஒன்றுமேகிடையாது. ஆனால் ரோட்டு போடுகின்றோம், வீடுகளை நெருக்கமாய் கட்டிக்கொள்ள உத்தரவு கொடுக்கின்றோம். குழாய் ஜலத்தை சூரியனுடைய கிரணம் தாக்காமல் பூமிக்குள் மூடிக்கொண்டு வருகின்றோம். வீதிகளைச்சுத்தமாய் வைத்திருக்கின்றோம். தோட்டங்கள் வேண்டுமானால் தங்கள் தங்கள் வீடுகளில் அமர்த்திக்கொள்ளுங்கள் என்று சொல்லுகின்றார்களே யொழிய வேறில்லை. இத்தகைய சுகாதாரம் நமது இந்தியாவிற்கு ஏற்பட்டபடியால் இந்தியாவானது சகல சுகாதாரத்தையும் பெற்றதாக நினைக்கவேண்டியது அவசியம்தான். ஆனால் இத்தகைய சுகாதாரம்வாய்ந்த இத்தேசத்தின்கண், க்ஷயரோகம் எப்படி உண்டானது என்று யோசிக்குமிடத்தில் சிலர் (டியூபர்குலிற்) பூச்சிகளால் இந்த வியாதி உண்டாகியது. இந்தப் பூச்சியானது சகலவிடத்தும் பரவி வருவதால் க்ஷயரோகம் அதிகரித்து வருகின்றது. இதற்கு (டியூபர்குளிற் இன்ஜெக்ஷன்) செய்தால் நீங்கிவிடும் என்று தன் மூளையை இந்த வியாதியின் பரிசோதனையில் கறைத்துவிட்ட சில செவ்வனே நிபுணர்கள் சொல்லுகின்றார்கள். அவர்கள் சொல்வதைத் தன்மூளையைக் கறைக்காமல் வைத்துள்ள எவரும் எடுத்துக்கொள்ள மாட்டார்களல்லவா. இதைப்பற்றிய விஷயங்கள் இங்கிலீஷ் நியூ இந்தியா பத்திரிகையில் ஜனவரி மாதம் 20-ம் தேதி க்ஷயம் என்று வெளிப்பட்ட வியாசத்தால் நன்குணரலாம். முற்காலத்தில் பூச்சிகள் என்னும் சம்பந்தம் தெரியாதவர்களாயும் மௌடீகர்களாயும் இருந்தவர்களால் மேற்படி வியாதி சிகிச்சை செய்யப்பட்டு வந்ததெனச் சொல்லும் சில நண்பர்களுக்கு மீண்டும் சொல்லுவதாவது, பூச்சிகளானது எந்தகாலத்திலும் எந்த வியாதியிலும் எவ்வஸ்துவிலும் எவ்விடங்களிலும் இல்லாதிருந்திருக்க வில்லை. அப்பொழுது இவ்வியாதி இல்லாததல்ல. ஆனால் அக்காலத்தவர்கள் பூச்சியின் மூலனையறிவதை விட்டு நாடியின் மூலமாயும் சரீரநிலைமையின் மூலமாயும் அறிந்திருந்தார்கள். இவ்வியாதிக்கு எத்தனையோ சிகிச்சைகள் செய்து பார்த்தார்கள். கடைசியாய் ஔடதங்கள் பயன்தராவென மதித்து வியாதிகளின் காரணத்தை யுணர்ந்து க்ஷயரோகமானது உண்டாகாதிருக்க சில விதிகளை ஏற்படுத்தினார்கள். அவ்விதிகளே நான் முன் சொன்னவை. அதாவது கணச்சூடு (பால்பிடேஷன் ஆப் ஹார்ட்) உள்ள புருஷர்களுக்கு மேற்படி க்ஷயரோக முண்டாகுமென்றும், அத்தகைய தேகிகளுக்கு உஷ்ண ஆகாரங்களை நீக்கி குளிர்ந்த ஆகாரங்களை உபயோகித்து வரும்படியும், குளிர்ச்சி எண்ணெய்கள், கூழ்ப்பாண்ட லேகியங்கள் இவற்றோடு தயிர் பால் முதலானவைகளைப் பெரும்பாலும் உபயோகித்து வரும்படிக்கும் சொன்னார்கள். அப்பழக்கம் வெகு நாள் நம்தேசத்தில் நடந்தேவந்தது. பிறகு நாகரீகத்தின் காரணத்தால் கைநழுவ விட்டுவிட்டார்கள். தற்காலத்திலும் பூர்வாசாரத்தைக் கைப்பற்றி வருவார்களானால், சில நாட்களுக்குள் இவ்வியாதியானது நம் நாட்டைவிட்டகலும். வியாதி முதிர்ந்த சிலர்க்கு முற்காலங்களில் செய்துவந்த சிகிச்சைகளுள் நம் அனுபவத்தில் கைகண்டதும், சென்னையில் சில அந்தஸ்துள்ள மனிதர்கள் வீட்டில் தற்கால நிபுணர்களால் கைவிடப்பட்ட க்ஷயரோக வியாதியைக் குணப்படுத்தியதுமான சில ஔடதங்களை இங்கு கூறுகின்றோம்.

காட்டுமுயல் ஒன்றைக் கொண்டுவந்து எலும்பு தோல் தலை குடல் கால் முதலானதுகளையும் நீக்கி, இரத்தத்தையும் மாமிசத்தையும் எடுத்துக்கொண்டு அவற்றில் இரண்டுபடி சலம்விட்டு ½ படியாக சுண்டக்காய்ச்சி வடித்துக்கொண்டு, மேற்படி சலத்தில் ½ வீசை பசும்நெய் சேர்த்து காய்ச்சிக்கொண்டு, மேற்படி நெய்யை காலை மாலைகளில் ஒரு கரண்டி விகிதம் உபயோகித்து வந்தால் க்ஷயரோகம் நிவர்த்தியாகின்றது. அன்றியும் வேறுமுறை அடுத்த சஞ்சிகையில் கூறுவாம். (தொடரும்.)

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை—நாவல்

(279-வது பக்கத் தொடர்ச்சி)

இராணி.—அது முன்னமே தெரியும். வேறென்ன விசேஷம் ?

கங்காஸிங்.—" அவர் தங்களிடம் ஒரு மனு கூறிக்கொள்ளச் சொன்னார். அதாவது தாங்கள் அவர்மேல் மிக்க கருணைகூர்ந்து அவர் நேரில் தங்களைத் தரிசிக்கும்படி அனுக்கிரகம் புரியவேண்டு மென்பதே " என்றான்.

இதைக் கேட்டதே இராணி திடுக்கிட்டு " என்ன ! என் எதிரில்வர விரும்புகிறாரா ? " என்றாள்.

கங்கா.—" ஆம் மகாராணி. அல்லது அவர் ஒரு கடிதத்தில் தான் கூற வேண்டியதை எழுதி யனுப்புகிறாராம். ஆனால் அது நேராய்த் தங்கள் கைக்கு வந்து சேரும்படியாக ஏற்பாடு செய்யவேண்டுமாம். ஏனெனில் தன்சுற்றத்தார் ஒருவருடைய உண்மை நடவடிக்கைகள் தங்களுக்குப் புலப்படும்படி செய்ய ஒரு விசேஷமான விஷயத்தைத் தங்களுக்கறிவிக்க வேண்டுமாம் " என்றான்.

இராணி ஆகா அப்படியா கூறினார் என்று மொழிந்து, சற்று சிந்தித்துத் தன்கணையாழியை கங்காஸிங்கிடமளித்து,

" இக்கணையாழியை நமது கட்டளையின் அறிகுறியாகக் கோட்டை கவர்னருக்குக் காட்டி திரவியஸிங்கம் பிரபுவைத் தகுந்த பாதுகாவலோடு அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுவா. ஆனால் அவரை யிங்கு அழைத்துவரும் சங்கதி மகாரகசியமாய் நடக்கவேண்டும். ஆகையால் கோட்டையிலிருந்து ஆற்றோரமா யிருக்கும் இரகசிய வழியாகவே அழைத்துவரவேண்டும். அரண்மனைக்குள் வந்ததே அவரைத் தனியே நேராய் என் அறைக்குக் கொண்டுவந்து விட வேண்டும். பத்திரம் பத்திரம் " என்றாள்.

கங்காஸிங் கணையாழியை வாங்கிக்கொண்டு மிக்க தாழ்மையாய் அரசிக்கு வந்தன மளித்துவிட்டுச் சென்றான்.

17-வது அத்தியாயம்.

சுமார் இரண்டுமணி நேரங் கழித்து லெப்டினெண்ட் கங்காஸிங் திரவியசிங்கம் பிரபுவை அழைத்துக் கொண்டு இராணியின் அறைக்குள் நுழைந்தான். அச்சமயம் இராணி உள் அறையிலிருந்து, ஆளரவங் கேட்டதும் வெளியறைக்கு வந்தாள். கங்காஸிங் பிரபுவோடு கூடவே உட்சென்று, கணையாழியை இராணியிட மளிப்பதற்காக, அவளை நோக்கிச் சென்றான். அதற்குள் இராணி மிக்க ஆத்திரத்தோடு கையைவீசி " போ போ ! இவரை விட்டுவிட்டுக் கதவை மூடிக்கொண்டு வெளியில் செல் சீக்கிரம் ! எதற்கும் வெளிக்கூடத்தில் உன் ஆட்களோடிரு " என்றாள். கங்காஸிங் மிக்க கலவரமும் பயமுமடைந்து கணையாழியை யளிக்காமலே துரிதமாய் வெளியிற் சென்றான்.

தானும் பிரபுவும் தனியே யிருப்பதை அறிந்ததே இராணி பிரபுவை யேற இறங்க உற்று நோக்கினாள். அச்சமயம் அவள் வெளிப்பார்வை கெம்பீரமும் கோபமும் அதிகாரமும் பொருந்தியதாகவே யிருந்தது.

ஆயினும் அவள் உள்ளத்தை நோக்குங்கால், அங்கு பலவிதக் கலவரங்கள் அச்சமயம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றனவென்று நுண்ணறிவோடு பார்ப்பவர் அறிந்து கொள்ளலாகும். சற்றுநேரம் அவ்வாறு நோக்கியபின்,

" நீர் நம்மைக்காண விரும்பியதாகவும் ஏதோ, விசேஷமான இரகசிய சங்கதி நம்மிடம் கூறவேண்டுமென்பதே யதற்குக் காரணமென்றும் லெப்டினெண்ட் கங்காஸிங் கூறியதிலிருந்து அறிந்துகொண்டேன் " என்றாள்.

பிரபு.—" ஆம் மகாராணி. தங்கள் பாதங்களிற் பணிந்து நிரபராதிகளாகிய நானும் என் வாலிபசகோதரர்களும் பன்னிரண்டு வருடங்களாய்த் தேசத்துரோகிகளாய் செய்யப்படும்படி என்ன குற்றம் செய்தோம் என்று தங்களிடம் மனுசெய்து கொள்ளவேண்டும் என்று ஆவல்கொண்டிருந்தேன் " என்றார்.

இராணி கோபத்தோடு, " ஓகோ, இதற்காகத்தானா ஏதோ பெரிய விசேஷமிருப்பதாய்ச் சாக்கு கூறினீர்....." என்பதற்குள்,

பிரபு.—" இல்லையில்லை. ஒரு பெரிய விசேஷமே யிருக்கிறது. என்சுற்றத்தார் ஒருவர்மேல் ஒருபெரிய குற்றச் சாட்டிருக்கிறது. அதைத் தங்களிடம் மனுசெய்து கொள்ளவேண்டும் " என்றார்.

இராணி.—எந்த சுற்றத்தார் ?

பிரபு.—என் அம்மான் சுந்தரநாயகம் பிரபுமேல்.

இரா.—" ஆ, சுந்தரநாயகம் பிரபுவா ! ஆனால் அவர் எப்போதும் இராஜவிசுவாசமுடையவர். ஆகையால் அவர் குற்றவாளியென்று நான் நம்பும்படி மெய்ப்பிப்பது மிக்க கஷ்டமான காரியம் என்பதைச் சிந்தித்துப்பேசும் " என்றாள்.

பிரபு " தாங்கள் கூறியதை யறிந்துகொண்டேன். ஆனால் நான் கூறும் சங்கதி பிரத்தியட்சமாய் நிரூபிக்கக்கூடியது " என்று தன் அம்மானாகிய சுந்தரநாயகம்பிரபு முதலில் தன்னை பாதாளத்தில் தள்ளிக் கொல்ல முயன்றதும் பிறகு கண்ணபிரானையும் அப்படியே செய்ய முயன்றதும், அவன்வீட்டில் படிக்கட்டுகளின்கீழ் இயந்திரம் வைத்திருக்கும் சூக்ஷியும், யாவும் விவரமாய்க் கூறினார்.

யாவும் கேட்டுக்கொண்ட இராணி " ஆயினும் அவர் அப்படிச் செய்ய வேண்டிய அவசியமேன் ? உங்களைச் சட்டப்படி பிடித்துக் கொடுத்துவிடலாமே " என்றாள்.

பிரபு.—" எனக்கு நேர் சந்ததியுண்டாகாவிட்டால் என்திரண்டு ஆஸ்தியில் முக்கால்பாகம் அவரைச்சேரும். கண்ணபிரான் இறந்தால் அவன் முழு ஆஸ்தியும் அவரைச்சேரும். அவர் எங்களைப் பகிரங்கமாய்ப் பிடித்துக் கொடுத்து நாங்கள் மரணதண்டனை யடையும்படிசெய்தால், உலகம் அவர் ஆஸ்திக்கு ஆசைப்பட்டு இப்படி சுற்றத்தாரைச் சதிசெய்தார் என்று நிந்திக்கும். அப்படிக்கின்றி இரகசியமாய் எங்களைப் பாதாளத்தில் உள்ள கிணற்றில் தள்ளிக்கொன்று, நாங்கள் தவறி விழுந்ததாய்க்கூறி யெங்களை யடக்கம் செய்துவிட்டு, எங்களுக்காக உண்மையாகவே மிக்க துயரமடைந்தவரைப்போல துக்க உடையுடுத்திக்கொண்டு அபிநயம்செய்தால், ஆஸ்தியும் கிடைக்கும். உலகமும் அவர்விஷயத்தில் பரிதாபங்காட்டும். அவருடைய தந்திரமான சதியாலோசனை இதுவேயாகும் " என்றார்.

இராணி.—" அப்படியிருந்தும் அவர் கண்ணபிரானுக்கு இரக்கம்காட்டும்படி என்னை வேண்டிக்கொள்ள ஒரு ஆளை யனுப்பினார் " என்றாள்.

பிரபு.—" ஆ ! அவர் அவனைக் கொல்ல முயன்று அதில் ஜயமடையாது போகவே, ஏதோ சட்டத்திற்குக்கட்டுப்பட்டு அவனைப் பிடித்துக் கொடுத்

ததுபோலவும், தன்வரையில் அவனிடம் அன்புவைத்து அவனுக்காக பரிந்து பேசுபவர்போலும் வெளிப்படக்காட்டவே யப்படிச் செய்திருக்கிறார். உண்மையில் எக்கே அவன் எப்படியேனும் மரணதண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்கிறானே என்ற திகிலே யிப்போது அவர் மனதில் அதிகமாய் வாதித்துக்கொண்டிருக்கிறது. ஆ, மகாராணி, தயவு செய்து கண்ணபிரானைக் காப்பாற்றும்" என்றார்.

இராணி.—"ஆம் நீர் கூறுவதெல்லாம் உண்மையாகவே யிருக்கவேண்டும், இருக்கட்டும். இப்போது கண்ணபிரானைப்பற்றி பேசுவதை விட்டுவிடும். உமது விஷயத்தைப்பற்றிப் பேசும். அரியநாயகி சற்று முன்பு என்னிடம் வந்தாள். நீர் இரண்டுதரம் என்ன காரியமாய் செல்வராயருடைய மாளிகைக்கு இரகசியமாய்ச் சென்றீரென்பதைப்பற்றி அவள் உண்மையைக் கூறிவிட்டாள்....." என்றதே,

பிரபு.—"மகாராணி, அம்மாது என்ன கூறியிருந்தாலும் நான் அதை மறுத்துக் கூறமாட்டேன்" என்றார்.

இராணி.—"நீர் மறுத்துக் கூறுவதில் ஒரு பிரயோசனமுமில்லை. அரியநாயகி நடந்த சங்கதி யாவும் கூறிவிட்டாள். நீர் அவள்மேல் பிரியங்கொண்டு அவளைக் காண்பதற்காகவே அங்கு வந்ததாகவும், அவளுக்கும் உம்மேல் பிரியமுண்டென்றும் யாவும் ஒளிக்காமல் கூறிவிட்டாள்" என்று கூறும்போது பிரபு திடுக்கிட்டார்.

இராணி அதைத் தவறாய்க் கருதிக்கொண்டு "ஆகா, பார்த்தீரா எனக்கு உண்மை தெரிந்திருக்கிறது" என்றாள்.

அரியநாயகி திரவியசிங்கம் பிரபுவின்மேல் காதல்கொண்டிருக்கிறாளென்று இராணி தவறாய்க் கருதியபோதிலும், இப்போது அரியநாயகி கூறியிருப்பதாய்ப் பிரபுவினிடம் இயம்பியவார்த்தைகள் யாவும் பொய்யேயென்று இதைவாசிக்கும் நண்பர்கட்கு நாம் கூறாமலே விளங்கும். அப்படிச் சாமர்த்தியமாய்க் கூறினால், பிரபுவும் எதையும் மறைக்காது ஒப்புக்கொள்வார், அப்போது நமக்கு உண்மைவிளங்கும் என்பதே இராணியின் கருத்து. அரியநாயகி தையும் விவரித்துக்கூற மறுத்துவிட்டாளேயன்றி எதையும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் இராணிக்கு அவளிடம் சரியான சமாசாரம் கிடைக்கவில்லை. உண்மையில் இவர்களிருவரும் மணம்புரிந்து கொள்வதென்றால் இராணிக்கு மனம் சற்றும் ஒவ்வாதென்பதற்கும், அப்படி நடக்கும்படி இராணி ஒருபோதும் விடமாட்டா ளென்பதற்கும் தக்ககாரணமுண்டென்று இன்னும் போகப்போக தானேவிளங்கும்.

திரவியசிங்கம் பிரபு இராணி கூறிய மொழிகளைக் கேட்டதே திடுக்கிட்டார். சற்று நேரத்திற்குள் "ஓகோ, அரியநாயகி ஏதோ காரணமாய்த்தான் இம்மாதிரி கூறியிருக்கவேண்டும். வெகுவாய்க் கமலாம்பாளுடைய கௌரவத்தைக் காப்பாற்றவே யிப்படிக் கூறியிருக்கவேண்டும். அவள் மகா நற்குணவதி. பிறருக்கு நன்மை செய்யத் தன் கௌரவம் போனாலும் போகட்டுமென்று துணிந்திருக்கிறாள். ஒரு பெண்பிள்ளை அன்னியருக் குதவிசெய்ய இம்மாதிரி நடந்துகொள்ளும்போது, ஆண் பிள்ளையாகிய நாம் பின் வாங்கலாகாது" என்று தீர்மானித்து உடனே இராணியின் பாதங்களில் விழுந்து,

"கருணை பொருந்திய இராக்கினியே! அரியநாயகி கூறிய யாவையும் உண்மையே யென்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன்" என்றார்.

இராணி "எழுந்திரும் எழுந்திரும். நான் இப்போது உமது விஷயத்தில் பெரும்பாலும் நல்ல அபிப்பிராயமே கொள்கிறேன். என், வெகுவாய் உமக்கும் உமது சகோதரர்களுக்கும் பூரண மன்னிப்பே யளிக்கும்படி என் மனம் திரும்பிவிடலாகும்" என்றாள்.

பிரபு மறுபடி நமஸ்கரித்து "மகாராணி, தாங்கள்மட்டும் சற்று தயை புரிந்து அடியேன் விண்ணப்பத்தைக் கேட்டருளினால் நாங்கள் நிரபராதிகளென்றும் எள்ளளவும் தங்களுக்குத் துரோகம் நினைத்தவர்களல்ல வென்றும், விரோதிகள் வேண்டுமென்றே எங்கள்மேல் அவதூறு கூறியிருக்கிறார்களென்றும், தங்களுக்கு நம்பிக்கையுண்டாகும் வண்ணம் ருசுப்படுத்த ஆயத்தமாயிருக்கிறேன்" என்றார்.

இராணி "இருக்கட்டும், இப்பேச்சைத் தற்சமயம் இதோடு நிறுத்துவோம். நான் பிறகு சாவகாசமாய்க் கேட்கிறேன். நீர் இங்கேயே யிரும். நான் மறுபடி யும்மை வந்து பார்ப்பேன்" என்று கூறிவிட்டு அறையிலிருந்து வெளியிற் சென்றாள்.

இராணி அரியநாயகியை விட்டுச்சென்று சுமார் மூன்று மணி நேரமாயிற்று. காப்டென் தினகரன் இராணியின் கட்டளைப்படியே தன்னாலானவரையில் அரியநாயகியின் மனதிற்கு உற்சாகத்தை யுண்டாக்க முயன்றான். ஆயினும் முடியவில்லை. இராணி தன்னிடம் பேசிக்கொண்டிருக்கத் தன் தோழிகளில் ஒருத்தியை யனுப்பாமல் தன் மெய்க்காப்பாளரின் தலைவனாகிய ஆடவனை யனுப்பியதே அரியநாயகியின் மனதிற்குப் பிடிக்கவில்லை. அதோடு அவள் மனமோ சொல்லொணாத கலவரத்திலிருக்கிறது. சிந்தனை பல வழிகளில் ஓடி யலைந்துகொண்டிருக்கிறது. ஆகையால் அவள் மன நாட்டம் சம்பாஷணையிற் செல்லவில்லை. கடைசியில் மூன்று மணி நேரங்கழித்து ஒரு ஆள் அங்குவந்து காப்டென் தினகரனை நோக்கி, "மகாராணி வசந்த அறையிலிருக்கிறார்கள். தங்களை யுடனே யங்கு வரும்படி கூறினார்கள்" என்றான்.

தினகரன் இராணியின் எதிரில் சென்று நின்றதே, இராணி, "ஆ! நீ எங்கிருந்து வருகிறாய்? என்றாள்.

தினகரன் திடுக்கிட்டு "மகாராணியின் கட்டளைப்படி அரியநாயகியிடம் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன்" என்றான்.

இராணி.—"ஹா! ஆம்! ஆம்! இருக்கட்டும், சுமார் மூன்று மணி நேரமாய் அவளிடம் சம்பாஷித்துக்கொண்டிருந்தாயே அவளைப்பற்றி யென்ன அபிப்பிராயம் கொள்ளுகிறாய். அவள் மிக்க அழகுடையவளல்லவா. நமது பரிவாரத்தில் உள்ள அழகியமாதர் அனைவரிலும் இவள் அழகுடையவளல்லவா. ஏன் மௌனமாயிருக்கிறாய். உன் அபிப்பிராயந்தானென்ன?" என்றாள்.

தினகரன்.—"அரியநாயகி தாங்கள் கூறுவதுபோல் மிக்க அழகுடையவளே யென்பதில் சந்தேகமேயில்லை. நான் எவ்வளவுநேரம் சம்பாஷித்தும் அம்மாது மௌனமாகவே யிருந்தாள்" என்றான்.

இராணி.—"ஆ, அவள் நாணமும் அடக்கமுமுடையவளென்று அதனாலேயே தெரிகிறதல்லவா. இன்னொன்று, அவளுக்கு இப்போது சரியாய் முப்பது வயதாகிறது. ஆயினும் உண்மையாய்க் கூறு, பார்வைக்கு இருபத்தைந்து வயதுள்ளவள் போலவே காணப்படுகிறாளல்லவா?" என்றாள். (தொடரும்.)

ஆரணி. தப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

பிங்களவரு மாசிமீ சாலிவாகன 1839, கலியுகாதி 5018,

பசலி 1326-27, கொல்லம் 1092-93,

இங்கிலீஷ் 1918-ம்வரு பிப்ரவரிமீ—மார்ச்மீ

பிப்ரவரிமீ மாசிமீ		வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
12	1	செ	பிர-17-32	சதை-49-59	மரண 60	
13	2	புத	துதி-12-28	பூரட்-46-35	அமி 47 சி	வித்தியாப்பியாசம்
14	3	வி	திரி-6-39	உத்-42-34	சித்த 60	விவாக உபனயனம்
15	4	வெ	சது-0-47	ரேவ-38-44	அமி 60	4-க்குள் மழை
			பஞ்-54-31			
16	5	ச	சஷ்-49-58	அசு-35-3	சித்த 60	சஷ்டி விரதம்
17	6	ஞா	சப்-46-39	பர-33-8	சித்த 60	தென்னை கமுகுநட
18	7	தி	அஷ்-42-47	*கார்-33-14	மர 33 அ	கிருத்திகை விரதம்
19	8	செ	நவ-40-26	ரோக-32-11	அமி 32 சி	பூமுடிக்க
20	9	புத	தச-39-23	மிரு-31-8	சித்த 60	9-க்குள் மழை
21	10	வி	ஏகா-39-29	திரு-33-33	மர 34 அ	பீஷ்ம ஏகாதசி
22	11	வெ	து-40-50	புன-34-15	சித் 34 மர	விவாகம்
23	12	சனி	திர-43-25	பூச-37-39	சித் 38 மர	உதயம் கமுகுநட
24	13	ஞா	சது-47-7	ஆயி-42-57	சித் 43 மர	ஜெபம்பூர்த்திசெய்ய
25	14	தி	○பௌ51-45	மக-48-48	மர 49 சித்	மாசி மகம்
26	15	செ	பிர-56-56	பூர-55-3	சித் 55 அ	கரிநாள்
27	16	புத	துதி-60-0	உத்தி-60-0	அமிர் 60	கர்ப்பாதானம்
28	17	வி	துதி-2-22	உத்தி-1-30	மர 1 சித்	கரிநாள்
1	18	வெ	திரி-8-5	அஸ்-8-35	அமி 9 சித்	கர்ணபரணம் தரிக்க
2	19	ச	சது-12-54	சித்-13-15	ம 13 அமி	
3	20	ஞா	பஞ்-14-33	சுவா-17-58	சித் 18 ம	புஸ்தகங்கள் பிரசுரிக்க
4	21	தி	சஷ்-17-3	விசா-21-28	மர 21 சித்	ருதுசாந்தி செய்ய
5	22	செ	சப்-18-8	அனு-23-49	சித்த 60	முகூர்த்தக்கால் நாட்ட
6	23	புத	அஷ்-17-48	கேட்-24-52	சித் 25 ம	கன்றுகாலிகள் வாங்க
7	24	வி	நவ-16-16	மூல-24-50	சித்த 60	தனியநாள்
8	25	வெ	தச-13-53	பூரா-23-37	சித்த 60	
9	26	ச	ஏகா-9-42	உத்-22-8	சித்த 60	4-க்குள் மழை
10	27	ஞா	துவா-5-31	திரு-18-39	அமி 19 ம	வியாபாரஞ்செய்ய
11	28	தி	திர-1-56	அவி-15-8	சித்த 60	
			சது-54-22			
12	29	செ	•அமா 48-57	சதை-11-16	மரண 60	அமாவாசை விரதம்
13	30	புத	பிர-43-1	பூரட்-7-11	அமி 7 சித்	காரடை நோன்பு

1918வரு மார்ச்மீ

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

தும்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | பிங்களவரு பங்குனிமீ 1உ 1918-ம்வரு மார்ச்மீ 14உ | பகுதி 9

கடவுள் வணக்கம்.

குறிக ளோடுகுண மேது மின்றியன
லொழுக நின்றிடு மிரும்பனற்
கூட லின்றியது வாயி ருந்தபடி
கொடிய வானவ வறைக்குளே
யறிவ தேதுமற வறிவி லாமைமய
மாயி ருக்குமெனை யருளினு
லளவி லாததனு கரண மாதியை
யளித்த போதுனை யறிந்துநான்
பிறிவி லாதவண நின்றி டாதபடி
பலநி றங்கவரு முபலமாய்ப்*
பெரிய மாயையி லழுந்தி நின்னது
ப்ரசாத நல்லருண் மறந்திடுஞ்
சிறிய னேனுமுனை வந்த ணைந்துசுக
மாயி ருப்பதினி யென்றுகாண்
டெளிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

தன்னை யொருவர்க் கறிவரிதாய்த் தானேதானு யெங்குநிறைந்
துன்னற் கரிய பரவெளியா யுலவா வமுதா யொளிவிளக்கா
யென்னுட் கலந்தா யானறியா திருந்தா யிறைவா யினியேனு
நின்னைப் பெறுமா றெனக்கருளா நிலையைக் கொடுக்க நினையாயோ.

நினையு நினைவுக் கெட்டாத நெறிபெற் றுணர்ந்த நெறியாளா
வினையைக் கரைக்கும் பரமவின்ப வெள்ளப் பெருக்கே நினதருளான்
மனைவி புதல்வ ரன்னைபிதா மாடு வீடென் றிடுமெயக்கந்
தனையு மறந்திங் குனைமறவாத் தன்மை வருமோ தமியேற்கே.

* பலநிறம் கவரும் உபலமாய்=தன் எதிரிற்றோன்றும் எந்த நிறத்தை யும் தனக்குள் கவர்ந்து அந்த நிறமாய்த்தோன்றும் பளிங்குக் கல்போல.

ஆனந்த போதினி

பிங்களவரு பங்குனிமீ 1உ

பெண்கல்வியும் நாகரீகமும்.

நண்பர்களே! எந்த நாட்டிலும் காலத்திற்குத் தக்கபடி பழைய ஆசார ஒழுக்கங்களில் சில தள்ளப்படுவதும், புது ஆசார ஒழுக்கங்களில் சில கொள்ளப்படுவதுமாகிய மாறுதல்கள் நேரிடுவது சுபாவமே யாகும். ஆனால் யாவும் நன்மையையும் க்ஷேமாபிவிர்த்தியையும் கருதியே செய்வதாகும். அதிலும் ஊண் உடை முதலியவை அந்தந்தத் தேசத்தின் சீதோஷ்ணம் முதலிய நிலைமைகளைப் பொருந்தியவை யாகும்.

அந்தோ! நமது நாட்டாரோ? ஒன்று, பிடித்தால் கிரேதா யுகத்து ஆசார ஒழுக்கத்தையே கெட்டியாய்ப் பற்றிக்கொண்டிருப்பார்கள். அல்லது ஆசார சீர்திருத்தமென்று கூறிக்கொண்டு முன்னோருடைய இலௌகீக வைதீக ஆசாரங்களை யடியோடு விட்டு, நமக்குக் கெடுதியை யுண்டாக்கத்தக்க அனாசாரங்களில் பிரவேசித்து விடுகிறார்கள். இது கலியுகக்கொடுமையோ, நம்தாய் நாடுசெய்த தீவினையோ, நம்மவர்களது அறிவின்மையோ என்னென்று அறைகுதும்?

பூர்வீகத்தில் நம்நாட்டு மாதர்கள் கல்வி கற்றவர்களாக விருந்தார்களென்பதும், இடையில் இராஜாங்க மாறுதல்களால் நேரிட்ட கொடுமைகள் காரணமாகக் கற்பழிவுக் கஞ்சி மூலையில் பதுங்கியிருக்க நேர்ந்ததால், கல்விப்பயிற்சி குன்றி தற்கால நிலைமைக்கு வந்துவிட நேர்ந்ததென்பதும், இப்போது நம் நாட்டார் சற்று கண்விழித்துக்கொண்டு பெண்கல்வியில் சிரத்தை யெடுத்து வருகிறார்க ளென்பதும் யாவரும் அறிந்த விஷயமே. கற்றுணர்ந்த ஆடவர் அனைவரும் பெண்கள் கல்விப்பயிற்சி யடையவேண்டுவது அவசியமே யென்று கூறுகிறார்களெனினும், பெண்களுக்குக் கல்வியே அனாவசியம் என்றும் அதனால் கெடுதி நேரிடுமென்றும் வாதிக்கும் சிலர் இல்லாமலில்லை. அத்தகையோர் கல்வி யறிவில்

லாதவரே யாவர் என்று ஏனையோர் மொழிவதிற் குற்றமில்லையெனினும், அவ்வாறு பெண்களுக்குக் கல்வி கூடாதென்று அவர்கள் கூறுவதற்குக் காரணமுண்டோ வென்று நடுநிலைமையினின்று சிந்திப்போமாயின், காரணம் ஒன்றேனும் இல்லாமலுமில்லை. அக்காரணம் நேராவண்ணம் தடுப்பதே நெறியாகுமன்றி, அதைக் கொண்டே பெண்களுக்கு அடியோடு கல்வி கூடாதென்று தீர்மானிப்பது ஒருபோதும் அறிவாளர் கொள்கையாகாது.

பெண்களுக்குக் கல்வியே கூடாதென்று சிலர் கூறுவதற்கும் காரணமுண்டென்று நாம் கூறிய தென்னையெனின், நம்மவர்கள் சீர்திருத்தம் என்பதில் அளவுமீறி அதிலும் தகாதனவும் நமக்குத் துன்பத்தை விளைவிக்கத் தக்கனவுமாகிய சீர்திருத்தங்களைக் கையாட முயல்கிறார்களே யன்றி வேறில்லை யென்பதே. இதில் ஆடவர்களைப்பற்றி முன்னே கூறிவிட்டுப் பின்னர் மகளிரைப் பற்றிக் கூறுவாம்.

"பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" என்று ஆன்றோர் அருளியபடி நாமும் மற்ற நாட்டாரைப்போல் முன்னுக்கு வரவேண்டுமென்றும், அன்னியரால் சமகௌரவமாய் நடத்தப்படவேண்டுமென்றும் கருதுவோமானால், முதலாவது செல்வவந்தராக வேண்டும். அதோடு கல்வியும் பெற்றால் பூரணமதிப்படைவோம். அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? நமது பாஷையில் இல்லாத மேல் நாட்டாருடைய சாத்திரங்களையெல்லாம் நமது பாஷையில் மொழி பெயர்த்து நம்மவரைக் கற்கச்செய்து, அந்த ஞானத்தால் நமது நாட்டிலுண்டாகும் பொருள்களைக்கொண்டு நமக்கு வேண்டிய சாமான்களை (கைத்தொழிலால்) செய்தும், இலாபம் தரக்கூடியனவாகிய, அன்னிய நாட்டாருக்கு உபயோகமாகும் சாமான்களைச் செய்து அவர்களுக்கு விற்றும் பொருள் சம்பாதிக்கவேண்டும். கல்வி விஷயத்தில் அன்னிய நாட்டார் எந்தச் சாத்திர ஞானங்களால் மேம்பாடடைந்து வருகிறார்களோ, அந்தச் சாத்திரங்களில் நாமும் பாண்டித்ய மடையவேண்டும். அப்போதுதான் நாம் அன்னியரால் மதிக்கப்படுவோம். இலௌகீக ஆசாரங்களில் நமக்குத் தகுந்தவைகளும் நன்மை பயக்கக்கூடியவைகளும் எவையோ, அவைகளை மட்டுமே அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். அப்படிக்கின்றி நமது தேசத்தையும் மதத்தையும் பற்றிய ஆசார ஒழுக்கங்களை நாம் ஒரு

போதும் கைவிடலாகாது. விட்டாலோ உலகிலுள்ள பல ஜாதியாரில் நாமும் ஒன்று என்ற பகுப்பே யில்லாமற்போய்விடும். அதாவது "நாம்" என்ற இருப்பே யில்லாது போய்விடும்.

இனி நாம் அப்படி நடந்துவருகிறோமா வென்று பார்ப்போம்—

வைதீக ஆசாரம் அதாவது மதாசார ஒழுக்கங்களில் நாம் உலகில் இன்னொருவரிடம் இருந்து கற்றுக்கொள்ளவேண்டிய அக்கரை சற்று மில்லையென்று கூறும்படியான நிலைமையில் நம்மை வைத்திருப்பதற்காகப் பரம்பொருளை வாழ்த்திப் போற்றக்கடவோமாக.

இனி முதலில் இலௌகீக ஆசாரத்தில் இரண்டொன்றை யெடுத்துக் கொள்வோம்:—

மேல்நாட்டார் வெளிச்சுத்தம் அதாவது தேகத்தின் மேலணியும் உடை முதற்கொண்டு வீடு, சாமான்கள், பாத்திரங்கள், ஆயுதங்கள், கருவிகள், முதலியவற்றைச் சுத்தமாய் வைத்துக்கொண்டிருப்பதில் மிக்க நோக்கமுடையவர்களா யிருக்கிறார்கள். அவ்விஷயத்தில் நாம் அவர்களைப் பூரணமாய்ப் பின்பற்றுகிறோமா? ஒருக்காலுமில்லை. மற்றப்படி என்ன செய்கிறோம் என்றால்—

தலைமயிரை அனுசாரமாய் வெட்டி அவர்களைப்போல் பூட்ஸ், காற்சட்டை, கழுத்துப்பட்டை முதலிய (நமக்கு அனுவசியமான) வற்றால் வெளி வேடந் தரித்துக்கொண்டு, பணம் சம்பாதிப்பதற்குப் பதில் அதிக செலவிற்கு வழியுண்டாக்கிக் கொள்வதும், இனி உடுக்கும் உடைக்கே அன்னியர் தயவை யெதிர்பார்க்கச் செய்வதுமான நிலைமையை நோக்கிப் பிரயாணம் செய்கிறோம். இது மட்டோ நமது இச் செய்கையால் நம் நாட்டின் நெசவு முதலிய கைத்தொழில்கள் கொஞ்சநஞ்ச மிருப்பதையும் ஒழியவைத்து தரித்திரத்தை யதிகப் படுத்துகிறோம். அந்தோ, நண்பர்களே! நமது சீர் திருத்தம் எத்தகைய நேர்மையான வழியில் செல்கிறது பாருங்கள்!

மேல் நாட்டார் கூட்டமாய்ச் சேர்ந்து ஒரு விஷயத்தை நடத்த வேண்டுமாயின், ஒரு தலைவனை யேற்படுத்திக் கொண்டு அவன் சொற்படி யாவரும் நடந்து, தங்களுக்குள்ள விரோதம் முதலியவற்றைக் கருதாது, குழப்பமின்றி எடுத்த காரியத்தைப்

பற்றி ஒழுங்காய்ப் பேசி முடித்து அதன்படி அதை நிறைவேற்றுகிறார்கள். நம்மவர்களோ அதைப் பின்பற்ற சிந்திப்பதே கிடையாது. ஆரம்பத்திலேயே நான் பெரியவன் நான் பெரியவன் என்று சண்டை பிடித்துக்கொண்டு, இரண்டு கட்சியாய்ப் பிரிந்து ஒரு கட்சி நாட்டிற்கு நன்மைசெய்ய முயன்றால், மற்றொரு கட்சியார் அதை நிறைவேற வொட்டாது செய்ய சகல முயற்சியும் செய்கிறார்கள்.

நமது முன்னோர்கள் தர்ம யுத்தத்தில் முன்வைத்த காலைப் பின்வைக்காத சுத்த வீரர்களாய், அரசனுக்காகவும் தாய் நாட்டிற்காகவும் புரியும் யுத்தத் தொழிலை வீரசொர்க்கம் என்னும் உயர் பதவியை யளிக்கும் புகழத்தக்கத் தொழிலாய்க் கொண்டிருந்தார்கள். தாய்மார்கள் மிக்க உற்சாகத்தோடும் தீரத்தோடும் சந்தோஷத்தோடும் தங்கள் புத்திரர்களையும் கணவர்களையும் யுத்தத்திற் கனுப்பி வந்தார்கள். மேல்நாட்டார் இப்போதும், மிருகத்தன்மையோடாயினும், வீரத் தன்மையை மதித்து வருகிறார்கள்.

நம்மில் பெரும்பாலோர் குல தர்மத்தை யிழந்து,—"பந்திக்கு முந்திக்கொள் படைக்குப் பிந்திக்கொள்" என்று வெட்கக்கேடான பழமொழியைப் பிதற்றிக்கொண்டும், அத்தொழிலை யிழிவாய்க் கூறிக்கொண்டும், நம் முன்னோர் பேருக்கே அகௌரவத்தை யுண்டாக்குகிறோம்.

மேல்நாட்டார் கைத்தொழில் வர்த்தகம் இவற்றைக் கௌரவத்தொழில்களாக மதித்து அவற்றில் மிக்க சிரத்தை யெடுத்துக் கொண்டு அவற்றிக்கு வேண்டிய சாத்திரங்களைக் கற்று அவற்றால் மிக்க செல்வம் சம்பாதித்து, செல்வத்தால் எல்லாவற்றையும் பெற்று கௌரவ மடைகிறார்கள்.

நாமோ அத்தொழில்களை இழி தொழில்களென அலக்ஷியம் செய்துவிட்டு, அதமமாகிய சேவகவிர்த்தியை விரும்புவதோடு நாகரீக சீர்திருத்தமென்ற மூடமயக்கேறி, நமதுநாட்டுப்பொருள்களை இகழ்ந்து அயல்நாட்டுப் பொருள்களைப் புகழ்ந்து, நமது நாட்டுப் பொருட்களை அன்னிய நாடுகளுக்குச் சென்று வேற்றுருவடைந்து திரும்பி நம்மிடம் வருகிற தென்பதையு மறியாது, அவற்றிற் கதிகவிலை கொடுத்து வாங்கி நமக்கு வறுமையைத் தேடிக்கொள்ளுகிறோம். இவ்வாற்றால், பயனுள்ள சீர்திருத்த வழிகளில் பிரவேசிப்பதை விட்டு நேர்மாறாக நமக்குத் துன்பத்தை

விளைவிக்கும் வழிகளில் பிரவேசிக்கும் நாம், மயிலைக்கண்டு வான் கோழி யாடிக் களிப்பதுபோல், நாமும் மேல் நாட்டாரைப் போல் ஆய்விட்டதாய் மனப்பால் குடிக்கிறோம். ஒவ்வொரு அறிவிலி, தான் காற்சட்டை முதலியவற்றை மாட்டிக்கொண்டு ஆங்கிலம் பேசுவதாலேயே, தான் மேல் நாட்டா னாய்விட்டதாய் மமதை கொண்டு, வேஷ்டி யுடுத்திருக்கும் தன் இனத்தானை யவமதிப்பாய் நடத்துகிறான். இம்மட்டோ, இவ்வாறு நேர்மாறாய் நடக்கும் நாம் (பூ முடித்துக்கொள்ள ஆசையுடைய ஒரு கன்னிகை குட்டையா யிருக்கும் தன் கூந்தலைச் செழிப்பாய் வளரச் செய்வதை விட்டு, உள்ளதையும் மழுங்க மொட்டை யடித்துக்கொண்டு, மனமகளுக் குச் சரியாய்த் தானும் பூ முடித்துக்கொள்ளக் கூடும் என்று நம்பி யிருப்பது போல்) நாமும் மேல் நாட்டாரோடு சம்மதிப்பு பெறு வோமென்று எண்ணிக் கொள்கிறோம். அந்தோ என்ன பேதை மதி!

இனியேனும் உண்மையில் நமக்கு நன்மை பயக்கத்தக்க சீர் திருத்தங்கள் எவை, எந்த மார்க்கங்களில் சீர்திருத்த மடைந்தால் மற்ற நாட்டார்கள் நம்மை யலட்சியமாய் மதிக்காமல் கௌரவ மாய் நடத்துவார்கள், எத்தகைய முயற்சிகளால் மேல்நாட்டார் கள் இப்போதிருக்கும் பதவியை யடைந்தார்கள், என்பனவற்றை நன்கு சிந்தித்தறிந்து, நாம் இப்போது செல்லும் அபாய வழிகளி னின்றும் திரும்பி, நன்மையளிக்கும் நேர்வழியிற் செல்ல நல்லறி வளிக்கும் வண்ணம் கருணாநிதியாகிய பரம்பொருளை மனப் பூர்வ மாய்த் துதிப்போமாக. (தொடரும்)

ஓம் தத்ஸத்.

ஆலய வழிபாடு

ஆலயம் என்பது யாது? அவ்வாலயத்தை வழிபடுதலால் அடையும் பலன் கள் யாவை? என்று விசாரணைசெய்யப் பிரவேசிக்கின்றமையால் தற்போது எடுத்துக்கொண்ட அப்பெரும் விடயத்திற்கு "ஆலயவழிபாடு" என்னும் பெயர் அளிக்கப்பட்டது.

"ஆலயம்" என்னும் சொல்லைப் பிரிக்குமிடத்து ஆ—லயம் என்று நிற் கும். இவற்றுள் முதல் நின்ற 'ஆ' என்னும் எழுத்தானது ஆன்மாவை யுணர்த்தும். எவ்வாறெனின் ஆன்மா என்னும் பதத்தின் முதலில் நிற்கும் 'ஆ' காரம் ஆலயம் என்பதின் முன்நின்று பசுவென்னும் பொருளை யுணர்த் தும். பசுவென்றால் (பாசத்தால் பந்தப்பட்டிருக்கும்) ஆன்மா வென்பது

பொருள். ஆகவே ஆலயம் என்னும் பதத்தின் முன்நிற்கும் 'ஆ' காரமானது ஆன்மா என்னும் பொருளை உணர்த்தி நின்றது. பின்னின்ற லயம் என்னும் பதத்திற்கு ஒடுங்குதல் அல்லது ஐக்கியப்படுதல் என்று பொருள். ஆகவே ஆல யம் என்னுஞ் சொல்லானது "ஆன்மா ஐக்கியப்படுதல்" என்னுங் கருத்தைக் கொடுக்கின்றது. வழிபடுதல் என்றால் மார்க்கத்தில் பொருந்துதல் என்று அர்த்தம். ஆகவே எடுத்துக்கொண்ட விஷயமான ஆலயவழிபாடு என்னும் வாக்கியமானது "ஆன்மா ஐக்கியப்படும் மார்க்கத்தில் பொருந்துதல்" என் னும் பொருளை யுணர்த்துகின்றது.

இனி ஆன்மாவென்பது பரமான்மா, சீவான்மாவென இருதிறப்படும். ஆணவம், மாயை, காமியமாகிய மும்மலங்கள் என்றுமில்லாது, அகண்டாகார மாய், எங்கணும் வியாபித்து, (அவனது) திருவருளால் அனுபவித் துணரற் பாலதாகிய முழுமுதற் கடவுளுக்குப் பரமான்வாவென்றும், மும்மலங்களிலும் கட்டுப்பட்டு, பிறப்பிறப்புகளிற் கிடந்துழன்று, பொறிவழிப்பட்டுச் செல்லும் ஆன்மாவிற்குச் சீவான்மாவென்றும் பெயர். பரமான்மாவும் சீவான்மாவும் ஏககாலத்திலே உளவேயாயினும், முழுமுதற் கடவுளாகிய பரமான்மாவும் மும் மல சம்பந்தமான சீவான்மாவும் சமனுறமாட்டாது. எப்படி நம் இந்தியாவை யாளுகின்ற மாக்ஷிமை தங்கிய ஜ்யார்ஜ் சக்கிரவர்த்தியாரும் பிரசைகளாகிய நாமும் ஏககாலத்திலேயே யிருக்கின்றோமாயினும், சமமாகமாட்டோமோ அது போலவே பரமான்மா உயர்வுதான். சீவான்மா தாழ்வுதான்.

இனித் தாழ்வான சீவான்மாவானது உயர்வான பரமான்மாவை யடையப் பிரயத்தனப்படுகிறது. எவ்வாறெனின் ஓர், தனவந்தனிடத்தில் ஏழைகள் போய்ப் பலவகைப்பட்ட ஊழியங்கள்செய்து அதன்மூலமாகத் தாம் அவனிட முள்ள திரவியத்தைப்பெற்றுச் சுகமடைய விரும்புகின்றார்களோ, அதுபோ லவே தாழ்வான சீவான்மாவானது உயர்வான பரமான்மாவிடத்துப் பத்தியைச் செலுத்தி அதன்மூலமாக அவரிடமுள்ள பேரின்ப சுகத்தைத் தான் பெறு தற்கு முயற்சிக்கின்றதென அறியப்படுகின்றது.

இனி அந்தக் கடவுளை வணங்குதற்கு எச்சென்மம் சிறந்ததென் ஆராயப் புகின் ஓரறிவுயிர்தொடங்கி ஆறறிவுயிர் இறுதியாயுள்ள சீவராசிகளுள் நன்மை தீமை இவையெனப் பகுத்துணரும் அறிவானது அமையப்பெற்ற இம்மக்கட் சாதி ஒன்றே சிறப்புடைத்தாம். அங்ஙனம் பகுத்தறியும் தன்மையும் ஆன்மா சரீரத்திலிருக்குங்கால் ஏற்படுமேயன்றி இக்கூட்டைவிட்டு ஆவி பிரிந்திடின் பகுத்தறியும் தன்மையானது சிறிதும் ஏற்படமாட்டாது. ஆகவே இம்மானிட ஜென்மமே கடவுளைத் தெரிந்துகொள்ள இன்றியமையாத ஜென்மமென்றும், ஆன்மா உடலைப் பிரிவதற்கு முன்னமே கடவுளைத் தெரிந்துகொண்டு அவரிட முள்ள பேரின்ப சுகத்தைப் பெறுதற்கு பிரயத்தனப்படவேண்டியது அவசிய மென்றும் ஏற்படுகிறது.

கடவுளை எப்படித் தெரிந்துகொள்ளுவது? அவர் எப்போதுதோன்றுவார்? என்றால், அவர் விறகின்கண் மறைந்து கிடந்த தீ அவ்விறகினை ஒன்றோ

டொன்று தேய்த்துக் கடையும்போது அதிற்றோன்றி நின்றவாறுபோலவும், பாலின்கண் நெய்போலவும், எள் விதையின்கண் எண்ணெய்போலவும் யாண்டும் பரந்து வியாபித்து நிற்பவராதலின் அன்பெனும் கோல் கட்டு அறிவெனும் கயறுகட்டி யிழுத்துக் கடையவே வெளிப்பட்டுத் தோன்றி நின்றனுக்கிரகஞ் செய்வார். இதுபற்றியே,

" விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்கட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே "

என்றார்கள் அப்பர் சுவாமிகள்.

எங்கும் வியாபித்து அரூபமாய் விளங்கும் கடவுளை ஓரிடத்தில் ஆவாகனஞ்செய்து வணங்கல் பொருந்துமோ வெனின், பொருந்தும். எவ்வாறெனின், கடவுள் உருவம் அருவம் முதலிய எல்லாப் பகுப்புகளையும் கடந்து எங்கும் நிறைந்த பரிபூரணப்பொருளாயுள்ளவர். மனதிற்கும் வாக்கிற்கும் பொறிபுலன்கட்கும் எட்டாதவர். ஆதலால் அவர் யாவர் கண்ணுக்கும் புலப்படுகிறவரல்ல. பரிபூரணஞானிகட்கே அவர்கள் கருதியவண்ணம் பிரத்யக்ஷமாவர். அப்பர் சம்பந்தாதியர் சரித்திரங்கள் அதற்கோர் அத்தாக்ஷி. ஆதலால் நாம் நம்முடைய ஆருயிர்த்தோழர் ஒருவரை நேரிற் காணவிடினும் அவருடைய பிரதி பிம்பமாகிய ஓர்படத்தைக் கண்ணுறின் அவரை நேரிற் கண்டதுபோல நமக்கு ஆனந்த முண்டாகிறது. அங்ஙனமே ஈசுரனைப் பிரத்தியட்சத்தில் காண நம்மால் சிறிதும் ஏலாதாயினும், அவரை யோர் உருவமாகப் பாவித்துக் கண்டால், அச்சமயம் நமக்கு ஓர்விதமான அன்பும் இன்பமும் பக்தியும் பிறக்கின்றன. இதுகாரணம்பற்றியே நாம் ஆலயங்களில் விக்கிரகங்களை ஸ்தாபித்து பூசிப்பது.

கடவுளுக்கு முக்கியமாக பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மாவாகிய எட்டும் சரீரமாக விளங்குவதாய் வேதத்திலும், பெரியோர்களாலும் கூறப்பட்டிருக்கின்றது. சகல பொருள்களிலும் சூரியன் மிகப் பிரகாசமானதும், அதிகபரிசுத்தமானது மாகையால் பரமான்மாவுக்கு அதுவே பிரதான சரீரமாகக் கொள்ளப்படுகிறது. இது பற்றித்தான் இருக்குமுதலிய வேதங்களில் காயத்திரி மந்திரத்தைச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. காயத்திரி மந்திரத்திற்கு சூரிய நமஸ்காரம் விடயமாகும். சூரியனைப் பூசிப்பது அதன்கண் வீற்றிருக்கும் பரமான்மாவை யுத்தேசித்தே பூசித்தலாகும். இதுபற்றியே,

" அருக்கன் பாதம் நினைகுவ ரந்தியில்
அருக்க னாவா னரனுரு வல்லனே
யிருக்கு நான்மறை யீசனை யேதொழுங்
கருத்தினை யறியார் கன்ம னவரே. " (அப்பர்)

என்னும் திருவாக்குமெழுந்தது. மேற்சொன்ன எட்டிடங்களும் கடவுளுக்கு முக்கிய சரீரமாக விளங்குகின்றன என்பது அப்பர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

" இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி யியமான னாயெரியுங் காற்று மாகி
யருநிலைய திங்களாய் நாயி றாகி யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
* * * * * * *

என்னும் தமிழ்வேதத்தால் அறியப்படுகின்றது.

நம்முடைய சரீரத்தில் அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்த மயகோசம் என்னும் பஞ்சகோசங்கள் அடங்கியிருப்பதுபோல அண்டத்திலுள்ள ஆலயங்களிலும் பஞ்சகோசங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுபற்றித்தான் ஆலயங்களில் ஐந்து பிரகாரங்களும், ஐந்துவாசற்படிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆலயத்தின்கண் உள்ள முதல்பிரகாரத்தை வலம்வந்தால் அன்னரசத்தால் சமையப்பட்ட தூல சரீரத்தைக் கடந்தவர்களாகின்றோம். இரண்டாவது பிரகாரத்தில் கணபதிவீற்றிருக்கின்றார். ஆலயத்துட்சென்றவுடன் நாம் கணபதியை வழிபடல்வேண்டும். எதுபற்றியெனின் ஆறு ஆதாரங்களுக்கும் மூலாதாரமே பிரதானமாதலாலும், அம்மூலாதாரக் கடவுள் கணபதியாதலாலும், அவருக்கு விக்கின ஈசுவரர் என்ற நாமமும் உண்டாதலாலும் நம்முடைய பத்திக்கு யாதொரு விக்கினமும் நேராவண்ணம் அருள்புரியும்படி அவரைப் பிரார்த்திக்கவேண்டும். இன்னும் பலிபீடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பலியென்றால் நிவேதனம்—பீடம் என்றால் இடம்—அங்கு ஆணவமலத்தைப் பலியிட்டு அதாவது நீக்கிவிட்டு, பிற்பாடு உட்செல்ல வேண்டியது விதியாதலின், பலிபீடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நந்திதேவர் மூலத்தானத்துக்கு நேர்முகமாக அமைக்கப்பட்டிருக்கிறார். இப்படி அமைக்கப்பட்டிருப்பதற்கு காரணம் ஆன்மா கடவுளைநோக்கிச் செல்லவேண்டுமென்பதை உணர்த்தும் பொருட்டே. ஐந்துவாசல்களிலும் முதல்வாசற்படி அகன்றதாயும் மற்றவை முறையே ஒன்றைவிட ஒன்று குறைந்ததாயும் இருக்கின்றன. இவ்விதம் அமைக்கப்பட்டிருப்பது, அன்னமயம் முதலிய ஐந்து கோசங்களும் ஒன்றுக்குள் ஒன்றாக விருப்பதால். இவ்வாறு ஐந்தாயிருப்பது முதல் வாசற்படியைக்கடந்து பிராணமயகோசத்தையும், இரண்டாவது வாசற்படியைக் கடந்து மனோமயகோசத்தையும், மூன்றாவது வாசற்படியைக்கடந்து விஞ்ஞான மயகோசத்தையும், கடைசியில் நான்காவது படியைக்கடந்தால் ஐந்தாவது வாசலிலுள்ள ஆனந்தமயகோசத்தை அடைந்தவர்களாகிறோம் என்பதைக் குறிப்பிடுகிறது.

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தின் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற்பூதம்.

என்றபடி தச்சனால் செய்யப்பட்ட மர யானையைப் பார்த்து அதன் உருவத்தைப்பற்றி விவகரிக்கும்போது யானை என்ற தோற்றம் மட்டும் இருக்கிறதேயன்றி மரம் என்ற தோற்றம் மறைந்து விடுகிறது. அதைவிட்டு இது எந்த மரத்தால் செய்யப்பட்டது என்று கவனிக்கும்போது மரம் மட்டும் தோன்றுகின்றதன்றி யானைபோனவிடம் தெரியவில்லை. அதுபோல நாம் கோவிலுக்குள் போகும்போது கோவில் கட்டிடம் சரியான வேலைதானா, கல் நன்றாக கொத்தப்பட்டிருக்கின்றதா, விக்கிரகம் என்ன உலோகம், உருவம் நன்கு அமைந்திருக்கின்றதா என்பன போன்ற எண்ணங்கள் மனதில் உண்டாகாமல் ஆலயத்தின் மொத்த அமைப்பும் அதிலுள்ள கொப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மணிமண்டபம் மகாமண்டபம் முதலியன போன்றவைகளும், பலவிதமான தெய்வங்களின் உருவ அமைப்பும் என்னென்ன விதமான உள் அர்த்

தங்களை சூசிப்பிக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன வென்பதையும், மற்றும் அந்தந்த காலங்களில் நடைபெறும் உத்ஸவாதிகளின் நோக்கங்களையும் அறிந்து உண்மையான முழுபத்தியோடு ஈச்வரனை வணங்குதலைவிட சிறந்தது ஒன்றுமில்லையென்று ஏற்படுகிறது.

(இது சுவாமி வேதாசலம் அவர்கள் உபந்நியாசத்திலிருந்து
சுருக்கியெழுதப்பட்டது)

V. மீனாக்ஷிசுந்தரம், ஸ்ரீவில்லி புத்தூர்.

குறிப்பு:—நமது தேகத்தையே ஒரு ஆலயமாய்க்கொண்டு ஆண்டவன் அதற்குள்ளாகவே யிருக்கிறாரென்பதையும் அந்த ஆண்டவனை நாம் தரிசிக்க வேண்டுமென்ற குறிப்பையும் யுணர்த்தவே ஆலயங்களமைக்கப்பட்டிருக்கின்றன. ஆலயங்கள், அவைகளில் நடக்கும் உத்ஸவாதி சடங்குகள், நாம் லலாடத்தில் தரிக்கும் குறிகள் இவை நூல்கள் அழிந்துவிட்டாலும் நமது வேதத்தின் உண்மைகளும் மெய்ஞானமார்க்கமும் நமது நாட்டில் என்றும் மறையாவண்ணம் காப்பாற்றுகின்றன. எவ்வாறெனில், ஆலயங்களின் அமைப்பு முதலியவைகளையும், அங்கு நடக்கும் விஷயங்களின் காரணங்களையும், விபூதி முதலியவற்றின் விருத்தாந்தங்களையும் பற்றி ஒருவன் ஆராய்ச்சி செய்யத் தொடங்குவானேல், காண பரம்பரையாகவே எல்லாவுண்மைகளையும் கேட்டுணர்வாகும். நமது முன்னோருடைய அபூர்வஞானமும், என்று மழியாத இவ்வான்மார்த்த உண்மைகள் நமது தாய்நாட்டில் [illegible] வண்ணம் ஏற்பாடு[illegible] அவர்களது புத்தி சாமர்த்தியமும் இவைகளால் நன்கு [illegible]ளங்குகின்றன.

தேகத்தைப் போன்றது ஆலயம் என்ற ஐதீகப்படி, ஒவ்வொரு அம்சத்திலும் ஒத்திருக்கும் வண்ணம் அமையப்பெற்றிருக்கும் ஆலயம், பஞ்சபூத ஸ்தலங்களில் ஆகாயத்தலமும்,

" * * * * *

பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்தபோதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
வெச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சநிர்பர்
* * * * * "

என்று நம் தாயுமானவர் அருளியதுபோல், சமயபேதமற்ற நிலையென எல்லா சமயத்தவர்களும் வணங்கத் தகுதி யுடையதுமான சிதம்பரக்ஷேத்திரமேயாகும்.

இந்த க்ஷேத்திரம் ஒருயோகி வடக்குசிரசும் தெற்குபாதங்களுமாகவைத்து சயனித்துக்கொண்டால் அத்தேகத்தின் அமைப்பு எவ்வாறிருக்குமோ, அவ்வாறே அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இரண்டொரு அத்தாக்ஷிகன்மட்டும் கூறுகிறோம். ஆறுதார அமைப்புகளையும் அங்குகாணலாம். கடவுள் நமது உள்ளத்திலிருக்கிறார் என்றபடி, அங்கு மூலஸ்தானம் அமைந்திருக்கிறது. அதாவது இருதயம் தேகமத்தியிலிராமல் மார்பின் இடதுபக்கம் இருப்பது போலவே அங்கும் சபாநாயகரிருக்கும் பொன்னம்பலம் ஆலயத்தின்மையைக் கோட்டிற்குச் சற்று இடதுபக்கமேயிருக்கிறது. அம்மேடையில் 5-கம்பங்களேயுண்டு. அவை பஞ்சபூதங்கள். மூலதரிசனமாகிய இரகசியதரிசனம், கடவுள் நாமரூபமற்றவர் என்பதைக் குறிக்க வெட்டவெளியாகவே யிருக்கிறது. தேகத்திலுள்ள ஒவ்வொரு தத்துவங்களுக்கும் அங்கு குறிகளைக்காணலாகும். அதனால் பொன்னம்பலத்திலுள்ள தங்க ஓடுகள், அவற்றில் பதித்துள்ள ஆணிகள் முதற்கொண்டு தத்துவங்களின் எண்ணிக்கைக்குச் சரியான கணக்கின்படி

யமைந்திருக்கக் காணலாம். ஆன்மா தேகத்தில் சாக்கிரத்தில் நிற்குமிடம் புருவமையம்—அங்குதான் அறிவு நிலையில் நிற்பது. அறிவு பல்லாயிரங்கிளைகளாக ஓடுமிடம் மூளை. மூளையிருக்க வேண்டியவிடத்தில், அதாவது அறிவு ஆயிரக்கணக்கான பிரிவுகளாய்ப் பிரிந்தோடுமிடத்தில்தான் ஆயிரக்கால் மண்டபமிருக்கிறது. அங்கு நடேசருக்கு அபிஷேகமாகுமிடமே புருவுமையஸ்தலம். நித்திரையிலிருந்து விழிக்கும் போது அறிவு முதல் முதல் உதயமாகுமிடம் புருவமையமே. அதனாற்றான் தேவர்கள் துயிலெழும் பிராதக்காலமாகிய மார்கழி மாதத்தில் நடராஜருக்கு ஆயிரக்கால் மண்டபத்தில் அபிஷேகம் நடைபெறுகிறது. ஏழு பிரகாணம், சத்த தாதுக்களாலாகிய தேகம், இதில் கடவுளிருக்கிறார் என்று குறிப்பிடுகிறது. ஐந்து பிரகாணங்கள், இப்பஞ்ச கோசமாகிய குகைக்குள் நீ யிருக்கிறாய், இவ்வைந்து கோசங்களினின்றும் வெளிப்படுவாயேல் மோக்ஷமடைவாய் என்று தெரிவிக்கிறது. ஐந்துபிரகாணம் எதற்காக? என்ற கேள்விக்கு விடையொன்றுமே மோக்ஷத்திற்கு மார்க்கத்தை வெளியிடுகிறது. இப்படி பலவிருக்கின்றன.

இந்த உண்மைகளைப்பற்றி யாராய்ந்தறியாமலே சிலர் ஹிந்துக்கள் கல்லையும் செம்பையும் வணங்குகிறார்கள் என்று கூறுகிறார்கள். இது எத்தகைய அறிவிலிகளின் கூற்றென்பது மேல்கண்ட விவரங்களாலெளிதுவிளங்கும். சிலர் இதற்கு கடவுள் கோபிப்பாரென்கிறார்கள். இது பின்னும் மூடமதியினர் கூற்றேயாகும். கடவுள் நாமரூபமற்றவர் என்ற உண்மை நமது வேதத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிற அவ்வளவு பூரணமாகமும் விரிவாகவும் வேறெந்த மதாசாரியர்கள் நூல்களிலும் நிரூபிக்கப்படவில்லை. அவ்வாறு ஒருவுருவமும் ஒருநாமமு இல்லாத அவர் எல்லாஉருவங்களும் அண்டரண்ட சராசரமுழுமையும் தாமாகவே உள்ளும் வெளியும் நிறைந்திருக்கிறார். அப்படிப்பட்டவரை நாம் காணமுடியாததால் அன்பினால் அவர் சிருஷ்டிகளில் சிறந்ததான மானிடவுருவமாய் ஞாபகார்த்தமாகப்பாவிக்கிறோம். இதற்கு அவர் கோபிப்பதாயின், நமது அரசரை நாம் சிலையுருவமாய் வெயில்மழை படும்படியான விடத்தில் வைத்திருப்பதற்காக அரசர் நம்மைத் தண்டிக்கவேண்டும். அன்பினால் நாம் அப்படிச்செய்வதால் அதற்கு அவர் சந்தோஷமே யடைகிறார். அந்தோ மனிதருக்கே இத்தகைய அறிவிருக்கும்போது, "கடவுளுக்கு அவ்வளவு அறிவில்லை, அவர் தண்டிப்பார்" என்று கருதுவது எத்தகைய மூடமதியாயிருக்கவேண்டும். கடவுளும் நமது நடக்கையைக் கருதிபலனளிப்பதில்லை. நமது மனோபாவத்தைக் கருதியே பலனளிக்கிறார். அன்போடு தம்மேல் கல்லெறிந்த சாக்கியர்க்கும், தமது திருமேனிமேல் செருப்புக்காலைவைத்து, எச்சில்மாமிசத்தை நிவேதித்து, எச்சில் நீரை மேல் ஊற்றின கண்ணப்பருக்கும் மிக்க கிருபையோடு மோட்சமளித்திருப்பதும், தம்மேல் புஷ்பக்கணை யெய்த மன்மதனைச் சாம்பலாய் எரித்ததுமே யிதற்குப் போதிய சான்றாம். பத்திரிகாசிரியர்.

தன்னைத் தானே சீர்திருத்தல்.

நானிவன் றானவனென் றேநவின் றறியாதே யுழன்ற நாயினேற்குத்
தானமரு நிலையிதுவே தாந்தவுப சாந்தமிது தானே தானா
மோனமொழி யிதுவெனநான் மறையினுப நிடதமொழி முடிவு காட்டு
ஞானகுரு தேசிகனை நாவகத்தும் பாவகத்து நவிற்று வாமே.

மனிதன் தன்னைவிட அன்னியமாகிய, வெளிக்காட்சியும், ஆசையும் எதுவரையில் அதிகமாக தன்னிடத்தில் கொண்டிருக்கிறானோ, அதுவரையில்

இந்திரிய சுகங்களுக்கப்பால் கடக்கமாட்டான். தன்னைச்சீர்படுத்திக்கொள்பவன் இந்த வெளிக்காட்சி இந்திரியங்களை நிக்ரகிக்கவேண்டும். ஒருவன் ஒரு விருக்ஷத்தில் ஏறும்போது கீழிருப்பவன் அவன் காலைப்பிடித்து பலமாயிழுத்தால் அவன் எப்படி மேலேறுவான்? வெளிக்காட்சியின் சம்பந்தத்தால் நம் சூக்ஷ்மேந்திரியங்களும், மனம் புத்திகளும், ஜீவாத்மாவும் மலினமாகி தன்னைத்தானே தெரிந்துகொள்ளக்கூடாமல் போகிறது. புழுதிக்கூட்டத்தில் நம்முடைய உருவத்தை நாம் காணமுடியாததுபோல தீயவொழுக்கங்களில் இருப்பவர்களும் சுயநலத்தைக் கோரப்பட்டவர்களும் தங்களைத் தாங்களே அறியமாட்டார்கள்.

தானே மேலானவனென்றும், மானமுள்ளவனென்றும், சாமர்த்தியனென்றும், நிர்த்தோஷியென்றும், தன்மதத்தில் மட்டுமே மோட்சமுண்டென்றும், நினைப்பதனால் மானிட ரொருவர்க்கொருவர் துவேஷிப்பதும் கலகம் செய்வதும், பிரிவடைவதும், துக்கிப்பதுமாக சம்பவிக்கின்றது. ஆதலால் ஒவ்வொருவரும் முதலில் தங்கள் குணதோஷங்களைத் தாங்களே குதூஹலத்துடன் விசாரணை செய்யவேண்டும். இந்த அப்பியாசம் இல்லையாயின், பிறர் சத்குணங்கள் சகிதம் துர்க்குணங்களென்றும், தன் துர்க்குணங்கள் சகிதம் சத்குணங்களென்றும் நினைக்கக்கூடிய சிறையிலகப்பட்டுக் கொள்ளக்கூடும்.

தன்னைச் சீர்திருத்திக் கொள்ளாவிடில் உண்டாகும் லோபங்கள் பல. 1. தன்னிச்சையாய்ப் பேசுதல். 2. குணத்தை தோஷமென்றும் தோஷத்தைக் குணமென்றும் நினைத்தல். 3. நிஜத்தை ஒளித்தல். 4. பொய் புரட்டுகளை அனுபரித்தல். 5. விசாரணை நசித்தல். 6. பாபபுண்ணிய பேதமற்றிருத்தல். 7. முன் யோசனை யில்லாதிருத்தல். 8 ஆத்திரப்படல். 9. கருணையில்லா திருத்தல். 10. வெட்கமில்லாமல் சுகுணங்களில் துர்க்குணங்களை யாரோபித்தல். இவை முதலியன.

பாலில் ஒருதுளி விஷம் விழுந்தால் பாலெல்லாம் கெடுவதுபோல சுயேச்சையாய்ப் பேசுவதில் பிறர் சாந்தத்தையும், குணத்தைத் தோஷமாக நினைப்பதால் பிறர் சத்குணத்தையும், நிஜத்தை ஒளிப்பதால் பிறர் சத்தியத்தையும் பங்கப்படுத்தினவர்க ளாவோம்.

ஆத்மபரீக்ஷை செய்யாவிடில், ஆத்மோன்னதி யில்லை. ஆத்மோன்னதியில்லாவிடில் மானிடஜென்ம மெடுத்ததற்கு பிரயோஜனமில்லை. "அவன் குணமிப்படி—இவன் சுபாவ மிப்போர்க்கொத்தது—அவர்களிவ்வித மிருக்கின்றார்கள்" என்று காட்டிச்சொல்வோ ரனேகருண்டேயொழிய, "நான் எப்படியிருக்கிறேன்—என்குணம் எப்படிப்பட்டது" என்று மனனம் செய்வோர் மிக அரிது. ஆனால் மனிதன் சுபாவமாக மனனசீலமுள்ள பிராணியாயிருக்கிறான். தன் சொந்த குணங்களை சமாலோசனை செய்யாமல், பிறர் குணதோஷங்களை பரிசீலிப்பதில் பிரியப்பட்டிருக்கிறான். இதனால் துர்க்குண துஷ்கிருத்தியங்களைச்செய்ய ஏதுவாகிறது. ஆதலால் சாந்தத்தை அடையாமல் புருஷார்த்தங்களை வியர்த்தப்படுத்தி கடைசியில் மரணதுக்கத்தை அனுபவிக்கிறான்.

இன்னுமோர் விந்தை! அசத்தியவாதியுங்கூட, தன்னிடம் வேறொருவர் அசத்தியம் புகன்றால் கோபமுள்ளவனாகிறான். சோரனுக்கு தன்வஸ்துவை திருடினவன்பேரில் கோபமுண்டாகிறது. சாது ஜந்துக்களின் கழுத்தைக் கொய்யும் நிர்த்தயாத்மாக்களுக்குங்கூட, பிறர் தம்மீது தயைகாட்டாதபோது குரோதங் கொள்கிறார்கள். பொறுமையென்பதே யறியாத மகா குரூரர்களும் தம்மை க்ஷமிக்க வேண்டுகின்றனர்.

மனிதன் ஒரு துஷ்டத்தொழிலை செய்கிறான். ஆனால் அதன் கெட்ட பலனை அனுபவிக்கமட்டும் கோருவதில்லை. அதிலிருந்து தப்பித்துக்கொள்ள நானாவித பிரயத்தனங்கள் செய்கிறான் இப்படிப்பட்டவன் நாஸ்திகனும் தன்னை யறியாதவனுமே யாவான்.

மீர்க, பர்த்துருஹரி:—

நிந்தந்துநீதிநிபுணா யதிவாஸ்துவந்து
லக்ஷ்மீஸமாவிசது கச்சது வாயதேஷ்டம் |
அத்யைவ வாமரணமஸ்து யுகாந்தரேவா
ந்யாயாத்பத: ப்ரவிசலந்தி பதம்நதீராः |

எனக்கூறியுளார். அதாவது, நீதிநெறிவழுவாது ஒழுகும்தீரர்கள் நிந்திக்கப்படார். மெச்சப்படார். செல்வம் நிலைக்கச்செய்யார். அக்ரமங்களுக்கு செல்லமாட்டார். உடனே மரணத்தைக் கோரமாட்டார். நியாயமான பிரளயகாலத்தை எதிர்பார்த்து யாவரும் கொண்டாடத்தக்க ஒழுக்கத்தை எப்போதும் கைவிடார்.

ஆதலால் சாந்தி, கருணை, தைரியம் இவைகளில்லாமல் எந்தக்காரியத்தையும் முடிப்பது அசாத்யமென வுரைப்பர். இம்மூன்றும் எதன் ஆதாரத்திலிருக்கின்றன? இவைகளுக்காதாரம் தன்னைச் சீர்திருத்தலேயன்றோ? ஒவ்வொரு காரியமும் ஆழ்ந்த யோசனையாலேயே நடைபெறவேண்டும். அந்தராத்மாவுக்குச் (மனோசாட்சிக்குச்) சம்மதமான காரியங்களனைத்தும் ஜயம்பெறும். இவ்விஷயத்தில் ஞானிகள் திடவிசுவாச முற்றிருப்பர். ஞானிகள் பிறர் கேவலமல்பசக்தி சாமர்த்தியமுடையவராய்த் தோன்றினும், அவர்க்குக் கனகார்யங்களைச் செய்வார்கள். இதுபற்றியே நாயனாரும்,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்." எனவும்.

"இசையாதபோலினு மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க்கல்லால்—பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கங் காண்பாரை யொப்பவே
ஊனோம்பி யூன்றின் பவர்."

எனவுங் கூறியுளார்.

(குமாரதுபரஸ்வாமிகள்.)

ஆத்மசிந்தனைக்கு ஓர் நிபந்தனை உண்டு. ஜகத்தை நாம் மோசம் செய்யமுயல்வோமே யன்றி நம்மை நாமே மோசப்படுத்திக் கொள்ளமாட்டோம். நான் என்னை எப்படி வஞ்சிக்கக்கூடும்? முதலில் தன்னைத்தானே வஞ்சிக்கும் விதம் அறியவேண்டும்.

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக் கோர்வித்து."

என்னும் அமுதவாக்கின்படி, ஐம்பொறிகளையும் ஐம்புலன்களில் செல்லாமற் பாதுகாக்க ஏகாந்தஸ்தல மடையவேண்டும். இப்படிப் பழக்கப்பட்டாலொழிய மோட்சநிலத்திற்கு வித்தாகமாட்டோம்.

"ஏகாகீ சிந்தயேந்நித்யம் விவக்தே ஹிதமாத்மந:
ஏகாகீ சிந்தமானோஹி பரம்ஸ்ரேயோ திகச்சதி||

அதாவது, நிர்ஜ்ஜனஸ்தானத்தில் காக்கையாய் உட்கார்ந்து ஆத்மசிந்தனை செய்பவன் மோக்ஷத்தை யடைவான். இதனால் தன் பாபங்கள் தனக்குப் பிரத்தியக்ஷமாகும், கருணைபிறக்கும். அப்யாசம் செய்யுமளவு அந்தராத்மா பலவந்தமாக பாபங்களைக்கண்டித்து தன்னைத்தான் ரக்ஷித்துக்கொள்ளும். பாபச்

செய்கைகளிலிருந்து விலகுவதற்கு இதைவிட உத்தமமானமார்க்கம் வேறில்லை. யெனத் தோன்றுகிறது. மேலும் இப்பழக்கமுள்ளவர்கள்,

" ஜடிலோமுண்டீலுஞ்சிதகேஸ: காஷாயாம்பர பஹுக்ருதவேஷ:
பஸ்யந்நபிச நபஸ்யதிமூடோ ஹ்யுதராநிமித்தோ பஹுக்ருதவேஷ:"

என்கிறபடி, ஜடைகளை வளர்த்திருந்தாலும், மொட்டை யடித்திருந்தாலும், மயிர் கத்தரித்திருந்தாலும், காவி வஸ்திரத்தால் அலங்கரிக்கப்பட்டாலும், மூடனானவன், ஜகதாகார பரிணாமவஸ்துவைப் பார்த்தும், ஒன்றுமறியாது தானெங்கேயோ, பிரம்மமெங்கேயோ வென விருந்தும் வெளிஜம்பத்தைக் காட்டுவது வயிறுவளர்க்கவே யல்லவோ " என்று நிச்சயமாய்த் தெரிந்து நியாயவழியில் செல்லுவர்.

சகோதரர்களே! சகோதரிகளே!

நாம் இவ்வுலகத்திற்கு எப்படி வந்தோமோ? வரும்போது எப்படிப்பட்ட துக்கத்தை யனுபவித்தோமோ? நமக்கிப்போது தோன்றுவதில்லை. நிஜமாக நாம் காணவும் அருவருக்கும் சிறுமி, மல, மூத்திராதிகள் நிறைந்த கராக்ருஹத்திற்குச் சமானமான கர்ப்பாசயத்தில் பந்திக்கப்பட்டிருந்து, உதரஜடராக்னிகளால் எவ்வளவு தகிக்கப்பட்டு துக்கித்திருந்தோமோ, அதை நினைத்துப் பார்த்தமாத்திரத்தில் இப்போது இருதயம் பெருந்திகிலடையும். இன்னும் ஜனனசமயத்தில் நெருங்கியவழியாய் ஒடுங்கிய சரீரத்தோடு தட்டான் கம்பியை கம்பிச்சியில் இழுக்கும்போது அக்கம்பி படும்பாடாய், வெளிவரும்போது நாமனுபவித்த துக்கத்தைச் சிறிது நினைத்தால் சற்றுணரலாகும்.

" யாவத்வித்தோபார்ஜனஸக்த ஸ்தாவந்நிஜ பரிவாரோரக்த:
பஸ்சாஜ்ஜீவதிஜர்ஜ்ஜரதேஹே வார்த்தாங்கோபிநப்ருச்சதிகேஹே "

அதாவது, மனிதன் எதுவரையில் தனம் சேகரித்துவருவானோ அதுவரை குடும்பத்திலுள்ளோ ரனைவரும் ப்ரீதியாயிருப்பார்கள். விருத்தாப்யம் வந்து பணம் தேட இயலாவிடில் ஒருவரும் இவன் ஸ்திதி கதிகளை விசாரியார்கள். என ஸ்ரீமத் சங்கராச்சாரியார் அருளியபடி இனிவரப்போகும் விருத்தாவஸ்தையை சில நிமிஷநேரம் அந்தராத்மாவினிடத்தில் சிந்திப்போம். இக்கிழத்தனத்தில் இந்திரியங்கள் சிதலமாக—ஜடராக்னி மந்தமடைய—போசன சக்தி க்ஷீணிக்க—சரீரபுஷ்டி கஷ்டமாக—தந்தங்கள் அசைந்துதிர—அசக்தி, புத்திமீனம், த்ருஷ்டிரகிதாதி நானாவிபத்துக்குள்ளாக—நம் சந்தானங்கள் திரஸ்கார பாவத்துடன் நடத்தும் மாதிரியைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

" நாளென வொன்று போய்காட்டி யுயிரீரும் வாளது "

என்னும் திருவாக்கின்படி அதன்பிறகு சம்பவிக்கும் மரணதுக்கத்தை தற்போது ஆத்மசிந்தனையில் வையுங்கள்! இம்மரணானுபவம் புழு பூச்சி முதல் மனுஷ்யபரியந்தம் தப்பாமல் அடைய்வேண்டும். இதைவிட அதிக பயமான துக்கம் உலகத்தில் வேறொன்றுமில்லை.

" புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்தவேனும்—விழலர்
விளிவன்னி வெய்துயிர்ப்பர் "……

என்கிறபடி, அசங்கிதமான் இதரநோய் வருத்தங்கள் எத்தனை யிருந்தபோதிலும் எவ்வளவு தைரியவானானாலும் மாணத்தைமட்டும் கோருவதில்லை. மரண ப்ரயாண சமயத்தில் ஜீவாத்மா * தேகவியோகம் செய்ய சம்பவிக்கிறது. அச்

* தேகவியோகம் = தேகத்தைவிட்டு நீங்குதல்.

சமயத்தில் அதிக கஷ்டமென்று கூறுவதற்கு யாது சந்தேகம்? மனிதன் ஜீவ்ய காலத்தில் தன் சுகபோகங்களுக்காக அநேக சங்கடங்களுக்குள்ளாகி தனசம்பத்துக்களை சேர்த்துவைப்பான். இவைகளை யனுபவிக்காமல் அகஸ்மாத்தாய்விட்டு பாதீனனாய்ச் செல்லும்போது எவ்வளவு வியாகுலனாவான். இதுவுமல்லாமல் ஜீவிதனா யிருக்கும்போது மோஹவசத்தனாய் அஞ்ஞான அகங்காரத்தினால், தர்மாதர்ம—புண்யபாப—சுபாசுப—பேதங்களெண்ணாமல் செய்த கெட்ட கர்மங்களை நினைத்து, " ஆ! நான் செய்த பாதகங்களுக்குத் தக்கபடி பரமேஸ்வரன் என்னை எப்படிப்பட்ட கோரநரகத்தில் தள்ளுவானோ " என்று தனக்குள்ளே பிரலாபித்துக் கொண்டிருக்கும் துக்கத்தை வர்ணிக்க சாத்யமாமோ! இனி சாஸ்திரசித்தாந்தப் பிரகாரம் அம்மரணசமயத்தில் ஜீவாத்மஜன்மாந்திர ஞானம் உதித்துவிட்டால், அந்நினைவினால் உண்டாகும் பயத்திற்கு நிகரில்லையல்லவா? இந்த துக்கங்களை யெல்லாம் நாம் சதாகாலமும் ஆத்மசிந்தனையில் வைத்துக் கொண்டு ஸ்மரித்தோமானால் நாம் செய்யவேண்டியவைகளை மறக்கமாட்டோமல்லவா? நம் சரீரம், மனம், தனம், இவைகளை நல்வழியில் வினியோகப்படுத்தி சர்வதுக்கங்களுக்கும் தூரமாகிய பேரின்பவீட்டை வேண்டுவோமல்லவா? (இன்னும் வரும்.)

ஆ. பாஷ்யகாரலய்யா.

" தந்தைதாய்ப் பேண் "

" தந்தைதாய்ப்பேண் " என்றும் " அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் " என்றும் நமது ஔவை பிராட்டியார் கூறியுள்ளதை யறியாதாரில்லை.

தாய் தந்தையரிடம் தெய்வபக்தி வைப்போர்கள் எப்பதவியையும் இலேசில் அடைவார்களென்பது திண்ணம். அப்பக்தி சுயநலம் சற்றும் கருதாப் பூரணபக்தியா யிருத்தல் வேண்டும். முற்காலத்திருந்தவர்களில் அனேகர் அத்தகைய மாதாபிதா பக்தியால் தெய்வீகம் பொருந்திய மகான்களாய் விளங்கினார்கள். அத்தகைய பக்திக்கு ஒரு அருமையான திருட்டாந்தம் பின் வருமாறு:—

ஒரு ஊரில் ஒரு பிராமண வாலிப னிருந்தான். அவன் தாய் தந்தையரைத் தெய்வமாகப் பூசிப்பவன். அவனுடைய தாய் தந்தைக்கு நேத்திரம் தெரியாது. வயது முதிர்ந்தவர்கள். இவர்க ளிருவரும் காசியாத்திரை செய்ய வேண்டுமென்று தமது பிள்ளையினிடத்திற் கூறினார்கள். அந்த வாலிபன், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற வாக்கியப்படி, உடனே ஒரு காவடி செய்து அதிலொரு பக்கத்தில் தாயையும் மற்றொரு பக்கத்தில் தகப்பனையும் வைத்து காவடியை தூக்கிக்கொண்டு காசிக்குப் புறப்பட்டான்.

அக்காலத்தில் காசியாத்திரை செய்வதென்பது ஒரு சாமானிய காரியமல்ல. மகா கொடிய காட்டு மிருகங்களாகிய சிங்கம், புலி, கரடி, யானை முதலியவைகள் வசிக்கும் பயங்கரமான வனங்கள், மலைகள், நதிகள் இவை பலவற்றைக் கடந்து நெடுநாள் வருந்திப் பிரயாணம் செய்யவேண்டும். இச்சிறுவனும் யாசகம் செய்துகொண்டே தன் தாய்தந்தையரைச் சுமந்துகொண்டு செல்வானாயினான்.

ஒருநாள் சூரியகிரணம் பூமியிற் றாங்காத ஒரு இருண்ட கானகத்தில் அவன் சென்றுகொண் டிருக்கையில் வயோதிகர்கள் " மைந்த! எங்கட்கு தாகவிடா யதிகமா யிருக்கிறது. சீக்கிரம் ஜலம்கொண்டுவரவேண்டும் " என்றார்கள். சிறுவன் உடனே காவடியை ஒரு மரத்தடியில் வைத்துவிட்டு குண்டிகையை யெடுத்துக்கொண்டு ஜலமிருக்கும் ஓர் பெரிய தடாகத்தைக் கண்டு

இறங்கி குண்டிகையால் ஜலத்தை மெள்ளத் துடங்கினான். குண்டிகையின் வாய் சிறிதாகையால் ஜலம் உள் நுழையும்போது கொட கொட வென்று சத்த முண்டாயிற்று. அச்சமயம் அக்காட்டில் யானை வேட்டைக்காக வந்து செடி மறைவில் பதுங்கியிருந்த தசரத மகாராஜன், யானைதான் வந்து ஜலமருந்துகிற தெனவெண்ணி, மறைவிலிருந்தபடி கொட கொடவென்ற சத்தம்வரும் திக்கை நோக்கி அம்பெய்தார். அவ்வம்பு பிராமணச் சிறுவன் மார்பிற்றைக்க அவன் கோவென்றலறி குளக்கரையில் விழுந்தான். மனித சத்தத்தைக் கேட்ட தசரதர், மிக்க பயமும் துயரமும் கொண்டவராய், சட்டென்றோடி மரணத் தருவாயிலிருக்கும் சிறுவனைத் தூக்கி மிக்க உபசாரத்தோடு " நீயார்? எங்கிருந்து இங்கு வந்தாய்? ஐயோ! நான் தசரதன். என்னாலாகவேண்டிய தேதாவதிருந்தால் கூறு " என்றார்.

இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளே! அச்சமயத்தில் எவனும் நாம் இறந்து போகிறோமே யென்ற துயரத்தில் மூழ்கிவிடுவானேயன்றி வேறொரு சிந்தனையு முண்டாகாது. தாய்தந்தையர் பணிவிடையே நமக்குள்ள வேலையெனக் கருதியிருந்த அச்சிறுவன் மனமோ அப்போதும் அவர்கள் நாட்டத்திலேயே யிருந்தது. அவன் அரசனை நோக்கி,

" சக்ரவர்த்தியே அதோ அங்கிருக்கும் மரத்தடியில் என்தாய் தந்தையர் நீர் வேட்கையோ டிருக்கின்றனர். இச்சலத்தைக் கொண்டுபோய் அவர்களிடம் கொடுத்து, மெதுவாய் என் மரணசங்கதியை வெளியிட்டு அவர்களுக்குத் தேறுதல்கூறும் " எனப் புகன்று தேகத்தைவிட்டு நீங்கினான்.

பிறகு தசரதர் அவன் சவத்தையும் ஜலத்தையும் கொண்டுபோய் தாய்தந்தையரிடம் சேர்ப்பித்ததாகவும், அவர்கள் தான் " நீ புத்திர சோகத்தால் மடியக் கடவாய் " என்று சபித்தவர்களென்றும் கூறப்பட்டிருக்கிறது.

தாய் தந்தையரைப் பூசித்து அவர்கள் மனங் கோணாது நடப்பதால் உண்டாகும் பயனைக் கருதியே, மூதாட்டியார் " தந்தை தாய்ப்பேண் " என்று அருளியிருக்கிறார். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு ஒழுகவேண்டுவதை நாம் ஒவ்வொருவரும் நமது கடமை யெனக் கருதுவோமாக.

வீ. ஷண்முகம் பிள்ளை, அழகாபுரி.

கல்வியும் ஒழுக்கமும்.

(பெற்றோரும் உபாத்திமார்களும் கவனிக்கவேண்டிய விஷயம்.)

இப்பூவுலகில் ஆறறிவுடைய பிறவிகளாகிய மானிடர் ஒவ்வொருவர்க்கும் கல்வி, ஒழுக்கம் இரண்டும் அவசியம் வேண்டியவைகளாகும். கல்வியால் பொருள்சம்பாதிப்பதுபோல் நல்லொழுக்கத்தையும் பெறக்கூடும். கல்வி, கற்று மனதிற் சேகரிப்பதாகிய பழக்கத்தால் வருவது. ஒழுக்கமும் அவ்வாறே கண்டும் கேட்டும் பழகுவதால் வருவதே. என்? மேற்கூறியபடி கல்வியொன்றினாலேயே ஒழுக்கத்தைப் பெறலாகாதோ வெனின், எல்லாக் கல்வியும் ஒழுக்கத்தை யளிக்காது. சிலகுணங்கள் அவரவர் பூர்வபுண்ணியத்தினால் வாய் இயற்கையிலேயே யமைக்கப்பட்டபோதிலும் மற்ற ஒழுக்கங்களி யாவும் பழக்கத்தாலேயே வரவேண்டும்.

" சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தநித்தம்
நடையும் நடைப்பழக்கம் அருளும் தயையும் . . .
கொடையும் பிறவிக் குணம் " என்று ஔவையா ரருளியுளர்.

தற்காலம் நமது மாணவர்கள் பாடசாலைகளில் வாசிக்கும் இங்கிலீஷ்ப் பாஷாநூல்களாலடையும் கல்வி ஜீவனோபாயத்திற்கு மட்டும் வழிகாட்டுவதே யொழிய, நல்லொழுக்கம், சதாசாரம், ஈசுரபக்தி இவை முதலியவற்றைப் போதிப்பதல்ல. இக்கல்வியால் பாஷாஞானம் உண்டாவதோடு புத்தியைக் கூர்மையாகமட்டும் செய்துகொள்ளலாம். இன்னும் நமது பாஷையில் இல்லாத ஜட சாத்திரங்களைக் கற்றறியலாகும். இவ்வகைக் கூர்மையாக்கப்பட்ட புத்தி ஒரு கத்திக்குச் சமம். கத்தி யொருவனிடம் இருந்தால், அவனுடைய இயற்கைக் குணத்தின்படி அவன் அதை நன்மையும் புகழ்ணியமும் அடையும் பொருட்டு உபயோகித்தாலும் உபயோகிக்கலாம்; அல்லது தீமையும் பாபமும் அடையும் வழியில் உபயோகித்தாலும் உபயோகிக்கலாம். ஆகையால் இத்தகைய கல்வியும் பொருளும் யாரிடத்திலிருக்கின்றனவோ அவர்களுடைய இயற்கைக்குணங்களை யதிகப்படுத்தி பிரகாசிக்கச் செய்யுமே யன்றி ஒரு போதும் சீர்திருத்தமாட்டா.

இயற்கையில் நற்குணமுடைய ஒருவனுக்குத் திரண்ட செல்வம் கிடைத்தால், அவன் தன்னையும் தன்னைச்சேர்ந்தவர்களையும் சம்ரக்ஷணை செய்வதோடு தானதருமத்திலும் வேறு சத்விஷயங்களிலும் செலவுசெய்து புண்ணியப் பேறடைவான். துஷ்டனிடம் அத்திரவியம் கிடைத்தாலோ, தன்னைப்போன்ற துஷ்டர்களைச் சேர்த்துக்கொண்டு தைரியத்தோடு அடாத காரியங்களைச்செய்து இம்மையில் பழிப்பும் தண்டனையு மடைவதோடு, மறுமைக்கும் பெரிய பாப மூட்டைக்கட்டிக்கொள்வான். இவ்வாறே யோக்கியன் கல்விகற்றால் கல்வியால் இம்மை, மறுமை இரண்டு பயன்களையு மடைவான். துஷ்டன் கற்றாலோ, அகங்காரம்கொண்டு ஒருவரையும் இலட்சியம் செய்யாது, தான் தண்டனைக்குள்ளாகாதபடி யுக்தியோடும் தந்திரத்தோடும் தன்மனம்போனபடி துர்நடக்கைகளை விர்த்தி செய்துகொண்டு, கடைசியில் அவமானமும் நரகமுமே யடைவான்.

இதனால் ஒழுக்கமற்ற கல்வி பயன்படாதெனவும், கல்வியைவிட ஒழுக்கமே சிறந்ததென்றும், அதாவது ஒழுக்கமில்லான் கல்வியைவிட, கல்வியில்லான் ஒழுக்கமே சிறந்ததென்றும் ஆன்றோ ரருளியுள்ளார்.

" ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம்
ஒதலிற்சிறந்தன் றொழுக்கமுடைமை " (ஔவை)

(இதில் 'அன்று' என்பது அசைச்சொல். அதற்குப் பொருள் இல்லை.)

நமது தமிழ்க் கல்வியோ மேற்கூறியதைப்போல் ஜீவனோபாயத்திற்கு மட்டுமே உதவக்கூடியதல்ல. ஆரம்பக் கல்வியிலிருந்தே ஆசாரம் ஒழுக்கம், நீதி, நன்னெறி, ஈசுரபக்தி இவற்றைப் புகட்டக்கூடிய தென்பது ஒருவரும் மறுக்கமுடியாததோ ருண்மை. இக்கல்வி ஒருவனுக்கு கடவுள் பயத்தை யுண்டாக்கிக் கூடியவரையில் அவனுக்கு நல்லொழுக்கத்தைப் புகட்டக்கூடியது. இது எ-பி-ஸி என்று ஆரம்பமாவதல்ல. இது தெய்வீகபாஷை. ஆரம்பவாக்கியமே மகாமந்திரமாகிய பிரணவத்தில் ஆரம்பித்து கடவுள் வணக்கத்தில் முடிவது. பிறகுசிறுவாக்கியங்கள் கற்கும்போதே "அறஞ்செயவிரும்பு", "ஆறுவது சினம்" முதலிய இருமைப்பயன்களையுமளிக்கும் ஒப்பற்ற நீதிவாக்கியங்களைப் போதிப்பது. ஆகையால் நம்மக்களுக்கு நாம் முதல்கூறிய கல்வியைக் கற்பிக்காவிடினும், நம் தாய்ப்பாஷையாலாகிய கல்வியை யவசியம் கற்பிக்கவேண்டும். இன்றேல், நமது தாய்நாடு இப்போதிருக்கும் நிலையிலிருந்து மேலேறுவதற்கு மாறாக வேகமாய்க் கீழிறங்கிவிடும். ஒரு திருட்டாந்தம்மட்டும் கூறுகிறோம். கீழ்க்காணும் அவ்விஷயம் ஸ்ரீமதி ச. நீலாம்பிகையென்ற சகோதரியால்

எழுதப்பட்டதாய் (11-2-18 வெளியான) தேசபக்தன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில்,

தான் இச்சென்னையில் நல்ல அந்தஸ்தும் செல்வமுமுடைய தந்தைக்கும் உத்தமியாகிய மாதாவுக்கும் பிறந்தவளென்றும், தன்தந்தை தனக்குத் தமிழ்க் கல்விகற்பித்து குறள்முதலிய நூற்களைத் தாமே தனக்குப் போதித்து, கடைசியில் பி. ஏ. பட்டம்பெற்ற ஒருவர்க்கு மணம்செய்து கொடுத்ததாகவும், அந்தக் கணவன் மேல்நாட்டு நாகரீகப்பற்றும், அதே ஆசாரவொழுக்கங்களும், நிரீசுவரக் கொள்கையும் உடையவரென்றும், தின்பதும், குடிப்பதும், மிருகசுக மனுபவிப்பதும் தவிர மறுமையின் சிந்தனை யில்லாதவரென்றும், அதனால் தன் ஆசார ஒழுக்கங்களைக்கண்டு கோபங்கொண்டு தன்மேல் வெறுப்புற்றுத் தன்னை யிம்சித்துக் கடைசியில் வீட்டைவிட்டே துறத்தி விட்டார் என்றும், அச்சகோதரியால் கூறப்பட்டிருக்கிறது.

அந்தோ! இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளே! நன்றாய்ச் சிந்தித்துப் பாருங்கள். இதுதானோ மேல்நாட்டு நாகரீகத்தைக்கண்டு நம்மவர் சீர்திருத்தமடைவது? அடடா! அந்தச்சகோதரியின் மனம் என்ன வேதனைப்படுகிற்தோ! அவளின் தாய் தந்தையர் சகோதர சகோதரிகளின் மனம் எவ்வளவு துயரப்படுகிறதோ! இந்த மனோவேதனை யனைத்தும் கடவுள் வீண்போகச் செய்வாரோ? ஒருபோதுமில்லை. அந்தக் கணவன் பல ஜன்மங்களி லல்லவோ அப்பாபத்தை யொழிக்கவேண்டும். அதற்குக் கடவுள் என்னதண்டனை விதிப்பாரோ வென்பதைச் சிந்தித்தால், அக்கணவன் விஷயத்தில் உண்மையில் பரிதாபமே யுண்டாகிறது. கடவுள் நாம்செய்யும் பாபத்திற்கு நம்மைத் தண்டிப்பார் என்ற சிந்தனை யிருந்திருந்தால் இத்தகைய கொடும்பாபச் செயலுக்கு இடந்தாராதன்றோ!

சகோதர சகோதரிகளே! பெற்றோர்களே! ஓ உபாத்திமார்களே! இத்தகைய துன்பம் நமக்குள் நேரிடுவதன் காரணமென்ன வென்று தயவுசெய்து சிந்தித்துப்பாருங்கள். நம்மக்களுக்கு நம் தாய்ப்பாஷையிலுள்ள நூல்களைக் கற்பிக்காத குற்றமேயன்றி வேறென்ன? நமதுபிள்ளை பி. ஏ. பாஸ் செய்துவிட்டால் போதும், பி. எல். பட்டம் பெற்றால் போதும் என்று பணம் சம்பாதிக்கும் ஒரு ஆசையில்மட்டும் நாட்டம்வைப்பது மஹரிஷிகளின் சந்ததியாரென்று பெருமையாய்க் கூறிக்கொள்ளும் நமக்கு அழகாகுமோ? கவுரவமாகுமோ? சிந்தியுங்கள். அதனால் விளையும் தீங்கை யினியேனும் தடுக்க முயலும்படி உங்களைப் பிரார்த்திக்கிறோம். இனியேனும் நம் தாய்ப்பாஷைக் கல்வியை மற்ற எவ்விதக் கல்விக்கும் முதன்மையானதாய்க் கருதுங்கள். ஔவையார் வாக்கை யலட்சியம் செய்யாதீர்கள். பெற்றோர்கள் அவசியம் இனியேனும் இதைக் கவனித்து நடக்கும்படி வேண்டுகிறோம். உபாத்திமார்களாகிய சகோதரர்களே! நாம் முன்னொருமுறை வேண்டிக்கொண்டதுபோல் மறுபடி யுங்களை வேண்டிக்கொள்கிறோம். இது உங்கள் கடமையில் சேர்ந்ததல்லவென்று பராமுகம் செய்துவிடாதீர்கள். இதுவே நாம் நம் தாய்நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமை யாதலால், ஒரு கைம்மாறும் கருதாமல் செய்யவேண்டிய கடமையென்று மதியுங்கள். கடவுள் உங்கள் குறைகளை நீக்காமலிரார். உங்கள் வறுமையை யொழிக்காமலிரார். யாவும் தாமாயிருந்தும் யாவற்றிலும் தாக்கற்று நிற்கும் கருணாநிதி இதுவிஷயத்தில் நமக்கு ஊக்கத்தையளித்து நல்லருள்புரியுமாறு அவரையே முழுமனதோடு பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

ஆணி துப்புசாமி முதலியார்

ஓர் கடிதம்.

களவு.

பிறர் பொருளை அவரறியாது கைப்பற்றுந் தொழில் களவெனப்படும். அத்தொழில் மிகவும் இழிவானது. அதனைக் கைக் கொள்வோனும் சான்றோர் யாவராலும் இகழப்படுவான். அதனால் விளையும் தீமையும் அளவிறந்ததாகும். ஒருவர்பாலுள்ள பொருளை அவரிடத்தே நேரிற்சென்று யாசிப்பதே இகழ்வானதென்று,

"ஏற்பதிகழ்ச்சி"

என்றருளிய நமதன்னையார் திருவாக்கால் நாமறிந்திருக்க, இன்னொருவருக்குச் சொந்தமான பொருளை அவரனுமதி பெறாமல் அபகரிப்பதோடு, அப்பொருளை நம்முடையதென்றும் சொல்லிக் கொள்வோமானால், அதைவிட இழிவான தொழில் வேறில்லை யென அச்சமறச் செப்பலாம். பின்னும் பிறர்பொருளைக் களவு செய்து கைக்கொள்ள வேண்டுமென்று மனதினால் நினைப்பதுவும் தவறென்பதை,

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளை
கள்ளத்தாற் கொள்வே மெனல்"

என்னும் குறட்பாவால் வற்புறுத்தினர் தெய்வப்புலவரும்.

நீங்க, நமதன்பார்ந்த 'ஆனந்தபோதினி' யின் 2-வது புத்தகம் 221-வது பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள 'அறிவு' என்னும் வியாசத்தைப்பற்றி நாம் சற்றுவிசாரிக்கவேண்டியது அவசியமாகிறது. எனென்றால், அவ்வியாசமானது ஒரு நண்பர் சில வருஷங்களுக்கு முன் மதுரைமா நகரத்தில் தாம் செய்த உபந்நியாசத்தை புத்தக ரூபமாய் அச்சிட்டு வெளிப்படுத்தியதிலிருந்து எடுத்தெழுதப்பட்டிருக்கிறது.

அந்தோ! மேற்படி வியாசத்தை நமது போதினிக்கு எழுதியனுப்பியவருடைய அறியாமையை என்னென்று சொல்வது? இவரது கொள்கைதானென்னோ? இவர், தாம் வியாசம் எழுதத்தெரிந்தவர் என்னும் கௌரவத்தையடையக்கருதி எழுதியிருப்பின், கௌரவம் என்னும் ஆபரணம் நாமேசெய்து அணிந்துகொள்ளக்கூடியதல்ல வென்பதையும் அது நம்முடைய அறிவிற்கும், ஒழுக்கத்திற்கும் தக்கவாறு பிறரால் சூட்டப்படவேண்டிய மகுடமென்பதையும் அவர் அறியாமல் போனதற்காக நாம் மிக்க வருத்தப்படவேண்டும். ஒருவேளை இவ்வளவு அரிய விஷயத்தை எல்லா சந்தாதாரர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோ டெழுதியிருப்பின், இன்ன புத்தகத்திலிருந்து எழுதியனுப்பப் பட்டதென்று வெளியிட்டிருக்கவேண்டுமல்லவோ. தாமே எழுதியதாக வெளியிடவேண்டிய அவசியமில்லையே. ஐயோ! 'அறிவு' என்னும் ஓர் வியாசம் எழுதி நமக்கு அறிவு புகட்டவந்த நமது நண்பர்.

"புலையுங் கொலையுங் களவுந் தவிர்"

என்ற நமதன்னையார் திருவாக்கை மறந்து வேறொருவர் இயற்றியுள்ள புத்தகத்திலுள்ளதை அப்படியே நகல் எழுதத்துணிந்த தெவ்வாறோ? எவ்வளவோ இரகசியமாய்ச் செய்யப்படும் விஷயங்களெல்லாம் காலக்கிரமத்தில் வெளிவந்துவிடுமென்ற உண்மையை யறியாது நமது நண்பர் இவ்வாறு செய்யத் துணிந்தனர்போலும்! இத்தகைய விஷயங்களை இவ்வியாசத்தின் தலைப்புப் பெயராலல்லாது வேறுவிதமாகக் குறிப்பிடத்தக்க வார்த்தைகள் எனது சிற்றறிவிற்குப் புலப்படவில்லை. லோகோபகாரமாய் வெளிவந்து பெறுதற்கரிய புகழ் பெற்று செவ்வனே நடைபெற்றுவரும் நமது நண்பன் 'ஆனந்தபோதினி' இன்னும் பெரும்புகழடைந்து நீடுநிலைத்து உலகத்தார்க்கு நன்மை பயக்குமாறு

அருள்புரிய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்பதோடு இவ்வியாசத்தை முடிக்கிறேன்.

A. M. சங்கர நாராயணன், அம்பாசமுத்திரம்.

பத்திரிகாசிரியர் குறிப்புரை:—ஒருவர் எழுதிய (அல்லது ஒரு புத்தகத்தி லுள்ள) விஷயத்தை வேறொருவர் தாம் எழுதியதாக அனுப்பலாகாதென்ற விஷயத்தைப்பற்றி நாம் சஞ்சிகையில் ஏற்கனவே வரைந்திருந்தும், இத் தகைய சம்பவம் நேர்ந்ததைக் குறித்து நாம் மிக்க மனவருத்தமடைகிறோம். இச்சந்தர்ப்பத்தில் மேற்குறித்த "அறிவு" என்ற வியாசத்தை நமது சஞ்சிகைக் கனுப்பியவர் "ம-ா-ா-ஸ்ரீ N. வெங்கட்ரமணன், வடகம்பாளையம்" என்பவர் என்பதை வெளியிடவேண்டியது நமது கடமையாயிருக்கிறது. கல்வியை யெவரும் பரவச் செய்யவேண்டியது கடமையேயாயினும், பிறருடைய அறி வையும் சிரமத்தையும் நம்முடையதென்று கூறாமல், இன்னவரால் கூறப்பட் டது, இன்ன நூலிலிருந்து எடுக்கப்பட்டது, என்ற உண்மையைக் கூறவேண் டியது அவசியமல்லவோ. இத்தகைய இழிவான குற்றத்திற் சிக்காவண்ணம் யாவர்க்கும் எச்சரிக்கையாக இதை வெளியிட்ட நமது சந்தா நண்பருக்கு நாம் மனப்பூர்வமான வந்தனமளிக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

(307-ம் பக்கத்தொடர்ச்சி.)

நித்தியவிதி.

(காலைக்கடன்.)

முன்கூறியவாறு இடம்பொருளேவல்கள் எல்லாம் அமையப்பெற்ற வன் இல்லறம் நடத்தற்குரிய நித்தியவிதி கூறுவான் தொடங்கி முதலில் காலை விதி வரையப்படுகின்றது. சூரிய உதயத்துக்கு ஐந்துநாழிகைக்கு முன் நித்திரையினின்றும் எழுந்திருத்தல் வேண்டும். சூரிய உதயத்திற்கு முன் னாகிய அரைஜாமம் பிராம்மம், ரௌத்திரம் என்று இரண்டுவகைப்படும் என் றும், அவற்றில் பிராம்ம முகூர்த்தத்திலே நித்திரைவிட் டெழுந்திருக்கவேண் டும் என்றும் நூல்கள் கூறுகின்றன. எழுந்தவுடனே தனக்கு ஹிதத்தையும், பின் தருமத்தையும், அதன்பின் அர்த்தகாமங்களையும் சிந்திக்கவேண்டும். அதன் பின்பு வேதாந்தப்பொருளாகிய பரமாத்மாவைத் தியானிக்கவேண்டும். பகற் காலத்தில் கருவிகளுடன் பற்பல வேலைகளைச் செய்து களைத்த மனம் இப் போது களைதீர்ந்து, யாதொரு எண்ணமுமில்லாமல் சுத்த படிகம்போலக் களங்க மற்று விளங்குமாதலால் இக்காலத்தில் வேறு சிந்தனைக் கிடங்கொடாமல் தர் மத்தையும் பரமாத்மாவையும் சிந்திப்பதே மரபு. நித்திரைவிட் டெழுந்திருந்த வுடனே முதலில் மனமெதைக் கருதுகின்றதோ அது மனதில் நன்றாய்ப் படியும். ஆதலால் பரமாத்மாவை அவசியம் தியானிக்க வேண்டும். இந்தத் தியானம் சகல பாபங்களையு மொழித்து, மனத்தைச் சுத்தப்படுத்தி நல்வழியில் நடக்கும்படி தூண்டும். பரமாத்மா என்று ஈண்டு கூறினாலும், தங்கள் குல தெய்வம், இஷ்ட தெய்வம், உபாசனா தெய்வம் இவற்றின் திருவுருவங்களையுந் தியானிக்கலாம். ஞானகுருவையும் சிந்திக்கலாம். அதன்பின் வேதத்தை நன்றாயோதினவன் அல்லது தெய்வவிக்கிரகம், பசு, அக்கினி, கண்ணாடி, பூர்ணகும்பம் முதலியவைகளுள் எதையாவ தொற்றைத் தரிசிக்கவேண்டும். இதனால் சகல பீடைகளும் ஒழியும். பாபிகள் அங்கவீனர்கள் குரூபிகள்,

குஷ்டம் முதலிய கொடியவியாதி கொண்டவர்கள் இவர்களைப் பார்க்கலாகாது. இதுபற்றியே ஆசாரக்கோவையிலும்,

"வைகறையாமந் துயிலெழுந்து தான்செய்யு
கல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்துவாய்வதிற்
றந்தையுந்தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்டமுறை" என்று கூறப்பட்டது.

இச்செய்யுளில் பரமாத்மாவைக்கூறாது தாய்தந்தையரை கூறினார். மாதா பிதா குரு இவர்களுந் தெய்வமேயாம் என்னும் நூன்முறைபற்றியா மென்க. இதுபற்றியே "அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்" என்றார் அன்னை யாரு மென்க.

இதன்பின்னர், தென்மேற்கு மேற்குத்திசைகளை யடைந்து மலஜல விசர் ஜனம் செய்யவேண்டும். இத்தொழில் கிரமமாய் நடவாவிடில் தான் செய்யும் அறத்திற்கு இடை யிடையே விக்கினம் நேரிடும். மலஜல பந்தனங்களால் பலவகை நோய்களுண்டாகும். இதைப்பற்றிப் போஜன விதி கூறுமிடம் விரிக்கப்படும். நூல்களிற்கூறிய விதிவழுவாது கிரமமாய் ஆகாரம் புசிப்ப வர்க்கு மலஜலபந்தனம் நேராது. மலஜல விசர்ஜனம் செய்யாமல் நீராடுதல் கூடாது. அங்ஙனும் நீராடினால், மலபந்தமுண்டாய் அதனாற் பல நோய்க ளுற்பத்தியாம். நோய்கொண்டவன் எவ்விதமான தர்மம் செய்வதற்கும் சக்தி யுடையவனாகான். ஆதலால் இவ்விதமான கெடுதி நேரிடாதபடி போஜன நியமம் கொள்ளவேண்டும். காலையிலெழுந்தவுடனே ஆறுமணிக்குக் காப்பியும் சிற்றுண்டியும் கொள்ளுதலும், பத்துமணிக்குப் பகற்போஜனமுண்டலும், பகல் ஒரு மணிக்குச் சிற்றுண்டியும் காப்பியும் கொள்ளுதலும், ஐந்து மணிக்குத் தேநீரும் சிற்றுண்டியு முண்டலும் இரவு எட்டுமணிக்கு இராப்போஜன முண்ண லும், பத்துமணிக்குப் பால் குடித்தலும், ஆக ஒருநாளைக்கு ஆறுதரம் எட்டுதரம் புசிப்பவர்களுக்கு மலபந்தம் அவசியமுண்டாகும். அதனாலேயே இக்காலத்தில் அநேகர் மலச்சிக்கலென்னும் வியாதியாற் பீடிக்கப்பட்டு வருந்துகிறார்கள். சூரியவெப்பங் காண்பதரிதாய்ச் சதாகுளிரில் முழுகிக்கிடக்கும் அந்நிய தேசத் தார் ஜீரணசக்திக் குறைவினால் சிறிது சிறிதாகப் பலதடவை யுண்டால், அதையே பிரமாணமாகக்கொண்டு ஜீரணசக்தி மிகுந்திருக்கும் உஷ்ண தேச வாசிகளாகிய நாமும் பலதரமுண்பது தவறென்பதை நமது நாட்டார் உணராம லிருப்பதும் விசனிக்கத்தக்கதே. பின்னால் போஜனப் பிரகரணத்தில் இதை விரிப்போமாதலால் ஈண்டு வேண்டியமட்டே கூறினாம்.

"பகற்றெற்கு நோக்காரி ராவடக்கு நோக்கார்
பகற் பெய்யார் தீயினு ணீர்"

என்றபடி பகலிலும் இரு சந்திகளிலும் வடக்குமுக நோக்கி யுட்கார்ந்து கொண்டு, இராக்காலத்தில் தெற்கு முகமாக உட்கார்ந்துகொண்டும் மலஜல விசர்ஜனம் செய்யவேண்டும். பூமியின் மகாசக்தி வடகீழ்த் திசையினின்று தென்மேற்றிசை நோக்கிச் செல்லுமியல்புடையது. பகற்காலத்தில் வேகமதி கம், இராக்காலத்தில் குறைவு. இதுபற்றியே யிவ்வாறு விதிக்கப்பட்டது. இதுபின்னர் சமயம் நேருமிடம் விரிக்கப்படுமாதலா லீண்டு விடுத்துச்செல்கின் றோம். அக்காலத்து உடம்பைத் திறந்துகொண்டு உட்கார்தல் கூடாது. தலை யையும் உடம்மையும் வஸ்திரத்தால் மறைத்துக்கொள்ள வேண்டும். அதனாற் பயன் யாதெனின், பிராணபானவாயுக்களின் தொழில் முயற்சியால் மலஜலம் வெளிப்படும்பொழுது சரீரத்துள்ளிருக்கும் அசுத்தங்கள் ஆவிரூபமாய் வெளிப் படும். அது காற்றுப்பட்டவுடன் இறுகி மயிர்க்கால்களை அடைத்துக்கொள்

ளும். பிறகு உலர்ந்துவிடும். அதனால் சொறி சிரங்கு முதலிய தோலைப்பற்றிய வியாதிகளுற்பத்தியாம். மேற்குறித்த அசுத்த ஆவி தலையின் மயிர்களில் உட்டுளையிக்வழியே வெளிப்படும். அது ஆண்டே உறைந்து உலர்ந்துவிடுமாயின் அறிவுக்கு ஸ்தானமாகிய மூளையை மலினப்படுத்திவிடும். அதனால் அறிவுங் குன்றும். வஸ்திரத்தினால் மூடிக்கொள்ளின் அந்தவஸ்திரம் அசுத்த ஆவியைக் கிரகித்துக்கொள்ளும். அதனால் சரீரத்துக்கு நேரிடும் குற்றமும் குறையும். ஸ்நானத்தினால் மற்றத்தோஷமும் நீங்கும். அப்பொழுது பரிசுத்தமுண்டாகுமென்பது பற்றியே தலையையும் உடலையும் வஸ்திரத்தால் மறைத்துக்கொண்டு மலவிசர்ஜனம் செய்யும்படி நூல்கள் விதித்தன. தன் உடலை மறைப்பது மட்டும் போதாது.

‘ பத்துத்திசையு மனத்தான் மறைத்தபி
னந்தரத்தல்லா லுமிவோ டிருபுலனு
மிந்திரதானம் பெறினு மிகழாரே
தந்திரத்து வாழ்து மென்பார் ”

என்றதனாற் பத்துத் திசைகளையும் மறைத்துக் கொள்ளவேண்டும் என்று பெறப்பட்டது. பத்துத்திசையும் மறைத்தலாவது அத்திசைகளிலெதையும் மனத்தால் கருதாமை. அதற்குச் சாதகமாக மூக்கினுனியை நோக்கி நிமிர்ந்திட்கார வேண்டுமென்று கூறியது. அங்ஙனம் நோக்குங்கால் ஏகாக்கிரசித்த முண்டாகும். மனம் பலவிடங்களில் அலையுமேல் அத்தொழிலுஞ் சிறிது தடைபடும். அதனால் மலபந்த முதலிய கொடிய நோய்களுற்பத்தியாகும். மலஜல விசர்ஜனம் செய்யுமிடத்தைச் சருகுகளால் மூடி அதன் மேல் விசர்ஜனம் செய்கவென்று நூல்கள் கூறின. ஏனெனில், அவை பூமியிற் பட்டவுடனே பூமியிலுள்ள உஷ்ணம் வாசனை முதலிய மேல் நோக்கி யெழும். மேல்நோக்கி யெழும் வேகத்தால் சரீரத்தினுள்ளிருந்து வெளிப்படும் அசுத்த ஆவியை வெளிப்படாது நிற்குமாறு தடைபடுத்தும். அதனால் பவுத்திர முதலிய கொடியநோய்களுண்டாகும். பட்டணங்களில்இவ்வாறு செய்யாமல் ஒருவர் கழித்த மல மூத்திரங்களின்மேல் மற்றவர் விசர்ஜனம் செய்துவருவதனால் கடி முதலிய பலவகைப் படைகளுண்டாய்த் துன்பப்படுகிறார்கள். எத்தனைதரம் படை ஹாரியான ஔஷதங்களைப் பிரயோகித்தாலும் தற்கால உபசாந்தியாய்ச் சிறிது பயன்செய்வதேயன்றி முற்றும் சுகங் கொடுப்பதில்லை. கிராமவாசிகளிடத்தில் இவ்விதப் படைகள் அதிகங் காணப்படுவதில்லை. இதை உத்தேசித்தே சருகுகளாற் பூமியை மறைக்கவென்று கூறியது. காய்ந்துபோன சருகேதவிரப் பச்சிலைகள் உபயோகமாகா. சூரியன் அக்கினி பசு இவற்றினெதிரிலும் கூடாது. சூரியன் அக்கினி என்றது இவற்றின் உஷ்ணகிரணங்கள் அதிகமாய்த் தாக்கும்படியான இடமென்பதாம். பசு என்றது மிருகங்களுக்குப் பொது. மிருகங்களைப்பார்த்தால் அவற்றின் சேஷ்டைகளால் சிரிப்பு விசன முதலிய வுண்டாம். அதனால் மலபந்தமுண்டாமென்பதுபற்றியா மென்க.

ஜனங்கள் நடக்கும்வழி, சாம்பல், மாட்டுத்தொழுவம், உழுதவிடம், நீரோடு கூடிய சதுப்புநிலம், ஆற்றங்கரை, நெற்களம், சுடுகாடு, குழி, மரத்தினடி, படிக்கட்டு, பழங்கோயில், புற்று; மேடு, பள்ளம், பூந்தோட்டம் முதலிய விடங்களும் கூடாவென்று கூறப்பட்டுள்ளதின் கருத்தையுங் கூர்ந்துணர்ந்துகொள்க.

இதன்பின் அவயவக்களைச் சுத்த நீரால் சுத்தம் செய்துகொண்டு, பின் துவர்ப்பு, காரம், வாசனை, முட்கள், பால் இவைகளையுடைய மரக்கொம்புகளாயினும், துவர்ப்பு காரம் சேர்ந்துள்ள பொடிகளினாலாவது பல்லை விளக்க

வேண்டும். பல் விளக்கி வாய் கொப்புளித்து, முகம் முதலியவற்றைக் கழுவிக்கொண்டு தன் இஷ்டதேவதையைச் சிந்தித்துப் போற்றி அதன்பின் நீராடல் வேண்டும். நீராடாமல் எந்தக் காரியமும் செய்யக்கூடாது. நீராடுதலாவது சுத்தஜலத்தில் ஸ்நானம்பண்ணுதலாம். ஸ்நானம் செய்யாதவன் தேவபிதிர்காரியங்கள் ஒன்றுக்குமுதவான் தர்மஞ்செய்யவும் அருகனாகான். ஆதலால் ஸ்நானம் அதிகமுக்கியமானது. இனி அதனை முறையாக விரித்துக் கூறுவோம்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்

திர்ஷ்டாந்த வாக்யங்கள்.

1. நல்லொழுக்க முள்ளவரின் சஹவாசம் நல்லகுணத்தையேதரும். தீயவர்களின் சஹவாசம் கெட்ட குணத்தையேகாட்டும். மழை நீரானது களிமண் தரையில் வீழ்ந்து இனிப்பான நன்னீராகும். களர்நிலத்தில் விழ்ந்து உப்பு ஜலமாகு மன்றோ.

2. மூடனானவன் இழிவான வார்த்தைகளைப் பேசினால், மேலோர் அதற்கு ஒன்றுஞ் சொல்லார்கள். நாய் கடிக்கக் கண்டும், தங்கள் வாயாற் பதிலுக்கு நாயைக் கடித்தவர்கள் இவ்வுலகி லில்லையன்றோ.

3. யார்க்குந் தர்மம் செய்யவேண்டும். அத் தர்மத்தின் பலனானது யாசிப்போர் பாத்திரம் போல நிறைவுபெறும்.

4. கன்று பசுவைத் தேடிக்கொள்வதுபோல வினையுஞ் செய்தவனையே தேடிக்கொள்ளும்.

5. பசுக்களெல்லாம் வேறு வேறு உருவானாலும், பால் எல்லாம் ஒருருவே - அதுபோல் மனிதர் பல தாரதம்மியமா யிருப்பினும் யாவருள்ளுமிருக்கும் ஆன்மா ஒரேவிதமெனக் கருதி நாம் சமமாய் யாவரிடத்தும் அன்பு பாராட்டல் வேண்டும்.

6. தாழ்ந்த நிலத்தில் பிறந்த உப்பை, உயர்ந்த நிலத்திற் பிறந்த நெல்லினுஞ் சிறப்பாக ஏற்றுக்கொள்வர் அதுபோலக் கீழ் குலத்தோ ராயினுங் கற்றோரை மேலிடத்து வைக்கத் தகும்.

7. கற்றோர் சிநேகம் கரும்பை நுனியிலிருந்து தின்பதுபோல வரவர அதிக இனிப்பைத்தரும். மற்றோர் சிநேகம் கரும்பை அடியிலிருந்து தின்றாற் போல வரவர அன்பிற் குறைவுபடும்.

8. கரும்பை வருத்தினும் இனிய சாற்றைக் கொடுக்கும், அது போல் மேலோர் தங்களுக்குத் தீங்கு செய்தோர்க்கும் நன்மையே செய்வார்கள்.

9. பாம்பு புற்றுள்ளிருப்பினும் இடியைக்கேட்டஞ்சும். அதுபோல பெரியோரின் கோபத்திற் காளானால், எவ்வளவு பாதுகாப்பிலிருப்பினும் தண்டனை விடாது.

10. சந்திரனைச் சேர்ந்த களங்கமும் தொழப்படும். அதுபோல பெரியோரைச் சேர்ந்த சிறியோரும் சிறப்படைவர்.

11. பாலைச் சேர்ந்த நீரும் பால்போலாம். அது போல பெரியோரைச் சேர்ந்த சிறியோருடைய இழிவு தோன்றாது.

12. மழையில்லாத நாளிலும், ஆறு ஊற்றுநீரைக்கொடுக்கும். அதுபோல் செல்வ மழிந்தாலும் பெரியோர் செய்யும் தருமங்களைச் செய்யாமல் விடார்.

13. துஷ்டன் சம்பத்துடையவனாயினும் அவனைச் சேர்ந்தோர்க்கு துக்கமே யல்லது-சுகமில்லை. நாகரத்தினம் வைத்துக் கொண்டிருக்கும் பாம்பினிடம் போனவனுக்கு பிராணபத்தே யன்றி, மாணிக்கம் கிடைக்காது.

14. சத்புருஷர்களுக்கு அற்ப உதவி செய்யினும் பெரிய பிரதிபலனை யடையலாம். துர்ச்சனர்க்குப் பெரிய உதவி செய்யினும் பதிலுக்குத் தீங்கே செய்வர். பசுவுக்குப் புல்போட்டாலும் அமுதமான பாலைக்கொடுக்கும். பாம்புக்குப் பால்வார்த்தாலும் கடும் விஷத்தையே கொடுக்கு மன்றோ.

15. மானஹீனி யானவன் அற்பத்தொழிலைச் சம்பாதித்து, நிரம்ப சந்தோஷ மடைவான், அதனால் அவன் பிரயாசை பலனடையாது. நாயானது துற்கந்தமுள்ள எலும்பைச் சம்பாதித்து சந்தோஷங்கொள்ளும். அதனால் தன் பசி தீராதன்றோ. (தொடரும்.)

எஸ். கிருஷ்ணசாமி ஐயர், ரேஞ்சங்குடி துர்க்கம்.

இந்து மதம்.

நமது தேசத்தில் ஆதியில் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு ஜாதியார்களே யிருந்தனர். அவற்றுள் அனேக கிளைகள் இருந்துவருகின்றன. அவற்றுள் தற்காலம் இருந்துவரும் சாதியார்களைக் கவனிக்குங்கால் கணக்கற்றனவாய் இருக்கின்றனர். அவர்கள் மதங்கள்ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் பிரிந்திருக்கின்றன. இப்படிப்பிரிந்திருக்கும்மதங்கள் ஒவ்வொன்றும் மேற்சொல்லிய நான்கு ஜாதிகளையே ஆதாரமாய்க் காட்டுகின்றன. சகலரும் முடிவில் ரிஷிபுத்திரர்கள் என்று நிர்ணயிக்கின்றார்கள். இப்படிச் சொல்லும் இவர்கள் பல வேற்றுமைப்பட்டு விளங்குவதற்கு காரணம் என்னவென்று யோசிக்குமிடத்து, நம்தேசமானது நீண்டகாலமாய் இருப்பதால் இத்தேசத்தில் பற்பல மாறுதல்கள் உண்டாயின வென்றும், அம்மாறுதல்களால் அவ்வக்காலங்களுங் கேற்ப அவ்வவ்வூர்கள் அநேக அரசர்களால் ஆளப்பட்டுவந்ததால் அவ்வவ்வரசர்களின் மதங்களை அனுஷ்டித்து வந்தவர்கள் ஒவ்வொரு ஜாதியாய்ப் பிரிந்தார்கள் என்றும் தெரிகிறது. அதுபோல் தற்கால ஆங்கில ஆளுகையிலும் நடந்துவருகின்றது. அதாவது இந்து கிறிஸ்தவர்கள் என வழங்கும் இந்தியர்கள் இராஜமதத்தை தழுவியுள்ளவர்கள். இவர்கள் தற்காலம் அதிகரித்திருக்கின்றனர். இதுபோல் மகம்மதிய மதத்தையும் அவர்கள் காலத்தில் தழுவியுள்ளார்கள். இப்படி நம் இந்தியர்கள் பிளவுபட்டு ஒற்றுமையில்லாத ஸ்திதியை அடைந்துவிட்டார்கள். அப்படி பிளவுபட்ட இந்தியர்களையும், இந்துக்களில் ஏற்பட்டுள்ள பல ஜாதிகளையும் ஏகப்படுத்த வழிதேடாது, தற்காலம் நம்தேசத்தில் பல அறிவிலிகள் பிராம்மணரல்லாதார் எனக் கட்சிப் பிரித்து இன்னும் துவேஷ பாவம் பெருக முயற்சிசெய்கின்றார்கள். கோடாரிக்காம்புகளை ஒத்த இவர்களின் அறிவும், செயலும் தாசிகளைவிடத் தாழ்ந்ததாய் மதிப்பிடப்படுகின்றது. ஏனெனில், தாசியானவள் எவனால் பணம் கொடுக்கப்படுகின்றதோ அவனை அனுசரித்துப் புகழ்வதும் அவன் பிரபாவத்தைச் சகலர்க்குச் சொல்வதும் தன் இனமுழுவதும் அவனை வணங்கச்செய்வதும் அவர்களுடைய குல தர்மம். பணம் கொடுக்கத்தவறினால் வேறு யாரை யாவது பின்பற்றி முதல் ஆதரித்த பிரபுவைத் துஷிப்பார்கள். பூர்வீகமாய் மேன்மை யடைந்திருந்த நம் நாடானது எப்படிக் கீழ் நிலைமையை யடைந்துவிட்டது? இதற்குக் காரணம் யாது என உற்று நோக்கி ஜன ஒற்றுமையை உண்டாக்க முயற்சிசெய்யாமல் வீண்கலகம் செய்துவரும் பிராம்மணர்களுக்கும் பிராம்மணர்க ளல்லாதவர்களுக்கும் தெரிவிக்கும் விண்ணப்பம் என்னவெனில், இவர்கள் பயனற்ற விவாதங்களை ஒழித்து ஒவ்வொருவரும் ஒற்றுமையுடன், சிதருண்டு கிடக்கும் நம் இந்தியர்களை முதல் முதல் ஆதரிக்க வேண்டும். எப்படியெனில் இந்துக்கள் இந்துக்களாகிய தங்கள் மதஸ்தர்களில் ஜாதி வேற்றுமையின்றி விவாகம் செய்துகொள்ளலாம் என்னும் நியாயத்தை சட்டமூலமாய் செய்தல் ஒன்று. நமது மதத்தைவிட்டு பிற மதஸ்தரின் மாயத்தில் சிக்குண்டு தவிக்கும் நமது கிறிஸ்துவ சகோதரர்களை மீண்டும் இந்துகளாய்ச் சேர்த்து அவர்களுக்குக் கோயில் முதலான இடங்களுக்குச் செல்ல அனுமதி தரல்வேண்டும். இதை முதல்முதல் செய்வார்களானால் நம்தேசத்தில் பாதிரிமார்கள் செய்யும் காரியங்கள் பயனடையாது போவது மன்றி, இதுவரையில் அவர்கள் செய்துவந்த காரியங்கள் பூராவும் பயனற்றவைகளாய்ப் போகும். நம்மவர் சத்தியமான நம் முன்னோர் மதத்தை இழந்து நரகத்தில் விழமாட்டார்கள். இந்துக்களின் ஒற்றுமையும் அதிகரிக்கும். ஆனதுபற்றி முதல் முதல் நம்தேசத்தார் ஏகமதவிரதம் அனுஷ்டிக்கவேண்டும்; இல்லையேல் நாம் ஆதி ரிஷிகளின் புத்திரர்கள் என்பதை மறுத்துவிடவேண்டும். ரிஷிபுத்திரர்களானால் ஏகமதமாகுதல் நியாயம்.

ஓர் ஹிந்து.

"பகவத்கீதை" அல்லது நிராசை.

நாம் செய்துள்ள இன்ப துன்பங்களையும், லாப நஷ்டங்களையும், வெற்றி தோல்விகளையும், மனத்திலுள்ள ஸகல ஆசைகளையும், ஸமத்துவ புத்தியுடையவர்களாய் எப்போது கடவுளிடத்து அற்பணம் செய்துவிடுகின்றோமோ, அப்பொழுது நாம் இல்லறவாசிகளா யிருந்தும், பிள்ளைப்பூச்சியும் சேறும்போன்று இன்பதுன்பங்களற்று, பெரிய ஞானிகளாய் நடப்போம்.

குருக்ஷேத்திரம் என்னும் இடத்திலே, பாண்டவர்களுடையவும், துர்யோதனாதிகளுடையவும் படைகள் அணிவகுக்கப்பட்டு இருந்தன. குந்திமைந்தன் அர்ஜுனனும், ஹ்ருஷிகேசனும், இருசேனைகளுக்கும் நடுவிலே தேரின் மீதுசென்று கொண்டிருந்தார்கள். "மதிகுசனா இரதத்தை நிறுத்துக. இப்போர் முனையில் எவருடன் யான் போர்புரியவேண்டுமோ அவர்களைப் பார்க்கவேண்டும்" என்று இவ்விதமாய்க் கேட்டுக்கொண்ட பார்த்தனுடையசொற்படி, கிருஷ்ணன் தேரை இருசேனைகளுக்கும் நடுவிலே நிறுத்தினார். அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், தந்தை, பாட்டன், ஆசார்யன், தோழர்கள், புத்திரர்கள் முதலியவர்கள் அங்கு இருசேனையிலும் நிற்கக்கண்டான் கிரீடி.

அங்கு பந்து மித்திரர்களால் சூழப்பட்டிருக்கும் போர் அணியைக்கண்டு மிக்க இரக்கம் மேலிடப்பெற்றவனாய், காண்டீபன், ஏ! கிருஷ்ணா! என்னால் நிற்கமுடியவில்லை. என் அவயவங்கள் சோர்கின்றன. சுகம் வேண்டாம், துக்கம்வேண்டாம், காடுவேண்டாம், நாடுவேண்டாம், வெற்றிவேண்டாம், தோல்வி வேண்டாம், ராஜபோகங்களால் யாது பயனுளது. என் பந்து மித்திரர்களையும் என் ஆசார்யரையும் கொன்றபின் எனக்கு உண்டாகும் ஆனந்தம் என்ன? இவர்களைக் கொன்றுவிட்டு நான் எப்படி உயிருடனிருப்பேன். நான் ஒருக்காலும் போர் செய்வதில்லை என்று தேரைவிட்டு இறங்கிவிட்டான்.

அவ்வாறு கூறிய பார்த்தனை நோக்கிப் பகவான் "அர்ஜுனா! துர்யோதனாதிகளை ஜெயித்து ராஜ்ஜியத்தைக் கட்டியாளவேண்டுமென்று, போர்க் கோலங்கொண்டாய். "நான்" என்ற அஹங்காரம் பூண்டாய். நீ, யாவராலும் துக்கிக்கவேண்டாதவரைப் பற்றித் துக்கப்படுகிறாய். ஞானவார்த்தைகளையும் பேசு

கிறாய். உயிர் போனவரையும், உயிர் வாழ்பவரையும் பற்றி ஞானிகள் துக்கியார். "நான்" என்ற மமதையல்லவோ, உன்னை இவ்விதமெல்லாம் செய்ய ஏவுகிறது. பேடித்தன்மையைக் கொண்டாய். "சுயகாரிய புலியாக" வந்தாய். கிலி அடித்துவிட்டது.

பார்த்தா! உடல், பொருள், ஆவி, மூன்றையும் எனக்கு அர்பணம் செய். நிராசையாய் உலகத்திற்காகப் போர்செய் "பற்றின்றியகர்மம் பலகோடி செய்தாலும் பாவம் ஒன்றுமில்லை" உனக்காக இனி யுத்தம் செய்யவேண்டாம், எனக்காகச் சண்டைசெய். நானும் நீயும் மற்றும் இவ்வரசர்களும் ஒருகாலத்தில் இருந்தும் ஒருகாலத்தில் இல்லாமலும் போகிறவர்களல்ல. எல்லோரும்நித்தியர்கள், சேடில்லாதவர்கள். ஸுகதுக்கங்களை ஸமமாகக்கொண்டு போர்புரிய எழுந்திரு. கர்மத்திலேதான் உனக்குஅதிகாரம். ஒருக்காலும் பயன்களிலே அதிகாரம் வேண்டாம். நீ கர்மத்தின் பயனை வருவித்துக் கொள்பவனாகாதே. பற்றின்றியகர்மத்தில் உனக்கு எப்போதும் பிரியமிருக்கவேண்டும். (நிஷ்காமியத்தவம்)

நீ எதனைச் செய்கின்றனையோ, எதனைப் புசிக்கின்றனையோ எதனை ஹோமம் செய்கின்றனையோ, எதனை தானமாகக் கொடுக்கின்றனையோ எதனை விரும்பித் தவம்புரிகின்றனையோ, ஏ அர்ஜுனா! அதனை எனக்கு அர்ப்பிதமாகச் செய்யக்கடவாய்.

"அர்ஜுனா! மனதைத் தூயதாக்கும் சில மந்திரங்களுண்டு. அவற்றுள் முதன்மையானது, "ஸ்ரீகாயத்ரீ" எனப்படும் அம்மந்திரத்தை இப்போது உனக்கு உபதேசிக்கிறேன். அதனை நீ ஜெபிப்பாயாக! யாதொரு பற்றுமின்றி யுத்தம் செய்வதற்கும், என்னைச் சரணடைதலுக்கும், அது ஓர் வழி" என்று அர்ஜுனனுக்கு காயத்ரி மந்திரத்தை உபதேசஞ்செய்து, "அர்ஜுனா! இம்மந்திரத்தை ஜெபித்து உன்னை சுத்தஞ் செய்துகொள்" நிர்விகர்ப்பனாய் போர்புரிவாயாக!" என்று போதித்தார்.

இவ்விதமாய் ஸ்ரீகண்ணன் உபதேசங்களை ஏற்றுக்கொண்ட தனஞ்செயன் பாரதச்சண்டையை "புளியம்பழமும் ஓடும்போலும்" பற்றின்றிச் செய்து முடித்தான்.

மேலே செப்பிய ஸ்ரீகாயத்ரி மகாமந்திரத்தை அனேகர் அர்த்தம் தெரியாது, மனமும் அடங்காது வெளிவேஷமிட்டு, மெண மெண வென்று ஜெபிக்கிறார்கள். அப்படிசெய்வதால் பயன் ஒன்றுமில்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று பெண்டு பிள்ளைகளை திண்டாடவிட்டு, பட்டி நாயைப் போன்ற மனதை அடக்கத் தைர்யமின்றி, காஷாயதாரியாய் காடு மலையில் வாசம் செய்வதால் பயன் யாதுளது. எப்பொழுதும் சுற்றிச் சுற்றி சுழன்று கொண்டேயிருக்கும் பட்டிமாட்டைப்போன்ற இந்தப் பாழான மனதைக்கட்டியடக்கி ஆளத்திறனற்றவர்களாய், மதுவுண்ட வானரத்தைப்போன்று திரியவிட்டு கெட்டுவிடுகிறோம்.

கடவுளது பெருமையை அடிக்கடி நினைத்து அறிவைத் தெளிவாக்கிக் கொள்ளுக. இவற்றுலன்றி நாம் அகப்பற்று புறப்பற்றுகளை நீக்க வழிமற்றொன்றுமில்லை. எவ்வளவு தானதருமங்கள் செய்தாலும், வேள்வி செய்தாலும் "நிராசையே தெய்வம்" என்ற வாக்கியப்படி பலனைக் கருதாது செய்தாலொழிய அதனால் யாதொரு பலனுங்கிட்டாது. "ஸ்ரீமத் பகவத்கீதை" எனும் நூல் நாம் இவ்வுலகில் நிராசையுடையவர்களாய், பற்றின்றிய கர்மஸ்தர்களாய் உலகத்தில் ஜீவிக்கவேண்டிய மார்க்கங்களைப் போதிக்கிறது. நம் மனதில் ஆழமாய் ஊன்றியிருக்கும், அஞ்ஞானமாகிய ஆணிவேரைப்பிடுங்கி எறிந்துவிட்டால் நாம் மோக்ஷத்தை அடைந்தவர்களாவோம். குற்றமுள்ள எப்பொருளும்

கிட்டநாடாது நீமையனுகாது "நான்" என்ற மமதையடங்கினால் இணையற்ற பேரின்பமெய்தலாம்.

மஹமதியர்களுக்கு கொரானும், கிறிஸ்தவர்களுக்கு பைபிலும், எப்படி வேதமாக இருக்கிறதோ, அதைப்போன்று "ஸ்ரீ பகவத்கீதை" இந்துவாகப் பிறந்து வளர்ந்த நம் ஒவ்வொருவருக்கும் வேத அமுர்தமாக இருந்து வருகிறது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. அர்ஜுனனுக்குப் போதிக்கும், ஒவ்வொரு வார்த்தைகளிலும் தேவாமுர்தம் பொங்கி ஆனந்தத் தாண்டவம் ஆடும் நீர் விகல்பமாகிய "ஞானம்" ஏனும் பொக்கிஷம் நிறைவுற்று இருப்பதைக் கண்ணுற்ற அன்னிய நாட்டார் அதைக் கைப்பற்ற ஆரம்பித்து விட்டார்கள். கிறிஸ்து மார்க்கம் எவ்விதம் உற்பத்திஸ்தானத்தில் ஜீரணித்து இந்தியாவில் ஊன்றப் பார்க்கிறதோ அதனைப் போன்று நம் "பகவத்கீதை' யாகிய பொக்கிஷம் அன்னியர் நாட்டில் சென்று தழைத்தோங்கும் மார்க்கத்திற்கு இடங்கொடுத்து அவர்களிடமுள்ள அஞ்ஞானமாகிய "நரக" வாசனை கொஞ்சம் கொஞ்சமாய் நம்மில் ஏறவிட்டு விடுகிறோம். அது முடியாத காரியமேனும் நாம் இப்போதே யதையொழித்து நமது பூர்வீக ஞானமார்க்கத்தை நன்குணர்ந்து அதைப் பரவச்செய்ய வேண்டும். முதலாவதாக நாம் அதைக் கைக்கொள்ள வேண்டும்.

அதனை நாம் எவ்விதம் கைக்கொள்வது?

சுயநலம் கருதாது இப்பரமாத்மா, அர்ஜுனனுக்கு "பகவத் கீதையை" எப்படி போதித்தாரோ, அதைப்போன்று இப்போதைக்கு மூன்றாண்டாக நடைபெறும் நமது ஆனந்தபோதினியே கிருஷ்ணனாகவும், அதில் அடங்கிய விஷயங்களே கிருஷ்ணனுடைய லீலையாகவும், அதில் வெளியாகும் ஞானங்களே "பகவத்கீதையாகிய" ஞான அமுர்தமென்றும், அவ்வானந்தபோதினியை வாசிப்பவர்களே அர்ஜுனனாகவும், நினைத்து, நம் ஆனந்தபோதினியாகிய கிருஷ்ணனை ஆதரித்து வருவோமாகவும்.

அடுத்த சஞ்சிகையில் நிராசையாய் வசித்த சில மஹான்கள் சரிதையை வெளியிடுவோமாகவும்.

எஸ். அயோத்திராம்.

சிறுவர் பக்கம்.

மாணவர்களுக்கான சிலபுத்திமதிகள்

(311-வது பக்கத் தொடர்ச்சி)

5. விகடம் செய்தல், இன்னொருவரைப்போல் பரிகாசமாய் நடித்தல் இவை நல்ல நடக்கைகளல்ல. அகசியக்காரர்முதலிய இத்தகைய நடக்கையுடையோர் அறிவாளிகளென மதிக்கப்படுவதில்லை. அரசருடைய சபையிலிருக்கும் அகசியக்காரனுக்கே ஆங்கிலத்தில் Court Fool (கோர்ட் பூல்) என்று பெயர்.

6. ஒருவரையும் முகஸ்துதி (அவர்கள் முன்பாகவே அவர்களைப்புகழ்தல்) செய்யலாகாது. அப்படிச் செய்வோர்கள் உண்மையானவர்களென மதிக்கப்படுவதில்லை.

7. தாய், தந்தையர், மூத்தோர், நம்மிலும் கல்வியிலும் செல்வத்திலும் தாழ்ந்தாரேயாயினும், எப்போதும் அவர்களை யலட்சியமாய்க் கருதாமல் மரியாதையோடேயே நடத்தல்வேண்டும்—இன்றேல் நமது உயர் பதவி நமக்கு நிலைக்காது.

8. நாம் கொஞ்சம் ஆங்கிலம் படித்தோமென்று தாய்ப்பாஷையில் பாண்டித்யமுடையோரைக்கூட சிலர் அவமதிக்கிறார்கள். அத்தகைய அறிவிலிகள் நம் அறிவைத்துலக்கி மெய்ஞ்ஞானத்தை யளிப்பது நமது தாய்ப்பாஷையே யென்பதை நன்குணர்வார்களாக.

9. ஆடவன் தைரியசாலியா யிருக்கவேண்டியது அவசியம். ஆனால் சிலர் ஆபத்து நேரிடாத காலங்களில், நான் எதற்கு மஞ்சமாட்டேனென்று தம்மைத்தாமே புகழ்ந்துகொண்டு, "இரவில் அந்த வழியில் சென்றால் கள்ளர் பயம், நாம் பகலில் செல்வதே நலம்" என்று ஒருவன் கூறினால், அவனைக் கேலி செய்வது வழக்கம்—இத்தகையோர் உண்மையாக ஆபத்து நேர்ந்தால், கூட இருப்பவனை யாபத்தில் சிக்கவிட்டுத் தாம் காததூரம் பறந்துபோய் விடுவார்கள். இவர்களே முதல்தரக் கோழைகள். புத்திசாலிகள் அவ்வாறு நடந்துகொள்ளார்கள்.

ஆபத்துநேராவண்ணம் தடுக்கத் தன்னால் கூடியவரையில் முயன்று, பிறகு ஆபத்து நேர்ந்தபோது தன் சமயோசிதபுத்தியிலும், வல்லமையிலும், கடவுள் உதவியிலும் பூரணநம்பிக்கைவைத்து சாந்தத்தோடு அஞ்சாது முன் நிற்பவனே சுத்தவீரனாவான்.

10. தன்னைப்பற்றித் தானே புகழ்ந்து கூறுகிறவன்தான் முதல்தரமான முட்டாள். அவன், நெருப்பு நன்றாய் எரியவேண்டுமென்று அதில் தண்ணீர் ஊற்றுகிறவனைப்போல், தனக்குள்ள கொஞ்ச நஞ்சம் புகழையும் அழித்துக் கொள்கிறான்.

11. எப்போதும் அன்னியருடைய (நமது விரோதியுட்பட) நற்குணத்தைப்பற்றி கூறவேண்டுமேயொழிய கெட்ட குணத்தைப்பற்றி கூறலாகாது. போது நலத்திற்கு விரோதம் நேர்வதாயின், அப்போது ஒருவன் குற்றத்தை வெளியிடலாம்.

12. கல்வியில் ஒருபோதும் அகங்காரம் கொள்ளலாகாது. நமக்குமேல் கற்றோர் எக்காலத்திலும் எண்ணிறந்தோர் இருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் மறந்தலாகாது.

ஆறணி - குப்புசாமி முதலியார்.

ஸ்திரீகள் பக்கம்

ஸ்திரீகளும் பரோபகாரமும்

கடல் சூழ்ந்த இவ்வையகத்தின்கண் ஒருவர்க்கொருவர் துன்பம் வந்த காலத்தில் உதவுவதே பரோபகாரமாகும். கேவலம் மிருக ஜாதிகளைப்போல பகுத்தறிவுடைய நாமும் நம்முடைய சொந்த காரியங்களைமாத்திரம் கருதுவோமேயாகில், மூச்சுமட்டும் விட்டுக்கொண்டிருக்கும் கருமான் கருத்திற்கும் நமக்கும் யாது வித்தியாசம்? நம்முடைய சௌக்கியத்தைமட்டும் கருதுநடப்பது பெரிதல்ல. அப்படியே நம்மைச்சேர்ந்த உறவினருக்கும், அக்கம் பக்கக்களில் வசிக்கும் இதரஜனங்களுக்கும் ஏதாவது துன்பம்வந்தகாலங்களில், அதுநமக்கே வந்ததாகப் பாவித்து, நம்மாலியன்றமட்டில் அவர்களுக்கு உதவிசெய்ய முயல வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனக்குக் கெடுதி சம்பவித்த சமயங்களில் அன்னியருடைய ஒத்தாசையைக் கோருவது உலகத்தில் சாதாரணமாயிருக்கிறது. உபகாரம் செய்யும் விஷயத்தில் இன்ன ஜாதியாருக்காவது இன்ன மதஸ்தருக்காவது செய்யவேண்டுமென்று யாதொரு விதியும் கிடையாது. இடுக்கண் உற்றவர்கள் யாராயிருந்தாலும் சரி. அவர்களுக்கு அது நீங்கும் பொருட்டு இயன்றமட்டில் உதவிசெய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம் தாய்நாட்டுச் சகோதரிகளில் பெரும்பாலார் இவ்விஷயத்தைக் கவனிப்பதேயில்லை. இயற்கையாகவே, முன்நமது ஆனந்தனில் கூறியபடி ஸ்திரீகள் சிக்கனமுடையவர்களாயிருப்பது அவசியமெனினும், பெரும்பாலார் அதை உலோபகுணமாக்கித் தாங்கள் அடையக்கூடிய புண்ணியபலத்தை யிழந்து விடுகிறார்கள். அதைவிட்டுத் தாங்களும் கூடியவரையில் பரோபகார கைங்கரியத்தைச் செய்யவேண்டுமென்பதற்கே நாம் இதை வரையலானோம்.

அண்டை வீட்டுக்காரியினுடைய குழந்தைக்கு ஏதாவது வியாதி சம்பவித்தால், ஒரு ஸ்திரீயானவள், அது தன் குழந்தைக்கே வந்ததாகப் பாவித்து அதற்குத் தேவையான மருந்து வகைகளை சம்பாதித்தல், வைத்தியரை அழைப்பித்தல், முதலானவைகளில் தானும் உதவிசெய்ய முயலவேண்டும். இப்படிச் செய்வதால் தன் குழந்தைக்கேனும், தனக்கேனும் ஒருசமயம் அவ்வித சங்கடங்கள் உண்டானால், தன்னால் முன் உதவியடைந்தவர்கள் வலியவந்து உதவிசெய்வார்கள்.

இவைகளைச் சிறிதேனும் கவனியாத சில பெண்கள் ஒருவருக்கொருவர் இதற்குமுன் நேரிட்ட மனஸ்தாபத்தை அப்போது எடுத்துக் காட்டுகிறதுமுண்டு.

ஒருநாள் வீதியில் நின்று கொண்டிருந்த ஒரு பெண்பிள்ளை வேறொருத்தியைப் பார்த்து, "அம்மா, உங்கள் பக்கத்து வீட்டுக்காரி பிரசவித்த பிற்பாடு தேகசௌக்கியம் தப்பியிருந்தாளே, இப்போது எப்படி இருக்கிறாள்?" என்றாள். அதற்கு அவள், "ஏண்டீ, நீயேது பொல்லாதவளாயிருக்கிறாய்? அந்த சங்கதியை நீ இங்கே யாரைக் கேட்கிறாய்? அவளுடைய வீட்டுக்கு நான் போனதை நீ இந்த பத்துமாதகாலமாய் எப்பொழுதாவது பார்த்திருக்கிறாயா? நான் ஏன் அவள் வீட்டிற்குப்போகவேண்டும்? ஒருநாள் ஏதோ தெரியாமல் என்பிள்ளை அவள்வீட்டுத் தெருநிண்ணையின்மீது மண்ணைபோட்டுவிட்டதற்கு, அந்தப்பாலனை தலையின்மீது அடித்துபுண்ணியவதியல்லவா அந்த அம்மாள்? அதை நினைத்துக்கொண்டால் என் வயிறு பற்றி எரிகிறது. அவளுடைய க்ஷேமலாபங்களை நானேன் விசாரிக்கவேண்டும். அக்கொடும்பாவி இருந்தாலென்ன? போனாலென்ன? இனி என்னுடன் அவளுடைய பேச்சை எடுத்துப் பேசவேண்டாம். அப்படிப் பேசுவாயானால் நான் மிகவும் கெட்டவளாயிருப்பேன்"

என்று கோபத்துடன் சொன்னாள். இப்படிப் பேசுவதை என்ன நியாயமென நினைக்கக்கூடும்? விவேகமுள்ள பெண்கள் இப்படியும் சொல்வார்களா? பழைய விரோதம் எவ்வளவு தூரம்தபோதிலும் அப்படிப்பட்ட சமயங்களில் அதைப் பாராட்டலாமா? நற்குணமுள்ள பெண்கள், ஒருவருக்கு ஆபத்து நேரிட்ட காலத்தில் பழையவிரோதத்தையும், தங்களுக்குள்ளிருக்கும் வேறுவிதமான அசந்தர்ப்பங்களையும் யோசியாமல் விலாந்தசென்று உதவி செய்வார்கள்.

இன்னுஞ் சிலர், தங்களுக்குச் சமீபத்தில் வாசம்செய்யும் அயலாருக்கு ஏதாவது சங்கடம் நேரிட்டதை யறிந்தால் அதைப்பார்க்காதவர்கள்போல் ஜாடையாய் இருந்துவிடுகிறார்கள். அந்தோ! இதுமகாபாவம். இப்படிப்பட்ட குரூரசிந்தையுள்ள பெண்களுக்கு எப்போதாவது ஒரு விபத்து நேரிட்டால் இவர்களுக்கு உதவிசெய்பவர்கள் யார்?

உபகாரம் செய்வதிலும் பாத்திரங்கள் அறிந்தே செய்யவேண்டும். துஷ்டர்களுக்கு உபகாரம்செய்தால் தீங்கே விளையும். அதையே நல்லவர்களுக்குச் செய்தால் அவர்களைத நன்கு மதித்து பதிலுபகாரம் செய்ய முயலுவார்கள்.

பாத்திரா பாத்திரங்கள் பார்க்கு நாள் பசுவுக் கெந்த
மாத்திரம் திரணமீந்தால் பால்தரு மந்தப்பாலை
வார்த்திடிற் பாம்பினுக்கு விஷமதே வளரு மந்தோ
ஏற்ற பாத்திர மறிந்து ஈந்திடக்கடவோ மென்றே.

என்றபடி பசுவுக்கு புல்லைப்போட்டால் அது மதுரமான பாலைக்கொடுக்கும். அந்தப் பாலையே பாம்புக்கு வார்த்தால் அது விஷத்தைதான் கொடுக்கும்.

டி. ஆர். இராஜர், திருப்பத்தூர்.

[பரோபகாரசிந்தனை மனிதப்பிறவியிலுள்ள ஒவ்வொருவருக்கும் அவசியம் இருக்கவேண்டிய குணமாகும். அதைக் கேவலம் சீவகாருண்யம் ஒன்றையே கருதிச் செய்வது மிக்க உத்தமம்; அல்லது பிரதிபலன் கிடைக்குமென நம்பிச் செய்தாலும் சரி; எவ்வாற்றானும் பிறர்க்குதவி செய்வதே சிலாக்கியம். அதிலும் ஒருவர் கோராமுன், ஒருபயனையும் கருதாது ஐயோ அவர்கள் கஷ்டப்படுகிறார்களே என்று கருணையோடு நம்மாலியன்றவரையில் வாக்காலேனும் காயத்தாலேனும் மனதாலேனும் பிறர்க்குபகாரம் செய்வதே உத்தமர்செயலாகும். இதைக் கண்ணுறும் சகோதரிகள் ஒவ்வொருவரும் பரோபகார சிந்தனையை மேற்கொண்டொழுகும்வண்ணம் பிரார்த்திக்கிறோம். பத்திரிகாசிரியர்.]

ஸ்திரீ தர்மம்.

1. சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் செய்யும் சச்சிதானந்த மூர்த்தியானவர் அத்தொழிலின் பயன்கள் முழுமையும் யாவராலும் அடையப்படும் பொருட்டு ஒவ்வோர் ஜாதியிலும் வகுப்பிலும் ஆண் பெண் என இருபிரிவினையாய்ப் படைத்துள்ளார்.

2. இத்தகைய ஸ்திரீ புருஷத்தன்மையின் பந்தத்தை நன்கறிந்து இருவரும் மனமொத்து இல்லறம் நடத்தக்கூடிய மானிடவர்க்கமே படைப்பில் மிகச் சிறந்ததென்பது சொல்லாமலே விளங்கும்.

3. அதிலும் ஒவ்வோர் ஜாதியின் விவாகரீதி ஒவ்வொரு வகையாய் இருக்கிறது. உதாரணமாக,

மேல்நாட்டு விவாகங்களில் கணவன் மனைவி இவர்களின் மனம் ஒத்திருக்கும் வரையில்தான் இல்லறம் நடத்துகிறதென்றும், அவர்களுள் மனவருத்தம் நேரிட்டால் கலியாண பந்தத்தை ரத்துசெய்து விடுகிறதென்றும் சட்டம்.

4. நம் ஹிந்துக்களிலோ வென்றால், என்று மனைவி மனுஷனென்று பந்தம் ஏற்பட்டு விட்டதோ அதிலிருந்து அவர்களின் ஆயுள் உள்ளளவும் உடலும் உயிர்போலவும் பூவும் மணம்போலவும் ஒத்திருக்கவேண்டும். ஆகையினால் தான் உயிர்த்துணைவன் என்றும், உயிர்த்துணைவி என்றும் ஆன்றோர் பெயரிட்டிருக்கின்றனர்.

5. இத்தகைய நீடித்த பந்தம் ஏற்பட்டிருப்பதால்தான் மாறாத அன்பும் ஆதரவும் கொள்ள இடமாகிறது. கேவலம் சிற்றின்பத்திற்காகத்தான் இவ்வுலக வாழ்க்கை யென்பதல்லாமல் பரலோக ஸாதனத்திற்காகத்தான் இச்சரீரமெடுத்தோம் என்பதை நன்கறிய ஸாதனமாய் இருக்கிறது.

6. ஏனெனில், இகபர சுகங்கள் அனைத்தையும் கணவன் மனைவி இருவருமாய்த் தேடுவதால் ஞானமும் ஒற்றுமையும் உண்டாகிறது. இனி இத்தகைய ஸ்திரீ புருஷர்கள் கூடி இல்லறம் நடத்தும் முறையைச் சற்று கவனிப்போம்.

7. ஸ்திரீகள் மனோபலம் தேகபலங்களில் மிகக் குறைந்தவர்கள். ஆனதால் அபலைகள் என்றும் "ஸ்திரீணாம் நாஸ்திஸ்வாதந்திரியம்" என்றதால் ஸ்வதந்திரமற்றவர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

8. இத்தகைய ஸ்திரீகள் தங்கள் இளமைப் பருவத்திலேயே பெற்றோர்களால் நன்னடக்கை, நல்லொழுக்கம், கல்வி, அறிவு, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனப் பலவகை நல்குணங்களால் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

9. இல்லறம் நடத்தும் முறையை மங்கையர்க்கு இன்றியமையாத சாதனமாகையால் அத்தகைய முறைமையில் பெண் மக்கள் பெரிதும் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

10. பின்பு தங்கள் யௌவன காலத்தில் கணவன் வீட்டிற்குச் சென்று அங்குள்ள மாமி மாமன் முதலியவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களின் அன்பிற்குப் பாத்திரராக வேண்டும்.

11. கணவனுக்கடங்கி அவன் சொல்லுக்கிணங்கி அவன் ஆணையை மீறாமல் நடக்கவேண்டும். அவன் கோபித்தாலும் உடன் கோபிக்காமலும், "பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்" என்றும், "கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை" என்றும் ஆன்றோர் கூறியபடி எதிர்த்துப் பேசாது குளிர்ந்த வசனங்களால் கோபத்தை யமர்த்தி சாந்தமடையச் செய்வது பெண்டிரின் கடமையாகும்.

வீட்டின் வேலைகளைச் செய்யப் பல வேலையாட்கள் இருப்பினும் கணவனுக்கனுகுணமான வேலையை மற்றொருவா செய்யக் கற்புடைய ஸ்திரீகள் ஒருபோதும் சம்மதியார்கள். "குலமகட்கழகு கொழுனனைப் பேணுதல்" என்றவாறு தன் கணவனைப் பாதுகாக்கும் முறைமையிலேயே அன்னோர்களின் மனம் சென்றிருக்கும். தன் கணவன் வரும்படிக்குத் தக்கவாறு செலவுசெய்து வருவாயில் கொஞ்சம் மிகுத்து வைத்து அவனை கடனாளியாக்காதவளே உத்தம ஸ்திரீ. அயல் வீட்டுக்காரர்கள் அணிந்திருக்கும் நகைகளையும் உடைகளையும் கண்டு அதுபோல் தனக்கும் வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று உபத்திரவம் செய்பவள் சத்ருவாவாள்.

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தாற் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்க்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழு காப்பெண்"

என்று நம்மூதாட்டியாரான ஔவையாரும் அருளி இருக்கின்றனர்.

தன் கணவன் அழகில்லாதவனானாலும் குணமில்லாதவனானாலும் ரோகமுள்ளவனானாலும் "கல்லானாலும் கணவன்" "புல்லானாலும் புருஷன்" என்றவாறு அவனைப்போற்றி நடக்கவேண்டும். தான் கொண்ட புருஷனையே தெய்வத்திலும் பதின்மடங்கதிகமாய் போற்றுபவளே சற்பிற்சிறந்த மங்கையாவாள். கற்பின் மிக்க உத்தமிகளின் சிறந்த ஆபரணம் யாதெனில் அவர்களின் கணவரேயாவார்.

அதற்கு இரண்டு உதாகரணங்கள் கீழ் கூறுகிறோம்:—

சகல ஆபரணங்களைத் தரித்திருப்பினும் தன் பிராணனுக்குச் சமமான ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைப் பிரிந்து அப்பிரிவாற்றாணாக் கொடுமையால் வாடி மெலிந்திருக்கும் ஸீதையை ஹனுமார் அசோகவனத்தில் கண்ணுற்று, "ஆஹா! மஹா ஸுந்தரமான ரூபமுடையவளாய் இருந்தும், அனேகம் உயர்ந்த ஆபரணங்களைத் தரித்தவளாய் இருந்தும் மஞ்சள் பட்டு உடுத்திக்

கொண்டு இருந்தும், மஹாலக்ஷ்மிபோல் விளங்கும் ஸீதையானவள் மேகத்தின் நடுவில் மறைத்திருக்கும் பூர்ண சந்திரன்போல் மங்கி சோபை (அழகு அல்லது பிரகாசம்) யற்று இருக்கிறாளே இது யாது காரணம்" என்று யோசித்துப் பிறகு "ஆ! கற்பிற்சிறந்த சீதையானவள் தன் ஒப்பில்லா ஆபரணமாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைப் பிரிந்திருக்கிறாளன்றோ. ஆகையால்தான் சோபையற்று இருக்கிறாள்" எனத்தெளிந்து அவள் வாயால் ஸ்ரீராமா ஸ்ரீராமா என்று துக்கத்துடன் கூறுவதைக் கேட்டு சஹியாது, இத்தகைய மாதுசிரோன்மணியான சீதையைப் பிரிந்திருப்பதினால்தான் ராமச்சந்திரமூர்த்தி மூர்ச்சையுற்றுப் பிரலாபித்தாரென்றுணர்ந்து, இத்தகைய நங்கையைப் பிரிந்த ராமன் உயிர் தரித்திருப்பதே ஆச்சரியமெனப் பகர்ந்து பின்பு ஸீதைக்குக் கணையாழி கொடுத்துப் பேசியதாக ராமாயணம் ஸுந்தரகாண்டத்தில் விரிவாகக் கூறியிருக்கிறது. இது நிற்க;

முன்பொரு காலத்தில் ஒரு பட்டணத்தின் மேல் எதிரிகள் வந்து தண்டெடுக்கையில், அவ்வூரிலுள்ள ஸ்திரீ ரத்னங்களுக்கிரங்கி, நாங்கள் உங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கிறோம். உங்களுக்குள்ள உயர்ந்த ஆபரணங்களில் சிலவற்றை எடுத்துக்கொண்டு சீக்கிரம் இவ்வூரைவிட்டோடிவிடுங்கள் என்றார்கள். அதைக்கேட்ட அவ்வனிதைகள் அவ்வாறே எடுத்துக்கொண்டு, நகரவாயிலில் வந்து வெளிசெல்ல உத்திரவு கேட்கையில், அதிகாரிகள் அவர்களை நோக்க அந்தோ! தம் தம் ஆடவரைத் தம் முதுகில் தூக்கிச்செல்லக் கண்டார்கள். என் இக்காரியங்களை செய்தீர்களென்று வினவ, அந்த ஸ்திரீகள் நீங்கள் கூறியவாறே எங்கள் உயர்ந்த ஆபரணங்களை எடுத்துச் செல்லுகிறோமென்றார்கள். அதுகேட்ட எதிரிகள் அந்த ஸ்திரீகளின் புத்தி கூர்மைக்கு வியந்தும், அவர்களின் பதி பக்திக்குகந்தும் சண்டை செய்யாது திரும்பிவிட்டனர். இவ்வுதாரணங்களால், பூணும் எத்தகைய ஆபரணங்களையும் விட தன் பர்த்தாவையே விலைமதியா ஆபரணமாய் கற்புடைய ஸ்திரீகள் மதிப்பார்கள் என்றும், எவ்விதமான கஷ்டதசையிலும் கொடிய வறுமையிலும், தன் பர்த்தா அருகில் இருந்தால் ஒரு கஷ்டத்தையும் மதியார்களென்றும் நன்கு விளங்குகிறது பதியில்லாவிடம் சுவர்க்கமானாலும் அங்கு வசிக்கச் சம்மதியார்கள். பதியுள்ளவிடம் நரகம் ஆனாலும் அங்கு ஆனந்தமாய் வசிப்பார்கள். கற்புடைய ஸ்திரீகளுக்குத் திரிலோகமும் நிகர் ஆகாது.

முன்பு அத்திரியின் மனைவி அநுஸூயை தன் கற்பைச் சோதிக்க வந்த திரிமூர்த்திகளையும் பாலராக்கியதும், நளாயினி எட்டுநாள் ஸூர்ய உதயமாகாமல் இருக்கச்செய்ததும், ஸாவித்ரியானவள் தன் தபோ பதிவ்ருதா மஹிமையால் பர்த்தாவுக்கு உயிரை மீட்டுக்கொண்டு வந்ததும் அவர்களின் கற்பின் மஹிமையால் அன்றோ? முன் ப்ருந்தையின் சாபத்தினால் அல்லோ மஹா விஷ்ணுவும் ஸீதையை இழந்து பரிதபித்தார். மஹா உத்தமியான காந்தாரியின் சாபத்தினால் அன்றோ க்ருஷ்ணபகவானும் குறைக்கொள்ளியானார். அத்தகைய உத்தமிகள் மழை பெய் என்றால் பெய்யும். வெய்யில் இறை என்றால் இறைக்கும். இத்தகைய பல மஹா உத்தமிகளையே நம் இந்தியா முழுமையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

இதுவரையில் ஸ்திரீகளின் கடமையைச் சொன்னோம்; ஆனால் ஆடவர்களுக்கு கடமை இல்லையோ வெனின், அனேகம் உண்டு. தன்னையே கதியென்றடைந்து சிறுவயது முதல் கஷ்டசுகங்களைத் தன்னுடன் ஸமமாய் அனுபவிக்கும் தன் மனைவியினிடத்து மாறா அன்பும் கருணையும் இருக்கவேண்டியது மிகுந்த அவசியமே. அல்லாமல் தன் மனைவியைக் கொடுமையாய் நடத்துவதும் பரத்தையரிடம் நேசம் வைப்பதும் மனைவியருக்கு மிகுந்த துரோகமேயாகும். இதைப்பற்றி தைமீ சஞ்சிகை 266-ம் பக்கம் ஸ்திரீ புருடர் என்ற தலைப்பின் கீழ் விரிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. சகோதரிகளே! நாம் மஹா உத்தமிகளின் சரித்திரத்தைப் படித்து அவர்களின் நல்வழியைக் கடைப்பிடித்து உத்தமிகளாய் விளங்க ஸர்வேச்வரன் அருள்புரிவாராக.

S. P. ஓர் ஸஹோதரி.

க்ஷய ரோகம்.

(315-ம் பக்கத் தொடர்ச்சி)

க்ஷயரோகிகளுக்கு காட்டு முயல் நெய் முன்சொன்னது போல் செய்து உபகோகிக்கலாம்: வௌவால் என்னும் பக்ஷியால் தயார்செய்யும் நெய்யே மிகவும் விசேஷமானது. க்ஷயரோக முடையவர்களுக்கு சாதாரணமாய்க் கட்டிகள் போல் மார்பிலாவது வேறு எந்த பாகத்திலாவது காண்பதுண்டு. அக்கட்டிகளில் விஷப்பூச்சிகள் அதிகமுண்டு. அத்தகைய கட்டிகளுக்கு சத்திரமிடும் சிகிச்சையானது விசேஷமல்ல. மேற்படி வியாதியஸ்தர்களுக்கு உண்டாகும் கட்டிகளில் கத்தி யுபயோகிக்கும் பட்சத்தில் அவ்விஷப் பூச்சிகளானவை விசேஷமாய்ப் பரவுவதோடு கூடிய சீக்கிரத்தில் நோயாளியை நாசமுறச்செய்கின்றன. ஆனபடியால் அத்தகைய கட்டிகள்மேல் போடும் சிகிச்சைகளி னாலேயே உடைந்து குணமடைய வேண்டும். சாதாரணமாய் மேல்போடும் சிகிச்சைகள் பலவற்றுள் மேலான தாகவும் குணம்தந்து வருவது மானவற்றில் நாகதாளியை முள் நீக்கி வெள்ளை கூழாங்கல் சமமாகச் சேர்த்து அறைத்து மேலுக்குப் போடும் பட்சத்தில் கூடிய சீக்கிரம் கட்டி உடைந்து விடுகிறது. பிறகு பனப்ஷார என்னும் இலை 1 அவுன்சுக்கு $\frac{1}{8}$ படி சலம்விட்டு $\frac{1}{8}$ படியாகக் காய்ச்சி அந்த சலத்தால் சுத்தம்செய்து அச் சலத்திலேயே பஞ்சை நனைத்து மேல் வைத்துக் கட்டிவிட வேண்டும். இப்படிச் செய்வதால் சுமார் 4, 5, மாதத்தில் இரணமானது ஆறி வருகிறது. சாதாரண இரணங்கள் ஆறுவதுபோல் இவ்விரணங்கள் ஆறுவது சாத்தியமல்ல. இவ்விரணங்களுக்கு நீடித்தச் சிகிச்சையே வேண்டி யிருக்கின்றது. இரணங்களைச் சுத்தம்செய்த பஞ்சுமுதலானவைகளைத் தூரமாய்த் தீயிட வேண்டும் அல்லது, பூமியில் புதைத்து விடவேண்டும். இல்லாவிடில் அதிலிருக்கும் பூச்சிகளால் வியாதி சகலர்களையும் பற்றிச்செல்லும். முக்கியமாய் இவ்வியாதி உண்டானவர்களில் 100 க்கு 5 பேர் குணமடைவது கஷ்டம். இவ்வியாதிக்காகச் செய்யப்பட்டு வரும் சிகிச்சைகள் பயனிலாத தென்றே சொல்லலாம். ஏனெனில் சாதாரணமாய் ஒருவன் ஒரு செடியை வளர்ப்பானால், அவன் பிரியத்துடன் வளர்ப்பதால், முழுமனதோடும் செடி நன்றாய் வளர வேண்டும் என்னும் எண்ணத்தோடு வளர்க்கின்றான். அவனுடைய தெளிவின்மையாலும் நாகரீக முதிர்ச்சியாலும், மேல் நாட்டு சிலவிதிகளை யுணர்ந்தவனாய் இருக்கும் இப்புருஷன் பண்ணும் தீர்மானமாவது, சுத்தசலத்தில் அநேககிருமிகள் இருப்பதினால் அச்சலத்தை அக்கினியில் காய்ச்சி ஆறவிட்டால் பூச்சிகள் இறந்துவிடுகின்றபடியால் பிறகு அச்சலத்தைச் செடிக்கு உபயோகித்தால் செடியானது யாதொருபூச்சிகளின் தொந்தரவினின்றும் விலகி ஓங்கிவளரும் என்னும் நோக்க முடையவனாகிறான். இது யுக்திக்கும் சம்மதமாகவேயிருக்கின்றது. அன்றியும் தினம் ஒரு செடியுள்ள நிலத்தை பரிசுத்தம் செய்துகொண்டு வருகிறான் (அதாவது பினயல் என்னும் ஔடதத்தின் உபயோகத்தால்). இவ்வளவு சாக்கிரதை யுடனும் புத்திசாலித் தனமாயும் செய்யும் ஒரு புருஷனால் வளர்க்கப்

பட்ட செடியானது சீக்கிரத்தில் மெலிந்து நாசமடைவதை சகலரும் காணலாம். அதுபோல் தற்கால நாகரீக முதிர்ச்சியால் நம் குழைந்தைகளுக்குச் சிறுவயதிலேயேசெய்துவரும் பழக்கமானது, அதாவது, காபி, டீ, உப்புமா, சோடா, முதலான உஷ்ண ஆகாரங்களும், சுவல்ப வியாதிகளுக் கெல்லாம் செய்து வரும் சிகிச்சைகளும், இயற்கையாய்ச் சரீரத்திலுள்ள இரத்தத்தை விஷமாக்கி வருகிறது. இந்த விஷங்கலந்த இரத்தமானது அடிக்கடி வியாதிக்கு இடங்கொடுத்து மீண்டும் மீண்டும் வியாதியை அதிகரிக்கச் செய்வதால் அடிக்கடி ஔடதங்களை யுண்கிறார்கள். இக்காரணங்களால் சரீரத்தில் உஷ்ணம் அதிகரித்து விடுகின்றது. எப்படிச் செடிகளுக்கு சலத்தைச் சுத்தம் செய்து காய்ச்சி வெந்நீர் உபயோகிப்பதினால், வேரில் உஷ்ணம் தாக்கி வேர் அழுகிப் பலமற்றுக் கிடக்கும் சமயத்தில், மேற்கொண்டு பினயல் என்னும் மருந்தையும் உபயோகிக்க அதனால்மீண்டும் உஷ்ணம்பெருகி செடி வாடி நாசமுறும் காலத்து எத்தகைய சிகிச்சைகள் செய்யத் தலைப்பட்டாலும் செடியானது ஜீவித்திருக்க மாட்டாதோ, அதுபோல் ஏற்கனவே பால விவாகத்தினாலும் உஷ்ண ஆகாராதி களினாலும் இன்னும் பற்பல காரணங்களாலும் ஏற்பட்ட வியாதிக்குச் செய்யும் சிகிச்சையானது தற்காலத்தில் வியாதியின் சிரமத்தைப் பரிகாரம் செய்துவிட்டு, மீண்டும் சரீரத்தில் உஷ்ணத்தை அதிகரிக்கச் செய்து விட்டு மேற்கொண்டு வியாதிகளுக்குத் தூண்டுதலாயும், அல்லது மூலதனமாயும் சரீரத்தில் தங்குகிறது. இதனால் சரீரத்தில் உஷ்ணம் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. அவ்வுஷ்ணமானது நாளடைவில் சரீரத்தை நாசமுறச் செய்கின்றது. அவ்வாறு நாசமுறச் செய்யுங் காலத்தில் பரிசோதித்து இது க்ஷயம் என்று சொல்லுகின்றார்கள். பிறகு எத்தனையோவித சிகிச்சைகளைச் செய்து வருகின்றார்கள். கடைசியில் ஒன்றும் பயன் தருகின்றதில்லை. ஆனபடியால், இத்தகைய வியாதி யுண்டான பிறகு செய்யும் சிகிச்சையைவிட வியாதி உண்டாவதற்கு முன் நடந்துக் கொள்ளும் விதிகளே விசேஷமென்று நமது முன்னோர்கள் தீர்மானித் திருக்கின்றார்கள். அவர்களின் நியாயங்களை நாம் பின்பற்றினால்தான், நாம் சுகமுறுவோமே யொழிய, தற்கால நாகரீக மென மதிக்கும் மேல் நாட்டு விதிகளால் இவ்வியாதியானது நம்மை விட்டொழியா தென்று திட்டமாய் மதிக்கவேண்டும். நமது முன்னோர்கள் இத்தகைய வியாதிகள் வரா வண்ணம் தடுக்க ஏற்படுத்திய விதிகளை அடுத்த சஞ்சிகையில் கூறுவோம்.

(தொடரும்.)

டாக்டர். M. மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை—நாவல்

(319-வது பக்கத் தொடர்ச்சி)

இராணியின் வார்த்தைகளைக் கேட்கக் கேட்கத் தினகரனுக்கு மிக்க கலவரமுண்டாய்விட்டது. மனதில் ஒருவிதத் திகில் உண்டாய்விட்டது. இராணியே அரியநாயகியின் ஒவ்வொரு அவயவத்தையும் வர்ணித்துச் சிலாகித்துக் கூறிக் கடைசியில்,

"நான் சுமார் பதினைந்து பதினாறு வருடங்களுக்கு முன் அரியநாயகியைச் செல்வராயர் மாளிகையிற் கண்டபோது பிரியங்கொண்டு, அவளுடைய க்ஷேமத்தைக் கவனத்தில் வைக்கவேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டேன். இப்போது அதை நிறைவேற்றுங்காலம் நெருங்குகிறது. நாம் தெரிந்தெடுக்கும் மாதையே மணம்புரிவதாய் நீ பலதரம் வாக்களித்திருக்கிறாய். அந்த வாக்கைத்

தவறி நடக்கமாட்டாயென்று அறிவோம். உனக்கும் நன்மை செய்யவேண்டுமென்பது நமது கருத்து. அரியநாயகிக்கு நாம் ஐயாயிரம் சவரன்கள் சீதனமாயளிக்கப்போகிறோம். அதன்றி அவளுடைய போஷகராகிய செல்வராயர் வேறு அளிப்பார். ஆகையால் யாவும் ஆலோசனை செய்தே நீ அரியநாயகியை மணம்புரிய வேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன்" என்றாள்.

இதைக்கேட்டதே தினகரனுக்கு தலைமேல் பேரிடி விழுந்தமாதிரியிருந்தது. இன்னது பதில் கூறுவதென்று அவன் மனதில் தோன்றவில்லை. அதோடு அவன் மனதில் மிக்க வியாகுல முண்டாய்விட்டது. கடைசியில் அவன் இராணியை நோக்கி,

"மகாராணியே! எனக்குத் தங்களிடத்தில் பூரண விசுவாசமும், நன்றியும், பக்தியு மிருக்கிறது. ஆயினும் அரியநாயகியின் விருத்தாந்தமோ யெனக்கொன்றும் தெரியாது. நான் அவளோடு பழகியதோ இந்த மூன்று மணி நேரந்தான். இந்த அல்ப காலப் பழக்கத்தோடு நான் அவளை மணம்புரிய நினைப்பதென்றால், என் மனதிற்குச் சற்றும் பிடிக்காது. மேலும் இவ்வளவு அல்பகாலப் பழக்கத்தோடு அரியநாயகி என்னை மணம்புரிய விரும்பினால், நான் அவளைப்பற்றி நல்ல அபிப்பிராயங் கொள்ளமுடியாது" என்றான்.

இராணி.—"அப்படியல்ல. அரியநாயகி யுன்னை மணம்புரியச் சம்மதிப்பாள். அவள் நான் சொன்னபடி கேட்பாள். ஏனெனில் அவள் என் பேச்சின்படி நடக்கவேண்டியவள். நான் என் குடிகளுக்கெல்லாம் தாய்போன்றவள். உங்களுடைய க்ஷேமத்தை நான் கோருகிறவள். என் வார்த்தையை நீங்கள் அலட்சியம் செய்யலாகாது" என்றாள்.

தினகரன்.—"மகாராணி! நான் தங்களுக்கு மரியாதைத் தாழ்வாய் நடப்பதாய்த் தாங்கள் சற்றும் கருதவேண்டாம். நான் ஒருபோதும் அப்படி நடக்கமாட்டேன். ஆனால் இவ்விஷயம் ஒருவனுடைய ஆயுள் முழுமையும் பாதிக்கத்தக்கது. இப்படி நான் அற்பகால பழக்கத்தோடு முன் பின் அறியாத ஒரு கன்னிகையை மணம்புரியக் கருதுவதென்றால், அது என் மனதிற்கு முழுதும் விரோதமாயிருக்கிறது. அதுமட்டுமல்ல; அது என் குடும்பத்தின் கௌரவத்திற்கே தாழ்வை யுண்டாக்குமென்று என்மனதிற்றோன்றுகிறது" என்றான்.

இராணி.—"இருக்கட்டும் இருக்கட்டும். இதை யின்னொருவழியாய்ச் சிந்திப்போம். குடும்ப கௌரவமென் றல்லவா கூறுகிறாய். நல்லது, உன் குடும்ப கௌரவம் இச்சமயம் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டிருப்பதாய் இருந்தாலோ" என்றாள்.

இதைக்கேட்ட தினகரன் முகம் வெளுத்துவிட்டது. இராணி காரணமின்றி விளையாட்டா யிப்படிக் கூறமாட்டாளென்று அவனுக்குத் தெரியுமாதலால், அவன் மனதில் பெருந்திகி லுண்டாயிற்று. நாம் இன்ன ஆபத்தில் சிக்கியிருக்கிறோமென்று அவனுக்கு விளங்கவில்லை. "மகாராணியே! நான் ஒருவிஷயத்திலும் தங்களுடைய கோபத்திற்கு ஆளாகவில்லையே" என்றான்.

இராணி.—"நீயல்ல, உன் தந்தை" என்றாள்.

தினகரன்.—"ஆ! என் தந்தை யென்னவிதமாய்த் தங்கள் கோபத்திற்குப் பாத்திரரானாரோ அறியேன்" என்றான்.

இராணி.—"கோபத்திற்கா! என், முழு வெறுப்பிற்கும். உன் தந்தையொரு கொலைபாதகன். ஆ! நீ திடுக்கிடலாகும். இச்சமயம் மாளிகையின் இன்னொரு அறையில் உன் சுற்றத்தாரான திரவியசிங்கம் பிரபு இருக்

ருர். உன் தந்தை தன் மாளிகையில் ஒரு படிக்கட்டில் ஆளைக் கொல்லத் தக்க இயந்திரத்தை வைத்திருக்கிருரென்றும், கொலையே செய்துவிடா விட்டாலும், சதியாய்க் கொலைசெய்ய எத்தனித்தாரென்றும் அவர் ருசுப் படுத்தக்கூடும்" என்ருள்.

இதைக்கேட்ட தினகரன் இடிவிழுந்தவன்போல் சொல்லொணு மனோ வேதனை யடைந்து, "ஐயோ தெய்வமே, அப்படியா! நான் அந்த இயந்திரத் தைப் பார்த்தேன். ஆனல் அது இம்மாதிரி யுபயோகப்படுத்தப்படும் என்று என் புத்தியிற் படவில்லையே....." என்ருன்.

இராணி.—"திரவியசிங்கம் பிரபு இதைப் பூரணமாய் ருசுப்படுத்தத் தடை யில்லை. உன் தந்தையைச் சிறைப்படுத்த வாரண்டு பிறப்பிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்ருள்.

இதைக்கேட்டதே தினகரனுக்குப் பாதி உயிர் போய்விட்டது. அவன் இராணியின் பாதங்களில்விழுந்து "மகாராணி! என் தந்தையைக் காப்பாற் றும்" என்ருன்.

இராணி.—"அந்த வாரண்டை இரத்து செய்துவிடலாம். திரவியசிங்கம் பிரபுவின் வாயையும் மூடிவிடலாகும்....." என்பதற்குள்,

தினகரன்.—"ஆ அரசியே! கருணைகாட்டும். தாங்கள் எப்படி கட்டளை யிடினும் நான் அவ்வாறே நடந்துகொள்கிறேன்" என்ருன்.

இராணி.—"எழுந்திரு. எழுந்திரு. நான் கூறுவதெல்லாங்கூடி நீ அரிய நாயகியை மணம்புரியவேண்டுமென்பதே" என்ருள்.

தினகரன் சற்றுநேரம் திகைத்து நின்ருன். பிறகு மனதை யொருவாறு திடப்படுத்திக்கொண்டு இராணியை நோக்கி "அரியநாயகியை மணம் புரிந்து கொள்கிறேன்" என்ருன்.

இராணி புன்னகையோடு தினகரனை நோக்கி "ஆ, அதுதான் நல்லது, இப்போதுதான் நீ பூரண இராஜ விசுவாசமுடையவன். இன்னும் ஒருமணி நேரத்தில் அரண்மனைக் கோயிலிலேயே திருமணம் முடியவேண்டும். நீ துரித மாய் அதற்குத் தக்கமாதிரி உடை முதலியவற்ருல் அலங்காரம் செய்துகொள்" என்று கூறிவிட்டு அரியநாயகியைத் தான் விட்டுவந்த அறையை நோக்கிச் சென்ருள்.

18-வது அத்தியாயம்

அரியநாயகிக்கு போசனத்திற்காக பலவகை உயர்ந்தபண்டங்கள் பரிமாறப் பட்டிருந்தாலும் அவள் கொஞ்சம் பழமும் ஜலமும்தவிர வேருென்றும் அருந்த வில்லை. அவள் மனேநிலைமை ஆகாரம் அருந்த இடந்தரவில்லை. அவள் பழ மும் ஜலமும் அருந்தி முடித்ததே இராணி அறைக்குள் வருவதைக் கண்டாள்.

இராணி அவளைநோக்கி அன்போடு "அரியநாயகி! உன் விஷயத்தைப் பற்றி நன்ருய்ச் சிந்தித்தேன். நான் உன்க்ஷேமத்தைக் கருதியே எதையும் செய்வேன். நீ நான் காட்டும் மார்க்கப்படி நடக்கச் சம்மதிப்பதாயின் நீ கேட் கும் வரங்களில் ஒன்றை நான் அளிக்கக்கூடும். அதாவது திரவியசிங்கம் பிரபு விற்கும் அவர் சகோதரர்களுக்கும் பூரண மன்னிப்பளிப்பேன்" எனப் பகர்ந் தாள்.

இம்மொழிகளைக்கேட்டதே அரியநாயகி இராணியின் பாதங்களில் விழுந்து

நமஸ்கரித்து தன் நன்றியறிதலை வெளியிட்டாள். இராணி யவளைச் சட் டென்று தூக்கி அவள் முகத்தை யுற்றுநோக்கியபடி,

"ஆனல் நீ யென் பிரியப்படி நடந்துகொள்ள வேண்டும். நான் என் குடிகளுக்குத் தாய் போன்றவள். தாயற்ற நீ என்னைத்தாயாகவே கருதவேண் டும். நீ சீக்கிரத்தில் ஒரு செல்வம் பொருந்திய சுகவாழ்வில் நிலையா யமரவேண்டு மென்பது என்பிரியம். ஆகையால் காப்டென் தினகரனுக்கு உன்னை மணம் செய்துவைக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்ருள்.

இராணி கூறியதைக்கேட்ட அரியநாயகி பிரமித்து, இதென்ன உண் மையோ கனவோவெனத் திகைத்தாள். தங்கள் ஆசாரத்திற்கு விரோதமாய்ச் சரியாய் மூன்றுமணிநேர அறிமுகம்கூட இல்லாத ஒருவனை யுடனே மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்று இராணி தீர்மானிப்பதைக் கருத அவளுக்கு வெறுப்பும் கோபமும் விசனமும் உண்டாயின.

அதற்குள் இராணி அவள் முகத்தில் உண்டான மாறுதலை யறிந்து,

"ஆம். அதுதான் என் விருப்பம். திரவியசிங்கம் பிரபுவை நீ இரண்டு முறையே பார்த்திருக்கிருய். அதற்குள் உனக்கு அவர்மேல் மிக்க உறுதியான காதல் உண்டாயிருக்குமென்று நான் கருதவில்லை....." என்ருள்.

அரியநாயகி.—"அப்படியாயின் ஒரேதரம் பார்த்த காப்டென் தினகரன்மேல் அவ்வளவு குறைந்த காதல்கூட உண்டாயிருக்கக் காரணமில்லையே" என்றனள்.

இராணி.—"ஹா. ஆனல் அவன் உன்னைக் காதலிக்கிருன்; மிக்க அழகு வாய்ந்த வாலிபன்; கௌரவமான பதவியிலிருக்கிருன்; அவன் தன் தந் தைக்குப் பின் பிரபுபட்டமும் மிக்க செல்வம்பொருந்திய பூஸ்திதியும் பெறப்போகிறவன். நான் அவனை மிக்க உயர்ந்த அந்தஸ்திற்குக் கொண்டு வரப் போகிறேன். ஒரு தடையும் கூறவேண்டாம். மறு பேச்சே பேசாதே....." என்றபோது,

அரியநாயகி.—"ஐயோ! வேண்டாம் வேண்டாம். என் மனதிற்குச் சற்றும் சம்மதமாயில்லை. என்னகாரணத்தாலோ நினைக்கும்போதே வெறுப்பா யிருக்கிறது" என்ருள்.

அரியநாயகி யென்ன வேண்டிக்கொண்டும் இராணி யொரே பிடிவாதமா யிருந்தாள். கடைசியில் அரியநாயகி,

"மகாராணி, நான்செல்வராயர் தங்கம்மாள் இவர்களுடைய அனுமதியைப் பெறுமட்டுமாவது அவகாசம் கொடும். நான் கண்மூடித்தனமாய் ஒருவரை மணம்புரியலாகாது. என் பூர்வோத்தரத்தைப்பற்றி தாங்கள் கற்கோட்டைக்கு வந்திருந்தபோது கூறியிருக்கிறேன். என்னைப்பற்றிய இரகசியம் தங்கம்மா ளுக்குத் தெரியுமாகையால், அம்மாதைக்கேட்காமல் நான் யாரையாவது மணம் புரிந்துகொண்டால், ஒருசமயம் மிக்க கெடுதியாய் முடியக்கூடும். அந்தம்மாள் என் பிறப்பைப்பற்றிய இரகசியத்தைக் கூறக்கூடும்" என்ருள்.

இராணி.—"போதும் போதும். நான் இன்னது செய்கிறேனென்று எனக் குத் தெரியும். தங்கம்மாள் இரகசியத்தைப்பற்றி யுனக்கென்ன பயமிருக் கிறது? ஒருசமயம் உனக்கு அரைச்சகோதரனக வேண்டியவனையே தெரியாமல் மணம்புரிந்துகொள்ள நேரிடும் என்பதுதானே? ஆனல் காப்டென் தினகரன் உனக்கு அரைச்சகோதரனகமாட்டான். அப்படி யிருக்க ஒருகாரணமுமில்லை. ஏனெனில் உன்தந்தை யிறந்துபோனதாய் நீ கூறினய். தினகரன் தந்தையோ இன்னும் உயிரோடிருக்கிருன்.

ஆகையால் அப்படிப்பட்ட பயத்தை யடியோடொழித்துவிடு. மறுபடி யொன்றும் பேசாதே—இன்னும் ஒருமணி நேரத்தில் மணம்புரிந்து கொள்ள ஆயத்தமாயிரு" என்றாள்.

அரியநாயகி.—"வேண்டாம் வேண்டாம். என்னால் முடியாது" என்றாள்

இராணி கோபங்கொண்டு "இன்னும் ஒரேசங்கதி கூறுகிறேன். திரவிய சிங்கம் பிரபுவைச் சிறைச்சாலையிலிருந்து அரண்மனைக்கு அழைத்துவரச் செய்திருக்கிறேன். அவன் இப்போது இங்கேயே ஒரு அறையிலிருக்கிறான். அவன் இங்கிருந்து மன்னிப்பு பெற்று க்ஷேமமாய்ச் செல்லவேண்டுமாயின் நான் கூறியபடி செய். இன்றேல் அவனை உடனே சிரச்சேதம் செய்யும்படி கட்டளைப் பிறப்பித்துவிடுவேன். இதுவே என் கட்டாயமான தீர்மானம்" என்றாள்.

இதைக்கேட்டதே அரியநாயகி பூனையின்கையிற் சிக்கிய கிள்ளைபோல் மனம்பதைத்து ஆவிசோர்ந்து, "ஐயோ கடவுளே, வேண்டாம் வேண்டாம். தங்கள் ஏற்பாட்டின்படி சம்மதிக்கிறேன்" என்றாள். தன் செய்கையால் ஒருவர் பிராணபத்தை யடையலாகா தென்ற காருண்யத்தாலும், ஒருவர் பிராணபத்திலிருந்து தப்புவதாயின் அதனால் தனக்கு மரணபரியந்தம் தீராத்துன்பம் நேர்ந்தாலும் நேரிடட்டு மென்ற பெருந்தன்மைவாய்ந்த உதாரகுணத்தாலுமே அரியநாயகி அவ்வாறு சம்மதித்தாள். ஆனால் இராணியோ தான் முன்பே கொண்டிருக்கும் தவறான அபிப்பிராயப்படி இதையும் அதற்கு அத்தாட்சியாய் எண்ணிக்கொண்டு, "ஆ! இவளுக்கு திரவியசிங்கம் பிரபுமேல் எவ்வளவு ஆசை யிருக்கிறது!" என்று மனதிற் சிந்தித்துக்கொண்டே,

"சரி, நான் சீக்கிரத்தில் வருகிறேன். இங்கேயே யிரு" என்றுகூறிவிட்டு அந்த அறையின் கதவைமூடி வெளிப்பக்கம் பூட்டிக்கொண்டு சென்றாள். அரியநாயகி ஆவிசோர்ந்து சொல்லொணா வியாகுலத்தோடு அங்கிருந்த சோபாவில் சாய்ந்தாள்.

மறுநிமிடம் அவ்வறையின் ஓர் சுவரில் இடப்பட்டிருந்த பலகைகளிலுள்ள ஒரு கள்ளக்கதவு படீரென்று திறக்கப்பட்டதும், மிக்க அழகுவாய்ந்த ஒருமாது அறைக்குள் வந்தாள். அவளைக்கண்ட அரியநாயகி மிக்க ஆச்சரியமடைந்து வாய்திறப்பதற்குள் அம்மாது அரியநாயகி யருகிற்சென்று,

"நான் உன் சினேகி. உனக்கு உதவிசெய்ய வந்தேன். இராணிகூறிய யாவும் கேட்டேன். அவள் ஏற்பாடு உனக்கு வெறுப்பா யிருக்கிறது" என்றாள்

அரியநாயகி.—"ஆம் ஆம். நீ தேவமாதுபோல் திடீரென்று என் முன் தோன்றினாய். என்னை யிந்த ஆபத்தினின்றும் காப்பாற்று" என்றாள்.

அம்மாது—"அதற்கே நான் வந்தேன். துரிதமாய் என்கூட வா, ஆலசியம் செய்யாதே" என்றாள்.

அவ்வாறே அவள் பின்சென்ற அரியநாயகி அக்கள்ள வழிக்குள் நுழையும் சமயம் சற்று நடுமாற்ற மடைந்து நின்றாள். அதைக்கண்ட அம்மாது கோபமடைந்து, "ஓகோ உன்யோசனை ஒரு நிலையில் இல்லைபோலும். கடைசியில் எவனையாயினும் சீக்கிரம் மணம் செய்து கொள்வது நலமே யென்று சிந்திக்கிறாயோ?" என்றாள்.

அரியநாயகி மனவருத்தத்தோடு, "அம்மா, என்னை யப்படி இழிகுணமுள்ளவளாய்க் கருதாதே. நான் அந்த எண்ணத்தால் மயங்கவில்லை. நீதான் இராணி கூறிய யாவும் கேட்டுக்கொண் டிருந்ததாய் இயம்பினா யல்லவா. நான்

இப்போது இப்படிக் கள்ளத் தனமாய்த் தப்பி யோடி விட்டால், என்னால் அந்தத் திரவிய சிங்கம் பிரபுவின் பிராணன் போய் விடும்போ லிருக்கிறதே, அதற்கே மயங்குகிறேன்" என்றாள்.

அம்மாது.—"ஆம் ஆம். ஆயினும் நான் அப்பிரபுவைக் காப்பாற்ற முடியாது. அதனால் எனக்கும் பிராணபத்து நேரிடும். அது முடியாத காரியம். உன்னைக் காப்பாற்றி விடுகிறேன்" என்றாள்.

அரியநாயகி சற்று சிந்தித்து "அப்படியாயின் என்ன நடந்தாலும் நடக்கட்டும். நான் ஓடிவிடமாட்டேன்" என்றாள்.

அம்மாது.—துயரத்தோடு "ஐயோ கடவுளே! நான் எப்படி அப்பிரபுவைக் காப்பாற்றக்கூடும். அப்படிச் செய்தால் நான் சிக்கிக் கொள்வது நிச்சயம்....." என்றாள்.

அரியநாயகி.—"என்னைமட்டும் எந்த அதிகாரத்தால் காப்பாற்றித் தப்பித்துக் கொள்வாய்?" என்றாள்.

அம்மாது உடனே தன் மடியிலிருந்த இராணியின் கணையாழியை யெடுத்துக்காட்டி "இதோ இந்த அதிகாரத்தால். இது யார் கையிலிருந்தாலும் சரி, அவர்கள் கட்டளைக்கு இராஜாங்கத்திலுள்ள எல்லா அதிகாரிகளும மறுமொழி கூறாமல் கீழ்ப்படிய வேண்டியது. இது திரவியசிங்கம் பிரபுவைச் சிறைச்சாலையிலிருந்து அழைத்துவர இராணியால் லெப்டினென்ட் கங்காவிங்கிடம் அளிக்கப்பட்டது. அதை யவன் இராணியிடம் திரும்பக்கொடுக்க முயன்றபோது இராணி ஆத்திரத்தோடு அவனை அறையை விட்டுச் செல்லும்படி ஆக்கியாபித்ததால், அவன் பிறகு அதை யென்னிடமளித்து இராணியிடம் சேர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டான். நான் அதை இராணியின் படுக்கை யறையிலுள்ள மேஜைமேல் வைத்துவிட்டதாகவும், பிறகு இராணியிடம் கூற மறந்துவிட்டதாகவும் கூறுவேன். அது அஜாக்கிரதை யென்ற குற்றமாய்விடும். அதற்காக என்னை யிரண்டொரு நாள் வேலையினின்று நீக்கிவைத்தால் வைப்பார்கள். அதற்கு மேலான தண்டனை விதிக்கப்பட மாட்டாது. இந்தக் கள்ள வழி சுவரினுள்ளேயே சென்று இராணியின் படுக்கை யறைக்குள் நுழைகிறது. நீ தற்செயலாய் இவ்வழியைக்கண்டு இதில் நுழைந்து சென்றதாகவும், இராணியின் சயனவறையில் மேஜைமேலிருந்த கணையாழியைக் கண்டு, அதன் மகிமையைப்பற்றி கேள்விப்பட் டிருப்பதால், அதை யெடுத்துக்கொண்டு காவலர்க்குக் காட்டி மாளிகையை விட்டுத் தப்பித்துக்கொண்டுபோய் விட்டதாகவும் ஊகிக்கப்படும். பிறகு சந்தர்ப்பம் நேரிடும்போது நீயும் அவ்வாறே கூறவேண்டும். இவ்வளவோடு போவதைவிட்டு அந்தப் பிரபுவை நான் காப்பாற்றவதாயின் நான் தப்பவழியில்லையே" என்றாள்.

அரியநாயகி சற்று சிந்தித்து "ஆ! இந்தக் கணையாழியைக் கொண்டு நானே அப்பிரபுவைக் காப்பாற்றி விட்டாலோ?" என்றாள்.

அம்மாது.—"ஆகா, தைரியமிருந்தால் செய்யலாம். அப்படி யொருசமயம் ஏதோ எதிர்பாராத சந்தர்ப்பத்தால் நீ சிக்கிக்கொண்டால், என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாயல்லவா?" என்றாள்.

அரியநாயகி.—"நான் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டேன். கடவுள் எனக்குப் போதுமான தைரியத்தை யளித்திருக்கிறார். ஒருவர் பிராணனைக் காப்பாற்றும் முயற்சியில் எனக்கு இக்கட்டு நேர்ந்தாலும் நேரிடட்டும்" என்றாள். (தொடரும்.)

ஆரணி. தப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

பிங்களவரு பங்குனிமீ சாலிவாகன 1839, கலியுகாதி 5018,

பசலி 1326-27, கொல்லம் 1092-93,

இங்கிலீஷ் 1918-ம்வரு மார்ச்மீ—ஏப்ரல்மீ

மார்ச்மீ	பங்குனிமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
14	1	வி	துதி-37-20	உத்-3-2 ரேவ-56-5	சி 3 அமி	விவாக உபனயனம்
15	2	வெ	திரி-31-53	அசு-55-44	அ 56 சித்	உபநயனம்
16	3	ச	சது-26-51	பர-52-51	சி 53 அமி	தனியநாள்
17	4	ஞா	பஞ்-22-41	*கார்-50-48	சித்த 60	கிருத்திகை விரதம்
18	5	தி	சஷ்-19-21	ரோக-49-41	அமிர் 60	வதூகிரகப்பிரவேசம்
19	6	செ	சப்-16-59	மிரு-49-38	சித் 50 ம	கரிநாள்
20	7	புத	அஷ்-15-49	திரு-50-43	சித்த 60	பசுக்களைக்கட்ட
21	8	வி	நவ-15-7	புன-52-21	அமிர் 60	கர்ப்பாதானம்
22	9	வெ	தச-16-0	பூச-56-25	மரண 60	
23	10	ச	ஏகா-19-54	ஆயி-60-0	மரண 60	
24	11	ஞா	து-23-38	ஆயி-5-34	சித் 6 மர	
25	12	தி	திர-28-8	மக-7-5	மர 7 சித்	6-க்குள் மழை
26	13	செ	சது-33-8	பூர-9-19	சித் 9 அ	மைலை அருபத்துழவர்
27	14	புத	○பௌ38-13	உத்தி-17-43	அமி 11 ம	பங்குனி உத்திரம்
28	15	வி	பிர-43-1	அஸ்-25-20	சித்த 60	கரிநாள்
29	16	வெ	துதி-47-28	சித்-31-48	சித்த 60	கர்ப்பாதானம்
30	17	ச	திரி-50-38	சுவா-36-41	அமி 37 சி	பசுக்களை வாங்க
31	18	ஞா	சது-52-47	விசா-40-34	மர 60	
1	19	தி	பஞ்-53-41	அனு-43-11	சித்த 60	கரிநாள்
2	20	செ	சஷ்-53-14	கேட்-44-35	சித் 44 அ	தனியநாள்
3	21	புத	சப்-51-31	மூல-44-45	மர 45 அ	11-க்குள் மழை
4	22	வி	அஷ்-48-41	பூரா-43-46	சித்த 60	
5	23	வெ	நவ-44-55	உத்-41-52	சித் 42 மர	பூமுடிக்க
6	24	ச	தச-40-23	திரு-39-8	சித்த 60	கன்றுகாலிகள் வாங்க
7	25	ஞா	ஏகா-35-4	அவி-35-45	மர 36 சித்	வாகனமேற
8	26	தி	து-27-49	சதை-30-35	சித் 28 ம	வியாபாரஞ்செய்ய
9	27	செ	திர-21-9	பூரட்-26-20	மர 26 அ	மந்திரம் ஜெபிக்க
10	28	புத	சது-15-43	உத்-23-35	சித் 24 மர	அமாவாசை விரதம்
11	29	வி	•அமா-11-43	ரேவ-20-31	சித் 21 அ	
12	30	வெ	பிர-6-34	அசு-16-21	அ 16 சித்	தெலுங்கு வருஷப்பிறப்பு
13	1	ச	துதி-1-15	பர-13-22		சித்திரைமீ காளயுக்தி வரு
			திரு-55-40			தமிழ் வருஷப்பிறப்பு

1918 வரு ஏப்ரல்மீ

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | காளயுக்திவரு சித்திரைமீ கஉ 1918-ம்வரு ஏப்ரல்மீ 13உ | பகுதி 10

கடவுள் வணக்கம்.

ஐந்து பூதமொரு கான னீரென
வடங்க வந்தபெரு வானமே
யாதி யந்தநடு வேது மின்றியரு
ளாய்நிறைந் திலகு சோதியே
தொந்த ரூபமுட் னரூப மாதிகுறி
குணமி றந்துவளர் வஸ்துவே
துரிய மேதுரிய வுயிரினிற் குணர்வு
தோன்ற நின்றருள் சுபாவமே
யெந்த நாளுநடு வாகி நின்றொளிரு
மாதியே கருணை நீதியே
ஈந்தை யானதை யறிந்து நீயுனருள்
செய்ய நானுமினி யுய்வனோ
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சித்சு கோதய விலாசமே.

வரும்போ மென்னு மீருநிலைமை மன்னு தொருதன் மைத்தாகிக்
கரும்போ தேனோ முக்கனியோ வென்ன வென்னுட் கலந்துநலந்
தரும்பே ரின்பப் பொருளேநின் றன்னை நினைந்து நெக்குருகே
னிரும்போ கல்லோ மரமோவென் னிதய மியாதென் றறியேனே.

அறியுந் தரமோ நானுன்னை யறிவுக் கறிவாய் நிற்கையினுற்
பிரியுந் தரமோ நீயென்னைப் பெம்மா னேபே ரின்பமதாய்ச்
செறியும் பொருணீ நின்னையன்றிச் செறியாப் பொருணன் பெறும்பேற்றை
நெறிநின் றொழுக விசாரித்தா னினக்கோ வில்லை யெனக்காமே.

ஆனந்த போதினி

காளயுக்தி ஆண்டு சித்திரை மீ கஉ

பெண்கல்வியும் நாகரீகமும்

(326-ம் பக்கத் தொடர்ச்சி)

நண்பர்களே! இனிப்பெண்கள் விஷயத்தில் சீர்திருத்தத்தை யுண்டாக்கவேண்டும், அவர்களுக்கு நல்ல கல்வியைப் புகட்ட வேண்டும் என்று ஆன்றோர்கள் முயற்சி யெடுத்துக்கொண்டாலும், அனுபவத்தில் பெரும்பான்மையாக என்ன நடக்கிறதென்று பார்ப்போம்.

இத்தகைய விஷயங்களில் நாம் நமதுமாதரைப்பற்றி யன்றோ மிக்க ஜாக்கிரதையோடு கவனித்து நடக்கவேண்டும். அவர்களுக்கு எத்தகைய கல்வியை வரையறுத்து வைத்திருக்கிறோம்? அவர்களுக்கு அவசியம் வேண்டியது இல்லற ஒழுக்கமன்றோ? குடும்பத்தில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைமைகள், தங்களுக்கு உயிரினும் சிறந்த கற்பைக் காத்துக் கொள்ளவேண்டிய வழிகள், வீட்டில் சுகாதாரத்தை அனுசரிக்கவேண்டிய முறைமைகள், தம் மக்களை வளர்க்கவேண்டிய விதிகள் முதலியவைகளைப் போதிக்கும் நூல்களை அவர்களுக்குக் கற்பிக்கின்றோமா? நமது மதாசாரக் கல்வியை அவர்களுக்குப் போதிக்கிறோமா? என்று சிந்திப்போமாயின், அந்தோ! நமது மனம் சோர்ந்துவிடும்.

நன்மை தரத்தக்க இத்தகைய விஷயங்களை அவர்கள் அடையாம லிருப்பதே துக்ககரமானது. இதனோடு போகாமல் அவர்களுடைய சீர்திருத்தம் தீய அனுபவங்களை யடையக்கூடிய வழிகளிலும் அனாசார மார்க்கங்களிலும செல்லவிடுகிறோம். எவ்வாறெனின்,

கடவுள் கருணையின்படி ஊண், உடை முதலிய சில விஷயங்கள் அந்தந்தத் தேசத்திற்குத் தக்கபடி அமைக்கப்பட் டிருக்கின்றன. அதிலும் நமது முன்னோர்கள் ஆன்மார்த்தத்தையும், சுகாதாரத்தையும், வைத்திய சாத்திரத்தையும் அனுசரித்தே ஒவ்

வொரு ஆசாரத்தையும், வழக்கத்தையும், உணவின் முறைமைகளையும், மற்ற விதி நிஷேதங்களையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

ஆகார விஷயத்தில் மேல்நாட்டார்கள் கணக்கிடக்கூடிய அவ்வளவு சமீபகாலத்தில் மச்சம், மாமிசம், கிழங்கு, கீரைகள் இவற்றைப் பாலில் அல்லது ஜலத்தில் அவித்துப் புசிக்கமட்டுமே யறிந்திருந்தார்கள். பிறகு உருசியை வேண்டியவர்கள் மட்டுமே உப்பு சேர்த்துக் கொள்ளலானார்கள். இன்றும் அவர்கள் பாகமனைத்தும் உருசி, தேகபலம் இவை யிரண்டுமட்டுமே பொருந்தியது. இன்றும் அங்குள்ள ஏழைகளில் அநேகருக்கு உப்பு வேண்டியதேயில்லை. நமது நாட்டில் நெய்யில்லாவிட்டால் எப்படி அதையொரு இன்றியமையாததாய்க் கருதாமலே புசிக்கிறோமே, அவ்வாறே அங்குப் பெரும்பாலோர் உப்பில்லாவிடினும் புசிப்பார்கள்.

நமது முன்னோர் ஏற்பாடோ அப்படியன்று. ஒவ்வொரு பதார்த்தத்திலும் நல்ல குணம், கெட்ட குணம் இரண்டும் கலந்தேயிருக்கின்றன. ஔடதங்களுக் குபயோகமாகும் வஸ்துக்களில் உள்ள கெட்ட குணங்களைப் போக்குவதற்கே ஒவ்வொன்றையும் அதற்குத் தக்கபடி சுத்தி செய்கிறார்கள். அந்த முறையால் கெட்ட குணத்தை நீக்கக் கூடாதவைகளுக்கு அதை நீக்கக்கூடிய வேறு பொருளை அதனுடன் சேர்க்கிறார்கள். ஓர் ஔஷதத்தில் பல தினுசுகள் சேர்வதற்கு இதுவோர்காரணம். அதைப்போலவே ஆகார வகைகளைச் சமைப்பதிலும் நமது முன்னோர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதனாற்றான் மஞ்சள், சீரகம், கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை முதலியன நமது ஆகாரங்களில் சேர்க்கப்படுகின்றன. இவைகள் ஔஷதங்களேயன்றிச் சாதாரணமாய் உண்ணத் தக்க பண்டங்களல்ல. நமது நாட்டின் உஷ்ண ஸ்திதியை யனுசரித்து ஸ்நானம் செய்யும்போது தலைக்கு எண்ணெய் தேய்த்துக் கொள்ளவேண்டும். பயறு, பருப்பு வகை, கிச்சிலிக்கிழங்கு, சிகைக்காய் முதலிய குளிர்ச்சியான வஸ்துக்களை அரைத்துத் தேய்த்துக் கொள்ள வேண்டுமென்று விதித்திருக்கிறார்கள்.

இத்தகைய ஞானத்தோடு நமது நன்மையைக் கருதிப் பொருட் செலவின்றி நமது நாட்டிலுள்ள வஸ்துக்களைக் கொண்டே நாம் சுகமடையும்படி நமது முன்னோர் செய்திருக்கும் ஏற்பாடுகளை நாம் அலட்சியம் செய்துவிட்டு, அதிக பொருளைக் கொடுத்து உஷ்ண நாட்டிலுள்ள, நமக்கு நன்மை தராத அந்நிய

நாட்டுப் பொருளை வாங்கி யுபயோகிப்பதுதானு நாகரிகம்? இது தானு சீர்திருத்தம்?

மஞ்சளின் அரிய குணத்தையும், உபயோகத்தையும், அதிலுள்ள ஔஷத சக்தியையும் அறிந்தே அதை மாதர் பூசிக் கொள்ள வேண்டுமென்று விதித்திருக்கின்றனர். இப்போது நமது மாதர் அதையொழித்துவிட்டு ஸோப் பூசிக்கொள்ளத் தொடங்குகிறார்கள். அந்தோ, அதனுலுண்டாகும் கெடுதியை இவர்கள் அறியார்கள் போலும். இது பெற்றோர்கள் குற்றமேயாகும். பெற்றோர் தம் சிறுவர்களுக்குச் சோப்பையும் முகத்தில் வெள்ளை மாவையும் பூசுவதைப் பெரிய நாகரிகமாகக் கருதுகிறார்கள் போலும். கடவுளே! இத்தகைய வீண் மயக்கம் என்று தான் நம் நாட்டாரை விட்டொழியுமோ!

ஊன்றிப் பார்த்தால் நம்மில் பெரும்பாலோர் செய்கை ஒவ்வொன்றும் காசிக்குப் புறப்பட்டவன் பாம்பன் மெயில் வண்டியில் ஏறுவது போலவே யிருக்கிறது. பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமெனின் கண் மூடித்தனமாய் நமது மதத்தைத் தூஷிக்கும் அந்நிய மதஸ்தருடைய பாடசாலைக்கனுப்பி விடுகிறார்கள். அந்தோ, அதனுல் நேரிடும் பெருந்துக்கத்தைப் பலர் அனுபவிப்பதைப் பார்த்திருந்தும் மற்ற தாய் தந்தையர்களுக்கு அறிவு உதிக்காம லிருப்பது என்ன காலக்கொடுமையோ நாமறியோம். கல்வி என்னதான் அவசியமாயினும், அதனினும் மேலான ஆன்ம லாபத்தை நம்மக்கள் இழக்கும்படி நாம் செய்யலாமோ? அதன்றி நம் மக்களையே அடியோடு பறிகொடுத்து விடலாமோ? இஃது எங்கேனும் பகுத்தறிவுடையோர் செயலாகுமோ? இன்னெரு பெருந்தீங்கு நமது பெண்மக்களைச் சூழ ஆரம்பிக்கிறது.

நமது பெண்மக்களுக்கு நாம் முன்கூறியபடி அவசியமான விஷயங்களின் ஞானத்தை யுண்டாக்கத் தக்க கல்வியையே தேர்ந்தெடுத்து வரையறுத்துப் போதிக்கவேண்டும். தாய்ப் பாஷா ஞானம், ஆன்மஞானம் இவற்றைப் போதிக்கும்கல்வியை அவர்கள் சௌகரிய மிருப்பின் எவ்வளவு அதிகமாகவேனும் கற்கலாம். மற்றவை யெம்மட்டும் அவசியமோ அவ்வளவும் கற்றுல் போதும். அவற்றைப் போதிக்க முன்னோர் நூல்கள் எவ்வளவோ விருக்கின்றன. நம்மவர் அவைகளைவிட்டு இக்காலத்தவரால் எழுதப்பட்ட பலவித பாட்டுகள் முதலியவைகளை யநேகர் கற்பிக்கிறார்கள். இக்காலத்தில் எழுதப்பட்ட எந்த நூலுக்கும் மதிப்பு எழுதியவருடைய செல்வாக்கை அல்லது செல்வத்தைப் பொருந்தியதாயிருக்கிறது. அந்தோ, இதுவும் நாகரீகச் சீர்த்திருத்தமோ?

இவ்வாறு நமது பெண்மக்களுக்குத் தகுதியான கல்வியை யளிக்கத் தவறுகிறோமே, இதோடாவது நிற்கிறோமா? இல்லை. நன்மை செய்வதாய் மயங்கி அதிலும் தீங்கே செய்கிறோம். அவர்கள் கல்வியைப் பயன்றரத் தக்கதாகச்செய்ய நாம் சிரத்தை எடுத்துக் கொள்ளாததோடு, அவர்களை யடியோடு கெடுக்க முயல்கிறோம். எதனுலெனின் நாடகம் கற்றுக் கொடுப்பதால்.

பாடசாலையிலேயே நாடக உபாத்தியாயரை வரவழைத்துப் பெண்களுக்கு நாடகம் கற்பித்துப் பாடசாலையிலேயே சபைகூட்டி நாடகத்தை நடத்துவதோடு, மிஸ்கத் ஹால் முதலிய பகிரங்க அரங்கங்களில் ஏற்பாடு செய்து அங்குப் பெண்களை யழைத்துப் போய்ப் பகிரங்கமாய் நாடகம் நடத்துகிறார்கள்.

அந்தோ, அறிவாளிகளாகிய நேயர்களே! நமது பெண்களுக்கு அவசியமாய் இருக்கவேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய கற்பின் வேலிகளை யிப்போதே அழியச் செய்வதுதான் நமது நாகரிகச் சீர்திருத்தத்திற்கு அவசிய மானதென்று எந்தச் சாத்திரத்தில் கூறியிருக்கிறதோ? காலவித்தியாசத்தை யனுசரித்து மாறுதல்கள் ஏற்றுக்கொள்ளப் படவேண்டியவைதான் என்றுல் நமக்குத்தீங்கை யுண்டாக்கும் தகாத சீர்திருத்தங்களை எல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அறிவுடையோர் எண்ணுவரோ? நமது முன்னோர்கள் நூல்களில் கடந்த யுகத்தில் விதிக்கப்பட்டிருந்தவற்றில் சில இந்த யுகத்தில் விலக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் அப்போது நன்மையையுண்டாக்கிய அவை, இக்காலத்தில் துன்பத்தை யுண்டாக்குமென்று திரிகால ஞானிகளாகிய நமது முன்னோர் உணர்ந்தே யவ்வாறு செய்தனர். அந்தோ, இக்காலத்தில் இச்செய்கை நமது மகளிர்க்கு என்ன தீங்கைத்தான் செய்யாது.

நமது மாதர் நாடகங்களைப் பார்ப்பதே தகாதென்பது ஆன்றோர்கொள்கை. கேவலம் பக்தியையே விளக்கும் பக்தர், கற்பரசிகள் முதலியவர்களைப்பற்றிய சரித்திரமாயின், வயது முதிர்ந்த ஸ்திரீகள் பார்க்கலாகும் என்பது சிலர் கொள்கை. நம் நாட்டில் நாடகத்தொழில் செய்வோரிடம் கௌரவமான மதிப்பில்லை. நாட

கத் தொழிலைக் சேர்ந்தவர்க ளெல்லாம் யோக்கியரல்ல ரென்று நாம் கூறவில்லை. சாதாரணமாய் ஸ்திரீகளும் ஆடவரும் ஒன்று சேர்ந்து நடிப்பதாலும், அதில் நாடகத்தொழில் செய்யும் மாதர் நெறியுடையோர் என்று கருதப்படுவதேயில்லை யாதலாலும், அப்போதைக் கப்போது ஆங்காங்கு நேரும் நெறிபிசகிய அத்தாட்சிகளாலும், நமது நாட்டில் அத்தொழிலுக்கும் அதைச் சேர்ந்தவர்களுக்கும் கௌரவமான மதிப்பில்லாமலேயிருக்கிறது. ஆட்டத்தை மட்டும் தினம் போய்ப் பார்ப்பார்களே யெனினும், அத்தொழிலை யிழிவாய்த்தான் கூறுவார்கள். சாதாரணமாய் ஒரு ஸ்திரீ பல புருடர் உள்ள சபையில் அச்சம் நாணம் விட்டுப் பழகுவாளேல் அதைத் தகாத நடக்கையாகவே நம் நாட்டார் கருதுவார்கள். ஏனெனில் அத்தகைய நடக்கை சிற்சிலரிடம் தீமையை யுண்டாக்கா தெனினும், பெரும்பாலரிடம் சுலபத்தில் கெடுதிக்கு வழிவிட்டதாய் முடியும் என்பது ஆன்றோர் அனுபவமா யறிந்த விஷயம். பழக்கத்தால் எதுவும் மாறிவிடும்; பயம் நீங்கிவிடும்; அச்சம் விட்டுப்போம்; மானம் பெரிதாய்த் தோன்றாது. இயற்கை யமைப்பிலேயே ஸ்திரீகளுக்கும் ஆடவர்களுக்கும் பல விஷயங்களில் வித்தியாச முண்டு. மனோவுறுதியில் புருடனை விட ஸ்திரீகள் பெரும்பாலும் தாழ்ந்தவர்களே. புருடருடைய உறுதியே நயவஞ்சகம், சூது, தந்திரம் முதலியவற்றால் அழித்து விடப்படுகிறது. இவை யாவுமுணர்ந்தே நம் முன்னோர் ஸ்திரீகளின் நன்மையைக் கோரி அவர்களுக்குத் தக்க விதிகளை யேற்படுத்தியிருக்கிறார்கள். ஆடவர்களே இந்த நாடகப்பித்துப்பிடித்தால் நெறி தவறி நடந்து பின்னால் வருந்துகிறார்கள். நாடகத்தில் இச்சை வைத்தவர்களில் குலப்பெண்கள் பலபேர் குடும்பத்தினின்று நீங்கிப் பல கொடுமைகளுக்கு ஆளாகி யழிந்ததைக் கேட்டும் கண்டுமிருக்கிறோமல்லவா? இப்போதும் காண்கிறோமே. பெற்றோர் இவைபாவும் சிந்திக்காமல் சிறுபாலிகைகளை இவ்வாறு வழிகளில் செல்லவிடல் பெருமோச மென்பதை இன்னு மறியாதொழுகல் நீதியோ?

முற்காலத்தில் நமது நாட்டில் இராமாயணம், பாரதம், அரிச்சந்திரன் கதை, குசேலர் சரிதை, சிருத்தொண்டர் சரித்திரம் முதலிய பக்தியையும் நீதியையும் புகட்டும் நாடகங்களை நடிப்பார்கள். அதனால் கல்வி கற்காத பாமரர்கள் அவற்றைப் பார்த்து நற்

பயனடைவார்கள். அதற்குப் பணச் செலவின்றியே யாவரும் பார்ப்பார்கள். அப்போதும் தாழ்ந்த குலத்தாரான வண்ணார்கள், வள்ளுவர், பண்டாரங்கள் முதலியவர்களே அத்தொழில் புரிவது. ஆடவர்களேயன்றி ஸ்திரீகள் நடிப்பதில்லை. இப்போதுள்ள நாடகங்களோ, நாடகத் தமிழை விர்த்திசெய்வதற்குப் பதில் அடியோடு விழுங்கிவிட்டு, சிற்றின்ப மணம் நிறைந்ததாயிருக்கின்றன. நெறிதவறிய மாதர்கள் சேர்ந்து நடிப்பதோடு, அதிலுள்ள பெரும்பாலான ஆடவர்களுக்கு மணம்புரிந்த மனைவி இருப்பினும் இல்லாவிடினும், புருடன், பெற்றோர், குடும்பம், குலம் யாவற்றையும் விட்டு ஓடிவந்துவிட்ட நெறி கெட்ட வைப்பு ஸ்திரீ மட்டும் அவசியமுண்டு.

சகோதரர்களே! இத்தகைய நாடகங்களைப் பார்க்கும்படி நமது ஸ்திரீகளையும் மக்களையும் விட்டுவிடுவது எத்தகைய விபரீதத்தை யுண்டாக்கு மென்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நமது பெண்கள் முன்னோருடைய விதிநிஷேதங்களை மீறி நடக்கும்படி நாம் எப்போது இடங் கொடுக்கிறோமோ அப்போதே நம் நாடு கற்பரசிகளை யுடைய தென்பதும், தெய்வீக உண்மை யமையப்பெற்ற தென்பதும், அதன் க்ஷேமமும் யாவும் அடியோடழியும் என்பதை நாம் நன்குணர வேண்டும்.

மேல் நாட்டார் ஆசாரங்க ளனைத்தையும் நாம் பின் பற்றுவதுதான் நாகரிக சீர்திருத்த மென்று கருதுவதைத் தவிர அறியாமை வேறில்லை. ஒரு நாட்டிற்கும், ஒரு ஜாதியாருக்கும் நாகரிகமும் ஆசாரமுமாய் இருப்பது மற்றொரு நாட்டிற்கும், ஜாதியாயார்க்கும் அநாகரிக மாகவும் அனாசாரமாகவும் தோன்றும். அது போல் மேல் நாட்டாருக்கு நாடகத்தைப் பற்றி நம்மைப் போல் தாழ்ந்த அபிப்பிராயங் கிடையாது. ஏனெனில் நமது ஆசாரத்திற்கும் அவர்கள் ஆசாரத்திற்கும் மிக்க பேதமுண்டு. நமது நாட்டில் ஒரு கன்னிகை நாடகத்தில் சேர்ந்து நடித்து வந்தால் குலத்திற் பிறந்த எவனும் அவளை மணம்புரியான். மேல் நாட்டாரோ, பெரும்பாலோர் மணம்புரிந்துகொள்வார்கள். அவர்களுக்குள் ஒரு வாலிப ஸ்திரீ தனியே ஒரு வாலிபனோடு, எவ்வளவு சிநேகம் பாராட்டினும் தேக சம்பந்தம் நேரிட்டதென அறிந்தா லன்றி அவள் கற்பழிந்தவ ளல்ல வென்பதே அவர்கள் அபிப்பிராயம். மனச்சுத்தத்தைப் பற்றிய விஷயம் அவர்கள் சிந்தனையில் யில்லை.

ஒரு ஸ்திரீ ஒருவனை மணம் புரிந்துகொண்டு அவனிடமே "எனக்கு உன்மேல் காதல் உண்டாகவில்லை. என் காதல் இன்னொருவன் மேல் பதிந்திருக்கிறது" என்று கூறினால், புருடன் "போகப் போக நீ அவனை மறந்து என்மேல் காதல்கொள்ளும் வண்ணமாய் நான் நடந்துகொள்ள எனக்கு அனுமதி யளிக்கவேண்டும்; கொஞ்சம் கொஞ்சமாய் என்னை விசுவசிக்க நீ முயற்சி செய்யவேண்டும்; நான் என்னுயிரினும் அதிகமாய் உன்னை நேசிக்கிறேன். உன்னை என் தேவதையாய் மதித்து உன் பணிவிடையிலேயே என் வாழ்நாள் முழுதும் கழிப்பேன்" என்று வேண்டிக் கொள்வான்.

நேயர்களே! இதனால் நமது ஆசாரத்திற்கும் அவர்களாசாரத்திற்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கிறதென்பதை யுணர்ந்து அவர்களாசாரங்களைப் பின்பற்றுவதே சீர்திருத்தமென நினையாதிருப்பதே நமக்கு நன்மை பயக்கும். அத்தகைய நாட்டிலும் ஒரு நாடகக் கன்னிகையை மணம் புரிபவன் செல்வமும் அந்தஸ்துமுள்ளவனாயின் அவனுக்கு மேலுக்கு மரியாதைகாட்டினாலும் பின்னால் இழிவாய்க் கூறுகிறார்கள். சில நாடகமாதர் மாறுபெயருடன் மணம் புரிந்துகொண்டு, பிறகு அவள் நாடகத்திலிருந்தவளென்று வெளிவந்தபோது அவளும் அவள் கணவனும் சொல்லொணா அவமானமடைகிறார்கள். நாம் இவ்வாறு கூறுவது அளவு மீறிய சீர்திருத்தபித்தம்பிடித்த சிலருக்குக் கோபமாயிருக்கலாம். அவர்கள் நம்மை வைதாலும் வையக்கூடும். "அவர்களென்னை வைதாலும் வைதுக்கொண்டு போகட்டும்—அக்கெடுவார்களென்னை யடித்தாலும் அடித்துக்கொண்டு போகட்டும்" என்று ஓர் மகான்கூறியது போல், அதற்கெல்லாம் நாம் அஞ்சவேண்டியகாரணம் சற்றுமில்லை. நமது மனப்பூர்வமாய் நம் தாய்நாட்டிற்குக் கெடுதியையுண்டாக்குமென்று தோன்றுகிற விஷயங்களை வெளியிடவேண்டியது நாம் மேற்கொண்ட மிகவும் அற்பமான தேசத் தொண்டின் கடமையாகும்.

நாம் கூறுவதால் பயனுண்டாக வேண்டியது அறிவாளிகளாகியநமது சகோதர சகோதரிகளின் உதவியாயிற்றான். ஆங்காங்குள்ள நண்பர்கள் நமது சந்ததியாரின் க்ஷேமாபிவிருத்தியைக் கருத்தில் வைத்து நமது பெண்மக்களின் சீர்திருத்தத்தில் அன்பும் சிரத்தையு முடையவர்களாய், அவர்கள் இத்தகைய அபாயமான வழிகளில் பிரவேசிக்க வொட்டாமல் தடுத்துப் பாதுகாக்

கும் வண்ணம் அவர்களை மிகவும் பிரார்த்திக்கிறோம். சர்வஜீவ தயாபரனாகிய கருணையங் கடவுள் நமது கோரிக்கையை யிடேற்றி வைப்பாராக. ஓம் தத் ஸத்.

தமிழ்த்தூஷணை.

தமிழபிமானிகளாகிய நமது அன்பார்ந்த சந்தா நண்பர்களே! இக்கலிகாலத்தில் சுபாவத்திற்கு மாறாகப் பல விஷயங்கள் நிகழ்வதை நாம் கண்கூடாய்க் காண்கிறோம். கொலை களவு நடக்காது ஜனங்களைக் காப்பாற்ற வேண்டிய அரசர்களே அகோரமான பெருங்கொலைகளுக்குக் காரணமா யிருக்கிறார்கள். சத்தியம் தவறி நடக்கக்கூடாதவர்கள் சத்தியம் தவறிவிடுகிறார்கள். மனிதனுக்குச் சுபாவகுணமாகிய சுஜாதி அபிமானம் சுதேச அபிமானம் பொருந்தி யிருக்கவேண்டியவர்கள், நாங்களும் படித்திருக்கிறோம் என்று கூறிக்கொண்டு சுஜாதி சுதேச அபிமானங்களைப் பகிரங்கமாய்க் கைவிட்டுப் பிறரோடு கூடிக்கொண்டு தம்மவருக்கே தீங்கிழைக்கிறார்கள். நன்மை தீமையாகவும் தீமை நன்மையாகவும் மதிக்கப்படுகின்றன. தம்மிடத்திலுள்ள தங்கத்திற்குச் சமமான உயர்பொருளை யவமதித்து, அந்நியரிடமுள்ள பொற்பூச்சிட்ட (கிலிட்) பித்தளைபோன்றதைப் புகழ்ந்து அதற்குக் கையேந்துகிறார்கள். இவை யாவும் கலிகாலக்கொடுமையோ, அறிவில்லா மடமையோ வறிகிலோம்.

இப்போது சிலர் ஒப்புயர்வற்ற நமது தாய்ப்பாஷையாகிய தமிழ்த் தெய்வத்தை யிகழ்ந்து கூறத் தொடங்கி யிருக்கிறார்கள். தவளைத் தாமரையின் அருகிலேயே பிறந்து வளர்ந்து அதன் அருகிலேயே ஜீவித்தாலும் அம்மலரிலுள்ள நறுந்தேனின் சுவையை யெப்படி யறியாதோ, அதுபோல் இவர்களும் தமிழ் நாட்டிலேயே பிறந்து வளர்ந்தும் அதன் அருமை யறியாது தூஷிக்கிறார்கள். இவர்களது புன்மொழிகளைக்கண்டித்துத் தமிழின் பெருமையை விரிவாய்ப் பத்திரிகைகளில் அறிவாளிகள் எழுதிவருவதால், இச்சிறு சஞ்சிகையில் அதைப் பற்றி நாம் விரித்துக்கூறவில்லை. ஆனால் நமது நேயருக்கு எச்சரிக்கையாகமட்டும் இரண்டொரு வார்த்தைகள் கூறுகிறோம்.

இப்போது நம்நாட்டில் குலத்தைக்கெடுக்கும் கோடரிக்காம்புகள் ஆங்காங்கு முளைக்கின்றன வல்லவா? இதுவும் அவற்றிலொன்றே யாதலின் இத்தகையோர்மொழிக்கு நாம் செவி யளிக்கலாகாது. நிரக்ஷரகுட்சிகளாகிய சில பாமரர் கூறும் "அரவம் அத்தவானம், தெலுங்கு தேட்டை, கன்னடம் கஸ்தூரி" என்பது போன்ற பொருளற்ற பிதற்றலை யெப்படி நாம் அவமதிக்கிறோமோ, அவ்வாறே இவர்கள் தூஷணையும் ஒதுக்கித் தள்ளற்பாலதேயாகும். நமது தெய்வத்தையேனும், மாதா பிதாக்களையேனும், குருவையேனும் ஒருவர் தூஷித்தால், அதற்குச் செவிகொடுத்துக்கேட்பது மகாபாபம்; ஆதலால் உடனே அந்த விடத்தைவிட்டு விலகிவிடவேண்டு மென்று சாத்திரங்கள் கூறுகின்றன. நமது பாஷை தமிழ்த்தெய்வமென்றே பூசிக்கப்படுவதால் அதைத் தூஷிப்போர் பாபமடைவது நிச்சயம். ஆகையால் நாம் அதைச் செவிகொடுத்துக் கேட்டால் நாமும் பாபமடைவோம்.

சகோதர சகோதரிகளே, நந்தமிழ்ப் பாஷையின் பெருமையைப்பற்றி எவ்வளவோ காலத்திற்கு முன்னிருந்த மகான்களெல்லாரும் விரிவாய்க் கூறியுள்ளார். இப்பாஷை நம்போன்ற மனிதரால் உற்பத்தியானதன்று. எந்தக் காலத்தில் உண்டானதெனக் கூறக்கூடியதன்று. அதற்கு வைத்துள்ள தமிழ்

என்ற பெயருக்குள்ள பொருளே அதன் அருமையையும் உயர்வையும் உணர்த்தும். இப்பாஷை கடவுளுக்குச் சமானமான மகான்கள் கொண்டாடியது; தெய்வத்தன்மை பொருந்திய மகா அற்புதங்களைச் செய்யவல்லது; என்றும் எவரும் பூரணமாய் உணரக்கூடாத எண்ணிறந்த மகா அற்புதமான நூல்களையுடையது; பூரணமடைந்தது; எந்த அந்நியபாஷையின் உதவியும் சற்றும் வேண்டாதது; சில அந்நியபாஷைகளின் உற்பத்திக்கு ஆதாரமாயுள்ளது. உயிருள்ள பாஷைகள் யாவற்றினும் சிறந்தது; மெய்ஞ்ஞானத்திற்கோர் களஞ்சியமானது; கடல்போன்று; அளவிடற்கரியது. அனுபவமான தெய்வத்தன்மை பொருந்தியது; ஆண்டவனுடைய கிருபையைப் பெறற்குரிய மகாமந்திரங்களை யுடையது. இன்னும் இதன் பெருமை வாக்காற்கூறி முடிக்கத்தக்கதன்று.

ஆகையால், மேலே குறிக்கப்பட்டவர்களுடைய பயனில் மொழிகளைச் செவியேற்காது, நம்மால் கூடியவரையில் நம்தாய்ப்பாஷையை விருத்திசெய்து முன்னிருந்த உன்னத நிலைமைக்குக் கொண்டுவர இடைவிடாது முயற்சி செய்ய வேண்டுமாய் அகத்தியர்க்கன்று அருந்தமிழருளிய ஆதியண்ணலை யடி பணிந்திறைஞ்சுவாம்.

மூதுரை.

நேரிசை வெண்பா.

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுமாங் குணம்.

என ஔவைப்பிராட்டியார் கூறியபடி, அன்பர்காள், நீராடையுடுத்த நிலவுலகின்கண் அநேகதடாகங்கள், மடுக்களிருக்கின்றன. இவற்றில் தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர், வள்ளை, குமுதம் என்னும் பலவித புட்பச்செடிகள் முளைத்து வளர்கின்றன. இவற்றில் குமுதமென்னும் அல்லியானது, சர்வேசுவரனது குணத்தையும் பெரியார் குணத்தையும் அடைந்திருக்கின்றது. எவ்வாறெனின்? ஈசுவரன் தொண்டர்கள் செய்யும் அன்பின் அளவிற்குத் தக்கவாறு தமது திருவருள் பெருக்கைப் புரிகின்றனர். இதற்கு அறுபத்து மூவர் முதலிய அன்பர்க் கருள்சுரந்ததே சான்றாம். பெரியார் தன்மை யாதெனின்? தம்மை அடைந்தோர் சிறியாராயினும் பெரியாராயினும் தம்மிடத்து வந்த மாத்திரத்தில், அவரவர்க்குத் தக்கவாறு பலனைத் தந்து அன்புபாராட்டுவது. இத்தன்மையதாய் அல்லியானது நீர் பனையளவு உயரினும் அவ்வளவாகியும் நீர்வற்றியகாலத்து தரையோ டொட்டியும் இருக்கும் இயற்கையை யுடையதாம்!

"தான்கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு"

ஒருவனை அறிவுளோனென்றும் அறிவிலானென்றும் உணரவேண்டின் அவன் கற்றநூலே அவ்னேன் அறிவின் அளவைக்காட்டு முன்னிலைக்கருவிப் பொருளாயிருக்கின்றது. இதற்கோர் சிறு கதையுண்டு!!

தென்னாட்டிலே, திருடுவதையே தொழிலாகவுடைய செல்வவந்தன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் ஜெயாநந்தன். அவனுடைய அருமந்த மகன் நீலலோசனனென்பான் சிறுவயதிலேயே கல்வியில்வல்ல வித்வசிரோ

மணியாகி தன் தந்தையின் இழிதொழிலை நினைந்து மனம் பொறாதவனாய் சீ! சீ!! இவர்கள் இணக்கம் விடத்திற் கொப்பாமென்று விடுத்து,

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லாற் சொற்கேட்பதுவு நன்றே"

என்ற மூதாட்டியார் மொழியைக் கருதி மேதாவியர்களோடே இணங்கி களவாடக் கனவினுங் கருதாதவனாயினன். இவன் தாய் தந்தையர்கள் இவனது பருவகாலத்திலேயே விவாகம்செய்யக் கருதி தம் உறவினரை பெண்வினவும் போதெல்லாம், உமது மைந்தன் நமது சாதிக்குரிய தொழில் கற்றிலன் எவ்வரசன் பண்டாரத்தில் வங்காருபெட்டி கொண்டுவந்து கெடி பெற்றிருக்கின்றான்? போம் போம் குலக்கேடர்களே, இன்னொருமுறை பெண்ணென்று, வாராதீர்களென்று சொல்லுவாராயினர். தாயுந் தந்தையும் வியசனமுற்று மைந்தனையழைத்து "அப்பா அருமைக்கண்மணி எங்களுக்கும் மூதாதையருக்கும் கடன் செலுத்தவேண்டுமே? நீ! விவாகமில்லாமல் காலங்கழிக்கலாமா? ஒரு நாளாகிலும்போய்க் களவாடிவருவாயாகில் நாங்கள் எவ்விதத்திலும் நம்மவரிடத்தில் பெண்கேட்டு மணத்தை முடித்துவிடுகிறோ" மென்றனர். அதற்கு நீலலோசனன் இசையாதவனாய் சின்னாள் கழித்தனன். பின்னரும் அன்னையும் அப்பனும் முன்வந்து "அப்பனே! எங்கள் வாக்கியத்தைக் கடக்கவும் நீ கற்றநூல் சொல்லியிருக்கின்றதா?" என்றனர். அதற்கு மறுமொழி கூறுதற்கின்றி, இப்போதென்ன கட்டளையிடுகின்றீர்களென்றான். அதற்கு அவன் தாய் தந்தையர் "நீ இன்றே பாண்டியன்மனை புகுந்து கன்னமிடுவாயானால் நாளைக்கே உன் அம்மான் மகள் சலசலோசனியை முடிவு செய்துவிடுகிறோம் என்றனர். "கற்கக் கசடறக் கற்பவை—கற்றபின் நிற்க அதற்குத் தக" என்னும் தேவர் வாக்கியப்படி நடப்பவன் மறந்துஞ் செயப்புகாதவன், தான் காதலடைந்த மடந்தையா யிருப்பதாலும் "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை" "தாய்சொல் துறந்தால் வாசகமில்லை" என்ற முதுமொழிகள் இருப்பதாலும் மனதை ஒருவிதப்படுத்திக் தாய்தந்தையரிடம் விடைபெற்று மறைவஞ்சனத்தை நெற்றியிற்றீட்டி களவாடற்குரிய காரிருள் அன்றே அரண்மனைக் கட்டுக்காவல் யாவுங் கடந்து, பள்ளியறைபுகுந்து, அரசனுந் தேவியுந் துயிலும் பஞ்சணை மேல்விதானத்தேறி மறைவாய்ப் படுத்துக்கொண்டனன். அரசன் நித்திய கருமானுஷ்டானமுடித்துப் போசனமுண்டு தேவியுந்தானுமாய்ப் பள்ளியறை புகுந்து மஞ்சத்தமர்ந்து தாம்பூலமுண்டு தினந்தோறும் உறங்கப்போந் தருணத்தில் சிவஸ்துதி செய்யும் வழக்கம்போல் செய்யுளியற்றத் தொடங்கி,

வெண்பா.

"தலையி லிரந்துண்பான் தன்னுடலிற் பாதி
மலைய ரையன்மகளுக் கீந்து—உலகில்"

என்று மூன்றுமடியெடுக்கச் சற்றே யோசித்திருக்க, மேல்விதானத்தே மறைந்திருந்த இவன் சும்மாயிராமல் "இருப்புவண்ண மேனிய னென்றாலோ?" என்றனன். பாண்டியன் வியப்புற்று "ஆம் ஆம், திருப்புவனத் தீசன்றிறம்" என்று செய்யுளைமுடித்து இங்கே உருவமின்றி சத்தமுண்டாகக் காரணம் யாதென மேல்நோக்கிப் பார்த்தனன். நீலலோசனன் மரப்பொந்திலுள்ள ஆந்தையைப்போல் விழிக்கின்றனன். அரசன் "நீ யார்? ஏதுகாரணமாய் வந்தனை?" என்று வினவ விடை புகலாது கை கட்டிக்கொண்டு வாய்பொத்தி மௌனமாய் நின்றனன். அரசன் நின்பெயர்யாதென, நீலலோசனன் "அரசே! நான் பாலையப்பட்டில்வசிக்கும் ஜெயாநந்தருடைய மகன்; என்பெயர் நீல

லோசனன். ஐயா! யான் இளமையிற் கற்ற வறிவினரைச்சார்ந்து கல்வி பயின்று கல்லொழுக்கின் நின்றேன். இஃதுணர்ந்த எங்குலத்தினர் எனது விவாகத்திற்குப் பெண் கொடோமென்று மறுத்துவிட்டனர். அதனால் என் தாய் தந்தையர்கள் பெண்ணுக்காக வைர ஆபரணங்களும், இலட்சக்கணக்கான பொன்னும், பூஸ்திதியும் சாசனஞ்செய்து வைக்கின்றோமென்று பன்முறை கேட்டுப் பயன்படாமையால், என்னை எனது தாய் தந்தையர் ஒருதினமேனும் களவாடும்படி, குறையிரந்து கேட்டுக்கொண்டனர். இதனை எவ்வளவோ மறுத்தேன்; மறுத்துஞ் செய்யவந்ததாவது "தந்தை தாய் வாக்கிய பரிபாலனஞ்" செய்வது கருதியேயன்றி வேறன்று" என்றான். அரசன் "அவன்மொழிக்கு ஆச்சரியமடைந்து, திரைக்குள்ளிருக்குந் தேவியைத் துயிலெழச்செய்து, அன்புடையாய்! நின் அணிகலமியாவுங்களைந்து, இதனில் வையென்று, பொற்றாம்பாளத்தை யீந்தனன். அரசியும் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" யென்பது கருதி, அவ்வாறே செய்ய, அவ்வணிகளை அரசன் எடுத்து நீல லோசனன் கையிற்கொடுத்து, உன் அபீஷ்டப்படி செல்கவென விடுத்தனன். பிறகு அரசன் புலரியில் அரண்மனைக்காவலரை விளித்து, இரவு நமதாண்மனையில் களவுபோயதை அறியாது, அஜாக்கிரதையில் இருந்தீர்கள். அக்கள்வனையின்றே கொணர்திர் இன்றேல், கடுந்தண்டனைக் காளாவீர்" என்று கடுகடுத்து கூற, சேவகர்கள் விடைபெற்று, நகர், நாடு, மலை, வனம், வனந்திரங்கள் யாவுந் தேடியுங் கிட்டாமல் பாளையப்பட்டுக்குப்போகும் பாதையில் அடிச்சுவடு பற்றிச் சென்று ஜெயாநந்தன் வீடுபுக, ஜெயாநந்தனும், அவன் மனைவியும், மகன் களவாடிவந்த ஆபரணங்களைத் தாம்பாளத்திருத்தி, குதூகலமாய் மகனை மார்புறத் தழுவி, நமது குலத்தொழில் விளக்கவந்த கோவேயெனக் கொண்டாடுமமையத்தில், நீலலோசனன் வைரகண்டிகையை யெடுத்துக்கொண்டெழ, பாண்டியனேவிய தூதுவர், அக்கணமே அவனைக் கண்டிகையோடும் பிடித்து, இரண்டு கையிலும் தளையிட்டு, அவன் தாய்தந்தையரையும், மற்றும் அவணிருந்தாரையும், போ! போ!! என, பிடர்பிடித்துத் தள்ளிக்கொண்டு, இருண்ட ஆரண்யங் கடந்து, அரசன் கொலுமுகத்திற் கொண்டுவந்து விட்டனர். அரசன் குற்றவாளிகளுக்கு மனுவின்படி முறைசெய்து, தனதன்பனாகிய நீலலோசனனுக்காக மன்னிப்பு செய்தனன். அத்தருணம், களவுபோன இரவு காவலாளிகள் வேலையினின்றுந் தள்ளப்பட்டனர். உடனே நீல லோசனன், 'அரசே! அவர்களை விலக்கவேண்டாம்; நான் இவர்கள் கண்ணில் புலப்படாமல் வந்தகாரணங் கூறுகின்றேன்:—எனது முன்னோர்கள் செய்து வைத்திருந்த மறைவுமையை நெற்றியி லணிந்து வந்தேன்; அஃது இவர்களாயினும் மற்றை யாராயினும், பார்க்கவொட்டாது, பள்ளியறை புகுந்தேன்; தங்கள் பார்வையில்பட்டபோது அந்தமை கலைந்துவிட்டது." என அரசன் கைவிலங்கை கழற்றச்செய்து, அன்ப! நின் மங்களகாரியம் முடித்து, மடந்தையோடும் நின் நாடுவிட்டு, இங்கர்க் குடியாகி, எனது சபைக்கோர் வித்வசிரோமணியாய் இருப்பாய்! என்று" ஆக்கியாபித்தனன். அம்மொழியைச் சிரமேற்கொண்டு, நாட்டை அடைந்து, துயருற்ற தாய் தந்தையர்மகிழ, இன்னாளில் மணமுடித்துக்கொண்டு, மங்கையோடும் மன்னனையடுத்து சுகமாய் வாழ்ந்திருந்தனன். (தொடரும்)

சு. பழனிநாயகன், ஓர்லயான்பேட்டை, புதுவை.

ஈவது விலக்கேல்.

சகோதரர்களே! ஈவதுவிலக்கேல் என்பதன்பொருள் ஒருவர் மற்றொருவருக்குக் கொடுப்பதைத் தடுக்காதே யென்பதாம். உலகத்திலே முன்செய்த

தீவினையின் தொடர்பால் வந்து வருத்துவதாகிய வறுமை யென்னும் நோயால் இடியுண்டவர்கள் அந்நோய்தீரும் வண்ணம் தமக்கு உரிய பெருமையையும் மானத்தையும் ஒருபுறம் நீக்கி இரங்கிய முகமும் இனிய சொல்லும் உடையவராய் எண்சாணுடம்பும் ஒருசாணுக்குன்றி பல்லெலாம் வெளிப்படக் கைத்துணிகளை விரித்து நீட்டி நிற்றலைக்கண்டு இரங்கிய ஒருபிரபு அவர்கள் விரும்பியதை யெடுத்துக்கொடுக்க கையை நீட்டுகையில், அவரருகே நின்று கொடேல் யென்று ஒருவர் சொல்லுவாராகில் அவரே ஈவது விலக்கும் பாவிகள் எனப்படுவர். இப்பாதகர் இயற்கையிலேயே அகக்கண்ணை இழந்திருத்தலோடு புறக்கண்ணையும் இழந்துவிடுகின்றனர். இப்பூமண்டத்திலுள்ளார் சகலருள்ளும் தருமசிந்தனையுள்ளவர் சிலரேயாவர். அவருள்ளும் மிகச் சிலராவார் கைம்மாறு கருதாது ஈபவர். அன்றியும் சிலர் ஏதேனும் ஒருதர்மம் செய்யவேண்டுமென்று முற்பொழுதில் நினைத்துப் பிற்பொழுதில் அதனை மறக்கின்றனர். சிலர் ஆரம்ப சூரத்வத்தைக் கையாண்டு தாங்கள் நடத்திவரும் தர்மத்தை இடையில் பாழ்படுத்துகின்றனர். சிலர் இறப்பவர்கை கீழும் தம்முடையகை மேலுமாக நிற்கும் நிலைமையிலேயே மனம் வேறுபட்டு இத்தர்மம் இப்பொழுது செய்தல் வேண்டாம் பிற்காலத்தில் செய்யலாம் யென்று நினைந்து அந்த யாசகரைப் புதுப்பானையிற்புகுந்த ஈயின் கதியாக்குகின்றனர். இவ்விதமெல்லாம் இருக்க இவர்களுக்கிடையில் கொடுப்பாரைத் தடுப்பாரும் குறுக்கிடுவார்களானால், உலகத்தில் தர்மகாரியங்கள் யெவ்வாறு தலையெடுக்கும்? அந்தோ கஷ்டம் கஷ்டம் பாவத்திலும் பெரும்பாவம் இவர்களுக்கே சொந்தமாகிறது. இவ்வறிவிலிகள் செல்வர்களை மறுமை நலம்பெற வழியில்லாமல்கெடுக்கின்றனர்; தரித்திரர்களை இம்மை நலம்பெருவதற்கு வழியில்லாமல் கெடுக்கின்றனர். இவ்விருவரையும் கெடுத்த பாதகங்கள் தம்மைச் சூழ்ந்துகொள்வதனால், தாமும் இம்மையில் வறுமையாலும் நோயாலும் துன்பமுற்று அபகீர்த்தியையும் நிலைபெறச்செய்து மறுமையில் மீளா நரகத்திலும் புகுந்து அழுந்துகின்றனர். பாவம் இப்படி இவர் போல் தமக்குத்தாமே கேடு சூழ்ந்துகொள்ளும் மார்க்கங்களை சம்பாதிக்கும் மூடர்களை நாம் யெங்கும் பார்த்ததில்லை. அறிவுடையோர் இப்படிப்பட்ட கொடியவர்களைத் தங்கள் வீட்டுவாயிலிலும் கால் வைக்கக்கூடாதென அகற்றுதலே தகுதி. இப்பாவிகள் இருந்த இடமன்றிப் புகுந்த இடமும் வாழ்ந்தநாடும் பாழ்பட்டொழியும். சகோதரர்களே, நாம் ஒவ்வொருவரும் மேற்கண்டவாறுள்ள ஈவது விலக்கும் துர்ச்சனர்களுக்கு இடங்கொடாமல் விலக்கி நம்மால் கூடியவாறு இறப்பவர்களுக்கு ஈதலே தகுதியாமென்பதை நன்குணரவேண்டும். அவ்வாறு ஈதற்குத்துணையாக நமக்கு யெல்லாம் வல்ல இறைவ னருள்புரிவாராக.

வழுதூர் மா. சங்கரநாராயண பிள்ளை, கொக்கிரகுளம்.

குறிப்பு:—பெரும்பாலோர் சுயநலங்கருதியே இப்பாதகத்தைச் செய்வதுண்டு. அதாவது தனக்குவருவதில் குறையுமென்று, அல்லது இவ்வாறு தடுத்து செலவைக்குறைத்தால் பிறகு நாம் அதிகமாய்ப் பெறலாமென்று செய்வது. எப்படியெனில் தொழில்செய்யு மிடங்களில் தொழிலாளிகளிற் றலைமையா யிருப்பவன் தன் கீழிருப்பவர்களுக்கு அதிககூலி யளிக்காதபடி எஜமானனைத் தடுத்துவிட்டு, பிறகு இவ்வாறு தான் மாதம் 10 ரூபாய் மிச்சமாக்கியபடியால் தனக்கு 5 ரூபா யதிகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறான். எஜமானரும் "எப்படியோ நமக்கு 10 ரூபாய் மிச்சமாக்கினான், 5 ரூபாய் போனால் போகட்டும்" என்ற சிந்தனையோடு விட்டுவிடுகிறார்கள். இது உலகவியற்கை போலும். சிலசண்டாளர்கள் எஜமானன் தருமம்செய்வதைக்கூடதடுக்கிறார்கள். ஏனெனில் நாம் இப்படிசெய்தால், தன்சொத்தை விரையமாகாதபடி நாம் காப்

பாற்றுவதாய் எஜமானர் நம்மேல் நம்பிக்கையும் அன்பும் வைப்பார் என்று கருதுகிறார்கள். இவர்கள் எஜமானனைப்புண்ணியம் செய்வதினின்றும் தடுத்தது ஒரு பாபம், அப்பொருளைப் பெறுகிறவன் அதைப் பெறும்சமயம் இழந்து "ஐயோ அப்புண்ணியவா கொடுக்கவேமுயன்றார், மத்தியில் யாரோ ஒருசண்டாளப்பாபி குறுக்கேவந்து தடுத்துவிட்டானே" என்று வயிறெரிந்து செல்லும்படி செய்த பாதகம் ஒன்று, ஆக இரட்டைப்பாப மூட்டைக்கட்டிக்கொள்கிறார்கள். சிலர்எஜமானனுக்கு இச்சகம்பேசுவது சுயநலத்திற்கு நலமென்றெண்ணி, அச்செய்கை எஜமானனுக்கு நன்மையை யளிக்குமா தன்மையையளிக்குமா என்று சிந்திக்கும் அறிவின்றி அசத்தியமேனும் கூறி, எஜமானனைக் கொடுப்பதினின்றும் தடுத்துவிடுகிறார்கள். இத்தகைய ஒருவிஷயம் நம்கண்முன் நிகழ்ந்தது. ஒரு காலத்தில் ஒரு எஜமானனும் அவருடைய இலிகிதரும் சேர்ந்து ஒருவிஷய சம்பந்தமாக கு. என்பவனுக்கு ஒருவஸ்துவில் இத்தனை கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். அந்த இலிகிதரே காரணங்காட்டி "அதைப்பற்றி இத்தனை யளிப்பதென்று இப்போதே முடிவுசெய்து கொள்ளவேண்டும்" என்று கூறி அதையேற்பாடுசெய்தவர். பிறகு ஒருநாள் கு. என்பவன் மேல்படி இருவர் முன்னிலையிலும் ஒப்பந்தப்படி தனக்குச் சேரவேண்டியவற்றைக்கேட்டபோது, எஜமானன் அம்மாதிரி ஏற்பாடு செய்ததாய் நினைப்பில்லை யென்றார். அவர் ஒருசமயம் மறந்திருக்கலாம். ஆனால் இலிகிதரோ மறக்கக்காரணமில்லா திருந்தும், தாம் அம்மாதிரி பேசவேயில்லை யென்று அசத்தியம் கூறிவிட்டார். நாம் பேசியதுண்மையென்று இவர் உண்மையைக்கூறியிருந்தால், எஜமானன் ஒப்புக்கொண்டு கேட்டவர்மனம் வருந்தாவண்ணம் கொடுத்துவிட்டே யிருப்பார். ஆகையால் இதுவும் ஈவதை விலக்கியதே யாகும்.

இவர்கள் என்னகாரணத்தால் ஒருவர் கொடுப்பதைத் தடுத்தபோதிலும் இது பெரும்பாதகமேயாகும். இவர்களை நோக்க ஒருவர்க்கும் ஈயாலோபியுண்டே அவன் புண்ணியவானே. "இடுவதைத் தடுத்தவர்போகும் நரகம்" என்று மூதுரை வழங்குவதே யிதற்குப்போதிய சான்றாகும். ஆகையால் இப்பெரும்பாதகத்தில் சிக்காதபடி ஒவ்வொரும் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்வோமாக.

(பத்திரிகாசிரியர்.)

தன்னைத்தானே சீர்திருத்தல்

(336-ம் பக்கத் தொடர்ச்சி)

சரீரம், ஜீவாத்மா இரண்டும் சேர்ந்து சகல சுபாசுப கர்மங்களும் உற்பத்தியாகின்றன. இதில் ஜீவன் ஸ்வதந்திரஹீனனாய், இந்திரியங்களுக்கு வசப்பட்டவனாய், அவித்தையில் மூழ்கினவனாய், இந்திரியங்களின் துவாரா கர்மங்களைச் செய்கிறான். இப்பெருங் குறைவு ஆத்மசிந்தனை யுக்தமாகிய தியானம் இல்லாததனால் உண்டாகின்றது. ஆதலால் பிரதி கர்மத்தையும் த்யேய ஸ்தானத்தில் வைத்து தியானித்தல் வேண்டும்.

"அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு"

என்றபடி ஐம்பொறியின் சம்மந்தமாகிய ஐம்புல விஷயங்களைக் கெடுத்து அவ்விந்திரியங்களுக்குத் தானே எஜமானனாகி அவைகளை அடக்கி யாளவேண்டும். இவ்வப்யாச மில்லாதுபோனால் வெளிவிஷயங்களைக் கண்டு பிரமித்திருப்பதே யொழிய, தன் அந்தராத்மாவின் விஷயங்களைக் காண்பதில்லை. பின்னும் இஜ்ஜீவன் சதா அவிவேகியாயும், அவஸ்தித சித்தனாயும், அந்தக்கரண சுத்தியில்லாதவனாயும் ஜனன மரண பிரவாகத்தில் அகப்பட்டுழல்வான்.

ஜீவன் தன் ஸ்வரூபத்தை யறிந்துகொண்டு பிறகு பரமாத்மாவை விசாரிப்பான். தன் ஸ்வரூபஞானம் உண்டாகுமுன் பிரகிருதியினாலாய ஸ்தூல சூக்ஷ்ம பதார்த்தங்களை அந்தராத்மாவினிடத்தில் த்யேயமாக வைத்து தியானித்து வந்தால், தியான தாரணங்களேற்பட்டு த்யேய வஸ்துவின் பூர்வஞானம் உண்டாகும். இப்போது தியானிப்பவன், தியானம், தியானிக்கப்படும் வஸ்து இம்மூன்று பதார்த்தங்கள் முக்யமானதா யிருக்கும். இதனை ஆத்மசிந்தனையெனச் சொல்லலாம். இதற்கடுத்தபடி சமாதியில் தன்னைத்தான் மறந்து பரமேச்வரனுடைய பிரகாசத்தில் மூழ்கி *ஞாதா, ஞேயம், ஞானம் இவைகளின் பேதமின்றி ஆனந்த ஸ்வரூபத்திலிருப்பதாம். இப்படிப்பட்ட தியான யோகத்திற்கு ஆத்மசிந்தனை பிரதானமென்று வேறாகப் புகல அவசியமில்லை.

(சு) "ஆத்மக்ஞன்த ரதிசுசம் யஸ்மாத் வித்வான் னபிபேதி குதஸ்சித்
ம்ருத்யோரபி மாரணபயம் நபவத்யன் யத்பயம் குதஸ்தஸ்ய"

அதாவது, ஆத்மஞானம் உள்ளவன் சம்சார ரூபமாகிய துக்கத்தை ஜெயிக்கிறான். எதனாலும் பயப்படமாட்டான். ம்ருத்யுவினாலும் அவனுக்கு மரண பயமில்லை. இனி யாவரால் உண்டாகப் போகிறது என்பதாம்.

சிஷ்டர்க்குப் பயந்து குற்றம் செய்யாதிருத்தல், சுவர்க்க ப்ராப்தியைக் கோரி பரோபகாரம் செய்தல், இவை ஆத்மசிந்தனை யுக்தமாக நடைபெறின் சிறப்பு. ஏனெனில் ஆக்ஞைக்குப் பயந்தும், மேன்மையைக் கருதியும் செய்வது உத்தம கர்மங்களெனப் புகலல் பொருந்தாது. பயமில்லாத போதும், கோரிக்கையில்லாத போதும் சத்கருமங்களை அனுஷ்டிப்பதில்லை. இத்தோஷத்தை, தன்னை யறிவதானது கண்டித்து நல்வழிக்குக் கொண்டுவருமென்பதற்கோர் கதையுளது.

ஒரு குலாலனுடைய மகன் ஓரரசனரண்மனைக்கு பாண்டங்களைக் கொடுக்கச் சென்றிருந்தான். அங்கே அதிசுந்தராகிய இராஜபுத்ரியைக் கண்டு மோகித்து ஆகார நித்ராதிகளில்லாமல் வியாகுலனானான். இதற்குக் காரணம் யாதென்று தனதன்னை கேட்க, அவன் நடந்த செய்திகளைச் சொல்லி "நான் மறுபடி அச்சுந்தரியை தரிசிக்காவிடில் பிராணன் விடுவேன்" என்றான். அப்போது தாய் "அஃதெவ்வளவு வேலை? நான் சொல்கிறபடி செய்! அப்பெண் உனது பாதங்களுக்கு நமஸ்கரிக்கும்படி செய்வேன். நீ இப்போதே புசித்து தகுந்த பிரபந்தத்தோடு ஆறுமாதம் எங்காவது சென்று ஜடை முடிகளை வளர்த்து காவி வஸ்திரம் தரித்து சாதுவேஷம் பூண்டு இங்கு வரவேண்டும்" எனச் சொல்லி யனுப்பினாள். அவனும் அப்பிரகாரமே சென்று வேஷம் தரித்துவர, அவன்தாய் அரசனுடைய உபவனத்தில் உட்காரச்செய்து, கண்களை மூடி தியானம் செய்வதுபோல நடிக்கவேண்டுமென உசிதமான சிலவற்றைச் சொல்லி, பிறகு நகரத்தில் சென்று "நமது நகருக்கு ஓர் மஹான் விஜயம் செய்திருக்கிறார். கோரிய வரங்களருளுவார்" என்று வெளியிட்டாள். ஜனங்கள் சாது தரிசனத்துக்காக பழம் புஷ்பம் முதலியவை ஸமர்ப்பித்து வந்தார்கள். இச்செய்தி அரச குடும்பத்துக்கும் எட்டி இராஜாவும், இராணியும், இராஜபுத்ரியும் வந்து கபட சாதுவை நமஸ்கரித்தார்கள். அச்சமயத்தில் அச்சாதுவின் தாய் கண்திறந்துபார்க்கும்படி சமிக்கைசெய்தாள். அவனும் பார்த்து

* 1. ஞாதுரு அல்லது ஞாதா—காண்பான் அதாவது ஆன்மா.
2. ஞேயம்—காணப்படு பொருள் அதாவது பரமான்மா.
3. ஞானம்—காட்சி அதாவது காண்பானுக்கும், காணப்படுபொருளுக்குமுள்ள சம்பந்தம்.

ஆனந்தித்தானாகிலும், அந்த க்ஷணத்தில் அவனுக்குக் கீழ்க்கண்டபடி ஆத்ம சிந்தனை உண்டாயிற்று.

"நான் இப்போது வஞ்சனை சாதுவாயிருக்கிறேன். இப்படிப்பட்ட என்னை இங்கர் வாசிகளெல்லாரும் பணிந்தார்கள். மஹாராஜாவும், இராணியும், இராஜபுத்ரியும் என்னைப் பூஜித்து காங்களைக்கூப்பி நின்றிருக்கிறார்கள். ஆஹா! நான் கபட யதியாயிருக்கும்போதே இப்படி சன்மானிக்கப்படுகிறேனல்லவா? உண்மையிலேயே என்னிடம் சத்ய சாதுத்வமிருந்தால் எனக்கெப்படிப்பட்ட உத்கிருஷ்டமான ப்லப்ராப்தி லபிக்குமோ ஊகிக்கச் சாத்தியமா" என்று தனக்குள்ளே நினைத்து தான் உண்மையான மஹானாவதற்கு அவ்வேடத்துடனே சென்று மேலான யதீஸ்வரர்களைத் தரிசித்து சத்யசாதுவாகித் தன் ஜன்மத்தை ஸபலப்படுத்திக் கொண்டான்.

தன்னைத்தான் மறந்து பஞ்சேந்திரிய விஷயங்களில் வாஞ்சை கொண்டிருப்பவர்களுக்காகப் பயாதிகள் வேண்டியிருக்கின்றன. ஏன்? சன்மார்க்கர்களாவதற்கு என்பது ஸுப்ரசித்தம். அநேக ரநேக கிரந்தங்களை வாசிக்கின்றார்கள். பலவிடங்களில் உபந்நியாசங்களைக் கேட்கின்றார்கள். நல்ல உபதேசங்கள் போதிக்கப்படுகின்றார்கள். அவர்களில் அநேகர் யாதொன்றையும் கிரகிப்பதில்லை. நடந்துகொள்வதுமில்லை. இதற்குக் காரணமென்ன? யார் எதை உபாசிக்கிறார்களோ அதுவே அவர்களுக்கு லபிக்கும். ஓரரசனுக்குப் பல மனைவியருளர். அரசன் ஒரு காரிய விஷயமாய் அயல் தேச சஞ்சாரம்போனார். தன் மனைவியருக்கு அந்தந்த தேசங்களில் தமக்கு வேண்டிய பேர்போன நல்ல வஸ்துக்களைத் தெரிந்து தெரிவிக்கும்படி வரைந்தார். ஒருத்தி கண்டாபரணம் வேண்டுமென்றும், மற்றொருத்தி சிரோபூஷணம் வேண்டுமென்றும், இப்படிப் பலரும் பலவிதமாக நிருபம் விடுத்தனர். அதிலொருத்தி "பிரபு! எனக்குத் தங்களுடைய திவ்ய தரிசனத்தைத் தவிர வேறொன்றும் அவசியமில்லை. ஆதலால் தாங்கள் சீக்கிரம் தரிசனம் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாள். மன்னனும் அவரவர் கோரிக்கைகளை நிறைவேற்றித் தன்னை வேண்டின இல்லாளில்லத்திற்கும் சென்றார். அப்போது மற்ற ஸ்திரீகள் அருவை கொண்டு தங்கள் கிரகங்களுக்கு வாராததைப்பற்றி, அரசனுக்கு விண்ணப்பிக்க, இராஜா அவரவர் கோரிக்கை நிருபங்களைக் காட்டி, யார் யார் எதை எதைக் கோரினீர்களோ அதை யதை யடைந்தீர்களென பதிலுரைத்தார். அவ்விதமாக ஜீவாத்மாக்கள் மண்ணை யுபாசித்தால் மண்ணையடைவர். ரொட்டியை யுபாசித்தால் ரொட்டியை யடைவர். பரமாத்மாவை யுபாசித்தால் பரமாத்மாவையே அடைவர். இது பற்றியே கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா

"யோயோ யாம் யாம்தனும் பக்த ச்ரத்தயோர்ச் சிதுமிச்சதி
தஸ்ய தஸ்யா சலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம் யஹம்"

என அருளினர். அதாவது, எவனெவன் எந்தெந்தக் கோரிக்கையினால் எந்தெந்த தேவதைகளை பக்தி சிரத்தையோடு பஜிப்பானோ அவனவனுக்கு அந்தந்த தேவதைகளிடத்தில் சிரத்தை பக்திகளை நான் ஸ்திரப்படுத்துகிறேன் என்பதாம்.

எத்தனையோபேர் இராமாயணத்தைப் பாராயணம் செய்கின்றார்கள். இராமரிடத்துள்ள பிதுர் பக்தி, சகோதரவாஞ்சை, பந்து பிரீதி, உலக ஊழியம், ஏகபத்னி விரதம், கீழ்க்குலோத்தாரணம் (சபரியாகிய நீச்சப்பெண்ணை கவுரவித்து அவள் கொடுத்த கனிவர்க்கங்களைப் புசித்தல்) கஷ்டத்தைச் சகித்தல், திடம், தைரியம், புருஷார்த்தம், துஷ்டசிக்ஷணம், சிஷ்டஜன ரக்ஷணம் இப்படிப்பட்ட குணங்களை அனுசரித்தவர்களெத்தனைபேர்? அம்மாதிரி சத்குண சஞ்சாரம்

யாவருள்ளத்திலுண்டு? இல்லையெனில், காரணம் வேண்டுமன்றோ? அவர்களதிகாரிகளல்லவெனப் புகலலாமா? நல்ல உபதேசங்களைக் கேட்டு அதன்படி யனுசரிக்கும் அதிகாரமுள்ள சிஷ்யர்களார்? கடைசியில் அன்னவரிடத்தில் ஆத்மசிந்தனை யில்லையெனச் சொல்வதைத் தவிர வேறு காரணமில்லை.

ஆதலால் தன்னை யறியாதவர்கள், மூர்க்கராயும், மூடவிச்வாச முள்ளவராயும், முகஸ்தோத்ரங்களுக்கு மகிழ்பவராயும், யார் எப்படி ஆட்டிவைத்த போதிலும் அப்படி யாடுபவர்களாயும், வஞ்சனைகளுக்கு மோசம் போகக் கூடியவர்களாயும் இருப்பார்கள். ஆத்மசிந்தனையைப் பிரதி தினமும் குறிப்பிட்ட காலத்தில் அனுஷ்டிப்பார்களானால் துர்க்குணங்கள் யாவும் நசித்து நல்ல புமான்களாவர். நிற்க, மேலோர் சொல்வது என்ன வெனில்,

"வாக்தேஹ மானஸைரிஹ கர்மசய: க்ரியத இதிபுதா: ப்ராஹு:
ஏகோபிநாஹ மேஷாம் கர்த்தாதத் கர்மணுமஸ்மி"

என்றால், மனிதன் செய்யும்படியான கர்மங்கள், மனம், வாக்கு, காயம், என்கிற மூன்றினாலும் செய்யப்படுகின்றன. நான்மாத்திரம் ஒருவன் இவ்வுலக பந்தங்களான கர்மங்களுக்கு கர்த்தாவல்லன் என்பதாம். இதில், மனதினால் நினைத்து, வாயால் வசனித்து, சரீரத்தால் (கை, கால் முதலிய அவயவங்களால்) கர்மங்களைச் செய்கிறான். இதையே திரிகரணங்களெனப்படும். மனதினிடத்தில் பிரதி க்ஷணத்திலும் சங்கல்ப விகல்பங்கள் தோன்றிக் கொண்டிருக்கும் மன ஏவ மனுஷ்யாணாம் கேவலம் பந்தமோக்ஷயோ: என்கிறபடி மனிதனுடைய பந்தமோக்ஷங்களுக்கு மனதே காரணமா யிருக்கிறது. பாஹிய விஷயங்களில் திரிந்துழலும் மனதை,

"தெய்வத்தா லாகா தெனினு முயற்சிதன்
மெய் வருந்தக் கூலிதரும்"

என்ற திருவாக்கிற் கிசைய விடாமுயற்சியை அந்தர் விஷயமாகிய தன் குணுகுணங்களைப் பரிசோதிப்பதில் மிகுந்த பிரயத்தோடு பிரயோகிக்கவேண்டும்.

"பந்தனானி கலுஸந்திபஹூனி ப்ரேமாஜ்ஜுக்ருத பந்தனமன்யத்
தாருபேத நிபுணோபி ஷடங்கரீ: பங்கஜேபவதி கோஷநிபத்த:"

அதாவது, கட்டும் சாதனங்கள் எத்தனையோ உண்டு. ஆயினும் பிரியம் என்னும் இரஜ்ஜு பந்தனம் வேறொன்றுளது. வண்டு கடினமாகிய மூங்கிற் கணுவைத் துளைக்கும் சாமர்த்தியம் உடைத்தாயிருந்தும், பிரிய பந்தன வசமாகி தாமரையின்கண் பந்திக்கப் படுகிறது.

இப்படிப்பட்ட பிரிய சக்தியே மனிதனிடத்தில் சுபாவமாகக் காணப்படுகின்றது. எப்படியெனின், ஒரு வீட்டைச்சுற்றியும் தீப்பற்றி யெரியும்போது அவ்வீட்டுக்காரன் தனக்குப் பிரியமாகிய பெண்டு பிள்ளை தனம் முதலியவைகளை காப்பாற்ற முயலுவான். அப்படி முயலும்போது தனக்கு அபாயம் உண்டாகும்படியிருந்தால், மேல்சொன்னவைகளை யெல்லாம் விட்டு விட்டுத் தன்னை இரக்ஷித்துக்கொள்ளவே பிரயத்தனிக்கிறான். ஆகவே, எல்லாவற்றையும் விட ஆத்ம ஸ்வரூபமாகிய தானே தனக்கு மிகுந்த பிரிய மாயிருக்கிற படியால், ஆபத்காலத்தி லல்லாமல் சதாகாலத்திலும் தன் குணதோஷங்களைப் பிரியத்தோடு பரிசோதித்து, பரிசுத்தமான ஆத்மாவைப் பாபத்தில் விழவிடாமல் இரக்ஷித்துக்கொள்ளவேண்டும்.

இனி, நல்ல சமயங்களை வீணாக்கிக் கொள்ளக் கூடாது என்பதற் கோர் கதையுண்டு. ஒரு ஸந்நியாசி ஒருவர்த்தகனுக்கு உலோகத்தைப் பரிசித்தால்

தங்கமாக்கக் கூடிய பரிசமணியைக் கொடுத்து, இதனால், "நீ ஒருவாரத்திற்குள்ளாக கூடுமானவரை இரும்பைச் சேகரித்து ஒருதடவை தாக்கியபின் மணியை என்னிடம் ஒப்பித்துவிடு" என்று உத்தரவு செய்திருந்தார். வர்த்தகன் வீட்டிற்குவந்து "என்வீட்டிலுள்ள இரும்பெல்லாம் சேர்த்தாலும் பத்து மணங்கிற்கு மேலில்லை. இன்னும் ஒருவார மிருக்கிறபடியால் இதற்குள் என்னிட முள்ள பணத்திற்கெல்லாம், இரும்பு வாங்கிவரச்செய்வேன்" எனயோசித்து அங்கங்கே ஆட்களை யனுப்பினான். அவர்கள் திரும்பிவந்துசேர ஏழு நாட்களாயின. பிறகு, ஏழாவது நாள் இராத்திரி சாவகாசமிருப்பதால் அதற்குள் உள்ளூரிலுள்ள இரும்பனைத்தும் சேகரிக்கப் பிரயத்தனித்தான். இதற்குள் அந்த மஹான் வந்தார். உடனே பரிசமணியைக் கேட்டார். அப்போது வர்த்தகன் நமஸ்கரித்து "ஸ்வாமீ! எல்லாம் தயாராய்விட்டன. இனி ஒரு க்ஷணநேரம் தாமதித்தால் போதும்! இங்கே சற்று வீற்றிருங்கள்" என்று சொல்லும்போது மஹான், உடனே வர்த்தகன் கையிலிருந்த மணியைப் பிடுங்கிக்கொண்டு, "நான் சொன்ன காலம் தவறிவிட்டது. உன் பிரயத்தனத்தால் பணக்கேடே யொழிய பயனில்லை. இவ்வபூரூப மணி உனக்கு அடிக்கடி சித்திப்பதல்ல. இதைக் கவனியாமல் வீண்காலம் போக்கினாய்" எனச்சொல்லி மீண்டுப் போனார்.

நேசர்களே! ஜீவாத்மா ரூபமாகிய வர்த்தகனுக்கு, மஹான் வடிவாகிய பரமாத்மா, சரீர ரூபமாகிய பரிசமணியைச் சிறிதுகாலம் வரையில் கொடுத்திருக்கிறார் இந்த அவகாசத்தில் இதை கேவலம் விஷய வியாபாரங்களில் விருதாவாக்காமல் தன்னைத்தா னறிந்து பரமாத்மாவுடன் ஐக்யமாவதற்குச் சித்தமா யிருக்க வேண்டுமன்றோ. ஆனது பற்றியே ஓர் மஹான்,

"மஹதா புண்ய பராயேன க்ரீதேயம் காயநௌ ஸ்த்வயா
ஸாரம் துஃகோததேர்கந்தும் த்வரயா நந்நபித்யதே"

என அருளி யுள்ளார்.

அதாவது, மஹா புண்ய வசத்தினால் இந்தச் சரீரம் என்னும் ஓடம் லபித்திருக்கிறது. இதன் உதவியால் ஸம்ஸார ரூபமென்னும் இச்சமுத்திரத்தைக் கடக்க வேண்டும். இத்தேகமாகிய ஓடம் அழிந்துபோக வேண்டிய விதி இருக்கிறது. அதற்குள் சீக்ரத்தில் கரை சேரவேண்டும். என்பதாம்.

ஆதலால், நண்பர்களே! நாமனைவரும் நம்மிடத்துள்ள குணதோஷங்களை ஆத்ம சிந்தனையால் சீர் தூக்கிப் பார்த்து தீயனவை விடுத்துப் பரோபகாரம் முதலிய நற்கருமங்களையே செய்து ஸ்ரீபரமேஸ்வரனுடைய கிருபைக்குப் பாத்திரர்களாவோமாக. சுபம்.

ஆ. பாஷ்யம்.

நித்தியவிதி—ஸ்நானம்.

(343-வது பக்கத் தொடர்ச்சி)

ஸ்நானமென்பது மிகச்சிறந்தது. எத்தேசத்தாராலும், எல்லாச் சாதியாராலும் சிலாக்கியமாகக் கொள்ளப்பட்டது. எல்லாராலும் சிறந்ததென்று கொண்டாடப்பட்டாலும் இப்பரதகண்டவாசிகளால் அதிக முக்கியமாகக் கொண்டாடப்படுவது. ஏனெனில் தேகத்தின் அழுக்கைப்போக்கிச் சுத்தமாக்குவதற்கே மற்றவர்களால் கொண்டாடப்படுவது. அப்படிச் செய்வதனால் வியாதியணுகாவென்பதுமே அவர்கள் கருத்து. நம்மவர்களுக்கோ அப்படியல்ல. பாபங்களையு மொழிக்குமென்பதும், ஸ்நானம் செய்யாதவன் எவ்விதமான கருமங்களைச்

செய்வதற்கும் அருகனாகான் என்பதும் நமதுமுன்னோர்கள் கருத்து. ஸ்நானத்தினால் சரீரசுத்தியும், மனதின் சுத்தியும் உண்டாகுமென்பது நமது முக்கியமான கொள்கை. ஸ்நானம்செய்து சுத்தனானபிறகே ஜபதப ஹோமாதி தேவகாரியங்களும் பிதிர்க்காரியங்களும் செய்வதற்கு அருகனாவான். ஆதலால் ஸ்நானம் வெகு முக்கியமானது.

ஸ்மிருதிகளில் மானதஸ்நானம், வாருணஸ்நானம், ஆக்கினேயஸ்நானமென்று ஸ்நானம் மூவகைப்படுமென்றும், அவற்றுள் மானதஸ்நானமே மிக முக்கியமானதென்றும், அது எக்காலத்தும் செய்யத்தக்கதென்றும், மானத ஸ்நான மில்லாதவனுக்கு மற்றையஸ்நானங்கள் பலனளிப்பதில்லை யென்றுங் கூறப்பட்டுள்ளது. மானதஸ்நானமாவது சத்தியம், பொறை, அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஆஸ்திகபுத்தி, தேவதாபக்தி, ஜீவகாருணியம் ஆதியவாம். இவைகளையுடையவனே ஸ்நானங்களின் பலனை யடைவான். ஆதலால் இம்மை மறுமைப்பயன்களை அடைய விரும்புகிறவன் அவசியம் மானதஸ்நானம் செய்ய வேண்டும். இதனால் மனச்சுத்த மடைந்திருப்பவன் வாருணஸ்நான பலனை யடைவான். வாருணஸ்நானமாவது நீரில் ஸ்நானம்செய்தல் இது நித்தியம், நைமித்திகம், காமியம், கிரியாங்கம், மலாபஹர்ஷம், கிரியாஸ்நானம் என அறு வகைப்படும்.

(1) நித்தியஸ்நானமாவது;—ஜபாதிகருமங்களைச் செய்வதற்குச் சுத்தி பெறும் பொருட்டு உதயகாலத்தில் தினந்தோறும் செய்கிற ஸ்நானம். (2) நைமித்திகமாவது;—அசுத்தபதார்த்தங்களையும், சண்டாளர் முதலானவர்களையும் க்ஷயம் விருத்தி (மரணம், பிறவி) முதலிய சூதகமுள்ளவர்களையும் தொட்டவன் அந்தத் தீட்டு நீங்கும் நிமித்தமாகச்செய்யப்படுவது. (3) காமியமாவது;—இன்ன காலத்தில் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தால் இன்ன பலனுண்டாகுமென்று நூல்களிற் கூறப்பட்டகாலத்தில் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்வது. உதாரணமாக பூசநட்சத்திரம், ஜன்மநட்சத்திரம், அமாவாசை, வைதிருதி இந்தத்தினங்களில் நதிகளில் ஸ்நானம்செய்தால், அவனுடைய ஏழுதலைமுறை பரிசுத்தமாகும் என்றும், ஆனிமாசம் கங்கையிலும், சித்திரைமாசம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் சிவசந்நிதியிலும் ஸ்நானம்செய்கிறவன் சகல பாபங்களினின்றும் விடுபடுவானென்றும், கிரகணகாலம், ஈருவா இவைகளில் கடலில் ஸ்நானம் செய்தால் சர்வசித்தியுமுண்டாகுமென்றும் நூல்களில்விதிக்கப்பட்ட ஸ்நானமே காமியஸ்நானமாம். (4) கிரியாங்கஸ்நானமாவது;—தேவபூஜை பிதிர்பூசைகளுக்காக அப்போது செய்கிற ஸ்நானம் கிரியாங்கஸ்நானமாம். (5) மலாபஹர்ஷஸ்நானமாவது;—சரீரத்திலுள்ள அழுக்கைப் போக்குகிறதற்காகச் செய்யப்படும் அப்பியங்கஸ்நானமே மலாபஹர்ஷ ஸ்நானம் என்னப்படும். (6) கிரியாஸ்நானமாவது;—நித்தியம்போல ஜலத்தினாலும் மிருத்திகை முதலியவற்றாலும் செய்யப்படும் ஸ்நானமே கிரியாஸ்நானம். இது மத்தியானம் செய்யப்படுவது. இவற்றின் விரிவு பின்னாற்கூறப்படும். அதிக முக்கியமானதும், எல்லாரும் அவசியம் செய்யவேண்டுவதுமான நித்தியஸ்நானத்தைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

இது உதயகாலத்தில் சூரியனுதிப்பதற்கு முன்னாலேயே செய்யவேண்டுவது. இராக்காலத்தில் நித்திரைசெய்யும்போது சரீரத்தினுள்ளிருந்து அசுத்த ஆவிகள் வெளிப்படும். அது மயிர்க்கால்தோறு முறைந்துநிற்கும். தோலிலும் படிந்திருக்கும்; சூரியோதயமாகுமுன் சற்று இளகிநிற்கும், சரீரத்தின்மேல் சூரியகிரணம் பட்டால் காய்ந்துவிடும். அதனால் பலவகையான கர்மவியாதிகளும் சொறி சிரங்குகளும் உண்டாகும். பலநாள் ஸ்நானம்செய்யாமலிருப்பதி

னால் பல கொடியவியாதிகளும் உண்டாகும். சரீரத்தின் மேற்புறம் அசுத்தமானால் உட்கருவிகளும் அசுத்தப்படும். இது விபரீதத்தை விளைக்கும். ஆதலால் உதயமாகுமுன் ஸ்நானம் செய்யவேண்டும். அப்படிச் செய்வதனால் சரீரத்தின்மேற் காயாமல் இளகிநிற்கும் அசுத்தமலங்கள் எளிதில் கழுவப்படும். இம்முறைவழுவாது தினந்தோறும் உதயஸ்நானம் செய்கிறவன் அரோகதிடகாத்திரத்தையும் தீர்க்காயுளையும் பெற்று நெடுங்காலம் ஜீவிப்பான். இந்த உதயஸ்நானத்துக்குப் பரிசுத்தமான குளிர்ந்தஜலமே உரியது. இதைப்பற்றி நூல்களிற் கூறுவது:—

பிராதக்காலத்தில் ஒவ்வொருவரும் அவசியம் ஸ்நானம் செய்தே தீரவேண்டும். செய்யாக்கால் அவன்புசிக்கும் உணவும் அசுத்தமாம். அவன் எந்தக் கருமத்துக்கும் அருகனாகான். குளிர்ந்த ஜலத்திலேயே ஸ்நானம் பண்ணவேண்டும். வெந்நீரில் ஸ்நானம்செய்வது நிஷ்பலமாம். அதாவது கர்மபல சித்தி கிட்டுவதரிது. வெந்நீரில் அடிக்கடி ஸ்நானம் செய்வதனால் சரீரம் தளர்ச்சியடையும். பருத்திருக்கிறாப்போலத் தோன்றும். ஆனால் பலஹீனமுண்டாகும். நாளடைவில் சகலகரணங்களும் தளர்ந்து சோர்வடையும். அதனால் ஸ்திரபுத்தி கெடும். ஆதலால் வெந்நீரில் ஸ்நானம்செய்வதை யெப்போதும் விலக்க வேண்டும். சக்தியற்ற விருத்தர்களும், பாலர்களும், வியாதிக்காரர்களும் மாத்திரம் வெந்நீரில் ஸ்நானம்செய்யலாம். ஏனெனில் சரீரசுத்திக்கு வேறுவழியில்லாமையால். இக்காரணம்பற்றியே ஜனனமரண கௌசங்களிலும், மாசப்பிறப்பு, தன் ஜன்மநாள், பிதிர்தினம், கிரகணகாலம் இவைகளில் வெந்நீரில் ஸ்நானம் செய்யக்கூடாது என்று தர்மசாஸ்திரங்களில் விதிக்கப்பட்டது. ஆயினும் ஒரு புண்ணியகாலத்தில் சுத்தஜலத்தில் கொஞ்சம் வெந்நீர்விட்டு அபிமந்திரித்து ஸ்நானம்செய்தால் நதிகளில் ஸ்நானம் செய்ததற்குச் சமானமாகுமென்று கூறப்பட்டது. இது நதிகள் இல்லாத இடங்களில் செய்யத்தக்கதாம். இவைகளினால் வெந்நீரில் ஸ்நானம்செய்வது பயனில்லை யென்பது புலப்பட்டது.

இனி ஸ்நானம்செய்வதற்குரிய குளிர்ந்த ஜலம் கிணற்றிலுள்ள நீரும் குளம் குட்டைகளிலுள்ளதும், மலை யருவியும், நதிகளுமாம். நதிகளிலும் சமுத்திரகாமினியாகிய (கடலில் சங்கமமாகும்) புண்ணியநதிகள் மிகச்சிறந்தனவாம். முதலிற் கூறிய கிணற்றைவிட முறையே ஒன்றினொன்று சிறந்ததாம். நதிகளில்லாத ஊரிலுள்ளவர்களுக்குக் கர்மசித்தியாவதில்லை. ஆகையால் சற்கருமானுஷ்டான பரர்களாயுள்ளவர்கள் நதிக்கரையிலுள்ள ஊர்களில் வசிக்கப் பிரயாசப்படவேண்டும். பன்னிரண்டு வருஷகால பரியந்தம் ஓடுகிற நதியில் ஸ்நானம் பண்ணாமலிருக்கிற பிராமணன் ஈன ஜாதியாகிறானென்று ஸ்மிருதிகள்கூறின. மூன்றுவருஷம் நதி ஸ்நானமில்லாமலிருந்தாலே பிராமணத்வ மொழியுமென்றும், அதுகாரணமாக வீதிப்படி பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும் என்றும், சிலவிடங்களிற் கூறப்பட்டுள்ளது. ஆகையால் ஓடுகிற நதியில் ஸ்நானம் செய்வதே சிறந்ததாம். பாத்திரங்களால் எடுத்துத் தலையில் விட்டுக்கொண்டு ஸ்நானம் செய்வதாகிய கிணற்றிலும், ஊற்றிலும் ஸ்நானம் செய்வதைவிட மலையருவியில் ஸ்நானம் செய்வது சிறந்ததென்றும், முழுகி ஸ்நானஞ் செய்வதாகிய குள ஸ்நானம் அவற்றைவிடச் சிறந்ததென்றும், அதைவிட ஓடுகிறநதியில் ஸ்நானஞ் செய்வது சிறந்ததென்றும், அதைவிடக் கடலிற் சங்கமமாகிற நதி ஸ்நானம் மஹா உத்தமமென்றுங் கொள்ளவேண்டும். கிணற்றிலும் ஊற்றிலுமிருந்து எடுத்து ஸ்நானம்செய்வதால் அந்தக்காரணங்கள் சுத்தி யடையாவாம். அருவி நீர் அதைவிடச் சிறிது நன்மை

தரும் என்பது. இது காரணத்தினாலேயே ஓடுகிற நதிகளில் நதிக்கு எதிர் முகமாக நின்று ஸ்நானம் செய்யவேண்டு மென்றும், கிணறு, குளம் முதலியவற்றில் ஸ்நானம் செய்யும்போது சூரியாபிமுகமாய் நின்று ஸ்நானம் செய்யவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது.

பிராதக்காலத்தில் நித்தியவிதியில் கூறப்பட்ட பிரகாரம் அங்கசுத்தி செய்துகொண்டபின், பரிசுத்தமான நிர்மலசித்தத்துடன் தன் இஷ்டதெய்வத்தைச் சிந்தித்துக்கொண்டும் தெய்வநாமஸ்மரணை செய்துகொண்டும் ஓடுகிற நதியிலிறங்கி எதிர்முகமாக நின்றுகொண்டு ஸ்நானம்செய்யவேண்டும். ஸ்நானம் செய்யும்போது இரண்டு கட்டைவிரல்களால் காதுகளையும், மற்ற விரல்களால் மூக்கையும் அடைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் காது மூக்குகளில் குளிர்ச்சியுள்ள ஜலம் அதிகமாகப் பிரவேசிப்பதனால் காதுவலி, சளிபிடித்தல், தலைநோயாதி வியாதிகளுண்டாகும் என்பது நூல்களின் கருத்து. மார்பு நன்றாய் விரிந்திருக்கும்படி செய்துகொள்ளவேண்டும். பிறகு முரட்டுவஸ்திரம் முதலியவற்றால் நன்றாய்த்தேய்த்து அழுக்கைப் போக்கவேண்டும். பின் தனக்கு எதிர்முகமாக ஓடிவரும் நீர் வேகமாய் மார்பு முதலிய இடங்களில் நன்றாய்த் தாக்கும்படி சற்று நின்று ஸ்நானம் செய்யவேண்டும். இப்படிச்செய்வதனால் நீர் வேகமாக போகும்போது அதின் அமிர்தகுணமாகிய குளிர்ச்சி மயிர்க்கால்களின் வழியாகச் சரீரத்துட்பிரவேசித்து உட்கருவிகளின் அழற்சியையாற்றும், முன்நாட்செய்த தொழிலாலுண்டாகும் களையைமாற்றும், சோர்வையகற்றி முறுக்கேற்றி அக்கருவிகளுக்கு வலுவுண்டாக்கும். இரவில் நித்திரை செய்யும்போது பிராணவாயு வேகமாயோடுவதனால் ஓர்வகையான அழற்சியெழும். அதனாலேதான் நல்லநித்திரையில் வெயர்வையுண்டாவது. அதனாலுண்டாகும் தீமைகளை இந்த ஸ்நானம் விலக்கும். இராஜேந்திரியமாகிய மனதுக்கும் இருதயத்துக்கும் வலுவேறும். பரிசுத்தமுண்டாகும். இதனால் மனமானது விஷயங்களை யாராய்ந்து அவற்றின் நன்மைகளையுணரும் வல்லமைபெறும். இங்ஙனமாயினும் அதிக நேரம் தண்ணீரில் நிற்கக்கூடாது. நின்றால் மந்தமாதித் தீமைகளுண்டாகும். அதனாலே பதினைந்து நிமிஷம் அல்லது இருபது நிமிஷங்களுக்குமேல் ஸ்நானம் செய்யக்கூடாது என்று நூல்கள் விதித்தன. நெடுநேரம் தண்ணீரில் நீந்திவிளையாடுவதும், அதிகநேரம் ஸ்நானம் செய்வதும், வெவ்வேறு பொருள்களைப் பார்த்துக்கொண்டும், கெட்டவிஷயங்களைச் சிந்தித்துக்கொண்டும் ஸ்நானம் செய்வதும் நிஷ்பிரயோசனமாமென்று நூல்கள் கூறின. இவ்வாறு ஸ்நானம்செய்து சுத்தி பெறுகிறவன், சகல கருமங்களையும் செய்ய அருகனாவானென்று புராணாதிகளும், ஆயுர்வேதமாகிய வைத்திய சாஸ்திரமும் ஒரேதன்மையாய்க் கூறுகின்றன.

சிவானந்தசரகா யோகீஸ்வரர்.

விருந்தோம்பல்.

விருந்து ஓம்பல் என்ற இருபதங்கள் அடங்கியுள்ள இச்சொற் றொடற்குப் பொருள் வேறு இருந்தாலும், அன்னத்தால் முன்பின்னறியா ஒருவரைக் காப்பற்றல் என்பது ஏற்றது. விருந்து என்றால் அதிதி, அதாவது புதிதாய்வருபவர். ஓம்பல் காப்பற்றல். இது இல்லறத்தார் கடமைகளைக் கூறத்தொடங்கிய தமிழ் மறையாசிரியர் கூற்றால் மனிதரில் இல்லற நெறியிலுள்ளார்க்கென இனிது விளக்கமுறும். அதுவருமாறு:—

தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை.

இவற்றில் தென் புலத்தார் கடமை புதல்வரைப் பெறுவதால் தானே கழிய தேவர்கடன் முனிவர் (பூலோகதேவர்) விரும்பியது கொடுத்தல் அதாவது விருந்தினரை ஓம்பல் அல்லது அவரை யுபசரித்தலில் அடங்கு மாதலாலும், சுற்றத்தார் கடமை தன்னயங் கருதி செய்வதாலும், விருந்தோம்பல் சிறப்புடைத்து இதனை நாயனாரும் பிதிரர் கடன் புதல்வரைப் பெறுதலில் கூறி விருந்தோம்பல் கூறத்தொடங்கி அதற்குக் காரணமாகிய அன்புடைமை சொல்லி தேவர் கடனையும் விருந்தோம்பலில் அடக்கியிருக்கிறார். இதை விளக்க அடியில் காட்டப்பட்டுள்ள குறள்கள் போதும். அவை:—

இருந்தோம்பி, இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பார்
நல்விருந்து வானத்தவர்க்கு.

இவற்றில் முதலில் இல்வாழ்க்கையை ஓர் வேள்வியாகக் கூறியிருப்பதாலும் இரண்டாவதில் வானவர்களும் இவனை எதிர்பார்ப்பார் என்று கூறியிருத்தலாலும், தேவர்கள் காணப் படாமையாலும், அவர்கள் கடமை விருந்தோம்பலில் அடங்கும்.

இதன் சிறப்பு அளவிடற்கரியது. சகலத்திற்கும் முதல்வன் ஆணைப்படி உலகில் பிறந்த எவ்வுயிரும் இன்பமடைய அன்புருவமான அரன்யா தொரு கைம்மாறு நாடாமல் ஒவ்வொரு கணமும் உழைக்கிறான். அவன் நம்மிடம் காட்டும் அளவிறந்த கருணைக்குப் பிரதியுபகாரம் அன்பே. அவனிடம் அன்புடையார் என்றும் அழியாத இன்பமடையப் பிரார்த்திக்கும் அன்பே பக்தி. அப்பத்தி விருத்தியடைய உலகில் பல வேறுவழிகளிருந்தாலும் அவையாயும் இல்லறம், துறவறம் என இரு வகைப்படும். அவற்றில் இல்லறத்தின் பெருமை பின்னால் வரைய உத்தேசித்திருப்பதால் அவ்வறத்தில் நிற்பார் கடமைகளில் முக்கியமானதும், அதிமேன்மையானவழியில் மானிடர் கோரிக்கையை வேகமாய் நிறைவேற்றுவதுமான இந்த விருந்தோம்பல் என்னும் கடமையை ஈண்டு கூறுவாம். புதல்வரைப்பெறுதல் காமநுகர்ச்சியின் விருப்பால் நடைபெறுவதாதலும், சுற்றத்தார்கடமை. கைம்மாறுகருதிசெய்யப்படுவதாலும், விருந்தோம்பல் அவைபோலல்லாமல் யாதொரு கைம்மாறு கருதாமல் கடமை என்று எண்ணி அன்புருகச் செய்வதால் அன்பு விருத்தியடைந்து அன்புருவமான கடவுளது அருளைப்பெற யோக்கியதா பட்டம் அளிக்கிறது. இதனாலேயே திருவள்ளுவர்;

" விருந்து புறத்ததாத் தானுண்டல்சாவா
மருந்தெனினும் வேண்டாற்பாற் றன்று "

என்று பணித்தார்.

சாவாமருந்து கிடைக்கப்பெற்றதும் தான் சாப்பிட்டு சுகமடையாமல் விருந்தினர்க்குக்கொடுத்தால் யாதுகிடைக்கும்? அது அவ்வளவு மேலானதோ எனின், ஆம் அதாவது தான்பெற்ற சாவாமருந்தைப் புசித்தார்க்கு நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு துன்பஞ்செய்யாதாயினும். பசி, காமம், பகைவரிடத்து அச்சம்முதலிய வருத்தம். ஆனால் அதைவிருந்தினர்க்குக்கொடுத்தால் யாதொரு விதமான துன்பமுமில்லாத எம்பெருமானது பெருங்கருணை கிடைக்குமாதலால், அச்சாவாமருந்தாயினும் விருந்தினர்க்குக் கொடுத்தே புசிக்கவேண்டும்

என்றார். அப்படிக்கொடுத்து என்றும் அழிவில்லாததாய், எவராலும் அழிக்க முடியாததுமாய் உள்ள பேரின்ப மெய்திய அதிகமானை நினைவிற்கொள்ளுங்கள். அவன் தான் அரிதாயப் பெற்ற விசித்திரமான [illegible]ல்லிக்கனியைப் பசித்திருந்த பாட்டிக்குக் கொடுத்து அம்மூதாட்டியை மகிழ்வித்ததால் அவள் பின்னால்,

" மருந்தேயாயினும் விருந்தோடுண் "

என்றருளினார்.

இனி விருந்தினரை உபசரித்தலில் முக்கியமாய் [illegible]னிக்கவேண்டிய விதிகள் இரண்டு.

1. விருந்தினர் நம்மை முன்னால் அறியாதிருப்பதாலும் தங்கள் பெருமையை (மானிடப்பிறவியின் பெருமை) விட்டொழிந்து வருந்தி நம்முன் உடல்குறுகி யாசிப்பதற்குமுன், இனியசொற்களால் முகமன்கூறி சந்தோஷப்படுத்தவேண்டும்.

2. அவர்கள் சாப்பிடும்போது பக்கத்திருந்து அன்புடன் விருப்போடு சாப்பிடுவதையறிந்து சிறுகச் சிறுகப் படைக்கவேண்டும். அதிகமாய் ஒரேதடவையில் போட்டு வெறுக்கச் செய்யக்கூடாது

இவ்வழக்கம் நம்முன்னோரிடம் இருந்ததே உதாரணமாக.

அதிவீரராமபாண்டியர் தாம் இயற்றிய நளசரித்திரத்தில் (தைடதம்) நளனது நாட்டுவளமைக் கூறுமிடத்து.

" மாதர்மென் முல்லைபின்ற வான்முகை யனைய மூரல்
கோதறு கருணைத்தீம்பால் கொழுங்கனி இவற்றி னோடு
மாதுலர் யாவரென்று வதிர்குரன் முரசிற் சாற்றி
வேதியர்க் கருத்திப்பின்னர் விருந்தொடு நுகர்வ மாதோ "

என்றார். அதாவது வலியச்சென்று விருந்தினர் யாரென்று விசாரித்து அழைத்துவந்து சாப்பிடுவர் அந்நாட்டுளார்.

ஆகையால் நாம் எப்போதும் நம்மாலியன்ற அளவு விருந்தினரைச் சந்தோஷமாய் உபசரிக்கவேண்டும்.

பரமசிவன், பாப்பான்குளம்.

உத்தம நியமனங்கள்.

சகோதரர்களே!

நான் உங்களுக்குச்சில நியமனங்கள் சொல்லுகிறேன். அவைகளைத் தழுவி மாத்திரம் நீங்கள் நடப்பீராயின் எந்தக்காரியத்தில் பிரவேசித்தபோதிலும் யாதொரு இடைஞ்சலுமின்றி சுகமாகவே வாழலாம்.

(1) இன்றைக்கே செய்து முடிக்கக்கூடிய காரியத்தை நாளைவரையில் நிறுத்தாதே.

(2) உதயத்தில் எழுந்தவுடனே அன்றைக்குச் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் யோசனைசெய்து இன்னின்ன காரியங்கள் இன்னின்ன காலங்களில் செய்யவேண்டுமென்று ஒரு ஜாப்தா ஏற்படுத்திக்கொண்டு அந்த நியமனப்பிரகாரம் நடந்துகொள். இராத்திரிக்கு நீ படுக்கைக்குப் போகும்பொழுது அன்றைக்குச் செய்யவேண்டிய வேலைகளெல்லாம் சரியாய் நடந்தனவா என்று பார். இந்தப்பிரகாரம் செய்தால் ஜாப்தாவில்லாமல் வேலைசெய்கிறவனைவிட அதிகம் வேலைகள் சாதிப்பதுமல்லாமல் நியமனப்பிரகாரம் வேலைசெய்யக்கூடிய

அப்பியாசமும் ஏற்படுகின்றது. இது பின்னடிக்கு மிகவும் பிரயோஜனம் தரத்தக்க ஓர் நன்மார்க்கமாகும்.

(3) கைக்குப் பணம் வருவதற்குமுன் செலவுசெய்யாதே. பணம் வந்த பிறகு கொடுப்பதாகச்சொல்லி எந்தவஸ்துவையும் கடனாகக்கொள்ளாதே. ஒரு பதார்த்தம் உனக்கு எவ்வளவோ அவசியமாயிருந்தபோதிலும் சரியே, பணம் கொடுத்தாலொழிய அதைக் கைப்பற்றாதே. கடன்பட்டு அதிகமாய்ச் செய்வதைவிட சம்பாதித்து கொஞ்சமாய்ச் செய்வதே சிரேஷ்டமானது.

(4) மிதமீறித் தின்னாதே. இன்னும் ஒன்றிரண்டு கவளம் வேண்டியிருக்கும்பொழுதே எழுந்திரு. இதுவே ஆரோக்கியமா யிருப்பதற்கு பிரதம ஏதுவாகும்.

(5) உனக்குக் கோபம்வந்தால் பேசுவதற்கு முந்தாமலிருந்து 10-வரையில் கணக்கு எண்ணி அப்புறம்பேசு. அதிக கோபம்வந்தால் 1-லிருந்து 100-வரையில் எண்ணிமுடியும்வரை பேசாதே. அப்போது கோபம் தணிந்துவிடும்.

(6) உன்னுடையது அல்லாத எந்தப் பதார்த்தத்தையும் பெற்றுக்கொள்ளாதே. இதுவே சுகத்துக்குமார்க்கம். பிறருடைய ஒரு அரிசியையும் காணாமல் வசப்பற்றுபவனும் திருடனே. இவனுக்கும் 1000 ரூபாய் திருடினவனுக்கும் குணத்தில் யாதொரு வித்தியாசமும் கிடையாது. இப்பொழுது ஊராருடைய தூஷணைக்கெல்லாம் பாத்திரனாய்ச் சிறைச்சாலையில் அடைபட்டிருப்பவனும் முன்னொருசமயம் நல்ல பையனாய் இருந்தான். அவன் முதன் முதலில் ஒருபிடி அரிசியையாவது, ஒருஈயத்துண்டையாவது திருடஆரம்பித்திருப்பான். அந்தகாலத்தில் அதிக பணம் ஒன்றும் திருடவில்லை. அப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் திருடித்திருடி முடிவில் ஒரு பெரிய கள்ளனானான்.

(7) சதாகாலமும் உண்மையேபேசு. நீ தப்பு செய்திருந்தபோதிலும் பொய்பேசாதே. அது தப்பிதத்தை அதிகப்படுத்துகிறது. ஜனங்களெல்லாம் சத்தியவானையே பிரீதிக்கிறார்கள். தெய்வத்துக்கும் அவனிடத்தில் கருணையுண்டு. சத்தியவந்தன் எப்பொழுதும் சுகமாகவேயிருப்பான். அவன் யாருடைய முகத்தைப் பார்த்தபோதிலும் தலைகுனிய வேண்டியதில்லை.

(8) நீ செய்யவேண்டியதையெல்லாம் நன்றாய்செய், நீ படம் கட்டினாலும் நன்றாய் கட்டு. விளையாடினாலும் நன்றாய் விளையாடு. உன்னுடைய தாய்தந்தையர்கள் ஏதாவது வேலைசெய்யச்சொன்னால் அதை நன்றாகவும் முகமலர்ச்சியுடனும் செய்.

(9) உன் நாவை உன்வசப்படுத்திக்கொள். யாருக்காகிலும் ஏதாவது செய்துகொடுப்பதாக வாக்குகொடுத்திருந்தால், அதன்படி தவறாமல் செய்துகொடு. வாக்குகொடுக்கும்பொழுது ஆத்தரப்படாதே. கொடுத்தபிறகு வாக்கு தப்பாதே இப்படி செய்தால் ஜனங்களுக்கு உன்னிடத்தில் நம்பிக்கை யுண்டாகும். யாராவது உன்னை ஒன்று செய்துகொடுக்கக் கேட்டால் அது உன்னால் முடியாத விஷயமாயின், அதை அப்பொழுதே தெரிவித்துவிடு.

(10) யாதாவது ஒருவேலையை முதலில் செய்து கைகூடாதபொழுதே ஊக்கம்கெட்டு விட்டுவிடாதே. மறுபடியும் மறுபடியும் முயற்சிசெய்தால் அது எப்படியும் கைகூடும்.

" தெய்வத்தா லாகாதெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும் " என்று நினை.

S. K. திம்மையகவுண்டன், சீனியூர்.

குற்றங் கண்டித்தல்

மனித தேகத்தையுடைய ஒவ்வொருவருக்கும் ஏதாவது சிலகுற்றங்கள் இயல்பாய் இல்லாமலில்லை. சிலவீணர்கள், அயலார்மாட்டுள்ள அற்பகுற்றங்களைக் கவனித்து அதைப் பிதற்றிப் புறங்கூறி மகிழாநிற்பர்.

" மீதெடுத்த வஞ்சராகி வெகுளிசெய்தல் பிறர்பெருங்
கோதெடுத் துரைத்தனண்பு கொண்டயிர்த்தல் கொடியவெஞ்
சூதெடுத்து விழுதலுற்ற சுள்பிழைத்த லின்னவே
தீதெடுத்த நூலின்முன்பு தீயவென்று செப்பினார். "

என்னும் வில்லிபாரதச் செய்யுளை அறியமாட்டார்கள். ஆகையால் இவர்களை அறிவாளிகள் தீயவரென்று நிந்திப்பர். இதல்லாமல் ஒருவன் பிரமாதமான குற்றத்தைத் தன்மட்டுத்தானேகொண்டு நிற்கும்பொழுது, அவன்மேற் பரிந்து சிலகுணசீலர்கள் அதைக்கண்டிப்பது ஒருசிறிதாவது குற்றமாகவேமாட்டாது. கொலையஞ்சாப் பாதகனொருவனிடத்திலிருக்குங் கொலைக்குற்றத்தைக் கண்டிக்கநேர்ந்தபொழுது, " கொலையே பாவங்களுக்கெல்லாம் முதலாவதாய் நிற்பது; அது ஒருமனிதனை மிருகமாக்குவது; நரகத்தில் அதிகவாழத்திலிருக்கும் ராஜநரகங்களாகிய ரௌரவாதி நரகங்களில் வீழ்த்துவது " என்று இன்னோரன்ன சாதுரிய வசனங்களினால், ஒருவன் பெயரைச்சுட்டாது அவன் மனத்திலுறுத்தத்தக்கவிதமாகச் சொல்லுவது விவேகமாகும். இப்படி யறிவியாது " ஓ நீ கொலைப்பாதகன் " என்று நேரில் அவன் செவிகளில் வீழச்செய்வது, முன்சொல்லியபடி சொல்வதுபோல் அவன் குற்றத்தைக் கெடுக்கத்தக்க வன்மை பெறாததோடு,குற்றமுள்ளவன், சொன்னவன்மாட்டுச் சீற்றத்தைக்கொண்டு தன் குற்றத்தைப் பெருக்குவதற்கு மேதுவாயிருக்கும். குற்றமுடையவன் தன்குற்றத்தைக் குறிப்பாலுணர்த்தியவன்மாட்டு " ஓ இவன் என்பெயரைப் பகிரங்கப்படுத்தாது என்னிடத்திலிருக்குங் குற்றத்தையறிந்தும் அறியாதவன்போல் அக்குற்றத்தைப் பொதுவகையாலெடுத்து எவ்வளவு மரியாதையாய்க்கண்டித்தான், இவனிடத்திலுள்ள மனுஷீகத்தன்மை எவ்வளவு மஹத்தானது" என்று அவன்மாட்டு நல்லெண்ணங்கொள்ளாது, 'பலே, இவனாவது என்னைச் சட்டிப் பேசுவதாவது தருணத்தில் இவன் தலையைக் கிள்ளவேண்டுமென்று சித்தத்தில் திறங்கொண்டு இகலுடன் காத்திருப்பது இலகுவில் நன்னெறிக்கு வரவேமாட்டாத முழுமெளட்டீகர்களின் தன்மையாமென்க. துரியோதனன், தனது ராசசபையில் பாஞ்சாலியை வருவித்து நீதிக்கு மாறான முறைகேடுகள் அவளுக்கிழைத்தபோழ்து, அங்கல்லான், " ஐயகோ, இப்போவையின்கணுள்ள அரசரே, இச்செயல் முறையோ " வென்றிரங்கியபொழுது, அத்துரியோதனனாகிய துஷ்டனைத்தலைவனாகவுடைய அரசசபையிலுள்ள அரசர்கூட்டம் அன்னவன் கொடுமைக்கஞ்சி ஊமர்கள் போன்றிருந்தகாலை, அவ்வரசசபையிலுள்ளாரனைவரிலும், ஆண்டிலிளையனும் அறிவிற்பெரியனும் வாய்மைக் கடவுள் போன்றவனுமாகிய விகர்ணன், எம்மண்ணன் அங்கர்கோன் முதலாகிய இவர்கள்செயல் பெரிதுங் குற்றமுடைத்தன்றோவெனக் கண்டித்தனன். இவன் கூறிய மாண்டமொழியினைத் தக்கதென்றனர் சபையோர். தங்கள் குற்றத்தைக் கூறிய சொல் உடனே கன்னனின் செவியில் நாராசம்போற் பாய்ந்தது. அவன் உடனே,

" இருக்கின்ற தரணிபரினின்னறிவா லுயர்ந்தனையோ
வீராசநீதி குருக்கொண்டு முதிர்ந்தனையோ
நினையொழிந்தால் வழக்கொருவர் குறிப்பாரற்றோ

மருக்கொண்ட தொடைமுடியாய்
மொழிகென நின்னுடன் கேட்கவந்தாருண்டோ
வுரைக்கும்போ தெவருடனு முணர்ந்தன்றோ வுரைப்பது "

என்று கோபத்தோடு மொழிந்தான். இப்படித் தன்மாட்டுள்ள குற்றத்தைக் கூறிய விகர்ணன் மேல் கடுங்கோபங்கொண்ட கன்னனைப் போன்றோர் குற்றனீங்கிக் குணம் பொருந்துவதெப்படி? தன்னிடத்துள்ள குற்றத்தை ஒப்புக் கொள்பவனன்றோ குணமடைவான்.

நமதுதாமென்ன? இவனென்ன? இவனாவது நமக்குக் குற்றங்கூறிக் கண்டிக்க வருவதாவது என்று தன்னிடத்துள்ள குற்றத்தைக் கண்டபோதும், ஒருவர் எமக்கும் புத்திசொல்லவோ? நாமதைக் கேட்கவோ? என்னும் அகங்காரத்தினா லழிபவர், நன்னெறிப்பட எத்துணைப் பெருங்காலஞ் செல்லுமென்னுங் கணிதம் எவ்வளவு கடினமானது.

சிலர் ஒருவரிடத்திலுள்ள குற்றங்களைக் கண்டிக்கப்பயங்கொள்வர். வேண்டும்போதன்றிவீணில் அயலார்மாட்டுங் குற்றங்கண்டித்தலென்னுங் குணங்கூடாதென்று முன்னமே மொழிந்தாயிற்று. ஒருவரிடத்திலுள்ள குற்றம் தமக்காவது பிறர்க்காவது பிழைபயக்குமெனக்கண்டால், அப்பொழுதும் மௌனமாயிருக்குங்குணம் மனித தருமத்திற்கு விரோதமானதாகும். எத்துணைப் பெரும் வல்லமைபடைத்தவர் எனினும், அவர்செயல் உலகிற்குப் பிழையாமெனக்கண்டால், அவர் செயலிலுள்ள குற்றத்தைக் கண்டிக்கும் கடமை மனிதற்கு உரிமையாயுள்ளது. பாஞ்சாலி முறையோவென்று வினவியபொழுது, மந்தாகினியாண்மைந்தன், (கங்காபுத்திரர் = பீஷ்மர்) அவள் முறைப்பாட்டை அரசசபைக்குச் சொல்லும் வண்ணஞ்செய்தது, அவ்வவையின் கண்ணுள்ளார் யாரும் மன்னர் மன்னனிற்கு மடங்கியவர்களே யாயினும், அவர்கள் அதனாற் பயங்கொள்ளாது அவன் செயல் குற்றமுடைத்தென்று கூறுவது அவ்வரசர்களுக்குக் கடமையென்பதை யுணர்ந்தேயாமென்க. அச்சபையின் கண்ணுள்ள அரசர்கள் அவன் குற்றத்தைக்கண்டியாதொழிந்தது அவர்கள் தங்கடமையில் தவறியதாகும். இதைக்கண்ட விகர்ணன்,

" முறையோ வென்றென் றவனிதல முழுதுமுடையான் முடித்தேவி
நிறையோ டழிந்து வினவவுநீர் நினைவுற்றிருந்தீர் நினைவற்றோ
விறையோன் முனியுமென நினைந்தோ விருந்தாலுறுதி யெடுத்தியம்பல்
குறையோ கண்கண்டதுநாளுங் குலத்துப் பிறந்தோர் கூறாரோ "

" தன்னேரில்லா, நெறித்தருமன் றனவென்றுரைக்கத் தக்கவெல்லா
முன்னேதோற்றுத் தங்களையு முறையேதோற்று முடிவுற்றான்
சொன்னேருரைக்குத் தான்பிறர்க்குத் தொண்டாய்விட்டுஞ் சுரிகுழலைப்
பின்னேதோற்க் வுரிமையினாற் பெறுமோவென்று பேசீரோ "

என்று தன் தமயன் குற்றத்தைக் கண்டித்ததோடமையாது அவ்வரசர் குழாங்கொண்ட மௌனநிலைக் குற்றத்தையுங் கண்டித்த திறம் எவ்வளவு வியக்கற்பாலது.

சிலர் தம்மாற்றலில் அகங்காரங்கொண்டு, அறிவுள்ளார் குற்றச்செயல்களைக் காட்டிக் கண்டித்து உறுதிகூறினும், தம்மகங்காரத்தினால் அத்னைப்பெரிது மசட்டைசெய்து செடுவர். கன்னன் பார்த்தனைக் கொல்லவேண்டித் தன்னிடத்திலுள்ள தப்பாமற் கொல்லத்தக்க ஆசுகவாளியை அருச்சுனன் சிரசிற் கிலக்காக ஏவுஞ்சமயத்தில், அவன்தேரிலிருந்தசல்லியன், இதை நீ மார்பிலெய்: அருச்சுனன் சாரதியாகிய கண்ணன் மிகுந்த மாயமுள்ளவன் " என்று சில உறுதிகூறினன். இவன் கூறிய உறுதிமொழியை அகங்காரியாகிய அங்க

தேசாதிபதி பொருட்படுத்தாது, தன்கடைசிப்பிரயத்தினத்தில் தவறி இழிவெய்தியடங்கிய சரிதம், கர்வம்பொருந்தித் தங்குற்றத்தைச் சட்டைசெய்யாதவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

பொ. நடராஜன், மேலைப்புலோலி.

உண்மையுரை.

நம் நாட்டுச் சகோதர சகோதரிகள் கீழ்க்கண்ட விஷயத்தைச் சற்று சிரத்தையோடு வாசித்து நமது பிரார்த்தனையை யீடேற்றுவார்களென்று மனப்பூர்வமாய் நம்பியே இதனை வரைகிறோம்.

நமது நாடு கல்விக் குறைவாலேயே இவ்விதத் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறதென்பது யாவரும் அறிந்து ஒப்பிய விஷயமே. உலகில் செல்வத்திலும் பலத்திலும் கீர்த்தியிலும் மரியாதையிலும் மேலோங்கி யிருக்கும் நாடுகளிலெல்லாம் கல்வி விசேஷித்த நிலைமையிலிருப்பதும், நமது நாட்டில் கல்வி குறைவாயிருப்பதும் பிரத்தியக்ஷ அனுபவமாயிருக்கிறது.

கல்வியால் ஒரு நாடு க்ஷேமமடைவதென்றால், அந்நாட்டில் எங்கோ சிலர் மட்டும் வாசித்து உயர்தர பட்டங்களைப் பெற்றுவிட்டால், அதனாலேயே க்ஷேமமுண்டாய் விடுமென்று கருதி விடலாகாது. ஒரு நாட்டிலுள்ள ஜனங்களில் பெரும்பாலாராவது நாட்டின் க்ஷேமாபிவிர்த்திக்கு அவசியமாகிய பல சாத்திரங்களின் ஞானத்தையும் சுமாராகவாவது அறிந்திருக்கவேண்டும். உலகத்திலுள்ள பலதேசங்களின் தன்மை, ஆசாரம், நடவடிக்கை முதலியவைகளை அறிந்திருக்க வேண்டும், அவர்களெல்லாம் எவ்வித முயற்சிகளால் அந்த உயர்நிலையை யடைந்தார்களென்று உணரவேண்டும். உலகிலுள்ள எல்லா நாகரிக தேசங்களிலும் நமது நாடே கல்வியில் பின் கோடியிலிருக்கிறதென்பதை யுணர எந்த உண்மையான இந்தியன் உள்ளமும் துடிதுடித்துத் துயர்க்கடலி லாழ்ந்து விடும்.

மேற்படி உண்மை கீழ்க்குறிக்கப்பட்ட கணக்கால் நிரூபிக்கப்படுகிறது.

படித்தவர்கள் தொகை.

தேசம்.		
ஸ்வீடன்	100-ல்	97
ஜர்மெனி	,,	91
ஜப்பான்	,,	90
இங்கிலாந்து	,,	87
பிரான்ஸ்	,,	78
போர்த்துக்கல்	,,	56
இந்தியா (சுதேச இராஜ்ஜியங்கள் சேர்ந்து)	100-ல்	7
ப்ரிட்டிஷ் இந்தியா (சுதேச இராஜ்ஜியங்கள் நீங்கலாக)	,,	3

ஒரு நபர் 1-க்கு கல்விக்காக செலவழிக்கும் தொகை.

அமரிக்காவில்	13—5—7
ஐரோப்பாவில்	3—11—3
பிலிப்பைன் தீவுகளில்	1—6—10
ஜப்பானில்	0-13—3
இந்தியாவிலோ	0—0-11

நண்பர்களே! இந்த விதமாய் நம்நாட்டில் 100-க்கு 3-பேரே வாசித்தவர்கள் உளர் என்பது உங்களில் சிலர்க்கு வியப்பாய்த் தோன்றலாகும். எத்தனையோபேர் படித்துப் பட்டங்கள் பெற்றிருக்கிறார்களே யென்று தோன்றும். அந்தோ! பலகோடி ஜனங்களில் கல்வியே அறியாதவர்கள் எவ்வளவு பேரிருக்கிறார்கள் என்பதை ஊகித்துப் பாருங்கள். எத்தனையோ கிராமங்களில் கணக்கன் தவிர மற்ற யாவரும் எழுத்தறியாதவர்களாகவே யிருக்கிறார்கள். பாமர ஜனங்களுக்குக் கல்வியறிவு உண்டாயினன்றி நாடு க்ஷேமமடையாது.

அந்தோ, நமது நாட்டுப் பாமர ஜனங்களுக்கு முதலாவது அரசன்-குடிகள் இவர்களுடைய சம்பந்தமென்ன, கடமைகளென்ன வென்பதே தெரியாது. உலகில் இந்தத்தேசம் இங்கிருக்கிறது என்று தெரியாது. நேற்று ஜர்மானியர் டில்லியைப் பிடித்துக் கொண்டார்களென்றால் சத்தியமென்றே நம்பிக் கொள்வார்கள். துரைத்தனம் இன்னமாதிரி நடக்கிறது என்பது அடியோடு தெரியாது. தாய்ப்பாஷை மட்டும் கற்றவர்களில் பெரும்பாலார், கடிதம் எழுதவும் சிற அளவாய்க் கணக்கு வைக்கவும் மட்டுமே அறிவார்களன்றி மற்றபடி மேற்கண்ட விஷயங்களிலெல்லாம் அவர்களும் படிக்காதவர்களைச் சார்ந்தவர்களே. சிலர் தாய்ப்பாஷையில் இலக்கண இலக்கியங்கள், ஆன்மார்த்த நூல்கள் ஆகிய இவைகளை வாசித்திருக்கிறார்கள். இவர்களும் மற்ற விஷயங்களில் கல்லாதவர்களைப்போலவே தான்.

அந்தோ, இவ்வாறிருக்கும் நம்மவர்களுக்கு இப்போதவசியமான உலக ஞானத்தை யெவ்வாறு போதிப்பது? பல விஷயங்களின் ஞானத்தையும் போதிக்கத்தக்க ஒரே நூல் எது இருக்கிறது? அதற்கு ஒரே வழிதான் உண்டு. மேலோங்கி வந்திருக்கும் ஒவ்வொரு நாடும் அந்த வழி சென்றே மேல் நிலைமை அடைந்திருக்கிறது. அது எவ்வழியெனில் பத்திரிகைகள், சஞ்சிகைகளை அபிவிர்த்தியடையச் செய்வதே.

அது ஒன்றினாலேயே பாமர ஜனங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமான பல ஞானங்களையும் பெறலாகும். பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நமது நாட்டில் மிகக்குறைவே. அதிலும் அவற்றை யாதரிப்போரும் அவற்றின் பயனை யுணர்ந்து வாசிப்போரும் மிகக்குறைவே யென்பது பின்வரும் அட்டவணையால் தெற்றென விளங்கும்.

1914-வருஷத்தில் லண்டனில் நடந்த தினசரி பத்திரிகைகளுக்கு சந்தாதாரின் தொகை.

1.	டெயிலி கிரானிகில்	3,08,777
2.	டெயிலி மெயில்	8,14,912
3.	,, எக்ஸ்பிரஸ்	4,00,000
4.	,, மிர்ரர்	9,60,000
5.	,, ஸ்கெச்	6,93,900
6.	,, டெலிகிராப்	1,83,393
7.	,, லண்டன் டைம்ஸ்	1,40,000

இப்போது பத்தாயிரக் கணக்காக உயர்த்திருக்கிறதெனத் தெரிகிறது.

இந்தியா.

கேசரி பத்திரிகைக்கு	50,000 மேல்
இந்தியாவில் இந்தியன் எக்ஸ்பிரஸ் (வாரப்பத்திரிகை)	10,000
இங்கி. டிட்பிட்ஸ் (வாரப்பத்திரிகை)	10 லக்ஷம்
ஜப்பான் ஓரியண்டல் எகனமிக்ஸ் (வாரப்பத்திரிகை)	50,000
ஆஸ்திரேலியா ப்ளூனிப் க்வலீயர் (வாரப்பத்திரிகை)	ஒரு லக்ஷம்.

நண்பர்களே! இப்போது பத்திரிகைகள் அதிகமாயிருக்கிற நாடுகளெல்லாம் மேலோங்கியிருக்கின்றன வென்பது நன்றாய் விளங்குகிறதல்லவா? பத்திரிகைகளின் பயனைப்பற்றி அறிவாளிகள் பன்முறை வற்புறுத்தி விளம்பரம் செய்திருந்தும், நம்மவர்கள் அதைக் கவனிக்காமலே, பயனற்றவைகளும், ஊக்கத் தீமையையும் வீண்செலவையும் உண்டாக்கத் தக்கவையுமாகிய நாடகம், பயாஸ்கோப், கேளிக்கை இத்தகையவற்றில் பொருளைச் செலவிடுகிறார்களே யன்றிச் சொல்ப கட்டணம்கட்டிப் பெரிய நன்மையையடையும் வழியில் செல்லப் பிரியமற்றவர்களாகவே யிருக்கிறார்கள்.

பத்திரிகைகளில் விஷயங்கள் எழுதப்படுவதேன்? யாவரும் வாசித்து அதன்படி நடந்து நன்மை யடைவதற்கே யன்றி "நல்லோர்கள் புல்லோர்க்குச் சொன்னப் பொருளெனப் போயிற்றம்மா" என்று (தாடகையின் தேகத்தில் ஊடுருவிச்சென்ற இராமபாணத்திற்கு ஒப்பிட்டு) கம்பர் கூறியதுபோல் ஒரு செவியிலேற்று மறுசெவியில் விட்டுவிடுவதற் கல்லவே. அப்படியாயின் பத்திரிகைகளை வாசிப்பதால் பயனை யடைவது யாங்ஙனம்?

அந்தோ, சகோதர சகோதரிகளே! மேற்கூறப்பட்ட விஷயங்களைச் சிந்தனையில்வைத்து சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வாங்கி வாசிக்கும்படி உங்கள் நண்பர்களைத் தூண்டுங்கள். கல்லாதவர்களைக் கல்வி கற்றுக்கொள்ளும்படி தூண்டத்தக்க பல விஷயங்கள் பத்திரிகை சஞ்சிகைகளில் வெளியாகின்றன. அவற்றைப் பிறர் வாசிக்கக் கேட்டவுடனே அடடா! நாம் கட்டாயம் வாசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்." என்று ஒருவனுக்குத் தானே யறிவுதிக்கிறது. கடவுள் நமது நாட்டின் க்ஷேமத்திற்காக நம்மவர் இதில் சிரத்தை யெடுத்துக் கொள்ளுமாறு அருள்புரிய வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். "உண்மை."

ஊழும் ஊக்கமும்.

ஊழாவது இருவினையின் பயன்களும் அந்தந்த வினையை முன்பு செய்தவன் யாவனோ அவனையே சென்றடைவதாகிய நியதி. அதாவது நாம் முன்பு செய்த பாபபுண்ணியங்களில் இப்போது அனுபவிக்க வேண்டிய வினைக்கு ஊழ்வினை அல்லது ஊழ் எனப் பெயராம். ஊக்கமாவது முயற்சியாகும். அறிவுடையோர் எல்லாம்ஊழின்படி நடக்குமென்றெண்ணி முயற்சிசெய்யாமலிருக்க மாட்டார்கள். யாரும் ஊழ்வினையைப் பார்ப்போ மென்று காற்றுக் கெதிரே விளக்கேற்ற மாட்டார்கள். காற்றின்முகத்தே விளக்கை யேற்றினால் அஃது அணைந்துபோகும். ஊழ்வினையினால் அவிந்து போயிற் றென்று எண்ணுவாரில்லை. காற்று மோதக் கூடாத இடத்து ஏற்றுவர். அதுபோல முயல்வதில் தடைப்பட்டால் அஃது ஊழ்வினை யென்னப்படாது. தடைப்படாத வழியை முதலில் ஆலோசித்து அப்பால் முயற்சி செய்யவேண்டும்.

> முதிர்தருதவமுடை முனிவராயினும்
> பொதுவறுதிருவொடு பொலிவராயினும்,
> மதியினராயினும் வலியராயினும்
> விதியினையாவரே வெல்லு நீர்மையார்.

என்று கூறப்பட்டிருப்பினும், அறிவுடையோர் அதைக்கூறிக்கொண்டு, முயற்சியற்றுச் சோம்பித் திரியமாட்டார்கள்.

> ஊழையு முப்பக்கந் காண்ப ருலைவின்றித்
> தாழா துஞ்ற்று பவர்"

என்றபடி ஊழை மதிக்கமாட்டா ராதலால் முயலாது வைத்து ஊழ்த் திறத்தது என்னார்.

தாங்கள்செய்யும் நற்காரியத்திலே (அறிவுடையோர் நற்காரியத்தைச் செய்வாரே யன்றித் தீயகாரியத்தைச் செய்யார்) முயற்சியா யிருப்பவர்கள் விடாது தனுவிற் செயுமுயற்சி மேன்மேற் பொருளை மிகவளர்க்கும் ஆதலால் அதனைச் செய்து முடிப்பதாலுண்டாகும் உடம்பின் சிரமத்தைப் பாரார்.

எடுத்த காரியஞ் செய்யுமிடத்து இடையிற் பசிவந்த தென்று செல்ல மாட்டார்கள். பசிவந்த தென்று கைவிட்டுச் சென்றால் மறுபடியும் சில அடிமுதற் செய்யவு நேருமாதலால் தமது பசியையும் நோக்கார்; கண்ணுறங்கவு மாட்டார்கள். இடையில் யாரேனும் ஊறுசெய்தாரென்று தாமெடுத்த காரியத்தை நிறுத்திவிட்டுத் தீமைசெய்தாரை எதிர்த்து நிற்கமாட்டார்கள். எதிர்த்து நிற்பின் மேற்கொண்ட காரியம் சோர்வுபடுமாதலால் எவ்வெவர் தீமையுமேற் கொள்ளார். இதுபற்றியே தான்.

‘ மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார் ’

என்றார் பெரியோர்.

ஊழ்வினையிருந்தும் தான் தப்பித்துக்கொள்ளும் பொருட்டே ஒரு முயலானது மிருகேந்திரனாகிய சிங்கத்தை ஓர் பாழுங் கிணற்றிற்குக் கூட்டிப்போய் அதன் நிழலை வேறோர் சிங்கம் என்று எண்ணும்படிசெய்து அதனை உயிர் துறக்கும் வண்ணம் செய்தது முயற்சியின் காரணமேயன்றோ !

M. S. வேங்கட்ராம சர்மா இளசை எட்டியாபுரம்.

குறிப்பு—ஊழால் இன்னது கிட்டும் இன்னது கிட்டாதென உணரக் கூடாததால் ஆன்றோர் தம்மனச்சாட்சிக்கு விரோதமில்லாது பாபமற்ற வழியில் தம்மாலான முயற்சியைச் செய்தே தீர்வர்.

எல்லாம் அவன் செயல் என்று தற்செயலற்றுச் சாக்ஷிமாத்திரமாயிருந்து பிராரத்துவ வினைப்போகத்தை அநுபவிப்பது மட்டுமா யிருப்போர் எல்லா மவன் செயலென்று கண்டு தனக்கென்று ஒருபற்று மில்லாதவர்களாய் அருள் நாட்டத்தி லிருப்பவர்களாகிய மகான்களேயாவர். அவர்கள் அனுபவத்தைத்தான் தாயுமானவர்,

“ வாரா தெலா மொழிக வருவன வெலாமெய்த
மனது சாட்சிய தாகவே
மருவநிலை தந்ததும் * * * ”

என்று கூறியுள்ளார்.

ஏனையோர் சோம்பித் திரிந்துகொண்டு “ வினையிருந்தால்வரும் ” என்று கூறுவதும்,வாராவிட்டால் வினையின்மேல் பழிபோடுவதும், சுயநலகாரியங்களில் மட்டும் முயற்சிசெய்து ஜெயமடைந்தால் தன் சாமர்த்தியத்தினாலேயே யடைந்ததாய்த தன்னைப் புகழ்வதும், தோல்வி யடைந்தால் வினைப்பயன் என்று வினையின் தலைமேல் போடுவதும், தமது மனச்சேட்டையின்படி துர்க்காரியங்களைச்செய்து அதனால் தீங்கு நேரிட்டால் அதுவும் பிராரத்துவ வினையென்று பழிபோடுவதுமாய் நடந்து கொள்கிறார்கள்.

ஆன்றோர் மேற்கண்டபடி முயற்சிசெய்து கைகூடாவிட்டால் வினையில்லையென்றும், கைகூடினாலும் அதுவும் ஆண்டவனருளென்றும் கூறுவார்களேயன்றித் தம்மால் நடந்ததாய்த் நினைக்கவேமாட்டார்கள்.

பிராரத்துவவினையில் மூன்றுவிதமுண்டு.

1. இச்சாபிராரத்துவம், 2-அனிச்சாபிராரத்துவம், 3-பராஇச்சா பிராரத்துவம்.

(1) இச்சாபிராரத்துவம் என்பது வினையின் தூண்டுதலால் மனம் ஒன்றை நாட நாம் அதற்கு முயற்சிசெய்து அதைப்பெற்று அனுபவிப்பது.

இதில் தான் பிராரத்த வினையாகிய ஈஸ்வரச்செயலா அல்லது ஜீவச் செயலா என்ற சந்தேகமுண்டாவதும், சிலர் அறியாமையால் “ ஈசுவரன்றான் யாவற்றையும்செய்ய நம்மைத் தூண்டுகிறார், எல்லாம் அவன்செயலாயிருக்க நமக்கேது பாபம் என்று கூறுவதும். ஆயினும் இரண்டிற்கும் வித்தியாசமுண்டு. எப்படியெனில்:—

பிராரத்தவினைப்படி செல்லும் இச்சை துர்விஷயங்களில் செல்லாது. அதாவது அந்த இச்சையால் செய்யும் முயற்சியிலும் அந்த அனுபவத்திலும் பாபம் உண்டாகாது. அதுமனசாட்சிக்கும் விரோதமாயிராது. ஏனெனில் பிராரத்தவினை ஜடமாதலால் ஒன்றை யனுபவிக்கச்செய்யுமே யன்றி இன்னொரு வினையைச் செய்யும்படி தூண்ட அதற்குச் சக்தியில்லை.

அதோடு பிராரத்தவினைப்படி ஒன்றை யிச்சித்தால் அது சுலபமாய்க் கிட்டிவிடும். சில சமயங்களில் மனதில் அவ்விச்சையுண்டாகி, அதுவாக்கால் வெளிப்படாமலிருக்கும்போதே, இச்சிக்கப்பட்ட வஸ்து கைக்கெட்டிவிடுகிறது. அதாவது நாம் நினைத்துக்கொண்டிருக்கையிலேயே யாராவது அதைக் கொண்டுவந்து வலியக்கொடுக்கிறார்கள். அல்லது இன்னவஸ்து விருக்கிறது வேண்டுமா ? என்கிறார்கள். அப்போது நாம் “ நானும் இப்போதுதான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். அதற்குள் நீங்களே கேட்டுவிட்டீர்கள்.” என்கிறோம். இது யாவர்க்கும் அனுபவமான விஷயம். இந்தப் பிராரத்த இச்சை தற்செயலற்ற ஞானியையும் விட்டதல்ல. அலையு மனத்தை யகத்தடக்கி, தற்செயலற்று எல்லாம் அவன் செயலே யென்று விட்டுவிட்டு, சாக்ஷிமாத்திரமாய்ப் பிராரத்துவத்தைக் கழித்துக்கொண்டிருப்போர்க்கு உண்டாகும் இச்சைகளனைத்தும் பிராரத்த வினையே.

நமது செயலால் நேரிடும் விஷயங்களில்தான் கன்மம் உண்டாவது.

(2) அனிச்சா பிராரத்துவம் என்பது நாம் இச்சியாது அன்னியர் கோரிக்கையால் நாம் ஒப்பி அனுபவிப்பது.

(3) பராஇச்சாபிராரத்துவம் என்பது நாம் இச்சியாமல், நமக்குச் சம்மதமில்லாமலுமிருக்க, அன்னியருடைய பலவந்தத்தால் நாம் அனுபவிப்பது. அது வழியில் கள்ளர் முதலியவர்கள் நம்மை யடித்துத் துன்புறுத்தல், முதலியவை போன்றது.

இவ்வாறு நமது இச்சையால் அனுபவிக்கும் பிராரத்துவமுமிருப்பதால், நாம் முயற்சி செய்யவேண்டியது அவசியமென்பது நன்கு விளங்குகிறது.

ஆகையால் மனசாட்சிக்கொப்பக் குற்றமற்றவழிகளில் நாம் செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்தே தீரவேண்டும். ஆனால் பலனளிப்பது ஈசுவரன் என்று கருதவேண்டும். முயற்சி செய்வதற்குமட்டும் நாம் பொறுப்பாளியே யன்றிப் பலனுக்கு நாமல்ல. இதுவே ஆன்றோர் துணிபு. பத்திரிகாசிரியர்.

மாணவர் பக்கம்.

மாணவர்களாகிய நண்பர்களே! இச்சஞ்சிகையில் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி யுங்களுக்கே நேராய்க் கூற உத்தேசித்திருக்கிறோம். உங்களில் மிக்க வாலிபமானவர்களுக்கு இவ்விஷயத்தில் இப்போது சிரத்தை தோன்றுவது சற்றுக்கஷ்டமே. ஆயினும் அதனாலேயே நீங்கள் இதையசட்டை செய்து விடலாகாது. நாம் இவ்விஷயத்தை நம்மால் கூடியவரைத் தெளிவாகவே கூறுகிறோமாதலால் ஒருமுறைக்கு இருமுறை வாசித்தால் கொஞ்சம் சூக்ஷ்மபுத்தி யுடையோர்களுக் கெல்லாம் விளங்காமற்போகாது. இதை வாசித்துணர்ந்து உங்கள் பெற்றோரிடம் இதிலுள்ள விஷயங்களைக்கூறி அவர்களோடு இதைப்பற்றி நீங்கள் கலந்துபேசவேண்டும் என்பது நமது கோரிக்கை.

சகோதரர்களே! நீங்கள் அப்படிச் செய்யாவிட்டால் நாம் எழுதியதற்கும் நீங்கள் சஞ்சிகைவாங்கி வாசிப்பதற்கும் ஒருபயனுமில்லாமற் போய்விடும். நீங்கள் அப்படி யசட்டைசெய்யாது இதைக் கவனமாய் வாசித்தறிந்து நமது கோரிக்கைப்படி நடந்துகொள்வீர்க ளென்று பூரணமாய் நம்பியே இதைக் கூறத் தொடங்குகிறோம்.

இப்போது நீங்களனைவரும் வாசித்தபோதிலும், அவரவர்கள் நிலைமைக்குத்தக்கபடி சிலர் 3-4-5 வகுப்புகள் வரையில் வாசித்து நின்றுவிடுவீர்கள். சிலர் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறுவீர்கள். சிலர் இன்டர்மீடியேட் சிலர் பீ. ஏ. வரையில்தேறுவீர்கள். "இப்படியவரவர்கள் படித்து முடிந்தபின் என்ன செய்யப்போகிறீர்கள்" என்று ஒருவன் கேட்டால் அதற்கென்ன சொல்வீர்கள்? பெரும்பாலும், "உத்தியோகம் செய்யப்போகிறோம்" என்று கூறுவீர்கள்.

சகோதரர்களே! யப்படிக்கூறவேண்டாம்; ஏனெனில் உத்தியோகம் என்றபதத்திற்குத் தொழில் என்று பொதுவான அர்த்தமிருப்பதாய்க் கருதப்பட்டாலும், உலகவழக்கில் சம்பளம் வாங்கிக்கொண்டு ஒருவரிடம் தொழில் செய்வதற்கே உத்தியோகம் என்று கூறுகிறார்கள். அதாவது சேவகம்; ஒருவரிடம் கூலிபெற்றுச் சேவிப்பது. ஆகையால் மனிதன் செய்யும் பல தொழில்களுள் உத்தியோகம் ஒன்று. ஆகையால் உத்தியோகம் செய்வதற்கே யாவரும் வாசிக்கிறோம் என்று கருதுவது தப்பிதம்.

அப்படியானால் படித்து முடிந்ததே என்ன செய்யப்போகிறோம், என்று கூறுவது?"

"உத்தியோகம் செய்வதும் வேறு தொழில்களைச் செய்வதும் எதற்காக? எதைச் சம்பாதிக்க இத்தனை தொழில்களையும் மனிதர் செய்கிறார்கள்?"

"பணம் சம்பாதிக்க."

"ஆ! அப்படியானால் படித்து முடிந்ததே யென்னசெய்யப் போகிறாய்?"

"பணம் சம்பாதிக்கப் போகிறேன்."

இப்போது நாம் உங்களுக்குக்கூறுவது என்னவென்றால், இப்போதே நாம் எந்தவழியில் பணம் சம்பாதிக்கவேண்டும் என்பதை தீர்மானம் செய்துகொண்டு, பிறகு அந்தவழிக்கு எத்தகைய கல்வி கற்கவேண்டுமோ அதைக் கற்றுக் கொள்ளவேண்டு மென்பதே.

இப்போது எந்தவழியில் பணம் சம்பாதிப்பது மேலானது என்று பார்ப்போம்.

"ஏன்! அமாவாசை நெருங்கிய இரவுகளில் பணக்காரர் வீட்டில் புகுந்து

கொள்ளை யடித்துக்கொண்டு வந்துவிடுவது சுலபமானவழி யென்று எனக்குத் தோன்றுகிறது.

"ஐயோ! அதனால் அகௌரவமும் இராஜதண்டனையும் கிடைக்குமே."

"ஓகோ! அதுவும் மெய்தான். வீட்டுக்காரர்கள் விழித்துக்கொண்டால் பிடித்துக்கொள்வார்கள். அப்படியானால் யாராவது தனியே செல்லும் வழிப்போக்கர்களை யங்கேயே கொன்றுவிட்டு அவர்களிட முள்ளவற்றை யெடுத்துக்கொண்டு வந்துவிட்டால் யாரும் பார்க்கமாட்டார்கள். அகப்பட்டுக்கொள்ளவுமாட்டோம். அதுவே சுலபமானவழி."

"அடடா! அது பெரும்பாவமாயிற்றே. கடவுள் தண்டனை தப்பாதே."

"ஓகோ! அதுவும் உண்மையே. அப்படியானால் அகௌரவமும் பாபமும் இல்லாதவழியில் பொருள்சம்பாதிக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அவற்றோடு நான் இன்னொன்று கூறுகிறேன். அதாவது அந்தவழி அதிக பொருள் சம்பாதிக்கத் தக்கவழியாகவு மிருக்கவேண்டும். ஆகவே,

"எந்தவழியில் அகௌரவமும், பாபமுமின்றி அதிகபொருள் சம்பாதிக்கக்கூடுமோ, அந்தவழியில் பிரவேசிக்கவேண்டும் என்று விளங்கிவிட்டது."

இனி அது எந்தவழி யென்பதை ஆராய்ந்தறிவோம். (தொடரும்.)

சீடன்.

கடிதம்.

ஐயா, நமது ஆனந்தபோதினியில் சின்னாட்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள 'அறிவு' என்னும் வியாசத்தைப் பற்றி சென்ற மாதத்துச் சஞ்சிகையின் 339-ம் பக்கத்தில் நண்பர் எ. எம். சங்கர நாராயணன் அவர்கள் எழுதியுள்ளதைக் கண்டேன். நேர்ந்த இச்சம்பவத்திற்கு இச்சமயம் காரணங் கூறுதுவாளா விருப்பேனாயின் என்மீது பலருக்கும் ஆசங்கை ஏற்படுமாகையால், என்பால் விளைந்த விஷயத்தை வெளியிடத் துணிந்தேன். அன்னவர் கூறிய வண்ணம் அவ்வியாசத்தினை எழுதி ஈற்றில் அவ்வியாசம் இன்னாரது உபந்நியாசத்தினின்றும் சுருக்கித் தொகுத் தெழுதப்பட்ட தென்றும் விபரத்தைக் குறிப்பிடுவோ மென்னுங் கருத்தினைக்கொண்டு எழுத முற்பட்டு முன் சிறிதுபாகத்தை யனுப்பலாயினேன். பின்னர் அத்தொடர்ச்சியை யனுப்பி விபரத்தை வெளியிடவேண்டியிருக்க எதிர்பாராது நேர்ந்த சில அசந்தர்ப்பங்களால் அவ்விஷயத்தை யனுப்புவதற்குத் தடைபட்டமையின், இதுவரை இன்னார் எழுதியதி னின்றும் எடுத்தெழுதப்பட்ட தென்பது வெளியாகாமலிருந்தமையால், நேர்ந்த இச்சம்பவத்தைப்பற்றி மிக்கவிசனிக்கிறேன். மேலும், என்னால் 2-வது தொகுதி 64-வது பக்கத்தில் வெளியிடப் பட்டுள்ள 'அடக்கமுடைமை, என்னும் விஷயமும் மேலே நண்பரது உபந்நியாசத்தினின்றும் விரித்தெழுதப்பட்ட தென்பதை நேயர்கள் அறிவார்களாக. ஈண்டு அவ்விஷயங்களின் தொடர்ச்சியை யனுப்புவதற் காவசியமில்லையென விடுத்தனன். இனியும் யார்மாட்டும் இத்தகைய விபரீத சம்பவங்கள் விளையாமற்படிக்கும், என தன்பன் ஆனந்தன் நீடுழி நிலைபெற்று என்றும் குன்றா மகிழ்ச்சியோடு நந்தமிழகத்தோருக்குப் பெரிதும் பயனளித்து வரவும் அருள்புரியுமாறு எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றேன்.

என். வேங்கடரமணன்.

குறிப்பு:—நமது நண்பர்மேல் கூறிய உண்மையான காரணங்களால் அவர் அவ்விஷயம் இன்ன புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டதென்பதைக் குறிக்காது

விட்டது தற்செயலாய் நேர்ந்துவிட்டதென நன்கு விளங்குகிறது. மேலும் அவர் களங்கமின்றி நடந்த விஷயங்களையும் சந்தர்ப்பத்தையும் உள்ளபடி கூறி விட்டாரென்றும் வேறெவ்வித காரணம் பற்றியும் வேண்டுமென்று மறைக்க வில்லையென்றும், அதோடு சுபாவமாய் அப்படிப்பட்ட கள்ளச் சிந்தையுடையவ ரல்ல ரென்றும் நமக்குப் புலப்படுகிறது. ஆகையால் இச்சம்பவம் நேர்ந்ததற்கு நாம் முன்னிலும் அதிக விசனமடைகிறோம். (பத்திரிகாசிரியர்.)

சில பழமொழி வாக்கியம்.

(1) செல்வத்தினும் சிறந்தது ஞானம், ஞானம் உன்னைக்காக்கும் செல்வத்தையோ நீ காக்கவேண்டும். செலவினால் செல்வம் குறையும் ஞானம் கூடும்.

(2) உற்றசிநேகிதன் உயிர்க்கு அமிர்தம்.

(3) இருவகை அறிவுண்டு. ஒன்று இயல்பாய் வருகின்றது மற்றொன்று கல்வியினால் கிடைக்கின்றது. முந்தினது இல்லாவிட்டால் பிந்தினது துவியர்த்தம். கண்கள் ஒளியற்றவனுக்கு சூரிய வெளிச்சம் என்னபலன்.

(4) வாழ்விலே திருந்தாதவன் தாழ்விலும் திருந்தான்.

(5) இயற்கை யழகே இலேசான ஆபரணம்.

(6) நன்மையை நாடுகின்றவன் மூன்று விஷயங்களை அநுட்டிக்கவேண்டும். பிரியவாக்குடன் கூடிய கொடை, கர்வமில்லாத ஞானம், பொறுமையோடு கூடிய வீரம்.

(7) குற்றமுள்ளவனைத் தண்டிக்காவிட்டால் குற்ற மற்றவனுக்குத் தீங்கிழைத்ததை யொக்கும்.

(8) கெட்டகுணமுடையவனிடமுள்ள கல்வி அவனுக்குப் பயனளிக்காது. குருடன் கையிலிருக்கும் தீபம் அவன் மற்றவர்க்கு வெளிச்சம் காட்டியும் தனக்குப் பிரயோஜன மில்லாததுபோல்.

(9) மட்டான போஜனம் மனதிற்கு மகிழ்ச்சி.

(10) பொறுமையுடைமை புண்ணியத்திற்கு வேர்.

K. R. கணபதி பிள்ளை, துணியை.

க்ஷயரோகம்

(354-ம் பக்கத்தொடர்ச்சி.)

முன்னோர்கள் விதித்துள்ள சிலவிதிகளானவை. க்ஷயரோகமானது உண்டாகாதிருக்க ஏதுவானதென்று தெரிகின்றது. அதாவது குரல்வளையை பரிசுத்தமாய் வைத்துக்கொள்ள சுத்தமானகாற்றில் வீற்றிருக்கவும் (சௌசம், ஆசமனியம், ஸ்நானம், பிராணாயாமம், சந்தியாவந்தனம் என ஐந்துவித சிகிச்சைகள்) சொன்னார்கள். இவ்வைந்துவித சிகிச்சைகளும் மோக்ஷத்தைத் தருவதாக அநேகர் நினைக்கின்றனர். அது தவறு. இச்சிகிச்சைகளால் சரீரம் பலமுடையதாகவும் நீடித்த ஆயுளுள்ளவர்களாகவும் உச்சீவிக்கலாம். எப்படியெனில் சௌசம் என்றால் அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்ததும் கொஞ்சதூரம் நடந்து சல ஸ்பரிசத்திற்குப் போனவுடன் லிங்கத்தின்மேல் குளிர்ந்த சலம் தொட்டுதொட்டு வைத்தல். இதனால் கபாலத்திலுள்ள சகல உஷ்ணங்களும் (ஸ்பைனல் கார்ட்டு என்னும்) முதுகெலும்பின் துவாரமுழுவதும் ஏற்பட்டுள்ள

சகல இரணங்களும் ஆற்றப்படும். இதைமேல்நாட்டாரும் அங்கீகாரம்செய்திருக்கின்றார்கள். இதனை வேறுவிதமாய்க் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அதாவது (சிட்ஸ்பாத்) ஒருபாண்டத்தில் குளிர்ந்தசலம் வைத்துக்கொண்டு அதில் தனது இலிங்கத்தை நனைத்துக்கொண்டு நுனியின் இதழ்களை ஒருதுணியால் தேய்த்து வந்தால் அதனால் மேற்சொல்லிய வியாதிகள் போவதாய் மேல்நாட்டார் சொல்லி வருகின்றார்கள். இதன்விபரம் (ஓர்விஸ்கூனி என்பவரின் சைன்ச் ஆப் ஈலிங்) என்னும் புஸ்தகத்தைப் பார்க்கவும். இரண்டாவது ஆசமனியமாவது, ஒருகுளத்தருகில்போய் தன் அவயவங்களைச் சலத்தில்நனைக்காமல் கையில் ஒரு உத்தரணி சலம் எடுத்து உட்கொள்ளவேண்டும். இதையுட்கொள்ளும்போது சில மந்திரங்களும்சொல்லிவைத்தார்கள். அதாவது முதல்உட்கொள்ளும் சலத்தால் என்னுவினிடத்திலுண்டான சகலதோஷங்களும் பரிசுத்தமடையவேண்டும் என்று மந்திரத்தின் அர்த்தமும் உட்கொள்ளும் சலமானது நாவிற்கு மேற் நனைக்கமுடியாத அளவும் சாப்பிடச்சொல்லியுள்ளது. இரண்டாவதுகண்டம் மூன்றாவது இருதயம் நான்காவது ஜீரணப்பை ஐந்தாவது நாபிக்கமலம் ஆறாவதுகபாலம் முறையே மந்திரங்களும் அவ்வவ்ஸ்தாநங்களையே குறித்துச்சொல்லும். இப்படிச் செய்யும்ஒரு வித சிகிச்சையினால் சகல ரோகங்களும் நிவர்த்தியாய் விடுகின்றன. இதனை மேல்நாட்டார் வேறு விதமாய்க் கையாண்டு வருகின்றார்கள். அதாவது டாக்டர் அப்பல்லோ என்னும் ஒரு நிபுணரால் கண்டுபிடிக்கப்பட்ட சாஸ்திரத்தில் சொல்லும் விதிகளாவன—கொஞ்சகொஞ்சமாய் சலத்தைக் காலையில் 1-குவளை சலம் உட்கொண்டால் சரீரத்திலுள்ள சகலவியாதிகளும் நீங்கிவிடுவதுமன்றி வியாதிகள் வரவொட்டாமலும் தடுக்கின்றதாய்ச் சொல்லியிருக்கின்றார்கள். மூன்றாவது ஸ்நாநம் செய்யும் விதிகளில் முக்கியமாய் குளம், ஆறு, கிணறு இவற்றில் ஸ்நாநம் செய்யவேண்டும். அச்சமயம் இடுப்பில் ஒருதுண்டு இருத்தல்வேண்டும். ஸ்நாநம் செய்தவுடன் இடுப்பிலுள்ள ஈரவேஷ்டியால் சரீரத்தை நன்றாய்த் தேய்க்கவேண்டும்; அப்படித் தேய்ப்பதால் நமது சரீரத்திலுள்ள கெட்டநீர்கள் வெளிவரவொட்டாமல் மயிர்க்கால்களில் அடைபட்டுள்ள அழுக்கை வெளிப்படுத்தும் ஈரவேஷ்டியன்றி வேறுவித வஸ்திரம் உபயோகித்தால் பருத்தியின் அணுக்கள் மயிர்க்கால்களில் சிக்கி யவசியம் இடுப்பில் இருப்பது நன்று என்று சொன்னார்கள். மேல்நாட்டார்கள் ஒருதொட்டியில் சலம்கொட்டி அதில் உட்கார்ந்துகொண்டு ஒரு ஈரக்குட்டையால் சரீரத்தைத் தேய்த்து மயிர்க்கால்களிலுள்ள அழுக்குகள் வெளிகிளம்பும்படி மீண்டும் சரீரத்திற்குள் எிருக்கும் அழுக்குகளும் வெளிவரும்படியாய் தேய்த்து ஸ்நாநம் செய்கின்றார்கள்.

(தொடரும்)

டாக்டர். எம். மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை—நாவல்

(359-வது பக்கத் தொடர்ச்சி)

அம்மாது, சரி, துரிதமாய் என்னோடு வாவென்று முன்னே நடக்கலுற்றாள். இருவரும் இருண்ட வழியின் மூலமாய்ச் சென்றார்கள். அவ்வழி இரண்டு மூன்று முறை வலமும் இடமும் திரும்பித் திரும்பிச் சென்றது. சற்று நேரத்திற்குள் இராணியின் படுக்கை யறைக்குள் நுழைந்தார்கள். அம்மாது அங்கிருந்த மேஜையின் ஓர் மூலையை அரியநாயகிக்குக் காட்டி "இதோ இந்த விடத்திலிருந்து தான் நீ கணையாழியை யெடுத்துச் சென்றது. மறவாமல் நினைவில் வைத்துக்கொள்" என்றாள்.

உடனே யிருவரும் அதைவிட்டு இன்னும் இரண்டொரு அறைகளைக் கடந்து சென்றபின் அம்மாது அரியநாயகியை நோக்கி "என் அறை பக்கத்தி விருக்கிறது. நீ சற்று இங்கிரு, நான் நொடியில் வழி சரியாயிருக்கிறதா வென்று அறிந்துகொண்டு வருகிறேன். கதவைத் தாளிட்டுக்கொள். யார் தட்டினாலும் திறவாதே. மெதுவாய் விரலால் மூன்றுதரம் தட்டினால் நான்தான் என்று அறிந்து திற" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அம்மாது அவ்வாறே ஐந்து நிமிடங்களில் திரும்பிவந்து "இராணி போசனம் செய்துகொண்டிருக்கிறாள் ஒன்றும் பயமில்லை. நீ வரும்போது முன் அறையில் வைத்துவிட்டுவந்த உன் சால்வையும் குதிரைச் சாட்டியும் இதோ எடுத்துவந்து விட்டேன். இப்போது நான் கூறுவதைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டு தைரியத்தோடு நடந்துகொள்வாயாகில் ஒரு பயமுமில்லை. இதோ இடப்பக்கம் இருக்கிறதே தாழ்வாரம், இவ்வழியே சென்றால், இதன் கோடியில் ஒரு அறையின் வெளியில் இரண்டு சிப்பாய்கள் காவல் இருப்பார்கள். அவ்வறையில்தான் திரவியசிங்கப் பிரபு இருக்கிறார். நீ தைரியத்தோடும் சந்தோஷத்தோடும் கணையாழியைக் காட்டி "நான் உள்ளே செல்லவேண்டும். திரவியசிங்கம் பிரபுவிற்கு ஒரு சந்தோஷ சங்கதி கொண்டுவந்தேன். மகாராணி யவரை மன்னித்து விடுதலை செய்துவிட்டாள்" என்று கூறு. அவர்கள் அப்படியே யவரை யுடனே விட்டுவிடுவார்கள். அவரை யழைத்துக்கொண்டு வந்த வழியே திரும்பாதே. நேரே தாழ்வார வழியே சென்றால், ஒருவிடத்தில் படிக்கட்டுகள் இரண்டு பக்கம் பிரியும். பிரபு இடப்பக்கம் வழி செல்லவேண்டும, அவ்வழி தோட்டத்திற்குள் சென்று ஆற்றோரம் போகிறது. அங்கு அவர் படகிலேறி எங்கு வேண்டுமாயினும் போகலாம். எங்குச் சென்றால் சட்டென்று ஒளிந்துகொள்ள வசதியான விடம் கிடைக்குமென்பது அவருக்குத் தெரியும். நீ வலப் பக்கவழி சென்றால் ஒரு முற்றத்திற் கொண்டுபோய் விடும். அக்கே லெப்டினெண்ட் கங்காவிங் உலவிக்கொண் டிருக்கிறான். நீ தைரியமாய்ச் செல். அப்படி யவன் ஏதாவது கேட்டால் இக்கணையாழியைக் காண்பி" என்றாள்.

அரியநாயகி "அப்படியே நடந்து கொள்கிறேன். நீ செய்யும் நன்றியை யென்றும் மறவேன். உன் நாமதேயத்தைத் தயவுசெய்து கூறவேண்டும்" என்றாள்.

அம்மாது.—"என் பெயர் கோகிலம். இனி நீ க்ஷேமமாய்ப் போகலாம். கடவுள் உனக்கு உதவி புரிவாராக.' என்று கூறி யவளை யாலிங்கனம் செய்துகொண்டு தன் அறைக்குத் திரும்பினாள்.

அரியநாயகி அம்மாது கூறியவண்ணமே தாழ்வாரத்தின் வழியேகி ஒரு அறையின்முன் நின்றிருந்த பாராக்காரர் அருகிற் சென்று, "உமது சிறையாளாகிய திரவியசிங்கப் பிரபுவை விட்டுவிடுங்கள். மகாராணி யவரை மன்னித்து விடுதலை செய்துவிட்டாள்," என்று கூறிக்கொண்டே கணையாழியைக் காட்டினாள். அவர்கள் அக்கணையாழிக்கு வந்தனமளித்து விலகி நின்றார்கள்.

அரியநாயகி அறைக்குள் புகுந்து பிரபுவை நோக்கி "பிரபுவே, இராணியும்மை மன்னித்து விடுதலை செய்துவிட்டாள். இந்தச் சந்தோஷ சமாசாரத்தை முதல் முதல் தங்களுக்குக் கூறும் கௌரவம் எனக்கு வாய்ந்ததைப்பற்றிச் சந்தோஷப் படுகிறேன்" என்று கூறிக்கொண்டே துரிதமாய் இதைவிட்டுச் செல்லவேண்டும், என்று சமிக்கை செய்தாள்.

திரவியசிங்கப் பிரபு இங்கு அவளைக் கண்டதும் மிக்க வியப்படைந்தார். இவள் கொண்டுவந்த சங்கதியிலும் ஏதோ இரகசிய மிருக்கிறதென்று அறிந்து

கொண்டு "ஆ! மகாராணி நீடூழிவாழ்க. நான் ஒருபோதும் இந்நன்றியை மறவேன். இச்சமாசாரம் கொண்டுவந்ததற்காக உனக்கு மிக்க வந்தனம்" என்று கூறிவிட்டு, அங்கிருந்த போர்வீரரைச் சுட்டிக்காட்டி,

"ஆ! இவர்கள் மிக்க மரியாதையுடைய நல்ல மனிதர்கள். ஆனால் சில சமயங்களில் தங்கள் மனதிற்குப் பிடிக்காத கட்டளைகளைச் செய்யவேண்டிவர்களா யிருக்கிறார்கள்" என்று கூறிக்கொண்டே, அவர்களிடம் இரண்டு சவரன்களை யளித்துவிட்டு, அரியநாயகியோடு அறையைவிட்டுப் புறப்பட்டார்.

வீரர்கள் கிடைத்த சவரன்களைக் கொண்டுபோய் எந்த ஹோட்டலில் செலவு செய்யலாம், எங்கே மாலைப்போதைக் கேளிக்கையாய்க் கழிக்கலாம் என்று உடனே யோசனைசெய்யத் தொடங்கினார்களே யன்றி, நடந்த விஷயத்தைப்பற்றி எள்ளளவேனும் சிந்திக்கவில்லை. பிரபுவும் அரியநாயகியும் இரண்டு படிக்கட்டு வழிகள் பிரியுமிடத்தை நெருங்கியதே அரியநாயகி பிரபுவை நோக்கி,

"பிரபுவே! இராணி மன்னிக்கவில்லை. இது ஒரு சந்திரத்தால் நிறைவேறியது. விபரமாய்க் கூற இது சமயமல்ல. துரிதமாய் இவ்வழி சென்று படகேறி எங்காவது போய்ச் சீக்கிரம் மறைந்துகொள்ளும். நான் காலையில் தாங்கள் கூறிய மாரப்பன் காட்டு வெள்ளைக் குடிசைக்குச் சென்று பார்த்தேன். அங்கு ஒருவருமில்லை" என்றாள். பிரபு "ஆ! நான் அப்படித்தான் சந்தேகித்தேன். என் சகோதரர்கள் அவசியம் அங்குவருவார்கள்" என்றார். அரியநாயகி "அப்படியாயின் நான் கற்கோட்டைக்குப் போகும் மார்க்கத்தில் மறுபடி அந்தக் குடிசைக்குச் சென்று அவர்களைக் காண்கிறேன். அதைப்பற்றித் தாங்கள் கவலைப்படவேண்டாம்" என்றாள். பிரபு நீ செய்யும் இந்த உதவிக்கு எப்போதும் நன்றியுடையவனா யிருப்பேன் என்று கூறிவிட்டு இடப்பக்க வழியே துரிதமாய்ச் சென்றார்.

அரியநாயகி வலப்பக்க வழியேசென்று வெளி முற்றத்தண்டை வந்தாள். அங்கு லெப்டினெண்ட் கங்காவிங்கும் இன்னொரு இராணுவ உத்தியோகஸ்தனும் உலவிக்கொண்டிருந்தார்கள். கங்காவிங் அரியநாயகியைக் கண்டதும், "ஆ நான் நேற்றுமாலை கற்கோட்டையின் தோட்டத்தில் கண்ட அரியநாயகி யம்மாளாகவே யிருக்கவேண்டும்" என்றான்.

அரியநாயகி ஆம் ஆம் என்று கூறிக்கொண்டே அவர்களைக் கடந்துசெல்ல முயன்றாள். கங்காவிங் "அம்மா! மன்னிக்க வேண்டும். தற்சமயம் விசேஷ அறிகுறி யில்லாமல் ஒருவரையும் அரண்மனையி லிருந்து வெளிச்செல்ல விடக் கூடாதென்பது கட்டளை" என்றான். அரியநாயகி "ஓ அப்படியா! இது போதும்மா பார்!" என்று கணையாழியைக் காட்டினாள். உடனே யிருவரும் அதற்கு வந்தனமளித்து, அரியநாயகியை மரியாதையோடு கூட்டிவந்து வெளியில் காத்திருக்கும் அவள் ஆட்காரர்களருகில் கொண்டு வந்துவிட்டார்கள். அவள் ஏறிவந்த குதிரையும் சமீபத்திலேயே யிருந்தது. அவள் உடனே தன் புரவிமேல் ஆரோகணித்துக்கொண்டு, உள்ளத்தில் பொங்கும் சந்தோஷத்தோடு அரண்மனையைவிட்டு வெளியேறினாள்.

பிறகுதான் என்ன செய்வதென்று சிந்திக்கலானாள். "ஆயினும் நாம் உடனே எங்காவது மறைந்துகொள்ளலாகாது. கற்கோட்டைக்குச் சென்று முன்னே செல்வராயர் தங்கம்மாள் கமலாம்பாள் இவர்கட்கு நடந்த சங்கதியாவும் கூறி அவர்கள் யோசனைப்படி நடக்கவேண்டும். பிரபுவிற்கு வாக்களித்தபடி முன்னே வெள்ளைக் குடிசைக்குச் சென்று அவர் சகோதரர்கள் வந்திருக்கிறார்களா பார்ப்போம்" என்று தீர்மானித்துக்கொண்டு குதிரையைத் துரிதமாய் நடத்தினாள்.

19-வது அத்தியாயம்.

அரியநாயகியை வெளியில் விட்டு விட்டு அரண்மனைக்குள் செல்லுங் கங்காவிங் "ஆ! இராணி என்ன இரகசியக்கட்டளையை நிறைவேற்றுவதற்காக இந்த அரியநாயகியிடம் தன் கணையாழியைக் கொடுத்தனுப்பி யிருக்கிறாள்" என்று சிந்தித்துக்கொண்டே சென்றான்.

அரியநாயகி தன்கூடவரும் இரண்டு ஆட்களையும் துரிதமாய்க் குதிரையை விடும்படி ஆஞ்ஞாபித்துக் கால்மணி நேரத்திற்குள் வெள்ளைக்குடிசை யருகிற் சென்றாள். ஆனால் பிரபுவின் சகோதரர்கள் இன்னும் அங்கு வரவில்லை. அரியநாயகியோ சற்றுநேரம் அங்குத் தங்கியிருக்க முடியாது. ஆகையால் நாளைக்கு இவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி யாரிடமாவது கொடுத்தனுப்பலாம் என்று தீர்மானித்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

இவர்கள் மரங்கள் அடர்ந்த காட்டைக்கடந்து பாதைவழியில் திரும்பும் போது திடீரென்று நான்கு குதிரைவீரர்கள் எதிரில் நெருங்குவதைக் கண்டார்கள். அவர்கள் லெப்டினெண்ட் கங்காவிங்கும் அவன் ஆட்களும் என்றறிந்ததே அரியநாயகிக்குப் பேரிடி விழுந்ததுபோலாயிற்று. அவள் பிரமித்து திகிற்பட்டு சற்று சிந்திப்பதற்குள் அவளுடைய ஆட்களில் ஒருவன் "ஆ! அவர்கள் நால்வர்கள், நமக்கு இருட்டத்தனை ஆயினும் அவசியமில்லை" என்று எதிர்க்க ஆயத்தமானார்கள். அதற்குள் அரியநாயகி ஓடிவிடலாமா வென்றாள். சமயம் மிஞ்சிவிட்டது, வீரர்கள் நெருங்கிவிட்டார்கள். கங்காவிங் "இணங்கிவிடுங்கள். இராணியின் பெயரால் உங்களைக் கைது செய்கிறேன்" என்று கூவினான்.

அரியநாயகியின் ஆட்கள் உடனே தங்கள் உடைவாட்களை யுருவிக்கொண்டு முன்சென்று உக்ரத்தோடு நின்று தங்கள் எஜமானியை நோக்கி, "அம்மா, தாங்கள் ஓடிவிடுங்கள் ஓடிவிடுங்கள் சீக்கிரம்" என்றார்கள். இவர்கள் நோக்கத்தை யுணர்ந்த கங்காவிங் துரிதமாய்த் தன் குதிரையைத் தட்டி பக்கவாட்டில் பாய்ந்துவந்து அரியநாயகியின் குதிரையின் கடிவாளவாரைக் கையில் பற்றிக்கொண்டான்.

உடனே சண்டை உக்கிரமாய்விட்டது. அரியநாயகி மிக்க நடுக்கங் கொண்டாள். தெய்வகதியாய் அச்சமயம் இரண்டு வாலிபபுருடர்கள் குதிரை மேல் அவ்வழியே வந்தார்கள். அவர்களில் ஒருவன் கங்காவிங்கை நோக்கி, "இது வெட்கக்கேடான வீரம். ஒரு ஸ்திரீக்கு இருவரே காவலிருக்க, நால்வர் அவர்களைச் சுற்றிக்கொண்டு சண்டை யிடுகிறீர்களே. வெட்கம்! வெட்கம்!" என்றான். கங்காவிங் கோபத்தோடு "வாயை மூடிக்கொண்டு உங்கள் வழியே போங்கள். நான் இராணியின் மெய்க்காப்பூப்படை யுத்தியோகஸ்தன்" என்றான்.

மற்றவன் அலட்சிய நகைபுரிந்து "நீ எவனாயினும் அக்கரையில்லை. அந்தம்மாள் கூறட்டும் பார்ப்போம்" என்றான். இதைக்கேட்ட அரியநாயகி, அவனைநோக்கி "ஐயா என்னைக் காப்பாற்றும்" என்றாள். அவள் அப்படிக் கூறி வாய்மூடுமுன், வந்த இருவரும் "போதும் போதும் எதோ" என்றதும், வாட்களை யுருவிக்கொண்டு கங்காவிங் மேலும் அவன் ஆட்கள் மேலும் பாய்ந்தார்கள். இவர்கள் இருவரும் மார்புக்கும் முகத்திற்கும் கவசமணிந்திருந்தார்கள். ஒருவனது தலையணியில் இறகுகள் சொருகப்பட்டிருந்தன. ஆரம்பத்திலேயே இவர்கள் சண்டையில் நல்ல தேர்ச்சியடைந்தவர்களென்று தெரிந்தது.

கங்காவிங் சட்டென்று அரியநாயகியின் குதிரையை விட்டுவிட்டுத் தன்னைக்காப்பாற்றிக்கொள்ள முயன்றான். இறகணிந்த வாலிபன் அவனை எதிர்க்க

மற்றவன் அரியநாயகியின் ஆட்களோடு சேர்ந்து மற்ற மூவரையும் தாக்கத் தொடங்கினான். அச்சமயம் அரியநாயகி சுலபமாய் ஓடிப்போயிருக்கலாம். ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் முதலாவது தன் ஆட்களை விட்டுவிட்டுச் செல்வது நியாயமாய்த் தோன்றவில்லை. மேலும் திடீரென்று உதவி செய்யவந்தவர்களைச் சண்டையில் விட்டுவிட்டு தான் மட்டும் ஓடிவிடுவது அநீதமும் கோழைத்தனமுமாகும். இதோடு வந்தவர்கள் உதவியால் நமது கட்சியே ஜெயமடையும் என்ற நம்பிக்கை யுண்டாயிருந்தது. இதுமட்டுமல்ல, வந்தவர்கள் தோற்றத்தால் அவர்களிடம் ஏதோ விசேஷமிருப்பதாய் அவள் புத்தியிற்படவே, அவர்கள் வரலாற்றைக் கொஞ்சம் அறியவேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. ஆகையால் எட்ட நின்றபடி நடக்கும் வாட்போரைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

சுமார் இருபது நிமிடங்களுக்குள் கங்காவிங் ஆட்களில் இருவர் கவசமணிந்த வாலிபன் வாளால் காயமடைந்து கீழே விழுந்தார்கள். மூன்றாமவனும் வாள்முறிந்து சரணடைந்தான். அதேநிமிடம் இறகணிந்தவனால் கங்காவிங்கின் கைவாள் பிடுங்கப்பட, கங்காவிங்கும் சரணடைய நேர்ந்தது. அவன் தன் கட்சி தோல்வியடைந்ததாக ஒப்புக்கொண்டு,

"ஆயினும் இராணி யிதற்கு வஞ்சம் தீர்த்துக்கொள்வாள் என்பது உண்மை. அம்மா அரியநாயகி அந்தக் கணையாழியையேனும் கொடுத்துவிடு" என்றான்.

இதைக் கேட்டவுடன் இறகணிந்தவீரன் "அம்மா, உனக்குப் பாதுகாப்பிற்காவது அல்லது ஏதாவதொரு விசேஷமான காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளவாவது அக்கணையாழி யுனக்கு அவசியமென்று தோன்றினால், அதைக் கொடுக்காதே" என்றான்.

அரியநாயகி "ஐயா, இப்புத்தி கூறியதற்காக வந்தனம் அளிக்கிறேன்" என்று கூறிவிட்டு கங்காவிங்கை நோக்கி, "ஐயா இராணிக்கு நான் பலதரம் நமஸ்காரம் செய்ததாகவும், இம்மோதிரத்தைப் பிறகு ஒரு நம்பிக்கையான ஆள்வசம் கொடுத்தனுப்புவதாகவும் கூறும்" என்றாள். கடைசியில் இறகணிந்த வாலிபவீரன் கங்காவிங்கை நோக்கி,

"நீ நான்கூறும் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டால் உங்களுடைய ஆயுதங்களையும் குதிரைகளையும் கொடுத்துவிடுவோம். அவையென்னவெனின், நீங்கள் குதிரையேறியதும் நேரே வந்தவழியே திரும்பிச் செல்லவேண்டும். இம்மாதிற்காவது இந்த ஆட்களுக்காவது மறுபடி எவ்வித இக்கட்டும் உண்டாக்கக் கருதலாகாது. அதோடு எனக்கேனும் என் சகோதரனுக்கேனும் எந்த தீங்கும்செய்ய நினைக்கலாகாது. அவ்வாறு பிரமாணம் செய்ய வேண்டும்" என்றான்.

கங்காவிங் என்னசெய்வான் பாவம்! வேறு வழியில்லை. அவ்வாறே சத்தியவாக்கு கூறிவிட்டு ஆயுதங்களையும் குதிரைகளையும் பெற்றுத் தன் ஆட்களின் காயங்களைக்கட்டி யவர்களை யழைத்துக்கொண்டு வந்தவழியே திரும்பினான்.

அவர்கள் சென்றதே இறகணிந்தவீரன் அரியநாயகியை நோக்கி "அம்மா நீ இனி யெங்கு செல்லவேண்டும். நாங்கள் துணையாய்வந்து உன்னை விட்டு வருகிறோம்" என்றான். (தொடரும்.)

ஆவணி. தப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

காளயுக்தி வரு சித்திரைமீ சாலிவாகன 1840, கலியுகாதி 5019
பசலி 1327-28, கொல்லம் 1093-94,
இங்கிலீஷ் 1918-ம்வரு ஏப்ரல்மீ—மேமீ

ஏப்ரல்மீ	சித்திரைமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
13	1	ச	துதி-1-15 திரி-55-40	பர-13-22	சி 14 அமி	தமிழ் வருஷப்பிறப்பு கிருத்திகை விரதம்
14	2	ஞா	சது-53-24	*கார்-10-55	சித்த 60	பசுக்களை வாங்க
15	3	தி	பஞ்-51-1	ரோக-9-38	அ 10 சித்	தனியநாள்
16	4	செ	சஷ்-49-51	மிரு-9-20	சித் 9 மா	சஷ்டி விரதம்
17	5	புத	சப்-49-40	திரு-10-12	சித்த 60	சிருகப்பிரவேசம்
18	6	வி	அஷ்-51-7	புன-12-18	அமிர் 60	கரிநாள்
19	7	வெ	நவ-53-44	பூச-15-43	மரண 60	ஸ்ரீராமநவமி
20	8	ச	தச-57-11	ஆயி-20-7	ம 60 அமி	நவக்கிரகசாந்தி செய்ய
21	9	ஞா	ஏகா-60-0	மக-25-19	மா 25 சித்	சித்திரமெழுத
22	10	தி	ஏகா-1-54	பூர-31-45	சித்த 60	
23	11	செ	துவா-6-41	உத்தி-38-11	அ 38 சித்	
24	12	புத	திர-11-44	அஸ்-44-30	மா 44 சித்	
25	13	வி	சது-16-36	சித்-50-28	சித் 50 அ	
26	14	வெ	பௌ 20-39	சுவா-55-41	சித்த 60	
27	15	ச	பிர-23-47	விசா-60-0	சித்த 60	
28	16	ஞா	துதி-25-53	அனு-60-0	மரண 60	
29	17	தி	திரி-26-25	அனு-2-28	சித்த 60	
30	18	செ	சது-25-38	கேட்-4-2	சித்த 60	
1	19	புத	பஞ்-24-23	மூல-4-45	மா 5 அ	சீமந்தம்
2	20	வி	சஷ்-21-36	பூரா-4-1	சித் 60	தனியநாள்
3	21	வெ	சப்-17-49	உத்-2-22 திரு-57-25	சித் 3 அ	பூமுடிக்க
4	22	ச	அஷ்-14-22	அவி-57-35	சித் 58 அ	
5	23	ஞா	நவ-9-3	சதை-52-41	சித் 60	7-க்குள் இடிமின்னல்
6	24	தி	தச-2-2 ஏகா-54-0	பூரட்-48-41	மா 48 சித்	
7	25	செ	து-49-54	உத்-44-33	அமி 45 சி	ருதுசாந்தி செய்ய
8	26	புத	திர-44-8	ரேவ-40-35	மா 41 சி	
9	27	வி	சது-38-33	அசு-37-0	அமி 37 சி	8-க்குள் மழை
10	28	வெ	*அமா-33-24	பர-33-49	சித்த 60	அமாவாசை விரதம்
11	29	ச	பிர-29-0	*கார்-31-18	அமி 60	கிருத்திகை விரதம்
12	30	ஞா	துதி-25-28	ரோக-29-42	சித்த 60	
13	31	தி	திரு-24-21	மிரு-30-22	அமி 30 சி	நாமகரணம் வைக்க

1918 மேமீ

	ர-பு	குரு	கேது
சுக்	16-மீ-வ-பு 19-மீன-சு 30-மேஷ ருசு-புத		சனி
			செ
ராகு			

PRINTED BY P. B. RAMA IYAR AND CO., MADRAS

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | காளயுக்திவரு வைகாசிமீ கஉ 1918-ம்வரு மேமீ 14உ | பகுதி 11

கடவுள் வணக்கம்.

ஏக மானவுரு வான நீயருளி
ஞல னேகவுரு வாகியே
யெந்த நாளகில கோடி சிருஷ்டிசெய்
விசையு நான்வரைய நாண்முத
லாக நாளது வரைக்கு முன்னடிமை
கூடவே சனன மானதோ
வனந்த முண்டுநல சனன மீதிதனு
ளறிய வேண்டுவன வறியலா
மோக மாதிதரு பாச மானதை
யறிந்து விட்டனையு மெனையுமே
முழுது ணர்ந்துபர மான வின்பவெள
ழுக்க வேண்டுமிது வின்றியே
தேக மேநழுவி நானுமோ நழுவிற்
பின்னை யுய்யும்வகை யுள்ளதோ
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சிற்சு கோதய விலாசமே.

எனதென் பதும்பொய் யானெனல்பொய் யெல்லா மிறந்த விடங்காட்டு
நினதென் பதும்பொய் *நீயெனல்பொய் நிற்கு நிலைக்கே நேசித்தேன்
மனதென் பதுமோ வென்வசமாய் வாரா தைய நின்னருளோ
தனதென் பதுக்கு மிடங்காணேன் றயியே னெவ்வா றுய்வேனே.

உய்யும் படிக்குன் றிருக்கருணை யொன்றைக் கொடுத்தா லுடையாய்பாழ்ம்
பொய்யு மவாவு மழுக்காறும் புடைபட் டோடு நன்னெறியா
மெய்யு மறிவு பெறும்பேறும் விளங்கு மெனக்குன் னடியார்பாற்
செய்யும் பணியுங் கைகூடுஞ் சிந்தைத் துயருந் தீர்ந்திடுமே.

* "நீயெனல் பொய்" ஆன்மாவும் கடவுளும் ஒன்றுக்கொன்று அன்னிய மாயில்லையாதலின், ஆன்மா தன்னை வேறு பிரித்துக்கொண்டு கடவுளை முன்னிலைச் சுட்டாக்கி நீ யென்று கூறுதல் பொய்யான நிலைமையென் றருளினர்.

ஆனந்தபோதினி
காளயுக்தி வைகாசி கஉ

சங்கங்கள்.

ஆதிகாலந் தொடங்கி உயர்நிலையிலிருந்த நம் தாய்நாடு இடையில் கொண்ட துயிலினின்றும் சமீபகாலத்தில் சற்றுக் கண்விழித்துக் கொண்டது முதல், பலவித முயற்சிகள் நமது நாட்டில் நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. எல்லா முயற்சிகளும் நன்மையின் பொருட்டே, அல்லது நன்மைக்காகவே யென்று கருதப்பட்டே, நிகழ்கின்றன. அவற்றில் இப்போது சங்கங்கள் என்பதைக் குறித்தே கூறத் தொடங்குகிறோம்.

ஒரு ஜன சமூகம் முன்னுக்கு வரவேண்டுமாயின் பலர் ஒன்று கூடி மனமொத்து வேலை செய்தால் தான் அத்தகைய பெரிய காரியத்தைச் சாதிக்கலாகும். ஒருவனாய் அதைச் சாதிக்க வியலாது. ஒருவன் ஆயிரம் பத்தாயிரம் முதல் வைத்து ஒரு வியாபாரம் செய்தால் சொல்ப லாபம் பெற்று அவன் குடும்ப மட்டும் க்ஷேமப்படலாம். ஆயிரக்கணக்கான பேர் முதல் வைத்து ஒன்று கூடி, பத்து கப்பல்கள் வைத்துக்கொண்டு, பல தூர தேசங்களுக்குச் சென்று வியாபாரம் செய்தால், சீக்கிரத்தில் பலபேர் கோடீசுரர்களாகி அந்த நாடே செல்வம் பொருந்திய நாடாகி விடுகிறது. ஆகையால், ஒரு நாடு முன்னுக்கு வரச் சங்கங்கள் ஓர் இன்றியமையாச் சாதனமேயாகும். இப்போது நமது நாட்டில் சமாஜம், சங்கம், வாசிகசாலை, சபை என்கிற பல பெயர்களைக் கொண்டு கற்றுணர்ந்தோர் ஆங்காங்கு கூட்டங்களாய்க் கூடி, ஒவ்வொரு கூட்டம் ஒவ்வொரு நோக்கத்தைக் கொண்டு வேலை செய்து வருகின்றது. விவசாயச்சங்கம் என்றிருக்கிறது. அது நமது நாட்டில் விவசாயம் சாஸ்திர ரீதியாய்ச் செய்யப்பட்டு அதனால் விவசாயிகள் நல்ல பலனடையவேண்டும் என்ற எண்ணங்கொண்டு உழைக்கிறது. தமிழ்ச்சங்கம் என்றிருக்கிறது. அது நம் தாய்ப் பாஷையை விர்த்தி செய்து அதை முன்னிருந்த உன்னத நிலைமைக்குக் கொண்டுவர உழைக்கிறது. வாசிக சாலைகள் என்றிருக்கின்றன. இவை பல பத்திரிகைகளை வரவழைத்து வாசித்து அத

னால் அன்னிய நாட்டுச் சமாசாரங்கள், அவர்களுடைய ஆசாரம் முதலியவைகள் யாவும் உணர்ந்து அதனாலடையும் பயனைப்பெற முயலுகின்றன. இவ்வாறே ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைக் கோரியே வேலை செய்கின்றது. கொஞ்ச காலத்திற்கு முன் நமது நாட்டில் பிரதான நகரங்களில் மட்டுமே ஒவ்வொரு சங்கம் இருந்தது அவைகளும் பெரும்பாலாய் வாசிகசாலைகளே (ரீடிங் ரூம்) இப்போதோ சிற்றூர்களிலும் கிராமங்களிலும் கூடப் பலவிதச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. இது சந்தோஷத்தை யளிக்கும் நல்ல குறியே யாகும்.

ஒரு மனிதன் தன் வரையில் ஒரு பயனை யடைய ஒன்றைச் செய்வானேல், அவன் தொழில் சுயநலங்கருதிய தொழில் என்றே கூறப்படும். அதைப்போன்றே ஒரு சங்கமும் அதனுடைய அவயவிகள் வரையில் தங்கள் அறிவை விர்த்தி செய்துகொள்வதற்கு மட்டும் ஒரு முயற்சியைச் செய்யுமேல், அதன் தொழிலும் சுயநலத் தொழிலேயாகும். சங்கங்களனைத்தும் பொதுநலங் கருதியே யுண்டாயினவேனும், அந்த நோக்கம் பெரும்பாலாய் அனுபவத்தில் முற்றுப் பெறுகிறதாகத் தோன்றவில்லை. இவ்வாறு சுயநலங் கருதிய சங்கங்களின் முயற்சியால் நம் தாய் நாடு ஒரு போதும் மேலோங்கும் சக்தியைப் பெறுதென்பது உண்மை. சங்கங்கள் கூடுவதால் ஒற்றுமை விர்த்தியடைகிறது ஆனால் நமது நாட்டிலோ, ஒற்றுமையைக் குறைத்துத் தீங்கை விளைவித்து, நாம் க்ஷேமமடைய லாகாதென்று எண்ணமுடையார்களுக்கு உதவி செய்யும் சங்கங்களும் இருக்கின்றன.

தாய் நாடு க்ஷேமமடையவேண்டு மென்றுவது, தாய்ப்பாஷை உயர்நிலைக்கு வரவேண்டு மென்றுவது முயலும்போது, இடையில் ஜாதி வித்தியாசத்தைப் பாராட்டி அதிலேயே வேளாளர் சங்கம், வன்னியர் சங்கம், க்ஷத்ரியர் சங்கம், கோபாலர் சங்கம் என்று தனித்தனியாய்ப் பிரிந்து கொள்கிறார்கள். யாவர்க்கும் தாய்ப் பாஷையா யிருக்கும் ஒரு பொதுப் பாஷையை விர்த்தி செய்ய உழைக்கும்போது ஜாதியைப் பற்றி என்ன வந்தது ? பாஷையை நோக்க ஒரே பெருங்கூட்டமா யிருப்பவர்கள் வீணாக ஜாதியை நோக்கிப் பல சிறு கட்சிகளாய்ப் பிரிந்து விடுவது அறிவாளிகள் செய்கையாகுமோ ? இப்பிரிவால் பொறாமை, துவேஷம் முதலிய

நேரிட்டு தீங்கு சம்பவிப்பதோடு பலக்குறைவும் நேரிடுகிறது. இருபது இருபது அவயவிகளையுடைய 5-சங்கங்கள் ஒவ்வொரு சங்கம் தலைக்கு கால்ரூபா வீதம் 5-ரூபா சேகரித்து ஒரு காரியத்தைச் செய்வதை விட, 5-சங்கமும் ஒன்றுகூடி 100-பேரும் 25-ரூபாய் வசூலித்தால் எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதிக்கலாகும்? பிரியப் பிரிய பலங் குன்றுமென்பதை நம்மவர் இன்னு முணராதிருப்பது மிக்க விசனிக்கத்தக்க விஷயமன்றோ?

இன்னும் சிலர் ஜாதிப்பெயரால் சங்கம் ஏற்படுத்திக்கொண்டு, இதுகாறும் உலகோரால் அங்கீகரிக்கப்படாத பதவி வேண்டுமென்று இச்சித்து, நாங்களே உயர்ந்த ஜாதியென்று அதற்கு ஆதாரங்களைத் தேடிக்கொண்டும் வாதம் புரிந்துகொண்டும் காலங் கழிக்கிறார்கள். ஜாதிப் பிரிவினையுள்ள வரையில் இவர்களுக்கு ஒற்றுமை வாராது என்றும், அதனால் இவர்கள் உயர்நிலையடையார்கள் என்றும் சிலர் கூறும் இக்காலத்தில் நாம் ஜாதிப்பிரிவினையைப் பலப்படுத்த வேலைசெய்வது மதியீனமல்லவோ. மேலும் ஒரு மனிதனுக்கேனும் ஒரு ஜாதிக்கேனும் கௌரவமும் மரியாதையும் உலகோர் மதித்து அங்கீகரிப்பதால் வருமேயன்றி, நாமே பட்டந் தரித்துக்கொண்டு விளம்பரப்படுத்திக் கொள்வதால் எங்கேனும் வருமோ?

இவ்வாறே நமது மதத்தவரே சிலமதச்சங்கங்களாய்ப்பிரிந்து ஒரே தாய்தந்தையர்க்குப் பிறந்த சகோதரர்கள் என் தந்தையுயர்ந்தவன் உன் தந்தை தாழ்ந்தவன் என்று சண்டையிடுதல் போல், விஷ்ணுவே பெரியதெய்வம் சிவன் சின்னவன், சித்தாந்தம் சரி, வேதாந்தம் தப்பு, என்று சண்டையிட்டுக் கொள்கிறார்கள்.

வைதீகவிஷயம் ஒருபக்கமிருக்க, இப்போது இலௌகீக ஞானக்குறைவே நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு இடையூறாயிருப்பதால், தாய்நாட்டின் க்ஷேமத்திற்கென்று ஏற்பட்ட சங்கங்கள் எத்தனைய நோக்கங்களோடு வேலைசெய்கின்றனவோ அதனளவாய்த்தான் நம் தாய்நாட்டிற்கு நன்மையுண்டாகும்.

முதலாவது சுயநலத்திற்கு மட்டும் என்று உழைப்பது அடியோடொழியவேண்டும். சங்கத்தின் நோக்கம் சாத்திர ஆராய்ச்சியோ, விவசாய அபிவிர்த்தியோ, பர்ஷாபிவிர்த்தியோ, பத்திரிகைகளை வாசித்தலோ, எதுவாயிருந்தாலும் அச்சங்கத்தின் அவயவிகள் தங்கள் ஞானத்தைமட்டும் விர்த்திசெய்துகொள்வதில் ஒருபயனுமில்லை. அதனால்மட்டுமே தாய்நாடு மேலோங்கிவிடாது.

பத்து பதினைந்துபேர்கூடி தலைக்கு மாதம் 8-அணா பிரிவு போட்டுக்கொண்டு, முக்கியமான சிலபத்திரிகைகளை வரவழைத்து, வாசிகசாலைதிறந்து ஓய்ந்தவேளையில் சென்று, பிரியமான இரண்டொரு பத்திரிகைகளை வாசித்துவிட்டு வீட்டிற்குத் திரும்பிவிடுகிறார்கள். அதோடு குறித்த தினங்களில் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி பிரசங்கம் செய்கிறார்கள். பத்திரிகைகளில் அறிவாளிகள் கூறும் விஷயங்களை யறிந்துகொண்டு நமது அறிவை விசாலப்படுத்த வேண்டியதும், அன்னியநாட்டார் சங்கதிகளையும், நடவடிக்கைகளையும், ஆசார ஒழுக்கங்கள், துரைத்தன முறைமைகள் முதலியவற்றையும் அறிந்து நமது உலகஞானத்தை விர்த்திசெய்துகொள்ளவேண்டியதும், நம் தாய்நாட்டின் க்ஷேமத்திற்கு அவசியமான சாதனங்களேயாகும். ஆனால் அச்சங்கத்தில் சேர்ந்தவர்கள்மட்டும் அவ்விஷயங்களில் தங்கள் ஞானத்தை விர்த்திசெய்துகொண்டால் தாய்நாட்டிற்கு க்ஷேமம் எப்படி யுண்டாய்விடும்? எங்கும் நமது நாட்டின் க்ஷேமத்திற்கு இது அவசியமென்று உணர்ந்து ஆரம்பத்தில் ஒருசங்கத்தை யேற்படுத்துகிறவர்கள் கொஞ்சமாவது கல்வி யறிவுடையவர்களாகவே யிருப்பார்கள். அவர்கள் மட்டும் தங்கள் ஞானத்தை விர்த்திசெய்து கொள்வதில் என்ன நன்மை நாட்டிற் குண்டாய்விடும். கொஞ்சம் பணமிருப்பவனே பின்னும் கொஞ்சம் சம்பாதித்துக்கொண்டால் நாடு செல்வம்பொருந்திய நாடாய்விடுமா? காசையே கண்டிராத தரித்திரர் ஏராளமாய் நாடெங்கும் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோரும் கொஞ்சங் கொஞ்சமேனும் பணமுடையோராயின் அப்போதுதான் நம் நாடு சுமாராகவாவது செல்வமுடைய நாடென்கிற பெயர்க் குரியதாகும்.

அதுபோல் இந்தியா எவ்வளவு விசாலமுள்ளது? நாமார்? நமது அரசர்யார்? இருவருடைய சம்பந்தமும் கடமையுமென்ன? மற்றதேசங்களிலுள்ள ஜனங்களின் நிலைமையும் அதற்குக்காரணமுமென்ன? நாம் இருக்கும் நிலைமைக்கும் மற்றநாட்டாருடைய நிலைமைக்கும் தாரதம்மியமும் காரணமுமென்ன? மற்றநாடுகளில் துரைத்தன மென்னவிதமாய் நடக்கிறது. வர்த்தகம் எப்படியிருக்கிறது, அவர்கள் என்னவிதமாய் மேலான நிலைமையடைந்திருக்கிறார்கள்? உலகில் இவ்விதநாடுகள் எத்தனை யெங்கெங்கே யிருக்கின்றன? நாம் ஒவ்வொருவரும் தாய் நாட்டிற்கு என்னசெய்ய

வேண்டும்? என்பது முதலான ஞானங்கள் சற்றுமறியாத நிரக்ஷர குட்சிகளாகிய பாமரர்கள் நமது நாட்டில் எத்தனை கோடியோ யிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் மேற்கண்ட ஞானங்களை யுணர்ந்தவர்களானா லல்லவோ நமது நாடு க்ஷேமமுறும். அவர்களின் ஞானக்குறைவல்லவோ நம் நாட்டின் க்ஷேமத்திற்கு இடையூறாயிருப்பது.

ஆகையால், சகோதரர்களே! ஒவ்வொரு சங்கத்திலிருக்கும் அவயவிகளும் தங்கள் தங்கள்மட்டில் கவனித்துக்கொண்டு போவதில் பயனில்லை யென்றுணர்ந்து, நாம் சங்கமாய்க்கூடி எந்த ஞானத்தை யடைய முயலுகிறோமோ, என்ன பயனை யடையக் கருதுகிறோமோ, அந்த ஞானத்தையும் பயனையும், நம்மைப்போல் கல்வியறிவாலடையச் சக்தியற்றவர்களாகிய, கல்லாத நமது பாமர சகோதரரும் அடையும் வண்ணம் நாம் முயலவேண்டும். நாம் வாசித்துத் தெரிந்துகொண்டால், நாமுணர்ந்த விஷயத்தை நமது போதனைகளால் அவர்களுக்கு நாம் ஊட்டவேண்டும்.

ஒவ்வொரு சங்கத்தில் நடக்கும் நடவடிக்கைகள் யாவும் நம் தாய்ப்பாஷையிலேயே நடைபெறவேண்டும். சங்கத்தின் அவயவிகளில் ஒவ்வொருவரும், "நாம் சுயநலங்கருதாது நமது பாமர சகோதரர்களில் சிலருக்காவது நமது சங்கத்தால் பயனுண்டாகச் செய்யவேண்டும். இன்றேல் நாம் சங்கத்தில் சேர்ந்திருப்பதால் ஒருபயனுமில்லை" என்றுணர்ந்து, கல்வி யறிவில்லாத சிலருக்காவது தான் அறிந்துகொண்டதைப் போதித்து, உருசியுண்டாக்கி, அதனாலவர்கள் தாய்ப்பாஷையையாவது கற்க முயலும்படிச் செய்யவேண்டும். ஒவ்வொரு சங்கத்தின் நோக்கமும் பொது நலங்கருதியதாகவே யிருத்தல்வேண்டும். ஒவ்வொரு அவயவியும் சுயநலத்தைக்கருதாது பிறர் நலத்திற்காகவே உழைக்கவேண்டும். நமது தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு இடையூறாயிருப்பது நம் நாட்டாரின் இலௌகீக ஞானக்குறைவேயாகும். அக்குறைவை நீக்கவே ஒவ்வொருவரும் முயலவேண்டும். சகோதரர்களே! ஒவ்வொருவனும் பிறருக்காகவே உழைத்தால் அவனவன் க்ஷேமமடைவது எவ்வாறென்று சந்தேகிக்கவேண்டாம்: நீ யுன் சுயநலத்திற்குமட்டுமே உழைத்தால், நீமட்டுமே உனக்காக உழைக்கிறாய். அப்படிக்கின்றி நீ உனக்காக உழைக்காது அன்னியருக்காகவே உழைப்பாயாயின், அவ்வாறே ஒவ்வொருவரும் அன்னியர்க்கே உழைப்பதால், உனக்காக உழைப்பவர்கள் பலர் ஆகிறார்கள். உனக்காக நீயொருவன்மட்டும் உழைப்பதால் அடையும் நன்மையைவிட உனக்காகப் பலர் உழைப்பதால் எவ்வளவோ அதிக நன்மை உனக்குக் கிடைக்கும் என்பதைச் சிந்தித்துணருங்கள். இதனால் தான் நம் தாய் நாடு பூர்வீக உன்னத நிலைமையை யடையும். கொழும்பு நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வேதாசல ஞான சபையார் அவ்வாறு பொது நலத்திற்கு உழைத்து வருகிறார்களென்பதை முன்னமே நமது போதினியில் கூறியிருக்கிறோம்.

ஆகையால் நமது நாட்டிலுள்ள சங்கங்களனைத்தும் சுயநலங்கருதாது நமது பாமரசகோதரர்கள் கல்வியறிவும், நமது முன்னேற்றத்திற்கு இப்போது அவசியம்வேண்டிய உலகஞானமும் பெறும்வண்ணம் முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஆக்கியளித்துத் துடைக்கும் ஆதிமத்தியாந்தரகிதனாகிய அற்புதக்கூத்தன் நமது கோரிக்கை நிறைவேறும் வண்ணம் அருள்புரியுமாறு பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

ஜென்ம பலன்.

உயர்தரமான மானிடஜென்ம மெடுத்திருப்பதால் நாம் நல்வழியில் உய்யுமாறு சடவுளைத்தொழுது கருணையுடன் பரோபகாரம்செய்து சுயநலம் ஒழித்து நற்பதவி யடையமுயலவேண்டும். நாம் வருந்திக்கொண்டே யிருக்கவேண்டுமென்பதில்லை. வருந்தியேனும் பிறர்க்கு நலம் செய்க என்பதே. அதாவது பதிலுதவிவேண்டாது செய்கின்ற உபகாரம். உலகின்கண்ணுள்ள சடப்பொருள்களைச் சற்று உற்றுநோக்குவோமாயின் சுயநலம் நீத்தல் நன்கு புலப்படும். முக்கியமாகிய சூரியன் தன் செங்கதிரால் உலகத்துள்ள காரிருளை நீக்கி உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கிறான். ஒருமரத்தை வெட்டி வீழ்த்தும் மனிதனொருவனுக்கு அதேமரம் அவனுக்கும் நிழலைத்தந்து குளிரச் செய்யவில்லையா? நாள்தோறும் செடிகொடிகள் புதியமலர்களைப் புஷ்பித்து சுகந்தம்தந்து நம்மை இரம்மியப் படுத்துகின்றனவே. முகிலினால் யாம் அடையும் பயனுக்கோர் அளவுண்டா? மயில் குயில் முதலியன முறையே காகூயாலும் கானத்தாலும் நம்மை இன்புறச் செய்யவில்லையா? நம் கண்ணுக்கு மிக அருவெறுப்பாயிருக்கும் நிலப்பூச்சிகளும் பூமியைக்குடைந்து பாழ் நிலத்தையுங்கூட நல்ல உழுநிலமாக மாற்றிவிடுகின்றனவே. ஒருவன் நம்மைக் கோலொன்றெடுத்து அடிக்கப் புகுவானாயின் நம் கையானது நம்மெய்மேலடிபடா திருக்குமாறு அதுமுன்னே சென்று தானே தாங்கிக்கொள்ளத் தயாராயிருக்கின்றதே!

நம் சரீரத்துள்ள ஏதேனும் ஓர் அவயவம் புண்பட்டு வருந்தி வலியுறுங்கால் கண் அது கண்டு அநுதாபப்படுகின்றதே! "பண்டு பிணியால் வருந்தும் பிறவுறுப்பைக்கண்டு கலுழுமே கண்." இது கைம்மாறு வேண்டியோ? பறவைகளும், அழுகிக்கிடக்கும் சறுகுகளையும், இறந்துகிடக்கும் ஜெந்துக்களையும், தின்றும் நிலத்திற்கு ஈந்தும் ஆகாயத்தையும் சுத்தப்படுத்துகின்றன. மேற்சொல்லிய ஒன்றேனும் யாதாமொரு கைம்மாறும் நம்மிடத்தில் விரும்புகின்றதா. ஆனால் மனிதனோ சுயநலந் தவிர வேறொன்றும் கருதுவதில்லை.

சுதேசாபிமானிகளும், யுத்தவீரர்களும், தன்னயந் தவிர்த்து பிறர் நலத்தின் பொருட்டே நாம் வசித்தல் வேண்டும் என்று சொல்லவில்லையா? எத்தனை இடையூறுகள் நேர்ந்தாலும் எடுத்த கருமத்தைக் கலங்காமனத்துடன் முடிக்க வல்லுனரே புகழ் பெறுதர். புகழுடம்பு ஒரு போதும் அழியாது. மானிடராய்ப் பிறக்கிற் புகழொடும் நல்ல குணத்தோடும் பிறக்க இல்லையேல் பிறந்தபின்னேனும் இறத்தல் நலம். தனதல்லாததைத் தனதென்று சொல்வதே பொய்ப் புகழாகும். ஒருவரை வஞ்சித்துப் பொருள் பறித்து ஆலயம், மடாலயம், முதலியன கட்டித் தத்தம் பட்டப்பெயர் தீட்டி பெருமை கொள்வது பெரும் பாபமான இகழேயன்றி புகழன்று. "பெரியார் முன்றன்னைப் புனைத்துயர்த்துரைத்தபேதை—தரியா துயர்வகன்று தாழும்," என்றபடி தற்புகழ்ச்சி எல்லா வகையாலும் தாமே மேலானவனென மதித் திருமாந்திருத்தலே. அஃது இன்பமுந்தராது—புகழுந்தராது; ஒருக்கால் துன்பமும் விளைவிக்கும். "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா பிற்பகற்றாமேவரும்," நமக்கு ஒருவர் கெடுதியே செய்தாலும், "கூர்த்து நாய் கௌவிக்கொண்டும் தம் வாயால் பேர்த்து நாய் கௌவினார் ஈங்கில்லை," என்ற முதியோர் சொல்லுக்கிணங்கி இயற்றிய இன்னலை இதயத்து இருத்தாது இன்னல் புரிந்தோனை "அகழ் வாரைத் தாங்குநிலம்போல," "இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்" என்றபடி எல்லோரிடமும் பக்ஷமே பாராட்டி தயை காட்டவேண்டும். தந்தையாம் வாயுபகவானும், மைந்தனும் அநுமானும் உலகத்திற்கு, எத்தனை ஜென்மங்களெடுத்தாலும் ஜென்மங்கள்தோறும் தாரணிக் குழைப்பதாய் கங்கணங் கட்டிக்கொள்ளவில்லையா? ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு தசரதராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதரித்ததின் காரணம் என்னை? பாண்டவருக்குச் செய்திருக்கிற உபகாரங்களே அவரது பரோபகார சிந்தையை வெளிக்காட்டவில்லையா? அஞ்சா நெஞ்சம் படைத்த எமனும் ஸாவித்திரிக்கு, தயவினால் மாங்கல்ய பிக்ஷை கொடுத்தானே. மிஸ்டர் இராமகிருஷ்ண கோக்கலே, மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய ஐயர் இன்னவர்கள் செய்துவந்த ப்ரஸங்கங்கள் தானென்னை. புகழீற்கென உபகரிப்பது முற்றும் பிழையேயாகும். ஆனால் இக்காலத்தில் ஆலயங்களுக்கு, 8 அணாவிற்கு ஒரு சூடன் தட்டு வாங்கி வைத்தாலும் அதிலும் தன் பெயரைச் செதுக்க வேண்டுகிறான்.

அண்ட சராசரங்களையும் படைத்துக் காக்கும் பரமகருணாநிதி பன்றியின் ரூபமெடுக்கவில்லையா? எதற்காக? பெண்டு பிள்ளை பிழைப்பதற்காகவா!

கற்றறிந்த வித்வான்கள் பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்வது ஏதேனும் தன்னயங்கருதியோ! அன்றேல் தற்கால காகித விலையைச் சற்றுங்கவனியாது குறைந்த சந்தாவுக்குப் போதினி வாயிலாய்ப் புகட்டுவதேனும் தம் வயிற்றுப் பிழைப்புக்கா!! இல்லை—இல்லவேயில்லை. நண்பர்காள்! நம்போன்ற பல பாமரர்களும் ஸத் விஷயங்களைக் கண்டு படித்து உய்யுமாறு புரியும் உதவியேயாகும்.

இப்பூதவுடம்பு இறைவனால் அருளப்பட்டதேயாயினும் அழியுந்தன்மையதே. புகழுடம்பு நம்மால் தேடிக்கொள்ளப்பட்டது. ஆயினும் அழிவற்றதே. "என்று மிப்புகழே நிற்கும்; இவ்வுடல் நிற்பதுண்டோ?" பறையர் முதல் பதினெட்டு ஜாதியாரும் எம்பெருமானை ஜாதி யாசாரப்படி தொழுதல் எடுத்திருக்கும் பிறவிக்கே இன்றியமையாததே. மிருகங்களுக்கும் நம்மைப்போல் பசிதாக உறக்கமிருப்பதால் பேதமென்னை. சிறு உதவிசெய்த ஒருவனை உயிருள்ள மட்டும் மறப்போமா! விபத்தினின்றும் விடுவித்தவனை தினமும் புகழவில்லையா! நமக்கு அறிவைப் புகட்டி ஆதரவுடன் நன்மைபுரியும் போதினியின் தந்தையை மறப்பதற்கு இடமுண்டா! உண்ண உணவும், உடுக்க ஆடையும் ஈந்து நம்மைச் சாரும் தீமையை ஒழித்துக் காக்கும் கருணைக்கடலைக் கனவிலும் மறக்கலாகுமோ? "மாசற்ற கொள்கை மனதிலடைந்தக்கால் ஈசனைக்காட்டு முடம்பு." புராணம் இதிகாஸம் படிக்கும்போதிருக்கும் நினைவு பின்னிற்பதுண்டோ? உலகம் நாளுக்கு நாள் கெடுகின்றதே. அநியாயமாய் நிரீச்சுரவாதத்தாலும், நிர்த்தயையாலும் விர்த்தியாகி சுயநல நாட்டத்தை வளர்த்து வருகின்றதே. அம்மம்ம! இம்மட்டோ! நம்மைப்பற்றி நாமே மேன்மையாய் நினைக்கும்போதுதான் நம்மிடம், நிந்தையான வாக்குகளும், காமக்குரோதாதிகளும் தலை எடுக்கின்றன. சமய ஸன்மார்க்கம் தன்னயந் தவிற்பானன்றோ கூவுகிறது. சுயநலத்தை யொழிக்கவேண்டும். கணக்கிலடங்கா அநுஷ்டானம் செய்தாலும், நாழிகைக் கொருதரம் குளித்துக் கும்பிட்டாலும் சுயநலம் என்னும் அழுக்கு உள்ளளவும் நமக்கும் வீட்டிற்கும் (மோக்ஷவீடு) வெகுதூரம்.

ஸந்தோஷத்தையும் ஸமாதானத்தையும் இம்மண்ணுலகில் வேறோடு களையத்தக்க கொடிய தன்னயங்கருது நாட்டத்தை ஒட்டத்தக்க வல்லுனரடங்கிய கூட்டமே ஸத்ஸங்க ஸமாஜமெனப்படும். மானிட ஸமூகத்தின் ஸம்ரக்ஷணகர்த்தாக்களாய் சுத்த ஸாத்வீககுண மூர்த்திகளாய், பனியாடைபுனைந்து விளங்கா நிற்கின்ற இமயமலைக்குஹத்வாரத்வாரங்களில் அன்றும் இன்றும் வாசஞ் செய்யும் ஸத்குரு மூர்த்திகளும், பரதகண்டத்தின் தென்பாகத்தில் அவதரித்த பட்டீனத்தார், தாயுமானவர் முதலானவர்களும் சுயநலத்தை நீக்குமாறு அநுபவ வாயிலாய்க்காட்டியிருக்கின்றனரே. மனோவாக்கு காயத்திற்குஎட்டாததும் நாமரூபமில்லாததும் பிறப்பிறப்பற்றதும், ஸ்ருஷ்டி ஸ்திதிஸம்ஹாரமென்னும் முத்தொழில் கைக்கொண்டதும், ஸர்வஸ்வதந்திரமுடையதும், அந்தர்யாமியுமான பரமாண்ம சொரூபத்தை அறியவேண்டும். உடனே ஸஹோதரபாவமே தலையெடுக்கும். அக்கணமே காமக்குரோத லோப மோஹ மத மாச்சரிய மொழியும். மறுநிமிஷமே நற்பதவி யெய்தற்குறிய வழிதெரியாது விழிக்கும் ஸஹோதரர்களைப் பின்பற்றி, ஸோபான மார்க்கத்தின் மேலான பதவியை யவர்கள் அடையவேண்டி கைகொடுத்துதவுவதே ஜென்மமெடுத்ததின் பயனாகும். ஆதலின் தன்னயந்தவிர்த்து பிறர் நயத்தின்பொருட்டே யுலாவிவரும் போதினி, குளத்தில்விட்ட தைலம்போலப் பரவுமாறு சந்தாதாரர்களாகிய நாமனைவோரும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கலியுகதெய்வமாகிய ஷண்முகனைப் பிரார்த்திப்போமாக.

இ. வே. மஹாதேவய்யர். இலத்தூர்.

காகம்

இப்பூவுலகின்கண் இராநின்ற கோடானுகோடி சீவராசிகளுள் பெறுதற்கரிய மானிடப்பிறப்பைப்பெற்ற நம்மை, யதிகாலையில் சோம்பலுடனிராவண்ணம், "இரவொழிந்தது வெள்ளிமுளைத்தது, துயிலினின்றும் எழுந்திருந்து சுறுசுறுப்புடன் உங்கள் காரியாதிகளைச் செவ்வையாக முடிக்கச் சித்தமாகுங்கள்; உலகத்தின்கண்ணுள்ள இன்பதுன்பங்களையும், சுகதுக்கங்களையும் பகுத்தறியுங்கள், நற்காரியாதிகளைச்செய்து நற்பெயர் வகித்துப் புகழடையுங்கள்; எல்லோரிடத்திலும் நல்லோர் எனப் பெயர் பெறுங்கள்" என்பதேபோன்று, துயிலினின்றும் நீங்கும்படிக் கரைந்துவருகின்ற (சப்திக்கின்ற) அரியபட்சி காகமே யாகும்.

அங்க முழுவதும் கருநிறமும், கழுத்தைச்சுற்றிச் சாம்பல்நிறமும் படைத்த இவ்வரிய பட்சி தன்னுள்ளடக்கியுள்ள குணாதிசயங்களில் சிலவற்றை யீண்டு கூறலாம். கூறுவதும் அவசியமாகும். யோசிக்கப்புகின், கேவலம் அஃறிணைப் பிராணியாகிய இக்காகமும் கீழ்கூறப்படும் நற்குணங்களை யுடையதானால் உயர்திணைப்பிராணிகளாகிய, மக்கள், தேவர், முதலியோரின் பகுதியில் சேர்ந்த நராகிய யாமும் ஏன் அத்தகைய குணங்களைப் பெற்றவர்களா யிருத்தல் கூடாது? இவ்வுலகத்தின்கண்ணுள்ளவர்களில் (கீழ்வரையப்பெற்ற) இத்தகைய நற்குணங்களை வகித்திருப்பவர் லட்சத்தில் ஐவர் இருப்பது கடினம் எனச் சொல்லலாம்.

காலை, மத்தியானம், மாலையாகிய இம்மூவேளைகளிலும் குளித்துத் தன் திரேகத்தைச் சுத்தம்செய்துகொள்கிறது. அதிகாலைமுதல் அந்திப்பொழுது வரை ஆகாயத்தின்கண்ணுள்ள அசுத்தங்களையும், உயிர்துறந்த எலிமுதலிய பிராணிகளையும், பாழாய்விட்ட தின்பண்டங்களையும், தின்று ஆகாயத்தை அசுத்தமாகாவண்ணம் செய்துவைக்கும் இப்பறவைக்கு "ஆகாயத்தோட்டி" எனவும் ஒரு பெயர் உண்டு.

வீட்டுப் பக்கங்களிலேயே திரிந்து "வீட்டுப்பட்சி" எனப் பெயர் பூனைந்த இவ்வரிய பட்சி விஷம் கலக்கப்பெற்ற பொருள்களை உட்கொள்வதின்றும். இதனையறிந்தே ஆகாரத்தில் விஷம் வைக்கப்பட்டிருக்கிறதோ வென்ற சந்தேகம் கொண்டவர்கள் சாப்பிடுமுன் ஓர் கவளம் சாதத்தைக் காகத்திற்கு வைத்து அது உண்பதைப் பார்த்தபிறகே, தாம் உண்கிறார்கள் என்று அறிகிறோம்.

மூதேவியின் கொடிக் கடையாளமா யமைந்திருக்கின்ற இக்காகம், எவ்விடத்திலாகினும் ஓர் தின்பண்டத்தைக்கண்டால் தன்சுற்றத்தாரையும், இனத்தையும் நினைந்து அவைகள் வரும்வண்ணம் பன்முறை கா கா வெனக்கரைந்து வந்தபிறகு எல்லாம்சேர்ந்து உட்கொள்ளுவதை நாம் தினம் பார்க்கிறோம். "மருந்தேயாயினும் விருந்தோடுண்" என்னும் வாக்கிய மிதற்கென்றே யமைந்ததுபோலும். தவிற, ஓர் காக மிறந்துவிடின் தன்னினத்தின் பேரிலுள்ள வாஞ்சையால் பலகாகங்கள்சேர்ந்து வருத்தத்துடன் கரைந்து கதருவது நமக்குத் தெரியாதவிஷயமன்று.

சனீஸ்வரபகவனுக்கு வாகனமாயமைந்துள்ள இவ்வரிய பிராணி விசேஷமாய் மலைப்பக்கம் அல்லது தன்னிருப்பிடத்திலல்லாமல், மானிடர் சஞ்சாரமுள்ள பக்கங்களில், மற்றப் பிராணிகளைப்போல், தன் பேடையுடன் சேர்வதில்லை.

பருந்து, கருடன், முதலியனபோன்று அவ்வளவு உயரமாயும், வேகமாயும் பறக்கவறியாத இக்காகம் சிற்சிலவேளைகளில் தனக்கு மிகவும் பசியா யிருக்கையில் சிறுபிள்ளைகள் கையில் தின்பண்டங்களைக் கண்டால் கவர்ந்து செல்லும் தன்மையது.

இப்பட்சி தந்திரமும் கற்றபிராணி. சமயோசித புத்தியும் வகித்தது. சிற்சில சமயங்களில் அறிவீனமும் கொண்டதுபோலிருக்கும். இப்பட்சியின் தந்திரத்தைப்பற்றியகதை பஞ்சதந்திரத்தில் அனேகர் வாசித்திருக்கலாம். சமயோசிதத்தைப் பற்றியகதையும், உண்டு. ஓர்பானையில் அடியில் தண்ணியிருப்பதைக்கண்டு தன்தாகத்தைத் தீர்த்துக்கொள்ள கற்களைப்போட்டு நீர் உயர வந்த பின்பு உட்கொண்டு தாகத்தைத் தீர்த்துக்கொண்டது என்று கூறப்பட்டகதை இதன் தந்திர புத்தியைக்காட்டும்.

இப்பட்சிக்குக் காகம், காக்கை என்னும் பெயர்கள் அதன் குரலினாலேயே வந்ததுபோலும்.

நாம் முன்கொண்ட அர்த்தத்தைப்போன்று (காகத்தின்கரைவை) நம் வாணாட்களை வீணாட்களாக்கா திருக்கும்படி செய்கின்ற "ஆனந்தபோதினி," வற்புறுத்தியும் கூறுகின்றது.

இவ் "வானந்தபோதினி" யாகிய மாதாந்தரப் (புத்தகம்) பத்திரிகை தன்னுள்ளடக்கியுள்ள விஷயங்களைத் தானே யுட்கொள்ளாது (காக்கையைப் போன்று) எல்லோர்க்கும் ஊட்டுகின்றது. காகம்சுத்தமாயிருப்பதேபோன்று, நம் "ஆனந்தபோதினியு" மிருக்கின்றது. ஆகாயத்தைச் சுத்தப்படுத்துகின்ற காகத்தைப்போன்று பூமியின்கண்ணுள்ள மானிடரிடம் அமைந்திருக்கின்ற துற்குணங்களை யொழியும்படிசெய்து சுத்தமாக்குகின்றது. தந்தனப்பாட்டு, பிஞ்சனக்கூத்து முதலியவைகளைப் போன்ற வீண் விஷயங்களைக் கூறும் சில சஞ்சிகைகளைப்போல் இராமல், சன்மார்க்கத்தையே போதிக்கின்றது. தந்திரத்துடன், நம்மாப்தமித்திர "ஆனந்தபோதினி," சாந்தமாக புத்தியை யுண்டு பண்ணும் தன்மையதாய், அறிவை விருத்திசெய்யும்படியான சமாசாரங்களையே போதிக்கின்றது.

இத்தகைய செல்வத்தைத் தன்னுள்ளடக்கிக்கொண்டிருக்கும் காரணத்தின்பொருட்டே சந்தாதாரர்கள் யாவரும் சேர்ந்திருக்கின்றார்கள் என்பது "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் விளங்கும்.

"ஆனந்தபோதினி" யை தமிழபிமானிகள் யாவரும் கட்டாயம் வாசிக்கவேண்டும் என்று அறிவாளிகள் யாவர்க்கும் தெள்ளிதின் விளங்கும்.

"படிப்பில்லாதான் பாதிமனிதன்" என்பதையொக்க, "ஆனந்தபோதினி படியாதவன் அரைமனிதன்" என்று சொல்லத்தகும் ஆகலின் நம் தமிழபிமானிகளியாவரும் சந்தாதாராகி, "ஆனந்தபோதினியை—மார்க்கண்டேயரைப்போல்—என்றும் பதினாறாக விருக்கும்படி செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

T. P. குப்புசாமி, மதுரை.

பிராமணர்கள் கலியாணம்.

மாப்பிள்ளையின் கொண்டாட்டமும் மாமனார் திண்டாட்டமும்.

நமது இந்துக்களில் நடக்கும் கல்யாணங்களில் பிராமணர்கள் கலியாணம் கவனிக்கத்தக்கதா யிருக்கிறது. பிராமணர்களில் பெண்ணைப் பெற்றவன் பெரிய பாவத்தைச் செய்தவனாகிறான். பெண் பிறந்ததுமுதல் தகப்பன் எல்லா

வித கஷ்டங்களுக்கும் ஆளாகிறான். பெண்ணுக்குப் பத்து அல்லது பதினொரு வயதானதும் தகப்பனுக்குக் கவலைகள் அதிகமாகின்றன. தைமாதம் பிறந்ததும் பிரம்மச்சாரி கோர்ட்டுகள் திறக்கப்படுகின்றன. அதாவது கலியாணநாட்கள் ஆரம்பிக்கின்றன. பெண்ணின் தகப்பன் தன்னுடைய சினேகிதர்களிடத்திலும், உறவினர்களிடத்திலும் தன் பெண்ணுக்குத் தகுந்த மருமகனைத் தேடிக் கொடுக்கும் படி சொல்லுகிறான். மாசிமாதம் வந்ததும் கலியாணத்துக்குவேண்டிய சாமான்களை வாங்கித் தகுந்த ஏற்பாடுகளைச் செய்கிறான்.

இவன் எந்தமாதிரி மருமகனை வேண்டுகிறான் என்று கவனிப்போம். "பையன் தகுந்த ஜாதி குலத்தில் பிறந்திருக்க வேண்டும், தக்க ஆஸ்திகளுடையவனாயிருக்க வேண்டும். நன்றாகப்படித்துக் கொண்டிருக்கவேண்டும். பார்ப்பதற்கு அழகாயிருக்கவேண்டும்" என்றிப்படி பலகுணாதிசயங்களிருக்கவேண்டும் என்று சொல்லுகிறான். ஆனால் இப்படி எல்லாம் பொருந்திய மருமகன் கிடைக்கிறதில்லை.

இது இப்படியிருக்கப் பிள்ளையைப் பெற்றவனைக் கவனிப்போம். இவனோ பாக்கியசாலி. இவன் தன் பிள்ளையின் கலியாணத்தைப்பற்றி கவலையற்றவனாயிருக்கிறான். இவனை இவன் பிள்ளையின் கல்யாணத்தைப்பற்றி யாராவது கேட்டால் இவன் எப்படிப்பட்ட நாட்டுப் பெண்ணைக் கேட்கிறான் என்று கவனிப்போம். பெண் அழகாயிருக்க வேண்டியது முதல் கவனிப்பு. பிறகு பையன் மெட்ரிகுலேஷன் வகுப்பில் வாசித்தால் ஆயிரம் ரூபாயும் இன்டர்மீடியேட் வகுப்பில் வாசித்தால் இரண்டாயிர ரூபாயும் பி. ஏ. வகுப்பில் வாசித்தால் மூவாயிரம் ரூபாயும் கேட்கிறான். இது எதற்காக? பெண்ணைச் சம்ரக்ஷிக்கவா அல்லது நகைகள் செய்யவா அல்லது பையன் படிக்கவா? இல்லை. பையனை விலைக்கு விற்கிறான்.

பெண்ணின் தகப்பனார் இவ்வளவு பணம் கொடுக்கத் தயங்குகிறான். பங்குனிமாதம் பிறந்ததும் பெண்ணின் தகப்பனார் அடுத்த வருஷம் கலியாணம் செய்யலாம் என்று சொல்லுகிறார். ஆனால் இவன் மனைவி அந்த வருஷமே செய்துவிடவேண்டும் என்றும், அடுத்த வருஷத்தில் பெண் புஷ்பவதியாய்விடுவாள் என்றும் சொல்லுகிறாள். தகப்பனுக்குக் கவலை அதிகமாகிறது. தான் ஊர் ஊராக மருமகனைத்தேடிக்கொண்டு பிரயாணம் செய்கிறான். சித்திரை மாதமும் செல்கின்றது. அந்தோ! கடைசியில் இவன் கதியென்ன? இவன் தனது ஆஸ்தியை விற்கின்றான். கடைசியில் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கொடுப்பதாக ஒத்துக் கொள்ளுகிறான். இவனுக்குக் கலியாணச் செலவு ஆயிரம் ரூபாய்க்கு மேல் பிடிக்கிறது.

பிராமணர்கள் கலியாணத்தில் இன்னும் எவ்வளவோ கெடுதல்கள் இருக்கின்றன. முன் காலத்தில் ஸ்திரீதனம் என்று பெண்ணின் தகப்பன் ஏதாவது தன்னால் இயன்ற திரவியத்தையும், சிலவஸ்திரங்களையும், ஆபரணங்களையும் கொடுப்பது வழக்கம். ஆனால் இப்பொழுது இது ஒரு சட்டமாக ஏற்பட்டு விட்டது. பிள்ளை வீட்டுக்காரன் குறிப்பிட்ட பணத்தைக் கொடுத்தால் தான் கலியாணம் செய்வதாகச் சொல்லுகிறான். இவன் என்ன கருத்துடன் இதைவாங்குகிறான்? இந்தப் பணத்தைக்கொண்டு இவன் ஆயுள் முழுவதும் ஜீவனம் செய்ய முடியுமா? பெண்வீட்டுக்காரன் எவ்வளவு வயிறு யெரிந்து கொண்டு பணத்தைக் கொடுக்கிறான் என்பதை இவன் கொஞ்சமேனும் யோசிக்கிறானா? இந்த விஷயத்தில் படித்தவனும் படிக்காதவனும் ஒன்றாகிறான். படிக்காதவனைக் காட்டிலும் படித்தவன் இன்னும் அதிகமாக பணம் கேட்கிறான்.

"ஐந்து பெண்கள் பெற்றால் அரசனும் ஆண்டி" என்கிறபடி பெண்ணைப் பெற்றவர்களுக்கு இக்காலத்தில் நாலாவிதத்திலும் செலவு. ஆப்பைக்கூடு அறுவாமனை முதற்கொண்டு எல்லாவற்றையும் விற்றுக்கலியாணம் செய்கிறான். இதோடு இவனை விடுகிறதில்லை. பெண் புஷ்பவதி யாகிறதற்கும், சாந்திக் கலியாணம் செய்கிறதற்கும், சீமந்தக் கலியாணத்திற்கும் ஒவ்வொன்றிற்கும் இருநூறு, முன்னூறு ரூபாய் செலவழிக்க வேண்டிய தாயிருக்கிறது.

இப்படி இவனை வற்புறுத்தி அவனிட மிருந்து பணம்வாங்குவதில் பிள்ளை வீட்டுக்காரர்களுக்கு என்ன சந்தோஷமோ தெரியவில்லை. கலியாணம் ஆன பிறகு சின்னக் கலியாணங்களுக்குச் சரியாக ஒன்றும் செய்யாவிட்டால் பிள்ளை வீட்டுக்காரன் வேறுகலியாணம் செய்வதாக பயமுறுத்துகின்றான். இன்னும் சிலர் பெண்ணைக் கஷ்டப்படுத்துகிறார்கள்.

இந்தியர் ஒரு கௌரவஜாதியாராக முயன்று கொண்டிருக்கின்றது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஒவ்வொரு நாளும் நாகரிகமும் கல்வியும் பரவிக் கொண்டிருக்கும் பொழுது பிராமணர்களில் இந்தக் கெட்ட வழக்கங்களை அநுபவத்தில் இன்னும் வைத்துக்கொண்டிருப்பது விசனிக்கத்தகுந்ததாயிருக்கிறது. பிறரையும் நம்மைப்போல் நினைத்து திரவியத்திலிருக்கும் பேராசையை விட்டு விடவேண்டிய தவசியம்.

கே. அனந்தாசாரி.

குறிப்பு:—இது மிக்க விசனிக்கத்தக்க விஷயமே. பணமில்லாமல் பெண் மட்டு முள்ளவனுக்குண்டாகும் துயரம் சொல்லத்தரமல்ல. ஜெனித்தல் ஆணும் பெண்ணும் கலந்தே யாதலால், இத்துயரம் குலம் முழுதிற்குமே யுண்டெனல் நிச்சயம். மேற்கூறப்பட்டபடி பெண்வீட்டார் பிள்ளையை மாடுவாங்குவது போல் வாங்குகிறார்கள் என்றே கூறலாகும். இதை அகௌரவமாய்க் கருதுகிறார்களில்லை. பி. ஏ. விற்குப் படிக்கிறவனுக்கும் அது தோற்றவில்லையெனில் வயிற்றுப் படிப்பால்யோக்யதை வருவதில்லையென்று நன்குவிளங்குகிறது. ஆயினும்யாவரும் ஆங்காங்கு கூட்டங்கள் கூடி இவ்வழக்கத்தை யொழிப்பதெனில் பண ஆசையாதலின் கஷ்டம். பெண்வீட்டுக்காரன் தன் பெண்ணைக்கொடுக்கும் போதுதான் இக்கஷ்டம் அவனுக்குத் தோன்றுகிறது. தன்பிள்ளைக்குக் கராக்கி வந்தாலோ அவனை அட்டத்தில் ஏறியுட்கார்ந்து கொண்டு "என் பையன் பி. ஏ. வரையில் வாசிப்பான்; கட்டாயம் இரண்டாயிரம் ரூபா கொடாவிட்டால் பேச வேவேண்டாம். அதோ நேற்று சீமாச்சிவந்து அவாவூர்லே பூண்டிவகைறு தாதாச்சாரி மாப்ளே டிப்டி கலெக்டராயிருக்காராம், அவர் பெண்ணுக்கு இரண்டாயிரமும் கொடுத்து இரண்டுகாணி பூமியும் தாரானாம். பையனை பி. எல். வரைக்கும் படிக்க வைக்கிராளாம். நம்ப பையனுக்கு முடிச்சுட்டுமா என்னு கேட்டுப்போயிருக்கான்!" என்று தடபுடலாய்ப் பேசுகிறார். அந்தோ பணப் பேயே! பணப்பேயே!! பெண் வீட்டாரே மாப்பிள்ளையைத் தேடுகிறவரையில் இது ஒழிவது கஷ்டமே. பெண்ணைத் தேடப் பிள்ளை வீட்டாரே வரட்டுமென்றிருந்தால் இது தானே ஒழிந்துவிடும். அப்போது புஷ்பவதியாகுமுன்பே தான் பெண்ணுக்கு மணமுடிக்க வேண்டுமென்ற நிபந்தனை யொழியவேண்டும். நாகரிகம் நாகரிகம் என்று பறையறையும் இக்காலத்திலும் அனேககெடுதிகளுக்காதாரமான இவ்வழக்கத்தை யொழிக்காதிருப்பது மிக்க விசனிக்கத்தக்கதே.

எப்படியாயினும் கற்றுணர்ந்த, அந்தணர்சிலர்கூடி, இரண்டு வழிகளில் எந்த ஒரு வழியிலாவது இதை யொழிக்க வேண்டுமென்று சிரத்தையோடு (கூட்டமாய்க்கூடி) முயலவேண்டும். வீணாய் அங்காங்கு ஒவ்வொருவர் கூறிக் கொண்டு இருப்பதில் பயனில்லை. அனுபவமாய் முயன்று இதை யொழிப்பவர்களுக்குப்

பெரும்புண்ணியமேயாகும். இதோடு கிழவர்களுக்குச் சிறுபெண்களைக் கொடுப்பதையும் ஒழித்தால் இன்னும் புகழும் புண்ணியமும் கிடைக்கும்.

பத்திரிகாசிரியர்.

வியாசமும் பத்திரிகாசிரியரும்.

தமிழ்ப்பாஷையிலுள்ள நூல்கள் பத்திய (பாட்டு) ரூபம் கத்திய (வசன) ரூபமென இரண்டுவகைப்படும். முற்காலத்தில் வசனப்பிரபந்தங்கள் காண்பதரிது. தற்காலத்தில் வசனப்பிரபந்தங்களே யன்றிப் புதிதாகச் செய்யு நூல்கள் இயற்றுவார் மிகச் சிலர். ஆனால் முற்காலத்தவர் பாடியருளிய பாட்டுக்களைப் பொன்னே போல்போற்றி, அச்செய்யு ளின்பங்களை அனுபவிப்பதோ டமையாது, தாமியற்றும் வசனப் பிரபந்தங்களாகிய வியாசங்களுக்கெல்லாம், அம் முற்காலத்தறிஞர் மொழிந்துள்ள பாக்களை அனுவதித்து ஆதாரமாகக்காட்டித், தாமெழுதும் வசனநூல்களைச் சிறப்பிப்பர் இக்காலத்து விவேகிகள். எத்துணை அதிகமான வசனநூல்களை ஐயந்திரிபின்றி ஓதியுணர்ந்தவரேனும், உத்தமப் புலவர்களாகிய முன்னோர்மொழிந்துள்ள பழந்தமிழ்நூல்களிற் பழகாதவர்களானால், அவர்கள் தக்க கல்வியாளர்களாய்க் கருதப்பட மாட்டார்கள். நிரம்பிய ஞானத்தைக்கொடுப்பது பழந்தமிழ்நூல்களே. பாருங்கள் திருக்குறளை. வியாசமெழுதும் விவேகிகளால் அதிகமாக எடுத்தாளப்படுவதன்றோ இப்பொதுமறை? வியாசம் எழுதுபவர் கம்பராமாயணத்திலோ, பாரதத்திலோ, சங்கப் புலவர்களின் பாடலிலோ, இன்னுமுள்ள மற்றெந்த நூலிலேயோ, தான் கொண்ட கருத்தைக் காட்டுவதாயுள்ள செய்யுளைக் காட்டித் தன் கருத்தைச் சித்தாந்தஞ்செய்வர்.

"முன்னோர் மொழிபொருளேயன்றி யவர்மொழியும்
பொன்னேபோல்போற்ற" வேண்டியதன்றோ?

தற்காலத்தவரின் க்ஷேமத்திற்கு பத்திரிகை இன்றியமையாததென்பது ஒருதலை. இதனை விவேகி எவரேனும் வேண்டுமென்றாவது மறுக்கவரமாட்டார். இப்பத்திரிகையைச் சிறக்கச்செய்வது வியாசமன்றோ?

வியாசம் எழுதுபவர், தாமெடுத்துக்கொண்ட விஷயத்தை எவருக்கும் விளங்கத்தக்க விதமாகச் சொற்குற்றம் பொருட்குற்றமின்றி இலக்கணப் பிழையில்லாது எழுதவேண்டும். சொல்லினும் பொருளினுஞ் சுவையுண்டாகுமாறு எவரும் விரும்பத்தக்கவிதமாக எழுதுவது நல்லது. வீணுகவார்த்தைகளை விரித்தெழுதல் கூடாது. சிலர் பக்கம்பக்கமாய் எழுதிவிட்டால் தன்னை அதிகம் படித்தவனாக ஜனங்கள் நினைப்பார்களென்று எண்ணுவர். சுருங்கச்சொல்லல் வியாசத்திற்கு அழகு. ஆனால் தெளிவாய் எழுதல்வேண்டும். "தெளிவெனப் படுவது பொருள்புலப்பாடே" தண்டியலங்காரம்.

இதனை 'விளங்கவைத்தல்' என்பர் நன்னூலார். நச்சினார்க்கினியர் பரிமேலழகர் முதலியவர்களின் உரைநூல்களைப்பார்த்தால், இவர்கள் வசனங்கள் செய்யுட்கள்போன்று சந்தவின்பம் உடைத்தா யிருத்தலையுங்காணலாம். இவர்களின் உரையில், இலகுவில் அறியமுடியாத நுட்பமான அரியவிஷயங்கள் பல தெளிவாய்ப் புலப்படும். இதனால் இவர்கள் ஆழமான கல்வி யறிவுடையவர்களென்று தமிழ்மக்களால் புகழப் பெற்றிருக்கின்றனர்.

வியாசம் எழுதுபவர் இப்படி அரிய விஷயங்களைத் தமது வியாசத்தில் வெளிப்படுத்துவாரானால், அவருடைய வியாசம் ஆழமானதென்று சொல்லப்படும். பவணந்தி முனிவர் சொல்லிய *சுருங்கச்சொல்லல் என்னுஞ் சூத்திரத்தில் 'ஆழமுடைத்து' என்று கூறுவதற்குப் பொருள் இதுவே.

சிலர் இதனை யறியாது இலகுவில் பொருள் விளங்கமுடியாத சொற்களால் எழுதுவர். இப்படிப்பட்ட வியாசம் அவ்வளவு நல்லதல்ல; படிப்பவருக்குச் சிரமத்தோடு வெறுப்பையுங்கொடுக்கும்.

முறைப்படி நன்றாய் எழுதப்படும் வியாசம் எல்லாராலும் விரும்பப்படும்.

"விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."—திருக்குறள்.

இதன்பொருள்: சொல்லப்படுங் காரியங்களை நிரல்படக்கோத்து இனிதாகச் சொல்லுதல் வல்லாரைப்பெறின் உலகம் அவற்றை விரைந்தேற்றுக்கொள்ளும்.

நிரல்படக் கோத்தல்=முன்சொல்வனவும் பின் சொல்வனவு மறிந்து, முன்னே சொல்லவேண்டியவைகளை முன்னும் பின்னே சொல்லவேண்டியவைகளைப் பின்னும்வைத்தல். இனிதாதல்=கேட்பார்க் கின்பம்பயத்தல். இப்படிப்பட்ட வியாசம்கேட்டாரைப் பிணிக்கப்பண்ணுவதோடு கேளா (பகைவ)ரையும் வேட்ப (விரும்ப)ச் செய்துவிடும்.

தக்க அறிஞரென்று உலகத்தவர்களால் மதிக்கப்பட்டவர் வார்த்தைகளுக்கு முரண்பட எழுதலாகாது; தழுவி எழுதல்வேண்டும்.

ஒரு விஷயத்தை எழுதுபவர் தாமெழுதும்விதமாகவே ஒழுகல்வேண்டும்.

இப்படிச் செய்வதனாலேயே ஒருவரிடத்துச் சனங்களுக்கு விசுவாசமுண்டாகும். சொல்லொன்று செய்கையொன்று ஆகாது. தான் எழுதுவதற்கு மாறான நடக்கையுடைய ஒருவன் ஒன்றைப்பற்றிக் கண்டித்துப்பேசினால் அல்லது எழுதினால் ஜனங்கள் இம்மனிதனைப் பெரிதும் ஏளனஞ்செய்வாரன்றோ? இவனது பேச்சில் அல்லது எழுத்தில் சனங்களுக்கு விசுவாசமில்லாமலிருப்பது அனுபவமல்லவா? இதுவரையும் வியாசத்தைப்பற்றி அறிந்தவரையில் எழுதினோம். இனிபத்திரிகாசிரியரைப்பற்றி எழுதுதும். (தொடரும்)

பொ. நடராஜன், மேலைப்புலோலி.

பகவத்கீதை—கருமயோகம்.

குறிப்பு:—ஆலயவழிபாடு, தன்னைத்தானே சீர்திருத்தல், தந்தைதாய்ப் பேண், கல்வியும் ஒழுக்கமும், காலைக்கடன், இந்துமதம், நிராசை யென்னும் விஷயங்களை யெழுதிய அன்பார்ந்த என் சகோதரர்களுக்கு அடியேனுடைய மனப்பூர்த்தியான வந்தனத்தைச்செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பேர்ப்பட்ட அன்பர்கள் நமது சஞ்சிகையின் சந்தாதாரர்களாகச் சேர்ந்து விஷயதானம் செய்து வருவதில் ஊக்கத்துடனிருப்பதை யோசிக்க, நமக்கும் நமது தாய்நாட்டுக்கும் எல்லாம் வல்ல பரம்பொருள் நன்மை யளிக்கக்கருத்து கொண்டதாக யூகிக்கப்படுகிறது. கல்விகற்று ஊமையைப்போலிருப்பதில் பயனென்ன? அவரவர்களுக்குத் தெரிந்தவிஷயங்களைப் பலருமறியச்செய்வதே பொதுநலமாகுமன்றோ. ம-ள-ள-ஸ்ரீ, ஆரணி. குப்புசாமிமுதலியாரவர்கள் எழுதிய வியாசம் ஒவ்வொருவர் மனதிலும் பசுமரத்தில் கடாவிய சுள்ளாணிபோல்

---

* சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை ஆழமுடைத்தாதல், முறையின்வைப்பே உலகமலையாமை, விழுமியது பயத்தல்விளங்கு உதாரணத்தாகுதல், நூலிற் கழகெனும் பத்தே.

பதிந்து யிருக்குமென நம்பப்படுகிறது. நித்திரைசெய்துகொண்டு இருப்பவர்களை மாதம் மாதம் நமது 'போதினி, வந்து விழித்துக்கொள்ளும்படி அன்பர்கள் எழுதிய வியாசத்தைத் தாங்கி உலாவுவதால் நமக்குற்றகுறைகளெல்லாம் அதிசீக்கிரத்தில் தீரத் தடையில்லை. இச்சஞ்சிகையின்கண் சந்தாதாரர்களாயிருக்கிற சகோதர சகோதரிகள் ஒற்றுமையுடன் பொது நலங்களுக்குப் பாடுபட முயற்சிக்க மிக்க வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறதோடு நமது போதினி நீண்ட ஆயுளுடன் உலாவிகொண்டிருக்க சர்வேஸ்வரனை பிரார்த்திக்கின்றனன்.

அத்தியாயம்-2. சுலோகம் 40—(பலாபேக்ஷையின்றிப் பகவத் தர்ப்பணமாகச்செய்யப்படுங் கருமயோகத்தில் எத்தனிப்பது வியர்த்தமாகாது; தோஷமில்லை. இந்த நிஷ்காமகருமமாகிய தருமத்தின் சிறியபாகமும் மிகப்பெரிய ஜனனமரண பயத்தினின்று நீக்கும்.

(சங்கராசாரியசுவாமிகள், ஸ்ரீதரசுவாமிகள் வியாக்யானம்) வேறு கருமங்களைச் செய்யத்தொடங்கி அவை பூர்த்தியாகாமற் போனால் பயனின்றிப் போவதுபோல் நிஷ்காம் கருமம் போகாது. செய்தமட்டில் மோக்ஷசாதனமாகிய மிகப்பெரிய பிரயோஜனத்தைக் கொடுக்குமென்பது உண்மை.

" வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல் " (திருக்குறள்)

என்றார் நாயனார். இதனாலே அறம் வீடு பயக்குமென்பது பெறப்பட்டது. குடும்பங்களிலிருந்து லௌகீக காரியங்களைச் செய்துவரும் நமது சகோதர சகோதரிகள் எளிதில் ஞானத்தையடைந்து மோக்ஷம் பெருவதற்கும், இஷ்டசித்தியை இவ்வுலகின்கண் அடைவதற்கும், நிஷ்காம கருமயோகம் மிகவும் சுலபமாகவும் அதுஷ்டிக்கக் கஷ்டமின்றியுமிருக்கிறது. இக்கருமயோகத்துக்கு உபகரணங்கள் அதிகமாகத் தேவையில்லை. நிச்சயமான புத்தி ஒன்றே போதுமானதாகவிருக்கிறது. அப்படி நிச்சயசொரூபமான புத்தியை அடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் பிறர்க்குச் செய்யும் நல்விஷயமான உபகாரங்களுக்கு அவர்களால் பிரதி பிரயோசனத்தை விரும்பாது எல்லாக்காரியங்களும் பகவானுடைய திருவருளால் நடப்பதென்று நிச்சயித்து, பிராணிகள் மனோ வாக்கு காயங்களால், செய்வதெல்லாம் பகவானுக் கற்பணம் செய்துவந்தால், ஓர்வித கஷ்டமின்றியும் பாவ புண்ணியப் பற்றில்லாமலும் சித்த சுத்தியை அடைவதோடு, ஞானத்தையடைய எளிதில் வழியுண்டாகும். இதற்குவமானமாக (பாஷியக்காரர்) பலாபேக்ஷையில்லாமலும் * கர்த்திருத்துவ அபிமானமில்லாமலும் ஈசுவராதீனமாக நீ கருமத்தைசெய்தால் அதன் பலனையடையாமல் மோக்ஷத்தை யடைவாயென்றும், (ராகவேந்திரசுவாமிகள்) மோக்ஷத்தில் அதிக ஆனந்தம் உண்டாகும் பொருட்டு ஞானியும் பலாபேக்ஷையின்றி சத்கருமங்களைச் செய்துவருகிறான் ஆகையால் நீ குடும்பியாகயிருப்பதால் நீ செய்யாது யிருக்கக்கூடாதென்றும் பகவான் அருச்சுனனுக்கு அருளினார் என்று அருளியிருக்கிறார்கள்.

அத் 2. சுலோகம் 50. அறிவுடையோன் புண்ணிய பாவங்களிரண்டையும் இந்தலோகத்திலே யல்லது இந்தச் சன்மத்திலே நீக்கிக்கொள்கிறான். ஆதலால் யோகத்தின்பொருட்டு முயற்சிசெய்த கருமங்களிலுள்ள சாமர்த்தியம்

* கர்த்திருத்வ அபிமானம்:—ஒருவன் ஒரு கன்மத்தைச் செய்யும்போது "யாவும் ஈச்வரச்செயலால் நடக்கிறது. நம்மால் ஒன்றுமில்லை. நமக்கு இதனால் ஒரு பயனும் வேண்டாம்" என்று மனதில் பதிந்த நாட்டத்தோடு செய்யவேண்டும். அப்படிக்கின்றி " இதை நாம்தான் செய்கிறோம் " என்ற எண்ணங் கொள்வதே கர்த்திருத்வாபிமானம்.

யோகமென்று சொல்லப்படுகின்றது. (ஸ்ரீதரசுவாமிகள்) " கருமங்களிலுள்ள சாமர்த்தியம் " என்பது, கருமங்களின் சுபாவம் பந்தஞ் செய்யத்தக்க தாயினும் அவற்றையே சிலர் பலாபேக்ஷையின்றி ஈஸ்வரார்ப்பண புத்தியோடு செய்து அவற்றையே மோக்ஷத்திற்குச் சாதனமாகச் செய்துகொள்கிறார்கள் என்றும், மேற்படி அத்தியாயம் சுலோகம் 51-ல் புத்தியோடு கூடினோர்கள் கருமத்தாலுண்டாகின்ற பயனை யொழித்து, ஞானமுடையவர்களாகிப் பிறவித் துன்பங்களினின்று நீங்கித் துன்பமற்ற பதவியை அடைகின்றார்களென்பது பிரசித்தமென்றும் யிருப்பதால்,

என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே ! காலத்தை வீணே செலவிடாமல் நல்லமார்க்கத்தைக் கையாடி, பரோபகாரத்தைக்கருதி, கர்த்தனைக் கருத்தில் நிறுத்தி, யாவரிடத்திலும் கருணைபூண்டு நடந்துக் காலக்கிரமப்படி செய்யவேண்டியதைவெளிப்பார்வைக்கு நாம்செய்கிறதுபோலக் காட்டி, உள்நாட்டத்தில் எல்லாம் பகவான்செயலென்று நினைந்து ஒழுகினால், அவர்கள் அடையும்பெருமை இவ்வளவென்று சொல்லமுடியுமோ ! நாம் சுமக்கக்கூடிய சுமையைத் தூக்கிக்கொண்டு ஒரு ஊர் பிரயாணஞ்செய்தால், கஷ்டமின்றி குறிப்பிட்ட இடஞ் சேரலாம். தூக்கக்கூடாத பெருஞ்சுமையை எடுத்துச்சென்றால், எவ்வளவு தூரம் போகலாமென்பதைச் சற்றே ஆலோசித்துப்பாருங்கள். அப்படிபோற் குடும்பியாயிருக்கிற நாம் எவ்வளவுவரையில் எதைச் செய்யலாமோ, அவ்வளவு வரையில் அதைச் செய்தால் எல்லா நன்மையு மடையலாமே. இதைத் தவிர்த்து முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டதுபோலவும், பொருள் இல்லாதவன் மோட்டார்கார் சொந்தமாக வாங்கி சவாரி செய்ய நினைத்ததுபோலவும், நமது சகோதர சகோதரிகளில் சிலர் வேதாகம சாஸ்திரங்களை விலக்கிக் கைக் கெட்டாததும், எட்டினாலும் பயன் அளிக்காததுமான அன்னிய ஆசாரங்களை அனுசரிப்பதில் பிரியம் வைத்துத் தாங்களும் கெட்டுத் தங்களுக்குக் கீழ் நிலைகளாக வரக்கூடிய குழந்தைகளையும் கெடுத்துவிடுகிறார்கள். அந்தோ, இது என்ன பரிதாபம். கலியின் கூற்றோ ! அநாதிகாலந்தொடங்கி நமது இந்துதேசத்தில் குழந்தைகளுக்கு முதல் வித்தியாப்பியாசம் செய்யத் தொடங்குங்கால் "ஹரியோம், நன்றாக, குருவாழ்க, குருவேதுணை" என்பதை முதலில் சொல்லிக் கொடுத்து, ஹரிநமோத்துசிந்தம் என்பதை இரண்டாவதாய்த் தெரிவித்து பின்னர் மற்ற அட்சரங்களைச் சொல்லிக் கொடுக்கும் வண்ணம் இப்பொழுது கிஞ்சிற்று மில்லையே! காரணம் ஞானமென்பது இல்லாமையானதே.

சிறுவர்கள் வயிற்றுப்படிப்பை யெவ்வளவு அதிகமாய்ப் படிப்பதாயினும், முதலில் நமது தாய்ப்பாஷையைச் சற்றாவது கசடறக் கற்றுப் பிறகு வேறெதையும் கற்கும்படிப் பெற்றோர் ஏற்பாடுசெய்யவேண்டும். அவ்வாறு நமது தாய்ப் பாஷையிலுள்ள நூல்களைக் கற்றபின் மற்ற அன்னியபாஷா நூல்களை யெவ்வளவு அதிகமாய்க்கற்றாலும் அவர்கள் கெட்டமார்க்கத்தில் செல்லாவண்ணம் நமது முன்னோர் நூல்கள் பாதுகாக்கும். அடுத்த சஞ்சிகையில் கன்மயோகத்தின் மற்றவிஷயங்கள் கூறப்படும்.

நா. அ. குருசாமிதாயுடு.

குறிப்பு.—நாம்செய்யும் கன்மங்களே பிறப்பிற்குக் காரணமாகின்றன. இப்போது நாம் இவ்வுலகில் ஜனிக்க நேர்ந்ததன் காரணம் முன் ஜனனத்தில் செய்த கன்மங்களின் பலனை யனுபவிக்கவேண்டியே—பிறந்தபிறகு நாம் செய்வது கன்மமே. இறக்கும்போது கூடக் கொண்டுபோவது கன்மமே. அக்கன்மபலனை யனுபவிக்கவே மறுபடி ஜெனனமெடுக்கப் போகிறோம். மாறிமாறிவரும் இக்கன்மமே நமது மிறப்பிறப்பாகிற சக்கிரத்தின் இருகா

யிருக்கிறது. ஆனால் இதே கன்மத்தை நாம் பிரதிபலன்கோராது ஈசுரார்ப்பண மாய்ச் செய்தால், இதுவே முத்தியை யளிக்கவல்லது. நாம் எதைச்செய்தாலும் அதற்கொருபலனைக்கோராது, எல்லாம் ஈசன்செயல், எல்லாம் அவன் பொருட்டென்று செய்துவந்தால் நமக்கு நான் எனது என்ற அகங்காரப்பற்று ஒழிகிறது, அதொழியவே நிராசைஜனித்து சித்தசுத்தி யுண்டாகிறது. சித்தசுத்தி யுண்டாகவே ஞானம் உண்டாகி, அதன் வழியாய்ப் பிறப்பிறமாகிய தளை நீங்கி சச்சிதானந்தமயமாகிய பேரின்ப நிலையை யடைகிறோம்.

பத்திரிகாசிரியர்.

தொழில்—தொழிலாளர்.

இப்பெரும் புவிமீது பிறந்தோரில் முற்றந் துறந்த முழுஞானிகளல்லாதாரனைவரும் தம் உதரபோஷணத்திற் காகவும், இன்னும் பலவித உபயோகத்தின் பொருட்டும் ஏதேனும் ஓர் விருத்தியை நாடிக் காலங்கழிப்பாராவர். அவரவர் புரியும் தொழில்கள் அவரவரின் அந்தஸ்துக் கேற்ப பலவாகும். நம் பாரத பூமியில் வியவசாயம் செய்வோர்களே அதிகம்; அடுத்தபடி சிறிய சம்பளத்தி லமர்ந்து, இராப்பகல் உழைத்து, அன்றாடங் காய்ச்சிகளாய் நாட்போக்கும் சேவகத்தைக் கைக்கொண்டோர்பலர்; இன்னும் நடுத்தர அல்லது உயர்ந்த உத்தியோகத்திலமர்ந்தோர், வியாபாரிகள், லேவாதேவி செய்வோர், ஆக ஏழைகளும், தனிகரும் தத்தம் கருமங்களை ஈட்டுகின்றனர். இவ்வாறாய தொழில்கள் யாவும் கிரமமாகக் கைக்கொள்ளப்படின் குற்றமற்றனவே. மேம்பாடுள்ளனவாம். அப்படிக்கின்றி, ஊழியர்களை அனாவசியமாக ஏமாற்றித் தொந்திரவு செய்யும் எஜமானர்கள், சமயத்துக்கேற்றபடி வஞ்சித்து ஒன்றுக்கிரண்டாய் விலைகூறும் வர்த்தகர்கள், ஏழைகளிடம் சிறிதும் இரக்கமின்றி வட்டி, வட்டிக்கு வட்டிவாங்கி கடனாளிகளின் வீடு வாயிலையும் ஏனையபொருள்களையும் தமதாக்கி அவ்வேழைகளைப் பிச்சைக்காரராகத் தெருவிலோட்டும் லேவாதேவி வணிகர்கள், தங்களைப் பட்சத்துடன் நடத்தி அன்னமிட்டுக் காப்பாற்றிவரும் எஜமானர்களை அவர் அவ்வாறு புரியும் நன்மைக்கு மாறாக எச்சமயத்தில் அவருடைய எப்பொருளைக் கவரலாமென்றும், எவ்விதம் அவரை ஏமாற்றலாம், எம்மாதிரி தீச்செயலால் அன்னோரைத் தம்கையில் சிக்கு விக்கலாமென்றும் நாடும் சேவகர்கள் ஆகிய அனைவரும் பாதகராவர்.

மேற்போந்த நற்றொழில்களல்லாமல், சூது, களவு, பொய், வஞ்சகம் இவைகளால் ஜீவிப்போர் தம் வாணாளை வீணாளேயாக்குவார்.

தம் மெய்வருந்திப் பூரண விசுவாசத்துடன் தமது அன்ன தாதாவுக்குத் தொண்டுபுரிந்த அநேக வேலையாட்களுள் ஒரு மாதின் அருஞ்செயலை இப்பொழுதுகூறி, பிறகு ஏனைய அந்தஸ்தாரின் தொழில்கள் நல்வழியிலோ அல்லது மாறாகவோ செய்யப்பட்டு அவ்வவ்வழி பெற்ற சுகதுக்கங்களைக் கூறுவாம்.

'நன்றி மறவேல்', 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' இவைபோன்ற நம் பெரியோர்களின் முதுமொழிகளுக்கேற்ப பன்னாபாய் என்ற ராஜபுதனத்து அற்பவேலைக் காரியின் அருஞ்செயலைக் கூறுமிடத்து, எட்மண்ட் ரஸ்ஸல் என்பவர் அம்மாதரசியை வேலைக்காரருள் ஓர் அவதாரமாக வுரைக்கிறார். இன்னும் இந்திய ஐரோப்பிய சிப்பந்திகளைக் குறித்து ஒப்பிட்டுக் கூறுங்கால் இந்திய வேலைக்காரரைப் பெருமையுடன் கொண்டாடுகிறார். ஏனெனில் சுபாவமாகவே தம் எஜமானர்களை அன்னோர் மிகமதிப்புடன் தெய்வத்துக் கடுத்தபடி நினைத்து அவர்களுடைய செல்வ சௌகரியங்களைப்பற்றி மேனாட்டு ஊழியர்களைப்போல

பெறுமை கொள்ளாது தமக் குயிர்ப் பிச்சையிட்டுவரும் நாயகர்களுக்கு எள்ளென்னு முன் எண்ணெயுடன் நின்று நற்றொண்டு புரிந்து எக்காலும் நன்மையையே நாடுகின்றனராம். அவ்விஷயம் பின் வருமாறு:—

வீரர்களானிறைந்த ராஜபுதன நாட்டில் வயதுசென்ற ஓர் அரசன் மரணத்தருவாயில் ஆறாண்டே வயதுடைய தன்னருங்குழவியாம் இளவரசனையும், தன்னாட்டையும் தன்னிடம் வெகு நலம் பெற்றுவந்த மந்திரியிடம் ஒப்புவித்து, ராச்சியத்தை நன்கு நடாத்துமாறும், இளையோனுக்குத் தக்கவயது வந்தபோது பட்டங்கட்டிப் பராமரிக்கு மாறுங்கூறி ஆவிதுறந்தான். பன்னாபாய் என்பவள் சிற்றரசுக்குத் தாதியாகவமர்ந்தவள். இவளுக்கும் ஆறுவயதுகொண்ட ஓர் ஆண் மகவு இருந்தது. சின்னாட்கடக்கவே, அம்மந்திரி பட்டத்துக்கும் தனக்கும் இடையூறாகவுள்ள சிறுவனாவியைப் போக்கித் தானே அரசனாகவேண்டுமென்ற பேராவாவால் தூண்டப்பெற்று, அவ்வெண்ணத்தை நிறைவேற்ற வழிகள் தேடுவானாயினன். அரசனிறந்த பிறகு சுயநலங் கருதும் மந்திரியின் நடைப்பாவனைகளாலும், தங்களுக் கேற்பட்ட இடுக்கண்களாலும், அவனது கள்ளப் போக்கைச் சிறிது தெரிந்துகொண்ட அன்னாட்டுச் சனங்கள் தமது யுவராஜனுக்கும் முன் போஜசக்கிரவர்த்திக்கு நேர்ந்த விபத்து வராவண்ணம் அரண்மனைச் சிப்பந்திகளை எப்பொழுதும் எச்சரித்து இளையோனைக் காத்து வரலாயினர். ஆகையால் மந்திரிக்குத் தான் விரும்பிய பாபச்செயலை வேறெவராலும் செய்விக்கக் கூடவில்லை, சங்கதி வெளிவந்தால் பிரஜைகளால் கலகம் ஏற்படுமென்று பயந்து தானே ஓர் சமயத்தில் வேலையை முடிக்கத் தீர்மானித்திருந்தான்.

தாதியோ பிரியத்துடனும், மிகஜாக்கிரதையுடனும் இளவரசைக்கவனித்து வந்தாள். இனி யரசனாகும் சிறுவனுயிருக்கு நஷ்டம் வராம லிருக்கவேணுமென்று ஜனங்கள் கோரும் வதந்தி அவள் செவிபுக, இரவுதோறும் அவள் சிற்றரசும் தன் மகனும் கண்ணமர்ந்தபின் முன்னவனது உடை, அணிகளைக் கழற்றித் தனது மகனுக்கிட்டு, தன்மகனை இளவரசின் படுக்கையிலும், இளவரசைத் தன் சிறுவனுடைய படுக்கையிலும் உறங்கச் செய்து வந்தாள்.

ஓர்நாள் நள்ளிருளில் தன்னுடுப்புகளில் மறைத்தவாளுடன் மந்திரி அரண்மனைக்குச் சென்று, இளவரசனறையில் நுழைந்து, அங்கு மஞ்சத்தில் நித்திரை போலது தான் தேடிவந்த சிறுவனே யெனத் தேர்ந்து, வாளால் வீசிச் சென்றான். ஒன்றை நினைக்கினதுவொழிந்திட் டொன்றாகும்? அந்தோ! பாபம்!!

பொழுது விடிந்தது. இளவரசன் காப்பாற்றப்பட்டான். 'உற்றவிடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர் பற்றலரைக்கண்டாற்பணிவரோ', என்பதற்கிசைய, பன்னாபாய், தன் ஏகபுத்திரனது முடிவைக் கருதாது, அரண்மனையை விட்டு வெளிப்போந்து மந்திரியின் தீச்செயலை முறசறைவித்து, மந்திரியை அவனது மனோராச்சியத்திலிருந்து மட்டுமல்ல, அப்பொழுது அவன் வகித்துவந்த இராச்சியபாரத்திலிருந்தும் கீழே வீழ்த்தினாள். சபாஷ்!

உடைமாற்றி, இடமாற்றிச் சிறுவர்களைத் தூங்கச்செய்து வருவதால் தன் பிள்ளையை இயமனுக்கு இறையாக்குவதாகத் தெரிந்திருந்தும், மாதரசிபன்னாபாயின் சேவகத்தை என்னே புகழ்வது! அவளது செய்ந் நன்றியறிவு எங்கே? மடமந்திரியின், "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா—முய்வில்லைச் செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என நாயனார் அருளிய அருண்மொழியின் அறிவால் அறி வுய்யாமல், செய்யப்பட்ட துஷ்கிருத்தியத்தை எதுவரை இகழ்வது! இன்னும்,

"மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டாம்—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூற
லுண்ணீரு மாகி விடும்.

என்ற மூதுரைப் பெருமாட்டியின் கன்மே லெழுத்துக்கு வேறு உதாரணமும் வேண்டுமோ!

ஆகவே, நாம் இங்கு சேவகாவிருத்தியைப் போற்றியெழுதக் கருதவில்லை. ஏனெனில், 'தொழுதூண் சுவையி னுழுதூணினிது' என்றார் பெரியோர். அனுபவத்திலும் இது உண்மையே. ஆனாலும், இங்கு, கூறவந்தது, எவர் எத் தொழிலைக் கடைப் பிடித்தாலும், அதைச் செவ்வனே செய்ய வேண்டு மென்பதாம்.

மீனாம்பாள். கே. சர்மா, மத்திய இந்தியா.

உண்மை யுயர்த்தும்—பொய் புதைக்கும்.

என் அன்புள்ள, நேயர் மணிகளே!

மனிதகோடிகளால் நிரம்பப்பெற்ற, இவ்வுலகத்தினிடத்தே, எத்தேசம் சென்றாலும், எந்த நாட்டில் இருந்தாலும், எல்லாரும் 'உண்மையைக் கைக் கொள்' 'வாய்மை கடைப்பிடி' என்று தங்கள் நாவினால் போதிக்கிறார் களேயொழிய, தாங்கள் சொல்லுவதுபோல் அனுஷ்டிப்பது 'அத்திப்பூப்பது' போல் காணப்படுகின்றது. நம்மவரிற் சிலர், ஏன்? அநேகர் தங்களுக்கு ஆபத்து வருங்கால், மெய்யை யுரைப்பின் நன்மைவருமோ, அல்லது தீமைவருமோ வென ஐயமுற்று, இரண்டில் ஒன்றை உறுதியாய்ப் பேசமாட்டாமல், 'இரு தலைக்கொள்ளி எறும்பு' போல் அகப்பட்டு விழிக்கின்றனர். உண்மை பேசி னால், ஒருகுற்றவாளி சொல்பதண்டனை யடைவதோடு ஒரே குற்றம் செய்தவனு மாக எண்ணப்படுகிறான். ஆனால் பொய்பேசினால், தான் செய்த குற்றம் ஒன்று பொய் சொல்வது ஒன்று ஆக இரு குற்றங்களுக்கும் ஆளாகி இருதண்டனையும் அடைந்து, இவ்வுலகத்தில் அவமதிப்பையும் நம்பிக்கைக் குறைவையும் அடைவ தல்லாமல், மறுமைப்பயனையும் கெடுத்துக் கொள்ளுகின்றான். ஆகையால் எப் போதும் உண்மையைக் கூறுவதே நலம் என்பதைப் பின்வரும் சிறுகதையால் விளக்குவாம்:—

ஓர் மகான் ஓர்மரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருந்தார். இதைப் பல நாட்களாகக்கண்ட ஒருவன் ஒரு நாள் அவரிடம்வந்து, "ஸ்வாமி நான் மகாபாபி, நாவால் சொல்லக்கூடாத பாவம் இவ்வுலகில் என்ன என்ன உண்டோ, அவை யனைத்தும் நான்செய்து தீர்த்தேன். நான் செய்யக்கூடாதென்று, மனமுறிந்து இருந்தபோதிலும், "தொட்டில்பழக்கம், சுடுகாட்டுமட்டும்" என்பதற்கிணங்க, நான் சிறுவயதில் கைக்கொண்ட தூர்ப்பழக்கங்களை யிப்போது விட்டுவிட என் னால் முடியாது. ஆகையால் என்னுடைய பழைய வழக்கங்களுடன் ஒரு உப தேசம், சிறிய உபதேசமீ செய்யவேண்டும். அவ்வுபதேசத்தால் நான் மறுமைப் பயனை யடையக்கூடியவ னாகவேண்டும். அளவற்ற திரவியம் சம்பாதிக்கவேண் டும். மேலான பதவி கிட்டவேண்டும். எல்லாரும் என்னைப் புகழவேண்டும். அப்படிப்பட்ட ஒரே ஒரு உபதேசம்மாத்திரம் எனக்குக் கிருபை செய்யவேண் டும்" என வேண்டிநின்றான்.

மகான் சிறிதுநேரம் மௌனம்சாதித்துக் கடைசியில் அவன்மேல் கருணை கூர்ந்து அன்ப! உன்வேண்டுகோள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டேன்.

நீ வேண்டியபடி உனக்கு ஒரே ஒரு உபதேசம் செய்கிறேன். நீ அதைக் கேட் டுக்கொண்டு போவதால் மட்டும் ஒருபயனும் இல்லை. அதன்படிநடக்கவேண்டும். அதாவது நீ எவ்விடம் சென்றாலும், எவ்விதமான ஆபத்து உன் உயிருக்கே வரு மானாலும், உன்தலையே போய்விட்டாலும், நீ எப்போதும் "வாய்மை" என்ற குணத்தைக் கடைபிடித்து, நடந்ததையும், நடக்கப்போகிறதையும், நடந்தது நடந்தபடியே சொல்லிவிடவேண்டும். இவ்விரதத்தை நீ அனுஷ்டித்துவந்தால், நீ கோரியவரங்களும், உன்மனதில் இருக்கும் ஒவ்வொரு கோரிக்கையும் நடந் தேறும். ஜாக்கிரதை! விரதம் தப்பிப் போய்விடப்போகிறது. போ என விடை கொடுத்தார்.

உபதேசம் அடைந்த இம்மனிதன் ஓர் கள்வனாகையால், சிலநாட்கள்கழித்து, ஓர்நாள் அரசன் பொக்கிஷ அறைக்குத் கன்னம்வைக்கக் கருதினான். ஆகை யால் நடுநிசி யடையவும், தன் ஆயுதங்களனைத்தையும் கைக்கொண்டு, புறப்பட் டான். அதேநேரத்தில் அவ்வூர் அரசன் நகர்சோதனைக்காக மாறுவேடம் கொண்டு, செல்லும்போது கள்ளன் எதிர்ப்பட உடனே அவனை நீ யாரென்று கேட்டார். அவன் "நான் ஒரு திருடன்; அரசன் பொக்கிஷசாலைக்குக் கன்னம் வைக்க உத்தேசித்திருக்கிறேன்" என்றான். வேஷதாரி "அண்ணே! சாமி சகாயஞ்செய்தது, நானும் ஒரு திருடன்தான். எங்குச்செல்லலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

கள்ளன் அவனையும் கூட்டிச் செல்லச் சம்மதித்ததின்பேரில், இருவரும் சென்று மதில் ஏறித்தாண்டி அவ்வேஷதாரியின் உதவியைக்கொண்டு கன்னம் வைத்து உட்சென்றனன். சென்றவன் எதையும் தொடாதவனாய், அரசன் மிக்க சாக்கிரதையாகவும் அன்பாகவும் காப்பாற்றிவந்த, மூன்று இரத்தினமணிகளில், தனக்கு ஒன்றும், வேஷதாரிக்கு ஒன்றுமாக எடுத்துக்கொண்டு, அரசனுக்கு மீதி ஒன்றை வைத்துவிட்டு, வெளியேறிச் சென்றான். சென்றதும் பங்குக்கார னுக்கு ஒரு மணியைக் கொடுத்துவிட்டு, தான்செய்த சங்கதியனைத்தும் வெளி யிட்டுத் தன் இருப்பிடத்தையும் தெரிவித்துச் சென்றனன்.

பொழுதுவிடிந்ததும் அரசன் தன் மந்திரியை யழைத்து "இரவு களவு நடந்திருப்பதாய்க் கனவு கண்டேன். நீ சென்றுயாவும் சோதித்துவா! என் னென்ன களவுபோயிருக்கிறது பார்ப்போம்" என்றார். மந்திரி சென்று என்ன என்ன களவு செய்யப்பட்டதென்று பரிசோதித்து வரும்போது, மூன்றுமணி களில் இரண்டு போய்விட்டிருப்பதை யறிந்து, ஒரு மணிமாத்திரம் இருப்பதால் அதைத்தான் எடுத்துக்கொண்டு அரசனிடம் சென்று, அவன் மிகவும் நேசித் துப் பத்திரமாய் காவல் செய்திருந்த மணிகள் மூன்றும் போய்விட்டதென்று சொன்னான்.

பகலில் சபைகூடியதும் அரசன் சேவகனையழைத்து, அக்கள்வன் இருக்கு மிடம் அனுப்பி அவனை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தான். மந்திரியோ ஒரேபிடியாய் மூன்றையுந்தான் காணவில்லையென்று சாதித்தான்.

அத்திருடன் வந்ததும் அரசன் அவன் யாரென்று வினவினான். அதற்கு அவன் ஐயா நான் எல்லாவற்றையும் தெரியச் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் பொய் சொல்லவில்லை.

"நான் ஓர் திருடன் முன்னொருநாள் ஓர் சந்யாசியிடம் உபதேசம் பெற்று, இவ்வூரிலேயே இருக்கிறேன். அவர் என்னை நான் எவ்வித துர்ச் செய்கைகள் நடத்தினாலும் உண்மையே பேசும்படி போதித்தார். என் வயிற் றுக்கொடுமையால் உங்கள் அரண்மனையில் கன்னம்வைப்பின், என்தரித்திரம்

வேரோடழியுமென்றெண்ணி நேற்று இராத்திரி என்சாமான்களுடன் வெளியேறினேன். வழியில் ஒருவன் என்னைச் சந்தித்து தானும் ஓர் திருடனென்றும், என்னோடு சேர்ந்துகொள்வதாயும் சொன்னான். அவன் உதவியைக் கொண்டு கன்னம்வைத்து உட்சென்றேன். அவ்விடம் என்மனமே பேராசைகொண்டு, தாங்கள் வைத்திருந்த 3-மணிகளின்பேரில் என் கருத்தை நாட்டினேனேயொழிய, என்மனம் ஒன்றின்மேலுங் செல்லவில்லை. ஆகையால் 1-மணியை நான் எடுத்துக்கொண்டேன். மற்ற ஒன்றை என்தோழனுக்குப் பங்கு கொடுத்தேன். தாங்கள் அதிக ஆசையுடனும், பாதுகாவலுடனும், வைத்திருந்ததால் தங்களுக்கு ஒருமணியும் வைத்துவிட்டு, வெளியேறி, நடந்தசங்கதி யனைத்தும், என்தோழனுடன், கபடமில்லாமல் சொல்லி சென்றேன். அப்பனே! நான் எடுத்துக்கொண்டமணி இதோ இருக்கிறதுஎன்று கொடுத்தான்.

முதல் முதல் மந்திரியே காலையில் அவ்வறையில் சென்றானதலின் அரசன் அவன்மேல் சந்தேகங்கொண்டு, நயமாகக்கேட்டால் கொடானென்று பயமுறுத்தக் கொடுத்து விட்டனன்.

பிறகு அரசன் அத்திருடனின் உண்மையை மெச்சி அவன் இருந்தக் கீழ்ஸ்தானத்திலிருந்து, உயர் ஸ்தானமாகிய மந்திரிவேலையைக்கொடுத்து, மந்திரியின் மடமையைக்கண்டு துப்பி, அவனை உயர் ஸ்தானத்திலிருந்து தள்ளிவிட்டான்.

ஆகையால், நாம் எக்காலத்திலும், சந்தோஷமாய் இருக்கும் சமயத்திலும், கஷ்டகாலத்திலும், வாய்மையைக் கடைப்பிடிக்கவேண்டும், சத்திய அரிச்சந்திரன் தன் கஷ்டகாலத்தில் விஸ்வாமித்திரன் தூண்டுதலின்மேல் பொய் சொல்லுவதை வெறுத்துரைத்தான்.

சேய்மை யண்மையி லுயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையா மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலால் சொல்லின் வேறுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெனக் கருதி.

A. வேங்கடாச்சாரியார், வேலூர்.

ஸ்ரீமான் சிவப்பிரகாச சுவாமிகளது ஜீவிய சரித்திரம்

பிறப்பு

இம்மகான் வீர சைவகுலத்தினராகிய முத்துசாமி பத்தர், வள்ளியம்மையார் என்ற இவ்வுத்தமர்கள் இருவரும் செய்த அருந்தவப்பயனால் அவர்கட்குப் புதல்வராய்ச் சென்னைக் கருகிலுள்ள சென்னியம்பாக்கம் என்னும் கிராமத்தில் 1873-வது ஆண்டு அவதரித்தவர். இவர் முற்செய்துள்ள ஆன்மார்த்தப் பயிற்சியின் தொடர்பால், பாலியத்திலேயே உலகபோக விச்சையில்லாதவராய், சத்சங்கத்திலும், சாது சேவையிலும், ஆன்மார்த்த விஷய ஆராய்ச்சியிலும் விருப்பமுடையவராய் விளங்கினர். இவர் இல்லறநெறியிலும் உலகபோகத்திலும் விருப்பில்லாதவரா யிருத்தலை யறிந்த இவருடைய சகோதரர் முதலிய சுற்றத்தார்கள் இவர் நாட்டப்படி செல்வதினின்றும் இவரைத் தடுக்கப் பலவித இடுக்கண்களை விளைவித்தார்கள். ஞானநாட்டத்தில் நிற்பவரை யாரே தடுக்கமுயலும்! இவர்கள் தொந்திரைகளே அவருடைய முயற்சியில் அவரைத் தீவிரப்படுத்திவிட்டன.

சாத்திர ஆராய்ச்சி

இவர் திடவைராக்கிய முடையவராதலின் எவ்வகைப்பட்ட இம்சையையும் பொருட்படுத்தாது, அவ்வமயம் சென்னையில் எழுந்தருளியிருந்த மெய்ஞ்ஞானியாகிய சாது இரத்தின சத்குருவை யடுத்து அவர் சன்னிதானத்தில் ஞானசாத்திர ஆராய்ச்சி செய்து வந்தார். கொஞ்சகாலஞ் சென்று தேசசஞ்சாரம் செய்து மறுபடி சகோதரரால் வீட்டிற்கழைத்து வரப்பட்டு இல்லறத்தில் இருத்தும்படி அவர்களால் செய்யப்பட்ட முயற்சிகளுக்கு இணங்காது இல்லினின்றும் வெளிகிளம்பி விட்டார்.

துறவு

இவர் 1908-ம் வருடம் கடுந்துறவு பூண்டு சென்னைக்குத் தென்பாலுள்ள பாடல்பெற்ற சிவஸ்தலமாகிய திருவான்மியூரின் கண் வீற்றிருந்தார். இவர் பிறகு திருமயிலையின் கண் வீற்றிருந்த குறள் சுவாமிகள் என்னும் பெரியாரிடம் ஞானதீட்சை பெற்றுக்கொண்டதாய்த் தெரிய வருகிறது. அதுமுதல் இம்மகான் துறவாசிரமத்தை மேற்கொண்டு மௌனவிரதம் பூண்டு ஒழுகுவாராயினர்.

அன்பர்கள்

இம்மகான் மௌனமெய்தித் திருவான்மியூரில் ஞானப்பியாசம் செய்து வருகையில் சென்னையிலுள்ள ஸ்ரீமான் டாக்டர் நஞ்சுண்டராவ் என்ற சற்குணவான் இவருடைய சாந்தம், பொறுமை, விராகம் முதலிய பரமஞானிகளின் அருங்குணங்களை யுணர்ந்து இவரிடம் பக்திகொண்டவராய் இவருக்காக ஒரு தோட்டத்தில் ஸ்தலம் ஏற்படுத்தி, இவருக்கு வேண்டிய உணவாதிகளை யளித்துக் கொஞ்சகாலம் மிக்க அன்பான ஆதரவில் வைத்துக்கொண்டிருந்தார். இம்மகானுடைய அருமையான விசேஷ குணங்களை யுணர்ந்து எண்ணிறந்த அன்பர்கள் இவரை யடுத்து நன்மைபெறத் தொடங்கியதற்கு இதுவே ஆரம்பம.

பொதிகை வாசம்

அவ்வாறு அன்பார்ந்த உபசரிப்பில் இருந்தபோதிலும், தூண்டிமுட்காரனுடைய நாட்டம் தூண்டிலின் தக்கை மேலேயே யிருப்பதுபோல், ஆன்ம பரமான்ம ஐக்கியத்திலுண்டாம் ஆனந்த அனுபவம் ஒன்றிலேயே நாட்டம் வைத்திருந்த இம்மகான் சமாதி அப்பியாசத்திற்கு அவ்விடம் இடையூறற்றதல்ல வென நினைந்து, அருந்தவ முனிவர்க்கும், நிர்விகல்ப நிட்டாபரர்க்கும் தகுதியான வாசஸ்தலமானதும், சஞ்சீவியுள்ள இடமுமாகிய பொதிகை மலைக்கு எழுந்தருளி ஆங்கு சிலகாலம் நிட்டை சாதித்து வந்தார். இவரால் உலகிற் சிலரேனும் மெய்யுணர்வடையும் பேறுபெற வேண்டுமென்றெண்ணிய அன்பர் ஒருவர் இவருடைய இருப்பிடத்தையறிந்து, அவண் சென்று இவரை மறுபடிச் சென்னைக்கழைத்து வந்தார். பிறகு இவர் கொஞ்சகாலம் ஒரு சிறிய ஆலயத்தில் வசித்து வந்தபின் பல நண்பர்கள் சேர்ந்து சென்னை சூளையிலுள்ள ஸ்ரீமான் செங்கல்வராய நாயகரது பூந்தோட்டத்தில் தக்க விடுதி ஏற்படுத்தினர்கள்.

சாத்திர போதனை

அத்தோட்டச் சொந்தக்காரர் இம்மகானது உயர்நிலையைக் கண்டு வியந்து அன்பு பூண்டு தாமே யிவர்க்கு உணவாதிகளை யளித்து வந்தார். இங்கு வசிக்கும்போது சுவாமிகள் சில அன்பர்களின வேண்டுகோளுக்கு மனமிறங்கி பலர்க்கும் ஞானநூல்களைப் போதிக்கத் தொடங்கினர்கள். அதுமுதல் சுவாமிகளுக்குச் சீடர்கள் நூற்றுக் கணக்காய்ப் பெருகினர்கள்.

2-ம் முறை பொதிகை வாசம்

இதனால் தமது நிஷ்டைக்கு இடையூறு நேர்வதை யுணர்ந்த சுவாமிகள் 2-ம் முறையாகப் பொதிகைக் கெழுந்தருளினர். தாயைக்காணாது கதறும் கன்றைப்போல் ஏக்கமுற்ற அன்பர்கள் சிலகாலம் தேடிப்பார்த்துக் கடைசியில் பொதிகையிற் கண்டு மறுபடி சென்னைக்கழைத்து வந்தார்கள்.

சாது மகா சங்கம்

சென்னைக்கு வந்தபின் பூததயையும் சீவகாருண்யமுமுடைய இம்மகான் எம்மதமும் சம்மதமாகக் கொள்ளும் உத்தம மார்க்கமாகிய அத்வைத மார்க்கம் எங்கும் பெருகி யாவரும் நற்கதி பெறுவான் கருதி, சாதுமகாசங்கம் என்ற ஒரு சற்சங்கத்தை ஸ்தாபித்தார். அது 9-வருடங்களாக உன்னத நிலையில் பெருகிக்கொண்டே வருகிறது.

ஆனந்தாசிர்மம்

இச்சங்கத்திற் கென ஒரு கட்டடமில்லாத குறைவையும், இச்சென்னைக்கு வரும் சாதுக்களுக்கு உண்டி யுறைகளுக்கு வசதியில்லாதிருக்கும் குறையையும் நீக்கவேண்டுமென்று ஸ்வாமிகள் காருண்யங்கொண்டதால், சென்னையை யடுத்துள்ள வியாசர்பாடி என்ற வசதியான ஸ்தலத்தில் ஆனந்தாசிரமம் என்ற மடாலயம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு சாதுக்கள் தங்கியிருக்கப் போதுமான வசதியிருப்பதோடு, அவர்கட்கு உண்டி முதலியவளிக்கத் தக்க ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. சுவாமிகள் பிறகு இங்கேயே தங்கியிருந்து யாவர்க்கும் ஞானநூற்களைப் போதித்து வந்தார்கள்.

சுவாமிகளது இளநகை ததும்பும் கருணைநிறைந்த வதனமும், சர்வ சாந்தமும், பெரியவர் சிறியவர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் முதலிய வித்தியாசமின்றி யாவரிடமும் இரக்கத்தோடும் அன்போடும் ஒழுகும் பெருந்தன்மையும், இன்சொல்லும், சுவாமிகளைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற அன்பர் குழாங்கள் என்றும் மறக்கற்பாற்றன்று. உலோகோபகாரார்த்தம் பல உயர்ந்த வேதாந்த நூல்கள் சுவாமிகளால் வெளியிடப்பட்டிருக்கின்றன.

விதேக கைவல்யம்

இத்தகைய கிடைத்தற்கரிய ஞானமாணிக்கமாகிய மகான் சிவப்பிரகாச சுவாமிகள் நடக்கும் 1918ஆ ஏப்ரல்மீ 5உ வெள்ளிக்கிழமை மேற்படி ஆனந்தாசிரமத்தில் தமது தூலத்தை விடுத்து, அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபத்தில் கலந்தருளினர்கள். சுவாமிகளிடம் சதா கண்ணுங் கருத்தும் வைத்திருந்த ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் நஞ்சுண்டராவ் அவர்கள், டாக்டர் மாசிலாமணி முதலியார் அவர்கள் முதலாகிய அன்பர்களும் ஸ்ரீமத் சுப்பய்ய சுவாமிகள், ஸ்ரீமான் வடிவேல் செட்டியார் முதலிய அன்பார்ந்த பெரியார்களும் மற்றுமுள்ள அன்பர்களும் சேர்ந்த அடியார் குழாத்தால் சுவாமிகளது திருத்தேகம் அன்றுமாலை ஆனந்தாசிர்மத்திலேயே மிகப் பக்தியோடு வைதீகாசாரத்தின்படி சிறப்பாய் சமாதி யடக்கம் செய்யப்பட்டது. ஏப்ரல் மாதம் 14ந் தேதி அதனினும் மிக்க சிறப்பாகவே மோக்ஷதீப கைங்கரியமும், அடியார் பூசை, பைரவபூசை முதலியனவும் நடந்தேறின. இப்போது ஸ்ரீமத் சுப்பைய சுவாமிகளால் ஆனந்தாசிரமத்திலேயே அடியார்கட்கு ஞானநூல்கள் போதிக்கப்பட்டு வருகின்றன.

ஞானத்திற் குறைவிடமாகிய நமது பரிசுத்தமானத் தாய்நாடும், ஞானநூல்களும், மெய்ஞ்ஞானிகளும், அவர்கனடி பரவித் தொண்டுபுரி அடியார்களும் என்றும் க்ஷேமத்தோடு அபிவிர்த்தி யடைந்து ஆனந்த நிலையெய்தும் வண்ணம் அருள்புரியவேண்டுமாய்க் கருணாசொரூபியாங் கண்ணுதற்கடவுளை எண்ணத்திருத்தி யிடைவிடா திறைஞ்சுவோமாக.

ஓம் தத்ஸத்

நீதிவெண்பா.

(372-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேலைத்—தவத்தளவே யாகுமாந் தான் பெற்றசெல்வங்
குலத்தளவே யாகுங் குணம்.

ஒருவன் செய்த தவத்தின் அளவினதே அவன் அடையும் ஐஸ்வரியமாகும். இதற்குச் சான்றாக மிருகண்டேயரின் அருந்தவப்புதல்வராகிய மார்க்கண்டேயர், சிவபூசையைப்புரிந்து, பரமனருளால் தாய் தந்தையர் தனக்கெனப் பெற்றிருந்த பதினாறுவயதினை, என்றும் பதினாறாய் நிலைபெறச்செய்து, ஜீவன் முக்தராயிருப்பது தெரிந்தவிஷயமே. அன்றியும் திரிசங்குமகாராசன் தவமின்றிச் சுவர்க்கம் புகக்கருதி, தனது குருவாகிய வசிஷ்டரிடஞ்சென்று, "ஐயா! யான் மூன்றுசங்கமு மாண்டதால் பிரபஞ்சத்தில் வெறுப்புண்டாயது. இனி நிலவுலகாளுகை வேண்டேன். யாக்கையோடே சுவர்க்கம்புக விரும்புகின்றேன். தாங்கள் அடியேனுக்கு அகமகிழ்வாக்கருள்வீர்" என "அன்பனே! உனக்கேலாது" என்றரைந்தனர். அதன்பின் தவம்புரியும் வசிஷ்டர் மைந்தர்களிடஞ்சென்று, "ஓ! சற்குருபுத்திரர்களே! அடியேன் வந்தனம்" எனலும் ரிஷிமைந்தர்கள் விழித்து அரசனுக்கு ஆசி கூறி, "நீர் வந்தது யாதுக்கு என்றனர். திரிசங்கு "சுவாமிகளே! அன்பன் இச்சரீரத்தோடும் சுவர்க்கம் புகக்கருதி ஓர் யாகம்செய்யத் தங்கள் தந்தையை வேண்டினேன், இயலாதென்றனர். ஈண்டுவந்த என்கோரிக்கையை யீடேற்றி என்னை யாளுதிர்" என, குருமக்கள் மனம் பொறாராய் "ஓ அரசனே! அம்மஹான்வாக்கை மறுத்துச் செயற்புகுந்த நீ, சண்டாளனாகக் கடவாய்!" என்று சபித்தனர். உடனே மன்னனது தேகக்காந்தி மழுங்கி, கறுத்து சண்டாள சரீரம் வந்தது. கண்டவரெல்லாந் தூறுவாராயினர். அரசன் விசனமுற்றவனாய், உடனே விஸ்வாமித்திரரை அடுத்து சரணம்புக்கனன். முனிவர் அவனது வந்தனையை யேற்று, வேந்தே! என்னே! நின்சரீரம் இவ்வாறாயதென்ன? அரசன் நடந்தன புகலக்கேட்டக் கௌசிகர் எவ்வகையானு முன்னைப் பொந்தியோடே பொன்னுலகடையச் செய்கிறேன் என்று அற்புத யாக மியற்றி வேந்தனை விண்ணுலகேற்றினர். தேவேந்திரன் முதலிய தேவர்கள் கண்டு குருநிந்தனை செய்த சண்டாளன் வருகிறான். வரக்கூடாதென்று அந்தரத்தில் தள்ளினர். வேந்தன் விண்ணினின்றலரி விழுவதைக்கண்ட விஸ்வாமித்திரர் அன்ப! நில்! நில்!! என்று தனது யோகசக்தியால் தக்ஷணகைலாய மொன்றியற்றி, அரசனை நிலைபெறச்செய்தனர். அதுதிரிசங்கு நக்ஷத்திரமென்றும் தென்கைலை எனவும் வானில் காணப்படுகிறது. சூரபன்மன் தசக்கிரீவன் இவர்கள் தவத்தால் பெற்றிருந்தஐஸ்வரியத்தைப் புராணேதிகாசங்களினாலுணர்கிறோம். இதனாலன்றோ "தெய்வப் புலமையார் "ஒன்னார்த் தெறலு முகந்தாரை யாக்கலு, மெண்ணிற் றவத்தான் வரும்" என்றனர். ஆகவே தவம் யாவர்க்கும் சிறந்ததாம்.

"குலத்தளவே யாகுங் குணம்"

முற்காலத்தில் திரிசிங்குபுரத்துக்கடுத்த சிவகலை எனும் திட்டச்சேரியில் "கறுப்பனென் றொருவனிருந்தான். அவன் கஷ்டசீவியாய் காலங்கழித்து

வந்தனன். இங்ஙனம் சிலகாலம் வறுமைப்பிணியால் பீடிக்கப்படும்பொழுது, சின்னாளாய்ப் பெரும்பிணியாற் பீடிக்கப்பட்டுவருந்தும் அவனுடைய அண்டை வீட்டுக்காரனாகிய கூத்தன் அவனை யழைத்து கறுப்பா! யான் குணமடையும் வரையில் எனக்குப் பதிலாய் என் எஜமான் வீட்டுப் பண்ணையைப் பார்த்து வருகிறாயா? என, கறுப்பன் தனக்குள்ளே, வருகிறது வலியவரும் என்றெண்ணி, சரி, அவ்வாறே பார்த்துவருகிறேன் என்றனன். இவ்வாறு சம்மதித்துப் பின் அவ்வேலையை விடாது ஒழுங்குடன் பார்த்துவந்தான். இதையறிந்த அவன்றலைவன் ஜானகிராமசெட்டியாருக்கு இவன்மட்டில் விசுவாசம் அதிகரித்தது. சின்னாட்கழிந்ததும், கூத்தன் இறந்தான் பின்னர், எஜமானன், கூத்தன் வேலையைக் "கறுப்பனுக்கே யுரிமையாக்கினன். அன்று தொடங்கிக் கறுப்பன் முன்னினும் பதின்மடங்கு தன் தொழிலில்கண்ணுங் கருத்துமா யிருந்து வந்தனன். அதனால் அவன் எஜமானன் அவன்மட்டில் முன்னினும் மிக்க அன்புகொண்டவனாய் அவனை மற்றைய பண்ணையாட்களுக்குத் தலைவனாக்கினன்.

நேயர்களே! இக்கறுப்பனுக்கு வந்த வாழ்வைக் கவனியுங்கள். இனி இதை அவன் எவ்வாறு காப்பாற்றிவருகிறானென்று கவனிப்போம். இவ்வாறு சுகஜீவியாய்க் காலங்கழித்துவருகையில் தன்னிடம் முதன்முறை பன்னிரண்டு ரூபாய் இருந்தது. அதைப் பிறரறியாது தன்வீட்டில், அடுப்புமேடைக் கருகே புதைத்துவைத்துத் தனக்குள் அகமகிழ்வதும், அடிக்கடி வெளியிற் போய்ப் பார்ப்பதும் வருவதுமாக இருந்து பின் எஜமானனை நாடி, "ஐய இனி என்னைக் கறுப்பா! என்றழையாது கறுப்பரே! என்றழைமின் என்று வேண்டினன். எஜமானன் அவன்மட்டில்கொண்ட அன்பிற்காக அவ்வாறழைக்கத் தலைப்பட்டனன். இங்ஙனம் சிலநாட் சென்றதும், மறுபடி பன்னிரண்டு ரூபாய் சேகரித்தான். அதை அவ்வடுப்பு மேடைக்கடியிலேயே புதைத்து நமக்கு நற்றிசை வந்துவிட்டது என்று அடங்காமகிழ்ச்சியடைந்து இனி நமக்கு ஒரு குறைவும் நேரிடா. இன்னும் ஒரே பன்னிரண்டு இருக்குமாயின் நம் இஷ்டப்படியே இச்சேரிக்கு நாட்டாண்மைத் தன்மையை யடைவோம் என்று ஆண்டிமடங் கட்டுவதுபோல் நினைத்ததை அன்றிரவெல்லாம் தனக்குத்தானே பேசிக்கொண்டான். மறுநாட் காலையில் வழக்கம்போல் தன் அதிபதிவீட்டை யடைந்தனன்.

எஜமானன்.—ஏ கறுப்பரே!

கறுப்பன்.—"சுவாமி! இன்னுங் கொஞ்சநாளில் எங்களூர் நாட்டாண்மை எனக்கே யுரிமையாகும். அதற்குள் எனக்கு ஐயா என்னும் பட்டம் சேர்ந்திருந்தால் மிக்க கௌரவமாகும்" என்றான்.

இதைக்கேட்ட எஜமானன், சிறிது யோசித்து, "குலத்தளவே யாகுங் குணம்" என்றபடி அத்தன் பிறப்பின்தன்மையைக் காட்டாமற்போகுமா? இருக்கட்டும், அவனிஷ்டப்படியே அழைப்போம்" என்று "ஐயா கறுப்பரே! ஏது இத்தனை காலையில்....." என்றான்.

கறுப்பன்.—இன்று கடிதில் வேலைபார்த்துச் செல்லக் கருதினேன். ஆகையால்,.....சரி! அவ்வாறே ஆகட்டும். என்றார். இவன் இவ்வாறு தன்னை "ஐயா கறுப்பரே!" என்றழைக்கப்பட்டானாயினும் இவன் எஜமானனுக்கு இவன்மட்டில் இருந்த அன்பு நாளுக்கு நாள் குறையலாயிற்று. இங்ஙனம் சில நாட்கள் கழிந்ததும் மற்றும் ஓர் பன்னிரண்டு ரூபாய் சேர்ந்தது. அதைத் தன் இல்லச்சுவற்றின் முகக்கண்ணாடியி னுட்புறத்தே புதைத்து வைத்து அங்கே

பன்னிரண்டு! இங்கே பன்னிரண்டு!! கண்ணாடி சுவற்றிலே பன்னிரண்டு!!! என்று குதிப்பானாயினன்.

அன்ப!

"அற்பனுக்கு வாழ்வுவந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான்" என்பது இக்கறுப்பனுக்கே தகும். பிறகு, பொழுதுவிடிந்ததும் தன் முதல்வனிடம் ஓடோடியுஞ் சென்று, சுவாமி! ஒருகுறை விருக்கிறது. அதாவது: "ஐயா கறுப்பரே!" என்றதோடு "அவர்கள்" என்னும் பட்டத்தைச் சேர்ப்பீராகில் என் குலத்திற்கும், என்தொழிலுக்கும் மிகுந்த பெருமையாயிருக்கும் என்று வேண்டினன். இதனைச் செவியுற்ற முதல்வன் "சரி! சரி!! இனி இவன் நம்மிடம் இருக்கத்தகாது. 'கிட்டவாவென்றால் எட்டிமுகத்தை நக்குகிறது' என்னும்பழமொழிப்படி இவன் தன் நிலைமையைச் சிறிதும் உணராது இவ்வாறு கௌரவம் கொள்வதென்னே! அவனை வெறுப்பதிற் பயனென்? சாதிக்குத்தக்க புத்தி, குலத்துக்குத்தக்க ஆசாரம், என்பது வீண்போகுமா? இருக்கட்டும். நாளை கவனிப்போம்" என்று அவன் விருப்பிற் கிணங்கி "ஐயா கறுப்பரவர்களே! வேறு என்னவேண்டும் என்று வினவினர். இதைக்கேட்டு அவன் பரமானந்தமடைந்து, ஐய! இன்று என்வீட்டில் சிறிது வேலை இருக்கிறது அதைப் பூர்த்திசெய்ய ஒருநாள் செல்லும் அதற்குத் தாங்கள்....." என்றதே,

எஜமானன்.—சரி! அவ்வாறே செய், என்றனர்.

உடனே கறுப்பன் தாமதமிலாது விரைவில் வீடுவந்து முன்போல், அங்கேபன்னிரண்டு! இங்கேபன்னிரண்டு!! கண்ணாடிசுவற்றிலேபன்னிரண்டு!!! என்று ஆனந்தத்தாண்டவம் ஆடத் தொடங்கினன். அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் இதனை யுணர்ந்து, ஏதோ கறுப்பனுக்குப் பைத்தியம்பிடித் திவ்வாறு குதிக்கின்றான் என்று எண்ணி அவன் எஜமானன் ஜானகிராம செட்டியாரிடம் ஓடி யுரைத்தனர். செட்டியார் உடன்வந்து, கறுப்பன் கூத்தைக்கண்டகமகிழ்ந்து வீடு சென்றனர். மறுநாட் காலையில் கறுப்பன் வழக்கம்போல் தன் எஜமானன் இல்லம் அடைந்து திரும்பினன். அதற்குள் தன் புதையல்களை யாரோ கொண்டு சென்றனர். இங்ஙனம் தன் திரவியம் போனதும் "திருடனைத் தேள்கொட்டினாற்போல்" மௌனமாயிருந்து, அன்று மாலை தன் முதல்வனைக் கண்டு, "ஐய! இனிப்பட்டம் பெயரின்றி, எப்போதும் அழைத்தமாதிரி கறுப்பா!—என்றழையுங்கள் என்றனன். எஜமானன், இவன் செய்கை யனைத்தும் அறிந்து "அப்படியானால் நீ பழைய கறுப்பனாகவே போ" என்று வேலையினின்றும் நீக்கிவிட்டான்.

நேயர்காள்! இத்தகைய செல்வம் மற்றைய குடிப் பிறந்தோரிடம் இருந்தால் எவ்வாறு நிலைத்திருக்கும்? மேலே குறித்த ஆன்றோர் வாக்குக்கு இதுவே "உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற" உதாரணமாகும்.

சு. பழநி நாயகர், ஓர்லியன் பேட்டை புதுவை.

நித்தியவிதி—ஸ்நானம்

(381-வது பக்கத்தொடர்ச்சி.)

முற்கூறிய ஸ்நான சம்பந்தமான சிலவற்றை யிங்கு சிறிது விவரித்து விட்டு மேற்செல்வாம். நதிகளிலும் புண்ணியத்தை யுண்டாக்குவன சிலவுள. அவை சமுத்திரகாமினி யெனப்படும். சமுத்திரகாமினிஎன்றால் சமுத்திரத்தை நோக்கிச்சென்று அதில் கலப்பது. இந்நதிகளைத்தான் நமது முன்னோர்கள்

புண்ணியதீர்த்தமென்று புகழ்ந்து கூறுவது. நூல்களும் புகழ்கின்றன. இப்பொழுது சமயம் நேர்ந்தபடியால் அதைச் சிறிது விரித்துச் சொல்வோம். நதிகள் விசேஷமாய் மலையி லுற்பத்தியாவன. அவற்றுட்சில ஒரு ஏரியிலாவது மற்றொரு பெரிய நதியிலாவது போய்க் கலக்கும். ஏரியிற் கலப்பதைவிட மற்றொரு நதியிற் கலப்பது சிலாக்கியமாகும். அதைவிடச் சமுத்திரத்திற் கலப்பது மஹாவிசேஷமாகும் கங்கை, யமுனை, கோதாவரிமுதலியவும், காவேரி தாம்ரபரணி முதலிய நதிகளும் மலையிலுதித்து கடலிற்கலப்பதனால் புண்ணிய தீர்த்தங்களென்று புகழப்படுகின்றன. ஏனெனில் நதிகளுற்பத்தி யாகத்தக்க மலைகள் பெரியவைகளாகவே யிருக்கும். அம்மலைகளில் தங்கம் வெள்ளி செம்பு முதலிய உலோகங்களும், மரகத வைடூர்யாதி இரத்தினவகைகளும், இரசாயனப்பொருள்களும், அற்புதச் சக்திகள்வாய்ந்த செடிகொடி மரம் புல்லாதி ஔஷதி வர்க்கங்களும் உண்டு. அஞ்சனக் கற்களும் காவிக்கற்களும், பற்பல ஜீவவர்க்கங்களும் உண்டு. மலையில்வீழ்ந்த நீரானது முற்கூறப்பட்ட பொருள்களோடு கலந்து அவற்றின் குணங்களைக் கிரகித்துக்கொண்டு அருவியாறாய்ப் பெருகி வரும். தான் எப்பொருளுடன் கலக்கிறதோ அப்பொருளின் குணத்தைக் கவர்வது தண்ணீரின் இயற்கையாம். பூமியில் விழுந்தபின் வனங்களின் வழியாய்ச் செல்லுங்கால் அவ்வப்பூமியின் குணத்தையும், ஆங்காங்குள்ள வன ஔஷதிகளின் குணத்தையும், கவர்ந்துகொண்டு செல்லும். இதனால், மலைகள் வனங்களிலுள்ள பொருள்களின் குணங்களை அடைந்து செல்லும் என்பது புலப்படும். நாலாபக்கங்களிலிருந்து பற்பல சிற்றாறுகளும் வந்து இத்னுடன் கலந்துகொள்ளும். அந்நீரினோடு கலந்து கடலில் சென்றுவிழும். கடலின் தன்மையின்னதென்று யாவரு முணர்ந்ததே. அக்கடலில் சங்கு, சிப்பி, இரத்தினம், பவளம், முத்து முதலிய அரிய பொருள்களும், பற்பல ஜீவவர்க்கங்களுமுண்டு. அதிலுள்ள உப்பு அளவிடப்படாதது. இவ்வளவுமடங்கிய சமுத்திரமோ அளவிடப்படாத பெரிய நீர்நிலயம், மஹாசக்தியுள்ளது. ஆறு கடலிற் கலந்ததும் அந்தச் சமுத்திரத்தின் மஹாசக்தியானது நதிகளில் எதிரேறிச் செல்லும். உற்பத்தியாகும் மலையடிவாரம்வரையில் எதிர்த்துச்செல்லும். செல்லவே அந்நதியானது கடல் வனம் மலை யாவற்றின் குணங்களோடுசேர்ந்து விளங்குமாதலால், அது சகல பாபங்களையும் பலவியாதிகளையும் நீக்கிச் சுகமளிக்கும் சக்தியுடையதாகும். ஆதலாலது புண்ணியநதியென்று புகழப்படுகிறது. இங்கு விரித்துக்கூற அவகாசமின்மையால் வெகு சுருக்கமாகக்கூறினும். இதுநிற்க: மற்றொரு விஷயத்தைச் சிறிது கவனிக்கவேண்டுவ தவசியமாம். அதைக் கவனிப்பாம்.

அது மூலாபகர்ஷ ஸ்நானமென்பதாம். இதனாற் பின்னால் ஒரு அரியவிஷயம் விளக்கப்படுமாதலா லிது குறித்துக்கொள்ளத்தக்கதொன்றாம். மலம் என்பது அழுக்கு; அபகர்ஷம் என்பது எடுத்தல். அழுக்கெடுத்தல் என்பது அதன் பொருள். அழுக்குத்திரட்டல்என்று தமிழ்வைத்திய நூல்களிற் கூறப்பட்டுள்ளது. இதுவே அப்பியங்கன ஸ்நானமெனப்படும். வாரத்துக் கொருமுறை அல்லது இருமுறை தேகத்தில் எண்ணெயைத் தேய்த்துக்கொண்டு கொஞ்ச நேரம்தரித்து ஸ்நானம் செய்தால் தேகத்திலுள்ள அழுக்கு ஒழியும். ஒருமுறை தேய்த்துக்கொள்வதே போதுமானது. ஆனால் தனவந்தர்கள் இருமுறை ஸ்நானம் செய்வது வழக்கம். வியாதியுண்டாயிருந்தால் அந்த வியாதி நீங்கும் பொருட்டு எண்ணெயொடு சில பொருள்களைக்கலந்து காய்ச்சி யிருமுறை முழுகலாமென்று நூல்கள் கூறுகின்றன. சிலநூல்கள் பட்சத்துக்கொருமுறை ஸ்நானம் செய்தாலே போதுமென்று கூறுகின்றன.

இந்த அப்பியங்கன ஸ்நானத்துக்குச் சில விதிகளுமுண்டு. எண்ணெயிட்டுக்கொண்டு குளிர்ந்த நீரில் முழுகலாகாது. வெந்நீரிலேயே முழுகவேண்டுமென்பது வைத்திய சாஸ்திரங்களின் கருத்து. இதற்கு ஐந்து காய்ச்சல் உண்டென்று கூறப்படும். அவையாவன, "தலைகாய்ச்சல், வயிறுகாய்ச்சல், எண்ணெய்காய்ச்சல், நீர்காய்ச்சல், அரைப்புக்காய்ச்சல்" என்பனவாம். எண்ணெயிட்டுக் கொள்வதற்குமுன் தலைகளையாமலிருக்கவேண்டும், உண்ணாமலிருக்கவேண்டும், எண்ணெய் நீர் அரைப்புகளும் காய்ச்சப்பட்டிருக்கவேண்டும் என்பதாம். எண்ணெயினால் அழுக்குஊறிக்கிளம்பும், அப்பொழுது இருபத்தொரு சொம்பு (பாத்திரம்) வெந்நீரை முதலில் ஊற்றிக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதனால் முற்கூறிய அழுக்கு இளகும். அதற்குமேல் காய்ச்சின அரைப்பை யிட்டுத்தேய்ப்பதினால் அழுக்கு முற்றும் வெளிப்பட்டுவிடும். அதற்குமேல் வெந்நீரில் முழுகினால் சரீரம் சுத்தமாகும்.

இப்படி ஸ்நானம் செய்வதனால் சரீரத்தின் உள்ளுறுப்புகளும், வெளியுறுப்புகளும் மெலிவடையும். ஆதலால் கடினமான ஆகாரம் உட்கொள்ளக் கூடாது. தயிர் பால் சேர்க்கக்கூடாது. மிளகு இரசமும் சீக்கிரத்தில் ஜீரணமாகக்கூடிய வெஞ்சனங்களையுமே உட்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் பலவியாதிகளுக்கிடமுண்டாகும். வெயில் தோன்றுவதற்குமுந்தியே ஸ்நானம் செய்து, உடனே முற்கூறியபடி ஆகாரமுங் கொள்ளவேண்டும். ஸ்நானம் செய்தபின் பட்டினியாயிருத்தல், பால் தயிர் முதலியவற்றை யருந்துதல், கடினமானவேலைசெய்தலாதிகள்கூடா. இவ்வாறு கூறியமுறைப்படி அப்பியங்கன ஸ்நானம் செய்வதனால் வாதபித்தாதிகள் தத்தம் நிலைதவறாமல்நிற்கும். நரம்பு தோல்களைப்பற்றிய வியாதிகள் தீரும்; கபாலத்தைப்பற்றிய நோய்களும்தீரும்; ஆரோக்கியமுண்டாகும்; மேனியழகுண்டாகும்; மனதிற்கு உற்சாகமுண்டாகும்; பிராணக்கினி நிலைபெறும்; தாது விருத்தியாயிறுகும்; இதனாற் பல நன்மைகளுளவென்று வைத்தியநூல்க ளோதுகின்றன. இந்த ஸ்நானத்தினால் ஒரு அதிசயமான செய்கையை நமது முன்னோர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்; அது பின்னால் விளக்கப்படும் ஆதலால் இது எல்லாரும் ஞாபகத்தில் வைக்கத்தக்கது.

இதுபோலவே மிருத்திகா ஸ்நானமுமாம். இதை வைதிகர்கள் மாத்திரம் அனுஷ்டிப்பார்கள். ஸ்நானம் செய்தபின் எண்ணெயிட்டுமுழுகுதல் அவ்வளவு பயன்தராதென்று முன்னங் கூறப்பட்டது. காலையில் ஸ்நானம்செய்து நித்திய கர்மானுஷ்டானங்களைத் தவறாமற்செய்யும் வைதிகர்களுக்கு அப்பியங்கன ஸ்நானம் அருமையாகவே நேரிடுமாதலால் அவர்கள் மிருத்திகாஸ்நானத்தைக் கொள்வார்கள். இது பகலிலேயே செய்யத்தக்கது. நடுப்பகலில் செய்யப்படும் ஸ்நானத்துக்கு மாத்தியான்னிக ஸ்நானமென்றுபேர். நல்ல சுத்தமான இடத்தில், எறும்பு கறையான் புழு முதலியவைகளில்லாததும், மனிதர்களுடைய கால்படாததுமான மிருத்திகை (மண்) யை எடுத்துவந்து, நீரோடு கலந்து சரீரத்தில் பூசிக்கொண்டு சற்றுகாய்ந்தபிறகு நன்றாய்த் தேய்த்துக் கழுவி முழுகுதலாம். இதனால் அழுக்கு ஒழிவதுமன்றிச் சரீரத்திலிருக்கும் அசுத்தங்களும் நீங்கும். எவ்வகையான அசுத்தங்களையுங் கிரகிக்கும் சக்தி மண்ணுக்குண்டு. ஆதலால் கற்றாழைபோன்ற தூர்க்கந்தம் வீசுதல் முதலிய குற்றங்கள் நீங்கும். மண்ணுக்குப் பதிலாக நாயுருவி, அறுகம்புல், பற்பாடகம் ஆவாரையிலை முதலியவற்றையும் உபயோகிக்கலாமென்று நூல்கள் கூறுகின்றன. ஆயினும் ஸ்மிருதிகளில் நாயுருவியும் அறுகம்புல்லுமே சிலாக்கியமென்று கூறப்பட்டுள்ளது. இவைகளை யெல்லா மாராய்ந்தும் பெரியோர்பாற் கேட்டுத் தெளிந்

தும் நன்மை தீமைகளை யுணர்ந்துகொண்டு, சமயமறிந்து செய்யவேண்டும். நித்தியவிதியில் ஸ்நானத்தை யெடுத்துக்கொண்டமையால் அதற்குச் சம்பந்தமா யுள்ளவற்றையும் சேர்த்து முடிக்கவேண்டியதாயிற்று. வேறிடத்திற்கூற அவகாசம் நேரிடாதென்பது கருதியே இவ்விடத்தில் சேர்த்து முடிக்கப்பட்டது.

சிவானந்த யோகீஸ்வரர்.

ஓர் கடிதம்.

அன்பர்களே !

இச்சமயம் நமது போதினியில் சில பக்கங்களைத் தமியேனின் வழுச் சொற்கள் பலவற்றால் நிறப்பவேண்டிய திருக்கிறதே யென்னும் வருத்தத்தோடும், இதனைக் கண்ணுறும் நேயர்கள் பலரும் எங்ஙனம் பழிப்பரோ வென்னும் அச்சத்தோடும் இச்சிறு கடிதத்தை வரையலானேன். விஷயத்தை நோக்க எமது மனம் மிகுந்தவருத்த மடைகின்றது. சென்ற பங்குனிமாதத்திய சஞ்சிகையில் வெளிவந்துள்ள "களவு" என்னுஞ் சிறுவியாசத்தை நண்பர்கள் யாவரும் வாசித்தே யிருப்பீர்கள். அதில் ஏதாவதொரு விஷயம் வேறொருவரா லியற்றப்பட்டதை வெளியிட வேண்டி நேர்ந்தால் இன்னவர் இயற்றிய புத்தகத்தி லிருந்து எடுத்தெழுதப்பட்டது என்னும் உண்மையை வெளியிடவேண்டுவ தவசியமென்றும் அப்படிக் கூறாது விடுத்தல் இழிவென்றும் கூறப்பட்டுள்ளதையு நீங்க ளறிவீர்கள். இச்சந்தர்ப்பத்தில் முன்னொருமுறை ஒரு நண்பர் அவ்விதம் கூறாது விட்டதைப் பத்திரிகாசிரியர் கண்டுபிடித்து எச்சரித்திருப்பதையும் நண்பர்களுக்கு ஞாபக மூட்டுகிறோம். இரண்டுமுறை எச்சரித்திருந்தும் சென்றமாதமும் ஏற்பட்ட ஒரு சம்பவம் மிக்க வியப்பானது. சகோதரர்களே! அதை யுங்களுக் கெடுத்துரைக்க மிக்க வருத்தப்படுகிறேன். சென்ற மாதத்தில் வெளிவந்துள்ள 'ஈவது விலக்கேல்' என்னும் வியாசம் அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் ஆர். அரிஹர ஐயரவர்கள் இயற்றியுள்ள 'ஆத்திசூடி நீதிக்கதைகள்' என்னும் புத்தகத்திலிருந்து எடுத்தெழுதப்பட்ட சரியான நகல் என்பதே அவ்விஷயமாகும். இத்தகைய சம்பவத்திற்காக விசனப்படாமல் யாம் செய்வதென்னை ? இப்படியே வியாசங்களெழுத முன்வரும் நண்பர்கள் பலரும் ஏதாவது புத்தகங்களிலிருந்து எடுத்தெழுதும் வழக்கத்தையே கையாளத் தலைப்பட்டால் அறிவாளிகளால் சொந்தமா யெழுதப்படும் வியாசங்களை வெளியிட சஞ்சிகையி லிடமேது ? ஒரு புத்தகத்திலிருந்து நகல் எழுதி தம்பெயரால் வெளியிடுவோர் தமக்கோர் கௌரவத்தைத் தேடிக் கொள்வதற்காக அவ்வாறு செய்வதாயின் அது, ஆடிக்கொண்டிருக்கும் மயிலைப்பார்த்து, தன்னையும் அவ்வாறு பிறர்மதிக்கவேண்டுமென்று தன் பொல்லாச் சிறகை விரித்தாடும் வான்கோழியின் செய்கையை யொக்குமே தவிர அவர்கள் எண்ணம் பலிக்கமாட்டா தென்பதை ஈண்டு வற்புறுத்துதல் அவசியமாகின்றது. மேலும், அவ்விதம் நேரிடாம லிருக்கும்பொருட்டு எச்சரிக்கப்பட்ட சில நாட்களுக் குள்ளேயே அவ்வித இழிவான குற்றத்திற் சிக்குவ தென்றால் அதைவிட கேவலம் வேறென்ன விருக்கின்றது ? இன்னவிதமான குற்றத்தைச் செய்யலாகாதென மொழிந்தால் அதையாவரும் கவனிக்கவேண்டாமோ ?- மேலே குறிப்பிட்ட 'ஈவது விலக்கேல்' என்னும் வியாசம் எந்தப் புத்தகத்திலிருந்து எடுத் தெழுதப்பட்டிருக்கிறதோ அந்தப் புத்தகத்தின் உரிமை (All rights reserved) பதிவு செய்யப்பட் டிருந்தும் அதை நமது போதினியில் பிரசுரஞ்செய்ய முன்வந்தது வெளியிட்டவரின் துணிவைக்காட்டுகிறது. இச்சந்தர்ப்பத்தில் யாம் எவரையும் எந்தப் புத்தகத்திலிருந்தும் நல்ல விஷயங்களை எடுத்

தெழுதக் கூடாதென்று சொல்ல முன் வரவில்லை. அப்படி நேரிடும் பக்ஷத்தில் இன்ன நூலிலிருந்து எடுக்கப்பட்ட தென்று கூறப்படவேண்டு மென்பதே, எமது வேண்டுகோள். இதை வாசிக்கும் நேயர் பலர் இத்தகைய குற்றங் கடிதலுக்காக எம்மேற் குறை கூறலாம். அத்தகையோர் யாம் பிறர்மேல் வீணில் குற்றங்கூற முன் வந்தோமல்ல வென்பதையும், ஒவ்வொருவருக்கும் தன் குற்றம் தனக்குத் தெரியா தாகையால் வேறொருவர் சொல்லித்தா னாகவேண்டுமென்பதையும், ஒருவர் ஒரு குற்றம் செய்த பொழுது அக்குற்றத்தை யறிந்தும் வாளாவிருக்கு மொருவன் முன்னவன் செய்யும் குற்றத்திற்கு உதவியா யிருந்ததற்கொப்பாவான் என்பதையும் நன்குணர்ந்து எம்மை கூமிக்கக் கோருதலோடு இன்னும் நமதரிய நண்பன் 'ஆனந்தபோதினி' க்கு இத்தகைய விபரீத சம்பவங்கள் நேராமல் காக்க எல்லாம் வல்ல பரம்பொருளை முழு மனதோடும் பிரார்த்திக் கின்றனம்.

எ. எம். ஸங்கரநாராயணன், அம்பாசமுத்திரம்.

குறிப்பு :—மேற்கண்ட விஷயத்தைப் பற்றி நமது சந்தா நேயரே யாவும் கூறியிருப்பதால் நாம் நமது துயரைத் தவிர வேறொன்றும் கூறுவதற்கில்லை. நேயரவர்கள் அதைப்பற்றி யெழுதியது ஒருவரைத் தூற்றும் குற்றமாகாது. ஆனால் பலபேருக்கு அறிவுறுத்தும் பொது நலச் செய்கையே யாகும். ஒருவர் தமது உரிமையாக்கிக் கொண்டிருக்கும் விஷயத்தை எத்தகைய காரணத்தா லேனும் நம்மை யறியாமல் நமது ஆனந்தபோதினியில் வெளியிட நேர்ந்ததற்கு நாம் மிக்க மனவருத்தமடைகிறோம். இதுகாறும் நமது போதினிக்கு ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்கள் வந்திருக்கின்றன - ஒவ்வொன்றும் அதைச் சிலாகித்துப் புகழ்ந்து கூறியிருக்கின்றதே யன்றி வேறில்லை. இதற்குக் கொஞ்சமேனும் மாசையுண்டாக்க வெண்ணுகிறார்க ளென்றே இத்தகைய விஷய மனுப்புவோரை நாம் கருத நேரிடுகிறது. இந்த வருத்தத்தோடு நமது சஞ்சிகைக்கு விஷயமனுப்பிப் பின்னால் தங்களுக்குத் துயரையுண்டாக்கிக் கொள்கிறார்களே யென்று அதற்கும் மனவருத்தமடைகிறோம். இவ்வாறு நமக்கிதனால் இருபக்கமும் வியாகுலமே பிராப்தமாகிறபடியால் இனி யித்தகைய துயரத்தை ஆண்டவனுக்கே யொப்படைத்து இனியேனும் இவ்வித விஷயம் நேரா தருள்புரியும்படி அவரையே பிரார்த்திக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

மாணவர் பக்கம்

(393-ம் பக்கத் தொடர்ச்சி)

பணம் சம்பாதிப்பதில் மன நிம்மதியோடு சம்பாதிப்பதும், சதா மனக்கலவரத்தோடும் திகிலோடும் சம்பாதிப்பதும், பாபமின்றி சம்பாதிப்பதும், பாபம் செய்து சம்பாதிப்பதும், சம்பாதித்தும் செல்வத்தோ டிருப்பதும், தரித்திரத்தையே அனுபவிப்பதும், யாவும் நாம் பிரவேசிக்கும் தொழிலைப் பொருத்தாயிருக்கின்றன. இவ்வாறே யொரு மனிதன் திரண்ட செல்வத்தைச் சம்பாதித்து ஜனசமூகத்தில் கௌரவம் பெறுவதும் அவன் பிரவேசித்தத் தொழி பொருத்ததாய் இருக்கிறது.

உலகத்தில் மனிதனாய்ப் பிறந்த எவனுக்கும் தற்சுதந்தரம் இருக்க வேண்டும். அது இயற்கையாய்க் கடவுளா லளிக்கப்பட்டது. அது செல்வத்தை விடச் சிரேஷ்டமானது. எந்த அறிவுள்ள மனிதனும் அதை யிழக்கப் பிரியப்படான். சுதந்தரத்தை யிழந்தவன் எவ்வளவு செல்வவந்தனா யிருந்தாலும் நிம்மதியும்

சந்தோஷமு முடையவ ளுகமாட்டான். அறிவுடையோர்கள் சுதந்தரத்தை யிழந்து உயிர்வைத்துக்கொண் டிரார்கள்.

இப்போது யோசித்துப் பாருங்கள்! எந்தத் தொழில் வழியாய்ப் பணம் சம்பாதித்தால் கௌரவத்தோடும், சுயாதீனத்தோடும் பாபமின்றி அதிக பொருளைச் சம்பாதிக்கலாம்? உலகில் மேலோங்கி செல்வத்தோடும் கௌரவத்தோடு மிருக்கும் நாட்டார்களெல்லாம் எந்த வழியில் பொருள் சம்பாதித்தார்கள்? நமது நாடு இருக்கும் நிலைமையில் நம்மவர் அவ்வழியில் செல்லாததால்தான் பூர்வமிருந்த உயர்நிலையை யிழந்து இத்தகைய நிலைமையிலிருக்கிறோம் என்று கன்குவிளங்குகிற தல்லவா! எப்போது நம்மில் பெரும்பாலோராவது அத்தகைய வழிகளில் பிரவேசிக்கிறார்களோ அப்போதுதான் நமது தாய்நாடு பழைய உன்னத நிலைமையை யடையும்.

கலிகாலக் கொடுமையால் அறிவு மயங்கியிருக்கும் நமதுநாட்டாரில் பெரும்பாலோர், உத்தியோகம் என்ற சேவகா விர்த்தியையே எல்லாத் தொழில்களிலும் மேலானதும் கௌரவமுடையது மென மதிக்கின்றார்கள். ஆனால் இப்போதிருக்கும் நம்மவர் மட்டுமே யப்படி நினைப்பவர்களே யன்றி நமது முன்னோர் அப்படி நினைத்தவர்களல்ல. அவர்கள் உலகவிஷயம் முழுமையும் நன்றாயுணர்ந்த பூரணஞானிகள். அவர்கள் எல்லாத் தாரதம்மியங்களையும் நன்குணர்ந்தே "அதமம் சேவகாவிர்த்தி" என்று கூறி யுள்ளார்கள். அதற்குப் பதிலாக இப்போதுள்ள நம்மவர்கள் "கால்பணம் சம்பாதித்தாலும் கும்பினி சேவகமாகாது" என்று கூறத் தொடங்கிவிட்டார்கள். அந்தோ, கெட்ட காலத்தால் பெரும்பாலான விஷயங்களில், நம்மவர் இப்போது இவ்வாறே எதையும் ஆராய்ந்து பாராமலே, தலைகீழாய்—நேர்மாறாய்க் கருதுகிறார்கள்—பெரும்பாலும் நீங்களும் இப்போது உத்தியோகமே உயர்ந்த பதவியென்றே கருதுவீர்கள்.

ஆகையால் உத்தியோகத்திற்கும், விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் இவைகளுக்கு முள்ள தாரதம்மியத்தை ஆராய்ச்சி செய்வோம். மனதைச் சிதறவிடாமல் கவனம்வைத்து ஒருமுறைக்குப் பன்முறை வாசித்துப் பாருங்கள். நாம் கூறுவது அனுபவமான விஷயம்: "சீடனுக்கு உத்தியோகத்தில் என்ன அனுபவ மிருக்கும்? இதெல்லாம் யாரோ தவறாய்க் கூறிக்கொள்கிறவைகளையெழுதிவிட்டதே யன்றி, உத்தியோகம் எப்போதும் கௌரமும் அதிகாரமு முடையதே" என்று உள்ளுக்குள் தீர்மானித்துக் கொள்ளாதீர்கள். அப்படிச் செய்தால் மோசம் போய்விடுவீர்கள். ஏனெனில் எம்வரையில் என்றைக்கும் நாமும் உங்களைப் போன்ற ஒரு சீடனே யென்பது உண்மை. ஆனால் நீங்களனைவரும் பால, யௌவனச் சீடர்கள் - நமோ கிழச்சீடன். ஆதலால் நாம் இப்போது கூறுவது அனுபவத்தில் முழுதும் உண்மை யென்றே அய்யமின்றி நம்புங்கள். இப்போது நம்பி நாம் கோருகிற மார்க்கத்தில் நடவா விட்டால், பிறகு காரியம் மிஞ்சிப்போன பின், உங்கள் சுய அனுபவத்தில் "அடடா ஆனந்தபோதினியில் சீடன் கூறியது உண்மையே" என்றுணர்வீர்கள். இனி இந்த உத்தியோகத்திற்கும் மற்ற தொழிற்களுக்கு முள்ள உயர்வு தாழ்வையும், நன்மை தீமைகளையும், சுகாசுகங்களையும், இலாபாலோபங்களையும், பாப புண்ணியங்களையும், நித்தியா நித்தியங்களையும் ஆராய்ந்து பார்ப்போம்:—

1. வது:—ஒருவன் உத்தியோகம் செய்யக் கருதினால் வயிற்றுப்படிப்புக்கு வரம்பில்லை. ஏனெனில் அப்படிப்பின் அளவாய்த்தான் உத்தியோகம்கிடைக்கும். அந்தப்படிப்பின் அளவாய் பணச்செலவும் நேரிடும். அதிலும் இப்போதிருக்கும் வித்தியா யிலாகா நிபந்தனைகளின்படிமிக்க பணம்வேண்டும். ஆகையால் செல்வவந்தர்மக்களே அதில் துழையலாகும். அப்போதும் விஷயம் திருப்தியாய் முடியாது; ஏனெனில் ஒருவன் பீ. ஏ. பரீட்சையில் தேறியபின் அதற்குமேல் பணமில்லாவிடின், "அடடா நமக்கு இன்னம் இரண்டு வருடங்கள் வாசிக்கமட்டும் பணமிருந்தால் மெதுவாய் பி. யல். வரையில் வாசித்துவிட்டால் நல்ல கௌரவமும் பணமும் கிடைக்குமே, இப்போ தென்ன, டிப்டிகலக்டர் பரீட்சை வரையில்தேறினால் அந்த உத்தியோகம்வரையில்தான் போகலாம்" என்று அதிருப்தியோடு நிற்கவேண்டியதே. இவ்வாறே ஒவ்வொருவரும் இதற்கு மேல் படிக்க வழியில்லையே யென்றே அதிருப்தியோடு படிப்பை நிறுத்தவேண்டும். வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் இவற்றில் தேர்ச்சியடைய அதிக பணச்செலவில்லை. அத்தத்தேர்ச்சியோடேயே அவன் எவ்வளவு திரவியம் சம்பாதித்தாலும் சம்பாதிக்கலாம். அது அவனவன் விடாமுயற்சியையும் புத்தி நுட்பத்தையும் சாமர்த்தியத்தையும் பொருந்தியது. எவ்வளவு அதிகம் சம்பாதிக்க வேண்டுமாயினும் வழி தாராளமா யீருக்கிறது.

2. வது:—ஒருவன் படிப்பை விட்டுவிட்டு என்றைக்கு ஒரு உத்தியோகத்தில் அமர்கிறானோ, அன்று முதல் அவன் தன் சுயாதீனத்தையிழந்தான். இன்னும் தன் தேகத்தையும், ஸ்தூலதேகத்தை மட்டு மல்ல - சூக்ஷ்ம தேகத்தைக் கூட அடமானம் வைத்தவன் ஆய்விட்டான். எப்படி எனில் சொல்பகூலிக்கு ஒரு கைத்தொழிலைச் செய்கிறவன் ஒருவன் இருக்கிறான். திடீரென இரவு 12 மணிக்கு சுமார் 50 மைல் தூரத்திலுள்ள தன்தாய் இறந்துவிட்டாளென்று சமாசாரமெட்டியது. அவன் தட்சணம் புறப்பட்டு அங்கு செல்வான். உத்தியோகஸ்தனோ மேல் அதிகாரியின் அனுமதி பெறாமல் அடியெடுத்து வைக்கலாகாது.

இனி சூக்ஷ்ம சரீரம் எவ்வாறு அடமானம் என்றால்:—உத்தியோகஸ்தனல்லாத மற்றதொழிலாளிகள் இலௌகீக விஷயங்களில் பிரியப்படிநடக்கலாம். எதிலும் தனக்குப் பிரியமான அபிப்பிராயத்தைக் கூறலாம். தன் மனசாட்சிக்கு நியாயமாய்த் தோன்றும் எந்த விஷயத்திலும் பிரவேசிக்கலாம். உத்தியோகஸ்தனோ துரைத்தனத்தார்க்குப் பிரியமில்லாத விஷயங்களில் பிரவேசிக்கலாகாது. அவர்கட்குப் பிரியமில்லாவிடங்களுக்குச் செல்லலாகாது. இதனால் அவன் தன் மனதிற்குத் திருப்தியை யுண்டாக்கிக்கொள்ள சக்தியின்றி மனதிற்கு விலங்கு பூட்டிக்கொண்டவ னாகிறான்.

3. வது:—உத்தியோகஸ்தனுடைய சம்பாதனைக்கு வரையறுப்புண்டு—அதற்கு மேல் அத்தொழிலில் காலனு சம்பாதித்தாலும் அது அக்ரமமான சம்பாதனை யாகவே கருதப்படும். அதில் அகப்பட்டுக் கொண்டால் தண்டனை கிடைப்பதோடு உத்தியோகமேபோய்விடும். மறுபடி வேறு உத்தியோகமும் கிடைக்காது—அந்த உத்தியோகத்தி லிருந்தபடியே வேறுதொழிலும் செய்யலாகாது—மற்றபேர்க்கோ அந்த வரையறுப்பில்லை.

4. வது:—ஒரு உத்தியோகஸ்தன் தன்வேலையை மிக்க சுறுசுறுப்போடும் சாமர்த்தியத்தோடும் கஷ்டப்பட்டு செய்தாலும், அதிக பணம் கிடைக்காது. அந்தந்தகாலம் வரும்போதுதான் உத்தியோகம் உயரும். அதுவும் அந்த உயர்பதவிக்குத்தக்க படிப்பு இவனுக் கிருந்தால்மட்டுமே கிடைக்கும். மற்றதொழிலாளி எவ்வளவிற் கெவ்வளவு அக்கரையோடு கஷ்டப்படுகிறானோ, எவ்வளவிற் கெவ்வளவு புத்தியை யூன்றி யுழைகிறானோ, அவ்வளவிற் கவ்வளவு அதிகம் சம்பாதிப்பான்.

இந்த உத்தியோகத்தில் இருப்பது இந்த ஊழல்கள்மட்டுமல்ல. இதில் பாபச்செயல்களுக்குத் தூண்டுதல் உண்டு. பணம் யாவரையும் மயங்கச்செய்யும். ஒரு உத்தியோகஸ்தன் தனக்கு விதித்துள்ள சம்பளத்திற்குமேல் சம்பா

திக்கவேண்டின், ஒன்று தன் உத்தியோக முறைமையில் சம்பந்தப்பட்ட ஜனங்களை அக்ரமமாய் மிரட்டியாவது, அல்லது தனக்குச் சம்பளம்கொடுக்கும் அரசனுக்கு நஷ்டமுண்டாக்கி யாவதுதான் சம்பாதிக்க வேண்டும். வேறு வழியாய்க் கிடைக்காது. சில தொழில்களில் வலியக் கொடுக்கிறார்கள். ஆகையால் அது அக்கிரம சம்பாதனையல்லவென்று கருதுகிறார்கள். அது தவறான அபிப்பிராயமே. மாமத் இலாகாவில் கன்டிராக்ட்செய்பவர்கள் 100-க்கு இவ்வளவென்று ஓவர்சீர் முதலியவர்களுக்குக் கொடுப்பதாய் வைத்துக்கொள்வோம். அப்படிக் கொடாவிட்டால் நமது வேலையில் குற்றங்கண்டுபிடித்து நமக்கு வரவேண்டிய தொகையில் குறைத்துவிடுவார்கள் என்றும், பணம்பெற ஆலசியமாகும்படி செய்வார்களென்றும் பயந்துகொண்டுதான் கொடுக்கிறார்களேயன்றி வேறில்லை. இவ்விதத் தூண்டுதல்களில் சிக்கி அனேக உத்தியோகஸ்தர்கள் தண்டனையடைந்திருக்கிறார்கள். இப்போதும் ஆங்காங்கு நடக்கிறதைப் பார்க்கிறோம்.

(தொடரும்.)

சீடன்.

ஐயத்திற்கு விடை

கழிந்த சித்திரைமாதச் சஞ்சிகையில் வெளிவந்த ஊழும் ஊக்கமும் என்ற விஷயசம்பந்தமாய் கூறப்பட்ட குறிப்பில், 391-ம் பக்கத்தில் வெளியான பிராரப்த வகுப்பிலுள்ள இச்சாபிராரப்தம் என்பதன் விவரத்தைப்பற்றி—நமது சந்தாதாரரில் ஒருவராகிய உரையூர் ம-ா-ா-ஸ்ரீ டி. எ. சுப்பராயமுதலியார் கீழ்கண்ட ஐய வினவை நமக்கு யனுப்பி, அதை விளக்கிக்காட்டுமாறு விரும்புகிறார்.

ஐய வினா?

"பிராரப்த வினைப்படிசெல்லும் இச்சை துர்விஷயங்களில் செல்லாதெனின், நல்விஷயங்களில்மட்டும் செல்லும் என்பது நியாயமாகத் தோன்றவில்லை. ஆனால் விஷயம் துர்விஷயமாயினும் அந்த பிராரப்த வினையின் வலியால் அனுபவிக்கப்படும் என்று வியக்தமாய்ச்சொல்லின் அது திடபுத்தியும் நுட்பவுணர்வும் இல்லாத ஒருவருக்கு விபரீதத்தை விளைவிக்கும் என்று கருதித் தாங்கள் இவ்வாறு வெளியிட்டீர் என்று எண்ணுகிறேன்—அப்படிக்கில்லையேல் அது முரணாகத் தோன்றுகிறது.

பிராரப்தவினை யிருகூறாயிருக்க அதன்வழிசெல்லும் இச்சையும் இருகூறாயிருக்கவேண்டுமென்பது என் துணிபு"

இவைகளே நமது நண்பரின் ஐயநிலத்தில் உண்டான விபரீதச் செடிகள். இவ்விஷயம் மிக்க நுட்பமானதால் இத்தகைய சந்தேக விபரீதங்கள் அனேகர்க்கு உண்டாயிருக்கக்கூடும். ஆனதுபற்றி இவ்விஷயத்தைச் சஞ்சிகை வாயிலாகவே வெளியிடக் கருதினோம்.

சந்தேகங்களைப்பற்றி விவகரிக்குமுன் இரண்டொரு மறுக்க முடியாத உண்மையான சித்தாந்தங்களை நாம் மனதில் வைக்கவேண்டும். அவையாவன:—

(1) கடவுள் நீதியே யுருவமானவர்

(2) கருணையே சொரூபமாயுடையவர்

(3) கடவுள் நமக்கு இதுநல்லது இதுகெட்டது, இதுபாபம் இது புண்ணியம் என்ற பகுத்தறிவை யளித்திருக்கிறார்.

(4) குற்றம்செய்தாலன்றி தண்டிக்கமாட்டார்

(5) சீவசிருட்டி, சிவசிருட்டி அல்லது சீவச்செயல், சிவச்செயல் என இரண்டுண்டு.

என்பவைகளே. இனி சந்தேகத்தைப்பற்றி விவகரிப்பாம்.

முதலாவது கடவுள் நமக்குப் பகுத்தறிவை யளித்திருக்கிறார். அதுவே நமக்கு மனச்சாக்ஷியாயிருந்து ஒவ்வொரு செய்கையும் நல்லது கெட்டதுஎன்று நமக்கு வற்புறுத்திக்கொண் டிருக்கிறது. நாம் அதன் வழிசெல்லாது மனம் போனபோக்கில் செல்வதால்தான் நாம் பாபத்திற்குள்ளாகிறோம். ஆகையால் பாபத்தைச் செய்யாது தப்பித்துக்கொள்ளும் சக்தியைக் கடவுள் நமக் களித்திருக்கிறார் என்பது உண்மை.

வினையென்பது.

(1) ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என்று மூன்று வகைப்படும்.

இந்த வினையைச் சீவனாகிய சித்துப்பொருள் ஆன்மா, மனம், வாக்கு, காயம் என்ற கருவிகளைக் கொண்டு செய்கிறது. சித்துப் பொருளாகிய சீவன் வினையைச் செய்யுமேயன்றி மற்ற சடப்பொருள்கள் எதுவும் செய்ய வல்லமையுடையதல்ல.

இவ்வாறு சீவன் செய்யும் ஒவ்வொரு கன்மத்திற்கும் ஆகாமியம் என்று பெயர். இவ்வாறு செய்யப்படும் ஒரு கன்மம் ஒரு விதை போன்றது. ஏனெனில், பின்னால் இது பக்குவப்பட்டு நமக்கு புசிப்பாய் வருகிறது. அதாவது பின்னால் அனுபவிக்க வேண்டி வருகிறது.

(2) இப்படி செய்யப்பட்ட பல ஆகாமியங்கள் சேர்ந்த மொத்தத்திற்கு, அதாவது ஒரு ஜன்மத்தில் பிறந்ததுமுதல் மரண பரியந்தம் சேர்ந்த மொத்தக் கூட்டத்திற்கு, சஞ்சிதம் (சஞ்சிதம்=கூட்டம்) என்று பெயர்.

(3) இந்தச் சஞ்சிதம் பக்குவப்பட்டு அடுத்த ஜன்மத்தில் நமக்கும் புசிப்பாய் வரும்போது இதற்கே பிராரப்தம் என்று பெயர். அதாவது போன ஜன்மத்தில் நாம் செய்த சஞ்சிதமே இந்த ஜன்மத்தில் நமக்குப் பிராரப்தமாய் வந்திருக்கிறது.

அப்போது விதையாயிருந்தது இப்போது பலனாயிருக்கிறது—அதாவது விதையை வறுத்துவிட்டால் அல்லது அவித்துவிட்டால் புசிக்க யோக்கியப்படுவதுபோல்,

இப்போது இது புசிக்க மட்டும் யோக்கியதை யுடையதே யொழிய, இதிலிருந்து இன்னொரு விதை அதாவது, ஒரு வினை யுண்டாகாது. அப்படிச் செய்யும் சக்தி யிதனிடமில்லை. இதுசடப்பொருள். சித்துப்பொருளல்ல. சித்துப்பொருளாகிய சீவனே மறுபடி ஆகாமியமாகிய விதையை விதைக்க வேண்டும்.

இந்தச் சீவன் தன் சிருஷ்டியால் விதையை மட்டும் உண்டாக்கி விடுகிறானேயன்றி அதைப் பக்குவப்படுத்தவும் புசிக்கவும் அவனால் முடியாது. ஈசனே அதைப் பக்குவப்படுத்தி அவன் செய்தவினைக்குத் தக்கபடி ஊட்டிவைக்க வேண்டும்.

".....அவரவர் வினையின்படி ஊட்டிவைப்போனும் உறங்கவைப்போனும்
...!...ஒருவனுண்டே தில்லையம்பலத்தே" (பட்டினத்தடிகள்.)

இதுதான் ஈசனுடைய திதிக்கிருத்தியம். அதாவது மூன்று வழிகளில் எந்த வழியிலேனும் பிராரப்தத்தை நாம் புசிக்கும்படி செய்தல் ஈசனுடைய வேலையேயன்றி எள்ளளவு கூட நமது வேலையல்ல. தாயானவள் தன் மக்களின் வயது

தேகசுகம் முதலியயாவும் கவனித்துத் தக்கபடி எப்படி யுணவையூட்டுகிறாளோ அவ்வாறே யீசனும் நமக்கு நமது பிராரப்தவினையைக் கருணையோடு உண்பிக்கிறார். ஏன் கருணையோடெனில், நாம் செய்தவினையை நாமே யனுபவித்தொழித்துவிட்டு பிறவிப் பிணியிலிருந்து நீங்கி அவனுடைய அருள் விலாசமாகிய மோக்ஷவாரியில் நீங்காத ஆனந்தத்தை யனுபவிக்கும் பொருட்டாதலால். நாம் அறிவோடு அவனைத் துதித்துக்கொண்டே அவ்வினையை மட்டும் பொசித்துப் பரகதிக் காளாகாமல், நானென்று முளைத்து அகங்காரம்கொண்டு மன வழியேசென்று, ஈசனது எச்சரிக்கையாகிய மனச்சாக்ஷியையும் சட்டை செய்யாமல், வினை விதைகளை விதைத்துக்கொண்டேயிருப்பதால் மறுபடி மறுபடி பிராரப்தம் வந்துகொண்டேயிருக்கிறது. ஜென்மத்திற்கு முடிவில்லாமலேயிருக்கிறது. இது நமது குற்றமே யென்பதை நாம் உறுதியாய் மனதில் வைக்கவேண்டும்.

சிற்சில சமயங்களில் குழந்தை ஆகாரவேளைக்கு அழாமல் மந்தமாய் இருந்து விடுவதுண்டு. அச்சமயம் தாயானவள் அதைச் சில்லென்றிருக்கும் தரையில் கிடத்தியாவது அல்லது தேகத்தில் சிட்டிகை போட்டாவது விழித்துக்கொண்டு அழச்செய்து பிறகு பாலை யுண்பிக்கிறாள். அதுபோலவே ஆண்டவன் பிராரப்தத்தை யுண்பிக்க நமக்கு இச்சையை யுண்டாக்குகிறார். அந்த வழியாய் அனுபவிக்கும் பிராரப்தத்திற்கே இச்சாபிராரப்தம் என்று கூறப்படுகிறது. இது அவனால் உண்டாக்கப்பட்ட இச்சை யேயன்றி ஜீவனால் உண்டானதல்ல.

"சுபாவமாய் இச்சை செல்வது நல்வழியிலும் கெட்டவழியிலுமாகிய இரண்டிலுமேயாதலால், இங்குமட்டும் கெட்டவழியில் செல்லாதென்பது பொருத்தமாய்த் தோன்றவில்லை. விஷயம் துர்விஷயமானதாலும், அந்தப் பிராரப்தவலியால் அனுபவிக்கப்படுமென்று வெளிப்படையாய்க்கூறிவிட்டால் திடபுத்தியும் நுட்பவுணர்வு மில்லாதார்களுக்கு விபரீதத்தை விளைவிக்குமென்று கருதி இவ்வாறு வெளியிட்டீர்களென்று எண்ணுகிறேன். அப்படிக்கில்லையெனின் அது முரணாகத் தோன்றுகிறது" என்று நமது நண்பர் கூறுகிறார் என மேலே கூறியிருக்கிறோமல்லவா!

அந்தோ! இதில் முரண் என்பது ஒன்றுமேயில்லை. நாம் அறிந்துகொள்ள வேண்டியதற்குத் தெளிவான வழிசெல்ல வேண்டியதே குறையன்றி விஷயத்தில் முரண் இல்லை. மேலும் இதில் நாமாய் ஒரு உத்தேசங்கொண்டு ஒன்றை மறைத்துக் கூறவேண்டிய அவசியம் சற்றுமில்லை. இத்தகைய விஷயத்தில் உண்மையை யுள்ளபடிக் கூறவேண்டுமேயன்றி எள்ளளவும் பிழலாகாது. வேதங்களை யாராய்ந்துணர்ந்து, அனுபவத்தால் சுருதி யுத்தி அனுபவம் மூன்றிற்கு மொத்ததெனக் கண்டபிறகே ஆன்றோர்கள் எதையும் தீர்மானித்திருக்கிறார்கள். அதையே நாமும் கூறுவதன்றி நாமாய்க்கூறுவது ஒன்றுமில்லை.

(தொடரும்.) பத்திராதிபர்.

ம-ா-ா-ஸ்ரீ கா-சோமசுந்தரமுதலியாருடைய ஐயம்:—அடுத்த சஞ்சிகையில் வெளிவரும். (ப-ர்)

"பேதமையென்பது மாதர்க்கணிகலம்"

மேற்கூறப்பட்ட வாக்கியம் மெய்ஞ்ஞானச் செல்வியாய் விளங்கியிருந்த நமது ஔவை பிராட்டியார் அருளிச்செய்த தென்பது யாவரும் அறிந்ததே.

"பேதமை என்பது ஸ்திரீகளுக்கு ஒரு ஆபரணமாகும்" என்பதே

யிதன்பொருள்—அதாவது மாதர்கள் பேதமையென்னும் குணத்தைப் பொருந்தியிருக்கவேண்டும் என்பதாம்.

பேதமை என்றால், அறிவில்லாமை, மடமையென்று இந்தவிடத்தில் சிலர் பொருள் செய்கிறார்கள். அது முழுதும் தவறு—அறிவில்லாமையாகிய மூடத்தனத்தைக்கூட யாரேனும் புகழ்ந்து கூறுவார்களோ! ஔவையார் அதையும் மாதர்க்கணிகலம் என்று கூறுவாளோ! இவையாவுஞ் சிந்தித்து சமயோசிதப்படி அர்த்தங்கொள்ளாது மனம்போனபடி யர்த்தங்கொண்டு ஔவையார் மேலேயே குற்றம் சுமத்தும் விவேவிகள் கூட இக்காலத்திலுளர். ஒரு வார்த்தைக்குப் பல அர்த்தங்கள் உண்டு. எப்படியெனில் இலவணம் என்றால் குதிரைக்கும் பொருள், உப்பிற்கும் பொருள் என்றால், ஒருவன் சாப்பிட்டுக்கொண் டிருக்கையில் சாதத்தில் மோர் விட்டுக்கொண்டு இலவணம் கொண்டுவா வென்று கூறினால், அப்போது உப்பை யல்லவோ கொடுக்கவேண்டும். அதைவிட்டு இலவணத்திற்குக் குதிரையென்றும் அர்த்தமிருக்கிறதே யென்று குதிரையைக் கொண்டுவந்து அவன் எதிரில் நிறுத்தலாகுமோ! அப்படிச்செய்வது சமயோசித அறிவில்லாக் குற்றமேயாகும்—அதுபோல் இங்கு பேதமையென்றால் மூடத்தனமன்று. தான் எவ்வளவு கற்றிருப்பினும் அவற்றைக் காட்டிக்கொள்ளாது ஒன்றுமறியார்போலிருக்கும் குணத்திற்குப் பேதமை யென்று பெயர். அக்குணத்தால் ஸ்திரீகளுக்குப் பலநன்மைகளும் மேன்மையு முண்டாகும். எங்ஙனமெனின், அக்குணத்தால் அகங்காரம் நீங்குகிறது; பெருமை யடங்கிவிடுகிறது. எப்படியென்றால், தான் அனேகநூல்களை வாசித்திருப்பதாகவாவது, தான் மிக்க புத்திசாமர்த்தியம், சத்தியம், தயாளம், முதலிய புகழத்தக்க குணங்களையுடையவ னென்றாவது செல்வவந்த னென்றாவது பிறர் கூறவேண்டுமென்று விரும்புவது பெருமைக்குணமே யாகும். அதற்காகவே சிலர் தன் உயர்குணம், உயர்கல்வி முதலியவற்றைப் பற்றி தாமே பிறரிடம் வலியக் கூறுகிறார்கள்.

அத்தகைய தன்குணங்களை வெளிக்குக் காட்டாது தானே மறைத்துவைத்துக் கொண்டிருக்கும் ஒருவரிடம் அகங்காரத்திற்காவது பெருமைக்காவது இடமில்லாமற் போகிறது. இதுமட்டுமல்ல, கோபத்திற்கும் தலைநீட்ட இடமில்லாமற் போகிறது. எவ்வாறெனின் ஒரு விஷயத்தைப்பற்றி சிலர் தாறுமாறாய் நமக்குக் கோபம் வரத்தக்கவிதமாய் பேசிக்கொண்டிருக்க நாம் கண்டாலும், ஒன்றுமறியார்போ லிருப்பதால் நமக்குக் கோபம் ஜனிக்கக்காரணமில்லை.

இதில் இன்னொரு நன்மையு மிருக்கிறது. அதாவது:—

உலகத்தில் ஆசையும் கௌரவ இச்சையும் சுபாவமாய் யார்க்கும் உண்டு. உலகவிவகாரத்திற்கு அவை அவசியமாகவே யிருக்கின்றன. இன்றேல் விர்த்தியாராது. அவற்றால்தான் ஊக்கங்கொண்டுழைத்து அவரவர்கள் மேலோங்கி வருகிறார்கள். ஒருவன் நாம் உயர்தரக் கல்விகற்று உயர்ந்த அந்தஸ்துள்ள உத்தியோகம் செய்யவேண்டும் என்று கருதினால், அந்த இச்சையைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக கஷ்டப்பட்டு வாசித்து அப்படியே கோரிய பதவியையடைகிறான். அப்படிச் செய்யாமலே கௌரவமட்டும் அடைய ஆசைப்படுகிற ஒருவன், பிறர் தன்னை மிக்க வாசித்த மகாபண்டிதனென்று நினைக்கவேண்டுமெனக் கருதி, அவ்வாறே அபிநயம் செய்கிறான்.

தன்னோடு சம்பாஷிப்பவன் எத்தகையவானாலும் அவனிலும் நாம் அதிகமே கற்றிருப்பதாய் அவன் கருதவேண்டும், அல்லது அவனுக்குத் தெரிந்த ஒருவிஷயம் நமக்குத் தெரியாது என்று அவன் கருத விடந்தரலாகாது என்ற பெருமையுடையவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் இப்படி நினைப்பது

வீண் பெருமைக்கேயாகும். அந்தோ! இதனால் இவர்கள் அடையும் நஷ்டத்தை யிவர்கள் அறியார்கள் போலும். அப்பெருமைக்காக இவர்கள் யாராவது ஒரு விஷயத்தைக்கூறத் தொடங்கும்போதே "ஆம் ஆம் அது எனக்கு முன்னமே தெரியும்" என்று பெருமையாய்க் கூறிவிடுகிறார்கள். அதனால் சொல்ல வந்தவன் பேசாமலிருந்து விடுகிறான். உண்மையில் அவன் கூறப்போகும் விஷயம் இவனுக்கு என்னளவுகூடத் தெரியாது. இதனால் இவன் அவனிடமிருந்து தெரிந்துகொள்ளக் கூடிய நல்ல விஷயத்தை இழந்தவனாகிறான்.

அறிவாளிகள் கற்றோர்குழுவில் இருக்க நேர்ந்தால், அவர்கள் என்ன பேசிக்கொண்டிருப்பினும் ஊமைபோல் இருந்துகொண்டு, அவர்கள் கூறும் அரிய விஷயங்களை அன்னம்போல் மனதிற்சேர்த்து வைத்துக்கொள்வார்கள். அவர்கள் பேசும் விஷயத்தில் குற்றங்கண்டவிடத்தும் வலிய ஒன்றும் பேசார்கள். அவர்கள் இது சரிதானாவென்று தங்களை கேட்டால் அப்போதும் மிக்க அடக்கமாகவே, "ஆ! தங்களுக்குத் தெரியாததல்ல. அதற்கு இவ்விதமாய்க்கூட ஒரு அர்த்தமிருப்பதாய்க் கேள்வி" என்று தாழ்மையோடு கூறுவார்கள். தம்மிலும் குறைந்த கல்வியுடையோர் தம்மிடம் ஏதாவதொரு விஷயத்தைக் கூறினால், அது தமக்குத் தெரியுமெனினும், பொறுமையாய்க் கேட்டுக்கொள்வார்கள். ஏனெனில் நமக்குத் தெரியாத ஏதாவதொரு விசேஷ விஷயம் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாகும். அதன் விசேஷத்தை யறியாமலே அவர்கள் அதை வெளியிடுவார்கள்.

ஆகையால் இப்பேதமை யென்ற குணம் ஸ்திரீகளுக்கு எத்தன்மைய நன்மையை யளிக்கிறது பாருங்கள். இக்குணம், கல்விகற்பதால் அவர்களுக்கு கர்வம் உண்டாகும் என்று சிலர் கூறுவதற்குமாறாக, கர்வம் கொள்ளாதிருப்பதற்கும், அடக்கமாக விருப்பதற்குமே வழியுண்டாக்குகிறது.

இயற்கையிலேயே அகங்கார முதலிய தூர்க்குணங்களை யுடையோர் அரை குறையாய் வாசித்தால், அந்த இயற்கைக் குணங்களே அவர்களிடம் வீர்த்தியாகும். அத்தகைய அகங்காரங்கொள்வோர் ஆடவரிலும் உளர். அவ்வளவேயன்றி "பொதுவாகவே ஸ்திரீகள் வாசித்தால் அகங்காரிகளாகிப் புருடரை மதிக்காதவர்களாய் விடுகிறார்களாதலால் அவர்களுக்குக் கல்வியேகூடாது" என்று கூறுவது அறிவின்மையே யாகும். அப்படிக்கூறுவது "கூந்தலிருந்தால் பேன் பிடிக்கும் ஆகையால் மழுங்க மொட்டையடித்து விடவேண்டும்" என்று கூறுவதுபோ லிருக்கிறது.

ஆதலால் நம்மரிய சகோதரிகளே! நம் ஔவையார் அருளியபடி கல்வி கற்று அகங்காராதி குணங்களை யணுகவொட்டாது தடுத்து நற்குலமணிகளாய் விளங்கும் வழியில் நடந்துகொள்வீர்களென்று பரம தயாநிதியாகிய ஆதிநாயகனடியிணைகளை யிறைஞ்சி யேத்துவோமாக. சீடன்.

கற்கோட்டை—நாவல்

(399-வது பக்கத் தொடர்ச்சி)

அரியநாயகி "நானா! என்ன இக்கட்டு நேர்வதாயினும் முன்னே நோய்க் கற்கோட்டைக்குச் செல்லவேண்டும்" என்றாள்.

அதைக்கேட்ட வாலிபர் இருவரும் ஒரேவாக்காய்.— "ஆ! கற்கோட்டைக்கா?" என்றார்கள். இதைக்கேட்ட அரியநாயகிக்கு ஒரு சந்தேகம் உதித்தது. "ஆம். நான் அங்கு வசிக்கிறவள்தான். உங்களைப்பற்றி எனக்கொரு சந்தேகம், ஒருவார்த்தையால் அதனுண்மை விளங்கிவிடும்—அதோ விருக்கிற வெள்ளைக்குடிசை" என்றாள்.

இறகணிந்த வீரன்.—"ஆ! நீ யெங்களை யறிவாயென்று தெரிகிறது. தயவு செய்து எங்கள் தமையன் எங்கே யிருக்கிறானென்பதைக் கூறவேண்டும். அவர் கற்கோட்டைக்குச் செல்வதாய் மட்டும் எங்களிடம் கூறினார். மற்ற விபரம் தெரியாது" என்றான்.

அவர்கள் இருவருமே திரவிய சிங்கம் பிரபுவின் சகோதரர்கள் என்று அரியநாயகி யறிந்துகொண்டதே, மிக்க சந்தோஷமடைந்து, திரவியசிங்கம் பிரபு சிறைப்பட்டதையும், தன்னால் விடுதலை யடைந்ததையும் கூறினாள். அவர்கள் அவளுக்கு மிக்க நன்றிபாராட்டி, தாங்கள் அவளுக்கு உதவிசெய்ய நேர்ந்ததற்காக மிக்க சந்தோஷ மடைந்தார்கள்.

உடனே சகோதரரிருவரும் அரியநாயகியோடு கற்கோட்டைக்குப் புறப்பட்டார்கள். அவர்களில் மூத்தவன் பெயர் ஸர்தார் குணசிங்கம் பிரபு, 34-வயதுடையவன். இளையவன் நாமம் விக்கிரமநாதம் பிரபு, வயது 32. வழியில் மூத்தவன் கண்ணபிரான் ஆபத்தில் சிக்கியிருப்பதைப்பற்றி தன் தமையன் தங்களிடம் கூறியதாக வியம்பினான். அதன்மேல் இராணி ஸ்தல அதிகாரிகள் கண்ணபிரான் விஷயத்தில் சட்டப்படி நடந்துகொள்ளட்டு மென்று கட்டளையனுப்பி யிருப்பதைப்பற்றி அரியநாயகி கூறினாள்.

அதைக்கேட்டதே மூத்தவன் இளையவனை நோக்கி "ஆஹா! நாம் நமது சகோதரனாகிய கண்ணபிரான் பிரபுவைப் பார்த்திராவிட்டாலும், நமது தமையன் அவரிடம் விசுவாசங்கொண் டிருக்கிறானென்று நாம் அறிவோம். ஆகையால் எந்தவிதத்திலும் நாம் கண்ணபிரானைக் காப்பாற்ற நம்மால் கூடியவரை ஒருகை பார்த்தே தீரவேண்டும். மேலும் இப்போது நடந்த விஷயத்தால் நாம் இனியிங்கு ஒருவினாடிகூட இருக்கலாகாது. நமது தமையனும் இங்குவரமாட்டார். நாம் உத்தேசித்தபடி செய்வதால் தமையனும் சந்தோஷ மடைவாரே யன்றி வேறில்லை. என்னசொல்லுகிறாய். இன்னும் காரியம் மிஞ்சிபிராது" என்றான்.

இளையவன்.—"அண்ணா! தாங்கள் எனக்கு இவ்வளவு நியாயம் எடுத்துரைப்பது அனாவசியமே. தங்கள் கட்டளை யொன்றே யெனக்குப் போதுமானது" என்றான்.

குணசிங்கன் சட்டென்று அரியநாயகியை நோக்கி "ஆ! அந்தக்கணையாழி! அதனால் எதோ நன்மை கிடைக்குமென்று அப்போதே யென் மனதிற்பட்டது" என்றவுடனே அரியநாயகி "இதோ இதோ கணையாழி, ஓ உதாரகுண வீரர்களே! கண்ணபிரானை நீங்கள் காப்பாற்றும்படி கடவுள் கிருபை செய்வார். சீக்கிரம் செல்லுங்கள். காரியம் மிஞ்சிவிட்டிராது" என்றாள்.

சகோதரர்கள் இருவரும் உடனே கணையாழியை வாங்கிக்கொண்டு ஒருவினாடியேனும் தாமதியாது வடக்கு நோக்கிக் குதிரைகளைத் துரிதமாய் நடத்தினார்கள். அரியநாயகியும் அவள் ஆட்களும் கற்கோட்டையை நோக்கிச் சென்றார்கள்.

செல்வராயர் அதிகாலையில் கற்கோட்டையை விட்டுப் புறப்பட்டு கண்ணபிரானுக்கு உதவிசெய்வதற்காகத்,தமது நண்பர்களோடு யோசிக்கவேண்டி இந்திர புரிக்குச் சென்றார் தங்கம்மாள் அரியநாயகி சென்று நெடுநேரமாகியும் திரும்பி வாராதிருப்பதைப்பற்றி மிக்க கலவரமடைந்திருந்தாளாதலால், அவள் வருகையைக் கண்டதே மிக்க சந்தோஷ மடைந்தாள். அரியநாயகி அரண்மனையில் நடந்த சங்கதிகள் முதல் யாவும் விவரமாய்க் கூறிவிட்டு மிக்க மனக்குழப்பத்தோடு, "ஐயோ நான் என்ன செய்வது? இராணி தன் படைவீரர்களோடு வந்து என்னைப் பிடித்துப்போய் திவாகரனை மணம்புரிந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்துவாளே. நான் எங்காவது ஓடிவிடட்டுமா?" என்றாள். (தொடரும்.)

ஆரணி தப்புசாமி முதலியார்.

" ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

காளயுக்தி௵ வைகாசி௴ சாலிவாகன 1840, கலியுகாதி 5019,
பசலி 1327-28, கொல்லம் 1093-94,
இங்கிலீஷ் 1918-ம்௵ மே௴ — ஜூன்௴

மே௴	வைகாசி௴	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
14	1	செ	சது-19-48	திரு-28-19	மா 28 சி	மந்திரம் செபிக்க
15	2	புத	பஞ்-21-40	புன-31-36	சித்த 60	சஷ்டிவிரதம்
16	3	வி	சஷ்-23-42	பூச-35-21	அமி 35 சி	நாமகரணம் வைக்க
17	4	வெ	சப்-25-25	ஆயி-39-2	மரண 60	
18	5	ச	அஷ்-28-51	மக-44-51	அ 45 சித்	
19	6	ஞா	நவ-33-36	பூர-50-29	மா 50 அ	
20	7	தி	தச-38-2	உத்தி-56-31	சித்த 60	
21	8	செ	ஏகா-42-48	அஸ்-60-0	சித்த 60	
22	9	புத	து-47-34	அஸ்-2-45	மா 3 சித்	
				சித்-13-42		
23	10	வி	திர-51-39	சித்-9-1	சித் 9 அ	
24	11	வெ	சது-54-44	சுவா-14-8	சித்த 60	
25	12	ச	○பௌ 56 20	விசா-18-41	சித்த 60	காஞ்சி வரதராஜர் கருட [சேவை
26	13	ஞா	பிர-57-32	அனு-21-46	மரண 60	மரணயோகம்
27	14	தி	துதி-7-7	கேட்-27-40	சி 28 அமி	வியாபாரம் செய்ய
28	15	செ	திரி-55-19	மூல-52-20	அமி 32 சி	கிருஷி செய்ய
29	16	புத	சது-52-24	பூரா-24-0	அமி 60	காஞ்சி வரதராஜர் ரதம்
30	17	வி	பஞ்-48-30	உத்-25-8	சித் 60	கரிநாள்
31	18	வெ	சஷ்-43-47	திரு-22-56	மா 23 சித்	வதூ கிருகப்பிரவேசம்
1	19	ச	சப்-38-36	அவி-17-57	சித் 18 அ	தூண்நட
2	20	ஞா	அஷ்-32-44	சதை-13-23	சித் 60	புது அடுப்புபோட
3	21	தி	நவ-26-22	பூரட்-9-30	மா 9 சித்	நிஷேகம்
4	22	செ	தச-20-41	உத்-5-23	அமி 5 சி	நாமகரணம்
5	23	புத	ஏகா-14-20	ரேவ-1-28	மா 2 சி	சங்குஸ்தாபனம்
				அசு-56-13		
6	24	வி	து-8-58	பர-50-12	சித் 50 மா	தனியநாள்
7	25	வெ	திர-3-47	☆கார்-50-48	சித் 51 மா	கிருத்திகை விரதம்
			சது-55-30			
8	26	ச	●அமா-55-41	ரோக-49-48	அ 50 சித்	அமாவாசை விரதம்
9	27	ஞா	பிர-53-57	மிரு-49-45	சித்த 60	நாமகரணம்
10	28	தி	துதி-51-46	திரு-49-21	சித் 49 அ	வித்தியாப்பியாசம்
11	29	செ	திரு 51-41	புன-5-56	சித்த 60	பும்சவனம்
12	30	புத	சது-52-37	பூச-53-52	சித்த 60	கழுகுகட
13	31	வி	பஞ்-54-42	ஆயி-57-31	சித் 58 அ	கிரகசாந்தி செய்ய

1918 ஜூன்

சுக்	புத	ரவி குரு	கேது
	7-வி-ரா-ரி 15-மே-சு 21-ரி-புத 28-மி-குரு		சனி
			செ
ராகு			

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 3 | காளயுக்தி௵ ஆனி௴ கூ௳ 1918-ம்௵ ஜூன்௴ 14௳ | பகுதி 12

கடவுள் வணக்கம்.

கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருக விலையே
கருணைக் கிணங்காத வன்மையையு நான்முகன்
கற்பிக்க ஒருகட வுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழக்கு முண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிரங்கியெனை
வாழ்விப்ப துன்பரங் காண்
பொல்லாத சேயெனிற் றாய்தள்ள வீதமோ
புகலிடம் பிரிது முண்டோ
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா விருக்க வருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுக வாரியே.

சிந்தைத் துயரென் றொருபுரவி சினந்து சினந்து போர்முயங்க
நிந்தைக் கிடமாய்ச் சகவாழ்வு நிலையென் றுணர்ந்தே நிற்கின்றே
னெந்தப் படியுன் னருள்வாய்க்கு மெனக்கெப் படிநீ யருள்செய்வாய்
பந்தத் துயரற் றவர்க்கெளிய பரமானந்தப் பழம்பொருளே.

பொருளைப் பூவைப் பூவையரைப் பொருளென் றெண்ணு மொருபாவி
யிருளைத் துறத்திட் டொளிநெறியை யென்னுட் பதிப்ப தென்றுகொலோ
தெருளத் தெருள வன்பர்நெஞ்சந் திற்றித் துருகத் தெவிட்டாத
வருளைப் பொழியுங் குணமுகிலே யறிவா னந்தத் தாரமுதே.

ஆனந்த போதினி

காளயுக்தி௵ ஆனி௴ கஉ

கல்விப்பயன்

உலகத்தில் பொருட் செல்வத்தினும் கல்விச் செல்வமே சிறந்ததென்பது பெரும்பாலும் யாவரும் அறிந்த விஷயமே. ஆயினும் அக்கல்வியால் நாம் அடையவேண்டிய சிறந்த பொருள் யாதென்றுணர்ந்து அதை யடைய முயலவேண்டியதே ஆறறிவுடைய மக்கட்பிறவி யடைந்தோர்தங் கடமையாகும். உலகில் விசேஷமாய்ப் பொருள் சம்பாதிப்பதற் கென்றே கல்வி கற்கிறார்கள். கற்றோரிலும் அனேகர் தாம் கற்ற கல்வி, பொருள் சம்பாதித்தற் பொருட்டேயாகும் என்று கருதி, அவ்வாறே நடக்கிறார்கள். சிலர் நாம் பல நூல்களைக் கற்ற பெரிய வித்வானென்றும், அஷ்டாவதானி (8 வித அவதானங்கள் செய்வோன்) என்றும், தசாவதானி (10 வித அவதானங்கள் செய்வோன்) என்றும், சோடசாவதானி (16 வித அவதானங்கள் செய்வோன்) என்றும், சதாவதானி (100 வித அவதானங்கள் செய்வோன்) என்றும், சகத்திராவதானி (ஆயிரம் வித அவதானங்கள் செய்வோன்) என்றும் உலகில் கீர்த்திபெற வேண்டி கல்வி கற்கிறார்கள்.

இன்னும், இக்காலத்தில் சிலர் பெருமையை இச்சித்துத் தங்களுடைய யோக்கியதைக்குத் தகாத பட்டங்களையெல்லாம், ஒரு கஷ்டமுமின்றி தாங்களே சூட்டிக்கொள்கிறார்கள். இதுமட்டுமோ இவ்வுலக போகத்திலுள்ள பற்றுக்களில் எள்ளளவுங்கூட விடாதவர்கள், சகல பற்றையும் அறவே விட்ட மெய்ஞ்ஞானிகளுக்குரிய பட்டங்களையெல்லாம் தாமே சூட்டிக்கொண்டு, நடவடிக்கையில் நாம் அதற்குரியேமல்லேம் என்று பகிரங்கமாய்க் காட்டிக்கொள்கிறார்கள். அந்தோ! இத்தகையோர் தமக்கு இயற்கையாய் உரித்தான கௌரவத்தையும் இழந்து அவமதிப்பைச் சம்பாதித்துக் கொள்கிறார்களே யன்றி வேறில்லை.

சிலர் கல்வி கற்று பட்டங்கள் பெற்றும் உலகில் பொருள்

சேகரிப்பதொன்றையே தம் தொழிலாக மதித்து, தம்மால் பிறர்க்கு எவ்வளவு இடுக்கண் நேரினும் மனமிரங்காத கல்நெஞ்சராய், அதனால் வளரும் பாப மூட்டையையும் கருதாதவர்களாய்ப் பொருளை மட்டும் அதிகமாய்ச் சேகரம் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருக்கிறார்கள். இவர்கள், இவ்வுலகில் அறிவிலார் இவர்களிடத்திலுள்ள பொருளுக்கு மதிப்பு வைத்து அதற்குச் செய்யும் வந்தனை; உபசரிப்பு, புகழ்ச்சி, கௌரவம் முதலியவைகளைத் தங்களுடையதாய்க் கருதி மகிழ்ந்து அகம்பாவத்தோடு தென்புலத்தான் வரவை மறந்து அற்ப சந்தோஷத்தில் அழ்ந்து கிடக்கிறார்கள்.

சிலர் கல்வி கற்று, அதனாலேயே கடவுளேது பாபமேது புண்ணியமேது இதெல்லாம் வீண் கட்டுக்கதையென வாதித்து அகங்காரங்கொண்டு, அம்மையாருக்குச் சுற்றிவிட்ட ஊசேறுபோல் மனம் செல்லும் வழியெல்லாம் தாமும் சென்றுகொண்டு, ஆன்றோர் என்றும் பூராது அலக்ஷியம் செய்து, முன்னோர்களையே மூடரென்று வைது, தங்களுக்கென்று தனியே கட்டப்படும் நரக மாளிகைக்குச் செல்லும் வழியைக் கைவிடாது சென்றுகொண்டிருக்கிறார்கள்.

அந்தோ, இத்தகையோர் அடையும் கல்வியின் பயன் இவ்வாறு யிருக்கவேண்டிய காரணமென்னையோ? வெனின்,

இவர்கள் கற்ற கல்வியின் தன்மை அத்தகையதா யிருக்கின்றது. ஏனெனில், வயிற்றுப் படிப்பிற்காக கற்கும் கருவிநூல்களால் மெய்யறிவு உதிப்பதில்லை. ஆகையால் நம் தாய்ப்பாஷையிலுள்ள ஆன்றோர் இயற்றிய ஞான நூல்களை யோதி யுணர்ந்தாலன்றி கல்வியா லடையவேண்டிய பயனை அடையமுடியாது.

(1) அத்தகைய நூல்களைக் கற்பினும் அதனாலடைய வேண்டிய இணையற்ற பயனை யடையவேண்டுமென்ற நோக்கத்தோடேயே கற்கவேண்டும்.

(2) அப்படிக்கின்றி அக்கல்வியை பெருமைக்காகவும் பொருள் சம்பாதிப்பதற்காகவும் என்ற நோக்கத்தோடு கற்பதினால் பயனில்லை. அதனால் துர்க்குணங்கள் நீங்காது.

முதல் எண்ணத்தோடு கற்பவனிடம் அக்கல்வி ஏற ஏற துர்க்குணங்கள் நீங்கும். சாந்தம், அடக்கம், பெருமையின்மை, உலக

கௌரவத்தில் விருப்பமின்மை, நிராசை முதலிய குணங்களுண்டாகும். ஆத்ம விசாரணையில் விருப்பம் ஜனிக்கும்.

இரண்டாவது கருத்தோடு கற்றோரிடம் (அவர்களும் படித்தவர்கள்என்றே உலகோரால் கருதப்பட்ட போதிலும்) படித்தோம் என்ற பெருமையும், யாராக விருந்தாலும் அவனை விட நாமே கெட்டிக்காரனென்று அன்னியர் கருதவேண்டுமென்ற விருப்பமும், பொறாமை முதலிய குணங்களும் ஜனித்திருக்கும். அத்தகையோரிடம் இலௌகீகத்தில் கல்வி யறிவில்லாதாரிடமிருக்கும் உலோபம், பேராசை முதலிய இழிகுணங்களும் கூட இருப்பதை அனுபவமாய்க் காணலாம்.

அத்தகையோரிற் சிலருக்கு, மற்ற யாவரும் கல்வியில் தமக்குக் குறைந்தவர்களே யென்று அன்னியர் மதிக்கும்படி செய்ய வேண்டு மென்கிற ஆவலுமுண்டு. ஒரு வகையில் இது பொறாமைக் குணத்தைச் சேர்ந்ததாகவே இருக்கிறது. மற்றபேர் யாவராயினும் சரி, அவர்களது கல்வியில் வலியக் குற்றங்கூறுவது இவர்களுடைய சுபாவகுணம். அதனால் இவர்கள் எப்போதும் உயர்ந்த சத்தை விட்டு விட்டுத் தாழ்ந்த வண்டல் திப்பி முதலியவற்றையே கிரகிக்கும் பன்னுடையை யொத்தவர்களாகிறார்கள். முதல்வழி கற்றோர்க்குக் கல்வி யேற யேற அடக்கமும் தாழ்மையும் அதிகமாகுமென்றால், இரண்டாவது வழியிற் கற்றோர்க்குப் பெருமையும் அகங்காரமுமே அதிகமாகும்.

ஆகையால், சகோதர சகோதரிகளே! கல்வி கற்பதிலும் எவ்விதக் கல்வி இணையில்லாப் பயனைத்தருமோ, அவ்விதக் கல்வியைத் தான் அவசியம் கற்கவேண்டும். இன்றேல் கல்வியாலாய பயனை யொருபோது மடையமாட்டோம்.

" கற்ற தனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின் "

என்று நாயனாரருளியபடி, கல்வியா லடையவேண்டிய பயன் பகவானுடைய அருளைப்பெற்று பிறப்பிறப்பற்ற பேரின்ப வீடடைவதேயாகும். இன்னும் நமது அறிவின் மலினம் நீங்கிப் பிரகாசமடைவதற்கே கல்வி கற்பது.. அப்படி அறிவைப் பிரகாசிக்கச் செய்தால் அவ்வறிவினால் என்ன பயனடைய வேண்டியெனின்,

" தன்னை யறிவதே யறிவா மஃதன்றிப்
பின்னை யறிவது பேயறிவாமே "

என்றபடி, ஆன்மாவாகிய தன்னை யறிவதே அறிவினாலடையும் பயன். அதைவிட்டு அநித்தியமான மற்ற இவ்வுலக விவகாரங்களை மட்டும் அறிவது மனித அறிவல்ல.

" தன்னை யறிந்தாற் றலைவன்மேல் பற்றலது
பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே "

என்று தாயுமானவர் கூறியபடி கல்வியினால் பிரகாசமடைந்த அறிவைக் கொண்டு தன்னை யறிந்தவன் தலைவனை யடைவான். இவ்வாறு மெய்ப்பொருளை யுணர்ந்து பிறவியை யொழிக்கக் கல்வி முதற்காரணமா யிருப்பதால்,

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா வழி "

என்று பொய்யா மொழியார் புகன்றுள்ளார்.

கற்பது பொருளீட்ட வல்லவோ வெனின்,

" நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பாயுமாம்..... "

என்பது போன்றது கல்வியாலடையும் மற்ற பலன்கள். ஆதலால், கல்வி யவற்றிற்கு இன்றியமையாத தன்று. கல்வியின்றியே பொருள் சம்பாதிப்போரையும், கல்வி கற்றோரை விடச் சிலர் கல்வியின்றியே அதிக பொருள் சம்பாதிப்பதையும் உலகிற் பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். வீடடைவதற்கோ கல்வி யின்றியமையாதது. இச்சென்மத்தில் ஒருவன் கல்வியின்றி ஞானமடைந்திருப்பதாய்க் காணப்படலாகும். ஆனால் அவன் ஞானமடையப் போதுமான கல்வியைக் கடந்த ஜன்மத்திலடைந்து, இனி ஞானநிலையில் படியேற வேண்டி எஞ்சியிருக்கும். வினையை யனுபவிக்க வந்தவனென்பது திண்ணம். கல்வி ஞானமடைய இன்றியமையாததாதலால் அறிவாளிகள் நம்முள்ளாகவே ஒளிந்திருக்கும் மெய்ஞ்ஞான சொரூபியாகிய அப்பரம்பொருளை அறிவதற்கென்றே கல்வி கற்பதன்றி மற்றெதற்குமல்ல.

" கற்றதும் கேள்வி கேட்டதும் நின்னைக்
கண்டிடும் பொருட்டன்றோ காணே....."

என்றும்,

" கல்விகற்பது, வேதாந்தம் தவறு சித்தாந்தமே சரி, விஷ்ணுவே பதி, சிவன் கடவுளல்ல என்று வாய் வல்லமை காட்டி வீண் வாதம் செய்துகொண்டு, இவற்றால் ஒரு பெருமையென்று

செருக்கித் திரியவல்ல — மெய்ஞ்ஞானத்தைப் பெறுவதற்கே யாகும்" என்று நம்போலிகள் அறிந்துய்யும் பொருட்டே,

" கற்றதுங்கேட் டதுந்தானே யேதுக் காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிட்டை கூட வன்றோ "

என்று மெய்ஞ்ஞானச் செல்வராகிய நமது தாயுமானவர் அருளியிருக்கின்றார்.

ஆகையால் சகோதர சகோதரிகளே! நாம் பசிப்பிணிக்கு வயிற்றைச் சதா நிறப்பிக்கொண் டிருப்பதற்காக கல்வி கற்பது என்று கருதுவதை விட்டு, கல்விப்பயனால் என்றும் மாறாது சக்கரம்போல் வந்து வாதித்துக்கொண் டிருக்கும் தீராப்பிணியாகிய பிறவிப்பிணியை யொழிக்க வேண்டுமென்று கருதி, அதற்கவசியமாகிய நமது ஆன்றோர் நூற்களை யோதியுணர்ந்து விடுபெற்றுய்யும் வண்ணம் நமக்கு நல்லறி வளிக்குமாறு ஞானமே திருமேனியாக வுடைய அப்பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத்ஸத்.

அவசியம் வாசியுங்கள்

நமதன்பார்ந்த சந்தாதாரர்களுக்கு!

சஞ்சிகைகளை யாதரிப்போர் சந்தாதாரர்களே என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் நீங்களோ மற்ற சஞ்சிகைகளின் சந்தாதாரர்கள் போல் ஆனந்தபோதினியை யாதரித்து வருவதோடு நிற்காமல், அதை விர்த்திசெய்வதில் விருப்பம் வைத்து நண்பர்களையும் சேரச் செய்கிறீர்கள். இந்நன்றி நாம் ஒரு போதும் மறக்கத்தக்கதல்ல.

காகித விலையினால் இப்போது ஏறக்குறைய எல்லாப் பத்திரிகைகளுக்கும் சந்தா வுயர்த்தப்பட்டிருப்பது நீங்களறியாததல்ல. இதுமட்டுமல்ல, மாதச் சஞ்சிகைகளில் பெரும்பாலானவை பிரதி மாதம் வெளிவராது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாக இரண்டும் ஒன்றாய்ச்சேர்ந்தும், சில ஒன்றிரண்டு மாதங்கள் நிறுத்தப்பட்டு ஒழுங்கின்றியும் வெளியாகின்றன வென்பது பிரத்யக்ஷக் காட்சியே. காரணம் காகிதக் கஷ்டமே. ஆனால் நமது ஆனந்தபோதினியோ உங்கள் ஆதரவால் இதுகாறும் 1 ரூபாய்க்குமேல்

சந்தா உயர்த்தப்படாமலும் ஒரு மாதமேனும் தவறாமலும் வெளிவந்துகொண் டிருப்பதற்காக ஆண்டவனை வாழ்த்துகிறோம்.

மேற்கண்டபடி இதுகாறும் ஆதரித்து வந்த நீங்கள், காகிதப் பஞ்சம் வளர்ந்துவரும் இச்சமயம் ஆனந்தபோதினியைக் கைவிடுவீர்கள் என்று நாம் அய்யம் கொள்வதென்றால், அது உங்கள் தேசாபிமானத்திற்கும், பாஷாபிமானத்திற்கும் அகௌரவத்தை யுண்டாக்குவதாகும். ஆயினும் ஒவ்வொருவர்க்கு மனப்பிரியமிருந்தாலும் அப்பிரியப்படி நடந்துகொள்ளக் கூடாத நிலைமை உண்டாவதுண்டு. அத்தகையோரும் ஆனந்தபோதினிக்கு ஒரு நன்மை செய்யும்படி பிரார்த்திக்கிறோம். அந்த நன்மையாவது கெடுதி செய்யாம லிருப்பதேயாகும். அதாவது,

வி. பி. யை அங்கீகரிக்கக் கூடாத நண்பர்கள் காலணா செலவழித்து ஜூலை மாதம் 1உக்குள் நமக்குத் தெரிவித்து விடக் கோருகிறோம். இதனால் நமக்கு வீண்கஷ்டமும் சுமார் 2 அணா நஷ்டமும் நேராமல் பேருதவி செய்ததாகும். அவர்களும் சந்தா நம்பரும் விலாசமும் தெளிவாய் எழுதப் பிரார்த்திக்கிறோம்.

இச்சமயம் சந்தாதாரர்கள் முன்னாடி மணியார்டர் மூலமாகவே சந்தாவை யனுப்பி விசேஷ உதவிபுரிய வேண்டுமாய் முன் விளம்பரத்திலேயே செய்துகொண்டிருக்கும் பிரார்த்தனையை கவனிக்க வேண்டுமாய்ப் பின்னுமொரு முறை வேண்டிக்கொள்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

ஐயவினா

(434-ம் பக்கத்தொடர்ச்சி)

இச்சை யிருவழியிலும் செல்லுமென்பது உண்மையே. ஆனால் இந்த இச்சை சீவன் கொண்ட இச்சை. சீவன் தானாய்க்கொண்ட இச்சையே யப்படி இருவழியிலும் செல்வது. அதிலும் நன்மை தீமைகளை யுணர்ந்து தீமைகளை யொழித்து நன்மையைக் கடைபிடித்தொழுகும் ஆற்றலை யாண்டவன் அளித்திருப்பதால்தான், கெட்டவழி செல்லின் தண்டிக்கிறார்.

இப்போது நாம் விவகரிக்கும் விஷயம் வினையைச் செய்வதல்ல. செய்த வினையைப் பொசிக்கிப்பது. அதைப் பொசிக்க இச்சையைப் பகவான் உண்டாக்குகிறாரேயன்றி, ஒரு கெட்ட வினையைச் செய்வதற்கல்ல அவர் அந்த இச்சையை யுண்டாக்கியது. வினையைச் செய்ய அவர் தூண்டுவோராயின் பிற்கு

அவர் தண்டித்தால் கடவுளாகமாட்டார். வினை செய்வது அவர்செயலல்ல. அவர்செயல் சிருட்டி, திதி, சங்காரம் மூன்றே. இந்த விஷயத்தில் திதி கிருத்தியம் செய்கிறார்.

ஆனால் பிராரப்த இச்சையில் கெட்டதை யனுபவிப்பதில்லையோயெனின் உண்டுதான். முன் சொன்னபடி வினையைச் செய்வதுவேறு, செய்தவினையை யனுபவிப்பதுவேறு, அதேமாதிரிசெய்த கெட்டவினையை யனுபவிக்கவேண்டியதுதான். அப்போது அந்த பிராரப்தத்தால் உண்டான இச்சை கெட்டவினையை நாம் அனுபவிக்கச் செய்யுமேயன்றி, இன்னொரு வினையை யதற்காக செய்ய வேண்டுமென்ற காரணமேயில்லை. எப்போதும் வினைசெய்வது சீவனே. பிராரப்தவினை சித்துப்பொருளல்ல. ஜடப்பொருளாதலால் அதற்கு நம்மைத் தூண்டவல்லமையில்லை. மேற்கண்டபடி கடவுளோ தூண்டமாட்டார். பின்னை யெப்படி கெட்டவினையை யனுபவிக்கிறோம் எனின், அதுவும் இச்சாபிராரப்தத்தாலும் வருவதுண்டு. அனிச்சாபிராரப்தத்தாலும் அனுபவிப்பதுண்டு. எவ்வாறெனின் நாம் யோக்கியமாய் ஒருகுற்றமும் செய்யாம லிருக்கும்போதே அபாண்டமாய்க் களவு கொலை முதலிய குற்றங்கள் சாட்டப்பட்டு தண்டனையடைதல். இவ்வாறு பலர் அனுபவிப்பதை உலகில் காண்கிறோம். இது அனிச்சாபிராரப்தம். இது நாம் முன்செய்த தீவினையின்பலன். இந்தக்கெட்டப் பிராரப்த பலனை இச்சைவழியாகவும் அனுபவிப்பதுண்டு. எவ்வாறெனின்:—

நாம் போய்க்கொண்டே யிருக்கையில் எதிரில் ஜனங்கள் பெருங்குழப்பமாயிருப்பதைக்கண்டு, கூடவிருப்போர் "கண்மூடித்தனமாய் நுழையாதே, என்னவென்று முன்னே விசாரிப்போம்" என்று கூறும் புத்தியைக்கூட கேட்காமல், பிராரப்த இச்சையால் தூண்டப்பட்டு, கும்பலில் நுழைகிறோம். அங்கு ஒரு வண்டியிற் கட்டப்பட்டிருந்த குதிரை யிடரி விழுந்துவிட அதைத் தூக்கிக்கொண்டிருக்கிறார்கள். நாம் உள் நுழைந்ததே அப்போதுதான் தூக்கி நிறுத்தப்பட்ட அக்குதிரை ஜனக்கூட்டத்தைக் கண்டு மிரண்டு துள்ளியோட, நாம் கீழேதள்ளப்பட்டு குதிரையின்கீழ் மிதிக்கப்பட்டோ வண்டிச்சக்கரம் மேலேறியோ கால்முறிந்து ஆபத்துக்குள்ளாகிறோம். இவ்வாறாய் இச்சாபிராரப்தத்தால் கெட்டவினையும் அனுபவித்தே தீர்க்கப்படும். அதை யூட்டுவது ஆண்டவன் செயலாயிருக்கிறது.

ஆகையால் நண்பர்களே! எந்தவழியில் நாம் பிராரப்தத்தை யனுபவிப்பதாயினும், இச்சாவழியாயினுங்கூட, நாம் இன்னொருவினையைச் செய்யும்படியான அவசியமேயில்லை. அப்படிச் செய்யும்படி எதுவும் நம்மைத் தூண்டுவதுமில்லை. ஏனெனில், முன்னமே நாம் செய்த ஒரு வினையின் பயனை நமக்கு ஊட்டிவைக்கும் கடவுள், அதற்காக இப்போது மறுபடி யின்னொரு வினையைச் செய்யும்படி நம்மைத் தூண்டவேண்டிய அவசியமில்லை யென்பது தெள்ளிதின் விளங்குகின்றதல்லவோ. அப்படி யவசியமில்லாத காரியத்திற்கு ஆண்டவன் நம்மைக் கெட்டவினைசெய்யும்படி தூண்டவுமாட்டார். தூண்டச் சக்தியுடையார் வேறு ஒருவருமேயில்லை.

நண்பர்களே! இச்சாபிராரப்த விஷயத்தில்தான் சீவச்செயலா, ஈஸ்வரச்

செயலாவென்ற இச்சந்தேகம் ஜெனிப்பது. இதுகாறுங் கூறியவாற்றால் இச்சாபிராரப்தத்திலும் நாம் நல்ல பிராரப்தத்தைப்போ கெட்டபிராரப்தத்தையோ அனுபவிக்கவேண்டுவது மட்டுமேயன்றி, ஒருவினையும் செய்யவேண்டிய அவசியமில்லையென்றும், அப்படிச் செய்யும்படி கடவுள் தூண்டுவது மில்லையென்றும் தெரிந்துகொண்டோம். அப்படிச்செய்தால் அது நாமே செய்வதாகும். அதைப் புதுவினையாய்ப் பிறகு நாமே யனுபவிக்கவேண்டும். கடவுள் நமக்கு பகுத்தறிவுமுதல் யாவுமளித்திருப்பதால் அவர் நம்மைத் தீயவினை செய்யும்படி யொருபோதும் தூண்டுவதில்லையென்று நன்றாய் உணரவேண்டும். இது நமது யுக்திக்கும் மனசாக்ஷிக்கும் பொருந்தியதாகவு மிருக்கிறது.

முடிவில் கடவுள் செயல் இன்னது, சீவன் செயல் இன்னது என்று சுருதியனுபவமாயறிந்து ஆன்றோர்களால் கூறப்பட்டிருப்பதை யீண்டுவரைகிறோம். அதை நன்குணரின் எந்தசந்தர்ப்பத்திலும் ஒரு கன்மம் செய்யப்படுவது (நன்கெனினும் தீயதெனினும்) நம்முடைய செயலேயன்றி, அது ஒருபோதும் கடவுளுடைய செயலுமாகாது, அவ்வால தூண்டப்பட்டதுமாகாது என்று நன்கு விளங்கும். அதாவது:—

திகழ்ந்த வீசனுர் சிருட்டியும் சீவனுர் சிருட்டியும் வெவ்வேறே.
சகந்த னிற்பொது வீசனுர் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம்
அகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளாசைக ளிவையெல்லாம்
இகழ்ந்த சீவனுர் சிருட்டிக ளாருக்கா ணீசனுர் செயலன்றே. (சைவசிந்தாந்தம்)

(இதன்பொருள்) கடவுளின் சிருட்டிகள் அவன் வல்லமையால் செய்யப்பட்ட சர அசரப்பொருள்கள் யாவுமே அவன் சிருட்டியாகும். இச்சிருட்டிகள் யாவர்க்கும் பொதுவானவை.

சீவசிருட்டி:—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சர்யம், டம்பம், ஈரிஷை, அசூயை, தர்ப்பம் முதலிய இக்கெட்ட குணங்களால் செய்யப்படும் காரியங்களனைத்தும் சீவச்செயல்களாம்.

மேலும் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட தனு கரண புவன போகமாகிய யாவும் சீவன் மோக்ஷமடையச் சாதனங்களாகும். சீவனுடைய சிருஷ்டிகளோ மோக்ஷத்திற்கு இடையூறாய், பிறவியை யுண்டாக்கும் பிணிகளாகும்.

திருட்டாந்தமாய் ஈசுவர சிருஷ்டியாகிய அண்டசராசரம் யாவும் மகாப்பிரளயத்தில் அழிந்துபோய் இருக்கும் காலத்திலும், ஆன்மாக்கள் மெழுகுருண்டையில் தங்கரேணுக்கள் அடங்கியிருப்பதுபோல், பிரகிருதியில் அடங்கியிருந்து, பிறகு சிருட்டியில் ஜெனிக்கின்றன. ஈசுவரசிருட்டி யொழிந்ததினாலேயே ஆன்மாக்கள் மோக்ஷத்திற்குப் போய்விடுவதில்லை.

ஈசுவரசிருட்டியாகிய சராசரப் பிரபஞ்சம் யாவு மிருக்கும்போதே, அவற்றில் சம்பந்தப்பட்ட குரு, சாத்திரங்கள் முதலிய உதவியைக் கொண்டே சீவன் தன் சிருட்டிகளாகிய செயல்களை யொழித்து விடுவானாயின் மோக்ஷமடைகிறான்.

ஆகையால் நண்பர்களே, எந்த சந்தர்ப்பத்திலும் இருவித கன்மங்களையும் செய்வது நாமேயென்பதையும், அக்கன்மங்களைச் செய்யாமல் அல்லது நாம் செய்கிறோமென்பதைவிட்டு நற்கருமங்களை ஈசுவரார்ப்பணமாய் செய்து பிராப்த வினைப்போகத்தையும் ஈசுவரார்ப்பணமாய்ப் புசித்தொழித்தால்தான் மோக்ஷமடையலாகுமென்பதையும் உணர்ந்து அவ்வழி நடக்குமாறு கருணாநிதி நமக்கு நல்லறிவு புகட்டவேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக. பத்திராசிரியர்.

ம-ா-ா-ஸ்ரீ கா. சோமசுந்திரம் (திருவல்லிக்கேணி சென்னை)
அவர்களது

ஐயவினா

இவர் பிராரப்தவினையைப்பற்றி கேட்ட ஐயங்களுக்கு விடை மேல்கூறப்பட்டவற்றில் அடங்கி யிருக்கின்றனவாதலால் அவற்றை யொழித்து மீதியுள்ள வினாவைமட்டும் ஈண்டு கூறுவாம்:—

கேள்வி:—"மேற்படி (சித்திரைமாத) *சஞ்சிகையில் தன்னைத்தானே சீர்திருத்தல் என்னும் தலைப்பின்கீழ் தன்னுடைய பந்தமோக்ஷங்களுக்கு மனதே காரணமாயிருக்கிறது என்றுகூறி—

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய் வருத்தக் கூலி தரும்"

என்னும் திருக்குறளை அவ்வியாசம் எழுதினவர் காட்டியிருப்பது அதற்குப் பொருத்தமானதாகவாவது அல்லவாவது இருந்தாலும்—இக்குறளில் தெய்வத்தாலாகாதெனவிருப்பதுபோலவே, இதை யியற்றிய மகான்கருத்தும் எனக் கொள்ளற்பாலதோ என்பதையும்—எம்மகானுவது தெய்வத்தாலாகாதது ஒன்று உளதென்றுவது—அல்லது அப்பேர்க்கொற்ற ஒன்றை ஜீவன் தன் முயற்சியால் ஆகச்செய்வானென்றுவது சொல்லத்துணிவாரோ என்பதையும்—அப்படியாய் ஜீவனுக்கு அவ்வளவு வல்லமையுள்ளபோது தெய்வமென்பதே வேண்டியதில்லையல்லவாவென்பதையும்—தங்களுடைய வியாசத்தின் இறுதியில் பலனளிப்பது ஈஸ்வரன் என்றும், பலனுக்கு நாமல்லவென்றும் கூறியிருப்பதே மேல்காட்டியதை விளக்குவதாக இருப்பதையும்.....†அம்மகான் இயற்றிய காலத்திற்கும் தற்போதைக்கும் நடுவில் எவ்வளவு பதிப்புக்கள் ஆயின எவ்வளவுபேர் தன்னிச்சைப்படி அதைத்திருப்பியும் ('திருத்தியும்' என்று கருதினார்போலும்) அச்சடித்தும் இருக்கலாமென்று சற்று சீர்தூக்கிப்பார்த்தால் இதன் உண்மை புலப்படுமாகையால் தாங்கள் இதுவிஷயத்தையும் சஞ்சிகையில் வெளியிடுவீர்களென்று கோருகிறேன்"

நேயர்களே! இப்போது இவர் பலகேள்விகளாய்த் தமது ஐயங்களை வெளியிட்டாரேனும் அவற்றை இரண்டே கேள்விகளாய்க் குறிக்கலாகும்.

1-வது. வியாசத்தில் குறித்தவிடத்தில்

"தெய்வத்தாலாகாதெனினும்.....தரும்"

என்ற குறள் பொருத்தமானதா? என்பதே முதல் ஆக்ஷேபனை.

விடை:—எடுத்துக்கொண்ட விஷயம் "பந்தமோக்ஷங்களுக்கு மனமே காரணமாதலால் அம்மனிதனாலாகக்கூடிய விடாமுயற்சியை அந்தர்விஷயமான நமது குணகுணங்களைப் பரிசோதித்து துர்க்குணங்களை நீக்கவேண்டிய வேலையில் பிரயோகிக்கவேண்டும்" என்று கூறியிருப்பதால், அவ்வாறு எடுத்துக்கொள்ளும் முயற்சி எங்கே வீணாய்விடுமோ என்று ஐயங்கொண்டு எடுத்த முயற்சியைக் கைவிடாதிருப்பதற்காக, முயற்சியால் அடியோடு பயனில்லாமற் போகாது என்று கூறவேண்டியது தகுதியாதலால், மேற்கண்ட குறட்பா ஆங்கு பொருத்தமே யென்பதோடு அவசியமே யாகுமென்று தெற்றென விளங்கும்.

* இம்மாதிரி அடைப்புக்குறியுள்ளவை நாம் கூறியவை— (ப-ர்)

† இங்குள்ளவை விஷயத்தோடு சம்பந்தப்படாத அனாவசிய திருட்டாந்தங்களாதலின் விட்டனம்.

2-வது.—மேற்கண்ட குறளைப்பற்றி இவர்செய்யும் ஆக்ஷேபனைகளையும் கொண்ட ஐயங்களையும் நோக்க, அந்த குறளுக்கு இவர் கீழ்க்கண்டவாறு அர்த்தங் கொண்டதாகதெரிகிறது அதாவது:—

"ஒருகாரியம் தெய்வத்தால் ஆகாவிட்டாலும் நாம் முயற்சிசெய்தால் கைகூடும்" என்றே (அர்த்தம் செய்துகொண்டாரென்று தெரிகிறது.)

பிறகு இவரே "ஒருகாரியம் தெய்வத்தா லாகாதென்றும் அப்படி தெய்வத்தா லாகாதது மனிதனாலாகுமென்றும் எந்தப் பெரியோர் கூறுவார் அப்படியாயின் தெய்வமேன்?" என்று ஆக்ஷேபிக்கிறார். இத்தகைய பலத்த ஆக்ஷேபனையிருக்கும்போது, "இதற்கு அர்த்தம் இப்படியிராது. நாம் சரியாய் ஆராய்ச்சி செய்யவேண்டும்" என்று உணர்வதைவிட்டு, பலதரம் அச்சியற்றப்பட்டதால் நூலில் குற்றம் நேர்ந்துவிட்டதென்ற தீர்மானத்தில் குதித்துவிட்டாரே, இதற்காக மிக்க விசனிக்கிறோம். ஏனெனில் அக்காலத்தில் மேதாவிகளிருந்தாலும் இக்காலத்தில் நம்மிலும் கற்றோர் இல்லையா? அப்படிப் பிழைநேர்ந்தால் எல்லாப் பதிப்புகளிலும் பிழையிருக்குமா? ஆன்றோர் இன்னும் கையாண்டுவரும் நூலில் தப்பு அர்த்தத்தை யுண்டாக்கும் பிழை யிருந்தால் கற்றோர் பேசாமலே யிருப்பார்களா வென்பதைச் சிந்திக்காமலே நூலில் குற்றங்கூறுவது விசனிக்கத்தக்கதே. இக்காலத்தில் சிலர் தமக்கு ஆன்றோர் வாக்கியங்களில் அனுபவத்திற்கு ஒவ்வாவிடினும், அர்த்தம் சரியாய் விளங்காவிடினும், தமது அனுபவவழி தவறென்று பின்னும் ஆராய்ச்சி செய்யாமலும், நாம் அர்த்தம் செய்துகொண்டதில் ஏதோ பிசகிருக்கிறதென்றுணர்ந்து கற்றோர்பால் கேட்டுணராமலும் உடனே ஆன்றோர் வாக்கே தவறு என்று தீர்மானித்து விடுகிறார்கள். அந்தோ! இப்பழக்கத்தால் நமது ஞானவிர்த்திக்குப் பெரிய இடையூறுண்டாகு மென்பதைக் கவனிப்பார்களாக.

மேற்படி குறளின் பொருள் பின்வருமாறு "நாம் செய்யும் முயற்சிக்குத் தெய்வம் மனம்வைத்தால் பூரணமான பயனளிக்கக்கூடும். அவ்வாறு அளிக்காவிட்டாலும், தேகத்தால் வருந்திச்செய்த முயற்சிமட்டிற்காவது பயன்கிடைக்காமற் போகாது. அதாவது கொஞ்சம் பலனாவது கிடைக்குமேயன்றி இரண்டு வழியிலும் பாழாய்விடாது. ஆகையால் தெய்வத்தையே எதிர்பார்த்துக்கொண்டு நீ சோம்பித்திரியாதே. உன்னளவில் நீ முயற்சிசெய்" என்பதே பொருளாகும்.

* (குறள் 62-ம் அதி—ஆள்வினையுடமை 9-வது பா—பரிமேலழகர் உரையிற் காண்க.)

தாய்ப்பாஷை.

ஓர் முக்கியமான வேண்டுகோள்.

மாட்சிமைதங்கிய துரைத்தனத்தாரது தாய்ப்பாஷையாகிய ஆங்கிலத்தை நமது நாட்டிற் பெரும்பான்மையோரும் ஆவலாய்க் கற்றுவருகின்றன ரென்பது நன்குவிளங்கும். அப்பாஷைக்கு உபபாஷையாய் நம் தமிழ் நாட்டில் மாணவரில் மிக்கவரும் தாய்ப்பாஷையாகிய தமிழையே பயின்று வருகின்றன ரென்பதும் வெளிப்படையே, ஆனால் ஸர்வகலாசாலையார் தமிழை வளர்ப்பதற்குரிய ஸௌகர்யங்கள் யாதொன்றும் செய்யவில்லையென்ற வருத்தம் சொல்லி முடியாது. பள்ளிக்கூட முடிவு பரீட்சைவரையும் ஆங்கிலம் கற்றுத் தேறிய மாணக்கரில் மிக்கவரும் ஆங்கிலத்தில் மேலீடான அறிவும் தாய்ப்பாஷையில்

அதுவும் இல்லாமலேயுமிருக்கின்றனரென்பது அனுபவத்தா லறிந்த விஷயம். ஆங்கிலத்திலும் ஒரு மனு எழுதுவதென்றால் அஸாத்தியம்தான் வியாபார முறையான விஷயமோ கேட்கவேவேண்டாம். பாலாபாட வகுப்புமுதல் மேற்கூறிய பரீட்சைவரையும் சுமார் 11-வருடத்திற்கு மேலாகிறது! தாய்ப்பாஷையிலாவது துரைத்தனப் பாஷையிலாவது தேர்ந்த அறிவில்லாமலிருப்பது வியசனிக்கத் தக்கதேயன்றோ? இலக்கண அறிவில்லாமல் ஒருபாஷையில் தேர்ச்சியுண்டாகுமா? தமிழ்ப்பாட புத்தகத்திலும், நன்னூலிலுமிருந்து கேட்கும் பரீட்சை வினாக்களைக் கவனித்தால் ½ பங்குகூட இலக்கணவினாக்கள் கிடையா, பெயர் நன்னூலே யன்றி மாணவர்க்கு அது நஞ்சாகவே யிருந்துவருகின்றது. ½ வீதம் இலக்கண வினாக்கள் சோதனையில் வந்தாலும் கொஞ்சம் கருத்துடன் இலக்கணம் கற்பார்கள், அதுவும் இல்லை. இந்தப் பரிதாபமான காரியம் எப்படி குணம்பெறுமோ தெரியவில்லை. ஏழைசொல் அம்பலம் ஏறுதென்பதுபோல் யார் இதைக் கவனிக்கப்போகிறார்கள்! ஆயினும் தாய்நாடு என்றும் தாய்ப்பாஷையென்றும் என்னென்னமோ ஆரவாரங்கள் பத்திரிகைகளில் காணப்படுகின்றமையால் இதனைக் கண்ணுறும் உண்மையான தமிழபிமானிகள், கல்வி இலாகா அதிகாரிகளிடம் முறையிட்டு மன்றாடி விசேஷமான சீர்திருத்தங்கள் செய்யாவிடினும் பள்ளிக்கூட முடிவு பரீட்சைவரையும் தமிழை முன்னிருந்ததுபோல் கட்டாயப் படிப்பாகவும் இலக்கணவினாக்கள் ½ குறையாமல் கேட்கவும் வேண்டிய ஏற்பாடுகள் இதுமுதல் செய்யத் தொடங்குவார்களென்று பேராவலுடன் எதிர்பார்க்கின்றேன். சுபம்.

இ. வி. தாமோதரன், தமிழ்ப்பண்டிதர், ரோடோடாறு.

குறிப்பு:—பண்டிதரவர்கள் கூறியபடி நமது மக்களுக்குத் தாய்ப்பாஷையில் பயிற்சி மிகக் குன்றியிருப்பது யாவரும் மிக்க விசனிக்கத்தக்கதேயாகும். முன் இருந்ததைவிட இப்போது பிள்ளைகள் கொடுக்கவேண்டிய சம்பளம் அதிகமாகவும், வருடாவருடம் பாடபுத்தகங்கள் அடிக்கடி மாற்றப்படுவதால் புத்தகங்களுக்குச் செலவு அதிகமாகவும், பாடசாலைச் சட்டதிட்டங்கள் அதிகமாகவும், பாடசாலைகளில் பிள்ளைகளின் நடவடிக்கைகள் கவனிக்கப்படாததால் அவர்கள் பீடி பிடித்தல் துர் ஆசாரங்களிற் பழகல் முதலியவைகள் அதிகமாகவும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் கல்விப்பயிற்சியோ அவ்வளவிற் கவ்வளவு குறைவே யென்பது திண்ணம்.

ஒருபாஷையைக் கற்பதாயின் அதன் இலக்கணத்தைக் கற்காவிட்டால் அப்பாஷையை யெப்படிக் கற்றவனாவான். ஒரு வாக்கியத்திலுள்ள பலவார்த்தைகளின் சம்பந்தத்தை யிலக்கணமறியாது எவ்வாறு தெரிந்துகொள்ளக்கூடும். ஒரு அன்னிய பாஷையைக் கற்கவேண்டுமாயின் அப்பாஷையிலுள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் நமது தாய்ப்பாஷையில் பிரதிபதம் இன்னதென் றுணராவிடில் அப்பாஷையைக் கற்றவனாவ தெப்படி? அப்படிக் கற்பதால் பயன்றானென்ன. இப்போது 6-வது பாரத்தில் வாசிக்கும் ஒருபிள்ளையை ஒரு வார்த்தைக்கு இலக்கணம் கூறென்றால் "ஸார் பாடசாலையில் அது கற்பிக்கப்படவில்லை" என்கிறான். அந்தப் பாடத்திலுள்ள ஒரு வாக்கியத்தைப் பதம் பிரித்துத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறு என்றால், ஐயோ பாபம்! உடனே அவன்முகம் வெளுத்துவிடுகிறது. "தமிழில் மொழிபெயர்ப்பது பாடசாலையில் வழக்கமேயில்லை" என்று திட்டமாய்க் கூறிவிடுகிறான். இத்தகைய போதனா முறையைப்பற்றி கவனிப்போர் ஒருவருமில்லை. பழைய முறையைவிடும் இது உயர்ந்ததோ? இல்லையென்று அனுபவமாய்த் தெரிகிறதே. முன்பு 3-வது பாரத்தில் வாசிக்கும் ஒரு பிள்ளைக்கு ஆங்கிலம் தமிழ் இரண்டும் பேச

வும் எழுதவும் இருந்த விற்பத்தி இப்போது 6-வது பாரத்தில் வாசிப்பவனுக்கில்லை யென்பது உண்மை.

அது போகத் தாய் பாஷையோ கடவுளுக்கே அற்புதம். நமக்கு ஆங்கிலப் படிப்பு எவ்வளவு படித்தாலும் வயிற்றுப்படிப்பு மட்டுமேயன்றி வேறில்லை. அதனால் நாம் உலகவாழ்க்கையில் மேம்பாடடையக்கூட வழியில்லை. ஏனெனில் நாம் மேல்நாட்டாரைப்போல் உலகவாழ்க்கையில் விர்த்தியடைய வேண்டுமாயின் மேல் நாட்டாருடைய ஜடசாத்திரங்களில் அனேகவற்றைக் கற்கவேண்டும். அவற்றை நமது தாய்ப் பாஷையில் மொழிபெயர்த்தாலன்றி நம்மவர் கற்றுப் பயன்பெற வழியில்லை அவற்றை யார் மொழிபெயர்ப்பது? ஆங்கிலத்தில் அவற்றைக்கற்று நம்மவர்தான் செய்யவேண்டும். அந்தோ! அவர்களுக்குத் தாய்ப் பாஷையில் ஞானம் மேற்கண்டவாறு சூனியமாயிருக்க அவர்கள் எப்படி மொழிபெயர்ப்பார்கள்? அந்தோ தாய்ப்பாஷையில் விற்பத்தியில்லா திருப்பதால் நேரிடும் இடையூறு இதுமட்டுமல்லவே! "அரகனை நம்பிப் புருஷனைக் கைவிட்டால்" என்பதை யொப்ப முதலுக்கே மோசமாயிருக்கிறது. எப்படியெனில், ஹிந்துக்களாகிய நமக்கு எது எப்படிபோனாலும் நமது முன்னோர் தொடங்கி வரும் இலௌகீக வைதீக ஆசாரங்களும், ஆன்மார்த்த மார்க்கமுமே கைவிடக் கூடாதவை. அவைகளைப் போதிப்பன நம் தாய்ப்பாஷையிலுள்ள நூல்களேயாகும். இப்போது நம்மக்கள் வயிற்றிற்குப் பொருள்தேட ஆங்கிலம் கற்கப்போய்த் தாய்ப்பாஷையை யடியோடு மறக்கக்கோர்கிறது. அப்படிப்பிலேயே யவர்கள் காலமுழுதும் செலவழிவதால் தாய்ப்பாஷையைப் பிரத்தியேகமாய்க் கற்கக் காலமில்லை.

இப்படியிருக்கப் பாடசாலைகளில் தமிழை முன்போல் ஆங்கிலத்திற்குச் சமமாகவாவது கட்டாயப் படிப்பாய்வைத்து ஆங்கிலத்தோடு சமவிற்பத்தியாவது அடையவேண்டுமென்று ஏற்பாடு செய்யாவிட்டால், நமது சந்ததியாருடைய கெதி கொஞ்சகாலத்தில் என்ன நிலைமைக்கு வருமோ வென்பதைச் சிந்தித்தால் "அந்தோ, இக்காலத்தில் நாம் ஏன் ஜனித்தோம். இதைவிட அறிவிலாப் பிராணியாயேனும் ஜனித்திருப்பின் இத்துயரத்தை யுணராதிருக்கலாமே" என்று நினைக்கவேண்டியதா யிருக்கிறது.

இக்காலத்தில் நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்காக வென்று எத்தனையோ தேசாபிமானிகள் பாஷாபிமானிகள் முன்வந்து உழைக்கிறார்கள். நியாயசபைகளிலும், சட்ட சபைகளிலும் அவயவங்களாயிருந்து தேசத்திற்குழைக்கிறார்கள். இவர்களில் எவருக்காவது பெருந்துன்பத்தை விளைவிக்கக்கூடிய இக்குறையை நீக்கவேண்டுமென்ற நாட்டம் விழவில்லையோ! நாம் இவர்களிடம் முறையிடாது வேறு யாரிடம் முறையிடுவோம் ஓ ஆண்டவனே! கருணாநிதியாகிய நீரும் நம்மவர்க்கு இதில் சிரத்தையுண்டாகும் வண்ணம் அறிவுறுத்தாதிருப்பது நீதியோ? இனியாவது இதுவிஷயத்தில் நமது தேசாபிமானத் தலைவர்களாகிய பெரியோர்கள் சிரத்தை யெடுத்துக்கொண்டு இக்குறையைக் கவனித்து இதை நீக்க முயலும்வண்ணம் அருள்புரிமவேண்டுமாய் உம்மையே சரணாகதியடைகிறோம்.

பத்திரிகாசிரியர்.

நித்தியவிதி—வஸ்திரதாரணம்

(430-ம் பக்கத்தொடர்ச்சி)

அப்பியங்கனமாதி ஸ்நானங்களெல்லாம் ஆடவர் மகளிர் இருவர்க்கும் பொது; ஆயினும், மிருத்திகாஸ்நானம் பெண்களுக்கு அவ்வளவு சிறந்ததாக விதிக்கப்படவில்லை. அன்றியும் நித்தியஸ்நானத்திலும் காலவேறுபாடுண்டு. உஷ்

ணகால ஸ்நானம் கிரகஸ்தாசிரம தர்மத்தை யனுஷ்டிக்கும் ஆடவர்க்கே சிறப்புடையதாம். பெண்கள், பிரமசாரி, சந்நியாசி யாவர்களுக்கும் சூரியன் உதித்த பிறகே ஸ்நானம் விதிக்கப்பட்டது. உஷ்ணம் உண்டானபின் ஸ்நானம்செய்வதால் சரீரத்திலுள்ள மலம் அதிகமாய் வெளிப்படும். அதனாற் சரீரசக்தி (வலு) குறையும். கிரகஸ்தனுக்கு வலு அதிகமாய் வேண்டப்படுவதால் அவனுக்கு உஷ்ணகாலம் சிறந்ததாயிற்று. குருகுலவாசம்செய்து வேதாத்தியனம் சாஸ்திரப்பயிற்சி செய்துவரும் பிரம க்ஷத்திரிய வைசியகுலப் பிரமசாரிகளுக்குக் காமாதிகளை யடக்கவேண்டிய கட்டாயமுண்டாதலால் அவர்களுக்கும் பிரபஞ்சத்தை முற்றுந்துறந்து பரப்பிரம்மத் தியானபரர்களா யிருக்கும் சந்நியாசிக்கும் வைதவயத்தை யடைந்து பிரமசாரிய விரதானுஷ்டானம்செய்யும் ஸ்திரீகளுக்கும், சூரியன் நன்றாய்த் தோன்றியபிறகே ஸ்நானம் விதிக்கப்பட்டது. சுமங்கலியாயிருக்கிற ஸ்திரீகளுக்கும் அவ்வாறே விதிக்கப்பட்டிருப்பினும் மஞ்சட் பூசிக்குளிக்கும் விதியிருப்பதால் கொஞ்சம் முன்னதாகவே ஸ்நானம் செய்யலாமென்று விதிக்கப்பட் டிருக்கிறது. ஸ்திரீகள் சரீரத்தில் இயல்பாகவே அதிக மலமமைந்துள்ளது. அது ஆடவர் சரீரசக்தியை விரைவில் கெடுக்கு மியல்புள்ளது. ஆதல்பற்றி அவர்கள் சரீரத்தினின்றும் அதிக மலம் வெளிப்படவேண்டும். அதற்காகவே பெண்களுக்கு மஞ்சட் பூசிக்கொள்ளும்படி விதிக்கப்பட்டது.

"மஞ்சட் குளிதனக்கு மாருத்தூர்க் கந்தமொடு
விஞ்சுமுக சாட்டியமும் விட்டகலும்—தொஞ்சலுறும்
ஐய மொழியு மடர்வியர்வுங் காணாது
வைய மதனில் வழுத்து"

என்று கூறிய பதார்த்தகுண வியலாலும், சரீரத்திலுண்டாகும் கட்டி முதலியவற்றைக் கரைக்கு மியல்புள்ளதென்று வைத்தியநூல் கூறுதலாலும், மஞ்சட் குளி மாதர் சரீர மலத்தைக்கவர்ந்து மேனியழகையும், முகவசீகரமுங் கொடுக்குமென்று கொள்க. அதற்கு மாறாக இக்காலத்தில் திண்ணைச்சுவர்களுக்குச் சுண்ணும்படிப்பதுபோலச் சுண்ணும்பால் செய்யப்பட்டது ஸோப் என்னும் ஒரு பொருளை நமது நாட்டு மெல்லியலாராகிய மகளிரும் உபயோகிக்க நேர்ந்த விதிக்குப் பதார்த்தகுண வியல்புணர்ந்த நுண்ணறிவாளர் மனம்வருந்தாமற் போகார்கள் என்க. பதார்த்தகுணசிந்தாமணியில்,

"பொன்னிறமா மேனி புவானுற்றமும் போகும்
மன்னு புருஷ வசியமாம்—பின்னியெழும்
வாந்திபித்த தோஷமையம் வாதம்போந் தீபனமாம்
கூர்ந்த மஞ்சளின் கிழங்குக்கு."

தலைவலி நீரேற்றஞ் சளையாத மேகம்
உலைவுதரு பீனசத்தி னூடே—வலிசுரப்பு
விஞ்சு கடிவிஷமும் வீறுமிர ணங்களும்போம்
மஞ்சட் கிழங்குக்கு மால்"

என்று வியந்துகூறிய மஞ்சளின் குணங்களை யறியாமல் அதை யிகழ்ந்தொதுக்கிச் சரீரசக்தியை முற்று மபகரித்துப் பலவீனத்தைக் கொடுக்கு மியல்புள்ள ஸோப் சுண்ணும்பு பூசிக்கொள்ளும் துர்வழக்கத்துக்குக் கற்றறிந்த பண்டிதர் எவர்தாம் வருந்தார்! இதுகாறுங் கூறிய வதனால் மஞ்சட்பூசிக் குளித்தலே மாதர்க்குச் சிறந்த மலாபிஹர்ஷ ஸ்நானமாதலால், மிருத்திகா ஸ்நானம் அநாவசியமாம் என்பது புலப்படும். அதுபற்றியே அவர்களுக்கு மிருத்திகா ஸ்நானம் விலக்கப்பட்டது என்றுணர்க. வெயில் தோன்றியபிறகு ஸ்நானம் செய்வ

தும் அனுகூலமேயாம். ஆடவர் மகளிரிருவர்க்குமுரிய ஸ்நானவிதி சுருக்கமாய்க் கூறப்பட்டது. ஸ்நானம் செய்தபிறகு அவர்கள் தரிக்கவேண்டிய வஸ்திரங்களைப்பற்றிச் சிறிது கூறுவாம்.

ஸ்நானம் செய்தவுடனே உலர்ந்த வஸ்திரத்தால் துடைத்துக்கொண்டு தேகத்தை யுலரச்செய்யவேண்டும். பிறகு நன்றாய்த் தோய்த்துலர்த்திய பருத்திநூலாலாகிய வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். அப்படிக்கின்றி ஈரவஸ்திரத்துடன் நெடுநேரமிருப்பதும், கௌபீனமொன்றையே தரித்துக்கொண்டிருப்பதும், நனைந்த வஸ்திரத்தைச் சரீர உஷ்ணத்தினாற் காயுமட்டு நிற்பதும், அவ்வீரவஸ்திரத்துடன் பலவேலைகளைச் செய்வதும், மலஜல விசர்ஜனம்செய்வதும், அக்கினிக்கும் சூரியனுக்கு மெதிரில் நிற்பதும் தகாதாம். அதனாலுண்டாகும் தீமைகளனந்தமாம்.

"நீராடிய உடனே ஈரவஸ்திரத்தாலாவது, கையினாலாவது சரீரத்தைத் துடைக்கக்கூடாது. உடுத்தவஸ்திரத்தைப் பிழிதலும் தலைமயிரைத் தட்டி உதறலும் ஆகாது" என்று மார்க்கண்டேய புராணத்தில் கூறப்பட்டது.

அரையிலுடுக்கும் வஸ்திரத்தை மேலுக்கும், மேலேதரிக்கும் வஸ்திரத்தை அரைக்கும் உபயோகிக்கக்கூடாதென்று வியாசர் கூறினர்.

வெண்மையுள்ளதும், அழுக்கற்றுச் சுத்தமாயுள்ளவைகளுமான இரண்டு வஸ்திரங்களைத் தரிக்கவேண்டும் என்றும், அப்பொழுதுதான் அவன் நித்திய கருமங்களைச்செய்ய அருகனாவானென்று 'வாமனபுராணங்கூறியது.

ஈரவஸ்திரம், அழுக்கடைந்துள்ளவஸ்திரம், கிழிந்தது, தீப்பட்டது, தைக்கப்பட்டதுமான வஸ்திரங்களைத் தரித்தவன் எவ்வகைக் கருமங்களுக்கும் தகாதவன். அவன் நக்கினன் (நிர்வாணி) ஆவானென்று பிருகு முனிவர் கூறினர்.

ஒற்றைவஸ்திரத்துடன் பிதிர்க்கிருத்தியங்களும் தேவபூஜைகளும் செய்யக்கூடாதென்று புராணங்கள் கூறுகின்றன.

ஆதலால் ஸ்நானம் செய்தவுடனே யுலர்ந்த வெண்மையான வஸ்திரங்களை அரைக்கொன்றும் மேலுக்கொன்றுமாகத் தரிக்கவேண்டும். பருத்திநூல் வஸ்திரம் கிடைக்காதபட்சத்தில் நார்மடி, பட்டு, வெண்கம்பளம் இவைளைத் தரிக்கலாமென்று நூல்கள் கூறுகின்றன.

வெண்மைநிறமுள்ள பருத்திநூலாலாகிய சுத்தவஸ்திரமுடுத்தால் அது ஆரோக்கியத்தைத்தரும். அப்போதப்போது தேகத்திலிருந்து வெளிப்படும் அசுத்தத்தை அபகரித்துவிடும். வியர்வையாலுண்டாகும் அசுத்தத்தைக் கிரகித்து வெளிப்படுத்தும். வாதபித்த சேத்துமங்களாலுண்டாகும் தோஷங்களை நிவர்த்திசெய்யும். வியாதிகளை விலக்கும். ஆயுள் விருத்தியைத் தரும்.

"ஓடுந் திரிதோஷ மோங்கா யுசும்பெருகும்
கூடுந் திருவழகு கூர்களிப்பு—நீடுமதி
போதமுறும் வெற்றிவரும் பூரிக்கு மெய்வியர்வின்
ஏதமறும் வெண்டுகி லுக்கே"

என்றதனால் சுத்தவஸ்திரத்தின் பெருமைவிளங்கும். பட்டு, நார்மடி, கம்பளம் இவைகள் எப்போதும் உடுக்கத் தகாதவைகளாம். பூஜாகாலம் ஜபகாலங்களின் மட்டுந் தரிக்கலாம். பிறகு பருத்திநூல் வஸ்திரமே தரிக்கவேண்டும். சிவப்பு கறுப்பு மஞ்சள் முதலிய வர்ணங்கொடுத்த எந்தவஸ்திரங்களும் ஆடவர்களுக்கு உடுக்கத் தகாதனவாம். அவை சரீரசக்தியை அதிகமாய் வெளிப்படுத்துந் தன்மையுடையன. அதனால் ஆடவரது தேகவலி குன்றும்.

"எந்துபித்த முஷ்ண மெதிர்ந்த தருணசுரம்
வாந்தி யருசிக மந்தமிவை—சேர்ந்திடுங்கால்
செய்ய கடுஞ்சிவப்புச் சீலையுடுத் தாலவைகள்
பைய வதிகரிக்கும் பார்.

நீர்க்கடுப்பு காசமொடு நீடு விஷசுரமும்
தீர்க்கநமைச் சல்வெப்புஞ் சேர்மலமும்—பார்க்குண்மிக
அஞ்சி யேகுமஞ்ச ளாம்வத்திரம் புனைந்தால்
வஞ்சியே நன்றாய் வழுத்து.

மெய்யழலை போகும் விழிக்குக் குளிர்ச்சியுண்டாம்
பொய்யி லுடலமெலாம் பூரிக்கும்—ஐயமறும்
நச்சை நிகரு நளினவிழிப் பெண்ணமுதே
பச்சையுடை யின்குணத்தைப் பார்.

காசமொடு வெப்புங் கறுத்த கொடுவிஷமும்
பேசுமந் தாக்கினியும் பித்தமும்போம்—நேச
வெறுப்புறு லின்பநய மெல்லியலே நீலக்
கறுப்புநிற மாந்துகிற்குக் காண்"

என்ற செய்யுட்களால் அவற்றின் குணம் வெளிப்படும். இதனால் அவை ஒவ்வொரு காலத்துக்கே அணியத்தகுவனவேயன்றி எப்போதும் ஆடவர்களுக்கு அணியத்தகா. மலமிகுந்திருக்கு மியல்புள்ள பெண்களுக்கே அவையுரியனவாம். மாதர்களுக்கு அத்தனைச் சிறப்பினை யணியா வெள்ளை வஸ்திரங்கள். ஆதலாற் செம்மை கருமை முதலிய நிறங்கலந்த வஸ்திரங்களையே பெண்கள் தரிக்கவேண்டுமென்று நூல்கள் விதித்தன. அவை சரீரமலத்தை வெளிப்படுத்திச் சுத்தியளிப்பதுந்தவிர மாதர்களுக்கு அழகையும் வசீகரத்தையும் கொடுக்கும். சிவப்பு வஸ்திரம் சரீரபலத்தைப்போக்கும்; மஞ்சள் வஸ்திரம் சொறி சிரங்குகள் வராமற்காக்கும்; பச்சைவஸ்திரம் குளிர்ச்சியைத்தரும்; கறுப்புவஸ்திரம் பிராணக்கினியை மந்திக்காதபடி காக்கும். ஆதலால் வீட்டுக்குள்ளிருந்து வேலைசெய்யும் மாதர்களுக்கு இவை நற்பயனைத்தரும். வெளியில் திரிந்து வேலை செய்வோர்க்கு அவ்வளவு நன்மைதரா. பிராணாயாமமுதலியவற்றால் பிராணக்கினியை விருத்தியாக்குந் தன்மையுள்ள ஆடவர்களுக்குத் தீமையையே உண்டாக்கும். இதனாலேயே புருஷர்களுக்கு வெள்ளைவஸ்திரமே சிறப்புடையதென்றும், அவற்றையே தரிக்கவேண்டுமென்றும் நூல்கள் விதித்தன. எத்தேசத்திலும், எல்லாச்சாதிகளிலும் பெண்களுக்கு வர்ணவஸ்திரங்களே சிறப்புடையனவென்று கொள்ளப்பட்டது. வெள்ளாடைபுனைதல் சிறுபான்மையேயாம். ஆடவர் ஒவ்வொரு காலத்தில் மாத்திரம் வர்ணவஸ்திரம் புனைவதையும் காண்கிறோம். ஆதலால் இது சர்வேசுவரனால் அமைக்கப்பட்ட அமைதியேயென்று கொள்ளத்தக்கது. நூல்விரியாதபடி சுருக்கிச்சொல்லப்பட்டதைக் கற்றுணர்ந்த கல்விமான்களால் வேண்டியவளவு விரித்துக்கொள்வார்களென்று நம்புகிறோம். (தொடரும்.)

சிவாநந்த சாகர யோகீஸ்வரர்.

குறிப்பு:—மேல் நாட்டார்க்கு வைத்திய சரித்திர முதலிய எந்த சாத்திரங்களும் தெரியாமலிருந்த அக்காலத்திலேயே நம்மவர்கள் சாஸ்திரீகமாய் இவ்வளவு அரியவிதிகளையெல்லாம் நமக்கு ஏற்படுத்தியிருந்தும் நம்மவர் புத்திமயங்கி அவர்கள் நற்புத்திகளை யலட்சியம் செய்து மாறான அன்னிய சாரங்களைக் கைக்கொண்டு துன்பத்திற் காளாகிறார்கள். அறிவாளிகளாகிய பெரியோர் முன்

வந்து தடுத்துப் புத்தி புகட்டும் இப்போதும் நாம் இத்தகையவற்றை வாசிப்பதோடு விட்டுவிடுகிறோமேயன்றி வாசித்தபடி நடக்கிறோமில்லை. இப்போதும் பெரும்பாலார் பயறு, கிச்சிலிக்கிழங்கு, வெற்றிலை முதலிய உயர்ந்த வஸ்துக்களை யலட்சியம் செய்து சோப் தேய்த்துக்கொள்வதே கௌரவமும் நாகரீகமும் என்று கருதுகிறார்கள். அதிலும் சில அறிவுகெட்ட மாதர் சுமங்கிலிகளா யிருந்தும் மஞ்சளை யடியோடு விட்டுவிட்டு சோப்பையே பூசிக்கொள்கிறார்கள்.

இப்போது இவ்வியர்சத்தை யெழுதிய பெரியோர் மிக்க சிரமை யெடுத்துக்கொண்டு நம் முன்னோர் நூல்களினின்றும் சிறந்த ஆதாரங்களை யெடுத்துக் காட்டி நம் நன்மைக்காக இத்தகைய நற்புத்திகளைப் புகட்டுகிறார். இத்தகைய ஆன்றோர் மொழிகளை யலட்சியம் செய்து நமது துர்ப்பழக்கங்களை விடாமலே யிருப்பதால் நாம் நன்மைபெறாது போவதோடு கட்டாயம் நமக்குப் பாபமுமுண்டாக்கிக்கொள்கிறோமென்பதை நாம் நன்குணரவேண்டும். பத்திரிகாசிரியர்.

பகவத்கீதை-கருமயோகம்.

(417-ம் பக்கத் தொடர்ச்சி)

(அத்) 3. சுலோகம். 19. ஆதலால் பலாபேக்ஷையை விட்டு எப்பொழுதுஞ் செய்யவேண்டிய கருமத்தை நன்குசெய். ஏனெனின் பலாபேக்ஷையை விட்டுக் கருமாநுஷ்டானஞ் செய்து வருகின்றவன் உத்தமமானதை யடைகின்றான். அத் 3 சு 20 ஜனகன் முதலானவர்கள் நிஷ்காம கருமத்தாலே சித்தியடைந்தார்கள். ஜனங்களின் பிரயோஜனத்தை யுத்தேசித் தாயினுங் கருமஞ் செய்ததற்கு யோக்கியனா யிருக்கின்றாய்.

இதனாலும் மேலது வற்புறுத்தப்பட்டது. மகான்களான ஜனகன் முதலானவர்களும் நிஷ்காம கருமத்தாலே சித்தியடைந்தார்கள். உன்னை அவர்களிலுஞ் சிறந்தவனாக நினைத்து நிஷ்காம கருமஞ்செய்ய வேண்டுவதில்லை யென்று நீ எண்ணியபோதிலும் ஜனங்களுடைய பிரயோஜனத்தின் பொருட்டாவது நீ கருமஞ் செய்யவேண்டு மென்றும் ஒருவரும் கருமத்தை விடாமலே செய்ய வேண்டு மென்றுந் திருவுளத்தா னருளினான்.

அத் 3 சு 21 பெரியவன் எந்தெந்தக் கருமத்தைச் செய்கின்றானோ அந்தந்த கருமத்தையே அந்நிய மனிதனுஞ் செய்கின்றான். அந்தப் பெரியவன் எதைப் பிரமாணமாகக் கொள்கின்றானோ உலகம் அதையே யநுசரிக்கும். என் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே மேல் சொல்லப்பட்ட சுலோகத்தின் கருத்தையுய்த்து நோக்கில். (அரசனெவ்வழி அவ்வழிக் குடிகளும் யென்றாப்போல்) இப்பொழுது நமது தாய்நாடு அநுவசியமான புது சீர்பாட்டை அடைந்திருக்கிறது. இதை விரித்துரைக்க தேவையில்லை, யாவரும் உணர்வீர்கள். மேலும் நமது போதினியின் மூல்யமாக அன்பர்கள் எத்தனையோ தரம் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் நாம் அவசியம் கவனிக்க வேண்டிய தென்னையெனின் நமது தாய்நாடும், நாமும் மேன்மையடைய வேண்டுமானால் பெற்றவர்களாயிருக்கப்பட்டவர்கள் தமது குழந்தைகளை எவ்வளவுவரையிலும் கல்வி, ஒழுக்கம், நற்செய்கை, முதலியவற்றில் சீர்திருத்தலாமோ அவ்வளவு வரையிலும், நல்வழியில் திருப்பினால் எல்லா நன்மையும்கிடைக்கும். சிலர் கவனியாது எல்லாம் விதியின்படி நடக்கின்றதென்று நினைத்து சும்மா யிருக்கிறார்கள். விதி யிருந்தாலும், செய்யத்தகுந்தது, செய்யத்தகாதது என்றுநாம் பகுத்தறிவதாலும் (மெய்வருந்த கூலிதரும்) (சுடர்விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்) (முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்) என்ற ஆன்றோர் வாக்குகளாலும் நல்லதுசெய்ய

ஆரம்பித்தால் கேடு உண்டாகாதாகலாலும் ஏமாந்திராமல் கவனித்து நடக்க வந்த னத்துடன் கேட்டுக்கொள்கின்றனன். எளியவர்களாயிருப்பவர்கள் கூடத்தமது சக்தியை கவனியாது ஆங்கில பாஷைக்கு தமது மக்களை ஏவி முதல்பாரம், இரண்டாம் பாரம், மூன்றும் பாரம் வரையிலும் படிக்கவைத்து அவர்களுக்கு வித்தை யேறாத குறைவாலும், பொருள் செலவுசெய்ய சக்தி யில்லாமலும், மக்களை, கால்வாயனுகப்பலனடையாமல் கஷ்டப்பட்டு கூலிஜீவனத்துக்கு அனுப்புகிறார்கள். முதலிலேயே, தனதுசக்திகளையும் குழந்தைகளின் புத்தி யுக்திகளையும் கவனித்து நடந்தால் இத்தகைய துன்பம் பீடிக்காது. தங்கள் தங்கள் தாய்ப் பாஷையை குழந்தைகளுக்கு முதலிலேயே போதனை செய்தால் அவர்களும் எளிதிற்படித்து சுகத்தை யடைவார்கள். பெற்றவர்களும் சீகமடையலாமே இதை எல்லாரும் பெரும்பாலும் கவனிப்பதில்லை. தாய்ப்பாஷையை எவ்வளவு எவ்வளவு வரையில் குழந்தைகளுக்கு கற்பிக்கின்றோமோ அவ்வளவும் நமக்கும் நமது தாய்நாட்டுக்கும், நமது தாய் பாஷைக்கும் மேன்மை யுண்டாக்கு மென்பதை திண்ணமா யறியலாம். B. A. B. L. படித்த ஒருவர் நமது நன்மைகளைப் பற்றி ஒரு சபைகூடி உபன்னியாசஞ் செய்யப் புகுந்தறுவாயில் ஆங்கிலத்தில் தான் உபன்னியாசிக்க கூடும். அச்சபையின்கண் வந்திருப்பவர்களில் மிகச் சிலரே அதையறிய சக்தியுள்ளவர் களாயிருக்கிறார்கள். மற்றவர்கள் உள்ளபயன் கனவு கண்டது போல இருக்கிறார்கள்; விஷயம் தெரியாதுழல்கின்றனர்கள். ஷி உபன்னியாசத்தைச் சபையின்நோக்கப்படி உபன்னியாசிக்கத்தாய்ப்பாஷையில் பூர்ணமான கல்வி யில்லாமையே காரணம். நமது தாய்ப்பாஷையை பூர்ணமாகக் கற்று இதரபாஷைகளைக் கற்றால் நமக்குவேண்டிய லௌகீக வைதீகாரியங்களெல்லாம் நமது வேதசாஸ்திர புராண இதிகாசங்களால் தெரிந்து தன்னை போல பிறரையும் பாவித்து நடக்கக்கூடும். நமது தாய்ப் பாஷையை கருதாது வயிற்றுப் பிழைப்புக்குப் படிக்கும் அந்நிய பாஷையே பெரிய வேதாந்தமாக நினைத்து அதிலுள்ள நூல்களை படித்துத் தப்பான எண்ணங்கொண்டு நடப்பதில் என்னபலனை அடைகிறார்கள். இனியாவது இப்பேர்ப்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு ஆள் ஆகாமல், நாமும், நமது தாய்ப் பாஷையும், நமது தாய்நாடும் மேன்மை யடைய வேண்டியதை நாடுங்கள். அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, மேல் நாட்டாரை பின்பற்றி அந் நாகரீகத்தை கைப்பற்றி சங்கடப்படாமல் செய்யவேண்டியதின்னதெனத் தெரிந்து செய்து சுகமடையுங்கள்.

எக்கல்வியால் இவ்வித மேம்பாட்டை யடையலா மென்பதை யோசித்து நடவுங்கள். இனியாவது நித்திரைசெய்யாது விழிப்போடு இருந்து தாய்ப்பாஷையை முன்னேற்றத்துக்குக் கொண்டுவர ஒவ்வொருவரும் பிரயாசைப்படுங்கள். ஆதிமூலமாக விளங்கும் ஐயன் நமக்கு அருள்புரிக. (தொடரும்)

நா. அ. நாகசாமி நாயுடு, பேர்த்தனூர்.

துன்பத்திற் கிடங்கொடேல்.

பகுத்தறிவுள்ள மானிடர் எவ்விதமாய துன்பத்திற்கும் தங்குமிடம் கொடுக்கக்கூடாதென்பது இதன்பொருள். அதாவது துன்பம் வருமுன் அதையறிந்து தக்கமுயற்சியால் அத்துன்பமணுகாவண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பது கருத்து

ஔவையார் அருளிய "நோய்க் கிடக்கொடேல்" என்ற வாக்கியத்திற்கு,

"நோய் வருமுன்பே சாக்கிரதையாய் உன் தேகக்கூறையும் தக்கால தேக நிலைமையையும் கவனித்து உன் தேகத்திற்குத் தகாத வஸ்துக்களையும் செய்கை

களையும் நீக்கித் தக்கவைகளைமட்டுமே ஏற்றுக்கொள். நோய்வந்தாலோ, அசட்டையாயிருந்து அது தேகத்தில் வளரும்படி இடங்கொடுத்துவிடாமல், உடனே தக்க ஔடதமுண்டு, சரியாய்ப் பத்தியமிருந்து அந்தநோயைக் கூடிய சீக்கிரத்தில் ஒழிக்க வழிதேடு" என்பதே பொருளாகும்.

இதைவிட்டுச் சிலர் (பாமரர்) நோய்க் கிடங்கொடேல் என்றால், "நோய் வந்துவிட்டால் அதற்குப் பயந்துகொண்டு, படுக்கையில் படுத்துக்கொள்ளாதே. அதற்குப் பயந்து ஒன்றும் செய்யாமல் நீ எப்போதும்போல் உண்பதை யுண்டு செய்வதைச் செய்துகொண்டு அதைச் சட்டை செய்யாமலிருந்தால்தான் அது தானே யோடிவிடும். நீ பூச்சி பூச்சி யென்று அதற்குப்பயந்து ஏதாவது செய்தால்தான் அதி 'நமக்கு இங்கே நல்ல மரியாதை நடக்கிறதென்றெண்ணி நன்றாய் ஊன்றி யுட்கார்ந்துகொள்ளும்' என்று அறிவின்மையாற் கூறுகின்றார்கள்.

அந்தோ, இக்காலத்தில் பெரியோர் வாக்கியங்களுக்கு இல்லாத விபரீத அர்த்தம் செய்கிறவர்கள் அனேக ரிருக்கிறார்கள்.

அதுபோல் "துன்பத்திற் கிடங்கொடேல்" என்றால் துன்பம்வந்தால் வரட்டுமென்று அதைச் சட்டைசெய்து கவனிக்காமலிருந்துவிட வேண்டுமென்று பொருள்கொள்ளாமல், "துன்பம் வருமுன்பே அது நம்மிடம் வரவொட்டாது நாம் எச்சரிக்கையா யிருக்கவேண்டும்" என்பதே பொருளென்றுணரவேண்டும். எவ்வாறு எச்சரிக்கை யெடுத்துக்கொள்வதெனின், துன்பம் நமக்கு எப்படி வருகிறதென்பதை யுணர்ந்து நமது செய்கையால் அதற்கு வழிகொடா திருக்கவேண்டும்.

நாம் செய்கிற காரியங்களனைத்தும் மனம், வாக்கு, காயம் என்று மூன்றினாலும் செய்யப்படுகின்றன. ஆகையால் இம்மூன்று காரணங்களாலும் நாம்செய்கிற ஒவ்வொரு காரியத்தையும், அதனால் நமக்குத் துன்பம் நேரிடாவண்ணம் எச்சரிக்கையோடு செய்யவேண்டும்.

முதலாவது:—மனதை யெடுத்துக்கொள்வோம். இம்மனமே செய்கைகளுக்கெல்லாம் முதற்காரணம். மனம் ஒன்றைச் சிந்திக்கிறது. பிறகே வாக்கு அதை வெளியிடுகிறது. அல்லது சிந்தனையாலேயே தேகக்கருவிகளுக்குக் கட்டளையிடுகிறது. மனம்மட்டும் தன்னிடமுள்ள கெட்ட குணங்களையெல்லாம் ஒழித்துவிட்டுச் சுத்தமாகவிருக்குமேல் நாம் துன்பத்தையுண்டாக்கும் எக்காரியத்தையும் செய்யோம். ஆகையால் மனதில் கெட்ட எண்ணம், கோபம், வீண் ஆசை, பொறாமை, அகங்காரம், உலோபம் முதலிய கெட்ட குணங்களுக்கு இடங்கொடுத்தால் துன்பத்திற்கு இடங்கொடுத்தவர்களாகிறோம்.

திருட்டாந்தமாய்த் துரியோதனன் தன் இராஜ்ஜியத்தில் ஒருபாகத்தைத் தன் தாயாதிகளாகிய பாண்டவர்களுக்குக் கொடுக்கக்கூடாதென் றெண்ணிய உலோபகுணத்தால் தன் புத்திரமித்திராதிகளோடு மாண்டு இவ்வுலகில் என்றும் வசைச்சொல்லும் மறு உலகில் நரகமும் அடைந்தான். பரதார இச்சையால் இராவணன் பட்டபாடு யாவருமறிந்ததே யன்றோ.

இரண்டாவது:—வாக்கினாலும் துன்பத்திற் கிடங்கொடுக்கிறோம். எவ்வாறெனின்.—

நாம் ஒருவருக் கெவ்வளவு மரியாதை செய்கிறோமோ அவ்வளவுதான் பிறரிடத்தினின்றும் பெறவோமென்கிற வெண்ணத்தை முற்றிலும் மறந்துப் பிறரைக் கோபித்தும், பெரியோரை இகழ்ந்தும், உதாவனோமா யவர்களைட்

பேசியும் தூஷணங்களைப் பலவாறாக நேரிலும் பிறரிடத்தும்செய்தும், அதனாலாகிய துன்பங்களை துகர்வது வாயாலாகியதாம்.

திருட்டாந்தமாய் எவ்வளவோ கஷ்டப்பட்டு இந்திரபதவியை யடைந்த நகுஷமகாராஜன் ஸத்தரிஷிகள் கௌரவத்திற்காகத் தாங்கும் பல்லக்கிலேறி இந்திராணியின் மாளிகைக்கேகுங்கால் காமவேட்கையின் ஆத்திரத்தால் அவசரப்பட்டு ஸர்பஸர்ப (சீக்கிரம் சீக்கிரம்) என்று வாக்கால் கூறியதனால் மலைப் பாம்பின் உருவமடையும்படி சாபம் பெற்றான்.

மூன்றாவது:—காயத்தால் செய்யும் செய்கையாலும் துன்பமடைகிறோம். எவ்வாறெனின்:—

சிலர் தத்தம் பலத்தை யறியாது தாம் எவ்வித காரியத்தையுஞ் சாதிக்க முடியுமென்று மனோபாவம் செய்துகொண்டு தம் வலிவுக்குமீறிய வேலையிற் றலையிட முயல்கிறார்கள். அந்தோ! எவ்வளவு மூடத்தன்மை! நான்குமரக்கால் தானியமெடுக்கத் தக்க ஒருவன் ஒரு கலதானியஞ் சுமப்பதெனின் தகுமா? அப்படியே யவன் காசுக் காசைப்பட்டுச் சுமந்தாலும் அவனது கழுத்தொடிந்து சுளுக்கு முதலியவைகளால் அவன்படு மவஸ்தையைப் பார்க்கவும் சகிக்காது. பலநாளுணவை யொருநாளிலுண்ண வியலுமோ? அஃது ஸாஹஸமன்றா? அதிக வாசை யதிக நஷ்டத்திற் கறிகுறி. ஊர்க்குருவி பனங்காயை யெடுப்பது அசாத்தியம். பனங்காயின் பரிசம்மேலேபட்டாலுமஃது நசுங்கிவிடும். சரீரத்தை யதிகமாக வருத்தி ஒன்றையடையமுயன்றா லஃதவமே யாவதன்றிக் கேடும் வரும். சில கூலியாட்கள் சிலவிடங்களில் தம்வறுமையினாலதிகம் பணம் சம்பாதிக்கும் பொருட்டு மூட்டைகளை யதிகமாகச் சுமந்து மறுநாள் தலைவலி, கைகால் கழுத்துச்சுளுக்கு முதலிய தொந்தரவுகளாற் பீடிக்கப்பட்டுச் சோர்ந்தாப் போல் காலைந்து நாளைய கூலிகளை யிழந்துப் பசியால் மெலிந்து வருந்துவதைப் பிரத்யக்ஷமாகப் பார்க்கலாம்.

இன்னும் சரீரத்தால் இதர மனிதருக்கோ பிராணிகளுக்கோ வருத்தம் உண்டாகும்படி நாம்செய்யும் செய்கையாலும் நமக்குத் துன்பம் தேடிக்கொள்கிறோம்.

இவற்றிற்கு எண்ணிறந்த திருட்டாந்தங்கள் அனுபவமா யிருக்கின்றன. நமது சிறுசஞ்சிகை யிடந்தராதாதலானும், மனதில் சுலபமாய்ப் பதியவைத்து நடந்துகொள்வதற்கு இவ்வளவே சுருக்கமாய்ப் போதுமாதலானும் இம்மட்டோடு முடிக்கிறோம். சகோதர சகோதரிகளே! நாம் திரிகரணங்களாற் செய்யும் ஒவ்வொரு செய்கையையும் இதனால் பிறருக்கேனும் நமக்கேனும் துன்பமுண்டாகுமா வென்று முன்னாடி சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்த்துச் செய்வோமாயின் கூடியவரையில் நமது மூதாட்டி யருளியவண்ணம் துன்பம் நம்மிடமணுகும்படி யிடங்கொடாது தடுக்கலாகும் என்பது உண்மை.

சிறியேன் கூறியவற்றில் பிழையுளவேல் ஆன்றோர் பொறுக்கப் பிரார்த்திக்கின்றேன்.

D. வராஹஸாமி, திருவையாறு.

தொழில்—தொழிலாளர்.

(420-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேற்கண்ட தலைப் பெயரின்கீழ் சென்ற மாத வியாசத்தில் சுயநலங் கருதாது தன்னஷ்டத்தையும் பாராட்டாமல் செய்ந் நன்றியறிவுடன் தனது கடமையைச் செவ்வனே கைப்பற்றிய ஓரற்ப வேலைக்காரியின் செயலையும், தனக்கேற்பட்ட ஊழியத்துக்கு முற்றும் மாறாக பேராசையால் நம்பிக்கை மோசஞ்

செய்ய வெண்ணி பெரும் பதவியி னின்றும் நாசமடைந்த மந்திரியின் இழி தொழிலையுங் கூறினோம்.

இப்பால், நடுத்தர உத்தியோகம் கிடைத்தும், மனச் சாட்சியுடன் அதைக் கைப்பற்றி நன்கு நடத்தாமல் பிறர் நஷ்டத்தைக் கிஞ்சித்தும் நினையாமலும், எவ்வித துஷ்கிருத்தியத்தாலாவது பிறர்பொருளைத் தானடைவதே ஆனந்தமெனக்கருதிக் கடைசியில் அவதியி லாழ்ந்த ஓர் வட இந்திய அந்தணன் செயலைச் சாற்றுவாம்.

இராமஸ்வரூபன் என்ற இவ்வந்தணன் கிழக்கிந்திய ரயில்வேயில் டில்லிக்குப் பக்கத்திலுள்ள ஓர் சிறிய ஸ்டேஷனுக்கு மாஸ்டராக விருந்தான். இவனிடம் கிருஷ்ணன் என்ற ஒருவனுக்கு அனுப்பப்பட்ட பார்ஸலொன்று டில்லியிலிருந்துவந்தது. பார்ஸலை ஆட்டி, அசைத்து, முகர்ந்து பார்த்துப் பெயர்வாய்ந்த டில்லி மிட்டாய் வகைகள் அதனுளடக்கமெனத் தெரிந்துகொண்ட அந்தண ஸ்டேஷன் மாஸ்டர், பார்ஸலைப் பிரித்துத் தன் கீழுள்ள மற்ற வேலைக்காரர்களுடன் மிட்டாயில் பெரும்பாகத்தைச்சம்பிரமத்தோடு உட்கொண்டு, பார்ஸலின் எடையில் வித்தியாசம் வாராதவாறு சிறு கற்களைக் காகிதத்திற் சுற்றி பார்ஸலை நிறைத்து முன்போலத் தைத்து, கிருஷ்ணன் பொருளைத் தான் அபகரித்ததாகச் சிறிதும் நினையாமலும், தனக் கேற்பட்ட மாமூல் தனக்கு நியாயமாகவே கிடைத்ததாகவும் எண்ணி, மிட்டாய் எப்பம் ஒரு பக்கம்வர பார்ஸ லெடுத்துப் போக வர விருந்த கிருஷ்ணனை எதிர் பார்க்கலானான்.

இதைப்படிக்க நேரும் நமது நேயர்களுள் பெரும்பாலார் ரயில்வேகம்பெனி உத்தியோகஸ்தர்களின் விபரீத நடவடிக்கைகட் கிலக்காகாமலிருந்திரார். பிரயாணிகள் பயணச் சீட்டு வாங்கும்பொழுதும், வண்டியிலேறப் புகும்பொழுதும், மூட்டைகளை எடையிடுங்காலும், வண்டியிலும், இறங்கும் போழ்தும், மூட்டை பெற்றுக்கொள்ளுங்காலும், இன்னும் சாமான்கள் அனுப்பவேண்டுமானால் முழு வண்டிகள்பெறவோ, நிறுத்தனுப்பவோ, கடைசியாக நிறுத்துப் பெற்றுக்கொள்ளவோ வியாபாரிகள் அனுபவிக்க வேற்படும் தேகசிரமம், அவமானம், பொருள் நஷ்டம், பணச்செலவு எவ்வளவென்று விவரித்துக் கூற இங்கு இடமுமில்லை: அவசியமுமில்லை. இதன் கொடுமையை அனுபவிக்காதார் அநேகமாக இருக்கவேமாட்டார்கள். பகற்கொள்ளையென்றால் ரயில்வேஸ்டேஷன்களில் நடப்பது தான் சரியான பகற்கொள்ளை. இவ்வநியாயச் செயல்களைச் சிறு சம்பளம் பெற்றுவரும் ஊழியர்களே யல்லாது, சின்னாளுக்கு முன்னர் 'சிறை வாசத் தண்டனை யடைந்த ஜப்பல் பூர் டிஸ்ட்ரிக்ட் டிரேபிக் ஸூபரிண்டெண்டெண்டைப்போன்ற உயர்தர கம்பெனி உத்தியோகஸ்தர்களில் அநேகரும் கைப்பற்றி வருவது நம் நாட்டுக்கே அவமான கரமாக விருக்கிறது. கம்பெனி மானேஜர்களின் மேற்பார்வை வேண்டிய அளவு இல்லாமையும், ஸ்டேஷன் மாஸ்டர்களின் படிப்பும், சம்பளமும் மிகவும் சுவல்பமாயிருப்பதுமே ரயில்வே இலாகாவில் நிகழும் அக்கிரமங்களுக்குள்ள பல காரணங்களில் முக்கியமானவையாகக் கூறலாம். இவைகளைச் சீர்திருத்த வென்று பம்பாயில் ஏற்பட்டுள்ள ஓர் சங்கம் போல் இந்தியாவிற் பல முக்கிய ஸ்தலங்களிலும் சங்கங்களமைந்தால் கிரமமாக நன்மைக ளுண்டாகும்.

இது நிற்க, ரசீதுடன் பார்ஸலைப் பெற ஸ்டேஷனுக்கு வந்த கிருஷ்ணனைக் கண்டதும் ரசீதைப்பார்த்த ராமஸ்வரூபன் முகம் மாறியது. ஏனெனில் ஸ்டேஷனுக்கருகிலுள்ள ஊரையும், ஸ்டேஷனையும் சுத்தஞ்செய்யும் தோட்டி தான் பார்ஸல் பெறவந்த கிருஷ்ணன். தோட்டியின் மிட்டாயைச் சாப்பிட்டோமே எனக் கிலேசித்ததால் அந்தணன்முக மாற்றமடைந்தது. மறுபடி மிட்டாய்

அனுப்பியவன் கடைக்காரனாகவே யிருக்கவேண்டும்: ஸ்பர்ச தோஷமேபோலும் புசித்ததால் பாதகம் இல்லையென தனக்குள் தேறிக்கொண்டு ராமஸ்வரூபன் பார்ஸலைக் கொடுக்கும்பொழுது, "ஏண்டா கிருஷ்ணா! உனக்கு யாரடா பார்ஸல் அனுப்பினது? கால விபரீதம்! தோட்டிப் பசங்களுக்கும் பார்ஸலாம்!! என்னடா வரவழைத்தாய்?" என்று ஒன்றுமறியாதவன் போல விளித்தான். பாபம் மேலே பதில் வரப்போவதை அறிந்திலன். 'சாமி! டில்லியிலே பெரிய பெரிய பனியாக்கள் (வணிகர்கள்) வீடு என்னுடைய மாமா கூட்டுருங்க. ஏதோ கலியாணம் நடந்ததாம். சாப்பாட்டிலே இலையிலே ரொம்ப மிஞ்சிப்போச்சுங்களாம். தானும் துண்ணூட்டு மாப்பிள்ளைக்கும் கொஞ்சம் அனுப்பிச்சாங்க" என்று கிருஷ்ணன் பதிற் சொன்னான்.

இச்சொற்கள் காதிற்படவே ராமஸ்வரூபனுக்கும், மிட்டாயை யுட்கொண்ட மற்றவர்களுக்கும் மேற்செய்வது இதுவெனத் தோன்றக் கூடவில்லை. ஸ்தம்பித்து ஒவ்வொருவரும் மற்றவரின் முகத்தை நோக்கினர். இவர்கள் ஸ்திதியைக் கண்ட தோட்டி, "என்னுங்க! நீங்க எல்லாரும் எதுக்காக ஒரே முழியா முழிக்கிறீங்க?" என்றான். தங்கள் அவமான காரியம் வெளிவாராதிருக்க வெண்ணி, "ஒன்னுமில்லை நீ போ," என்று அதட்டினார்கள். அவர்கள் திடீரென அடைந்த ஸ்திதியையும், தன்னைக் கோபத்துடன் போகச்சொன்னதையும் நினைத்து, உடனே அவர்கள் முன்னரே பார்ஸலை அவிழ்த்து, அதில் கொஞ்சம் மிட்டாயும், பாக்கி கல்லும் பழங்காகிதமே யிருக்கக்கண்டு, ஸ்டேஷன் சிப்பந்திகளின் கோபத்தையுங் கவனியாமல், "இதென்ன ஐயா! கல்லுங் கடிதாசுமா என் மாமன் அனுப்பினுங்க? ரொம்ப மோசமா யிருக்குதே," எனக் கூக்குரலிட்டான். பிறகு மிட்டாயை மட்டும் கைக்கொண்டு, ஊறுறத்தால் பார்ப்பினரும் ஏனையோருமே உச்சிஷ்டத்தைப் புசித்துத் தடுமாறுவதைத் தெரிந்து, தனக்கெதிற்பட்ட அனைவருக்கும் சங்கதியைக் கூறிக்கொண்டே வீடு சேர்ந்தான் கிருஷ்ணன்.

ஊர்ப் பார்ப்பினரும் நாலுகாசு சம்பாதிக்க இதே பொழுதெனத் தேர்ந்து ஸ்டேஷனை யடைந்து, மாஸ்டரையும் மற்றவரையும் விளித்து, "அக்ஞானகிருத அனர்த்த கர்மாவுக்குப் பிராயச்சித்தம் கிஞ்சித்தில் முடிந்துவிடும். அதைநியப்படாதீர்கள்! உங்களுக்கென்ன குறை? சுபஸ்ய சீக்கிரம்: பிராயசித்தம் விஞ அன்னபானாதிரபி வர்ஜனீயா:" என்று அரைகுறை சந்தர்ப்பசந்தர்ப்பப் போலி மேற்கோட்க ளனேகங்கூறி, சம்புரோக்ஷண கருமத்தை வாயில் வந்த விதானத்தால் செய்வித்து, தங்கள் தக்ஷிணைகளை மன்றாடிப்பெற்று வயிறு வீங்கத் தின்று வீடேகினர்.

ரயில் ஊழியர்கள் இரண்டு ரூபாய் மிட்டாயாகையால் இருநூறு ரூபாய் செலவுக்கும் எல்லையிலா அவமானத்திற்கும் உள்ளானார்கள். ஏன்? ரயில் கம்பெனி கொடுத்ததனும் சம்பளத்துடன் திருப்தியடைந்து, அவரிட்ட கடனைப் பிராணிகள், வியாபாரிகள், கம்பெனிக்கும் தொந்திரவாவது, நஷ்டமாவது, ஏற்படாதவாறு நெறிப்படித் தீர்த்து வந்தால் இக்கதிக் கிலக்காயிராரன்றோ. ஆனாலும், இவ்வுலகில் தன் முன்னிகழும் உதாரணங்களாலாவது சீர்மை யடைவார் மிகச் சிலரே. "தண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்குண்டோ வுணர்ச்சி" என்ற குமரகுருபரனின் அருஞ்சொல்லைப் பொய்ப்பிக்க முயல்வாருமில்லை. எட்டுச் சுரைக்காயாகவே பாவிக்கின்றனர்.

மேற்கூறிய திருஷ்டாந்தரத்தால் நாம் சொல்லவந்தது ரயிலூழியர்களை மட்டும் குறிப்பிட்டதாகாது. எல்லாத் தொழிலாளிகளும் தத்தம் கடனைச் சிறக்கச் செய்யாவிடில் சிறுமையே யடைவர்.

'தத்த நிலைக்குந் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் றாஞன்றி—எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்.'

மீனாம்பாள் K. சர்மா தாரணை, மத்திய இந்தியா.

பேதைமையகற்று

என்பதற்கேற்ப மனிதர் அஞ்ஞானத்தை யொழித்து உண்மை யுணர்வடைந்து பரோபகாரிகளாய் வாழுதலின் உயர்வை விளக்கும்.

ஆத்திசூடி வெண்பா.

கோவதைசெய்யப் பிடித்தகோ ளரிக்குத் தன்னுடலை
ஈவனென்றானே திலீபனென்னு மன்னன்—ஆவதினால்
நட்பாளும்புன்னை வளராத மன்னு வெப்போதும்
உட் பேதை மையகற்று.

(இ—ள்.) மனிதராகப் பிறந்தவர் அஞ்ஞானத்தை யொழித்து மெய்யுணர்ச்சியை யடைந்து எல்லாச் சீவராசிகளிடத்தும் தயையுடையவராயும் பரோபகாரிகளாயும் வாழவேண்டும். அங்ஙனம் வாழின் அவர்க்கு மேலான பதவி கிடைக்கும். இதுபற்றியே ஔவையும் பேதைமையகற்று என்று கூறினள். இந்நீதியை உணர்ந்தமையாலே,

திலீபனென்னு மரசன் பேதைமையை அகற்றி, உலகத்தில் அறமே சிறந்ததாமென்றுணரும் மெஞ்ஞானத்தை அடைந்து, கோ—பசுவை, வதை செய்யப்பிடித்த—கொல்லப்பிடித்த, கோள் அரிக்கு—கொல்லுதலை யுடைய சிங்கத்திற்கு, தன் உடலை—தன்தேகத்தை, ஈவன் என்றான்—கொடுப்பேன் என்று கூறி மேன்மை யடைந்தான், ஆவதினால்—இவ்வாறு இத்தகைய மனிதர்களால் இத்தகைய அறச்செயல்கள் நிகழ்வதனாலே நீயும் பேதைமையகற்றி ஞானத்தை யடைதலின் உயர்வை யுணர்ந்து, எப்போதும்—எக்காலத்தும், உன்மனத்தின் கண்ணுள்ள பேதைமை அஞ்ஞானத்தை அகற்று—நீக்கி மெய்ஞ்ஞானத்தை யடைந்து பரோபகாரச் செயல்களைச் செய்வாயாக.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும்

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (திருக்குறள்)

பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டீதியம் போகவிடல். (திருக்குறள்)

ஓதி யுணர்ந்தும் பிறர்க் குரைத்துந் தானடங்கா
பேதையிற் பேதை யாரில். (திருக்குறள்)

பேதைமையகற்றி—நற்காரியஞ் செய்து மேன்மையடைந்த—திலீபன் கதையாவது:—

இந்தத் திலீபன் என்பவன் அம்சுமானுடைய புத்திரன். இவன் மனைவி சுதக்ஷணை. இவன் இவளோடு கூடி அரசியற்றுங் காலத்தில் ஒரு சமயம் தெய்வலோகஞ்சென்று மனைவிமேல் விருப்பம் வைத்துத் திரும்பி வந்தான். அப்போது இவன் வழியிலிருந்த கபிலையைப் பூசியாமல் திரும்பி வந்தானாதலால் அப்போது அக்கபிலை இவனை நோக்கி, நீ என்னைப் பூசிக்காதபடியால் உனக்குப் புத்திரப்பேறு இல்லாமற் போகக்கடவது. என்னுடைய வயிசத்

தவரைப் பூசித்தாலன்றி இச்சாபந்தீராது என்று சபித்தது. அவ்வாறு சபித்தது ஆகாய கங்கையின் அரவத்தால் இவனுக்குக் கேட்கவில்லை. அதனால் இவன் பேசாமல் வந்துவிட்டான். அந்தச் சாபத்தால் இவனுக்குப் புத்திரப் பேறில்லாமற் போயிற்று. அங்ஙனம் பிள்ளைப்பேறில்லாமற் போகவே இந்தத் திலீபன் வசிஷ்டரைக் கண்டு எனக்குப் புத்திரப்பேறில்லாமற் போனதற்குக் காரணமென்ன என்று வினவினான். அதற்கு அவர் கபிலையின் சாபம் இவனுக்கேற்பட் டிருப்பதைக் கூறி கபிலையைப் பூசித்தாற்றான் புத்திரப்பேறுண்டாகும் என்று சொன்னார். அப்போது இவனிடத்தில் வசிஷ்டதேனு சமீபித்தது. அதைக் கண்டவுடன் இவன் இதுவே நற்சகுனமாம் என்று அதனை அன்று முதல் பூசித்து வந்தான். அங்ஙனம் பூஜித்துவரும் காலத்தில் ஒருநாள் அந்தப்பசு இமயமலைச்சாரலில் மேய்ந்துகொண்டிருக்கையில் கும்போதரன் என்னும் சிவகிங்கரன் திலீபனுடைய பக்தியைச் சோதிக்கும் பொருட்டுச் சிங்கத்தின் உருக்கொண்டு அந்தத் தேனுவைப் பிடித்துக் கொண்டான். அப்போது திலீபமன்னன் அங்கே சென்று சிங்கத்தை வதைக்க எண்ணி அம்பிற் கைபோட்டான். அப்போது கையானது அம்பை யெடுக்க முடியாமல் நின்றுவிட்டது. அவ்வாறாகவே திலீபன் சிங்கத்தினிடம் சென்று பசுவை விட்டு என்னைக்கொன்று தின்பாயாக என்று கூறினான். அப்போது சிங்கவடிவுகொண்டிருந்த கிங்கரன் தன்னுடைய யதார்த்த வடிவுகொண்டு திலீபனை நோக்கி, அரசனே, உன்னுடைய மனதைச் சோதிக்கும் பொருட்டு நான் இவ்வாறு செய்தனன் என்று பசுவை விட்டுச் சென்றான். அதன்மேல் திலீபன் தேனுவை வசிஷ்டாசிரமத்திற் கொண்டு போய்ச் சேர்த்தனன். இவன் இவ்வாறு சிங்கத்தினிட மகப்பட்ட பசுவுக்காகத் தன்னுயிர் கொடுக்கத் துணிந்ததே பேதைமையகற்றி உண்மை ஞானத்தோடு செய்த சிறந்த செய்கையாம். இவனுடைய புத்திரனே ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்த பகீரதன்—

சி. தங்கவேலு முதலியார், ஓர்லயன்பேட்டை, புதுவை.

வீண் விரயம்

ஆனமுதலி லதிகம் செலவானால் மானமழிந்து
மதிகெட்டு போனதிசை—எல்லார்க்கும்
கன்னலாய் எழ்பிறப்பும் தீயனாய் கல்லார்க்கும்
பொல்லனாம் நாடு.

என்பது யேர்கள் அறிந்த விஷயம் என்பதில் சந்தேகமில்லை. (வீண் விரயம்) என்னும் பதம். அநாவசியமான செலவு என்பதைக் குறிக்கிறது. செலவில் அவசியமான செலவு அநாவசியமான செலவு என இருவகை யுண்டென்பது அநுபவித்தோர்களே யறிவார்கள்.

அவசியமான செலவுகளைப் பற்றி நாம் யோசிக்கவேண்டிய தொன்றுமில்லை. அநாவசியமான செலவு எது என்பதைப்பற்றி சிறிது யோசிப்போமானால் நம்தேசம் அநேகமாய் முன்னுக்குவந்து உண்மையான செலவுகளுடன் எவ்வளவோ சிக்கனம் ஏற்பட்டு பொருள் சேகரிக்கக் கூடுமென்பது விசிதமாய் ஏற்படுகிறது.

சாதாரணமாய் 8 ரூபாய் வருமானம் உள்ள ஒரு குடும்பஸ்தன் தன் குடும்பத்திலுள்ள தாய், தந்தை, மனைவி, மக்கள் முதல் உறவினரையும் அதிதிகளையும் அடிக்கடி போஷிக்க வேண்டியவனாகிறான். அதற்குத்தகுந்த செலவு எவ்வளவோ அத்துடன் செலவழித்து அதிகசெலவு என்ன என்பதை யோசியாமல் தடுமாறியாகிற அநேகம் பெயர்களை பிரத்தியட்சத்தில் காண்கிறோம். அப்படி

செலவழிப்பவர் தனக்குமேற்பட்ட 20 ரூபாய் சம்பளத்திலுள்ள ஒருவர் செலவு செய்வதைப்போல் செய்ய உத்தேசித்தால் எங்ஙனம் மீறும். ஒரு கிராமத்திலிருந்து நகரத்துக்கு சாமான்கள் வாங்கப்போவானாகில், வீட்டுச்சாமான் செலவு வரையில் செய்துகொண்டு மிருதியிருந்தாலும் மற்ற முக்கிய செலவுகளுக்கு உபயோகிக்க மீத்தலாம். அப்படிக்கின்றி காப்பி ஓட்டல், டிராமா, மதுபானம் முதலியவற்றில் வீணே செலவழிக்க தூண்டப்படுகிறார்கள். இவைகள் இயற்கையா யமையாவிடினும், செயற்கைவாசனையினாலும் கெடுதல் ஏற்படுகிறது. காபிகிளப்பில் போனாலோ பசியின் நிமித்தம் ஒரு அணா மதிப்புடன் செலவழிக்க எண்ணங்கொண்டு உட்சென்று, இட்டிலி அல்லது, ஏதோ தின்பண்டம்கேட்டால் அவர்கள் 2 அணாவரையில் கொண்டுவந்து வைத்துவிடுகிறார்கள். நமக்குள்ள சபல சித்தம் தட்டாமல் வாங்கிக்கொண்டு, 1 அணாமதிப்பு சிலவேளை 4 அணா 6 அணாவரையிலும்கூட செலவாய்விடுகின்றன. இதனால் காப்பி ஓட்டலுக்குப் போகக்கூடாதென்பதல்ல. நாம் செலவுசெய்யவேண்டிய திட்டப்படி வந்துவிடல் உசிதம் அல்லவா. நாடகம்பார்த்தலும் உடுப்பு விஷயத்தில் அதிக மேன்மையானதாய் விரும்பிச் செலவிடலும், மதுபானமும் அனாவசியமான செலவேயாகும். அதனால் கெடுதலான குடும்பங்களைப்பற்றி நேயர்கள் அறிந்தே இருப்பீர்கள். காமப்பேய் கொண்டோர் வேசி, தாசிகளுக்கும், வீணே கொடுத்து நோயை சம்பாதித்துக் கொள்வதுடன், யாவராலும் இகழப்பட்டு பொருள் நஷ்டமும் அடைகிறார்கள்.

சுருக்கிக் கூறுமிடத்து அநேக விதங்களில் நமது பொருள்கள் வீணில் விரயமாகி அழிகின்றன என்பதை அநுபவித்தோர் பிரத்தியட்சத்தில் அறிகிறார்கள். பொருள் செலவுகளுடன் நில்லாது இவற்றிற் கனுகூலமாக மனம், வாக்கு, காயம் மூன்றும், வீணில் செலவாகின்றதும் யோசித்தால் ஏற்படும்.

தீச்செயல்களுக்கு உடன்பட்டபோது, மனதில் ஒன்று நினைத்து, வாக்கினால் ஒன்றுசொல்லி, நடத்தையில் வேறுமாதிரி நடக்கவேண்டியிருக்கிறது. அதிக வருமானம் உள்ளோர்களும், அநேகர் ஏதோ திட்டமானபடியல்லாது உண்மைச் செலவைவிட்டு பொருள் விரயம் செய்கிறார்கள். அந்தோ கல்வியாளரும், நன்னெறியுடையோரும், நாகரீகமுடையோரும பெருகிவரும் இத்தேசமானது வீண்செலவைநிறுத்தி, கல்வி, கைத்தொழில் விவசாயம், முதலிய பொதுஜன உபசாரவிஷயத்தில் ஊக்கங்கொண்டு மென்மேலும் விருத்திசெய்வார்களானால், ஏழையாயுள்ளோரும் தகுந்த செலவுடன் சிக்கனம்கொண்டு விருத்தியடைய மார்க்கம் உண்டாகும். அதன்படி விருத்தியடைய எல்லாம் வல்ல கடவுளை பிரார்த்திப்போமாக. சாதாரணமாய் நமக்கு நன்மையளிக்காது தீங்கிழைக்கும் வழியிலும் வீண்கேளிக்கையிலும் கடன்பட்டாவது எவ்வளவோ செலவழிக்கிறோம். பயனற்ற நாடகங்களிலும் பயாஸ்கோப் காட்சிகளிலும் நமது நாட்டில் எவ்வளவு பணம் ஒவ்வொருவர் செலவழிக்கின்றதைப் பார்க்கிறோம். அப்படிச்செய்யும் ஒரு நாட்செலவை வருடமொருமுறைவீந்து இரு பரமாண்டிற்கும் பயன்தரும் நல்ல விஷயத்தில் செலவழிக்க மயங்குகிறார்களே, இதென்ன காலக்கொடுமையோ! திருட்டாந்தமாய், எவ்வளவோ நன்மையைக்கருதி உலகில் ஏழையாயுள்ளோரும் ஸ்திரீகளும் கல்வி கற்றிலாதவரும்கூட வாசித்து உண்மை நெறி தவறாது நடக்க சிறு சந்தா சொகையைக் கொண்டு உலாவிவரும் ஆனந்தபோதினியை (வருஷம் 1 க்கு, ஒரு ரூபாய் மாத்திரம் அவரவர்கள் செலவில் சிக்கனம்செய்து) சஞ்சிகையை நேசித்து வருவோமானால் அதிகமான கல்வி விருத்தியும் தேச நன்மையும் ஆத்மவிருத்தியும் அடைவதோடு அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டு அதன்படி நடக்கவும்

பிரயத்தினப்பட்டு க்ஷேமத்தை யடைவோம் என்பதில் சந்தேகமில்லை. நேயர்கள் இது விஷயத்தில் நாட்டம் வைத்து வீண் விரயம் என்பதை நிறுத்தி, உண்மைச் செலவில் பிரவேசிக்க கடவுள் கடாக்ஷிப்பாராக.

N. கிருஷ்ணய்யர்.

பிராமணர்கள் கலியாணம்

பத்திரிகாசிரியர் அவர்கட்கு,

ஐயா, போனமாதத்து சஞ்சிகையில் இவ்விஷயத்தைப்பற்றி, கே. அனந்தாசாரியாரும், நீங்களும், தெளிவாக விரித்துரைத்தீர்கள். இக்கொடிய வழக்கம் பிராமணர்களிடத்தில் குடிகொண்டிருக்கிறதுபோலும், அனந்தாசார் சொல்லியபடி பிராமணர்களில் பெண்ணைப்பெற்றவன் பெரிய பாவத்தைச் செய்கிறான்; இப்படிப் பணம் வாங்குவது விவாகக் கலியாணங்களில் மாத்திரமல்ல, சாந்திக்கலியாணங்களிலும் நடந்து வருகிறது. எனக்குத் தெரிந்து நடந்த, பின் வரும் இரண்டு விஷயங்களைச் சற்று தயவுசெய்து கேளுங்கள்.

1. ச.....ன் என்ற வாலிபன் பீ. ஏ. பரிட்சைக்குப் படிக்கிறான். அவனுக்கு இருப்பிடம் மாயவரத்திற் கருகிலுள்ள ஓர் கிராமம். தகப்பனாரிறந்து விட்டபடியால் குடும்பக்காரியங்களையும் தானே பார்த்தும் படித்தும் வருகிறான். இவன் மாமனார், பெண் புஷ்பவதியா இரண்டுவருஷங்களாய் விட்டபடியால், இனிமேல் சாந்திமுகூர்த்தத்தை ஒத்திவைப்பது நன்றன்று என்று பன்முறை சொல்லியதற்கு சொக்கமாய் இரண்டாயிர ரூபாய் கொடுத்தாலொழிய கலியாணம் செய்துகொள்ள முடியாதென்று கண்டித்துச் சொல்லி மாமனாரை ஊருக்கனுப்பிவிட்டான்.

2. எனக்குத்தெரிந்த மற்றொருவர் கும்பகோணத்துக்கடுத்த கோ.....ம் என்ற ஊரிலிருக்கிறார், இப்புண்யபிரபு 3000 ரூ. கொடுத்தாலொழிய சாந்திக் கலியாணம் செய்துகொள்ள முடியாதென்று கண்டித்தார். தைரியமுள்ள அவன் மாமனார், நீ கலியாணம் செய்துகொண்டாலும்சரி, இல்லாவிட்டாலும் சரி, என்பெண்ணிற்கு உன்வீட்டில் வந்திருப்பதற்கு தக்கவயதாகிவிட்டது. இனிமேல் இங்குதானிருக்கவேண்டும் என்று சொல்லி, கண்ணீர்விட்டு அழும் பெண்ணை அவன் வீட்டிலேயே விட்டுவிட்டு, வருத்தத்துடன் ஊர்போய்ச் சேர்ந்தார்.

இக்கொடிய செய்கைகளுக்குக் காரணம் யாது? பணப்பேயே! பணப்பேயே! படித்தும் புத்திவரவில்லையா? இந்தியா காகரீகம் நிறைந்த நாடு என்கிறார்களே! இதுதானா காகரீகம்! இதுதானா சீர்திருத்தம்! நமக்குப் பகுத்தறிவில்லையா! நம்காட்டைவிட்டு இக்கொடிய வழக்கங்கள் எப்பொழுது நீங்குமோ, அப்பொழுதுதான் நமக்கு க்ஷேமம் என்பது கிடைக்கும்.

இக்கொடிய செயல்களைப் போக்கடிக்கமுயலும் 'ஆனந்தபோதினி' நீடித்து வாழக் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

வி. சந்தானம், பாடநாகம்

குறிப்பு:—கலியாணத்திற்குப் பணம் கேட்பதைவிட இது கேவலம் அநீதமானதோடு மிக்க வெட்கக்கேடானதாயிருக்கிறது. அக்னிசாட்சியாகத் தான் ஒரு கன்னிகையை வரித்தவிட்டப்பிறகு, அவனோடு கூடிவாழக் கூலிகேட்பது அறிவிலியின் செய்கையாவதோடு மானமற்றவனுடைய செய்கையேயாகும். இன்னொருவர் வேண்டாமென்று தடுத்தாலும் தான் தன் சொந்த உரிமையைக்

காட்டி தன்மனையாளைத் தன்மனையிருத்தி யவளோடு நகமும் சதையும்போல் ஒட்டி யொருமனப்பட்டு வாழவேண்டுமென்று ஆவல்கொள்ளவேண்டியது ஆறறிவுடைய ஒவ்வொரு மனிதனும் கொள்ளவேண்டிய இயற்கைக் குணமாயிருக்கிறது. அது கடவுளாலேயே யமைக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய இயற்கையையும் மீறி அதற்குக் கூலிகேட்பது எவ்வளவு மானக்கேடான செய்கை யென்பதை கல்வியில்லாமூடனும் உணர்வானெனின் பி-ஏ, யப்-ஏ விற்கு படிக்கும் வாலிபர் உணராதிருப்பது கலிகாலக்கொடுமையே. ஆனால் இதிலும் ஒரு நன்மை யிருக்கிறது. அதாவது இத்தகைய புண்யபுருடர்களால் "வயிற்றுப் படிப்பிற்குக் கற்கும் ஆங்கிலக் கல்வியை யெவ்வளவு படித்தாலும் ஞான மணம் பூண்ட மெய்யறிவு உதிப்பதேயில்லை" என்ற உண்மை நன்கு நிரூபிக்கப்படுகிறது. உண்மையில் இதைப்பற்றி யின்னு மெழுதுவதெனின் கைகூசுவதோடு ஜடப்பொருளாகிய பேனாவும் கூசிக் கிருக்கலிடுகிறது.

2. ஓ! அந்தணசிரோன்மணிகளே! இன்று வாலிபராயிருப்போரே நாளைக்குப் பெரியமனிதர். ஆகையால் இது குலத்திற்கே இழிசொல்லை யுண்டாக்கும் ஒரு செயலாயிருப்பதால் இன்னமும் இதை யொழிக்க வழிதேடாதிருப்பது குலதர்ம மாகாது. நாம் முன் கூறியதைப்போல் பத்திரிகையில் எழுதுவதால்மட்டும் பயனில்லை. நமது சஞ்சிகைக்குச் சந்தாதாரராயிருந்து இதை யாதரிப்போர்களில் ஆயிரக்கணக்கான அந்தணர் இருக்கிறார்கள். இவர்களில் ஜாதியபிமானமும், காருண்யமும் உடைய அறிவாளிகளில் சிலர் முன்னுக்கு வந்து இதற்காகவென்று ஒரு சபை கூட்டி முயல்வார்களென்று பூரணமாய் நம்பி எதிர்பார்க்கிறோம்.

முன்பாகத்தில் அத்தகை வாலிபரைப்பற்றி நாம் கடிந்துகூறியதாகச் சிலர் கருதலாகும். ஆனால் அது உண்மையானது. நாம் கூறியவாறு பலரும் சிந்திக்கத்தக்க விஷயமேயது. அதோடு அச்செயல் குலத்திற்கு இழிபெயரைக் கொண்டுவரத்தக்கதாலும் பலருக்கு யிக்க மனோவருத்தத்தை யுண்டாக்கத் தக்கதாலும் அதைக்கண்டித்துக் கூறவேண்டியது நமது கடமையாதலால், அதற்காக நம்மை மன்னிக்க வேண்டியதும் அவர்களுடைய கடமையாகவே யிருக்கிறது.

பத்திரிகாசிரியர்

" அறஞ்செய விரும்பு "

என்பது நம தருமை யன்னையாரது திருவாக்கு. இதற்கு 'தருமம் செய்ய விரும்பு' என்று பொருள் படும் 'அரிதரிது மானிடராத லரிது' என்றதற்கேற்ப அரிதாகிய இம்மானிடப் பிறவியைப் பெற்ற நாம் பிறருக்கு உதவி புரிந்து வாழ்தலே சிறப்பு. பசு பக்ஷி மிருகாதிகளும் ஒன்றுக் கொன்று உதவி புரிந்து ஜீவிக்கின்றன வென்றால், மனிதருக்கு அதன் ஆவசியத்தைப்பற்றி வற்புறுத்திக் கூறுதல் வேண்டா. அவ்விதம் நாம் பிறருக்குச் செய்யு முதவி பிரதி பலனைக் கோராதிருத்தலே தருமமாகும். அத்தருமம் மனம் வாக்கு காயம் என்னும் மூன்று காரணங்களாலும், செய்யற்பாலது ஒரு காரியத்தைப்பற்றி நமது வாயினாற் சொல்லுவதற்கும், செய்கையாற் செய்வதற்கும் முன்னர் நம் மனத்தால் சிந்திக்கிறோம். அவ்விதம் சிந்தித்த பின்னரே அக்காரியம் சொல்லவும் செய்யவும் படுகிறதென்பதால், ஒன்றைச் செய்வதற்கு மனமே முதற்காரண மென்பது தேற்றம். மேலும் ஒன்றின்மேல் மனதிலிருப்பம் வைத்தால் அதை யெவ்வகையிலும் அடைவதற்கே முயற்சிசெய்வது ஜீவர்களின் இயற்கையான குணமாயிருக்கிறது முயற்சி செய்தால் முடியாத

தொன்றில்லையன்றோ? இதனால் ஒருவன் ஒருகாரியத்தைச் செய்வதற்கும் ஒரு பொருளையடைவதற்கும் அதில் விருப்பம்சனிப்பதே முக்கியவசியமானகாரண மாயிருக்கிறதென்பது விளங்குவதைக் குறித்தே, நம்மன்னையார் அறத்தைச் செய் என்னாது செய்ய விரும்பு என்று கூறியிருக்கிறாரென்பது குறிப்பிடத் தக்கது. "ஒல்லும் வகையா னறவினை யோவாதே, சொல்லும் வா யெல்லாஞ் செயல்" என்றபடி மனம் வாக்கு காயம் என்பவற்றால் முறையே நற்சிந்தை, நற்சொல், நற்செயலோடுங்கூடி தருமஞ் செய்யவேண்டுவது முக்கிய மாகும். பின்னும் அறத்தைச் செய்து சிறப்படைய வேண்டின் அன்பைப் பூண்டொழுக வேண்டுவ தாவசியம். (அன்பு இல்லார் தேகத்தை யென்பு தோல் போர்த்த வடம்பென வின்னோ ரன்றோர்) அவ்விதம் அன்பே யுருவமா யமைந்துள்ளா ருக்கு அவ்வன்பே யவரைப் பிறரிடம் இரக்க முறச் செய்து தருமம் செய்வ தற்குத் துண்டக் கூடியதாகும். அங்ஙனஞ் செய்யும் தருமத்தால் இம்மையில் பல்வகைச் சிறப்பும், மறுமையில் நற்கதியும் பெறுவாமென்பது திண்ணம். இக்கருத்தையே "சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்—காக்க மெவனோ வுயிர்க்கு" என்னும் நந்தம் நாயனாரது வாக்கும் கண்கு விளக்கா நிற்கிறது. தர்மத்தைக் கடைப்பிடித்தொழுகியவர்கள் இறந்து பட்ட பின்னரும் உலகில் புகழுடம்பைப்பெற்று விளங்குவார். நாம் தருமஞ் செய்யோமேயாகில் பெறு தற்கரிதாய இம்மக்கட் பிறவியைப் பெற்றதனால் யாதொரு பயனு மில்லை. இக் கருத்தையே பின்வரும் செய்யுளும் விளக்குவதைக் காண்க.

"அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு." (நாலடியார்)

நிலையில்லாத் தன்மையைப் பூண்ட இவ்வாக்கை நிலையற்றதென்பதை யுன்னி நம்ஜீவிய காலத்தில் நாம் பெற்ற பொருளைக்கொண்டு நம்மாற் கூடிய தருமஞ் செய்யவேண்டுவது நமது கடமை. பின்னும் யாதாயினுமொருபொருள் நம்கையிற் கிடைக்கப்பெற்றால், பின் (நாளைக்குக்) கொடுத்துதவுவோமென்று அப் பொருளை வைத்திராது அப்பொழுதே கொடுத்துதவுதல் வேண்டும். இன்றேல் நாளை யென்றது நமனுடைய நாளே யாயினு மாகும்.

"அன்றிறவா மென்று தருஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை." (குறள்)

சிலர் தருமஞ் செய்வதற்குத் தம்மிடத்துப் பொருளில்லை யென்பர். அது முற்றும் பிசகு. பெரும் பொருளைச் சம்பாதித்தே தருமம்செய்யவேண்டுமென்ப தில்லை. நமது சக்தியானு சாரஞ் செய்தல்கூடும். தருமஞ் செய்யவேண்டு மென்னுங் கருத்தைக் கொண்டவர் எத்தகைத்தஞ் செய்வார். இதை வலி யுறுத்தியே பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"ஆற்றப் பெருக்கற் றடிகடுமென் றஞ்ஞமவா
றூற்றுப் பெருக்கா லுலகுகூட்டும்—எற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராகுலும்
இல்லையென மாட்டா ரிரைக்கு." (நல்வழி)

பொருளொன்றிருக்கா லன்றி பிறருக் குதவியாய தருமஞ் செய்வதற் கியலாதெனனுங் கூற்றை யொழித்து, பொருட்செலவின்றியே நாம் பிறருக் குதவியாய தருமத்தை வாக்காலும் காயத்தாலும் செய்தல் கூடுமென்று கூறுதல் தகுதி யாகாது.

'பாத்திர மறிந்து பிக்ஷையிடு' என்றபடி சத்பாத்திரமறிந்தும் காலமறி ந்தும் தருமஞ் செய்ய வேண்டும். 'பாம்புக்குப் பால் வார்த்தாலும் பழுதினும் கன்மைதரா' தென்றபடி நாம் தீயோர்க்குச் செய்யும் தருமத்தால் நமக்குக் கெடுதி விளைவதுமன்றி, உலகோர்க்கும் பெருந் தீங்கு புரிந்த பாபத்திற் கானா வோம்.

பஞ்சாலத்தில் உணவும், சுபிக்ஷமான காலத்தில் பொருளும், குளிர்காலத்தில் வஸ்திரமும், கிரீஷ்மகாலத்தில் காற்றும் ஜலமும், வெய்யிற் காலத்தில் குடையும் பாதரக்ஷைகளும், பயப்படும் சமயத்தில் அபயமளித்தலும், இவ்விதம் அவ்வக்காலத்திற்கு ஏற்ற வுதவிகளைச் சிறப்பான்மை செய்தபோதி லும், அவ்வளவு பெரிதாகும். இதையே "காலத்தி னாற்செய்த நன்றி சிறி தெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது." எனச் சுருக்கச் சொல்லி விளங்க வைத்தார் நாயனாரும். நீத்த எற்கனவே கூறியுள்ளபடி பிரதிபலனை யெதிர் பார்த்துச் செய்யுமுதவி தருமமன்றாகிவிடுதலின்மை. இச்சமயமிருக்கச் சிலர் பெருமைக்காகவே பிறர் தம்மை மதிக்குமாறு படாடோபத்துடன் தருமஞ் செய் கின்றனர். அதனால் யாதொரு பயனுமில்லை. ஏனெனில் தாம் செய்யுந் தரு மத்திற்குப் பிரதிபலனாகப் பிறரது மதிப்பை எதிர்பார்க்கிறோமன்றோ? ஆதலின் நாம் செய்யும் தருமம் பிறரறியவேண்டுமென்று நினைக்கலாகாது. ஆயின் நம்மாற்செய்யப்படும் பிரதி தருமமாகிய கருமமும் இரகசியமாகவே யிருக்கவேண்டுமென்றல்ல. உள்ளத்தில் பிறரறியவேண்டுமென்னு மாசை யின்றி செய்யப்பட வேண்டுமென்பதே கருத்து.

நாம் தருமஞ் செய்வதற்குப் பிறர்வந்து நம்மிடம் யாசிக்கவேண்டுமென் றெதிர்பார்க்க வேண்டுவதில்லை யென்றார் பெரியோர். ஒருவனுக்குப் பிற ருதவிவேண்டுமென்று தெரிந்தால் உடனே யவனுக்கு நம்மாற்கூடிய உதவி செய்ய முன்வரவேண்டும். மேலும் கூன், குருடு, செவிடு, நொண்டி முதலிய அங்கவீனர்களைக்கண்டால் அவருக்கேற்ற உதவிபுரிதல் அவசியமாகும். ஒரு வன் வேலைசெய்து ஜீவிக்கச் சக்தியற்றுப் பட்டினியிருக்கக் கண்டால் அவனுக் குடனே உணவளித்து ஆதரிக்கவேண்டும். இவ்விதம் செய்து முதல் நமக்குச் சிறிதாகத் தோன்றியபோதிலும் ஆதரவு பெறுபவனுக்கு அதுவே மக்க பெரி தாகத் தோன்றும். யானையின் உணவுக்காக வைக்கப்படும் அரிசியில் ஓர் பிடியரிசி கீழே சிந்திவிடுதலால் யானைக்கு யாதொரு லக்ஷியமுமில்லை. ஆயினு மவ்விதம் சிந்திய அரிசியே பல்லாயிர மெறும்புகளுக்கு நிறைந்த உணவாகிற தன்றோ?

தாய் தந்தையரைத் தவிட்டுக் கலையவிட்டு, தனயன் தர்மசத்திரங்கட்டி யதையொக்க, நமக்குச் சமீபத்தில் நமது பந்துவர்க்கத்தார் பலர் குடிகக் கூழின்றி வருந்தாநிற்க, நாம் தர்மசத்திரங்கட்டி அறச்சாலையுண்டிகளைப் பிறருக் களித்தவண்ணம் யாதொரு பயனுமில்லை. பின்னுஞ் சிலர் இரப்பவரிடமும் படா டோபத்துடனிரப்பவருக்கே, தருமம் செய்கிறாரென்னல், அவர் தம் தருமச்சிந் தையால் யாதொருபயனுண்டோ? இல்லை. ஒருபண்டிதர்சுதைத் துணிகளை யுடுத்து ஓர்பிரபுவினிடஞ்சென்று முதல்நாள் யாசித்த அப்பிரபு இவ்வா மதிக்காதொழிந்ததாகவும், மறுநாள் கலை வஸ்திராபரணங்களைப் பூண்டு சென்ற போது அப்பண்டிதரை யப்பிரபு எதிர்கொண்டழைத் துபசரித்ததாகவும், அச் சமயம் பண்டிதர் இவ்வுபசாரங்கள் எனக்கன்று நான் அணிந்திருக்கு மிவ்வாடை யாபரணங்களுக்கே யாகுமென் றியம்பியதாகவு மோர் கதையுண்டு. இவ்வித மின்றி இரப்பவர்க் கில்லையென்னாது சுவதே சிறப்பாகும். பின்னுஞ் சமீபத் தில் காலஞ்சென்ற பிராமணனொருவரது குமாரன் தன் தந்தையின் சிரார்த்தம்

தானஞ்செய்யக்கருதிய பசுவைத் தன்மைத்துனனுக்கேகொடுத்தால் தன்னுடன் பிறந்தாளுக்காகுமெனக்கொண்டு தானஞ் செய்ததைக் கண்டோம். சோதரர்களே! இத்தகைய தருமத்தால் யாதுபயனோ நீங்களே சிந்தியுங்கள். நிற்க, உலகத்தில் செய்யப்படும் தருமங்கள் பலவும் முப்பத்திரண்டுவகைக்குள் ளடங்குமென பெரியோர் வரையறுத்துக் கூறியிருக்கின்றனர். அவை ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச்சோறு, நெய்ம், திண்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்க்குமருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணை, பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏமவிடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம் என்பன. இங்கு "அழுக்காறவா வெகுளி பின்னுச்சொன்னன்கு மிழுக்காவியன்றதறம்" என்றபடி பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல், இந்நான்கையும் நீக்கி நடப்பதே தருமமாயதென்பதை நன்கு கவனிக்கத்தக்கது. ஆதலின் இவைகளைச் சிந்தித்து நாம் பெற்ற அறிவாற்றல்களின் பயனாய் இயன்றவரை யறத்தையியற்றி மேன்மையுறவேண்டுவது நம்மனோர் முக்கியகடமையென்பதையென்றும் மறக்கற்பாலதன்றென்னுங் கருத்தையே நம்மன்னையாரது, 'அறஞ்செயவிரும்பு' என்னும் வாக்கியம் பெரிதும் விளக்கா நிற்கிறதென்பதை யுணர்ந்தொழுகுவோமாக.

சுபம்.

என். வேங்கடராமன், ஸ்கூல்மாஸ்டர்
ஓடகம்பாளையம், மாமண்டிபோஸ்டு
சேலம் ஜில்லா.

கோபத்தைக் கொல்வதெப்படி?

(இது பிரம்மஸ்ரீ நடராஜய்யர் அவர்களால் வெளியிட்டு வந்த "ஞான சந்திரிகா" என்ற பத்திரிகையி லிருந்தெடுத் தெழுதப்பட்டது)

ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமி யென்பவர் தாம் செய்துள்ள "ஜீவன் முக்தி பிரகரணம்" என்னும் சிரந்தத்தில் முமுட்சுக்கள் (=மோக்ஷத்தை அடைய எத்தனப்படுகிறவர்கள்) கோபத்தைக் கொல்லும் வழியைக் கூறியிருக்கிறார்.

யாரிடமாவது உனக்குக் கோபம் உண்டானால் உடனே உன்னுடைய மனதை நோக்கிப் பின் வருமாறு சில கேள்விகளைப் போடு:—"ஏ மனமே, உனக்குத் தீங்கு செய்கிறவர்களிடம் உனக்குக் கோபம் உண்டானால் கோபத்தினிடம் உனக்கு என் கோபம் வரவில்லை? ஏனெனில் கோபம் மிகுந்த கேட்டை விளைக்கிறது. அது தர்மார்த்த காம மோக்ஷமென்னும் சதுர்விதபுருஷார்த்தங்களையும் மனுஷ்யன் அடைவதற்குத் தடை செய்கிறது. ஆதலின் கோபத்தைப்போல் மனுஷனுக்குக் கொடுமையுள்ள சத்துரு வெறொன்றில்லை. இப்படியாக நீ யோசித்துப் பார்த்தால் கோபத்தினிடம் உனக்கு மிகுந்த கோபம் உண்டாகும். கோபத்தை ஜெயித்தவனே மோக்ஷத்தை யடைவான். ஒருவரை நிந்திக்கவும் அடிக்கவும் தொடங்கும்படியான அத்தனை கோபம் ஒரு மனுஷனுக்கு உண்டானால் உடனே அவன் செய்த தருமமும் அவனுக்குண்டான கீர்த்தியும் குலைந்து போகின்றன. இவ்வளவு தூரம் கோபம் விர்த்தி யடையாவிட்டால் மனதையாவது எரித்து விடுகிறது. இங்கேயும் அங்கேயும் இவ்வளவு துன்பத்தை விளைவிக்கும் கொடிய குணமாகிய கோபத்தை நல்லவர் ஏன் எப்படி கொள்ளலாம்.

பிறர் உன்பேரில் கோபம் கொள்ளும்போது நீ 'நான் ஒரு தப்பிதமும் செய்யவில்லையே' என்று நினைத்து, அவர்களிடம் கோபம் கொள்ளுகிறாய். அதுகூடாது. நீ இன்னும் ஸ்தூல, சூக்ஷ்ம, காரணமாகிய மூன்றுசரீரங்களையும் விட்டு ஞானத்தை அடையாம லிருப்பது உன் பேரில் பெரியதுற்றமல்லவா?

நம்மைக் கோபிப்பவர்களை நாம் நமக்கு உற்ற நண்பர்களாகப் பாவிக்க வேண்டும். அவர்கள் நமது பேரில் கோபம் கொள்வதால் நம்முடைய குற்றங்களை நமக்கு அறிவித்து நமது வைராக்கியத்தைப் பலப்படுத்துகின்றனர். நமக்கு இவ்வளவு உபகாரம் செய்யவேண்டி ஸமாதான நிலைமையிலிருந்த தங்கள் மனதைக் கோபித்தால் சுட்டெரிக்கும் அவர்களிடம் நாம் மிக்க நன்றி பாராட்ட வேண்டாமா?

ப. மெய்யப்பன், விருதுபட்டி.

ஓர் பிரார்த்தனை

சுயநலங் கருதாது பொதுநலங்கருதி உலகிற் பிரசுரமாகி வருகிற பத்திரிகைகளில் "ஆனந்தபோதினி" இகத்திற்கும் பரத்திற்கும் நாம் சேகரிக்க வேண்டிய அரும்பெரும் விஷயங்களை ஆரம்பமுதலிதுவரையும் மாதந்திற்கொருமுறை நம்மில் ஒவ்வொருவரையும் சந்தித்து அஞ்ஞானமெனு மிருளையகற்றி மெய்ஞ்ஞானமெனும் ஒளியை யடையு மார்க்கத்தைப் போதித்து வருகின்றது.

இதனை அன்புடன் ஆதரித்து வருகிற சந்தாநேயர்களும், யாதொரு கைம்மாறும் கருதாமல் விஷயதானம் புரிந்து வருகிற பண்டித சிரோமணிகளாகிய பெரியோர்களும் இவ்வானந்தபோதினி மாதமிருமுறை வந்தவாவதைக் காண்பதற்கு எதிர்நோக்கமா யிருக்கிறார்கள். இதற்கு இருமடங்கு சந்தா ஏவதற்குப் பின்னடைய மாட்டார்களென்பதற்கு இப்பத்திரிகைகளின் போதனைகளும் சொற்ப சந்தாவுமே சாட்சி கூறுகின்றன. ஆனதுபற்றி லோகோபகாரிகளாகிய பத்திராதிபரவர்களும், ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களும் இதற்காக வேண்டிய ஏற்பாடுகளைக் கூடிய விரைவில் செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாய் நம் எல்லோருக்கும் நீடிய ஆயுளைத்தந்து காப்பாற்றி ஆதரிக்க எல்லாம் வல்ல இறைவனின் கமல பொற்பாதங்களை யணுதினமு மறவாமல் பிரார்த்தனை செய்துவரும் சந்தாதாரர்களில் ஒருவனாகிய

D. A. Fernando Veyanpada, Ceylon.

குறிப்பு:—நமது சஞ்சிகையின் தரவிர்த்தியைக் கோரி சிரமம் எடுத்துக் கொள்ளும் நன்முயற்சிக்காக நமது நண்பருக்கு மிக்க வந்தனமளிக்கிறோம். நமது சந்தாநேயர்களனைவருமே சஞ்சிகையின் விஷயத்தில் மிக்க அன்பு கொண்டு ஒழுகுவதே நமக்கு மனத்திருப்தியையும் உற்சாகத்தையும் அளிக்கிறது. இப்போதிருக்கும் காகிதம் முதலிய அச்சுக்கருவிகளின் விலையேற்றத்தைக் கருதி சந்தாவை உயர்த்தும்படி அனேக சந்தாநேயர்கள் நமக்கு எழுதுகிறார்கள். உயர்த்தவேண்டியது அவசியமானதும் நியாயமானதுமாகவே யிருக்கிறது. ஆயினும் சந்தாவை உயர்த்தவாவது பக்கங்களைக் குறைக்கவாவது நமக்கு இன்னும் மனம் உடன்படவில்லை. உண்மையில் இதிலுள்ள செலவையும், தாய்ப்பாலைபோன்ற அருமையையும் உணர்ந்த அறிவாளிகள் சந்தாவை யுயர்த்தும்படி கோருகிறார்கள். இன்னும் எழுதாதவர்களில் பலரும் அதற்கு மன

முவந்து ஒத்துக்கொள்வார்களெனினும், நம்மவரிற் பெரும்பாலார் இன்னும் உண்மையை அறியும் சக்தியில்லாதவர்களாகவே யிருப்பதால், அத்தகையோர் இச்சொல்ப சந்தாவையே அதிகமாய்க் கருதும் மனோநிலைமை யுடையவர்களாக யிருப்பார்கள். சஞ்சிகையைப் பெரிதாக்கலாமென்பது ஒருயோசனை. அதற்கு இரண்டொரு சௌகரியங்களை முன்னுடி சேகரிக்கவேண்டி யிருக்கிறது. அதை யுத்தேசித்தே இவ்வருடம் சந்தாதாரர்கள் சந்தா தொகையை ஜூன்மீ 30உக்குள் மணியார்டர் மூலமாய் அனுப்பி யுதவும்படி பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம். மும்முறையும் பிரார்த்திக்கிறோம். இது கைகூடின் பிறகு கலபமாய் மாதமிருமுறையாக்கக் கூடும்

சந்தாதாரர்கள் இப்பேருதவியைப் புரிந்து தமது நண்பர்களில் ஒவ்வொருவராயேனும் சந்தாதாராய்ச் சேர்த்தால் நமது நோக்கம் பூரணமாய் நிறைவேறும்படி ஆண்டவன் கிருபை புரிவார் என்பதிற் சந்தேகமில்லை. ஒவ்வொரு சந்தாதாரரும் நாம் ஒருவன்மட்டும் பேசாமலிருந்தால் என்ன கெட்டுப்போயிற்று எனக்கருதி மௌனமா யிருந்துவிட்டால், நம்தெண்ணம் எப்படி நிறைவேறும்? பலபேர் கைகட்டினாலன்றி தோஷம் நினம்பாது. ஆகையால் ஒவ்வொரு சந்தாதாரும் நாம் ஒருவனே உதவிசெய்கிறோம் என்று கருதி, எப்படியும் பின்னால் கொடுக்கும் ஒரு ரூபாயை முன்னுடி யனுப்பி யிப்பேருதவியைச் செய்யப் பிரார்த்திக்கிறோம். மனம்வைத்தால் இது கலபமாகவே நடக்கக்கூடிய விஷயம் என்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம்.

பத்திராசிரியர்.

மாணவர் பக்கம்

(434-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களாகிய சகோதரர்களே!

வாசித்து முடிந்தபின் என்னசெய்வது என்பதைப்பற்றி கடந்த இரண்டு சஞ்சிகைகளிலும் கூறிவந்தோம். இச்சஞ்சிகையில் அந்த விஷயத்தை முடிக்கப் போகிறோம். இவ்விஷயம் நீங்கள் நன்றாயுணர்ந்து மனதில்வைத்து அவ்வாறே அநுசியம் நடந்துகொள்ளவேண்டிய விஷயம். ஆகையால் முன் இரண்டு சஞ்சிகைகளிலும் கூறப்பட்ட விஷயங்களை மறுபடி வாசித்துப் பிறகு மறுபடி இங்கு கூறப்பட்டதோடு சேர்த்து ஒரே கோர்வையாய் வாசித்து, நன்றாய் மனதில் சேர்த்து வைத்துக்கொண்டு, இவற்றின்படி நடந்துகொள்வீர்களானால் நீங்கள் நல்ல கௌரவமும், கீர்த்தியும் திரண்ட செல்வமும் சந்தோஷமும் அடைவீர்கள். நம் தாயகமும் முன்னுக்குவரும். நாம் இவ்வளவுதூரம் உங்களை வேண்டிக்கொள்வதை யலட்சியம் செய்யமாட்டீர்களென்று பூரணமாய் நம்புகிறோம். நான்கு விஷயம் வருமாறு:—

இன்னும் உத்தியோகத்தில் பலவிதத் துன்பங்கள் உண்டு. ஒவ்வொரு மேல் அதிகாரி துர்போக்கியனாகவும், முன் கோபியாகவும், துஷ்டனாகவும் இருக்கிறான். அவனிடம் நினம் தப்பிலாதவனது புலிவாயிலிருந்து வருவதுபோன்றிருக்கும். வெளியிலுள்ளோர் அவன் கௌரவமாய் உத்தியோகம் செய்துவிட்டு வருவதாய் நினைக்கிறார்கள். பாபம்! அவன் மனதிலுள்ள நிலையும் வேதனையும் கடவுளேயறிவார். அத்தகைய எஜமானன் துர்ப்பாஷையால் வைதாலும், குற்றமல்லாததைக் குற்றமெனினும், செய்ய மனம் ஒப்பாததைச் செய்யெனினும், எல்லாவற்றிற்கும் சம்மதப்பட்டே யிருக்கவேண்டும். இன்றி மேல் அதிகாரியிடம் நியாயத்திற்குச் சென்றாயோ, உன் எஜமானன் பேசசே நம்பப்படுமன்றி உன்வார்த்தை சற்றும் நம்பப்படாது. நீயே மேல் அதிகாரிக் கடங்கி நடவாததுஷ்டன் என்று பட்டம் சூட்டப்பட்டு தண்டனையு மடைவாய்.

உன் மேலதிகாரிக்கும் அவனுடைய மேலதிகாரிக்கும் விரோதம் நேரிட்டுவிட்டால் இருவர் கோபத்திற்கு மிடையில் உன்தலை நசுக்கப்பட்டுப்போம். எப்படியெனில், உன் எஜமானனுடைய மேலதிகாரி உனக்கு ஒரு கட்டளையிட்டால் உன் எஜமானன் "நீ யதைச் செய்யவேண்டாம். என் கட்டளைப்படி நடப்பதே யுன்கடமை" என்று கூறுகிறான். அப்போது நீ யென்ன செய்வாய்? இருதலைக் கொள்ளியிடை யெறும்புபோல் ஆபிற்று உன்கதி. சரி, நமது எஜமானுக்கு மேல் அதிகாரியின் சொற்படி நடப்பதுதான் கெடுதிவராத வழியென்று அப்படியே நடந்தாயோ, பிறகு உன் எஜமானன் இதை மனதில் வைத்திருந்து எப்படியும் உனக்குத் தீங்குசெய்துவிடுவான். அதைவிட்டு நமது எஜமானன் சொற்படி நடப்போம் என்று நடந்தாயோ, உடனே அவனுடைய மேல் அதிகாரி, நீங்கள் இருவரும் ஒருமனதாய்ச் சேர்ந்து தன் கட்டளையை யலட்சியம் செய்ததாய் இருவர்மேலும் குற்றம்சாட்டி தனக்கும் மேல் அதிகாரிக்கறுப்பிவிடுவான். இதில் உன்மேல் அதிகாரி இடம் மாறுதல் அல்லது அவனுக்குக் கிடைக்கவேண்டிய விடுமுறை (லீவ்) யைத்தராது சில நாட்கள் ஆலசியம் செய்தால் முதலிய சொல்பதண்டனையோடு தப்பித்துக்கொள்வான். உன் கதியோ அதோ கதிதான்.

இன்னும் இதில் பல தொல்லைகளுண்டு. ஒவ்வொன்றையும் விவரித்து அத்தாட்சியோடு கூறலாகும். ஆனால் சஞ்சிகையில் அதிக இடம் கொள்ளுமென்றஞ்சி சுருக்கமாய்க்கூறி முடிக்கவேண்டி யிருக்கிறது.

நண்பர்களே! மற்ற தொழில்களில் இத்தகைய கஷ்டங்கள் ஒன்றேனுமில்லை, உத்தியோகத்தில் ஒவ்வொரு சமயம் மனமறிந்தே பொய்சொல்லவும், ஒருவர்க்குத் தீங்குசெய்யவும், மனசாட்சிக்கு ஒப்பாததைசசெய்யவும், வேறு பலவிதப் பாபச்செயல்களைச் செய்யவும் கட்டாயப் படுத்தப்படுகிறான். ஏனெனில் அப்படிச் செய்யாவிடின் தனக்கே ஆபத்தாய் முடியும்போலிருக்கிறது. போலீஸ் இலாகாவிலும் இன்னும் இரண்டொரு இலாகாக்களிலு முள்ளவர்கள் இவ்வுண்மையை யனுபவமா யறிவார்கள். மற்ற தொழிலாளிகளுக்கு இத்தகைய இக்கட்டுகள் நேர்ட வழியில்லை. அவர்கள் மனம்வைத்தால் மனசாக்ஷிக்கு விரோதமில்லாத வழியில் ஸ்திரமாய் நின்று பொருள் சம்பாதிக்கலாகும்.

மாஜிஸ்டிரேட் முதலியவர்கள் அதிகாரத்தோடும் ஒருவிக சுயாதீனத்தோடும் இருக்கவில்லையோ என்று கருதுகிறீர்களோ?

சற்று நிதானித்துப்பார்த்தால் அந்த அதிகாரம் தெரியும். உண்மையில் கலெக்டர் முதல் எவர்களும் மற்ற உத்தியோகஸ்தரைப்போல் கூலிக்கு வேலை செய்கிறவர்களே யாகும். அவர்களுக்கு ஒரு அதிகாரமில்லை. அவர்கள் தங்களுக்கு அதிகாரமிருப்பதாய்க் கருதினால் அது மூடநம்பிக்கையேயாகும்.

ஒரு பிரபு ஒரு சத்திரத்தைக் கட்டினார். அந்தவேலையில் கிஷ்கிந்தைக்கெல்லாம் தலைவனாயிருந்தவன் தன் சிநேகன் ஒருவன் வந்தபோது "இந்தச் சத்திரம் நான்தான் கட்டினேன்" என்கிறான்.

இதைப்போலும், மரணதண்டனை யடைகிறவர்களைத் தூக்கிற்போடும் அல்லது சிரச்சேதம் செய்யும் சக்கிலி சனங்களைக்கொல்லத் தனக்கு அதிகாரமிருப்பதாய்க் கருதுவதுபோலுமே அவர்கள் தங்களுக் கதிகாரம் இருப்பதாய்க் கருதுவது.

ஒருவனுக்கு அதிகார மிருக்கிறதென்றால் அவன் இஷ்டப்படி அந்த அதிகாரத்தைச் செலுத்தக் கூடியவனாயிருக்கவேண்டும். இன்னொருவர் கட்டளைக்கும் நியாயத்தனைக்கும் உட்பட்டு கூலிக்கு வேலைசெய்வது ஒருபோதும் சுய அதிகாரமாகாது. ஒரு மாஜிஸ்டிரேட் தெருவழியே போகும்போது ஒருவனை மற்றொருவன் அடிப்பதைக் கண்டார். தானே நேராய்க் கண்டபின் உடனே அவனுக்குத்தண்டனை விதிக்கலாமல்லவா அதிகாரம் அவருடைய தாயிருந்தால்-இல்லை.

குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க அதிகாரமுடையவர் அரசர் ஒருவரே. தேசம் அதிக விஸ்தீரணமாகவும் குடிகள் அதிகமாகவும் இருப்பதால் அவ்வேலையைச் செய்யக் கூலி கொடுத்து ஆங்காங்கு ஆட்களை வைத்திருக்கிறார்கள். அவர் இன்னின்ன குற்றதிற்கு இன்னின்ன தண்டனை யென்று நியாயனைகள் (சட்டங்கள்) ஏற்படுத்தி யிருக்கிறார். அதன்படி யிவர்கள் செய்ய வேண்டியது. அந்த சட்டங்களுக்கு மாறாகவாவது குறித்த தண்டனைக்குக் குறைவாகவாவது அதிகமாகவாவது இரக்கங்கொண்டு மன்னித்து விடவாவது கூடாது. அவற்றிற்கு மாறாய் நடந்தால் இவர்களே தண்டிக்கப்படுவார்கள். ஆகையால் இவர்கள் திறமையோடும் மிக்க சாக்கிரதையோடும் தங்கள் வேலைகளைச் செய்ய வேண்டும். இதுதானா அதிகாரம், சொந்தமா யிருப்பதன் இலட்சணம்? ஒருபோதுமில்லை.

வக்கீல் வேலை சுயாதீனமானதல்லவா? பணமும் அதிகம் கிடைக்கவில்லையா என்கிறீர்களோ?

நன்றாய்ச் சிந்தித்துப்பார்த்தால் மற்ற வேலைகளைவிட வக்கீல் வேலையில் பிரவேசிப்ப தற்கே கடுங்கவேண்டி யிருக்கிறது. ஏனெனில், முதலாவது அத்தொழிலுக்கு வேண்டிய கல்வி கற்பதற்கு பணச்செலவு அதிகம். அத்தொழிலில் செல்கின்றவர்கள் யாவருமே செல்வவந்தராவதில்லை. அதிலும் போதுமான வருமானம் கிடைக்காமல் வருந்துவோர் அனேகர். இவையிருக்கட்டும். இதில் அஞ்சவேண்டிய பிரதானமான முதல் விஷயம் ஒன்றிருக்கிறது. அதாவது:—

ஒருவன் மற்றொருவனைக் கொலை செய்துவிட்டு அகப்பட்டுக் கொண்டபோது உடனே தனக்காகப் பேச ஒரு வக்கீலை யமர்த்திக்கொள்கிறான் இவன் தான் தப்பவேண்டுமாயின் நடந்த சங்கதியை யுள்ளபடியே தன் வக்கீலிடம் கூறிவிடவேண்டும். ஆகையால் "இன்னவிடத்தில், இன்ன வேளையில், இன்ன ஆயுதத்தால், இன்ன விதமாய் நான் அவனைக் கொன்றேன்" என்று ஒன்றும் ஒளிக்காமல் கூறிவிடுகிறான். இப்போது வக்கீலுக்கு அவன் கொன்றது உண்மையே யென்று மனப் பூர்வமாய்த் தெரிகிறது. அப்படித் தெரிந்தும் அவன் அவனைக்கொலை செய்யவே யில்லை யென்று அரசன் பிரதிநிதியாகிய நீதிவான் முன்னே சாதித்து அரசனும் நீதி தவறும்படி செய்யத் தன்னாலானவகையில் வாதிக்கிறான். இம் மனசாட்சிக்கு விரோதமாய் நடப்பதல்லவோ? அப்படிச் செய்யாது தன்னிடம் வரும் கட்சிக்காரனுடைய விஷயங்களைக் கேட்டு, "உன் மேலேயே குற்றமிருக்கிறது. ஆகையால் நான் உன்பக்கம் வாதிக்க வரமாட்டேன்" என்று கூறுவாராயின், யாவரும் அவரைப் பைத்தியக்காரரென்று கூறுவார்கள். அதோடு அவர் மறுபடி எந்த நியாய ஸ்தலத்திலும் கால் வைக்க வேண்டிய வேலையே வராது.

சகோதரர்களே! இத்தகைய சேவகாவிர்த்தியிலுள்ள கஷ்டங்களுக்கும் விவசாயம் வர்த்தகம் கைத் தொழில் இவற்றிலுள்ள கௌரவம் நிம்மதி, கிடைக்கும் செல்வம்முதலிய அனுகூலங்களுக்கும் உள்ள தாரதம்மியத்தை விவரிக்கவேண்டு

மாயின் சஞ்சிகையில் இடம் போதாது ஆகையால் சுருக்கமாய் முடித்து விடுகிறோம்.

மேற்கண்ட கஷ்டங்களோடு நமது நாட்டில் ஏறக்குறைய எல்லோருமே துரைத்தன சேவகமே கௌரவமென்று அதிலேயே போய் விழுவதால் அதில் ஊதியமும் குறைந்து கௌரவமும் குறைந்து போகிறது. அவற்றை விரிக்கிற் பெருகும்.

மேற்கண்ட காரணங்களால் நமது நாடு க்ஷேமப்பட வேண்டுமாயின் சாதாரணக் கல்வி முடிந்தபின் சேவகம் என்பதைக் கனவிலும் கருதாது, நாம் கூறிய விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், இவற்றில் பிரியமான ஒன்றிற்கு அவசியமான கல்வியில் பயிற்சி யடைந்து ஊக்கத்தோடு அதன் வழியாய்ப் பொருள் தேட முயலவேண்டும். அப்போதுதான் நமது நாடு பழையபடி சீரும் சிறப்புமடையும். அவையுண்டாக வேண்டியது உங்களாற்றான். நீங்கள் இப்போது அதைப்பற்றி எண்ணங்கொண்டு இது முதலே முயற்சி செய்தால்தான் அது கைகூடும். அப்படிச் செய்யாவிட்டால் நீங்கள் தாய் நாட்டிற்கு நன்மை செய்தவர்களாகமாட்டீர்கள்.

கருணாநிதியாகிய பரம்பொருள் இவ்விஷயத்தில் உங்களுக்கு நல்ல பகுத்தறிவை யளித்து உற்சாகமும் சிரத்தையும் தந்து நற்பயன் உண்டாகச் செய்யும் வண்ணம் அவரை யிடைவிடாது பிரார்த்திப்போமாக. உள்.

ஓம் தத்ஸத்.

'ஒருபாத்தியாயரின் மதியீனம்'

ஒவ்வொரு உபாத்தியாயரும் பிள்ளைகளுக்குப் பாடங்களை மனதில் படியும்படி போதிக்கவேண்டும். அவ்விதமின்றி மேல் பார்வையிட (Inspectors) உத்தியோகஸ்தர்கள் வரும்போது மாத்திரம் பிள்ளைகளுக்கு நன்றாகக் கற்றுக் கொடுப்பதாக தங்களை அவர்கள் நினைக்கும்படி செய்கிறார்கள். ஆனால் சில வேளைகளில் உபாத்தியாயர்களுக்கே அபவாதம் வந்துவிடும். எப்படியெனில் ஓர் ஊரில் ஒருநாள் ஒரு உபாத்தியாயர் பிள்ளைகளைப் பார்த்து பிள்ளைகளே இன்றையதினம் இன்ஸ்பெக்டர் நமது வகுப்புக்கு வருவார். அப்போது நான் பூகோளம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இன்ஸ்பெக்டர் உங்களில் யாரையாகிலும் கூப்பிட்டு உலகம் எப்படி யிருக்கிறது என்று கேட்டால், உருண்டை என்று பதில் சொல்லுங்கள். ஆனால் மறந்துபோய் விட்டால் என்னைப் பாருங்கள்; நான் என் பொடி டப்பியைக் காண்பிக்கிறேன், நீங்கள் அதைப் பார்த்து உருண்டை யென்று சொல்லுங்கள் என்றார். அப்படியே இன்ஸ்பெக்டர் வந்த போது உபாத்தியாயர் பூகோள பாடம் கற்பித்துக்கொண்டு ஒரு பையனைக் கூப்பிட்டு உலகம் எவ்வித உருவம் என்று வினவினார். அப்பையன் சற்று யோசித்து உபாத்தியாயரைப் பார்த்துவிட்டு உருண்டை என்றான். அதற்கு இன்ஸ்பெக்டர் எப்பொருமோ என்று கேட்டார். பையன் ஞாயிற்றுக்கிழமைகளில் சதுரமாயும் மற்றைய நாட்களில் உருண்டையாயும் இருக்கும் என்று பதிலளித்தான். அதற்கு அவர் ஆச்சரியமுடன் எப்படியென்று அவனைக் கேட்டார். அதற்கு அவன் "ஏனெனில், உபாத்தியாயரின் பொடி டப்பி ஞாயிற்றுக்கிழமைகளில் சதுரமாயும் மற்றைய நாட்களில் உருண்டையாயும் இருக்கிறது" என்று பதில் சொன்னான். பிறகு அவர் தன்

வயிறு நோக நகைத்து விசாரித்ததில், அவ்வுபாத்தியாயர் ஞாயிற்றுக்கிழமைகளில் சதுரமான டப்பியும் மற்றையநாட்களில் உருண்டையான டப்பியும் உபயோகப்படுத்தி வந்தாராம். எப்போதும் ஒருவன் தன் தொழிலைத்தன் மனதாரத் திருப்தியாய் செய்யவேண்டும்.

V. பார்த்தசாரதி பிள்ளை, 94, அம்மன் கோவில் தெருவு, மதராஸ்

பெண் கல்வி.

ஞானமென்னுந் திரைகளாலிடைவிடாது மோதப் பெற்ற யிப்பாரத வருடத்தின்கணுள்ள ஆடவரில் அறிவாளிகளாகிய பெரும்பாலோர் பெண் மக்களுக்குக் கல்வி போதிக்க வேண்டிய தத்பாவசியமென் றொப்புக்கொண்டாலும், சிலர் இன்னும் அவ்வாறொப்புக்கொள்ளா திருப்பதோடு பெண்கள் கல்வி கற்றால், வித்தியா கெருவிகளாகித் தம் புருஷர்கட்கடங்கி நடவாது தத்தம் மனஞ்சென்றவாறு திரிந்து இறுதியில் கெட்டுப் போவார்களென்று வீண்வாதஞ் செய்வதை கண் கூடாகப் பார்த்தும் கர்ண பரம்பரையாகக் கேட்டு மிருக்கின்றோம்.

அந்தோ! கல்வியின்ற ஒருமாது தன்னியற்கைக் குணத்தாலோ, அல்லது செயற்கைக் குணத்தாலோ ஒருவாறு கெட்டுப் போய்விட்டால் அதற்குக் கல்வி காரணமென்பது, ஒருவன் தன் கண்ணுக்கு வெயில் மஞ்சள் நிறமாகத் தோன்றுவது, மஞ்சட்காமாலை யென்னு மொருவித கண்ணோயின் குணத்தால் உண்டானதென அறியாது வெயிலின் குணத்தாலென்று சொல்வதை யொக்குமன்றோ?

உலகில் "மஞ்சட்காமாலை" என்னும் நோயால் பீடிக்கப் பட்டவர்கட்கு மாத்திமே யன்றி, ஏனையோர்க்கும் வெயில் மஞ்சள் நிறமாய்த் தோன்றுதென்பது வெள்ளிடை விளக்கென யாவருந் தெள்ளிதினுணரக் கிடக்கின்றது.

இயற்கையில் ஒருவர்க்குள்ள கெட்ட குணமுள்ளவன் கல்வி கற்றிருந்தாலும், அஃதில்லாதிருந்து விட்டாலும், அந்த குணங் கிஞ்சிற்றேனு மாறுமா? இதுபற்றியன்றோ, "கற்பூரப்பாத்தி கட்டி கஸ்தூரி யெருப் போட்டுக் கமழ் சீர்ப்பாய்ச்சி,—பொற்பூரவுள்ளிதனை விதைத்தாலு மதன் குணத்தை பொருந்தக் காட்டுஞ்,—சொற்பேதை யருக்கறி விங்கினிதாக வருமெனவே யியம்பினலு நறிபோகு வாராதாங்கவர் குணமே மேலாக நடக்குந்தானே" என வான்றோ ரொருவர் மொழிந்திருக்கின்றனர்.

மேலும், இதுபற்றி யொருவன் தன்மனைக் கிழத்திக்குக் கண்ணிருந்தால் அன்னிய புருஷரைப் பார்த் திச்சிப்பானென்று, கண்கெட்ட குருடியை மணக்க விரும்பவானு? ஆனதுபற்றி யியற்கைக் குணத்தினல் கெட்டவர்களை முன்னிட்டு கிரியாதிகளாகிய யேனைய மகளிர்க்குங் கல்வி கற்பிக்காமல் மெளட்டீக சாகரத்தி லாழ்கிவைத்திருப்பது யெத்துணைப் பாபம்!

சில சந்தர்ப்பங்களில் தாய்மார்கள் தங்கள் சிறு குழவிகட்குப் பாலூட்டும் போது பால் புரையேறி யிறந்துவிடக் கண்டும் கேட்டு மேனைய தாய்மார்கள் தங்கள் குழந்தைகட்குப் பால்புகட்டுவதை நிறுத்தி விடுகின்றார்களா அல்லது நிறுத்தி விட்டார்களா, அல்லது நிறுத்திவிடுவார்களா? இன்னுஞ் சிலசமயங்களில் நீர், நெருப்பு, காற்று முதலியவற்றால் நமக்கிடுக் கண்ணேற்பட்டுவிட்டால் மற்றொரு சமையத்தில் அதைவிரும்பாம லிருப்போமா? கல்வியோ அப்பஞ்ச பூதங்களைப்போல ஒரு வேளையிலுங் கூட தீங்கிழைப்பதில்லையே. சர்வக்ஞனும், சர்வாந்திரியாமியாயும், சர்வலோக ரக்ஷகனுமுள்ள ஈஸ்வரன், நம் வினைக் கீடாகத் தினை, தினை வளரக்கூடிய சரீரத்தை நமக்களித்திருப்பினும், அத்தூலத்திற்கு உணவு யெவ்வா றத்யாவசியமா யிருக்கின்றதோ, அதுபோன்று தினை, தினை வளரக்கூடிய அறிவை நமக் கவ்வீச னளித்திருப்பினும், அவ்வறிவிற்குக் கல்வியென்னு மரிய உணவை யளிக்காவிட்டால், அஃது வீர்த்தியடையாது கட்டுக்கடங்காக் காளைபோன்றும், கண்டபடி திரியுங் குரங்கு போன்றும் கணவனுக்கடங்காக் கன்னி போன்றும், கல் முள் முதலியனவாகிய தீயவழிகளில் நம்மைச் செலுத்தி முடிவில் பள்ளமாகிய ரௌரவாதி நரகத்திற் றள்ளிவிடுமென்பதற்கோ ரையமு மின்றன்றோ!

சிலர், மாதர்கட்கு கல்வி போதிக்கவேண்டியதில்லை யென்பதற்கு மற்றொரு சமாதானமுஞ் சொல்லிக் கொள்ளுகின்றார்கள், அஃதென்னையோ வெனின்:—பெண்கள் கல்விகற்று என்ன உத்தியோகஞ் செய்யப்போகின்றார்களாவென்பதே. ஜலபானத்திற்கு வெட்டப்பட்ட குளமானது செடி, கொடி முதலிய தோட்டப் பயிர்களின் நீர்ப்பாசனத்திற் குதவுகின்றதைப் போன்றும், நிழலுக்காக வைக்கப்பட்ட விருக்ஷமானது தம்மிலை, காய், கனி முதலியவற்றை நமக்களிப்பதைப் போன்றும், பிறவிப் பயனை யடைவதன் பொருட்டு நம்மறிவின் வீர்த்திக்காக கற்கும் கல்வியானது நம் ஜீவியத்திற்கு முதவுகின்றது. இதைத் தவிர்த்து கல்வி உத்தியோகஞ் செய்யமாத்திரஞ் சாதனமாயுள்ளதென்பது, குல்லாவிற்காகத் தலையேயல்லாது, தலைக்காக குல்லாவல்ல வென்று சாதிப்பதை யொப்ப நிற்கின்றது.

ஆகையால் நமது பெண்களுக்குக் கல்வி கூடாதென்ற தப்பான அபிப்பிராயத்தை விட்டு ஆடவரைப்போல் பெண்களுக்கும் அவர்களுக்குத் தக்க கல்வி கட்டாயம் வேண்டுமென்றே கருதி ஒவ்வொருவரும் தம் பெண்பிள்ளைகட்கும் கல்வி பயிற்றுவிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

சு. சே. வேங்கிடாஜலம் பிள்ளை, மிராசுதார், திருநள்ளாறு.

க்ஷயரோகம்.

(345-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்த வியாதிக்கு அநேகாலமாய் அநேகர் முயற்சிசெய்[illegible] தகுதியான ஔடதம் கிடைக்கக் காண்கிலோம் ஆனல் சுமார் 10-வ[illegible] காலமாய் இந்த வியாதிக்கு மருந்து தேடிக் கடைசியில் ஈஸ்வரப் பி[illegible] பெற்ற சித்தர்களால் கண்டறியப்பட்ட சித்தர் பஸ்பம் என்னவென்[illegible] முத்து 1 தோலா—காரோபா 1 தோலா—இவைஇரண்டையும் பன்னீர்[illegible] கல்வத்தில் 1 வாரம் அறைத்து பஸ்பமானவுடன் ஒருபுட்டியில் பதனப்[illegible] வைத்துக்கொண்டு மேற்படிப் பஸ்பத்தில் ஒரு அரிசிப்பிரமாணம் [illegible] தேற்றிக் [illegible] இரவுக[illegible] களில் நெய்யில் குழைத்து சாப்பிட்டுவரும் பட்சத்தில் [illegible] சுகி[illegible] கின்றது. அதாவது வாட்டு இரும்பல், சரீரமெலிவடைதல், [illegible]காக்தல், இரவு[illegible] வியர்வைகொட்டல் முதலான வியாதிகளைக் கண்டித்து [illegible]தீபனத்தை யதிகரிக்கச் செய்கின்றது. ஆனபடியால் இத்தகைய அருமையாய்ந்த சித்தர்களின் மூலமாய்த் தெரிந்துகொண்ட இச் சித்த பஸ்பத்தை சகலரும் கையாண்டு இதன் பெருத்த லாபத்தை சகலரும் அடையும் வண்ணம் பலர்க்கும் இதன் முறைகளை வெளிப்படுத்தினோம். இதையே ஒரு சஞ்சீவியாய் பாவித்து சகல வைத்தியர்களும் மேற்படி வியாதியஸ்தர்களும் உபயோகப்படுத்தும்படி தூண்டப்படுகின்றது. இதன் பெருமை ஒருமுறை உபயோகித்தவர்களுக்கே நன்று விளங்கும்

ஆனதுபற்றி இதைக்கண்ணுறும் ஒவ்வொருவரும் உபயோகித்து இதன் குணங்களை இந்த பத்திரிகையின் வாயிலாகவே வெளியிடும்படி பிரார்த்திக்கின்றேன். இம்மருந்தை 10 வருஷகாலமாய்க் கஷ்டப்பட்டு தெரிந்துகொண்டேனாயினும் இவ்வியாதி பலர்க்கும் கஷ்டத்தைத்தந்து வருவதாலும், இதனால் அநேக பலியர்கள் மரணமடைவதாலும், பலர்க்கும் பயன்படுமாறு வெளியிட்டதே யன்றி பொருளையும் புகழையும் விரும்பி வெளியிட்ட தல்ல வென்பது சகலர்க்கும் குன்றின்மேலிட்ட தீபம்போலாம். இம்மருந்தை அனேகர் தெரிந்துகொண்டு ஏழை ஜனங்களிடத்தில் 10 நாள் மருந்திற்கு 10 ரூபா வாங்குவதாய்க் கேள்விப்பட்டேன். ஆனபடியால் இனி இதைக் கண்ணுறும் சகலரும் தங்கள் தங்கள் நண்பர்களுக்குத் தெரிவித்து மேற்படி மருந்துக்காக ஏழைகளிடத்து பணத்தை இக் கஷ்டகாலங்களில் விரையம் செய்யாதிருக்குமாறு எச்சரிக்கை செய்கிறேன்.

டாக்டர். எம். மாசிலாமணி முதலியார்.

குறிப்பு:—நமது நண்பராகிய டாக்டர் அவர்கள் பொதுநலங்கருதி அருமையான மருந்துகளை வெளியிடுவது சந்தோஷமே. ஆனால் இதுவிஷயமாய் நாம் இரண்டொரு வார்த்தைகள் கூறவேண்டுவது அவசியமெனத் தோன்றுகிறது. மருந்தை யவர் கூறிவினும் அதனால் வியாதி நீங்குவது அம்மருந்தைத் தயாரிக்கும் முறைமையிலிருக்கிறது. முத்து கெட்டிமுத்தாய்ப் பார்த்துவாங்குவது அதிக கஷ்டமான வேலையல்ல. ஆனால் அனேக மருந்துதினுசுகள் வைப்பு முறையில் செய்கிறார்கள். காரோபா, ஸாலாமிசரி, மதனகாமப்பூ, கடலைப் புளிப்பு, தேன் முதலிய அனேக சரக்குகள் பொய்ச்சரக்குகளே விற்கப்படுகின்றன. அவற்றை யறிந்து வாங்குவது மிக்க அனுபோகமிருந்தா லொழிய முடியாது. சரக்குகளை வாங்கியபின்னும் சாத்திரப்படி சுத்தி செய்யவேண்டும், முறைப்படி சரியாய் அறைக்கவேண்டும், நீ யளவின்படி புடம்போட்டெரிக்க வேண்டும்.

இதை யெல்லாம் கவனிக்காது கடையில் கொடுக்கப்பட்டதைக் வாங்கிக்கொண்டு பிரியப்படிசெய்துவிட்டுப் பிறகு வயித்தியர் கூறினபடி செய்தும் அது பயனில்லாமல்போயிற்று என்று கூறிவிடுவது பெருங்குற்றமாய் முடியும் என்பதை யிதை வாசிப்போர் மனதில் வைக்கக் கோருகிறோம்.

பத்திரிகாசிரியர்.

கற்கோட்டை—நாவல்

(439-வது பக்கத் தொடர்ச்சி)

தங்கம்மாள் "எதோ நான் கொடுத்த பதக்கம்?" என்றாள். அரியநாயகி [illegible] இராணி யிதை யெடுத்துக்கொள்ள மறந்துவிட்டாள் [illegible] என்விஷயத்தில் நடந்துகொண்ட மாதிரி முழுமையும் மிக்க அதிசயம்தான் யிருக்கிறது. இனியேனும் இதைப்பற்றிய இரகசியத்தை யெனக் குறைந்தலாகாதா? என்மனம் பெருங்கலவரத்திலிருக்கிறதே" என்றாள்.

தங்கம்மாள் "பொறு பொறு. இன்னும் அதற்குக் காலம் வரவில்லை. இப்படிக்கொடு அந்தப் பதக்கத்தை. இனி நான் வேலை செய்யவேண்டியதே, சும்மா யிருக்கலாகாது. நீ இங்கேயே யிரு. அப்படி ஏதாவது அபாயக்குறி தோன்றினால் மேலேயிருக்கும் இரகசிய அறையில் ஒளிந்துகொள். இத்தேசத்

திலுள்ள வீரர்களெல்லாம் ஒன்றுகூடி வரினும் அதைக் கண்டுபிடிக்க முடியாது என்றாள்.

அரியநாயகி "அந்தோ, அதிருக்குமிடமும் அதைத் திறக்கும் இரகசியமும் எனக்குத் தெரியாதே!" என்றாள். தங்கம்மாள் உடனே அவளை யழைத்துக்கொண்டுபோய் கள்ள அறை யிருக்குமிடத்தையும் அதைத்திறக்கும் இரகசியத்தையும் காட்டிவிட்டு சற்றும் ஆலசியம் செய்யாமல் வண்டியேறி இந்திரபுரியை நோக்கிச் சென்றாள்.

தங்கம்மாள் சென்று சுமார் அரைமணி நேரம் கழிந்தது. அரியநாயகி மேல்மாடியில் நின்றிருந்தவள் குதிரைகளின் சத்தம் தூரத்திலிருந்து கேட்கத் திடுக்கிட்டுப் பாதையை நோக்கினாள். வருகிறவர்கள் இராணியின் மெய்க்காவலுப் படையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்தது.

அவள் உடனே ஒரு யோசனையும் செய்யாது யாருடனும் தான் செல்லும் இடத்தைக்கூட கூறாது, துரிதமாய்க் கீழிறங்கி அக்கள்ள அறைக்குள் நுழைந்து கதவை மூடித் தாளிட்டுக் கொண்டாள்.

20-வது அத்தியாயம்

அரண்மனையை விட்டு வெளிப்பட்ட திரவியகேகம் பிரபு அரியநாயகியைப் பிரிந்தவுடனே துரிதமாய்த் தோட்டத்தில் இறங்கி அவள் கூறிய வழியே சென்று ஆற்றோரத்திலுள்ள ஒரு படகுத்துறையை அடைந்தான். அக்கு அரண்மனைக்கு வரும் மந்திரிகள் பிரபுக்கள் முதலியோர்கள் உபயோகத்திற்காக அனேகம் படகுகள் எப்போதும் ஆயத்தமா யிருப்பதுண்டு. பிரபு உடனே ஒரு படகிலேறிக்கொண்டு "ஓட்டுவதான்! நான் அவசரமாய்ச் செல்ல வேண்டும்" என்றார்.

அப்படகிலிருந்த இரண்டு படகோட்டிகளும். "பிரபுவே, எங்கு கொண்டு போகவேண்டும்?" என்றார்கள். அவர்கள் தன்னை யறிந்துகொண்டதை யுணர்ந்த பிரபு திடுக்கிட்டு அவர்கள் முகத்தை நோக்கினார். அவர்கள் கங்காவிடம் தன்னைச் சிறைச்சாலையிலிருந்து சற்று முன்பு அழைத்து வரும்போது படகோட்டி வந்தவர்களே. "அடடா! என்ன முட்டாள் தனம் செய்துவிட்டோம். சற்று நிதானிக்காமல் முன்வந்த படகிலேயே யேறிவிட்டோமே. இவர்களால் நமது சங்கதி வெளிப்பட்டுவிடுமே. இன்னவழி சென்றோ [illegible] தாவது வெளிப்பட்டுவிடுமே" என்று கலவரப்பட்டு, பிறகு மனதைத் தேற்றிக்கொண்டு, "மேற்கு நோக்கியே துரிதமாய்ச் செல்லுங்கள். இறங்க வேண்டிய ஸ்தலத்தைக் காட்டுகிறேன் என்றார். படகுக்காரரில் ஒருவர் சந்தேகக்கொண்ட முகக்குறியோடு "பிரபுவே, ஒன்றும் — தவறில்லையென்று நம்புகிறேன். தங்களைக் கோட்டைக்குக் கொண்டு ...." என்பதற்குள்,

பிரபு.—"அதிகப்பிரசங்கி! ஓட்டு பேசாமல், இன்றேல் .." என்று கோபத்தோடு பயமுறுத்தி நோக்கினார்.

(தொடரும்)

ஆரணி குப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

காளயுக்தி வரு ஆனிமீ—சாலிவாகன 1840— கலியுகாதி 5019,
பசலி 1327-23—கொல்லம் 1093-94,
இங்கிலீஷ் 1918-ம்வரு சூன்மீ—சூலைமீ

சூன்மீ	ஆனிமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
14	1	வெ	சஷ்-58-3	மக-60-0	மரண 60	சஷ்டிவிரதம், கரிநாள்
15	2	ச	சப்-60-0	மக 3-4	அ 3 சித்	புது பசுக்களை வாங்க
16	3	ஞா	சப்-2-21	பூர-8-49	சித் 9 அ	எருதுகளை கட்டி ஏர் உழ
17	4	தி	அஷ்-7-26	உத்தி-14-48	சித்த 60	தானியம் கட்டு கட்டிவைக்க
18	5	செ	நவ-12-9	அஸ்-21-18	சித்த 60	
19	6	புத	தச-16-47	சித்-27-24	சித்த 60	
20	7	வி	ஏகா-20-49	சுவா-32-53	அமி 33 சி	
21	8	வெ	து-23-19	விசா-37-28	சித்த 60	
22	9	ச	திர-25-0	அனு-40-55	சித்த 60	
23	10	ஞா	சது-26-52	கேட்-43-14	மர 43 அ	
24	11	தி	○பௌ 26-19	மூல-43-36	சித்த 60	
25	12	செ	பிர-24-38	பூரா-43-57	சித்த 60	
26	13	புத	துதி-21-53	உத்-42-51	அமி 43 சி	
27	14	வி	திரி-17-53	திரு-40-27	சித் 60	வதூகிருகப்பிரவேசம்
28	15	வெ	சது-13-19	அவி-37-30	சித்த 60	உபநயனம், பஞ்சகபிரீதி
29	16	ச	பஞ்-8-4	சதை-33-58	அ 34 மர	கரிநாள்
30	17	ஞா	சஷ்-2-19	பூரட்-30-4	சித் 54 அ	கிணறு சீர் திருத்த
			சப்-53-56			
1	18	தி	அஷ்-50-43	உத்-26-37	சித் 60	பூ முடிக்க
2	19	செ	நவ-44-11	ரேவ-21-59	சித் 60	தூண்நட, பசுக்களை கட்ட
3	20	புத	தச-38-28	அசு-18-7	மர 18 சி	தனியநாள்
4	21	வி	ஏகா-[illegible]-7	பர-14-44	சி 15 மர	கிருத்திகை விரதம்
5	22	வெ	து-28-52	கார்-12-0	சித் 12 மர	சிதம்பரம் ஆவடையார் கோ
						[வில் உத்ஸவ ஆரம்பம்.
6	23	ச	திர-25-1	ரோக-9-51	அ 10 சித்	மழை 7 க்குள்
7	24	ஞா	சது-22-18	மிரு-8-45	சித்த 60	அமாவாசை விரதம்
8	25	தி	அமா-20-41	திரு-7-31	சித் 8 அ	திருவள்ளூர் வீரராகவர் தெ
9	26	செ	[illegible]	புன-10-2	சித்த 50	கழுகு [illegible] [ப்பம்
10	27	புத	துதி-2[illegible]-14	புச-13-20	சித்த 60	கிரகப் பிரவேசம் [ட
11	28	வி	திரு-23-[illegible]	ஆயி-16-17	சித் 16 அ	கிணற்றில் கல்கட்டடம் கட
12	29	வெ	சது-26-51	[illegible]க-21-5	சித்த 60	கிரகபாதை நிவர்த்தி செய்ய
13	30	ச	பஞ்-31-5	பூரம்-26-43	சித் 27 மர	ஆயுதம் பிரயோகிக்க
14	31	ஞா	சஷ்-35-44	உத்தி-32-57	அமி 60	ஆனிதெரிசனம்
15	32	தி	சப்-40-36	அஸ்த-39-28	சித்த 60	கர்ப்பாதானம் பஞ்சகபிரீதி

	சுக்	கேது புத	ரவி குரு
	7-மிது-பு 11-ரிஷ-சு 22-கட-புத		சனி
	ராகு		செ

ஆடிமீ 1உ ஆனந்தபோதினி 4-ம் வருட ஆரம்பம்

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS